V̄I
N48

113509

உலக சரித்திரம்

நேருஜீ சிறையிலிருந்த காலத்தில் தமது
மகள் இந்திராவுக்கு எழுதிய,
உலக சரித்திரத்தை விளக்கும்
கடிதங்களின் மொழிபெயர்ப்பு

ஆசிரியர் :
ஜவாஹர்லால் நேரு

மொழிபெயர்ப்பாசிரியர் :
ஓ. வி. அளகேசன்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 AUG 1948
MADRAS

பதிப்பாளர்கள் :
நவயுகப் பிரசுராலயம்

4287-2

முதற் பதிப்பு, ஜூன் 1948
உரிமை பதிவு.

VII

விலை ரூ. 12-8-0

113509
113509

Printed at KABEER PRINTING WORKS, Triplicane, Madras.

பொருளடக்கம்

டேராடூன் ஜில்லா சிறையிலிருந்து எழுதியவை

		பக்கம்
76.	தென்னிந்திய ராஜ்யங்கள் ...	1
77.	விஜய நகரம் ...	11
78.	மலாயாசிய சாம்ராஜ்யங்களான மத்திய பாஹிதமும் மலாக்காவும் ...	18
79.	ஐரோப்பா கிழக்கு ஆசியாவில் நாடு கவரத் தொடங்குகிறது ...	30
80.	சீனாவில் செழிப்பும் அமைதியும் ஓங்குகின்றன ...	38
81.	ஜப்பான் கதவைச் சாத்தித் தாளிட்டுக் கொள்ளுகிறது ...	50
82.	கொந்தளிப்பில் ஆழ்ந்த ஐரோப்பா ...	61
83.	மறுமலர்ச்சி ...	70
84.	பிராடெஸ்டண்டுப் புரட்சியும் குடியானவர்களின் போரும் ...	80
85.	16, 17-வது நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் ஓங்கிய யதேச்சாதிகாரம் ...	91
86.	தாழ்நாடுகளின் சுதந்திரப் போராட்டம் ...	104
87.	இங்கிலாந்து தன்னுடைய அரசன் தலையை வெட்டி எறிகிறது ...	119

		பக்கம்
88.	பாபர்	135
89.	அக்பர்	148
90.	மொகலாய சாம்ராஜ்யத்தின் தாழ்ச்சியும் வீழ்ச்சியும்	166
91.	சீக்கியரும் மராட்டியரும்	181
92.	இந்தியாவில் தங்களுக்குப் போட்டியாக உள்ளவர்கள் மீது ஆங்கிலேயர் வெற்றி பெறுகிறார்கள்	194
93.	சீனாவை ஆண்ட ஒரு பெரிய மஞ்சு அரசன்	209
94.	சீன சக்கரவர்த்தி ஆங்கில அரசனுக்கு விடுத்த நிருபம்	220
95.	18-வது நூற்றாண்டில் ஐரோப்பியக் கருத்துலகில் விளைந்த போராட்டம்	228
96.	பெரும் மாறுதல்கள் தோன்றுவதற்கு முன் ஐரோப்பாவின் நிலைமை	242
97.	பெரிய யந்திரத்தின் வருகை	258
98.	இங்கிலாந்தில் யந்திரத் தொழிற் புரட்சி ஆரம்பமாகிறது	272
99.	அமெரிக்கா இங்கிலாந்தினிடமிருந்து கத்தரித்துக் கொள்ளுகிறது	288
100.	பாஸ்டில் சிறை வீழ்ச்சி	302
101.	பிரெஞ்சுப் புரட்சி	319
102.	புரட்சியும் எதிர்ப்புரட்சியும்	335
103.	அரசாங்கங்களின் போக்கு	352
104.	நெப்போலியன்	362
105.	நெப்போலியன் (தொடர்ச்சி)	379

		பக்கம்
106.	உலகத்தைப் பார்வையிடல்	399
107.	உலக யுத்தத்துக்கு முற்பட்ட நூறு ஆண்டுகள்	410
108.	பத்தொன்பதாவது நூற்றாண்டு (தொடர்ச்சி)	425
109.	இந்தியாவில் யுத்தங்களும் கலகமும்	446
110.	இந்தியக் கைத்தொழிலாளி அதோகதி ஆகிறான்	465
111.	இந்தியக் கிராமங்களும், குடியானவர்களும், நிலச்சுவான்தார்களும்	480
112.	இந்தியாவைப் பிரிட்டன் ஆளும் விதம்	503
113.	இந்தியா விழித்தெழுகிறது	523
114.	பிரிட்டன் சீனா மீது அபினியைத் திணிக்கிறது	545
115.	சீனாவின் கஷ்டதசை	562
116.	ஜப்பான் ஒரேயடியாகத் தாவுகிறது	572
117.	ஜப்பான் ருஷ்யாவைத் தோற்கடிக்கிறது	588
118.	சீனா குடியரசாக மாறுகிறது	604
119.	அதீத இந்தியாவும் கிழக்கிந்தியத் தீவுகளும்	615
120.	மற்றுமொரு புது வருஷப் பிறப்பு	630
121.	பிலிப்பைன் தீவுகளும் ஐக்கிய அமெரிக்க நாடுகளும்	637
122.	மூன்று கண்டங்கள் சந்திக்குமிடம்	648
123.	சிம்மாவலோகனம்	657

		பக்கம்
124.	தென்றுதொட்டு இன்றுகாறும் அழியாதிருந்து வரும் ஈரானின் பழைய மரபு ...	668
125.	பாரசீகத்தில் சாம்ராஜ்யவாதமும் தேசிய வாதமும் ...	684
126.	பொதுவாகப் புரட்சிகளைப்பற்றியும், சிறப்பாக 1848-ல் நிகழ்ந்த ஐரோப்பியப் புரட்சிகளைப் பற்றியும் ...	696
127.	இதாலி ஐக்கியமும் சுதந்திரமும் அடைகிறது ...	715
128.	ஜெர்மனி உதயம் ...	723
129.	சில பேராசிரியர்களும் கவிகளும் ...	739
130.	டார்வினும் விஞ்ஞானத்தின் வெற்றியும் ...	750
131.	ஜனநாயகத் தத்துவத்தின் வளர்ச்சி ...	766
132.	அபேதவாதத் தத்துவத்தின் தோற்றம் ...	782
133.	கார்ல் மார்க்சும் தொழிலாளர் ஸ்தாபனங்களின் வளர்ச்சியும் ...	797
134.	மார்க்சியம் ...	813
135.	இங்கிலாந்தில் விக்டோரியா சகாப்தம் ...	831
136.	இங்கிலாந்து உலகத்தின் வட்டி வியாபாரியாக மாறுகிறது ...	848
137.	அமெரிக்காவில் உள்நாட்டுப் போர் ...	867
138.	கண்ணுக்குத் தோன்ருத அமெரிக்க சாம்ராஜ்யம் ...	885

139.	அயர்லாந்துக்கும் இங்கிலாந்துக்கும் நடந்த 700 வருஷப் போராட்டம் ...	898
140.	அயர்லாந்தில் சுயாட்சி இயக்கமும் ஷின்பேன் இயக்கமும் ...	917
141.	பிரிட்டன், எகிப்தைப் பற்றிக் கொண்டு விடமாட்டேன் என்கிறது ...	932
142.	துருக்கி 'ஐரோப்பாவின் நோயாளி' யாக மாறுகிறது ...	950
143.	ஜார்களின் கீழ் ருஷியா ...	969
144.	தோல்வியுற்ற 1905-ம் வருஷத்து ருஷியப் புரட்சி ...	984
145.	ஒரு சகாப்தத்தின் முடிவு ...	999

பதிப்பாளர் குறிப்பு

உலக சரித்திரத்தின் முதற் புத்தகம் 75 கடிதங்களின் தமிழாக்கத்துடன் வெளிவந்தது. இப்பொழுது, இரண்டாம் புத்தகம் 70 கடிதங்களின் தமிழாக்கத்துடன் வெளிவருகிறது. மூன்ரும் புத்தகம் விரைவில் வெளிவரும்.

76

தென்னிந்திய ராஜ்யங்கள்

ஜூலை 14, 1932.

மறுபடியும் இந்தியாவைப் பார்ப்போம். இங்கு ராஜ்யங்களும் சாம்ராஜ்யங்களும் தோன்றி மறையும் காட்சி, முடிவற்ற ஒரு சினிமாக் காட்சியைப் போலவே இருக்கிறது.

அந்தப் பைத்தியக்கார சுல்தான் முகம்மது துக்லக்கை இதற்குள் நீ மறந்திருக்கமாட்டாய். டில்லி சாம்ராஜ்யத்தை அவன் பெரும்பாலும் தன் கையினாலேயே அழித்து விட்டான். பெரும்பெரும் தென்னிந்திய மாகாணங்கள் அதனின்றும் பிரிந்து தனி ராஜ்யங்களாகப் பரிணமித்தன. அவற்றில் முக்கியமானவை ஹிந்து ராஜ்யமான விஜயநகரமும், முஸ்லிம் ராஜ்யமான குல்பர்காவும் ஆகும். கிழக்கே, வங்காளத்தையும் பீகாரையும் தன்னுள் கொண்ட கௌடம் என்கிற மாகாணம் ஒரு முஸ்லிம் அரசனின் கீழ் சுதந்திரமாக இருந்து வந்தது.

முகம்மதுவுக்குப் பின் அவனுடைய தம்பி மகன் பிரோஸ்ஷா பட்டத்துக்கு வந்தான். அவன் தன் சிற்றப்பனை விட இரக்கமும் அறிவும் உள்ளவனாக இருந்தான். அவன் திறமையாக ஆட்சி புரிந்தான். அவனுடைய ஆட்சியில் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. கிழக்கிலும் தெற்கிலும் இழந்த மாகாணங்களை அவனால் திரும்பப் பெற முடியவில்லை. ஆனால், சாம்ராஜ்யம் அதற்கு மேலும் சிதறிவிடாமல் அவன் பார்த்துக் கொண்டான். புதுப்புது நகரங்களையும்,

அரண்மனைகளையும், மசூதிகளையும், பூங்காவனங்களையும் நிருமாணிப்பதில் அவனுக்குப் பிரியம் அதிகம். டில்லிக்கு அருகிலுள்ள பிரோசாபாதும், அலகாபாதுக்கு அருகிலுள்ள ஜான்பூரும் அவனால் நிருமாணிக்கப்பட்டவையே. சிதிலமாகிக் கிடந்த பல பழைய கட்டிடங்களையும் அவன் புதுப்பித்தான். யமுனை நதியிலிருந் ஒரு பெரிய கால்வாயையும் அவன் வெட்டுவித்தான். தான் செய்த வேலைகளைப் பற்றி அவனுக்கு ரொம்பவும் திருப்தி. தான் கட்டுவித்த புதுக் கட்டிடங்கள், புதுப்பித்த பழைய கட்டிடங்கள் ஆகியவற்றின் நீண்ட ஜாபிதா ஒன்றை அவன் விடுத்துச் சென்றிருக்கிறான்.

பிரோஸ்ஷாவின் தாயார் ஒரு பெரிய ராஜபுத்திர அரசனின் புத்திரி. அவள் பெயர் பீபீ நைலா என்பது. அவளுடைய கலியாணத்தைப் பற்றி ஒரு கதை உண்டு. முதலில் அவளைப் பிரோஸ்ஷாவின் தந்தைக்குக் கேட்ட போது அவளுடைய தகப்பன் அவளைக் கொடுக்க மறுத்து விட்டானாம். அதனால் போர் மூண்டது. நைலாவின் தேசம் பெருத்த கஷ்டநஷ்டங்களுக்கு ஆளாயிற்று. தன் பொருட்டுத் தன் தேசமும் தேசமக்களும் துன்பத்துக்கு ஆளாவதைக் காணச் சகியாத நைலா தன்னைப் பிரோஸ்ஷாவின் தந்தையிடம் ஒப்புவித்துத் தன் நாட்டவரைக் காப்பாற்றினளாம். ஆகவே, பிரோஸ்ஷாவின் உடம்பில் ரஜபுத்திர ரத்தமும் ஓடிக்கொண்டிருந்தது. இவ்வாறு முஸ்லிம் அரசர்களுக்கும் ரஜபுத்திர ஸ்திரீகளுக்குமிடையே அடிக்கடி நடைபெற்றுவந்த கலப்புத் திருமணங்கள் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒரே தேசத்தவர் என்னும் எண்ணத்தை வளர்க்கப் பெரிதும் உதவியிருக்க வேண்டும்.

பிரோஸ்ஷா 37 வருஷம் ஆண்டபிறகு 1388-ல் உயிர் துறந்தான். உடனே, அவனால் கட்டிக் காக்கப்

பட்ட டில்லி சாம்ராஜ்யம் பலவாறு சிதறுண்டு போயிற்று. பலம் பொருந்திய மத்திய அரசாங்கம் என்பது இல்லை. அங்கங்கே சிற்றரசர்களின் கை மேலோங்கியது. இவ்வாறு கலவரமும் பலவீனமும் மலிந்திருந்த நிலைமையில்தான் தைமூர் வடக்கேயிருந்து படையெடுத்து வந்தான். அப்போது பிரோஸ்ஷா இறந்து பத்து வருஷம் ஆகியிருந்தது. தைமூர் டில்லி நகரை அநேகமாகக் கொன்றுவிட்டான் என்றே சொல்ல வேண்டும். அது தன் பழைய நிலையை அடைவதற்கு வெகுநாள் பிடித்தது. 50 வருஷம் கழித்து மீண்டும் அங்கு ஒரு மத்திய அரசாங்கம் தோன்றிற்று. ஆனால், அது மிகவும் சிறிய ராஜ்யமாயிருந்தது. அக்காலத்தில் தெற்கிலும் மேற்கிலும் கிழக்கிலும் விளங்கிய பெரிய ராஜ்யங்களோடு அதை ஒப்பிடுவதற்கில்லை. அதை ஆண்டுவந்த ஆப்கானிய சுல்தான்கள் சிறிதும் திறமை இல்லாதவர்கள். அவர்களுடைய அரசாட்சி அவர்களுடைய பிரபுக்களுக்கே போதும்போதுமென்றாகி விட்டது. கடைசியில், அப்பிரபுக்கள் ஒரு அந்நியனை அழைத்து அவன் கையில் ஆட்சியை ஒப்படைத்தார்கள். அவ்வன்னியன்தான் பாபர். அவன் ஒரு மங்கோலியன். அவனுடைய வமிசத்தார் இந்தியாவில் மொகலாயர் என்று அழைக்கப்பட்டார்கள். பாபர் தைமூரின் நேர் கால்வழியில் வந்தவன். அவனுடைய தாயார் செங்கிஸ் கானின் கால்வழியில் வந்தவள். அவன் அப்போது காபூலை ஆண்டுகொண்டிருந்தான். ஆப்கானிய பிரபுக்களின் அழைப்பை மகிழ்வுடன் ஏற்று அவன் இந்தியாவுக்கு வந்தான். ஒருவேளை அவன் அழைப்பின்றியும் வந்திருக்கலாம்! 1526-ல், டில்லிக்கு அருகில், பானிப்பட்டுப் போர்க்களத்தில் அவன் ஹிந்துஸ்தானத்தின் சாம்ராஜ்யத்தையே ஜெயித்துக்கொண்டான். மீண்டும்

ஒருபெரிய சாம்ராஜ்யம் இந்தியாவில் எழுந்தது
டில்லிமா நகரம் தான் இழந்த பெருமையை மீண்டும்
பெற்று மொகலாய சாம்ராஜ்யத்தின் தலைநகராக
விளங்கியது. இதைக் கவனிக்குமுன், டில்லி தாழ்வுற்
றிருந்த 150 ஆண்டுகளில் இந்தியாவின் இதர பாகங்
களில் என்ன நிகழ்ந்தது என்று பார்ப்போம்.

அக்காலத்தில் பெரியதும் சிறியதுமான பல ராஜ்
யங்கள் இந்தியாவில் இருந்தன. புதிதாகத் தோன்றிய
ஜான்பூர் என்னும் சிறு முஸ்லிம் ராஜ்யத்தை ஷர்க்கி
அரசர்கள் ஆண்டுவந்தார்கள். அது அவ்வளவு முக்கிய
மானது மல்ல, பலம் பொருந்தியதுமல்ல. ஆனால், ஏறக்
குறைய 100 வருஷங்கள் வரையில் அது கலைப்பண்பை
யும் மதவிஷயங்களில் சகிப்புத்தன்மையையும் வளர்த்து
வந்தது. ஜான்பூரில் இருந்த முஸ்லிம் கலாசாலைகள்
இக்கருத்துக்களைப் பரப்பி வந்தன. அதை ஆண்ட ஒரு
அரசன், நான் சென்ற கடிதத்தில் கூறியதுபோன்று ஒரு
சமய சமரச பாவத்தை ஹிந்துக்கள் முஸ்லிம்களிடையே
உண்டாக்க முயன்றான். கட்டிடக்கலையும், வேறு பல
கலைகளும், ஹிந்தி வங்காளிபோன்ற தேசபாஷைகளும்
ஆக்கம் பெற்றன. எங்கும் மதத்துவேஷம் தலைவிரித்
தாடிய காலத்தில், சிறிதுகாலமே வாழ்ந்த இச்சிறிய
ஜான்பூர் ராஜ்யம், கலைக்கும் கல்விக்கும் சமரசஞானத்
துக்கும் புகலிடமாகப் பொலிந்தது.

கிழக்கே, கௌடராஜ்யம் அலகாபாத் வரையில்
வியாபித்திருந்தது. அதில் வங்காளம் பீகார் இரண்டும்
அடங்கியிருந்தன. அதன் தலைநகராகிய கௌடபுரி ஒரு
துறைமுகப் பட்டினம். அதற்கும் மற்றத் துறைமுகப்
பட்டினங்களுக்கும் கடற் போக்குவரவு நடந்துவந்தது.
மத்திய இந்தியாவில், அலகாபாதுக்கு மேற்கேயிருந்து
குஜராத்வரையில் வியாபித்திருந்த ராஜ்யத்துக்கு

மாளவம் என்று பெயர். அதன் தலைநகராகிய மாண்டு
பெரிய கோட்டையாகவும் விளங்கியது. மாண்டுவில்
பல அழகிய கட்டிடங்கள் தோன்றின. அவற்றின்
அழிவுகளை இன்றும் பலர் சென்று காண்கின்றனர்.

மாளவத்துக்கு வடமேற்கே உள்ள ராஜபுதனத்
தில், பல ரஜபுத்திர ராஜ்யங்கள் இருந்தன. அவற்றில்
முக்கியமானது சித்தூர். சித்தூர், மாளவம், குஜராத்
இவை மூன்றுக்குமிடையில் அடிக்கடி போர் நிகழ்ந்து
வந்தது. மற்ற இரண்டையும் நோக்கும்போது சித்தூர்
மிகவும் சிறிய ராஜ்யந்தான். ஆனால், எப்போதுமே ரஜ
புத்திரர்கள் வீரதீர பராக்கிரமங்களுக்குப் பேர்போன
வர்களல்லவா? ஆகவே, அவர்கள் சிறு தொகையினரா
யிருந்தும் சில சமயங்களில் வெற்றி பெற்றனர். அத்
தகைய வெற்றி ஒன்றைக் கொண்டாடுவதற்காகச் சித்
தூர் ராணா ஒரு ஜயஸ்தம்பத்தைக் கட்டினான். மாண்டு
சுல்தான் மட்டும் சித்தூர் ராணாவுக்குச் சளைத்தவனா?
அவனும் ஒரு ஜயஸ்தம்பம் கட்டினான். சித்தூர் கோபு
ரம்—ஜயஸ்தம்பம்— இன்றும் இருக்கிறது; மாண்டு
கோபுரம் மறைந்துவிட்டது.

மாளவத்துக்கு மேற்கே இருந்தது குஜராத் ராஜ்
யம். அது மிகவும் பலம்பொருந்தி விளங்கியது. அதன்
தலைநகராகிய ஆமதாபாத்தில் 10 லட்சம் பேர் வாழ்ந்து
வந்தனர். அதை உண்டாக்கியவன் சுல்தான் அகமதுஷா
என்பவன். அந்த நகரில் பல அழகிய கட்டிடங்கள்
தோன்றின. 15-வது நூற்றாண்டிலிருந்து 18-வது நூற்
றாண்டு வரையில், சுமார் 300 வருஷ காலம், ஆமதாபாத்
உலகின் சிறந்த நகர்களுள் ஒன்றாக விளங்கியது. அங்
குள்ள பெரிய ஜும்மா மசூதி, சித்தூர் ராணா ரான்பூரில்
கட்டிய ஜைன ஆலயத்தை ஒத்திருப்பது நமக்கு ஆச்சரி
யத்தைத் தருகிறது. இரண்டும் ஏககாலத்தில் கட்டப்

பட்டவையாகும். இதிலிருந்து, புதுக் கருத்துகளால் ஆட்கொள்ளப்பட்ட இந்தியாவின் பழைய சிற்பிகள் ஒரு புதிய கட்டிடக்கலையைத் தோற்றுவித்துக்கொண்டிருந்தார்கள் என்று தெரிகிறதல்லவா? கலைத்துறையில் சமரசபாவம் ஓங்குவதை மறுபடியும் இங்கே காண்கிறோம். பழைய கட்டிடங்களிற் பல இன்றும் ஆமதாபாத்தில் காணப்படுகின்றன. அவற்றின் அற்புதத் தொழிற்பாடு இன்றும் நம்மை வசீகரிக்கிறது. ஆனால், அவற்றைச் சுற்றித் தற்காலத்தில் வளர்ந்துள்ள யந்திரத்தொழிற்சாலை நகரமானது அழகு வாய்ந்ததாக இல்லை.

ஏறக்குறைய இச்சமயத்தில்தான் போர்த்துகீசியர் இந்தியாவுக்கு வந்தது. வாஸ்கோடகாமா என்பவன் முதல்முதல் நன்னம்பிக்கை முனையைச் சுற்றிக்கொண்டு இந்தியாவுக்கு வந்து சேர்ந்தான். அவன் 1498-ல் கள்ளிக்கோட்டையை அடைந்தான். அவனுக்குமுன் பல ஐரோப்பியர் இந்தியாவுக்கு வந்திருக்கிறார்கள். ஆனால், அவர்கள் அனைவரும் நாட்டைப் பார்ப்பதற்காகவோ அல்லது வியாபார நிமித்தமாகவோ வந்தவர்கள். இப்போது வந்த போர்த்துகீசியரோ வேறு நோக்கங்களுடன் வந்தார்கள். போப்பாண்டவர் அவர்களுக்குக் கீழுலகம் முழுவதையும் வழங்கியிருந்தார். அதை ஜெயிக்கும் நோக்கத்துடன் அவர்கள் வந்தார்கள். அதற்கு வேண்டிய இறுமாப்பும் நம்பிக்கையும் அவர்களிடம் நிறைந்திருந்தது. முதலில் கொஞ்சம் பேர்தான் வந்தார்கள். நாளாவட்டத்தில் அவர்களுடைய கப்பல்கள் மேலும் மேலும் அதிகமாக வந்தன. அவர்கள் சில கரையோர நகரங்களைக் கைப்பற்றிக் கொண்டார்கள். அவற்றில் முக்கியமானது கோவா. போர்த்துகீசியர் இந்தியாவில் அதிகமாக ஒன்றும் சாதித்து விடவில்லை. அவர்கள் உள்நாட்டில் நுழையவே இல்லை. ஆனால், முதல் முதலாகக் கடல் மார்க்கமாக வந்து இந்தியாவைத் தாக்கிய ஐரோப்பியர்கள் அவர்கள்தான். அவர்கள் வந்து நெடுங்காலம் ஆனபிறகு ஆங்கிலேயரும் பிரெஞ்சுகாரரும் வந்தார்கள். ஆக, கடல் மார்க்கமாக வந்து இந்தியாவைத் தாக்குவது எளிது என்பது இப்போது புலப்பட்டுவிட்டது. தென்னிந்தியாவின் பழைய ராஜ்யங்கள் இப்போது வலி குன்றிவிட்டன. உள்நாட்டு அபாயங்களை எதிர்ப்பதில் அவற்றின் கவனம் திரும்பியிருந்தது.

குஜராத்தை ஆண்ட சுல்தான்கள் போர்த்துகீசியரோடு கடலிலும் போரிட்டார்கள். அவர்கள் உதுமானியத்துருக்கியரோடு சேர்ந்துகொண்டு ஒரு போர்த்துகீசியக் கப்பற் படையை முறியடித்தார்கள். ஆனால், போர்த்துகீசியர் மறுபடியும் வெற்றிபெற்றுத் தங்களுடைய கடல் ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொண்டார்கள். அதே சமயத்தில் குஜராத் சுல்தான்களுக்கு டில்லி மொகலாயரின் பயம் ஏற்பட்டது. ஆகவே, அவர்கள் போர்த்துகீசியருடன் சமாதானம் செய்து கொண்டார்கள். ஆனால், பின்பு போர்த்துகீசியர் அவர்களுக்குத் துரோகம் செய்துவிட்டனர்.

14-வது நூற்றாண்டின் ஆரம்பத்தில், தென்னிந்தியாவில் இரு பெரிய ராஜ்யங்கள் தோன்றின. ஒன்று குல்பர்கா. இது பாமனி ராஜ்யம் என்றும் அழைக்கப்பட்டது. இன்னொன்று அதற்குத் தெற்கிலிருந்த விஜயநகரம். பாமனி ராஜ்யத்தில் மகாராஷ்டிரம் முழுவதும், கர்நாடகத்தில் ஒரு பகுதியும் அடங்கியிருந்தன. 150 ஆண்டுகளுக்கு மேல் அது நிலைபெற்றிருந்தது. ஆனால், அதன் சரித்திரம் சிறப்பானதல்ல. அங்கு மதத்துவேஷமும், கொலையும், பலாத்காரமும் தாண்டவம் புரிந்தன. சுல்தானும் பிரபுக்

களும் ஏராளமான ஐசுவரியத்தில் புரண்டுகொண்டிருந்தார்கள். பிரஜைகளோ சொல்லொணாத் துன்பத்தில் உழன்றுகொண்டிருந்தார்கள். 16-வது நூற்றுண்டின் தொடக்கத்தில் பாமனி ராஜ்யம் சிதைவுண்டு ஐந்து சிறிய ராஜ்யங்களாகப் பிரிந்து விட்டது. அவை பீஜபூர், ஆமத்நகர், கோல்கொண்டா, பீடார், பீரார் என்பன ஆகும். அதற்குமுன் ஏறக்குறைய 200 ஆண்டுகளாகவே விஜயநகர ராஜ்யம் நடந்து வந்தது. இன்னும் அது சிறப்புடன் விளங்கிவந்தது. இந்த ஆறு ராஜ்யங்களுக்கிடையில் எப்போதும் ஓயாத சண்டை. ஒவ்வொன்றும் தட்சிணத்தின் தலைமையை அடைய முயன்றது. அவற்றிற்குள் பல கூட்டுகள் ஏற்பட்டன. அக்கூட்டுகளும் அடிக்கடி மாறிவந்தன. ஒரு சமயம் ஒரு முஸ்லிம் ராஜ்யம் ஒரு ஹிந்து ராஜ்யத்தோடு போரிடும். இன்னொரு சமயம் ஒரு முஸ்லிம் ராஜ்யமும் ஒரு ஹிந்து ராஜ்யமும் சேர்ந்துகொண்டு இன்னொரு முஸ்லிம் ராஜ்யத்தோடு போரிடும். இப்போராட்டங்கள் வெறும் அரசியல் போராட்டங்களே ஒழிய வேறில்லை. எப்போதாவது ஒரு ராஜ்யம் அதிக பலம் பெறுவதாகத் தோன்றினால் உடனே மற்ற ராஜ்யங்கள் அதற்கு எதிராக ஒன்று சேர்ந்து கொள்ளும். கடைசியில், விஜயநகரின் பலத்தையும் ஐசுவரியத்தையும் காணப் பொறுக்காத முஸ்லிம் ராஜ்யங்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து, 1565-ல், தலைக்கோட்டையில் நடந்த போரில் அதை அடியோடு அழித்தொழித்து விட்டன. 250 ஆண்டுகள் ஓங்கியிருந்தபிறகு விஜயநகர சாம்ராஜ்யம் முடிவுற்றது. பெருமையும் சிறப்பும் வாய்ந்த அதன் தலைநகர் அழிவுற்றது.

வெற்றி பெற்ற கூட்டாளிகளுக்குள் இப்போது வேற்றுமை பிறந்தது. அவர்கள் ஒருவரோடொருவர் போரிட்டுக்கொண்டார்கள். வெகு விரைவிலேயே டில்லி மொகலாய சாம்ராஜ்யத்தின் நிழல் அவை எல்லாவற்றின் மீதும் விழுந்தது. போர்த்துகீசியரும் அவர்களுக்குத் தொல்லை விளைத்தார்கள். அவர்கள் 1510-ல் கோவாவைப் பிடித்துக் கொண்டார்கள். அது பீஜபூர் ராஜ்யத்தில் இருந்தது. விடாது முயன்றும் அவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்த முடியவில்லை. அவர்களுடைய தலைவனை அல்புகர்க் என்பவன் இப்போது கிழக்குலகம் முழுமைக்கும் ராஜப்பிரதிநிதி. அவன் இழைத்த கொடுஞ்செயல்களுக்கு அளவில்லை. போர்த்துகீசியர், ஸ்திரீகள் குழந்தைகள் உட்பட அனைவரையும் படுகொலை புரிந்தார்கள். நாளது வரையில் அவர்கள் கோவாவில் இருந்து வருகிறார்கள்.

இந்தத் தட்சிண ராஜ்யங்களில், முக்கியமாக விஜயநகரம், கோல்கொண்டா, பீஜபூர் ஆகிய இடங்களில் அழகிய கட்டிடங்கள் எழுந்தன. கோல்கொண்டா இப்போது பாழ்பட்டுக் கிடக்கிறது. பீஜபூரில் இன்னும் பல அரிய கட்டிடங்கள் அழியாமல் இருக்கின்றன. விஜயநகரம் நிர்த்தூளியாகி விட்டபடியால் அங்கு ஒன்றும் இல்லை. ஏறக்குறைய இக்காலத்தில் தான் கோல்கொண்டாவுக்கருகில் ஹைதராபாத் நகரம் ஸ்தாபிக்கப் பட்டது. தென்னிந்தியாவில் வாழ்ந்த கட்டிட வினைஞர் பலர் பிற்காலத்தில் வட இந்தியாவுக்குச் சென்று அங்கே ஆக்ராவில் தாஜ்மஹால் கட்ட உதவினார்கள் என்று சொல்லப்படுகிறது.

மதசம்பந்தமான விஷயங்களில் பொதுவாகச் சகிப்புத் தன்மை நிலவி வந்தது. ஆனால், அவ்வப்போது மதத்துவேஷமும் மூடப்பிடிவாதமும் பீறிக்கொண்டு கிளம்பின. அப்போர்களால் பயங்கரக் கொலைகளும் நாசமும் விளைந்தன. இது இப்படி இருக்க, முஸ்லிம்

ராஜ்யமான பீஜபூரில் ஹிந்து குதிரைப்படையும், ஹிந்து ராஜ்யமான விஜயநகரில் முஸ்லிம் காலாட் படையும் இருந்தன என்று அறிய ஆச்சரியப்படுகிறோம். நாகரிகம் உயர் நிலை எய்தியிருந்தது. ஆனால் அது கேவலம் பணக்கார நாகரிகம். வயல்களில் வேலை செய்யும் ஏழைகளுக்கு அதில் இடமில்லை. அப்படியிருந்தும், அவ்வேழைகள் தான், வழக்கம்போல், பணக்காரருடைய சுகபோக வாழ்வின் சுமையைத் தாங்கி வந்தார்கள்.

77

விஜய நகரம்

ஜூலை 15, 1932.

நாம் சென்ற கடிதத்தில் பார்த்த தென்னிந்திய ராஜ்யங்கள் எல்லாவற்றுள்ளும் விஜயநகரின் சரித்திரம் தான் மிகவும் நீண்டது. வெளிதேசத்து யாத்திரீகர் பலர் அதை வந்து பார்வையிட்டிருக்கிறார்கள். அவர்கள் விஜய நகர ராஜ்யத்தைப் பற்றியும் அதன் தலைநகரைப் பற்றியும் எழுதியுள்ள வரலாறுகள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. இதாலி தேசத்தவரான நிகோலோ காண்டி என்பவர் 1420-ல் வந்தார். ஹீரெட்டைச் சேர்ந்த அப்துல் ரஜாக் என்பவர் 1443-ல் வந்தார். அவர் மத்திய ஆசியாவில் மங்கோலிய மகாகானின் ராஜசபையில் இருந்தவர். போர்த்துகீசியரான பெயிஸ் என்பவர் 1522-ல் வந்தார். இவ்வாறு இன்னும் பலர் வந்தார்கள். தென்னிந்திய ராஜ்யங்களைப் பற்றி, அதிலும் விசேஷமாக பீஜப்பூரைப் பற்றிக் கூறும் ஒரு இந்திய சரித்திர நூலும் உளது. அது அக்பர் காலத்தில் பெரிஷ்டா என்பவரால் பாரசீக பாஷையில் எழுதப்பட்டது. அதாவது, நாம் பேசுகிற காலத்துக்குச் சிறிது பிந்தி எழுதப்பட்டது. சமகாலச் சரித்திர நூல்கள் பெரும்பாலும் பட்சபாதமானவையாகவும், மிகைபட மொழிவனவாகவும் இருக்கின்றன. ஆயினும், அவை நமக்குப் பெரிதும் உதவுகின்றன. காஷ்மீர் ராஜவமிச வரலாறு கூறும் ‘ராஜதரங்கிணியை’த் தவிர்த்து முசல்மான் ஆட்சிக்கு முற்பட்ட காலத்தைப் பற்றிக் கூறும் நூல்கள் யாதொன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே, பெரிஷ்டாவின் சரித்திர நூல் இலக்கிய உலகில் ஒரு புது வழியைக் காட்டியது. மற்றவர்கள் அதைப் பின்பற்றினார்கள்.

வெளிநாட்டுப் பார்வையாளர்களின் விஜயநகர
வருணனைகள் நடுநிலைகோடாத எழுத்தோவியங்களா
கத் திகழ்கின்றன. அடிக்கடி நிகழ்ந்து வந்த யுத்த
வரலாறுகளிலிருந்து அறிந்து கொள்வதைவிட அவற்றி
லிருந்து நாம் அதிகமாக அறிந்து கொள்ளுகிறோம்.
ஆகவே, அவற்றில் சில பகுதிகளை இங்கே தருகிறேன்.

1336-வாக்கில் விஜயநகர் ஸ்தாபிக்கப்பட்டது.
தென்னிந்தியாவில் இப்போது கர்நாடகம் என வழங்கும்
பிரதேசத்தில் அது இருந்தது. அது ஹிந்து ராஜ்யமா
யிருந்தபடியால் தென்முஸ்லிம் ராஜ்யங்களிலிருந்து பலர்
அங்கு வந்து தஞ்சம் புகுந்தார்கள். அதிவிரைவில்
அது வளர்ந்து வந்தது. சில ஆண்டுகளுக்குள் தெற்கில்
அதன் ஆதிக்கம் பரவியது. அதன் தலைநகரின் அழகும்
ஐசுவரியமும் எல்லாருடைய கவனத்தையும் கவர்ந்தன.
இவ்வாறு அது தட்சிணத்தில் முதன்மையான வல்லர
சாக விளங்கியது.

அதன் செல்வச் சிறப்பைப்பற்றி பெரிஷ்டா நமக்குக்
கூறுகிறார். 1406-ல் ஒரு முஸ்லிம் பாமினி அரசன்
குல்பர்காவிலிருந்து விஜயநகர ராஜகன்னிகை ஒருத்தியை
மணந்து கொள்ளச் சென்றபோது அதன் தலைநகர்
அளித்த காட்சியை அவர் வருணித்திருக்கிறார். வீதியில்
ஆறு மைல் தூரத்துக்குப் பீதாம்பரமும், வெல்வெட்டும்
இன்னும் இவை போன்ற விலை உயர்ந்த விரிப்புகளும்
பரப்பப்பட்டிருந்தன என்று அவர் சொல்லுகிறார். எத்
தகைய கேவலமான, கொடுமையான, வீணான பண
விரயம் பார்த்தாயா!

1420-ல் இதாலி நாட்டு நிகோலோ காண்டி வந்தார்.
அவர் அந்நகரின் சுற்றளவு அறுபது மைல் என்று கூறு
கிறார். அங்கே பல உத்தியானவனங்கள் இருந்தபடி
யால் அதன் விஸ்தீரணம் அவ்வளவு பெரியதாயிருந்தது.

விஜயநகரை ஆண்ட அரசர் ராயர் என்று அழைக்கப்
பட்டார். அக்காலத்தில் இந்தியாவிலேயே அதிக பலம்
வாய்ந்த அரசர் ராயர்தான் என்பது காண்டியின் அபிப்
பிராயம்.

அடுத்தபடியாக மத்திய ஆசியாவிலிருந்து அப்துல்
ரஜாக் வந்தார். விஜயநகருக்கு வரும் வழியில் மங்க
ளூருக்கு அருகில், உருக்கிய பித்தளையால் வார்க்கப்பட்ட
ஆச்சரியமான ஒரு கோயிலை அவர் கண்டார். அதன்
அடித்தளம் முப்பதுக்கு முப்பது சதுரம், உயரம் பதி
னைந்து அடி. அதற்கப்பால் பேலூரில், அவர் இன்னொரு
கோயிலைக் கண்டு இன்னும் அதிக ஆச்சரியமடைந்தார்.
அதை உண்மையாக வருணிக்கத் தொடங்கினால், மிகை
பட உரைப்பதாகப் பிறர் கருதுவார்கள் என்று அஞ்சி
அவர் அதை வருணிக்க முயலவில்லை. அதன் பிறகு அவர்
விஜயநகரை அடைந்தார். அந்நகரை வருணிக்கையில்
அவருக்கு ஆனந்தம் தாங்கமுடியவில்லை. “இப்பூமண்டல
முழுவதிலும் இந்நகருக்கு நிகரான ஓரிடத்தை யாரும்
கண்டதுமில்லை, கேட்டதுமில்லை” என்று அவர் சொல்லு
கிறார். பல கடைவீதிகளையும் அவர் வருணிக்கிறார். அவர்
கூறுவதாவது: “ஒவ்வொரு கடைவீதி முனையிலும் ஒரு
உயரமான வளைவும் அழகான படிக்கட்டும் உண்டு. கடை
வீதிகள் மிகவும் நீளமாகவும் அகலமாகவும் இருக்கின்
றன. நறுமணங் கமழும் புது மலர்கள் அந்நகரில் எப்
போதும் கிடைக்கும். அந்நகர மாந்தருக்கு மலர்கள்
ஜீவாதாரமானவை என்றே சொல்லவேண்டும். மலர்கள்
அவர்களுக்கு அவ்வளவு இன்றியமையாதனவா யிருக்கின்
றன. குறிப்பிட்ட ஒரு பொருளில் வியாபாரம் செய்வோ
ருடைய கடைகள் அடுத்தடுத்து இருக்கின்றன. ரத்தின
வியாபாரிகள் ரத்தினங்களையும், முத்துக்களையும்,
வைரம், பச்சை முதலிய கற்களையும் கடைகளில் பூட்டுத்

திறப்பின்றி வைத்துக் கொண்டு விற்கிறார்கள்." அப்துல் ரஜாக் மேலும் கூறுவதாவது: "இந்த மனோரம்மியமான இடத்தில் அரசரின் அரண்மனை அமைந்திருக்கிறது. அங்கு, நன்றாக இழைத்து இணைக்கப்பெற்ற கற்களாலாய பல கால்களில் நீர் சதா ஓடிக்கொண்டிருக்கிறது. நாடு முழுதும் ஜனங்கள் நிறைய வசிக்கிறார்கள். அதன் பெருமையை விரித்துரைப்பது அசாத்தியம்." 15-வது நூற்றாண்டின் இடையில் மத்திய ஆசியாவிலிருந்து வந்த இவர் விஜயநகரின் அருமைபெருமைகளையெல்லாம் இவ்வாறு வானளாவப் புகழ்ந்துகொண்டே போகிறார்.

அப்துல் ரஜாக் பல பெரிய நகரங்களைப் பார்த்தவ அல்ல, ஆகவே, அவர் விஜயநகரைக்கண்டதும் விம்மி முற்றவராய் ஏதேதோ கூறிவிட்டார் என்று சிலர் நினை கலாம். ஆனால், அவருக்கு அடுத்தபடியாக அங்கு வந்து கண்டவர் பல நாடுகளையும் சுற்றிப்பார்த்தவ அவர் ஒரு போர்த்துகீசியர்; பெயிஸ் என்னும் பெ பூண்டவர். அவர் 1522-ல் இங்கு வந்தார். ஏறக்குறைய அக்காலத்தில்தான் இதாலியில் மறுமலர்ச்சியின் பிரபாவம் பொங்கிக்கொண்டிருந்தது. இதாலிய நகரங்களில் பல அழகிய கட்டிடங்கள் தோன்றிக்கொண்டிருந்தன. பெயிஸ் அவற்றையெல்லாம் பார்த்திருக்க வேண்டும். ஆகவே, அவருடைய அபிப்பிராயத்துக்கு அதிக மதிப்பு உண்டு. அவர் சொல்வதைக் கேட்போம். "விஜயநகரின் தலைநகரம் ரோமாபுரியைப் போல் பெரிதாகவும் பார்ப்பதற்கு மிகவும் அழகாகவும் இருக்கிறது" என்று அவர் சொல்லுகிறார். அந்நகரின் அதிசயங்களையும், அங்குள்ள கணக்கற்ற நீர்நிலைகள், நீர்க்கால்கள், பழத்தோட்டங்கள் இவற்றின் அழகையும் அவர் விரிவாக வருணிக்கிறார். "இதைப்போல் சகலவளங்களும் கொழிக்கும்

நகரம் உலகில் வேறெங்கும் இல்லை. மற்ற நகரங்களில், தேவையான பொருள்களும் பண்டங்களும் கிடைக்காமற் போவதும் உண்டு. ஆனால் இது அப்படி அல்ல" என்று அவர் சொல்லுகிறார். அரண்மனையில் அவர் பார்த்த ஒரு அறை முழுவதும் தந்தத்தால் ஆக்கப்பட்டிருந்ததாம். "கீழ்த்தளம், சுவர்கள், மேற்கூறை எல்லாம் தந்தம். குறுக்கு உத்திரங்களைத் தாங்கும் தூண்களின் உச்சியில், தாமரை, ரோஜா முதலிய பூவேலைகள் தந்தத்தில் செய்யப்பட்டிருக்கின்றன. ஆகா, அவற்றின் செப்பமான வேலைப்பாட்டையும் ஒப்புயர்வற்ற அழகையும் என்னென்பது! அவற்றிற்கு அவையேதான் இணை. அவற்றைப்போல் வேறெங்கும் காண்பது அரிது" என்று அவர் கூறுகிறார்.

தாம் வந்து பார்த்தபோது விஜயநகரை ஆண்ட அரசரையும் பெயிஸ் வருணிக்கிறார். அவருடைய பெயர் கிருஷ்ண தேவராயர் என்பது. அவர் தென்னிந்தியப் பேரரசர்களுள் ஒருவர்; சிறந்த போர்வீரர்; விரோதிகளிடத்திலும் கருணை காட்டுபவர்; இலக்கியங்களையும் கலைகளையும் ஆதரித்து வளர்த்தவர்; பொது ஜனப்பிரியர்; வரையாது வழங்கும் வள்ளன்மை உடையவர். அவருடைய புகழ் தட்சிணத்தில் இன்றும் நின்று நிலவுகிறது. அவர் 1509-லிருந்து 1529-வரையில் இருபது வருஷங்கள் அரசுபுரிந்தார். அவருடைய உயர்ந்த தோற்றம், வடிவழகு, சிவந்தநிறம் இவற்றைப்பற்றியெல்லாம் பெயிஸ் நமக்குக் கூறுகிறார். அவர் மேலும் சொல்வதாவது: "அவரைப் போன்ற உத்தமமான அரசன் உலகில் வேறெங்கும் இல்லை. பகைவர் நெஞ்சில் பயத்தை விளைப்பதிலும் அவருக்கு ஈடானவர் கிடையாது. அவர் இனிமையான சுபாவம் உடையவர். எப்போதும் குதூகலமாயிருப்பார். வெளிநாட்டாரை அன்புடன் வரவேற்று

இன்புடன் உபசரிப்பார். அவர்கள் எங்கிலேயராயினும் அவர்களுடைய சமாசாரங்களை யெல்லாம் ஒன்றுவிடாது விசாரிப்பார்." அரசருக்கு வழங்கும் அநேகவிதமான விருதுகளையும் பட்டங்களையும் கூறிவிட்டு, பெயிஸ் மேலும் கூறுவதாவது: "ஆனால், அவை அனைத்தும் அவருடைய பெருமையை உள்ளபடி எடுத்துரைக்கும் வலியற்றனவாயிருக்கின்றன. அவ்வளவும் அவருக்குத் தகும். அதற்குமேலும் தகும். ஏனெனில், அவரிடம் சகல உத்தம குணங்களும் கோயில்கொண் டிருக்கின்றன."

ஆகா என்ன புகழ்ச்சி! என்ன புகழ்ச்சி! விஜயநகர சாம்ராஜ்யம் அக்காலத்தில் தென்னிந்தியா முழுவதிலும் கீழ்க்கரையிலும் வியாபித்திருந்தது. அது மைசூரையும், திருவாங்கூரையும், தற்போதைய சென்னை ராஜதானி முழுவதையும் தன்னுள் கொண்டிருந்தது.

ஒரு விஷயம் சொல்லவேண்டும். 1400-ல், நகரத்துக்கு நல்ல தண்ணீர் கொண்டுவருவதற்காகப் பெரிய நீர்ப்பாசன மராமத்து வேலைகள் செய்யப்பட்டன. ஒரு ஆறு முழுதையும் அணை கட்டித் தடுத்துப் பெரிய நீர்த்தேக்கத்தை உண்டாக்கினார்கள். அதிலிருந்து 15 மைல் நீளமுள்ள கால்வாய் வழியாக நகருக்குத் தண்ணீர் சென்றது. அது பெரும்பாலும் பாறையைக் குடைந்து வெட்டப்பட்டதாகும்.

விஜயநகரம் இவ்வாறு விளங்கியது. அது செல்வத்தாலும் அழகாலும் செருக்கியும், தோள்வலியால் தருக்கியும் நின்றது. விஜயநகர சாம்ராஜ்யத்துக்கும் அதன் தலைநகருக்கும் அந்தியகாலம் அவ்வளவு சீக்கிரத்தில் வரும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. பெயிஸ் வந்து போன நாற்பத்துமூன்று வருஷத்துக்கெல்லாம் அபாயம் திடீரென்று தோன்றியது. விஜயநகரைக் கண்டு பொறுமையுற்ற மற்றத் தட்சிண ராஜ்யங்களெல்லாம் ஒன்று சேர்ந்து அதை அழிக்கக் கங்கணம் கட்டிக் கொண்டன. அப்பொழுதுகூட அது தன்னைக் காத்துக் கொள்ள முடியும் என்று தெரியாத்தனமாக நம்பியிருந்தது. விரைவில் அது அழிந்துவிட்டது. அது அடியோடு அழிந்துபோன அநியாயத்தை என்னென்பது!

1565-ல் மேற்கூறிய ராஜ்யங்கள் ஒன்றாகக் கூடி வந்து விஜயநகரைத் தோற்கடித்தன என்று முன்பே கூறியிருக்கிறேன். அங்கு வாழ்ந்த மக்கள் பயங்கரமான படுகொலைக்கு ஆளானார்கள். பிறகு, பகைவர் அம் மாநகரை அழிக்கத் தொடங்கினார்கள். அழகிய ஆலயங்கள், அரண்மனைகள், மாளிகைகளெல்லாம் அழிக்கப்பட்டன. ஒப்புயர்வற்ற சிற்பவடிவங்களும், செதுக்கு வேலைப்பாடுகளும் உடைத் தெறியப்பட்டன. கொளுத்தக்கூடியவற்றை யெல்லாம் பகைவர் ஒன்று விடாமல் கொளுத்தித் தீர்த்தனர். வெறும் பாழாகும் வரையில் அவர்கள் அதை அழித்துக் கொண்டே சென்றனர். ஒரு ஆங்கிலேய சரித்திராசிரியன் கூறுவதைக் கேள்: "உலக சரித்திரத்திலேயே இத்தகைய நாசம் இதுவரை நிகழ்ந்ததில்லை. அதுவும், இவ்வளவு அழகான ஒரு நகரம் இவ்வளவு திடீரென்று யாராலும் அழிக்கப்பட்டதில்லை. இன்று பார்த்தால் சகல வளங்களும் பொருந்தி விளங்குகிறது ஒரு நகரம். ஏராளமான ஜனங்கள் அங்கு வசிக்கிறார்கள். அவர்களுடைய செல்வப் பெருமைக்கும் தொழில் திறமைக்கும் அளவில்லை. அத்தகைய ஒரு நகருக்கு மறுநாள் நேரும் கதி என்ன? பகைவர் அதைக் கைப்பற்றுகிறார்கள், சூறையாடுகிறார்கள், நிர்மூலமாக்குகிறார்கள். ஜனங்கள் மிருகத்தனமான கோரக்கொலைக்கு ஆளாகிறார்கள். அந்த அக்கிரமத்தையும் அநியாயத்தையும் நாவினால் சொல்லவும் கூடவில்லை."

78

மலாயாசிய சாம்ராஜ்யங்களான மத்திய பாஹிதமும் மலாக்காவும்

ஜூலை 17, 1932.

மலாயாசியாவையும் கிழக்குத் தீவுகளையும் நாம் அவ்வளவாகக் கவனியாமலிருந்து விட்டோம். அவற்றைப் பற்றி எழுதி நெடுநாளாகி விட்டது. நான் இது வரையில் எழுதியிருப்பதைப் புரட்டிப் பார்த்தேன். 46-வது கடிதத்தில் அவற்றைப் பற்றிக் கடைசியாகப் பேசியிருக்கிறேன். அதற்குப்பின் 31 கடிதங்கள் எழுதி முடிந்துவிட்டன. இப்போது 78-வது கடிதத்தில் இருக்கிறோம். எல்லாத் தேசங்களையும் ஒரே வரிசையில் கொண்டு நிறுத்துவது கஷ்டமாயிருக்கிறது.

இரண்டு மாதங்களுக்கு முன் நான் எழுதியதில் சிறிதாவது உனக்கு ஞாபகமிருக்கிறதா? கம்போடியா, அங்கோர், சுமத்திரா, ஸ்ரீவிஜயம் இவற்றைப் பற்றிய வரலாறு ஞாபகமிருக்கிறதா? இந்தோ-சீனாவின் பழைய இந்தியக் குடியேற்றங்கள் பல நூற்றாண்டுகளாக வளர்ந்து ஒரு பெரிய சாம்ராஜ்யமாகப் பரிணமித்தன. அதுதான் கம்போடிய சாம்ராஜ்யம். பிறகு இயற்கையின் கோபத்தால் சாம்ராஜ்யமும் தலைநகரும் திடீரென்று அழிந்துபட்டன. 1300-ல் இது நிகழ்ந்தது.

கம்போடிய சாம்ராஜ்யம் நிலைபெற்றிருந்த காலத்திலேயே, கடலுக்கு அப்பால் சுமத்திரா தீவில் இன்னொரு பெரிய சாம்ராஜ்யம் நடைபெற்று வந்தது. அதற்கு ஸ்ரீவிஜயம் என்று பெயர். ஸ்ரீவிஜயம் கம்போடியாவுக்குச் சிறிது பிற்பட்டுத் தன் வாழ்வைத் தொடங்கி அதன் காலத்துக்குப் பிறகும் இருந்து வந்தது. ஸ்ரீவிஜயத்தின் முடிவும் திடீரென்றுதான் ஏற்பட்டது. ஆனால், அதற்குக் காரணம் மனிதனே ஒழிய இயற்கை அல்ல. பௌத்த சாம்ராஜ்யமான ஸ்ரீவிஜயம் 300 ஆண்டுகள் தழைத்தோங்கிக் கிழக்குத் தீவுகள் எல்லாவற்றின் மீதும் ஆதிக்கம் செலுத்தி வந்தது. சிலகாலம் வரையில் இந்தியாவிலும், இலங்கையிலும், சீனாவிலும் கூட அது ஓரளவு இடம் பெற்றிருந்தது. அது ஒரு வியாபார சாம்ராஜ்யம். வியாபாரமே அதன் உயிர்நாடி. ஆனால் அதற்கு அருகிலேயே, *ஜாவா தீவின் கீழ்ப்பாகத்தில், இன்னொரு வியாபார ராஜ்யம் எழுந்தது. இது ஒரு ஹிந்துராஜ்யம். இது ஸ்ரீவிஜயத்துக்குப் பணிந்து போகமறுத்துவிட்டது.

ஒன்பதாவது நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து, 400 வருஷங்கள் வரையில், பலம்பெருகி வந்த ஸ்ரீவிஜயம் இக்கீழ் ஜாவா ராஜ்யத்தை அச்சுறுத்தி வந்தது. ஆனால், அது தன் சுதந்திரத்தை இழவாமல் காப்பாற்றிக் கொண்டதோடு, அருமையான கற்கோயில்கள் பலவற்றை ஆச்சரியகரமான முறையில் கட்டி வந்தது. இவற்றில் மிகவும் சிறந்த பொரபுதூர் கோயில்கள் இன்னும் இருக்கின்றன. அவற்றைப் பலர் சென்று பார்க்கிறார்கள். ஸ்ரீவிஜயத்தின் ஆதிக்கத்திலிருந்து தப்பிப்பிழைத்த கீழ் ஜாவா ராஜ்யம் நாளடைவில் தானே பலாத்காரத்தை மேற்கொண்டு தன்னுடைய பழைய வைரியைப் பயமுறுத்தத் தொடங்கியது. இரண்டும் வியாபார ராஜ்யங்கள். இரண்டும் கடல் கடந்து வியாபாரம் செய்து வந்தன. ஆகவே, இரண்டும்

* 'ஜாவா' என்பதே சாவகத்தீவு என்று பழைய தமிழ் நூல்களில் பேசப்படுகிறது.

ஒன்றோடொன்று முட்டிக்கொள்வதற்கான சந்தர்ப்பம் அடிக்கடி ஏற்பட்டு வந்தது.

ஜாவாவுக்கும் சுமத்திராவுக்கும் ஏற்பட்ட போட்டியைத் தற்கால வல்லரசுகளின் போட்டியோடு, உதாரணமாக இங்கிலாந்து-ஜெர்மனி போட்டியோடு ஒப்பிட்டுப் பார்க்க நான் ஆசைப்படுகிறேன். ஸ்ரீவிஜயத்தை அடக்குவதற்கும், தன் வியாபாரத்தை விருத்தி செய்வதற்கும் கடலாதிக்கத்தைப் பெருக்குவது ஒன்றுதான் வழி என்றுணர்ந்த ஜாவா தன்னுடைய கடற்படையை அதிகரித்து வந்தது. அது போருக்காகப் பல பெரிய கடற்படைகளை அனுப்பிவைத்தது. ஆனால், பல வருஷங்கள் வரையில் அவை எதிரிகளோடு மோதிக்கொள்ளவில்லை. 13-வது நூற்றாண்டின் இறுதியில் மத்திய பாஹிதம் என ஒரு நகரம் நிருமிக்கப்பட்டது. அது, விருத்தியாகி வரும் ஜாவா ராஜ்யத்திற்குத் தலைநகர் ஆகியது.

மகாகான் குப்ளே அனுப்பிய சில தூதர்கள் கப்பம் கேட்பதற்காக ஜாவாவுக்கு வந்தார்கள். அந்நாட்டினர் கானுக்குக் கப்பம் செலுத்தாததுமன்றி அவனுடைய தூதர்களை அவமதிப்பாகவும் நடத்தினர். அவர்கள் ஒரு தூதனைப் பிடித்து அவனுடைய நெற்றியில் அவமதிப்பான வாசகங்களைப் பச்சைகுத்தி அனுப்பிவைத்தார்கள். அவ்வளவு கொழுப்பும் கருவமும் ஏறிவிட்டது அவர்களுக்கு! மங்கோலியகான் ஒருவனுடன் விளையாடுவது நெருப்புடன் விளையாடுவது போல் மடமையும் அபாயமும் நிறைந்தது. இத்தகைய அவமதிப்பின் காரணமாகவன்றோ மத்திய ஆசியா செங்கிஸ்கானாலும், பாக்தாது ஹுலகுவாலும் அழிந்தொழிந்தன. அப்படியிருந்தும் அச்சிறிய தீவான ஜாவா அவ்வாறு அவமதிக்கத் துணிந்தது. ஆனால், அவர்களுடைய நல்லகாலம், மங்கோலியர் அக்காலத்தில் மிகுந்த சாந்த சீலர்களாகவும்

வெற்றியை விரும்பாதவர்களாகவும் ஆய்விட்டிருந்தார்கள். கடற்போர் என்றால் அவர்களுக்கு அவ்வளவாகப் பிடிக்காது. தரைப் போர்தான் அவர்களுக்கு எடுத்தது. ஆயினும், குற்றம் புரிந்த அரசனைத் தண்டிப்பதற்காகக் குப்ளே ஒரு படையை அனுப்பிவைத்தான். அச் சீனப்படை ஜாவா நாட்டினரை வென்று அவர்களுடைய அரசனைக் கொன்றது. ஆனால், அவர்கள் அதற்குமேல் அதிகச்சேதம் ஒன்றும் விளைத்ததாகத் தெரியவில்லை. மங்கோலியருடைய இயல்பையும் மாற்றிவிட்ட சீன மண்ணின் பெருமையே பெருமை!

சீனப்படையின் வரவு, முடிவில் ஜாவாவுக்கு நன்மையாக முடிந்ததாகவே தோன்றுகிறது. அதனால் அது—இனி அதை மத்திய பாஹித சாம்ராஜ்யம் என அழைப்போம்—அதிக பலம் பெற்றது. சீனரின் வருகையோடு ஜாவாவுக்குத் துப்பாக்கிகளும் வந்துசேர்ந்தன. அதற்குப் பின் நிகழ்ந்த போர்களில் மத்திய பாஹிதம் அடைந்த வெற்றிக்கு அவை ஒரு வேளை காரணமாயிருக்கலாம்.

மத்திய பாஹித சாம்ராஜ்யம் விரிவடைந்துகொண்டே சென்றது. தற்செயலாகவோ வரையறையின்றியோ அது விரிவடைந்தது என்று சொல்வதற்கில்லை. அதற்கு வேண்டிய திட்டங்களை அரசாங்கம் ஆராய்ந்து வகுத்தது. திறமைமிக்க தரைப்படையும் கடற்படையும் அத்திட்டங்களை நிறைவேற்றி வைத்தன. இவ்வாறு அது விரிவடைந்து வந்த காலத்தில் சுஹிதா ராணி என்பவள் அரசுபுரிந்து வந்தாள். அரசாங்கம் ஒருமுக அதிகாரமுள்ளதாகவும் திறமையுள்ளதாகவும் இருந்தது. அங்கு வழங்கிய வரிமுறையும், கடற்சுங்கம், உள்நாட்டுச்சுங்கம், உள்நாட்டுத் தீர்வை ஆகியவையும் மிகவும் சிறப்பான முறையில் அமைந்திருந்தன என்று மேனாட்டுச் சரித்திராசிரியர்கள் கூறுகிறார்கள். அரசாங்

கத்தில் பல தனி இலாகாக்கள் இருந்தன. அவை குடியேற்ற இலாகா, வர்த்தக இலாகா, பொது சுகாதார இலாகா, உள்நாட்டு இலாகா, யுத்த இலாகா என்பனவாகும். இரண்டு தலைமை நீதிபதிகளையும் ஏழு நீதிபதிகளையும் கொண்ட ஒரு உயர்நீதிமன்றம் இருந்தது. பிராமணப் புரோகிதர்கள் அதிகமான அதிகாரம் செலுத்தி வந்ததாகத் தெரிகிறது. ஆனால், அவர்கள் அரசனுக்கு அடங்கியிருந்ததாகக் கருதப்படுகிறது.

மேற்கூறிய இலாகாப் பிரிவினையும், அவற்றின் பெயர்களில் சிலவும் நமக்கு 'அர்த்த சாஸ்திர'த்தை ஓரளவு ஞாபகமூட்டுகின்றன. ஆனால், இங்கே புதிதாகக் காணப்படுவது குடியேற்ற இலாகாவாகும். உள்நாட்டு விவகாரங்களைக் கவனித்து வந்த உள்நாட்டிலாகாவின் அதிபதி 'மந்திரி' என்று அழைக்கப்பட்டார். இது எதைக் காட்டுகிறது? தென்னிந்தியாவில் பல்லவர்கள் ஆண்ட காலத்தில், அங்குள்ள மக்கள் முதன் முதலாக இத்தீவுகளுக்கு வந்து குடியேறத் தலைப்பட்டது முதல் 1200 ஆண்டுகள் வரையில் இந்திய சம்பிரதாயங்களும் கலைப்பண்பும் இங்கு அறுபடாது தொடர்ந்து இருந்து வந்திருக்கின்றன என்பதையே இது காட்டுகிறது. இத்தீவுகளுக்கும் தாய்நாட்டுக்கும் தொடர்பு அறுபடாமலிருந்திருந்தால்தான் இது சாத்தியமாய் இருந்திருக்கும். வியாபாரத்தின் மூலம் இத்தகைய தொடர்புகள் காப்பாற்றப்பட்டு வந்தன என்பதில் ஐயமில்லை.

மத்திய பாஹிதம் ஒரு வியாபார சாம்ராஜ்யம். ஆகவே, அதன் ஏற்றுமதி-இறக்குமதி வியாபாரங்கள்—அதாவது, அங்கிருந்து வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் பொருள்கள், வெளி நாடுகளிலிருந்து தருவிக்கப்படும் பொருள்கள் ஆகிய இவை சம்பந்தமான வியாபாரங்கள்—அதி ஜாக்கிரதையுடன் நடத்தப்படுவது

இயற்கையேயாகும். முக்கியமாக இந்தியா, சீனா, தன் குடியேற்ற நாடுகள் இவற்றுடன் இவ்வியாபாரங்கள் நடந்து வந்தன. ஸ்ரீவிஜய சாம்ராஜ்யத்துடன் யுத்த நிலைமை நீடித்திருந்த வரையில் அதனுடனும் அதன் குடியேற்ற நாடுகளுடனும் அமைதியான வியாபாரம் நடத்துவதற்கு வழியில்லாமல் இருந்தது.

ஜாவா ராஜ்யம் பல நூற்றாண்டுகள் நிலைபெற்றிருந்தது. ஆனால், அங்கு விளங்கிய மத்திய பாஹித சாம்ராஜ்யம் உன்னத தசையில் இருந்தது 1335-லிருந்து 1380-வரையில்தான். அதாவது, 45 ஆண்டுகள். இந்தக் காலத்தில்தான், அதாவது 1377-ம் ஆண்டில் ஸ்ரீவிஜயத்தை முடிவாகக் கைப்பற்றி அழித்து விட்டது. அதற்கும் அன்னமும், சையாம், கம்போடியா ஆகிய நாடுகளுக்கும் நேச உறவு இருந்து வந்தது.

மத்திய பாஹித நகரம் அதிக அழகும் வளமும் வாய்ந்தது. அதன் நடுவில் ஒரு பெரிய சிவாலயம் இருந்தது. அழகிய பல மாட மாளிகைகள் அந்நகரை அலங்கரித்தன. மலாயாசியாவின் இந்தியக் குடியேற்றங்கள் அத்தனையும் அழகிய கட்டிடங்களை ஆக்குவதில் விசேஷ கவனம் செலுத்தி வந்தன. வேறு பல பெரிய நகரங்களும் துறைமுகப் பட்டினங்களும் ஜாவாவில் இருந்தன.

இச் சாம்ராஜ்யம் அதன் பழைய விரோதியாகிய ஸ்ரீவிஜயம் அழிந்த பின்பு அதிகக் காலம் நீடிக்கவில்லை. அங்கு உள் நாட்டுப் போர் மூண்டது. சீனாவுடன் மனஸ்தாபமும் ஏற்பட்டது. அதன் விளைவாக ஒரு சீனக் கடற்படை ஜாவாவுக்கு வந்தது. அதன் குடியேற்ற நாடுகள் அதை விட்டு நாளாவட்டத்தில் பிரிந்து விட்டன. 1426-ல் ஒரு பெரிய பஞ்சம் உண்டாயிற்று. இரண்டாண்டுகளுக்குப் பிறகு மத்திய பாஹிதம் சாம்ராஜ்ய அந்தஸ்தை இழந்து விட்டது. அதற்குப் பின்

50 ஆண்டுகள் வரையில் அது ஒரு சுதந்திர நாடாகமட்டும் இருந்து வந்தது. பிறகு அதற்கும் ஆபத்து வந்து விட்டது. முஸ்லிம் ராஜ்யமான மலாக்கா அதை அடிமைப் படுத்தியது.

மலாயாசியாவின் பழைய இந்தியக் குடியேற்றங்களிலிருந்து தோன்றி வளர்ந்த மூன்ருவது சாம்ராஜ்யமும் இவ்வாறு முடிந்து விட்டது. நமது சிறிய கடிதங்களில் நாம் பெரிய காலப்பகுதிகளைப் பற்றிப் பேசிவந்திருக்கிறோம். முதல் முதலில் இந்தியர் இங்கு வந்து குடியேற ஆரம்பித்தபோது கிறிஸ்து சகாப்தம் ஆரம்பமாகிக் கொண்டிருந்தது. இப்போது நாம் கி. பி. 15-ம் நூற்ருண்டில் இருக்கிறோம். ஆகவே, இக் குடியேற்றங்களின் 1400 வருஷகாலச் சரித்திரத்தை நாம் இப்போது ஆராய்ந்து விட்டோம். கம்போடியா, ஸ்ரீவிஜயம், மத்திய பாஹிதம் ஆகிய இம் மூன்று சாம்ராஜ்யங்களையும் நாம் சிறப்பாகக் கவனித்தோம். அவை ஒவ்வொன்றும் நூற்றுக் கணக்கான வருஷங்கள் நிலைத்திருந்தன. இந் நீண்ட காலப்பகுதிகளை நாம் நினைவில் வைக்க வேண்டியது அவசியம். அதிலிருந்து அந்த ராஜ்யங்களின் ஸ்திரத் தன்மையும் திறமையும் ஒருவாறு நமக்குப் புலப்படுகின்றது. சிற்பக்கலையை அவற்றின் உயிர் என்றும், வியாபாரத்தை அவற்றின் மூச்சு என்றும் கூறலாம். அங்கே, இந்தியக் கலா சம்பிரதாயமானது சீனக் கலா சம்பிரதாயத்தோடு இனிமையாக இணைந்து மிளிர்ந்தது.

நாம் சிறப்பாகப் பேசிய இம் மூன்று குடியேற்றங்களைத்தவிர வேறு பல இந்தியக் குடியேற்றங்களும் இருந்தன என்பது உனக்கு நினைவிருக்கலாம். ஆனால், அவை ஒவ்வொன்றையும் நாம் தனித் தனியாக ஆராய்வதற்கில்லை. இவற்றை அடுத்துள்ள நாடுகளான பர்மா, சையாம் ஆகியவை பற்றியும் நான்

அதிகமாக ஒன்றும் சொல்ல முடியாதவனு யிருக்கிறேன். இவ்விரண்டு நாடுகளிலும் பலம் பொருந்திய ராஜ்யங்கள் தோன்றின. கலைகள் பெரிதும் போற்றி வளர்க்கப்பட்டன. இரண்டிலும் பௌத்தமதம் பரவியது. ஒரு முறை மங்கோலியர் பர்மா மீது படையெடுத்து வந்தார்கள். சையாம் மீது சீன எப்போதும் படையெடுத்துச் சென்றதில்லை. ஆயினும், பர்மா, சையாம் இரண்டும் சீனவுக்குக் கப்பம் செலுத்தி வந்தன. அதைக் கப்பம் என்று சொல்வதைவிட, ஒரு தம்பி புயபக்தி விசுவாசத்துடன் தன் தமையனுக்குச் செலுத்தி வந்த காணிக்கை என்று சொல்வது மிகப் பொருத்தமுடையதாகும். இதற்குப் பதிலாகத் தம்பிக்குத் தமையனிடமிருந்து ஏராளமான விலையுயர்ந்த பரிசுகள் வந்தன.

மங்கோலியர் பர்மாவின் மீது படை யெடுத்து வருமுன், வட பர்மாவிலுள்ள பேகன் என்னும் நகரம் 200 ஆண்டுகள் வரையில் அதன் தலைநகரா யிருந்துவந்தது. அது மிகவும் அழகு வாய்ந்த நகரம் என்று சொல்லப்படுகிறது. அங்கோர் நகரம் ஒன்றைத்தான் அதற்கு இணையாகச் சொல்லக் கூடுமாம். அதன் மிக அழகிய கட்டிடம் ஆனந்தாலயம் என்பது. உலகில், பௌத்த சிற்பக் கலையின் தலைசிறந்த சின்னங்களுள் ஒன்ருக அது விளங்கியது. வேறு பல அழகிய கட்டிடங்களும் அங்கு இருந்தன. பேகன் நகரின் அழிவுகள் இன்றும் பார்க்க அழகா யிருக்கின்றன. 11-வது நூற்ருண்டிலிருந்து 13-வது நூற்ருண்டு வரை அது பெருமை எய்தியிருந்தது. அதற்குப் பின் சில காலம் வரையில் பர்மாவில் ஏதோ தொந்திரவும் குழப்பமும் உண்டாயின. வட பர்மாவும் தென்பர்மாவும் வேறு வேருக இருந்து வந்தன. 16-வது நூற்ருண்டில், தென்பர்மாவில் ஒரு பெரிய அரசன் தோன்றி இரண்டையும் ஒன்று சேர்த்தான். அவனு

டைய தலைநகர் தென்பர்மாவிலுள்ள பெகு என்பது. திடீரென்று பர்மாவைப் பற்றியும் சையாமைப் பற்றியும் சிறிது சுருக்கமாகக் கூறியது உன்னைக் குழப்பத்துக்கு உள்ளாக்காது என்று நம்புகிறேன். மலாயாசியா, இந்து ஆசியா இவற்றின் சரித்திரத்தில் ஒரு அத்தியாயத்தின் முடிவை நாம் இப்போது அடைந்திருக்கிறோம். ஆகவே, நமது ஆராய்ச்சியில் அவற்றைச் சேர்ந்த எல்லா நாடுகளையும் பூரணமாகக் கவனிக்க வேண்டியது அவசியமாகிறது. இது வரையில், அரசியலிலும் கலைப்பண்பிலும் அவற்றைப் பாதித்த சக்திகள் இந்தியாவையும் சீனாவையும் பிறப்பிடமாகக்கொண்டிருந்தன. நான் ஏற்கெனவே கூறியுள்ளபடி, ஆசியாக் கண்டத்தின் தென் கிழக்குப் பகுதியில் உள்ள தேசங்களான பர்மா, சையாம், இந்தோ-சீனா முதலியவை சீனாவால் அதிகமாகப் பாதிக்கப்பட்டன; தென் கிழக்குத் தீவுகளும், மலாய் தீபகற்பமும் இந்தியாவால் அதிகமாகப் பாதிக்கப்பட்டன.

இப்போது புதிய சக்தி ஒன்று தோற்றமளிக்கிறது. இதைக் கொண்டு வந்தவர்கள் அரேபியர்கள். பர்மாவும், சையாமும் இதனால் பாதிக்கப்படவில்லை. ஆனால், மலாய் நாடும், தீவுகளும் இதற்குப் பணிந்து விடுகின்றன. அங்கே ஒரு முஸ்லிம் சாம்ராஜ்யம் விரைவில் தோன்றி வளர்கிறது.

அரேபிய வியாபாரிகள் ஆயிரம் வருஷங்களுக்கு மேலாகவே இத்தீவுகளில் வந்து குடியேறி யிருந்தார்கள். ஆனால், அவர்களுடைய குறி வியாபாரத்தின் மீதுதான். அரசாங்க விவகாரங்கள் எதிலும் அவர்கள் தலையிடவில்லை. 14-வது நூற்றாண்டில் முஸ்லிம் மதப்பிரசாரகர்கள் அரேபியாவிலிருந்து இங்கு வந்தார்கள். சில சிற்றரசர்களைத் தங்கள் மதத்துக்கு மாற்றுவதில் அவர்கள் வெற்றி அடைந்தார்கள்.

இதற்கிடையில், அரசியல் மாறுதல்கள் நிகழ்ந்து வந்தன. மத்திய பாஹிதம் விரிவடைந்து ஸ்ரீவிஜயத்தை நெருக்கி வந்தது. ஸ்ரீ விஜயம் வீழ்ச்சி யடைந்தபோது, அங்கிருந்து பலர் மலாய் தீபகற்பத்தின் தென் பாகத்துக்குச் சென்று அங்கே மலாக்கா என்னும் நகரை ஏற்படுத்தினார்கள். அந்நகரமும், மற்ற ராஜ்யங்களும் விரைவில் வளர்ந்தன. 1400-க்குள் அது பெரிய நகரமாகி விட்டது. மத்திய பாஹித சாம்ராஜ்யத்தில் அடிமை வாழ்வு வாழ்ந்த மக்களுக்கு ஜாவா நாட்டாரைக் கண்டால் பிடிக்கவில்லை. ஏனெனில், ஜாவாநாட்டார் எல்லா சாம்ராஜ்யவாதிகளையும் போலக் கொடுங்கோன்மை செலுத்தி வந்தார்கள். மத்திய பாஹிதத்தின் கீழ் வாழ்வதைக் காட்டிலும் புது ராஜ்யமான மலாக்காவுக்குப் போய்விடுவது மேல் என்று பலர் கருதினார்கள். அக்காலத்தில் சையாம் நாட்டிலும் அரசனுடைய ஆக்கினை கடுமையாக இருந்தது. ஆகவே, மலாக்கா பல பேருக்குப் புகலிடமாக மாறியது. அங்கே பௌத்தர்கள் முஸ்லிம்கள் ஆகிய இருதிறத்தாரும் இருந்தார்கள். பௌத்தர்கள்தான் முதலில் அரசுபுரிந்து வந்தார்கள். ஆனால், பிறகு அவர்கள் இஸ்லாம் மார்க்கத்தில் சேர்ந்து விட்டார்கள்.

இளம் பருவத்திலிருந்த மலாக்கா ராஜ்யத்தை ஒரு புறம் ஜாவாவும் மற்றொருபுறம் சையாமும் பயமுறுத்தி வந்தன. அது தன்னைக் காக்குமாறு சீனாவைப் பிரார்த்தித்தது. அச்சமயம் மங்கோலியரை விரட்டிவிட்டு மிங் வமிசத்தார் சீனாவை ஆண்டு வந்தார்கள். மலாயாசியாவைச் சேர்ந்த சிறு முஸ்லிம் ராஜ்யங்கள் எல்லாம் ஏககாலத்தில் சீன உதவியை நாடியது நமக்கு ஆச்சரியத்தைத் தருகிறது. அவற்றிற்குப் பலம் பொருந்திய விரோதிகளிடமிருந்து அபாயம் உடனே நேர்வதாக

இருந்திருக்க வேண்டும் என்பதையே அது காட்டுகிறது.

மலாயாசிய நாடுகளைப் பொறுத்த வரையில் சீனாவின் கொள்கை எப்போதும் நேசப்பான்மை வாய்ந்ததாகவும், ஆனால், அவற்றிடமிருந்து கௌரவமாக விலகி நிற்பதாகவும் இருந்து வந்திருக்கிறது. அவற்றை ஜெயிக்க வேண்டும் என்ற ஆசை சீனாவுக்கு இல்லை. அவற்றால் தான் அடையக் கூடிய லாபம் ஒன்றுமில்லை என்று அது கருதியது. ஆனால், அது தன் நாகரிகத்தை அவற்றிற்குக் கற்பிக்க எப்போதும் தயாராயிருந்தது. இப்பழைய கொள்கையை மாற்றி இந்நாடுகளின் விவகாரங்களில் அதிக அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று மிங் சக்கரவர்த்தி தீர்மானித்ததாகத் தெரிகிறது. ஜாவா, சையாம் இவற்றின் பலாத்கார முறைகளை அவர் விரும்பவில்லை. ஆகவே, இந்நாடுகளை அடக்குவதற்கும், மற்ற நாடுகள் சீனாவின் வல்லமையை உணருமாறு செய்வதற்கும் அவர் செங்ஹோ என்பவனின் தலைமையில் ஒரு பெரிய கடற்படையை அனுப்பி வைத்தார். அப்படையைச் சேர்ந்த சில கப்பல்கள் 400 அடி நீளம் இருந்தனவாம்.

செங்ஹோ தன் படையுடன் பல பிரயாணங்கள் செய்தான். அவன் பிலிப்பைன், ஜாவா, சுமத்திரா, மலாய் தீபகற்பம் முதலிய எல்லாத் தீவுகளுக்கும் சென்றான். அவன் இலங்கைக்கும் சென்று, அதை வென்று, அதன் அரசனைச் சீனாவுக்குக் கொண்டு போனான். அவனுடைய கடைசிப் பிரயாணத்தில் அவன் பாரசீக வளைகுடா வரையில் சென்றான். 15-வது நூற்றாண்டின் ஆரம்பத்தில் செங்ஹோ செய்த கடற் பிரயாணங்கள் அவன் சென்ற தேசங்களில் பெரிய மன மாறுதலை உண்டாக்கின. ஹிந்து மத்திய பாஹிதத்தையும், பௌத்த சையாமையும் அடக்க விரும்பிய அவன், முஸ்லிம் மலாக்காவை வேண்டுமென்றே ஆதரித்தான். அவனுடைய பெரிய கடற்படை அளித்த பாதுகாப்பின் கீழ் மலாக்கா ராஜ்யம் உறுதியாக நிலை பெற்றது. செங்ஹோவின் நோக்கங்கள் அடியோடு அரசியல் சம்பந்தமானவை; மதத்துக்கும் அவற்றிற்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. அவனே ஒரு பௌத்தன் தான்.

ஆகவே, மத்திய பாஹிதத்தை எதிர்த்த நாடுகளுக்கு மலாக்கா தலைமை வகித்தது. அதன் பலம் பெருகியது. மெள்ள மெள்ள அது ஜாவாவுக்குக் கீழ்ப்பட்ட நாடுகளைப் பிடித்துக் கொண்டது. 1478-ல் அது மத்திய பாஹித நகரையே கைப்பற்றி விட்டது. பிறகு அரசவையிலும் நகரங்களிலும் இஸ்லாம் மதத்தை அனுஷ்டிக்க ஆரம்பித்தார்கள். ஆனால், இந்தியாவில் நிகழ்ந்தது போலவே, நாட்டுப்புறங்களில் பழைய மத நம்பிக்கையும், புராணக் கதைகளும், பழக்க வழக்கங்களும் முன் மாதிரியே வழங்கி வந்தன.

மலாக்கா சாம்ராஜ்யமும், ஸ்ரீவிஜயம் மத்திய பாஹிதம் இவற்றைப் போன்று பெருமையுடன் நீண்ட காலத்துக்கு வாழ்ந்திருக்கலாம். ஆனால், அதற்கு அந்த வாய்ப்பு இல்லை. இதற்கிடையில் போர்த்துக்கீசியர் வந்து குறுக்கிட்டார்கள். சில வருஷங்களுள் கி. பி. 1511-ல் மலாக்கா அவர்கள் வசமாயிற்று. ஆகவே, இந்த சாம்ராஜ்யங்களில் நாலாவதாகத் தோன்றிய மலாக்கா சாம்ராஜ்யம் ஐந்தாவது சாம்ராஜ்யம் ஒன்றுக்கு இடம் கொடுத்தது. ஆனால், அந்த ஐந்தாவது சாம்ராஜ்யமும் அதிக நாள் நீடிக்கவில்லை. சரித்திரத்திலேயே முதல் தடவையாக, ஐரோப்பா பலாத்காரத்தை மேற்கொண்டு கீழ்ச் சமுத்திரத்தில் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தது.

79

ஐரோப்பா கிழக்கு ஆசியாவில் நாடு கவரத் தொடங்குகிறது

ஜூலை 19, 1932.

மலாயாசியாவில் போர்த்துகீசியர் தோன்றிய சந்தர்ப்பத்தில் நாம் சென்ற கடிதத்தை முடித்தோம். சிறிது காலத்துக்கு முன்பு, கடல் மார்க்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டதையும், போர்த்துகீசியரும், ஸ்பானியரும் கீழ்த்திசையை அடைவதற்கு 'நீ முந்தி, நான் முந்தி' என்று போட்டியிட்டதையும் பற்றி நான் கூறியது உனக்கு நினைவிருக்கலாம். போர்ச்சுகல் கிழக்கு நோக்கியும், ஸ்பெயின் மேற்கு நோக்கியும் சென்றன. போர்ச்சுகல் எப்படியோ ஆப்பிரிக்காவைச் சுற்றிக் கொண்டு இந்தியாவுக்கு வந்து விட்டது. ஸ்பெயின் இடறிப்போய் அமெரிக்காவில் சென்று விழுந்தது; அதற்குப் பிறகு தென் அமெரிக்காவைச் சுற்றிக் கொண்டு மலாயாசியாவுக்கு வந்து சேர்ந்தது.

பூமத்திய ரேகையை அடுத்த உஷ்ணப் பிரதேசங்களில்தான் மிளகு முதலிய வாசனைத் திரவியங்கள் விளைகின்றன என்பது உனக்குத் தெரிந்திருக்கலாம். ஐரோப்பாவில் அவை விளைவதில்லை. தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் அவை சிறிது விளைகின்றன. அவை பெரும்பாலும் 'மலுகாஸ்' என்று அழைக்கப்படும் மலாயாசியத் தீவுகளிலிருந்து வருகின்றன. அதனால் அத் தீவுகள் 'வாசனைத் திரவியத் தீவுகள்' என்றும் அழைக்கப்படுகின்றன. ஆதிகாலந்தொட்டே ஐரோப்பாவில் வாசனைத் திரவியங்களுக்கு அதிக கிராக்கி இருந்து வந்தது. அதனால், அவை ஒழுங்காக அனுப்பப்பட்டு வந்தன. அவை ஐரோப்பாவிற்குப் போய்ச் சேருவதற்குள் மிகுந்த விலையுயர்ந்த பொருள்களாக மாறி விட்டன. ரோமாபுரி வாழ்ந்த காலத்தில் அங்கு மிளகு எடைக்கு எடை பொன் கொடுத்து வாங்கப்பட்டதாம். வாசனைத் திரவியங்கள் தனக்கு இவ்வளவு தேவையானவையாகவும், அருமையானவையாகவும் இருந்தும் அவற்றைத் தானே வரவழைக்க ஐரோப்பா கவலை கொள்ளவில்லை, நெடுங்காலம் வரையில் இவ்வியாபாரம் இந்தியர் கையில் இருந்தது. பிறகு அது அரேபியர் கைக்கு மாறியது. வாசனைத் திரவியங்கள் மீதிருந்த மோகமே போர்த்துகீசியரையும் ஸ்பானியரையும் உலகில் வெவ்வேறு திக்குகளில் இழுத்துச்சென்று கடைசியில் மலாயாசியாவில் அவர்களை ஒன்று சேர்த்தது. அவற்றைத் தேடும் முயற்சியில் போர்த்துகீசியர் முந்திக்கொண்டு விட்டார்கள். ஸ்பானியருக்குக் கிழக்கு நோக்கிச் செல்லும் வழியில் அமெரிக்காவில் சற்று அதிகமான வேலை ஏற்பட்டு விட்டது. அதுவும் நிரம்ப லாபகரமான வேலை என்றால் அவர்கள் பின் தங்கியதற்குக் கேட்பானேன்?

வாஸ்கோடகாமா நன்னம்பிக்கை முனை வழியாக இந்தியா சென்று சேர்ந்தவுடனே பல போர்த்துகீசியக் கப்பல்கள் அவ்வழியாகவே மேலும் கிழக்கு நோக்கிச் சென்றன. அந்தச் சமயத்தில் வாசனைத்திரவிய வியாபாரமும் இன்னும் மற்ற வியாபாரங்களும் மலாக்கா சாம்ராஜ்யத்தின் ஆதிக்கத்தில் இருந்தன. உடனே அதற்கும், அதாவது அரேபிய வியாபாரிகளுக்கும் போர்த்துகீசியருக்கும், தகராறு ஏற்பட்டது. போர்த்துகீசிய ராஜப்பிரதிநிதியான அல்புகர்க் 1511-ல் மலாக்

காவைக் கைப்பற்றி முஸ்லிம் வியாபாரத்துக்கு முற்றுப் புள்ளி வைத்தான். இப்போது ஐரோப்பிய வியாபாரம் போர்த்துகீசியரின் கைக்கு வந்துவிட்டது. அவர்களுடைய தலைநகரான லிஸ்பன் ஐரோப்பாவிலேயே முக்கிய வர்த்தக ஸ்தலமாக மாறிவிட்டது. லிஸ்பனிலிருந்துதான் வாசனைத் திரவியங்களும் மற்றைய கீழ்நாட்டுப் பண்டங்களும் ஐரோப்பாவுக்கு அனுப்பப்பட்டன.

அல்புகர்க் அரேபியரிடம் கொடிய விரோதம் கொண்டிருந்தாலும் மற்ற கீழ்நாட்டு வியாபாரிகளுடன் நேசப்பான்மை பூண்டிருந்தான் என்பது கவனிக்க வேண்டிய விஷயம். குறிப்பாக, அவன் தான் சந்தித்த சீனர்களையெல்லாம் விசேஷ மரியாதையுடன் நடத்தினான். அதனால் போர்த்துகீசியரைப் பற்றி நல்ல வதந்திகள் சீனாவில் பரவலாயின. அரேபியரிடம் அவர்கள் விரோதம் பாராட்டியதற்குக் காரணம் கீழ்நாட்டு வியாபாரத்தில் அரேபியரின் கை மேலோங்கி யிருந்ததுதான் போலும்.

இதற்கிடையில் வாசனைத் திரவியத் தீவுகளைத் தேடும் முயற்சி தொடர்ந்து நடைபெற்று வந்தது. மலுகாஸ் தீவுகளைக் கண்டு பிடித்த கோஷ்டியில் மகெல்லன் என்பவனும் ஒருவன். அவனே பிறகு பசிபிக் சமுத்திரத்தைக் கடந்து உலகை வலம் வந்தவன். ஐரோப்பாவுக்கு வாசனைத் திரவியங்கள் அனுப்பும் வியாபாரத்தில் 60 வருஷங்களுக்கு மேல் போர்ச்சுகலுக்குப் போட்டியே இல்லை. அதற்குப் பிறகு, 1565-ல் ஸ்பெயின் பிலிப்பைன் தீவுகளைப் பிடித்துக் கொண்டது. இவ்வாறு, கீழ்ச் சமுத்திரத்தில் இரண்டாவது ஐரோப்பிய நாடு ஒன்று ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தது. ஆனால், ஸ்பெயினின் வருகை போர்த்துகீசிய வியாபாரத்தைப் பாதிக்கவில்லை. ஸ்பானியர் வியாபாரத்தில் விசேஷ

நாட்டம் கொள்ளவில்லை. அவர்கள் கீழ் நாடுகளுக்குப் போர் வீரர்களையும் கிறிஸ்தவப் பாதிரிகளையும் அனுப்பினார்கள். வாசனைத் திரவிய வியாபாரம் போர்த்துகீசியரின் ஏகபோக உரிமையாயிருந்து வந்தது. பாரசீகமும் எகிப்தும் கூட அவர்களிடமிருந்துதான் தங்களுக்கு வேண்டிய வாசனைத் திரவியங்களைப் பெற்று வந்தன. வாசனைத் திரவியத் தீவுகளுடன் நேர்முகமாக வியாபாரம் செய்வதற்குக் கூட அவர்கள் வேறு ஒருவரையும் அனுமதிக்கவில்லை. ஆகவே, அவர்கள் பெரும் பணக்காரர் ஆனார்கள். ஆனால், அவர்கள் குடியேற்றங்களை விருத்தி செய்வதில் கருத்தூன்றவில்லை. போர்ச்சுகல் சிறிய நாடு. வெளி நாடுகளில் சென்று குடியேறுவதற்கு வேண்டிய ஜனங்கள் அங்கு இல்லை. அச்சிறிய நாடு சரியாக நூறு வருஷகாலம்,அதாவது 16-வது நூற்றாண்டு முழுவதும், கீழ் நாடுகளில் என்னென்ன சாதித்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கும்போது நாம் இறும்பூது எய்துகிறோம்.

ஸ்பானியர் பிலிப்பைன் தீவுகளை விடாமல், இயன்ற வரையில் பணம் சம்பாதிக்க முயன்றனர். பிலிப்பைன் மக்களை வருத்தித் திறைப்பணம் வாங்குவதற்குமேல் அவர்கள் வேறொன்றும் செய்யவில்லை. போர்த்துகீசியருக்கும் தங்களுக்கும் கீழ்க்கடல்களில் பூசல் ஏற்படாவண்ணம் ஸ்பானியர் அவர்களுடன் ஒரு சமரசம் செய்து கொண்டார்கள். பிலிப்பைன் தீவுகள் ஸ்பானிய அமெரிக்காவுடன் வியாபாரம் செய்வதை ஸ்பானியர் அனுமதிக்கவில்லை. மெக்சிகோவிலும் பெருவிலும் விளையும் பொன்னும் வெள்ளியும் கீழ் நாடுகளுக்குப் போகக்கூடாது என்பது அவர்களுடைய எண்ணம். ஒரு வருஷத்துக்கெல்லாம் ஒரே ஒரு கப்பல் தான் அமெரிக்காவிலிருந்து பிலிப்பைன் தீவுகளுக்கு

வந்து மறுபடி திரும்பிச் செல்லும். அது 'மணிலா மரக்கலம்' என்று அழைக்கப்பட்டது. பிலிப்பைனிலிருந்த ஸ்பானியர் அதை எவ்வளவு ஆவலுடன் எதிர்பார்த்திருப்பார்கள் என்பதை நீயே ஊகித்துக் கொள்ளலாம். 240-ஆண்டுகள் வரையில் இம் 'மணிலா மரக்கலம்' அமெரிக்காவுக்கும் பிலிப்பைனுக்கும் இடையே பசிபிக் சமுத்திரத்தைக் கடந்து போய்வந்து கொண்டிருந்தது.

ஸ்பெயினும் போர்ச்சுகலும் அடைந்த வெற்றிகளைக் கண்டு மற்ற ஐரோப்பிய நாடுகளில் பொறாமை கொழுந்து விட்டெரிந்தது. அக்காலத்தில் ஸ்பானிய ஆதிக்கம் ஐரோப்பாவில் அதிகமாக இருந்தது என்பதைப் பின்பு காண்போம். அப்போது இங்கிலாந்து முதன்மை ஸ்தானம் வகிக்கவில்லை. தாழ்நாடுகளில், அதாவது, ஹாலந்திலும் பெல்ஜியத்தின் ஒரு பகுதியிலும், ஸ்பானிய ஆட்சிக்கு விரோதமாகக் கலகம் ஏற்பட்டது. ஸ்பானியரிடம் பொறாமையும் டச்சுக்காரரிடம் அநுதாபமும் கொண்ட ஆங்கிலேயர் டச்சுக்காரருக்கு ரகசியமாக உதவி அளித்தனர். சில ஆங்கிலயக்கள்வர் கடற்கொள்ளையில் ஈடுபட்டிருந்தார்கள். அவர்கள் அமெரிக்காவிலிருந்து ஏராளமான ஐசுவரியங்களைச் சுமந்து வரும் ஸ்பானியக் கப்பல்களைக் கடலில் வழிமறித்துக் கொள்ளையடித்து வந்தார்கள். அபாயகரமான, ஆனால் லாபகரமான இத்தகைய தொழிலில் ஈடுபட்டிருந்த ஆங்கிலேயர்களின் தலைவன் சர் பிரான்சிஸ்டிரேக் என்பவன். அவன் அதை 'ஸ்பானிய அரசனின் தாடியை எரிப்பது' என்று கூறிக்கொண்டான்.

1577-ல் ஸ்பானியக் குடியேற்றங்களைக் கொள்ளையடிப்பதற்காக ஐந்து கப்பல்களுடன் டிரேக் புறப்பட்டான். அவன் எடுத்த காரியத்தில் ஜெயம்பெற்றான்;

ஆனால், தன் கப்பல்களில் நான்கை இழந்துவிட்டான். 'பொன்மய ஹிந்து' என்னும் கப்பல்மட்டும் பசிபிக்கை அடைந்தது. டிரேக் இங்கிலாந்துக்கு நன்னம்பிக்கை முனைவழியாக அதில் வந்து சேர்ந்தான். இவ்வாறு, அவன் உலகமுழுதையும் வலம் வந்து விட்டான். அவன் ஏறிச் சென்ற 'பொன்மய ஹிந்து' உலகை வலம்வந்த இரண்டாவது கப்பலாகும். முதற்கப்பல் மகெல்லன் ஏறிச்சென்ற 'விட்டோரியா' என்பது. அந்தப் பிரயாணம் முடிய மூன்று வருஷங்கள் சென்றன.

'ஸ்பானிய அரசனின் தாடியை எரிக்கும்' காரியம் சச்சரவில் முடியாமல் எத்தனை நாளைக்கு நடக்க முடியும்? சீக்கிரத்திலேயே இங்கிலாந்துக்கும் ஸ்பெயினுக்கும் போர் மூண்டது. டச்சுக்காரர் ஏற்கெனவே ஸ்பெயினுடன் போரிட்டுக்கொண்டிருந்தார்கள். போர்ச்சுகலும் அதில் ஈடுபட்டிருந்தது. சில வருஷ காலமாக ஒரே அரசன் ஸ்பெயினையும் போர்ச்சுகலையும் ஆண்டுவந்தான். இங்கிலாந்து இப்போரில் ஜெயித்தது பெரிய அதிருஷ்டம் என்றே சொல்லவேண்டும். ஆனால், அது உறுதியுடன் போரிட்டது. அதைக்கண்டு ஐரோப்பா ஆச்சரியத்தில் மூழ்கியது. ஸ்பெயின் பிரிட்டனை வெல்வதற்காக அனுப்பிய "வெலற்கரிய கடற்படை" அழிக்கப்பட்டது உனக்குத் தெரியும். நிற்க, கீழ்நாடுகளில் என்ன நடந்தது என்று பார்ப்போம்.

ஆங்கிலேயரும் டச்சுக்காரரும் கீழ்க்கோடியை அடைந்து ஸ்பானியரையும் போர்த்துகீசியரையும் தாக்கினார்கள். ஸ்பானியர் பிலிப்பைன் தீவுகளில் மட்டும் ஒருங்கு திரண்டு இருந்தபடியால் அவர்கள் தங்களை எளிதில் காப்பாற்றிக் கொள்ள முடிந்தது. போர்த்துகீசியர் பல இடங்களில் சிதறிக் கிடந்தபடியால் அவர்கள் பாடு திண்டாட்டமாகிவிட்டது. அவர்களுடைய கீழ்

சாம்ராஜ்யம் செங்கடலிலிருந்து மலுகாஸ் தீவுகள் வரையில் 6000 மைல் நீளத்துக்குப் பரவியிருந்தது. அவர்கள் ஏடனுக்கு அருகிலும், பாரசீக வளைகுடாப் பிரதேசத்திலும், இலங்கையிலும், இந்தியாவின் கரையோரங்களில் பல இடங்களிலும், கிழக்குத் தீவுகள் முழுவதிலும், மலாய் நாட்டிலும் வாழ்ந்து வந்தார்கள். சிறிது சிறிதாக அவர்கள் தங்களுடைய கீழ் சாம்ராஜ்யத்தை இழந்து வந்தார்கள். பட்டணங்களும், குடியேற்றங்களும் ஒன்றன்பின் ஒன்ருக டச்சுக்காரர் கைக்கோ ஆங்கிலேயர் கைக்கோ போய்க்கொண்டிருந்தன. 1641-ல் மலாக்காவே விழுந்து விட்டது. இந்தியாவிலும் வேறு சில இடங்களிலும் இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சில எல்லைப்புற ஊர்களே மிஞ்சி நின்றன. இவைகளில் முக்கியமானது மேற்கு இந்தியாவிலுள்ள கோவா. கோவாவில் போர்த்துகீசியர் இன்னும் இருந்து வருகிருர்கள். சில வருஷங்களுக்குமுன் ஏற்படுத்தப்பட்ட போர்த்துகீசியக் குடியரசில் கோவாவும் சேர்ந்ததாகும். மகா அக்பர் போர்த்துகீசியரிடமிருந்து கோவாவைக் கைப்பற்ற முயன்ருர். அவராலும் அது முடியவில்லை.

ஆக, கீழ்நாட்டுச் சரித்திரத்திலிருந்து போர்ச்சுகல் மறைந்து விடுகிறது. அச்சிறிய நாடு பெரிய இரையை விழுங்கி விட்டது. அதனுல் அதை ஜீரணம் செய்ய முடியவில்லை. ஜீரணிக்கும் முயற்சியில் அதுவே களைத்து விழுந்துவிட்டது. ஸ்பெயின் மட்டும் பிலிப்பைனில் இன்னும் ஒட்டிக்கொண்டிருக்கிறது. ஆனுல், கீழ்நாட்டு விவகாரங்களில் அதன் பங்கு மிகவும் சொற்பம். இப்போது கீழ்நாட்டு வியாபாரம் ஹாலந்து, இங்கிலாந்து இவற்றின் ஆதிக்கத்துக்கு வந்துவிடுகிறது. இவ்விரண்டு நாடுகளும் ஏற்கெனவே அதற்குரிய வியாபாரக் கம்பெனிகளை ஏற்படுத்திக்கொண்டு ஆயத்தமாக இருந்து வந்தன.

1600-ம் ஆண்டில் எலிசபெத்ராணி ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனிக்கு இந்தியாவில் வியாபாரம் செய்யும் உரிமையைக் கொடுத்தாள். அதற்கு இரண்டு வருஷங்களுக்குப் பின்பு டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி ஏற்பட்டது. இவ்விரண்டு கம்பெனிகளும் வியாபாரத்துக்கு மட்டுந்தான் ஏற்பட்டவை. அவை தனிக் கம்பெனிகள். ஆனுல் அரசாங்க உதவியும் அவற்றிற்குக் கிடைத்து வந்தது. மலாயாசிய வாசனைத் திரவிய வியாபாரத்தில் அவை அதிக அக்கறைகொண்டிருந்தன. அக்காலத்தில், இந்தியா மொகலாய சக்கரவர்த்திகளின் கீழ் மிகுந்த பலம் பொருந்திய நாடாக விளங்கியது. அதற்கு கோபமூட்டினுல் ஆபத்துதான்.

ஆங்கிலேயரும் டச்சுக்காரரும் அடிக்கடி தங்களுக்குள் சண்டைபோட்டுக் கொண்டார்கள். கடைசியில், ஆங்கிலேயர் கிழக்குத் தீவுகளிலிருந்து விலகிக்கொண்டு இந்தியாவை அதிகமாகக் கவனிக்க ஆரம்பித்தார்கள். மகத்தான மொகலாய சாம்ராஜ்யம் அப்போது பலவீனமுற்றுவந்தது. வெளி நாடுகளிலிருந்து வந்த சாகசக்காரர்களுக்கு அது நல்ல சந்தர்ப்பமாய் முடிந்தது. அத்தகைய சாகசக்காரர்கள் இங்கிலாந்திலிருந்தும் பிரான்சிலிருந்தும் வந்த விதத்தையும், அவர்கள் குலைந்து வரும் சாம்ராஜ்யத்தின் பகுதிகளைச் சூழ்ச்சியாலும் போரினுலும் கைப்பற்ற முயன்ற விதத்தையும் பின்பு காண்போம்.

80

சீனாவில் செழிப்பும் அமைதியும் ஓங்குகின்றன

ஜூலை 22, 1932.

நீ நோய்வாய்ப்பட்டுக் கிடக்கும் விஷயம் எனக்கு இப்போதுதான் தெரிந்தது. ஒருவேளை இன்னும் உனக்கு நோய் குணமாகவில்லையோ என்னவோ? சிறைக்குள் செய்தி வருவதென்றால் அதிகக் காலம் பிடிக்கிறது. உனக்கு நான் என்ன செய்யமுடியும்? நீயேதான் உன்னைப் பார்த்துக்கொள்ள வேண்டும். ஆயினும், உன்னுடைய ஞாபகம்தான் எனக்கு அதிகமாக இருக்கும். நமது குடும்பம் எவ்வாறு சிதறிக்கிடக்கிறது, பார்த்தாயா? நீயோ, நெடுந்தொலைவில் பூனாவில் இருக்கிறாய்; உன் தாயார் அலகாபாதில் அசௌக்கியமாய் இருக்கிறாள்; நானும் பிறரும் பல்வேறு சிறைகளில் அடைபட்டிருக்கிறோம்!

சில நாட்களாகவே எனக்கு இக்கடிதங்கள் எழுதுவதென்றால் சிறிது கஷ்டமாயிருக்கிறது. எழுதும்போது உன்னுடன் பேசிக்கொண்டிருப்பதாகப் பாவித்துக் கொள்வது முன்போல் இப்போது அவ்வளவு எளிதாயில்லை. நீ பூனாவில் நோயாயிருப்பதை நினைத்துக்கொண்டேன். உன்னை மறுபடியும் எப்போது காண்பேனா என்று எண்ணம் சென்றது. நாம் சந்திப்பதற்கு எத்தனை மாதங்கள் அல்லது வருஷங்கள் செல்லுமோ? இதற்கிடையில் நீ நன்றாக வளர்ந்து விட்டிருப்பாயல்லவா?

எண்ணி எண்ணி மனம் புண்ணாவது எப்போதுமே நல்லதல்ல. விசேஷமாக, சிறையில் அது தீமையைத்

தான் பயக்கும். ஆகவே, அலையும் மனத்தை அடக்கிக் கொள்ளவேண்டும். ஒரு கணம், நிகழ்காலத்தை மறந்து இறந்த காலத்தில் சஞ்சரிப்போமாக!

கடைசியாக நாம் மலாயாசியாவில் இருந்தோமல்லவா? அங்கு ஒரு ஆச்சரியத்தையும் கண்டோம். ஐரோப்பா ஆசியாவில் பலாத்கார ஆக்கிரமிப்பில் இறங்குகிறது. முதலில் போர்த்துகீசியரும் பிறகு ஸ்பானியரும் வந்தார்கள்; அவர்களுக்குப் பிறகு ஆங்கிலேயரும் டச்சுக்காரரும் வந்தார்கள். ஆனால், இவ் ஐரோப்பியருடைய வேலைத்தனங்கள் நெடுங்காலம் வரையில் மலாயாசியா, கிழக்குத் தீவுகள் இவற்றுடன் இருந்து வந்தன. மேற்கே, இந்தியா மொகலாயரின் கீழ் ஒரு பலம் பொருந்திய நாடாக இருந்தது. வடக்கே சீனாவும் அப்படித்தான். ஆகவே, இந்தியாவிலும் சீனாவிலும் ஐரோப்பியர் தலையிடவில்லை.

மலாயாசியாவிலிருந்து சீனா ஒரு தாண்டில் இருக்கிறது. இப்போது அங்கே போவோம். மங்கோலிய குப்ளேகான் ஏற்படுத்திய யுவான் வமிசம் மறைந்து விட்டது. 1368-ல் பொது ஜனங்கள் கலகம்செய்து கடைசியாக நின்ற மங்கோலியப் படைகளையும் பெரிய மதிலுக்கு அப்பால் துரத்தி விட்டார்கள். அக்கலகத்தைத் தலைமை வகித்து நடத்தியவன் ஹூங்வு என்பவன். அவன் ஒரு ஏழைத் தொழிலாளியின் மகன். அவனுக்குப் பள்ளிக்கூடப் படிப்பு இல்லை. ஆனால், அதைவிடப் பெரிய வாழ்க்கைப் பள்ளிக்கூடத்தில் அவன் நன்கு கற்றுத்தேர்ந்திருந்தான். அவன் சீனமக்களைத் தலைமை வகித்து நடத்தி அதில் வெற்றிபெற்றான். பிற்காலத்தில் அவன் சிறந்த அரசனாகவும் விளங்கினான். சக்கரவர்த்தி ஆய்விட்டோம் என்று அவன் கருவம் கொள்ளவில்லை. கடைசிவரையில் அவன், தான் ‘ஜனங்

களின் மகன்' என்பதை மறக்கவில்லை. அவன் 30 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். தான் யாரிடையில் தோன்றினானோ அந்த சாதாரண ஜனங்களின் நன்மைக்காக அவன் அல்லும் பகலும் ஓயாது உழைத்து வந்தான். அது காரணமாக அவனுடைய ஆட்சி இன்றும் நன்றியுடன் போற்றப்படுகிறது. இறுதிவரையில் அவன் தன்னுடைய பழைய எளிமையைக் கைவிடவில்லை.

ஹுங்வு புதிய மிங் வமிசத்தின் முதல் சக்கரவர்த்தியாக விளங்கினான். அவனுடைய புதல்வனான யுங்லோ என்பவனும் மிகுந்த பெருமை வாய்ந்தவன். அவன் 1402- லிருந்து 1424- வரையில் சக்கரவர்த்தியாக இருந்தான். ஆனால், இந்தச் சீனப்பெயர்களை அடுக்கிக் கொண்டே போவதால் உனக்குத் தலைவலிதான் உண்டாகும். அந்த வமிசத்தில் சில நல்ல அரசர்கள் தோன்றினார்கள். பிறகு, வழக்கம்போல் அவர்களின் தரம் குறைந்து விட்டது. நாம் அந்த அரசர்களை மறந்து சீனாவின் சரித்திரத்தில் அந்தக் காலப் பகுதியை ஆராய்வோம். சீன சரித்திரத்தில் அக்காலப் பகுதி பேரொளி வீசுகிறது. அது ஒரு தனி அழகுடன் பொலிகிறது. 'மிங்' என்ற சொல்லுக்கே 'ஒளி' என்று பொருள். மிங் வமிசம் 276 ஆண்டுகள்—1368- லிருந்து 1644-வரையில்—நிலைபெற்றிருந்தது. சீனாவை ஆண்ட வமிசங்கள் எல்லாவற்றுள்ளும் அதுதான் ரொம்பவும் அசலான சீன வமிசம். அதன் ஆட்சியில் சீனமக்களின் மேதை தங்கு தடையின்றிப் பொங்கி வழிந்தது. உள்நாட்டு நிலைமையிலும் வெளிநாட்டு உறவிலும் அமைதி நிலவிய காலம் அது. வெளிநாடுகளைப் பலாத்காரமாக ஆக்கிரமித்து சாம்ராஜ்யத்தைப் பெருக்கும் கொள்கை அனுஷ்டிக்கப்படவில்லை. அயல் நாடுகளுடன் சீனா நட்புரிமை பூண்டு வாழ்ந்தகாலம் அது. வடக்கில் மட்டும் நாடோடித்

தார்த்தாரியரின் அபாயம் கொஞ்சம் இருந்தது. ஏனைய கீழ்நாடுகளுக்குச் சீனா அண்ணன் ஸ்தானத்தில் இருந்துவந்தது. புத்தி சாதுரியத்திலும், லௌகிகசாதகங்களிலும், கலாபிரவர்த்தியிலும், புஜபலத்திலும் மேன்மையுற்றிருந்த சீன அண்ணன் தன் தம்பிமாருடைய இதத்தைக் கோருபவனாகவும், தன் கலைநாகரிகங்களை அவர்களுக்குப் போதித்து அவற்றின் நலங்களை அவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் விருப்புடையவனாகவும் இருந்தான். அத் தம்பிமாரும் அண்ணனிடம் மரியாதை பூண்டு ஒழுகி வந்தார்கள். சிலகாலம் வரையில் ஜப்பான் கூடச் சீனாவின் தலைமையை அங்கீகாரம் செய்துவந்தது. ஜப்பானை ஆண்ட ஷோகன் தன்னை மிங் சக்கரவர்த்தியின் அடிமை என்று கூறிக்கொண்டான். கொரியாவும், இந்து ஆசியத் தீவுகளும் - ஜாவா, சுமத்திரா முதலியவை—, இந்தோ - சீனாவும் சீனாவுக்குக் கப்பம் கட்டிவந்தன.

யுங் லோவின் ஆட்சியில்தான் கடற்படை அதிபதி செங்ஹோவின் தலைமையில் பெரிய கடற் படை ஒன்று மலாயாசியாவுக்குப் புறப்பட்டுச் சென்றது. ஏறக்குறைய 30 வருஷங்கள் வரையில் செங்ஹோ கீழ்க்கடல்களில் பாரசீகவளைகுடா வரையிலும் குறுக்கும் நெடுக்குமாகத் திரிந்துக்கொண்டிருந்தான். இது தீவு ராஜ்யங்களைப் பயமுறுத்துவதற்காக சாம்ராஜ்யதோரணையில் செய்யப்பட்ட ஒரு காரியம் போலத் தோன்றுகிறது. ஆனால், பிறநாடுகளை வெல்லும் நோக்கமோ அல்லது வேறு ஊதியத்தில் நாட்டமோ சீனாவுக்கு இருந்ததாகத் தெரியவில்லை. சையாமும் மத்திய பாஹிதமும் பலத்தில் வளர்ந்து வருவது கண்டு யுங்லோ இக்கடற்படையை அனுப்பி யிருக்கலாம். காரணம் எதுவாயினும் அதனால் பெரும் பயன் விளைந்தது. அதனால், சையாமும் மத்திய

பாஹிதமும் தலையடங்கின. முஸ்லிம் ராஜ்யமான மலாக்கா தலையெடுத்தது. சீனக்கலைப் பண்பு இந்து ஆசியாமுழுவதிலும் கீழ் நாடுகளிலும் பரவியது.

சீனுவுக்கும் அதை அடுத்த நாடுகளுக்கும் இடையே அமைதி நிலவியபடியால் உள்நாட்டு விவகாரங்களில் சீனு அதிகக் கவனம் செலுத்தியது. அரசாங்கம் நல்ல முறையில் நடைபெற்றது. வரிகள் குறைக்கப்பட்டன. அந்த அளவுக்கு ஏழைக் குடியானவர்களின் சுமை குறைந்தது. சாலைகளும், போக்கு வரவுக்கான கால்வாய்களும், நீர்ப்பாசன வாய்க்கால்களும், நீர்த்தேக்கங்களும் அபிவிருத்தி செய்யப்பட்டன. பஞ்ச காலத்திலும் விளைவு குறைவான காலத்திலும் உதவுவதற்காகப் பொது தானியக் களஞ்சியங்கள் ஏற்படுத்தப்பட்டன. அரசாங்கம் காகித நாணயம் வழங்கி வந்தது. அதனுல் நம்பிக்கை ஏற்பட்டு வியாபாரமும் பண்டங்களின் பரிவர்த்தனையும் அபிவிருத்தியாயின. காகித நாணயம் அதிகப் புழக்கத்தில் இருந்தது. வரிகளில் 100-க்கு 70 பங்கை அதிலேயே செலுத்தி வந்தார்கள்.

இவைகளெல்லாவற்றைக்காட்டிலும் அதிக முக்கியமானது அக்காலத்திய கலைச் சரிதமேயாகும். சீனர் பண்டைக்கால முதற் கொண்டே கலைப் பண்பிலும் கலானுபவத்திலும் சிறந்தவர்கள். மிங் மன்னர்கள் நல்ல முறையில் அரசு புரிந்ததோடு கலைகளையும் ஆதரித்து வந்தார்கள். அதனுல், அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் ஜனங்களுடைய மேதை பரிபூரண விலாசம் பெற்றுத் திகழ்ந்தது. மாடமாளிகைகளும், மனங்கவர் ஓவியங்களும் தோன்றின. அக்காலத்துப் பீங்கான் பாத்திரங்கள் விதவிதமான உருவ அழகுக்கும், விசித்திரமான வேலைப்பாட்டுக்கும் பேர் போனவை. அங்கே தோன்றிய ஓவியங்கள் அதே சமயத்தில் மறுமலர்ச்சியின் உத்வேகத்திஞல் இதாலியில் தோன்றிய உயர் பெரும் ஓவியங்களோடு ஒப்புசொல்லக் கூடியவையாயிருந்தன.

15-வது நூற்றுண்டின் இறுதியில் சீனு தேசமானது ஐரோப்பாவைக் காட்டிலும் செல்வத்திலும், கைத்தொழிலிலும், கலைச் சிறப்பிலும் எவ்வளவோ முன்னேற்ற மடைந்திருந்தது. மிங் வமிச ஆட்சிக் கால முழுவதும், ஜனங்களுடைய சுகவாழ்வு, கலைவாழ்வு இரண்டையும் எடுத்துக்கொண்டு பார்த்தால், சீனுவோடு ஒப்பிடக்கூடிய ஐரோப்பியநாடு ஒன்றுகூடக் கிடையாது. அந்தக் காலம்தான் ஐரோப்பாவின் மறுமலர்ச்சிக் காலம் என்பதை எண்ணிப் பார்க்கும்போது சீனுவின் பெருமை உள்ளவாறு நமக்குப் புலனுகிறது.

மிங் காலத்துக் கலைப்பொருள்கள் பல இன்னும் இருக்கின்றன. அக்காலத்தின் கலை மேன்மையை உலகம் அறிந்திருப்பதற்கு அவையும் ஒரு காரணமாயிருக்கின்றன. மரத்திலும், தந்தத்திலும், மரகதத்திலும், நீலத்திலும், பளிங்கிலும் செய்யப்பட்டுள்ள அருமையான வேலைப்பாடுகளும், வெண்கலப் பூந்தாழிகளும், பீங்கான் பாத்திரவகைகளும் சிறந்த ஞாபகச் சின்னங்களாக விளங்குகின்றன. மிங் கால முடிவில், வேலைப்பாடு அளவுக்கு மீறி விரிவடைந்து வருவதால் சித்திர வனப்புச் சிறிது குறைவடைகிறது.

மிங் காலத்தில் தான் போர்த்துகீசியக் கப்பல்கள் முதன் முதலில் சீனுவுக்கு வந்தன. அவை 1516-ல் கான்டன் துறைமுகத்தை அடைந்தன. அதிக முன்னெச்சரிக்கையுடன் அல்புகர்க், தான் சந்தித்த சீனர்களை யெல்லாம் கௌரவித்து வந்தபடியால் அவனைப் பற்றி நல்ல வதந்திகளே சீனுவில் பரவியிருந்தன. ஆகவே, போர்த்துகீசியருக்குச் சீனுவில்

நல்ல வரவேற்பு கிடைத்தது. ஆனால், உடனே அவர்கள் பல வழிகளிலும் முறை தவறி நடக்க ஆரம்பித்து விட்டார்கள். பல இடங்களில் கோட்டைகள் கட்டிக் கொண்டார்கள். இந்தக் காட்டுமிராண்டித்தனத்தைக் கண்டு சீன அரசாங்கம் ஆச்சரியமுற்றது. அது அவசரப்பட்டு ஒன்றும் செய்யவில்லை. ஆனால், முடிவில் சகலரையும் நாட்டை விட்டுத் துரத்திவிட்டது. அதற்குப் பிறகு தான் போர்த்துகீசியருக்குப் புத்தி வந்தது. தங்களுடைய 'பாச்சா' சீனாவில் பலிக்காதென்று அவர்கள் தெரிந்துகொண்டார்கள்; அடக்கமும் அமைதியும் பூண்டார்கள். 1557-ல் கான்டனுக்கு அருகில் குடியேறுவதற்கு அவர்களுக்கு அனுமதி கிடைத்தது. 'மாகோ' நகரம் அவர்கள் நிறுவியதுதான்.

போர்த்துகீசியரோடு கிறிஸ்தவப் பாதிரிகளும் வந்தார்கள். அவர்களில் மிகவும் பிரசித்தி பெற்றவர் அர்ச். பிரான்சிஸ் ஜேவியர் என்பவர். அவர் தம் வாழ்நாளில் பெரும் பகுதியை இந்தியாவில் கழித்தார். அவர் பெயரால் இந்தியாவில் பல மிஷன் கலாசாலைகள் இருக்கின்றன. அவர் ஜப்பானுக்கும் சென்றார். அவர் கரையில் இறங்க அனுமதிக்கப்படுமுன் ஒரு சீனத் துறைமுகத்தில் மாண்டுவிட்டார். சீனர் கிறிஸ்தவப் பாதிரிகளை ஆதரிக்கவில்லை. இரண்டு ஏசு சங்கப் பாதிரிகள் மட்டும் பௌத்த மாணவர்கள் போல் வேஷம் பூண்டு பல வருஷம் சீன பாஷை பயின்றார்கள். அவர்கள் கன்பூஷிய கிரந்தங்களில் தேர்ந்த பண்டிதர்களாகவும், சிறந்த விஞ்ஞானிகளாகவும் விளங்கினார்கள். அவர்களில் ஒருவர் பெயர் மாட்டியோ ரிக்சி என்பது. அவர் கல்வியிலும் உலகியலிலும் வல்லவராயிருந்தார். அவர் வெகு சாமர்த்தியமாகச் சக்கரவர்த்தியின் தயவைச் சம்பாதித்துக் கொண்டார். பிறகு, அவர் தம் வேஷத்தைக்

களைந்துவிட்டார். அவருடைய செல்வாக்கினால் கிறிஸ்தவ மதத்தின் நிலைமை சீனாவில் முன்னையினும் உயர்ந்தது.

17-வது நூற்றாண்டின் தொடக்கத்தில் மாகோ நகருக்கு டச்சுக்காரர் வந்தார்கள். அவர்கள் வியாபாரம் செய்ய அனுமதி கோரினார்கள். ஆனால், போர்த்துகீசியருக்கும் அவர்களுக்கும் கொஞ்சமும் ஆகாது. ஆகவே, போர்த்துகீசியர், சீனர் மனதில் டச்சுக்காரரைப் பற்றித் தப்பு அபிப்பிராயம் உண்டாவதற்கு வேண்டியவற்றை யெல்லாம் செய்தார்கள். டச்சுக்காரர் ஒரு இரக்கமற்ற கொள்ளைக் கூட்டத்தார் என்று அவர்கள் சீனரிடம் சொன்னார்கள். ஆகவே,சீனர் டச்சுக்காரருக்கு வியாபாரம் செய்ய அனுமதி கொடுக்கவில்லை. சில வருஷங்களுக்குப் பிறகு டச்சுக்காரர் படேவியா (ஜாவாவின் தலைநகர்) விலிருந்து மாகோவைப் பலாத்காரமாகக் கைப்பற்றும் நோக்கத்துடன் ஒரு கடற்படையை அனுப்பினார்கள். இது மிகவும் முட்டாள்தனமான காரியம். ஏனெனில் சீனரும் போர்த்துகீசியரும் அவர்களைக் காட்டிலும் அதிகப் பலம் வாய்ந்தவர்களாக இருந்தார்கள்.

டச்சுக்காரருக்குப் பிறகு ஆங்கிலேயர் வந்தார்கள். அவர்களும் வெற்றி பெறவில்லை. மிங் காலத்துக்குப் பிறகு சீன வியாபாரத்தில் அவர்களுக்கும் ஒரு பங்கு கிடைத்தது.

இவ்வுலகில் நல்லது கெட்டது இரண்டுக்கும் முடிவு காலம் உண்டு. அந்த நியதிக்கிணங்க மிங் காலமும் 17-வது நூற்றாண்டின் இடையில் முடிவுற்றது. வடக்கே காணப்பட்ட தார்த்தாரியர் என்னும் சிறுமேகம் நாளடைவில் திரண்டு பெருமேகம் ஆயிற்று. கடைசியில் அதன் நிழல் சீனாமீதும் விழுந்தது. பழைய கினியர்

அல்லது பொன்னிறத் தார்த்தாரியரை நீ மறந்திருக்க மாட்டாய். அவர்கள்தான் சூங் வமிசத்தாரைத் தென் சீனாவுக்குத் துரத்தியவர்கள். மங்கோலியர் வந்து அவர்களைத் துரத்தி விட்டார்கள். அந்தப் பழைய கினியருக்குச் சொந்தமுள்ள ஒரு புதிய ஜாதியார், சீனாவுக்கு வடக்கே இப்போது மஞ்சூரியா என்று வழங்கும் பிராந்தியத்தில், நாளுக்கு நாள் பலமடைந்து வந்தார்கள். அவர்கள் தங்களை 'மஞ்சு' ஜாதியார் என அழைத்துக் கொண்டார்கள். இந்த மஞ்சுக்கள்தான் மிங் வமிசத்தை முடிவாக ஒழித்தவர்கள்.

ஒன்றுக்கொன்று விரோதமுள்ள பல கட்சிகளாகச் சீனா பிளவுபட்டிரா விட்டால், மஞ்சுக்கள் அதை அவ்வளவு எளிதில் ஜெயித்திருக்க முடியாது. சீனாவிலும் சரி, இந்தியாவிலும் சரி, அநேகமாக எல்லா நாடுகளிலும் சரி, அவற்றின் பலவீனமும் உள்நாட்டுச் சச்சரவுகளுமே வெளிநாட்டாரின் படையெடுப்பு வெற்றி பெறுவதற்குக் காரணமா யிருந்து வந்திருக்கின்றன. சீனாவெங்கும் குழப்பங்கள் மலிந்திருந்தன. பிற்காலத்தில் வந்த மிங் சக்கரவர்த்திகள் ஒருவேளை திறமையற்றவர்களாகவும், ஊழலானவர்களாகவும் இருந்திருக்கலாம். அல்லது பொருளியல் நிலைமைகள் சமுதாயப் புரட்சிக்கு அனுகுணமானவைகளா யிருந்திருக்கலாம். மஞ்சுக்களோடு போரிடுவதற்கு அதிகப் பணம் செலவாயிற்று. அதுவே பெரிய சுமையாகி விட்டது. எங்கும் கொள்ளைக்காரத் தலைவர்களின் கொட்டம் அதிகமாயிருந்தது. அவர்களில் அதிகப் பலமுள்ள ஒருவன் சிறிது காலம் வரையில் சக்கரவர்த்தியாகக்கூட இருந்தான். மஞ்சுக்களுக்கு எதிராக மிங் சேனைகளை நடத்திச் சென்ற தளபதி உசான் குவி என்பவன். ஒரு பக்கம் கொள்ளைக்காரச் சக்கரவர்த்திக்கும் மற்றொரு பக்கம் மஞ்சுக்களுக்கும் இடையே

அகப்பட்டுக் கொண்ட அவனுக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை. முட்டாள்தனமாகவோ, அல்லது துரோக எண்ணத்துடனோ, அவன் கொள்ளைக்காரனுக்கு விரோதமாக மஞ்சுக்களின் உதவியை நாடினான். அவர்கள் சந்தோஷத்துடன் உதவிபுரிய முன்வந்தார்கள். ஆனால், வந்தவர்கள் திரும்பிப் போகாமல் பீகிங் நகரிலேயே தங்கிவிட்டார்கள். மிங் மன்னர்களின் கட்சி இனி ஓங்காது என்று கண்ட உசான் குவி அவர்களைக் கைவிட்டு அந்நியரான மஞ்சுக்களுடன் சேர்ந்து கொண்டான்.

உசான் குவி இன்றளவும் சீனாவில் வெறுக்கப்பட்டு வருவதில் யாதொரு ஆச்சரியமும் இல்லை. சீன சரித்திரத்திலேயே அவன் ஒரு பெரிய துரோகியாகக் கருதப் படுகிறான். நாட்டின் பாதுகாப்புப் பொறுப்பை வகித்த அவன் எதிரியோடு சேர்ந்து கொண்டு, தென் மாகாணங்கள் எதிரி வசமாவதற்கு உதவியும் புரிந்தான். அதற்குரிய சம்மானம் அவனுக்கு உடனே கிடைத்தது. அவன், தான் ஜெயித்துக் கொடுத்த மாகாணங்களின் ராஜப்பிரதிநிதியாக மஞ்சுக்களால் நியமிக்கப்பட்டான்.

1650-ம் ஆண்டுக்குள் மஞ்சுக்கள் கான்டன் நகரைக் கைப்பற்றி விட்டார்கள். அவர்கள் இப்போது சீனா முழுவதையும் ஜெயித்து விட்டார்கள். அவர்கள் போரிடுவதில் சீனர்களைவிட வல்லவர்களாயிருந்தபடியால் ஒரு வேளை ஜெயித்திருக்கலாம். நெடுங்காலம் அமைதியாகவும் சுகமாகவும் வாழ்ந்து வந்தபடியால் சீனரின் போர்த்திறன் குன்றியிருக்கலாம். ஆனால், மஞ்சுக்கள் சீனாவை வெகு விரைவில் ஜெயித்ததற்கு வேறு காரணங்களும் உண்டு. அவற்றில் முக்கியமானது மஞ்சுக்கள் சீன மக்களைத் தம் வயப்படுத்த விசேஷ அக்கறை எடுத்துக்கொண்டதேயாகும். இதற்கு முன்,

தார்த்தாரியர் படையெடுத்து வந்தபோது குரூரமும் கொலையும் மிகுந்திருந்தன. இப்போதோ, மஞ்சுக்கள் மிகவும் முயன்று சீன உத்தியோகஸ்தர்களைத் தம் பக்கம் சேர்த்துக்கொண்டு அவர்களையே மீண்டும் அவரவர் பதவிகளில் அமர்த்தினார்கள். உயர் பதவிகள் கூட சீன உத்தியோகஸ்தர்கள் கையில் இருந்தன. மஞ்சுக்கள் பழைய மிங் அரசாங்க முறைகளையும் மாற்றவில்லை. ஆட்சிமுறை முன்போலவே இருந்தது. மேலேயிருந்து அதை நடத்தி வைப்பவர்கள் மட்டும் மாறிவிட்டார்கள்.

சீனர் அந்நிய அரசாட்சிக்கு உட்பட்டிருப்பதை இரண்டு விஷயங்கள் எடுத்துக் காட்டின. முக்கியமான இடங்களில் மஞ்சுப் படைகள் நிறுத்தி வைக்கப்பட்டன. மஞ்சுக்கள் பின்னல் போட்ட சவுரி மயிர் அணிந்து கொள்வது வழக்கம். அடிமைத்தனத்தின் அறிகுறியாகச் சீனர் அவ்வழக்கத்தை மேற்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டார்கள். சீனர்கள் என்றால் நமக்கு இந்தப் பின்னல் ஞாபகத்துக்கு வரும். ஆனால், அது சீன வழக்க மல்ல. அது அவர்களுடைய அடிமைத் தனத்தின் சின்னம். இன்று இந்தியர் சிலர், அதிலுள்ள வெட்கத்தையும் அவமானத்தையும் உணராமல் பல சின்னங்களைத் தரித்துக் கொள்ளுகிறார்களே, அதுபோல. பின்னால் பின்னலைத் தொங்கவிட்டுக் கொள்ளும் அவ் வழக்கத்தைச் சீனர் இப்போது விட்டுவிட்டார்கள்.

சீனாவில் ஒளி பொருந்திய மிங் காலம் இவ்வாறு முடிந்தது. 300 ஆண்டுகள் நன் முறையில் ஆட்சி புரிந்த அவ் வமிசம் இவ்வளவு விரைவில் வீழ்ந்து விட்டதே என்று நாம் ஆச்சரியப்படுகிறோம். நாம் கேள்விப் படுகிறது போல் ஆட்சி நன்மையானதா யிருந்திருப்பின் உள்நாட்டில் கலகங்களும் குழப்பங்களும் தோன்றுவானேன்? மஞ்சூரியாவிலிருந்து படையெடுத்து வந்த அந்நி

யரைத் தடுத்து நிறுத்தமுடியாமற் போனதற்குக் காரணம் என்ன? ஒருவேளை, கடைசி காலத்தில் அரசாங்கம் மக்களைத் துன்புறுத்தியிருக்கலாம். அல்லது அரசாங்கம் அதிகமாகச் செல்லம் கொடுத்து வந்த காரணத்தால் ஜனங்கள் பலவீனமுற்றுப் போயிருக்கலாம். செல்லம் கொடுப்பது குழந்தைகளைக் கெடுத்து விடுவதுபோல் தேசங்களையும் கெடுத்து விடும்.

இவ்வளவு உயரிய கலைப்பண்பு வாய்ந்திருந்த காலத்தும் சீனா மற்றத் துறைகளில்—விஞ்ஞானம், ஆராய்ச்சி, புது உண்மைகளையும் முறைகளையும் கண்டு பிடித்தல் இத்தியாதி—முன்னேற்ற மடையவில்லை என்பதைக் காணும்போது நமக்கு ஆச்சரியம் உண்டாகிறது. சீனாவை நோக்கும்போது ஐரோப்பா மிகவும் பிற்பட்டு இருந்தது. ஆயினும், மறுமலர்ச்சிக் காலத்தில் அங்கு சக்தியும், சாகசமும், எதையும் துருவித்துருவி ஆராயும் உணர்வும் ததும்புவதைக் காண்கிறோம். சீனாவை நடுத்தர வயதடைந்த நாகரிகன் ஒருவனுக்கும் ஐரோப்பாவை வாலிபன் ஒருவனுக்கும் ஒப்பிடலாம். நடுத்தர வயதுக்காரன் அமைதியான வாழ்க்கையை விரும்புகிறான். புதுமையில் அவனுக்கு ஆர்வமில்லை. தன்னுடைய தினசரி வாழ்க்கைத் திட்டத்தில் மாறுதல் எதையும் அவன் விரும்பவில்லை. பண்டைய இலக்கியங்களையும் கலைகளையும் அனுபவிப்பதிலேயே அவனுடைய பொழுது போய் விடுகிறது. வாலிபனோ பார்வைக்கு அழகாயில்லை. ஆனால், அவனுடைய ஆற்றலுக்கும் ஆவலுக்கும் அளவில்லை. எங்கும் சென்று எதையும் செய்ய வேண்டுமென்று அவன் துடியாய்த் துடிக்கிறான். சீனாவில் அபாரமான அழகு காணப்படுகிறது. ஆனால், அது சாயங்கால வேளையின் சாந்தமயமான அழகாகும்.

81

ஜப்பான் கதவைச் சாத்தித் தாளிட்டுக் கொள்ளுகிறது

ஜூலை 23, 1932.

சீனாவிலிருந்து ஜப்பானுக்குப் போவோம். வழியில் சிறிது நேரம் கொரியாவில் தங்குவோம். மங்கோலியர் கொரியாவில் ஆதிக்கம் செலுத்தி வந்தார்கள். அவர்கள் ஜப்பானையும் தாக்க முயற்சித்தார்கள்; ஆனால், பலிக்கவில்லை. குப்ளேகான் ஜப்பானை ஜெயிப்பதற்குப் பலமுறை படைகளை அனுப்பினான். கடலிற் போரிடுவது என்றால் மங்கோலியருக்கு எப்போதுமே சற்று யோசனை தான். தரைப் போரில் அவர்கள் நிகரற்றவர்கள். ஜப்பான் நாற்புறமும் கடலால் சூழப்பட்டிருந்தபடியால் அவர்களிடமிருந்து தப்பித்துக்கொண்டது.

மங்கோலியர் சீனாவிலிருந்து துரத்தப்பட்டவுடனே கொரியாவில் ஒரு புரட்சி ஏற்பட்டது. மங்கோலியருக்குக் கீழ்ப்படிந்து ஆண்டுவந்த அரசர்கள் நாட்டை விட்டுத் துரத்தப்பட்டார்கள். இப் புரட்சியின் தலைவன் கொரியா தேசபக்தனான இதாய் ஜோ என்பவன். இப்போது அவன் நாட்டை ஆள ஆரம்பித்தான். அவன் ஸ்தாபித்த அரச பரம்பரை 500 ஆண்டுகள் வரை நிலைபெற்றிருந்தது. அதாவது, 1392-லிருந்து சமீப காலத்தில் ஜப்பான் கொரியாவைத் தன் சாம்ராஜ்யத்தில் சேர்த்துக்கொள்ளும் வரையில். கொரியா

வுக்கு சியௌல் தலைநகராயிற்று. அதிலிருந்து நாளது வரையில் அதுதான் தலைநகராயிருந்து வருகிறது. இந்த 500 வருஷ காலத்துக் கொரியா சரித்திரத்தை நாம் இங்கே ஆராய்வதற்கில்லை. 'தேர்ந்தெடுக்கப்பட்ட நாடு' என்று அழைக்கப்பட்ட கொரியா அநேகமாக ஒரு சுதந்திர நாடாகவே இருந்து வந்தது. ஆனால், சீனாவின் நிழலில் தான் அது வாழ்ந்து வந்தது. சீனாவுக்கு அது கப்பம் கட்டிக்கொண்டு வந்தது. கொரியாவுக்கும் ஜப்பானுக்கும் பல போர்கள் விளைந்தன. சில சமயங்களில் கொரியா ஜெயம் பெற்றது. ஆனால், இப்போது இரண்டையும் ஒப்பிடுவதற்கில்லை. ஜப்பான் இன்று ஒரு பெரிய பலம் பொருந்திய சாம்ராஜ்யம். சாம்ராஜ்ய அரசுகளுக்கு உரிய தீமைகள் அனைத்தும் அதனிடம் பொருந்தி யிருக்கின்றன. அந்த சாம்ராஜ்யத்தில் கொரியா ஒரு சிறு பகுதி. ஜப்பானியர் அதை அடிமைப் படுத்திச் சுரண்டி வருகிறார்கள். சகாயம் ஏதுமற்ற கொரியா இன்று சுதந்திரத்துக்காகத் தீரத்துடன் போராடி வருகிறது. ஆனால், இது சமீப காலத்துச் சரித்திரம். இதற்கு மிகவும் முற்பட்ட காலத்தைப் பற்றி நாம் இப்போது பேசிக்கொண்டிருக்கிறோம்.

12-வது நூற்றாண்டின் கடைசியில் ஜப்பானை உண்மையில் ஆண்டுவந்தவர்கள் ஷோகன்கள் என்பது உனக்கு நினைவிருக்கலாம். ஒப்புக்குத்தான் சக்கரவர்த்தி. முதலில் ஏற்பட்ட காமகூரர் ஷோகன் அரசு 150 வருஷ காலம் வரையில் திறமையாகவும் அமைதியாகவும் ஆண்டுவந்தது. அதற்குப் பிறகு, ஒவ்வொரு அரச வமிசத்துக்கும் ஏற்படும் வீழ்ச்சி அதற்கும் ஏற்பட்டது. திறமையின்மையும், சுகானுபவமும் மேலிட்டன. உள்நாட்டுப் போர் விளைந்தது. சக்கரவர்த்தி தம் அதிகாரத்தையும் செல்வாக்கையும் நிலை

காட்ட விரும்பினர். அதனால் அவருக்கும் ஷோகனுக்கும் இடையே பூசல்கள் ஏற்பட்டன. அதில் இரு திறத்தாரும் தோல்வியுற்றார்கள். ஆகவே, 1388-ல் ஒரு புதிய ஷோகன் வமிசம் தோன்றியது. அதற்கு அஷிகாகா ஷோகன் அரசு என்று பெயர். அது 235 ஆண்டுகள் நீடித்திருந்தது. ஆனால், அக்காலத்தில் போரும் பூசலும் மலிந்திருந்தன. அக்காலத்தில் சீனாவை மிங் வமிசம் ஆண்டுவந்தது. மிங் சக்கரவர்த்தியின் நல்லெண்ணத்தைப் பெற ஒரு ஷோகன் பெரிதும் விரும்பினான். ஆகவே, அவன் தன்னைச் சக்கரவர்த்தியின் அடிமை என்றுகூட அழைத்துக் கொண்டான். ஜப்பானுக்கு நேரிட்ட இத்தாழ்வைக்கண்டு ஜப்பானிய சரித்திராசிரியர்கள் பெரிதும் மனம் புழுங்குகிறார்கள். அவர்கள் அந்த ஷோகனை வாய்க்கு வந்தபடி யெல்லாம் திட்டுகிறார்கள்.

ஜப்பானுக்கும் சீனாவுக்கும் நேச உறவு இருந்து வந்தது. சீனக் கலைப்பண்பில் ஜப்பானுக்கு ஒரு புதிய அக்கறை பிறந்தது. மிங் வமிச ஆட்சியில் சீனாவின் கலையழகு பூத்துப் பொலிந்ததல்லவா? சீனாவின் சிற்பம், ஓவியம், கவிதை, தத்துவ சாஸ்திரம், போர்வித்தை அனைத்தையும் ஜப்பானியர் போற்றக் கற்றனர். புகழ் பெற்ற இரு பெரிய மாளிகைகள் அக்காலத்தில் ஜப்பானில் கட்டப்பட்டன. ஒன்று கிங்கா கூஜி என்னும் பெயர்பெற்ற பொன் மாளிகை; மற்றொன்று கிங்கா கூஜி என்னும் பெயர்பெற்ற வெள்ளி மாளிகை.

இவ்வாறு கலைவாழ்வும் சுக வாழ்வும் பெருகின வாயினும் அவற்றோடு கூடவே ஏழைக் குடியானவர்களின் துன்ப வாழ்வும் பெருகிவந்தது. அவர்கள் தாங்க முடியாத வரிச்சுமையைத் தாங்கி வந்தார்கள். உள்நாட்டுப் போர்களால் நேர்ந்த செலவில் பெரும் பகுதியும்

அவர்கள் தலைமீதே விழுந்தது. நிலைமை வரவர மோசமாகிக் கொண்டு வந்தது. கடைசியில், தலைநகருக்கு வெளியே மத்திய அரசாங்கத்தின் அமுல் நடைபெற முடியாத அளவுக்கு நிலைமை முற்றி விட்டது.

1542-ல், இந்தப் போர்கள் நடந்துகொண் டிருந்த போதுதான், போர்த்துகீசியர் ஜப்பானுக்கு வந்தார்கள். அவர்கள் மூலமாகத்தான் முதன் முதலில் ஜப்பானுக்குத் துப்பாக்கிகள் வந்தன. இது நமக்கு ஆச்சரியத்தை உண்டாக்குகிறது. ஏனெனில், துப்பாக்கிகளின் உபயோகத்தைச் சீனா முன்பே அறிந்திருந்தது. சீனாவிலிருந்துதான், மங்கோலியர் மூலமாக ஐரோப்பா துப்பாக்கிகளைப் பற்றித் தெரிந்துகொண்டது.

ஜப்பானை இந்த நூறு வருஷ உள்நாட்டுப் போரிலிருந்து முடிவாக மீட்டவர்கள் மூவர். ஒருவர் நார்பு நாகா என்பவர். இவர் ஒரு தாய்மியோ; அதாவது, பிரபு. இன்னொருவர் ஹிதெயோஷி என்னும் குடியானவர். மூன்றாமவர் டோகுகாவா இயேயாசு என்பவர். இவரும் பெரிய பிரபுக்களின் வமிசத்தைச் சேர்ந்த ஒருவர். 16-வது நூற்றாண்டு முடிவதற்குள், ஜப்பான் முழுவதும் மீண்டும் ஐக்கிய மடைந்துவிட்டது. ஹிதெயோஷி என்னும் குடியானவர் ஜப்பானின் தலை சிறந்த ராஜதந்திரிகளுள் ஒருவர். அவர் மிகவும் குரூபியாக இருந்தார் என்று சொல்லுகிறார்கள். அவர் பார்வைக்குக் குள்ளமாகவும், குண்டாகவும், குரங்கை ஞாபகப்படுத்தும் முகத்தோற்ற முள்ளவராகவும் இருந்தாராம்.

ஜப்பானை ஒன்றுபடுத்திய அவர்களுக்குத் தங்களுடைய பெரிய சேனையை வைத்துக் கொண்டு என்ன செய்வதென்று புரியவில்லை. வேறு வேலை ஒன்றும் தோன்றாததால் அவர்கள் கொரியாவின் மீது படையெடுத்துச் சென்றார்கள். ஆனால், அதற்காக அவர்கள்

விரைவில் வருந்த வேண்டியதாயிற்று. கொரியர் ஜப்பானியக் கடற்படையைத் தோற்கடித்து இரு நாடுகளுக்கு மிடையிலுள்ள ஜப்பானியக் கடலின் மீது ஆதிக்கம் செலுத்தலானுர்கள். கொரியரிடம் ஒரு புது வகையான கப்பல் இருந்தது. அதன் மேற்பாகம் இரும்புத்தகடுகளால் வேயப்பெற்று ஆமையின் முதுகு போன்ற தோற்றத்தை உடையதாயிருந்தது. அக் கப்பல்கள் 'ஆமைப் படகுகள்' என்று அழைக்கப்பட்டன. அவற்றை இஷ்டப்படி முன்னுக்கும் பின்னுக்கும் வலிக்கலாமாம். அவை ஜப்பானிய யுத்தக் கப்பல்களை அழித்து விட்டன. கொரியரின் வெற்றிக்கு அவை பெரிதும் உதவின.

நான் மேலே மூன்ருவதாகக் கூறிய டோகுகாவா இயேயாசு என்பவர்தான் உள்நாட்டுப் போர்களால் கொள்ளை லாபம் அடைந்தவர். ஜப்பானில் ஏழில் ஒரு பாகத்துக்கு அவர் சொந்தக்காரர் ஆய்விட்டார் என்ருல் அவருடைய செல்வச் சிறப்பை நீயே ஊகித்துக் கொள்ளலாம். அவர் தம்முடைய பரந்த பூஸ்திதியின் மத்தியில் 'யேடோ' என்னும் நகரை நிருமாணம் செய்தார். அதுவே பிற்காலத்தில் டோகியோ என்ருயிற்று. 1603-ம் ஆண்டில் இயேயாசு ஷோகன் ஆனுர். இவ்வாறு, மூன்ருவதும் கடைசியானதும் ஆகிய டோகுகாவா ஷோகன் அரசு ஆரம்பமாயிற்று. அது 250 ஆண்டுகள் வரையில் நிலைபெற்றிருந்தது.

இதற்கிடையில், போர்த்துகீசியர் சிறிய அளவில் தங்கள் வியாபாரத்தை நடத்தி வந்தார்கள். 50 வருஷங்கள் வரையில் அவர்களோடு போட்டியிடுவதற்கு எந்த ஐரோப்பிய நாட்டாரும் வரவில்லை. ஸ்பானியர் 1549-ல் வந்தார்கள். டச்சுக்காரரும் ஆங்கிலேயரும், ஸ்பானியருக்கும் பிந்தி வந்தார்கள். 1549-ல் அர்ச்.

பிரான்சிஸ் ஜேவியர் ஜப்பானில் கிறிஸ்தவ மதத்தைப் புகுத்தியதாகத் தெரிகிறது. ஏசு சங்கப் பாதிரிகளுக்கு மதபோதனை செய்ய அனுமதி அளிக்கப்பட்டது. அரசியல் காரணங்களுக்காக அவர்களுக்கு உற்சாகமும் அளிக்கப்பட்டது. ஏனெனில், பௌத்த மடங்கள் அரசியல் சூழ்ச்சிகளுக்கும் வஞ்சனைகளுக்கும் இருப்பிடமாயிருந்து வந்தன. ஆகவே, அரசாங்கம் இந்த பௌத்தத் துறவிகளை அடக்கியும் கிறிஸ்தவப் பாதிரிகளை ஆதரித்தும் வந்தது. ஆனுல், இந்தப் பாதிரிகள் அபாயகரமானவர்கள் என்பதை ஜப்பானியர் சீக்கிரத்திலேயே உணர ஆரம்பித்து விட்டார்கள். உடனே அவர்கள் தங்கள் கொள்கையை மாற்றிக்கொண்டு பாதிரிகளைத் துரத்த முயன்ருர்கள். 1587-ம் ஆண்டிலேயே கிறிஸ்தவர்களுக்கு விரோதமாக ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதன்படி எல்லாப் பாதிரிகளும் ஜப்பானைவிட்டு இருபது நாளைக்குள் வெளியேறவேண்டும்; இல்லாவிட்டால் மரண தண்டனைக்கு உள்ளாவார்கள். இவ்வுத்தரவினுல் ஐரோப்பிய வியாபாரிகள் பாதிக்கப்படவில்லை. அவர்கள் ஜப்பானில் தங்கி வியாபாரம் செய்யலாம். ஆனுல், அவர்கள் தங்களுடைய கப்பலில் யாராவது ஒரு பாதிரியைக் கொண்டு வந்தால் அந்தக் கப்பலும் அதிலுள்ள பொருள்களும் பறிமுதல் செய்யப்படும். வெறும் அரசியல் காரணங்களுக்காகவே இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டது. பாதிரிகளாலும் அவர்களால் மதம் மாற்றப்பட்டோராலும் அரசியல் துறையில் அபாயம் ஏற்படலாம் என்று ஹிதெயோஷிக்குத் தோன்றியது. அவர் அவ்வாறு எண்ணியதில் அதிசுப் பிசகு ஒன்றும் இல்லை.

இதை அடுத்து ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அதனுல், ஹிதெயோஷிக்குத் தாம் பாதிரிகளைப்பற்றிக் கொண்

டிருந்த பயம் சரியென்று ஊர்ஜிதமாயிற்று. அந்த சம்பவம் அவருக்குக் கோபத்தையும் மூட்டியது. பிலிப்பைனுக்கும் ஸ்பானிய அமெரிக்காவுக்கும் இடையே வருஷத்துக் கொருமுறை 'மணிலா மரக்கலம்' சென்று வந்ததென்று உனக்குத் தெரியும். அது ஒரு சமயம் கடற்சூறுவளியால் அலைக்கப்பட்டுத் திசை தவறி ஜப்பானியக் கரைக்கு வந்து சேர்ந்தது. அங்குள்ள ஜப்பானியரைப் பயமுறுத்த எண்ணிய அக்கப்பலின் ஸ்பானிய காப்டன் அவர்களுக்கு ஒரு உலகப் படத்தைக் காட்டி அதில் ஸ்பானிய அரசனுக்குச் சொந்தமான பரந்த பிரதேசங்கள் இன்னின்னவை என்று சுட்டிக் காட்டினானாம். இவ்வளவுபெரிய சாம்ராஜ்யம் ஸ்பெயினுக்குக் கிடைத்த விதம் எப்படி என்று ஜப்பானியர் அக்காப்டனைக் கேட்டார்களாம். அதற்கு அவன் "அதைப்போல் எளிதான விஷயம் வேறொன்றுமில்லை. வெளிநாடுகளுக்கு முதலில் பாதிரிகள் போவார்கள். அவர்கள் அங்குள்ளவர்களைக் கிறிஸ்தவர்கள் ஆக்குவார்கள். இப்படி மதமாறியவர்களின் தொகை பெருகிய உடனே எங்கள் சேனைகளையும் அங்கு அனுப்பிவைப்போம். அவர்கள் உள்நாட்டு மதமாறிகளின் துணையுடன் அங்குள்ள அரசாங்கத்தைக் கவிழ்த்துவிடுவார்கள்" என்று விடை பகர்ந்தானாம். இச் செய்தி ஹிதெயோஷிக்கு எட்டியவுடன் அவர் சந்தோஷமடையவில்லை. பாதிரிகள் பால் அவர் கொண்ட பகைமை இன்னும் அதிகமாக வளர்ந்தது. அவர், மணிலா மரக்கலத்துக்குப் போக அனுமதி அளித்தார். ஆனால், சில பாதிரிகளுக்கும் அவர்களால் மதம் மாறியவர்களுக்கும் அவர் மரணதண்டனை விதித்தார்.

இயேயாசு ஷோகன் ஆனபிறகு, அவர் அந்நியருடன் சிறிது நேசப்பான்மை பூண்டிருந்தார். அவர் தமக்குச் சொந்தமான துறைமுகப் பட்டினமாகிய யேடோவுடன்

வெளிநாட்டு வியாபாரத்தை அபிவிருத்தி செய்வதில் கண்ணாயிருந்தார். ஆனால், அவருடைய மரணத்துக்குப் பின்பு ஜப்பானில் மீண்டும் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்த ஆரம்பித்தார்கள். பாதிரிகளைப் பலவந்தமாக நாட்டைவிட்டு ஓட்டினார்கள். ஏற்கெனவே கிறிஸ்தவர் ஆனவர்களையும் அம்மதத்தைக் கைவிடுமாறு செய்தார்கள். தங்களுடைய வியாபாரக் கொள்கையையும் ஜப்பானியர் மாற்றிக்கொண்டார்கள். அந்நியருடைய அரசியல் சூழ்ச்சி வலையைக் கண்டு அவர்கள் அவ்வளவு தூரம் பயந்து போயிருந்தார்கள். 'எவ்விதத்திலும் அந்நியனை உள்ளே விடக்கூடாது' என்பது அவர்களுடைய திடமான நம்பிக்கை.

ஜப்பானியரின் இச் செய்கையை அர்த்தம் செய்து கொள்வது கஷ்டமில்லை. ஆனால், 'மதம்' என்னும் பசுத்தோலைப் போர்த்துக் கொண்டு வந்த 'சாம்ராஜ்ய வாதம்' என்னும் புலியின் உண்மையான சொரூபத்தை ஜப்பானியர் தங்களுடைய கூரிய அறிவால் ஆராய்ந்து கண்டுகொண்ட விஷயம்தான் நம்மை ஆச்சரியத்துக்குள்ளாக்குகிறது. பிற்காலத்தில், பிறநாடுகளில், ஐரோப்பிய வல்லரசுகள் தங்களுடைய சொந்த நன்மையை முன்னிட்டு மதத்தைக் கையாளாகப் பயன்படுத்திக் கொண்ட விதத்தை நாம் நன்கு அறிந்திருக்கிறோம்.

இப்பொழுது, சரித்திரத்திலேயே இதுவரையில் காணப்படாத ஒரு புதுமை ஆரம்பமாகிறது. அதாவது, ஜப்பான் தேசம் முழுதும் சாத்தித் தாளிடப்படுகிறது. 'தானும் தனித்திருக்கவேண்டும், பிறநாடுகளும் தன்னிடம் அண்டக்கூடாது' என்னும் கொள்கையை ஜப்பான் தெரிந்து, வேண்டுமென்றே அனுஷ்டிக்கத் தலைப்படுகிறது. 'அனுஷ்டிப்பது' என்று ஏற்பட்டவுடன் அதைக் கடைசி வரையில் பரிபூரணமாய் அனுஷ்

டித்துப் பார்த்துவிடுவது என்பது நம்மை இன்னும் வியப்புக்குள் ஆழ்த்துகிறது. ஆங்கிலேயர், ஜப்பான் தன்னை வரவேற்கத் தயாராயில்லை என்று கண்டவுடன் 1623-ல் அங்கே செல்வதை நிறுத்திவிட்டார்கள். அடுத்த வருஷம் ஸ்பானியர் - அவர்களிடத்தில்தான் ஜப்பானியருக்கு அதிக பயம்-நாடு கடத்தப்பட்டார்கள். ஜப்பானியரிலும் கிறிஸ்தவர் அல்லாதவர்கள்தான் வியாபாரத்தின் பொருட்டு வெளிநாடுகளுக்குச் செல்லலாம் என்று விதித்தார்கள். அவர்களும் பிலிப்பைனுக்குச் செல்லக்கூடாது. பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அதாவது 1636-ல், ஜப்பானையே மூடி 'சீல்' வைத்து விட்டார்கள். போர்த்துகீசியரை நாட்டைவிட்டு விரட்டியடித்தார்கள். ஜப்பானியரில், கிறிஸ்தவர், கிறிஸ்தவர் அல்லாதவர் யாரும் எக் காரணத்தை முன்னிட்டும் வெளிநாடுகளுக்குப் போகக் கூடாது. வெளிநாடுகளில் வசிக்கும் ஜப்பானியன் எவனும் ஜப்பானுக்குத் திரும்பிவரக் கூடாது. வந்தால் மரணம் தான் தண்டனை. சில டச்சுக்காரர் மட்டும் இருந்தார்கள். அவர்களும் துறைமுகப் பட்டினங்களை விட்டு உள்நாட்டுக்குச் செல்லக்கூடாது என்று கட்டளை பிறந்தது. 1641-ல், அந்த டச்சுக்காரரையும் நாகசாகி துறைமுகத்திலுள்ள ஒரு சிறிய தீவுக்குக் கொண்டுபோய் அங்கே கைதிகள் போல் வைத்துவிட்டார்கள். இவ்வாறு, முதன்முதலில் போர்த்துகீசியர் வந்து 99 வருஷங்கள் ஆனபிறகு, ஜப்பான் சகல வெளிநாட்டுத் தொடர்புகளையும் அறுத்துக் கொண்டு தன்னையும் சாத்திப் பூட்டிக்கொண்டது.

1640-ல் ஒரு போர்த்துகீசிய கப்பல் சில தூதர்களை ஏற்றிக் கொண்டு வந்தது. போர்ச்சுகலுக்கும் ஜப்பானுக்கும் மீண்டும் வியாபார சம்பந்தம் வேண்டுமென்று அவர்கள் கோரினார்கள். ஆனால், ஜப்பானியர் ஒன்றுக்கும் செவி சாய்க்கவில்லை. அவர்கள் அத்தூதர்களையும் மாலுமிகளில் பெரும்பாலோரையும் கொன்று சிலரை மட்டும் திரும்பிச் சென்று விஷயத்தை தெரிவிக்குமாறு விட்டு விட்டார்கள்.

இருநூறு வருஷங்களுக்கு மேலாகவே ஜப்பானுக்கும் வெளி உலகத்துக்கும் யாதொரு தொடர்பும் இல்லாமலிருந்து வந்தது. அண்டை நாடுகளான சீனா, கொரியா இவற்றுடன் கூட அது யாதொரு தொடர்பும் வைத்துக் கொள்ளவில்லை. அந்தத் தீவிலிருந்த சில டச்சுக்காரரும், ஒன்றிரண்டு சீனக்காரரும் தான் வெளி உலகத்தின் சின்னங்களாக இருந்தார்கள். அவர்களும் கடுமையான கண்காணிப்பின் கீழ் வாழ்ந்து வந்தார்கள். இவ்வாறு வேற்று நாடுகளுடன் சகல சம்பந்தங்களையும் அறுத்துக் கொள்வது மிகவும் அசாதாரணமான ஒரு விஷயம். வேறு எத்தேசச் சரித்திரத்திலும் இத்தகைய சம்பவம் நிகழ்ந்ததில்லை. உலகத்துக்கு நன்கு தெரியாத நாடுகளான திபெத்தும், மத்திய ஆப்பிரிக்காவும் கூடத் தங்களை அடுத்த நாடுகளுடன் போக்கு வரவு வைத்துக் கொண்டு வந்திருக்கின்றன. மற்றவர்களிடமிருந்து பிரிந்து தான்மட்டும் தனித்து நிற்பது அபாயகரமானது. தனி மனிதனுக்கு எப்படியோ அப்படியே ஒரு தேசத்துக்கும் அது அபாயகரமானது. அத்தகைய அபாயத்தையும் தாண்டி ஜப்பான் தலை நிமிர்ந்து நின்றது. நீண்ட போர்களினால் விளைந்த தீமைகளினின்றும் அது விடுபட்டுத் தேறியது. உள் நாட்டிலும் அமைதி நிலவியது. கடைசியாக 1853-ம் ஆண்டில், ஜப்பான் மீண்டும் தன் கதவையும் ஜன்னல்களையும் திறந்தது. அப்போதும் அது ஒரு அசாதாரணச் செய்கையைப் புரிந்தது. ஒரே தாவாக்த் தாவி, இழந்த காலத்தை ஈடு செய்துகொண்டதோடு, ஐரோப்பிய நாடுகளை எட்டிப் பிடித்து அவற்றின்

வித்தையிலேயே அவற்றைத் தோற்கடித்தும் விட்டது!

இவ்வாறு, சரித்திரத்தைத் தொட்டுக் காட்டிக் கொண்டுபோவதும், மொட்டையாகச் சொல்வதும் எவ்வளவு சுவாரஸ்யமற்றதா யிருக்கிறது! அதில் வரும் பாத்திரங்கள் உயிரற்றும், உடல் ஒட்டியும் காணப்படுகிறார்களல்லவா? ஆயினும், சில சமயங்களில், பழைய காலத்தில் எழுதப்பட்ட புஸ்தகம் ஏதாவதொன்றைப் படிக்கும்போது இறந்து காலத்தில் மீளவும் உயிர் வந்து பாய்கிறதே. நாடக அரங்கு நமக்கு மிகவும் சமீபத்தில் வந்து விடுகிறது; அதில் வந்து போகும் ஆண்களும் பெண்களும் உயிருள்ளவர்களாகவே காணப்படுகிறார்கள்; அவர்கள் அன்பு செய்வதையும் பகைமை பாராட்டுவதையும் நாம் நேரில் காண்கிறோம். நான் பண்டைய ஜப்பானில் வாழ்ந்த முராசாகி என்னும் பெயருள்ள வசீகரமான ஒரு பெண்மணியைப் பற்றிப் படித்துக்கொண் டிருந்தேன். அவள், பல நூற்றாண்டுகளுக்கு முன்பு, நான் இக்கடிதத்தில் பிரஸ்தாபித்துள்ள உள்நாட்டுப் போர்களுக்கு நெடுங்காலம் முன்பு, ஜப்பானில் வாழ்ந்தவள். அவள் ஜப்பானியச் சக்கரவர்த்தியின் அரண்மனையில் தான் வாழ்ந்த வாழ்க்கையைப்பற்றி நீண்ட வரலாறு ஒன்று எழுதி யிருக்கிறாள். அதிலிருந்து சில பகுதிகளை நான் படித்தேன். அதில் காணப்படும் நயங்களையும், உணர்ச்சி பாவங்களையும், அரண்மனை வெற்றாரவாரங்களையும் அனுபவிக்க அனுபவிக்க முராசாகி என் கண்ணெதிரில் உண்மையாகவே இருப்பது போல் எனக்குத் தோன்றியது. பண்டைய ஜப்பானின் சிறிய, ஆனால், அழகிய அரண்மனை உலகம் என் கண் முன் அப்படியே காட்சி அளித்தது.

82

கொந்தளிப்பில் ஆழ்ந்த ஐரோப்பா

ஆகஸ்டு 4, 1932.

பல நாட்களாக நான் உனக்கு ஒரு கடிதமும் எழுதவில்லை. நான் எழுதி சுமார் இரண்டு வாரங்கள் இருக்கும். சிறையில் சில சமயங்களில் மனது சரியா யிருப்பதில்லை. வெளி உலகத்தில் இருப்பவர்களுக்கும் மனநிலை மாறுபடுவது உண்டு. அது என்னவோ, கடந்த சில நாட்களாக இக்கடிதங்கள் எழுதுவதென்றால் மனம் ஓடவே இல்லை. என்னைத் தவிர இக்கடிதங்களை வேறு யார் பார்க்கிறார்கள்? அவற்றை ஒன்றாகச் சேர்த்துக் கட்டி ஒரு பக்கமாக வைத்திருக்கிறேன். நீ அவற்றைப் பார்ப்பதற்கு எத்தனை மாதங்கள் ஆகுமோ, அல்லது வருஷங்கள் தான் ஆகுமோ? அவ்வாறு, மாதங்கள் அல்லது வருஷங்கள் கழித்துச் சந்திக்கும்போது நாம் ஒருவரை யொருவர் நன்றாக உச்சியிலிருந்து உள்ளங்கால் வரையில் பார்த்துக் கொள்வோம். நீ வளர்ந்திருப்பதையும் மாறியிருப்பதையும் கண்டு நான் ஆச்சரியப்படுவேன். அப்பொழுது நமக்குப் பேசுவதற்கு நிறைய விஷயமும் செய்வதற்கு நிறைய வேலையும் இருக்கும். இக்கடிதங்களைப் படிக்க உனக்கு அவகாசமே இராது. அதற்குள் இவை ஒரு மலைபோலப் பெருகியிருக்கும். என்னுடைய சிறைவாழ்க்கையில் எத்தனையோ நூற்றுக் கணக்கான மணிநேரங்கள் இவற்றில் சிறைப்பட்டுக் கிடக்குமல்லவா?

ஆயினும், நான் இவற்றை எழுதி எழுதிக் குவித்

துக் கொண்டே போகிறேன். நான் எழுதுவது உனக்குப் பிடிக்கும் என்றுதான் எழுதுகிறேன்; உனக்குப் பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் நிச்சயமாக எனக்குப் பிடித்திருக்கிறது. அது போதுமல்லவா?

இப்போது சிறிதுகாலமாக நாம் ஆசியாவில் இருந்து வருகிறோம். இந்தியாவிலும் மலாயாசியாவிலும் சீனுவிலும் ஜப்பானிலும் நாம் ஆசியாவின் கதையைக் கேட்டோம். ஐரோப்பா, தன் நீண்ட உறக்கத்திலிருந்து எழுந்து சிறிது சுவாரஸ்யமாகத் தென்படுகிற சமயத்தில், நாம் அதைத் திடீரென்று விடுத்து வந்து விட்டோம். அங்கு 'மறுமலர்ச்சி', அதாவது 'மறுபிறப்பு' தோன்றுகிறது. ஐரோப்பா மறுபிறவி எடுத்தது என்று சொல்வதை விடப் புதுப்பிறவி எடுத்தது என்று சொல்வது பொருத்தமாயிருக்கும். ஏனெனில், 16-வது நூற்றுண்டில் அபிவிருத்தி அடைந்து காணும் ஐரோப்பா இதற்கு முன் வேறு எந்தக் காலப் பகுதியின் நகலும் அல்ல. அது புத்தம் புதிதான ஒன்று. அல்லது அதன் பழைமை முற்றிலும் புதிய ஆடையைப் போர்த்துக்கொண்டது என்ருவது சொல்லவேண்டும்.

ஐரோப்பா எங்கணும் குழப்பமும் கொந்தளிப்பும் ஏற்படுகின்றன. அது, தான் அடைபட்டுக் கிடந்த இடத்தை உடைத்துக்கொண்டு கிளம்புகிறது. பல நூற்றுண்டுகளாக நிலமானிய முறையில் அமைக்கப்பட்ட ஒரு சமுதாய, பொருளியல் கட்டுக் கோப்பு ஐரோப்பா மீது படர்ந்து அதைத் தன் பிடிக்குள் இருத்தி வைத்திருந்தது சிறிதுகாலம் வரையில் இந்த ஒரு வளர்ச்சியைத் தடை செய்து வந்தது. ஆனுல், இப்போதோ அது பல இடங்களில் வெடிப்புவிட ஆரம்பித்து விட்டது. கொலம்பசும், வாஸ்கோடகாமாவும், இன்னும் ஆதியில் கடல்மார்க்கங்களைக் கண்டுபிடித்தவர்களும் இந்த

ஓட்டை உடைத்துக் கொண்டு சென்ருர்கள். அமெரிக்காவிலிருந்தும் கீழ்நாடுகளிலிருந்தும் ஸ்பெயினும் போர்ச்சுகலும் அடைந்த அளவற்ற ஐசுவரியம் ஐரோப்பாவைப் பிரமிக்கச் செய்து விரைவில் மாறுதலையும் உண்டாக்கிற்று. ஐரோப்பா தன்னைச் சூழ்ந்துள்ள சிறிய கடல்களுக்கு அப்பால் பார்வையைச் செலுத்தவும் உலகத்தைப்பற்றி எண்ணவும் தலைப்பட்டது. உலக வியாபாரம், உலக ஆதிக்கம் இவற்றைக் கருப்பத்தில் கொண்ட வருங்காலம் அதற்கு வழி திறந்தது. 'பூர்ஷுவா' வகுப்பினரின் பலம் அதிகரித்தது. மேற்கு ஐரோப்பாவில் நிலமானியத் திட்டம் வரவரப் பெரிய தடையாக வளர்ந்து வந்தது.

நிலமானியத் திட்டம் ஏற்கெனவே காலம் கடந்ததாக ஆய்விட்டது. ஏழைக் குடியானவர்களை மானங்கெட்ட முறையில் சுரண்டிப் பிழைப்பதே நிலமானியத் திட்டத்தின் முக்கிய அம்சமாகும். அவர்கள் நிலமானியப் பிரபுவுக்குக் கட்டாய வேலை செய்யவேண்டும், கூலியற்ற வேலை செய்யவேண்டும், பல வகைப்பட்ட வரிகளும் விசேஷ வரிகளும் செலுத்த வேண்டும். நீதி வழங்கும் நீதிபதியும் அந்தப் பிரபுதான். குடியானவர்களின் தொல்லை எல்லைகடந்து விட்டது. ஆகவே, நாம் முன்பு பார்த்தபடி, குடியானவர் கலகங்களும் யுத்தங்களும் அடிக்கடி நிகழ்ந்து வந்தன. இந்த யுத்தங்கள் ஆங்காங்கு பரவியும் பெருகியும் வந்தன. இவை காரணமாக, ஐரோப்பாவின் பலபாகங்களில் பொருளியல் புரட்சி ஏற்பட்டு நிலமானியத் திட்டத்துக்குப் பதிலாக மத்திய வகுப்பார் அல்லது 'பூர்ஷுவா'க்களின் அரசாங்கம் உண்டாயிற்று.

ஆனுல், இம்மாறுதல்களெல்லாம் விரைவில் விளைந்துவிட்டன என்று எண்ணுதே. நெடுங்காலம்

சென்ற பிறகே அவை ஏற்பட்டன. பல வருஷங்கள் வரையில் ஐரோப்பா உள்நாட்டுப் போர்களுக்கு நிலைக்களனுயிருந்தது. அதன் பெரும்பகுதி அப்போர்களில் அழிந்துபட்டது. குடியானவர் போர்கள் மட்டும் அங்கே நிகழவில்லை. பிராடெஸ்டண்டுகளுக்கும் கத்தோலிக்கர்களுக்குமிடையே மதப்போர்கள், தாய்நாடுகளில் நடந்தது போன்ற தேசிய சுதந்திரப் போர்கள், அரசரின் தடையற்ற யதேச்சாதிகாரத்தை எதிர்த்துப் பூர்ஷுவாக்கள் நடத்திய போர்கள் ஆகிய இவையெல்லாம் அங்கே நிகழ்வதைப் பின்பு காண்போம். இவற்றையெல்லாம் கேட்க உனக்குக் குழப்பம் உண்டாகிறதல்லவா? ஆம், எல்லாம் குழப்பமாகவும் சிக்கலாகவும் தான் காணப்படுகிறது. ஆனல், பெரிய நிகழ்ச்சிகளையும் இயக்கங்களையும் நாம் உற்று நோக்குவோமேயானல், மேற்கூறியவற்றின் தாத்பரியத்தை ஒருவாறு தெரிந்து கொள்வோம்.

நாம் மூன்று விஷயங்களை ஞாபகப் படுத்திக் கொள்ளவேண்டும். முதலாவது: குடியானவர்கள் பொறுக்கமுடியாத கஷ்டங்களுக்கு உள்ளாகியிருந்தார்கள். அதனல், குடியானவர் யுத்தங்கள் விளைந்தன. இரண்டாவது: 'பூர்ஷுவா' வகுப்புத் தோன்றுகிறது. உற்பத்தி சக்திகள் பெருகுகின்றன. பொருள் உற்பத்தியில் அதிகமான தொழிலாளர் ஈடுபடுகின்றனர். வியாபாரம் ஓங்குகிறது. மூன்ருவது: மதஸ்தாபனமே எல்லா நிலச்சுவான்களிலும் பெரிய நிலச்சுவானுக விளங்குகிறது. ஒரு நடை முதல் ஏற்பாட்டில் அதற்கு 'நிலைத்த பாத்தியதை' இருப்பதால் நிலமானியத் திட்டம் நீடிப்பதில் அது அதிக அக்கறை காட்டுகிறது. தன்னுடைய ஆஸ்திபாஸ்திகளைப் பறிமுதல் செய்யக்கூடிய எந்தப் பொருளியல் மாறுதலையும் அது விரும்ப

வில்லை. ஆகவே, ரோமாபுரிக்கு விரோதமாக மதப் புரட்சி உண்டானபோது அது பொருளியல் புரட்சியோடு பொருந்துவதாயிருந்தது.

இப் பெரிய பொருளியல் புரட்சியோடு கூடவோ அல்லது அதைப் பின் தொடர்ந்தோ சமூகம், மதம், அரசியல் முதலிய எல்லாத் துறைகளிலும் மாறுதல்கள் நிகழ்ந்தன. 16-வது, 17-வது, நூற்றுண்டுகளில் ஐரோப்பாவின் நிலைமையை நீ தீர்க்கமான, விசாலமான திருஷ்டியுடன் நோக்குவாயானல், மேற்கூறிய எல்லாச் செயல்களும், இயக்கங்களும், மாறுதல்களும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புகொண்டிருந்தமை நன்கு புலப்படும். அக்காலத்தில் நிகழ்ந்தவற்றுள் மூன்று பெரிய இயக்கங்களைச் சிறப்பாகக் குறிப்பிடுகிறார்கள். அவை மறுமலர்ச்சி, மதச்சீர்திருத்தம், புரட்சி என்பன. இவையெல்லாவற்றிற்கும் பின்னல் பொருளியல் துன்பம்
கெ... பொருளியல் ... ணமா
...ன. இதுவே எல்லா மாறுதல்களிலும் அதி
யிரு... மானது.

முக் ...றுமலர்ச்சி என்பது கல்வியின் மறுபிறப்பு. அதா
... கலை இலக்கியம் விஞ்ஞானம், ஐரோப்பிய
வத ...கள் எல்லாம் வளர்ச்சியடைகின்றன. மதச்சீர்
பா ...ம் என்பது ரோமானிய மதஸ்தாபனத்திற்கு எதி
திரு ... எழுச்சி. அதன் ஊழலை எதிர்த்துப் பொது
ரா ...ள் கிளர்ந்தெழுந்தார்கள். ஐரோப்பிய அரசர்
ஐ... தங்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதற்குப்
க... ...பாண்டவர் கொண்டாடும் உரிமைகளை எதிர்த்
பே... ...கம் செய்தார்கள். மூன்ருவதாக, மதஸ்தாப
துக் ... உள்ளிருந்தே சீர்திருத்துவதற்குச் செய்யப்பட்ட
னத்தை... யயும் அது குறிக்கிறது. புரட்சி என்பது
முயற்... ர்க்கள் அரசர்களின் அதிகாரத்தை ஒரு
பூர்ஷு...

வரம்புக்கு உட்படுத்துவதற்காக நடத்திய அரசியல் போராட்டம்.

இந்த இயக்கங்கள் எல்லாவற்றிற்கும் ஆதாரமாக இன்னொரு விஷயமும் இருந்தது. அச்சியந்திரம் கண்டு பிடிக்கப்பட்ட விஷயத்தையே நான் இங்கே குறிப்பிடு கிறேன். அரேபியர் சீனரிடமிருந்து காகிதம் செய்யக் கற்றுக்கொண்டதும், பிறகு அரேபியரிடமிருந்து ஐரோப் பியர் அதைக் கற்றுக்கொண்டதும் உனக்கு நினைவிருக்க லாம். ஆனால், காகிதத்தை அதிகமாகவும் விலை குறை வாகவும் உற்பத்தி பெருவாரியாகவும் செய்ய நீண்ட காலம் பிடித்தது. 15-வது நூற்றாண்டின் இறுதி யில் ஹாலந்து, இதாலி, இங்கிலாந்து, ஹங்கேரி முதலிய பல ஐரோப்பிய நாடுகளில் புஸ்தகங்கள் அச்சிட ஆரம் பித்தார்கள். காகிதமும் அச்சியந்திரமும் ஏற்படு வ[illegible]தற்கு முன்னால் உலகம் எவ்வாறு இருந்திருக்கும் என்று [illegible]யோசித்துப்பார். காகிதம், அச்சிய[illegible]ரம், புஸ்தகங்கள் எல்லாம் நமக்கு இப்போது சகஜமாகப் போய்விட்டபடியால் இவை இல்லாத உலகத்தைக் கற்பனை செய்வதுகூடக் கடினமாயிருக்கிறது. அச்சுப் புஸ்தகங்கள் இன்றிப் பலருக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுப்பது அநேகமாக முடியாத கயம். நூல்களைச் சிரமப்பட்டுக் கையினால் எழுதவேடும். அத்தகைய கையெழுத்துப் பிரதிகள் ஒரு சிலருக்குத் தான் கிடைக்கமுடியும். வாய்மொழியாகத்தான் லா வற்றையும் கற்றுக் கொடுக்கவேண்டும். மாணவர்கள் எதையும் மனப்பாடம் செய்துதான் கற்கவேண்டியிருக்கும். இன்றுகூடச் சில கர்நாடக திண்ணைப் பள்ளிக்கூடங் களில் நீ இதைக் காணலாம்.

காகிதமும் அச்சியந்திரமும் தோன்றியபிறகு ஒரு பெரிய மாறுதல் உண்டாயிற்று. அச்சு நூல்கள் பாட

நூல்களும், வேறு நூல்களும் வெளிவருகின்றன. வெகு சீக்கிரத்தில் பலர் எழுதப் படிக்கக் கற்றுக்கொள்ளு கிறார்கள். படிப்பு வளர வளரச் சிந்தனையும் வளரு கிறது (இது, சிந்தனையைத் தூண்டும் நல்ல நூல்களுக்கு தான் பொருந்துமே ஒழிய இக்காலத்தில் வெளியாகும் குப்பைநூல்களுக்குப் பொருந்தாது). சிந்தனை வளரவே வர்த்தமான நிலைமைகளின் குணதோஷங்களை ஆராய்ந்து பார்க்கும் பகுத்தறிவும் வளருகிறது. இது பெரும் பாலும் வர்த்தமான ஏற்பாட்டை எதிர்ப்பதில் வந்து முடிகிறது. அறியாமை எப்பொழுதுமே மாறுதலுக்கு அஞ்சும். உள்ள நிலைமையில் எத்துணை துன்பம் இருந் தாலும் அதை மாற்றினால் என்ன விளையுமோ என்று அஞ்சி அது அதை விடாப்பிடியாகப் பற்றிக்கொள்ளு கிறது. கண்ணைமூடிக் கொண்டு எப்படியோ அது தட்டுத் தடுமாறிச் செல்கிறது. ஆனால், சரியான புஸ்தகப்படிப் பினால் ஓரளவு அறிவு பிறக்கிறது; கண்களும் சிறிதளவு திறக்கின்றன.

காகிதம்; அச்சியந்திரம் இவற்றின் மூலமாக மக்க ளிடையே ஏற்பட்ட கண் விழிப்புத்தான் நாம் மேலே பேசிய பெரிய இயக்கங்களுக்குப் பெரிதும் உதவியது. பல பாஷைகளிலும் முதன் முதலில் பைபிளை அச்சிட்டார்கள். அது வரையில் பைபிளை லத்தீன் பாஷையில் கேட்டு வந்த காரணத்தால் அதன் பொருள் விளங்கப் பெறாத பலர் இப்போது தங்கள் தாய்பாஷையிலேயே அதைப் படித்துத் தெரிந்து கொண்டார்கள். இவ்வாறு பைபிளைப் படித்த வர்களில் பெரும்பாலோர் அதை விமரிசனம் செய்யவும் தொடங்கினார்கள். மதபோதகர்களையே நம்பி வாழும் அவசியமும் அவர்களுக்கு இல்லாது போயிற்று. ஏராள மான பள்ளிப் பாடநூல்களும் தோன்றின. இந்தக் காலத்திலிருந்து ஐரோப்பிய பாஷைகள் வெகு விரைவில்

வளர ஆரம்பித்தன. இதுவரையில் லத்தீன் அதற்கு இடங்கொடாமல் இருந்து வந்தது.

அக்காலத்திய ஐரோப்பிய சரித்திரவானில் பல பெரியார்களின் பெயர்கள் நட்சத்திரங்களைப் போல் மின்னி மிளிர்கின்றன. அவர்களில் சிலரைப் பற்றிப் பின்பு தெரிந்துகொள்வோம். ஒரு தேசமோ அல்லது கண்டமோ தனது வளர்ச்சியைத் தடைசெய்துநின்ற கட்டுகளைத் தகர்த்துக் கொண்டு கிளம்பும் போது அது பல்திசைகளிலும் வில்லினின்று விடுபட்ட அம்புபோலப் பாய்ந்து செல்கிறது. இது ஒரு பொதுவான உண்மை. ஐரோப்பாவில் இதையே காண்கிறோம். அக்காலத்திய ஐரோப்பிய சரித்திரம் சுவை மிக்கதாயும் அறிவுபுகட்டுவதாயும் இருக்கிறது. ஏனெனில், அவ்வளவு பெரிய பொருளியல் மாறுதல்களும் வேறு பல பெரிய மாறுதல்களும் அப்போது நிகழ்ந்தன. அதையும், அதே காலத்தில் இந்தியா, ஏன்! சீனா, இவற்றின் சரித்திரங்களையும் ஒப்பிட்டுப்பார். இவ்விரு நாடுகளும் ஐரோப்பாவை விடப் பலவழிகளில் முன்னேற்றம் அடைந்திருந்தன என்று முன்பே கூறியிருக்கிறேன். ஆயினும் என்ன? இவ்விரு நாடுகளின் சரித்திரமும் ஓய்ந்து படுத்துவிடுகிறது; ஐரோப்பிய சரித்திரமோ ஆற்றலுடன் இயங்குகிறது. இந்தியாவிலும் சீனாவிலும் பெரிய அரசர்களும் பெரிய மகான்களும் இருக்கிறார்கள்; மிகவும் உயர்வு வாய்ந்த கலைப்பண்பு பொலிகிறது. ஆனால், அதிலும் விசேஷமாக இந்தியாவில், ஜனங்கள் உணர்ச்சியற்று மரம் போல் ஆய்விடுகிறார்கள். தங்களை ஆளும் அரசர்கள் மாறுவதைப் பற்றி அவர்கள் கவலை கொள்வதாகவே தெரியவில்லை. அப்பேர்ப்பட்டவர்கள் அதை ஏன் ஆட்சேபிக்கப் போகிறார்கள்? அவர்களுடைய முதுகெலும்பு ஒடிந்துவிட்டது. குனிந்து பணிந்து பணிந்து

அதிகாரத்தை எதிர்க்கும் சக்தியையே அவர்கள் இழந்துவிட்டார்கள். ஆகவே, அவர்களுடைய சரித்திரம் இங்கு கொஞ்சம் அங்கு கொஞ்சம் சுடர்விட்டாலும் வெறுமே அரசர்களைப்பற்றியும் நிகழ்ச்சிகளைப் பற்றியும் தொகுத்துக் கூறும் ஒரு கோவையாக மட்டும் இருக்கிறது. பொதுஜன இயக்கங்களைப் பற்றிய வரலாறு அதில் மிகவும் குறைவாகவே இருக்கிறது. இது, சீனாவைப் பற்றி எவ்வளவுதூரம் உண்மை என்று எனக்குத் தெரியாது. ஆனால் இந்தியாவைப் பொறுத்த வரையில், பல நூற்றாண்டுகளாக இதுவே உண்மையாக இருந்துவருகிறது. இக்காலத்தில் நமது தேசம் அடைந்துள்ள இன்னல்களுக்கெல்லாம் நமது ஜனங்களின் இப்பரிதாபகரமான துர்ப்பாக்கிய நிலையே காரணம்.

இந்தியாவில் இன்னொரு மனப் போக்கையும் காண்கிறோம். பின்புறமாக நோக்குவதில் விருப்பம், முன்புறமாக நோக்குவதில் விருப்பம் இல்லை. சென்ற நாட்களில் நாம் வாழ்ந்த உன்னத வாழ்வைப் பற்றிய சிந்தனையேயொழிய இனி வரப்போகும் நாட்களில் நாம் அடைய வேண்டிய உன்னத வாழ்வைப் பற்றியசிந்தனையே இல்லை. ஆகவே, நமது ஜனங்கள் சென்றதையே சிந்தை செய்து ஏங்கியவர்களாய் முற்போக்கு என்பதை அறவே மறந்து விட்டார்கள். இந்த நிலையில் தடியெடுத்தவர்களெல்லாம் அவர்களுக்குத் தண்டல்காரர்களாகி விட்டார்கள். முடிவாக நோக்குமிடத்து, சாம்ராஜ்யங்கள் தங்களுடைய சொந்தவலியைவிடத் தாங்கள் ஆதிக்கம் செலுத்தும் ஜனங்களின் அடிமைக் குணத்தையே தங்களுக்கு ஆதாரமாகக்கொண்டிருக்கின்றன.

83

மறுமலர்ச்சி

ஆகஸ்டு 5, 1932.

ஐரோப்பா வெங்கும் பரவி வந்த கொந்தளிப்பிலிருந்தும் வேதனையிலிருந்தும் 'மறு மலர்ச்சி' என்னும் மணமுள்ள மலர் தோன்றியது. முதலில் அது இத்தாலிய மண்ணில் வளர்ந்தது. ஆனால், அதற்கு உயிரும் உரமும் பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட பண்டைய கிரீசிலிருந்து வந்தன. கிரீசிடமிருந்து அது அழகைக் காதலிக்கக் கற்றுக்கொண்டது. வடிவழகோடு அதனினும் ஆழமான அறிவழகையும் ஆத்மீக அழகையும் சேர்த்து அது அழகை வளம்படுத்தியது. வட இதாலிய நகரங்களின் நிழலில் அது புகல்புகுந்து வளர்ந்து வந்தது. முக்கியமாக, பிளாரென்ஸ் நகரம் மறுமலர்ச்சிக்கு அதன் ஆரம்ப காலத்தில் தாயகமாக இருந்தது.

பிளாரென்ஸ் நகரம் 13, 14-வது நூற்றாண்டுகளிலேயே இதாலிய மகாகவிகளான தாந்தே, பெட்ரார்க் இருவரையும் ஈன்றெடுத்தது. இடைக்காலத்தில் வெகு நாள் வரையில், அது ஐரோப்பாவின் பண விவகாரங்களுக்கு முக்கிய ஸ்தானமாக இருந்தது. கொழுத்த ஐரோப்பியக் கொடுக்கல் வாங்கல் முதலாளிகள் அங்கே கூடுவது வழக்கம். அது ஒரு சிறிய குடியரசு. அதில் வாழ்ந்தவர்கள் பணம் படைத்தவர்களே ஒழிய குணம் படைத்தவர்கள் அல்ல. அவர்கள் தங்களிடையே தோன்றிய பெரியார்களைப் பெரும்பாலும் சரிவர நடத்தவில்லை. அந்நகர் 'சலனசித்த பிளாரென்ஸ்' என்று அழைக்கப் படுகிறது. அந்நகரில் கொடுக்கல் வாங்கல் காரர்களும், கொடுங்கோலர்களும் இருந்தாலும், அது 15-வது நூற்றாண்டின் பிற்பாதியில் மூன்று ஆச்சரிய புருஷர்களை உலகுக்களித்தது. அவர்கள் லியனார்டோ டாவின்ஸி, மைக்கேல் ஆஞ்சிலோ, ரபேல் என்போர் ஆவர். அம்மூவரும் பெரிய கலைஞர்கள்; சிறந்த ஓவிய வல்லுநர்கள். லியனார்டோவும் மைக்கேல் ஆஞ்சிலோவும் வேறு துறைகளிலும் பெரியவர்களா யிருந்தார்கள். மைக்கேல் ஆஞ்சிலோ அற்புதமான சிற்பி. சலவைக்கற் பாறைகளைக் குடைந்து அவன் சிருஷ்டித்த பெரிய உருவங்களின் மகிமையை என்னென்பது! அவன் பெரிய கட்டிட வல்லோனுங்கூட. ரோமாபுரியிலுள்ள மிகப் பெரிய அர்ச். பேதுரு ஆலயத்தைப் பெரும்பாலும் நிருமாணித்தவன் அவனே. அவன் தொண்ணூறு வயது வரையில் தீர்க்காயுசாக இருந்தான். அவன் தன் இறுதி நாள் வரையும் அவ்வாலயத் திருப்பணியில் ஈடுபட்டிருந்தான். அவனுடைய உள்ளம் சோகத்தால் நிறைந்திருந்தது. ஒவ்வொன்றையும் ஊடுருவி அதன் உண்மைப் பொருளை அவன் அறிய முயன்றான். அவன் எப்போதும் சிந்தனையிலேயே ஆழ்ந்திருப்பான்; எப்போதும் பெரும் பெரும் காரியங்களையே எடுத்து நடத்த முயல்வான். ஒருவன் 'ஓவியம் தீட்டுவது தன் தலையைக் கொண்டன்றிக் கைகளைக் கொண்டல்ல' என்று அவன் ஒரு சமயம் கூறியுள்ளான்.

அம்மூவரில் வயதில் முதியவன் லியனார்டோ. பல வழிகளில் அவன் அற்புதமானவன். அவனுடைய காலம் பல பெரியார்கள் தோன்றிய காலம். அக்காலப் பெரியார்களுள் அவனே நடுநாயகமாக ஒளிர்கிறான். அவன் பெரிய ஓவியன், அரிய சிற்பி, முதிர்ந்த அறிஞன், சிறந்த விஞ்ஞானி. ஒவ்வொன்றையும் சோதித்து அதன் உட்

பொருளைத் துருவித் துருவி ஆராய்வதிலேயே அவன் சதா ஈடுபட்டிருந்தான். ஒவ்வொன்றிற்கும் அவன் காரணம் காண முயன்றான். தற்கால விஞ்ஞான சாஸ்திரத்துக்கு அடிகோலிய மகா விஞ்ஞானிகளில் அவனே முதன்மையானவன். ‘இயற்கையானது மனிதன் மீது கருணை கூர்ந்து உலகில் காணும் ஒவ்வொரு பொருளிலும் ஏதாவது ஒரு உண்மையை அவன் அறிந்துகொள்ளும் பொருட்டுப் பொதிந்து வைத்திருக்கிறது’ என்று அவன் கூறுகிறான். அவன் குருவின் உதவியின்றித் தானே ஓதி உணர்ந்தவன். முப்பதாவது வயதில் அவன் தானே லத்தீனும் கணிதமும் கற்க ஆரம்பித்தான். அவன் பெரிய எஞ்சினியராகவும் ஆனான். உடலின் ரத்த ஓட்டத்தை முதன் முதலில் கண்டுபிடித்தவன் அவனே. மனித தேகத்தின் அருமையான அமைப்பு அவன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. ‘மனித தேகம் அருமையானது, அழகு வாய்ந்தது, விசித்திரமான பொறி புலன்களோடு கூடியது. கிடைத்தற்கரிய இக் கருவியைப் பெருவதற்குத் தீயகுணமும் மந்த மதியும் படைத்த மாக்கள் ஒரு சிறிதும் தகுதியுடையர் அல்லர். உண்பதற்கும் உண்டதை வெளியே தள்ளுவதற்கும் ஒரு தோற்பை மட்டும் இருந்துவிட்டால் அதுவே அவர்களுக்குப் போதுமானது. அவர்கள் வெறும் இரைப்பைகள் தான்’ என்று அவன் கூறுகிறான். அவன் சைவ உணவையே உட்கொண்டு வந்தான். மிருகங்கள் என்றால் அவனுக்கு வெகு பிரியம். கடைத் தெருவுக்குச் சென்று கூண்டில் அடைக்கப்பட்டுள்ள பட்சிகளை விலைக்கு வாங்கி அவற்றை உடனே பறந்து செல்லுமாறு விட்டுவிடுவது அவனது வழக்கமாம்.

லியனார்டோவின் முயற்சிகள் எல்லாவற்றிலும் அதி ஆச்சரியமானது காற்றில் பறந்து செல்வதற்கு

அவன் செய்த முயற்சியே ஆகும். அவன் அதில் வெற்றி பெறவில்லை. ஆனால், வெற்றியை நோக்கி வெகுதூரம் முன்னேறிச் சென்றான். அவனுடைய கொள்கைகளையும் சோதனைகளையும் தொடர்ந்து அதே வழியில் முயற்சிக்க அவனுக்குப் பின்னால் ஒருவரும் முயற்சிக்கவில்லை. அவனுக்குப் பின் இரண்டு லியனார்டோக்கள் தோன்றியிருப்பார்களாயின் தற்கால ஆகாய விமானத்தை 200 அல்லது 300 ஆண்டுகளுக்கு முன்பே உண்டாக்கியிருக்கலாம். இந்த அற்புதமான மகா புருஷன் 1452-லிருந்து 1519-வரையில் ஜீவதசையோடு இருந்தான். அவனுடைய வாழ்க்கையை ‘இயற்கையோடு உரையாடல்’ என்று சொல்லுகிறார்கள். அவனுடைய உள்ளத்தில் எப்போதும் வினாக்கள் எழுந்தவண்ணமாயிருந்தன. சோதனையின் மூலம் அவற்றிற்கு அவன் விடை காண முயன்றான். வருங்காலத்தை எட்டிப் பிடிக்கும் முயற்சியில் அவன் தாவித் தாவி முன்னே சென்றான்.

பிளாரென்சைச் சேர்ந்த இம்மூன்று பெரியார்களைப் பற்றி நான் எழுதியதற்குக் காரணம் அவர்களை நான் போற்றுவதுதான். அவர்களிலும் லியனார்டோவை நான் விசேஷமாகப் போற்றுகிறேன். பிளாரென்ஸ் குடியரசின் சரித்திரம் மகிழ்ச்சி தருவதுமல்ல, பெருமை வாய்ந்ததுமல்ல. நெறி முறை பிறழ்ந்த கொடுங்கோல் மன்னர்களும் அவர்களுடைய இழிசூழ்ச்சிகளும் நமக்கு வெறுப்பையே அளிக்கின்றன. இவற்றிற்கு மேல் கொடுக்கல் வாங்கல் காரப்பிடுங்கல்கள் வேறு. ஆனால், இக் களங்கங்கள் எல்லாவற்றிற்காகவும் நாம் பிளாரன்ஸ் நகரை மன்னித்து விடலாம். ஏனெனில். அம்மாநகர் ஈன்றெடுத்த பெரியார்களின் பிரபாவம் அத்தகையதாயிருக்கிறது. பெருமை வாய்ந்த அவனுடைய

புதல்வர்களின் நிழல் இன்னும் அவள் மீது படர்ந்திருக்கிறது. அவ்வழகிய நகரின் தெருக்களில் செல்லும்போதும், அந் நகரின் இடைக்கால வாராவதிகளின் கீழ் புகுந்து புகுந்து தவழ்ந்து செல்லும் ஆர்னோ நதியின் அழகைக் கண்களால் பருகும்போதும், நாம் மந்திரத்தால் கட்டுண்டவர்கள் போல் ஆய்விடுகிறோம். நமது கண் முன் இறந்த காலம் மீண்டும் உயிர் பெற்றுத் தெளிவாக ஓடத் தொடங்குகிறது. தாந்தே போகிறான், அவன் காதலித்த ஸ்திரீரத்தினமான பியாட்ரிஸ் அவனுக்குப் பின்னே போகிறாள். அவள் போயும் அவள் மேனியிலிருந்து உண்டான நறுமணம் மட்டும் போகவில்லை. சிந்தனையில் ஆழ்ந்த வண்ணம் குறுகிய தெருக்கள் வழியாக லியனார்டோ செல்லுகிறான். இயற்கையின் இரகசியங்களையும் மனிதவாழ்க்கையின் மர்மங்களையும் தவிர்த்து வேறு எதைப்பற்றி அவன் சிந்திக்கப் போகிறான்!

ஆக, 15-வது நூற்றாண்டில் இதாலியில் தோன்றிய 'மறுமலர்ச்சி' மெள்ள மெள்ள மற்ற மேல்நாடுகளுக்கும் சென்றது. பெரிய கலைஞர்கள் கல்லுக்கும் கிழிக்கும் உயிர் வழங்கினார்கள். அவர்களுடைய சிற்பங்களும் ஓவியங்களும் ஐரோப்பாவின் சித்திரசாலைகளையும் பொருட்காட்சி சாலைகளையும் நிறைத்தன. இதாலியில் 16-வது நூற்றாண்டின் இறுதியில் கலை மறுமலர்ச்சி கூம்பத் தொடங்கியது. 17-வது நூற்றாண்டில் ஹாலந்தில் பெரிய ஓவியர்கள் தோன்றினார்கள். அவர்களில் மிகுந்த கீர்த்தி வாய்ந்தவர் ராம் ராண்ட் என்பவர். ஸ்பெயினிலும் ஏறக்குறைய இதே சமயத்தில் வெலாஸ்குவிஸ் என்பவர் வாழ்ந்து வந்தார். வெறுமே பெயர்களை அடுக்கிக் கொண்டு போவதில் பயனில்லை. அவை பலப்பல. நான் கூறிய பெரிய ஓவியர் மணிகளை நீ

அறிந்துகொள்ள விரும்பினால் சித்திர சாலைகளுக்குச் சென்று அவர்களுடைய சிருஷ்டியைப் பார். அவர்களுடைய பெயர்களில் ஒன்றுமில்லை. அவர்கள் வளர்த்த கலையும் சிருஷ்டித்த அழகுமே நமக்குச் செய்தி பகர்வன ஆகும்.

அந்தக் காலத்தில் — 15-லிருந்து 17-வது நூற்றாண்டு வரையில்—விஞ்ஞானமும் முண்டி முரண்டிச் சிறிது சிறிதாக முன்னேறித் தனக்குரிய ஸ்தானத்தை அடைந்து விட்டது. அது மதஸ்தாபனத்தோடு உறுதியாகப் போரிடவேண்டி யிருந்தது. ஏனெனில், மக்கள் ஒரு பொருளைச் சிந்திப்பதிலும் அதைச் சோதித்து அறிவதிலும் மதஸ்தாபனத்துக்கு நம்பிக்கை கிடையாது. சர்வ பிரபஞ்சத்துக்கும் பூமிதான் நடுநாயகமானது. சூரியன் தான் பூமியைச் சுற்றுவது. நட்சத்திரங்களெல்லாம் வானத்தில் அசையாது நிற்பவை. அதன் அபிப்பிராயம் இதற்கு விரோதமாகப் பேசுபவன் பாஷண்டன் என்பது. அவன் மத விசாரணை சபையால் தண்டிக்கப்படவேண்டியவன். இத்தனை இக்கட்டுகள் இருந்தும் போலந்து தேசத்தைச் சேர்ந்த கோபர் நிகஸ் என்பவர் இந் நம்பிக்கையை எதிர்த்து, பூமிதான் சூரியனைச் சுற்றி வருகிறது என்று நிரூபித்துக் காட்டினார். இவ்வாறு, நாம் தற்காலத்தில் பிரபஞ்சத்தைப்பற்றிக் கொண்டிருக்கும் கொள்கைக்கு அவர் அடிகோலினார். அவருடைய ஜீவதசை 1473-லிருந்து 1543-வரையில். அவர் புரட்சிகரமான பாஷண்டக் கொள்கைகள் உடையவராயிருந்தும் எப்படியோ மதஸ்தாபனத்தின் சினத்துக்கு இலக்காகாமல் தப்பிப் பிழைத்துக் கொண்டார். அவருக்குப் பின் வந்த மற்றவர்களுக்கு அவ்வளவு அதிருஷ்டம் இல்லாது போய்விட்டது. இதாலியைச் சேர்ந்த கியார்டானோ என்பவர் பூமிதான் சூரியனைச்

சுற்றுகிறது, ஒவ்வொரு நட்சத்திரமும் ஒரு சூரியன் என்று சாதித்தார். அந்தக் குற்றத்துக்காக மதஸ்தாபனம் அவரை ரோமாபுரியில் 1600-ம் ஆண்டில் உயிருடன் எரித்துக் கொன்றது. அவருடைய காலத்தில் காலிலியோ என்று இன்னொருவர் வாழ்ந்து வந்தார். அவர் தான் தூரதிருஷ்டிக் கண்ணாடியைச் செய்தவர். அவரும் மதஸ்தாபனத்தின் பயமுறுத்தலுக்கு ஆளானார். ஆனால், அவர் கியார்டானோவைப் போல் மனவலி படைத்தவர் அல்ல. ஆகவே, அவர் தாம் சொன்னதை வாபஸ் பெற்றுக் கொள்வதுதான் புத்திசாலித்தனம் என்று கருதினார். அவர் மதஸ்தாபனத்திடம் தாம் அறியாமையால் தவறிழைத்து விட்டதாகவும், பூமிதான் உண்மையில் பிரபஞ்சத்தின் கேந்திரஸ்தானம் என்றும், சூரியன் பூமியை வலம் வருகிறதென்றும் ஒப்புக்கொண்டார். இவ்வாறு ஒப்புக்கொண்ட பின்பும் அவர் சிறிது காலம் சிறையிலிருந்து தவம் கிடக்க வேண்டியதாயிற்று.

16-வது நூற்றாண்டைச் சேர்ந்த தலைசிறந்த விஞ்ஞான பண்டிதர்களுள் ஹார்வி என்பவர் ஒருவர். அவர் தான் முடிவாக ரத்த ஓட்ட தத்துவத்தை நிரூபித்தவர். 17-வது நூற்றாண்டில் விஞ்ஞான உலகின் ஜோதி ஒன்று தோன்றுகிறது. அவர்தான் ஐசக் நியூடன் என்பவர். அவர் பெரிய கணித நிபுணரும்கூட. அவர் பூமியின் ஆகர்ஷண சித்தாந்தத்தைக் கண்டுபிடித்தார். அதாவது மேலே எறியப்பட்ட வஸ்துக்கள் ஏன் பூமியை நோக்கிக் கீழே விழுகின்றன என்பதற்கு அவர் காரணம் கூறினார். இவ்வாறு இயற்கையின் இரகசியங்களில் இன்னொன்றை அவர் உலகுக்குத் தெரியப்படுத்தினார்.

விஞ்ஞானத்தைப் பற்றி இங்கே சொல்ல முடிந்தது இவ்வளவுதான். அக்காலத்தில் இலக்கியமும் முன்னேற்றமடைந்தது. எங்கும் பரவிவந்த புதிய உணர்ச்சி

இளமைப் பருவத்திலிருந்த ஐரோப்பிய மொழிகளுக்குப் பெருக்கத்தை அளித்தது. சில காலமாகவே இம் மொழிகள் நிலவிவந்தன. இதாலியில் மகாகவிகள் தோன்றியதை ஏற்கெனவே கண்டோம். இங்கிலாந்தில் சாசர் விளங்கினார். ஆனால், பண்டிதர்களும் மதஸ்தாபனமும் பேச்சிலும் எழுத்திலும் வழங்கிவந்த லத்தீன் மொழி ஐரோப்பிய மொழிகள் எல்லாவற்றையும் அடக்கி அவற்றிற்குமேல் தலைதூக்கி நின்றது. அவை வெறும் 'கிராமியமொழி' களாகக் கருதப்பட்டன. (அன்று அவை அழைக்கப்பட்ட பெயரால் இன்றுகூடப் பலர் நம்நாட்டு மொழிகளை அழைப்பது விந்தையாயிருக்கிறது.) ஆகவே அம்மொழிகளில் எழுதுவது அகௌரவம் என்றே கருதப்பட்டது. ஆனால் புதிய உணர்ச்சியின் வேகமும், காகிதமும் அச்சும்சேர்ந்து அம்மொழிகளை முன்னுக்கு உந்தின. முதலில் தலை நிமிர்ந்து நிற்கத் தலைப்பட்டது இதாலிய மொழி. அதற்குப் பிறகு பிரெஞ்சும், ஆங்கிலமும், ஸ்பானியமும், கடைசியாக ஜெர்மானியமும் தலையெடுத்தன. 16-வது நூற்றாண்டில் பிரான்சில் சில இளம் எழுத்தாளர்கள் தங்களுடைய தாய்மொழியில் தான் எழுதுவது, லத்தீனில் எழுதுவதில்லை என்று சங்கல்பம் செய்து கொண்டார்கள். அதன் விளைவாக அந்தக் 'கிராமிய மொழி' அபிவிருத்தி அடைந்தது. கடைசியில், மிகச் சிறந்த இலக்கியத்துக்கு மிக ஏற்ற கருவியாக அது மாறிவிட்டது.

ஆக, ஐரோப்பிய மொழிகள் வளத்திலும் ஆற்றலிலும் வளர்ந்து வளர்ந்து, இன்று நாம் காணும் உயர் நிலையை எய்தின. புகழ்பெற்ற ஆசிரியர்கள் பெயர்களைக் கூறுவதென்றால் அது மிகவும் விரியும். சிலருடைய பெயர்களைமட்டும் கூறுகிறேன். இங்கிலாந்தில் ஜகப்பிரசித்தி பெற்ற ஷேக்ஸ்பியர் மகாகவி 1564-லிருந்து

1616—வரையில் ஜீவியவந்தராயிருந்தார். அவரை அடுத்துப் பன்னிரண்டாம் நூற்றுண்டில் 'இழந்த சொர்க்கம்' என்னும் காவியத்தை இயற்றிய அந்தகக்கவியாகிய மில்டன் வாழ்ந்தார். பிரான்சில் தத்துவசாஸ்திரி தேகார்த்தேயும், நாடகாசிரியர் மோலியேரும் 17-ம் நூற்றுண்டில் பிரகாசித்தார்கள். 'காமெடி பிரான்சைஸ்' என்னும் பெயர்பெற்ற அரசாங்க நாடகக் கொட்டகையை நிறுவியவர் மோலியேர். இங்கிலாந்தில் ஷேக்ஸ்பியர் வாழ்ந்த காலத்திலேயே ஸ்பெயினில் 'டான் குயிக்சாட்' என்னும் நூலின் ஆசிரியரான சர்வான்டிஸ் வாழ்ந்து வந்தார்.

இன்னொரு பெயரையும் நான் சொல்ல விரும்புகிறேன். அந்தப் பெயரை உடையவன் பெரியவன் என்கிற காரணத்துக்காக அல்ல. அந்தப் பெயர் யாவருக்கும் நன்கு தெரிந்திருப்பதால் அதைச் சொல்லுகிறேன். அப்பெயர் மெக்கிய வெல்லி என்பது. அப் பெயரின் சொந்தக்காரன் பிளாரன்ஸ் நகரத்தான். 15,16-ம் நூற்றுண்டுகளில் அவன் ஒரு சாதாரண அரசியல் வாதியாக இருந்தான். ஆனுல், அவன் 'அரசிளங்குமரன்' என்ருெரு நூல் எழுதினுன். அந்த நூல் நல்ல புகழை அடைந்தது. அந்நூல் அக்கால அரசர்கள், அரசியல் வாதிகள் ஆகியோரின் மனோபாவத்தை அறிய நமக்குப் பெரிதும் உதவுகிறது. அரசாங்கத்துக்கு மதம் அவசியமென்று மெக்கிய வெல்லி சொல்லுகிருன்; மக்களை நற்குண சீலர்கள் ஆக்குவதற்கல்ல, அவர்களை அடக்கி ஆளுவதற்கு. தான் பொய் என்று கருதும் ஒரு மதத்தை ஆதரிக்கும்படியான கடமையும் ஒரு அரசனுக்கு நேரலாம்! 'ஒரு அரசன் ஒரே சமயத்தில் மனிதனுகவும் மிருகமாகவும் சிங்கமாகவும் நரியாகவும் நடிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். தன்னுடைய சொல்லைக் காப்பாற்றுவது தனக்குத் தீங்கு பயக்கும் என்று தோன்றினுல் அரசன் அதைக் காப்பாற்றுவதும் கூடாது. காப்பாற்றுவதும் முடியாது. எப்போதும் யோக்கியமாக நடந்து கொள்வதென்பது பிரதிகூலத்தையே உண்டாக்கும் என்று உறுதியாய்ச் சொல்லுவேன். ஆனுல், சமயாசாரமும், விசுவாசமும், இரக்கமும், வாய்மையும் பூண்டவன் போல நடிப்பது எப்போதும் நல்ல பலனை அளிக்கும். நல்லவன் போல வேஷம் போடுவதைக் காட்டிலும் அதிக பலன் தருவது இவ்வுலகில் வேறென்றுமில்லை' என்று மெக்கிய வெல்லி கூறுகிருன்.

ரொம்ப லட்சணமாயிருக்கிறதல்லவா? பெரிய அயோக்கியன், மிகவும் நல்ல அரசன்! ஐரோப்பாவில், அக்காலத்தில் ஒரு சாதாரண அரசனின் மனநிலை மேற் கூறியவாறு இருந்ததென்ருல் அங்கு இடைவிடாத தொந்தரவு இருந்துவந்ததில் யாதொரு ஆச்சரியமும் இல்லை. ஏன் அவ்வளவு தூரம் போகவேண்டும்? இன்று கூட சாம்ராஜ்ய வல்லரசுகள் மெக்கிய வெல்லியின் அரசனைப் போலவே பெரும்பாலும் நடந்து கொள்ளுகின்றன. வெளித்தோற்றத்துக்கு இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்று தோன்றும். அவ்வளவு நல்ல வேஷத்தின் கீழ் பேராசையும், கொடூரமும், பழிபாவத்துக் கஞ்சாமையும் மறைந்து கிடக்கின்றன. நாகரிகம் என்னும் பசுத்தோல் போர்த்த ரத்தவெறி கொண்ட புலிகளாகவே அவை விளங்குகின்றன.

84

பிராடெஸ்டண்டுப் புரட்சியும் குடியானவர்களின் போரும்

ஆகஸ்டு 8, 1932

15-17-வது நூற்றாண்டுகளின் ஐரோப்பிய நிலைமை பற்றி ஏற்கெனவே சில கடிதங்கள் எழுதியுள்ளேன். இடைக்காலத்தின் கழிவு, குடியானவர்களின் துயரம், பூர்ஷ்வா வகுப்பின் வளர்ச்சி, அமெரிக்காவையும் கீழ் நாடுகளுக்குச் செல்லும் கடல் மார்க்கங்களையும் கண்டு பிடித்தது, கலை, விஞ்ஞானம், ஐரோப்பிய மொழிகள் ஆகியவற்றின் வளர்ச்சி முதலிய விஷயங்களைப் பற்றிச் சிறிது கூறினேன். ஆனால், அக்காலத்தைப் பற்றிக் கூற வேண்டியது இன்னும் எவ்வளவோ இருக்கிறது. நான் எழுதிய கடைசி இரண்டு கடிதங்களுள், ஒன்று கடல் மார்க்கங்களைப் பற்றிய கடிதம். இந்தக் கடிதம், இனி எழுதப் போகும் இரண்டொரு கடிதங்கள் எல்லாம் அக்காலப் பகுதியைப் பற்றியே கூறுவனவாகும். வெவ்வேறு இயக்கங்களையும், முயற்சிகளையும் நான் தனித் தனியாக எடுத்துக் கொண்டு எழுதுகிறேன். ஆனால், அவை யெல்லாம் ஏறக்குறைய ஒரே காலத்தில் நிகழ்ந்தனவாகவும் ஒன்றையொன்று பிரதிபாதிப்பன வாகவும் இருந்தன.

மறுமலர்ச்சி தோன்று முன்பே மதஸ்தாபனத்தின் செயல்களைக் குறித்து மக்கள், மனதிலேயே குமுறிக் கொண்டிருந்தார்கள். ஐரோப்பிய மக்கள், அரசர்கள் இருதிறத்தாரும் மதஸ்தாபனத்தின் கடுமையான அமுலை ஆற்றமாட்டாதவர்களாய்ச் சிறிது முணுமுணுக்கவும்

சந்தேகப்படவும் ஆரம்பித்தார்கள். இரண்டாவது பிரடெரிக் என்னும் சக்கரவர்த்தி போப்பாண்டவருடன் வாதப் பிரதிவாதத்தில் இறங்கி, மதபிரஷ்ட தண்டனைக்கும் கவலை கொள்ளாமலிருந்தது உனக்கு நினைவிருக்கலாம். இத்தகைய சந்தேகமும், கீழ்ப்படியாமையும் ரோமாபுரிக்குப் பெரிதும் ஆத்திரமூட்டின. புதிய பாஷண்ட வாதத்தை ஒழிப்பதென்று அது உடனே கங்கணம் கட்டிக்கொண்டது. அதற்காகவே அது மத விசாரணை சபையை ஏற்படுத்திற்று. அம்மத விசாரணை சபையார் பாஷண்டர் என்று சொல்லப்பட்ட ஆடவர் பலரையும், சூனியக்காரிகள் என்று குற்றஞ் சாட்டப் பட்ட ஸ்திரீகள் பலரையும் ஐரோப்பாவெங்கும் உயிரோடு எரித்து வந்தார்கள். பிரேக் நகரைச் சேர்ந்த ஜான் ஹஸ் என்பவரை வஞ்சித்துக் கொளுத்தி விட்டார்கள். அதன்பேரில் பொஹிமியாவில் அவரைப் பின்பற்றியவர்கள் கலகத்துக்கு ஆரம்பித்தார்கள். ரோமாபுரிய மதஸ்தாபனத்துக்கு எதிராக எழுந்த இப்புதிய எதிர்ப்புணர்ச்சியை மத விசாரணைசபையின் பயங்கரச் செயல்கள் எல்லாம் சேர்ந்துகூட அடக்க முடியவில்லை. அது பரவிக்கொண்டே சென்றது. மதஸ்தாபனம் ஒரு பெரிய நிலச்சுவான்தார் என்கிற முறையில் குடியானவர் அதற்கு விரோதமாகக்கொண் டிருந்த உணர்ச்சியும் அத்துடன் சேர்ந்துகொண்டது. சுயநலக் காரணங்களுக்காக இந்த எதிர்ப்பைப் பல இடங்களில் அரசர்கள் ஆதரித்தார்கள். மதஸ்தாபனத்தின் ஏராளமான சொத்து சுதந்திரங்களைக் கண்டு அவர்கள் பொறாமையும் பேராசையும் கொண்டிருந்தார்கள். அச்சமயத்தில் பைபிளும் வேறு நூல்களும் அச்சிடப்பட்டு வெளிவந்தானது உள்ளுக்குள்ளேயே புகைந்துகொண் டிருந்த எரிச்சலை இன்னும் அதிகமாக்கியது.

16-வது நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஜெர்மனியில் மார்டின்லூதர் என ஒருவன் தோன்றினான். அவன் தான் ரோமாபுரிக்கு எதிரான புரட்சிக்கு, பிற்காலத்தில் தலைவனாக இருந்தவன். அவன் ஒரு கிறிஸ்தவ மத போதகன். அவன் ரோமாபுரிக்குச் சென்றான். அங்கே, மதஸ்தாபனத்தின் ஊழல்களையும் சுகபோக விலாசங்களையும் நேரில்கண்ட அவனுக்குப் பெரிய வெறுப்பு உண்டாயிற்று. இந்த விவாதம் வளர்ந்து கொண்டே சென்று ரோமானிய மதஸ்தாபனத்தையே இரு பிளவாகப் பிரித்துவிட்டது. மேல் ஐரோப்பா, மதத்திலும் அரசியலிலும் இருகூறாகப் பிரிந்தது. ருஷியாவின் பழைய வைதிக கிரேக்க மதஸ்தாபனமும் கீழ் ஐரோப்பாவும் இதில் கலந்து கொள்ளவில்லை. ரோமாபுரிக்கும் உண்மையான மதத்துக்கும் வெகுதொலைவு என்பது அவர்களுடைய அபிப்பிராயம்.

இவ்வாறு பிராடெஸ்டண்டுப் புரட்சி ஆரம்பமாயிற்று. 'பிராடெஸ்டண்டு' என்றால் ஆக்ஷேபிப்பவன் (எதிர்ப்பவன்) என்று அர்த்தம். அவர்கள் ரோமானிய மதஸ்தாபனத்தின் பல கொள்கைகளை எதிர்த்தார்கள். அதுமுதற் கொண்டு மேற்கு ஐரோப்பாவில் கிறிஸ்தவ மதத்துக்குள் ரோமன் கத்தோலிக்கப் பிரிவு, பிராடெஸ்டண்டுப் பிரிவு என்று இருபெரும் பிரிவுகள் ஏற்பட்டன. பிராடெஸ்டண்டுகளுக்குள்ளே பல உட்பிரிவுகள் உண்டு.

மதஸ்தாபனத்துக்கு விரோதமான இந்த இயக்கமே 'மதச் சீர்திருத்தம்' என அழைக்கப்படுகிறது. பொதுவாக, மதஸ்தாபனத்தின் ஊழலையும் சர்வாதிகாரப் போக்கையும் எதிர்த்து மக்கள் செய்த கிளர்ச்சியே அது. அதோடு சேர்ந்தாற் போலவே, பல அரசர்கள் போப்பாண்டவர் தங்கள் மீது ஆதிக்கம் செலுத்த முயலுவதை

ஒழிக்க விரும்பினார்கள். தங்களுடைய அரசியல் விவகாரங்களில் போப்பாண்டவர் தலையிடுவதை அவர்கள் பெரிதும் வெறுத்தார்கள். இந்த இரண்டு அம்சங்கள் நீங்கலாக மூன்றாவதான இன்னொரு அம்சமும் 'மதச் சீர்திருத்த' இயக்கத்தில் இருந்தது. அதாவது, மதஸ்தாபனத்திடம் விசுவாசம் பூண்ட பலர் அதன் தீமைகளை உள்ளிருந்தே துடைக்க முயன்றார்கள்.

மதஸ்தாபனத்தின் இரு சங்கங்களான பிரான்சிஸ் சங்கமும், டாமினிக் சங்கமும் உனக்கு நினைவிருக்கலாம். 16-வது நூற்றாண்டில், மார்டின் லூதரின் செல்வாக்கு வளர்ந்து வந்த காலையில், லயோலாவைச் சேர்ந்த ஸ்பானியனான இக்னேஷஸ் என்பவன் இன்னொரு புதிய சங்கத்தை ஆரம்பித்தான். அவன் அதை 'ஏசு சங்கம்' என அழைத்தான். அதன் அங்கத்தினர் 'ஏசு சங்கப் பாதிரிகள்' என்று பெயர் பெற்றனர். அவர்கள் சீனாவுக்கும், மற்றைய கீழ்நாடுகளுக்கும் சென்றதை முன்பே குறிப்பிட்டிருக்கிறேன். இந்த 'ஏசு சங்கம்' மிகவும் ஆச்சரியகரமானது. ரோமானிய மதஸ்தாபனத்துக்கும் போப்பாண்டவருக்கும் திறமையாக முழுநேர ஊழியம் புரிவதற்குரிய பயிற்சி அளிப்பதை அது நோக்கமாகக் கொண்டிருந்தது. அது அளித்த பயிற்சி மிகக் கடுமையாகவும், ஆனால், கோரிய பலனைக் கொடுப்பதாகவும் இருந்தது. மதஸ்தாபனத்துக்குப் பூரண விசுவாசத்துடனும் அளவற்ற திறமையுடனும் தொண்டு புரிவோரை அது உண்டாக்கித் தந்தது. அவர்கள் மதஸ்தாபனத்துக்குத் தங்கள் உடல் பொருள் ஆவி அனைத்தையும் நல்கியதோடு கண்ணை மூடிக்கொண்டு, ஒரு கேள்வியும் கேட்காமல், அதைப் பின்பற்றி வந்தார்கள். அவர்களுடைய விசுவாசத்தின் மகிமை அப்படியிருந்தது. மதஸ்தாபனத்துக்கு அதனால் நன்மை

விளைவதாயின் அவர்கள் மனமுவந்து தங்களையே தியாகஞ் செய்து விடுவார்கள். மதஸ்தாபனத்துத் தொண்டு புரிவதில் அவர்கள் பழி பாவத்தையும் பொருட்படுத்துவதில்லை என்கிற பேர் அவர்களுக்கு உண்டு. மதஸ்தாபனத்தின் நன்மையை முன்னிட்டு எதையும் செய்யலாம், எல்லாம் நியாயந்தான் என்பது அவர்களுடைய கொள்கை.

இந்த ஆச்சரியமான தொண்டர் கூட்டம் ரோமானிய மதஸ்தாபனத்துக்குப் பேருதவி அளித்தது. அதன் பெயரையும் செய்தியையும் அது தொலைநாடுகளுக்கும் கொண்டு சென்றதோடு ஐரோப்பாவிலும் அதன் கொடியை உயர்த்திப் பிடித்தது. சிறுபான்மை அகச்சீர்திருத்த இயக்கம் காரணமாகவும், பெரும்பான்மை பிராடெஸ்டண்டுப் புரட்சியின் பயம் காரணமாகவும் ரோமாபுரியின் ஊழல் வெகுவாகக் குறைந்துவிட்டது. இவ்வாறு, 'மதச்சீர்திருத்த' இயக்கம் மதஸ்தாபனத்தை இரண்டாகப் பிரித்தது; அதேசமயத்தில் அதன் அ[illegible]யும் ஓரளவு தூய்மைப்படுத்தியது.

பிராடெஸ்டண்டுப் புரட்சி ஓங்கவும், ஐரோப்பிய அரசர்களில் சிலர் ஒரு கட்சியிலும் மற்றுஞ் சிலர் இன்னொரு கட்சியிலும் சேர்ந்தார்கள். மதசம்பந்தமான கருத்துகள் அவர்களுக்குக் கிடையாது. அவர்களுக்கு ராஜதந்திரத்திலும் லாபத்தின் மேலுந்தான் [illegible] கண். அச்சமயம் ஹாப்ஸ்பர்க் வமிசத்தைச் சேர்ந்த ஐந்தாவது சார்லஸ் என்பவன் பரிசுத்த ரோம சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தியாக இருந்தான். அவனுடைய பாட்டனும் தகப்பனும் செய்து கொண்ட கலியாணங்கள் மூலம் அவனுக்குப் பெரிய சாம்ராஜ்யம் கிடைத்தது. அதில் ஆஸ்திரியா, ஜெர்மனி (பெயரளவில்), ஸ்பெயின், நேப்பிள்ஸ், சிசிலி, தாழ்நாடுகள், ஸ்பானிய அமெரிக்கா இவ்வளவும் அடங்கியிருந்தன. கலியாணத்தின்

மூலம் ராஜ்யத்தைப் பெருக்கிக் கொள்ளும் முறை அக்கால ஐரோப்பாவில் பிரபலமாக அனுஷ்டிக்கப்பட்டு வந்தது. இந்த முறையில், சார்லஸ் ஐரோப்பாவில் பாதிக்கு அதிபதியாயிருந்தான். தன்னுடைய தகுதி காரணமாக அவன் அந்நிலையை எய்தவில்லை. சிறிது காலம் அவன் ஒப்பற்றவனாக விளங்கினான். அவன் பிராடெஸ்டண்டுகளுக்கு விரோதமாகப் போப்பாண்டவர் கட்சியில் சேருவதென்று தீர்மானித்தான். மதச்சீர்திருத்தத்தின் மூலக் கருத்து சாம்ராஜ்யத்தின் மூலக் கருத்தோடு பொருந்துவதாயில்லை. ஆனால், பல ஜெர்மானியச் சிற்றரசர்கள் பிராடெஸ்டண்டுக் கட்சியில் சேர்ந்து கொண்டார்கள். ஜெர்மனியெங்கும் ரோமானியக் கட்சி, லூதர் கட்சி என்று இரு கட்சிகள் ஏற்பட்டன. அதனால் உள்நாட்டுப் போர் விளைந்தது.

இங்கிலாந்தில் பன்முறை விவாகம் செய்துகொண்ட எட்டாவது ஹென்ரி போப்பாண்டவருக்கு விரோதமாகவும் பிராடெஸ்டண்டுகளுக்குச் சாதகமாகவும் இருந்தான். அதைவிட அவன் தனக்கே சாதகமாயிருந்தான் என்று சொல்வது அதிகப் பொருத்தமாயிருக்கும். மதஸ்தாபனத்தின் திரண்ட சொத்தை அவன் வெஃகினான். ஆகவே, ரோமாபுரியின் தொடர்பை அறுத்துக் கொண்டவுடன், மடங்களுக்கும் தேவாலயங்களுக்கும் சொந்தமான செழிப்பான நிலங்களையெல்லாம் அவன் பறிமுதல் செய்து விட்டான். அவன் போப்பாண்டவரோடு பிணங்கிக் கொண்டதற்குச் சொந்தக் காரணம் வேறு இருந்தது. அவன் தன் மனைவியை விவாக ரத்து செய்து விலக்கிவிட்டு வேறொருத்தியை விவாகம் செய்து கொள்ள விரும்பினான்.

பிரான்சில் நிலைமை வெகு விசித்திரமாயிருந்தது. பிரான்சு அரசரின் பிரதம மந்திரியாக இருந்தவன்

பெயர்பெற்ற கார்டினல் ரிஷ்லூ என்பவன். உண்மையில் ஆட்சி புரிந்தவன் அவனே. அவன் பிரான்சைப் போப் பாண்டவர் கட்சியில் இருக்குமாறு செய்து அங்கே பிராடெஸ்டண்டு மதத்தை ஒடுக்கினான். ஆனால், அவனே ஜெர்மனியில் பிராடெஸ்டண்டுக் கட்சிக்கு ஊக்கம் அளித்து வந்தான். காரணம், ஜெர்மனியில் உள்நாட்டுப் போர் ஏற்பட்டு அது ஒற்றுமை குலைந்து பலவீனம் அடைய வேண்டும் என்பதுதான்! அரசியலில் சூதும் வாதும் எவ்வளவு மலிந்திருக்கிறது பார்த்தாயா? பிரான்சு-ஜெர்மனி பகைமை ஐரோப்பிய சரித்திரத்தின் ஊடே மணிமாலை யூடுசெல்லும் கயிறு போலச் செல்லுகிறது.

லூதர்தான் பிராடெஸ்டண்டுகளில் பெரியவன். அவன் ரோமாபுரியின் அதிகாரத்தை எதிர்த்துப் போரிட்டான். அதனால் அவன் மதவிஷயங்களில் சகிப்புத் தன்மை உள்ளவனாக இருந்தான் என்று எண்ணி விடாதே. அவன், தான் எதிர்த்துப் போரிட்ட போப் பாண்டவரைப் போலவே தானும் சகிப்புத் தன்மை அற்றவனாக இருந்தான். ஆகவே, மதச் சீர்திருத்தத்தினால் ஐரோப்பாவுக்கு மதசுதந்திரம் கிடைக்கவில்லை. புதுவகையான மத வெறியர்களை அது உற்பத்தி செய்தது. அவர்கள் 'தீவிர சுத்த வாதிகள்' (Puriton) என்றும் 'கால்வினியர்' (Calvinist) என்றும் அழைக்கப் பட்டார்கள். பிராடெஸ்டண்டு இயக்கத்தின் பிற் காலத் தலைவர்களில் கால்வின் ஒருவன். அவன் நல்ல அமைப்புத் திறம் படைத்தவன். சிறிது காலம்வரையில் ஜினிவா நகரம் அவனுடைய ஆதிக்கத்தில் இருந்தது. ஜினிவா நகரத்துப் பூங்காவில் 'மதச் சீர்திருத்த' இயக்கத்துக்காக எடுத்துள்ள பெரிய ஞாபகார்த்தமேரிட்டிடத்தைப் பார்த்தது உனக்கு நினைவிருக்கிறதா? ஒரு

பெரிய சுவர், அதிலே கால்வினுடையவும் இன்னும் சிலருடையவும் உருவச் சிலைகள் வைத்திருந்ததே? தன்னுடைய அபிப்பிராயத்தை ஒத்துக் கொள்ளாமல், சுதந்திரமாகச் சிந்தித்தார்கள் என்கிற காரணத்துக்காக அவன் பலரைத் தீயிலிட்டுக் கொன்றான். அவ்வளவு பெரிய துவேஷி அவன்!

லூதருக்கும் பிராடெஸ்டண்டுகளுக்கும் பொது ஜனங்கள் பக்க பலமாயிருந்தார்கள். ஏனெனில், ரோமானிய மதஸ்தாபனத்தினிடம் ஜனங்களுக்கு அவ்வளவு மனக்கசப்பு ஏற்பட்டிருந்தது. நான் முன்பே கூறியபடி, குடியானவர்கள் பெருந்துன்பத்தில் உழன்று வந்தார்கள்; அடிக்கடி கலகங்கள் நிகழ்ந்து வந்தன. இந்தக் கலகங்களே ஜெர்மனியில் பெரிய 'குடியானவர் யுத்த' மாக வளர்ந்துவிட்டன. ஏழைக் குடியானவர்கள் தங்களை நசுக்கி வந்த தீய முறைக்கு விரோதமாக எழுந்து நாகரிகவும் சாதாரணமான, மிகவும் நியாயமான சில உரிமைகளைக் கோரினார்கள். அடிமைத்தனம் ஒழிய வேண்டும், மீன்பிடிக்கவும் வேட்டையாடவும் உரிமை வேண்டும் என்று அவர்கள் கேட்டார்கள். ஜெர்மனியின் சிற்றரசர்கள் இவ்வுரிமைகளையும் அவர்களுக்கு வழங்க மறுத்துச் சகலவிதமான காட்டுமிராண்டி முறைகளாலும் அவர்களை ஒடுக்க முயன்றார்கள். லூதர் பெரிய சீர்திருத்தவாதியாயிற்றே, இதுவிஷயத்தில் அவனுடைய அபிப்பிராயம் என்னவென்று பார்ப்போம். அவன் ஏழைக் குடியானவர்களின் பட்சமாக நின்று அவர்களுடைய கோரிக்கைகளை ஆதரித்தானா? அந்தப் பாவத்தில் அவன் போகவில்லை! அடிமைத்தனம் ஒழிய வேண்டுமென்று குடியானவர்கள் கோரினார்களல்லவா? அதைக் குறித்து அவன் கூறுவதைக் கேள். "அடிமைத் தனம் ஒழிந்துவிட்டால் சகல மனிதரும் சமத்துவம்

பெற்று விடுவார்கள். அதனால் ஏசுகிறிஸ்துவின் பரலோக ராஜ்யம் இவ்வுலகத்தைச் சேர்ந்த ஒரு ஸ்தூல ராஜ்யமாக மாறிவிடும். அது கூடவே கூடாது! சமத்துவத்தோடு கூடிய எந்த ராஜ்யமும் இவ்வுலகில் இருக்க முடியாது. சிலர் சுதந்திரமாகவும் மற்றவர் அடிமைகளாகவும், சிலர் ஆளுவோராகவும் மற்றவர் ஆளப்படுவோராகவும் இருந்துதான் தீரவேண்டும்" என்கிறான் அச் சீர்திருத்தவாதி! அதுமட்டுமா? அவன் குடியானவர்களைச் சபிக்கிறான். அவர்களை வதைக்க வேண்டுமென்று பிறரையும் கேட்டுக் கொள்கிறான். "முடிந்தவர்களெல்லாம் பகிரங்கமாகவோ, ரகசியமாகவோ குடியானவர்களைக் குத்துங்கள், வெட்டுங்கள், கொல்லுங்கள். ஒரு கலகக்காரனைப்போல் தீயதன்மையும், நச்சுத் தன்மையும், பேய்த் தன்மையும் தோய்ந்த பொருள் இவ்வுலகில் வேறொன்றுமில்லை ~ன்பதை மறந்து விடாதீர்கள். வெறிநாயைத்வண்டும். ...பாம் அவனைக் கண்ட இடத்தில் கொல்லள் மீதும் ... அவன் மீது நீங்கள் பாயாவிட்டால் உங்...ான்" என்...ங்கள் நாட்டின்மீதும் அவன் பாய்ந்துவிடு...கக் கலகம்... கூறுகிறான், போப்பாண்டவருக்கு எதிர...ருத்தவாதிய செய்த லூதர். மதத் தலைவனாகவும் சீர்... மேற்...கவும் விளங்கிய ஒருவன் வாயிலிரு மிகவும் அ...றிய வார்த்தைகள் வெளிவருவது ...மூகாயிருக்கிறதல்லவா! என்று பேசுவ...

ஆகவே, சமத்துவம் சுதந்திரம் ஒழிய பொது ...தெல்லாம் உயர் வகுப்பாருக்கு மட்டுமே...ா? ஒவ்வொரு ச...மக்களுக்கு அல்ல என்று தெரிகிறதல்லவ...றய விலங்கு...காட்டத்திலும் பொதுமக்கள் ஏறக்குறை...கிறார்கள். இ... போலவே வாழ்க்கை நடத்தி வந்திருக்...வாறே இரு... அபிப்பிராயத்திலும் அவர்கள் அவ்... ...ந்து வர

வேண்டும். ஏனெனில், கடவுளின் கட்டளை அதுதான். ரோமாபுரிக்கு விரோதமான பிராடெஸ்டண்டுப் புரட்சிக்குப் பெரும்பாலும் காரணமாயிருந்தது ஜனங்களின் அளவுகடந்த பொருளியல் துன்பம்தான். பிராடெஸ்டண்டுப் புரட்சி அதோடு பொருந்தியதோடு அதை நன்கு பயன்படுத்தியும் கொண்டது. ஆனால், அடிமைகள் அதிக தூரத்துக்குப் போய் தங்கள் அடிமைத் தளையை அறுத்தெறிந்து விடுவார்கள் என்று தோன்றியபோது —இது அவ்வளவு பிரமாதமான விஷயம் ஒன்றுமல்ல— பிராடெஸ்டண்டுத் தலைவர்கள் அவர்களை அடக்கி ஒடுக்கும் தொண்டில் தாங்களும் அரசர்களுடன் சேர்ந்து கொண்டார்கள். பொதுமக்களுக்கு இன்னும் நற்காலம் பிறக்கவில்லை. அது வெகுதூரத்தில் இருந்தது. அப்பொழுது உதயமாகிக்கொண் டிருந்த சகாப்தம் மத்திய வகுப்பார் அல்லது பூர்ஷுவாக்களின் சகாப்தம். 16-வது, 17-வது நூற்றாண்டுகளில் நடைபெற்ற போராட்டங்கள், யுத்தங்...ற்கு ...ழுந்திய ...லாவற்றின் விளைவாகவும் இவ்வகுப்பு... படிப்படியாக முன்னேறி வருவதை நாம் காண்கிறோம்.

பூர்ஷுவாக்கள...ன் இந்த எழுச்சி அதிக வன்மை வாய்ந்திருந்த இட...களிலெல்லாம் பிராடெஸ்டண்டு மதம் பரவியது. பி...ராடெஸ்டண்டுகளுக்குள் பல பிரிவுகளும் உட்பிரிவுகளு...ம் இருந்தன. இங்கிலாந்தில் அரசர் தம்மை மதஸ்தாப...னத்தின் தலைவராகச் செய்து கொண்டு தம்மை ...'மதக்காவலர்' என அழைத்துக் கொண்டார். அங்...ஸ் மதஸ்தாபனம் தன்னிலை இழந்து வெறுமே அரசாங்க...த்தின் ஒரு இலாகாவாக விளங்கியது. அந்நாளிலிருந்து இங்கிலாந்தின் மதஸ்தாபனம் அவ்வாறே இருந்து வருகிறது.

மற்ற நாடுகளில், முக்கியமாக ஜெர்மனி, ஸ்விட்ஸர்

லாந்து, தாழ்நாடுகள் ஆகிய இடங்களில் மற்ற பிரிவுகள் பிரபலமடைந்தன. பூர்ஷுவாக்களின் வளர்ச்சிக்கு ஏற்றதாயிருந்தபடியால் கால்வினியம் எங்கும் பரவியது. மத விஷயங்களில் கால்வின் சிறிதும் சகிப்புத்தன்மை அற்றவனுயிருந்தான். பாஷண்டர்கள் சித்திரவதைக்கும், அக்கினி மரணத்திற்கும் ஆளாளுர்கள். விசுவாசிகள் கண்டிப்பான கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தப்பட்டார்கள். வியாபார விஷயங்களில் கால்வினுடைய போதனை வியாபார-கைத்தொழில் வளர்ச்சிக்கு ஏற்றதாயிருந்தது. ரோமாபுரியின் போதனை அவ்வாறு இல்லை. வியாபாரத்தால் வரும் லாபங்களையும், அதற்கு அவசியமான நாணயத்தையும் கால்வினியம் ஆசிர்வதித்தது. ஆகவே, புதிய பூர்ஷுவா வகுப்பு பழைய மதத்தின் இப்புதிய வியாக்கியானத்தை ஏற்றுக் கொண்டு சுத்தமான மனச்சாட்சியுடன் பணத்தைப் பெருக்கிக்கொண்டே சென்றது. அவர்கள் [illegible]ப் பிரபுக்களுக்கு விரோதமான தல[illegible]பாராட்டங்களில், பொதுமக்களை நன்கு பயன்படுத்திக் கொண்டார்கள். வெற்றி அடைந்த பிறகு அவர்கள் பொதுமக்களுக்காகக் கவலை கொள்ளவில்லை, அல்லது அவர்கள் மீது ஆரோகணித்துக் கொண்டார்கள்.

ஆனுல், பூர்ஷுவாக்களுக்கு இன்னும் வேறு பல தடைகள் இருந்தன. அவர்களுடைய வழியில் இன்னும் அரசர் குறுக்கே நின்று வந்தார். பிரபுக்களோடு போரிடுவதில் அரசர் நகரமாந்தரோடு சேர்ந்து கொண்டார். பிரபுக்களின் பலம் குன்றவும் அரசரின் பலம் முன்னையினும் பெருகியது. அவருக்கு மிஞ்சி ஒருவரும் இருப்பதாகத் தோன்றவில்லை. இதற்குப் பின்புதான் அரசருக்கும் மத்திய வகுப்பாருக்கும் போராட்டம் ஏற்பட்டது.

85

16, 17-வது நூற்ருண்டுகளில் ஐரோப்பாவில் ஐக்கிய யதேச்சாதிகாரம்

ஆகஸ்டு 26, 1932.

நான் மறுபடியும் சோம்பிவிட்டேன். நான் எழுதி ரொம்ப நாளாயிற்று. இங்கு, என்னைக் கேட்பதற்கும் அன்ருட வேலையைச் செய்தேனு என்று பார்ப்பதற்கும் யார் இருக்கிருர்கள்? ஆகவே, அவ்வப்போது எழுதுவதை விடுத்து வேறு வேலைகளில் ஈடுபட்டு விடுகிறேன். நாம் இருவரும் சேர்ந்து இருந்தால் இப்படியிராதல்லவா? ஆனுல், அப்பொழுது எழுத வேண்டிய அவசியம் ஏன் ஏற்படப் போகிறது? நீயும் நானும் தான் நேரிலேயே பேசிக்கொள்ளலாமே?

இதற்கு முந்திய கடிதங்களில் ஐரோப்பாவைப் பற்றி எழுதியிருந்தேன். அப்போது ஐரோப்பா கொந்தளிப்பில் ஆழ்ந்து மாறுதல் அடைந்து வந்ததைக் கண்டோம். 16, 17-ம் நூற்ருண்டுகளில் ஏற்பட்ட பொருளியல் புரட்சி இடைக்காலத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துப் பூர்ஷுவா வகுப்பை உயர்த்தியது. அப்புரட்சியோடு கூடவும், அதற்குப் பின்பும் விளைந்த பெரிய மாறுதல்களைக் குறித்து அக் கடிதங்களில் பேசினேம். சென்ற கடிதத்தில், மேல் ஐரோப்பாவில் கிறிஸ்தவ உலகம் கத்தோலிக், பிராடெஸ்டண்டு என இருகட்சிகளாகப் பிளவுபட்டதைக் கண்டோம். இவ்விரு கட்சிகளின் மதப் போர்களுக்கு ஜெர்மனி பிரதான யுத்த பூமியாக விளங்கியது. ஏனெனில், இருகட்சிகளும் அங்கு ஏறக்குறையச் சமபலம் படைத்திருந்தன. இப்போர்களில் மேல்

ஐரோப்பாவின் மற்ற நாடுகளும் ஓரளவு கலந்துகொண்டிருந்தன. ஐரோப்பாக் கண்டத்தில் நடந்த இம்மதப் போர்களில் இங்கிலாந்து மட்டும் கலந்து கொள்ளவில்லை. எட்டாவது ஹென்ரியின் கீழ், இங்கிலாந்து, அதிக உள்நாட்டுக் குழப்பமின்றி, ரோமாபுரியினின்றும் அறுத்துக் கொண்டது. கத்தோலிக், பிராடெஸ்டண்டு இரண்டுக்கும் இடைப்பட்ட ஒரு மதஸ்தாபனத்தை அது தனக்கென ஸ்தாபித்துக் கொண்டது. ஹென்ரி மதத்தை லட்சியம் செய்பவன் அல்ல. அவனுக்கு வேண்டியதெல்லாம் மதஸ்தாபனத்தின் பூஸ்திதியும் மறுமணம் செய்து கொள்ளும் உரிமையுமே. இரண்டையும் அவன் அடைந்தான். இது வரையில் போப்பாண்டவர் ஐரோப்பிய அரசர்களை ஆட்டிவைத்துக்கொண்டிருந்தார். இப்போது அவர்கள் அதிலிருந்து விடுதலை அடைந்தார்கள். இதுதான் மதச் சீர்திருத்தத்தின் முக்கியமான பலனாகும்.

மறுமலர்ச்சி, மதச்சீர்திருத்தம் ஆகிய இயக்கங்களும் பொருளியல் கொந்தளிப்பும் ஐரோப்பாவின் தோற்றத்தையே மாற்றிக்கொண்டிருந்த காலையில், அதன் அரசியல் நிலைமை எவ்வாறு இருந்தது? 16-வது 17-வது நூற்றாண்டுகளில் ஐரோப்பாவின் படம் எவ்வாறு இருந்தது? கடந்த 200 ஆண்டுகளில் அது அடிக்கடி மாறிவந்திருக்கிறது. 16-வது நூற்றாண்டின் ஆரம்பத்தில் அது எவ்வாறு இருந்தது என்று பார்ப்போம்.

தென்கிழக்கில், கான்ஸ்டாண்டிநோபிள் துருக்கியர் வசம் இருக்கிறது. அவர்களுடைய சாம்ராஜ்யம் ஹங்கேரிக்குள்ளும் வியாபித்திருக்கிறது. தென்மேற்கு மூலையில், ஸ்பெயினை ஜெயித்த அரேபியரின் சந்ததியாராகிய முஸ்லிம் சாரசெனியர் கிரானடாவிலிருந்து

ஓட்டப்பட்டு விட்டனர். பர்டினண்ட்—இசபெல்லா கூட்டு ஆட்சியில் ஸ்பெயின் ஒரு கிறிஸ்தவ வல்லரசாகக் காட்சி அளிக்கிறது. ஸ்பெயினில் கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே பல நூற்றாண்டுகளாக நிகழ்ந்து வந்த போராட்டம் காரணமாக ஸ்பானியர் கத்தோலிக்க மதத்தை ஆர்வத்துடனும் பிடிவாதத்துடனும் பற்றிக்கொள்ளுகிறார்கள். ஸ்பெயினில்தான் பயங்கரமான மதவிசாரணை சபை ஸ்தாபிக்கப்படுகிறது. அமெரிக்காவைக் கண்டு பிடித்த மகிமை காரணமாகவும், அதனால் கிடைக்கும் பெருந்தனம் காரணமாகவும் ஸ்பெயின் ஐரோப்பிய அரசியலில் முதன்மை ஸ்தானம் வகிக்க ஆரம்பிக்கிறது.

மீண்டும் படத்தைப் பார். இங்கிலாந்தும், பிரான்சும் ஏறக்குறைய இப்போதிருப்பது போலவே காணப்படுகின்றன. படத்தின் நடுவில் பரிசுத்த ரோம சாம்ராஜ்யம் இருக்கிறது. அது ஏறக்குறைய சுதந்திரமுள்ள பல ஜெர்மானிய ராஜ்யங்களாகப் பிரிந்திருக்கிறது. அரசன், கோமகன், மதகுரு, தேர்வு—இளவரசன் போன்ற பலரால் ஆளப்பட்ட பல சிறு சிறு ராஜ்யங்களின் விசித்திரமான சேர்க்கையாகும் அது. விசேஷ உரிமைகள் உள்ள பல நகரங்களும் இருக்கின்றன. வடபாகத்திலுள்ள பெரிய வியாபார நகரங்களெல்லாம் ஒரு கூட்டு அரசியலில் சேர்ந்துள்ளன. ஸ்விட்சர்லாந்து குடியரசாக இருக்கிறது. அது உண்மையில் சுதந்திரமானது. ஆனால், பெயரளவில் இன்னும் அவ்வாறு அங்கீகரிக்கப்படவில்லை. வெனிஸ் குடியரசும், வட இதாலியைச் சேர்ந்த வேறு பல நகரக் குடியரசுகளும் உள்ளன. போப்பாண்டவருக்குச் சொந்தமான ரோமாபுரியைச் சுற்றியுள்ள பிரதேசம் போப்பாண்டவர் நாடுகள் என வழங்குகிறது. அதற்குத் தெற்கே நேபிள்

சையும், சிசிலியையும் கொண்ட ராஜ்யம் இருக்கிறது. கிழக்கே சாம்ராஜ்யத்துக்கும் ருஷியாவுக்கும் மத்தியில் போலந்தும் ஹங்கேரியும் இருக்கின்றன. ஹங்கேரியின் மீது உதுமானியத் துருக்கியரின் நிழல் விழுகிறது. இவற்றிற்கும் கிழக்கே ருஷியா இருக்கிறது. பொன்னிறக் கூட்டத்தாராகிய மங்கோலியரைத் தொலைத்த பின்பு அது ஒரு பலம் பொருந்திய ராஜ்யமாக வளர்ந்து வருகிறது. வடக்கிலும் மேற்கிலும் வேறு சில நாடுகள் உள்ளன.

16-வது நூற்றாண்டில் ஐரோப்பா மேற்கூறியவாறு இருந்தது. 1520-ல் ஐந்தாவது சார்லஸ் சக்கரவர்த்தி ஆனான். அவன் ஹாப்ஸ்பர்க் வமிசத்தைச் சேர்ந்தவன். ஸ்பெயின், நேபிள்ஸ்-சிசிலி, தாழ்நாடுகள் (ஹாலந்து-பெல்ஜியம்) ஆகியவை அவனுக்குப் பிதிரார்ஜிதமாகக் கிடைத்த விதத்தை முன்பே கண்டோம். சில அரச குடும்பத்துக் கலியாணங்கள் மூலம் ஐரோப்பாவில் தேசங்கள், ஜனசமூகங்கள் பூராவுக்கும் எவ்வாறு எஜமானர்கள் மாறிவிடுகிறார்கள் என்பதைப் பார்க்கும் போது வேடிக்கையாக யிருக்கிறது. லட்சக்கணக்கான ஜனங்களும், பெரிய தேசங்களும் ஒருவனுக்கு வாரிசு பாத்தியதை காரணமாகக் கிடைத்து விடுகின்றன. சில சமயம், அவை சீதனமாகவும் கிடைக்கின்றன. இங்கிலாந்தின் அரசன் இரண்டாவது சார்லஸ் போர்ச்சுகலில் பிரகான்சாவைச் சேர்ந்த காதரின் என்பவளை மணந்து கொண்டான். அவள் அவனுக்குப் பம்பாய் தீவைச் சீதனமாகக் கொண்டு வந்தாள். முன்யோசனையுடன் சில கலியாணங்களை ஏற்பாடு செய்து ஹாப்ஸ்பர்க் வமிசம் பெரிய சாம்ராஜ்யத்தைச் சம்பாதித்துக் கொண்டது. சார்லஸ் அதற்குத் தலைவனானான். அவன் மிகவும் சாதாரணமானவன். அவன் சரியான சாப்பாட்டு

ராமன். அவனுடைய சிறப்பு அதுதான். ஆனால், அவனுடைய பெரிய சாம்ராஜ்யம் ஐரோப்பாவில் அவனை ரொம்பவும் பெரிய மனுஷனாக்கிவிட்டது.

சார்லஸ் சக்கரவர்த்தியான ஆண்டிலேயே சுலேமானும் உதுமானிய சாம்ராஜ்யத்துக்குச் சக்கரவர்த்தி ஆனான். அவனுடைய ஆட்சியில் சாம்ராஜ்யம் எல்லா திசைகளிலும், முக்கியமாகக் கீழ் ஐரோப்பாவில், விரிவடைந்தது. வியன்னாவின் வாயில் வரையில் துருக்கியர் வந்துவிட்டார்கள். ஆனால், அந்த அழகிய பழைய நகரைப் பிடிக்கத் தவறி விட்டார்கள். எனினும், அவர்களைக் கண்டு ஹாப்ஸ்பர்க் சக்கரவர்த்தி பயந்து போனான். அவன் சுலேமானுக்குக் கப்பம் செலுத்தி அவனை வசப்படுத்தி விடுவதுதான் சிறந்த வழி என்று கருதினான். பரிசுத்த ரோம சாம்ராஜ்யத்தின் பெரிய சக்கரவர்த்தி துருக்கி சுல்தானுக்குக் கப்பம் கட்டுவதென்றால், அதை எண்ணிப் பார்! சுலேமான், ஆலீஷான் (ராஜகெம்பீர) சுலேமான் என்று அழைக்கப்படுகிறான். அவன் சக்கரவர்த்தி என்னும் பட்டத்தையும் தானே தரித்துக் கொண்டான். ஏனெனில், அவன் தன்னைக் கீழ் பைஜாண்டிய சீசர்களின் பிரதிநிதியாகக் கருதினான்.

சுலேமான் காலத்தில் கான்ஸ்டாண்டிநோபிளில் பல அழகிய மசூதிகள் கட்டப்பட்டன. இதாலியில் தோன்றிய கலை மறுமலர்ச்சியைப் போல் கீழ்நாடுகளிலும் அத்தகைய மறுமலர்ச்சி ஒன்று தோன்றுகிறது. கலை முயற்சி கான்ஸ்டாண்டிநோபிளோடு நின்று விடவில்லை. பாரசீகத்திலும், மத்திய ஆசியாவில் கொராசானிலும் சித்திரக்கலை சிறப்பெய்துகிறது.

இந்தியாவில் மொகலாயனான பாபர் வடமேற்கிலிருந்து வந்து ஒரு புதிய ராஜவமிசம் ஸ்தாபிப்பதைக் கண்டோம். 1526-ல், இது நிகழ்ந்த காலையில் ஐந்தாவது

சார்லஸ் ஐரோப்பாவில் சக்கரவர்த்தியாக இருந்தான். சுலேமான் கான்ஸ்டாண்டி நோபிளில் அரசு செலுத்தி வந்தான். பாபரைப் பற்றியும் ஒளி பொருந்திய அவனுடைய சந்ததியாரைப் பற்றியும் நான் சொல்ல வேண்டியது நிறைய இருக்கிறது. இந்த இடத்தில், பாபரே ஒரு 'மறுமலர்ச்சி' வகையைச் சேர்ந்த அரசன் என்பதை மட்டும் நீ கவனிக்க வேண்டும். ஆனால், அக்காலத்திய ஐரோப்பிய மறுமலர்ச்சி மன்னர்களைவிட அவன் மிகவும் மேலானவனுயிருக்கிறுன். அவன் ஒரு சாகசக்காரன்தான்; ஆனுல், சுத்தவீரன். கலை, இலக்கியம் என்றுல் அவனுக்கு உயிர். இதாலியிலுந்தான் அக்காலத்தில் சாகசிகளான அரசர்கள் இருந்தார்கள். அவர்களுந்தான் கலையையும் இலக்கியத்தையும் போற்றி வளர்த்தார்கள். அவர்களுடைய சிறிய ராஜ தர்பார்களும் மேற்பார்வைக்குப் பிரகாசமாயிருந்தன. பிளாரென்ஸைச் சேர்ந்த மெடிசி குடும்பத்தாரும் போர்ஜியா குடும்பத்தாரும் அக்காலத்தில் பிரபலமாயிருந்தார்கள். மேற்கூறிய இதாலிய அரசர்களும் வேறு பல ஐரோப்பிய அரசர்களும் மெக்கியவெல்லியின் உண்மையான சீடர்களாயிருந்தார்கள். அவர்கள் வைத்ததுதான் சட்டம்; பழிபாவத்துக்கு அஞ்சமாட்டார்கள்; சூது வாதில் தேர்ந்தவர்கள்; விஷத்தைக் கொடுத்தேனும், வஞ்சனை புரிந்தேனும், அதருமவழியில் எதிரிகளைக் கொன்றுவிடுவார்கள். இந்த கயவர் கூட்டத்தைச் சுத்த வீரனுன பாபரோடு ஒப்பிடுவது பொருந்தாது. எப்படியென்றுல், அவர்களுடைய சின்ன தர்பார்களை, டில்லியில் அல்லது ஆக்ராவில் விளங்கிய அக்பர், ஷாஜஹான் போன்ற மொகலாய சக்கரவர்த்திகளின் தர்பாரோடு ஒப்பிடுவது பொருந்தாததைப் போல. இந்த மொகலாய தர்பார்கள் மகா அற்பு

யிருந்தன என்று சொல்லுகிறுர்கள். செல்வப் பெருமையிலும் ஒளிச் சிறப்பிலும் உலகிலேயே அவை ஒப்புயர்வற்று விளங்குகின்றன என்று சொல்லலாம்.

நம்மை அறியாமலே நாம் ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்கு வந்துவிட்டோம். ஐரோப்பிய மறுமலர்ச்சிக் காலத்தில் இந்தியாவிலும் பிற இடங்களிலும் நிகழ்ந்து வந்ததை நீ உணர வேண்டுமென்பது என் விருப்பம். அப்போது துருக்கியும், பாரசீகமும், மத்திய ஆசியாவும், இந்தியாவும் கலாசிருஷ்டியில் முனைந்திருந்தன. சீனு அப்போது மிங் மன்னர்களின் ஆட்சியில் இருந்தது. தேசம் அமைதியும் செழிப்பும் பெற்றுப் பொலிந்தது. கலாசிருஷ்டி மகோன்னத நிலையை அடைந்திருந்தது. மறுமலர்ச்சிக் காலத்தில் மலர்ந்த கலையெல்லாம் பெரும்பாலும் அரண்மனைக் கலையே ஒழிய ஜனங்களின் கலை அல்ல. சீனுவை இதற்கு விலக்காகக் கூறலாம். இதாலியில், நான் கூறிய அம் மகா கலைஞர்கள் மறைந்த பிறகு, மறுமலர்ச்சியின் பிற்காலத்தில் தோன்றிய கலை அற்பமாகவும் சாமானியமாகவும் ஆய்விட்டது.

16-வது நூற்றுண்டில் ஐரோப்பாவைக் கத்தோலிக்க அரசர்களும் பிராடெஸ்டண்டு அரசர்களும் தங்களுக்குள் பகிர்ந்து ஆண்டு வந்தார்கள் என்று பார்த்தோம். அக்காலத்தில் அரசர்கள் முக்கியமாக விளங்கினுர்களே ஒழிய, ஜனங்கள் அல்ல. இதாலி, ஆஸ்திரியா, பிரான்சு, ஸ்பெயின் ஆகியவை கத்தோலிக்க நாடுகளாயிருந்தன. ஜெர்மனியில் பாதி கத்தோலிக்காகவும் பாதி பிராடெஸ்டண்டு ஆகவும் இருந்தது. இங்கிலாந்து பிராடெஸ்டண்டு நாடாகயிருந்தது. காரணம், அதன் அரசன் அவ்வாறு இருந்ததுதான். இங்கிலாந்து பிராடெஸ்டண்டாக இருந்த காரணம் ஒன்றே, அது ஜெயிக்கவும் நசுக்கவும் முயன்று வந்த

அயர்லாந்து கத்தோலிக்காக இருப்பதற்குப் போதுமானதாயிருந்தது. ஆனால், ஜனங்களின் மதம் ஒரு பொருட்டாகக் கருதப்படவில்லை என்பது அவ்வளவு சரியல்ல. முடிவில் ஒரு பொருட்டாக நின்றது அதுதான். அதனால் எத்தனையோ போர்களும் புரட்சிகளும் விளைந்தன. அரசியல், பொருளியல் விஷயங்களிலிருந்து மத சம்பந்தமான அம்சத்தைப் பிரித்தெடுப்பது கடினம். புதிய வியாபார வகுப்பின் பலம் வளர்ந்து வந்த இடங்களில் தான் ரோமாபுரிக்கு எதிரான பிராடெஸ்டண்டுப் புரட்சி விசேஷமாக நிகழ்ந்தது என்று முன்பே கூறியுள்ளேன். இதிலிருந்து மதத்துக்கும் வியாபாரத்துக்கும் உள்ள சம்பந்தம் நன்கு விளங்குகிறதல்லவா? பல அரசர்கள் மதச் சீர்திருத்தத்தைக் கண்டு அஞ்சினார்கள். ஏனெனில், மதச்சீர்திருத்தப் போர்வையில் ஜனப் புரட்சி ஏற்பட்டுத் தங்களுடைய அதிகாரமே கவிழ்ந்து போகலாம் என்று அவர்கள் எண்ணினார்கள். இன்று, போப்பாண்டவரின் மத அதிகாரத்தை எதிர்ப்பவன், நாளை அரசனின் அரசியல் அதிகாரத்தை எதிர்க்கமாட்டான் என்று எப்படிச் சொல்லமுடியும்? அதையுந்தான் செய்வான். அரசர்களுக்கு இது அபாயத்தை விளைப்பதாயிருந்தது. அரசர்கள் ஆளுவதற்குத் தெய்வீக உரிமை படைத்திருக்கிறார்கள் என்னும் கொள்கையை அவர்கள் இன்னும் விடாப்பிடியாகப் பற்றிக்கொண்டிருந்தார்கள். பிராடெஸ்டண்டு அரசர்கள் கூட இதை விட்டுவிடத் தயாராயில்லை.

ஆக, மதச்சீர்திருத்த இயக்கக் கொள்கைகள் மக[illegible]ளிடையே பரவியிருந்தும், ஐரோப்பாவில் அரசர்க[illegible] சர்வ வல்லமை வாய்ந்தவர்களா யிருந்தார்கள். இ[illegible] முன் எந்தக் காலத்திலும் அவர்கள் இவ்வளவு யதே[illegible]யாக ஆண்டதில்லை. முன்காலத்தில் பெரிய நிலமா[illegible]

பிரபுக்கள் அரசர்களை ஒரு வரம்புக்குள் வைத்திருந்ததோடு அவர்களுடைய அதிகாரத்தைப் பெரும்பாலும் எதிர்த்தும் வந்தார்கள். இந்தப் பிரபுக்களைக் காண வியாபாரிகளுக்கும் பூர்ஷுவாக்களுக்கும் பிடிக்கவில்லை; அரசனுக்கும் பிடிக்கவில்லை. ஆகவே, வியாபாரிகளின் துணைகொண்டும் குடியானவர்களின் துணைகொண்டும் அரசன் பிரபுக்களை ஒடுக்கி, தான் சர்வ வல்லவன் ஆய்விட்டான். பூர்ஷுவாக்கள் பலமும் சக்தியும் உடையவர்களாயிருந்தார்கள். ஆனால், அரசனை ஒரு எல்லைக்குள் நிறுத்தக் கூடிய பலம் அவர்களுக்கு இல்லை. ஆனால், அவர்கள் சீக்கிரமே அரசனுடைய பல செய்கைகளை ஆட்சேபிக்க ஆரம்பித்தார்கள். முக்கியமாக, அதிக வரிவிதிப்பதையும், அடிக்கடி வரி விதிப்பதையும், மதத்தில் தலையிடுவதையும் அவர்கள் ஆட்சேபித்தார்கள். அரசனுக்கு இது முற்றிலும் பிடிக்கவில்லை. தான் ஒன்றைச் செய்வயே மற்றவர்கள் அதை ஆட்சேபிப்பதா? அவ்வளவு கொழுப்பு அவர்களுக்கு எங்கிருந்து வந்தது? ஆகவே, அவன் அவர்களுக்குச் சிறைத்தண்டனையும், வேறுவிதமான தண்டனைகளும் அளித்தான். இந்தச் சிறைத்தண்டனை அரசன் தன்னிச்சையாக அளிப்பது. நியாயமோ, விசாரணையோ ஒன்றும் கிடையாது. இன்று, பிரிட்டிஷ் அரசாங்கத்துக்குப் பணிய மறுப்பதால் இந்தியாவில் நம்மைச் சிறையில் அடைக்கிறார்களே, அது போல. அரசன் வியாபாரத்திலும் தலையிட்டான். இவ்வாறாக, நிலைமை முற்றிக்கொண்டே வந்தது. அரசனுக்கு விரோதமான எதிர்ப்பும் வளர்ந்து வந்தது. அரசர்களுடைய யதேச்சாதிகாரத்தை எதிர்த்துத் தாங்கள் அதிகாரத்தை அடைவதற்குப் பூர்ஷுவாக்கள் நடத்திய போராட்டம் பல நூறு வருஷங்கள் வரையில், அதாவது சமீப காலம் வரையில் நடைபெற்றது. பல அரசர்கள்

தங்களுடைய தலைகளை இழந்த பின்பே அரசரின் தெய்வீக உரிமைக் கொள்கை முடிவாகக் குழி தோண்டிப் புதைக்கப்பட்டது; அரசர்களும் தங்களுக்குரிய ஸ்தானங்களில் வைக்கப்பட்டார்கள். இவ்வெற்றி சில நாடுகளில் சற்று முன்னேயும் வேறு சில நாடுகளில் சற்று பின்னேயும் ஏற்பட்டது. அடுத்து வரும் கடிதங்களில் இப்போராட்டத்தின் போக்கைக் காண்போம்.

16-ம் நூற்றுண்டில் ஐரோப்பா வெங்கும் அரசன் வைத்ததுதான் சட்டம். ஆனால், பூராவும் அப்படி யிருந்தது என்று சொல்வதற்கில்லை. ஸ்விட்சர்லாந்தின் மலைகளில் வாழ்ந்து வந்த ஏழைக் குடியானவர்கள் 'ஆணைப்பட்ட' ஹாப்ஸ்பர்க் சக்கரவர்த்தியையே எதிர்த்துச் சுதந்திரம் அடைந்த கதையை நீ மறந்திருக்க மாட்டாய். ஆகவே, 'அரசரின் யதேச்சாதிகார ஆட்சி' என்னும் ஐரோப்பியக் கடலில் குடியானவர் குடியரசாகிய குட்டி ஸ்விட்சர்லாந்து ஒரு தீவைப் போல் இலங்கியது. அங்கே அரசர்களுக்கு இடமில்லை.

விரைவில், தாழ்நாடுகளில் நிலைமை நெருக்கடியாகி விட்டது. அங்குள்ள மக்கள் அரசியல், மத சுதந்திரங்களுக்காகப் போராடி வெற்றியும் பெற்றார்கள். அச் சிறிய நாடு ஐரோப்பாவில் அக்காலத்தில் மிகப் பெரிய வல்லரசாக விளங்கிய ஸ்பெயினோடு அற்புதமாகப் போராடியது. இவ்வாறு, தாழ்நாடுகள் ஐரோப்பாவுக்கு வழி காட்டியாக விளங்கின. அதற்குப் பின்பு இங்கிலாந்தில் பொதுஜன சுதந்திரத்துக்காகப் போராட்டம் நிகழ்ந்தது. அதில் ஒரு அரசன் தன் தலையை இழந்தான்; அந் நாட்டுப் பார்லிமெண்டு வெற்றியை அடைந்தது. ஆகவே, யதேச்சாதிகாரத்தை எதிர்த்த பூர்ஷுவாப் போராட்டத்தில் தாழ்நாடுகளும், இங்கிலாந்தும் முன்னணியில் நின்றன. அந்நாடுகளில் பூர்ஷுவாக்கள் வெற்றி

பெற்றதால் அவை புதிய நிலைமைகளைப் பயன்படுத்திக் கொண்டு மற்ற நாடுகளைவிட முன்னேறிச் சென்றன. இரு நாடுகளும் பலம் பொருந்திய கப்பற்படைகளைக் கட்டின; இரண்டும் தூரதேசங்களுடன் வியாபாரத்தை விருத்தி செய்தன; இரண்டும் ஆசியாவில் சாம்ராஜ்யத்துக்கு அஸ்திவார மிட்டன.

நான் இது வரையில் இங்கிலாந்தைப் பற்றி இக் கடிதங்களில் அதிகமாகப் பேசவில்லை. அது ஐரோப்பாவில் அவ்வளவு முக்கிய தேசமாக இல்லை. ஆகவே, அதைப் பற்றிச் சொல்லுவதற்கு அதிகமாக ஒன்றுமில்லை. ஆனால், இப்போது ஒரு மாறுதல் ஏற்படுகிறது. அதன் பயனாக இங்கிலாந்து விரைவில் முன்னேறுவதைக் காண்கிறோம். மாக்னகார்டாவைப் பற்றியும், பார்லிமெண்டின் ஆரம்ப தசையைப் பற்றியும், குடியானவர் குழப்பங்களைப் பற்றியும், பிரபு வமிசங்களுக்கிடையே நிகழ்ந்த உள்நாட்டுப் போர்களைப் பற்றியும் முன்பே கூறியுள்ளேன். அப்போர்களில் அரசர்கள் தங்களுக்கு ஆகாதவர்களை வஞ்சனையாற் கொல்வது சர்வசாதாரணமா யிருந்தது. பல நிலமானியப் பிரபுக்கள் சண்டையில் மாண்டார்கள். அதனால் அவர்களுடைய வகுப்பு வலியிழந்து விட்டது. ஒரு புதிய வமிசம்— டியூடர் வமிசம் என இது அழைக்கப்படுகிறது— சிம்மாசனத்திற்கு வந்தது. அவ் வமிசத்தில் வந்த அரசர்கள் யதேச்சாதிகாரத்துக்குப் பேர்போனவர்கள். எட்டாவது ஹென்றியும் அவனுடைய பெண்ணான எலிசபெத் ராணியும் டியூடர் வமிசத்தைச் சேர்ந்தவர்களே யாவர்.

சக்கரவர்த்தி ஐந்தாவது சார்லஸின் காலத்துக்குப் பிறகு சாம்ராஜ்யம் பிளவுபட்டது. அவனுடைய பிள்ளையான இரண்டாவது பிலிப்புக்கு ஸ்பெயினும் தாழ்நாடுகளும் கிடைத்தன. அக்காலத்தில் ஸ்பெயினான்

VI N48 113509

ஐரோப்பாவிலேயே மிக்க வல்லமை பொருந்திய முடியரசாக இருந்தது. பெருவும் மெக்சிகோவும் அதற்குச் சொந்தமாயிருந்தன. அமெரிக்காவின் தங்கம் ஸ்பெயினில் மலைமலையாக வந்து குவிந்துகொண்டிருந்தது. கொலம்பஸ், கோர்டேஸ், பிசாரோ முதலிய தீரர்களைப் படைத்திருந்தும் ஸ்பெயின் புதிய நிலைமைகளால் பயன் பெறவில்லை. அதற்கு வியாபாரத்தில் நோக்கம் செல்லவில்லை. 'மதம், மதம்' என்று அது மதவெறி கொண்டு அலைந்தது. அது அவலம்பித்த மதத்தில் மூடப்பிடிவாதமும் மூர்க்கத்தனமும் நிறைந்திருந்தன. தேசமெங்கும், மதவிசாரணை சபையின் பேச்சுக்கு மறு பேச்சு கிடையாது. 'பாஷண்டர்' எனப்பட்டோரை அது பயங்கரமான சித்திரவதைக்கு உள்ளாக்கியது. அடிக்கடி பெரிய பொதுத் திருவிழாக்கள் நடைபெறும். அப்போது ஆண்களும் பெண்களுமான 'பாஷண்டர்களைப்' பெரிய சிதைகளின் மீது கிடத்திக் கூட்டம்கூட்டமாக உயிரோடு எரித்துக் கொல்வார்கள். இந்தக் கோரவதையானது அரசர், அரச குடும்பத்தார், அரசாங்கத் தூதர்கள், ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஆகிய இத்தனை பேருடைய முன்னிலையில் நடைபெறும். இதற்கு 'மதபலி' என்று பெயர். என்ன கோரம்! என்ன ராக்ஷசத்தனம்! அக்கால ஐரோப்பிய சரித்திரம் பூராவும் பயங்கரமான பலாத்காரமும், கொடிய காட்டுமிராண்டித்தனமும், மூர்க்கத்தனமான மதாவேசமும் நிறைந்ததாயிருக்கின்றன. அவற்றைப் பற்றிக் கேட்கும்போது நம் காதுகளையே நம்ப முடியவில்லை.

ஸ்பானிய சாம்ராஜ்யம் அதிக நாள் நீடிக்கவில்லை சிறிய ஹாலந்தின் பெரிய போராட்டம் அதை ஆ வைத்து விட்டது. இதற்குச் சிறிது காலம் கடு 1588-ல், இங்கிலாந்தை வெல்வதற்கு அது செய்த மு

படுதோல்வியில் முடிந்தது. ஸ்பானியத் துருப்புக்களை ஏற்றிக் கொண்டு சென்ற 'வெலற்கரிய கடற்படை' இங்கிலாந்தைச் சென்று சேரவும் இல்லை. அது சமுத்திரத்திலேயே மூழ்கி அழிந்து விட்டது. அதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. அக் கடற்படைத் தலைவன் ஒரு அப்பாவி. அவனுக்குக் கடலைப் பற்றியோ, கப்பலைப் பற்றியோ ஒன்றும் தெரியாது. புறப்படு முன்பே அவன் அரசனான இரண்டாவது பிலிப்பிடம் சென்று 'மகாராஜா! அடியேனை இந்தக் கடமையிலிருந்து விடுவிக்க வேண்டும். நான் தேர்ந்த மீகாமன் அல்ல. கடற்போர் முறைகளும் அடியோடு எனக்குத் தெரியாது' என்று பணிவுடன் விண்ணப்பித்துக் கொண்டானாம். ஆனால், அரசனோ, 'கடவுளே நமது கடற்படையை முன்னின்று நடத்தி வைப்பார். நீ போ. அஞ்சாதே' என்று அவனுக்கு மறுமொழி பகர்ந்தானாம்.

ஆக, ஸ்பானிய சாம்ராஜ்யம் சிறிது சிறிதாக மறைந்துவிட்டது. ஐந்தாவது சார்லஸ் ஆண்ட காலத்தில் 'அவனுடைய சாம்ராஜ்யத்தில் சூரியன் அஸ்தமிப்பதில்லை' என்று சொன்னார்கள். இதே வசனத்தை, இன்று ஆதிக்கம் செலுத்தும் அகம்பாவம் பிடித்த ஒரு சாம்ராஜ்யத்தைப் பற்றிப் பலர் பிதற்றிக் கொண்டு திரிகிறார்கள்!

86

தாழ்நாடுகளின் சுதந்திரப் போராட்டம்

ஆகஸ்டு 27, 1932.

16-வது நூற்றாண்டில், அநேகமாக ஐரோப்பாவெங்கும் அரசர்கள் ஒப்பற்றவர்களாக உயர்ந்த வரலாற்றைச் சென்ற கடிதத்தில் கூறினேன். இங்கிலாந்தில் டியூடர் வமிசமும், ஸ்பெயினிலும் ஆஸ்திரியாவிலும் ஹாப்ஸ்பர்க் வமிசமும் ஆட்சி புரிகின்றன. ருஷியாவிலும், ஜெர்மனியின் பெரும் பகுதியிலும், இதாலியிலும் யதேச்சாதிகார மன்னர்கள் ஆளுகிறார்கள். முழு ராஜ்யத்தையும் தன்னுடைய சொந்தச் சொத்தாகக் கருதி ஒரு அரசன் ஆளும் ஆளுகைக்குச் சிறந்த உதாரணமாகப் பிரான்சு விளங்கி[illegible]தெனலாம். கார்டினல் ரிஷ்லூ என்னும் சிறந்த மதியூகி மந்திரி பிரான்சையும் அதன் முடியரசையும் பலப்படுத்தப் பெரிதும் உதவினான். ஜெர்மனியின் பலவீனமே தன்னுடைய பலமும் பாதுகாப்பும் என்று பிரான்சு எப்போதுமே எண்ணி வந்திருக்கிறது. ஆகவே, பெரிய கத்தோலிக்க மத போதகனும், பிரான்சில் கருணையின்றிப் பிராடெஸ்டண்டுகளை நெருக்கி மிதித்தவனுமாகிய ரிஷ்லூ, ஜெர்மனியில் மட்டும் பிராடெஸ்டண்டுகளுக்கு ஊக்கம் அளித்து வந்தான். ஜெர்மனியில் பரஸ்பர விரோதமும் போராட்டமும் ஏற்பட்டு அது பலவீனம் அடைய வேண்டுமென்பது அவனுடைய நோக்கம். அ[illegible] நோக்கம் பூர்ண பலிதம் அடைந்தது. ஜெர்மனியி[illegible] கிரமான உள்நாட்டுப் போர் உண்டாகி அதை அ[illegible] விட்டது என்பதை விரைவில் காண்போம்.

பிரான்சிலும், 17-வது நூற்றாண்டின் இல[illegible] உள்நாட்டுப் போர் உண்டாயிற்று. அது பிர[illegible]

யுத்தம் என அழைக்கப்படுகிறது. அதில் பிரபுக்கள் வியாபாரிகள் ஆகிய இரு திறத்தாரையும் அரசன் ஒடுக்கிவிட்டான். பிரபுக்களுக்கு யாதொரு செல்வாக்கும் இல்லாதொழிந்தது. ஆயினும், அவர்களைத் தன் பக்கலில் இருத்திக் கொள்வதற்காக அரசன் அவர்களுக்கு அளவற்ற சலுகைகள் வழங்கினான். அவர்கள் யாதொரு வரியும் செலுத்த வேண்டியதில்லை. கிறிஸ்தவ குருக்கள்மாரும் அவ்வாறே. வரிச்சுமை முழுதும் சாமானிய ஜனங்களின் மீது, அதிலும் விசேஷமாகக் குடியானவர்கள் மீது விழுந்தது. இவ்வேழை பாழைகளை வருத்தி வாங்கிய வரிப்பணத்தைக் கொண்டு அரசன் பெரிய பெரிய அரண்மனைகளையும், சிங்காரமான ஒரு ராஜதர்பாரையும் அமைத்துக் கொண்டான். பாரிசுக்கு அருகிலுள்ள வார்சேல்சுக்கு நாம் சென்றது உனக்கு நினைவு இருக்கிறதா? இப்போது நாம் காணச் செல்லும் அங்குள்ள அப்பெரிய அரண்மனைகள் 17-வது நூற்றாண்டில் வாழ்ந்த ஏழைப் பிரெஞ்சுக் குடியானவர்களின் ரத்தத்திலிருந்து எழுந்தனவாகும். வார்சேல்ஸ் பொறுப்பற்ற, யதேச்சாதிகார முடியரசின் சின்னமாக இருந்தது. ஆகவே, எல்லா முடியரசுகளையும் முடிவுக்குக் கொண்டு வந்த பிரெஞ்சுப் புரட்சிக்கு வார்சேல்ஸ் வழி காட்டியதில் யாதொரு ஆச்சரியமும் இல்லை. ஆனால், நாம் பேசுகிற காலத்துக்கும் புரட்சிக்கும் வெகு தூரம் இருந்தது. அப்போது பதினாலாவது லூயி அரசு புரிந்து வந்தான். அவன் 'பேரரசன்' என்று அழைக்கப்பட்டான். 'அவனுடைய ராஜதர்பார் சூரிய மண்டலமாகவும் அவன் சூரியனாகவும், அவனுடைய தர்பாரில் உள்ளவர்கள் அவனைச் சுற்றி வரும் கிரகங்களாகவும்' கருதப்பட்டது. அவன் ஒன்றல்ல, இரண்டல்ல, எழுபத்திரண்டாண்டுகள் அரசு புரிந்தான். அதாவது **1643**-லிருந்து **1715**-

வரையில். அவனுக்குப் பிரதம மந்திரியாயிருந்தவன் இன்னொரு பெரிய கார்டினல். அவனுடைய பெயர் மாஜிரின் என்பது. உயர்வகுப்பார் ஆடம்பரப் பெரு வாழ்வு வாழ்ந்து வந்தார்கள். இலக்கியமும், கலையும், விஞ்ஞானமும் அரசனால் ஆதரிக்கப் பெற்றன. மேல் மினுக்கு என்கிற மெல்லிய போர்வையின் கீழ் பொறுக்க முடியாத துன்பம் நிறைந்திருந்தது. அழகிய டோப்பா மயிராலும், லேஸ் வேலை செய்த கைச் சட்டையாலும், நேர்த்தியான ஆடையாபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்ட, ஆனால், அழுக்கும் மலமும் நிறைந்து உள்ளே துர் நாற்றம் வீசும் ஒரு உடலுக்கு அவ்வுலகை ஒப்பாகக் கூறலாம்.

ஆடம்பரமான விருதுகள், சின்னங்கள் என்றால் நாம் எல்லோருமே மயங்கி விடுகிறோம். 14-வது லூயி தன்னுடைய நீண்ட ஆட்சியில் ஐரோப்பாவைப் பெரிதும் கவர்ந்ததில் யாதொரு ஆச்சரியமும் இல்லை. அரசர்களுக்கெல்லாம் ஓர் இலக்கியமாக அவன் விளங்கினான். மற்ற அரசர்கள் அவனைப் பார்த்துத் தங்களை அமைத்துக் கொண்டார்கள். ஆனால், இந்தப் ‘பேரரசன்’ எப்பேர்ப்பட்டவன்? பிரபல ஆங்கில ஆசிரியனாகிய கார்லைல் என்பான் கூறுகிறான்: “லூயி, லூயி என்று கொண்டாடுகிறீர்களே, அந்த லூயியின் அரச உடையைக் களைந்து விட்டுப் பாருங்கள். அங்கே, விசித்திரமான மண்டையோடு கூடிய, கால் முளைத்த ஒரு சிவப்பு முள்ளங்கியைத் தவிர வேறு எதையும் காணமாட்டீர்கள்.” இது மிகவும் கடுமையான வருணனையாகும். இது அரசர், சாமானியர் அனைவருக்கும் பொருந்தக் கூடியதே.

14-வது லூயி நம்மை 1715-ம் ஆண்டுக்கு, அதாவது, 18-ம் நூற்றாண்டின் ஆரம்பத்துக்குக் கொண்டு

செல்கிறான். இதற்கிடையில் மற்ற ஐரோப்பிய நாடுகளில் எத்தனையோ சம்பவங்கள் நிகழ்ந்து விட்டன. அவற்றில் சிலவற்றை நாம் கவனிக்கவேண்டும்.

தாழ் நாடுகள் ஸ்பெயினை எதிர்த்துப் போரிட்ட விஷயத்தை நான் முன்பே கூறியுள்ளேன். அவ் வீரப் போராட்டத்தின் கதையை நாம் சற்று ஆழ்ந்து கவனிக்க வேண்டும். ஜே. எல். மாட்லி என்னும் அமெரிக்கர் அச்சுதந்திரப் போராட்டத்தைப் பற்றிப் பேர் பெற்ற நூல் ஒன்றை எழுதியிருக்கிறார். அந் நூல் மிகவும் அற்புதமானது, நம் சிந்தையைப் பெரிதும் கவர்வது. அதைவிட உள்ளத்தைப் பிணிக்கும் நாவல் எதையும் நான் வாசித்தறியேன். 350 ஆண்டுகளுக்கு முன்பு ஐரோப்பாவில் ஒரு மூலையில் நடந்த ஒரு சம்பவத்தைப்பற்றி அவர் அவ்வளவு அழகாகவும் உருக்கமாவும் எழுதி யிருக்கிறார். ‘டச்சுக் குடியரசின் உதயம்’ என்பது அந்நூலின் பெயர். அதை நான் சிறையில் படித்தேன்.

தாழ் நாடுகளில் ஹாலந்து, பெல்ஜியம் இரண்டும் அடங்கி யிருக்கின்றன. பெயரிலிருந்தே அவை சுற்றுப் பக்கத்தை விடத் தாழ்ந் திருப்பது தெரிய வரும். ஹாலந்து என்றாலே ‘பள்ள நாடு’ என்று பொருள். தாழ் நாடுகளில் பெரும் பகுதி சமுத்திரமட்டத்துக்குக் கீழே இருக்கிறது. வடகடல் நீர் அதில் வந்து நிரம்பி விடாமலிருப்பதற்குப் பெரிய அணைகளும் சுவர்களும் கட்டியிருக்கிறார்கள். சதா கடலோடு போரிடவேண்டிய ஒரு நாட்டில் வாழ்வோர் உரம்பெற்ற கடலோடிகளாகத் தான் இருப்பார்கள். அடிக்கடி கடல் கடந்து செல்வோர் வியாபாரத்தில் இறங்குவது இயற்கை. ஆகவே, தாழ் நாட்டார் வியாபாரிகள் ஆனார்கள். அவர்கள் கம்பளி உடைகளையும் வேறு பல பொருள்களையும் உற்பத்தி

செய்தார்கள். கிழக்கிலிருந்து வாசனைத் திரவியங்களும் அங்கே சென்றன. சுறுசுறுப்பான, பெரிய பணக்கார நகரங்கள் தோன்றின. புரூஜஸ், கெங்ட், ஆண்ட்வர்ப் ஆகியவை முக்கியமான நகரங்கள். இவற்றில் ஆண்ட்வர்ப் அதிமுக்கியமானது. கீழ் நாடுகளோடு வியாபாரம் பெருகப் பெருக இந்நகரங்களின் தனமும் பெருகிவந்தது. 16-வது நூற்றாண்டில் ஆண்ட்வர்ப் ஐரோப்பாவின் வியாபாரத் தலை நகராக விளங்கியது. அங்கிருந்த பரிவர்த்தனை நிலையத்தில் தினந்தோறும் 5000 வியாபாரிகள் ஒருவரோடொருவர் வியாபாரம் செய்யும் பொருட்டு கூடி வந்தார்கள் என்று சொல்லப் படுகிறது. ஒரு சமயம், அதன் துறைமுகத்தில் 2500 கப்பல்கள் இருந்தனவாம். தினந்தோறும் 500 கப்பல்கள் அத்துறைமுகத்துக்கு வருவதும் போவதுமா யிருந்தனவாம். வியாபார வகுப்பார்களின் ஆதிக்கத்தில் நகர அரசாங்கங்கள் இருந்து வந்தன.

இத்தகைய வியாபார சமூகம் மதச்சீர்திருத்த இயக்கத்தின் புதுக்கருத்துகளால் ஆகர்ஷிக்கப்படுவது இயற்கையே. தாழ் நாடுகளில் அதிலும் முக்கியமாக அதன் வடபாகத்தில், பிராடெஸ்டண்டு மதம் பரவியது. வாரிசு பாத்தியதை காரணமாக, முதலில் ஹாப்ஸ்பர்க் வமிசத்தைச் சேர்ந்த ஐந்தாவது சார்லசும், அவனுக்குப்பின் அவனுடைய குமாரன் இரண்டாவது பிலிப்பும் தாழ்நாடுகளுக்கு அரசர்கள் ஆனார்கள். இரண்டுபேரும் அரசியலிலோ, மதத்திலோ எவ்விதமான சுதந்திரத்தையும் பொறுக்கக் கூடியவர்கள் அல்ல. பிலிப் நகரங்களின் விசேஷ உரிமைகளையும் புதிய மதத்தையும் பறிக்கவும் ஒடுக்கவும் முயன்றான். அவன் ஆல்வாகோமகனை கவர்னர் ஜெனரலாக அனுப்பிவைத்தான். ஆல்வாகோமகன் இழைத்த அநீதியும் கொடுமையும் உலகப் பிரசித்தி

யானவை. மதவிசாரணை சபையும், ஒரு கொலைக்குழு (Blood-Council) வும் உடனே ஸ்தாபிக்கப்பட்டன. அவை ஆயிரக்கணக்கான பேரைத் தூக்கு மேடைக்கும், எரிமரத்துக்கும் அனுப்பின.

அந்தக் கதை மிகவும் நீளமானது. அதை இங்கு நான் சொல்ல முடியாது. ஸ்பெயினின் கொடுங்கோன்மை அதிகரிக்க அதிகரிக்க ஜனங்களின் எதிர்ப்புச் சக்தியும் அதிகரித்தது. அவர்களிடையே மகா புத்திமானான ஒரு பெரிய தலைவர் தோன்றினார். அவர்தான் ஆரஞ்சு இளவரசர் வில்லியம் என்பவர். அவர் 'மௌன வில்லியம்' என்றும் அழைக்கப்படுகிறார். அவர் எல்லா விதத்தும் ஆல்வா கோமகனை விஞ்சி நின்றார். மதவிசாரணை சபையானது, 1568-ம் ஆண்டில், சிலர் நீங்கலாகத் தாழ்நாடுகளில் வாழ்வோர் அனைவரையும் 'பாஷண்டர்' கள் என்று கூறி அவர்களுக்கு மரண தண்டனை அளித்தது. இரண்டு மூன்று வரிகளில் முப்பது லட்சம் ஜனங்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது! நம்மையெல்லாம் திகைப்புக்குள்ளாக்கும் இத்தண்டனை சரித்திரத்திலேயே அபூர்வமானது!

முதலில் தாழ்நாடுகளின் பிரபுக்களுக்கும் ஸ்பானிய அரசனுக்கும் போராட்டம் ஏற்பட்டது. மற்ற நாடுகளில் அரசனுக்கும் பிரபுக்களுக்குமிடையே நிகழ்ந்த போராட்டங்களைப் போலவே அது இருந்தது. ஆல்வா அவர்களை ஒடுக்க முயன்றான். பல பிரபுக்கள் பிரசல்ஸ் நகரில் தூக்குமேடை ஏறினார்கள். அவர்களில் எக்மாண்ட் பிரபு என்பவரும் ஒருவர். அவர் நல்ல கீர்த்திமான், ஜன ஆதரவு பெற்றவர். அதற்குப்பின், செலவுக்குப் பணம் போதாமையால் ஆல்வா புதிய வரிகள் விதித்தான். பழைய வரிகளையும் அதிகப்படுத்தினான். இது வியாபார வகுப்பைப் பாதித்தது. உடனே

அவர்கள் கலகம் செய்ய ஆரம்பித்தார்கள். இவையன்றி, கத்தோலிக்க-பிராடெஸ்டண்டு போராட்டம் வேறு நிகழ்ந்துகொண் டிருந்தது.

ஸ்பெயின் மிகுந்த பலம் பொருந்திய ஒரு அரசு. தன்னுடைய பெருமையில் அது மிகவும் செருக்கி நின்றது. தாழ்நாடுகள் மிகவும் சிறியவை ; சில மாகாணங்களே கொண்டவை. அங்கு வாழ்ந்தவர்கள் வியாபாரிகளும் வீரியமிழந்த வீணர்களான பிரபுக்களும். இரண்டு நாடுகளுக்கும் உள்ள வித்தியாசம் மலைக்கும் மடுவுக்கும் போல் இருந்தது. அப்படியிருந்தும் தாழ்நாடுகளை அடக்குவது ஸ்பெயினுக்கு அரிதாயிருந்தது. அடிக்கடி படுகொலைகள் நிகழ்ந்துவந்தன. ஜனங்கள் கூட்டம் கூட்டமாகக் கொல்லப்பட்டார்கள். ஆல்வாவும் அவனுடைய தளபதிகளும் மனித உயிர்களை வதைப்பதில் செங்கிஸ்கானோடும் தைமூரோடும் போட்டியிட்டனர். கொடுமை இழைப்பதில் அவர்கள் மங்கோலியரைவிட ஒருபடி முன்னேறி விட்டார்கள் என்றே சொல்லவேண்டும். ஆல்வா ஒவ்வொரு நகரமாக முற்றுகையிட்டுக்கொண்டே போனான். போர்ப்பயிற்சியற்ற நகரமாந்தர்கள், ஆண்களும் பெண்களும்கூட, ஆல்வாவின் பயிற்சிபெற்ற சேனைகளோடு தரையிலும் தண்ணீரிலும் பட்டினியால் மடியும்வரை போரிட்டார்கள். ஸ்பெயினின் கீழ் வாழும் அடிமைத்தனத்தைவிட தமக்கு அருமையானவை யாவும் அழிவதே சாலச் சிறந்தது என்று கருதிய தாழ்நாட்டார் அணைகளைக்கூட உடைத்து விட்டுவிட்டார்கள். உடனே வடகடல் நீர் நாட்டில் வந்து பாய்ந்தது. ஸ்பானியத் துருப்புக்கள் அதில் ஆழ்ந்து மடிந்தன. எஞ்சியவர் ஓட்டம் பிடித்தார்கள். போகப்போகப் போராட்டம் அதிக இரக்கமற்றதாக மாறியது. இருதிறத்தாரும் மிக்க குரூரர்க

ளாய்விட்டார்கள். அழகிய ஹார்லெம் நகரின் முற்றுகை மிகவும் பேர்போனது. கடைசிவரையில் நகரமாந்தர் அதைத் தீரத்துடன் காத்து நின்றனர். ஆனால், முடிவு வழக்கம் போல் படுகொலையும் ஸ்பானிய சேனையின் கொள்ளையுந்தான். அல்க்மார் முற்றுகையின் போது அணைகளை உடைத்து விட்டதால் நகரம் பிழைத்தது. லெய்டன்நகர முற்றுகை ஒரு தனிப் பெருமை வாய்ந்தது. எதிரியால் சூழப்பட்ட அந்நகரில் ஆயிரக்கணக்கான மக்கள் பட்டினியாலும் நோயினாலும் மாண்டு மடிந்தார்கள். லெய்டனில் எந்த மரத்திலும் பசிய இலைகளைக் காணமுடியவில்லை. எல்லாவற்றையும் ஜனங்கள் சாப்பிட்டுவிட்டார்கள். அவ்வளவு பசி. குப்பையில் கிடக்கும் துண்டு துணுக்குகளுக்காக மனிதர்கள் நாய்களோடு சண்டையிட்டார்கள். ஆயினும், அவர்கள் உறுதியாக நின்றார்கள். பட்டினியால் மெய்தளர்ந்தும் மனம் தளராத அவர்கள் மதில்களின்மீது நின்று எதிரியை எதிர்த்தார்கள். அவர்கள் ஸ்பானியரைப் பார்த்து, 'உங்களிடம் சரண் புகுவதைவிட எலியோ, நாயோ, வேறு எதையோ தின்றாகிலும் உயிர்வாழ்வோம்' என்று வீரஉரை கூறினார்கள். அவர்கள் பகைவரை நோக்கி மொழிந்த வஞ்சினத்தைக் கேள்: "எங்களைத் தவிர மற்ற யாவும் மடிந்தொழிந்துவிட்டால் நாங்கள் எங்களுடைய இடது கைகளை உணவாகக் கொண்டு வலது கைகளால் எங்களுடைய ஸ்திரீகளையும், சுதந்திரத்தையும், மதத்தையும் அந்நியக் கொடுங்கோலன் தீண்டாவாறு பாதுகாப்போம். கடவுளே எங்கள்மீது சினங்கொண்டு, ஒருவித சகாயமும் கொடாமல், எங்களை அழித்துவிடத் திருவுளம் பற்றினாலும், அப்பொழுதுகூட நீங்கள் எங்கள் நகருக்குள் நுழையவொட்டோம். எல்லாம் போய்விட்டது, வேறு வழியில்லை என்கிற

நிலைமை ஏற்பட்டாலுங்கூட நீங்கள் எங்களுடைய திருமணைகளைத் தீட்டுப்படுத்துவதற்கும் உரிமைகளைப் பறிப்பதற்கும் இடங்கொடோம். அதைவிட நாங்களே எங்களுடைய கைகளாலேயே எங்களுடைய நன்னகருக்குத் தீ வைத்துவிட்டு அத்தீயில் நாங்கள்-ஆண்கள், பெண்கள், குழந்தை குட்டிகள்-அனைவரும் விழுந்து மடிவோம்.''

லெய்டன் நகரமாந்தரின் வீர உணர்ச்சி அத்தகையதாயிருந்தது. ஆனால், உதவியின்றி நாள் பல கழியவே, அவர்கள் நம்பிக்கை இழக்கத் தொடங்கினார்கள். கடைசியில், ஹாலந்திலுள்ள அவர்களுடைய இதர மாகாணத் தோழர்களுக்கு அவர்கள் ஒரு செய்தி அனுப்பினார்கள். லெய்டன் நகர் பகைவன் வசமாவதைக் காட்டிலும் தங்களுடைய அருமைத் தாய்நாட்டைக் கடல் நீர் கொள்வது மேல் என்னும் முடிவுக்கு அம்மாகாணங்கள் வந்தன. "நாட்டைப் பகைவன் கொள்வதைப் பார்க்கிலும் கடல் கொள்ளட்டும்'' என்று அவர்கள் முழங்கினார்கள். 'லெய்டன் நகரே! உன்னைக் கைவிடுவதைவிட நமது நாடு முழுவதையும் நமது உடைமைகள் யாவற்றையும் கடல் அலைகள் விழுங்கக் காண்போம்' என்னும் செய்தியை அவர்கள் துன்பத்தால் நொந்துவாடும் லெய்டன் நகருக்கு அனுப்பி வைத்தார்கள்.

கடைசியில் ஒவ்வொரு அணையாக உடைக்கப்பட்டது. கடல் மடை திறந்தால் கேட்கவா வேண்டும்? காற்றும் துணைபுரிந்தது. கடல் நீர் நாட்டுக்குள்ளே வேகமாக வந்து பாய்ந்தது. கூடவே டச்சுக் கப்பல்களையும் அது உள்ளே கொண்டுவந்து விட்டது. வாடும் மக்களுக்கு உணவும் உதவியும் கிடைத்தன. ஸ்பானிய சேனைகள் புதிதாக வந்து முளைத்த கடற்பகைவனைக்

கண்டு அஞ்சி விரைவில் புறங்காட்டின. இவ்வாறு, லெய்டன் தப்பிப் பிழைத்தது. அந்நகர மாந்தர் காட்டிய வீரதையின் ஞாபகார்த்தமாக 1575-ல் லெய்டன் சர்வகலாசாலை நிறுவப்பட்டது. இப்போது அதன் புகழ் எங்கும் பரவியுள்ளது.

இவ்வாறு, அந்நாட்டு மக்கள் காட்டிய வீரத்தைப் பற்றிப் பல கதைகள் உண்டு. பகைவர் கோரமான கொலைத் தொழிலில் இறங்கினார்கள். அவர்கள் அழகிய ஆண்ட்வர்ப் நகரைக் கொள்ளையிட்டு அந்நகர மாந்தர் எண்ணாயிரவரைப் படுகொலை புரிந்தார்கள். இது 'ஸ்பானிய சீற்றம்' என அழைக்கப்படுகிறது.

ஆனால், இந்தப் பெரிய போராட்டத்தை ஹாலந்து தான் பெரும்பாலும் நடத்திவந்தது. தாழ்நாடுகளின் தென்பகுதி இதில் கலந்து கொள்ளவில்லை. லஞ்சம் கொடுத்தும் பயமுறுத்தியும் ஸ்பானியர் பல பிரபுக்களைத் தம் வசப்படுத்திக் கொண்டனர். அப்பிரபுக்களே தங்கள் நாட்டாரை அடக்குமாறு செய்தனர். தென்பகுதியில் பிராடெஸ்டெண்டுகளைவிடக் கத்தோலிக்கர்கள் அதிகமாயிருந்தது அவர்களுக்குப் பெரிதும் உதவியாயிருந்தது. ஸ்பானியர் கத்தோலிக்கர்களைத் தங்கள் பக்கம் சேர்த்துக்கொள்ள முயன்றார்கள். அவர்கள் அதில் ஓரளவு வெற்றியும் அடைந்தார்கள். அந்தப் பிரபுக்கள்! சீ, அவர்கள் செய்கையை மொழியவும் நா கூசுகிறது. அவர்கள் நாடு அழிந்தொழிவதைப் பற்றி அவர்களுக்குக் கவலையில்லை. ஸ்பானிய அரசனின் தயவால் தங்களுக்குப் பணமும் பதவியும் கிடைத்துவிட்டால் போதும். இதற்காக, அவர்கள் எவ்வித துரோகத்தையும் இழிதொழிலையும் செய்யத் தயாராயிருந்தார்கள்.

தாழ்நாடுகளின் 'மகாசபை'யில் ஆரஞ்சு வில்லியம்

கீழ்க்கண்டவாறு பேசினார்: “தாழ்நாட்டாரே தாழ்நாடுகளை ஒடுக்கி வருகிறார்கள். ஆல்வா கோமகன் தமக்கிருக்கும் சக்தியைப் பற்றிப் பிரமாதப் படுத்திக் கொள்ளுகிறார். அந்தச் சக்தி அவருக்கு எங்கிருந்து உண்டாயிற்று? உங்களிடமிருந்துதான்; தாழ்நாட்டு நகரங்களிடமிருந்துதான். அவருக்குக் கப்பல்களும், பணமும், பண்டங்களும், சேனா வீரர்களும், ஆயுதங்களும் எங்கிருந்து கிடைக்கின்றன? தாழ்நாட்டு மக்களிடமிருந்துதான்.”

ஆகவே, ஸ்பானியர் இறுதியில் தாழ்நாடுகளில் ஒரு பாகத்தைத் தம் பக்கம் சேர்த்துக் கொண்டார்கள். ஏறக்குறைய அந்தப் பாகம் தான் இன்று பெல்ஜியம் என வழங்குகிறது. ஆனால், எவ்வளவு முயன்றும், ஹாலந்தை மட்டும் அவர்களால் அடிமைப்படுத்த முடியவில்லை. போராட்டம் பூராவும், அநேகமாகக் கடைசிவரையில் ஸ்பானிய அரசனான இரண்டாவது பிலிப்பிடம் தனக்குள்ள விசுவாசத்தை ஹாலந்து மறுக்கவில்லை. இதைக் கண்டு நமக்குச் சிறிது ஆச்சரியம் உண்டாகிறது. தங்களுடைய உரிமைகளைப் பிலிப் ஒப்புக்கொள்ளும் பட்சத்தில் அவர்கள் அவனையே அரசனாகக் கொள்வதற்குத் தயாராயிருந்தார்கள். கடைசியில், அவர்கள் அவனுடைய தொடர்பை அறுத்துக் கொள்ளும்படியான நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. அவர்கள் தங்களுடைய தலைவரான வில்லியத்தை அரசனாக முடி சூட்ட விரும்பினார்கள். ஆனால், அதற்கு அப் பெரியார் ஒப்புக் கொள்ளவில்லை. இவ்வாறு, அவர்களுடைய இஷ்டத்துக்கு விரோதமாகவே, குடியரசு முறைதான் ஏற்பட்டுத் தீரவேண்டும் என்று ஆய்விட்டது. அக்காலத்தில் அரசனுடைய ஸ்தானத்துக்கு அவ்வளவு மகிமை இருந்தது.

ஹாலந்தில் போராட்டம் பல ஆண்டுகள் வரையில் நடந்தது. 1609-ல்தான் அது சுதந்திரம் பெற முடிந்தது. ஆனால், 1567-லிருந்து 1584- வரையில் நடந்த போராட்டத்தைத் தான் உண்மையான போராட்டம் என்று கூற வேண்டும். ஆரஞ்சு வில்லியத்தை வெல்வதற்குப் பிலிப்பால் முடியவில்லை. அதனால், ஒரு இரகசியக் கொலையாளியின் மூலம் அவன் அவரைக் கொல்லுவித்தான். அவரைக் கொலை புரிவோருக்குச் சன்மானம் அளிப்பதாக அவன் பகிரங்கமாக அறிவித்தான். அக்காலத்தில் ஐரோப்பாவின் தரும நியாய உணர்ச்சி அந்த நிலையில் இருந்தது. வில்லியத்தைக் கொல்வதற்குச் செய்யப்பட்ட பல முயற்சிகள் பலன் அளிக்கவில்லை. ஆறாவது முயற்சி பலித்தது. 1584-ல் அப் பெரியார் ஆவி துறந்தார். ஹாலந்து முழுவதும் அவர் ‘வில்லியம் தந்தையார்’ என்று அருமையாக அழைக்கப்படுகிறார். அவர் இறந்தாலும் அவர் வந்த வேலை ஆய்விட்டது. தியாகத்தின் மூலமாகவும் கஷ்டத்தின் மூலமாகவும் டச்சுக் குடியரசு உருப் பெற்றுவிட்டது. கொடுங்கோல் மன்னரையும் யதேச்சாதிகார மன்னரையும் எதிர்த்து நிற்பது ஒரு தேசத்துக்கும் ஜனங்களுக்கும் நன்மை பயக்கிறது. அவ்வெதிர்ப்பு அவர்களுக்கு நல்ல பயிற்சியையும் வன்மையையும் அளிக்கிறது. சுய பலமும் சுய பலத்தில் நம்பிக்கையும் கொண்ட ஹாலந்து வெகு விரைவில் பெரிய கடலரசாகிக் கீழ்க்கோடி வரையில் வியாபித்தது. ஹாலந்திலிருந்து பிரிக்கப்பட்ட பெல்ஜியம் ஸ்பானிய ஆட்சியின் கீழ் இருந்து வந்தது.

ஜெர்மனியை நோக்குவோம். அதையும் பார்த்து விட்டால் நமது ஐரோப்பிய சித்திரம் பூர்த்தியாகிவிடும். 1618-லிருந்து 1648-வரையில் அங்கே கொடிய உள்நாட்டுப் போர் நிகழ்ந்து வந்தது. அது ‘முப்பதாண்டுப்

போர்' என அழைக்கப்படுகிறது. கத்தோலிக்கர்களுக்கும் பிராடெஸ்டண்டுகளுக்கும் போர். ஜெர்மனியை ஆண்டுவந்த சிற்றரசர்களும் தேர்வு-இளவரசர்களும் ஒருவரை யொருவர் எதிர்த்தும், அனைவரும் சேர்ந்து சக்கரவர்த்தியை எதிர்த்தும் போரிட்டு வந்தார்கள். பிரான்சை ஆண்ட கத்தோலிக்க மன்னன் குழப்பத்தை இன்னும் அதிகரிப்பதற்காக அவ்வப்போது பிராடெஸ்டெண்டுகளுக்கு உதவி வந்தான். கடைசியில் ஸ்வீடன் அரசனாகிய கஸ்டாவஸ் அடால்பஸ் என்பவன்—அவன் 'வடதிசைச் சிங்கம்' என்று அழைக்கப்பட்டான்—சக்கரவர்த்தியைப் போரில் வென்று பிராடஸ்டெண்டுகளைக் காப்பாற்றினான். ஆனால், ஜெர்மனி தேசம் பாழாகி விட்டது. கூலிப்படை வீரருக்கும் கொள்ளைக்காரருக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது? அவர்கள் நாடெங்கும் கொள்ளை யடித்து வந்தார்கள். சேனைகளை நடத்தும் தளபதிகள் கூடக் கொள்ளையில் இறங்கிவிட்டார்கள். தங்களுடைய சேனைகளுக்குச் சம்பளம் கொடுப்பதற்கோ உணவளிப்பதற்கோ அவர்களிடம் பணமில்லை. இந்த நிலை 30 ஆண்டுகள் நீடித்தது! அதை நினைக்கும்போதே நெஞ்சு 'பகீர்' என்கிறது. கொலையும், கொள்ளையும், அழிப்பும் வருஷம் தவறாமல் தொடர்ச்சியாக நடைபெறுவதென்றால்—? விவசாயமோ வியாபாரமோ ஒன்றும் நடக்கவில்லை. உணவுப் பொருள் குறைந்து கொண்டே வந்தது. பஞ்சமும் பட்டினியும் அதிகரித்தன. இதனால் கொள்ளைக்காரரும் கொள்ளையும் பெருகிற்று. கூலிக்காகப் போரிடுவோருக்கும், போரையே தொழிலாக உடையோருக்கும் ஜெர்மனி ஒரு வளர்ப்புப் பண்ணையாக விளங்கியது.

கடைசியில், யுத்தம் ஒரு முடிவுக்கு வந்தது. அதற்கு

மேல் கொள்ளையடிப்பதற்கு ஒன்றும் இல்லை போலும்! ஆனால், அதிலிருந்து தேறி எழுந்திருப்பதற்கு ஜெர்மனிக்கு நீண்ட காலம் பிடித்தது. 1648-ல் 'வெஸ்ட்பாலியா சமாதான'த்துடன் ஜெர்மன் உள் நாட்டுப் போர் முடிவடைந்தது. அதன்படி பரிசுத்த ரோம சாம்ராஜ்ய சக்கரவர்த்தியின் சகல அதிகாரங்களும் பறிக்கப்பட்டன. அவர் வெறும் தோற்றமாக மாறிவிட்டார். பிரான்சுக்கு நல்ல லாபம். 'அல்சாஸ்' மாகாணம் அதற்குக் கிடைத்தது. அதை 200 ஆண்டுகள் தன் வசம் வைத்திருந்தபின்னர் புதிய ஜெர்மனிக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டிய நிலைமை பிரான்சுக்கு ஏற்பட்டது. 1914–18 மகாயுத்தத்துக்குப்பின் மறுபடியும் அது அல்சாசைக் கைப்பற்றிக் கொண்டது. இந்த சமாதானத்தால் பிரான்சு நன்மை அடைந்தது. ஆனால், ஜெர்மனியில் இப்போது இன்னொரு அரசு தோன்றுகிறது. அது பிரான்சுக்கு ஓயாமல் தொந்திரவு கொடுக்கப் போகிறது. அதுதான் ஹோஹென்ஜாலர்ன் வமிசத்தாரால் ஆளப்பட்டு வந்த பிரஷியா ஆகும்.

வெஸ்ட்பாலியா சமாதானத்தின்படி ஸ்விட்சர்லாந்து, ஹாலந்து குடியரசுகள் முடிவாக அங்கீகரிக்கப்பட்டன.

நான் கூறிவரும் கதையில் இழிபாடும் போரும் கொலையும் தண்டமும் பின்னிக்கொண்டு கிடக்கின்றன. ஆயினும், இதுதான் மறுமலர்ச்சிக்குப் பிற்பட்ட காலத்து ஐரோப்பா. மறுமலர்ச்சியின் போது கலை, இலக்கியம் முதலிய துறைகளில் ஐரோப்பாவின் சக்தி பொங்கி வழிந்தது. நான் ஐரோப்பாவை ஆசிய நாடுகளுடன் ஒப்பிட்டு, ஐரோப்பாவில் காணப்பட்ட புதிய ஜீவசக்தியை எடுத்துக் காட்டியுள்ளேன். இப்புதிய ஜீவசக்தி தடைகளை எதிர்த்துப் போரிட்டு முன்னேறுவதை நாம்

பார்க்க முடிகிறது. ஒரு குழந்தை பிறக்கும்போது பிரசவ வேதனை ஏற்படுவது போல ஒரு புதிய ஏற்பாடு தோன்றும்போதும் பெருத்த துன்பம் நேரிடுகிறது. அஸ்திவாரத்தில் பொருளியல் நிலைமை சரியாயில்லாவிட்டால், உச்சியில் சமூகமும் அரசியலும் ஆட்டம் கொடுக்கின்றன. ஐரோப்பவில் புதிய ஜீவசக்தி இயங்குகிறது என்பதில் ஐயமில்லை. ஆனால், அதைச் சூழ்ந்து எத்தனை மிருகத்தனமான செயல்கள்! 'அரசியல் சாஸ்திரம் என்பது அசத்தியத்தில் தேர்ச்சி பெறும் சாஸ்திரமேயாகும்' என்பது அக்காலத்துப் பழமொழி. பொய்யும் சூழ்ச்சியும் கொலையும் கொடுமையும் தாண்டவம் புரிகின்றன. அவற்றை யெல்லாம் ஜனங்கள் எப்படிப் பொறுத்துக்கொண்டிருந்தார்கள் என்பது தான் நமக்கு ஆச்சரியமாயிருக்கிறது.

87

இங்கிலாந்து தன்னுடைய அரசன் தலையை வெட்டி எறிகிறது

ஆகஸ்டு 29, 1932.

இங்கிலாந்தின் சரித்திரத்தை இப்போது சிறிது சாவகாசமாகக் கவனிப்போம். இதுவரை நாம் அதை அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை. ஏனெனில், பொருட்படுத்தக்கூடிய எதுவும் இடைக்காலத்தில் அங்கு நிகழவில்லை. பிரான்சு அல்லது இதாலியைவிட இங்கிலாந்து பின்னணியில் இருந்தது. ஆனால், ஆதி முதற்கொண்டே ஆக்ஸ்போர்டு சர்வகலாசாலை கல்விக்குப் பேர் பெற்றிருந்தது. அதற்குச் சிறிது பிற்பட்டு கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலை ஏற்பட்டது. விக்ளிப்பை அளித்தது ஆக்ஸ்போர்டுதான். அவரைப்பற்றி நான் முன்பே எழுதியிருக்கிறேன்.

ஆதிகால இங்கிலீஷ் சரித்திரத்தில் நமது கவனத்தைப் பெரிதும் கவர்வது பார்லிமெண்டின் வளர்ச்சியேயாகும். முதலிலிருந்தே, அரசனின் அதிகாரத்தை ஒரு வரம்புக்குட்படுத்த பிரபுக்கள் முயன்று வந்தார்கள். 1215-ம் ஆண்டில் 'மாக்னகார்ட்டா' பிறந்தது. அதற்குச் சிறிதுகாலம் கழித்துப் பார்லிமெண்டின் ஆரம்பதசையைக் காண்கிறோம். ஆரம்பம் சற்று கரடுமுரடாகத்தான் இருக்கிறது. பெரிய பிரபுக்களையும் மதகுருமார்களையும் கொண்ட 'லார்டு' அல்லது 'பிரபுக்கள் சபை' தோன்றி வளர்கிறது. இறுதியில், தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சபை பிராதானியம் பெறுகிறது. அதில் 'நைட்டு' களும், சிறிய நிலச்சுவான்தார்

களும், சில நகரங்களின் பிரதிநிதிகளும் அங்கம் வகிக்கிறார்கள். இந்தத் தேர்ந்தெடுக்கப்பட்ட சபையே 'காமன்ஸ் சபை.' (பொதுஜன சபை) யாக முதிர்கிறது. இவ்விரண்டு சபைகளிலுமே நிலச்சுவான்தார்களும் தனவந்தர்களும்தான் இருந்தார்கள். காமன்ஸ் சபை அங்கத்தினர்கள்கூடச் சில பணக்கார நிலச்சுவான்தார்களுக்கும் வியாபாரிகளுக்குமே பிரதிநிதிகளாயிருந்தார்கள்.

ஆரம்பத்தில், காமன்ஸ் சபைக்கு இருந்த அதிகாரம் மிகவும் குறைவு. அவர்கள் முதலில் அரசனிடம் தங்கள் குறைகளை எடுத்துக்காட்டியும், விண்ணப்பம் செய்தும் வந்தார்கள். பிறகு சிறிது சிறிதாக, வரிவிதிப்பில் தலையிட ஆரம்பித்தார்கள். அவர்களுடைய சம்மதமின்றிப் புதுவரிகளை விதிப்பதோ வசூலிப்பதோ கஷ்டமாகி விட்டது. ஆகவே, அத்தகைய வரிகளுக்கு அரசன் அவர்களுடைய சம்மதத்தைக் கோரும் வழக்கம் நாளடைவில் ஏற்பட்டது. அரசாங்க பொக்கிஷத்தின்மீது அதிகாரம் செலுத்துவதென்றால் அது மிகவும் பெரிய விஷயமல்லவா? அந்த அதிகாரத்தை அடைந்த பார்லிமெண்டு அதிலும் விசேஷமாக காமன்ஸ் சபை, வல்லமையிலும், செல்வாக்கிலும் வளர்ந்து வந்தது. அடிக்கடி அரசனுக்கும் பார்லிமெண்டுக்கும் மாறுபாடு நிகழ்வதுண்டு. இன்னும், பார்லிமெண்டு, போதிய பலம் பெறவில்லை. நான் முன்பே கூறியதுபோல், டியூடர் மன்னர்கள் பெரும்பாலும் யதேச்சாதிகாரம் செலுத்தி வந்தார்கள். ஆனால், அவர்கள் புத்திசாலிகளாயிருந்தபடியால் பார்லிமெண்டோடு போராட்டம் முற்றுவதை விலக்கி வந்தார்கள்.

ஐரோப்பாக் கண்டத்தில் நிகழ்ந்த கொடிய மதப் போராட்டங்களினின்று இங்கிலாந்து தப்பித்துக்

கொண்டது. இங்கிலாந்திலும் மதப் போராட்டத்துக்கும், கலகத்துக்கும், மூடப்பிடிவாதத்துக்கும் குறைவில்லை. பல பெண்கள் சூனியக்காரிகள் என்று கருதப்பட்டு உயிரோடு எரிக்கப்பட்டார்கள். இந்தப் பரிபவத்தை என்னென்பது? ஆனால், ஐரோப்பாக் கண்டத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இங்கிலாந்தில் அமைதி நிலவியது என்றே கூறவேண்டும். எட்டாவது ஹென்றி பிராடெஸ்டண்டு மதத்தைத் தழுவியபிறகு இங்கிலாந்தும் பிராடெஸ்டண்டு ஆகிவிட்டதாகக் கருதப்பட்டது. நாட்டில் பல கத்தோலிக்கர்கள் இருந்தார்கள் என்பது உண்மையே. தீவிரவாதிகளான பல பிராடெஸ்டண்டுகளும் இருந்தார்கள். இங்கிலாந்தின் புதிய மதஸ்தாபனம் இரண்டுக்கும் இடைப்பட்ட ஒன்றாகும். அது தன்னைப் பிராடெஸ்டண்டு என்று அழைத்துக்கொண்டது. ஆனால், அது பிராடெஸ்டண்டைவிடக் கத்தோலிக்கத்தன்மையே அதிகம் வாய்ந்திருந்தது. உண்மையில், அது அரசனைத் தலைவனாகக் கொண்ட ஒரு அரசாங்க இலாகாவாகும். ஆயினும், இங்கிலாந்துக்கிருந்த ரோமாபுரி—போப்பாண்டவர் தொடர்பு முற்றிலும் அறுந்துவிட்டது. போப்பாண்டவருக்கு விரோதமாகப் பல கலகங்கள் நிகழ்ந்தன. எலிசபெத் ராணியின் காலத்தில் (அவள் 8-வது ஹென்றியின் புதல்வி) கீழ் நாடுகளுக்கும் அமெரிக்காவுக்கும் கடல் மார்க்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டதும், அதனால் வியாபாரத்துக்குக் கிடைத்த புதிய சந்தர்ப்பமும் பலரைப் பெரிதும் கவர்ந்தன. ஸ்பானிய, போர்த்துகீசியக் கடலோடிகள் அடைந்த வெற்றியைக் கண்டு வியப்புற்ற இங்கிலாந்து, பணத்தாசை காரணமாகத் தானும் கடலோடுதலை மேற்கொண்டது. சர் பிரான்சிஸ் டிரேக் என்பவனும் அவனைப் போன்றவர்களும்

கடற் கொள்ளையில் இறங்கினார்கள். அமெரிக்காவிலிருந்து வரும் ஸ்பானியக் கப்பல்களை அவர்கள் வழிமறித்துக் கொள்ளையடித்து வந்தார்கள். பிறகு, டிரேக் உலகத்தைச் சுற்றி ஒரு பெரும் பிரயாணத்தை மேற்கொண்டான். சர் வால்டர் ராலி என்பவன் அட்லாண்டிக் சமுத்திரத்தைக் கடந்து இப்போது ஐக்கிய அமெரிக்க நாடுகள் என வழங்கும் நாட்டின் கீழ்க்கரையில் ஒரு குடியேற்றத்தை ஸ்தாபிக்க முயன்றான். அதற்கு 'வர்ஜினியா' என்று பேர் சூட்டப்பட்டது. ஆங்கிலத்தில் 'வர்ஜின்' என்றால் 'கன்னி' என்று அர்த்தம். எலிசபெத் ராணி கலியாணமாகாத ஒரு கன்னியாகையால் அவளைக் கவுரவிக்கும் பொருட்டு அக்குடியேற்றத்துக்கு மேற்கூறிய பெயர் இடப்பட்டது. அமெரிக்காவிலிருந்து புகையிலைப்புகை குடிக்கும் வழக்கத்தை முதன் முதல் ஐரோப்பாவுக்குக் கொண்டு வந்தவன் ராலிதான். அதற்குப்பிறகு செருக்குடன் வந்த ஸ்பானியக் கடற்படைமீது இங்கிலாந்து வெற்றி கொண்டது. இவ்வெற்றி அதற்குப் பேருக்கம் அளித்தது. நான் மேலே கூறியவைகளுக்கும், அரசனுக்கும் பார்லிமெண்டுக்கும் நிகழ்ந்துவந்த போராட்டத்துக்கும் அதிக சம்பந்தமில்லை. மேற்கூறிய நிகழ்ச்சிகளால் ஜனங்களின் மனம் வெளி விவகாரங்களில் ஈடுபட்டிருந்தது என்று மட்டும் சொல்லலாம். ஆனால், டியூடர் காலத்திலேயே, உள்ளுக்குள் தகராறு குமுறிக் கொண்டிருந்தது.

இங்கிலாந்தில் எலிசபெத் காலம் அதன் மகாப் பிரகாசமான காலப் பகுதிகளுள் ஒன்றாகும். எலிசபெத் ஒரு பெரிய அரசி. அவளுடைய காலத்தில் இங்கிலாந்தில் பல கர்ம வீரர்கள் தோன்றினார்கள். ஆனால், அத்தலைமுறையில் தோன்றிய கவிஞர்களும் நாடகாசிரியர்களும் அரசியைக் காட்டிலும், அரசியைச் சூழ்ந்திருந்த சூரர் ('நைட்டு'கள்) களைக் காட்டிலும் சிறந்து விளங்குகிறார்கள். அப்புலவர் பெருமக்களின் திலகமாக விளங்குபவன் மகாகவி வில்லியம் ஷேக்ஸ்பியர். அவனுடைய காவியம் அவனுக்கு அமரத்தன்மையை அளித்திருக்கிறது. அவனுடைய வாழ்க்கையைப் பற்றி நாம் அறிந்திருப்பது சொற்பமே. ஆயினும், அவனுடைய நாடகங்கள் ஜகப்பிரசித்தி பெற்றவை. ஆங்கில மொழியை வளம்படுத்திய பேராசிரியர் குழாத்திலே ஷேக்ஸ்பியர் நடு நாயக மணியென ஒளி விடுகிறான். அவர்கள் அம்மொழியில் இயற்றியுள்ள அரும்பெறல் காவிய மணிகள் நம்மை அழியா இன்பத்துள் ஆழ்த்துகின்றன. எலிசபெத் காலத்து வரிப்பாடல்கள் கூட ஒரு தனி எழிலோடு பொலிகின்றன. பிற கவிகளில் அத்தகைய எழிலைக் காண முடியவில்லை. எளிமையும் இனிமையும் கமழ அவை அடியிட்டு நடை பயிற்றும் அழகை என்னென்பேன்! அவை தினசரி நிகழ்ச்சிகளைப் பொருளாகக் கொண்டனவாயினும் அதைத் தங்களுக்கே உரிய பாணியிலன்றோ இசைக்கின்றன? இக்காலத்தைப் பற்றி எழுதப் புகுந்த ஆங்கில விமரிசகரான லிட்டன் ஸ்டிராச்சி என்பார், "எலிசபெத் காலத்தில் வாழ்ந்த பேராசிரியர் குழாத்தின் கவித்திறனும் கற்பனை உணர்வும் ஒரே தலைமுறையில், உலகமே கண்டு அதிசயிக்கும்படியான ஒலிவிடும் நாடக பரம்பரையை இங்கிலாந்துக்கு நல்கியுள்ளன" என்று கூறுகிறார்.

1603-ல் எலிசபெத் ராணி மரணமடைந்தாள். அதாவது, இந்தியாவில் மகா அக்பர் இறப்பதற்குச் சரியாக இரண்டு வருஷங்களுக்கு முன்பு. அவளுக்குப் பின், அப்போது ஸ்காட்லாந்தின் அரசனாயிருந்தவன் சிம்மாசனம் ஏறினான். ஏனெனில், வாரிசு முறைமையில்

எலிசபெத்துக்கு அடுத்தவனாக அவன் கருதப்பட்டான். அவன் முதலாவது ஜேம்ஸ் என்று அழைக்கப்பட்டான். இவ்வாறு இங்கிலாந்தும் ஸ்காட்லாந்தும் ஒரே ராஜ்யமாயிற்று. பலாத்காரத்தினால் இங்கிலாந்து சாதிக்க முடியாத ஒரு காரியம் அமைதியான முறையில் நிறைவேறி விட்டது. முதலாவது ஜேம்ஸ், அரசரின் தெய்வீக உரிமைக் கொள்கையில் நம்பிக்கை உடையவன். பார்லிமெண்டை அவன் வெறுத்தான். எலிசபெத் ராணியைப் போல் அவன் புத்திசாலி அல்ல. விரைவில் பார்லிமெண்டுக்கும் அவனுக்கும் தகராறு உண்டாயிற்று. அவனுடைய ஆட்சியில்தான் இங்கிலாந்திலுள்ள பல பிடிவாதக்காரப் பிராடெஸ்டண்டுகள் தங்கள் தாய் நாட்டைத் துறந்து, 'மேபிளவர்' ('வசந்தபுஷ்பம்') என்னும் கப்பலில் அமெரிக்காவில் சென்று குடியேறுவதற்காகப் புறப்பட்டார்கள். அவர்கள் அவ்வாறு சென்றது சுபமாக முடிந்தது. இது நிகழ்ந்தது 1620-ம் ஆண்டில். முதலாவது ஜேம்சின் யதேச்சாதிகார முறைகளை அவர்கள் ஆட்சேபித்தார்கள். இங்கிலாந்தின் புதிய மதஸ்தாபனமும் அவர்களுக்குப் பிடிக்கவில்லை. அதில் போதிய அளவு 'பிராடெஸ்டண்டுத் தன்மை' இல்லை என்பது அவர்களுடைய எண்ணம். ஆகவே, அவர்கள் வீடு வாசலையும் தாய்நாட்டையும் நீத்துப் புதிய நாட்டை நோக்கி அட்லாண்டிக்கில் பிரயாணத்தைத் தொடங்கினார்கள். அமெரிக்காவின் வடகரையில் அவர்கள் ஓரிடத்தில் இறங்கினார்கள். அதை அவர்கள் 'புது பிளிமத்' என்று அழைத்தார்கள். அவர்களைப் பின் தொடர்ந்து பலர் சென்று குடியேறினார்கள். சிறிது சிறிதாகக் குடியேற்றங்கள் பெருகின. கடைசியில், கீழ்க்கரை ஓரமாகப் பதின்மூன்று குடியேற்றங்கள் ஏற்பட்டன. இக் குடியேற்றங்கள்தான் பின்னர்

ஐக்கிய அமெரிக்க நாடுகளாகப் பரிணமித்தன. ஆனால், இது நெடுங்காலத்துக்குப் பிறகு நிகழ்ந்த ஒன்று.

முதலாவது ஜேம்சின் குமாரன் முதலாவது சார்லஸ். அவன் 1625-ல் அரசன் ஆனதும் சீக்கிரத்திலேயே நிலைமை நெருக்கடி அடைந்து விட்டது. ஆகவே, 1628-ம் ஆண்டில் பார்லிமெண்டு அவனிடம் 'உரிமை விண்ணப்பம்' என்னும் பத்திரத்தைச் சமர்ப்பித்தது. பிரிட்டிஷ் சரித்திரத்தில் இப் பத்திரம் மிகவும் பேர் போனது. அதில், அரசன் யதேச்சாதிகாரமாக ஆள முடியாதென்றும் இன்னும் வேறு பல காரியங்கள் செய்யக்கூடாதென்றும் அரசனுக்கு அறிவித்திருந்தார்கள். அவன் சட்டத்துக்கு விரோதமாக வரி விதிக்கவோ விசாரணையின்றி ஜனங்களைச் சிறையில் அடைக்கவோ கூடாது. பிரிட்டிஷ் வைசிராய் இந்தியாவில் இருபதாம் நூற்றாண்டில் செய்வதைக்கூட அவன் பதினேழாவது நூற்றாண்டில் செய்யக்கூடாது; அதாவது, அவசரச் சட்டங்கள் பிறப்பித்து அவற்றின் கீழ் ஜனங்களைச் சிறையில் வைக்கக் கூடாது.

தன்னைப் பார்த்து இன்னது செய்யலாம், இன்னது செய்யக் கூடாது என்று பார்லிமெண்ட் சொன்னது சார்லசின் எரிச்சலைக் கிளப்பியது. அவன் பார்லிமெண்டைக் கலைத்துவிட்டு அது இல்லாமலே அரசு புரிந்தான். சில வருஷங்களுக்குப் பிறகு அவனுக்குப் பணமுடை ஏற்பட்டது. ஆகவே, அவன் வேறொரு பார்லிமெண்டைக் கூட்டினான். பார்லிமெண்டு இன்றி அதுவரையில் அவன் செய்த காரியங்கள் தேசத்தில் சினத்தீயை மூட்டியிருந்தன. புது பார்லிமெண்டு மல்லுக்கு வரிந்து கட்டிக் கொண்டு நின்றது. இரண்டு வருஷங்களுக்குள், அதாவது 1642-ல், உள்நாட்டுப் போர் ஆரம்பமாயிற்று. அரசன் ஒருபக்கம்; பார்லிமெண்டு ஒருபக்கம். பல பிரபுக்களும்

சைனியத்தில் பெரும் பகுதியும் அரசனை ஆதரித்தார்கள். பணக்கார வியாபாரிகளும் லண்டன் நகரவாசிகளும் பார்லிமெண்டை ஆதரித்தார்கள். பல வருஷங்கள் வரையில் இந்தப் போர் நடந்து வந்தது. பார்லிமெண்டு கட்சியில் ஆலிவர் கிராம்வெல் என்னும் பெரிய தலைவன் ஒருவன் தோன்றினான். அவன் மகா கண்டிப்பும், கூட்டி நடத்தும் திறனும், எடுத்த காரியத்தில் சமய ஆர்வத்தை ஒத்த ஆர்வமும் உடையவன். அவனைப் பற்றிக் கார்லைல் என்னும் ஆங்கில ஆசிரியர், "யுத்தப் பேராபத்துகளுக்கிடையில், மற்ற எல்லாரும் நம்பிக்கை இழந்து சோர்ந்து நிற்கும் தருணத்திலும், போர்க்களத்தின் உயர் நிலத்தில் கிராம்வெலிடம் மட்டும் நம்பிக்கையானது அனற்பிழம்பெனக் கனன்று நின்றது" என்று கூறுகிறார். கிராம்வெல் ஒரு புதுப் படையை அமைத்தான். அது 'இரும்புப்படை'(Ironsides) என்று அழைக்கப்பட்டது. தன்னுடைய கட்டுப்பாட்டையும் ஊக்கத்தையும் அவன் தன் படைக்கும் நல்கினான். அரசனின் படையைச் சேர்ந்தவர்கள் 'குதிரைவீரர்' என்றும், பார்லிமெண்டின் படையைச் சேர்ந்தவர்கள் 'தீவிர சுத்தவாதிகள்' (Puritans) என்றும் அழைக்கப்பட்டார்கள். முடிவில், கிராம்வெலுக்கு வெற்றி கிடைத்தது. அரசனான சார்லஸ் பார்லிமெண்டின் கைதியானான்.

இதற்குப் பின்பும் பல பார்லிமெண்டு அங்கத்தினர்கள் அரசனுடன் ராஜியாய்ப் போக விரும்பினார்கள். ஆனால், கிராம்வெலின் புதுப்படை அதற்குச் செவி சாய்க்கவில்லை. அப்படையின் உத்தியோகஸ்தனாகிய கர்னல் பிரைட் என்பவன் தைரியமாய்ப் பார்லிமெண்டு மன்றத்துக்குள் பிரவேசித்து அத்தகைய அங்கத்தினர்களை வெளியேற்றிவிட்டான். இந்த வெளியேற்றம் அவன் பெயரால் வழங்குகிறது. அக்கடுமையான நட

வடிக்கை பார்லிமெண்டுக்குப் பெருமை அளிப்பதாக இல்லை. அரசன் தன்னிஷ்டப்படி அரசுபுரிவதைப் பார்லிமெண்டு ஆட்சேபித்தது. ஆனால், இப்போதோ அவர்களுடைய படையே அவர்களுடைய சட்ட விஸ்தாரங்களை மதித்து நடக்கவில்லை. புரட்சிகளின் போக்கே இப்படித்தான்.

வெளியேற்றப்பட்ட அங்கத்தினர்கள் போக எஞ்சியவர்களைக் கொண்ட காமன்ஸ் சபை (இது 'ரம்ப் பார்லிமெண்டு' என்று அழைக்கப்பட்டது) சார்லசை விசாரிப்பதென்று தீர்மானித்தது. இதற்குப் பிரபுக்கள் சபை ஆட்சேபித்ததையும் அது பொருட்படுத்தவில்லை. அது அரசனைக் 'கொடுங்கோலன், கொலைகாரன், தேசத்துரோகி, தேச விரோதி' என்று குற்றஞ் சாட்டி அவனுக்கு மரண தண்டனை விதித்தது. 1649-ம் ஆண்டில், லண்டனிலுள்ள 'ஒயிட் ஹாலி'ல் (வெண்மன்றம்) சார்லசின் தலையை வெட்டி எறிந்தார்கள். அவர்களுடைய அரசன், அவர்களை ஆளுவதற்குத் தனக்குத் தெய்வீகமான உரிமை உண்டென்று கூறியவன், இக்கதிக்கு ஆளானான்.

அரசரும் ஏனையோரைப்போல்தான் இறக்கின்றனர். பல அரசர் துர்மரணம் அடைந்துள்ள கதையைச் சரித்திரத்தில் படித்திருக்கிறோம். அரச பதவியும் யதேச்சாதிகார ஆட்சியும் துரோகத்தையும் கொலையையும் வளர்க்கும் செவிலியாக இருக்கின்றன. இதற்குமுன் பிரிட்டிஷ் குடும்பங்களில் நிகழ்ந்துள்ள துரோகக் கொலைகள் பல. ஆனால், தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சபை, தன்னையே ஒரு நீதி மன்றமாக அமைத்துக் கொண்டு, அரசனை விசாரிப்பதும், அவனுக்கு மரண தண்டனை விதிப்பதும், பிறகு அவன் தலையை வெட்டுவதும் புதுமையாகவும் ஆச்சரியமாகவும் இருந்தது.

ஆங்கிலேயர் எப்பொழுதுமே யதாபூர்விகள். அவர்கள் விரைவில் ஒன்றை மாற்றுவதற்கு உடன்பட மாட்டார்கள். அப்பேர்ப்பட்டவர்கள், கொடுங்கோலனும் துரோகியுமான ஒரு அரசனை நடத்தவேண்டிய விதம் இப்படித்தான் என்று உலகுக்கு எடுத்துக் காட்டுவதென்றால் அது விந்தையாகத்தான் இருக்கிறது. ஆனால், அந்தச் செய்கைக்கு ஆங்கிலேயர் அனைவரையும் பொறுப்பாளிகள் ஆக்குவது அவ்வளவு சரியல்ல. கிராம்வெலின் 'இரும்புப் படைஞர்' அதற்கு முக்கிய பொறுப்பாளிகள் என்று சொல்வது பொருத்தமாயிருக்கும்.

ஐரோப்பாவின் முடிமன்னர்களும், சீசர்களும், இளவரசர்களும், சிற்றரசர்களும் இதைக் கேட்டுப் பேரதிர்ச்சியுற்றார்கள். சாமானிய ஜனங்கள் துணிந்து இங்கிலாந்தின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவதென்றால் அவர்களுடைய கதி என்னவாகும்? அவர்களில் பலர் இங்கிலாந்தைத் தாக்கி நசுக்கியிருப்பார்கள். ஆனால், அப்போது இங்கிலாந்து திறமையற்ற ஒரு அரசனின் ஆளுகையின் கீழ் அகப்பட்டுக் கொண்டு விழிக்கவில்லை. முதல் தடவையாக இங்கிலாந்து ஒரு குடியரசு நாடாக விளங்கியது. அதைக் காப்பதற்குக் கிராம்வெலும் அவனுடைய சேனை வீரரும் சித்தமாயிருந்தனர். கிராம்வெல் ஒரு சர்வாதிகாரியைப் போலவே ஆண்டு வந்தான். அவன் 'ரட்சகப் பிரபு' என்று அழைக்கப்பட்டான். அவனுடைய கண்டிப்பான, திறமையான ஆட்சியின் கீழ் இங்கிலாந்தின் பலம் பெருகியது. அதன் கடற்படை டச்சு, பிரெஞ்சு, ஸ்பானியக் கடற்படைகளைப் போரில் புறங்கண்டது. முதல் தடவையாக இங்கிலாந்து ஐரோப்பாவின் தலைசிறந்த கடலரசாக விளங்கியது.

ஆனால், ஆங்கிலக் குடியரசு அற்பாயுசாக முடிந்துவிட்டது. முதலாவது சார்லசின் மரணத்துக்குப் பின்பு

அது பதினொரு ஆண்டுகளே நிலைத்திருந்தது. 1658-ல் கிராம்வெல் மரணமடைந்தான். இரண்டு வருஷம் பொறுத்துக் குடியரசு வீழ்ந்துவிட்டது. வெளிநாடுகளில் தஞ்சமடைந்திருந்த முதலாவது சார்லசின் குமாரன் இங்கிலாந்துக்குத் திரும்பி வந்தான். அவன் வரவேற்கப்பட்டு இரண்டாம் சார்லஸ் என்று முடிசூட்டப்பட்டான். அவன் இழிகுணம் படைத்தவன். அரசனுடைய தொழில் போக நுகர்ச்சிதான் என்பது அவனுடைய எண்ணம். ஆனால், அவன் பார்லிமெண்டுக்கு விரோதமாகப் போகாமல் ஜாக்கிரதையாக இருந்து வந்தான். அவனுக்குப் பிரெஞ்சு அரசன் ரகசியத்தில் லஞ்சம் கொடுத்து வந்தான். கிராம்வெல் காலத்தில் ஐரோப்பாவில் தான் அடைந்த உயர்நிலையை இங்கிலாந்து இப்போது இழந்துவிட்டது. டச்சுக்காரர் தேம்ஸ் நதிவரையில் வந்து இங்கிலீஷ் கடற்படையை நெருப்புக்கிரையாக்கினார்கள்.

சார்லசுக்குப்பின், அவனுடைய சகோதரனை இரண்டாவது ஜேம்ஸ் பட்டத்துக்கு வந்தான். உடனே அவனுக்கும் பார்லிமெண்டுக்கும் சச்சரவு ஏற்பட்டது. ஜேம்ஸ் ஒரு நல்ல கத்தோலிக்கன். அவன் போப்பாண்டவரின் உன்னதியை இங்கிலாந்தில் மீண்டும் நாட்ட விரும்பினான். ஆங்கில மக்கள் மத சம்பந்தமாக எக் கருத்துகள் கொண்டிருந்தாலும்—அவை அப்படி ஒன்றும் தெளிவானவை அல்ல—அவை போப்பாண்டவருக்கும், போப்பாண்டவர் முறைகளுக்கும் முற்றிலும் விரோதமாயிருந்தன என்பது மட்டும் நிச்சயம். எங்கும் பரவியிருந்த இவ்வுணர்ச்சியை எதிர்த்து இரண்டாவது ஜேம்ஸ் ஒன்றும் செய்ய முடியவில்லை. பார்லிமெண்டின் கோபத்துக்குப் பாத்திரமான அவன் பிரான்சுக்கு ஓடி அங்கே சரண் புகுந்தான்.

மறுபடியும் பார்லிமெண்டு அரசன்மீது வெற்றி பெற்றது. இம்முறை உள்நாட்டுப் போர் ஒன்றும் இன்றி அமைதியாகவே வெற்றி கிடைத்து விட்டது. இப்போது நாட்டில் அரசன் இல்லை. ஆனால், மறுபடியும் குடியரசாவதற்கு இங்கிலாந்து விரும்பவில்லை. ஆங்கிலேயனுக்குப் பிரபு என்றால் வெகு பிரியம் என்று சொல்வது வழக்கம். அதைவிட அவன் அரசவிருதுகளையும் ஆர்ப்பாட்டங்களையும் பெரிதும் விரும்புகிறான். ஆகவே, பார்லிமெண்டு புதிய அரசன் ஒருவனைத் தேட ஆரம்பித்தது. ஆரஞ்சு வமிசத்தில் ஒருவன் கிடைத்தான். நூறு ஆண்டுகளுக்கு முன், ஸ்பெயினுக்கு விரோதமான தாழ் நாடுகளின் சுதந்திரப் போராட்டத்தை நடத்திய மௌன வில்லியம் அந்த வமிசத்தில் ஜனித்தவர்தான். இப்போது, ஆரஞ்சு இளவரசனா யிருந்தவன் இன்னொரு வில்லியம். அவன் ஆங்கிலேய ராஜ குடும்பத்தைச் சேர்ந்த மேரி என்பவளை மணந்து கொண்டான். ஆகவே 1688-ல், வில்லியம் மேரி இருவருமே கூட்டு அரசர்கள் ஆனார்கள். இப்போது பார்லிமெண்டின் பேச்சுக்கு மறு பேச்சுக் கிடையாது. பார்லிமெண்டு பிரதிநிதித்துவத்தின் மூலம் ஜனங்களுக்கு அதிகாரமளிப்பதை நோக்கமாகக் கொண்ட ஆங்கிலப் புரட்சி பூரணமடைந்து விட்டது. அன்று தொட்டு எந்தப் பிரிட்டிஷ் அரசனோ அல்லது அரசியோ பார்லிமெண்டின் அதிகாரத்தை எதிர்க்கத் துணிந்ததில்லை. ஆனால், நேர்முகமாக ஆட்சேபிக்காமலும் எதிர்க்காமலும் மறைமுகமாகச் சூழ்ச்சி செய்வதற்கும் செல்வாக்கைக் காட்டுவதற்கும் பல வழிகள் இருக்கின்றன அல்லவா? பல பிரிட்டிஷ் அரசர்கள் அவ்வழிகளைக் கையாண்டிருக்கிறார்கள்.

பார்லிமெண்டு ஒப்புயர்வற்றதாகிவிட்டது. ஆனால், இந்தப் பார்லிமெண்டு என்பதென்ன? அது இங்கிலாந்து

மக்களின் பிரதிநிதி சபை என்று நினைத்து விடாதே. இங்கிலாந்தின் ஒரு சிறு பகுதிக்கே அது பிரதிநிதியா யிருந்தது. பிரபுக்கள் சபை என்பது தன் பெயருக்கு ஏற்ப பிரபுக்கள் அதாவது பெரிய நிலச் சுவான்தார்கள், மதகுருமார் ஆகியோரின் பிரதிநிதி சபையாகும். காமன்ஸ் சபைகூடப் பணக்காரர்களின் சபைதான். நிலம் படைத்தவர்களும் பெரிய வியாபாரிகளுமே அதில் அங்கம் வகித்தார்கள். வாக்குரிமை வெகு சிலருக்குத்தான் இருந்தது. நூறு வருஷங்களுக்கு முன் வரையில் இங்கிலாந்தில் 'சட்டைப்பைத் தொகுதிகள்' என்று அழைக்கப்பட்ட பல தொகுதிகள் இருந்தன. அதாவது, அத்தொகுதிகள் யாராவது ஒருவருடைய சட்டைப்பையில் இருக்கிறமாதிரி. அந்தத் தொகுதி முழுவதற்கும் ஒன்று அல்லது இரண்டு வாக்காளர்களே இருப்பார்கள். அவர்கள் பார்லிமெண்டுக்கு ஒரு அங்கத்தினரைத் தேர்ந்தெடுப்பார்கள்! 1793-ம் ஆண்டில் காமன்ஸ் சபையில் இருந்த 306 அங்கத்தினர்கள், மொத்தம் 160 வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்று சொல்லப்படுகிறது. 'ஓல்டு சாரம்' என்னும் ஒரு சிற்றூர் பார்லிமெண்டுக்கு இரண்டு அங்கத்தினர்கள் அனுப்பிவைத்ததாம்! ஆகவே, ஜனங்களில் பெரும்பாலோருக்கு வாக்குரிமை இல்லை, அவர்களுக்குப் பார்லிமெண்டில் பிரதிநிதித்துவமும் இல்லை என்பது நன்கு விளங்குகிறதல்லவா? அக்காலக் காமன்ஸ் சபையை ஜனப் பிரதிநிதி சபை என்று கூறுவது இழுக்காகும். பட்டணங்களில் தோன்றி வந்த புதிய மத்திய வகுப்பாருக்குக்கூட அதில் இடம் இல்லை. நிலம் படைத்த வகுப்புக்கும், பணம் படைத்த சில வியாபாரிகளுக்குமே அது பிரதிநிதியாக இருந்தது. பார்லிமெண்டு ஸ்தானங்களை விற்பதும் வாங்குவதும்கூட உண்டு. லஞ்சப் பேயின் அட்டகா

சத்தைக் கேட்க வேண்டியதில்லை. இந்தப் பித்தலாட்டம்
1832-ம் ஆண்டு வரையில், அதாவது 100 ஆண்டுகளுக்கு
முன் வரையில், மேளதாளத்துடன் நிகழ்ந்து வந்தது.
அந்த வருஷம் பெருத்த கிளர்ச்சிக்குப்பின் 'சீர்திருத்த
மசோதா' ஒன்று நிறைவேற்றப்பட்டது. அதன்
பேரில்தான் அதிகமான பேருக்கு வாக்குரிமை
கிடைத்தது.

ஆகவே, பார்லிமெண்டு அரசன்மீது கொண்ட
வெற்றி என்பது ஒரு சில பணக்காரர்களின் வெற்றியே
என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்குகிற
தல்லவா? இந்தச் சில நிலச்சுவான்தார்களும், சில வியா
பாரிகளுந்தான் இங்கிலாந்தை ஆண்டு வந்தார்கள். மற்ற
வகுப்புகளுக்கு, எந்த வகுப்புகளைத் தவிர தேசம்
என்பது வேறு இல்லையோ, அந்த வகுப்புகளுக்கு அர
சாங்கத்தில் யாதொரு செல்வாக்கும் கிடையாது.

இதைப் போலவே, ஸ்பெயினுடன் பெரும் போருக்
குப் பின் ஏற்பட்ட டச்சுக் குடியரசும் பணக்காரர்
களின் குடியரசுதான் என்பதை நீ மறந்து விடக்
கூடாது.

வில்லியம், மேரி இவர்களுக்குப் பிறகு மேரியின்
சகோதரியான ஆன் அரசியானுள். 1714-ல் அவள் இறந்த
பிறகு, அடுத்த அரசனை ஏற்பதில் சில கஷ்டங்கள்
ஏற்பட்டன. இறுதியில், பார்லிமெண்டு அரசனைக்
கொள்ள ஜெர்மனிக்குச் சென்றது. அவர்கள் ஹனே
வர் தேர்வு - இளவரசனுகிய ஒரு ஜெர்மானியனைக்
கொண்டுவந்து 'முதலாவது ஜார்ஜ்' என்று இங்கிலாந்
தில் முடி சூட்டினார்கள். பார்லிமெண்டு அவனைப்
பொறுக்கி எடுத்ததற்கு அவன் மந்த மதி படைத்திருந்
தது காரணமாயிருக்கலாம். புத்திசாலியான ஒரு
அரசன் பார்லிமெண்டு விவகாரங்களில் தலையிடுவான்.

அவன் முட்டாளாயிருந்து விட்டால் கவலையே இல்லை.
முதலாவது ஜார்ஜுக்கு ஆங்கிலம் பேசுவதற்குக்கூட
வராது. அதாவது, ஆங்கில அரசனுக்கு ஆங்கிலம்
தெரியாது. இது விந்தையாயில்லையா? அவனுடைய
மகன் இரண்டாவது ஜார்ஜுக்கும் ஆங்கிலம் தெரியாது.
இவ்வாறு, இங்கிலாந்தின் அரியாசனத்தில் ஹனேவர்
வமிசம் ஸ்தாபிக்கப்பட்டது. அது இன்னும் அங்கே
இருந்து வருகிறது. அது இங்கிலாந்தை ஆண்டு வரு
கிறது என்று சொல்வதற்கில்லை. ஆட்சியும் அரசும்
புரிவது பார்லிமெண்டேயன்றோ?

16, 17வது நூற்றாண்டுகளில் இங்கிலாந்துக்கும்
அயர்லாந்துக்கும் இடையே பெரிய சண்டையும் சச்சரவு
மாயிருந்து வந்தது. எலிசபெத், முதலாவது ஜேம்ஸ்
இவர்களின் ஆட்சிக் காலத்தில் அயர்லாந்தை ஜெயிப்
பதற்குரிய முயற்சிகளும், கலகங்களும், படுகொலைகளும்
நிகழ்ந்து வந்தன. அயர்லாந்தின் வடபாகத்தில், அல்ஸ்
டர் மாகாணத்திலுள்ள நிலங்களை ஜேம்ஸ் பெருவாரி
யாகப் பறிமுதல் செய்தான். பின்பு ஸ்காட்லாந்தி
லிருந்து பிராடெஸ்டண்டுகளைக் கொண்டு வந்து அங்கு
குடியேற்றினன். அந்நாளிலிருந்து அந்தப் பிராடெஸ்
டண்டுகள் அங்கே இருந்து வருகிறார்கள். அயர்லாந்தும்
இருபிரிவாகப் பிளவுபட்டிருக்கிறது. ஒன்றில் சுதேச
ஐரிஷ்காரரும் மற்றொன்றில் ஸ்காட்லாந்திலிருந்து வந்து
குடியேறியவர்களும் வாழ்ந்து வருகிறார்கள். ஒன்று
ரோமன் கத்தோலிக்கு, மற்றொன்று பிராடெஸ்டண்டு.
இரண்டுக்கும் தீராத பகைமை. இதனால், இங்கிலாந்து
லாபமடைந்து வருகிறது. வழக்கம் போல் அது பிரித்
தாளும் கொள்கையை அனுஷ்டிக்கிறது. இப்பொழுது
கூட அயர்லாந்தின் மிகப் பெரிய பிரச்சினை அல்ஸ்டர்
பிரச்சினை தான்.

இங்கிலாந்தில் உள்நாட்டுப் போர் நடந்த காலத்தில் அயர்லாந்தில் பல ஆங்கிலேயர் கொல்லப்பட்டார்கள். இதற்குப் பழி வாங்குவதற்காக, கிராம்வெல் ஐரிஷ்காரரைப் படுகொலை புரிந்தான். இன்னும் அதை அயர்லாந்து மறந்துவிடவில்லை. அதற்கு ஏற்பட்ட அந்த மனப்புண் இன்னும் ஆறவில்லை. சண்டையும், சண்டைக்குப் பின் சமாதான உடன்படிக்கையும், உடன்படிக்கையை இங்கிலாந்து மீறுவதும் இப்படி வாலாயமாக நடந்து வந்தது. அயர்லாந்தின் கதை மிக நீண்ட சோகக் கதையாகும்.

ஏறக்குறைய இந்தக் காலத்தில்தான் (1667-லிருந்து 1745-வரை) 'கலிவர் யாத்திரை' என்னும் நூலின் ஆசிரியராகிய ஜானதன் ஸ்விப்ட் என்பவர் வாழ்ந்து வந்தார். 'கலிவர் யாத்திரை' தலை சிறந்த குழந்தை-இலக்கியம். ஆனால், அது உண்மையில் அக்கால இங்கிலாந்தைக் குறித்து எழுதிய ஒரு கடுமையான வசை நூலாகும். 'ராபின்சன் குரூசோ' என்னும் நூலின் ஆசிரியரான டானியேல் டி போ என்பவரும் ஸ்விப்ட் காலத்தில் வாழ்ந்தவரே ஆவர்.

88

பாபர்

செப்டம்பர் 3, 1932.

இந்தியாவிற்குத் திரும்பி வருவோம். சிறிது காலமாக நாம் ஐரோப்பாவில் இருந்து விட்டோம். 16, 17-ஆம் நூற்றுண்டுகளில், மேற்புறத்தில் காணப்பட்ட கொந்தளிப்புக்கும் போராட்டத்துக்கும் அடியில் அங்கே என்ன நிகழ்ந்து வந்ததென்பதைப் பல கடிதங்களில் அறிய முயன்றேம். ஐரோப்பாவின் அக்காலப் பகுதியைப் பற்றி உன் மனதில் என்னென்ன அபிப்பிராயங்கள் உதயமாகி இருக்கின்றனவோ நான் அறியேன். உன் அபிப்பிராயம் எப்படியிருந்தாலும், பொதுவாக நல்லதும் கெட்டதும் கலந்ததாகத்தான் அதைப்பற்றிய எந்த அபிப்பிராயமும் இருக்க முடியும். அதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஏனெனில், ஐரோப்பாவே அக்காலத்தில் நல்லதும் கெட்டதும் கலந்த ஒரு விசித்திரமான இடமாகத்தான் காட்சி அளித்தது. ஓயாத யுத்தம், மிருகத்தனமான செயல்கள், சரித்திரத்திலேயே எங்கும் காணுத மத வெறி, மதக் கொடுமைகள், அரசரின் தெய்வீக உரிமைக் கொள்கை, அவர்களுடைய யதேச்சாதிகார அமுல், உயர்தன்மைகெட்ட உயர்குலப் பிரபுத்துவம், மக்களைச் சுரண்டும் மானங்கெட்ட பிழைப்பு இவையனைத்தும் ஐரோப்பாவில் நிரம்பியிருந்தன. இதையும் பார்த்துவிட்டுச் சீனுவையும் பார்த்தால் அது ஐரோப்பாவைவிடச் சகாப்தங்கள் கணக்கில் முற்போக்கு வாய்ந்ததாகக் காணப்படுகிறது. அது கலை யழகும் கலைப்பண்பும் பெற்றுப் பொறுமையையே அணிகலனுகக் கொண்டு அமைதியுடன் விளங்கு

கிறது. இந்தியாவும் பிளவுபட்டு இழிநிலை யெய்தியிருப்பினும், ஐரோப்பாவைவிடப் பலவழிகளில் மேன்மையுற்றுப் பொலிகிறது.

ஐரோப்பாவின் ஒரு முகம் மேற்கூறியவாறு விகாரமுற்றிருந்தாலும், அதன் இன்னொரு முகம் பார்ப்பதற்கு அழகாகவும் இன்பமாகவும் இருந்தது. அங்கே தற்கால விஞ்ஞான சாஸ்திரம் முதன் முதலாகத் தோன்றுவதைக் காண்கிறோம். பொது ஜன சுதந்திரக் கொள்கை வளர்ந்து அரசரின் அரியாசனங்களை ஆட்டிவைக்கின்றன. இவற்றிற்கடியில், இவற்றுக்கும் மற்றச் செயல்களுக்கும் காரணமாய், மேற்கு, வடமேற்கு ஐரோப்பிய நாடுகளின் வர்த்தக, கைத்தொழில் வளர்ச்சி விளங்குகிறது. பெரிய நகரங்கள் தோன்றுகின்றன. அவை தூர தேசங்களுடன் வியாபாரம் செய்யும் வியாபாரிகளாலும் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களாலும் நிறைந்திருக்கின்றன. மேற்கு ஐரோப்பா வெங்கும் தொழிற் சங்கங்கள், அதாவது, கைவினைஞர் தொழிலாளர் ஆகியோரின் சங்கங்கள் தோன்றுகின்றன. வியாபாரிகளும் தொழில் நடத்தும் முதலாளிகளும் சேர்ந்து 'பூர்ஷுவா' வகுப்பு உண்டாகிறது. அவர்கள் தான் புதிய மத்திய வகுப்பினர். இந்த வகுப்பு விருத்தியடைகிறது. ஆனால் இதற்குப் பல தடைகள்—சமய, சமூக, அரசியல் தடைகள் ஏற்படுகின்றன. அரசியலிலும் சமூக அமைப்பிலும் நிலமானிய முறையின் சின்னங்கள் இன்றும் போகாமல் இருந்து வருகின்றன. கடந்த காலத்தைச் சேர்ந்த அம்முறை புதிய நிலைமைகளுக்குப் பொருந்துவதாயில்லை. அது வியாபார, தொழில் வளர்ச்சியைத் தடை செய்தது. நிலமானியப் பிரபுக்கள் பலவிதமான சுங்கங்களும் வரிகளும் விதிப்பது வழக்கம். இது வியாபார வகுப்பினருக்கு எரிச்சலை

உண்டாக்கியது. ஆகவே, அவர்கள் பிரபுக்களின் அதிகாரத்தைத் தொலைக்க முற்பட்டார்கள். அரசனுக்கும் நிலமானியப் பிரபுக்களைக் கண்டால் பிடிக்கவில்லை. ஏனெனில், அவர்கள் அரசனுடைய அதிகாரத்தையும், ஆக்கிரமிக்க விரும்பினார்கள். அதனால், அரசனும் பூர்ஷுவா வகுப்பும் ஒன்று சேர்ந்து பிரபுக்களுடைய செல்வாக்கை ஒழித்தார்கள். அதன் பயனாக அரசனுடைய அதிகாரம் பெருகிற்று. அவன் முன்னையினும் தன்னிச்சையாக ஆளத் தொடங்கினான்.

அவ்வாறே, மேற்கு ஐரோப்பாவின் அக்காலச் சமய அமைப்பும், வியாபாரத்தைப் பற்றிய கருத்துகளும் வியாபாரத் தொழில் வளர்ச்சிக்குத் தடைகளாக வந்து முளைத்தன. மதமும், நிலமானிய முறையும் பல வழிகளில் தொடர்பு கொண்டவை. நான் ஏற்கெனவே கூறியுள்ளபடி, மதஸ்தாபனத்தை மிகப் பெரிய நிலமானியப் பிரபு என்று சொல்ல வேண்டும். பல வருஷங்களுக்கு முன்பே தனி மனிதர்களும் சில கோஷ்டிகளும் தோன்றி ரோமானிய மதஸ்தாபனத்தைக் குறைகூறியும் எதிர்த்தும் வந்தார்கள். அதனால், பெரிய வித்தியாசம் எதுவும் ஏற்படவில்லை. இப்பொழுதோ வெனில், வளர்ந்து வரும் பூர்ஷுவா வகுப்பு முழுதும் மாறுதலை வேண்டி நின்றது. ஆகவே, சீர்திருத்த இயக்கம் மிகவும் பெரிதாக விளைந்தது.

மேற்கூறிய மாறுதல்களும் இதற்கு முன் நாம் பார்த்த வேறு பல மாறுதல்களும் பூர்ஷுவா வகுப்பை முன்னுக்குக் கொண்டு வந்த புரட்சியின் பல அம்சங்களாகும். மேல் ஐரோப்பிய நாடுகளில் இம்மாறுதல் ஏறக்குறைய ஒரே மாதிரியாகவே வந்துள்ளது. ஆனால், வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு காலத்தில் இது நிகழ்ந்து வந்தது. இந்தக் காலத்திலும் இதற்குப் பின்பு

நீண்ட காலம் வரையிலும் கீழ் ஐரோப்பா தொழில் வளர்ச்சியில் பிற்போக்கா யிருந்தபடியால் அங்கு இத் தகைய மாறுதல் எதுவும் நிகழவில்லை.

சீனாவிலும் இந்தியாவிலும் கூட அளவற்ற கை வினைஞர்களும் தொழிலாளிகளும் இருந்தார்கள்; தொழிற் சங்கங்களும் இருந்தன. கைத்தொழில் மேல் ஐரோப்பாவைவிடச் சற்று அதிகமாகவே முன்னேறி யிருந்தது என்று சொல்லலாம். ஆனால், இக்கட்டத்தில் ஐரோப்பாவில் தோன்றி வளர்ந்து வரும் விஞ்ஞான அறிவை நாம் இங்கே காண முடியவில்லை. ஐரோப்பாவின் பொது ஜன சுதந்திர வேட்கையும் இங்கே காணப்பட வில்லை. இவ்விரு நாடுகளிலும் மத சுதந்திரமும், பட்டணம், கிராமம், சங்கம் ஆகியவற்றின் ஸ்தல சுதந் திரமும் தொன்று தொட்டு வழக்கத்தில் இருந்து வருகின் றன. தங்கள் தங்கள் ஸ்தல விஷயங்களில் தலையிடாத வரையில் அரசன் எதைச் செய்தாலும் ஜனங்கள் கவலை கொள்ளவில்லை. இரு நாடுகளின் சமூக அமைப்பும், நீண்ட காலமாக இருந்து வருபவையாகவும், ஐரோப்பிய சமூக அமைப்பு எதிலும் காணப்படாத நிலைத்த தன்மை கொண்டவையாகவும் இருந்தன. அந்த அமைப்பின் நிலைத்த தன்மையும் இறுகிய தன்மையுமே வளர்ச்சியைத் தடை செய்து விட்டன என்று கூறலாம். இந்தியாவில் பிளவும் சீர்கேடும் ஏற்பட்டதன் பலன் வட இந்தியாவை மொகலாய பாபர் ஜெயிப்பதில் வந்து முடிந்தது. சுதந் திரத்தைப் பற்றிய பழைய ஆரியக் கொள்கைகளை ஜனங்கள் அடியோடு மறந்து விட்டது போல் காண் கிறது. எந்த அரசன் வந்தாலும் அவனை அடி பணிந்து வாழும்படியான அவ்வளவு நிர்க்கதியான நிலைமைக்கு அவர்கள் வந்துவிட்டார்கள். தேசத்திற்குப் புதிய ஜீவனைக் கொண்டு வந்த முஸ்லிம்கள் கூட மற்றவர்

களைப் போலவே தன்மை கெட்டும் நிலையழிந்தும் போய் விட்டார்கள்.

இவ்வாறு, ஐரோப்பா புத்துயிரும் பேராற்றலும் பெற்று விளங்குகிறது. கீழ்நாடுகளின் பழைய நாகரிகங் களுக்கு ஐரோப்பாவின் புதிய ஆற்றலும் வேகமும் இல்லை. ஆகவே, மெள்ள மெள்ள ஐரோப்பா கீழ்நாடுகளை பின்னே விடுத்துத் தான் முன்னேறிச் செல்கிறது. ஐரோப்பியப் புதல்வர்கள் உலகின் நான்கு மூலைகளுக் கும் செல்கிறார்கள். ஐரோப்பியக் கடலோடிகள் வியா பாரத்தையும் அதனால் வரும் செல்வத்தையும் விரும்பி அமெரிக்காவுக்கும் ஆசியாவுக்கும் போகிறார்கள். தென் கிழக்கு ஆசியாவில் போர்த்துகீசியர் அரேபிய மலாக்கா சாம்ராஜ்யத்துக்கு முற்றுப்புள்ளி வைப்பதைக் கண்டோம். அவர்கள் இந்தியக் கரை யோரங்களிலும் கீழ்க்கடல்களிலும் எல்லைக் காவல் இடங்களை ஏற் படுத்திக் கொள்ளுகிறார்கள். ஆனால், சீக்கிரத்திலேயே இரண்டு புதிய கடலரசுகள், ஹாலந்தும் இங்கிலாந்தும், தோன்றுகின்றன. இதுவரை போர்ச்சுகல் ஏகபோக மாக அனுபவித்து வந்த வாசனைத் திரவிய வியாபா ரத்தில் அவை போட்டியிடுகின்றன. அவை கிழக்கி லிருந்து போர்ச்சுகலை ஓட்டி விடுகின்றன. அதனால் போர்ச்சுகலின் கீழ்சாம்ராஜ்யமும் வியாபாரமும் நசித்துப் போகின்றன. டச்சுக்காரர் ஓரளவு போர்த்து கீசியரின் ஸ்தானத்தை அடைகிறார்கள். அவர்கள் கிழக்குத் தீவுகளைக் கைப்பற்றிக் கொள்ளுகிறார்கள். 1600-ம் ஆண்டில் எலிசபெத் ராணி லண்டன் வியாபாரக் கம்பெனி ஒன்றுக்கு இந்தியாவில் வியாபாரம் செய் வதற்கு ஒரு உரிமைப்பத்திரம் அளிக்கிறாள். அதுதான் கிழக்கிந்தியக் கம்பெனி. இரண்டாண்டுகளுக்குப் பிறகு டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி தோன்றுகிறது.

இவ்வாறு, ஆசியாவில் ஐரோப்பா நாடுகவரும் சகாப்தம் ஆரம்பமாகிறது. நெடுநாள் வரையில் இது மலாய் நாடு, கிழக்குத் தீவுகளோடு இருந்துவந்தது. மிங் மன்னர்களின் ஆட்சியிலும், 17-வது நூற்றாண்டின் இடைக் காலத்தில் வந்த முதல் மஞ்சு மன்னர்களின் ஆட்சியிலும் சீனா மிகுந்த பலம் படைத்திருந்தது. ஆகவே, ஐரோப்பா அங்கு வாலாட்டுவதற்கில்லை. 1641-ல் ஜப்பான் எல்லா அந்நியர்களையும் விரட்டி விட்டுத் தானும் கபாடபந்தனம் செய்துகொள்ளுகிறது. அவ்வளவு தூரத்திற்கு அது போய்விடுகிறது. இந்தியா என்னவாயிற்று? நமது கதை இந்தியாவில் சற்று பின்தங்கி விட்டது. அந்தக் குறையை நாம் நிரப்பவேண்டும். புதிய மொகலாய வமிச ஆட்சியின்கீழ் இந்தியா மகா வல்லமை பொருந்திய முடியரசாக விளங்கியது என்பதை விரைவில் காண்போம். ஆகவே, இந்தியாவில் ஐரோப்பியப் படையெடுப்பு அபாயமோ அல்லது அதற்கு இடமோ இல்லை. ஆனால், இதற்கு முன்பே கடலாதிக்கம் ஐரோப்பாவின் கைக்கு வந்துவிட்டது.

ஆகவே, நாம் மீண்டும் இந்தியாவுக்கு வருகிறோம். ஐரோப்பா, சீனா, ஜப்பான், மலாயாசியா ஆகிய இடங்களில் நாம் 17-வது நூற்றாண்டை முடித்து விட்டு 18-வது நூற்றாண்டின் விளிம்பில் நின்றுகொண் டிருக்கிறோம். ஆனால், இந்தியாவில் மட்டும் நாம் இன்னும் 16-வது நூற்றாண்டின் தொடக்கத்திலேயே இருக்கிறோம். பாபர் இந்தியாவுக்கு வந்தகாலம் அதுதான்.

1526-ல், இழிந்தவனும் வலியற்றவனுமாகிய ஆப்கானிய சுல்தான் மீது பாபர் அடைந்த வெற்றி இந்தியாவில் ஒரு புது சகாப்தத்தையும் ஒரு புது சாம்ராஜ்யத்தையும்—மொகலாய சாம்ராஜ்யம்—ஆரம்பித்து வைத்தது. அந்தச் சாம்ராஜ்யம், இடையில் சிறிது காலம் நீங்கலாக,

1526-லிருந்து 1707-வரை, அதாவது 181 ஆண்டுகள் நிலை பெற்றிருந்தது. அக்காலத்தில், அது ஆற்றலும் பெருமையும் வாய்ந்து விளங்கியது. இந்திய மகா மொகலாய சக்கரவர்த்தியின் பேரும் புகழும் ஆசியா, ஐரோப்பா எங்கணும் பரவியது. அந்த வமிசத்தில் ஆறு பெரிய சக்கரவர்த்திகள் தோன்றினார்கள். அதற்குப்பின் சாம்ராஜ்யம் சிதைவுற்றது. மராட்டரும் சீக்கியரும் பிறரும் அதிலிருந்து தலைக்கொரு ராஜ்யம் ஏற்படுத்திக் கொண்டார்கள். அவர்களுக்குப் பின்வந்த பிரிட்டிஷார், மத்திய அரசாங்கம் இன்மையையும் நாட்டிலுள்ள குழப்பத்தையும் பயன்படுத்திக் கொண்டு, சிறிது சிறிதாகத் தங்களுடைய ஆதிக்கத்தை ஸ்தாபித்துக் கொண்டார்கள்.

நான் பாபரைப் பற்றி ஏற்கெனவே சிறிது கூறியுள்ளேன். செங்கிஸ்கானும் தைமூரும் பாபருடைய மூதாதையர் ஆவர். அவர்களுடைய பெருமையிலும் ஆண்மையிலும் ஓர் அம்சம் பாபரிடமும் காணப்பட்டது. ஆனால், செங்கிஸ்கானின் காலத்தில் இருந்ததைவிட மங்கோலியர் இப்போது அதிகமாகத் திருந்தி யிருந்தார்கள். பாபர் உயர்ந்த பண்பும் இனிய இயல்பும் வாய்ந்தவன். குறுகிய மதப்பற்றோ ஜாதிப்பற்றோ அவனிடம் கிடையா. அவனுடைய முன்னோர்களைப்போல் அவன் எதையும் அழிக்க வில்லை. கலைகள், இலக்கியம் என்றால் அவனுக்கு உயிர். அவனே ஒரு பாரசீகக் கவிஞன். காவையும் பூவையும் அவன் காதலித்தான். இந்தியாவின் வெப்பம் தாளாமல் அவன் மத்திய ஆசியாவிலுள்ள தன் தாயகத்தை அடிக்கடி எண்ணி ஏங்குவதுண்டு. "பர்கானாவிலுள்ள நீலாம்பர மலர்களின் அழகை என்னென்பேன்! ரோஜாவும் 'துலிப்'பும் எங்கும் மண்டி ஒரே மலர்க் காடாகவன்றோ அது இப்போது

காட்சி அளிக்கும்!" என்று அவன் தன்னுடைய வாழ்க்கைக் குறிப்பில் கூறுகிறான்.

அவனுடைய தந்தை இறந்தபோது பாபருக்கு வயது பதினொன்றுதான். அந்த இளம் வயதில் அவன் சாமர்கண்டின் அரசனானான். அதனால் அவனுக்குச் சுகம் உண்டாகவில்லை. அவனை நாலாபக்கமும் பகைவர் சூழ்ந்திருந்தனர். ஆகவே, பள்ளிக்கூடத்தில் ஏடும் எழுத்தாணியும் பிடிக்க வேண்டிய வயதில் அவன் போர்க்களத்தில் வாளைப் பிடிக்க வேண்டியவனானான். அவன் ஒரு முறை சிம்மாசனத்தை இழந்து மீண்டும் அதைக் கைப்பற்றினான். புயலை ஒத்த அவனுடைய வாழ்க்கையில் அவன் விளைத்த வீரச் செயல்கள் மிகப் பல. போரைப் பயின்றதோடு அவன் நின்றுவிடவில்லை. கூடவே, இலக்கியம், கலை, கவிதை ஆகியவற்றையும் அவன் பயின்று வந்தான். அவன் காபூலை வென்றான். ஆசை தூண்டவே சிந்து நதியைக் கடந்து இந்தியாவுக்குள் நுழைந்தான். அவனுடைய சேனை அளவில் மிகவும் சிறியது. ஆனால், அப்போது ஐரோப்பாவிலும் மேற்கு ஆசியாவிலும் புதிதாக உபயோகிக்கப்பட்டு வந்த பீரங்கிப் படை அவனிடம் இருந்தது. அவனுடைய சிறிய, பயிற்சி மிக்க சேனைக்கும் பீரங்கிப் படைக்கும் முன்னால் ஆப்கானியப் பெருஞ் சேனை நிற்கலாற்றாது சிதறி ஓடியது. பாபருக்கு வெற்றி கிட்டியது. ஆனால், அவனுடைய கஷ்டங்கள் தீர்ந்துவிடவில்லை. அவனுடைய தலைவிதி பன்முறை ஒரு மயிரிழையில் தொங்கி நின்றது. ஒரு முறை அவனுக்குப் பெருத்த அபாயம் நேரவிருந்தது. அவனுடைய தளபதிகள் வடக்கே திரும்பிப் போய்விடலாமென்று அவனுக்கு ஆலோசனை கூறினார்கள். ஆனால், அவன் வைரத்தால் ஆக்கப்பட்டிருந்தான். 'புறங்காட்டுவதை விட இறந்தொழிவேன்' என்று

அவன் பகர்ந்தான். அவனுக்கு மது என்றால் அதி பிரியம். ஆனால், அத்தருணத்தில் அவன் இனி மது அருந்துவதில்லை என்று விரதம் பூண்டான். உடனே அவன் தன்னுடைய மதுக் கிண்ணங்கள் எல்லாவற்றையும் உடைத்தெறிந்தான். அவனுக்கு வெற்றி கிடைத்தது. அவன் கடைசி வரையில் மது அருந்துவதில்லை என்னும் விரதத்தைக் காப்பாற்றினான்.

பாபர் இந்தியாவுக்கு வந்து நான்கு ஆண்டுகள் நிறையு முன்பே இறந்து விட்டான். அக்காலம் முழுதையும் அவன் போரில் செலவழித்தான். அவனுக்கு ஓய்ச்சல் ஒழிவு என்பதே இல்லை. அதனால், அவன் இந்தியாவைப்பற்றி அதிகமாக அறிந்துகொள்ள முடியவில்லை. இந்தியாவுக்கு அவன் அந்நியனாகவே இருந்து விட்டான். அவன் ஆக்ராவில் அழகிய தலைநகர் ஒன்றை நிருமாணிக்கத் திட்டம் வகுத்தான். சிறந்த சிற்பி ஒருவனை அழைத்து வருமாறு அவன் கான்ஸ்டாண்டிநோபிளுக்குத் தூது அனுப்பினான். ராஜ கெம்பீர சுலேமான் கான்ஸ்டாண்டிநோபிளில் அழகிய கட்டிடங்கள் கட்டிக்கொண்டிருந்த காலம் அது. சினான் என்பவன் புகழ்பெற்ற உதுமானியச் சிற்பி. அவன் தன்னுடைய பிரிய சிஷ்யனான யூசுப்பை இந்தியாவுக்கு அனுப்பி வைத்தான்.

பாபர் தன்னுடைய வாழ்க்கை அனுபவங்களை எழுதி வைத்திருக்கிறான். அது மிகவும் இனிமையான நூல். அதன் மூலமாக நாம் அவனுடைய அந்தரங்க இயல்புகளை நன்கு அறிய முடிகிறது. அவன் ஹிந்துஸ்தானத்தைப் பற்றியும், அதன் மிருகங்கள், விருக்ஷங்கள், பழங்கள், புஷ்பங்கள் முதலியவை பற்றியும் கூறுகிறான். தவளைகளைக்கூட அவன் மறந்துவிடவில்லை. அவனுடைய தாய் நாட்டின் முலாம் பழங்களையும், திராட்சைப் பழங்களையும், நானாவித மலர்களையும் எண்ணி எண்ணி அவ

னுடைய மனம் ஏங்குகிறது. ஹிந்துஸ்தானத்து மக்களைக் கண்டு அவனுக்குப் பெரிய ஏமாற்றம் ஏற்பட்டது. அதை அவன் வெளியிடுகிறான். அவனுடைய அபிப்பிராயத்தில் அவர்களிடம் நல்ல அம்சம் ஒன்று கூட இல்லை. அவன் இந்தியாவில் இருந்த நாலு வருஷமும் போரில் கழிந்தபடியால், ஒரு வேளை அவன் அவர்களை நன்கு அறிய முடியாது போயிருக்கலாம். பண்பாடு மிக்க உயர் வகுப்பார் தங்கள் நாட்டைப் புதிதாக வென்ற அவனிடமிருந்து ஒதுங்கி நின்றிருக்கலாம். மேலும், புதிதாக ஒரு நாட்டுக்கு வந்தவன் அந்நாட்டு மக்களின் வாழ்க்கை நுட்பங்களையும் கலைப் பண்பையும் உணர்வது எளிதல்ல. காரணம் எதுவாயினும், இந்நாட்டு மக்களிடமோ அல்லது அவர்களைச் சிறிது காலமாக ஆண்டு வந்த ஆப்கானியரிடமோ பாபர் யாதொரு சிறப்பையும் காணவில்லை. அவன் ஒவ்வொன்றையும் கூர்மையாகக் கவனித்திருக்கிறான் என்பதில் ஐயமில்லை. நாட்டுக்குப் புதியவன் என்பதற்காக அவன் கூறுவதில் சற்றுத் தள்ளிப் பார்த்தாலும், அக்காலத்தில் வட இந்தியா மிகவும் தாழ்வுற்றிருந்தது என்பது தெள்ளெனப் புலப்படுகிறது. அவன் தென்னிந்தியாவுக்குப் போகவே இல்லை.

“ஹிந்துஸ்தானத்தின் சாம்ராஜ்யம் மிகப் பரந்தது, ஜனம் நிறைந்தது, வளம் கொழிப்பது. கிழக்கிலும், தெற்கிலும், மேற்கிலும் கூட அதனைக் கடல் சூழ்ந்திருக்கிறது. வடக்கே காபூலும், கஜினியும், கண்டஹாரும் இருக்கின்றன. ஹிந்துஸ்தானம் முழுவதற்கும் தலைநகர் டில்லி” என்று பாபர் கூறுகிறான். பாபர் இந்தியாவுக்கு வந்த காலத்தில் அது பல ராஜ்யங்களாகப் பிளவுபட்டிருந்தது. ஆயினும், அவன் இந்தியா முழுதையும் ஒன்றாகக் கருதுவதைக் காண நாம் உவகை கொள்கி

றோம். சரித்திரம் முழுதும் இந்தியாவின் இந்த ஒருமைத் தன்மை நிலைபெற்று வந்திருக்கிறது.

பாபர் இந்தியாவை மேலும் வருணிக்கிறான் :

“ஹிந்துஸ்தானம் ஒரு அற்புதமான நாடு. நமது நாடுகளை நோக்கும்போது அதை ஒரு தனி உலகம் என்றே கூறவேண்டும். அதன் மலைகளும் ஆறுகளும், காடுகளும் சமவெளிகளும், மிருகங்களும் தாவரங்களும், காற்றும் மழையும், அங்கு வாழ்வோரும் அவர் பேசும் மொழிகளும் எல்லாம் வேறு விதமாயிருக்கின்றன. சிந்துவைக் கடந்தவுடன் தென்படும் தேசம், மரங்கள், கற்கள், நாடோடி ஜாதிகள், மக்களின் பழக்க வழக்கங்கள் எல்லாம் ஹிந்துஸ்தானத்துக்கே உரியன. இங்குள்ள பாம்புகள் கூட வேறுமாதிரியாக இருக்கின்றன. ஹிந்துஸ்தானத்துத் தவளைகளை ஒருவன் அவசியம் பார்க்கவேண்டும். அவை, நமது நாட்டில் காணப்படும் வகையைச் சேர்ந்தனவாயினும், நீரின் மீது ஆறேழு கஜ தூரம் வரையில் தத்திச் செல்கின்றன.”

பிறகு அவன் ஹிந்துஸ்தானத்தின் விலங்கு வகைகள், மர வகைகள், பழவகைகள், பூவகைகள் ஆகியவற்றை அடுக்கிக்கொண்டே போகிறான். அவன் நம் நாட்டு ஜனங்களைப்பற்றிக் கூறுவதைக் கேள் :

“ஹிந்துஸ்தானத்தில் நம்மைக் கவர்ந்து மகிழ்ச்சியூட்டும் இன்பங்கள் மிகவும் குறைவு. ஜனங்கள் பார்வைக்கு அழகாக இல்லை. நட்பின் நயங்களையோ, ஒருவரோடொருவர் அந்நியோன்னியமாகக் கலந்து உறவாடுவதால் வரும் இன்பங்களையோ அவர்கள் அறியார்கள். அவர்களிடம் மேதையில்லை, உணர்வு இல்லை, மரியாதை இல்லை, அன்பு இல்லை; தங்களுடைய கைத்தொழில்களை வகுத்துக்கொள்ளும் அறிவு அவர்களுக்கு இல்லை; அவற்றைச் செய்வதற்கு வேண்டிய

கருவி முதலிய சாதனங்களைக் கண்டுபிடிக்கும் திறனும் அவர்களுக்கு இல்லை. சிற்ப அறிவோ திறமையோ அவர்களுக்கு இல்லை. அவர்களிடம் நல்ல குதிரைகள் இல்லை. நல்ல மாமிசம் இல்லை, திராட்சைப் பழங்கள் இல்லை, தர்ப்பூசினிப் பழங்கள் இல்லை, வேறு சுவை மிக்க பழங்களும் இல்லை, பனிக்கட்டி (ஐஸ்) யோ, குளிர்ந்த நீரோ இல்லை, நாவிற்கு இனிய உணவு இல்லை, நல்ல ரொட்டி இல்லை, நீராட்ட விடுதிகள் இல்லை, கலாசாலைகள் இல்லை, தீவட்டிக்ள் இல்லை, மெழுக்கு வர்த்திகள் இல்லை, மெழுக்குவர்த்தித் தண்டுகள் இல்லை." பின் என்னதான் அவர்களிடம் இருந்தது என்று நமக்கு கேட்கத் தோன்றுகிறதல்லவா? இதை எழுதியபோது பாபருக்கு இந்நாட்டினிடம் மிகவும் அலுப்புத் தட்டிப்போயிருக்க வேண்டும்.

அவன் மேலும் கூறுகிறான் :

"ஹிந்துஸ்தானத்தின் முக்கியச் சிறப்பு என்னவென்றால் அதன் பரப்பும், பொன் வெள்ளி இவற்றின் மிகுதியும் ஆகும். ஹிந்துஸ்தானத்தில் இன்னொரு சவுகரியமும் உண்டு. ஒவ்வொரு தொழிலிலும் வியாபாரத்திலும் அளவற்ற பேர் ஈடுபட்டிருக்கிறார்கள். எந்த வேலையானாலும், எந்தத் தொழிலானாலும் அதற்கென்று ஒரு கூட்டம் எப்போதும் தயாராயிருக்கிறது. அந்தத் தொழிலும் வியாபாரமும் அவர்களுக்குத் தொன்று தொட்டே தலைமுறைதத்துவமாக வந்துகொண்டிருக்கின்றன."

பாபரின் வாழ்க்கைக் குறிப்புகளிலிருந்து நான் சற்று அதிகமாகவே மேற்கோள்கள் எடுத்துக் காட்டிவிட்டேன். ஒரு மனிதனை உண்மையாக அறிவதற்கு அத்தகைய நூல்கள் பெரிதும் உதவுகின்றன. அம்மனிதனைப்பற்றிய வருணனை எதுவும் அவனை அவ்வளவு தெளிவாக எடுத்துக் காட்டுவதில்லை.

1530-ல், தனது நாற்பத்தொன்பதாவது வயதில், பாபர் மரணமடைந்தான். அவனுடைய மரணத்தைப் பற்றி ஒரு கதை வழங்குகிறது. அவனுடைய மகனான ஹுமாயூன் நோய்வாய்ப்பட்டிருந்தானாம். தன்னுடைய மகன் மீதுள்ள பரிவு காரணமாக, அவன் பிழைத்துக் கொண்டால் தானே தன்னுயிரைக் கொடுத்து விடுவதாகப் பாபர் சொல்லிக் கொண்டானாம். அன்றைய தினத்திலிருந்து ஹுமாயூன் குணமடைந்து வந்ததாகவும் சில நாட்களில் பாபர் இறந்து விட்டதாகவும் சொல்லுகிறார்கள்.

பாபருடைய சவத்தைக் காபூலுக்குக் கொண்டு போய், அங்கே அவனுக்குப் பிரியமான ஒரு பூஞ்சோலையில் அதைப் புதைத்தார்கள். தான் எந்தப் பூக்களை எண்ணி வாடினானோ அவற்றிடமே அவன் சென்று சேர்ந்து விட்டான்.

89

அக்பர்

செப்டம்பர் 4, 1932.

பாபர், வடஇந்தியாவின் பெரும் பகுதியைத் தன்னுடைய சேனாபதித்துவத்தாலும், போர்த்திறமையாலும் ஜெயித்திருந்தான். அவன் டில்லியிலிருந்த ஆப்கானிய சுல்தானை எளிதில் வென்றுவிட்டான். ஆனால், சூரனான சித்தூர் ராணாசங்கனின் தலைமையில் திரண்டெழுந்த ரஜபுத்திரர்களை வெல்வது அவனுக்கு அவ்வளவு எளிதாயில்லை. ராணாசங்கன் ரஜபுத்திர சரத்திரத்திலேயே அழியாப்புகழ் பெற்றவன். பாபர் ரஜபுத்திரர்களை வென்றானாயினும் தன் மகனான ஹுமாயூனுக்குக் கஷ்டமான காரியத்தையே விடுத்துச் சென்றான். ஹுமாயூன் நல்ல கல்விமான், கலைப்பண்பு மிக்கவன்; ஆனால், தன் தந்தையைப் போல் போர்வீரன் அல்ல. அவனுடைய புதிய சாம்ராஜ்யமெங்கும் தொந்தரை நேர்ந்தது. கடைசியாக, 1540-ல், அதாவது பாபர் இறந்து பத்தாண்டுகள் சென்றபிறகு, பீஹாரிலிருந்த ஆப்கானியத்தலைவனாகிய ஷேர்கான் என்பவன் ஹுமாயூனைப் போரில் வென்று அவனை இந்தியாவைவிட்டு ஓட்டிவிட்டான். ஆக, பெரிய மொகலாய சக்கரவர்த்திகளின் வரிசையிலே இரண்டாவதாக வந்தவன், காட்டிலும் மேட்டிலும் தலைமறைவாக அலைந்து திரிய வேண்டியதாயிற்று. அப்போது அவன் பட்ட அல்லல் அனந்தம். இவ்வாறு அவன் ராஜபுதனத்தின் பாலைவனத்தில் அலைந்து திரிந்துகொண்டிருந்தபோது தான் அவனுடைய மனைவி 1542-ம் ஆண்டு, நவம்பர் மாதத்தில் ஓர் ஆண் மகவை ஈன்றாள். பாலைவனத்தில் பிறந்த அந்தப் பிள்ளை

தான் பிற்காலத்தில் அக்பர் என்று பேரும் பிரக்கியாதியுமாய் விளங்கியவன்.

ஹுமாயூன் தப்பியோடிப் பாரசீகம் சென்றான். அங்கே பாரசீக மன்னன் ஷா தமஸ்ப் அவனுக்கு அடைக்கலம் தந்தான். இதற்கிடையில், ஷேர்கான் வடஇந்தியாவில் ஒப்புயர்வற்று விளங்கினான். ஐந்தாண்டுகள் வரையில் அவன் ஷேர்ஷா என்னும் பெயருடன் அதை ஆண்டான். இந்தக் குறுகிய காலத்திற்குள்ளேயே அவன் தன்னுடைய திறமையைக் காட்டினான். அமைப்புத் திறனில் அவன் இணையற்றவன். அவனுடைய அரசாங்கம் சுறுசுறுப்பாகவும் திறமையாகவும் வேலைசெய்தது. போர்களுக்கிடையிலும் ஒரு புதிய, சிறப்பான நிலவரி முறையை நிறுவ அவனுக்கு அவகாசம் கிடைத்தது. அதன்படி விவசாயிகள் செலுத்த வேண்டிய வரி நிர்ணயம் செய்யப்பட்டது. அவன் கடுமையும் கண்டிப்பும் வாய்ந்தவன். ஆனால், இந்தியாவை ஆண்ட ஆப்கானிய அரசர்களுக்குள்ளும் வேறு பல அரசர்களுக்குள்ளும் அவனே சிறப்பிலும் திறமையிலும் மிக்கவன் என்று உறுதியாகக் கூறலாம். ஆனால், திறமை மிக்க எல்லா யதேச்சாதிகார மன்னர்களையும் போல, அவனுடைய அரசாங்கத்தில் அவனே சர்வமுமாயிருந்தான். அவனுடைய மரணத்துக்குப் பின்பு அவன் எழுப்பிய கட்டுக்கோப்பு அக்குவேறு ஆணிவேறாகக் குலைந்து போயிற்று.

இந்தச் சீர்குலைவைப் பயன் படுத்திக் கொண்டு ஹுமாயூன் ஒரு படையுடன் 1556-ல் பாரசீகத்திலிருந்து திரும்பிவந்தான். அவனுக்கு வெற்றி கிடைத்தது. பதினாறு வருஷங்களுக்குப் பின்பு அவன் மீண்டும் டில்லி சிம்மாசனத்தில் அமர்ந்தான். ஆனால், அதிகக் காலம் அவன் அதில் வீற்றிருக்கவில்லை. ஆறு மாதங்களுக்குப்

பிறகு அவன் மாடிப்படியில் கால் தடுக்கி வீழ்ந்து இறந்து விட்டான்.

ஷேர்ஷாவின் கோரிக்கும் ஹுமாயூனின் கோரிக்கும் உள்ள வேற்றுமையைத் தெரிந்து கொள்வது நல்லது. ஆப்கானியனுகிய ஷேர்ஷாவின் கோரி பீஹாரில் சஹஸ்ரம் என்னும் ஊரில் இருக்கிறது. அது அவனைப் போலவே பார்ப்பதற்குக் கம்பீரமாகவும், கட்டுறுதியாகவும், கடுமையான தோற்றமுடையதாகவும் விளங்குகிறது. ஹுமாயூனின் கோரி டில்லியில் இருக்கிறது. அதன் தோற்றம் வெகு சொகுசாகவும் நேர்த்தியாகவும் இருக்கிறது. இவ்விரு கற் கட்டிடங்களிலிருந்தும், 16-வது நூற்றுண்டில் சாம்ராஜ்யத் தலைமைக்குப் போட்டி யிட்ட அவ்விரு மனிதரின் இயல்புகளையும் ஒருவன் நன்ருக உணர்ந்து கொள்ளலாம்.

சிம்மாசனத்துக்கு வந்தபோது அக்பருக்கு வயது பதின்மூன்று தான். அவனுடைய பாட்டனைப் போலவே அவனும் சிறு வயதிலேயே சிம்மாசனத்தை அடைந்தான். பைராம்கான் என்பவன் அவனுக்குக் கார்டியனுகவும் காவலனுகவும் இருந்தான். அவன் கான் பாபா என்று அழைக்கப்பட்டான். நாலு வருஷத்துக்குள் கான் பாபாவின் பாதுகாவல் அக்பருக்குப் போதும்போதும் என்ருகி விட்டது. பிறர் சொல்லித் தான் ஒன்று செய்வதென்பது அக்பருக்குப் பிடிக்கவில்லை. அவன் அரசாங்கத்தைத் தானே நடத்த முற்பட்டான்.

அக்பர் ஐம்பதாண்டுகள் இந்தியாவை ஆண்டான். அதாவது, 1556-ம் வருஷ ஆரம்பத்திலிருந்து 1605-ம் வருஷ முடிவு வரையில். இந்தக் காலத்தில் தான் ஐரோப்பாவில் தாழ்நாடுகளில் புரட்சி நடந்தது. இங்கிலாந்தில் ஷேக்ஸ்பியர் மகாகவி தோன்றி வாழ்ந்த காலமும் இதுதான். இந்தியச் சரித்திரத்திலேயே

அக்பருடைய பெயர் தனிப் பிரபையுடன் சோபிக்கிறது. அக்பர் சில வழிகளில், சில சமயம், அசோகனை நமக்கு ஞாபக மூட்டுகிருன். கிறிஸ்துவுக்கு மூன்று நூற்ருண்டுகள் முற்பட்ட காலத்தில் வாழ்ந்த இந்தியாவின் பௌத்த சக்கரவத்தியும், கிறிஸ்துவுக்குப் பதினுறு நூற்ருண்டுகள் பிற்பட்ட காலத்தில் வாழ்ந்த இந்தியாவின் முஸ்லிம் சக்கரவர்த்தியும் ஒரே அபிப்பிராயத்தை ஒரே மாதிரியாகச் சொல்வது பெரிய விந்தையாயிருக்கிறது. ஒரு வேளை இந்தியாவே தன்னுடைய மதத்தைத் (அபிப்பிராயம்) தன் இரு பெரும் புதல்வர்கள் மூலம் உலகுக்கு வெளியிடுகிறதோ என்று நாம் ஆச்சரியப் படுகிருேம். அசோகனைப்பற்றி, அவனே கல்லில் பொறித்து விட்டுப் போனதைத் தவிர்த்து நமக்கு அதிகமாக ஒன்றும் தெரியாது. அக்பரைப் பற்றியோ நாம் மிகவும் அதிகமாக அறிந்திருக்கிருேம். அவன் காலத்தில் அவனுடைய தர்பாரிலேயே இருந்த இரு சரித்திராசிரியர்கள் அவனைப்பற்றி நீண்ட வரலாறுகள் எழுதிவைத்துச் சென்றிருக்கிருர்கள். அவனை வந்து கண்ட வெளி நாட்டினரும் அவனைப்பற்றி எழுதியிருக்கிருர்கள். சிறப்பாக, அவனைக் கிறிஸ்தவ மதத்துக்கு மாற்ற வருந்திமுயன்ற ஏசு சங்கப் பாதிரிகள் அவனைப் பற்றி விரிவாக எழுதியுள்ளார்கள்.

பாபரிலிருந்து வரும் வமிசதந்துவில் அக்பர் மூன்ருவது மணி. ஆயினும், மொகலாயர் இன்னும் நாட்டுக்குப் புதியவர்களாகவே இருந்தார்கள். அவர்கள் அந்நியர்களாகவே கருதப்பட்டார்கள். அவர்களுடைய ஆதிக்கம் ராணுவ பலத்தையே பொறுத்ததாக இருந்தது. மொகலாய வமிசம் இந்திய மண்ணில் வேரூன்றியதற்கும், முற்றிலும் இந்திய மனேபாவம் கொண்டதற்கும் அக்பருடைய ஆட்சிதான் காரணம்; அக்பருடைய ஆட்சியில்

தான் 'மகாமொகலாய சக்கரவர்த்தி' என்னும் பட்டம் ஐரோப்பாவில் வழங்கத் தொடங்கியது. அக்பர் எல்லையற்ற அதிகாரம் செலுத்தினான். அவன் வைத்ததுதான் சட்டம். அவ்வளவு யதேச்சையாக அவன் அரசு புரிந்தான். அரசனுடைய அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவது என்கிற விஷயத்தைப் பற்றி அப்போது இந்தியாவில் பேச்சு மூச்சுக் கிடையாது. அக்பர் தன்னரசு புரிந்தாலும் மகாபுத்திமானாயிருந்தான். இந்திய மகா ஜனங்களின் யோக க்ஷேமத்தை நாடி அவன் அல்லும் பகலும் கண்ணுங் கருத்துமாக உழைத்து வந்தான். ஒரு விதத்தில் பார்த்தால், அவனை இந்திய தேசியத்தின் தந்தை என்று கூற வேண்டும். தேசத்தில் தேசிய உணர்ச்சியானது மிகவும் அருகி நின்ற காலத்தில், மதமானது மக்களைப் பிரிப்பதற்குப் பயன்பட்ட காலத்தில், அக்பர், பிரிவினை செய்யும் மதத்தின் உரிமைகளைப் புறக்கணித்துப் பொது இந்திய தேசியத்துவ இலட்சியத்துக்கு முதலிடம் கொடுத்தான். அவன் தன்னுடைய முயற்சியில் முழு வெற்றி பெற்றான் என்று சொல்வதற்கில்லை. ஆயினும், அந்த இலட்சியத்தை வற்புறுத்துவதில் அவன் சென்ற தூரமும், அவனுடைய முயற்சிகள் அளித்த பெரும் பலனும் நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்துகின்றன.

ஆயினும், அக்பருடைய வெற்றிக்குப் பூராவும் அவனே காரணஸ்தன் என்று சொல்வதற்கில்லை. அவனுக்குப் புற உதவியும் இருந்தது. கால, தேச, வர்த்தமானங்கள் பக்குவமாயிருந்தாலொழிய எந்த மனிதனும் பெரிய காரியங்களை எடுத்து முடிப்பது அரிது. பெரியோர்கள் என்போர் செய்வதெல்லாம், வேகத்தை அதிகப்படுத்துவதும் தங்களுக்கேற்ற சூழ்நிலையைத் தாங்களே சிருஷ்டித்துக் கொள்ளுவதும்தான். ஆனால், அப் பெரியோர்களும் கால தேச வர்த்தமானங்கள் பெற்றெடுத்த குழந்தைகளே ஆவர். அதே போல, அக்பரும் இந்தியக் கால தேச வர்த்தமானங்களால் ஆக்கப்பட்டவனே ஆவன்.

இந்தத் தேசத்தில் ஒன்றாக விடப்பட்ட இரு மதங்களையும் கலைப் பண்புகளையும் சமரசப்படுத்துவதற்கு எவ்வாறு சில சக்திகள் மௌனமாக வேலை செய்து வந்தன என்று முன் கடிதம் ஒன்றில் கூறியுள்ளேன். கட்டிடக் கலையில் ஏற்பட்ட புதுப்பாணிகளைப் பற்றி நான் உனக்குச் சொன்னேன். இந்திய பாஷைகளின் வளர்ச்சியைப் பற்றியும், முக்கியமாக உருது அல்லது ஹிந்துஸ்தானியின் வளர்ச்சியைப் பற்றியும் கூறினேன். மதத் தலைவர்களும் சீர்திருத்த வாதிகளும் ஆகிய ராமானந்தர், கபீர், குருநானக் போன்ற பெரியார்களைப் பற்றியும் உனக்கு எடுத்துச் சொன்னேன். அவர்கள் ஹிந்துமதம், இஸ்லாம் மதம் இரண்டிற்குமுள்ள பொதுவான அம்சங்களை வற்புறுத்தியும், அவற்றின் கரும காண்டங்களைக் கண்டித்தும் இரண்டையும் ஒன்றுபடுத்த முயன்றனர். இச் சமரச உணர்வு எல்லாருள்ளத்திலும் ஊறி நின்றது. அக்பரோ மகா மேதாவி; எதையும் கிரகிக்கக் கூடிய சூட்சுமமான புத்தி படைத்தவன். அவன் அச்சமரச உணர்வை ஆரப்பருகி அதனால் தானே பெரிதும் மாறுதல் அடைந்திருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. உண்மையில், அவனே அதன் பிரதம வியாக்கியான கர்த்தாவாகிவிட்டான்.

ஒரு ராஜ தந்திரி என்கிற முறையிலும், தன்னுடைய பலமும் தேசத்தின் பலமும் இச் சமரசத்தில் தான் பொருந்தியுள்ளன என்னும் முடிவுக்கு அக்பர் வந்திருக்க வேண்டும். அவன் தைரியமிக்க போர்வீரன், திறமைமிக்க சேனாதிபதி. அசோகனைப்போல், அக்பருக்குப் போர் என்றால் ஆகாது என்பதில்லை. ஆனால், போரினால் வரும்

ஆதாயத்தை விட அன்பினால் வரும் ஆதாயமே சிறந்தது, நிலையானதுங்கூட என்பது அவனுடைய கருத்து. ஆகவே, ஹிந்துக்களில் உயர்குலத்தாருடையவும் பொது ஜனங்களுடையவும் நல்லெண்ணத்தையும் பிரியத்தையும் சம்பாதிக்கும் செயலில் அவன் தெரிந்து இறங்கினான். முஸ்லிம் அல்லாதார் மீது விதிக்கப்பட்டிருந்த 'ஜஸியா' என்னும் தலைவரியையும், ஹிந்து யாத்திரீகர் மீது விதிக்கப்பட்டிருந்த வரியையும் அவன் நீக்கினான். உயர்ந்த ரஜபுத்திர வமிச கன்னிகை ஒருத்தியை அவன் மணம் புரிந்து கொண்டான்; தன் மகனுக்கும் ஒரு ரஜபுத்திர கன்னிகையை மணம் புரிவித்தான். இத்தகைய கலப்பு மணங்களை அவன் பெரிதும் ஆதரித்து வந்தான். உயர்குல ரஜபுத்திரர்களை அவன் மிக உயர்ந்த சாம்ராஜ்ய பதவிகளில் அமர்த்தினான். அவனுடைய தீரமிக்க சேனாதிபதிகளில் பலர் ஹிந்துக்கள்; திறமை மிக்க மந்திரிகளிலும் பலர் ஹிந்துக்கள்; கவர்னர்களிலும் அவ்வாறே. ராஜா மான்சிங் என்பவர் சிறிது காலம் காபூலின் கவர்னராகக் கூட அனுப்பிவைக்கப்பட்டார். உண்மையைக் கூறுமிடத்து, ரஜபுத்திரர்களின் நல்லெண்ணத்தையும் ஹிந்து மகா ஜனங்களின் அன்பையும் பெறுவதற்கு அவன் செய்த முயற்சிகளில், அவன் சில சமயம் தன்னுடைய முஸ்லிம் பிரஜைகளுக்கு அநீதி இழைக்கும் அளவுக்குக் கூடச் சென்றுவிட்டான் என்றே சொல்ல வேண்டும். அவன் ஹிந்துக்களின் உள்ளார்ந்த அன்பைப் பெறுவதில் வெற்றி அடைந்தான். அவனுக்குச் சேவகம் புரியவும் போற்றி இசைக்கவும் ரஜபுத்திரர் அனைவரும் வந்து குழுமினார்கள். இதற்கு ஒரே ஒருவன் மட்டும் விலக்கு. அவன்தான் மேவார் ராணா பிரதாப சிம்மன். அம் மகாவீரன் அக்பருக்குத் தலை வணங்க மறுத்துவிட்டான். பெயரளவில் அக்பரின் ஆதிபத்தியத்தை

ஒப்புக்கொள்வதற்கும் அவன் ஒருப்படவில்லை. போரில் அவன் தோல்வியுற்றான். ஆயினும், அக்பருடைய அடிமையாகிச் சுகபோகத்தில் புரள்வதை விடக் காட்டில் காய் கனி உண்டும் பகைவரால் அலைக்கழிப்புண்டும் உழல்வது மேல் என்று அவன் கருதினான். மானத்தில் திருஷ்டியுள்ள இவ்விரஜபுத்திர வீரன் தன் வாழ்நாள் முழுதையும் டில்லிச் சக்கரவர்த்தியுடன் போரிட்டே கழித்தான். கடைசி வரையில், அவன் சக்கரவர்த்திக்கு முடி தாழ்த்தவில்லை. அவனுடைய அந்திய காலத்தில் அவனுக்குச் சிறிது வெற்றி கூடக் கிடைத்தது. இவ்வீரர் பெம்மானின் ஞாபகம் இன்றும் ராஜபுதனத்தில் பசுமையாக இருக்கிறது. அவன் அங்கே பெரிதும் போற்றப்படுகிறான். அவனைப் பற்றிப் பல கதைகள் அங்கே வழங்குகின்றன.

ஆக, அக்பர் ரஜபுத்திரர்களைத் தன் வசப்படுத்திக் கொண்டதோடு பொது ஜனங்களின் பிரீதிக்கும் பாத்திரனாய் விட்டான். அவன் பார்சிகளிடத்திலும், தன்னுடைய தர்பாருக்கு வந்த ஏசு சங்கப் பாதிரிகளிடத்திலுங் கூடக் கருணை காட்டினான். புறமதத்தினர்பால் அவன் காட்டிய கருணையையும், முஸ்லிம் சம்பிரதாயங்களை அனுஷ்டிப்பதில் அவன் காட்டிய ஒருவித அசிரத்தையையும் கண்டு முஸ்லிம் பிரபுக்கள் அவனிடம் அதிருப்தியுற்றார்கள். அவனுக்கு விரோதமாகச் சில கலகங்கள்கூட நிகழ்ந்தன.

நான் அக்பரை அசோகனோடு ஒப்பிட்டேன். ஆனால், அதை நீ தவறாக அர்த்தம் செய்யக்கூடாது. அவன் அசோகனினின்றும் பலவழிகளில் வேறுபட்டிருந்தான். அக்பர் தணியாத நாடாசை கொண்டவன். கடைசிவரையில் அவன் பிறநாடுகளை ஜெயித்துக்கொண்டும், தன் சாம்ராஜ்யத்தைப் பெருக்கிக் கொண்டும் இருந்தான்.

அவனைப்பற்றி ஏசு சங்கப் பாதிரிகள் எழுதியிருப்பதைக் கேள்:

"அக்பர் 'நுண்மாண் நுழைபுலம்' படைத்தவன். விவகாரங்களைப் பரிசீலனை செய்வதில் அவன் மகா கெட்டிக்காரன். அவன் செய்யும் முடிவுகள் எப்போதும் சரியானவையாகவே இருக்கும். எல்லாவற்றிற்கும் மேலாக அவன் காட்சிக்கு எளியனாகவும், அன்புடையனாகவும், அருளுடையனாகவும் இருந்தான். இக் குணங்களோடு அவன் பெரும்பெருங் காரியங்களை எடுத்து நடத்துவோருக்குரிய தீரமும் வாய்ந்தவனாக இருந்தான். அவன் பல விஷயங்களில் அக்கறை உடையவனாகவும், அவற்றை அறியும் ஆவலுடையவனாகவும் இருந்தான். இராணுவ, அரசியல் விஷயங்களின் நுட்பங்களை அவன் அறிந்திருந்ததோடு பல கைத்தொழிற்களைப் பற்றிய ஞானமும் அவனுக்கு இருந்தது. தனக்கு ஊறு செய்தவர் மாட்டும் இவ்வரசர் சிகாமணி இரக்கமும் தண்ணளியும் காட்டினான். அவன் கோபம் கொள்வது மிகவும் அபூர்வம். கோபம் வந்து விட்டாலோ அது கோபாவேசமாகத்தான் முடியும். ஆனால், அவனுடைய சினம் சீக்கிரத்திலேயே ஆறிவிடும்."

மேற்கூறிய வருணனை அக்பருடைய தர்பாரிலுள்ள ஒருவன் மொழிந்ததல்ல. வேற்று நாட்டான் ஒருவன், அக்பரைப் பலகாலும் ஊன்றிக் கவனிக்கும் சந்தர்ப்பம் பெற்றவன், இவ்வாறு எழுதியுள்ளான். இதை நீ நினைவில் வைக்க வேண்டும்.

அக்பர் அசாதாரணமான உடல் வலியும் உழைப்பும் உடையவன். கொடிய காட்டுவிலங்குகளை வேட்டையாடுவதிலுள்ள விருப்பம் அவனுக்கு வேறு எதிலும் கிடையாது. உயிரைத் திரணமாக மதிக்கும் போர்வீரன் அக்பர். ஆக்ராவிலிருந்து ஆமதாபாதுக்கு ஒன்பது நாட்களில் அவன் படையெடுத்துச் சென்று சேர்ந்தான் என்றால் அதிலிருந்து அவனுடைய அதியாச்சரியமான சக்தியை ஊகித்துக் கொள்ளலாம். குஜராத்தில் ஏதோ ஒரு கலகம் விளைந்ததைக் கேட்டு அவன் உடனே ஒரு சிறு படையுடன் விரைந்து சென்றான். ராஜபுதனத்தின் பாலைவனத்தைக் கடந்து 450 மைல் பிரயாணம் செய்வதென்றால் அது சாமானிய விஷயம் அல்ல. அதை அசாதாரண சாதனை என்றே கூறவேண்டும். அக்காலத்தில் ரயிலோ, மோட்டார்காரோ கிடையாது என்று சொல்ல வேண்டியதில்லை.

பெரியோர்கள் என்போர் இக்குணங்களெல்லாம் படைத்திருக்கிறார்கள். இவற்றோடு இன்னொரு இயல்பும் அவர்களிடம் காணப்படுகிறது. அவர்களிடம் ஒருவித காந்த சக்தி இருக்கிறது. அது எல்லோரையும் அவர்கள்பால் ஈர்க்கிறது. அக்பர் இத்தகைய காந்த சக்திக்கும் மோகன சக்திக்கும் இருப்பிடமாக விளங்கினான். அவன் கண்ணெடுத்து நோக்கினாலும் போதும். அந்தப் பார்வையே பாசம் போல் பிறரை அவனோடு பிணித்துவிடும். அவனுடைய கண்கள் 'கதிரவன் ஒளியில் அலை விசிறும் கடல் போல்' இருந்தன என்று ஏசு சங்கப் பாதிரிகள் ஆச்சரியமாக வருணிக்கிறார்கள். ஆகவே, இந்த மனிதன் இன்னும் நம்மை மயக்குவதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது? அரசவீறும் ஆண்மையும் பெற்று விளங்கும் அக்பருடைய உருவம் வெறுமே 'அரசர்'களாக மட்டும் இருந்து கழிந்த புல்லர் கூட்டத்திலும் உயர்ந்து ஒளிவிடுவதில் வியப்பில்லையல்லவா?

அக்பர் வட இந்தியா முழுவதையும் தட்சிணத்தையும்கூட வென்றான். குஜராத், வங்காளம், ஒரிசா, காஷ்மீரம், சிந்து ஆகிய பிரதேசங்களை அவன் தன் சாம்ராஜ்யத்தில் சேர்த்துக் கொண்டான். மத்திய இந்தியா

விலும், தட்சிணத்திலும் அவன் வெற்றி பெற்றான். அவை அவனுக்குக் கப்பம் செலுத்தின. மத்திய [illegible] தேசத்தை ஆண்டு வந்த ராணி துர்க்காவதியைத் தோற் கடித்தது அவனுக்குப் பெருமை அளிப்பதாயில்லை. அவள் நல்ல தைரியசாலி. நீதியுடன் தன் ராஜ்யத்தைப் பரிபாலித்து வந்தாள், அக்பருக்கு அவள் ஒரு தீங்கும் செய்யவில்லை. ஆனால், நாடாசையும் சாம்ராஜ்யப் பித்தும் இவற்றை எங்கே பொருட்படுத்தப் போகின்றன? தட்சிணத்தில் ஆமத்நகரை ஆண்டுவந்த சாந்த் பீபி என்னும் புகழ்பெற்ற அரசியோடும் அக்பருடைய சேனைகள் போரிட்டன. சாந்த் பீபி அஞ்சா நெஞ்சமும் அரியதிறமையும் வாய்ந்தவள். அவள் விளைத்த போரைக் கண்டு மொகல் சேனை வியப்படைந்து அவளுடன் அவளுக்கு நன்மையான சமாதானம் ஒன்றைச் செய்து கொண்டது. துரதிருஷ்டவசமாக அவளிடம் அதிருப்தியுற்ற அவளுடைய போர்வீரர்களே பின்பு அவளைக் கொன்று விட்டார்கள்.

அக்பருடைய சேனைகள் சித்தூரையும் முற்றுகை யிட்டன. இது ராணா பிரதாப சிம்மனின் காலத்துக்கு முந்தி நிகழ்ந்தது. ஜெயமல் என்பவன் சித்தூரை வெகு தீரத்துடன் காத்து நின்றான். அவன் போரில் மடிந்த பிறகு ரஜபுத்திர ஸ்திரீகள் தீக்குளித்தார்கள். ரஜ புத்திர ஆடவர் போரில் மாண்டு வீரசொர்க்கம் புக் கனர். சித்தூர் வீழ்ச்சியுற்றது.

அக்பருக்கு ராஜ்யபாரத்தில் துணைபுரிவதற்குப் பல திறமை மிக்க மந்திரி பிரதானிகள் வாய்த்திருந்தார்கள். அவர்கள் அனைவரும் அவனிடத்தில் தேவதா விசுவாசம் பூண்டிருந்தார்கள். அவர்களில் முக்கியமானவர்கள் பைசி, அபுல் பாசல் என்னும் இருசகோதரர்களும் பீர்பல் என்போனும் ஆவர். அவர்களைப் பற்றிப் பல

கதைகள் வழங்குகின்றன. தோதர்மல் என்பவன் அக்ப ருடைய நிதிமந்திரி. அவன் தான் நிலவரி முறை முழுதையும் திருத்தி அமைத்தவன். அக்காலத்தில் ஜமீன்தாரி முறையோ, ஜமீன்தார்கள், தாலுக்கா தார்கள் என்போரே இல்லை என்று அறிய நீ ஆச்சரியப் படுவாய். அரசாங்கம் விவசாயிகள் அல்லது ரயத்துகள் செலுத்த வேண்டிய வரியைத் தானே நிர்ணயம் செய்தது. இதைத்தான் நாம் இப்போது ரயத்துவாரி முறை என்று அழைக்கிறோம். தற்போது இந்தியாவில் உள்ள ஜமீன்தார்கள் பிரிட்டிஷாரால் ஏற்படுத்தப் பட்டவர்கள்.

ஜெயப்பூரைச் சேர்ந்த ராஜா மான்சிங் அக்பரின் தலை சிறந்த தளபதிகளில் ஒருவன். அக்பருடைய தர்பாரில் தான்சேன் என்னும் இசைமிக்க இசைவாணன் ஒருவன் இருந்தான். இந்தியாவிலுள்ள பாடகர்களுக்கெல்லாம் அவன் அதிஷ்டான குருவாக விளங்குகிறான்.

ஆரம்பத்தில் ஆக்ரா அக்பருடைய தலைநகரா யிருந்தது. அவன் அங்கே ஒரு கோட்டையைக் கட்டினான். பிறகு, ஆக்ராவுக்குப் பதினைந்து மைல் தூரத்திலுள்ள பதேபூர்சிக்ரி (வெற்றிநகரம்) என்னு மிடத்தில் அவன் புதிய நகரம் ஒன்றை நிருமாணம் செய்தான். அவன் அவ்விடத்தைத் தேர்ந்தெடுத்ததற்குக் காரணம் அங்கு ஷேக்சலீம் சிஷ்டி என்னும் பெரியார் ஒரு காலத்தில் வாழ்ந்து வந்ததுதான். அங்கு அவன் நிருமாணித்த அழகிய நகரம் ‘லண்டனைவிட மிகவும் பெரியது’ என்று அக்கால ஆங்கிலேய யாத்திரீகர் ஒருவர் கூறுகிறார். பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக பதேபூர்சிக்ரி சாம்ராஜ்யத்தின் தலைநகராயிருந்தது. அதற்குப் பின் அக்பர் லாகூரைத் தலைநகர் ஆக்கிக் கொண்டான். அக்பருடைய அன்பனும் அமைச்சனு

மாகிய அபுல் பாசல் கூறுகிறான்: "மாட்சிமை பொருந்திய மன்னர்பிரான் தம்முடைய மனதிலே கம்பீரமான பெரிய பெரிய கட்டிடங்களை வகுக்கிறார். மனதிலும் இதயத்திலும் விளைந்த அந்தச் சிருஷ்டிக்கு, பின்பு கல்லாலும் மண்ணாலும் ஆடை செய்வித்து அணிகிறார்." பதேபூர்சிக்ரி இன்றும் அழியாது இருக்கிறது. அதன் அழகிய மசூதியும், பெரிய ஆசார வாசலும் (புலந்தர்வாஜா), வேறு பல அழகிய கட்டிடங்களும் அதை அலங்கரித்து நிற்கின்றன. இப்போது அது நிர்மானுஷியமாகக் கிடக்கிறது. அதன் உயிர் அதை விட்டுப் பிரிந்து விட்டது. ஆனால், அதன் வீதிகளிலும் விசாலமான அரண்மனைகளிலும் இறந்து போன சாம்ராஜ்யத்தின் ஆவி இன்னும் உலவிக்கொண்டிருப்பது போல் காண்கிறது.

நமது அலகாபாத் நகரும் அக்பர் நிறுவியதுதான். ஆனால் அலகாபாத் நகர் உள்ள இடம் மிகவும் புராதனமானது என்பதில் ஐயமில்லை. ராமாயண காலத்திலிருந்து அங்கு பிரயாகை பெருமையுடன் விளங்கி வந்திருக்கிறது. அலகாபாத்திலுள்ள கோட்டை அக்பரால் கட்டப்பட்டதாகும்.

அக்பர் நாடுகளை ஜெயிப்பதிலும், சாம்ராஜ்யத்தைப் பலப்படுத்துவதிலும் ஓய்ச்சல் ஒழிவின்றி ஈடுபட்டிருந்தான். அத்தகைய வாழ்க்கையிலும் அக்பருடைய இன்னொரு குணாதிசயம் பிரகாசிப்பதைக் காண்கிறோம். உண்மையை அறிவதில் அவனுக்குள்ள அளவற்ற வேட்கையையே நான் குறிப்பிடுகிறேன். அவன் எப்போதும் உண்மையைத் தேடிக் கொண்டே இருந்தான். எந்த விஷயத்தைப் பற்றியாவது, யாராவது, ஏதாவது சொல்ல முடியும் என்று கண்டால், உடனே அவன் அவர்களைக் கூப்பிட்டனுப்பி விசாரிக்க ஆரம்பித்து விடுவான்.

இபாதத்கானாவில் (தொழுகை இடம்) பன் மதத்தினரும் அவனைச் சூழ்ந்து வீற்றிருப்பார்கள். அந்தப் பூமண்டலாதிபதியை ஒவ்வொரு மதத்தினனும் தன் தன் மதத்தில் சேர்த்துக் கொள்ளலாம் என்று மனப்பால் குடித்துக்கொண்டிருந்தான். அவர்கள் அடிக்கடி ஒருவரோடொருவர் சண்டையிட்டுக் கொள்வது வழக்கம். அக்பர் அவர்களுடைய வாதப் பிரதிவாதங்களைச் செவிமடுத்துக் கொண்டும், அவர்களைப் பல கேள்விகள் கேட்டுக்கொண்டும் அங்கே அமர்ந்திருப்பான். உண்மை என்பது எந்த மதத்துக்கும் ஏகபோக உரிமை அல்ல என்கிற உண்மை அவனுடைய அறிவிற்கு உறுதியாகப்பட்டது போல் தெரிகிறது. தன்னுடைய திடமான கொள்கை 'எம் மதமும் சம்மதமே' என்பதை அவன் பிரகடனம் செய்தான்.

அக்பர் காலத்தில் வாழ்ந்த பதௌனி என்னும் சரித்திராசிரியன் அக்பரைப் பற்றிக் கூறும் ரசமான விஷயத்தைக் கீழே தருகிறேன். அவன் மேற்கூறிய சமய விசாரக் கூட்டங்களில் கலந்து கொண்டவனாயிருக்கவேண்டும். அவனே ஒரு வெறியான முசல்மான். அக்பருடைய செயல்கள் தவறானவை என்பது அவனுடைய எண்ணம். அவன் கூறுவதாவது:

"மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் எல்லாருடைய அபிப்பிராயங்களையும் கேட்டுத் தெரிந்து கொள்வார். விசேஷமாக, முஸ்லிம் அல்லாதவர்களுடைய அபிப்பிராயங்களைக் கேட்பார். அவற்றில் தமக்குச் சம்மதமானவற்றை மட்டும் வைத்துக் கொண்டு தம் இயல்புக்கும் விருப்பத்துக்கும் விரோதமானவற்றைத் தள்ளி விடுவார். குழந்தைப் பருவத்திலிருந்து கிழப் பருவம் வரையில் சக்கரவர்த்தியானவர் பல்வகைப்பட்ட அனுபவங்களை அனுபவித்து வந்திருக்கிறார்; பல்வகைப்

பட்ட சமயாசாரங்களையும் சமய நம்பிக்கைகளையும் கேட்டுச் சிந்தித்து வந்திருக்கிறார். நூல்களில் காணப் படும் விஷயங்க ளெல்லாம் அவருக்குத் தெரியும். அவற்றை, அவருக்கே சிறப்பாக உரிய திறத்தைக் கொண்டும், இஸ்லாமியக் கோட்பாட்டுக்கு விரோத மான விசார உணர்வைக்கொண்டும் ஆய்ந்து அவற்றில் சிலவற்றை மட்டும் எடுத்துக்கொண்டார். அதன் பயனாக, மிகவும் சாதாரணமான கொள்கைகளை அடிப் படையாகக் கொண்ட ஒரு சமய நெறி அவருடைய உளக்கண்ணாடியில் பதிந்தது. பல்வித சக்திகளுக்குச் சக்கரவர்த்தி தம்மை இலக்காக்கிக் கொண்ட காரணத் தால், கல்லில் சிறிது சிறிதாகத் தோன்றும் சிறல்போல, அவருடைய உள்ளத்தில் திடமான ஒரு நம்பிக்கை உண்டாயிற்று. அதாவது, எல்லா மதங்களிலும் அறி வாளிகளும், தபோதனர்களான தியான சீலர்களும் இருக்கிறார்கள், எல்லா நாடுகளிலும் அற்புத சக்தி வாய்ந்த பெரியார்கள் இருக்கிறார்கள் என்று அவர் எண்ணலானார். இவ்வாறு, உண்மை ஞானம் எங்கும் காணப்படுமாயின் அது ஓரே மதத்தில் மட்டும் கட்டுண்டு கிடப்பது எவ்வாறு சாத்தியமாகும்?......''

இந்தக் காலத்தில் தான், ஐரோப்பா மத விஷயங் களில் கருதவும் சொல்லவும் ஒண்ணாத துவேஷமும் வைஷம்யமும் காட்டி வந்ததென்பது உனக்கு நினை விருக்கும். ஸ்பெயினிலும், தாழ்நாடுகளிலும், வேறு இடங்களிலும் மத விசாரணை சபையின் அட்டகாசம் பொறுக்க முடியவில்லை. கத்தோலிக்கனும் கால்வினிய னும் ஒருவன் மற்றவன் பால் சகிப்புத்தன்மை பூண் டொழுகுவது கொடிய பாவம் என்று கருதினார்கள்.

அக்பர் வருஷந்தோறும் சகல சமய பண்டிதர் களையும் அழைப்பித்து அவர்களுடைய உரைகளையும்

வாதங்களையும் கேட்டு வந்தான். கடைசியில் அச்சமய பண்டிதர்களுக்கே அதில் சலிப்பு ஏற்பட்டு விட்டது. தத்தம் மதங்களில் அக்பரைச் சேர்த்துக் கொள்ளலாம் என்னும் நம்பிக்கையை அவர்கள் கைவிட்டு விட்டார்கள். எல்லா மதங்களிலும் சிறிது உண்மை இருக்கிறபோது அவன் எந்த ஒன்றைக் கொள்வது? "ஹிந்துக்கள் தங்க ளுடைய தருமமே(மதம்) சிறந்தது என்று கருதுகிறார்கள். அவ் வண்ணமே சாரசெனியரும் கிறிஸ்தவர்களும் தங்கள் தங்கள் தருமமே மேலானது என்று கருது கிறார்கள். இந்த நிலையில் நாம் எந்தத் தருமத்தைத் தழுவுவது?" என்று அக்பர் ஒருகால் கூறியதாக ஏசு சங்கப் பாதிரிகள் சொல்லுகிறார்கள். (சாரசெனியர் என்னும் பதம் முஸ்லிம்களைக் குறிக்கிறது. ஏசு சங்கப் பாதிரிகள் போர்த்துகீசியர் ஆன படியால் அவர்களுக்கு ஸ்பெயினில் வாழ்ந்த சாரசெனியரைத் தெரியும். அதே பேராலேயே அவர்கள் இந்திய முஸ்லிம்களையும் அழைத் தார்கள்.) அக்பருடைய கேள்வி நியாயமானது. ஆனால், அது ஏசு சங்கப்பாதிரிகளுக்குப் பிடிக்க வில்லை. அவர்கள் தங்களுடைய புஸ்தகத்தில், "எல்லா நாஸ்திகர் களுக்கும் பொதுவான குற்றம் அக்பரிடத்திலும் காணப்படுகிறது. நாஸ்திகர் தங்களுடைய பகுத்தறிவை மத நம்பிக்கைக்குக் கீழ்ப்படுத்த மறுக்கிறார்கள்; தங்க ளுடைய சின்ன அறிவுக்கு எட்டாதவற்றையெல்லாம் உண்மை என்று ஒப்புக் கொள்ள மறுக்கிறார்கள்; மனித அறிவின் எல்லைக்கு அப்பாற்பட்ட விஷயங்களை யெல்லாம் குறைபாடுள்ள தங்கள் அறிவாராய்ச்சிக்கு உட்படுத்துகிறார்கள்" என்று கூறுகிறார்கள். ஒரு நாஸ்தி கனுக்குரிய லட்சணம் இதுவாயின் இத்தகைய நாஸ்தி கர்களின் தொகை பெருகுவதால் நாட்டுக்கு நன்மையே ஒழிய வேறில்லை.

அக்பருடைய நோக்கம் என்னவென்று தெளிவாகத் தெரியவில்லை. மதப் பிரச்சினையை அவன் வெறும் அரசியல் பிரச்சினையாகவே கருதினானா? பொது இந்திய தேசியத்துவத்தை உண்டாக்க வேண்டும் என்கிற ஆசையில் அவன் சகல மதங்களையும் ஒரே நெறியில் செலுத்த முயன்றானா? அல்லது, அவனுடைய நோக்கமும் தத்துவ விசாரணையும் மதம் ஒன்றையே குறியாகக் கொண்டவைதானா? மேற்கூறிய வினாக்களுக்கு விடை பகரும் வன்மை எனக்கு இல்லை. ஆனால், மதச்சீர்திருத்தத்தை விட அவனுக்கு ராஜதந்திர நோக்கம் அதிகமாக இருந்திருக்கலாம் என்று எனக்குத் தோன்றுகிறது. அவனுடைய நோக்கம் எதுவாயினும், அவன் ஒரு புது மதத்தைப் பிரகடனம் செய்தான். அதற்கு 'தீன் இலாஹி' (கடவுள் மதம்) என்று பெயர். அம்மதத்தின் தலைவனும் அவனே. மற்ற விஷயங்களிற் போலவே மத விஷயத்திலும் அவன் பேச்சுக்கு எதிர்ப்பேச்சு கூடாது. அவன் கண்ட புது மதத்திலும் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்வது, காலை முத்தமிடுவது போன்ற வெறுக்கத்தக்க சடங்குகளெல்லாம் உண்டு. புதுமதம் மக்கள் மனதைக் கவரவில்லை. அதனால், முஸ்லிம்கள் கோபம் அடைந்தது தான் கண்டபலன்.

யதேச்சாதிகார ஆட்சியின் சாரத்தை அக்பரிடம் காணலாம். ஆயினும், அரசியல் சுதந்திரக் கருத்துகளை அவன் எவ்வாறு ஏற்றிருப்பான் என்று கற்பனை செய்து பார்ப்பது ஒரு சுவாரஸ்யமான விஷயம். மதசுதந்திரம் இருக்கவேண்டியது அவசியம் என்றால் ஜனங்களுக்கு அதிகமான அரசியல் சுதந்திரம் ஏன் இருக்கக்கூடாது? விஞ்ஞான சாஸ்திரம் அக்பரை ஆகர்ஷித்திருக்கும் என்பதில் ஐயமில்லை. துரதிருஷ்ட வசமாக, ஐரோப்பாவில் அக்காலத்தில் தோன்றி வளர்ந்த இக்கருத்துகள்

இந்தியாவில் தோன்றவே இல்லை. இந்தியாவில் அச்சு யந்திரமும் உபயோகத்துக்கு வரவில்லை. ஆகவே, சிலர் தான் கல்வியறிவு வாய்ந்தவர்களாக இருந்தார்கள். அக்பருக்கே எழுதப்படிக்கத் தெரியாது என்பதைக் கேட்க நீ ஆச்சரியப்படுவாய். ஆயினும், அக்பர் உயர்ந்த கல்வி கேள்வி உடையவன். நூல்களைப் படிக்கச் சொல்லிக் கேட்பதில் அவனுக்கு வெகு பிரியம். அவனுடைய உத்தரவின் கீழ்ப் பல சம்ஸ்கிருத நூல்கள் பாரசீக பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டன.

ஹிந்து விதவைகள் உடன்கட்டை ஏறும் 'சதி' என்னும் வழக்கத்தை அவன் சட்டபூர்வமாகத் தடை செய்தான். யுத்தத்தில் பிடிக்கப்பட்ட அடிமைகளைச் சிறையில் அடைக்கக் கூடாது என்றும் அவன் சட்டம் செய்தான்.

அக்பர், தனது அறுபத்து நான்காவது வயதில், 1605-ம் ஆண்டில் இவ்வுலக வாழ்வை நீத்தான். அவன் ஐம்பது ஆண்டுகள் ராஜ்யபாரம் செய்தான். ஆக்ராவுக்கு அருகில் சிகந்தார் என்னும் இடத்திலுள்ள அவனுடைய கோரி மிகவும் அழகானது.

அக்பருடைய ஆட்சியில், வட இந்தியாவில், அதாவது காசியில் ஒருவர் வாழ்ந்து வந்தார். ஐக்கிய மாகாணத்தில் அவருடைய பேர் குழந்தை குட்டிகளுக்குக் கூடத் தெரியும். அக்பரைவிட அவரை எல்லாருக்கும் நன்கு தெரியும். அக்பராவது அல்லது வேறு எந்த அரசனாவது அவரைப்போல் சர்வஜனப் பிரியராக இருக்க முடியாது. ஹிந்தியில் 'ராமசரிதமானஸ்' அல்லது ராமாயணம் பாடிய துளசிதாஸரையே நான் குறிப்பிடுகிறேன்.

90

மொகலாய சாம்ராஜ்யத்தின் தாழ்ச்சியும் வீழ்ச்சியும்

செப்டம்பர் 9, 1932.

அக்பரைப்பற்றி இன்னும் சிறிது கூற எனக்கு ஆசையா யிருக்கிறது. ஆனால், அந்த ஆசையை அடக்கிக் கொள்ள வேண்டியவனா யிருக்கிறேன். ஆயினும், அக்பரைப் பற்றிப் போர்த்துகீசியப் பாதிரிகள் எழுதியுள்ள வரலாறுகளி லிருந்து இன்னும் சில மேற்கோள்கள் எடுத்துக் காட்டாமலிருக்க என்னால் முடியவில்லை. அவர்களுடைய அபிப்பிராயம் ராஜ்ய சேவகர்களுடையதைப் போன்ற தன்று. அதற்கு நாம் அதிக மதிப்புக் கொடுக்க வேண்டும். அக்பர் கிறிஸ்தவ மதத்தைத் தழுவாத காரணத்தால் அவர்களுக்கு அவனிடத்தில் பெரி ஏமாற்றம் கூட ஏற்பட்டிருந்தது என்பதை நாம் நினைவில் வைப்பது நலம். அப்படியிருந்தும், அவர்கள் அவனை வாயாரப்புகழ்கிறார்கள். அவர்கள் கூறுவதைக் கேள்: "அக்பர் பெரிய அரசன் என்பதில் ஐயமில்லை. எந்த அரசன்பால் குடிகள் அன்பு, அச்சம், அடக்கம், பணிவு, அனைத்தும் ஒருங்கே காட்டுகிறார்களோ அவனே உத்தமமான அரசன் என்பதை அக்பர் அறிந்திருந்தான். அக்பரிடம் அனைவரும் அன்பு செலுத்தினார்கள். அவன் உயர்ந்தோரிடத்தில் உறுதியாகவும், தாழ்ந்தோரிடத்தில் அன்பாகவும் நடந்து கொண்டான். உயர்ந்தோர் தாழ்ந்தோர், அண்டையிலுள்ளோர் அயலவர், கிறிஸ்தவர் முகம்மதியர் ஹிந்துக்கள் பார்சிகள் என்கிற வேற்றுமையே அக்பருக்குக் கிடையாது. அவன் நெறிமுறை கோடாது

அனைவருக்கும் நியாயம் வழங்கினான். அதனால், ஒவ்வொருவனும் அரசன் தன் தன் பக்கம் இருப்பதாக எண்ணிக் கொண்டிருந்தான்." ஏசு சங்கப் பாதிரிகள் மேலும் கூறுகிறார்கள்: "இப்போது பார்த்தால் அக்பர் ராஜாங்க விவகாரங்களில் ஆழ்ந்திருப்பான்; அல்லது அத்தாணியில் அமர்ந்து குடிபடைகளுக்கு ஓலக்கம் வழங்கிக் கொண்டிருப்பான். அடுத்த க்ஷணம் பார்த்தால், ஒட்டகங்களுக்கு ரோமம் கத்தரித்துக் கொண்டோ, கல்லுடைத்துக் கொண்டோ, மரம் வெட்டிக் கொண்டோ, இரும்படித்துக் கொண்டோ இருப்பான். எந்தத் தொழிலையும் தனக்குரிய தொழிலைச் செய்வது போலவே முயற்சியுடன் செய்வான்." உடல் வருந்த உழைப்பது இழிவு என்று இன்று சிலர் கருதுகிறார்கள். ஏகச்சக்ராதிபதியாயிருந்தும் அக்பர் அவ்வாறு கருதவில்லை.

அவர்கள் இன்னும் கூறுகிறார்கள்: "அக்பர் சிறிதளவே உண்பான். வருஷத்துக்கு மூன்று நான்கு தடவைகளுக்கு மேல் புலால் அருந்தமாட்டான். இரவில் மூன்று மணிநேரம் துயிலுவதே அவனுக்குப் பெரிய காரியம். ...... அவனுடைய ஞாபகசக்தி அதியாச்சரியமானது. அவனுக்கு யானைகளும் குதிரைகளும் ஆயிரக் கணக்கில் இருந்தன. அத்தனை யானை, குதிரைகளுடைய பேரும் அவனுக்குத் தெரியும். அவனுடைய மான்கள், புறாக்களுடைய பேர்கூட அவனுக்கு மனப்பாடம்." இவ்வளவு ஞாபகசக்தி ஒருமனிதனுக்கு இருக்குமா என்று நமக்கு ஐயுறவு தோன்றுகிறது. சொன்னவர்கள் சிறிது மிகைபடவும் சொல்லியிருக்கலாம். ஆயினும், அக்பருடைய ஞாபகசக்தி அற்புதமானது என்பதில் ஐயமில்லை. "அக்பருக்கு எழுதப்படிக்கத் தெரியாவிட்டாலும், தன்னுடைய விரிந்த சாம்ராஜ்யத்தில் நிகழ்வதையெல்லாம் அவன் அறிந்திருந்தான். பட்டினியாய்க்

கிடந்தவன் உணவு முழுதையும் ஒரே வாயாக விழுங்கி விட முயற்சிப்பது போல், அவன் பல விஷயங்களையும் ஒரே மூச்சில் கற்க முயன்றான். அவ்வளவு பெரிய அறிவுப் பசி அவனுக்கு இருந்தது.''

அத்தகைய மகிமை வாய்ந்தவன் அக்பர். ஆனால், அவன் பூர்ணமான யதேச்சாதிகாரம் செலுத்தினான். அவன் குடிகளுக்கு வரும் அச்சக் கேடுகளைப் போக்கி அவர்களுடைய வரிச் சுமையைக் குறைத்து அவர்களைப் பாதுகாத்தான் என்பது உண்மையே. ஆயினும், அவர்களுக்குக் கல்வியும் பயிற்சியும் அளித்து அவர்களுடைய பொது நிலையை உயர்த்துவதில் அவன் தன் புத்தியைச் செலுத்தவில்லை. எங்கும் யதேச்சாதிகாரம் தாண்டவம் புரிந்த காலம் அது. மற்ற யதேச்சாதிகார மன்னர்களை நோக்கும்போது, அரசன் என்கிற முறையிலும் மனிதன் என்கிற முறையிலும் அக்பருடைய பெருமை ஒப்புயர்வற்றுப் பிரகாசிக்கிறது.

அக்பருக்கு முன் ஹுமாயூனும் பாபரும் அரசாண்டிருந்தாலும், உண்மையில் மொகலாய வமிசத்தை இந்தியாவில் ஸ்தாபித்தவன் அக்பர் என்றுதான் சொல்ல வேண்டும். சீனாவில் குப்ளேகானின் யுவான் வமிசம் போன்று, அக்பர் காலத்திலிருந்துதான் மொகலாய வமிசம் இந்திய வமிசமாகிறது. தன்னுடைய சாம்ராஜ்யத்தைப் பலப்படுத்துவதற்காக அக்பர் ஆற்றிய பெருஞ் செயலின் மகத்துவத்தால், அவனுடைய வமிசம் அவன் இறந்த பின்பு நூறாண்டுகள் வரையில் நிலைத்திருந்தது.

அக்பருக்குப் பின் மூன்று திறமைமிக்க மன்னர்கள் அரசு புரிந்தார்கள். ஆனால், அவர்களிடத்தில் அசாதாரணமான அம்சம் எதுவுமில்லை. ஒரு சக்கரவர்த்தி இறக்கவேண்டியதுதான் தாமதம். உடனே, சிம்மாசனத்தை அடைவதற்காக அவனுடைய குமாரர்களுக்குள் சண்டை ஆரம்பித்துவிடும். அரண்மனை, சூழ்ச்சிகளின் விளைநிலமாக விளங்கும். வாரிசுப் போர்கள் விளையும். மகன் தந்தைக்கு விரோதமாகவும், தம்பி அண்ணனுக்கு விரோதமாகவும் கலகம் செய்வார்கள். உறவினரைக் கொல்வதும் அவர்களுடைய கண்ணைப் பிடுங்குவதும் தண்ணீர்பட்டபாடாய் இருக்கும். மேற்கூறியவை அனைத்தும் தடையற்ற யதேச்சாதிகார ஆட்சியின் வெறுக்கத்தக்க உடன்பிறப்புகளே யன்றோ? உலகிலேயே எங்குமில்லாத ஆடம்பர டம்பங்களையும் கண்ணைப் பறிக்கும் ஜாஜ்வல்லியமான பிரகாசத்தையும் மொகலாய தர்பாரில் காணலாம். பிரான்சில் ராய் சொலேல் (சூரியன்) பதினாலாவது லூயி அட்டகாசத்துடன் அரசுபுரிந்து வந்தது இந்தக் காலத்தில்தான் என்பது உனக்கு நினைவிருக்கலாம். அவன் வார்சேல்ஸ் நகரை நிருமாணித்து அங்கு ஒரு பெரிய தர்பார் நடத்தி வந்தான். ஆனால், மொகலாய சக்கரவர்த்தியின் தர்பாருக்கு முன்னால் பிரெஞ்சு மன்னனின் தர்பார் சூரியன்முன் மின்மினி யெனத் தோன்றுகிறது. அந்தக் காலத்தில் உலகை ஆண்ட அரசர்களுக்குள்ளே மொகலாயர்தான் திருமிக்கவர்களாக விளங்கினார்கள். அவர்களுடைய ஆட்சியிலும், சில சமயம் பஞ்சமும் நோயும் நேரிட்டன. அதனால், மக்களில் பலர் மாண்டனர். அரச பரிவாரங்கள் மட்டும் சுகவாழ்வில் மிதந்துகொண்டிருந்தன.

அக்பர் காலத்திலிருந்த சமயப் பொறை அவனுடைய புத்திரனான ஜஹாங்கீர் காலத்திலும் கெடாது இருந்து வந்தது. பிறகு அது குன்றத் தொடங்கியது. கிறிஸ்தவர்களும் ஹிந்துக்களும் சிறிது துன்புறுத்தப் பட்டார்கள். பின்னர் அவுரங்கசேப்பின் ஆளுகையில், ஹிந்துக்களை இம்சிக்கும் கொள்கை உறுதியுடன் அனுஷ்டிக்கப்

பட்டது. ஹிந்துக்களின் கோயில்கள் அழிக்கப்பட்டன. அனைவரும் வெறுத்துவந்த 'ஜஜியா' தலைவரி மீண்டும் விதிக்கப்பட்டது. இவ்வாறு, அக்பர் பெரிதும் முயன்று அமைத்த சாம்ராஜ்ய அடிப்படைகள் ஒவ்வொன்றாகத் தகர்த்தெறியப்படவே, சாம்ராஜ்யமானது திடீரென்று ஆட்டங் கொடுத்து விழுந்துவிட்டது.

அக்பருக்குப் பின், அவனுடைய ரஜபுத்திர மனைவியின் வயிற்றில் பிறந்த புத்திரனான ஜஹாங்கீர் பட்டத்துக்கு வந்தான். அவன் ஓரளவு தன் தந்தையின் அடிச்சுவட்டைப் பின்பற்றி அரசு புரிந்து வந்தான். ஆனால், அரசாங்கத்தில் அவனுக்கு அவ்வளவு தேட்டம் இருந்ததாகத் தெரியவில்லை. அழகு வளர் கலைகளிலும், எழில் வளர் பொழில்களிலும், மணம் வளர் மலர்களிலும் அவன் மனதைப் பறிகொடுத்தான். அவனுடைய சித்திரசாலை பெருஞ் சிறப்பு வாய்ந்தது. ஆண்டுதோறும் அவன் காஷ்மீரம் செல்வானாம். ஸ்ரீநகரிலுள்ள பெயர் பெற்ற தோட்டங்களாகிய சாலிமார் தோட்டத்தையும் நிசாத் (ஆனந்தம்) தோட்டத்தையும் வகுத்தவன் ஜஹாங்கீர்தான் என்று நினைக்கிறேன். அவனுக்குப் பல மனைவியர் உண்டு. அவர்களில் நூர்ஜஹான் (உலக ஒளி) பேரழகி. சக்கரவர்த்தி வெறுமே பேருக்குத்தான். நூர்ஜஹான்தான் உண்மையில் ஆட்சி புரிந்தவள். ஜஹாங்கீரின் ஆட்சியில்தான் இத்மத் உத்தௌலாவின் அழகிய கோரி கட்டப்பட்டது. நான் ஆக்ராவுக்குப் போகும்போதெல்லாம் கண்ணுக்கு விருந்தான இக் கட்டிட மணியின் அழகை ஆரப் பருகாமல் திரும்புவதில்லை.

ஜஹாங்கீருக்குப் பின் வந்த அவனுடைய குமாரனான ஷாஜஹான் முப்பது வருஷங்கள் (1628—1658) அரசாண்டான். அவன் பிரான்ஸை ஆண்ட 14-வது லூயியின் காலத்தவன். அவனுடைய ஆட்சியில்தான் மொகலாய ஒளி உச்சம் பெற்றது. அவனுடைய ஆட்சியிலேயே அழிவின் வித்துக்களையும் நாம் தெளிவாகக் காண்கிறோம். சக்கரவர்த்தி வீற்றிருப்பதற்காக விலையுயர்ந்த கற்களிழைத்த மயிலாசனம் செய்யப்பட்டது. அதன் புகழைக் கேளாதவர் யார்? ஆக்ராவில், யமுனை ஆற்றங்கரையில், அழகின் கனவாக விளங்கும் தாஜ் மஹாலும் அப்போதுதான் நிருமாணிக்கப்பட்டது. ஷாஜஹானின் காதல் மனைவியாகிய மும் தாஜ்மஹாலின் கோரியே தாஜ்மஹால் என்பது உனக்குத் தெரிந்திருக்கலாம். ஷாஜஹான் செய்த காரியங்களில் பல அவனுக்குப் பெருமை தருவனவாக இல்லை. சமயப் பொறை என்பது அவனிடம் இல்லை. தட்சிணத்தையும் குஜராத்தையும் கொடிய பஞ்சம் வாட்டியபோது அவன் நிவாரணத்துக்காக ஒரு முயற்சியும் புரியவில்லை. அவனுடைய குடிமக்களின் ஏழ்மையையும் துன்பத்தையும் பார்க்கும் போது அவனுடைய செல்வமும் இன்ப நுகர்ச்சியும் மிகவும் வெறுக்கத்தக்கவையாகத் தோன்றுகின்றன. ஆனால், சலவைக் கல்லிலும் வெறுங்கல்லிலும் அவன் இயற்றியுள்ள அழகின் வியப்புகளை உன்னும் போது அவனுடைய குற்றங்களை மன்னித்து விடலாம் என்று தோன்றுகிறது. அவனுடைய காலத்தில் தான் மொகலாய சிற்பக் (கட்டிடக்) கலையின் சிகரத்தை நாம் காண்கிறோம். தாஜ்மஹாலையன்றி, ஆக்ராவிலுள்ள மோதி (முத்து) மசூதியும், டில்லியிலுள்ள ஜும்மா (வெள்ளிக்கிழமை) மசூதியும் அவன் கட்டியவைகளே ஆகும். டில்லி அரண்மனையில் தீவானி ஆம் (ஆஸ்தான மண்டபம்), தீவானி காஸ் (மந்திராலேசனை மண்டபம்) என்னும் இரண்டையும் அவன் கட்டியிருக்கிறான். இக்கட்டிடங்களெல்லாம் எளிமையால் உயர்வு பெற்

றவை. அவற்றில் சில அளவில் மிகவும் பெரியவை. கந்தருவலோகத்து அழகுடன் விளங்கும் அம் மாபெரும் கட்டிடங்களில் எழிலும் இனிமையும் கோயில் கொண்டு குலாவுகின்றன.

ஆனால், இந்தக் கந்தருவலோக சௌந்தரியத்துக்குப் பின்னால் நரக லோக தாரித்திரியம் ஒளிந்துகொண்டிருந்தது. இருப்பதற்கு மண் குடிசையும் இல்லாத ஏழைகளிடமிருந்துதான் பொன் அரண்மனைகள் கட்டுவதற்கு வேண்டிய செல்வம் பிழிந்து எடுக்கப்பட்டது. சக்கரவர்த்தி தங்கு தடையற்ற ஏகவாணைசெலுத்தினான். சக்கரவர்த்தி அல்லது அவனுடைய வைசிராய்கள் கவர்னர்கள் ஆகியோரின் கோபத்துக்குப் பாத்திரமானவர்கள் கொடிய தண்டனைகளை அடைந்தார்கள். அரண்மனைச் சூது வாதுகள் மெக்கியவெல்லி சித்தாந்தத்தை அடிப்படையாகக்கொண்டிருந்தன. அக்பருடைய நல்லரசும், இரக்கமும், பொறையும் பழங்கதையாகி விட்டன. கேட்டிற்கான அறிகுறிகள் காணப்பட்டன.

ஷாஜஹானுக்குப் பின்பு அவுரங்கசேப் சிம்மாசனம் ஏறினான். பெரிய மொகலாய சக்கரவர்த்திகளின் வரிசையில் அவனே கடைசியாக வந்தவன். அவன் சிம்மாசனம் ஏறினவுடனே முதல் முதலில் தன்னுடைய கிழத் தந்தையைச் சிறையில் அடைத்தான். இவ்வாறு அவன் தன் ஆட்சியை அங்குரார்ப்பணம் செய்தான். அவன் 48-ஆண்டுகள் (1659–1707) அரசுபுரிந்தான். அவன் தந்தை ஷாஜஹானைப்போல் சிற்பத்திலோ, பாட்டன் ஜஹாங்கீரைப்போல் கலை இலக்கியங்களிலோ பிரேமைகொண்டவன் அல்ல. அவன் ஒரு மதவெறியன். தன்மதம் தவிர வேற்று மதங்களைப் பொறுக்காதவன்; ஆனால், கடுமையான விரதானுஷ்டானங்களை உடைய

வன். தர்பாரின் டாம்பீகம் பழையபடியே இருந்தது. ஆனால், தன்வரையில் அவன் மிகவும் எளியவாழ்வு நடத்தினான். புலன்களை ஒருத்த தவசி என்றே அவனைக் கூறலாம். ஹிந்து மதத்தினரை இம்சிக்க வேண்டுமென்று அவன் கொள்கை வகுத்துக் கொண்டான்; தெரிந்து, வேண்டுமென்றே அவன் அக்பருடைய சமாதான, சமரசக் கொள்கையை மாற்றி அதற்கு நேர்மாறாக நடந்தான். இவ்வாறு, இதுவரையில் எந்த அஸ்திவாரத்தின்மீது சாம்ராஜ்யம் நிலைபெற்றிருந்ததோ அந்த அஸ்திவாரமே தகர்த்தெறியப்பட்டது. அவன் ஹிந்துக்கள்மீது மீண்டும் 'ஜஜியா' வரியை விதித்தான். அவன் உத்தியோகப் பதவிகளிலிருந்து ஹிந்துக்களை கூடியவரையில் விலக்கியே வந்தான். அக்பருடைய காலத்திலிருந்து மொகலாய வமிசத்தை ஆதரித்து வந்த ரஜபுத்திரப் பிரபுக்களை அவன் அவமானப்படுத்தினான். அதனால், ரஜபுத்திரர்களோடு போர் விளைந்தது. அவன் ஹிந்து கோயில்களை ஆயிரக்கணக்கில் இடித்துத் தரைமட்டமாக்கினான். புராதனமான பல அழகிய கட்டிடங்கள் இவ்வாறு அழிந்தொழிந்தன. பீஜபூரும் கோல்கொண்டாவும் அவனுக்கு அடிபணிந்தன. தட்சிணத்தில் அவனுடைய சாம்ராஜ்யம் விரிவடைந்தது. தட்சிணத்தின் கோடியிலிருந்தும் அவனுக்குக் கப்பம் வந்துகொண்டிருந்தது. ஆனால், அஸ்திவாரத்தில் சாம்ராஜ்யத்தின் சத்து உறிஞ்சப்பட்டுவந்தது. அதன்பலமும் நாளாவட்டதில் குன்றி வந்தது. நாலாபக்கங்களிலும் அதற்கு விரோதிகள் தோன்றினர். 'ஜஜியா' வரியை நீக்கவேண்டுமென்று ஹிந்துக்கள் அவுரங்கசேப்புக்கு ஒரு விண்ணப்பம் செய்துகொண்டார்கள். அதில் அவர்கள் கூறுவதாவது: "இந்த வரி நியாய விரோதமானது. அதன் அடிப்படையான கொள்கை நாட்டுக்கு

நன்மை பயப்பதாகவும் இல்லை. அதனால், தேசத்தில் வறுமை பெருகும். மேலும், அது இதுவரை இல்லாத ஒரு பழக்கம்; ஹிந்துஸ்தானத்தின் சட்டங்களுக்கும் விரோதமானது.'' அக்காலத்தில் சாம்ராஜ்யம் இருந்த நிலையைப் பற்றி அவ்விண்ணப்பம் கூறுவதாவது: "மேன்மை தங்கிய சக்கரவர்த்தி அவர்களின் ஆட்சியில் இதற்கு முன் சாம்ராஜ்ய பக்தி உடையவர்களாயிருந்த பலர் இப்போது மனவேறுபாடு அடைந்துள்ளார்கள். ராஜ்யமெங்கும் நாசமும் கொள்ளையும் கேட்பாரின்றி நடைபெற்று வருகின்றன. இதனால், மேலும் நாடிழக்கவேண்டிய நிலைமை நிச்சயம் ஏற்படப்போகிறது. தங்களுடைய பிரஜைகள் இரக்கமின்றிக் காலடியில் போட்டு மிதிக்கப்படுகிறார்கள். சாம்ராஜ்யத்தின் ஒவ்வொரு மாகாணத்திலும் ஏழ்மைத்தனம் மிகுகிறது. நத்தப் பாழ் பெருகி ஜனத்தொகை குறைகிறது; இன்னல்கள் மலைபோல் குவிந்து வருகின்றன.''

ஜனசமுதாயம் முழுதும் நிறைந்து நின்ற இவ்வின்னல்தான் அடுத்த 50ஆண்டுகளில் இந்தியாவில் நிகழ்ந்த மாபெரும் மாறுதல்களுக்குப் பூர்வபீடிகையாக விளங்கியது. அவுரங்கசேப்பின் மரணத்துக்குப் பின்பு பிரம்மாண்டமான மொகலாய சாம்ராஜ்யம் அடியோடு திடீரென்று வீழ்ந்து விட்டது அம் மாறுதல்களுள் ஒன்றாகும். பெரிய மாறுதல்களுக்கும் பெரிய இயக்கங்களுக்கும் பொருளியல் காரணங்களே அடிப்படையாயமைகின்றன. ஐரோப்பாவிலும் சீனாவிலும் பெரிய சாம்ராஜ்யங்கள் வீழ்ச்சியுறு முன்பும், வீழ்ச்சியுறும்போதும் கூடவே பொருளியல் சீர்குலைவும் அதையடுத்துப் புரட்சியும் தோன்றுவதைப் பார்த்திருக்கிறோம். இந்தியாவிலும் அதையே பார்க்கிறோம்.

எல்லாச் சாம்ராஜ்யங்களையும் போல, மொகலாய

சாம்ராஜ்யமும் தன்னுடைய அகப்பொறை காரணமாகவே வீழ்ந்துவிட்டது. உண்மையில் அது சிறு சிறு துண்டுகளாகச் சிதறியோடிவிட்டது. ஹிந்துக்களிடையே பிறந்த புதிய எதிர்ப்பு உணர்ச்சி அதற்குப் பெரிதும் உதவியது என்று கூறலாம். அவுரங்கசேப்பின் கொள்கையால் அவ்வெதிர்ப்பு உணர்ச்சி நாளுக்கு நாள் முற்றிக்கொண்டே வந்தது. ஆனால், இந்த மதாபிமான ஹிந்து தேசியம் அவுரங்கசேப்பின் ஆட்சிக்கு முன்பே வேரூன்றிவிட்டது. இதுவே அவுரங்கசேப்பின் விரோதபாவத்துக்கும் துவேஷ மனப்பான்மைக்கும் ஓரளவு காரணமாயிருந்திருக்கலாம். மராட்டரும் சீக்கியரும், பிறகு இந்த ஹிந்து புனருத்தாரண இயக்கத்தின் முன்னணியில் இருந்தார்கள். அவர்களால் மொகலாய சாம்ராஜ்யம் முடிவாக அழிக்கப்பட்டதை அடுத்த கடிதத்தில் காண்போம். ஆனால், அந்த நல்ல படிப்பினையிலிருந்து அவர்கள் யாதொரு பலனும் அடையவில்லை. கிடைத்த பொருளைப் பங்கிட்டுக் கொள்வதில் அவர்கள் ஒருவரோடொருவர் மாறுபட்டு மல்லுக்கு நின்றகாலத்தில், ஆங்கிலேயர்கள் ஓசைபடாமல் வந்து அனைத்தையும் சாமர்த்தியமாகக் கொள்ளைகொண்டதைப் பின்பு காண்போம்.

மொகலாய சக்கரவர்த்திகள் தங்களுடைய சேனைகளுடன் வெளிக்கிளம்பும் போது அவர்களுடைய பாசறை எவ்வாறு இருந்ததென்று அறிய நீ ஆச்சரியப் படுவாய். அது மிகவும் பெரிய விஷயம். படைமுகாமின் சுற்றளவு 30 மைல் இருக்கும். அதற்குள் 5 லட்சம் ஜனங்கள் இருப்பார்கள். இந்த ஐந்து லட்சம் ஜனத்தொகையில், சக்கரவர்த்தியுடன் செல்லும் சேனையும் சேர்ந்தது தான். ஆயினும், வேறு பலரும் அங்கு இருந்தார்கள். நடந்து செல்லும் இம்மாநகரில் நூற்றுக்

கணக்கான கடை வீதிகள் இருந்தன. இந்த இயங்கு பாசறையில் தான் "பாசறை" மொழியாகிய உருது பிறந்து வளர்ந்தது.

மொகலாய காலத்தைச் சேர்ந்த பல உருவப் படங்கள் இன்னும் இருக்கின்றன. அவை வெகு அழகாகவும் நேர்த்தியாகவும் தீட்டப்பட்டிருக்கின்றன. சக்கரவர்த்திகளின் உருவப் படங்களைக் கொண்ட ஒரு சித்திரசாலை உள்ளது. பாபரிலிருந்து அவுரங்கசேப் வரையில், எல்லாருடைய தோற்றச் சிறப்பையும் அவை வெகு அற்புதமாக எடுத்துக் காட்டுகின்றன.

மொகலாய சக்கரவர்த்திகள் தினந்தோறும் குறைந்த பட்சம் இரண்டு தடவையாவது மேன்மாட நெற்றிக்கூட்டில் நின்று ஜனங்களுக்குக் காட்சி அளிப்பதும் அவர்களுடைய முறையீடுகளைக் கேட்பதும் வழக்கம். 1911-ல் பிரிட்டிஷ் மன்னரான ஐந்தாவது ஜார்ஜ் முடிசூட்டு விழாவிற்காக இந்தியாவிற்கு வந்த போது, மொகலாய சக்கரவர்த்திகளைப் போலவே, அவரும் ஜனங்களுக்குக் காட்சி அளித்தார். இந்திய ஆட்சி பீடத்தில் மொகலாயரின் வாரிசாகத் தாங்கள் அமர்ந்திருப்பதாகவே பிரிட்டிஷார் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். வீணான டாம்பீகத்திலும் இழிவான வெளிப்பகட்டிலும் அவர்கள் மொகலாயரைக் 'காப்பி' அடிக்க முயன்று வருகிறார்கள். மொகலாய சக்கரவர்த்திகளின் பட்டமாகிய கெய்சர் - இ - ஹிந்து என்பது பிரிட்டிஷ் மன்னருக்கு வழங்கப்பட்டிருக்கிறதென்று முன்பே கூறியுள்ளேன். இன்றுகூட, இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் ராஜப் பிரதிநிதியைச் சூழ்ந்திருக்கும் வெற்றாரவாரமும் வெளிப்பகட்டும் உலகில் வேறெங்கும் இருக்காது என்று நினைக்கிறேன்.

பிற்கால மொகலாய சக்கரவர்த்திகளுக்கு அந்நிய

நாட்டாருடன் இருந்த தொடர்பைப் பற்றி நான் இது வரை ஒன்றும் சொல்லவில்லை. அக்பருடைய தர்பாரில் போர்த்துகீசியர் பெரிதும் ஆதரிக்கப்பட்டார்கள். முக்கியமாக அவர்கள் மூலமாகத்தான் அக்பருக்கு ஐரோப்பிய உலகின் தொடர்பு ஏற்பட்டது. ஐரோப்பிய நாட்டார் யாரினும் போர்த்துகீசியரே மிகுந்த பலம் உடையவர்கள் என்பது அக்பருடைய எண்ணம். அவர்கள் கடல்களின் மீது ஆணை செலுத்தினார்கள். அப்போது ஆங்கிலேயர் இருந்த இடம் தெரியவில்லை. அக்பர் கோவாவைக் கைப்பற்ற விரும்பி அதைத் தாக்கவும் செய்தான். ஆனால், அம்முயற்சி பலன் அளிக்கவில்லை. மொகலாயர் கடற் செலவில் வல்லவர்கள் அல்ல. ஆகவே, ஒரு கடலரசுக்கு முன்னால் அவர்களால் நிற்க முடியவில்லை. அக்காலத்தில் கீழ் வங்காளத்தில் கப்பல் கட்டும் தொழில் பிரபலமாயிருந்தது. அப்படியிருந்தும் மொகலாயர் கடலைப் புறக்கணித்தது நமக்கு ஆச்சரியத்தைத் தருகிறது. ஆனால், அக் கப்பல்கள் பெரும்பாலும் பண்டங்களை ஏற்றிச் செல்வதற்கே பயன்பட்டுவந்தன. மொகலாயர் கடலில் பலவீனர்களாயிருந்தது அவர்களுடைய வீழ்ச்சிக்கு ஒரு காரணமாகச் சொல்லப்படுகிறது. கடலரசுகளின் ஆதிபத்திய காலம் பிறந்துவிட்டது.

ஆங்கிலேயர் மொகலாய தர்பாரில் இடம் பெற யத்தனித்தது கண்டு போர்த்துகீசியர் பொறாமையுற்றார்கள். அவர்கள் ஆங்கிலேயருக்கு விரோதமாக ஜஹாங்கீரின் மனதைக் கலைக்க முயன்றார்கள். ஆனால், பிரிட்டிஷ் அரசனான முதலாவது ஜேம்சினால் அனுப்பப்பட்ட சர் தாமஸ் ரோ என்னும் தூதன் எப்படியோ 1615-ல், ஜஹாங்கீரின் தர்பாருக்கு வந்து, அவனிடமிருந்து சில சலுகைகளையும் பெற்றுக்கொண்டு, கிழக்கிந்தியக் கம்

பெனியின் வியாபாரத்துக்கு அடிகோலினான். இதற்கிடையில், இந்தியக் கடல்களில் பிரிட்டிஷ் கடற்படை போர்த்துகீசியக் கடற் படையைத் தோற்கடித்து விட்டது. இங்கிலாந்துக்குச் சுக்கிர தசை அடிக்க ஆரம்பித்தது. போர்ச்சுக்கலின் பிரபாவம் மங்கி வந்தது. டச்சுக்காரரும் ஆங்கிலேயரும் மெள்ள மெள்ளப் போர்த்துகீசியரைக் கீழ்க்கடல்களிலிருந்து ஓட்டிவிட்டார்கள். 1641-ம் ஆண்டில், பெரிய துறைமுகமான மலாக்காவைக் கூட டச்சுக்காரர் போர்த்துகீசியரிடமிருந்து கைப்பற்றிக் கொண்டது உனக்கு நினைவிருக்கும். 1629-ல், ஷாஜஹானுக்கும் போர்த்துகீசியருக்கும் ஹூக்ளியில் போர் நிகழ்ந்தது. போர்த்துகீசியர் அடிமை வியாபாரத்தை ஒரு தொழிலாக நடத்தி வந்தார்கள். அவர்கள் பலாத்காரமாக மக்களைக் கிறிஸ்தவர்கள் ஆக்கி வந்தார்கள். ஹூக்ளியைப் போர்த்துகீசியர் வீரத்துடன் காத்து நின்றார்கள். கடைசியில் மொகலாயர் அதைக் கைப்பற்றினார்கள். அடிக்கடி நிகழ்ந்து வந்த இப்போர்களில் சிறிய தேசமாகிய போர்ச்சுகல் களைத்துப் போய் விட்டது. சாம்ராஜ்யப் போட்டியிலிருந்து அது விலகிக் கொண்டது. ஆனால், கோவாவையும் வேறு சில இடங்களையும் அது விடவில்லை; இன்னும் அங்கேயே இருந்து வருகிறது.

இதற்கிடையில் ஆங்கிலேயர் இந்தியாவில் சென்னை, சூரத் ஆகிய கரையோர நகரங்களுக்கருகில் பண்டகசாலைகளை ஆரம்பித்தார்கள். 1639-ல் சென்னை நகரமே அவர்களால் ஏற்படுத்தப்பட்டது. 1662-ல் இங்கிலாந்தை ஆண்ட இரண்டாவது சார்லஸ் போர்ச்சுகல் ராஜகுமாரியாகிய பிரகன்சாவைச் சேர்ந்த காதரின் என்பவளை மணந்துகொண்டான். அவனுக்குப் பம்பாய்த் தீவு சீதனமாகக் கிடைத்தது. சில நாளைக்குப் பிறகு

அவன் அதைக் கிழக்கிந்தியக்கம்பெனிக்கு மிகக் குறைந்த விலைக்கு விற்று விட்டான். இது அவுரங்கசேப்பின் ஆட்சியில் நிகழ்ந்தது. போர்த்துகீசியரை ஓட்டிவிட்டோம் என்ற கருவத்தாலும், மொகலாய சாம்ராஜ்யம் பலவீனமடைந்து வருகிறது என்ற எண்ணத்தாலும், 1685-ல் கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியாவில் தன் பூஸ்தியைப் பலாத்காரமாகப் பெருக்கிக்கொள்ள முயன்றது. ஆனால், அதன் நோக்கம் கைகூடவில்லை. யுத்தக் கப்பல்கள் இங்கிலாந்திருந்து சமுத்திரங்களையெல்லாம்தாண்டி இதற்காகவே இந்தியாவுக்கு வந்தன. கிழக்கே வங்காளத்திலும், மேற்கே சூரத்திலும் அவை அவுரங்கசேப்பின் ராஜ்யத்தின் மீது போர்தொடுத்தன. ஆனால், மொகலாயரின் வலி இன்னும் குன்றவில்லை. அவர்கள் ஆங்கிலேயரை முறியடித்தார்கள். இதிலிருந்து ஆங்கிலேயர் ஒரு பாடம் கற்றுக் கொண்டார்கள். இந்தத் தோல்விக்குப் பிறகு அவர்கள் வெகு ஜாக்கிரதையாக நடந்துகொண்டார்கள். அவுரங்கசேப் இறந்துவிட்டான். மொகலாய சாம்ராஜ்யம் கண்ணுக் கெதிரில் துண்டு துண்டாகச் சிதறியோடிக் கொண்டிருந்தது. அப்பொழுது கூட ஆங்கிலேயர் அவசரப்படவில்லை. பல வருஷங்கள் கழித்தபின்பே பெரிய காரியங்களில் இறங்க அவர்களுக்குத் துணிவு பிறந்தது. 1690-ல் ஜோப் சார்னக் என்பவன் கல்கத்தா நகரை ஏற்படுத்தினான். இவ்வாறு, சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய இம்மூன்று நகரங்களும் ஆங்கிலேயரால் ஏற்படுத்தப்பட்டன. ஆரம்பத்தில் அவை பெரும்பாலும் பிரிட்டிஷாரின் முயற்சியாலேயே வளர்ந்து வந்தன.

இப்போது, பிரான்சும் இந்தியாவில் தோன்றுகிறது. ஒரு பிரெஞ்சு வியாபாரக் கம்பெனி 1668-ல் சூரத்திலும் வேறு சில இடங்களிலும் பண்டகசாலைகளை ஆரம்

பிக்கிறது. சில வருஷங்களுக்குள் அவர்கள் புதுச்சேரியை விலைக்கு வாங்குகிறார்கள். கீழ்க்கரையில், புதுச்சேரி மிக முக்கியமான வர்த்தகத் துறைமுகமாக விளங்குகிறது.

1707-ல் அவுரங்கசேப் மரணமடைந்தான். அப்போது அவனுக்கு வயது தொண்ணூறு இருக்கும். அவன் விடுத்துச் சென்ற 'இந்தியா' என்னும் பந்தயப் பொருளை இப்போது யார் அடைவது? அதை அடைவதற்கான போருக்குக் களம் தயாராக இருந்தது. ஒருசார் அவனுடைய திறமையற்ற சந்ததிகளும், அவனுடைய பெரிய கவர்னர்களில் சிலரும் இருக்கிறார்கள்; ஒருபுறம் மராட்டரும் சீக்கியரும் இருக்கிறார்கள்; ஒருபால், வடமேற்கிலுள்ள நாட்டார்கள் உள்ளத்தில் பேராசை தூண்டப் பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள்; ஒரு பக்கம், கடல்களுக்கு அப்பாலிருந்து வந்த அந்நிய நாட்டார்களான ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் இருக்கிறார்கள். இவர்களுக்கிடையில், ஏழை இந்திய மக்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்!

91

சீக்கியரும் மராட்டியரும்

செப்டம்பர் 12, 1932.

அவுரங்கசேப்பின் மரணத்துக்குப் பிற்பட்ட நூறுவருஷ காலத்தில், இந்தியா ஒட்டுத்தையல் போடப்பட்ட துணியைப் போல் பார்ப்பதற்கு வேடிக்கையாக இருந்தது. அதை, மாறிக்கொண்டே வரும், ஆனால், பார்ப்பதற்கு அவலட்சணமான ஒரு பூதக்கண்ணாடிக் காட்சிக்கும் ஒப்பிடலாம். அத்தகைய காலம், அடித்துப் பிடுங்குவோருக்கும், கருவி முறை இவற்றின் தூய்மையைக் கருதாமலும், தருமா தருமம் பாராமலும் துணிந்து கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்வோருக்கும் மிக ஏற்ற காலமாகும். ஆகவே, இந்தியா அடித்துப் பிடுங்குவோர் மயமாக ஆய் விட்டது. அவர்களில் இந்தியாவிலேயே பிறந்து வளர்ந்தவர்கள் சிலர்; வடமேற்கு எல்லை வழியாக வந்தவர்கள் சிலர்; ஆங்கிலேயரைப் போலும் பிரெஞ்சுக்காரரைப் போலும், கடல்களுக்கு அப்பாலிருந்து வந்தவர்கள் சிலர். ஒவ்வொருவனும் அல்லது ஒவ்வொரு கூட்டமும் தன்வரையில் பார்த்துக்கொண்டு மற்றவர்களைக் குழியில் தள்ளுவதற்குச் சித்தமாயிருந்தது. சில சமயம், இருவரோ அல்லது அதற்கு மேற்பட்டோரோ ஒன்று சேர்ந்துகொண்டு மூன்றாமவனை ஒழிப்பார்கள். அதற்குப் பிறகு தங்களுக்குள்ளேயே சண்டை போட்டுக் கொள்வார்கள். ராஜ்யம் சம்பாதிப்பதற்கும், குறுகிய காலத்தில் நிறையப் பணம் சேர்ப்பதற்கும், ஜன

மானம் விட்டுப் பகிரங்கமாகக் கொள்ளையடிப்பதற்கும், சில சமயம் மெல்லிய வர்த்தகப் போர்வையில் மறைந்து கொண்டு கொள்ளையடிப்பதற்கும் அனைவரும் வெறி பிடித்து அலைந்தார்கள். இவை எல்லாவற்றிற்கும் பின்னால் மொகலாய சாம்ராஜ்யமானது கதையில் வரும் செளஷயர் பூனை போல மறைந்து வந்தது. செளஷயர் பூனையின் உடல் மறைந்தும் அதன் புன்சிரிப்பு மட்டும் மறையவில்லை என்று அந்தக் கதையில் கூறப்படுகிறது. மொகலாய சாம்ராஜ்யத்தைப் பொறுத்த வரையில் அந்தப் ‘புன்சிரிப்பு’க் கூட மறைந்து விட்டது. சக்கரவர்த்தி எனப்பட்டோன் பிறரிடம் உபகாரச் சம்பளம் பெற்றுக் கொண்டோ அல்லது பிறரால் காவலில் வைக்கப்பட்டோ தன் வாழ்நாளைத் துக்கத்தில் கழித்து வந்தான்.

நாம் மேலே காணும் கிளர்ச்சியும் குழப்பமும் முறுக்கும் திருப்பும் எல்லாம் உள்ளே நிகழ்ந்து வந்த புரட்சியின் புறச் சின்னங்களேயாகும். பழைய பொருளியல் ஏற்பாடு உடைந்து சிதைந்துகொண்டிருந்தது. ‘நிலமானியத் திட்ட’த்தின் காலம் முடிந்து விட்டது; ஆகவே, அதுகுலைந்து வந்தது. வளர்ந்துவரும் நாட்டின் புதியநிலைக்கு அது ஏற்றதாயில்லை. இதே நிகழ்ச்சியை நாம் ஐரோப்பாவில் கண்டோம். அங்கே, பழைய நிலமானிய ஏற்பாடு முடிவுறுங் காலத்தில் வியாபார வகுப்பார் தோன்றுகிறார்கள். அவர்களுடைய வளர்ச்சிக்கு யதேச்சாதிகார அரசர்களைத் தவிர வேறு தடை இல்லை. இங்கிலாந்திலும், ஓரளவு ஹாலந்திலும் மட்டும் அரசர்கள் அடக்கப்படுகிறார்கள். அவுரங்கசேப் சிம்மாசனம் ஏறியபோது இங்கிலாந்தில் குடியரசு நடைபெற்று வந்தது. முதலாவது சார்லஸ் சிரச்சேதம் செய்யப்பட்ட பின் ஏற்பட்ட அக்குடியரசு அதிககாலம் நீடிக்கவில்லை.

அவுரங்கசேப்பின் ஆட்சிக் காலத்தில்தான், அரசனை இரண்டாவது ஜேம்ஸ் ஓடிப்போகவும், பார்லிமெண்டு வெற்றியடையவும் இப்படியாகப் பிரிட்டிஷ் புரட்சி 1688-ல் பூரணம் அடைந்தது. அரைகுறையாகவாவது பொது ஜனப் பிரதிநிதித்துவம் வாய்ந்த, பார்லிமெண்டு போன்ற ஒரு சபை இங்கிலாந்தில் இருந்ததானது போராட்டத்துக்குப் பெரிதும் உதவியது. முதலில் பிரபுக்களுக்கு எதிராகவும், பிறகு அரசனுக்குப் பதிலாகவும் அவர்களுடைய ஸ்தானத்தை எடுத்துக்கொள்ளக் கூடிய ஒரு ஸ்தாபனம் இருந்தது மிகவும் அனுகூலமாயிருந்தது.

மற்றப் பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளில் நிலைமை வேறுவிதமாயிருந்தது. பிரான்சில் பேரரசன் எனப்பட்ட 14-வது லூயி இன்னும் அரசு புரிந்து வந்தான். அவுரங்கசேப்பின் நீண்ட ஆட்சிக்கால முழுதும் அவனும் ஆண்டதோடு அவுரங்கசேப் இறந்த பின்பும் எட்டு வருஷங்கள் ஆண்டான். 18-வது நூற்றாண்டின் இறுதி வரையில் பிரான்சில் தடையற்ற யதேச்சாதிகார அமுல் நடந்து வந்தது. அதற்குப்பின் ஒரு பெரும் பிரளயம் அங்கே உண்டாயிற்று. அதுதான் புகழ்பெற்ற பிரெஞ்சுப் புரட்சியாகும். ஜெர்மனியில் 17-வது நூற்றாண்டு எவ்வளவு பயங்கரமாயிருந்ததென்று ஏற்கெனவே கண்டோம். அந்தக் காலத்தில் தான் தேசத்தைக் கலைத்து நாசம் செய்த முப்பதாண்டுப் போர் நிகழ்ந்தது.

18-வது நூற்றாண்டில் இந்தியாவின் நிலைமை முப்பதாண்டுப் போர் காலத்தில் ஜெர்மனி இருந்த நிலைமையை ஓரளவு ஒத்திருந்தது; ஓரளவுதான், பூராவுமல்ல. இரு நாடுகளிலும் பொருளியல் ஏற்பாடு சீர்குலைந்து விட்டது. இருநாடுகளிலும் பழைய நிலமானிய வகுப்பு காலத்துக்கு

ஏற்றதாயில்லை. இந்தியாவில் நிலமானிய ஏற்பாடு சீர்குலைந்து வந்தாலும் அது நெடுங்காலம் வரையில் மறையவில்லை. அவ்வாறு அது மறைந்த காலத்தும் அதன் வெளித்தோற்றம் மட்டும் மறையாதிருந்து வந்தது. இன்று கூட இந்தியாவிலும் ஐரோப்பாவின் சில பாகங்களிலும் நிலமானிய முறையின் சின்னங்கள் பல இருப்பதைக் காண்கிறோம்.

மொகலாய சாம்ராஜ்யம் சீர்குலைந்ததற்கு மேற்கூறிய பொருளியல் மாறுதல்களே காரணம். ஆனால், அந்தச் சீர்குலைவைப் பயன்படுத்திக் கொண்டு அதிகாரத்தைக் கைப்பற்றக் கூடிய மத்திய வகுப்பு ஒன்று இந்தியாவில் இல்லை. இங்கிலாந்தில் இருந்ததுபோல் அம்மத்திய வகுப்பாருடைய பிரதிநிதித்வம் பெற்ற ஸ்தாபனமோ, சபையோ இந்தியாவில் இல்லை. நீண்ட காலமாக யதேச்சாதிகார ஆட்சி நடந்து வந்ததால் நாட்டில் அடிமைப் புத்தியே எங்கும் பரவியிருந்தது. பழைய சுதந்திர கருத்துகளை மக்கள் பெரும்பாலும் மறந்துவிட்டார்கள். ஆயினும், நிலமானியப் பிரபுக்களும், பூர்ஷுவா வகுப்பாரும், குடியானவர்களும் அதிகாரத்தைக் கைப்பற்ற முயன்றார்கள் என்பதை இக்கடிதத்திலேயே, பிறகு காண்போம். அம்முயற்சிகளில் சில வெற்றி அடையும் நிலைமைக்கும் வந்தன. நிலமானிய ஏற்பாடு விழுவதற்கும், அதிகாரத்தை எடுத்து நடத்தக் கூடிய மத்திய வகுப்பு எழுவதற்கும் இடையே ஒரு கால இடையீடு இருந்திருக்க வேண்டும் என்பதுதான் இங்கே நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயம். அத்தகைய இடையீடு நேருங்கால், ஜெர்மனியில் நிகழ்ந்தது போல், குழப்பமும் கொந்தளிப்பும் விளைகின்றன. இந்தியாவிலும் அதையே காண்கிறோம். சிற்றரசரும் குறுநில மன்னரும் நாட்டின் ஆதிக்கத்துக்காகப் போரிடு

கிறார்கள். ஆனால், அவர்கள் நசித்துக்கொண்டிருக்கும் ஒரு ஏற்பாட்டின் பிரதிநிதிகளாக இருக்கிறார்கள். அவர்கள் ஒரு புதிய வகுப்பினரை எதிர்க்க வேண்டியிருக்கிறது. அப்புதிய வகுப்பினர் பிரிட்டிஷ் பூர்ஷுவா வகுப்பின் பிரதிநிதிகள் ஆவர். அவர்கள் சமீபத்தில் தான் தங்கள் நாட்டில் ஜெயம் பெற்றவர்கள். பிரிட்டிஷ் பூர்ஷுவா வகுப்பு நிலமானிய வகுப்பைக் காட்டிலும் சமூக ஏணியில் ஒரு படி உயர்ந்ததாகும். அது உலகில் தோன்றி வளர்ந்து வரும் புது நிலைமைகளோடு ஒட்டியதாக இருந்தது. அதற்கு அமைப்புப் பலமும் திறமையும் அதிகம். அதன் கையில் சிறந்த கருவிகளும் ஆயுதங்களும் இருந்தன. அவற்றின் துணைகொண்டு அது நன்றாகப் போரிடமுடியும் .கடல்மீதும் அதன் ஆணை சென்றது. இந்தியாவின் நிலமானிய அரசர்கள் இப்புதிய சக்தியுடன் போரிடுவதென்றால் அது எங்ஙனம் சாத்தியமாகும்? அதற்கு ஆற்றாத அவர்கள் ஒருவர்பின் ஒருவராக வீழ்கிறார்கள்.

இக் கடிதத்தின் முகவுரை மிகவும் நீண்டுவிட்டது. இப்பொழுது நாம் சிறிது பின்னே போகவேண்டும். சென்ற கடிதத்திலும் இக்கடிதத்திலும், அவுரங்கசேப்பின் ஆட்சியின் பிற்காலத்தில் ஏற்பட்ட பொதுஜன எழுச்சிகளைப் பற்றியும், மதாபிமான ஹிந்து தேசிய மறுமலர்ச்சியைப் பற்றியும் நான் குறிப்பிட்டிருக்கிறேன். அவற்றைப் பற்றிச் சிறிது அதிகமாகக் கூறவேண்டும். மொகலாய சாம்ராஜ்யத்தின் பல்வேறு பகுதிகளிலும் அரைகுறை மதாபிமானமுள்ள பொதுஜன இயக்கங்கள் பல தோன்றி வளர்கின்றன. அவை சிறிது காலம் வரையில் அரசியலில் தலையிட்டுக் கொள்ளாமல் அமைதியாக இருந்து வருகின்றன. ஹிந்தி, மராட்டி, பஞ்சாபி போன்ற தேச பாஷைகளில் சமயகீர்த்தனைகளும்

தெய்வப் பாடல்களும் இயற்றப் படுகின்றன. அவை மக்களிடையே பரவி தூங்கிக் கிடக்கும் ஜன சமுதாய உணர்வைத் தட்டி எழுப்புகின்றன. மதப் பெரியோர் தோன்றுகிறார்கள். அவர்களுக்குச் சிஷ்யக் கூட்டங்கள் ஏற்படுகின்றன. பொருளியல் நிலைமை காரணமாக அக் கூட்டங்களின் கவனம் சிறிது சிறிதாக அரசியல் பிரச்சினைகளில் திரும்புகிறது. உடனே அவர்களுக்கும் மொகலாய அரசுக்கும் தகராறு விளைகிறது. அவர்கள் ஒடுக்கப்படுகிறார்கள். அதனால், இதுவரையில் அமைதியாயிருந்து வந்த மதக் கூட்டங்கள் ராணுவ சகோதரத்துவமுடைய போர்க் கூட்டங்களாக மாறுகின்றன. சீக்கியரும் வேறு பிறரும் தோன்றி வளர்ந்த வரலாறு இதுவே யாகும். மராட்டியரின் சரித்திரம் இன்னும் சிறிது சிக்கலானது. அங்கும் கூட மதாபிமானம் தேசாபிமானம் இரண்டும் கலந்த ஒன்றுதான் மொகலாயரை எதிர்த்துப் போர் புரிகிறது. பிரிட்டிஷாரால் மொகலாய சாம்ராஜ்யம் வீழ்ச்சி அடையவில்லை. அதை வீழ்த்தியவை இம்மதாபிமான - தேசிய இயக்கங்களே ஆகும். அதிலும் மராட்டியரைத்தான் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். அவுரங்கசேப்பின் பிற மதத் துவேஷக் கொள்கையானது இவ்வியக்கங்களுக்கு அதிகபலம் அளித்தது. புறமதத்தினர்பால் அவுரங்கசேப்பின் பகைமையும் துவேஷமும் அதிகரித்ததற்கு, அவனுடைய ஆட்சிக்கு விரோதமாக எழுந்த இம் மதவுணர்வே காரணமாகவும் இருந்திருக்கலாம்.

1669-ம் ஆண்டிலேயே வடமதுரையிலுள்ள ஜாட் குடியானவர்கள் அவுரங்கசேப்புக்கு விரோதமாக எழுந்து கலகம் செய்தார்கள். அவர்கள் மீண்டும் மீண்டும் அடக்கப்பட்டார்கள். ஆனால், அவர்கள், அவுரங்கசேப் மரணமடையும் வரையில் அதாவது 30

வருஷங்களுக்கு மேலாகவே மீண்டும் மீண்டும் எழுந்துகொண்டே இருந்தார்கள். வடமதுரை தலைநகராகிய ஆக்ராவுக்கு மிகவும் அருகிலுள்ள ஒரு பட்டணம் என்பதை நீ நினைவில் வைக்கவேண்டும். ஆகவே, இக் கலகங்கள் சாம்ராஜ்ய பீடத்துக்கு அருகிலேயே நிகழ்ந்து வந்தன என்று தெரிகிறதல்லவா? ‘சத்நாமிகள்’ என்போரும் கலகம் விளைத்தார்கள். அவர்கள் சாமானியரான ஒரு ஹிந்துப் பிரிவினர். ஆகவே, சத்நாமிகளின் கலகமும், பிரபுக்கள் கவர்னர்கள் முதலியோருடைய கலகங்களைப் போலன்றி ஏழைமக்களின் கலகமாகவே இருந்தது. ஒரு மொகலாயப் பிரபு சத்நாமிகளை இவ்வாறு வருணிக்கிறான்: “இந்தத் தரித்திரம் பிடித்த கலகக்காரக் கூட்டத்தில் தச்சன், தட்டான், குப்பைவாரி, சக்கிலியன், போனவன், வந்தவன், புறம்போக்கு எல்லாரும் இருக்கிறார்கள்.” அவன் கண்ணுக்கு இத்தகைய ‘புறம் போக்கு’ மனிதர்கள் தங்களுடைய எஜமானர்களுக்கு விரோதமாக எழுவது செயத்தகாத செயலாகத் தோன்றியது போலும்!

இனி, சீக்கியரைக் கவனிப்போம். அவர்களுடைய சரித்திரத்தை ஆதியிலிருந்து பார்ப்போம். நான் குரு நானக் என்னும் பெரியாரைப் பற்றிக் கூறியுள்ளது உனக்கு நினைவிருக்கும். அவர் பாபர் இந்தியாவுக்கு வந்தவுடனே காலகதி அடைந்தார். ஹிந்து மதத்துக்கும் இஸ்லாம் மதத்துக்கும் பொதுவான ஒரு சித்தாந்தம் காண முயன்றவர்களிலே அவர் ஒருவர். அவருக்குப் பின்னால் மூன்று குருமார்கள் வந்தார்கள். அவர்களும் குரு நானக்கைப் போலவே மத விஷயங்களில் மட்டும் சிரத்தை கொண்டவர்களாய் அமைதியான வாழ்வு நடாத்தி வந்தனர். இப்போது அமிருதசரசில் சீக்கியரின் பொற் கோயிலும் திருக்குளமும் உள்ள

இடத்தைச் சீக்கியரின் நாலாவது குருவுக்கு அக்பர் அளித்தார். அக் காலத்திலிருந்து அமிருதசரஸ் சீக்கியரின் பிரதான க்ஷேத்திரமாக விளங்குகிறது.

அர்ஜுன்சிங் என்பவர் ஐந்தாவது குரு. அவர்தான் சீக்கியரின் வேதமாகிய 'கிரந்தம்' என்னும் நூலைத் தொகுத்தவர். அதில் ஆசிரிய வசனங்களும் பாடல்களும் அடங்கியுள்ளன. ஏதோ ஒரு அரசியல் குற்றத்துக்காக ஜஹாங்கீர் அர்ஜுன்சிங்கைச் சித்திரவதை செய்து கொல்வித்தான். இந்நிகழ்ச்சி சீக்கியரின் வாழ்க்கையை அடியோடு மாற்றிவிட்டது. அவர்களுடைய குரு அநியாயமாகவும் குரூரமாகவும் வதைக்கப்பட்டது கண்டு அவர்கள் ஆத்திரமுற்றார்கள். அவர்களுடைய மனம் ஆயுத பலத்தை நாடியது. அவர்களுடைய ஆறாவது குரு ஹரகோவிந்தரின் கீழ் அவர்கள் ஒரு ராணுவ சகோதரத்துவமுள்ள சமூகமாக மாறினார்கள். அந்நாளிலிருந்து அவர்கள் மொகலாய அரசுடன் மாறு கொண்டு போரிட்டு வந்தார்கள். குரு ஹரகோவிந்தருக்கு ஜஹாங்கீர் பத்து வருஷச் சிறைத் தண்டனை அளித்தான். ஒன்பதாவது குரு டேக் பகதூர் என்பவர்; அவர் அவுரங்கசேப் காலத்தில் வாழ்ந்தவர். இஸ்லாம் மதத்தைத் தழுவுமாறு அவுரங்கசேப் அவருக்குக் கட்டளையிட்டான். அவர் மறுக்கவே, அவன் அவருக்கு மரண தண்டனை கொடுத்தான். குரு கோவிந்த சிங் என்பவர் பத்தாவது குரு. அவரே கடைசி குருவும் ஆவர். டில்லிச் சக்ரவர்த்தியை எதிர்ப்பதற்காகவே அவர் சீக்கியரை ஒன்று திரட்டி ஒரு பலமுள்ள ராணுவ சமூகமாகச் செய்தார். அவுரங்கசேப் இறந்து ஓராண்டு சென்ற பின் அவர் காலமானார். அவருக்குப் பின் யாரும் குருவாக வரவில்லை. இப்பொழுது குருவின் அதிகாரங்கள் அனைத்தும் சீக்கிய சமூகம் முழுதிலும் இருப்பதாகக்

கருதப்படுகிறது. சீக்கிய சமூகம் 'கால்சா' அல்லது 'தேர்ந்தெடுக்கப்பட்ட சமூகம்' என்று அழைக்கப்படுகிறது.

அவுரங்கசேப் மாண்டவுடனே ஒரு சீக்கியக் கலகம் நிகழ்ந்தது. அது அடக்கப்பட்டது. ஆனால், பஞ்சாபில் சீக்கியரின் பலம் வளர்ந்துகொண்டும் உறுதிப்பட்டுக் கொண்டும் வந்தது. அந்த நூற்றாண்டின் இறுதியில், ரஞ்சித் சிங்கின் தலைமையின் கீழ், ஒரு சீக்கிய ராஜ்யமே பஞ்சாபில் தோன்றியது.

மேற்கூறிய கலகங்களெல்லாம் மொகலாய சாம்ராஜ்யத்துக்குப் பெருந் தொந்திரவை அளித்தன என்பதில் ஐயமில்லை. ஆனால், அதற்கு உண்மையான அபாயம் மராட்டியரிடமிருந்துதான் ஏற்பட்டது. இந்தியாவின் தென்மேற்குப் பகுதியில் மராட்டியருடைய பலம் நாளுக்கு நாள் வளர்ந்து வந்தது. ஷாஜஹானின் ஆட்சிக் காலத்திலேயே ஷாஜி போன்ஸ்லே என்னும் மராட்டியத் தலைவன் ஒருவன் தொந்திரவு கொடுத்து வந்தான். அவன் முதலில் ஆமத் நகரிலும் பின்பு பீஜபூரிலும் ஓர் உத்தியோகஸ்தனாய் இருந்து வந்தான். 1627-ல் அவனுக்கு ஒரு மகன் பிறந்தான். அம்மகனே மராட்டியர் குலதிலகமாகிய சிவாஜி. மொகலாய சாம்ராஜ்யம் சிவாஜியைக் கண்டு கிடுகிடு என்று நடுங்கியது. அவன் பத்தொன்பது வயதுப் பையனாயிருக்கும்போதே பகைவர் அரண்களைக் கவரும் தன் வீரவாழ்வைத் தொடங்கிவிட்டான். அவன் முதன் முதலாகப் பூனாவுக்கு அருகில் ஒரு கோட்டையைக் கைப்பற்றினான். அவன் எதற்கும் அஞ்சாத மகா வீரன். 'குரங்கு'ப் போர் நடத்துவதில் மிக வல்லவன். உடலுறுதியும் நெஞ்சுறுதியும் ஒருங்கே வாய்ந்த மலைவாசிகளைக் கொண்ட மறப்பெரும் படைக்கு அவன் தலைவனாயிருந்தான். அவர்கள் அவனுக்காக உயி

ரையும் கொடுக்கச் சித்தமாயிருந்தார்கள். அவர்களின் சகாயத்தால் அவன் பல கோட்டைகளைக் கைப்பற்றினான். மேற்கொள்ளும் வழி நல்லதோ கெட்டதோ, அது பற்றி அவனுக்குக் கவலை இல்லை; முடிவில் வெற்றி காண்பதே அவன் குறி. அவன் தனக்கெதிராக பீஜப்பூர் அரசனால் அனுப்பப்பட்ட ஒரு தளபதியை வஞ்சனையால் கொன்றான். சிவாஜியினால் அவுரங்கசேப்பின் தளபதிகள் நல்ல தூக்கத்தையும் இழந்தார்கள். 1665-ல் அவன் திடீரென்று சூரத்தில் தோன்றினான். அங்கு ஆங்கிலேயருக்குச் சொந்தமான பண்டகசாலை ஒன்று இருந்தது. அவன் அந்த நகரைச் சூறையாடினான். ஆக்ராவிலுள்ள அவுரங்கசேப்பின் தர்பாருக்குப் போகுமாறு அவன் தூண்டப்பட்டான். அவ்வாறே அவன் சென்றான். அவுரங்கசேப் அவனை ஒரு சுதந்திர அரசனாக மதித்துக் கவுரவிக்கவில்லை. அதனால், அவன் அவமானமும் ஆத்திரமும் அடைந்தான். அவுரங்கசேப் சிவாஜியைச் சிறைப்படுத்தினான். ஆனால், அவன் சிறையிலிருந்து தப்பித்துக் கொண்டான். அப்பொழுதுகூட, அவுரங்கசேப் அவனுக்கு 'ராஜா' என்னும் பட்டத்தை அளித்து அவனைத் தன் பக்கம் சேர்த்துத் கொள்ளப் பார்த்தான்.

ஆனால், சிவாஜி மீண்டும் போரில் இறங்கிவிட்டான். தட்சிணத்திலுள்ள மொகலாய உத்தியோகஸ்தர்கள் அவனிடம் உள்ள பீதியினால் தங்களைக் காப்பாற்றுமாறு அவனுக்குப் பணம் கொடுத்தார்கள். இதுதான் மராட்டியர் சென்றவிடமெல்லாம் வாங்கிய புகழ்பெற்ற 'சௌத்' (நாலில் ஒரு கடமை) வரியாகும். ஆகவே, மராட்டியரின் பலம் வளர்ந்தும் மொகலாயரின் பலம் தேய்ந்தும் வந்தது. 1674-ம் ஆண்டில் ராய்கர் கோட்டையில் சிவாஜி சக்கரவர்த்தியாக முடி சூட்டிக் கொண்டான். 1680-ல் அவன் விண்ணுலகெய்தினான். அவனுடைய மரண பரியந்தம் அவனுக்கு வெற்றிக்கு மேல் வெற்றி கிடைத்துக்கொண்டே வந்தது.

மகாராஷ்டிர தேசத்தின் இருதயஸ்தானமாகிய பூனாவில் நீ சிலகாலமாக வசித்துக் கொண்டிருக்கிறாய். மகாராஷ்டிரர் சிவாஜியை எத்தகைய பேரன்புடன் எப்படிப் போற்றுகிறார்கள் என்பதை நீ நேரில் கண்டறிந்திருப்பாய். நான் ஏற்கெனவே கூறிய மதாபிமான தேசிய மறுமலர்ச்சியின் பிரதிநிதியாக அவன் விளங்கினான். பொருளியல் நிலையின் குலைவும், பொது மக்களின் துன்பமும் நிலத்தைக் கரம்பு திருத்திப் பண்படுத்தின; அந்நிலத்துக்கு மகாராஷ்டிர மகா கவிகளான ராம்தாசும் துகாராமும் தங்களுடைய கவிதை என்னும் எருவிட்டு அதை வளம்படுத்தினார்கள்; அந் நிலத்தில் மகாராஷ்டிரரின் ஒற்றுமை உணர்வு என்னும் பயிர் விளைந்தது; அந்த நல்ல தருணத்தில் தோன்றிய அவர்களுடைய வீரத் தலைவனான சிவாஜி அவர்களுக்கு வெற்றி என்னும் கதிரை அறுத்துக் கொடுத்தான். பீஜப்பூர் தளபதியைக் கொன்றது போன்ற வஞ்சனையான செயல்களால் நாம் சிவாஜியைத் தாழ்த்தி மதிப்பிட வேண்டி இருக்கிறது. ஆனால், அவன் நடத்திய யுத்தங்களில் பொது மக்களுக்கோ, பெண்களுக்கோ, மசூதிகளுக்கோ, தீங்கு ஏற்படாமல் தவிர்க்க முயன்றிருக்கிறான் என்பது புலப்படுகிறது.

சிவாஜியின் மகனான சாம்பாஜியை மொகலாயர் சித்திரவதை செய்து கொன்றனர். மகாராஷ்டிரர்களுடைய முன்னேற்றம் சிறிது தடைப்பட்டது. ஆனால், மீண்டும் அவர்களுடைய பலம் வளரத் தொடங்கியது. அவுரங்கசேப் இறந்தவுடன் அவனுடைய பெரிய சாம்ராஜ்யம் மாயமாக மறையத் தொடங்கியது. பல

னர்கள் டில்லியை எதிர்பாராமல் தாங்களே சுதந்திரமாக ஆளத் தொடங்கினர். வங்காளம் சாம்ராஜ்யத்திலிருந்து பிரிந்து போய்விட்டது. அயோத்தியும் ரோஹில்கண்டும் அவ்வாறே போயின. தட்சிணத்தில் நிஜாம்-அசப்ஜா என்பவன் ஒரு புதிய ராஜ்யம் கண்டான். அதுதான் தற்போது ஹைதராபாத் சமஸ்தானமாக இருக்கிறது. அதன் அரசரான நிஜாம் அசப்ஜாவின் சந்ததியில் வந்தவர் ஆவர். அவுரங்கசேப் இறந்து 17 ஆண்டுகள் கழிவதற்குள் சாம்ராஜ்யம் போனஇடம் தெரியாமல் போய்விட்டது. ஆனால், டில்லி அல்லது ஆக்ராவில் பேருக்கு சக்கரவர்த்திகள் மட்டும் ஒருவர் பின் ஒருவராக வந்துகொண்டிருந்தார்கள். ஆனால், அவர்களுக்குச் சாம்ராஜ்யந்தான் இல்லை.

சாம்ராஜ்யத்தின் பலம் குன்றவும் மராட்டியரின் பலம் ஓங்குகிறது. அவர்களுடைய முதன் மந்திரிகளாகிய பேஷ்வாக்கள் என்போர் உண்மையில் அதிகாரம் செலுத்த ஆரம்பிக்கிறார்கள். ராஜா பேருக்குத்தான். பேஷ்வா பதவியானது ஜப்பானிலுள்ள ஷோகனைப் போல் தலைமுறை தத்துவமாக மாறுகிறது. ராஜாவைக் கேட்போர் இல்லை. தட்சிணம் முழுவதும் மராட்டியர் 'சௌத்' வரி வசூலிக்கும் உரிமையை டில்லிச் சக்கரவர்த்தி தன் பலவீனம் காரணமாக அங்கீகரிக்கிறான். இது போதாதென்று மகாராஷ்டிர பேஷ்வா குஜராத்தையும், மாளவத்தையும், மத்திய இந்தியாவையும் ஜெயிக்கிறான். 1737-ல் பேஷ்வாவின் துருப்புகள் டில்லி வாயில் வரைக்கும் வந்து விடுகின்றன. இந்திய ஆதிபத்தியம் மகாராஷ்டிரருக்கு விதிக்கப்பட் டிருப்பதுபோல் தோன்றுகிறது. தேசத்தில் அவர்களுடைய ஆணை கொடிகட்டிப் பறக்கிறது. ஆனால், திடீரென்று 1739-ல், வடமேற்கிலிருந்து அழைக்காமல் ஒரு தலையீடு வந்து

சேர்ந்தது. அது எல்லாவற்றையும் தலைகீழாக்கி வட இந்தியாவின் தோற்றத்தையே மாற்றிவிட்டது.

இக் கடிதம் மிக நீண்டுவிட்டதால் இத்தோடு முடிக்கிறேன். எண்ணியதற் கதிகமாக இந்தியச் சரித்திரத்தின் இக்காலப் பகுதியில் தங்கிவிட்டேன். அடுத்த கடிதத்திலும் அதையே தொடர்ந்து எழுதவேண்டுமே யென்று அஞ்சுகிறேன்.

92

இந்தியாவில் தங்களுக்குப் போட்டியாக உள்ளவர்கள் மீது ஆங்கிலேயர் வெற்றி பெறுகிறார்கள்

செப்டம்பர் 13, 1932.

டில்லி சாம்ராஜ்யம் மிகவும் கேவலமான ஸ்திதியில் இருந்ததென்று மேலே கண்டோம். உண்மையில், அதை ஒரு சாம்ராஜ்யம் என்று எம்முறையிலும் சொல்வதற்கில்லை. இன்னும் சிறிது காலம் கழித்து டில்லியும் வட இந்தியாவும் இதைக் காட்டிலும் கீழான நிலையை அடைந்தன. இந்தியாவில் அப்போது அடித்துப்பிடுங்குவோருக்குக் காலமாயிருந்தது என்று ஏற்கெனவே கூறியுள்ளேன். அந்தக் கலையில் தேர்ந்த ஒருவன் திடீரென்று வடமேற்கிலிருந்து இந்தியா மீது பாய்ந்தான். அவன் தான் பாரசீகத்துக்குத் தன்னை அரசனுகச் செய்துகொண்ட நாதிர்ஷா என்பவன். அவன் இந்தியாவில் புரிந்த கொலைக்கும் கொள்ளைக்கும் கணக்கு வழக்கில்லை. அவன் அளவற்ற ஐசுவரியத்துடன் திரும்பிச் சென்றான். ஷாஜஹான் செய்வித்த புகழ்பெற்ற மயிலாசனத்தையும் அவன் தன்னுடன் கொண்டு சென்றான். இக்கொடிய பீடை 1739-ல் ஏற்பட்டது. வட இந்தியா களைத்து விழுந்து விட்டது, நாதிர்ஷா தன் ராஜ்யத்தைச் சிந்து நதி வரையில் விஸ்தரித்தான். இவ்வாறு, ஆப்கானிஸ்தானம் இந்தியாவிலிருந்து வேறு பிரிக்கப்பட்டது. மகாபாரத காலத்திலிருந்து இந்திய சரித்திரம் நெடுகிலும், காந்தார தேசத்துக்கு (ஆப்கானிஸ்தானம்)

இந்தியாவுடன் நெருங்கிய தொடர்பு உண்டு. அது இப்போது அறுத்தெறியப்பட்டது.

நாதிர்ஷா வந்து போன 17 ஆண்டுகளுக்குள் இன்னொரு கொள்ளைக்காரன் இந்தியாமீது படையெடுத்து வந்தான். அவனுடைய பெயர் ஆமத்ஷா துரானி என்பது. நாதிர்ஷாவுக்குப் பின் ஆப்கானிஸ்தானத்தில் அவன் பட்டத்துக்கு வந்தான். இந்தப் படையெடுப்புகளெல்லாம் இருந்தும் மராட்டிய ஆதிக்கம் பரவிக்கொண்டே சென்றது. 1758-ல் பஞ்சாப் மராட்டியரின் கீழ் இருந்தது. இந்தப் பிராந்தியங்களில் எல்லாம் அவர்கள் அரசாங்கம் அமைக்க முயலவில்லை. அவர்களுடைய பெயர்பெற்ற 'சௌத்' வரியை மட்டும் பெற்றுக்கொண்டு ஆட்சியை அவ்வப் பிரதேச மக்களிடமே விட்டு விட்டார்கள். ஆக, நடைமுறையில், மராட்டியரே டில்லி சாம்ராஜ்யத்தை வாரிசு முறையில் அடைந்தவர்கள். ஆனால், அதற்குப் பிறகு அவர்களுக்கு ஒரு பெரிய தடை நிகழ்ந்தது. துரானி வடமேற்கிலிருந்து மீண்டும் திரும்பி வந்து, மராட்டியருக்கு விரோதமாக மற்றவர்களுடன் சேர்ந்துகொண்டு, பழைய போர்க்களமாகிய பானிப்பட்டில் ஒரு மராட்டியப் பெருஞ்சேனையை 1761-ல் முறியடித்தான். துரானி இப்பொழுது வட இந்தியா முழுவதற்கும் எஜமானன் ஆகிவிட்டான் அவனைத் தட்டிப் பேசுவோர் ஒருவரும் இல்லை. ஆனால், அவனுக்கு வெற்றி ஏற்பட்ட தருணத்தில் அவனுடைய ஜனங்களே கலகம் விளைத்துத் தொந்திரவு அளித்தார்கள்; ஆகவே, வீடு திரும்பவேண்டியதாயிற்று.

ஒரு கணம், மராட்டியருடைய ஆதிபத்திய காலம் முடிந்துவிட்டது போலவும் அவர்களுடைய முக்கியத்துவம் குறைந்துவிட்டது போலவும் தோன்றியது. அவர்கள் நாடிய பெரும் பந்தயப் பரிசு அவர்களுக்குக்

கிடைக்கவில்லை. ஆனால், அவர்கள் சிறிது சிறிதாகத் தங்களைச் சமாளித்துக் கொண்டார்கள். மீண்டும், உள்நாட்டைப் பொறுத்தவரையில், அவர்களுடைய பலம் மேம்பட்டு விளங்கியது. இதற்கிடையில், மராட்டியரினும் வலிய வேறுபல சக்திகள் வேலை செய்யத் தொடங்கின. வருங்காலத்தில் சில தலைமுறைகள் வரையிலும், இந்தியாவின் தலையெழுத்து நிர்ணயிக்கப்பட்டு வந்தது. அந்தச் சமயத்தில், பல மராட்டியத் தலைவர்கள் தோன்றினார்கள். அவர்கள் பேஷ்வாவுக்கு உட்பட்டவர்கள் என்று கருதப்பட்டார்கள். அவர்களில் முக்கியமானவர்கள் குவாலியர் சிந்தியாவும், பரோடா கெய்க்வாரும், இந்தூர் ஹோல்காரும் ஆவர்.

மேற்கூறிய இதர நிகழ்ச்சிகளை நாம் இப்போது கவனிக்கவேண்டும். அக்காலத்தில் தென்னிந்தியாவில் நிகழ்ந்த தலையாய நிகழ்ச்சி ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் இடையே விளைந்த போராட்டமேயாகும். 18-வது நூற்றாண்டில், ஐரோப்பாவில், இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் அடிக்கடி போர் நிகழ்ந்து வந்தது. ஆகவே, அவர்களுடைய பிரதிநிதிகளும் இந்தியாவில் போரிட்டுக் கொண்டார்கள். ஆனால், அவர்களுடைய தாய் நாடுகள் சண்டையின்றிச் சமாதானமாயிருந்த காலத்தும், அவர்கள் மட்டும் இந்தியாவில் சண்டையிட்டுக் கொள்வதுண்டு. இருதரப்பிலும் பழிபாவங்களுக்கு அஞ்சாத சாகசக்காரர்கள் இருந்தார்கள். அதிகாரத்தையும் செல்வத்தையும் அடைவதற்கு அவர்கள் பேராசைகொண்டு அலைந்தார்கள். அப்பேர்ப்பட்டவர்களுக்கிடையில் கடுமையான போட்டி விளைவது இயல்புதானே? பிரெஞ்சுத் தரப்பில் பிரதானமானவன் டியூப்ளே; இங்கிலீஷ் தரப்பில் பிரதானமானவன் கிளைவ். இரு ராஜ்யங்களுக்குள் விளையும் உள்நாட்டுப்

பூசல்களில், தான் ஒருவர் பட்சத்தில் சேர்ந்து கொண்டு தன் பயிற்சி மிக்க படை பலத்தை வாடகைக்குக் கொடுப்பது, பின்னர் நாட்டையே கவர்ந்து கொள்வது. இத்தகைய இலாபகரமான தொழிலில் டியூப்ளே இறங்கினான். பிரெஞ்சுக்காரரின் செல்வாக்கு அதிகரித்தது. ஆனால்,உடனே ஆங்கிலேயரும் டியூப்ளேயின் முறைகளைக் கையாண்டு விரைவில் குருவுக்கு மிஞ்சிய சிஷ்யர்கள் ஆகிவிட்டார்கள். இரு திறத்தாரும், பிணம் பிடுங்கிக் கழுகுகள் போல, எங்கே சண்டை அகப்படும் என்று பார்த்துக் கொண்டே இருந்தார்கள். அவர்களுடைய அதிருஷ்டம், பாரத பூமியில் அப்போது சண்டைகளுக்குக் குறைவே இல்லை. தென்னிந்தியாவில் எந்த ராஜ்யத்திலாவது வாரிசு பாத்தியதை பற்றிய தகராறு ஏற்பட வேண்டியது தான் தாமதம்; உடனே, ஆங்கிலேயர் ஒரு பட்சத்தையும் பிரெஞ்சுக்காரர் இன்னொரு பட்சத்தையும் ஆதரிப்பதை நீ காணலாம். இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் நடந்த பதினேந்தாண்டுப் போரில் (1746 - 1761) இங்கிலாந்து வெற்றி பெற்றது. இந்தியாவில் இருந்த ஆங்கிலேய சாகசக்காரருக்குத் தாய் நாட்டின் முழு உதவியும் கிடைத்து வந்தது. டியூப்ளேக்கும் அவனைச் சேர்ந்தவர்களுக்கும் அத்தகைய உதவி எதுவும் பிரான்சிலிருந்து கிடைக்க வில்லை. இதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. ஆங்கிலேயருக்குப் பின்னால் பிரிட்டிஷ் வியாபாரிகளும் கிழக்கிந்தியக் கம்பெனியின் பங்குதார்களும் இருந்தார்கள். அவர்கள் பார்லிமெண்டிலும் அரசாங்கத்திலும் தங்கள் செல்வாக்கை உபயோகித்து ஆங்கிலேயருக்கு உதவி அளித்து வந்தார்கள். பிரெஞ்சுக்காரருக்குப் பின்னால் இருந்தது யார்? பேரரசன் 14-வது லூயியின் பேரனும் அவனுக்குப்பின் பட்டத்துக்கு வந்தவனுமாகிய 15-வது லூயி

தான். அவன் 'தெம்மாங்கு பாடிக்கொண்டு' தன் அழிவை நாடிப் போய்க்கொண்டிருந்தான். அத்தகையவன் இந்தியாவிலிருந்த பிரெஞ்சுக்காரருக்கு என்ன உதவி அளிக்கமுடியும்? பிரிட்டிஷாரின் கடலாதிக்கமும் அவர்களுக்குப் பேருதவியாயிருந்தது. ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர் ஆகிய இரு சாராரும் இந்தியருக்குப் படைப் பயிற்சி அளித்தார்கள். அவ்விந்தியத் துருப்புகள் சிப்பாய்கள் என்று அழைக்கப்பட்டார்கள். சிப்பாய்கள் ஸ்தல சைனியங்களைவிட அதிக ஆயுத பலமும் கட்டுப்பாடும் வாய்ந்து விளங்கியதால் அவர்களுடைய சேவைக்கு ஏக கிராக்கி இருந்தது.

ஆக, இந்தியாவில் ஆங்கிலேயர் பிரெஞ்சுக்காரரை முறியடித்து அவர்களுடைய நகரங்களான சந்திரநாகூரையும் புதுச்சேரியையும் அடியோடு அழித்து விட்டார்கள். அவ்விரு இடங்களிலும் ஒரு கூரை கூட எஞ்சவில்லை யென்றால் அந்த நாசத்தின் தன்மையை நீயே ஊகித்துக் கொள்ளலாம். அந்நாள் முதல் இந்திய அரங்கிலிருந்து பிரெஞ்சுக்காரர் மங்கி மறைந்து விடுகிறார்கள். பிறகு, அவர்கள் புதுச்சேரியையும் சந்திரநாகூரையும் பெற்று நாளது வரையில் அங்கே இருந்து வருகிறார்களாயினும் அவர்களுக்கு யாதொரு முக்கியத்துவமும் இல்லாது போய்விட்டது.

அக்காலத்தில் ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் இந்தியாவிலும் ஐரோப்பாவிலும் மட்டும் போரிடவில்லை. கானடா முதலிய வேறு சில இடங்களிலும் அவர்கள் ஒருவரோடொருவர் போரிட்டு வந்தார்கள். கானடாவிலும் ஆங்கிலேயரே வெற்றி பெற்றார்கள். அதையடுத்து ஆங்கிலேயர் அமெரிக்கக் குடியேற்றங்களை இழக்க நேர்ந்தது. அப்போது, ஆங்கிலேயருக்கு விரோதமாக அக்குடியேற்றங்களுக்கு உதவி அளித்துப் பிரெஞ்சுக்காரர் தங்களுடைய வஞ்சத்தைத் தீர்த்துக் கொண்டார்கள். இவை யெல்லாம் பற்றிப் பின் வரும் கடிதம் ஒன்றில் விரிவாகப் பேசுவோம்.

பிரெஞ்சுக்காரர் தொலைந்த பிறகு ஆங்கிலேயருக்குத் தடையாயிருந்தவர் யாவர்? மேற்கு இந்தியாவிலும், மத்திய இந்தியாவிலும், ஓரளவு, வட இந்தியாவிலும் மராட்டியர் இருந்தனர். ஒரு பக்கம் ஹைதராபாத் நிஜாம் இருந்தான். ஆனால், அவனை அதிகமாகப் பொருட்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. தென்னிந்தியாவில் ஒரு புதிய, பலம்பொருந்திய எதிரி இருந்தான். அவன்தான் ஹைதர் அலி. பழைய விஜயநகர சாம்ராஜ்யத்தில் எஞ்சிநின்ற பாகங்களுக்கு அவன் தன்னை அரசனாக்கிக் கொண்டான். அவனுடைய ராஜ்யந்தான் தற்காலத்தில் மைசூர் சமஸ்தானமாக இருக்கிறது. வடக்கே, சிராஜ் உத் தௌலா வங்காளத்தை ஆண்டு வந்தான். அவன் சிறிதேனும் திறமை இல்லாதவன். டில்லி சாம்ராஜ்யம், வெறுமே கற்பனையில் மட்டும் இருந்து வந்ததென்பதை முன்பே கண்டோம். ஆயினும், ஆங்கிலேயர் தாங்கள் டில்லி சாம்ராஜ்யத்துக்கு அடங்கியவர்கள் என்று காட்டிக் கொள்வதற்காக அதற்குத் தாழ்மையுடன் காணிக்கைகள் அனுப்பி வந்தனர். இந்த வேடிக்கை 1756-ம் ஆண்டு வரையில் நிகழ்ந்து வந்தது. அதாவது, நாதிர்ஷா படையெடுத்து வந்து மத்திய அரசாங்கத்தின் நிழல்கூட இல்லாமல் அழித்து நெடுங்காலம் சென்ற பிறகும் கூட ஆங்கிலேயர் இந்த நாடகத்தை நடத்தி வந்தார்கள். அவுரங்கசேப்பின் காலத்தில் வங்காளத்திலிருந்து ஆங்கிலேயர் ஒரு முறை சாம்ராஜ்யத்தைத் தாக்க முயன்று படுதோல்வி அடைந்த விஷயம் உனக்கு ஞாபகமிருக்கும். அப்பொழுது வாங்கிய அந்தச் சூட்டை அவர்கள் நெடுநாள் வரையில் மறக்கவில்லை.

வட இந்தியாவின் நிலைமை உளத்திட்ப முடைய எவனை யும் 'வா வா' என்று வரவேற்பது போல் இருந்தது. அப்படியிருந்தும், ஆங்கிலேயர் மீண்டும் துணிந்து இறங்கு வதற்கு நெடுங்காலம் தயங்கிக்கொண்டிருந்தார்கள்.

கிளைவ் என்னும் ஆங்கிலேயன் அத்தகைய உளத் திட்பம் வாய்ந்தவன். அவனை அவனுடைய நாட்டார் பெரிய சாம்ராஜ்யச் சிற்பி என்று கொண்டாடுகிறார்கள். சாம்ராஜ்யங்கள் எவ்வாறு சமைக்கப் படுகின்றன என்பதை அவனுடைய குணாதிசயங்களும் செய்கைகளும் நன்கு எடுத்துக் காட்டுகின்றன. அவன் மகா தைரிய சாலி; வருவது வரட்டும் என்று எதிலும் துணிந்து இறங்குபவன்; பிறர் பொருளை வவ்வுவதிலேயே நாட்டம் கொண்டவன்; பொய்யோ, புரட்டோ, கள்ளக் கையெழுத்தோ எதையும் தயங்காமல் செய்து காரியத்தைச் சாதித்துக் கொள்வான். ஆங்கிலேயர் செய்த பல காரியங்கள் வங்காள நவாபான சிராஜ் உத் தௌலாவுக்கு எரிச்சலை உண்டாக்கின. அவன் தனது தலை நகராகிய மூர்ஷிதாபாதிலிருந்து வந்து கல்கத்தாவைக் கைப்பற்றிக் கொண்டான். அப்பொழுது தான் 'கல்கத்தா இருட்டறை' என்று அழைக்கப்படும் அந்தக் கோர சம்பவம் நிகழ்ந்ததாகக் கூறப்படுகிறது. நவாபின் உத்தியோகஸ்தர்கள் பெருந் தொகை யினரான ஆங்கிலேயரை ஒரு சிறிய அறையில் இரா முழுதும் பூட்டி வைத்ததாகவும், அவர்களில் பெரும் பாலோர் மூச்சுத் திணறி இறந்து விட்டதாகவும் சொல் லப் படுகிறது. அத்தகைய செயல் காட்டுமிராண்டித் தனமும் குரூரமும் நிறைந்தது என்பதில் ஐயமில்லை. ஆனால், அந்தக் கதை முழுதும் யாருடைய வாக்கை ஆதாரமாகக்கொண்டிருக்கிறதோ அவனை அவ்வளவாக நம்புவதற்கில்லை. ஆகவே, இந்தக் கதையில் நிஜக் கலப்பே இல்லை என்று பலர் நினைக்கிறார்கள். எப்படி யிருப்பினும் விஷயத்தை மிகைப்படுத்தி யிருக்கிறார்கள் என்பதில் ஐயமில்லை.

நவாப் கல்கத்தாவைக் கைப்பற்றியதற்காகக் கிளைவ் பழிக்குப் பழி வாங்கி விட்டான். ஆனால், சாம்ராஜ்யச் சிற்பியான கிளைவ் அதைத் தனக்குரிய முறையில் செய்து முடித்தான். அவன் முதலில் நவாபின் மந்திரியாகிய மீர்ஜாபர் என்பவனை லஞ்சம் கொடுத்து வசப்படுத்திக் கொண்டான். லஞ்சம் பெற்றுக் கொண்ட மீர்ஜாபர் நவாபுக்குத் துரோகம் செய்ய ஒப்புக்கொண்டான். பிறகு கிளைவ் பொய் தஸ்தாவேஜு ஒன்றைச் சிருஷ்டித் தான். அதை யெல்லாம் சொல்வதென்றால் கதை மிகவும் நீண்டு விடும். பொய்யும் வஞ்சனையும் இயற்றி வெற்றிக்கு வேண்டிய சன்னத்தங்களெல்லாம் செய்து கொண்ட பிறகு அவன் நவாபை 1757-ம் ஆண்டில் பிளாசி என்னுமிடத்தில் தோற்கடித்தான். பிற சண்டைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது பிளாசிச் சண்டை ரொம்பவும் சின்னச் சண்டை யாகும். இரு திறத்துச் சேனைகளும் கைகலக்கு முன்னரே, கிளைவ் தன் னுடைய சூழ்ச்சிகளாலேயே அந்தச் சண்டையை ஜெயித்துவிட்டான் என்று சொல்ல வேண்டும். ஆனால், அந்தச் சின்னஞ் சிறிய பிளாசிச் சண்டையானது பென்னம்பெரிய பலன்களைக் கொடுத்தது. அது வங்காளத்தின் தலை விதியை நிர்ணயம் செய்தது. இந்தியாவில் பிரிட்டிஷ் ஆதிக்கம் பிளாசியிலிருந்துதான் ஆரம்பிப்பதாகச் சொல்லப்படுகிறது. கள்ளக் கை யெழுத்து, துரோகச் செயல் என்கிற வெறுக்கத்தக்க அடிப்படையின் மீது இந்தியாவில் பிரிட்டிஷ் சாம் ராஜ்யம் எழுப்பப்பட்டது. ஆனால், ஏறக்குறைய எல்லா சாம்ராஜ்யங்களும் இவ்வாறுதான் தோன்றுகின்றன.

அநேகமாக எல்லா சாம்ராஜ்யச் சிற்பிகளும் கிளைவைப் போல்தான் நடந்து கொள்ளுகிறார்கள்.

இவ்வாறு, திடீரென்று அடித்த யோகத்தைக் கண்டு வங்காள ஆங்கிலேயரின் தலை திரும்பிவிட்டது. அவர்களுடைய சாகசத்துக்கும் ஆசைக்கும் அளவில்லை. இப்போது அவர்கள் வங்காளத்தின் எஜமானர்கள் ஆகிவிட்டார்கள். அவர்களை ஏனென்று கேட்பார் கிடையாது. எனவே, அவர்கள் கிளைவின் தலைமையின் கீழ் வங்காளப் பொக்கிஷத்தைச் சூறையாடி அதைக் காலிசெய்து விட்டார்கள். ரொக்கமாக இருபத்தைந்து லட்சம் ரூபாயைக் கிளைவ் தனக்குத்தானே சன்மானமாக வழங்கிக்கொண்டான். இதுவும் போதாதென்று, பல லட்ச ரூபாய் வருஷ வருமானமுள்ள ஒரு ஜாகீரையும் அவன் எடுத்துக்கொண்டான். இவ்வண்ணமே மற்ற ஆங்கிலேயர் அனைவரும் தங்களுக்குத் தாங்களே 'நஷ்டஈடு' செய்து கொண்டார்கள். அவர்கள் எல்லோருமே நாணம் என்பதை அடியோடு துறந்து பணத்துக்காக ஒருவர் மீதொருவர் விழுந்து போட்டியிட்டனர். மகாபாபிகளான கிழக்கிந்தியக் கம்பெனி உத்தியோகஸ்தர்களுடைய பேராசைக்கு எல்லையே இல்லை. இப்போது ஆங்கிலேயர் வங்காளத்தின் நவாபுகளைச் சிருஷ்டிப்பவர்கள் ஆய்விட்டார்கள். அவர்களுடைய இஷ்டம்போல் இன்று ஒருவனை நவாப் ஆக்குவார்கள்; நாளை அவனைத் தள்ளிவிட்டு இன்னொருவனை அந்த ஸ்தானத்தில் வைப்பார்கள். நவாபுகள் மாறும்போதெல்லாம் அவர்களுக்கு ஏராளமான லஞ்சமும் பெரும் பெரும் பரிசுகளும் கிடைக்கும். அரசாங்கப் பொறுப்பு அவர்களுக்குக் கிடையாது. அந்தப் பொறுப்பு அடிக்கடி மாறும் அந்த ஏழை நவாபைச் சேர்ந்தது. அவர்களுடைய வேலை விரைவில் பணக்காரர்கள் ஆகவேண்டியதுதான்.

சில வருஷங்களுக்குப் பிறகு 1764-ல், பிரிட்டிஷார் பக்சார் என்னுமிடத்தில் நடந்த போரில் வெற்றி பெற்றார்கள். அதன் பயனாக இதுவரை பெயரளவில் டில்லிச் சக்கரவர்த்தியாயிருந்தவன் அவர்களுக்கு அடிபணிந்தான். அவன் அவர்களிடம் உபகாரச் சம்பளம் பெற்றுக்கொண்டு வயிறு வளர்க்கலானான். இப்போது வங்காளத்திலும் பீஹாரிலும் பிரிட்டிஷார் தடையற்ற அதிகாரம் செலுத்தினார்கள். தேசத்தைப் பெருவாரியாகக் கொள்ளையிட்டும் அவர்களுடைய ஆசை தணியவில்லை. அவர்கள் பணம் சேர்ப்பதற்குப் புது வழிகள் காணலானார்கள். அவர்களுக்கும் உள்நாட்டு வியாபாரத்துக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. உள்நாட்டுப் பொருள்களில் வியாபாரம் செய்வோரெல்லாம் போக்குவரவு வரி கொடுக்கவேண்டியிருந்தது. ஆனால், வரி செலுத்தாமல் இந்த வியாபாரத்தை நடத்துவோம் என்று அவர்கள் பிடிவாதம் பிடிக்க ஆரம்பித்தார்கள். இந்தியக் கைத்தொழில்கள் மீதும் இந்திய வியாபாரத்தின் மீதும் பிரிட்டிஷார் முதன் முதலில் தொடுத்த அஸ்திரங்களில் இது ஒன்றாகும்.

இப்போது பிரிட்டிஷார் வடஇந்தியாவில், செல்வமும் செல்வாக்குமாய் இருந்தார்கள். ஆனால், எதற்கும் பொறுப்பு வகிக்கும் தொல்லை அவர்களுக்கு இல்லை. கிழக்கிந்தியக் கம்பெனியைச் சேர்ந்த சாகச வியாபாரக் கூட்டத்தார், யோக்கியமான வியாபாரத்துக்கும் அயோக்கியமான வியாபாரத்துக்கும், நாணயமாக லாபம் சம்பாதிப்பதற்கும் பகிரங்கமாக அசல் கொள்ளையடிப்பதற்கும் இல்லாத பொல்லாத வித்தியாசத்தையெல்லாம் கற்பித்துக் கொண்டு கஷ்டப்பட இஷ்டப்படவில்லை. இந்தியாவில் கொள்ளையடித்த குபேர சம்பத்தோடு இங்கிலீஷ்காரர் இங்கிலாந்துக்குத் திரும்பிச்

சென்ற காலம் அது. அவர்கள் அங்கே 'நவாபுகள்' என்று பெருமையாக அழைக்கப்பட்டார்கள். ஆங்கில ஆசிரியரான தாக்கரே என்பவர் எழுதியுள்ள 'வீணர் சந்தை' (Vanity fair) என்னும் நூலை நீ படித்திருப்பின் அதில் இத்தகைய கொழுத்த 'நவாப்' ஒருவன் வருவதை நீ பார்த்திருப்பாய்.

அரசியல் நிலையின்மை, குழப்பங்கள், மழையின்மை, அகப்பட்டதைச் சுருட்டும் பிரிட்டிஷாரின் கொள்கை இவை எல்லாவற்றின் காரணமாக 1770-ம் ஆண்டில், வங்காளத்திலும் பீஹாரிலும் மிகக்கொடிய பஞ்சம் ஒன்று ஏற்பட்டது. அப்பஞ்சத்தில் அம்மாகாணங்களின் ஜனத்தொகையில் மூன்றில் ஒரு பங்குக்கு மேல் இறந்து விட்டதாகச் சொல்லப்படுகிறது. எத்தனை லட்சம் பேர் பட்டினியால் சிறுகச் சிறுக உயிர் துறந்தார்களோ! மாண்டோரின் தொகையை எண்ணிப் பார்க்கும் போது மனம் மருகுகிறது! ஜன நெருக்கமான பிரதேசங்கள் பல பூராவும் ஜனசூனியமாய்ப் போய் விட்டன. நீர்வளமுள்ள நிலங்களும் குடிவளமுள்ள ஊர்களும் காடு மூடிப்போயின. பட்டினியால் வாடும் மக்களுக்கு உதவிசெய்ய முன்வருவோர் ஒருவரும் இல்லை நவாபுக்கு அதற்குவேண்டிய சக்தியும் இல்லை, அதிகாரமும் இல்லை, மனமும் இல்லை. கிழக்கிந்தியக் கம்பெனிக்குச் சக்தியும் அதிகாரமும் இருந்தன; ஆனால், மனம் இல்லை. அவர்கள் தங்கள் பொறுப்பை உணரவும் இல்லை. அவர்களுடைய தொழில், வரியை வசூலிப்பதும் பணத்தைச் சேர்ப்பதும் தான். அவர்கள் தங்களுடைய நன்மையை நாடி அந்தத் தொழிலைத் திறமையாகவும் திருப்திகரமாகவும் செய்து வந்தார்கள். நாட்டைக் கொடிய பஞ்சம் வாட்டுகிறது. ஜனங்களில் மூன்றில் ஒரு பங்குக்குமேல் மடிந்துவிட்டார்கள். ஆனால், கிழக்

கிந்தியக் கம்பெனியார் பஞ்சத்தினால் சாவாது தப்பிப் பிழைத்தவர்களிடமிருந்து வரிப்பணம் பூராவையும் வசூல் செய்து விட்டார்கள் என்றால் அந்த அநியாயத்தையும் ஆச்சரியத்தையும் என்னென்பது? உண்மையில், கொடுக்க வேண்டியதை விட அதிகமாகவே வசூல் செய்தார்களாம். அதுவும் பலாத்காரமாக வசூல் செய்தார்கள் என்று உத்தியோகபூர்வமான அறிக்கையே கூறுகிறது. பெருங் கேட்டினின்று தப்பி உணவு கிடைக்காமல் உயிருக்கு மன்றாடிக்கொண்டிருக்கும் எளியவர்களிடத்தில் பலாத்காரமாக வரி வசூலிக்கும் ஜீவகாருணியமற்ற ராக்ஷச சுபாவத்தை நாம் முழுதும் அறிந்து கொள்வது கஷ்டமாயிருக்கிறது.

ஆங்கிலேயர் வங்காளத்தில் வெற்றி பெற்றார்கள். பிரெஞ்சுக்காரரையும் அவர்கள் தோற்கடித்து விட்டார்கள். ஆயினும் அவர்கள் தென்னிந்தியாவில் பெரிய கஷ்டங்களையெல்லாம் எதிர்த்துச் சமாளிக்க வேண்டியிருந்தது. முடிவான வெற்றி கிடைக்குமுன் அவர்களுக்குப் பல தாழ்ச்சி வீழ்ச்சிகள் நேரிட்டன. அவர்களுடைய கொடிய எதிரி மைசூரை ஆண்ட ஹைதர் அலியாகும். அவன் மிகத் திறமையான ஒரு படைத் தலைவன்; பகைவருக்கு விஷம்போற் கொடியவன். அவன் ஆங்கிலேயப் படைகளை பன்முறை தோற்கடித்தான். 1769-ல், சென்னையிலேயே, தனக்குச் சாதகமான சமாதான நிபந்தனைகளை ஹைதர் விதிக்கும்படியாகவும் ஆங்கிலேயர் அவற்றை ஒப்புக் கொள்ளும்படியாகவும் நேர்ந்தது. பத்து வருஷங்களுக்குப் பிறகு அவனுக்கு மீண்டும் பெரிய வெற்றி கிடைத்தது. அவனுடைய மரணத்துக்குப் பிறகு அவனுடைய மகனான திப்புசுல்தான் ஆங்கிலேயருக்குத் தீராப் பகையாக வந்து வாய்த்தான். அவனை முடிவாக வெல்வதற்குப் பல

ஆண்டுகள் பிடித்தன. ஆங்கிலேயர் இரண்டு மைசூர் யுத்தங்கள் நடத்த வேண்டியதாயிற்று. அதற்குப் பிறகு, அவர்கள், தங்களுடைய பாதுகாப்பில் வேறொருவரை மைசூர் சிம்மாசனத்தில் வைத்தார்கள். தற்காலத்து மைசூர் மகாராஜா அவருடைய சந்ததியில் வந்தவர்தான்.

1782-ம் ஆண்டில் மராட்டியர் ஆங்கிலேயரைத் தட்சிணத்தில் தோற்கடித்தார்கள். வட இந்தியாவில் குவாலியர் சிந்தியா அதிகப் பலமுள்ளவனாக இருந்தான். அப்பாவியான டில்லிச் சக்கரவர்த்தி அவனுடைய ஆதிக்கத்தில் இருந்து வந்தான்.

இதற்கிடையில் வாரன்ஹேஸ்டிங்ஸ் என்பவன் இங்கிலாந்திலிருந்து முதல் கவர்னர் ஜெனரலாக அனுப்பி வைக்கப்பட்டான். இப்பொழுது இந்தியா விஷயத்தில் பார்லிமெண்டு அதிகச் சிரத்தை காட்டத் தொடங்கியது. இந்தியாவை ஆண்ட ஆங்கிலேயர்களுள் ஹேஸ்டிங்ஸ் மிகச் சிறந்தவனாக மதிக்கப்படுகிறான். ஆனால், அவனுடைய காலத்திலேயே, அரசாங்கமானது ஊழல்களுக்கும் தீயபழக்கங்களுக்கும் இருப்பிடமாயிருந்ததென்பது பிரசித்தம். அவன் தீயவழியில் பெரும் பணத் தொகைகள் பறித்த விஷயம் அம்பலத்துக்கு வந்துவிட்டது. அவன் இங்கிலாந்து திரும்பியதும் பார்லிமெண்டுக்கு முன்னால் தன்னுடைய இந்திய பரிபாலனத்துக்காகக் குற்றம் சாட்டப்பட்டான். நீண்ட விசாரணைக்குப் பின்னர் அவன் குற்றமற்றவனென்று விடுதலை செய்யப்பட்டான். அதற்கு முன்னரே பார்லிமெண்டு கிளைவைக் கண்டனம் செய்திருந்தது. அவன் தற்கொலை புரிந்து கொண்டான். ஆக, இங்கிலாந்து இவர்களை விசாரிப்பதன் மூலமாகவோ அல்லது கண்டிப்பதன் மூலமாகவோ தன்னுடைய மனச்சாட்சியைத்

திருப்தி செய்து கொண்டது. ஆனால், உள்ளூற அவர்களைக் கொண்டாடி வந்தது. அவர்களுடைய கொள்கையினால் லாபமடையவும் சித்தமாயிருந்தது. கிளைவும் ஹேஸ்டிங்சும் கண்டிக்கப்படலாம். ஆனால், அவர்கள் தான் சாம்ராஜ்யச் சிற்பிகளுக்குரிய சகல லட்சணங்களும் வாய்ந்தவர்கள் ஆவர். அடிமை நாட்டு மக்களின் மீது பலவந்தமாக சாம்ராஜ்யத்தைச் சுமத்துவதற்கும் அவர்களைச் சுரண்டுவதற்கும் அவசியமிருக்கும் வரையில், அத்தகையோர்தான் முன்னுக்கு வருவார்கள், அத்தகையோர்தான் கொண்டாடப் பெறுவார்கள். இதில் சந்தேகமில்லை. காலத்துக்கு ஏற்றாற்போல் சுரண்டல் முறைகள் மாறுபடலாம். ஆனால், தத்துவம் என்னவோ ஒன்றுதான். பிரிட்டிஷ் பார்லிமெண்டு கிளைவைக் கண்டித்திருக்கலாம். ஆனால், அவர்கள் லண்டனில் ஒயிட்ஹாலிலுள்ள இந்தியக் காரியாலயத்துக்கு முன்னால் அவனுக்கு ஒரு உருவச்சிலை நாட்டினார்கள். இந்தியக் காரியாலயத்துக்கு வெளியே அவனுடைய சிலை இருக்கிறதென்றால் உள்ளே அவனுடைய ஆவி சஞ்சரித்துக்கொண்டிருக்கிறது. அதுதான் இப்போதும் இந்தியாவில் பிரிட்டிஷார் அனுஷ்டிக்க வேண்டிய கொள்கையை உருவாக்கி வருகிறது.

பிரிட்டிஷ் ஆதிக்கத்துக்கு உட்பட்ட, பொம்மை ராஜாக்களைக் கொண்டு ஆட்சிக் கொள்கையை ஆரம்பித்தவன் ஹேஸ்டிங்ஸ் தான். இன்று இந்திய அரங்கில், வெறுக்கத்தக்க முறையில், தளுக்கி மினுக்கி ஒய்யார நடைபயிற்றும் பேதையர் கூட்டமாகிய மகாராஜாக்களையும் நவாபுகளையும் காணும்போது, அவர்களைச் சிருஷ்டி செய்த ஹேஸ்டிங்சுக்கு நாம் நன்றி செலுத்த வேண்டியவர்கள் ஆகிறோம்.

இந்தியாவில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் வளர வளர,

மராட்டியர், ஆப்கானியர், சீக்கியர், பர்மியர் முதலானவர்களோடு மேலும் மேலும் பல போர்கள் விளைந்தன. இங்கிலாந்தின் நன்மைக்காக நடத்தப்பட்ட அப்போர்களின் செலவை இந்தியா ஏற்று வந்தது. அப்போர்களைப் பற்றிய ஆச்சரியம் அது தான். அப்போர்களால் இங்கிலாந்துக்கோ இங்கிலீஷ்காரருக்கோ யாதொரு நஷ்டமும் கிடையாது. அவர்கள் லாபத்தை மட்டும் அனுபவிக்க வேண்டியவர்களாயிருந்தார்கள்.

கிழக்கிந்தியக் கம்பெனி என்னும் பெயர் பூண்ட ஒரு வியாபாரக் கம்பெனி இந்தியாவை ஆண்டு வந்தது என்பதை நீ மறந்துவிடக் கூடாது. பிரிட்டிஷ் பார்லிமெண்டின் மேற்பார்வையும் ஆதிக்கமும் நாளுக்கு நாள் அதிகரித்து வந்தன. ஆனால், முக்கியமாக, இந்தியாவின் தலையெழுத்தை நிர்ணயித்து வந்தவர்கள் ஒரு சில சாகச வியாபாரிகளே ஆவர். அரசாங்கம் என்பது பெரும்பாலும் வியாபார மயமாயிருந்தது. வியாபாரம் என்பது பெரும்பாலும் கொள்ளை மயமாயிருந்தது. இச் சொற்பொருள்களுக்கிடையே உள்ள வேற்றுமை மிக நுட்பமானதாயிருந்தது. ஆண்டுதோறும் நூற்றுக்கு—நூறு, நூற்றைம்பது, இருநூறு என்று பெரும் பெரும் லாபத் தொகைகளைக் கம்பெனி தன் பங்குதாரர்களுக்கு அள்ளி வழங்கிற்று. இஃதன்றி, இந்தியாவிலிருந்த கம்பெனி ஏஜெண்டுகள், கிளைவ் செய்தது போல், அவ்வப்போது சிறிய பெரிய சன்மானத் தொகைகளைத் தங்களுக்குத் தாங்களே வழங்கிக் கொண்டார்கள். கம்பெனி உத்தியோகஸ்தர்களும் தங்களுக்கென்று வியாபார ஏகபோக உரிமைகள் ஏற்படுத்திக் கொண்டு வெகு விரைவில் பெரும் பணக்காரர்கள் ஆகிவந்தார்கள். இந்தியாவில் ‘கும்பினி’ ஆட்சி இவ்வாறு நடைபெற்று வந்தது.

93

சீனாவை ஆண்ட ஒரு பெரிய மஞ்சு அரசன்

செப்டம்பர் 15, 1932.

என்னுடைய மனம் சுழல்கிறது; மெய் தளர்கிறது. ஒன்றிலும் எனக்கு நிலைகொள்ளவில்லை. என்ன செய்வதென்றே எனக்குப் புரியவில்லை. சேதி வந்திருக்கிறது, சேதி; பயங்கரமான சேதி. பாபு (தந்தை, அதாவது காந்திஜி) சாகும்வரையில் உண்ணாவிரதம் இருப்பதென்று தீர்மானித்து விட்டாராம்! என்னுடைய சிறிய உலகம் ஆடிக் குலுங்குகிறது. அதில் அவர்தானே எல்லாமாய் இருந்தார்? எங்குப் பார்த்தாலும் ஒரே இருட்டு; எங்குப் பார்த்தாலும் ஒரே சூனியம். அவருடைய உருவம் என் கண் முன்னால் அடிக்கடி தோன்றுகிறது! நான் அவரைக் கடைசியாகப் பார்த்தது ஒரு வருஷத்துக்கு முன்பு. அப்போது அவர் இந்தியாவிலிருந்து சீமைக்குச் செல்லும் கப்பலின் மேல் தளத்தில் நின்றுகொண்டிருந்தார். ஐயோ! நான் மறுபடியும் அவரைக் காண மாட்டேனா? ஐயப்பாடுகள் என்னை அலைக்கும் போது இனி நான் யாரிடம் செல்வேன்? இனி எனக்குப் புத்திமதி கூறுவோர் யார் இருக்கிறார்கள்? நான் துன்பமுறும்போதும் துயரமுறும் போதும் என்னை அன்புடன் தேற்றுவதற்கு யார் இருக்கிறார்கள்? நமது அன்புக்குப் பாத்திரமான அருமைத் தலைவர், நமக்கு உணர்ச்சி ஊட்டிய பெருந்தலைவர், நம்மை இதுகாறும் நடத்திவந்த இனிய தலைவர் போய்விட்டால் நாம் யாது செய்வோம்? ஓ, இந்தியாவே! உன்னுடைய அருந்தவப் புதல்வர்களை இவ்வாறு சாகக் கொடுக்கும் நீ

மகா பாதகியாக இருக்கவேண்டும். ஏ, இந்தியமக்களே! நீங்கள் அடிமைகள். உங்களுடைய அடிமைப் புத்தியைத் தான் நீங்கள் காட்டுகிறீர்கள். இல்லாவிட்டால், உயிருக்குயிரான சுதந்திரத்தை மறந்து, ஒன்றுக்கும் பற்றாத அற்ப விஷயங்களில் மாறுகொண்டு மல்லுக்கு நிற்க மாட்டீர்களல்லவா?

எழுதுவதற்கு எனக்கு மனமே ஓடவில்லை. இக் கடிதங்கள் எழுதுவதையே நிறுத்திவிடலாமா என்றும் நினைத்தேன். ஆனால், அது அறிவுடைமையாகாது. சிறையிலுள்ள என் அறையில் உட்கார்ந்துகொண்டு எழுதுவதும் படிப்பதும் எண்ணுவதும் தவிர்த்து நான் வேறு யாது செய்ய முடியும்? நான் வாட்டமும் சோர்வும் அடையும் போது உன்னை நினைப்பதைவிட, உனக்கு எழுதுவதைவிட எனக்கு இன்பமளிக்க வல்லது வேறு யாதுளது? இவ்வுலகில் கம்பலையையும் கண்ணீரையும் தோழமைகொள்வதால் ஒருபலனும் ஏற்படாது. 'மக்கள் சிந்தியுள்ள கண்ணீர் கடல் நீரினும் அதிகமாயிருக்கும்' என்று ஒரு சமயம் புத்தர் கூறினாராம். துன்பம் குடிகொண்ட இவ்வுலகம் நேராகுமுன் இன்னும் எவ்வளவு கண்ணீரை வடிக்கவேண்டுமோ, யார் கண்டார்கள்? நாம் எடுத்துக்கொண்டுள்ள வினை இன்னும் முடியவில்லை. அது நம்மைக் கைகாட்டி அழைக்கிறது. அது முடியும் வரையில் நாமும் நம்மைப் பின்பற்றுவோரும் எவ்வாறு ஓய்வுகொள்ள முடியும்? ஆகவே, எனது தினசரி வேலைக்கிரமத்தை விடாது நடத்துவதென்று தீர்மானித்து விட்டேன். பழையபடியே உனக்கு நான் இனியும் எழுதிவருவேன்.

சென்ற சில கடிதங்களில் நாம் இந்தியாவைப் பற்றிப் பேசினோம். கதையின் பிற்பகுதி நாம் பெருமை கொள்ளக் கூடியதாக இல்லை. இந்தியா வேரற்ற

மரம் போல் சாய்ந்து கிடந்தது. தட்டிப் பறிக்கும் கொள்ளைக்காரருக் கெல்லாம் அது தலை வணங்கிக் கொடுத்தது. இந்தியாவின் சகோதரியான சீனா அக் காலத்தில் நல்ல நிலைமையில் இருந்தது. இப்போது நாம் சீனாவுக்குச் செல்வோம்.

80-வது கடிதத்தில், மிங் மன்னர்களின் கீழ் சீனா செழிப்புற்றிருந்ததையும், பிறகு ஊழலும் பிளவும் தோன்றியதையும், வடக்கேயுள்ள மஞ்சுக்கள் வந்து அவர்களை வென்றதையும் நாம் பார்த்தோமல்லவா? 1650-ம் ஆண்டிலிருந்து, சீனா முழுவதும் மஞ்சுக்களின் ஆட்சி வேரூன்றி நின்றது. இந்த அரை-அந்நிய வமிச ஆட்சியின் கீழ் சீனாவின் பலம் வளர்ந்தது. அது ஆக்கிரமிப்பில் கூட இறங்கியது. மஞ்சுக்கள் சீனாவுக்கு ஒரு புதிய சக்தியை அளித்தார்கள். அவர்கள், சீனாவின் உள்நாட்டு விவகாரங்களில் அதிகம் தலையிடாமல், தங்களுடைய அதிகப்படியான சக்தியை வடக்கிலும் மேற்கிலும் தெற்கிலும் சாம்ராஜ்யத்தைப் பரப்புவதில் செலவழித்தார்கள்.

ஒரு புதிய அரச வமிசத்தில் முதலில் திறமை வாய்ந்த அரசர்கள் தோன்றுவதும் பிறகு அது உதவாக்கரைகளில் வந்து முடிவதும் வழக்கமாயிருந்து வருகிறது. அவ்வாறே, மஞ்சு வமிசத்திலும் அசாதாரணமான திறமை வாய்ந்த சில அரசர்களும் அரசதந்திரிகளும் தோன்றினார்கள். அந்த வமிசத்தில் இரண்டாவது சக்கரவர்த்தியாக வந்தவன் காங்ஹி என்பவன். சிம்மாசனத்துக்குவந்த போது அவனுக்கு வயது எட்டே எட்டுத்தான். விஸ்தீரணத்திலும் ஜனத்தொகையிலும் உலகிலேயே மிகப் பெரிய சாம்ராஜ்யத்துக்கு அவன் 61 ஆண்டுகள் அதிபதியாயிருந்து அதை ஆண்டு வந்தான். ஆனால், அவன் சரித்திரத்தில் இடம் பெற்றிருப்பதற்கு

அவனுடைய நீண்ட ஆட்சியோ அல்லது அவனுடைய போர்த்திறனோ காரணமல்ல. அவனுடைய ராஜ தந்திரமும், சீன இலக்கியத்துக்கு அவன் செய்துள்ள தொண்டுகளுமே அவனுக்குச் சாசுவதமான கீர்த்தியை அளித்துள்ளன. 1661-லிருந்து 1722-வரை அவன் சக்கரவர்த்தியாயிருந்து செங்கோலோச்சினான். அதாவது, பிரான்சை ஆண்ட 'பேரரசன்' 14-வது லூயியும் அவனும் 54 ஆண்டுகள் சம காலத்தவர்களாயிருந்தார்கள். இருவரும் மிக நீண்ட காலம் அரசு புரிந்தார்கள். ஆனால், நீண்ட கால ஆட்சியைப் பொறுத்த வரையில் நாம் லூயிக்குத்தான் பரிசு கொடுக்க வேண்டும். ஏனெனில், அவன் மொத்தம் 72 ஆண்டுகள் அரசுபுரிந்து நீண்ட கால ஆட்சிக்கே ஒரு 'தரம்' (Record) ஏற்படுத்திவிட்டான். இவ்விரு மகிபர்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் எந்த அம்சத்திலும் லூயி சிறப்படையாதது கண்டு வியப்பெய்துவோம். லூயி தன் தேசத்தை நாசம் செய்து விட்டான். அவன் அதன் மீது ஏற்றிய கடன் சுமையைப் பொறுக்க மாட்டாது அது களைத்துக் கீழே விழுந்து விட்டது. லூயி பிறமதத் துவேஷம் மிக்கவனாக இருந்தான். காங்ஹியோ கன்பூஷிய மதத்தைச் சேர்ந்தவன். ஆனால், அவன் பிற மதங்கள் பால் சமரசபாவம் பூண்டிருந்தான். அவனுடைய ஆட்சியின் கீழ், ஏன், முதல் நான்கு மஞ்சு மன்னர்களின் ஆட்சியின் கீழும், மிங் கலைப் பண்பு பாதிக்கப்படவில்லை. மஞ்சுக்கள் அதன் உயர்தரத்தைக் காப்பாற்றி வந்ததோடு, சில அம்சங்களில் அதை அபிவிருத்தியும் செய்தார்கள். மிங் காலத்திற் போலவே, கலையும் கைத்தொழிலும், கல்வியும் இலக்கியமும் தழைத்தோங்கின. அழகிய பீங்கான் பாத்திரங்கள் செய்யும் தொழில் தொடர்ந்து நடைபெற்று வந்தது. வர்ண அச்சுக் கண்டு

பிடிக்கப்பட்டது. ஏசு சங்கப் பாதிரிகளிடமிருந்து செப்புச் செதுக்கு வேலையும் கற்றுக் கொள்ளப்பட்டது.

மஞ்சு மன்னர்கள் சீனக்கலைப் பண்போடு தங்களை முழுதும் ஒன்றித்துக் கொண்டார்கள். அவர்களுடைய இராஜதந்திர வெற்றியின் இரகசியம் அதுதான். முதிர்ச்சி பெற்ற சீன அறிவையும் கலைப் பண்பையும் முகந்துகொண்ட அவர்கள் நாகரிக முதிர்ச்சியற்ற மஞ்சுக்களுக்கு இயல்பாக உள்ள ஆற்றலையும் ஆள்வினையையும் இழக்கவில்லை. ஆகவே, காங்ஹியின் குணாதிசயங்கள் அபூர்வமான ஒரு விசித்திரக் கலவையாக இருந்தன. அவன் தத்துவ விசாரணையிலும், இலக்கிய அனுபவத்திலும், கலை முயற்சியிலும் மூழ்கியிருந்தான். அதேசமயத்தில், அவன் யுத்த நிபுணத்துவமும், வெற்றியில் விருப்பும் உடையவனாக இருந்தான். இலக்கியங்களையும் கலைகளையும் அவன் கேவலம் நுனிப்புல் மேயும் தோரணையில் சுவைத்தான் என்று சொல்லிவிட முடியாது. அவன் ஆற்றிய முயற்சிகளின் பயனாக சீன இலக்கியம் என்னும் மரத்தில் மூன்று கனிகள் பழுத்தன. அவை கீழே கூறப்பட்டுள்ள மூன்று நூல்களாகும். அந் நூல்கள் அவனுடைய விருப்பத்தின் படியும், பெரும்பாலும் அவனுடைய சொந்த மேற்பார்வையின் கீழும் இயற்றப்பட்டன. அவை அவனுடைய கல்வியின் பரப்பையும், அதில் அவனுக்குள்ள ஆர்வத்தின் ஆழத்தையும் ஒருவாறு நமக்குப் புலப்படுத்துகின்றன.

சீன மொழியில், சொற்கள் கிடையா, சித்திர வடிவான எழுத்துகளே உள்ளன என்பது உனக்குத் தெரியும். காங்ஹி அம்மொழியில் ஒரு பேரகராதி இயற்றுவித்தான். அதில் 40,000 சித்திர எழுத்துகள் எடுத்தாளப்பட்டும், அவையனைத்தும் பல சொற்றொடர்

களால் உரிய முறையில் விளக்கம் செய்யப்பட்டும் இருக்கின்றன. இன்று கூட அதற்கு இணையான நூல் உலகில் வேறெங்கும் இருப்பதாகத் தெரியவில்லை.

காங்ஹியின் ஆர்வத்தினால் தோன்றிய இன்னொரு நூல் சித்திர விளக்கமுடைய பெரிய நிகண்டு ஆகும். ஆச்சரியமான அந்நூல் பல நூறு புஸ்தகங்கள் (வால்யூம்) கொண்டது. அதை ஒரு முழு நூல் நிலையம் என்றே சொல்லிவிடலாம். ஒன்று விடாமல் எல்லா விஷயங்களும் அதில் பேசப்பட்டிருக்கின்றன. காங்ஹியின் மரணத்துக்குப் பிறகு, செப்பேடுகளிலிருந்து அந்நூல் அச்சிடப்பட்டது.

காங்ஹி இயற்றுவித்த மூன்றாவது பெரிய நூல் சீன இலக்கியத் திரட்டு ஆகும். அதில், அகராதி வரிசையில், வார்த்தைகளும் வசன பாகங்களும் திரட்டப்பட்டு ஒப்பு நோக்கப்பட்டிருக்கின்றன. இதையும் பகீரதப் பிரயத்தனம் என்றே சொல்ல வேண்டும். ஏனெனில், சீன இலக்கியக் கடலைக் கடைந்தெடுத்தே இத்திரட்டு நூலை யாக்க வேண்டியிருந்தது. கவிகள், சரித்திராசிரியர்கள், கட்டுரையாளர்கள் முதலியோர் எழுதியவற்றிலிருந்து நீண்ட மேற்கோள்கள் இந்நூலில் தரப்பட்டுள்ளன.

காங்ஹியின் இலக்கிய முயற்சிகள் பல. ஆனால், மேற்கூறிய மூன்று நூல்களே அவனுடைய தொண்டின் மகிமையை நமக்கு உணர்த்தப் போதுமானவை. அவற்றில் எதனோடும், 'ஆக்ஸ்போர்டு இங்கிலீஷ் அகராதி'யைத் தவிர்த்து வேறு தற்கால நூல் எதையும் ஒப்பிடுவதற்கில்லை. பல பண்டிதர்கள் சேர்ந்து ஐம்பது வருஷத்துக்குமேல் உழைத்ததன் பயனாகத் தோன்றியதாகும் 'ஆக்ஸ்போர்டு இங்கிலிஷ் அகராதி.' அது சில ஆண்டுகளுக்கு முன்னர்தான் முற்றுவிக்கப்பட்டது.

காங்ஹி கிறிஸ்தவ மதத்தின்பாலும் கிறிஸ்தவப் பாதிரிகள் பாலும் பிரீதி உடையவனாகவே இருந்தான். அவன் வெளிநாட்டு வியாபாரத்தை ஆதரித்துச் சீனத் துறைமுகங்கள் எல்லாவற்றையும் திறந்துவிட்டான். ஆனால், உடனே அவன் ஐரோப்பியர் சரியாக நடந்துகொள்ளவில்லை என்பதையும் அவர்களை அடக்கிவைக்க வேண்டுமென்பதையும் கண்டுகொண்டான். அவனுக்குப் பாதிரிகளிடம் சந்தேகம் உதித்தது. அதற்குக் காரணம் இல்லாமலில்லை. அவர்கள் தங்கள் நாட்டு சாம்ராஜ்யவாதிகளுடன் சேர்ந்துகொண்டு வெளிநாடுகளை ஜெயிப்பதற்குச் சூழ்ச்சி செய்கிறார்கள் என்பதை அவன் அறிந்துகொண்டான். இதனால், அவன் கிறிஸ்தவ மதத்தின்பால் காட்டிய பொறுமையைக் கைவிடவேண்டியதாயிற்று. கான்டனிலுள்ள ஒரு சீன ராணுவ உத்தியோகஸ்தன் அனுப்பிய அறிக்கை அவனுடைய சந்தேகங்களை ஊர்ஜிதம் செய்தது. அந்த அறிக்கையில், பிலிப்பைனிலும் ஜப்பானிலும் உள்ள வியாபாரிகள், பாதிரிகளுக்கும் அவர்களுடைய தேச அரசாங்கங்களுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு எடுத்துக் காட்டப்பட்டிருந்தது. ஆகவே, அந்நிய சூழ்ச்சியினின்றும் படையெடுப்பினின்றும் சாம்ராஜ்யத்தைப் பாதுகாக்கும் பொருட்டு வெளிநாட்டு வியாபாரத்தைக் கட்டுப்படுத்தவேண்டுமென்றும் கிறிஸ்தவ மதம் பரவுதலைத் தடுக்க வேண்டுமென்றும் அந்த உத்தியோகஸ்தன் சிபாரிசு செய்தான்.

அவ்வறிக்கை 1717-ல் சமர்ப்பிக்கப்பட்டது. கீழ் நாடுகளில் வெளிநாட்டார் செய்த சூழ்ச்சிகளையும், அந்நாடுகளில் சில, வெளிநாட்டு வியாபாரத்தையும் கிறிஸ்தவ மதம் பரவுதலையும் தடுக்க முயன்றதன் நோக்கங்களையும் அது நன்கு தெளிவுபடுத்துகிறது. ஜப்பானிலும் இம்மாதிரி ஏதோ நிகழ்ந்ததால்தான் அது தன் கதவைச்

சாத்தித் தாளிட்டுக்கொண்டது என்கிற விஷயம் உனக்கு ஞாபகம் இருக்கலாம். சீனரும் பிறரும் அறியாமையும் பிற்போக்கும் வாய்ந்தவர்களாய் வெளிநாட்டாரை வெறுப்பதோடு வியாபாரத்துக்கும் முட்டுக்கட்டை போடுகிறார்கள் என்று பெரிதும் பேசப்படுகிறது. ஆனால், ஆதிகாலத்திலிருந்தே சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இன்னும் மற்ற நாடுகளுக்கும் இடையில் அதிகமான தொடர்பு இருந்து வந்ததென்பது நமது சரித்திர ஆராய்ச்சியில் தெளிவாகக் கண்ட உண்மையாகும். அப்போதெல்லாம் வெளிநாட்டாரையும் வெளிநாட்டு வியாபாரத்தையும் வெறுப்பதென்பது எங்கும் காணப்படவில்லை. நெடுங்காலம் வரையில் பல வெளிநாட்டு மார்க்கெட்டுகள் இந்தியாவின் ஆதிக்கத்தில் இருந்து வந்தன. மேல் ஐரோப்பியநாடுகள் தங்களுடைய வியாபாரக் கம்பெனிகளை சாம்ராஜ்ய விஸ்தரிப்புக்குரிய கருவிகளாக உபயோகிக்க ஆரம்பித்த பின்னர் தான் அவற்றிடத்தில் கீழ்நாடுகள் சந்தேகம் கொள்ள ஆரம்பித்தன.

சீன மகா மந்திராலோசனை சபை அந்தக் கான்டன் ராணுவ அதிகாரியின் அறிக்கையை ஆலோசித்து அதை அங்கீகரிக்கவும் செய்தது. அதன்பேரில்தான் சக்கரவர்த்தி காங்ஹி வெளிநாட்டு வியாபாரத்தையும் பாதிரிகளின் நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்தும் கண்டிப்பான உத்தரவுகளைப் பிறப்பித்தான்.

இப்பொழுது நாம் சீனாவை விடுத்து வட ஆசியாவிலுள்ள சைபீரியாவுக்குச் சென்று அங்கு என்ன நடந்ததென்று பார்ப்போம். சைபீரியப் பெருவெளி கீழ்க் கோடியில் சீனாவையும் மேற்கே ருஷியாவையும் பிணைத்து நிற்கிறது. சீனாவின் மஞ்சு சாம்ராஜ்யம் ஆக்கிரமிப்புத் தன்மைகொண்டிருந்ததென்று முன்பே

கூறியுள்ளேன். அதில் மஞ்சூரியா அடங்கி யிருந்தது. மங்கோலியாவுக்கும் அதற்கு அப்பாலும் அது பரவி நின்றது. பொன்னிறக் கூட்டத்தைச் சேர்ந்த மங்கோலியரை விரட்டி யடித்த பின்பு ருஷியாவும் ஒரு பலம் பொருந்திய நாடாக விளங்கியது. அது கிழக்கே சைபீரிய வெளிகளை நோக்கிப் பரவி வந்தது. இரு சாம்ராஜ்யங்களும் இப்போது சைபீரியாவில் சந்தித்தன.

ஆசியாவில், மங்கோலியர் விரைவில் வலிகுன்றித் தேய்ந்து விட்டார்கள். சரித்திரம் காட்டும் விசித்திரங்களில் இது ஒன்றாகும். ஆசியாவையும் ஐரோப்பாவையும், அசனி ஏறென ஆர்த்து ஆட்டம் கண்ட மங்கோலியர், செங்கிஸ்கானின் தலைமையிலும் அவனுக்குப் பின் வந்தோரின் தலைமையிலும் மக்கள் அறிந்திருந்த உலகின் பெரும் பகுதியையும் வென்று பகைவரை ஓட்டம் கண்ட மங்கோலியர் அதலபாதலத்தில் வீழ்ந்து விட்டார்கள். தைமூரின் கீழ் அவர்கள் மீண்டும் எழுந்து சிறிது காலம் விளக்கம் பெற்றார்கள். ஆனால், அவனுடன் அவன் கட்டிய சாம்ராஜ்யமும் வீழ்ந்துவிட்டது. அவனுக்குப் பின், தைமூரியர் என்று அழைக்கப்பட்ட அவனுடைய சந்ததியாரில் சிலர் மத்திய ஆசியாவில் ஆட்சி செலுத்தினார்கள். அவர்களுடைய தர்பாரில் பிரசித்தி பெற்ற சித்திரகலா சம்பிரதாயம் ஒன்று செழித்தோங்கியது என்றும் நாம் அறிந்துள்ளோம். இந்தியாவுக்கு வந்த பாபர் ஒரு தைமூரியன் தான். சிற்சில இடங்களில் தைமூரியர் அரசாண்டு வந்தாலும், மொத்தத்தில் மங்கோலிய வகுப்பானது, ஆசியாவெங்கும் ருஷியாவிலிருந்து தன் தாயகமான மங்கோலியா வரையிலும், முக்கியத்துவம் இழந்து க்ஷீணித்து விட்டது. இதற்குக் காரணம் ஒருவருக்கும் தெரியவில்லை. சீதோஷ்ண ஸ்திதியில் ஏற்பட்ட மாறுதல்கள் இதற்கு ஒரு காரணமாயிருக்கலாம் என்று

சிலர் கூறுகிறார்கள். வேறு சிலர் வேறு காரணம் கூறுகிறார்கள். எது எப்படியாயினும், முன்னாளில் பிறர் மீது படையெடுத்துச் சென்று வென்ற மங்கோலியர் மீது இப்போது பிறர் இரு புறத்திலிருந்தும் படையெடுத்து வந்தார்கள்.

மங்கோலிய சாம்ராஜ்யம் சிதறுண்ட பிறகு, 200 ஆண்டுகள் வரையில் ஆசியாவிலிருந்து ஐரோப்பாவுக்குச் சென்ற தரை மார்க்கங்கள் மூடப்பட்டு விட்டன. 16-வது நூற்றாண்டின் பிற்பகுதியில் ருஷியர் ஒரு தூது கோஷ்டியைத் தரை மார்க்கமாகச் சீனாவுக்கு அனுப்பினார்கள். அவர்கள் மிங் மன்னர்களுடன் அரசியல் உறவு ஏற்படுத்திக் கொள்ள விரும்பினார்கள். ஆனால், அந்த நோக்கம் நிறைவேறவில்லை. அதற்குப் பிறகு, யர்மாக் என்னும் ருஷியக் கொள்ளைக்காரன், 'காசக்கு' கள் கொண்ட ஒரு கூட்டத்துடன், யூரல் மலையைக் கடந்து சென்று 'சிபிர்' என்னும் சிறு ராஜ்யத்தை ஜெயித்தான். 'சிபிர்' என்னும் பெயரிலிருந்து தான் 'சைபீரியா' என்னும் சொல் பிறந்தது.

இது 1581-ல் நிகழ்ந்தது. அந்நாளிலிருந்து ருஷியர் கிழக்கு நோக்கி மேலும் மேலும் போய்க்கொண்டிருந்தார்கள். ஏறக்குறைய, ஐம்பது வருஷ காலத்தில் அவர்கள் பசிபிக் சமுத்திரத்தை எட்டி விட்டார்கள். ஆமூர் பள்ளத் தாக்கில் ருஷியரும் சீனரும் மோதிக்கொண்டார்கள். இருதிறத்தாருக்கும் போர் மூண்டது. ருஷியர் தோல்வி யுற்றனர். 1689-ல் இரு நாடுகளுக்கும் ஒரு உடன்படிக்கை ஏற்பட்டது. அது நர்சின்ஸ்க் உடன்படிக்கை என்று அழைக்கப்படுகிறது. அதன்படி எல்லைகள் நிர்ணயம் செய்யப்பட்டன. வியாபாரத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. சீனா ஒரு ஐரோப்பிய நாட்டுடன் உடன்படிக்கை செய்துகொண்டது இதுவே முதல் தடவையாகும். ருஷியர் முன்னேற்றம் அதனால் தடுக்கப்பட்டது. ஆனால், வியாபாரம் விருத்தியாயிற்று. அந்தச் சமயத்தில் மகா பேதுரு என்பவன் ருஷியாவின் ஜார் ஆக இருந்தான். அவன் சீனாவுடன் நெருங்கிய தொடர்பை வளர்ப்பதற்கு ஆவல் கொண்டிருந்தான். அவன் காங்ஹியினிடம் இரண்டு தூது கோஷ்டிகளை அனுப்பினான். சீன ராஜ தர்பாரில் அவனுடைய தூதன் ஒருவன் நிரந்தரமாக இருந்து வந்தான்.

ஆதி காலத்திலிருந்தே வெளிநாட்டுத் தூதர்களை ஏற்றுக்கொள்ளும் வழக்கம் சீனாவில் உண்டு. ரோமானிய சக்கரவர்த்தி மார்க்க அரேலிய அந்தோணியார் கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் ஒரு தூது கோஷ்டியைச் சீனாவுக்கு அனுப்பினார் என்னும் விஷயத்தை இக் கடிதங்கள் ஒன்றில் சொல்லியிருப்பதாக எனக்கு ஞாபகம். 1656-ல் டச்சு, ருஷியத் தூது கோஷ்டிகள் சீன தர்பாருக்குச் சென்றபோது அங்கே பெரிய மொகலாய சக்கரவர்த்தியின் தூதர்கள் இருப்பதைக் கண்டார்களாம்! அத்தூதர்கள் ஷாஜஹானால் அனுப்பப்பட்டவர்களா யிருக்கவேண்டும்.

94

சீன சக்கரவர்த்தி ஆங்கில அரசனுக்கு விடுத்த நிருபம்

செப்டம்பர் 16, 1932.

மஞ்சு சக்கரவர்த்திகள் தீர்க்காயுளுக்குப் பேர் போனவர்களா யிருக்கிறார்கள். அந்த வமிசத்தில், காங் ஹியின் பேரனான சியான்லுங் என்பவன் நான்காவது சக்கரவர்த்தியாக விளங்கினான். அவனும் அறுபது வருஷ காலம் (1736—1796) அரசாண்டான். மற்ற அம்சங்களிலும் அவன் தன் பாட்டனை ஒத்திருந்தான். இரண்டு விஷயங்களில் அவன் விசேஷ கவனம் செலுத்தினான். ஒன்று, இலக்கிய வளர்ச்சி; மற்றொன்று, சாம்ராஜ்ய வளர்ச்சி. அவன் ஓம்புதற்குரிய இலக்கியங்களை யெல்லாம் தேடி, ஆராய்ந்து, ஒன்று திரட்டி அவற்றின் விவரம் கூறும் ஒரு அட்டவணையை இயற்றுவித்தான். அந்த அட்டவணை என்று சொல்வது அவ்வளவு சரியல்ல. அதில், ஒவ்வொரு நூலைப் பற்றியும் தெரிந்துள்ள சகல விஷயங்களும் கொடுக்கப்பட் டிருப்பதோடு அதைப் பற்றிய விமரிசனக் குறிப்புகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பிரம்மாண்டமான விளக்க அட்டவணை சாம்ராஜ்ய நூல்நிலையத்தில் உள்ளது. அது நான்கு பாகங்களாகப் பகுக்கப்பட் டிருக்கிறது. 1. பண்டை இலக்கியம், அதாவது, கன்பூஷிய இலக்கியம். 2. சரித்திரம். 3. தத்துவநூல்கள். 4. பொது இலக்கியம். இதற்குச் சமானமான கிரந்தம் எங்குமே இல்லை என்று சொல்லுகிறார்கள்.

ஏறக்குறைய இதே காலத்தில், சீன பாஷையில், நாவல்களும் சிறுகதைகளும் நாடகங்களும் தோன்றி

வளர்ந்தன. அவற்றின் தரம் மிகவும் உயர்ந்ததா யிருந்தது. அதே சமயத்தில் இங்கிலாந்திலும் 'நாவல்' இலக்கியம் அபிவிருத்தியடைந்து வந்தது. சீனப் பீங்கான் பாத்திரங்களுக்கும், சித்திர வேலைப்பாடமைந்த இதர பொருள்களுக்கும் ஐரோப்பாவில் பெருத்த கிராக்கி இருந்தது. ஆகவே, அவை சம்பந்தமான வியாபாரம் இடைவிடாது நடை பெற்று வந்தது. தேயிலை வியாபாரத்தின் ஆரம்பம் இதைவிடச் சுவாரஸ்யமானது. முதல் மஞ்சு சக்கரவர்த்தியின் காலத்தில் அது ஆரம்பித்தது. இரண்டாவது சார்லஸின் காலத்தில் தேயிலை இங்கிலாந்துக்குச் சென்றிருக்கலாம் என்று தோன்றுகிறது. சாமுவேல் பெபிஸ் என்பவன் ஆங்கில பாஷையில் நாட்குறிப்பு எழுதிப் புகழ்பெற்றவன். அவனுடைய நாட் குறிப்பில், 1660-ம் ஆண்டில், முதல் முதல் தேயிலைப்பானம் அருந்தியதைப்பற்றி ஒரு குறிப்புக் காணப்படுகிறது. அதில் 'தேயிலை — ஒரு சீனதேசத்துப் பானம்' என்று எழுதப் பட்டிருக்கிறது. தேயிலை வியாபாரம் பிரமாதமாகப் பெருகியது. இரு நூறு ஆண்டுகளுக்குப் பிறகு, 1860ல், பூசௌ என்னும் ஒரு சீனத் துறைமுகத்திலிருந்து மட்டும் ஒரு பருவத்தில், பத்துக் கோடிப் பவுண்டு தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டது. அதற்குப் பிறகு வேறு இடங்களிலும் தேயிலை பயிரிட ஆரம்பித்தார்கள். இப்பொழுது இந்தியாவிலும் இலங்கையிலும் தேயிலை ஏராளமாகப் பயிரிடப்படுவது உனக்குத் தெரிந்த விஷயமே.

சியான்லுங் தன்னுடைய சாம்ராஜ்யத்தைப் பெருக்கிக்கொண்டே போனான். அவன் மத்திய ஆசியாவிலுள்ள துருக்கிஸ்தானத்தை ஜெயித்துத் திபெத்தைக் கைப்பற்றிக் கொண்டான். சில ஆண்டுகளுக்குப் பிறகு, 1790-ல், நேபாளத்துக் கூர்க்கர்கள் திபெத்தின்மீது படையெடுத்துச் சென்றார்கள். சியான்லுங் அவர்களைத்

திபெத்திலிருந்து துரத்தியடித்ததோடு, அவர்களைத் தொடர்ந்து இமயமலையைக் கடந்து நேபாளத்துக்குச் சென்று, நேபாளத்தைச் சீன சாம்ராஜ்யத்துக்குக் கப்பம் கட்டும் சிற்றரசாகப் பணித்துவிட்டுத் திரும்பினான். நேபாளத்தின்மீது சீனர் கொண்ட வெற்றி ஆச்சரியகரமான ஒரு சாதனையாகும். ஒரு சீன சைனியம் திபெத்தைக் கடந்து, பின்னர் இமயப்பனிவரை மீது போகி, கூர்க்கர்களைப்போன்ற போர்க்குணம் படைத்த ஒருஜாதியாரை அவர்களுடைய சொந்த இருப்பிடத்திலேயே சாடுவதென்றால், அதைக் கண்டு நாம் மூக்கின்மேல் விரல்வைத்து ஆச்சரியப்பட வேண்டியவர்களாகத்தான் இருக்கிறோம். இது நிகழ்ந்து இருபத்திரண்டு ஆண்டுகள் கழித்து, 1814-ல், இந்தியாவிலிருந்த பிரிட்டிஷாருக்கும் நேபாளத்துக்கும் மாறுபாடு உண்டாயிற்று. பிரிட்டிஷார் நேபாளத்துக்கு ஒரு படையை அனுப்பி வைத்தார்கள். அதற்கு இமயமலையைக் கடக்கவேண்டிய அவசியம் இல்லாவிட்டாலும், அது பெரிய சங்கடங்களுக்கு ஆளாயிற்று.

1796-ல், சியான்லுங் ஆட்சியின் முடிவு காலத்தில், அவனால் நேராக ஆளப்பட்ட சாம்ராஜ்யத்தில் மஞ்சூரியா, மங்கோலியா, திபெத்து, துருக்கிஸ்தானம் ஆகியவை அடங்கியிருந்தன. அவனுடைய ஆதிபத்தியத்தை ஒப்புக்கொண்டு அவனுக்குக் கப்பம் கட்டி வாழ்ந்து வந்த சிற்றரசுகள் கொரியா, அன்னாம், சையாம், பர்மா ஆகிய நாடுகளாகும். ஆனால், பிற நாடுகளை வெல்வதும் போரில் புகழை விரும்புவதும் மிகவும் விலையுயர்ந்த விளையாட்டுகளாகும். அதனால் செலவு மிகுந்து வரிச்சுமை ஏறுகிறது. அந்தச் சுமையைப் பெரும்பாலும், ஏழை எளியவர்கள்தான் தாங்கவேண்டியவர்களாயிருக்கிறார்கள். சீனாவில், பொருளியல் நிலைமையிலும் மாறு

தல் ஏற்பட்டுவந்தது. ஏற்கெனவே இருந்துவந்த அதிருப்தி அதனால் இன்னும் அதிகமாயிற்று. தேச முழுதும் இரகசியச் சங்கங்கள் ஏற்பட்டன. இதாலியைப் போலவே சீனாவும் இரகசியச் சங்கங்களுக்குப் பேர்போனதாகும். அந்தச் சங்கங்களின் பெயர்கள் வேடிக்கையாயிருக்கின்றன. அவற்றில் சில வருமாறு: வெண்தாமரைச் சங்கம்; தெய்வீக நியாய சங்கம்; வெண்ணிறகு சங்கம்; விண்ணக மண்ணக சங்கம்.

இதற்கிடையில், தடைகளெல்லாமிருந்தும் வெளிநாட்டு வியாபாரம் விருத்தியாகி வந்தது. வெளிநாட்டு வியாபாரிகள் அத்தடைகளைப் பெரிதும் வெறுத்தார்கள். கிழக்கிந்தியக் கம்பெனியின் வியாபாரம் கான்டன் வரையில் பரவியிருந்தது. சீன வியாபாரத்தில் அதன் பங்கு மற்றவர்களுடையதைவிடப் பெரிதாயிருந்தபடியால், வியாபாரத் தடைகள் அதை மிகவும் உறுத்தின. அக்காலத்தில்தான் ஐரோப்பாவில் யந்திரத் தொழிற் புரட்சி தோன்றிக்கொண்டிருந்தது. அப்புரட்சியின் முன்னணியில் இங்கிலாந்து இருந்தது. அவ்விவரங்களையெல்லாம் பின்வரும் கடிதங்களில் காண்போம். நீராவி யந்திரம் செய்யப்பட்டது. யந்திரத்தைத் தொழிலுக்கு உபயோகிக்க ஆரம்பித்தார்கள். பொருள் உற்பத்தியில் புதியமுறைகள் காணப்பட்டன. அதனால், வேலை சுலபமானதுடன், உற்பத்தியும் அதிகரித்தது. இவ்வாறு, யந்திரத்தின் மூலமாகப் பருத்திநூல் ஜவுளி விசேஷமாக உற்பத்தி செய்யப்பட்டது. இந்த அதிகப்படிச் சரக்குகளை விற்கவேண்டியிருந்தது. அதற்காகப் புது மார்க்கெட்டுகளை நாடவேண்டியதாயிற்று. அந்தச் சரியான தருணத்தில், இங்கிலாந்தின் அதிருஷ்டம், இந்தியா அதன் ஆதிக்கத்தில் இருந்தது. இந்தியாவைப் போன்ற ஒரு இடம் கிடைத்தால் ஜவுளிச் சரக்குகளைப் பலவந்த

மாக விற்பதற்குச் சவுகரியமாயிருக்குமல்லவா? இங்கிலாந்து அவ்வாறே செய்யவும் செய்தது. ஆனால், அதற்குச் சீன வியாபாரமும் தேவையாயிருந்தது.

ஆகவே, 1792-ல், பிரிட்டிஷ் அரசாங்கம் லார்ட் மகார்ட்னியின் கீழ் பீகிங் நகருக்கு ஒரு தூது கோஷ்டியை அனுப்பியைத்தது. அப்போது மூன்றாவது ஜார்ஜ் என்பவன் இங்கிலாந்தின் அரசனாக இருந்தான். சியான் லுங் தூதுகோஷ்டியை வரவேற்றான். பிறகு, காணிக்கைகள் பரிமாறிக்கொள்ளப்பட்டன. ஆனால், சீனச் சக்கரவர்த்தி வெளிநாட்டு வியாபாரத்தின் மீது தான் விதித்துள்ள தடைகளில் யாதொரு மாறுதலும் செய்ய மறுத்துவிட்டான். சியான் லுங் மூன்றாவது ஜார்ஜுக்கு அனுப்பிய நிருபம் மிகவும் ருசிகரமான ஒரு தஸ்தாவேஜு ஆகும். அதிலிருந்து ஒரு நீண்ட பகுதியைக் கீழே தருகிறேன்.

"......ஓ, அரசனே! நீ, பல கடல்களுக்கு அப்பால் வசிப்பவனாயினும், நமது நாகரிகத்தின் நலன்களில் பங்கு கொள்ளவேண்டும் என்னும் தாழ்மையான விருப்பத்தினால் உந்தப்பட்டவனாய், ஒரு தூது கோஷ்டியை நம்மிடம் அனுப்பியுள்ளாய். அவர்கள் உன்னுடைய விண்ணப்பத்தை வெகு மரியாதையுடன் நம்மிடம் சேர்த்தனர்...... நம்மிடம் உனக்குள்ள பக்தியைக் காண்பிப்பதற்காக உன்னுடைய தேசத்துப் பொருள்களை நமக்குக் காணிக்கையாக அனுப்பியிருக்கிறாய். நாம் உன்னுடைய விண்ணப்பத்தைப் படித்துப் பார்த்தோம். அதை எழுதியுள்ளமுறை நம்பால் உனக்குள்ள மரியாதையையும் வணக்கத்தையும் நன்கு வெளிப்படுத்துகிறது. அதற்காக, நாம் உன்னை மிகவும் மெச்சுகிறோம்.......

"நாம் பரந்த இப்பூமண்டலத்தை ஆண்டுவருகிறோம். நம்முடைய நோக்கம் ஒன்றே ஒன்றுதான். அது, நாட்டை நன்கு பரிபாலித்து அரசனுக்குரிய கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றுவதுதான். நூதனமான விஷயங்களிலும் வீண் செலவை விளைவிக்கும் விஷயங்களிலும் நமக்குத் தேட்டம் கிடையாது. நமக்கு......உனது நாட்டில் செய்யப்பட்ட பொருள்கள் தேவையில்லை. ஆகவே, ஓ அரசனே! நீ நமது விருப்பத்தை மதித்து நடந்து கொள்ளவேண்டும். வருங் காலத்தில் நீ இன்னும் அதிகமான பயபக்தி விசுவாசத்தைக் காட்ட வேண்டும். நமது சிம்மாசனத்துக்குச் சதா சர்வ காலமும் அடங்கி வாழ்வதால், உனது நாட்டின் அமைதியும் செழிப்பும் பாதுகாக்கப்படும்.

"ஜாக்கிரதை! நமது கட்டளையைக் கைகட்டி வாய் புதைத்து நிறைவேற்றுவாயாக!"

சியாங்லுங்கின் நிருபத்தைக் கண்டதும் மூன்றாவது ஜார்ஜுக்கும் அவனுடைய மந்திரிகளுக்கும் தூக்கி வாரிப் போட்டிருக்கும். அந்நிருபத்தில் சீனாவின் உயர்ந்த நாகரிகத்திலும் அதன் வல்லமையின் மாட்சியிலும் உள்ள அசையாத நம்பிக்கை காணப்படுகிறது. ஆனால், உண்மையில், அவற்றிற்கு நிலையான ஆதாரம் இல்லை. மஞ்சு அரசாங்கம் பலம் வாய்ந்ததாகக் காணப்பட்டது. சியான்லுங்கின்கீழ் அது பலம் வாய்ந்ததாகவும் இருந்தது. ஆனால், பொருளியல் நிலைமையில் நிகழ்ந்து வந்த மாறுதல் அதன் அஸ்திவாரத்தின் சத்தை உறிஞ்சி வந்தது. நான் முன்பு குறிப்பிட்ட இரகசியச் சங்கங்கள் மக்களிடையே வளர்ந்து வந்த அதிருப்திக்கு அறிகுறிகளாக இருந்தன. புதிய பொருளியல் நிலைமைகளோடு பொருந்தும் வண்ணம் தேசத்தின் வாழ்வு திருத்தி அமைக்கப்படாததுதான் உண்மையான வியாதியாகும். இதற்குள், மேனாடுகள் புதிய அமைப்பைத் தலைமை வகித்து நடத்தத் தொடங்கிவிட்டன. அவற்றின் பணி

நாளுக்கு நாள் பெருகி வந்தது. அவை விரைவில் முன்னேறி வந்தன. சக்கரவர்த்தி சியான்லுங் மேற் கூறியவாறு மூன்றாவது ஜார்ஜுக்கு இறுமாப்புடன் மறுமொழி பகர்ந்து எழுபதாண்டுகள் கழியு முன்னரே, இங்கிலாந்தும் பிரான்சும் சீனாவின் கருவத்தையும் மானத்தையும் பங்கம் செய்துவிட்டன.

ஆனால், அந்தக் கதையைச் சீனாவைப் பற்றிய அடுத்த கடிதத்துக்கு நான் வைத்துக் கொள்ளவேண்டும். சியான்லுங் 1796-ல் மரணமடைந்தான். அவனுடைய மரணத்துடன் நாம் 18-வது நூற்றாண்டின் முடிவை அடைகிறோம். ஆனால், அந்த நூற்றாண்டு முடியுமுன் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் அசாதாரணமான விஷயங்கள் பல நிகழ்ந்து விட்டன. ஒரு கால்நூற்றாண்டு வரையில் மேனாடுகள் சீனாவை நெருக்குவது குறைந்து காணப்பட்டது. ஐரோப்பாவில் விளைந்த யுத்தங்களும் குழப்பங்களுமே அதற்குக் காரணமாயிருந்தன. ஆகவே, நாம் அடுத்த கடிதத்தில் ஐரோப்பாவுக்குச் சென்று, அதன் கதையைப் பதினெட்டாவது நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து தொடங்கி, இந்தியாவிலும் சீனாவிலும் நாம் அடைந்துள்ள கட்டத்துக்குக் கொண்டுவர வேண்டும். ஆனால், இக்கடிதத்தை முடிக்குமுன், கிழக்கில் ருஷியா அடைந்த முன்னேற்றத்தைப்பற்றிச் சிறிது கூறவேண்டும். 1689-ல் சீனாவுக்கும் ருஷியாவுக்கும் இடையே நர்ச்சின்ஸ்க் உடன்படிக்கை ஏற்பட்டது. அதற்குப்பின், ஒன்றரை நூற்றாண்டு வரையில், ருஷியாவின் செல்வாக்குக் கீழ்த்திசையில் வளர்ந்து கொண்டே வந்தது. 1728-ல், ருஷிய அரசாங்கத்தின் கீழ்க் காப்டன் வேலைபார்த்துவந்த வைடஸ் பேரிங் என்னும் டேனியன் ஒருவன், ஆசியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையேயுள்ள ஜலசந்தியைக் கண்டு

பிடித்தான். அது அவன் பேரால் ‘பேரிங் ஜலசந்தி’ என்று இன்றும் அழைக்கப்பட்டு வருவது உனக்குத் தெரிந்திருக்கலாம். பேரிங் அந்த ஜலசந்தியைக் கடந்து அலாஸ்காவுக்குச் சென்று அதை ருஷியாவுக்குச் சொந்தமான பிரதேசம் என்று பிரகடனம் செய்தான். அலாஸ்கா, மிருதுவான கம்பளி ஆடைகளுக்குப் பேர் போனது. சீனாவில் கம்பளி ஆடைகளுக்குப் பெரிய கிராக்கி இருந்தபடியால், ருஷியாவுக்கும் சீனாவுக்கும் இடையே கம்பளி வியாபாரம் விசேஷ விருத்தி அடைந்தது. 18-வது நூற்றாண்டின் கடைசி ஆண்டுகளில், ருஷியா, கம்பளி ஆடைகள் முதலியவற்றைக் கானடாவிலுள்ள ஹட்சன் விரிகுடாவிலிருந்து இங்கிலாந்து வழியாகத் தருவித்துப் பின்னர் சைபீரியாவில் பைகல் ஏரிக்கு அருகிலுள்ள கியாக்டா என்னும் பெரிய கம்பளிச் சந்தைக்கு அனுப்பிவந்த தென்றால், சீனாவில் அதற்கிருந்த கிராக்கியை நீயே ஊகித்துக் கொள்ளலாம். அந்தக் கம்பளி ஆடைகளின் பிரயாணம் எத்துணை நீளமானது, பார்!

இக்கடிதம் இவ்வரிசையிலுள்ள மற்றக் கடிதங்களை விடச் சிறிதாயிருக்கிறதல்லவா? இந்த மாறுதல் உனக்கு மகிழ்ச்சி அளிக்கும் என்று நம்புகிறேன்.

95

18-வது நூற்றாண்டில் ஐரோப்பியக் கருத்துலகில் விளைந்த போராட்டம்

செப்டம்பர் 19, 1932.

இப்போது நாம் ஐரோப்பாவுக்குத் திரும்பிச் சென்று, மாறிவரும் அதன் விதிமுறையைக் கவனிப்போம். அங்கு மகத்தான மாறுதல்கள் விளையப்போகின்றன. அம்மாறுதல்களின் முத்திரை உலக சரித்திரத்தின்மீது நன்கு பதியப்போகிறது. இம்மாறுதல்களைப் புரிந்துகொள்ள வேண்டுமாயின் நாம் சற்று உட்புகுந்து மக்களின் மனதை ஆராயவேண்டும். ஏனெனில், நாம் புறத்தே காணும் செய்கை—மக்கள் மனதில் தோன்றும் பல்வேறு சிந்தனைகள், காமக்குரோதாதி விகாரங்கள், தப்பு எண்ணங்கள், குருட்டு எண்ணங்கள், அச்சங்கள், நம்பிக்கைகள்—இவையெல்லாம் சேர்ந்த ஒரு கலவையினின்றே பிறக்கிறதல்லவா? ஒரு செய்கையைத் தனித்து அறிவது கஷ்டம். கூடவே அதற்கான காரணங்களையும் நாம் ஆராய வேண்டும். ஆனால், அது அவ்வளவு எளிதல்ல. முக்கியமான சரித்திர சம்பவங்களை உருவாக்கும் மூலகாரணங்களையும் முகாந்தரங்களையும் விளக்கித் தகுந்த முறையில் எழுதுவது எனக்குச் சாத்தியமாயிருக்கலாம். ஆனால், இக்கடிதங்கள் ஏற்கெனவே இருப்பதைவிடச் சுவை குறைந்தும் சுமைமிகுந்தும், படித்தால் தலைவலி எடுக்கும் நிலைமைக்கு வந்துவிடும். அது எனக்கு இஷ்டமில்லை. ஒரு விஷயத்தில் எனக்கு ஆர்வம் இருக்கிறது, அல்லது, ஒரு அபிப்பிராயத்தில் எனக்குப் பற்றுதல் இருக்கிறது என்றால், உடனே, நான் அதைப்பற்றி அளவுக்குமீறிப் பேச ஆரம்பித்து விடுகிறேன். என்

னுடைய இக்குறைபாட்டை நீ பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும். நாம் சரித்திர சம்பவங்களுக்கான மூலகாரணங்களை ஆழ்ந்து ஆராய்வதற்கில்லை. ஆனால், அவற்றைப் புறக்கணிப்பதும் அறிவுடைமையாகாது. அவ்வாறு புறக்கணிப்போமாயின், சரித்திரத்தின் மோகன இயல்பும் முக்கியத் தன்மையும் நமக்குப் புலப்படாது போய்விடும்.

16-வது நூற்றாண்டிலும் 17-வது நூற்றாண்டின் முற்பாதியிலும் ஐரோப்பாவில் உண்டான கொந்தளிப்புகளையும் குழப்பங்களையும் நாம் கண்டோம். 17-வது நூற்றாண்டின் இடையில் (1648) ஏற்பட்ட வெஸ்ட்பாலியா உடன்படிக்கை பயங்கரமான முப்பதாண்டுப் போரை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்தது. அதற்கு அடுத்த வருஷம் இங்கிலாந்தின் உள்நாட்டுப் போரும் ஓய்ந்தது; முதலாவது சார்லசும் தன் தலையை இழந்தான். அதற்குப் பிறகு சிறிது அமைதி நிலவியது. மேற்கூறிய நிகழ்ச்சிகளால் ஐரோப்பா அடியோடு களைத்துப் போய்விட்டது. அமெரிக்கக் குடியேற்றங்களோடும் பிற இடங்களோடும் நடந்துவந்த வியாபாரத்தால் ஐரோப்பாவுக்கு நல்ல லாபம் கிடைத்து வந்தது. அது, மக்களின் கஷ்டங்களைக் குறைக்கவும், வகுப்புகளுக்கிடையேயுள்ள விரோத பாவத்தைத் தணிக்கவும் உதவியது.

1688-ல் இங்கிலாந்தில் அமைதியான புரட்சி ஏற்பட்டது. அதனால், இரண்டாவது ஜேம்ஸ் நாட்டை விட்டு ஓடியதோடு, பார்லிமெண்டுக்கு வெற்றியும் கிடைத்தது. முதலாவது சார்லசுக்கு எதிராக விளைந்த உள்நாட்டுப் போரிலேயே பார்லிமெண்டுக்கு உண்மையான வெற்றி கிடைத்து விட்டது. நாற்பதாண்டுகளுக்கு முன் போரினால் ஏற்பட்ட அம்முடிவையே இப்போது நிகழ்ந்த அமைதியான புரட்சி ஊர்ஜிதம் செய்தது.

இவ்வாறு, இங்கிலாந்தில் அரசனுக்கு முக்கியத்துவம் இல்லாது போய்விட்டது. ஆனால், ஐரோப்பாக் கண்டத்திலோ—ஸ்விட்சர்லாந்து, ஹாலந்து போன்ற சில சிறிய இடங்களைத் தவிர—நிலைமை நேர்மாறாயிருந்தது. அங்கு, அரசர்கள் இன்னும் பொறுப்பற்ற முறையில் யதேச்சாதிகாரம் செலுத்திவந்தார்கள். பிரான்சை ஆண்ட பேரரசன், 14-வது லூயி ஏனைய அரசர்கள் பின்பற்றி நடக்கவேண்டிய உதாரண மன்னனாகவும் இலட்சிய அரசனாகவும் விளங்கினான். ஐரோப்பாக் கண்டத்தைப் பொறுத்தவரையில், 17-வது நூற்றாண்டை 14-வது லூயியின் நூற்றாண்டு என்று சொல்லிவிடலாம். ஐரோப்பிய அரசர்கள் தங்களுடைய வருக்கத்துக்கே நேரவிருக்கும் பெருங்கேட்டை உணரவில்லை. இங்கிலாந்தின் அரசனான சார்லசின் தலைக்குத் தீம்பு நேர்ந்ததைக் கண்டபின்பும் அவர்களுக்கு நற்புத்தி உதயமாகவில்லை. அவர்கள் பழையபடியே, தடபுடலாகவும் முட்டாள்தனமாகவும் யதேச்சாதிகாரம் நடத்திவந்தார்கள். தேசத்தின் செல்வம் முழுதும், அதிகாரம் முழுதும் தங்களுடையதே என்று அவர்கள் உரிமைகொண்டாடினார்கள். அவர்கள் தங்களுடைய தேசத்தைத் தங்களுடைய சொந்த 'எஸ்டேட்' என்றே கருதிவந்தார்கள். 400 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த இராஸ்மஸ் என்னும் புகழ்பெற்ற டச்சு அறிஞர் பின்வருமாறு எழுதியுள்ளார்:

"பறவைகள் எல்லாவற்றிலும் கழுகு ஒன்றைத்தான் இராஜரீகத்துக்கு ஏற்ற சின்னமாகப் பெரியோர்கள் எடுத்திருக்கிறார்கள். கழுகின் உருவம் பார்ப்பதற்கு அழகாயில்லை. அதன் குரல் கேட்பதற்கு இனிமையாயில்லை. பிற ஜீவன்கள் அதைப் பட்சிக்கமாட்டா. ஆனால், அது பிற ஜீவன்களைப் பட்சித்துவிடும். அதன் ஆசையும் சொல்லி முடியாது. அதை எல்லாரும் வெறுக்கிறார்கள், எல்லாரும் சபிக்கிறார்கள். பிற உயிர்களுக்குத் தீங்கிழைக்கும் சக்தி அதனிடம் நிறைய இருக்கிறது. அப்படியிருந்தும், தீங்கிழைப்பதில் அதற்குள்ள விருப்பம், தீங்கிழைப்பதில் அதற்குள்ள சக்தியையும் விஞ்சி நிற்கிறது."

இன்று அரசர்கள் என்போர் அநேகமாக மறைந்துவிட்டார்கள். அவர்களில் எஞ்சிநிற்போரும் கடந்துபோன காலத்தின் சின்னங்களாகவே இருக்கிறார்கள். அவர்களுக்கு யாதொரு அதிகாரமும் இல்லை; அப்படி ஏதாவது இருந்தாலும் அது மிகவும் குறைவாகவே இருக்கிறது. ஆனால், அவர்களை விட அபாயகரமான வேறு பிறர் இப்போது அவர்களுடைய ஸ்தானத்தைக் கைப்பற்றிக்கொண்டிருக்கிறார்கள். இந்தப் பிற்காலத்து சாம்ராஜ்ய வாதிகளுக்கும், இரும்பு, எண்ணெய், வெள்ளி, பொன் இவற்றின் அரசர்களுக்கும் கழுகுதான் இன்னும் போருக்குரிய அடையாளமாக இருந்துவருகிறது.

ஐரோப்பாவில் முடியாட்சியின் கீழ்ப் பலம் பொருந்திய ஒருமுக அரசாங்கங்கள் (Centralised Govts) தோன்றி வளர்ந்தன. பிரபு, பண்ணை அடிமை என்கிற பழைய நிலமானியக் கருத்துகள் எல்லாம் மறைந்தொழிந்தன. அவற்றின் ஸ்தானத்தில் 'தேசம் என்பது முழுமையான ஒன்று, அதன் இருப்பு உண்மையானது' என்னும் புதுக்கொள்கை எழுந்து பரவியது. ரிஷ்லு, மஜாரின் என்கிற திறமைவாய்ந்த இரு மந்திரிகளின் கீழ்ப் பிரான்சு தேசம் இப்புதிய கொள்கையில் பிற தேசங்களுக்கு வழிகாட்டியாக இருந்தது. அதனால் தேசியமும், ஓரளவு தேசபக்தியும் வளர்ச்சியுற்றன. இதுவரை மக்களின் வாழ்க்கையில் முக்கிய அம்சமாக இருந்துவந்த மதமானது இப்போது பின்னுக்குப் போய்விட்டது.

அதன் இடத்தில் புதிய கொள்கைகள் வந்து புகுந்தன. அவற்றைப்பற்றி இக்கடிதத்திலேயே பின்பு கூறுகிறேன்.

17-வது நூற்றாண்டுக்கு இன்னொரு பெருஞ்சிறப்பும் உண்டு. அந்த நூற்றாண்டில்தான் தற்கால விஞ்ஞான சாஸ்திரத்துக்கு அடிகோலப்பட்டது. அப்போது ஒரு உலக மார்க்கெட்டும் ஏற்பட்டது. புதிதாகத் தோன்றிய இப்பெரிய மார்க்கெட்டு ஐரோப்பாவின் பழைய பொருளியல் ஏற்பாட்டைத் தலைகீழாக்கி விட்டது. இப்புதிய மார்க்கெட்டை மனதில் வைத்துக் கொண்டால்தான், ஐரோப்பாவிலும், ஆசியாவிலும், அமெரிக்காவிலும் பிறகு நிகழ்ந்தவை நமக்கு விளங்கும். விஞ்ஞானத்தின் அபிவிருத்தி இவ்வுலக மார்க்கெட்டின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய கருவிகளை ஐரோப்பாவுக்கு அளித்தது.

18-வது நூற்றாண்டில், குடியேற்றங்கள் காண்பதிலும், சாம்ராஜ்யங்கள் ஸ்தாபித்தலிலும், இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் போட்டி ஏற்பட்டது. அதனால், இருநாடுகளுக்குமிடையே, ஐரோப்பாவில் மட்டுமின்றிக் கானடாவிலும் இந்தியாவிலும் கூடப் போர் விளைந்தது. அந்நூற்றாண்டின் இடையில் நிகழ்ந்த இப்போர்களுக்குப் பிறகு சிறிது காலம் அமைதி நிலவியது. மேற்பார்வைக்கு, ஐரோப்பா அமைதியாகவும் கலக்கமின்றியும் காணப்பட்டது. நாகரிகப்பண்பும், கலைப்பண்பும் வாய்ந்த சீமான்களும் சீமாட்டிகளும் ஐரோப்பாவின் ராஜதர்பார்களை அலங்கரித்தார்கள். ஆனால், மேற்புறத்தில் மட்டுந்தான் அமைதி காணப்பட்டது. உள்ளே கொந்தளிப்பு மிகுந்திருந்தது. மக்களின் மனதில் புதிய எண்ணங்களும் கொள்கைகளும் போராடின. அவர்கள், வறுமைமிகுதியால், மேலும் மேலும் பெரிய சரீர கஷ்டங்களுக்கு உள்ளாகி வந்தார்கள். அரசவையைச்

சேர்ந்தோரும் உயர் வகுப்பாரும் சுகபோகங்களில் ஆழ்ந்திருந்தார்கள். ஆக, 18-வது நூற்றாண்டின் பிற்பாதியில் ஐரோப்பாவில் காணப்பட்ட அமைதி ஒரு பொய்த்தோற்றமே ஒழிய வேறில்லை. உண்மையில், அது புயலுக்கு முன் காணப்படும் அமைதியே யாகும். 1789-ம் ஆண்டு ஜூலை மாதம் 14-ந் தேதி அப்புயல் குமுறி எழுந்தது. எங்கே? ஐரோப்பிய முடியரசுகளில் தலையாய முடியரசின் தலைநகராகிய பாரிஸ்மாநகரில் அப்பெரும் புயல் வீறுகொண்டு வீசியது. முடியரசு ஆட்சி முறையும், பாசிபிடித்துப்போன பல கர்நாடகப் பழக்க வழக்கங்களும், ஒரு சிலர் அனுபவித்து வந்த விசேஷச் சலுகைகளும் அச்சண்ட மாருதத்தில் அடித்துக்கொண்டு போகப்பட்டன.

பிரான்சிலும், ஓரளவு வேறு ஐரோப்பிய நாடுகளிலும், நெடுங் காலமாக மக்கள் மனதை அலைத்து வந்த புதிய கொள்கைகளின் பயனாகவே மேற்கூறிய புயலும் அதற்குப் பின் தோன்றிய மாறுதலும் விளைந்தன. இடைக்கால முழுதும், ஐரோப்பாவில் மதமே மக்களை ஆட்கொண்டு நின்றது. அதற்குப் பின், மதச் சீர்திருத்தக் காலத்திலும், அதே நிலைமை தொடர்ந்து இருந்து வந்தது. அரசியல் பிரச்சினையாகட்டும், பொருளியல் பிரச்சினையாகட்டும், எல்லாம் மதத்தைக் குறிக்கோளாகக் கொண்டே ஆராயப்பட்டது. மதம் என்பது ஒரு ஸ்தாபன ரீதியில் அமைக்கப்பட்டு இருந்தது. அதாவது, போப்பாண்டவர் அல்லது பிரதான மதஸ்தாபன உத்தியோகஸ்தர்கள் போன்றவர்களுடைய அபிப்பிராயங்களே 'மதம்' என்னும் சொல்லுக்குப் பொருளாயிருந்தன. ஐரோப்பாவின் சமூக அமைப்பு இந்தியாவின் ஜாதி முறையை ஒத்திருந்தது. ஆதியில், தொழில்களை ஒட்டியே ஜாதிப் பாகுபாடு

தோன்றியது. சமூக வகுப்புகள் தொழில்களை அனுசரித்தவை என்னும் இக்கொள்கைதான், இடைக் காலத்தில் சமூகத்தைப் பற்றிய கருத்துகளுக்கு அடிப்படையாக இருந்தது. இந்தியாவில் ஒரு ஜாதியைச் சேர்ந்தவர்கள் தங்களுக்குள் சமமாக மதிக்கப்பட்டது போல ஐரோப்பாவில் ஒரு வகுப்பைச் சேர்ந்தவர்கள் சம அந்தஸ்துடையவர்களாக எண்ணப்பட்டார்கள். ஆனால், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வகுப்புகளுக் கிடையே, சமத்துவம் என்பது இல்லை. அந்தச் சமத்துவ மின்மை மீதுதான் சமூகமே கட்டப்பட்டிருந்தது. அந்த அடிப்படைக் கொள்கையை யாரும் எதிர்க்கவில்லை. இவ் வேற்பாட்டின் கீழ் இம்மையில் கஷ்டப்படுபவர்களுக்கு மறுமையில் பலன் கிடைக்கும் என்று சொல்லப்பட்டது. அநியாயமான ஒரு சமூக அமைப்பை மதமானது இவ்வாறு தாங்கி நின்றது. இவ்வுலகில் கஷ்டப்படுவோருக்கு அடுத்த உலகத்தைப் பற்றி எடுத்துக்கூறி மதம் அவர்களுடைய மனதைக் கலைக்க முயன்றது. 'பொறுப்பாளிக் கொள்கை' (Doctrine of trusteeship) என ஒரு கொள்கையையும் அது பிரசாரம் செய்தது. அதாவது, பணக்காரர்கள் ஏழைகளின் யோக க்ஷேமங்களுக்குப் பொறுப்பாளிகள் என்று அது சொல்லியது. 'ஒரு நிலச்சுவான்தார் தன்னுடைய குடிகளுக்குப் பொறுப்புவாய்ந்த முறையில் தன் நிலத்தை வைத்திருக்கிறான்' என்பது அதன் தாத்பரியம். பணக்காரனுடைய நிலைமையில் அதனால் யாதொரு மாறுதலும் ஏற்படவில்லை. ஆகவே, ஏழைக்கு அதனால் சுகம் ஒன்றும் இல்லை. பசியால் வாடுவோனுக்கு யுக்திவாதம் உணவாகுமா?

கத்தோலிக்கர்களுக்கும் பிராடெஸ்டண்டுகளுக்கும் இடையே விளைந்த கொடிய மதப் போர்களும், கத்தோலிக்கர் கால்வினியர் ஆகிய இருதிறத்தாரும் காட்டிய பிறமதத் துவேஷமும், மத விசாரணை சபையின் பாவ கருமங்களும், எல்லாம் மேற்கூறிய தீவிரமான சமய, சமூக மனோபாவத்தினின்றும் விளைந்தவையே யாகும். தீவிர சுத்தவாதிகள் (Puritans) என்போர் ஒரு பாவமுமறியாத லட்சக்கணக்கான ஸ்திரீகளைச் சூனியக்காரிகள் என்று கூறி உயிரோடு எரித்தார்கள் என்றால், அதை என்னென்பது? மதஸ்தாபனத்தின் கொள்கைகளோடு முரண்படுகின்றன என்கிற காரணத்துக்காகப் புதிய விஞ்ஞானக் கருத்துகள் பரவாது தடுக்கப்பட்டன. வாழ்வைப் பற்றிய மதஸ்தாபனத்தின் மனோபாவமானது இயங்குதலற்றதாக இருந்தது. அதில் முன்னேற்றத்துக்கு இடமே இல்லை.

16-வது நூற்றாண்டிலிருந்து மேற் கூறிய மனோபாவம் சிறிது சிறிதாக மாறுதல் அடைவதைக் காண்கிறோம். விஞ்ஞானம் தோன்றி வளர்கிறது. எல்லாவற்றையும் சேர்த்துப் பிடித்துக்கொண் டிருந்த மதத்தின் பிடிப்புத் தளர்கிறது. மதத்தை நீக்கி விட்டு அரசியல், பொருளியல் பிரச்சினைகள் கவனிக்கப்படுகின்றன. 17, 18-வது நூற்றாண்டுகளில் காரணவாதம் (Rationalism) வளர்ச்சி அடைந்தது என்று சொல்லப்படுகிறது. அதாவது பொதுமக்கள் எதையும் குருட்டுத்தனமாக நம்பி விடாமல் தங்கள் அறிவைக்கொண்டு ஆராயத் தொடங்கினார்கள். 18-வது நூற்றாண்டில் சகிப்புத் தன்மை நிலை நாட்டப்பட்டது என்றும் சொல்லப்படுகிறது. ஓரளவுக்கு அது உண்மையே ஆகும். ஆனால், அதன் உண்மையான அர்த்தம் என்னவென்றால் ஜனங்களுக்குத் தங்களுடைய மதத்தில் முன்பு இருந்த பற்றுதல் இப்போது இல்லை என்பதுதான். ஆகவே, சகிப்புத் தன்மை என்பது ஏறக்குறைய அலட்சியத்தையே

உணர்த்திற்று. ஒரு விஷயத்தில் அளவு கடந்த ஆர்வம் இருந்தால் அங்கே சகிப்புத்தன்மையைக் காண்பது அரிது. அதைப்பற்றிய கவலையே இல்லாத போது சகிப்புத் தன்மை காட்டப்படுவதாக வாய்ப்பந்தல் போடப்படுகிறது. யந்திரமும் யந்திரக் கைத்தொழிலும் வந்த பிறகு மதத்தின்பால் காட்டப்பட்டு வந்த அலட்சியம் இன்னும் அதிகரித்தது. குருட்டு நம்பிக்கையின் அடிப்படையை விஞ்ஞானம் தகர்த்தெறிந்து விட்டது. புதிய யந்திரத் தொழிலும், பொருளியல் நிலையும் புதிய பிரச்சினைகளைத் தோற்றுவித்தன. ஜனங்களின் கவனமெல்லாம் அவற்றில் ஈடுபட்டிருந்தது. ஆகவே, ஐரோப்பிய மக்கள் ஒருவர் மண்டையை ஒருவர் மதக் கோட்பாடுகளுக்காக உடைப்பதை விடுத்துப் (முழுதும் விட்டு விடவில்லை) பொருளியல், சமூகப் பிரச்சினைகளுக்காக உடைக்க ஆரம்பித்தார்கள். ஐரோப்பியச் சரித்திரத்தில் மதாவேசம் நிறைந்த இக்காலப் பகுதியை இன்றைய இந்தியாவுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது சுவையும் பயனும் பயப்பதாகும். 'இந்தியா மத பக்தியும் ஆத்மீகப் பெருமையும் நிறைந்த நாடு' என்று புகழ்ச்சியாகவும் இகழ்ச்சியாகவும் கூறப்படுகிறது. இதற்கு மாறாக ஐரோப்பா மத பக்தி அற்றதென்றும் லௌகிக சுகங்களிலேயே நாட்டம் உடையதென்றும் எடுத்துக் காட்டப்படுகிறது. ஆனால், உண்மையைக் கூறுமிடத்து 'மதபக்தி' நிறைந்த இன்றைய இந்தியா 16-வது நூற்றாண்டு ஐரோப்பாவைப் பெரிதும் ஒத்திருக்கிறது. இந்திய மனோபாவத்தில் மதத்தின் பிரபாவம் காணப்படும் அளவுக்கு இவ்வொப்புப் பொருந்தும்; ஆனால், முழுதும் பொருந்தாது. இடைக்கால ஐரோப்பாவில் நிகழ்ந்தவற்றையே நாம் இந்தியாவிலும் காண்கிறோம். நாமும் மத நம்பிக்கைகளையும், கோட்பாடுகளையும்

அளவுக்கு மீறி வற்புறுத்துகிறோம். நமது வகுப்புச் சண்டைகளில் அரசியல், பொருளியல் பிரச்சினைகளை மதப்பிரிவுகளின் நலங்களோடு கலந்து விடுகிறோம். ஆகவே, மேற்கு உலகம் காரியத்தில் கண்ணுடையதாய் இம்மை இன்பங்களை நாடுகிறதென்றும், கிழக்கு உலகம் ஆத்மீகத்தில் நாட்டமுடையதாய் மறுமை இன்பங்களைக் கருதுகிறதென்றும் சொல்வது சரியல்ல. இரண்டுக்கும் உள்ள வேற்றுமை இதுதான். மேற்கு உலகம் யந்திரக் கைத்தொழிலில் அபாரமான அபிவிருத்தி அடைந்து, அதற்குரிய நன்மை தீமைகளைக் கொண்டதாக விளங்குகிறது. கிழக்கு உலகமோ பெரும்பாலும் யந்திரத் தொழில் வளர்ச்சி அற்றதாகவும், விவசாயத்தையே ஆதாரமாகக் கொண்டதாகவும் இருக்கிறது.

ஐரோப்பாவில், சகிப்புத் தன்மையும் காரணவாதமும் சீக்கிரத்தில் பரவி விடவில்லை. அவை பரவுவதற்கு ஆரம்பத்தில் புஸ்தகங்கள் துணைபுரியவில்லை. ஏனெனில், கிறிஸ்தவ மதத்தைப் பகிரங்கமாகக் குறை கூறுவதற்கு எல்லோருக்கும் பயம். அப்படிச் செய்தால் சிறைவாசமோ அல்லது வேறு தண்டனையோ கிடைப்பது நிச்சயம். ஒரு ஜெர்மானியத் தத்துவ சாஸ்திரி சீன தேசத்து மகானாகிய கன்பூஷியஸ் என்பவரை அளவுக்கு மீறிப் புகழ்ந்து விட்டாராம். அந்தக் குற்றத்துக்காக அவர் பிரஷியாவிலிருந்து நாடு கடத்தப்பட்டார். 18-வது நூற்றாண்டில் புதிய கருத்துகள் மேலும் மேலும் தெளிவு பெற்று ஜனங்களிடையே அதிகமாகப் பரவ ஆரம்பித்தன. அதற்கேற்ற நூல்களும் வெளி வந்தன. அக்காலத்தில் காரணவாதம் முதலிய பல விஷயங்களைப் பற்றி நூல்கள் எழுதிப் பெரும் புகழ் பெற்றவன் வால்டேர் என்னும் பிரெஞ்சு ஆசிரியன். முதலில் அவனைச் சிறையிலிட்டார்கள்; பின்பு, நாடு கடத்தினார்கள்.

கடையில், அவன் ஜினிவாவுக்கு அருகிலுள்ள 'பர்னே' என்னுமிடத்தில் வாழ்ந்து வந்தான். சிறையிலிருந்தபோது அவனுக்குக் காகிதம், மை முதலியன கொடுக்கப்படவில்லை. ஆகவே, அவன் ஒரு புஸ்தகத்தின் வரிகளுக்கிடையில் ஈயத்துண்டுகளைக் கொண்டு பாட்டுகள் எழுதினானாம். அவனுக்குப் பத்து வயதாயிருக்கும்போதே அவனுடைய அசாதாரணமான திறத்தைக் கண்டு அனைவரும் வியந்தனர். பாலியத்திலேயே அவனுடைய கீர்த்தி எங்கும் பரந்தது. அவன் அநியாயத்தையும் குருட்டுப் பிடிவாதத்தையும் வெறுத்தான். அவன் அவற்றோடு போரிட்டான். 'அநியாயம் ஒழிக' என்பதுதான் அவனுடைய பிரசித்தி பெற்ற கோஷம். அவன் 84 ஆண்டுகள் (1694—1778) உயிர் வாழ்ந்தான். அவன் எழுதிய நூல்கள் மிகப்பல. அவன் கிறிஸ்தவ மதத்தைக் குறை கூறிய காரணத்தால் வைதிகக் கிறிஸ்தவர்கள் அவனிடம் தீராப்பகை பூண்டிருந்தார்கள். அவனுடைய நூல்களுள் ஒன்றில், 'தன்னுடைய மதத்தைச் சோதித்துப் பாராமல் ஒப்புக் கொள்ளும் ஒருவன், தன் கழுத்தை நுகத்தில் பூட்டக் கொடுக்கும் மாட்டை ஒத்திருக்கிறான்' என்று கூறியுள்ளான். காரணவாதத்தின் பாலும் புதிய கருத்துகளின் பாலும் மக்களின் மனம் திரும்பியதற்கு அவனுடைய எழுத்துகளின் பிரபாவமே காரணமாகும். பர்னேயில் அவன் வசித்துவந்த பழைய வீடு இன்று கூடப் பலருக்கு யாத்திரைஸ்தலமாக விளங்குகிறது.

இன்னொரு பெரிய ஆசிரியன் ஜீன் ஜாக்கஸ் ரூசோ என்பவன். ரூசோவும் வால்டேரும் ஒரே காலத்தவர்கள். ஆனால், ரூசோ வயதில் சிறியவன். அவன் பிறந்த இடம் ஜினிவா. அவனைப் பெற்றெடுத்ததற்காக, ஜினிவாவுக்குப் பெருமை தாங்க முடியவில்லை. அங்கேயுள்ள அவனுடைய உருவச்சிலை உனக்கு நினைவிருக்கிறதா? மதத்தைப் பற்றியும் அரசியலைப் பற்றியும் அவன் எழுதிய நூல்களுக்கு நாலாபக்கமும் ஆட்சேபனைக் குரல்கள் எழுந்தன. ஆயினும், அவனுடைய துணிகரமான, புத்தம் புதிய அரசியல்—சமூக சித்தாந்தங்கள் பலருடைய மனதில் புதுக் கருத்துகளையும் புதுத் துணிவுகளையும் விதித்தன. அவனுடைய அரசியல் சித்தாந்தங்கள் இப்போது வழக்கொழிந்து போய் விட்டன. ஆனால், பிரெஞ்சுமக்களை ஒரு பெரும் புரட்சிக்குத் தயாராக்கியதில் அவற்றிற்கு ஒரு பெரும் பங்கு உண்டு என்பதை யாரும் மறுக்க முடியாது. ரூசோ புரட்சி வேண்டுமென்று போதிக்கவில்லை. ஒரு புரட்சி தோன்றும் என்று கூட அவன் எதிர்பார்க்கவில்லை. அவனுடைய நூல்கள் மக்கள் மனதில் புரட்சி விதையை ஊன்றின. அவ்விதை பிற்காலத்தில் புரட்சியாக மலர்ந்தது. அவன் இயற்றிய நூல்களில் 'சமுதாய ஒப்பந்தம்' என்னும் நூல் மிகவும் பிரசித்தியானது. அந்நூல் கீழ்வரும் வாக்கியத்தில் ஆரம்பமாகிறது. "மனிதன் பிறக்கும்போது சுதந்திர புருஷனாகப் பிறக்கிறான்; ஆனால், எங்கும் அவன் அடிமைத் தளையில் கட்டுண்டு வாழ்ந்து வருகிறான்" என்பது அவ்வாக்கியம். இதை நான் ஞாபகத்திலிருந்து சொல்லுகிறேன்.

ரூசோ போதனா முறையிலும் தேர்ந்தவன். அவனுடைய புதிய போதனா முறைகளில் பல இன்று பள்ளிக்கூடங்களில் அனுஷ்டிக்கப்படுகின்றன.

வால்டேர், ரூசோ, இவ்விருவரன்றி வேறு பல அறிவாளிகளும் ஆசிரியர்களும் 18-வது நூற்றாண்டிலே பிரான்சில் திகழ்ந்தார்கள். அவர்களில் ஒருவரைமட்டும் குறிப்பிடுகிறேன். மான்டெஸ்கியு என்னும் பெயர் பூண்ட அவர் 'சட்டத்தின் சாராம்சம்' என்னும்

நூலும் வேறு பல நூல்களும் எழுதியிருக்கிறார். ஏறக் குறைய இக்காலத்தில், பாரிசில் ஒரு 'நிகண்டு' வெளி யிடப்பட்டது. அதில் திதரோ போன்ற பல ஆசிரியர்கள் அரசியல், சமூக விஷயங்களைப் பற்றி எழுதிய கட் டுரைகள் நிறைந்திருந்தன. உண்மையில், பிரான்சு தேசமானது தத்துவ சாஸ்திரிகள், அறிவாளிகள் மயமாக விளங்கியது. அதைவிட விசேஷம் என்ன வென்றால், அவர்களுடைய நூல்களைச் சாதாரண மக்களில் பலர் படித்துச் சிந்திக்கவும் விவாதிக்கவும் தொடங்கினார்கள். இவ்வாறு, மதத் துவேஷத்துக்கு விரோதமாகவும் அரசியல், சமூக சலுகைகளுக்கு விரோதமாகவும் பிரான்சில் பலரிடையே ஒரு பலத்த அபிப்பிராயம் ஏற்பட்டது. இன்னதென்று விவரிக்க இயலாத ஒரு சுதந்திர தாகம் மக்களை ஆட்கொண்டது. அப்படியிருந்தும், வேடிக்கை என்னவென்றால், தத்துவ சாஸ்திரிகளாவது ஜனங்களாவது அரசனை ஒழித்துவிட விரும்பவில்லை. குடியரசைப்பற்றிய எண்ணமே அவர் களில் பெரும்பாலோருக்கு உதிக்கவில்லை. சகல உத்தம லட்சணங்களும் பொருந்திய ஒரு அரசன் தோன்றுவான் என்று அப்போதும் ஜனங்கள் நம்பியிருந்தார்கள். அவன் பிளேட்டோ கூறும் அரசனைப் போன்று தத்துவ ஞானியாக (நமது நாட்டு ஜனகரைப் போல) விளங்குவான் என்றும், அவன் அவர்களுடைய இன்னல் களைப் போக்கி அவர்களுக்கு நியாயமும் ஓரளவு சுதந் திரமும் வழங்குவான் என்றும் அவர்கள் எண்ணியிருந் தார்கள். ஜனங்களின் எண்ணம் எதுவாயினும், தத்துவ சாஸ்திரிகள் என்னவோ அவ்வாறுதான் எழுதி வந் தார்கள். கஷ்டங்களுக்கு உள்ளான பொது ஜனங்கள் எவ்வளவு தூரம் அரசனை நேசித்தார்கள் என்பது ஐயத்துக் கிடமான விஷயம்.

பிரான்சைப் போல, இங்கிலாந்தில் அரசியல் அறிவும் சிந்தனையும் வளர்ச்சி அடையவில்லை. 'பிரெஞ்சுக்காரன் ஒரு அரசியல் ஜந்து, ஆனால், ஆங்கிலேயன் அவ்வாறல்ல' என்று சொல்லுவதுண்டு. இந்தக் குண விசேஷம் ஒரு பக்கம் இருக்க, 1688-ல் இங்கிலாந்தில் ஏற்பட்ட புரட்சி சமூக முறுக்கை ஓரளவு தளர்த்தி யிருந்தது. சில வகுப் பார் இன்றும் பல சலுகைகளை அனுபவித்து வந்தார்கள் என்பது வாஸ்தவம். புதிய பொருளியல் விளைவுகளைப் பற்றியும் (இவற்றைப் பற்றி அடுத்துவரும் கடிதம் ஒன்றில் கூறுகிறேன்), அமெரிக்காவிலும் இந்தியாவிலும் ஏற்பட்ட வியாபார தொந்தங்களைப் பற்றியும் யோசிப் பதற்கே ஆங்கிலேயருக்குப் பொழுது சரியா யிருந்தது. சமூக முறுக்கு அதிகமாக ஏறிய பொழுது, தற்காலிக மாகச் செய்யப்பட்ட ஒரு சமரசம், அதை அறுந்து போகா மல் காப்பாற்றியது. பிரான்சில் அவ்விதச் சமரசத்துக்கு இடமில்லை. ஆகவே, யாவும் தலை கீழாக்கப்பட்டது.

தற்கால நாவல் இலக்கியம் இங்கிலாந்தில் 18-வது நூற்றாண்டின் இடைப் பகுதியில் தோன்றி வளர்ந்தது என்று அறிய நாம் மகிழ்ச்சி அடைகிறோம். அந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் 'கலிவர் யாத்திரை', 'ராபின்சன் குரூசோ' என்று இரு நூல்கள் தோன்றின என்று ஏற்கெனவே கூறியுள்ளேன். அவற்றிற்குப் பின் அசல் நாவல்கள் தோன்றின. ஒரு புதிய வகுப்பு அவற்றைப் படிக்கத் தொடங்கியது.

18-வது நூற்றாண்டில்தான் கிப்பன் என்னும் ஆங்கிலேய ஆசிரியன் அவனுடைய புகழ் பெற்ற 'ரோம சாம்ராஜ்யத்தின் தாழ்ச்சியும் வீழ்ச்சியும்' என்னும் நூலை எழுதினான். ரோம சாம்ராஜ்யத்தைப் பற்றிய முன் கடிதம் ஒன்றில் அவனைப் பற்றியும் அவ னுடைய நூலைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறேன்.

96

பெரும் மாறுதல்கள் தோன்றுவதற்கு முன் ஐரோப்பாவின் நிலைமை

செப்டம்பர் 24, 1932.

18-வது நூற்றாண்டில் வசித்த ஐரோப்பிய மக்களின், சிறப்பாகப் பிரஞ்சு மக்களின் மன உலகில் புகுந்து அதைச் சிறிது ஆராய முயன்றோம். அங்கே சில புதிய கருத்துக்கள் தோன்றி வளர்வதையும், அவை பழைய கருத்துக்களுடன் போராடுவதையும் ஒருவாறு கண்டோம். இது வரையில், திரைமறைவில் நடந்தவற்றைக் கவனித்த நாம், இனி வெளியே வந்து ஐரோப்பியப் பொது அரங்கில் நடிக்கும் நடிகர்களைச் சற்று உற்று நோக்குவோம்.

பிரான்சை ஆண்டு வந்த தொண்டுகிழமான 14-வது லூயி, கடைசியாக, 1715-ம் ஆண்டில், மாண்டொழிந்தான். சில தலைமுறைகள் கழிந்தும் அவன் மட்டும் ஒழியாமற் போகவே அவனும் சாவானா என்று ஆய்விட்டது. அவனுக்குப்பின் அவனுடைய கொள்ளுப் பேரனாகிய 15-வது லூயி பட்டத்துக்கு வந்தான். இன்னொரு நீண்ட ஆட்சி ஆரம்பமாயிற்று. அவன் ஒரு ஐம்பத்தொன்பது வருஷம் அரசு புரிந்தான். இவ்வாறு அடுத்தடுத்து வந்த பிரான்சின் இரு மன்னர்களான 14-வது லூயியும், 15-வது லூயியும் சேர்ந்து மொத்தத்தில் 131 ஆண்டுகள் பிரான்சை ஆண்டார்கள்! இதைவிட நீண்ட ஆட்சி உலகில் வேறெங்கும் காணப்படவில்லை. மஞ்சு சக்கரவர்த்திகளான காங்ஹியும் சியான் லுங்கும் தனித்தனியே 60 ஆண்டுகளுக்கு மேல்

சீனாவை ஆண்டார்கள். ஆனால், அவர்கள் அடுத்தடுத்துப் பட்டத்துக்கு வரவில்லை. அவர்களுக்கிடையில் சில காலம் வேறொருவனுடைய ஆட்சி நடைபெற்றது.

15-வது லூயியின் ஆட்சி மிகவும் நீண்டிருந்ததுமன்றி, ஊழலுக்கும் சூழ்ச்சிக்கும் பேர்போனதாயிருந்தது. நாட்டின் வருவாய் அனைத்தும் அரசனின் ஐம்புல நுகர்ச்சிக்குப் பயன்பட்டது. ராஜ தர்பாரில் சேவித்தவர்கள் அடித்த கொள்ளைக்குக் கணக்கு வழக்கில்லை. அரசனுடைய பிரியத்துக்குப் பாத்திரமான ஸ்திரீ, புருஷர்களுக்கு நிலங்கள் இனாமாக அளிக்கப்பட்டன. அவர்களுக்குத் ‘தண்ட’ உத்தியோகங்களும் கொடுக்கப்பட்டன; அதாவது, அவர்கள் வேலை ஒன்றும் செய்யாமல் சம்பளத்தை மட்டும் வாங்கிச் சாப்பிட்டுக்கொண்டிருக்கலாம். இந்தச் சுமை நாளுக்கு நாள் வளர்ந்து ஏழை மக்களின் தாக்கை முறித்து வந்தது. யதேச்சாதிகாரமும், திறமையின்மையும், ஊழலும் ஒன்றோடொன்று கைகோத்துக் கொண்டு தமாஷாக பவனி வந்துகொண்டிருந்தன. ஆகவே, அவை, அந்த நூற்றாண்டு முடிவதற்குள், தாம் சென்ற வழியின் அந்தத்தை அடைந்து, கிடு கிடு பாதாளத்தில் கால் எடுத்து வைத்ததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. அவை சென்ற வழி அவ்வளவு நீளமாக இருந்தது பற்றியும் அவ்வளவு காலம் தாமதித்து அவற்றிற்கு வீழ்ச்சி நேர்ந்ததுபற்றியுந்தான் நாம் ஆச்சரியப் படவேண்டும். ஜனங்களுடைய தீர்ப்பிலிருந்தும், பழி வாங்குகையிலிருந்தும் 15-வது லூயி தப்பித்துக் கொண்டான். அவனுக்குப் பின் வந்த 16-வது லூயி, 1774-ல், அவற்றிற்கு ஆளாக நேர்ந்தது.

15-வது லூயி திறமை கெட்டவனாகவும், குணங்கெட்டவனாகவும் இருந்த போதிலும், ராஜ்யத்தில் தன்னுடைய ஆணை தடையற்றது, பூரணமானது என்பது

அவனுடைய திடமான அபிப்பிராயம். சகலமும் அவனே. அவன் தனக்கு இஷ்டமான எதையும் செய்வான். யாரும் அவனை ஏன் என்று கேட்கக்கூடாது. 1766-ம் ஆண்டில், பாரிசில், ஒரு சபைக்கு முன்பாக அவன் பேசியதைக் கேள்:

"அரசியல் அதிகாரம் முழுமையும் நானே...சட்டமியற்றும் அதிகாரமும் எனதே. அதில் பிறர் தலையீட்டை எதிர்பார்ப்பதுமில்லை; பிறர் தலையிடுவதற்கும் இல்லை. பொதுஜன அமைதியின் கர்த்தாவும், அதன் தலைசிறந்த பாதுகாப்பாளனும் நான்தான். என்னையன்றி மக்களுக்கு ஒன்றுமேயில்லை. தேசத்தின் உரிமைகளும் நலன்களும் என்னுடையவையே. ஒரு சிலர் நினைப்பது போல் அவை என்னிடமிருந்து வேறுபட்டவை அல்ல. இன்னும் சொல்லப் போனால் அவை நானே தான்."

இத்தகைய அரசன் தான் 18-வது நூற்றாண்டின் பெரும் காலமும் பிரான்சை ஆண்டு வந்தான். சிறிது காலம் வரையில் ஐரோப்பாவிலேயே அவனுக்கு யாரும் நிகரில்லை என்று தோன்றிற்று. அவனுடைய போக்குக்கும், மற்றத் தேச அரசர்கள், ஜனங்களுடைய அபிலாஷைகளுக்கும் முரண்பாடு உண்டாயிற்று. அதில் அவன் தோல்வியை ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று. ஐரோப்பிய ஆடரங்கில் பிரான்சின் பழைய எதிரிகள் சிலருடைய ஆதிக்கம் குறைந்து விட்டது; ஆனால், அவர்களுடைய இடத்தில் மற்றவர்கள் தோன்றிப் பிரெஞ்சு ஆதிக்கத்தை எதிர்க்கத் தொடங்கினார்கள். சிறிது காலம் சாம்ராஜ்ய வாழ்வு பெற்றுத் துலங்கிய, பெருமிதமிகுந்த ஸ்பெயின் தேசமானது ஐரோப்பாவிலும் சரி, வேறு இடங்களிலும் சரி, தாழ்நிலை எய்தி விட்டது. ஆனால், அமெரிக்காவிலும் பிலிப்பைன் தீவுகளிலும் பெரிய காலனிகள் இன்னும் அதற்குச் சொந்தமா

யிருந்தன. ஆஸ்திரியாவை ஆண்டு வந்த ஹாப்ஸ்பர்க் வமிசத்தார் நெடுங்காலம் வரையில் சாம்ராஜ்யத் தலைமையையும், அதன் மூலமாக ஐரோப்பியத் தலைமையையும் ஆண்டனுபவித்து வந்தார்கள். அவர்களுக்கும் பழைய செல்வாக்குப் போய்விட்டது. இப்போது, சாம்ராஜ்யத்தில் தலைசிறந்த நாடு ஆஸ்திரியா அல்ல; பிரஷியா என்கிற இன்னொரு நாடு கிளம்பி ஆஸ்திரியாவுக்குச் சமமான அந்தஸ்தை அடைந்து விட்டது. ஆஸ்திரியாவின் சாம்ராஜ்ய வாரிசுப் பாத்தியதையைக் குறித்துப் போர்கள் விளைந்தன. நெடுங்காலம் வரையில் மேரியா தெரிசா என்னும் ஸ்திரீ சாம்ராஜ்ய சிம்மாசனத்தில் அரசு வீற்றிருந்தாள்.

1648-ல் ஏற்பட்ட வெஸ்ட்பாலியா உடன்படிக்கையின் பயனாக, பிரஷியா ஐரோப்பிய வல்லரசுகளில் ஒன்றாகச் செய்யப்பட்ட விஷயம் உனக்கு நினைவிருக்கும். ஹோஹென்ஜாபன் வமிசம் பிரஷியாவை ஆண்டுவந்தது. அது ஆஸ்திரியாவை ஆண்டுவந்த இன்னொரு ஜெர்மானிய வமிசமாகிய ஹாப்ஸ்பர்க் வமிசத்தின் முதன்மையை எதிர்த்தது. நாற்பத்தாறு ஆண்டுகள் வரையில் (1740–1786) பிரடெரிக் என்பவன் பிரஷியாவை ஆண்டு வந்தான். அவன் போர்களில் அடைந்த வெற்றி காரணமாக, மகா பிரடெரிக் என்று அழைக்கப்படுகிறான். மற்ற ஐரோப்பிய அரசர்களைப் போலவே அவனும் யதேச்சாதிகார அமுல்தான் செலுத்தி வந்தான். ஆனால், அவன் ஒரு தத்துவஞானி போன்று நடித்து, வால்டேருடன் தோழமை பாராட்டி வந்தான். அவன் பலம் பொருந்திய சைனியம் ஒன்றை அமைத்துச் சிறந்த தளபதியாகவும் விளங்கினான். அவன் தன்னை ஒரு காரணவாதி என்று சொல்லிக்கொண்டான். 'ஒவ்வொருவனும்' தன் தன் வழியில் ஆண்டவனுடைய ராஜ்யத்தை

அடைவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும்' என்று அவன் கூறினனும்.

17-வது நூற்றுண்டிலிருந்து ஐரோப்பாவில் பிரெஞ்சுக் கலைப் பண்பு உயர்நிலை எய்துகிறது. 18-வது நூற்றுண்டின் இடைப் பகுதியில் அதன் முக்கியத்துவம் இன்னும் அதிகரித்தது. பிரெஞ்சு ஆசிரியனுகிய வால்டேரின் கீர்த்தி ஐரோப்பா முழுதும் பரவி நின்றது. அந்த நூற்றுண்டைச் சிலர் 'வால்டேரின் நூற்றுண்டு' என்று கூடச் சொல்லுகிருர்கள். ஐரோப்பாவின் சகல ராஜ தர்பார்களிலும் பிரெஞ்சு இலக்கியம் பயிலப்பட்டு வந்தது. பிற்போக்கு வாய்ந்த செயின்ட் பீட்டர்ஸ் பர்க் நகரில் கூட, நாகரிகமும் கல்வியும் வாய்ந்தவர்கள் எல்லோரும் பிரெஞ்சு மொழியால் எழுதுவதையும் பேசுவதையுமே சிலாக்கியமாகக் கொண்டார்கள். பிரஷியாவை ஆண்ட மகா பிரடெரிக் எப்பொழுதுமே பிரெஞ்சில் பேசியும் எழுதியும் வந்தான். அவன் அம்மொழியில் செய்யுள் இயற்றவும் முயன்ருன். அவன் தன்னுடைய செய்யுள்களை வால்டேரிடம் கொடுத்து அவற்றைத் திருத்தி உதவுமாறு கேட்டாரும்.

பிரஷியாவுக்குக் கிழக்கே ருஷியா பரந்து கிடந்தது. அப்போதே அது பிரம்மாண்டமாக வளர்ந்து வந்தது. நாம் சீனவின் வரலாற்றை ஆராய்ந்த காலத்தில், ருஷியா சைபீரியா வழியாகப் பசிபிக் சமுத்திரம் வரையில் பரவி அதைக் கடந்து அலாஸ்காவுக்கும் சென்ற விதத்தைப் பார்த்தோம். 17-வது நூற்றுண்டின் இறுதியில் ருஷியாவுக்கு ஒரு பலவானன அரசன் கிடைத்தான். அவன் மகாபீட்டர் என்று பேர் பெற்ருன். ருஷியாவுக்குப் பரம்பரையாக இருந்துவந்த மங்கோலியத் தொடர்புகளையும் மனேபாவத்தையும் அவன் அகற்ற முயன்ருன். பிறர் கூறுவதுபோல், அவன் ருஷியாவை 'மேனுட்டுமய' மாக்க விரும்பினன். ஆகவே, அவன் ருஷியாவின் பழைய தலைநகராகிய மாஸ்கோவை விடுத்துப் புதிய நகரம் ஒன்றை நிருமாணித்து அதைத் தனக்கு ராஜதானியாகக் கொண்டான். ஏனெனில், மாஸ்கோவில் பழைய சம்பிரதாயங்கள் நிறைந்திருந்தன. புதிய நகரம், வடக்கே, பின்லாந்து வளைகுடாவின் தலைப்பில், நீவா நதிக்கரையில் நிருமாணிக்கப்பட்டது. அதற்குச் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் என்று பெயரிடப்பட்டது. அது மாஸ்கோவினின்றும் முற்றிலும் மாறுபட்டிருந்தது. பொன் வேய்ந்த விமானங்களும் ஸ்தூபிகளும் அந்நகரை அலங்கரித்தன. அது மேற்கு ஐரோப்பிய மாநகர்களைப் பெரிதும் ஒத்திருந்தது. ருஷியா 'மேனுட்டுமய' மாகிவிட்டதற்கு அடையாளமாகப் பீட்டர்ஸ்பர்க் நகரம் விளங்கியது. ஐரோப்பிய அரசியலில் ருஷியா முன்னைவிட அதிகமாகப் பங்கு எடுத்துக் கொள்ள ஆரம்பித்தது. அந்நகருக்குப் பீட்டர்ஸ்பர்க் என்கிற பெயர் இப்போது எடுபட்டுப் போய்விட்ட விஷயம் உனக்குத் தெரிந்திருக்கலாம். கடந்த இருபதாண்டுகளில் அதன் பெயர் இருமுறை மாறிவிட்டது. அது பீட்டர்ஸ்பர்காயிருந்து பெட்ரோகிராட் என்று மாறி இப்போது லெனின் கிராட் என்று வழங்குகிறது.

மகா பீட்டர் ருஷியாவில் பல மாறுதல்களைத் தோற்றுவித்தான். அவற்றில் உனக்குப் பிடித்த ஒன்றை மட்டும் கூறுகிறேன். அக்காலத்தில், ருஷியாவில் ஸ்திரீகளிடையே கோஷாப் பழக்கம் இருந்தது. அது 'டெரம்' (Terem) என்று அழைக்கப்பட்டது. பீட்டர் அதை ஒழித்தான். அவனுக்கு இந்தியாவின்மீது கண் இருந்தது. சர்வ தேசிய அரசியலில் இந்தியாவுக்குள்ள முக்கியத்துவத்தை அவன் நன்கு உணர்ந்

திருந்தான். "இந்திய வர்த்தகம் உலக வர்த்தகம் என்பதை நினைவில் வைக்கவேண்டும். இந்திய வர்த்தகத்தை ஏகபோக உரிமையாக ஆண்டனுபவிப்பவன் ஐரோப்பாவின் சர்வாதிகாரியாக விளங்குவான்" என்று பீட்டர் தன் உயிலில் எழுதியுள்ளான். அவனுடைய வார்த்தை மெய்யாயிற்று. இந்தியாமீது ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்த உடனே இங்கிலாந்து விரைவில் வளர்ச்சி அடையத் தொடங்கியது. இந்தியாவைச் சுரண்டி இங்கிலாந்து செல்வமும் செல்வாக்கும் பெற்றது. அக் காரணத்தாலேயே அது பல தலைமுறைகளுக்கு உலகின் முதன்மைபெற்ற வல்லரசாகி விட்டது.

ஒருபக்கம் பிரஷியாவும் ஆஸ்திரியாவும்; ஒரு பக்கம் ருஷியா; இவற்றிற் கிடையில் போலந்து இருந்தது. அது ஒரு பிற்போக்கான தேசம். அதன் குடியானவர்கள், பாவம், ஏழைகள். அங்கு வியாபாரமோ, கைத்தொழிலோ, பெரிய நகரங்களோ இல்லை. அதன் அரசியல் அமைப்பு விசித்திரமானது. அதிகாரம் நிலமானியப் பிரபுக்களின் கையில் இருந்தது. அரசன் தேர்ந்தெடுக்கப்பட்டான். சுற்றியிருந்த நாடுகள் பலம் அடையவும், போலந்து பலவீன மடைந்தது. பிரஷியாவும், ருஷியாவும், ஆஸ்திரியாவும் அதை எப்போது கவளீகரம் செய்யலாம் என்று ஆசையோடு நோக்கிக் கொண்டிருந்தன.

ஆயினும், 1683-ல் போலந்தின் அரசன்தான் வியன்னாவில் கடைசி முறையாகத் துருக்கியரை ஓட்டிப் புறங்கண்டவன். அதற்குப் பிறகு உதுமானியத் துருக்கியர் ஆக்கிரமிப்பில் இறங்கவில்லை. அவர்களுடைய ஆற்றல் அடங்கி விட்டது. நிலைமை சிறிது சிறிதாக மாறத் தொடங்கியது. அதிலிருந்து துருக்கியர் பிறரைத் தாக்குவது போய், பிறரிடமிருந்து அவர்கள் தங்

களைக் காத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. துருக்கிய சாம்ராஜ்யம் மெள்ள மெள்ளச் சுருங்கத் தலைப்பட்டது. ஆனால், நாம் இப்போது பார்வையிடும் பதினெட்டாவது நூற்றாண்டின் முற்பாதியில், ஐரோப்பாவின் தென்கிழக்கில் துருக்கி ஒரு பலம் பொருந்திய நாடாகவே விளங்கியது. துருக்கிய சாம்ராஜ்யம் ஹங்கேரி வழியாகப் போலந்து வரையில் பரவிப் பால்கன் பிரதேசத்தைத் தன்னகத்தேகொண் டிருந்தது.

தெற்கே, இதாலி பல்வேறு அரசர்களின் கீழ்ப் பிளவுபட்டுக்கிடந்தது. ஐரோப்பிய அரசியலில் அது ஒரு பொருட்டாகவே கொள்ளப்படவில்லை. போப்பாண்டவர் அரசியலில் தான் வகித்து வந்த உயரிய ஸ்தானத்தை இழந்து விட்டார். அரசர்கள் அவரிடம் பயபக்தியுடன் நடந்து கொண்டார்கள். ஆனால், அரசியல் விவகாரங்களில் அவரைச் சட்டை பண்ணவில்லை. ஐரோப்பாவில், சிறிது சிறிதாகப் புதிய கோட்பாடு ஒன்று தோன்றிப் பரவலாயிற்று. அதுதான் வல்லரசுகளின் கோட்பாடாகும். பலம் பொருந்திய, ஒருமுக அதிகாரமுள்ள முடியரசுகள் 'தேசம்' என்கிற எண்ணத்தை மக்கள் மனதில் வளர்க்க உதவின என்று முன்பே கூறியுள்ளேன். ஜனங்கள் தங்களுடைய தேசத்தைக் குறித்து ஒருதனி வகையான மனோபாவம் கொள்ள ஆரம்பித்தார்கள். அந்த மனோபாவம் இன்று எங்கும் பொதுவாகக் காணப்படுகிறது. ஆனால், நாம் பேசுகிற காலத்துக்கு முன்பு அது எங்கும் காணப்படவில்லை. பிரான்சு, இங்கிலாந்து அல்லது பிரித்தானியா, இதாலியா போன்ற பல உருவங்கள் தோன்றுகின்றன. அவை அந்தந்த நாட்டைக் குறிக்கும் அடையாளங்களாகக் கொள்ளப் படுகின்றன. இதற்குப் பிறகு, 19-ம் நூற்றாண்டில், அவ்வுருவங்கள் மக்கள் மனதில்

திட்டமான வடிவு பெற்று, ஆச்சரியமான முறையில் அவர்களுடைய இருதயங்களை இயக்குகின்றன. இவ்வாறு உருவகப்படுத்தப்பட்ட தேசங்களே மக்களின் புதிய தெய்வங்களாக விளங்குகின்றன. அவற்றின் பலிபீடத்துக் கருகில் தேசபக்தர்கள் தலை வணங்கி நிற்கிறார்கள். அவற்றின் பெயரிலும், சார்பிலும் அவர்கள் ஒருவரோடொருவர் போரிட்டு ஒருவரையொருவர் மாய்க்கிறார்கள். 'பாரதமாதா' என்கிற எண்ணமானது நம்மையெல்லாம் எவ்வாறு ஆட்டிவைக்கிறது என்று உனக்குத் தெரியும். 'பாரதமாதா' என்னும் இதிகாசோக்தமான கற்பனை மூர்த்தத்துக்காக அவளுடைய புதல்வர்களும் புதல்விகளும் இன்னல்களைப் புன்முறுவலுடன் ஏற்பதும், தங்கள் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணம் செய்வதும் உனக்குத் தெரிந்த விஷயங்களே யாகும். இவ்வாறே, பிறநாட்டு மக்களும் தங்கள் தங்கள் தாய்நாட்டுப் பித்து ஏறப்பெற்றார்கள். ஆனால், அவையெல்லாம் பிற்காலத்தில் தோன்றிய அபிவிருத்தியாகும். 18-வது நூற்றாண்டில், 'தேசியம், தேசபக்தி' என்கிற எண்ணம் மக்கள் மனதில் வேரூன்றத் தொடங்கியது என்பதை மட்டும் நீ இப்போதைக்குத் தெரிந்து கொள்ள வேண்டும். அவ்வெண்ணம் வளர்வதற்குப் பிரெஞ்சுத் தத்துவ ஞானிகள் பெரிதும் உதவினார்கள்; மாபெரும் பிரெஞ்சுப் புரட்சி அதற்கு முத்திரை வைத்தது.

இந்தத் தேசங்கள் தான் "வல்லரசுகள்" (Powers) எனப்பட்டன. அரசர்கள் வருவதும் போவதுமாயிருந்தார்கள். ஆனால், தேசம் மட்டும் இடையறாது இருந்துவந்தது. இந்த அரசுகளுக்குள்ளே நாளாவட்டத்தில் சில மற்றவற்றைவிட அதிக முக்கியத்துவம் பெற்று விளங்கின. 18-வது நூற்றாண்டின் ஆரம்பத்தில் பிரான்சு, இங்கிலாந்து, ஆஸ்திரியா, பிரஷியா, ருஷியா ஆகியவை அட்டியின்றி "வல்லரசுகள்" ஆய்விட்டன. ஸ்பெயினைப் போன்ற வேறு சில நாடுகள் பெயரளவில் பெரியவையாக இருந்தன. ஆனால், உண்மையில் அவை இறங்கு முகத்தில் இருந்தன.

இங்கிலாந்தின் செல்வமும் முக்கியத்துவமும் விரைவில் வளர்ந்தோங்கின. எலிசபெத்தின் காலத்துக்கு முன்பு, ஐரோப்பாவைப் பொறுத்தவரையில்கூட இங்கிலாந்து முக்கியமான நாடாக இல்லையென்றால் உலகத்தில் அதன் முக்கியத்துவம் மிகவும் குறைவாயிருந்தது என்று சொல்லத் தேவையில்லை. இங்கிலாந்தின் ஜனத்தொகையோ மிகவும் சொற்பம். அக்காலத்தில் அது 60 லட்சத்துக்கு மேல் இருந்திருக்க முடியாது. இப்போதோ அதைவிட அதிகமான தொகையினர் லண்டன் நகரில் மட்டும் வசிக்கிறார்கள். தீவிர சுத்தவாதிகளின் புரட்சி, அரசன்மீது பார்லிமெண்டு கொண்ட வெற்றி ஆகிய சம்பவங்களுக்குப் பிறகு இங்கிலாந்து புதிய நிலைமைகளுக்குத் தகத் தன்னை அமைத்துக் கொண்டு விரைந்து முன்னேறிச் செல்ல ஆரம்பித்தது. ஸ்பானியத் தளையைத் தகர்த்தெறிந்தபின் ஹாலந்தும் அவ்வாறே முன்னேறியது.

18-வது நூற்றாண்டில், அமெரிக்காவிலும் ஆசியாவிலும் 'காலனி'கள் சம்பாதிப்பதற்குப் பல ஐரோப்பிய நாடுகளிடையே பெரிய போட்டி விளைந்தது. கடைசியாகப் பிரதானபோட்டி இருநாடுகளுக்குள் வந்து முடிந்தது. அவை இங்கிலாந்தும் பிரான்சும் ஆகும். இந்தப் போட்டியில் அமெரிக்காவிலும் சரி, இந்தியாவிலும் சரி இங்கிலாந்து வெகுதூரம் முந்திக்கொண்டு விட்டது. பிரான்சுக்கு இரண்டு தடைகள் இருந்தன. ஒன்று, 15-வது லூயியின் திறமையற்ற ஆட்சி, இரண்டா

வதாக அது ஐரோப்பிய அரசியலில் அதிகமாகச் சிக்கிக் கொண்டிருந்தது. 'வருங்காலத்தில் எஜமானஸ்தானம் யாருக்கு?' என்பதைத் தீர்மானிப்பதற்காக 1756-லிருந்து 1763-வரையில் இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் இடையிலும், வேறு பிற நாடுகளுக் கிடையிலும் ஐரோப்பா, கானடா, இந்தியா ஆகிய இடங்களில் போர் நிகழ்ந்தது. அப்போர் 'ஏழாண்டுப் போர்' என்று அழைக்கப்படுகிறது. அதில் ஒரு சிறு அம்சத்தை இந்தியாவில் பார்த்தோம். இங்கே பிரான்சு தோல்வி அடைந்தது. கானடாவிலும் பிரான்சுக்குத் தோல்வியே கிடைத்தது. ஐரோப்பாவில் இங்கிலாந்து அனுஷ்டித்த கொள்கை மிகவும் பிரசித்தி வாய்ந்தது. பிறருக்குப் பணம் கொடுத்து அவர்களைத் தனக்காகப் போரிடச் செய்வது தான் அக்கொள்கை. மகா பிரடெரிக் இங்கிலாந்தின் கட்சியில் இருந்தான்.

ஏழாண்டுப் போரின் முடிவு இங்கிலாந்துக்குப் பெரிதும் சாதகமாயிருந்தது. இப்போது இந்தியாவிலும் கானடாவிலும் அதனுடன் போட்டியிடுவதற்கு ஐரோப்பிய நாடு எதுவும் இல்லை. கடல்களின் மீது அது தன் ஆதிக்கத்தை ஸ்தாபித்துக் கொண்டது. இவ்வாறு, இங்கிலாந்து ஒரு சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்து அதை விஸ்தரிக்கும் நிலையையும், உலக வல்லரசு ஆகக்கூடிய நிலையையும் அடைந்து விட்டது. பிரஷியாவின் முக்கியத்துவமும் அதிகரித்து வந்தது.

ஐரோப்பா மீண்டும் இப்போரினால் களைத்து விட்டது. மீண்டும் ஐரோப்பாக் கண்டத்தில் அமைதி நிலவியது. ஆனால், இந்த அமைதியான நிலைமையிலும் பிரஷியா, ஆஸ்திரியா, ருஷ்யா மூன்றும் சேர்ந்து கொண்டு போலந்தை விழுங்கி விட்டன. அந்நாடுகளை எதிர்த்துப் போரிடும் ஆற்றல் போலந்துக்கு இல்லை.

ஆகவே, அம் மூன்று ஓநாய்களும் அவ்வெளிய ஆட்டுக் குட்டியின் மீது விழுந்து பிடுங்கின. சுதந்திரப் போலந்து மறைந்தது. அது மும்முறை—1772, 1793, 1795—ஆண்டுகளில் அவற்றிற்கிடையே கூறிடப் பட்டது. முதன் முறை கூறிடப்பட்ட பிறகு, போலந்து மக்கள் தங்கள் நாட்டைச் சீர்திருத்தவும், பலப்படுத்தவும் பெரிய முயற்சி செய்தார்கள். ஒரு பார்லிமெண்ட் ஸ்தாபிக்கப்பட்டது. கலையும் இலக்கியமும் பூத்தன. ஆனால், போலந்தைச் சுற்றியிருந்த யதேச்சாதிகார அரசர்கள் ரத்தத்தின் சுவையைக் கண்டவர்கள். ஆகவே, அவர்களை ஏமாற்றுவதற் கில்லை. மேலும், அவர்களுக்குப் 'பார்லிமெண்டுகள்' என்றாலே எட்டிக் காய் மாதிரி. முடிவு என்ன? 1795-ல் ஐரோப்பாப் படத்திலிருந்து போலந்து மறைந்து விட்டது. அந்நாட்டு மக்களின் தேச பக்தியும், கோஷியஸ்கோ என்னும் அவர்களுடைய வீரத் தலைவனின் கீழ் அவர்கள் விளைத்த வீரப்போரும் வியர்த்தமாயின. அப்போது போலந்து மறைந்து விட்டது வாஸ்தவம். ஆனால், போலந்து மக்கள் தேசபக்தி விளக்கை அணையாது காத்து வந்ததோடு சுதந்திரத்தைப் பற்றியும் கனவு கண்டு வந்தார்கள். 123-ஆண்டுகளுக்குப் பிறகு அவர்களுடைய கனவு நனவாயிற்று. சென்ற உலக மகா யுத்தத்துக்குப் பின்பு மீண்டும் சுதந்திரப் போலந்து உதயம் செய்தது.

18-வது நூற்றாண்டின் பிற்பாதியில் ஐரோப்பாவில், ஓரளவு அமைதி குடிகொண்டிருந்தது என்று சொன்னேனல்லவா? ஆனால், அது வெகுநாளைக்கு நீடிக்கவில்லை. அதுவும், மேலுக்குமட்டும் தான் இருந்து வந்தது. அந்நூற்றாண்டில் நிகழ்ந்த வேறுபல நிகழ்ச்சிகளைப் பற்றியும் நான் கூறியுள்ளேன். அந்நூற்றாண்டில் மூன்று முக்கிய நிகழ்ச்சிகள்—மூன்று புரட்சிகள்—

நிகழ்ந்தன. வேறு எந்நிகழ்ச்சியையும் அவற்றிற்கு ஈடாகக் கூறுவதற்கில்லை. அம்மூன்று புரட்சிகளும் அந்நூற்றாண்டின் கடைசிப் பாதத்தில் தோன்றின. அவை மூன்றும் மூன்று தனிவகையைச் சேர்ந்தவை. ஒன்று அரசியலைச் சார்ந்தது; இன்னொன்று தொழிலைப் பற்றியது; மூன்றாவது சமூக சம்பந்தமானது. அரசியல் புரட்சி அமெரிக்காவில் தோன்றியது. அங்குள்ள பிரிட்டிஷ் காலனிகள் இங்கிலாந்தை எதிர்த்துப் போரிட்டன. அதன்பயனாக அங்கே சுதந்திரக் குடியரசு—ஐக்கிய அமெரிக்க நாடுகள்—உதயம் செய்தது. நமது காலத்தில் அது மிகவும் பலம் பொருந்திய நாடாகிவிட்டது. யந்திரத் தொழிற்புரட்சி இங்கிலாந்தில் ஆரம்பித்து மற்ற மேல் ஐரோப்பிய நாடுகளுக்கும், பிறகு வேறிடங்களுக்கும் பரவியது. அப் புரட்சி அமைதித் தன்மை கொண்டதாக இருந்தது. ஆனால், அதன் பிரபாவம் உலகெங்கும் பரவி மக்களின் வாழ்க்கையைப் பாதித்தது. சரித்திரத்தில், நாம் இதற்குமுன் கண்ட எந்நிகழ்ச்சியும் இத்துணை பிரபாவம் உடையதாக இல்லை. அதனால், நீராவியும் பெரிய யந்திரமும் மனித ஜாதிக்குக் கிடைத்தன. இன்று நம்மைச் சுற்றிக் காணப்படும் எண்ணற்ற விளைவுகள் யாவும் உலகம் யந்திரத் தொழில் மயம் ஆனதால் தோன்றியவையே யாகும். அடுத்த படியாக, மாபெரும் பிரெஞ்சுப் புரட்சியைத்தான் நான் சமூகப் புரட்சி என்று குறிப்பிட்டேன். அது பிரான்சில் முடியரசைக் குழிதோண்டிப் புதைத்தது மல்லாமல் ஒரு சிலர் அனுபவித்துவந்த விசேஷச் சலுகைகளுக்கும் உலைவைத்தது. அது புதிய வகுப்புகளை முன்னணிக்குக் கொண்டுவந்தது. இம்மூன்று புரட்சிகளைப் பற்றியும் நாம் தனித்தனியாகவும் சிறிது விவரமாகவும் ஆராய வேண்டும்.

மேற்கூறிய பெரும் மாறுதல்கள் தோன்றுவதற்கு முன் ஐரோப்பாவில் முடியரசுகளின் அதிகாரம் கொடி கட்டிப் பறந்ததை நாம் முன்பு கண்டோம். இங்கிலாந்திலும் ஹாலந்திலும் பார்லிமெண்டுகள் இருந்தன. ஆனால், அவை உயர்குலத்தார் கையிலும் பணக்காரர் கையிலும் இருந்தன. பணக்காரரின் சொத்துச் சுதந்திரங்களையும், விசேஷ உரிமைகளையும் காப்பாற்றுவதற்காகவே சட்டங்கள் இயற்றப்பட்டன. கல்விகூட உயர்வகுப்பாருக்கும் பணக்காரருக்கும் உரிய பொருளாகவே இருந்தது. உண்மையைக் கூறின், அரசாங்கமே அவர்களுடைய நன்மைக்காகத்தான் நடைபெற்று வந்தது. அந்தக் காலத்தில் ஏழைகளின் பிரச்சினைதான் மிகப் பெரிய பிரச்சினையாக இருந்தது. உயர் வகுப்பாரின் நிலைமை சிறிது அபிவிருத்தி அடைந்தது. ஏழைகளின் கஷ்டம் பழையபடியே இருந்தது; ஏன், அதிகமாயிற்று என்றே சொல்ல வேண்டும்.

18-வது நூற்றாண்டு முழுதும், ஐரோப்பிய நாடுகள் மிகக் கொடிய, ஈவிரக்கமற்ற அடிமை வியாபாரத்தை நடத்தி வந்தன. ஐரோப்பாவில், 'அடிமைகள்' என்று ஒரு வகுப்பார் அப்போது இல்லை. ஆனால், நிலத்தை உழுது பயிரிட்டவர்கள் 'அடிமைகள்' என்றே அழைக்கப்பட்டார்கள். அவர்களுடைய நிலை அசல் அடிமைகளுடைய நிலையைக் காட்டிலும் மேலானதாக இல்லை. அமெரிக்கா கண்டு பிடிக்கப்பட்டதும் பழைய அடிமை வியாபாரம் தன்னுடைய கோர சொரூபத்தில் மீண்டும் முளைத்தது. ஸ்பானியரும் போர்த்துகீசியரும் முதலில் அதைத் தொடங்கினார்கள். அவர்கள் ஆப்பிரிக்காக் கரையிலுள்ள நீக்ரோவரைப் பிடித்து அமெரிக்காவுக்குக் கொண்டு போய் நிலத்தில் வேலை செய்வதற்கு விற்று வந்தார்கள். இந்த வெறுக்கத்தக்க

வியாபாரத்தில் ஆங்கிலேயரின் பங்கு அற்ப சொற்பமானதல்ல. அந் நீக்கிரோவர் அடைந்த இன்னல்களை நம்மில் யாரும் மனதால் கூடப் பாவித்து அறிவது கஷ்டம். அவர்கள் காட்டுவிலங்குகள் போல் வேட்டையாடப்பட்டும், சங்கிலியால் பிணிக்கப்பட்டும் அமெரிக்காவுக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள். அமெரிக்காவுக்குப் போய்ச்சேருவதற் குள்ளேயே அவர்களில் பலர் மாண்டு மடிந்தார்கள். இவ்வுலகத்தில் பல ஜாதியார்கள், பலவகுப்பார்கள் ஆற்றொணாத் துன்பங்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள். ஆனால், அந்தோ! அவர்கள் யாரினும் நீக்கிரோவர் அனுபவித்த துன்பமே கொடிது, கொடிது, மிகவும் கொடிது என்று நான் கூறுவேன். 19-வது நூற்றாண்டில் 'அடிமைத்தனம்' ஐரோப்பாவில் சட்டபூர்வமாக ஒழிக்கப்பட்டது. இதை முதலில் செய்தது இங்கிலாந்து. இப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அமெரிக்காவில் ஒரு உள்நாட்டுப் போரே நடக்க வேண்டியிருந்தது. இன்று ஐக்கிய அமெரிக்க நாடுகளில் வாழும் லட்சக் கணக்கான நீக்கிரோவர் இவ்வடிமைகளின் கால் வழியில் வந்தவர்களே ஆவர்.

இந்தக் கடிதத்தை நான் சந்தோஷகரமாக முடிக்கப் போகிறேன். அந் நூற்றாண்டில் ஜெர்மனியிலும் ஆஸ்திரியாவிலும் சங்கீதக்கலை பெரிதும் அபிவிருத்தி அடைந்தது. ஐரோப்பிய சங்கீதத்தின் முன்னணியில் நிற்பது ஜெர்மனி என்கிற விஷயம் உனக்குத் தெரிந்ததே. 17-வது நூற்றாண்டிலேயே அங்குப் பெரிய சங்கீத விற்பன்னர்கள் தோன்றினார்கள். மற்ற நாடுகளில் போலவே, ஐரோப்பாவிலும் சங்கீதமானது முதலில் சமயச் சடங்குகளின் ஒரு அம்சமாக இருந்தது. சிறிது சிறிதாகச் சங்கீதம் சமயத்தினின்று பிரிக்கப்பட்டு ஒரு தனிக்கலையாக விளங்கியது. 18-வது

நூற்றாண்டில் மோசார்ட், பேட்டோவன் என்று இரண்டு பெரிய இசைவாணர்கள் தோன்றினார்கள். அவர்களுடைய மேதை அதிபாலியத்திலேயே பிரகாசிக்கத் தொடங்கியது. அவர்கள் இருவரும் ஒப்புயர்வற்ற சாகித்திய கர்த்தர்கள். பேட்டோவனை மேனாட்டின் ஒப்புயர்வற்ற சங்கீத—சாகித்தியகர்த்தா என்று சொல்லலாம். ஆனால், விதியின் விபரீதத்தை என்னென்பது? அத்தகைய இசை ஞானியின் செவிகள் செவிடாய்ப் போய்விட்டன. ஆகவே, அவன் லோகோபகாரமாகச் சிருஷ்டித்த தெய்வ சங்கீதத்தை அவனே கேட்டு மகிழ்வதற்கில்லை. ஆனால், அவன் இசையைச் சொற்களிலே பிடிக்கு முன் அவனுடைய இருதயம் அவனுக்குப் பாட்டிசைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

97
பெரிய யந்திரத்தின் வருகை

செப்டம்பர் 26, 1932.

இப்போது நாம் யந்திரத்தொழிற் புரட்சியைப் பற்றிச் சிறிது ஆராய்வோம். அது இங்கிலாந்தில் ஆரம்பித்தது. ஆகவே, இங்கிலாந்தில் அதன் வளர்ச்சியைக் கவனிப்போம். அது எந்தத் தேதியில் ஆரம்பித்தது என்று திட்டமாகச் சொல்லமுடியாது. ஏனெனில், அம்மாறுதல் ஒரு குறிப்பிட்ட தேதியில் நிகழவில்லை. ஆயினும், அது விரைவில் பரவியது. 18-வது நூற்றாண்டின் நடுவிலிருந்து தொடங்கி 100 ஆண்டுகள் கழியுமுன் அது மனித வாழ்க்கையின் தோற்றத்தையே அடியோடு மாற்றிவிட்டது. ஆதிகாலம் தொட்டுப் பல்லாயிரம் ஆண்டுகளில் உலக சரித்திரத்தின் போக்கு எவ்வாறு இருந்தது என்று இக்கடிதங்களில் நாம் ஆராய்ந்து வருகிறோம். நமது ஆராய்ச்சியில் நாம் பல மாறுதல்களைக் கண்டோம். அம்மாறுதல்கள் எல்லாம்-சிலசமயம் அவை மிகப் பெரியனவாகவும் இருந்தன-ஜனங்களின் வாழ்க்கை முறையில் யாதொரு அடிப்படையான மாற்றத்தையும் செய்யவில்லை. சாக்ரடீசோ, அசோகனோ அல்லது ஜூலியஸ் சீசரோ திடீரென்று இந்தியாவில் அக்பரின் தர்பாருக்கோ அல்லது 18-வது நூற்றாண்டின் ஆரம்பத்தில் இங்கிலாந்துக்கோ அல்லது பிரான்சுக்கோ விஜயம் செய்கிறார்கள் என்று வைத்துக்கொள். அவர்கள் அவ்விடங்களில் பல மாறுதல்களைக் கவனித்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. அவற்றில் சில அவர்களுக்கு உடன்பாடாகவும் வேறு சில உடன்பாடன்மையாகவும் இருந்திருக்கலாம். ஆனால், மொத்தமாகப் பார்க்குமிடத்து அவர்கள் வெளித்தோற்றத்திலாவது உலகை அடையாளம் கண்டுகொண்டிருப்பார்கள். கருத்துக்களிலும் அதிக வித்தியாசம் இருந்திராது. வெளித்தோற்றங்களைப் பொறுத்தவரையில் உலகம் அவர்களுக்கு ஏற்றதாகவே தென்பட்டிருக்கும். அவர்கள் பிரயாணம் செய்ய விரும்பியிருந்தால், குதிரை மீதாவது அல்லது குதிரைகள் பூட்டிய வண்டியிலாவது, தங்கள் காலத்து வழக்கத்தைப் போலவே, பிரயாணம் செய்திருப்பார்கள். பிரயாணத்துக்கு ஆகும் காலமும் ஏறக்குறைய முன்போலவே இருந்திருக்கும்.

ஆனால், நான் மேலே கூறிய மூவரில் யாராவது ஒருவர், நமது தற்கால உலகத்துக்கு வந்தால் அவருக்குப் பேராச்சரியம் உண்டாகும். அந்த ஆச்சரியம் பெரும்பாலும் துக்கம் கலந்ததாகவும் இருக்கலாம். அதிவேகமாகச் செல்லக்கூடிய அசுவத்தைக் காட்டிலும், வில்லினின்று விடுபட்ட அம்பைக் காட்டிலும் ஜனங்கள் அதிவேகமாகப் பிரயாணம் செய்வதை அவர் காண்பார். ரயில்வண்டியிலும், நீராவிக் கப்பலிலும், மோட்டார் காரிலும், ஆகாயவிமானத்திலும் ஏறிக்கொண்டு, அவர்கள் உலகெங்கும் அதிவேகமாகச் சுற்றி வருவதை அவர் காண்பார். தந்தி, டெலிபோன், ஆகாயத்தந்தி, அச்சு யந்திரங்களிலிருந்து புறப்படும் எண்ணற்ற புஸ்தகங்கள், பத்திரிகைகள் முதலிய பல நூதனங்களைக் கண்டு அவர் பிரமித்துப்போவார். 18-வது நூற்றாண்டிலும் அதற்குப் பின்பும் தோன்றிய யந்திரத்தொழிற் புரட்சியன்றோ மேற் கூறியவற்றையெல்லாம் பெற்றெடுத்தது? சாக்ரடீசோ, அசோகனோ அல்லது ஜூலியஸ் சீசரோ இப்புது முறைகளை ஒப்புக்கொள்வார்கள் அல்லது ஒப்புக்கொள்ளமாட்டார்கள் என்று நான் சொல்ல முடியாது. ஆனால், அவை

தங்கள் காலத்து முறைகளினின்று முற்றும் மாறுபட்டிருப்பதை அவர்கள் தெளிவாகக் காண்பார்கள்.

யந்திரத்தொழிற் புரட்சி பெரிய யந்திரத்தை உலகுக்கு அளித்தது. உலகில் அது யந்திர சகாப்தத்தைத் தோற்றுவித்தது. முன் காலத்திலும் யந்திரங்கள் இருந்தன. ஆனால், அவை நவீன கால யந்திரங்களைப் போன்று அவ்வளவு பெரியவையாக இல்லை. யந்திரம் என்பது என்ன? யந்திரம் என்பது மனிதன் தன் வேலையைச் செய்ய உதவிபுரியும் ஒரு பெரிய கருவியாகும். மனிதன் கருவி-செய்யும் மிருகம் என்று அழைக்கப்படுகிறான். ஆதி நாட்களிலிருந்து அவன் கருவிகள் காணவும் அவற்றை விருத்தி செய்யவும் முயன்று வந்திருக்கிறான். அவன் தன்னினும் பலம் வாய்ந்த மிருகங்களை அடக்கி ஆண்டதற்கு அவனுடைய கருவிகளே காரணமாகும். மனிதனுடைய கைகளின் நீட்டமே கருவி என்று சொல்லலாம். அல்லது அதை அவனுடைய மூன்றாவது கை என்றும் சொல்லலாம். கருவியின் நீட்டமே யந்திரமாகும். கருவியும் யந்திரமும் மனிதனை விலங்கினத்துக்குமேல் உயர்த்தின. இயற்கையின் தளையிலிருந்து அவை மனித ஜாதியை விடுதலை செய்தன. கருவியின் துணைகொண்டும் யந்திரத்தின் உதவி கொண்டும் மனிதன் சுலபமாகப் பொருள்களை உற்பத்தி செய்யலானான். அவன் பொருள்களை அதிகமாக உற்பத்தி செய்தான். அப்படியிருந்தும் அவனுக்கு ஓழிவு நேரம் அதிகமாக இருந்தது. அதன் பயனாக நாகரிக வாழ்வுக்குரிய கலைகளும் அறிவு முயற்சியும் விஞ்ஞானமும் வளர்ச்சி அடைந்தன.

ஆனால், பெரிய யந்திரமும் அதன் பல்வேறு அங்கங்களும் மனித ஜாதிக்குக் கிடைத்த தோஷரஹிதமான வரப்பிரசாதம் என்று கூறுவதற்கில்லை. யந்திரம்

நாகரிக வளர்ச்சியைத் தூண்டிற்று; ஆனால், கூடவே, கொடிய போர்க் கருவிகளையும் கொலைக் கருவிகளையும் சிருஷ்டித்துக் காட்டுமிராண்டித்தனத்தின் வளர்ச்சியையும் தூண்டிற்று. அது உற்பத்தியை ஏராளமாகப் பெருக்கிற்று. ஆனால், அவ்வுற்பத்தி பொது ஜனங்களுக்குப் பயன்படாமல் ஒரு சிலருக்கே சிறப்பாகப் பயன்பட்டது. பணக்காரர்களின் வாழ்வுக்கும் ஏழைகளின் வறுமைக்கும் ஏற்கெனவே இருந்துவந்த வித்தியாசத்தை அது இன்னும் பெருக்கிக் காட்டியது. மனிதனின் கருவியாகவும் கையாளாகவும் இருப்பதற்கு மாறாக அது அவனைத் தனக்கு ஆளாகக் கொள்ளத் துணிந்துவிட்டது. ஒரு பக்கம், அது ஒத்துழைப்பு, சங்க அமைப்பு, குறித்த நேரத்தில் குறித்த காரியத்தைச் செய்தல் முதலிய நல்லொழுக்கங்களைக் கற்பித்தது. இன்னொரு பக்கம் கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையை அது பாழாக்கி விட்டது. அவர்கள் தினந்தோறும் 'யந்திரம்' போலச் செய்ததையே திரும்பத் திரும்பச் செய்ய வேண்டியிருப்பதால் அவர்களுடைய வாழ்க்கையில் ஆனந்தத்துக்கோ, சுதந்திரத்துக்கோ இடமில்லாது போய்விட்டது; வாழ்க்கையே அவர்களுக்குப் பெரிய பாரமாக முடிந்துவிட்டது.

ஆனால், பாவம், மேற்கூறிய தீமைகளுக்கெல்லாம் நாம் ஏன் யந்திரத்தைக் குறைகூறவேண்டும்? யந்திரத்தைத் தவறாக உபயோகித்த மனிதனுடையதன்றோ குற்றம்?யந்திரத்தைப் பூரணமாக உபயோகிக்கத் தவறிய குற்றம் சமூகத்தினுடைய தல்லவா? உலகமோ அல்லது ஏதாவதொரு தேசமோ யந்திரத்தொழிற் புரட்சிக்கு முற்பட்ட பழைய காலத்துக்குத் திரும்பிச் செல்வதென்பது மனதினால் கூட நினைக்க முடியாத ஒரு காரியமாகும். யந்திரத் தொழிலால் விளையும் சில தீமைகளை அகற்று

வதற்காக அது நமக்கு அளித்துள்ள அளவிறந்த நன்மைகளையும் இழந்துவிடுவதென்பது புத்திசாலித்தனமாகாது; அது விரும்பத் தக்கதுமல்ல. எது எப்படியானாலும், யந்திரம் வந்தது வந்தாகிவிட்டது; இனி அது நம்மை விட்டுப் போகப் போகிறதில்லை. ஆகவே, இப்போது நம் முன்னர் நிற்கும் பிரச்சினை அதன் தீமைகளை நீக்கிவிட்டு அதன் நன்மைகளைக் கொள்வது எப்படி என்பதுதான். யந்திரத் தொழிலால் விளையும் செல்வத்தை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்; ஆனால், அச் செல்வத்தை உற்பத்தி செய்பவர்களிடையே அது சமமாக விநியோகிக்கப்படுவதற்கு நாம் ஏற்பாடு செய்ய வேண்டும்.

இங்கிலாந்தில் நிகழ்ந்த யந்திரத் தொழிற் புரட்சியைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்று இக் கடிதத்தை ஆரம்பித்தேன். ஆனால், என்னுடைய வழக்கத்துக்கு விரோதமில்லாமல், எடுத்த விஷயத்தை விடுத்து யந்திரத் தொழிலின் பலாபலன்களைப் பற்றிப் பேச ஆரம்பித்து விட்டேன். இன்று மக்களின் மனதை உலப்பிவரும் ஒரு பிரச்சினையை நான் உனக்கு முன்னால் வைத்திருக்கிறேன். ஆனால், நாம் இன்றைய தினத்துக்கு வருமுன்பு நேற்றைய தினத்தைக் கவனிக்க வேண்டியது அவசியம். யந்திரத் தொழிலின் விளைவுகளை ஆராயுமுன்பு அது எப்பொழுது, எவ்வாறு தோன்றிற்று என்பதை நாம் பார்க்க வேண்டும். நான் இவ்வளவு பெரிய பீடிகைபோட்டுக் கொண்டு பேச ஆரம்பிப்பதற்குக் காரணம் யந்திரத் தொழிற் புரட்சியின் முக்கியத்துவத்தை நீ உணருமாறு செய்வதற்குத்தான். அது, மேலேயுள்ள அரசர்களையும் ஆட்சியாளர்களையும் மாற்றும் வெறும் அரசியல் புரட்சியைப் போன்றதல்ல. யந்திரத் தொழிற் புரட்சி ஒருவர் பாக்கியின்றிச் சகல

ரையும், சகல வகுப்புகளையும் பாதித்தது. யந்திரத்தின் வெற்றி, யந்திரத் தொழிலின் வெற்றி என்பதெல்லாம் யந்திரத்தை உடையவர்களின் வெற்றி என்றுதானே பொருள்படும்? எந்த வகுப்பின் வசத்தில் உற்பத்தி சாதனங்கள் உள்ளனவோ அதுவே ஆளும் வகுப்பாக இருக்கும் என்று முன்பே கூறியுள்ளேன். பழைய காலத்தில் நிலம் ஒன்றுதான் முக்கியமான உற்பத்தி சாதனமாக இருந்தது. ஆகவே, அக்காலத்தில் நிலத்துக்கு உடையவர்கள்—அதாவது நிலச்சுவான்தார்கள்—ஆட்சி செலுத்தி வந்தார்கள். நிலமானியக் காலத்திலும் இதையே காண்கிறோம். அப்போது நிலத்தையன்றி வியாபாரம், கைத்தொழில் முதலிய வேறு உற்பத்தி சாதனங்களும் தோன்றுகின்றன. உடனே, நிலச்சுவான்தார்கள் அப்புதிய உற்பத்தி சாதனங்களின் சொந்தக்காரருடன் தங்களுடைய அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்கிறார்கள். அதற்குப் பிறகு பெரிய யந்திரம் தோன்றுகிறது. உடனே, அதன்மீது ஆதிக்கம் செலுத்தும் வகுப்பார் இயல்பாக முன்னுக்கு வந்து ஆட்சி செலுத்த ஆரம்பிக்கிறார்கள்.

இக்கடிதங்களில், நகரங்களில் தோன்றி வளர்ந்த பூர்ஷுவா வகுப்பைப் பற்றியும், அவர்கள் எவ்வாறு நிலமானியப் பிரபுக்களுடன் போராடிச் சில இடங்களில் ஓரளவு வெற்றி பெற்றார்கள் என்பதைப் பற்றியும் பன்முறை கூறியுள்ளேன். நிலமானியத் திட்டத்தின் சீர்குலைவைப் பற்றி நான் கூறியதிலிருந்து, ஒருவேளை அதன் ஸ்தானத்தைப் பூர்ஷுவா வகுப்பு அதாவது, புதிய மத்திய வகுப்புக் கைப்பற்றிக் கொண்டது என்று நீ எண்ணியிருக்கலாம். நான் கூறியதிலிருந்து உனக்கு அவ்வித எண்ணம் ஏற்பட்டிருக்குமாயின் நான் என்னைத் திருத்திக் கொள்ள விரும்புகிறேன். ஏனெனில், மத்திய

வகுப்பு அதிகாரத்தை அடைவதற்கு வெகுகாலம் சென்றது. நாம் பேசுகிற காலத்தில் அது அதிகாரத்தை அடையவில்லை. பிரான்சில் ஏற்பட்ட பெரும் புரட்சியும், இங்கிலாந்திலும் அத்தகைய புரட்சி ஏற்படலாம் என்கிற அச்சமும்தான் அந்நாடுகளில் உள்ள பூர்ஷுவா வகுப்புக்கு அதிகாரத்தை அளித்தன. 1688-ல் ஏற்பட்ட புரட்சி காரணமாக இங்கிலாந்தில் பார்லிமெண்டு வெற்றி பெற்றது. ஆனால், பார்லிமெண்டு என்பதே ஒரு சிலருக்கு, அதிலும் முக்கியமாக நிலச்சுவான்தார்களுக்குப் பிரதிநிதித்துவம் வாய்ந்த ஒரு ஸ்தாபனமாக இருந்தது என்பதை நீ அறிவாய். நகரங்களிலுள்ள சில பெரிய வியாபாரிகள் அதில் அங்கம் வகித்திருக்கலாம். ஆனால், மொத்தமாகப் பார்க்கு மிடத்து, வியாபார வகுப்புக்கு—அதாவது, மத்திய வகுப்புக்கு—அக்காலப் பார்லிமெண்டில் இடமில்லை.

ஆகவே, அரசியல் அதிகாரம் நிலச்சுவான்தார்கள் கையில் இருந்தது. இங்கிலாந்திலும் இதே நிலைமைதான். மற்ற இடங்களில் இது இன்னும் அதிகம் என்றே சொல்ல வேண்டும். பூஸ்திதியானது அப்பனிடமிருந்து பிள்ளைக்கு, பிறகு அவனிடமிருந்து அவன் பிள்ளைக்கு என்று இப்படிப் பரம்பரையாகக் கிடைத்து வந்தது. இவ்வாறு அரசியல் அதிகாரமே ஒரு பரம்பரை பாத்தியதையாகப் போய்விட்டது. இங்கிலாந்திலிருந்த சட்டைப் பைத் தொகுதிகளைப் பற்றி நான் ஏற்கெனவே உனக்குக் கூறியிருக்கிறேன். அதாவது, ஒரு சில வாக்காளர்களை மட்டும் கொண்ட தொகுதிகள் பார்லிமெண்டுக்கு அங்கத்தினர்களை அனுப்பி வந்தன. அந்தச் சில வாக்காளர்களும் யாராவது ஒருவனுக்கு வசப்பட்டவர்களா யிருப்பார்கள். எனவே, அவ்விதமான ஒரு தொகுதி அவனுடைய சட்டைப் பையில் இருப்பதாகவே கருதப்

பட்டது. அத்தகைய தொகுதிகளில் தேர்தல் என்பது வெறும் கேலிக்கூத்தே யொழிய வேறில்லை. ஊழலும் பொய்யொழுக்கமும் மலிந்து கிடந்தன. பார்லிமெண்டு 'வோட்டு' களையும், ஸ்தானங்களையும் விற்பதுகூட உண்டு. முன்னுக்கு வந்துகொண் டிருக்கும் மத்திய வகுப்பைச் சேர்ந்த சில செல்வந்தர்கள் இந்த முறையில் ஒரு பார்லிமெண்டு ஸ்தானத்தை விலைக்கு வாங்குவார்கள். ஆனால், எவ்விதத்தும் பாமரர் பார்லிமெண்டை எட்டிப் பார்க்க முடியாது. விசேஷ உரிமைகளோ, அதிகாரமோ அவர்களுக்குப் பரம்பரையாகக் கிடைக்கவில்லை. அதிகாரத்தை விலை கொடுத்து வாங்குவதும் அவர்களால் இயலாத காரியம். பணநலமும் குலநலமும் படைத்தவர்கள் ஏழை எளியவர்களின் பிடரி மீது உட்கார்ந்து கொண்டு அவர்களைச் சுரண்டும்போது, அவர்கள், பாவம் என்ன செய்ய முடியும்? பார்லிமெண்டுக்கு உள்ளே அவர்களுக்குச் செல்வாக்கு இல்லை. பார்லிமெண்டுக்கு நடக்கும் தேர்தல்களிலும் அவர்களுக்குச் செல்வாக்கு இல்லை. வெளியே அவர்கள் ஆர்ப்பாட்டங்கள் நிகழ்த்தினாலும் அதிகாரிகள் சீறி எழுந்து அவற்றைப் பலாத்காரமாக அடக்கிப் போட்டார்கள். அவர்களிடத்தில் கட்டுப்பாடும் ஒற்றுமையும் இல்லை. அவர்கள் பலமற்றவர்களாகவும் கதியற்றவர்களாகவும் இருந்தார்கள். ஆனால், துன்பமும் தொல்லையும் பொறுக்கக் கூடிய எல்லையைக் கடந்த காலத்தில் அவர்கள் 'சட்டத்தையும் ஒழுங்கையும்' மறந்து கலகம் விளைத்தார்கள். 18-வது நூற்றாண்டில் சட்டத்துக்கு மீறிய செயல்கள் இங்கிலாந்தில் அளவுக்கு மீறி விளைந்தன. ஜனங்களின் பொதுவான செல்வநிலை மிகவும் மோசமாயிருந்தது. பெரிய நிலச்சுவான்தார்கள் சிறிய குடியானவர்களைப் பிழிந்தெடுத்துத் தங்களுடைய

எஸ்டேட்டுகளைப் பெருக்கிக் கொள்ள முயன்றார்கள். கிராமங்களுக்குச் சொந்தமான சமுதாய நிலங்களையும் அவர்கள் கவர்ந்து கொண்டார்கள். இவையெல்லாம் சேர்ந்து ஜனங்களின் அல்லலை அதிகரித்தன. அரசாங்கத்தில் தங்களுக்கு யாதொரு செல்வாக்கும் இல்லாதது கண்டு ஜனங்கள் ஆக்கிரகம் கொண்டார்கள். தங்களுக்கு இன்னதுதான் வேண்டும் என்பதை அவர்கள் தெளிவாக உணராவிட்டாலும், இப்போதுள்ள சுதந்திரம் போதாது, இன்னும் அதிகமான சுதந்திரம் வேண்டும் என்று அவர்கள் கேட்கத் தலைப்பட்டார்கள்.

பிரான்சில் நிலைமை இதைவிட மோசமாயிருந்தது. கடைசியாக, அது புரட்சியில் வந்து முடிந்தது. இங்கிலாந்தில் அரசன் அவ்வளவு முக்கிய ஸ்தானம் வகிக்கவில்லை. அங்கே, அதிகாரத்தைப் பலர் பகிர்ந்துகொண்டிருந்தார்கள். மேலும், அரசியல் கருத்துக்கள் பிரான்சில் வளர்ச்சி பெற்ற அளவுக்கு இங்கிலாந்தில் வளர்ச்சிபெறவில்லை. ஆகவே, இங்கிலாந்து ஒரு பெரிய பிரளயத்தினின்று தப்பித்துக் கொண்டது. அங்கே மாறுதல்கள் மெள்ள மெள்ள நிகழ்ந்து வந்தன. யந்திரத் தொழிலால் விளைந்த மாறுதல்களும், புதிய பொருளியல் அமைப்பும் சேர்ந்து அதன் வேகத்தை அதிகரித்து வந்தன.

18-வது நூற்றாண்டில் இங்கிலாந்தின் அரசியல்நிலை மேற்கூறியவாறு இருந்தது. வெளி நாட்டுக் கைவினைஞர் இங்கிலாந்தில் வந்து குடி புகுந்ததால் இங்கிலாந்தின் உள்நாட்டுக் கைத்தொழில்கள் விருத்தியாயின. ஐரோப்பாக் கண்டத்தில் நிகழ்ந்த மதப் போர்களின் காரணமாகப் பல பிராடெஸ்டண்டுகள் தங்கள் நாடுகளைத் துறந்து இங்கிலாந்தில் வந்து தஞ்சம் புகுந்தார்கள். நெதர்லாந்தில் (தாழ் நாடுகள்) ஏற்பட்ட கலகத்தை ஸ்பானியர் அடக்க முயன்று வந்தபோது

ஏராளமான கைவினைஞர் அங்கிருந்து இங்கிலாந்துக்கு ஓடிவந்து விட்டார்கள். அவர்களில் 30,000 பேர் இங்கிலாந்தின் கீழ்க்கரையில் குடியேறினார்கள். அவர்கள் குடியேறுவதற்கு எலிசபெத் ராணி ஒரு நிபந்தனை விதித்தாளாம். ஒவ்வொரு குடும்பமும் ஒரு ஆங்கிலேயனுக்குத் தனக்குத் தெரிந்த தொழிலைக் கற்றுக் கொடுக்கவேண்டுமென்பதுதான் அந்நிபந்தனை. இதனால் இங்கிலாந்தில் நெசவுத் தொழில் நிலைபெற்றது. இதற்குப் பிறகு, நெதர்லாந்திலிருந்து இங்கிலாந்துக்கு ஆடைகள் வருவதை ஆங்கிலேயர் தடுத்து விட்டார்கள். இதற்கிடையில் நெதர்லாந்தின் சுதந்திரப் போராட்டம் மிக மும்முரமாக நடந்துகொண்டிருந்தது. அதனால், நெதர்லாந்தின் கைத்தொழில்கள் க்ஷீணித்து வந்தன. இதற்கு முன்பெல்லாம் நெதர்லாந்திலிருந்து எண்ணற்ற மரக்கலங்கள் ஆடைகளைச் சுமந்து கொண்டு இங்கிலாந்துக்கு வருவது வழக்கம். இப்போதோ, அது நின்றுவிட்டதோடல்லாமல் அதற்கு மாறாக இங்கிலாந்திலிருந்து நெதர்லாந்துக்கு ஆடைகள் செல்ல ஆரம்பித்தன. இவ்வியாபாரம் நாளுக்கு நாள் பெருகி வந்தது.

இவ்வாறு, பெல்ஜியத்திலிருந்து வந்த 'வலூனியர்' ஆங்கிலேயருக்கு ஆடைநெய்யக் கற்றுக்கொடுத்தார்கள். அவர்களுக்குப் பின் வந்த 'ஹியூக்நாட்டுகள்'—அதாவது, பிரான்சிலிருந்து வந்து இங்கிலாந்தில் அடைக்கலம் புகுந்த பிராடெஸ்டண்டுகள்—அவர்களுக்குப் பட்டு நெய்யக் கற்றுக்கொடுத்தார்கள். 17-வது நூற்றாண்டின் பிற்பாதியில் எண்ணற்ற கைவினைஞர் ஐரோப்பாக் கண்டத்திலிருந்து இங்கிலாந்துக்கு வந்து சேர்ந்தார்கள். அவர்களிடமிருந்து ஆங்கிலேயர் காகிதம் செய்தல், கண்ணாடி செய்தல், யந்திர விசையுள்ள விளையாட்டுச்

சாமான்கள் செய்தல், கடிகாரங்களும் கைக் கடிகாரங்
களும் செய்தல் முதலிய பல தொழில்களைக் கற்றுக்
கொண்டார்கள்.

ஆக, இதுவரை ஐரோப்பாவில் பின்னணியில் இருந்து
வந்த இங்கிலாந்து தேசம் இப்போது சீரிலும் செல்வத்
திலும் சிறந்து விளங்கியது. லண்டன் நகரமும் ஒரு
சிறந்த துறைமுகமாக வளர்ந்து சிறந்தது. அங்குப்
பல வியாபாரிகள் வாழ்ந்து வந்தனர். அவர்களுடைய
வியாபாரம் நாளுக்கு நாள் பெருகியது. லண்டன் நகரம்
17-வது நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே பிராபலிய
மடைந்து, முக்கியத் துறைமுகமாகவும் வியாபார ஸ்தல
மாகவும் விளங்கியது என்பதைக் காட்டக்கூடிய ஒரு
ரசமான கதை உண்டு. முதலாவது ஜேம்ஸ் இங்கி
லாந்தின் அரசனாக இருந்தான். அவனுடைய குமாரன்
தான் தலையறுப்புண்ட முதலாவது சார்லஸ். அரசரின்
யதேச்சாதிகாரத்திலும், தெய்வீக உரிமைக் கொள்கை
யிலும் அதிக நம்பிக்கை உடையவன் ஜேம்ஸ். அவ
னுக்குப் பார்லிமெண்டு என்றால் வேப்பங்காய் மாதிரி.
லண்டன் வியாபாரிகள் நடுவாந்தரத்தில் வாழ்வு பெற்ற
அற்பர்கள் என்பது அவனுடைய எண்ணம். அவன்
அவர்களை வெறுத்தான். ஒரு முறை, அவன் கோபாக்
கிராந்தனாய்த் தன்னுடைய தர்பாரை லண்டனிலிருந்து
ஆக்ஸ்போர்டுக்கு மாற்றி விடுவதாக லண்டன் நகர
மாந்தரைப் பயமுறுத்தினான். அவனுடைய உருட்டல்
மிரட்டலுக்கு லண்டனின் லார்டு மேயர் அசைந்து
கொடுக்கவில்லை. "மாட்சிமை தங்கிய மன்னர் பிரான்
கருணை கூர்ந்து தேம்ஸ் நதியை எங்களுக்கு விட்டு விட்டுத்
தாம் வேறெங்காவது சென்று விடுவார் என்று நாங்கள்
நம்புகிறோம்" என்று அவர் மறுமொழி பகர்ந்தாராம்.

லண்டனில் வாழ்ந்து வந்த இப் பணக்கார வியாபார

வகுப்புதான் முதலாவது சார்லசுடன் பார்லிமெண்டுக்கு
நேர்ந்த போராட்டத்தில் பார்லிமெண்டுக்குப் பக்க
பலமாக நின்று அதற்கு ஏராளமான பொருளுதவி
யையும் அளித்தது.

அக்காலத்தில் இங்கிலாந்தில் வளர்ந்த கைத்
தொழில்களெல்லாம் குடிசைத் தொழில்களேயாகும்.
அதாவது, அத்தொழில்களில் ஈடுபட்டிருந்தவர்கள்
தங்கள் வீடுகளிலோ அல்லது சிறுசிறு கூட்டங்
களாகவோ வேலை செய்து வந்தார்கள். ஒவ்வொரு
தொழிலுக்கும் அதைச் சேர்ந்த தொழிற் சங்கம்
இருந்தது. அவற்றை இந்தியாவில் தோன்றிய ஜாதிக
ளோடு ஒப்பிடலாம். ஆனால், ஜாதிகளில் உள்ள மத
சம்பந்தமான அம்சம் அவற்றில் இல்லை. ஒரு தொழிலில்
வல்லவன் தன்கீழ் உள்ள சீடர்களுக்கு அத்தொழிலைக்
கற்பித்து வந்தான். நெய்வோருக்குச் சொந்தமாகத்
தறிகளும், நூற்போருக்குச் சொந்தமாக ராட்டைகளும்
இருந்தன. இங்கிலாந்தில் நூற்கும் தொழில் நன்கு
பரவி யிருந்தது. மாதரும் சிறு பெண்களும் ஒழிந்த
நேரத்தில் நூல்நூற்று வந்தார்கள். சிறுசிறு தொழிற்
சாலைகளும் இருந்தன. அங்கே பலர், ஒன்று கூடித்
தங்கள் தறிகளில் நெய்துவந்தார்கள். ஒவ்வொருவனும்
தன்தன் தறியில் நெய்து வந்தான். ஆகவே, அவன்
வீட்டில் தனியாக வேலைசெய்வதற்கும் ஓரிடத்தில்
பிறரோடு கூடி வேலை செய்வதற்கும் உண்மையில்
யாதொரு வித்தியாசமும் இல்லாதிருந்தது. அக்
காலத்தில் இருந்த சிறிய தொழிற்சாலைகளுக்கும் தற்
காலத்தில் உள்ள பெரிய யந்திரத் தொழிற்சாலை
களுக்கும் ஒப்பு என்பது ஒரு சிறிதும் இல்லை.

அக்காலத்தில், குடிசைக் கைத்தொழில் இங்கி
லாந்தில் மட்டுமின்றி உலகெங்குமே—கைத்தொழில்

இருந்த நாடுகளில் எல்லாம்—நல்ல நிலைமையில் இருந்தது. இந்தியாவில் குடிசைக் கைத்தொழில் மகோன்னத நிலையில் இருந்தது. இன்று இங்கிலாந்தில் குடிசைத் தொழில்கள் அடியோடு மறைந்துவிட்டன. ஆனால், இந்தியாவிலோ இன்னும் பல குடிசைத் தொழில்கள் உயிரோடு இருக்கின்றன. இந்தியாவில் யந்திரமும் கைத் தறியும் ஒன்றின் பக்கல் ஒன்று இருந்து வருகின்றன. இரண்டுக்கு முள்ள ஒற்றுமை வேற்றுமைகளை நீ ஆராய்ந்து பார்க்கலாம். நாமெல்லோரும் உடுத்துவது கதர். இது உனக்கு நன்ருகத் தெரியும். கையினால் நூற்ற நூலைக் கொண்டு கைத்தறியால் நெய்யப்பட்ட ஆடையே கதராகும். ஆகவே, கதராடையானது ஆதியிலிருந்து அந்தம் வரையில் இந்தியாவின் மண் குடிசைகளில் வாழும் ஏழை மக்களின் பொன்கையினால் செய்யப்பட்ட ஆடையாகும.

புதிய யந்திர சாதனங்கள் கண்டு பிடிக்கப்பட்டதன் காரணமாக இங்கிலாந்தில் குடிசைத் தொழில்களின் நிலையில் பெரிய மாறுதல் ஏற்பட்டது. மனிதன் செய்து வந்த வேலையை வரவர அதிகமாக யந்திரங்கள் செய்ய ஆரம்பித்தன. யந்திரங்களின் துணைகொண்டு, குறைந்த முயற்சியில் மிகுந்த உற்பத்தி செய்வது சாத்தியமாயிற்று. இந் நூதன முறைகள் 18-வது நூற்றுண்டின் இடைப் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்டன. அவற்றைப் பற்றி அடுத்த கடிதத்தில் பேசுவோம்.

மேலே, கதர் இயக்கத்தைப் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிட்டேன். இங்கே அதைப் பற்றி அதிகமாகச் சொல்ல நான் விரும்பவில்லை. ஆனால், கதர் இயக்கமும் ராட்டினமும் பெரிய யந்திரத்துக்குப் போட்டியாக ஏற்படுத்தப்படவில்லை என்பதை மட்டும் நான் உனக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன். பலர் இத்தகைய தப்

பெண்ணம் கொண்டிருக்கிருர்கள். 'ராட்டினம்' என்ருல் இடைக்காலத்துக்குத் திரும்பிச் செல்வ தென்றும், யந்திரமும் யந்திரத் தொழிலும் உலகுக்கு அளித்துள்ளவற்றை யெல்லாம் கழித்து நீக்குவ தென்றும் அவர்கள் அர்த்தம் பண்ணுகிருர்கள். அதெல்லாம சுத்தத் தப்பு. நமது இயக்கம் யந்திரத் தொழிலுக்கோ, யந்திரத் தொழிற்சாலைகளுக்கோ விரோதமானதல்ல என்பது தெளிவு. உலகில் என் னென்ன உண்டோ அவை அனைத்தின் சாரத்தையும் இந்தியா அடையவேண்டும். அதுவும் அதிவிரைவில் அடையவேண்டும் என்பதுதான் நமது அவா. ஆனால், நமது நாட்டின் தற்கால நிலைமைகளை, முக்கியமாக நமது நாட்டுக் குடியானவர்களை வருத்தும் கொடிய வறுமையை நாம் மறந்துவிடுவதற்கில்லை. ஆகவே, அவர்கள் ஒழிந்த வேளையில் நூல் நூற்கவேண்டும் என்று நாம் வற்புறுத்துகிறோம். அதனால் அவர்களுடைய கஷ்டமும் சிறிதுகுறைகிறது; அத்துடன் நமது நாட்டுச் செல் வத்தைக் கொள்ளைகொண்டு செல்லும் அந்நியத்துணியை நம்பியிருக்க வேண்டிய அவசியமும் குறைகிறது.

98

இங்கிலாந்தில் யந்திரத் தொழிற்புரட்சி ஆரம்பமாகிறது

செப்டம்பர் 27, 1932.

உற்பத்தி முறைகளில் பெருத்த மாறுதலை விளைத்த சில யந்திரப் புதுமைகளைப் பற்றி இப்போது நான் உனக்குக் கூறவேண்டும். ஒரு ஆலையிலோ, தொழிற்சாலையிலோ அவற்றை நாம் இப்போது காணும்போது அவை மிகவும் சாதாரணமாகவே தென்படுகின்றன. ஆனால், அவற்றை முதன்முதலாக மனதில் எண்ணிப் புதிதாகக் கண்டுபிடிப்ப தென்பது மிகவும் கஷ்டமான காரியம். 1738-ல் முதல் யந்திரப் புதுமை கண்டுபிடிக்கப்பட்டது. அதற்கு 'விசை நாடா' (Flying-shuttle) என்று பெயர். 'கே' என்பவன் அதைக் கண்டுபிடித்தான். ஆடை நெய்வதற்கு அது பயன்பட்டது. அதைக் கண்டுபிடிப்பதற்கு முன்னால், நெசவாளி தன் கையிலிருக்கும் நாடா நூலைப் பாவுக்கு (நீளநூல்) ஊடே மெள்ளமாகக் கோத்து வாங்கவேண்டி யிருந்தது. இந்த வேலையை விசை நாடா விரைவாகச் செய்தது. அதனால் நெசவாளியின் உற்பத்தி இரு மடங்காயிற்று. அதாவது அவனுக்கு முன்னைவிட அதிக நூல் வேண்டியிருந்தது. நூற்பவர்கள் இந்த அதிகப்படியான நூலை நூற்றுக்கொடுப்பதற்கு அதிகக் கஷ்டப்பட வேண்டியதாயிற்று. அவர்கள் பார்த்தார்கள்; தங்களுடைய உற்பத்தியைப் பெருக்குவதற்கு அவர்களும் ஒரு வழி காண முயன்றார்கள். ஹார்கிரீவ்ஸ் என்பவன் 1764-ல் நூற்கும் ஜென்னி (Spinning Jenny) என்னும் ஒரு யந்திரத்தைக் கண்டுபிடித்து

அந்தப் பிரச்சினையை ஒருவாறு தீர்த்தான். அதற்குப் பிறகு ரிச்சர்டு ஆர்க்ரைட் என்பவனும் பிறரும் வேறு புதுமைகளைக் கண்டுபிடித்தார்கள். நீர்ச் சக்தியும் நீராவிச் சக்தியும் உபயோகத்துக்கு வந்தன. இப் புது முறைகள் எல்லாம் முதலில் பஞ்சுத் தொழிலில் பிரயோகிக்கப்பட்டன. தொழிற்சாலைகளும் பஞ்சாலைகளும் தோன்றிப் பெருகின. அடுத்தபடியாகக் கம்பளித் தொழிலில் இப் புதுமுறைகள் கையாளப்பட்டன.

இதற்கிடையில், 1765-ம் ஆண்டில் ஜேம்ஸ் வாட் என்பவன் நீராவியந்திரம் (Steam-Engine) செய்தான். இது ஒரு பெரிய நிகழ்ச்சியாகும். இதிலிருந்து தொழிற்சாலை உற்பத்திக்கு நீராவி பயன்படலாயிற்று. புதிய தொழிற்சாலைகளுக்கு நிலக்கரி தேவையாயிருந்தது. அதனால் நில்க்கரித் தொழில் விருத்தியாயிற்று. நிலக்கரியின் உபயோகத்தினால் இரும்பை உருக்குவதில், அதாவது, இரும்பு கலந்த உலோக தாதுவை உருக்கி அதனின்றும் அசல் இரும்பைப் பிரித்தெடுப்பதில், புது முறைகள் தோன்றலாயின. அதிலிருந்து இரும்புத் தொழில் துரிதமாக வளர்ச்சி அடைந்தது. நிலக்கரி வயல்களுக்கு அருகில் புதிய தொழிற்சாலைகள் கட்டப்பட்டன. ஏனெனில், அங்கே நிலக்கரி மலிவாகக் கிடைக்குமல்லவா?

இவ்வாறு, இங்கிலாந்தில் பஞ்சு, இரும்பு, நிலக்கரி ஆகிய மூன்று பெரிய தொழில்கள் வளர்ந்தோங்கின. நிலக்கரி கிடைக்கக்கூடிய பிரதேசங்களிலும், வேறு தகுந்த இடங்களிலும் தொழிற்சாலைகள் தோன்றின. இப்போது இங்கிலாந்தின் தோற்றமே மாறிவிட்டது. பசும்போர்வை போர்த்துப் புன்னகை பூத்துக் குலுங்கும் நாட்டுப்புறங்களில், இப்போது பல இடங்களில், இப் புதிய தொழிற்சாலைகள் தோன்றிவிட்டன. அவற்றின்

நீண்ட புகைபோக்கிகளி லிருந்து வெளிப்படும் புகையானது அக்கம்பக்கத்தை யெல்லாம் கரியாக்கியது. அத் தொழிற் சாலைகள் பார்ப்பதற்கு அழகாயில்லை. அவற்றைச் சுற்றிலும் நிலக்கரியும் கழிவுப் பொருள்களும் மலைமலையாகக் குவிந்து கிடந்தன. அத் தொழிற் சாலைகளைச் சுற்றித் தோன்றிய புதிய பொருளுற்பத்திப் பட்டணங்களும் பார்வைக்கு அழகாயில்லை. ஒரு வரையறையின்றி அவை நிருமாணிக்கப்பட்டன. பணம் பண்ணுவது ஒன்றுதான் முதலாளிகளின் நோக்கமாயிருந்தது. அப்பட்டணங்கள் அழுக்குப் படிந்தும் விகாரமாகவும், பெரியவையாகவும் இருந்தன. இத்தனையையும் சகித்துக்கொண்டு தொழிலாளிகள் அங்கு வாழவேண்டி யிருந்தது. தொழிற்சாலைகளின் பொறுக்க முடியாத அநாரோக்கியமான நிலைமை வேறு. இவ்வளவையும் அநுபவித்துக்கொண் டிருந்த தொழிலாளிகளுக்கு வயிறு நிறைய உணவு கிடைத்ததா என்று பார்த்தால் அதுதான் இல்லை. அவர்கள் பசியும் பட்டினியுமா யிருந்தார்கள்.

பெரிய நிலச்சுவான்தார்கள் சிறிய குடியானவர்களை நெருக்கித் தள்ளினார்கள் என்றும், அதனால் வேலையின்மை பெருகிக் கலகங்கள் விளைந்தன என்றும் நான் முன்பு கூறியது உனக்கு நினைவிருக்கலாம். ஆரம்பத்தில், புதிய கைத்தொழில்களால் இந்த நிலைமை இன்னும் மோசமாயிற்று. விவசாயம் குறைந்து வேலையின்மை பெருகியது. புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட ஒவ்வொரு புது முறையும் மனிதன் செய்யவேண்டிய வேலையை யந்திர உபாயத்தைக்கொண்டு செய்வதில் வந்து முடிந்தது. அதனால், தொழிலாளிகள் அடிக்கடி வேலையிலிருந்து தள்ளப்பட்டார்கள். இது அவர்களுக்குள் பெரிய மனக் கொதிப்பை உண்டுபண்ணியது. அவர்

களில் பலர் புதிய யந்திரங்களை வெறுக்கத் தொடங்கினார்கள்; சிலர் அவற்றை உடைக்கவும் ஆரம்பித்தார்கள். அவர்கள் யந்திர-நாசகாரர் என்று அழைக்கப்பட்டார்கள்.

ஐரோப்பாவில் இந்த யந்திரநாசத்தின் கதை மிகவும் பழைமையானது. 16-வது நூற்றாண்டில், ஜெர்மனியில், ஒரு சாதாரண யந்திரத் தறி கண்டுபிடிக்கப்பட்டது. அக்காலத்திலிருந்தே நாச வேலையும் ஆரம்பித்து விட்டது. 1579-ல் ஒரு இதாலிய மத போதகர் எழுதிய ஒரு பழைய புஸ்தகத்தில், இத்தறியைப் பற்றிப் பின் வருமாறு பிரஸ்தாபிக்கப்பட் டிருக்கிறது. "இப் புதிய யந்திரத்தினால் எண்ணற்ற தொழிலாளர்கள் வேலையை இழக்கநேரிடும் என்று அஞ்சிய டான்சிக் நகரசபையானது அதை நாசம் செய்ததோடு அதைக் கண்டுபிடித்தவனையும் யாரும் அறியாதபடி கழுத்தை நெரித்தோ அல்லது நீரில் அமிழ்த்தியோ கொல்வித்தது!" யந்திரத்தைக் கண்டுபிடித்தவன் இவ்வாறு பைசல் செய்யப்பட்டாலும் 17-வது நூற்றாண்டில் மீண்டும் அந்த யந்திரம் தோன்றியது. அது காரணமாக ஐரோப்பா வெங்கும் கலகங்கள் நிகழ்ந்தன. அதை உபயோகிக்கக் கூடாதென்று பல இடங்களில் சட்டங்கள் செய்யப்பட்டன; அது பகிரங்கமாகக் கடைத்தெருக்களில் எரிக்கவும்பட்டது. இவ் யந்திரம் முதன் முதல் கண்டுபிடிக்கப் பட்டபோதே உபயோகத்துக்கு வந்திருந்தால் அதையடுத்து வேறுபல நூதனங்களும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கலாம்; யந்திர சகாப்தமும் இன்னும் முன்பே தோன்றியிருக்கலாம். ஆனால், அது அப்போது உபயோகத்துக்கு வராதது ஒன்றே அதற்குரிய பரிபக்குவ நிலை அப்போது ஏற்படவில்லை என்பதைக் காட்டுகிறது. அந்தப் பரிபக்குவ நிலை ஏற்

பட்ட காலத்தில், இங்கிலாந்தில் விளைந்த எண்ணற்ற கலகங்களையும் மீறி, அங்கே யந்திரம் நிலைபெற்று விட்டது. யந்திரத்தைக் கண்டு தொழிலாளர் ஆத்திரங் கொள்வது இயற்கையே. ஆனால், சிறிது சிறிதாக அவர்கள், தப்பு யந்திரத்தினுடையதல்ல, ஒரு சிலருடைய லாபத்துக்காக அதை உபயோகிக்கும் முறையில் தான் தப்பு இருக்கிறது என்னும் உண்மையைத் தெரிந்து கொண்டார்கள். இனி, இங்கிலாந்தில் யந்திரமும் தொழிற்சாலைகளும் வளர்ந்த கதைக்கு நாம் திரும்பிச் செல்வோமாக.

புதிய தொழிற்சாலைகள் பல குடிசைக் கைத்தொழில்களையும் அவற்றில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களையும் வாயில் போட்டுக்கொண்டன. அவர்களுக்கு யந்திரத்துடன் போட்டியிடுவது சாத்தியமில்லை. ஆகவே, அவர்கள் தங்களுடைய பழைமையான கைத்தொழில்களை விட்டு விட்டுத் தாங்கள் வெறுத்த தொழிற்சாலைகளிலேயே கூலிக்கு வேலைசெய்ய வேண்டியதாயிற்று; அல்லது, வேலையில்லாதார் கூட்டத்தைச் சேரவேண்டியதாயிற்று. குடிசைக் கைத்தொழில்கள் திடீரென்று அழிந்துவிடவில்லை; ஆனால், விரைவில் அழிந்துவிட்டன என்றே கூறவேண்டும். அந்த நூற்றாண்டு முடிவில், அதாவது, 1800-ம் ஆண்டு வாக்கில், எங்கே பார்த்தாலும் பெரிய தொழிற்சாலைகள் காட்சி அளித்தன. அதற்கு முப்பதாண்டுகளுக்குப்பின், இங்கிலாந்தில், ஸ்டீபன்சன் என்பவர் தம்முடைய புகழ்பெற்ற 'ராக்கெட்' (Rocket-ஆகாசவாணம்) என்னும் நீராவி எஞ்சினைக் கண்டுபிடித்தார். அதுமுதல் ரயில்வண்டித் தொடர்கள் ஏற்படலாயின. ஆக, தேசமெங்கும், கைத்தொழில் துறைகள், வாழ்க்கைத் துறைகள் யாவற்றிலும் யந்திரம் அபிவிருத்தி அடைந்துகொண்டே சென்றது.

இந்நூதன யந்திரங்களைக் கண்டுபிடித்தவர்களில் பலருடைய பெயரை நான் உனக்குக் கூறவில்லை. அவர்கள் அனைவரும் சரீரப் பாடுபட்டு உழைக்கும் தொழிலாளர் வகுப்பிலிருந்தே தோன்றியவர்கள் என்பதை அறிய நாம் ஆச்சரியப்படுகிறோம். ஆரம்ப காலத்தில், இந்த வகுப்பிலிருந்துதான் யந்திரத் தொழில் தலைவர்களும் தோன்றினார்கள். ஆனால், அவர்களுடைய நூதன சிருஷ்டிகளின் பயனாகவும், அதற்குப்பின் தோன்றிய தொழிற்சாலை முறையின் பயனாகவும், முதலாளிக்கும் தொழிலாளிக்குமிடையே இருந்த வித்தியாசம் இன்னும் அதிகமாயிற்று. தொழிற்சாலையில் வேலைசெய்யும் தொழிலாளி அங்குள்ள யந்திர சக்கரத்தின் ஒரு பல்லாக மாறிவிட்டான். பெரிய பொருளியல் சக்திகளின் கையில் அவன் நிராதரவாகக் கிடந்து தவித்தான். அவற்றை அவன் அர்த்தம்செய்து கொள்வது கூடக் கடினம் என்றால் அவற்றை அவன் அடக்கி ஆள்வது எங்ஙனம்? புதிய தொழிற்சாலை தங்களுடன் போட்டியிடுகிறது, தங்களைவிட மலிவாக அது பொருள்களைச் செய்து விற்கிறது, அவ்வளவு மலிவாகத் தங்களால், தங்களுடைய வீடுகளில், தங்களுடைய எளிய கர்நாடகக் கருவிகளைக் கொண்டு ஒருபோதும் பொருள்களை உற்பத்தி செய்யமுடியாது என்பதைக் கண்டுகொண்டதும் கைத்தொழில் வல்லுநர் எங்கோ, ஏதோ பிசகு இருக்கிறது என்று ஒருவாறு உணர ஆரம்பித்தார்கள். அவர்கள் தங்களுடைய சிறிய பட்டறைகளை மூடவேண்டியதாயிற்று. இந்தத் துர்க்கதிக்கு ஆளாவதற்கு அவர்கள் யாதொரு குற்றமும் செய்யவில்லை. தங்களுடைய பரம்பரைத் தொழிலையே செய்வதற்கு வழியில்லாத போது புதிய தொழில்களில் அவர்கள் வெற்றி பெறுவது எங்ஙனம்? ஆகவே, பாவம், அவர்கள்

வேலையில்லாதார் கூட்டத்தைச் சேர்ந்து பட்டினிகிடக்க ஆரம்பித்தார்கள். பசி என்பது, தொழிற்சாலை முதலாளிகளுக்கு ஆள் சேர்த்துக் கொடுக்கும் 'கங்காணி' என்று சொல்லப்படுகிறது. கடைசியாகப் பசிதான் அவர்களை வேலையை நாடித் தொழிற்சாலைகளுக்கு ஓடுமாறு செய்தது. ஈவிரக்கமற்ற முதலாளிகள் அவர்களிடம் தயவு தாட்சணியம் காட்டவில்லை. வேலையில்லாதவர்களுக்கு அவர்கள் வேலை கொடுத்தார்கள். ஆனால், அவர்கள் கொடுத்த கூலி எவ்வளவு ? மிகவும் சொற்பம். அந்தச் சொற்பக் கூலிக்காக ஏழைத் தொழிலாளர்கள் ரத்த வியர்வை சொட்டச் சொட்ட நாள் முழுதும் பாடுபடவேண்டியிருந்தது. அபலை ஸ்திரீகளும், சின்னஞ்சிறு குழந்தைகளும், மூச்சைத் திணறச்செய்யும் அநாரோக்கியமான இடங்களில் நெடுநேரம் தங்கள் உடலைச் சாறு பிழிந்து உழைத்தார்கள். அவர்களில் பலர் களைப்பு மேலீட்டால் மூர்ச்சை போட்டும் வீழ்ந்து விட்டார்கள். ஆண்கள், பூமியின் கீழுள்ள நிலக்கரிச் சுரங்கங்களில் நாள் முழுதும் மாடுபோல் உழைத்தார்கள். சிலவேளைகளில் அவர்கள் மாதக் கணக்காகக் கூடச் சூரிய வெளிச்சத்தைப் பாராமல் இருப்பதுண்டு.

இதற்கெல்லாம் முதலாளிகள் கொடுமைக் குணம் தான் காரணம் என்று நீ நினைத்துவிடக் கூடாது. அவர்கள் வேண்டுமென்று கொடுமை காட்டவில்லை. குற்றம் அம்முறையினுடையதாகும். முதலாளிகள் தங்களுடைய வியாபாரத்தை வளர்ப்பதில் முனைந்திருந்தார்கள். பிற நாட்டாருடைய போட்டியிலிருந்து தூர தேசத்து மார்க்கெட்டுகளையெல்லாம் அவர்கள் ஜெயிக்க வேண்டியவர்களாயிருந்தார்கள். அதற்காக அவர்கள் எதையும் செய்யத் தயாராயிருந்தார்கள். புதிய தொழிற்சாலைகளைக் கட்டுவதற்கும், புதிதாக யந்திரம்

வாங்குவதற்கும் நிறையப் பணம் வேண்டியிருந்தது. முதலில், தொழிற்சாலைகள் உற்பத்தி செய்யத் தொடங்க வேண்டும். பிறகு, உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் மார்க்கெட்டில் விற்பனையாக வேண்டும். அதற்கப்புறந்தானே போட்ட பணம் திரும்பி வரும் ? ஆகவே அத்தொழிற்சாலை முதலாளிகள் வியாபாரத்தை ஸ்திரப்படுத்துவதற்குச் சிக்கனத்தைக் கையாண்டார்கள். அவர்களுடைய சரக்கு விற்பனையாகிப் பணம் அவர்களுடைய கைக்கு வந்த பிறகும் அவர்கள் மேலும் மேலும் தொழிற்சாலைகளைக் கட்டிக் கொண்டே போனார்கள். எல்லாருக்கும் முன்பு அவர்கள் தங்களுடைய தொழில்களை யந்திர மயமாக்கிக் கொண்டு விட்டதால், வியாபாரத்தில் அவர்கள் மற்ற நாடுகளை முந்திக்கொண்டு விட்டார்கள். அதைப் பயன்படுத்திக் கொண்டு அவர்கள் லாபமடைய விரும்பினார்கள் ; லாபமடையவும் செய்தார்கள். ஆகவே வியாபாரத்தைப் பெருக்கவேண்டும், பணத்தைக் குவிக்க வேண்டும் என்கிற வெறியில் அவர்கள் தங்களுடைய செல்வ உற்பத்திக்கு மூலாதாரமான ஏழைத் தொழிலாளர்களைக் கசக்கிப் பிழிந்து வந்தார்கள்.

இவ்வாறு புதிய யந்திரத்தொழில் முறை வலியவன் எளியவனைச் சுரண்டுவதற்கு ஏற்ற வகையில் அமைந்திருந்தது. சரித்திரம் முழுதும் வலியோர் எளியோரை வாட்டிப் பிழைப்பதை நாம் பார்த்து வருகிறோம். தொழிற்சாலை முறை இதை இன்னும் எளிதாகச் செய்து விட்டது. சட்டபூர்வமான அடிமைத்தனம் ஒழிந்து விட்டது. ஆனால், பட்டினி காரணமாகத் தொழிற்சாலையில் வேலைசெய்யும் கூலி-அடிமைக்கும் பழைய அடிமைக்கும் உண்மையில் அதிக வித்தியாசம் இல்லை. சட்டமோ முழுதும் முதலாளிக்குத் துணைபுரிவதாயிருந்தது. மதம்

கூட அவனுக்குத்தான் துணையாக நின்றது. அது ஏழைகளைப் பார்த்து, இகத்தில் கஷ்டங்களைச் சகித்துக் கொண்டால் பரத்தில் சகல சௌபாக்கியங்களும் கிட்டும் என்று உபதேசம் செய்தது. ஆளும் வகுப்பார் தங்களுக்கு மிகவும் சாதகமான ஒரு தத்துவத்தைப் பிரசாரம் செய்யத் தொடங்கினார்கள். 'சமூகத்துக்கு ஏழைகள் இன்றியமையாதவர்கள்; ஏழைகள் இருக்க வேண்டுமாயின் குறைந்த கூலி கொடுக்க வேண்டும். ஆகவே, குறைந்த கூலி கொடுப்பதுதான் தருமமான செய்கையாகும். மிகுந்த கூலி கொடுத்தால் ஏழைகள் கஷ்டப்பட்டு வேலை செய்யாமல் காற்று வாங்கப் பார்ப்பார்கள்' என்று அவர்கள் சொன்னார்கள். இத்தகைய தத்துவோபதேசம் அவர்களுடைய மனச்சாட்சிக்கு ஆறுதல் அளிப்பதாகவும் அதே சமயத்தில் பயனுள்ளதாகவும் இருந்தது. ஏனெனில், பணக்காரர்கள், தொழிற்சாலை முதலாளிகள் ஆகியோருடைய நலத்துக்கு அது மிகவும் இசைந்ததாயிருந்தது.

அக்கால வரலாற்றைப் படிப்பது சுவையும் பயனும் தருவதாகும். அதிலிருந்து நாம் எவ்வளவோ அறிந்து கொள்ளலாம். பொருளியல் துறையிலும் சமூகத்துறையிலும் யந்திர உற்பத்தி முறைகளால் விளையும் பிரபாவத்தை நாம் காண முடிகிறது. சமூக அமைப்பு முழுதும் குலைவுறுகிறது; புதிய வகுப்புகள் முன்னுக்கு வந்து அதிகாரத்தை அடைகின்றன; இதற்குமுன் கைத்தொழிலில் ஈடுபட்டிருந்த வகுப்பு இப்போது தொழிற்சாலைகளில் கூலிக்கு வேலை செய்யும் வகுப்பாக மாறுகிறது. புதிய பொருளியலானது சமயத் துறையிலும் தரும நியாயத்துறையிலும் கூட மக்களின் கொள்கைகளை உருவாக்குகிறது. அவர்களுடைய கொள்கைகள் தங்க தங்கள் வகுப்பு நலன் அல்லது உணர்ச்சிக்கு ஏல்

முறையில் அமைகின்றன. தங்களுக்கு அதிகாரம் கிடைக்கும் போது, தங்களுடைய சொந்த நலன்களைப் பாதுகாக்கும்படியான சட்டங்களை இயற்றுவதற்கு அவர்கள் தவறுவதில்லை. ஆனால், தருமத்தை நிலைநிறுத்தவே அத்தகைய சட்டங்கள் இயற்றுவதாகவும், அவை ஜன சமுதாயம் முழுவதற்கும் நன்மை செய்வதையே நோக்கமாகக்கொண்டிருக்கின்றன என்றும் அவர்கள் மேலுக்கு வேஷம் போடுகிறார்கள். இந்தியாவில் பிரிட்டிஷ் ராஜப்பிரதிநிதிகளும் இதர உத்தியோகஸ்தர்களும் நம்மிடம் மனமுருகிக் கூறும் நன்மொழிகளுக்கு அளவில்லை. இந்தியாவின் நன்மைக்காக அவர்கள் எவ்வாறு இரவும் பகலும் பாடுபடுகிறார்கள் என்பதை அவர்கள் நமக்கு இடைவிடாமல் எடுத்துரைக்கிறார்கள். இதற்கிடையில், அவர்கள் நம்மை அவசரச் சட்டங்களின் துணைகொண்டும், துப்பாக்கிச் சனியன்களின் துணைகொண்டும் ஆண்டு வருகிறார்கள். நமது ஜனங்களின் இரத்தத்தைப் பிழிந்து எடுத்துவிடுகிறார்கள். நமது ஜமீன்தார்கள் தங்கள் குடிகள்பால் தங்களுக்குள்ள அன்பைப் பற்றி வாய்ப்பந்தல் இடுகிறார்கள். ஆனால், அக்குடிகள் மீது தாங்க முடியாத வரி விதித்து அதை அவர்களிடமிருந்து கசக்கிப் பிழிவதற்கு அவர்கள் ஒரு சிறிதும் தயங்குவதில்லை. கடைசியில் ஜமீன் குடிகளுக்கு மிஞ்சுவதெல்லாம் பட்டினி கிடந்து, பட்டினி கிடந்து எலும்பும் தோலுமாய் வற்றிப்போன அவர்களுடைய உடல்கள்தான். நமது பெரிய தொழிற்சாலைச் சொந்தக்காரர்களும் கொழுத்த முதலாளிகளும் தொழிலாளர்கள்பால் தங்களுக்குள்ள நல்லெண்ணத்தைப் பற்றி நமக்குச் சத்தியம் செய்து கொடுக்கிறார்கள். ஆனால் அந்த நல்லெண்ணம் தொழிலாளர்களுக்கு அதிகக் கூலியாகவும்

சிறந்த வசதிகளாகவும் மாறுவதில்லை. அடிக்கிற லாபமெல்லாம் முதலாளிக்கு மேலும் மேலும் புதிய அரண்மணைகள் சமைப்பதில் செலவாகிறதே ஒழிய தொழிலாளியின் மண் குடிசையை விருத்தி செய்வதற்குப் பயன்படுவதில்லை.

தங்களுடைய நன்மையைப் பொறுத்த விஷயத்தில் ஜனங்கள் எவ்வாறு தங்களையும் ஏமாற்றிக்கொண்டு, பிறரையும் ஏமாற்றுகிறார்கள் என்பதைப் பார்க்க நமக்கு வியப்புத் தோன்றுகிறது. 18-வது நூற்றாண்டிலும் அதற்குப் பின்பும் இங்கிலாந்தில் வாழ்ந்த முதலாளிகள், தொழிலாளர்களின் நிலையைச் சீர்திருத்துவதற்கான எல்லா முயற்சிகளையும் எதிர்ப்பதை நாம் காண்கிறோம். அவர்கள் தொழிற்சாலைச் சட்டத்துக்கும் (Factory Legislation), குடியிருப்புச் சீர்திருத்தத்திற்கும் (Houssing reform) ஆட்சேபனை கிளப்பினார்கள். தொழிலாளர்களின் துன்பங்களுக்கான காரணங்களைக் கண்டு நீக்குவதற்குச் சமூகம் கடமைப்பட்டிருக்கிறது என்னும் உண்மையை அவர்கள் ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டார்கள். சோம்பேறிகள் தான் கஷ்டத்துக்கு உள்ளாவார்கள் என்று சொல்லி அவர்கள் தங்களை ஆறுதல் செய்துகொண்டார்கள். தொழிலாளர்களும் தங்களைப் போன்ற மனிதர்களே என்பதை அவர்கள் உணரவில்லை. ‘தனி மனிதர் செய்கையில் அரசாங்கம் தலையிடக்கூடாது’ (Laissez faire) என்கிற ஒரு புதுக் கொள்கையை அவர்கள் விருத்தி செய்தார்கள். அதாவது, அவர்களுடைய வியாபாரத்தில் அவர்களுக்கு இஷ்டமானதைச் செய்ய அவர்களுக்கு இடமிருக்கவேண்டும்; அதில் அரசாங்கம் குறுக்கிட்டு ஒன்றும் செய்யக்கூடாது என்பதுதான் அக்கொள்கை. பிறநாட்டாருக்கு முன்பே அவர்கள் தொழிற்சாலைகளை ஆரம்பித்து விட்டபடியால்

அவர்கள் பிறரை வெகுதூரம் முந்திக்கொண்டிருந்தார்கள். ஆகவே, அவர்கள் பிறருடைய தலையீடின்றிப் பணம் சம்பாதிக்க விரும்பினார்கள். அவர்களுடைய ‘தலையிடாக் கொள்கை’ பாதித் தெய்வாம்சம் உடையதாக மாறிவிட்டது. அதன்படி ஒவ்வொருவனுக்கும் முன்னுக்கு வரச் சந்தர்ப்பம் இருக்கிறது; ஆனால், அவன் அதைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். ஒவ்வொருவனும் தான் முன்னுக்கு வருவதற்கு உலகிலுள்ள மற்றெல்லாரோடும் போராட வேண்டும். அப்போராட்டத்தில் பலர் வீழ்ந்துவிடலாம். ஆனால், அதைப்பற்றி என்ன?

இக்கடிதங்களில், மனிதர்களுக்கிடையே கூட்டுறவும் ஒத்துழைப்பும் வளர்ந்தது நாகரிகத்துக்கு அடிப்படையாக அமைந்த விதத்தைப்பற்றி நான் கூறி வந்திருக்கிறேன். ஆனால், ‘தலையிடாக் கொள்கை’யும், புதிய முதலாளித்துவமும் உலகில் ‘ஆரணியநீதி’யைப் புகுத்தின. கார்லைல் அதைப் ‘பன்றித் தத்துவம்’ (Pig philosophy) என்று அழைத்தார். வாழ்க்கைக்கும் வியாபாரத்துக்கும் இப்புதிய சட்டத்தை வகுத்தது யார்? தொழிலாளர்கள் அல்ல. அவ்வேழைகள் இவ் விஷயத்தில் யாதொரு அபிப்பிராயமும் சொல்லக்கூடிய நிலையில் இல்லை. உச்சஸ்தானத்தில் வீற்றிருக்கும் வியாபாரத்தில் வெற்றி அடைந்த தொழிற்சாலை முதலாளிகள்தான், மூடக் கொள்கையின் பேரால், தங்களுடைய வெற்றியில் யாரும் தலையிடக் கூடாது என்று சொன்னார்கள். ஆகவே, சுதந்திரத்தின் பேராலும் சொத்துரிமையின் பேராலும், தனி மனிதர்கள் தங்கள் வீடுகளை ஆரோக்கியமாக வைத்திருக்க வேண்டும் என்று வற்புறுத்தும் சட்டத்தையும், ஒரு பொருளோடு அதன் போலியைக் கலந்து வியாபாரம் செய்வதைத் தடுக்கும் சட்டத்தையும் அவர்கள் ஆட்சேபித்தார்கள்.

நான் முதலாளித்துவம் என்னும் வார்த்தையை உபயோகித்தேன். எல்லா நாடுகளிலும் நெடுங்காலமாகவே ஒருவித முதலாளித்துவம் இருந்து வந்திருக்கிறது. அதாவது, சேர்த்து வைத்த பணத்தைக் கொண்டு கைத்தொழில் நடத்தப்பட்டு வந்தது. ஆனால், பெரிய யந்திரத்தின் வருகையினால் கைத்தொழில் யந்திரமயமான பிறகு, தொழிற்சாலை உற்பத்திக்கு ஏராளமான பணம்—முதல்—தேவையாயிருந்தது. அது "யந்திரத் தொழில் முதல்" (Industrial Capital) என்று அழைக்கப்பட்டது. 'முதலாளித்துவம்' என்கிற வார்த்தை யந்திரத் தொழிற் புரட்சிக்குப் பின் தோன்றி வளர்ந்த பொருளியல் திட்டத்தைக் குறிப்பதற்கு இப்போது உபயோகிக்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் முதலாளிகள்—அதாவது, முதலுக்குச் சொந்தக்காரர்கள் — தொழிற்சாலைகளை நடத்தி அதனால் வரும் லாபத்தை அடைந்து வந்தார்கள். தொழில்கள் யந்திரமயமான பிறகு முதலாளித்துவம் உலகெங்கும் பரவியது. இப்போது, சோவியத் ருஷ்யாவிலும் இன்னும் இரண்டொரு இடங்களிலும் முதலாளித்துவம் கிடையாது. முதலாளித்துவமானது, அதன் ஆரம்ப காலத்திலிருந்தே, பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் உள்ள வித்தியாசத்தை நன்கு எடுத்துக்காட்டியது. தொழில்களுக்கு யந்திரத்தின் உதவி கிடைத்த பிறகு உற்பத்தி பன்மடங்கு பெருகியது. அதனால் செல்வமும் அதிகரித்தது. ஆனால், இந்தச் செல்வம் ஒரு சிலரான புதிய தொழில் முதலாளிகளைச் சென்றடைந்தது. தொழிலாளிகள் ஏழைகளாகவே இருந்தார்கள். இங்கிலாந்தில் மெள்ள மெள்ளத் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் விருத்தியாயிற்று. அதற்குக் காரணம் இந்தியாவையும் வேறு இடங்களையும் இங்கிலாந்து சுரண்டி வந்ததே

யாகும். ஆனால், யந்திரத் தொழிலால் வரும் லாபத்தில் தொழிலாளர்களுக்குக் கிடைத்த பங்கு மிகவும் சொற்பம். யந்திரத் தொழிற் புரட்சியும் முதலாளித்துவமும் உற்பத்திப் பிரச்சினையைத் தீர்த்தன. அவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட புதிய செல்வத்தை மக்களிடையே விநியோகிக்கும் பிரச்சினையை அவை தீர்க்கவில்லை. ஆகவே, உள்ளவர்களுக்கும் இல்லாதவர்களுக்கும் இடையேயுள்ள பழைய போராட்டம் ஓயாதது மட்டுமல்ல, அதன் வேகம் முன்னை விடக் கடுமையாகவும் மாறிவிட்டது.

18-வது நூற்றாண்டின் பிற்பாதியில் யந்திரத் தொழிற் புரட்சி நிகழ்ந்தது. அந்தக் காலத்தில் தான் இந்தியாவிலும் கானடாவிலும் பிரிட்டிஷார் தங்களுடைய எதிரிகளுடன் போரிட்டுக்கொண்டிருந்தார்கள். அப்போது தான் ஏழாண்டுப் போரும் நடந்தது. இந் நிகழ்ச்சிகளின் பிரபாவம் ஒன்றையொன்று பெரிதும் தாக்கியது. கிழக்கிந்தியக் கம்பெனியும் அதன் ஊழியர்களும் (கிளைவை நீ மறந்திருக்க மாட்டாய்) இந்தியாவில் பிளாசிச் சண்டைக்குப் பின்பும் அதற்கும் பிற்பட்ட காலத்தும் வருத்திப் பறித்த பெருந் தொகைகள் இங்கிலாந்தில் புதிய கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்குப் பெரிதும் உதவின. இக் கடிதத் தொடக்கத்தில் யந்திரத் தொழில்களை எடுத்து நடத்துவது ஆரம்பத்தில் அதிக பணவிரயமான காரியம் என்று கூறினேன். சில காலம் வரையில் அது பணத்தை விழுங்கிக் கொண்டே இருக்கும். போட்ட முதலுக்கு உடனே பிரதி பலன் கிடைக்காது. கடனாகவாவது, வேறு வழியிலாவது பெருந்த முதல் கிடைத்தாலொழிய, அந்தத் தொழில் நன்கு வேலை செய்ய ஆரம்பித்து அதிலிருந்து பலன் கிடைக்கிற வரையில் அது துன்பத்தையும் வறுமையையும் உண்டாக்கு

கிறது. இங்கிலாந்துக்குத் தன்னுடைய தொழில்களையும் தொழிற்சாலைகளையும் விருத்தி செய்வதற்கு எப்போது பணம் தேவையாயிருந்ததோ அந்தத் தக்க சமயத்தில் இந்தியாவிலிருந்து அதற்குக் கொள்ளை கொள்ளையாகப் பொருள் கிடைத்தது. இங்கிலாந்தின் யோகமே யோகம்!

தொழிற்சாலைகள் கட்டி முடிந்த பிறகு புதிய தேவைகள் தோன்றின. மூலப் பொருள்கள் இருந்தால் தானே அவற்றைத் தொழிற்சாலைகளில் தீர்ந்த சரக்குகளாகச் செய்ய முடியும்? ஆடை செய்ய வேண்டுமென்றால் பஞ்சு வேண்டுமல்லவா? மூலப் பொருள்களைவிடத் தொழிற்சாலைகளில் செய்யப்பட்ட புதிய சரக்குகளை விற்பனை செய்வதற்குப் புதிய மார்க்கெட்டுகள் வேண்டியது மிகவும் அவசியம். முதலில் தொழிற்சாலைகளை ஆரம்பித்த காரணத்தால் இங்கிலாந்து பிற நாடுகளை வெகுவாக முந்திக் கொண்டது. ஆயினும், மார்க்கெட்டுகள் காண்பதற்கு அதற்குப் பல கஷ்டங்கள் நேரிட்டிருக்கலாம். அந்தக் கஷ்டங்களெல்லாம் நேராமல் மீண்டும் இந்தியா அதற்கு உதவி செய்தது. ஆனால், அந்த உதவியை இந்தியா மனப்பூர்வமாகச் செய்யவில்லை. அதன் இஷ்டத்துக்கு மாறாக அது உதவி செய்ய வேண்டியதாயிற்று. இந்தியாவிலிருந்த ஆங்கிலேயர் இந்தியக் கைத்தொழில்களை அழித்து இங்கிலாந்தில் செய்யப்பட்ட துணியை இந்தியாவின் மீது பலவந்தமாகத் திணிப்பதற்குச் சகலவிதமான உபாயங்களையும் கையாண்டார்கள். இதைப் பற்றிப் பின்பு விரிவாகக் கூறுகிறேன். பிரிட்டிஷார் இந்தியாவை அடிமைப்படுத்தி அதைப் பலவந்தமாகத் தங்களுடைய சூழ்ச்சிகளுக்கு இணங்கவைத்ததன் பயனாக இங்கிலாந்தில் தோன்றிய யந்திரப் புரட்சியானது எவ்வாறு நன்மை பெற்றது என்பதை மட்டும் நீ

இங்கே கவனிக்க வேண்டும்.

19-வது நூற்றாண்டில் உலகின் பல பாகங்களிலும் யந்திரத் தொழில் பரவியது. இங்கிலாந்தில் போடப்பட்ட பொதுத் திட்டங்களின்படி முதலாளித்துவ ரீதியில் பிற இடங்களிலும் தொழில் விருத்தி அடைந்தது. முதலாளித்துவம் ஒரு புதிய சாம்ராஜ்ய வாதத்தைத் தோற்றுவித்தது. ஏனெனில், தொழிற்சாலை உற்பத்திக்கு மூலப் பொருள்களும், உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை விற்பதற்கு மார்க்கெட்டுகளும் எங்கும் தேவையாயிருந்தன. மூலப்பொருள்களையும் மார்க்கெட்டுகளையும் அடைவதற்கு நாட்டைக் கவர்வதுதான் மிகச் சுலபமான மார்க்கமாயிருந்தது. ஆகவே, புதிய பிரதேசங்களைக் கைப்பற்றுவதற்குப் பலம் மிகுந்த நாடுகளிடையே பலமான போட்டி உண்டாயிற்று. இதிலும் இங்கிலாந்துக்குத் தான் மிகுதியான அனுகூலம் இருந்தது. அதனுடைய இந்திய ஆதிக்கமும் கடலாதிக்கமும் அதற்குப் பெரிதும் துணைபுரிந்தன. சாம்ராஜ்ய வாதத்தைப் பற்றியும் அதன் பலாபலன்களைப் பற்றியும் பிறகு பேசுவோம்.

யந்திரத் தொழிற் புரட்சி தோன்றிய பின்பு, ஆங்கிலேய உலகத்தின் மீது லங்காஷயரிலுள்ள பெரிய துணி முதலாளிகள், இரும்பு முதலாளிகள், சுரங்க முதலாளிகள் ஆகியோருடைய ஆதிக்கம் வரவர வளர்ந்து வந்தது.

99

அமெரிக்கா இங்கிலாந்திலிருந்து கத்தரித்துக் கொள்ளுகிறது

அக்டோபர் 2, 1932.

18-வது நூற்றாண்டின் இரண்டாவது பெரிய புரட்சியை இப்போது ஆராய்வோம். இங்கிலாந்துக்கு விரோதமாக அமெரிக்கக் காலனிகள் விளைத்த புரட்சி வெறும் அரசியல் புரட்சியேயாகும். அப்புரட்சியானது, அதற்கு முன் தோன்றிய, நாம் பார்த்த யந்திரத்தொழிற் புரட்சியைப் போலவோ, அல்லது, அதற்குப்பின் தோன்றி ஐரோப்பாவின் சமூக அஸ்திவாரத்தையே ஒரு ஆட்டு ஆட்டி வைத்த பிரெஞ்சுப் புரட்சியைப் போலவோ அவ்வளவு முக்கியம் வாய்ந்ததல்ல. ஆயினும், அமெரிக்காவில் தோன்றிய அவ்வரசியல் மாறுதல் முக்கியமானதாகவும், பின்னிட்டுப் பெரும் பயன் விளைப்பதாகவும் இருந்தது. அன்று சுதந்திரம் பெற்று அமெரிக்கக் காலனிகள் இன்று பலத்திலும், செல்வத்திலும், தொழிலிலும் உலகிலேயே ஒப்புயர்வற்று விளங்குகின்றன.

1620-ல், சில பிராடெஸ்டண்டுகளை ஏற்றிக்கொண்டு, இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவுக்குச் சென்ற அந்த 'வசந்த புஷ்பம்' (May flower) என்னும் வங்கம் உனக்கு நினைவிருக்கிறதா? அப்பிராடெஸ்டண்டுகளுக்கு முதலாவது ஜேம்ஸின் யதேச்சாதிகாரமும் பிடிக்கவில்லை; அவனுடைய மதமும் பிடிக்கவில்லை. ஆகவே, அவர்கள் இங்கிலாந்தின் மண்ணைத் தங்கள் கால்களிலிருந்து உதறிவிட்டு அட்லாண்டிக் சமுத்திரத்துக்கு அப்பாலுள்ள விசித்திரமான புதிய நாட்டை நாடிச்

சென்றார்கள். அந்நாளிலிருந்து அவர்கள் 'யாத்ரீக முன்னோர்' (Pilgrim fathers) என்று வழங்கப்படுகிறார்கள். அமெரிக்காவில் ஒரு குடியேற்றம் ஸ்தாபித்துக்கொண்டு அதிகச் சுதந்திரத்துடன் வாழலாம் என்பது அவர்களுடைய எண்ணம். அவர்கள் அமெரிக்காவின் வடபாகத்தில் ஓரிடத்தில் இறங்கினார்கள். அதை அவர்கள் 'நியூபிளிமத்' என்று அழைத்தார்கள். அவர்களுக்கு முன்பே பலர் சென்று வடஅமெரிக்காவின் கரையோரத்திலுள்ள இதரப் பாகங்களில் குடியேறியிருந்தார்கள். அவர்களுக்குப் பின்பும் வேறு பலர் சென்று குடியேறினார்கள். இவ்வாறு, அமெரிக்காவின் கீழ்க் கரையில் வடகோடியிலிருந்து தென்கோடி வரையில் பல சிறிய காலனிகள் (குடியேற்றங்கள்) தோன்றின. அவற்றில் கத்தோலிக்கர் கண்ட காலனிகளும், இங்கிலாந்தின் 'குதிரை வீரப்' பிரபுக்கள் கண்ட காலனிகளும், குவேக்கர் கண்ட காலனிகளும் இருந்தன. குவேக்கர் பென் என்பவரின் பெயரால் 'பென்சில்வேனியா' என்று ஒரு காலனி அழைக்கப்பட்டது. அக்காலனிகளில் முன் சொன்னவர்களுடன், டச்சுக்காரரும், ஜெர்மானியரும், டேனியரும், சில பிரெஞ்சுக்காரரும் சேர்ந்தார்கள். எல்லாரும் கலந்த ஒரு ஜனசமுதாயம் அங்கே வாழ்ந்து வந்தது. ஆனால், மற்றவர்களைக் காட்டிலும் ஆங்கிலேயரே அதிகத் தொகையினராக இருந்தார்கள். டச்சுக்காரர் ஒரு நகரை நிருமாணம் செய்து அதை 'நியூஆம்ஸ்டர்டாம்' என்று அழைத்தார்கள். பிற்காலத்தில் அது ஆங்கிலேயர் கைக்குச் சென்ற பொழுது அதன் பெயர் 'நியூயார்க்' என்று மாறியது. இப்போது, 'நியூயார்க்' என்னும் பெயர் உலகமறிந்த ஒன்றாகும்.

அமெரிக்காவில் குடியேறிய ஆங்கிலேயர் பிரிட்டிஷ்

மன்னரின் அதிகாரத்தையும் பிரிட்டிஷ் பார்லிமெண்டின் அதிகாரத்தையும் ஒப்புக்கொண்டு வாழ்ந்து வந்தார்கள். அவர்களில் பலர் இங்கிலாந்தில் வாழ்வதை வெறுத்தும், அரசரும் பார்லிமெண்டும் செய்வது பிடிக்காமலும் நாட்டையும் வீட்டையும் விட்டு வெளியேறியவர்கள். ஆயினும், இங்கிலாந்தினிடமிருந்து கத்தரித்துக் கொள்ள அவர்கள் விரும்பவில்லை. தென் காலனிகளில் ‘குதிரை வீரர்’களும் அரசரை ஆதரிப்போரும் வாழ்ந்து வந்தார்கள். அதனால், தென் காலனிகளுக்கு இங்கிலாந்தினிடம் சற்று அதிகமாகவே பற்றுதல் இருந்தது. அக் காலனிகள் தனித் தனியே வாழ்ந்து வந்தன. அவர்களிடையே பொதுவான அம்சம் ஒன்றுமில்லை. 18-வது நூற்றாண்டின் முடிவுக்குள், கீழ்க் கரையில் மொத்தம் பதின்மூன்று காலனிகள் ஆய்விட்டன. அவை அனைத்தும் பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் கீழ் இருந்தன. அவற்றிற்கு வடக்கில் கானடாவும் தெற்கில் ஸ்பானியப் பிரதேசமும் இருந்தன. அப் பதின்மூன்று காலனிகளில் இருந்த டச்சு, டேனிய, இதர குடியேற்றங்கள் எல்லாம் அவற்றால் விழுங்கப்பட்டுப் பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் கீழ் இருந்து வந்தன. ஆனால் அக் காலனிகள் எல்லாம் கரையோரமாகவே இருந்தன. உள்நாட்டில் அவை சிறிது தூரமே பரவியிருந்தன என்பதை நீ மறந்து விடக் கூடாது. அவற்றிற்கப்பால், மேற்கே, அவற்றைப் போல் பன் மடங்கு விஸ்தீரணமுள்ள பரந்த நிலப்பரப்பு பசிபிக் சமுத்திரம் வரையில் விரிந்து கிடந்தது. அந் நிலப்பரப்பில் ஐரோப்பியர் யாரும் வந்து குடியேறவில்லை. செந்நிற இந்தியர் என்று அழைக்கப்பட்ட பலவகை ஜாதியார் அதில் வாழ்ந்தும் அதை ஆண்டும் வந்தனர். அவர்களில் ‘இராகுவா’ ஜாதியார் முக்கியமானவர்கள்.

அந் நூற்றாண்டின் நடுவில் இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் உலகெங்கும் போர் நிகழ்ந்தது உனக்குத் தெரியும். அது ஏழாண்டுப் போர் (1756—1763) என்று வழங்குகிறது. அது ஐரோப்பாவில் மட்டுமின்றி இந்தியாவிலும் கானடாவிலும் கூட நடந்தது. அதில் இங்கிலாந்து வெற்றிபெறவே, பிரான்சு அதற்குக் கானடாவை விட்டுக் கொடுக்க வேண்டியதாயிற்று. இவ்வாறு, அமெரிக்காவிலிருந்து பிரான்சு அகற்றப்பட்டது. இப்போது, வட அமெரிக்காவில் இருந்த எல்லாக் குடியேற்றங்களும் இங்கிலாந்தின் ஆதிக்கத்தின் கீழ் வந்து விட்டன. கானடாவில், குபெக் மாகாணம் ஒன்றில்தான் பிரெஞ்சுக்காரர் வாழ்ந்து வந்தார்கள். மற்ற மாகாணங்களில் எல்லாம் ஆங்கிலேயரே பெரும்பாலோராயிருந்தார்கள். இன்று கூடச் சுற்றிலும் ஆங்கிலோ-சாக்சன் மக்களால் சூழப்பட்ட குபெக் மாகாணமானது பிரெஞ்சு மொழியும் கலைப் பண்பும் இலங்கும் ஒரு தீவாக விளங்குவது பெரிய விந்தையேயாகும். குபெக் மாகாணத்தின் மிகப் பெரிய நகரம் மான்டிரேல் (‘மான்ட் ராயல்’ என்பதிலிருந்து வந்த பெயர்) என்பதாகும். பாரிசுக்கு அடுத்தபடியாக மான்டிரேலில் தான் பிரெஞ்சு பேசும் மக்கள் அதிகமாக வசிக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன்.

இதற்கு முன் கடிதம் ஒன்றில் ஐரோப்பிய நாடுகள் நடத்திய அடிமை வியாபாரத்தைப் பற்றிக் கூறியிருக்கிறேன். அவை ஆப்பிரிக்காவிலிருந்து அமெரிக்காவுக்கு நீக்கிரோவரைக் கொண்டு சென்றன. கோரமும் கொடுமையும் நிறைந்த இவ் வியாபாரத்தைப் பெரும்பாலும் ஸ்பானியரும் போர்த்துகீசியரும் ஆங்கிலேயரும் நடத்தி வந்தார்கள். அமெரிக்காவுக்குத் தொழிலாளர்கள் தேவையாயிருந்தார்கள். முக்கியமாகத்

தென் காலனிகளில் புகையிலைத் தோட்டங்கள் அதிகமாய் விட்டபடியால் அவற்றில் வேலை செய்வதற்கு ஏராளமான தொழிலாளர்கள் வேண்டியிருந்தது. 'செந்நிற இந்தியர்' என்று அழைக்கப்பட்ட அந்நாட்டின் பூர்வீகக் குடிகள் நாடோடி வாழ்க்கையை மேற்கொண்டவர்களாகவும் ஓரிடத்தில் நிலைத்துக் குடியேற விரும்பாதவர்களாகவும் இருந்தார்கள். மேலும், அடிமைகள் என்கிற முறையில் வேலை செய்வதற்கு அவர்கள் மறுத்து விட்டார்கள். அவர்கள் வளைந்து கொடுக்க இஷ்டப் படவில்லை; அதைவிட முறிந்து போவதே மேல் என்று நினைத்தார்கள். அவ்வாறே, அடுத்த சில ஆண்டுகளில் முறிந்தும் போனார்கள். வெள்ளை நிறத்தவர் அவர்களை நிர்மூலமாக்கி விட்டார்கள். அவர்களில் பெரும்பாலோர் புதிய நிலைமைகளின் கீழ் வாழமாட்டாது மாண்டு மடிந்தார்கள். ஒரு காலத்தில் ஒரு கண்டம் முழுவதும் வாழ்ந்து வந்த அந்த ஜாதியாரில் ஒரு சிலரே இன்று எஞ்சி நிற்கிறார்கள்.

செந்நிற இந்தியர் வெண்ணிறத்தவர் தோட்டங்களில் வேலை செய்ய மறுத்து விட்டபடியாலும், வேலை செய்வதற்கு வேறு யாரும் கிடைக்காததாலும், ஆப்பிரிக்காவில் வாழ்ந்து வந்த துரதிருஷ்டம் பிடித்த மக்கள் பயங்கரமாக வேட்டையாடிப் பிடிக்கப்பட்டார்கள். மிருக வேட்டையினும் கொடிய மனிதவேட்டையாடப்பட்ட அவர்கள் கப்பல்களில் அமெரிக்காவுக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள். அவ்வாறு கொண்டு செல்லும் போது, அவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமையையும், அவர்கள் அனுபவித்த நரக வேதனையையும், நாணும் வேதனையையும், அம்மம்ம, ஒருகால் நா கூசாது உரைக்கத் துணியுமாயினும் செவிகள் அவற்றை நம்பத் துணியா. இவ்வாப்பிரிக்க நீக்கிரோவர் தென்னாடுகளான

வர்ஜினியா, கரோலினா, ஜார்ஜியா ஆகிய இடங்களுக்குக் கொண்டு செல்லப் பட்டார்கள். அங்கே, அவர்கள் பெரிய தோட்டங்களில், முக்கியமாகப் புகையிலைத் தோட்டங்களில் கூட்டம் கூட்டமாக வேலை செய்யுமாறு கட்டாயப் படுத்தப்பட்டார்கள்.

வடநாடுகளில் நிலைமை வேறு விதமாயிருந்தது. 'வசந்த புஷ்பம்' என்னும் நாவாயில் வந்திறங்கிய 'யாத்திரீக முன்னோர்' கொண்டு வந்த பழைய தீவிர சுத்தவாத சம்பிரதாயங்கள் அங்கே இன்னும் சிறந்தோங்கின. தெற்கே இருந்தது போன்ற பெரிய பெரிய தோட்டங்கள் வடக்கே இல்லை; அடக்கமான பண்ணைகளே அங்கு இருந்தன. அப்பண்ணைகளில் வேலை செய்வதற்கு அடிமைகளோ, ஏராளமான தொழிலாளர்களோ தேவை இல்லை. புதிய நிலத்துக்குக் குறைவு ஒன்றும் இல்லாதபடியால், ஒவ்வொருவனும் தனக்கென ஒரு பண்ணையை ஏற்படுத்திக் கொண்டு தனக்குத்தானே எஜமானனாக இருக்கலானான். ஆகவே, அங்கே குடியேறியவர்களிடையே ஒரு சமத்துவபாவம் வளர்ந்து வந்தது.

இவ்வாறு, அமெரிக்கக் காலனிகளில் இருவகையான பொருளியல் திட்டங்களை நாம் காண்கிறோம்; வடகாலனிகளில் உள்ளது சிறிய பண்ணைகளையும் சில சமத்துவக் கருத்துகளையும் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது; தென் காலனிகளில் உள்ள மற்றொன்று பெரிய தோட்டங்களையும் அடிமைத் தனத்தையும் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. இரண்டிலும் செந்நிற இந்தியருக்கு இடமில்லை. ஆகவே, அமெரிக்காக் கண்டத்தின் ஆதி குடிகளான அவர்கள் சிறிது சிறிதாக மேற்கே நெருக்கித் தள்ளப் பட்டனர். செந்நிற இந்தியர்களுக்குள்ளேயே பிரிவினைகளும் சண்டை சச்சரவுகளும் இருந்தபடியால் இந்தக் காரியம் இன்னும் சுலபமாகவே முடிந்துவிட்டது.

அக்காலனிகளில், முக்கியமாகத் தென் காலனிகளில் இங்கிலாந்தின் அரசருக்கும் பெரிய நிலச் சுவான்தார்களுக்கும் பெரிய பாத்தியதைகள் இருந்தன. அவற்றிடமிருந்து எவ்வளவு கறக்க முடியுமோ அவ்வளவும் அவர்கள் கறக்க முயன்றார்கள். ஏழாண்டுப் போர் முடிவுற்ற பிறகு அமெரிக்கக் காலனிகளிடமிருந்து பணம் கறப்பதற்கு ஒரு விசேஷ முயற்சி செய்யப்பட்டது. பெரிய நிலச்சுவான்தார்களின் ஆதிக்கத்தின் கீழிருந்த பிரிட்டிஷ் பார்லிமெண்டு இவ்விஷயத்தில் அரசருக்கு ஆதரவாக நின்றது. அமெரிக்கக் காலனிகள்மீது வரி விதிக்கப்பட்டது; அவற்றின் வியாபாரத்துக்கும் தடைகள் விதிக்கப்பட்டன. இதே சமயத்தில், இந்தியாவிலும் வங்காளத்தில் கடுமையான சுரண்டல் முறையைப் பிரிட்டிஷார் ஆரம்பித்ததும், இந்திய வியாபாரத்துக்குப் பலவிதமான முட்டுக்கட்டைகள் போட்டதும் உனக்கு நினைவிருக்கும்.

அமெரிக்கக் காலனிகளில் வாழ்ந்தவர்கள் புதிய வரியையும், வியாபாரத் தடைகளையும் ஆட்சேபித்தார்கள். ஆனால், பிரிட்டிஷ் அரசாங்கம் அதைப் பொருட்படுத்தவில்லை. ஏழாண்டுப் போரில் வெற்றி கிடைத்த பிறகு தன்னுடைய பலத்தில் அதற்கு அதிக நம்பிக்கை பிறந்திருந்தது. அதே ஏழாண்டுப் போர் காலனி வாசிகளுக்கும் பல விஷயங்களைக் கற்பித்திருந்தது. பல்வேறு காலனிகளில் வாழ்ந்து வந்தவர்கள் ஒருவரை யொருவர் சந்தித்து ஒருவரை யொருவர் அறிந்து கொண்டார்கள். அவர்கள் பிரெஞ்சுத் துருப்புகளுக்கு எதிராகப் பிரிட்டிஷ் துருப்புகளோடு சேர்ந்து போரிட்டபடியால், யுத்தத்தின் கோரத்தையும் போக்கையும் நன்கு அறிந்திருந்தார்கள். ஆகவே, தங்களுக்குத் தவறும் அநீதியும் இழைக்கப்பட்டிருக்கின்றன என்று தாங்கள் கருதிய ஒரு விஷயத்

தில் அவர்களும் பணிந்து போவதற்குத் தயாராக இல்லை.

1773-ல், நிலைமை முற்றிவிட்டது. அவ்வாண்டில் பிரிட்டிஷ் அரசாங்கம் கிழக்கிந்தியக் கம்பெனியின் தேயிலையை அமெரிக்கக் காலனிகள் மீது பலவந்தமாகத் திணிக்க முயன்றது. இங்கிலாந்திலிருந்த பல தனவந்தர்கள் கிழக்கிந்தியக் கம்பெனியின் பங்குதார்களாயிருந்தார்கள். ஆகவே, கம்பெனியின் லாபத்தில் அவர்கள் அக்கறைகொண்டிருந்தார்கள். அரசாங்கத்திலும் அவர்களுக்கு நிறையச் செல்வாக்கு இருந்தது. ஒரு வேளை, அரசாங்க அமைச்சர்களே அவ்வியாபாரத்தில் அக்கறைகொண்டிருக்கலாம். ஆகவே, அரசாங்கம் கிழக்கிந்தியக் கம்பெனியின் வியாபாரத்தை ஆதரிக்க முயன்றது. அமெரிக்காவுக்குத் தேயிலையைக்கொண்டு சென்று அங்கே அதை விற்பதற்கு அரசாங்கம் கம்பெனிக்கு வசதிசெய்து கொடுத்தது. ஆனால், அம்முயற்சி காலனிகளின் உள்நாட்டுத் தேயிலை வியாபாரத்துக்கு ஊறு பயப்பதாக இருந்தது. ஆகவே, அவர்கள் இதைக் கண்டு கொதித்தெழுந்தார்கள். அந்நியநாட்டுத் தேயிலையைப் பகிஷ்கரிப்பதென்று அவர்கள் முடிவு செய்தார்கள். 1773-ம் ஆண்டு, டிசம்பர் மாதத்தில் கம்பெனித் தேயிலையைப் பாஸ்டன் துறைமுகத்தில் இறக்குவதற்கு முயற்சி செய்யப்பட்டது. இதைக் காலனிவாசிகள் எதிர்த்தார்கள். அவர்களில் சிலர் செந்நிற இந்தியரைப்போல மாறுவேடம் பூண்டு, தேயிலையை ஏற்றிவந்த கப்பல்களுக்குச் சென்று, தேயிலை முழுதையும் சமுத்திரத்தில் எறிந்து விட்டார்கள். பகிரங்கமாகவே அவர்கள் இதைச் செய்தார்கள். அவர்களுடைய செய்கையைக் கரையிலிருந்த கூட்டம் ஆமோதித்தது. அதைக் காலனிகளின் அறைகூவலாக இங்கிலாந்து

எடுத்துக்கொண்டது. அதனால், இருதிறத்தாருக்கும் போர் மூண்டது.

சரித்திர நிகழ்ச்சிகள் ஒன்றைப்போலவே மற்றொன்று இருக்கும்படியாக மாறிமாறி வருவதில்லை. ஆயினும், சில சமயங்களில், அவை ஒன்றையொன்று பெரிதும் ஒத்திருப்பது நமக்கு வியப்பை உண்டாக்குகிறது. 1773-ல், பாஸ்டனில் தேயிலையைக் கடலில் கொட்டிய சம்பவம் சரித்திரப் பிரசித்தி பெற்றுவிட்டது. அது 'பாஸ்டன் தேக்கச்சேரி' என்று அழைக்கப்படுகிறது. இரண்டரை ஆண்டுகளுக்கு முன் பாபு (காந்திஜி) தண்டிக்கு யாத்திரை தொடங்கி உப்பு சத்தியாக்கிரகத்தையும் உப்பளப் படையெடுப்பையும் ஆரம்பித்துவைத்த காலத்தில் பல அமெரிக்கர்கள் தங்களுடைய 'பாஸ்டன் தேக்கச்சேரி'யை நினைத்துக் கொண்டார்கள். அமெரிக்காவின் பழைய 'தேக்கச்சேரி'யையும் இந்தியாவின் புதிய 'உப்புக் கச்சேரி'யையும் அவர்கள் ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டார்கள். ஆனால், இரண்டுக்கும் அதிக வேற்றுமை இருக்கிறதென்பது உண்மையே.

ஒன்றரை வருஷத்துக்குப் பிறகு, 1775-ல், இங்கிலாந்துக்கும் அதன் அமெரிக்கக் காலனிகளுக்கும் போர் மூண்டது. காலனிகள் எதற்காகப் போரிட்டன? சுதந்திரத்துக்காக அல்ல; இங்கிலாந்தினிடமிருந்து அறுத்துக் கொள்வதற்காக அல்ல. யுத்தம் தொடங்கி, இருபக்கத்திலும் பலர் மாண்ட பின்பும் கூட, காலனிகளின் தலைவர்கள் இங்கிலாந்தின் அரசனாகிய மூன்றாவது ஜார்ஜை 'மகா காருண்யமுள்ள மன்னனே!' என்றுதான் விளித்து வந்தார்கள். அவர்கள் தங்களை அரசருடைய விசுவாசமுள்ள பிரஜைகளாகவே கருதிவந்தார்கள். இது மிகவும் ஆச்சரியகரமான ஒரு நிகழ்ச்சியாகும்.

சரித்திரத்தில் அடிக்கடி இம்மாதிரி நிகழ்வதை நாம் காண்கிறோம். ஹாலந்துக்கும் ஸ்பெயினை ஆண்ட இரண்டாவது பிலிபின் சைன்யங்களுக்கும் மும்முரமான சண்டை நடந்து வந்தகாலத்தில்கூட ஹாலந்து வாசிகள் பிலிப்பை 'அரசன்' என்றே அழைத்தார்கள். பல ஆண்டுகள் போரிட்ட பின்பே ஹாலந்து தன்னை ஒரு சுதந்திரநாடென்று பிரகடனப்படுத்தும்படியான நிர்ப்பந்தம் நேரிட்டது. இந்தியாவிலும் பல ஆண்டுகள் வரையில் முடிவான லட்சியத்தைக் குறித்து ஐயமும் தயக்கமும் ஊடாடி நின்றன. பலர் 'குடியேற்ற நாட்டு அந்தஸ்து' போன்ற லட்சியங்களுடன் கொஞ்சிக் கொண்டிருந்தார்கள். கடைசியில், 1930-ம் ஆண்டு ஜனவரி, 1-ல் நமது இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையானது 'பூர்ண சுதந்திரமே' தனது லட்சியம் என்று அறிவித்தது. இப்பொழுது கூடச் சிலர் சுதந்திர நிலையைக் கண்டு அஞ்சுவதாகத் தெரிகிறது. அவர்கள் இந்தியாவுக்குக் குடியேற்ற நாட்டு ஆட்சியே போதுமென்று பிதற்றுகிறார்கள். ஆனால், நமது போராட்டம் போன்ற ஒரு போராட்டத்தின் முடிவு சுதந்திரமாகத்தான் இருக்கமுடியும் என்கிற பாடத்தை நமக்குச் சரித்திரம் கற்பிக்கிறது; ஹாலந்தும் அமெரிக்காவும் அதற்குச் சிறந்த உதாரணங்களாகத் திகழ்கின்றன.

காலனிகளுக்கும் இங்கிலாந்துக்கும் யுத்தம் தொடங்குவதற்குச் சிறிது காலத்துக்கு முன்பு, 1774-ல், வாஷிங்டன் என்பவர், வட அமெரிக்காவிலுள்ள எந்த அறிவுடையவனும் சுதந்திரத்தை விரும்பவில்லை என்று கூறினார். ஆயினும், அமெரிக்கக் குடியரசின் முதல் பிரசிடெண்டாக விளங்கியவர் வாஷிங்டன்தான். யுத்தம் ஆரம்பித்த பிறகு, 1775-ல், 'காலனி காங்கிரசை'ச் சேர்ந்த பிரமுகர்களான 46 அங்கத்தினர்கள் மூன்றாவது ஜார்ஜ்

அரசரை அவருடைய விசுவாசமுள்ள பிரஜைகள் என்கிற முறையில் சமாதானத்தை அருளும்படியாகவும், 'ரத்தப் பிரவாகத்தை' நிறுத்தும்படியாகவும் விண்ணப்பித்துக் கொண்டார்கள். தாய் நாட்டுக்கும் தங்களுக்கும் இடையில் நல்லெண்ணமும் ஒற்றுமையும் நிலவ வேண்டுமென்று அவர்கள் மனப்பூர்வமாக விரும்பினார்கள். அவர்கள் கேட்டதெல்லாம் ஏதோ ஒரு விதமான குடியேற்ற நாட்டு அரசாங்க உரிமைதான். வாஷிங்டன் கூறியதுபோலவே, அறிவுடையவன் எவனும் சுதந்திரத்தைக் கோரவில்லை என்று அவர்களும் தெரிவித்தார்கள். இந்த விண்ணப்பம் 'ஆலிவ் கிளை விண்ணப்பம்' என்று அழைக்கப்படுகிறது (ஆலிவ் மரத்தின் கிளை சமாதானத்துக்கு அறிகுறியாகும்).

ஆனால், இது நடந்து இரண்டாண்டு கழிவதற்கு 'முன், ஆலிவ் கிளை விண்ணப்பத்தில்' கையெழுத்திட்டவர்களில் இருபத்தைந்து பேர் இன்னொரு தஸ்தாவேஜியிலும் கையெழுத்திட்டார்கள். அமெரிக்காவின் சுதந்திரப்பிரகடனமே அந்தத் தஸ்தாவேஜி.

ஆக, சுதந்திரத்துக்காக அமெரிக்கக் காலனிகள் போர் தொடங்கவில்லை. அவர்களுடைய குறைகளெல்லாம் புதிய வரியும் வியாபாரத் தடைகளுமேயாகும். தங்களுடைய இஷ்டத்துக்கு விரோதமாகத் தங்கள் மீது வரிவிதிப்பதற்குப் பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கு உரிமை உண்டென்பதை அவர்கள் மறுத்தார்கள். 'பிரதிநிதித்துவம் இன்றி வரிவிதிப்பது கூடாது' என்பது அவர்களுடைய புகழ்பெற்ற போர்முழக்கமாகும். ஏனெனில் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் இல்லை.

காலனிகளுக்குச் சொந்தமான சேனை கிடையாது. ஆனால், அவர்களுடைய பரந்த தேசம் அவர்களுக்கு

உதவிசெய்தது. வேண்டுமென்கிறபோது அவர்கள் உள் நாட்டில் பின்வாங்கிக்கொண்டார்கள். அவர்கள் ஒரு சேனையை அமைத்துக் கொண்டார்கள். இறுதியில் வாஷிங்டனே அவர்களுக்குத் தளபதியானார். அவர்களுக்குச் சில வெற்றிகள் கிடைத்தன. தன்னுடைய பழைய விரோதியான இங்கிலாந்தின் மீது பாய்வதற்கு அற்றம் நோக்கிக்கொண்டிருந்த பிரான்ஸ், அதுதான் சமயம் என்று காலனிகளுடன் சேர்ந்துகொண்டது. ஸ்பெயினும் இங்கிலாந்துக்கு விரோதமாக யுத்தம் தொடங்கியது. இப்போது, இங்கிலாந்துக்குப் பகைவர்கள் அதிகமாகி விட்டார்கள். ஆனால், பலவருஷங்கள் வரையில் யுத்தம் இழுத்துப்பறித்துக் கொண்டு இருந்தது. 1776-ல், காலனிகள் தங்களுடைய புகழ்பெற்ற 'சுதந்திரப் பிரகடன'த்தை முழக்கின. 1782-ல் யுத்தம் முடிவடைந்தது. 1783-ல் உபயவாதிகளும் பாரிஸ் உடன்படிக்கையில் கையெழுத்திட்டார்கள்.

அதன் பயனாக அமெரிக்கக் காலனிகள் ஒரு சுதந்திரக் குடியரசு ஆகிவிட்டன. அவை ஐக்கிய அமெரிக்க நாடுகள் என்று அழைக்கப்பட்டன. ஆனால், நெடுங் காலம் வரையில் ஒவ்வொரு நாடும் பிற நாடுகளைப் பொறுமையுடன் நோக்கி வந்தது. ஒவ்வொன்றும் தன்னை ஏறக்குறையச் சுதந்திரம் வாய்ந்த தனிநாடாகவே கருதி வந்தது. சிறிதுசிறிதாகத்தான் அவற்றிடையே பொதுவான தேசிய உணர்ச்சி தோன்றியது. அமெரிக்கா ஒரு பரந்த தேசம். அது மேலும் மேலும் மேற்கு நோக்கி விரிந்து கொண்டே சென்றது. அதைத்தான் தற்கால உலகின் முதல் பெரிய குடியரசு என்று கூற வேண்டும். அக்காலத்தில் குட்டி ஸ்விட்சர்லாந்து ஒன்றுதான் உண்மையில் குடியரசாக இருந்தது. ஹாலந்து குடியரசாக இருந்தாலும் உயர்குலப் பிரபுக்களின் ஆதிக்

கத்தின் கீழ் இருந்து வந்தது. இங்கிலாந்து முடியரசு நாடாயிருந்ததுமன்றி, அதன் பார்லிமெண்டும் ஒரு சிறிய, பணக்கார, நிலச்சுவான்தார் வகுப்பின் கைகளில் சிக்கிக் கொண்டிருந்தது. ஆகவே, அமெரிக்க ஐக்கியக் குடியரசு ஒரு புதிய நாடாக விளங்கியது. ஆசிய நாடுகளுக்கும், ஐரோப்பிய நாடுகளுக்கும் இருந்ததுபோல் அமெரிக்காவுக்குப் 'பூர்விகம்' ஏதும் இல்லை. அதன் தென்பாகத்தில் காணப்பட்ட தோட்ட வேலை முறையும் அடிமைத்தனமும் நீங்கலாக, அங்கு நிலமானியத் திட்டத்தின் வாரிசுகள் கிடையா. பரம்பரையாக வரும் உயர்குலப் பிரபு வமிசமும் அங்கு இல்லை. ஆகவே, அமெரிக்காவின் பூர்ஷுவா அல்லது மத்திய வகுப்பின் வளர்ச்சியைத் தடைசெய்யக் கூடிய அம்சங்கள் அங்கு மிகவும் குறைவாயிருந்தன. ஆகவே, அவ்வகுப்பு விரைவில் வளர்ச்சி யுற்றது. சுதந்திர யுத்த காலத்தில் அமெரிக்காவின் ஜனத்தொகை நாற்பது லட்சத்துக்கும் குறைவாயிருந்தது. இரண்டு ஆண்டுகளுக்குமுன், 1930-ல் அதன் ஜனத்தொகை பன்னிரண்டு கோடியே முப்பது லட்சம் என்று கணக்கிடப்பட்டது.

ஜார்ஜ் வாஷிங்டன் அமெரிக்கக் குடியரசின் முதல் பிரசிடெண்டு ஆனார். அவர் வர்ஜினியாவைச் சேர்ந்த ஒரு பெரிய நிலச்சுவான்தார். அக்காலத்தைச் சேர்ந்த பின்வரும் பெரியார்களும் அமெரிக்கக் குடியரசுக்கு அடிகோலியவர்களாகக் கருதப்படுகிறார்கள். அவர்கள் தாமஸ் பெயின், பெஞ்சமின் பிராங்கிளின், பாட்ரிக் ஹென்றி, தாமஸ் ஜெப்பர்சன், ஆடம்ஸ் மாடிசன், ஜேம்ஸ் மாடிசன் என்போர் ஆவர். இவர்களில் பெஞ்சமின் பிராங்கிளின் விசேஷ முக்கியத்துவம் வாய்ந்தவர். அவர் ஒரு பெரிய விஞ்ஞானப் புலவருங்கூட. பையன்கள் பறக்கவிடும் காற்றாடியைப் பறக்கவிட்டு மேகத்தில்

தோன்றும் மின்னலும் மின்சாரமும் (எலெக்டிரிசிடி) ஒன்றே என்று அவர் நிரூபித்தார்.

1776-ல் வெளியான சுதந்திரப் பிரகடனம் 'எல்லா மனிதர்களும் பிறப்பினால் சமமானவர்கள்' என்று பறை சாற்றியது. ஆராய்ந்து பார்த்தால் இது அவ்வளவு சரியல்ல என்று தோன்றும். சிலர் பலவான்களாயிருக்கிறார்கள்; வேறு சிலர் பலவீனர்களாயிருக்கிறார்கள். சிலர் புத்திசாலிகளாகவும் திறமைசாலிகளாகவும் இருக்கிறார்கள்; வேறு சிலர் அவ்வாறு இருப்பதில்லை. ஆனால், அந்த வாக்கியத்தின் பின்னணியிலுள்ள கருத்து தெளிவாகவும் போற்றத் தக்கதாகவும் இருக்கிறது. ஐரோப்பாவின் நிலமானிய முறைக்குரிய உயர்வு தாழ்வுகளை அமெரிக்கர் துடைத்துப்போக்க விரும்பினார்கள். அதையே பெரிய முன்னேற்றம் என்று சொல்ல வேண்டும். சுதந்திரப் பிரகடனத்தை வரைந்தவர்கள், 18-வது நூற்றாண்டில் பிரான்சில் தோன்றிய வால்டேர், ரூசோ முதலிய தத்துவ ஞானிகளாலும் பேரறிஞர்களாலும் ஆட்கொள்ளப்பட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது.

'எல்லா மனிதர்களும் பிறப்பினால் சமமானவர்கள்.' ஆனால், அந்த ஏழை நீக்கிரோவின் கதி என்ன? அவன் ஒரு அடிமை. அவனுக்கு யா[illegible]ம் கிடையாது. புதிய அரசியல் [illegible]ப்பில் அவ[illegible]வாறு பொருந்தினான்? அவன் [illegible]தில் பொருந்த[illegible]லை; இன்னும் அவன் அதில் [illegible]பொருந்தியதாகத் தெரிய[illegible]லை. பல ஆண்டுகளுக்குப் [illegible]ற்கு வடநாடுகளுக்கும் [illegible]ன் நாடுகளுக்கும் இடையே [illegible]கொடிய உள்நாட்டு[illegible]ர் விளைந்தது. அதன் பய[illegible] அடிமைத்தனம் ஒழி[illegible]கப் பட்டது. ஆனால், அமெரி[illegible]வில் நீக்கிரோப் பிர[illegible]னை இன்னும் தீர்ந்தபாடில்லை.

100

பாஸ்டில் சிறை வீழ்ச்சி

அக்டோபர் 7, 1932.

18-வது நூற்றாண்டில் நிகழ்ந்த இரு புரட்சிகளைப் பற்றி மிகவும் சுருக்கமாக ஆராய்ந்தோம். இக்கடிதத்தில் மூன்றாவது புரட்சியாகிய பிரெஞ்சுப் புரட்சியைப்பற்றிச் சிறிது கூற விரும்புகிறேன். மூன்று புரட்சிகளிலும் பிரெஞ்சுப் புரட்சியே அதிகமான கலக்கத்தையும் குழப்பத்தையும் உண்டாக்கியது. இங்கிலாந்தில் ஆரம்பித்த யந்திரத்தொழிற் புரட்சியின் முக்கியத்துவம் அளவிடற்கரிதுதான். ஆனால், அது சிறிது சிறிதாக ஊர்ந்து சென்றபடியால் பெரும்பாலான ஜனங்கள் அதைச் சரியாகக் கூடக் கவனிக்கவில்லை. அக்காலத்தில் அதன் உண்மையான முக்கியத்துவத்தை உணர்ந்தவர்கள் வெகு சிலரே. அதற்கு மாறாகப் பிரெஞ்சுப் புரட்சியோ, ஐரோப்பாவின்மீது திடீரென்று இடிவிழுவது போல் விழுந்து அதை ஆச்சரியத்துக்குள் ஆழ்த்தியது. இன்னும் ஐரோப்பாவை அரசர்கூட்டமும் சக்கரவர்த்திகள் கூட்டமும் தான் ஆண்டு வந்தன. பழைய பரிசுத்த ரோம சாம்ராஜ்யம் போன இடத்தில் புல்லும் முளைத்துவிட்டது. ஆனால், பெயரளவில் அது இன்னும் இருந்து வந்தது. அதன் ஆவி ஐரோப்பா மீது தன்னுடைய நீண்ட நிழலைப் பரப்பி நின்றது. அரசர்களும் சக்கரவர்த்திகளும், அரண்மனைகளும் தர்பார்களுமாயிருந்த அவ்வுலகத்தில் சாமானிய ஜனங்களின் வயிற்றிலிருந்து புரட்சி என்கிற பூதம் பிறந்தது. அதன் சொரூபம் பார்ப்பதற்குப் பயங்கரமாகவும், அதி விசித்திரமாகவும் இருந்தது. நெடு நாளாகப் பாசிபிடித்துத் துர்க்கந்தம்

வீசிக்கொண்டிருந்த பழக்க வழக்கங்களையும், சிறப்புரிமைகளையும் அது பொருட்படுத்தவில்லை. ஒரு அரசனை அது சிம்மாசனத்தினின்று தூக்கி எறிந்தது; மற்ற அரசர்களையும் அதே கதிக்கு ஆளாக்குவேன் என்று அச்சுறுத்தியது. ஐரோப்பாவின் முடி மன்னரும் உயர்குலப் பிரபுக்களும் இதுகாறும் எந்தச் சாமானிய ஜனங்களைப் புறக்கணித்தும் காலின் கீழ்ப் போட்டு மிதித்தும் வந்தார்களோ, அதே ஜனங்கள் இன்று வீறுகொண்டு பீறியெழுந்தார்கள். அதைக் கண்டு அம்முடியுடை வேந்தரும் படியுயர் செல்வரும் நடுநடுங்கினதில் ஆச்சரியம் ஒன்றுமில்லையல்லவா?

பிரெஞ்சுப் புரட்சியானது எரிமலையைப் போல் திடீரென்று வெடித்தது. ஆயினும், புரட்சியும் சரி, எரிமலையும் சரி, காரணமில்லாமலோ, நெடுங்காலம் உள்ளேயே குமுறாமலோ திடீரென்று வெளித் தோன்றுவதில்லை. எரிமலை திடீரென்று வெடித்துத் தன் கருப்பத்திலிருந்து அக்கினியைக் கக்குவதை மட்டும் கண்டு விட்டு நாம் வியப்புக்குள்ளாகிறோம். ஆனால், நாம் காணாத பல நிகழ்ச்சிகள் அதற்குக் காரணமாயிருக்கின்றன. பூமிக்கடியில் பல சக்திகள் நெடுங்காலமாகவே ஒன்றையொன்று தாக்கி வருவதன் பயனாக நெருப்பெல்லாம் திரண்டு வருகிறது; கடைசியில், எரிமலையின் வாய் அதை உள்ளே அடக்கிக்கொண்டிருக்க முடியாத நிலை ஏற்பட்டு விடுகிறது; அது வெடிக்கிறது; அனற் பிழம்புகள் ஆகாயமளாவக் கிளம்புகின்றன; நெருப்புக் குழம்பு வரைப் பக்கங்களில் உருகியோடுகிறது. அதைப்போலவே புரட்சியில் வந்து முடியும் சக்திகளும் சமூகத்துக் கடியில் நெடுங்காலம் வேலை செய்த பின்னரே அப் பரிணாமத்தை எய்துகின்றன. தண்ணீரைக் காய்ச்சினால் அது கொதிக்கிறது. ஆனால்,

அது சிறிது சிறிதாகச் சூடான பின்னரே கொதி நிலையை அடைகிறது என்கிற விஷயம் நாமெல்லோரும் அறிந்ததே.

ஜனங்களின் மனக்கருத்துகளும் பொருளியல் நிலைமைகளுமே புரட்சிகளை ஆக்குகின்றன. அதிகாரத்தை வகிக்கும் மதியிலிகள் தங்களுடைய கருத்துக்குப் பொருந்தாத எதையும் காண முடியாத குருடர்கள் ஆகிவிடுகிறார்கள். அவர்களுடைய மூளைக்குக் கிளர்ச்சிக்காரர்கள்தான் புரட்சியை உண்டு பண்ணுகிறார்கள் என்று தோன்றுகிறது. கிளர்ச்சிக்காரர் என்போர் வர்த்தமான நிலைமைகளில் அதிருப்தி கொண்டோராய் அவற்றை மாற்றும் விருப்பமும் முயற்சியும் உடையோர் ஆவர். புரட்சிகள் தோன்றும் போதெல்லாம் அத்தகைய கிளர்ச்சிக்காரர்களும் புற்றீசல் போலப் புறப்பட்டு விடுகிறார்கள் என்பது உண்மையே. அவர்களே சமூகத்திலுள்ள கொந்தளிப்பு, அதிருப்தி இவற்றின் பயனாகத் தோன்றியவர்கள்தான். ஆனால், ஒரு கிளர்ச்சிக்காரன் சொல்லுகிறான் என்பதற்காக லட்சக்கணக்கான ஜனங்கள் ஒரு செய்கையில் இறங்கிவிடுகிறார்கள் என்று நினைப்பது தவறு. பெரும்பாலான மக்கள் எல்லாவற்றிற்கும் மேலாகப் பாதுகாப்பையே விரும்புகிறார்கள். இருப்பதை இழப்பதற்கு அவர்களுடைய மனம் ஒருநாளும் ஒருப்படுவதில்லை. ஆனால், பொருளியல் நிலைமைகளின் காரணமாக அவர்களுடைய தினசரி ஜீவியத்தில் கஷ்டங்கள் மிகுந்து, வாழ்க்கையே பொறுக்க முடியாத ஒரு சுமையாகி விடுகிற காலத்தில், மக்களில் உடல் வலியும் உளவலியும் இல்லாதவர்கள் கூட அபாயங்களை ஏற்கத் துணிந்து விடுகிறார்கள். அந்த நிலையில்தான் அவர்கள் கிளர்ச்சிக்காரனின் வார்த்தைக்குச் செவி சாய்க்கிறார்கள். ஏனெனில், அந்நேரத்தில்

அவன் அவர்களுக்குத் ‘துன்பக் கடலைக் கடக்கும் தோணி’ யாகத் தென்படுகிறான்.

எனது கடிதங்கள் பலவற்றில் மக்களின் துன்பங்களைப் பற்றியும் அவர்களுடைய எழுச்சிகளைப் பற்றியும் நான் உனக்குக் கூறியிருக்கிறேன். ஆசிய, ஐரோப்பிய நாடுகள் ஒவ்வொன்றிலும் இத்தகைய குடியானவர் கலகங்கள் நிகழ்வதை நாம் காண்கிறோம். அவை குரூரமாக அடக்கப்படுகின்றன; குருதி வெள்ளம் பெருகுகிறது. பொறுக்க முடியாத துன்பம் காரணமாகக் குடியானவர்கள் புரட்சியில் இறங்குகிறார்கள். ஆனால், தங்களுடைய இலட்சியத்தைப் பற்றித் தெளிவான கருத்துகள் அவர்களுக்கு இருப்பதில்லை. கருத்திலே தெளிவும் இலட்சியத்திலே நிச்சயமும் இன்மை காரணமாக அவர்களுடைய முயற்சிகள் பெரும்பாலும் தோல்வியில் முடிந்து வந்தன. பிரெஞ்சுப் புரட்சியில் புதிய நிகழ்ச்சி ஒன்றை நாம் காண்கிறோம். ஜனங்களின் மனக் கருத்துகளும் புரட்சிக்கான பொருளியல் தூண்டுதலும் ஒன்றுபட்டு நிற்கின்றன. இவ்வொற்றுமை இவ்வளவு பெரிய அளவில் இதற்குமுன் ஒருபோதும் காணப்பட்டதில்லை. இத்தகைய ஒற்றுமை தோன்றும்போதுதான் உண்மையான புரட்சி தோன்றுகிறது. உண்மையான புரட்சி என்பது சமூக வாழ்க்கையின் சகலத் துறைகளையும்—அரசியல், சமூகம், பொருளியல், மதம் ஆகிய எல்லாவற்றையும்—பாதிக்கிறது. 18-வது நூற்றாண்டின் இறுதி ஆண்டுகளில், பிரான்சில் இது நிகழ்வதை நாம் காண்கிறோம்.

பிரெஞ்சு அரசர்களின் ஆடம்பரமும் ஊழலும் மலிந்த வாழ்க்கையைப் பற்றியும், அவர்களுடைய திறமையின்மையைப் பற்றியும், பொது மக்களின் தரித்திரக் கொடுமையைப் பற்றியும் முன்பே சொல்லியிருக்கிறேன்.

பிரெஞ்சு மக்களின் உள்ளத்தில் எழுந்த கொந்தளிப்பைப் பற்றியும், வால்டேர், ரூசோ, மான்டெஸ்கியு, இன்னும் பலர் விதைத்த புதுக் கருத்துகளைப் பற்றியும் ஒரு சிறிது கூறியுள்ளேன். ஆகவே, பொருளியல் துன்பம் ஒன்று, இலட்சியம் உருப்பெறுவது மற்றொன்று; இவ்விரண்டும் சேர்ந்தாற்போல் நிகழ்ந்து வந்தன. அவை ஒன்றையொன்று உருவாக்கியும் வந்தன. ஒரு ஜன சமுதாயத்தின் இலட்சியம் உருப்பெருவதற்கு நெடுங்காலம் செல்லும். ஜனங்கள் புதிய கருத்துகளை மெதுவாகத்தான் கிரகிப்பார்கள். மேலும், பெரும்பாலோர்க்குத் தங்களுடைய பழைய கருத்துகளையும் மனக்கோட்டங்களையும் கைவிடுவதற்கு இஷ்டம் இருப்பதில்லை. இஃதன்றி இன்னொன்றும் அடிக்கடி நிகழ்வதை நாம் காண்கிறோம். நீண்ட காலத்துக்குப் பின்பும் பெரு முயற்சிக்குப் பின்பும் ஜனங்களின் மனதில் ஒரு புதிய இலட்சியம் நிலைபெறுகிறது; கடைசியாக அவர்கள் புதிய கருத்துகளை ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால், அதற்குள் அப்புதிய கருத்துகளே ஓரளவு காலத்துக்குப் பொருந்தாதனவாகப் போய்விடுகின்றன. பிரான்சில், 18-வது நூற்றாண்டில் வாழ்ந்த தத்துவசாஸ்திரிகளின் கொள்கைகள் யந்திர சகாப்தத்துக்கு முற்பட்ட ஐரோப்பிய நிலைமைகளை ஆதாரமாகக் கொண்டவையாகும். ஆயினும், அதே காலத்தில் யந்திரத் தொழிற் புரட்சி இங்கிலாந்தில் ஆரம்பமாகிக்கொண்டிருந்தது. அதனால், ஜனங்களின் வாழ்க்கையிலும் கைத்தொழிலிலும் பெரிய மாறுதல்கள் விளைந்துகொண்டிருந்தன. இந்நிலைமை பல பிரெஞ்சுக் கருத்துகளை ஆதாரமற்றவையாகச் செய்து வந்தது. ஆனால், அதற்குப் பிற்பட்ட காலத்தில்தான் யந்திரத் தொழிற் புரட்சி விருத்தி அடைந்தது. ஆகவே, இனி வரப் போவதைப் பிரெஞ்சுத் தத்துவ சாஸ்திரிகள் கண்டறியக் காரணமில்லை. ஆயினும், பிரெஞ்சுப் புரட்சிக்குப் பெரும்பாலும் ஆதாரமாயிருந்த அவர்களுடைய கொள்கைகள், பெரிய யந்திரத்தின் வருகைக்குப் பின்பு, ஓரளவு காலத்துக்குப் பொருந்தாதனவாக மாறிவிட்டன.

அது எவ்வாறாயினும், பிரெஞ்சுத் தத்துவசாஸ்திரிகளின் கருத்துகளும் கொள்கைகளும் பிரெஞ்சுப் புரட்சியைப் பெரிதும் பாதித்தன என்பது தெளிவு. இதற்கு முன், பல தடவைகளில் ஜனங்கள் எழுச்சியுற்றுச் செயல்புரிந்திருக்கிறார்கள். ஆனால், இப்போதோ, ஜனங்கள் புத்தி பூர்வமாகச் செயல்புரியும் ஆச்சரியத்தை நாம் காண்கிறோம். அல்லது, அவர்கள் புத்தி பூர்வமாக நடத்தப்பட்டவர்களாய்ச் செயல் புரிகிறார்கள் என்று சொல்லலாம். பிரான்சில் விளைந்த பெரும் புரட்சியின் முக்கியத்துக்கே இதுதான் காரணமாகும்.

14-வது லூயிக்குப் பின் அவனுடைய கொள்ளுப் பேரனான 15-வது லூயி 1715-ல் பட்டத்துக்கு வந்தான். அவன் 59 ஆண்டுகள் அரசு புரிந்தான். அவன் 'பிரளயம் வருவதாயின் எனக்குப்பின் வரட்டும்' (Apres moi le deluge) என்று கூறினான். அதற்குத் தகுந்தாற்போலவே அவனுடைய நடவடிக்கைகளும் இருந்து வந்தன. தன்னுடைய தேசத்தைப் பாதாளத்தில் தள்ளும் கைங்கரியத்தில் அவன் வெகு உற்சாகத்துடன் முனைந்தான். பிரிட்டிஷ் புரட்சியிலிருந்து அவன் ஒரு பாடமும் கற்றுக் கொள்ளவில்லை. பிரிட்டிஷ் அரசனின் சிரச் சேதமும் அவனுடைய கருத்தைத் திருத்தவில்லை. 1774-ல், அவனுக்குப் பின் அவனுடைய பேரன் 16-வது லூயி சிம்மாசனம் ஏறினான். 16-வது லூயியும் அறிவற்ற ஒரு அசடன். அவனுடைய மனைவியான மேரி அன் டாயினெட் ஹாப்ஸ்பர்க் வமிசத்தைச் சேர்ந்தவள்;

ஆஸ்திரியச் சக்கரவர்த்தியின் சகோதரி. அவளும் ஒரு அறிவிலி; ஆனால், பிடிவாதக்காரி. அவள் ஆட்டிவைத்த படியெல்லாம் 16-வது லூயி ஆடிவந்தான். 'அரசரின் தெய்வீகக் கொள்கை' என்பது லூயியைவிட அவளுடைய ரத்தத்தில் அதிகமாக ஊறியிருந்தது. சாமானிய ஜனங்களை அவள் வெறுத்தாள். கணவன், மனைவி இருவரும் முடியரசினிடத்து ஜனங்களுக்கு வெறுப்பு உண்டாக்கக் கூடிய காரியங்கள் அனைத்தையும், ஒன்று பாக்கியின்றிச் செய்து வந்தார்கள். புரட்சி தொடங்கிய பின்புகூடப் பிரெஞ்சு மக்கள் முடியரசைப்பற்றி ஒரு தெளிவான முடிவுக்கு வரவில்லை. ஆனால், லூயியும் மேரியும் தங்களுடைய மடமை நிறைந்த செயல்களால் குடியரசு ஸ்தாபனத்தை இன்றியமையாததாகச் செய்துவிட்டார்கள். அவர்களைவிட அறிவுள்ளவர்கள் கூட அந்த நிலையில் அதிகமாக ஒன்றும் செய்திருக்க முடியாது. அவர்களைப் போலவே, 1917-ம் வருஷத்து ருஷியப் புரட்சிக்குச் சற்றுமுன்பு, ருஷிய அரசனான ஜாரும் அரசியான ஜாரினாவும் முட்டாள்தனமாக நடந்து கொண்டார்கள். நிலைமை முற்றி நெருக்கடி முதிர முதிர இவ்வரசர்களும் முதல் நம்பர் முட்டாள்களாக மாறித் தங்களுடைய அழிவுக்குத் தாங்களே துணைபுரிவது நமக்கு ஆச்சரியத்தைத் தருகிறது. அவர்களுக்கு மிகவும் பொருத்தமான பழமொழி ஒன்று லத்தீனில் வழங்குகிறது. 'தான் அழிக்க விரும்புவோரைக் கடவுள் முதலில் பைத்தியக்காரர்களாக்குகிறார்' என்பது அதன் பொருள். இதையே சம்ஸ்கிருதத்தில் 'விநாசகாலே விபரீத புத்தி' என்று கூறுகிறார்கள்.

முடியரசையும் சர்வாதிகார ஆட்சியையும் தாங்கி நிற்கும் தூண்களுள் போரினால் வரும் புகழ் ஒன்றாகும். நாட்டில் தகராறு ஏற்படும் காலங்களிலெல்லாம் அந்

நாட்டின் அரசனோ அன்றி அரசாங்கத்தை நடத்தும் கூட்டமோ வெளிநாடுகளில் ஏதாவது ஒரு போரைத் தொடங்கி மக்களின் கவனத்தை வேறு வழியில் திருப்ப முயல்வது வழக்கம். ஆனால், பிரான்சில் அத்தகைய போரின் முடிவு கெடுதியைத் தருவதாயிருந்தது. ஏழாண்டுப் போரில் பிரான்சுக்கு வெற்றி கிடைக்கவில்லை. முடியரசுக்கு இது ஒரு பெரிய அடியாகும். அரசாங்கம் வரவர 'பாப்பர் சமஸ்தானம்' ஆகி வந்தது. அமெரிக்கச் சுதந்திர யுத்தத்தில் கலந்து கொண்டது அதன் செலவை இன்னும் அதிகரித்தது. இதற்கெல்லாம் பணத்துக்கு எங்கே போவது? பிரபுக்களும் மத குருக்கள்மாரும் விசேஷச் சலுகை வாய்ந்தவர்கள். எல்லா விதமான வரிகளிலிருந்தும் அவர்கள் விலக்கப்பட்டிருந்தார்கள். அந்த உரிமையை அவர்கள் விட்டுக் கொடுக்கத் தயாராயில்லை. ஆயினும், கடன்களைத் தீர்ப்பதற்காக மட்டுமின்றி, அரசனுடைய 'தர்பார்'ச் செலவுகளுக்காகவும் பணம் வேண்டியிருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் பொது மக்களின் நிலை என்ன? அவர்களைக் கார்லைல் வருணித்திருக்கிறான். அதைக் கீழே தருகிறேன். பிரெஞ்சுப் புரட்சியைப் பற்றி எழுதிய ஆங்கில ஆசிரியன் கார்லைல். அவனுடைய நடையே ஒரு தனி. அதை இப்போது காண்பாய். ஆனால், அவனுடைய பேனாச் - சித்திரங்கள் நினைத்த பயனை அளிக்க வல்லன. அவன் எழுதுகிறான்:

"கஷ்ட ஜீவனம் செய்யும் ஜனங்களின் நிலை என்ன? வழக்கம்போல் மோசந்தான். ஐயோ, பாவம்! அவர்களின் தொகை கொஞ்சமா நஞ்சமா? இரண்டு அல்லது இரண்டரைக் கோடி இருக்குமே! அவர்களைத் தனித்தனி மனிதர்களாகப் பிரித்தறிவது நமக்குக் கஷ்டமாயிருக்கிறது. அவர்களுக்கும் நமக்கும் உள்ள இடை-

வெளி அதிகம். அவர்களுடைய தோற்றம் பிரம்மாண்டமாகவும் பயங்கரமாகவும் இருக்கிறது. ஆனால், அது நம் கண்களுக்கு அவ்வளவு தெளிவாகத் தெரிவதில்லை. ஆகவே, அவர்களை யெல்லாம் ஒரு மொத்தமாகச் சேர்த்து 'இழிந்த சாதிக் கூட்டம்' என்கிற பெயரில் அடக்கி விடுகிறோம். அல்லது, இன்னும் கொஞ்சம் மரியாதையாகவும் மனித உணர்ச்சியுடனும் சொல்ல வேண்டு மென்றால் 'பாமர ஜனங்கள்' என்று சொல்லுகிறோம். ஆமாம், பாமர ஜனங்கள் தான். ஆனால், சிறிது கற்பனாசக்தியை வரவழைத்துக் கொண்டு அவர்களின் பின் சென்று பாருங்கள்! அவர்கள் பிரான்சு முழுதும் பரவியிருக்கிறார்கள். அவர்களுடைய மண் குடிசைகளுக்கும் குச்சு வீடுகளுக்கும் சென்று பார்த்தால் அவர்களும் நம்மைப்போல் தனித்தனி மனிதர்கள் என்பதைக் காண்பீர்கள். அவர்களில் ஒவ்வொருவருக்கும் சொந்தத்தில் ஒரு இருதயம் இருக்கிறது. ஒவ்வொருவருக்கும் துன்பங்கள் இருக்கின்றன. ஒவ்வொருவருடைய உடம்பையும் தோல்தான் மூடியிருக்கிறது. ஒவ்வொருவருடைய உடம்பையும் கீறிப் பார்த்தால் ரத்தம்கூட வரும்."

மேற்கூறிய வருணனை 1789-ம் வருஷத்துப் பிரான்சுக்கு மட்டுமா பொருந்துகிறது? 1932-ம் வருஷத்து இந்தியாவுக்கும் அது நன்கு பொருந்துகிறது. இந்தியாவில் வாழும் கோடிக்கணக்கான குடியானவர்களையும் தொழிலாளர்களையும் நம்மில் பலர் "பாமர ஜனங்கள்" என்கிற பெயரில் அடக்கி விடுகிறோமல்லவா? கஷ்டப்படுவதற்கென்றே பிறந்த விகாரமான ஒரு மிருகமாக அவர்களை நாம் மதிக்கிறோம். அவர்கள் நெடுங்காலமாகவே பூமிக்குப் பாரமான மிருகங்களாக வாழ்ந்து வருகிறார்கள். இன்னும் அப்படித்தான் இருக்கிறார்கள். நாம் அவர்களிடம் 'அநுதாபம்' காட்டுகிறோம். அவர்

களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று ஒரு உபகாரியின் தோரணையில் பேசுகிறோம். ஆனால், அப்பாமர ஜனங்களும் நம்மைப்போல் தனித்தனி மனிதர்கள் என்பதை நாம் உணர்வதில்லை. அவர்கள் தங்களுடைய மண் குடிசைகளில் தங்களுடைய ஜீவியங்களைத் தனித் தனியாக நடத்துகிறார்கள் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. அவர்களும் நம்மைப் போலவே பசி தாகங்களையும், சீதோஷ்ணங்களையும், சுகதுக்கங்களையும் உணர்கிறார்கள். மேதாவிகளான நமது அரசியல் வாதிகளில் பலர் அரசியல் அமைப்புகளைப் பற்றியும் அவை போன்ற வேறுபல விஷயங்களைப் பற்றியும் சிந்தித்தும் பேசியும் வருகிறார்கள். ஆனால், யாருக்காக அரசியல் அமைப்புகளும் சட்டங்களும் இயற்றப்படுகின்றனவோ அந்த ஜனங்களை அவர்கள் மறந்து விடுகிறார்கள். கிராமங்களிலுள்ள மண் குடிசைகளிலும், பட்டணங்களிலுள்ள சேரிகளிலும் வாழும் கோடிக்கணக்கான மக்களுக்கு அரசியல் என்றால் உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க வீடும் அன்றி வேறு யாதாக இருக்க முடியும்?

16-வது லூயியின் ஆட்சியில் பிரான்சின் நிலைமை மேற்கூறியவாறு இருந்து வந்தது. அவனுடைய ஆட்சியின் ஆரம்பத்திலேயே 'பசிக் கலகங்கள்' (Hunger-riots) விளைந்தன. சில வருஷங்கள் வரையில் அக்கலகங்கள் ஓயவே இல்லை. அதற்குப் பிறகு அவை சிறிது ஓய்ந்தன; மீண்டும் குடியானவர் கலகங்கள் ஆரம்பித்து விட்டன. டிஜான் என்னுமிடத்தில் ஒரு 'பசிக் கலகம்' நிகழ்ந்தது. அந்த ஊர்க் கவர்னர் பட்டினியால் வாடும் ஜனங்களைப் பார்த்துப் பின் வருமாறு கூறினானாம்: 'மைதானத்தில் புல் முளைத்துவிட்டது. போய் அதை மேயுங்கள்.' எண்ணற்ற ஜனங்கள் பிச்சை,

எடுப்பதையே தொழிலாகக் கொண்டு விட்டார்கள். 1777-ல், பிரான்சில் மொத்தம் 11 லட்சம் பிச்சைக்காரர்கள் இருந்ததாக அரசாங்க அறிக்கை கூறுகிறது. இந்த ஏழ்மையையும் துன்பத்தையும் பற்றி நினைக்கும் போது இந்தியாவின் ஞாபகம் தானாகவே நமக்கு வந்து விடுகிறதல்லவா?

குடியானவர்களுக்கு வயிற்றுப் பசியோடு நிலம் வேண்டும் என்கிற பசியும் இருந்தது. நிலமானியத் திட்டத்தின் கீழ் நிலத்துக்கு உடையவர்கள் பிரபுக்களாயிருந்தார்கள். நில வருவாயில் பெரும்பகுதியும் அவர்களுக்குச் சென்றது. குடியானவர்களுக்குத் தங்களுடைய லட்சியம் இன்னது, தங்களுக்கு வேண்டியது இன்னது என்பதைப் பற்றித் தெளிவான கருத்துகள் இல்லை. ஆயினும், தாங்கள் உழுதுபயிரிடும் நிலம் தங்களுக்குச் சொந்தமாயிருக்கவேண்டுமென்று அவர்கள் விரும்பினார்கள். ஆகவே, அதைச் சாத்தியமாக வொட்டாமல் செய்து அவர்களை நசுக்கிவந்த நிலமானியத் திட்டத்தை அவர்கள் வெறுத்தார்கள். பிரபுக்களையும் மதகுருக்கள்மாரையும் அவர்கள் வெறுத்தார்கள். விசேஷமாக ஏழைகளைப் பாதித்துவந்த உப்புவரியை அவர்கள் வெறுத்தார்கள். உப்பு வரி என்றவுடனே மீண்டும் நமக்கு இந்தியாவின் ஞாபகம் வருகிறது!

குடியானவர்களின் நிலை இவ்வாறு இருந்தும் அரசனும் அரசியும் பணம் வேண்டுமென்று அட்டகாசம் செய்தார்கள். அரசாங்கப் பொக்கிஷம் காலியாயிருந்தது. கடன் சுமை ஏறிக்கொண்டே சென்றது. எல்லோரும் மேரியை 'ஸ்ரீமதி. பணக்குறை' (Madame Deficit) என்று பரிகாசமாக அழைக்க ஆரம்பித்தார்கள். வருமானத்தை அதிகரிப்பதற்கு ஒரு வழியும் தென்படவில்லை. 16-வது லூயிக்கு என்ன செய்வதென்றே புரிய

வில்லை. கடைசியாக, அவன் 1789-ம் ஆண்டு மே மாதத்தில் ஸ்டேட்ஸ்-ஜெனரல் (States-General) எனப்பட்ட 'முப்பேராயத்'தைக் கூட்டினான். இந்தச் சபை பிரபுக்கள், மதகுருமார், சாமானியர் ஆகிய மூன்று வகுப்பினரின் பிரதிநிதிகளையும் கொண்டதாகும். அவ்வகுப்புகள் 'எஸ்டேட்டுகள்' எனவும் வழங்கப்பட்டன. ஆகவே, பிரெஞ்சு ஸ்டேட்ஸ்-ஜெனரல் ஏறக்குறையப் பிரிட்டிஷ் பார்லிமெண்டை ஒத்திருந்தது. ஏனெனில், பிரிட்டிஷ் பார்லிமெண்டைச் சேர்ந்த லார்டு சபை பிரபுக்களையும் மதகுருமாரையும் கொண்டதாகவும், காமன்ஸ் சபை சாமானிய ஜனங்களின் பிரதிநிதிகளைக் கொண்டதாகவும் இருந்தன. ஆனால், பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கும் பிரெஞ்சு ஸ்டேட்ஸ்-ஜெனரலுக்கும் பல வேற்றுமைகள் இருந்தன. பன்னூறாண்டுகளாகவே பிரிட்டிஷ் பார்லிமெண்டு ஒழுங்காகக் கூடுவதும் காரியக்கிரமங்களையும் சம்பிரதாயங்களையும் நன்கு வகுத்துக்கொண்டு வேலை செய்வதுமாயிருந்து வந்தது. அதனால் அது நாட்டில் நன்றாய் வேரூன்றியிருந்தது. ஸ்டேட்ஸ்-ஜெனரல் கூடுவதே வெகு அபூர்வம். வரையறுக்கப்பட்ட காரியக்கிரமமோ, திட்டமான சம்பிரதாயங்களோ அதற்கு இல்லை. பிரிட்டிஷ் சபை, பிரெஞ்சு சபை இரண்டையும் மேல் வகுப்பாரின் பிரதிநிதி சபைகள் என்றே சொல்லவேண்டும். ஸ்டேட்ஸ்-ஜெனரலில் சாமானியரின் பிரதிநிதிகளுக்கு இருந்த இடம்கூடப் பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் அவர்களுக்கு இல்லை. இரண்டு சபைகளிலும் குடியானவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கிடையாது.

1789-ம் ஆண்டு மே 4-ல் 16-வது லூயி வார்சேல்சில் ஸ்டேட்ஸ்-ஜெனரலைத் திறந்து வைத்தான். ஆனால், விரைவிலேயே அவனுக்கு ஏன் இந்தச் சபையைக்

கூட்டினோம் என்று ஆகிவிட்டது. மூன்ருவது எஸ்டேட் என்று அழைக்கப்பட்ட சாமானியர் அல்லது மத்திய வகுப்பார் அரசனுடைய அதிகாரத்தைத் திரஸ்கரித்து விட்டுத் தங்களுடைய சம்மதமின்றி யாதொரு வரியும் விதிக்கக் கூடாது என்று வற்புறுத்தலானுர்கள். இங்கிலாந்தில் காமன்ஸ் சபை இந்த உரிமையை ஸ்தாபித்திருந்தது அவர்களுக்கு ஒரு உதாரணமாக விளங்கியது. சமீபகாலத்தில் அமெரிக்கா நடந்து கொண்ட விதமும் அவர்களுக்கு ஒரு உதாரணமாக இருந்தது. இங்கிலாந்து ஒரு சுதந்திர நாடென்பது அவர்களுடைய எண்ணம். ஆனல், அது தவருன எண்ணமாகும். உண்மையில் அதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை. உயர்குலப் பிரபுக்களும் பெரிய நிலச்சுவான்தார்களுமே இங்கிலாந்தை ஆண்டு வந்தார்கள். வாக்குரிமை அல்லது வோட்டுரிமை ஒரு குறுகிய எல்லைக்குள் கட்டுப்படுத்தப்பட் டிருந்தபடியால் பார்லிமெண்டே ஆளும் வகுப்பாரின் ஏகபோகப் பிரசாதமாக இருந்து வந்தது.

மூன்ருவது எஸ்டேட் எனப்பட்ட சாமானிய ஜனங்களின் பிரதிநிதிகள், ஒன்றும் அதிகமாகச் செய்து விடவில்லை. ஆயினும், அதைக்கூட அரசனல் பொறுக்க முடியவில்லை. அவன் அவர்களை மன்றத்திலிருந்து வெளியேற்றினுன். அவர்களுக்குக் கலைந்து போக இஷ்டமில்லை. உடனே, அவர்கள் மன்றத்துக்கு அருகிலிருந்த ஒரு டென்னிஸ் கோர்ட்டில் (டென்னிஸ் பந்து ஆடுமிடம்) கூடினுர்கள். கூடி அரசியல் அமைப்பு ஒன்றை ஏற்படுத்தாமல் கலைவதில்லை யென்று பிரமாணம் செய்துகொண்டார்கள். இது, 'டென்னிஸ் கோர்ட்டுப் பிரமாணம்' என்று வழங்கப்படுகிறது. அதற்குப் பின்புதான் நெருக்கடி நேர்ந்தது. அரசன் பிரதிநிதிகளுக்கு விரோதமாகப் பலாத்காரத்தைப் பிரயோகிக்க முயன்ருன். ஆனல்,

அவனுடைய ராணுவத்தைச் சேர்ந்தவர்களே அவனுடைய கட்டளையை நிறைவேற்ற மறுத்து விட்டார்கள். ராணுவந்தானே அரசாங்கத்தின் முக்கிய ஆதாரஸ்தம்பம்! அந்த ராணுவமே கூட்டத்திலுள்ள தன் சகோதரர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ய மறுக்கும்போதுதான் ஒரு புரட்சியில் நெருக்கடியான தருணம் தோன்றுகிறது. இதைக் கண்டு லூயி பயந்து விட்டான். அந்தச் சமயம் அவன் அவர்களுக்குத் தாழ்ந்து போனுன். அதற்குப்பின் அவன் தனக்கு வழக்கமான மதிகெட்ட முறையில் காரியம் செய்ய ஆரம்பித்தான். அவன் சதி பல புரிந்து, வெளிநாட்டு ராணுவத்தை வரவழைத்து அதைக் கொண்டு தன் சொந்தப் பிரஜைகளைச் சுடுவித்தான். இதனல் ஜனங்கள் பொறுமை இழந்தார்கள். அவர்கள் 1789-ம் ஆண்டு ஜூலை 14-ல் பாரிசில் பொங்கி எழுந்து பழைமையான பாஸ்டில் சிறையைக் கைப்பற்றி அங்கிருந்த கைதிகளை யெல்லாம் விடுவித்தார்கள். பொது ஜனங்கள் திரண்டெழுந்த அந்நாள் சரித்திரத்திலேயே நினைவுகூர்தற்குரிய ஒரு நன்னுளாகும்.

பாஸ்டில் சிறை வீழ்ச்சி சரித்திரத்திலேயே ஒரு முக்கியமான பெரு நிகழ்ச்சியாகும். அதுதான் புரட்சியை அங்குரார்ப்பணம் செய்து வைத்தது. அது தான் நாடு முழுதும் ஜனங்கள் கிளர்ந்தெழுவதற்குரிய அடையாளமாக இருந்தது. அதுதான் பிரான்சில் பழைய நிலைமை மாண்டு விட்டது, பேரரசும், நிலமானியத்திட்டமும், விசேஷ உரிமைகளும் 'திரும்பி வரா உலகத்துக்குச் சென்று விட்டன' என்று முரசறைந்தது. அது தான் ஐரோப்பாவின் மன்னர்களுக்கும், மன்னர் மன்னர்களுக்கும் பயங்கரமான உற்பாதமாக விளங்கியது. பேரரசுக்குரிய மோஸ்தரை ஆரம்பித்து வைத்த

பிரான்சு இப்போது ஒரு புது மோஸ்தரை ஆரம்பித்து வைத்துக்கொண்டிருந்தது. அதைக் கண்ட ஐரோப்பா ஆச்சரியத்தில் ஆழ்ந்தது. சிலர் அதைக் கண்டு அஞ்சி நடுங்கினார்கள். பலர் அதைக் கண்டு 'இனி நமக்கு நல்ல காலம் பிறந்து விட்டது' என்று நம்பிக்கை கொண்டார்கள். நாளது வரையில் ஜூலை 14-ல் தான் பிரான்சின் தேசியத் திருவிழா நாளாக இருந்து வருகிறது. ஆண்டுதோறும் அந்நாளை நாடெங்கும் கொண்டாடுகிறார்கள்.

ஜூலை 14-ல் பாஸ்டில் சிறை பாரிஸ் ஜனக்கூட்டத்தின் வசமாயிற்று. அதற்குமுன் தினம், அதாவது 13-ல் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அதிகாரத்தை வகிப்பவர்கள் எத்துணை பெரிய குருடர்களாயிருக்கிறார்கள் என்பதை அச்சம்பவம் நன்கு எடுத்துக்காட்டியது. 13-தேதி மாலை வார்சேல்சில் அரசன் ஒரு பெரிய விருந்து நடத்தினான். அவ்விருந்தில் ஆடலும் பாடலும் அமோகமாயிருந்தன. அரசரும் அரசியும் கலகக்காரப் பாரிஸ் மக்களின் மீது அடையப்போகும் வெற்றிக்காக அவர்களை வாழ்த்தி வந்திருந்த விருந்தினர் பானம் அருந்தினார்கள். முடியரசுக் கொள்கை எவ்வளவு தூரம் ஐரோப்பாவை ஆட்கொண்டிருந்தது என்று நினைத்துப் பார்க்க நமக்கு ஆச்சரியம் உண்டாகிறது. தற்காலத்தில், குடியரசுமுறை நமக்குப் பழக்கமாகிவிட்டது. இப்போது நாம் அரசர்களை ஒரு பொருட்டாக எண்ணுவதில்லை. உலகத்தில் இப்போதுள்ள சில அரசர்களும் நமக்கு இதைவிடத் துர்க்கதி நேராமலிருக்க வேண்டுமே என்று அதி ஜாக்கிரதையாக நடந்து வருகிறார்கள். ஆயினும், பெரும்பாலோர் முடியரசுக் கொள்கையை எதிர்க்கிறார்கள், ஏனெனில், அது வகுப்பு வேற்றுமையையும் ஒதுங்கி வாழும் மனப்பான்மையையும், அற்பத்தனமான ஆடம்

பரத்தையும் வளர்க்கும் செவிலியாக இருக்கிறது. ஆனால், 18-வது நூற்றாண்டு ஐரோப்பாவில் இந்த மனநிலை காணப்படவில்லை. அக்காலத்தில் வாழ்ந்தவர்களுக்கு அரசனில்லாத ஒரு நாட்டைக் கற்பனையில் காண்பதுகூட அரிதாயிருந்தது. லூயி மதியற்ற செயல்கள் புரியலாம், ஜனங்களை எதிர்த்து நடக்கலாம். ஆயினும், அவனைச் சிம்மாசனத்திலிருந்து நீக்கவேண்டும் என்கிற பேச்சு எழவில்லை. ஏறக்குறைய இரண்டாண்டுகள் வரையில் ஜனங்கள் அவனுடைய இழி செயல்களையும் அழி சூழ்ச்சிகளையும் பொறுத்துக் கொண்டிருந்தார்கள். அவன் பிரான்சிலிருந்து ஓடிப்போக யத்தனித்த காலையில் ஜனங்கள் அவனைத் தடுத்துப் பிடித்துவிட்டார்கள். அப்போதுதான் அரசனில்லாமலேயே வாழ்க்கையை நடத்துவதென்று பிரான்சு முடிவு செய்தது.

ஆனால், அது பின்னால் நடந்த விஷயம். இதற்கிடையில் ஸ்டேட்ஸ்-ஜெனரல் பிரான்சின் தேசிய சபை (National Assembly) ஆகி விட்டது. அரசன் சட்டத்துக்கு உட்பட்டவனாகி விட்டதாகவும் கருதப்பட்டது. அதாவது, அவனுடைய அதிகாரங்கள் கட்டுப்படுத்தப்பட்டன. இப்போது அவன் தேசிய சபை சொல்லும் காரியங்களை மட்டும் செய்பவன் ஆகி விட்டான். ஆனால், இந் நிலையை லூயி வெறுத்தான். அவனுக்கும் மேலாக மேரி அதை வெறுத்தாள். பாரிஸ் மக்களுக்கும் அவர்களிடத்தில் அன்பு இல்லை. அரசனும் அரசியும் தங்களுக்கு விரோதமாக எல்லா விதமான சதியாலோசனைகளும் செய்து வருவதாக அவர்கள் சந்தேகித்தார்கள். அப்போது அரசனும் அரசியும் தங்கள் தர்பாரை வார்சேல்சில் நடத்தி வந்தார்கள். அது பாரிசிலிருந்து சற்றுத் தூரத்தில் இருந்தபடியால்

ஜனங்கள் அவர்களுடைய நடவடிக்கைகளைச் சரிவரக் கவனிக்க முடியவில்லை. வார்சேல்சில் ஓயாமல் விருந்தும் களியாட்டமுமா யிருக்கிறது என்கிற கதைகளும் வதந்திகளும் பாரிசில் பட்டினியால் வாடும் மக்களின் காதுகளுக்கு எட்டவும் அவர்கள் பெரிதும் ஆத்திர முற்ருர்கள். ஆகவே, அவர்கள் அரசனையும் அரசியையும் பாரிசிலுள்ள டுலரீ என்னுமிடத்துக்கு ஊர்வலமாக அழைத்துச் சென்ருர்கள். அந்த ஊர்வலம் அது வரை உலகமே கண்டிராத ஒரு விசித்திர ஊர்வலமாகும்.

அடுத்த கடிதத்தில் பிரெஞ்சுப் புரட்சியின் கதையைத் தொடர்ந்து சொல்லுகிறேன்.

101

பிரெஞ்சுப் புரட்சி

அக்டோபர் 10, 1932.

பிரெஞ்சுப் புரட்சியைப் பற்றி எழுதுவதென்ருல் எனக்குச் சற்றுச் சிரமமாக இருக்கிறது. அதற்குக் காரணம் போதிய விஷயமின்மை அல்ல; ஏராளமான விஷயமுள்ளமையேயாகும். பிரெஞ்சுப் புரட்சியானது அடிக்கடி மாறி வரும் அற்புதக் காட்சிகளையுடைய ஒரு நாடகம் போன்றது. அது முழுக்க முழுக்க அசாதாரண மான சம்பவங்கள் நிறைந்ததாகும். அச்சம்பவங்கள் நம்மை இன்றும் அச்சுறுத்துகின்றன; ஆவேசம் கொள்ளச் செய்கின்றன; பரவசப் படுத்துகின்றன. அரசர்களுடையவும் அரச தந்திரிகளுடையவும் அரசிய லானது அந்தரங்கமான அந்தப்புரத்தை இருப் பிடமாக உடையது. அதை எப்பொழுதுமே ஒரு ரகசிய பாவம் மூடி நிற்கும். அவர்கள் இயற்றும் எண் ணற்ற பாவங்களைச் சாதுரியம் என்கிற திரை மறைத்து விடுகிறது. அவர்களுடைய விநயமும் இனிமையும் பொருந்திய பேச்சானது போட்டிப் பேராசைகளுக்குள் நடக்கும் போராட்டத்தை நம் கண்ணுக்குத் தெரிய வொட்டாமல் மூடி விடுகிறது. அந்தப் போராட்டம் கடைசியாக யுத்தத்தில் வந்து முடிகிறது. அவர்களுடைய பேராசை என்கிற பலி பீடத்தில் கோடிக் கணக்கான இளைஞர்கள் தங்களுடைய அருமையான உயிரை அர்ப்பணம் செய்கிருர்கள். அப்பொழுது கூட அவர்கள் தங்களுடைய இழிந்த நோக்கங்களை நமக்குக் கூறி நமது செவிகளைப் புண்படுத்துவதில்லை. அதற்கு மாருக, அவர்கள் உன்னதமான லட்சியங்களைப் பற்றியும்

மகோன்னதமான நோக்கங்களைப் பற்றியுமே நமக்கு எடுத்துரைக்கிறார்கள். அவற்றிற்காக நமது உடல் பொருள், ஆவி அனைத்தையும் தியாகம் செய்ய வேண்டியது அவசியந்தானே!

ஆனால், புரட்சி அரசியல் மேற்கூறிய அரசியலினின்று முற்றிலும் மாறுபட்டதாகும். அது வயல் வெளிகளையும், நகர வீதிகளையும், கடைத் தெருக்களையும் இருப்பிடமாகக்கொண்டிருக்கிறது. அதன் முறைகள் அநாகரிகமாகவும் முரட்டுத்தனமாகவும் இருக்கின்றன. அரசர்களும் அரச தந்திரிகளும் ரொம்ப ரொம்பப் படித்தவர்கள். புரட்சிக் கர்த்தர்களுக்கு அத்தகைய படிப்புக் கிடையாது. அவர்களுக்கு விநயபூர்வமாகவும் சதுரம் கட்டியும் பேசத் தெரியாது. அவர்களுடைய பேச்சு நேர்மையானது; கணக்கற்ற தீய எண்ணங்களையும் கபடமான சூழ்ச்சிகளையும் அது மறைத்து நிற்பதில்லை. அவர்களைச் சுற்றி யாதொரு ரகசிய பாவமும் கிடையாது. எந்த விதமான திரையும் அவர்களுடைய மனதில் எழும் சிந்தனைகளை மறைப்பதில்லை. அவர்களுடைய உடல் ஆடையின்றித் திறந்திருப்பது போல அவர்களுடைய மனமும் திறந்திருக்கிறது. புரட்சி அரசியலானது அரசர்களுடையவும் அரசியல் வாதிகளுடையவும் விளையாட்டுப் பொருளாக இருப்பதில்லை. அது உண்மைகளை அடிப்படையாகக் கொண்டது. அதற்குப் பின்னால் இருப்பன பண்படாத மனித இயற்கையும், பசியால் வருந்தும் மனித வயிறும் ஆகும்.

ஆகவே, பிரான்சின் தலைவிதியை நிர்ணயம் செய்த அந்த ஐந்து வருஷங்களில் (1789—1794) பசியால் வாடும் பாமர ஜனங்கள் செயலாற்றுவதை நாம் காண்கிறோம். அவர்கள் தான் பயங்கொள்ளிகளான அரசியல் வாதிகளை நிர்ப்பந்தப்படுத்தி முடியரசையும், நிலமானிய

திட்டத்தையும், மதஸ்தாபனத்தின் சலுகைகளையும் துடைத்து நீக்குமாறு செய்கிறார்கள். அவர்கள்தான் ‘கிலடின்’ (Guillotine—சிரச்சேதயந்திரம்) என்னும் பயங்கர தேவதையை அர்சித்துத் தங்களுடைய பகைவர்களை அவளுக்குப் பலியூட்டுகிறார்கள். இறந்த காலத்தில் தங்களை நசுக்கியவர்களையும், எதிர் காலத்தில் தங்களுடைய புதிய சுதந்திரத்தைப் பறிக்கச் சூழ்ச்சி செய்யக் கூடியவர்கள் என்று தாங்கள் ஐயுற்றவர்களையும் அவர்கள் கொடூரமாகப் பழிவாங்குகிறார்கள். கந்தையுடுத்த அவர்கள், பாதரட்சை கூட இல்லாத அவர்கள் கையில் கிடைத்த ஆயுதங்களை எடுத்துக் கொண்டு, புரட்சியைக் காப்பாற்றப் போர்க்களத்துக்கு விரைந்து செல்கிறார்கள். ஐரோப்பா முழுதும் அவர்களுக்கு எதிராகத் திரண்டெழுகிறது. ஆனால், எதிரிகளின் போர்ப் பயிற்சி மிக்க சேனைகள் புரட்சிக்காரர்களுக்கு முன்னால் சூரியனைக் கண்ட பனிபோல் ஆகி விடுகின்றன. ஆகா! அப் பிரெஞ்சு மகா ஜனங்களின் சாதனைதான் எத்துணை அற்புதமானது! ஆனால், அந்தோ! சில வருஷங்கள் கொடிய போராட்டம் நிகழ்ந்த பின்பு புரட்சியின் வேகமும் வீரியமும் அடங்கி விடுகின்றன. அது தன்மீதே திரும்பித் தன்னுடைய குழந்தைகளையே விழுங்க ஆரம்பிக்கிறது. அதற்குப் பின் எதிர்ப் புரட்சி தோன்றுகிறது. அது புரட்சியை வாயில் போட்டுக் கொள்ளுகிறது. எதுவரினும் வரட்டும் என்னும் துணிச்சலுடன் எல்லாக் கஷ்டங்களையும் ஏற்று நின்ற சாமானிய ஜனங்கள் மீது அது மீண்டும் ‘உயர் வகுப்பாரின்’ ஆட்சியைத் திணிக்கிறது. எதிர்ப் புரட்சி நெப்போலியனை ஈன்றெடுக்கிறது. அவன் சர்வாதிகாரியாகவும், சக்கரவர்த்தியாகவும் பிரான்சை ஆளுகிறான். ஆனால், எதிர்ப் புரட்சியாகட்டும், நெப்போலியனாகட்டும் மீண்டும்

ஜனங்களை அவர்களுடைய பழைய நிலையில் இருத்தக் கூடவில்லை. புரட்சியின் முக்கிய வெற்றிகளைத் துடைத்துப் போக்க வல்லார் ஒருவரும் இல்லை. சாமானிய ஜனங்கள் தங்களைப் பிணித்திருந்த கட்டுகளை அறுத்தெறிந்து விட்டுச் செயலாற்றிய ஆர்வம் நிறைந்த அந்நாட்களின்—அந்நாட்கள் சிலவாயினும்—ஞாபகத்தைப் பிரெஞ்சு மக்களிடமிருந்தோ அல்லது இதர ஐரோப்பிய மக்களிடமிருந்தோ அகற்றுவதற்கு ஒருவராலும் இயலவில்லை.

புரட்சியின் ஆரம்பக் காலத்தில் பல கட்சிகளும் கோஷ்டிகளும் தலைமையைப் நாடிப் போரிட்டு வந்தன. 'ராஜ விசுவாசிகள்' (Royalists) என்போர் ஒரு சாரார். அவர்கள் 16-வது லூயியின் யதேச்சாதிகாரம் இன்னும் நாட்டில் நடைபெறவேண்டும் என்கிற வீண் நம்பிக்கை கொண்டவர்கள். 'மிதவாத லிபரல்கள்' (Moderate Liberals) என்போர் இன்னொரு சாரார். அவர்கள் பிரான்சுக்கு ஒரு அரசியல் அமைப்பு வேண்டுமென்றும், அதற்குக் கட்டுப்பட்டு அரசன் இருக்கலாமென்றும் விரும்பியவர்கள். 'மிதவாதக் குடியரசுவாதிகள்' (Moderate Republicans) என்போர் மற்றொரு சாரார். அவர்கள் 'கிராண்டின்'கள் (Party of the Gronde) என்றும் அழைக்கப்பட்டார்கள். 'தீவிரக் குடியரசுவாதிகள்' (Extreme Republicans) என்போர் பிறிதொரு சாரார். அவர்கள் 'ஜாகோபின்'கள் (Jacobins) என்றும் அழைக்கப்பட்டார்கள். 'ஜாகோபின்' மடத்தில் அவர்கள் கூடுவது வழக்கமாகையால் அவர்களுக்கு அப்பெயர் வந்தது. இவைதான் முக்கியமான கட்சிகள். இவற்றிற்கு உள்ளும் புறமும் பல சாகசக்காரர் இருந்தார்கள். இவர்கள் அனைவருக்கும் பின்னால் பிரான்சு தேசத்துப் பாமரமக்கள் இருந்தார்கள். அவர்களிலும்

பாரிஸ் நகர மக்களைத்தான் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். தங்களிடையே முளைத்த ஊர்பேர் தெரியாத பல தலைவர்களின் கீழ் அவர்கள் வினை இயற்றி வந்தார்கள். வெளிநாடுகளில், முக்கியமாக இங்கிலாந்தில், புரட்சிக்கு அஞ்சிப் பிரான்சிலிருந்து ஓடிப்போன பிரபுக்கள் பலர் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் எப்பொழுதும் புரட்சிக்கு எதிராகச் சூழ்ச்சி புரிவதில் ஈடுபட்டிருந்தார்கள். ஐரோப்பாவின் அரசுகள் அனைத்தும் புரட்சிப் பிரான்சுக்கு விரோதமாக அணிவகுத்து நின்றன. பார்லிமெண்டின் ஆட்சிக்குட்பட்ட, ஆனால், உயர்குலப் பிரபுக்களின் பிடியிலுள்ள இங்கிலாந்தும், அரசர்கள் சக்கரவர்த்திகளுடைய ஐரோப்பாவும் ஆகிய இவ்விரண்டும் சாமானிய ஜனங்களின் இவ் விசித்திர எழுச்சியைக் கண்டு ஒரேவிதமான பயத்தை அடைந்தன. அவை அதை ஒடுக்கவும் முயன்றன.

ராஜவிசுவாசக் கட்சியினர் அரசனோடு சேர்ந்து கொண்டு சூழ்ச்சி செய்தார்கள். அதன் பயனாக அவர்கள் தங்களுடைய முடிவு காலத்தைத் தாங்களே விரைவில் வரவழைத்துக் கொண்டார்கள். தேசிய சபையில், முதன் முதலில், மிதவாத லிபரல்கள் பிரதானக் கட்சியினராயிருந்தார்கள். இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் இருப்பது போன்ற ஒரு அரசியலமைப்புப் பிரான்சுக்கும் வேண்டுமென்று அவர்கள் விரும்பினார்கள். அவர்களுடைய தலைவன் 'மிரபோ' என்பவன். ஏறக்குறைய இரண்டு வருஷங்கள் வரையில் அவர்கள் தேசிய சபையில் அதிகாரம் வகித்து வந்தார்கள். புரட்சியின் ஆரம்பக் காலத்தில் கிடைத்த வெற்றியினால் பூரிப்படைந்த அவர்கள் தைரியமான பல பிரகடனங்களை வெளியிட்டதோடு சில முக்கியமான மாறுதல்களையும் செய்தார்கள். 1789 ஆகஸ்டு 4-ம் நாளன்று, அதாவது பாஸ்டில்

சிறை வீழ்ச்சிக்கு இருபது நாளைக்குப் பின்னர், தேசிய சபையில், நாடகத்துக் கொப்பான ஒரு காட்சி நிகழ்ந்தது. சபைக்கு முன்னுலிருந்த விஷயம் நிலமானிய உரிமைகளையும் விசேஷச் சலுகைகளையும் ஒழிப்பதாகும். அப்போது பிரான்சில் வீசிய காற்றில்கூட ஒரு புதுச் சக்தி கலந்திருந்தது. அது ஜனங்களை நன்ருகப் பற்றிக் கொண்டது. நிலமானியப் பிரபுக்கள்கூட அப்புதிய சுதந்திர மதுவைப் பருகியவர்களாய்ச் சிறிது காலம் மயங்கிக் கிடந்தார்கள். பெரிய பெரிய பிரபுக்களும் மதஸ்தாபனத் தலைவர்களும் அச் சபா மண்டபத்தில் எழுந்து நின்று தங்களுடைய நிலமானிய உரிமைகளையும் விசேஷச் சலுகைகளையும் துறப்பதில் ஒருவரோடொருவர் போட்டி யிட்டார்கள். அவர்களுடைய இச்செய்கை இங்கிதமும், யோக்யமும் உதாரமும் வாய்ந்தது என்பதில் ஐயமில்லை. ஆனுல், சில வருஷங்கள் வரையில் அதனுல் அதிகப் பலன் ஒன்றும் விளையவில்லை. சில சமயங்களில், ஆனுல், வெகு அபூர்வமாய், விசேஷ உரிமை படைத்த வகுப்பார் இத்தகைய உதார உணர்ச்சிகளால் தூண்டப்படுகிருர்கள். அல்லது, தங்களுடைய விசேஷ உரிமைகளுக்கு நாள் நெருங்கிவிட்டது, இனித் தாங்களே தரும சிந்தையும் தாராள புத்தியும் உள்ளவர்கள்போல் காட்டிக் கொண்டு அவற்றை விட்டுக் கொடுத்து விடுவதுதான் உத்தமமான வழி என்று உணர்ந்து ஒருவேளை அவர்கள் அவ்வாறு செய்வதாகவும் இருக்கலாம். சில நாட்களுக்கு முன்புதான் பாபு (காந்திஜி) தீண்டாமையை ஒழிப்பதற்காக உண்ணுவிரதம் இருந்தபொழுது இந்தியாவிலுள்ள 'உயர் சாதி' ஹிந்துக்கள் இத்தகைய இங்கிதச் செயல் புரிந்ததை நாம் கண்டோம். அப்போது, மந்திரவாதியின் மந்திரக்கோலால் தட்டப்பட்டதுபோல், நாடெங்கும் உணர்ச்சிப் பேரலை பெருக்கெடுத்தோடியது.

உயர் சாதி ஹிந்துக்கள் தங்களுடைய சொந்தச் சகோதரர்கள் பலருக்குப் பூட்டியிருந்த தளைகள் ஓரளவு அறுந்து கீழே விழுந்தன. பல நூற்றுண்டுகளாக ஹரிஜனங்களுக்குச் சாத்தப்பட்டிருந்த ஆயிரக் கணக்கான கதவுகள் திடீரென்று திறந்து அவர்களை வரவேற்றன.

அவ்வாறே, புரட்சிப் பிரான்சின் தேசிய சபையும் உற்சாகப் பெருக்கில் தீர்மான அளவிலாவது—அடிமைத்தனத்தையும் விசேஷ உரிமைகளையும் நிலமானிய நீதிமன்றங்களையும், பிரபுக்களுக்கும் மதகுருமாருக்கும் இருந்த வரிவிலக்கையும், பட்டங்களையும் ஒழித்துவிட்டது. அரசன் இன்னும் இருந்து வந்தான். ஆனுல், பிரபுக்கள் மட்டும் தங்களுடைய பட்டங்களை இழந்துவிட்டார்கள். இதுதான் அதிலுள்ள ஆச்சரியம்.

அதற்குப்பின் தேசிய சபை 'மனித உரிமைப் பிரகடனம்' ஒன்றை நிறைவேற்றத் தொடங்கியது. புகழ் பெற்ற இப்பிரகடனத்தின் மூலக் கருத்து அமெரிக்காவின் சுதந்திரப் பிரகடனத்திலிருந்து எடுக்கப்பட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது. அமெரிக்கப் பிரகடனம் சுருக்கமாகவும் விளக்கமாகவும் இருக்கிறது. பிரெஞ்சுப் பிரகடனமோ விரிவாகவும் சிக்கலாகவும் இருக்கிறது. எந்த உரிமைகள் மனிதனுக்குச் சமத்துவத்தையும், சுதந்திரத்தையும், சுகத்தையும் அளிக்க வல்லனவோ அவையே மனித உரிமைகள் என்று கருதப்பட்டன. அக்காலத்தில், பிரெஞ்சு, 'மனித உரிமைப் பிரகடனம்' மிகுந்த வீரதீரம் நிறைந்ததாகத்தான் காணப்பட்டது. அதற்குப்பின் ஒரு நூற்றுண்டு வரையில் அதுவே ஐரோப்பாவின் ஜனநாயக வாதிகளுக்கும், தாராள வாதிகளுக்கும் பிரமாண்ட சாசனமாக இருந்து வந்தது. ஆயினும், இன்று பார்க்கும்போது அது காலத்துக்குப் பொருந்தாத்தாகத் தோன்றுகிறது. நமது காலத்துப்

பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அது பயன்படவில்லை. 'சட்டத்தின் முன்னிலையில் சமத்துவமும், வாக்குரிமையும் மட்டும் ஜனங்களுக்கு உண்மையான சமத்துவத்தையோ, சுதந்திரத்தையோ, சுகத்தையோ அளிக்க வல்லவை அல்ல; அவர்களைச் சுரண்டுவதற்கு அதிகாரத்தை வகிப்பவர்களுக்கு இன்னும் எத்தனையோ வழிகள் இருக்கின்றன' என்னும் உண்மையை ஜனங்கள் உணர்வதற்கு வெகுகாலம் பிடித்தது. பிரெஞ்சுப் புரட்சியின் காலத்திலிருந்ததைவிட இப்போது அரசியல் அறிவு அதிக முன்னேற்றம் அடைந்துவிட்டது; அல்லது, மாறுதல் அடைந்து விட்டது. இன்று, யதாபூர்விகளில் கூடப் பெரும்பாலோர் மனித உரிமைப் பிரகடனத்தில் அடங்கியுள்ள ஆரவாரமான கொள்கைகளை ஒருவேளை ஒப்புக்கொள்வார்கள். ஆனால் அதைக் கொண்டே அவர்கள் உண்மையான சமத்துவத்தையும் சுதந்திரத்தையும் அளிப்பதற்குத் தயாராயிருக்கிறார்கள் என்று நிதானித்துவிட முடியாது என்பது தெளிவு. உண்மையில் அப்பிரகடனம் தனி நபர் சொத்துரிமையைப் பாதுகாத்தது. பெரிய பிரபுக்களுக்கும் மதஸ்தாபனத்துக்கும் சொந்தமான எஸ்டேட்டுகள் வேறு காரணங்களுக்காகப் பறிமுதல் செய்யப்பட்டன. அவை நிலமானிய உரிமைகளையும் விசேஷச் சலுகைகளையும் பற்றியவை. ஆனால், ஒருவன் தனக்கென்று சொந்தமாகச் சொத்து வைத்துக் கொள்ளும் உரிமை பவித்திரமானதாகவும், ஆக்கிரமிக்கக் கூடாததாகவும் கருதப்பட்டது. இன்றைய முதிர்ந்த அரசியல் அறிவுக்குத் தனி நபர் சொத்துரிமை என்பது ஒரு தீமையாகவும் கூடியவரையில் ஒழிக்கப்பட வேண்டியதாகவும் படுகிறது. இவ்விஷயம் உனக்குத் தெரிந்திருக்கலாம்.

'மனித உரிமைப் பிரகடனம்' இன்று ஒரு

சாதாரணத் தஸ்தாவேஜியாக நமக்குத் தோன்றலாம். இறந்தகாலத்தில் முற்போக்கானவை என்று கருதப்பட்ட லட்சியங்கள் நிகழ்காலத்தில் அற்பமானவையாகத் தோன்றுவது இயற்கையே. ஆயினும், அப்பிரகடனத்தைப் பிரெஞ்சு மக்கள் ஆர்த்து முழங்கிய காலத்தில், அது ஐரோப்பாவின் நாடிகளில் பேரதிர்ச்சியை உண்டாக்கியது. அல்லல் பட்டோருக்கும், அழுத்தப் பட்டோருக்கும் அதனால் நற்காலம் பிறக்கும் என்றே தோன்றியது. அரசன் அப்பிரகடனத்தை விரும்பவில்லை. அதில் அடங்கியிருந்த ராஜ தூஷணத்தைக்கண்டு அவன் ஆச்சரிய முற்றான். அவன் அதற்கு அனுமதி அளிக்க மறுத்து விட்டான். அவன் இன்னும் வார்சேல்ஸ் நகரிலேயே இருந்து வந்தான். ஆகவே, வார்சேல்ஸ் அரண்மனையை நோக்கிப் பாரிஸ் ஜனக்கூட்டம் புறப்பட்டது. அதைத் தலைமைவகித்து நடத்திச் சென்றவர்கள் ஸ்திரீகள். அக்கூட்டம் அரசனைப் பிரகடனத்தை அநுமதிக்குமாறு செய்ததுமன்றி அவனைப் பாரிசுக்குச் செல்லுமாறும் கட்டாயப்படுத்தியது. சென்ற கடிதத்தின் இறுதியில் நான் குறிப்பிட்ட விசித்திர ஊர்வலம் இதுதான்.

தேசிய சபையானது வேறு பல பயனுள்ள சீர்திருத்தங்களையும் நிறைவேற்றியது. மதஸ்தாபனத்தின் திரண்ட ஆஸ்தி பாஸ்திகள் அரசாங்கத்தால் பறிமுதல் செய்யப்பட்டன. பிரான்சு தேசம் எண்பது புதிய பிரிவுகளாகச் செய்யப்பட்டது. அப்பிரிவினை இன்றளவும் இருக்கிறதென்று நினைக்கிறேன். நிலமானிய நீதி மன்றங்களின் ஸ்தானத்தில் நேர்மையான நியாயஸ்தலங்கள் தோன்றின. இவையெல்லாம் நன்மையானவை தான். ஆனால், அவை போதிய அளவு செல்லவில்லை. கிராமங்களில் நிலத்துக்குத் தவித்த குடியானவர்களுக்கும்,

பட்டணங்களில் சோற்றுக்குத் தவித்த மக்களுக்கும் அச் சீர்திருத்தங்கள் அதிக உதவி புரியவில்லை. புரட்சியின் வேகம் தடுத்து நிறுத்தப்பட்டதுபோல் தோன்றியது. நான் ஏற்கெனவே கூறியபடி, கிராமக் குடியானவர்களுக்கும், பட்டணத்துச் சாமானியருக்கும் தேசிய சபையில் பிரதிநிதித்துவம் என்பது இல்லவே இல்லை. அச்சபை மிரபோவைத் தலைவனாகக்கொண்ட மத்திய வகுப்பாரின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. தங்களுடைய நோக்கங்கள் நிறைவேறி விட்டன என்று கண்டவுடனே அவர்கள் புரட்சியைத் தடுத்து நிறுத்தத் தங்களால் இயன்றவரையில் முயன்றார்கள். அவர்கள் அரசனுடன் சேர்ந்துகொண்டு மாகாணங்களிலுள்ள குடியானவர்களைச் சுட்டுத் தள்ளுவதற்குக்கூட ஆரம்பித்து விட்டார்கள். அவர்களுடைய தலைவனான மிரபோ அரசனுடைய அந்தரங்க ஆலோசனையாளனாகி விட்டான். இப்போது பாஸ்டில் சிறையை வீழ்த்தி, அதன்மூலம் தங்களைப் பிணித்திருந்த கட்டுகளை உதறி எறிந்து விட்டதாக எண்ணிக்கொண் டிருந்த சாமானிய ஜனங்களின் கதி என்ன? அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. அவர்களுடைய சுதந்திரம் பழையபடி இன்னும் வெகு தொலைவில் இருப்பதாகவே தோன்றியது. பழைய பிரபுக்களின் தோரணையிலேயே புதிய தேசிய சபையும் அவர்களை அழுத்தி வந்தது.

பாரிஸ் தான் புரட்சியின் இருதயஸ்தானம். தேசிய சபையில் தங்களுடைய நோக்கம் பலிக்காததைக் கண்ட பாரிஸ் மக்கள் தங்களுடைய புரட்சிப் பேராற்றலைச் செலுத்துதற்கு வேறொரு வழி காணத் தொடங்கினார்கள். அவர்கள் பாரிஸ் 'கம்யூன்' (Commune) அல்லது 'முனிசிபாலிடி' என்கிற ஒரு ஸ்தாபனத்தைத் தோற்றுவித்தார்கள். கம்யூன் மட்டுமின்றி, அதற்கு அங்கத்தினர்களை அனுப்பி வந்த நகரின் ஒவ்வொரு பிரிவிலும் ஜனங்களுடன் நேர் தொடர்பு கொண்ட உயிருள்ள ஸ்தாபனங்கள் தோன்றின. கம்யூனும், சிறப்பாக, அதன் பிரிவுகளும் புரட்சியின் கொடியை உயர்த்திப் பிடித்தன. அவை மிதவாத, மத்திய வகுப்புத் தேசிய சபைக்குப் போட்டியாக விளங்கின.

இதற்கிடையில் பாஸ்டில் சிறை வீழ்ச்சியின் ஆண்டு விழா வந்தது. ஜூலை, 14-ம் நாளைப் பாரிஸ் மக்கள் மாபெருந் திருநாளாகக் கொண்டாடினார்கள். அது கூட்டு அரசியல் திருவிழா (fete of the Federation), என்று அழைக்கப்பட்டது. பாரிஸ் நகரத்தில் வாழ்ந்து வந்த சாமானிய ஜனங்கள் தாங்களாக்வே முன் வந்து இலவசமாக நகரை அலங்கரித்தார்கள். அந்தத் திருவிழா அவர்களுடைய சொந்தத் திருவிழா என்பதை அவர்கள் உணர்ந்திருந்தார்கள்.

1790—91-ல் புரட்சியின் நிலை இவ்வாறு இருந்தது. தேசிய சபை தன்னுடைய புரட்சி ஆர்வம் பூராவையும் இழந்து விட்டது. அது போதிய மாறுதல்களைச் செய்து முடித்து விட்டதாக எண்ணியது. ஆனால், பாரிஸ் மக்களின் உள்ளத்தில் புரட்சித்தீ கனன்றுகொண்டிருந்தது. குடியானவர்களின் நிலப் பசி இன்னும் தணியவில்லை. இவ்வித இரண்டுங்கெட்டான் நிலைமை நெடு நாளைக்கு நீடிக்க முடியாதல்லவா? புரட்சி, ஒன்று ஓங்க வேண்டும்; அல்லது, ஓய வேண்டும். மிதவாதத் தலைவனான மிரபோ 1791-ம் வருஷ ஆரம்பத்தில் இறந்து விட்டான். அவன் அரசனுடன் சேர்ந்து கொண்டு இரகசியமாகச் சதி செய்தாலும் வெகு ஜனப் பிரியனாக இருந்தான். ஆகவே, அவன் ஜனங்களை ஒரு கட்டுக்குள் அடக்கி வைத்திருந்தான். 1791-ம் ஆண்டு ஜூன் மாதம் 21-ம் தேதி நடந்த ஒரு சம்பவம் புரட்சி

யின் தலை விதியை நிர்த்தாரணம் பண்ணியது. அன்று அரசன் 16-வது லூயியும் அரசி மேரி அன்டாயினெட்டும் மாறுவேடம் பூண்டு நாட்டை விட்டு ஓட முயற்சித்தார்கள். அவர்கள் எல்லைப்புறத்தைக் கூட அடைந்து விட்டார்கள். ஆனால், வர்டனுக்கு அருகிலுள்ள வாரென்ஸ் என்னுமிடத்தில் அவர்களைச் சில குடியானவர்கள் அடையாளங் கண்டு கொண்டார்கள். உடனே, அரசனும் அரசியும் தடுத்து நிறுத்தப்பட்டுப் பாரிசுக்குக் கொண்டு வரப்பட்டார்கள்.

அரச தம்பதிகளின் இந்நடத்தை, பாரிஸ் மக்களைப் பொறுத்த வரையில், அவர்களுடைய தலையெழுத்தை முடிவு செய்து விட்டது. குடியரசுக் கொள்கை இப்போது அதிவிரைவில் வளரத் தொடங்கியது. ஆயினும், அப்போதைய தேசிய சபையும், அரசாங்கமும் லூயியைச் சிம்மாசனத்தை விட்டு நீக்கவேண்டும் என்று கோரிய ஜனங்களைச் சுட்டுத்தள்ளி வந்தன. அவை அவ்வளவு பழுத்த மிதவாதத் தன்மை கொண்டவையாகவும், பொது ஜன உணர்ச்சிக்கு அவ்வளவு தூரம் அப்பாற்பட்டவையாகவும் இருந்தன. புரட்சியின் போது பிரகாசித்த பெரியார்களுள் மாரட் என்பவர் ஒருவர். அரசன் நாட்டைவிட்டு ஓட முயற்சித்த பிறகு அவர் அவனை ஒரு துரோகி என்று பழித்தார். அதற்காக அதிகாரிகள் அவரை வேட்டையாடினர். அதற்குப் பயந்து அவர் பாரிஸ் நகரத்துச் சாக்கடைகளில் ஒளிந்து கொள்ள வேண்டியதாயிற்று. அங்கே, அவர் பயங்கரமான சர்மவியாதியால் பீடிக்கப்பட்டார்.

வேடிக்கை என்னவென்றால், இந் நிகழ்ச்சிக்குப்பின் ஓராண்டு வரையிலும் லூயி பெயரளவில் அரசனாயிருந்து வந்தான். 1791 செப்டம்பரில் தேசிய சபையின் ஆயுள் முடிந்தது. அதன் ஸ்தானத்தில் சட்ட

சபை (Legislative Assembly) தோன்றியது. இதுவும் தேசிய சபையைப் போன்றே மிதவாதப் போக்கு உள்ளதாகவும், உயர் வகுப்பாருக்கு மட்டும் பிரதிநிதித்துவம் வாய்ந்ததாகவும் இருந்தது. பிரான்சின் ஜுரவேகம் நாளுக்கு நாள் அதிகரித்து வந்தது. அதை உள்ளவாறு எடுத்துக் காட்டும் உஷ்ணமானியாகச் சட்டசபை அமையவில்லை. புரட்சி ஜுரம் பொது மக்களிடையே பரவிவந்தது. அப் பொதுமக்களிடையில் தோன்றிய தீவிரக் குடியரசுவாதிகளாகிய ஜாகோபின்களின் பலம் வளர்ந்து வந்தது.

இதற்கிடையில், ஐரோப்பாவின் இதர அரசுகள் பிரான்சில் நடந்து வந்த இவ் விசித்திர நிகழ்ச்சிகளை அச்சத்துடன் கவனித்துக் கொண்டு வந்தன. சிறிது காலம் வரையில் பிரஷியா, ஆஸ்திரியா, ருஷியா ஆகிய இம்மூன்று நாடுகளும் புராதன தேசமாகிய போலந்தைத் தங்களுக்குள் பங்கு போட்டுக் கொள்வதில் முனைந்திருந்தன. அதற்குள், பிரான்சின் விஷயம் ரொம்ப தூரத்துக்குப் போய்விட்டது. ஆகவே, அது அவர்களுடைய கவனத்தைக் கவர்ந்தது. 1792-ல் பிரான்சு ஆஸ்திரியாவுடனும் பிரஷியாவுடனும் போரிட்டுக் கொண்டிருந்தது. அப்போது, நெதர்லாந்தின் பெல்ஜியம் பகுதி ஆஸ்திரியாவின் கையில் இருந்தது. பெல்ஜியம் பிரான்சை அடுத்த நாடு. வெளிநாட்டுச் சேனைகள் பெல்ஜியம் வழியாகப் பிரான்சுக்குள் புகுந்து பிரெஞ்சுத் துருப்புகளைத் தோற்கடித்து விட்டன. அரசன் எதிரிகளுக்கு உடந்தையாயிருக்கிறான் என்று ஜனங்கள் சந்தேகித்தார்கள். அதற்குக் காரணம் இல்லாமலில்லை. ராயலிஸ்டுகள் (ராஜவிசுவாசக் கட்சியினர்) அனைவரும் நாட்டைக் காட்டிக் கொடுக்கும் துரோகிகள் என்கிற எண்ணம் ஜனங்களுக்கு உதித்தது. தங்களைச் சூழ்

துள்ள அபாயங்கள் பெருகப் பெருக ஜனங்களின் பீதியும் கோபமும் வளர்ந்தன. அவர்களுடைய கண்களுக்கு யாரைப் பார்த்தாலும் உளவாளிகளாகவும் துரோகிகளாகவும் தென்பட்டது. இந்த நெருக்கடியான சமயத்தில் புரட்சி வேகமுள்ள பாரிஸ் கம்யூன் முன்னின்று செயலாற்றத் துணிந்தது. ராஜ தர்பாரின் தேசத்துரோகமான கலகத்துக்கு எதிராகப் பொது ஜனங்கள் ராணுவச் சட்ட அமுல் தொடங்கி விட்டார்கள் என்பதற்கு அறிகுறியாக அது செங்கொடியை நாட்டியது. 1792 ஆகஸ்டு 10-ல் அது அரசனுடைய அரண்மனையைத் தாக்குவதற்கு உத்தரவு பிறப்பித்தது. அரண்மனையைத் தாக்கிய ஜனங்களை அரசன் தனது ஸ்விஸ் மெய்க்காப்பாளர்களைக் கொண்டு சுட்டுக் கொல்வித்தான். ஆனால், விஜயஸ்ரீயோ ஜனங்களின் சார்பில் இருந்தாள். பாரிஸ் கம்யூனது சட்டசபையைக் கொண்டு அரசனைச் சிம்மாசனத்தினின்று கீழிறக்கி அவனைச் சிறையிலும் அடைத்தது.

உலகெங்குமுள்ள தொழிலாளர்களின் கொடியாகவும் அபேதவாதத்திற்கும் பொது உடைமைக்கும் உரிய கொடியாகவும் இப்போது செங்கொடி விளங்குகிறதென்பது யாவரும் அறிந்ததே. முன்காலத்தில் ஜனங்களுக்கு விரோதமாக ராணுவச் சட்ட அமுல் நடத்துவதாயின் அரசாங்கங்கள் செங்கொடியைப் போடுவது வழக்கம். ஜனங்களின் சார்பாகப் பாரிஸ் கம்யூன் தான் முதன் முதலில் செங்கொடியை உபயோகித்ததென்று நான் நினைக்கிறேன். ஆனால் அதை நான் அவ்வளவு நிச்சயமாகச் சொல்ல முடியாது. அதிலிருந்துதான் அது சிறிது சிறிதாகத் தொழிலாளர்களின் கொடியாக மாறியது.

அரசனைச் சிம்மாசனத்திலிருந்து நீக்கிச் சிறையில் தள்ளியதோடு ஜனங்கள் திருப்தி அடையவில்லை. தங்களில் பலரைச் சுட்டுக் கொன்ற ஸ்விஸ் மெய்க்காப்பாளரின் செய்கையைக் கண்டு பாரிஸ் ஜனங்களின் கோபத்தீ கொழுந்து விட்டெரிந்தது. உளவாளிகளாலும் துரோகிகளாலும் என்ன தீமை நேர்ந்து விடுமோ என்று அவர்கள் அஞ்சினார்கள். ஆகவே, அவர்கள் தாங்கள் சந்தேகப்பட்ட பேர்வழிகளையெல்லாம் கைது செய்து சிறைகளை நிரப்பிக் கொண்டே போனார்கள். கைது செய்யப் பட்டவர்களில் பலர் குற்றவாளிகள் என்பதில் ஐயமில்லை. ஆனால், அவர்களில் அநேக நிரபராதிகளும் இருந்தார்கள். சில நாட்களுக்குப் பிறகு ஜனங்களின் சினத்தீ மீட்டுமொரு முறை கனன்றெழுந்தது. அவர்கள், கைது செய்யப்பட்டவர்களையெல்லாம் சிறைகளிலிருந்து கொண்டு வந்து, ஒப்புக்கு ஒரு விசாரணை நடத்தி விட்டு, அவர்களில் பெரும்பாலோரைக் கொன்று விட்டார்கள். இது 'செப்டம்பர் படுகொலை' என்று அழைக்கப் படுகிறது. இதில் ஆயிரம் பேருக்கு மேல் கொல்லப் பட்டார்கள். ரத்தத்தின் ருசியைப் பாரிஸ் ஜனக்கூட்டம் நன்கு கண்டது இது தான் முதல் தடவையாகும். இதற்குப் பின் எவ்வளவோ ரத்தம் ஆறுய்ப் பெருகிய பின்னரே அந்த ரத்ததாகம் தணிந்தது.

அந்தச் செப்டம்பர் மாதத்திலேயே, படையெடுத்து வந்த ஆஸ்திரிய, பிரஷியத் துருப்புகள் மீது பிரெஞ்சுத் துருப்புகள் முதன் முதலாக வெற்றி அடைந்தன. வால்மி என்னுமிடத்தில் நடந்த சிறு சண்டையில் இந்த வெற்றி அவர்களுக்குக் கிடைத்தது. வெற்றி சிறிதாயினும் அதன் பலன் பெரிதாயிருந்தது. அதனால் புரட்சியே காப்பாற்றப்பட்டது.

1792 செப்டம்பர் 21-ல் தேசிய கன்வென்ஷன்

(National Convention) சபை கூடியது. இது சட்ட சபையின் ஸ்தானத்தில் ஏற்பட்ட புதிய சபையாகும். இதற்கு முன்னிருந்த இரண்டு சபைகளைவிட இது அதிக முற்போக்கு வாய்ந்ததாக இருந்தது. ஆனால், இதுகூடப் பாரிஸ் கம்யூன் அளவுக்கு முற்போக்கு வாய்ந்ததாக இல்லை. தேசிய கன்வென்ஷன் செய்த முதல் காரியம் குடியரசுப் பிரகடனம் ஆகும். அதற்குப் பின் லூயியின் விசாரணை நடந்தது. அவனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. 1793 ஜனவரி 21-ல் அவன் தன் தலையைக் கொடுத்து முடியரசின் பாவங்களுக்குக் கழுவாய் தேடினான். அவன் கிலடினில் இடப்பட்டான். அதாவது, கிலடின் என்னும் யந்திரத்தால் அவன் சிரச்சேதம் செய்யப்பட்டான். அன்றைய தினம் பிரெஞ்சு மகாஜனங்கள் முடியரசுக்குத் திலதர்ப்பணம் செய்துவிட்டார்கள். அன்றைய தினம் அவர்கள் ஐரோப்பாவின் மன்னாதி மன்னர்களையெல்லாம் முடிவாக எதிர்த்து நின்றுவிட்டார்கள். முன் வைத்த காலைப் பின் வைப்பதென்பது இனி அவர்களுக்கு இல்லை. லூயியின் ரத்தம் புலரா முன்னரே, அவன் தலையைத் துண்டித்த அதே கிலடின் படிகளிலிருந்து, தாந்தன் என்னும் புரட்சிப் பெருந்தலைவன் ஒருவன் அங்கு கூடியிருந்த ஜனங்களுக்கு முன்னிலையில் ஐரோப்பாவின் அரசர்களுக்குப் பின்வரும் அறைகூவலை விடுத்தான்: "ஐரோப்பாவின் அரசர்கள் நம்மைப் போருக்கு அழைப்பார்கள். இதோ, அவர்களுக்கு முன்னால் ஒரு அரசன் தலையை நாம் விட்டெறிகிறோம்" என்று அவன் ஆர்ப்பரித்தான்.

102

புரட்சியும் எதிர்ப்புரட்சியும்

அக்டோபர் 13, 1932.

அரசன் லூயி போய்விட்டான். ஆனால், அவனுடைய மரணத்துக்கு முன்பே பிரான்சு ஆச்சரியகரமாக மாறியிருந்தது. புரட்சி என்னும் ஜுர வேகத்தால் பிரெஞ்சு மக்களின் ரத்தம் கொதித்துக்கொண்டிருந்தது. அவர்களுடைய நாடி நரம்புகளெல்லாம் துடித்துக்கொண்டிருந்தன. புரட்சிப் போராவேசத்துக்கு ஆட்பட்ட அவர்கள் சுவாலை விசிறும் தீப்பிழம்பெனத் திகழ்ந்தார்கள். பிரான்சு நீங்கலான ஐரோப்பா, அதாவது, முடியரசு ஐரோப்பா குடியரசுப் பிரான்சை எதிர்த்து நின்றது. குடியரசுப் பிரான்சும் தன்னைக் காத்துக்கொள்ளச் சன்னத்தமாயிருந்தது. குடியரசுப் பிரான்சு, வீரியமற்ற ஐரோப்பிய அரசர்களுக்குச் சுதந்திரம் என்னும் சூரிய வெளிச்சத்தில் மூழ்கி எழுந்த தேசபக்தர்கள் எவ்வாறு போரிடுவார்கள் என்பதைக் காட்டப் போகிறது. அவர்கள் தங்களுக்குப் புதிதாகக் கிடைத்த சுதந்திரத்துக்காக மட்டுமின்றி, அரசர்களாலும் பிரபுக்களாலும் நசுக்கப்படுவோர் அனைவருடைய சுதந்திரத்துக்காகவும் போரிடப் போகிறார்கள். மற்ற ஐரோப்பிய நாடுகளில் வாழும் மக்களுக்கெல்லாம் பிரெஞ்சு மக்கள் தங்களுடைய செய்தியை அனுப்பினார்கள். 'நாங்கள் சகலதேச ஜனங்களுக்கும் தோழர்கள்; சகலதேச அரசர்க்கும் பகைவர்கள். உங்களுடைய அரசர்களுக்கு விரோதமாக எழும்படி நாங்கள் உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்' என்று அவர்கள் சொன்னார்கள். சுதந்திரத்தின் தாயாகிய பிரான்சுக்காகத் தியாகம் செய்வதே

ஒரு ஆனந்தமாக இருந்தது. பிரெஞ்சு மக்கள் போராவேசமுற்றிருந்த அந்தச் சமயத்தில் அவர்களுக்கு ஒரு அற்புதமான கீதம் கிடைத்தது. அந்தக் கீதத்தின் இசை அவர்களுடைய எரிகின்ற இருதய சுருதிக்கு ஒத்ததாயிருந்தது. அந்தக்கீதத்தை முழங்கிக் கொண்டே அவர்கள் எதற்கும் அஞ்சாது, எவ்விதத் தடைகளையும் பொருட்படுத்தாது போர்களத்துக்குத் தாவிச்சென்றார்கள். அது ரைன்நதிச் சேனைக்காக ரூஜேடிலைல் என்பவன் இயற்றிய யுத்தகீதமாகும். அதிலிருந்து அந்தக் கீதம் 'மார்சேல்ஸ்' (Marseillaise) என்னும் பெயரால் வழங்கி வருகிறது. இன்னும் பிரான்சு தேசத்தின் தேசிய கீதம் அதுவேயாகும்.

அர்த்தமற்ற 'அரச வாழ்த்து'க் கீதங்களை அவர்கள் பாடவில்லை. அதற்குப் பதிலாக, அவர்கள் தூய தாய் நாட்டுப் பக்தியைப் பற்றியும், உயிரினுமினிய சுதந்திரத்தைப் பற்றியும் பாட்டிசைத்தார்கள்.

அக்காலத்தில், பிரெஞ்சு மக்கள் சொல்லொணாக் கஷ்டங்களை அனுபவித்தார்கள். அவர்களுக்குப் போதிய உணவோ, உடையோ, பாதரட்சைகளோ இல்லை. அவர்களிடம் போதிய ஆயுதங்கள் கூட இல்லை. சேனையின் உபயோகத்துக்காகத் தங்கள் பூட்சுகளையும், பாதரட்சைகளையும் கொடுக்குமாறு பல இடங்களில் ஜனங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். தேச பக்தர்கள், எளிதில் கிடைக்காத பல வகை உணவுகளைச் சேனைக்குக் கொடுத்துதவினார்கள். சிலர் சேனைக்கு ஆகாரம் அளிப்பதற்காகத் தாங்கள் அடிக்கடி பட்டினி யிருந்து வந்தார்கள். தோல், சமையல் பாத்திரங்கள், வாணலிகள், வாளிகள் போன்ற பல வீட்டுச் சாமான்கள் ஜனங்களிடமிருந்து கேட்டு வாங்கிக் கொள்ளப்பட்டன. பாரிஸ் நகரத்து வீதிகளில் பல உலைக் கூடங்களில் ஆயுதங்கள் செய்யப்பட்டு வந்தன. உலைக்கூட வேலைகளில் கூட ஆண்களும் பெண்களும் பங்கெடுத்துக் கொண்டார்கள். அவர்கள் மிகப் பெரிய இன்னல்களுக்கு ஆளானார்கள். ஆனால், பிரான்சு, அழகான பிரான்சு, தந்தைநாடு, கந்தையுடுத்த, ஆனால் சுதந்திரத் திருமுடி புனைந்த பொன்னாடு. அதை அபாயம் சூழ்ந்திருக்கையில், அதைப் பகைவன் தாக்குகையில் அவர்களுடைய கஷ்டந்தானா ஒரு பிரமாதம்! ஆகவே, எண்ணற்ற இளைஞர்கள் தங்கள் தாய் நாட்டைக் காக்க விரைந்தார்கள். பசி தாகங்களைப் பொருட்படுத்தாமல் போராடிய அவர்கள் வாகைசூடி நின்றார்கள். கார்லைல் சொல்லுகிறான்: "ஒரு ஜன சமுதாயம் பூராவும் ஒரு விசுவாசத்தைக் (Faith) கொண்டு நிற்பது மிகவும் துர்லபம். தாங்கள் உண்பன, பழகுவன போன்ற விஷயங்களைத் தவிர்த்து அவர்களுக்கு வேறெதிலும் விசுவாசம் இருப்பதில்லை. அப்படியின்றி ஜனசமுதாயம் முழுதும் ஒரு மகா விசுவாசத்தைப் பற்றிநிற்கும்போது அதன் சரித்திரம் உணர்ச்சி யூட்டுவதாகவும் ஒப்பற்றதாகவும் மாறிவிடுகிறது." இத்தகைய மகா விசுவாசமானது, அதாவது, ஒரு பெரிய கொள்கையில் நம்பிக்கையானது புரட்சிக் காலத்து ஸ்திரீ புருஷர்களுக்கு ஏற்பட்டது. பிரசித்தி பெற்ற அந்நாட்களில் அவர்கள் சிருஷ்டித்த சரித்திரமும், செய்த தியாகமும் இன்னும் நம்முயிரினுள் பாய்ந்து நமக்கு உணர்ச்சியூட்டக் கூடியனவாக இருக்கின்றன.

புரட்சிச் சேனைகளின் போர்வீரர்கள் பெரும்பாலும் போருக்குப் புதியவர்கள். அவர்களுக்குப் போதிய பயிற்சி கிடையாது. ஆயினும், அவர்கள் பிரான்சில் காலடி வைத்த வெளிநாட்டுத் துருப்புகளை விரட்டியடித்ததுமல்லாமல், கீழ்நெதர்லாந்தையும் (பெல்ஜியம் முதலிய இடங்கள்) ஆஸ்திரியரிடமிருந்து விடுவித்தார்கள். நெதர்லாந்திலிருந்து கடைசித் தடவையாக

ஹாப்ஸ்பர்க் வமிசத்தார் விடை பெற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. மீண்டும் அவர்கள் அங்கே திரும்பி வரவில்லை. போரிடுவதையே தொழிலாக உடைய, பயிற்சி மிக்க ஐரோப்பிய சேனைகள் போர்ப் பயிற்சியற்ற புரட்சிச் சேனைகளை எதிர்த்து நிற்க முடியவில்லை. பயிற்சி பெற்ற போர்வீரன் சம்பளத்துக்குச் சண்டை போடுகிறான்; ஆகவே, அவன் அஜாக்கிரதையாகப் போரிடுகிறான். புரட்சிச் சைனியத்தில் புதிதாகச் சேர்ந்தவனோ ஒரு இலட்சியத்துக்காகப் போரிடுகிறான்; ஆகவே, அவன், அனுபவமற்றவனாயினும் லட்சிய சித்திக்காக எத்தகைய அபாயங்களையும் ஏற்கத் துணிகிறான். முன்னவன் ஒரு மூட்டை சாமான்களைச் சுமந்துகொண்டு மெள்ளமாகச் செல்கிறான்; பின்னவனுக்கோ அதிக சாமான்கள் கிடையா; ஆகவே, அவன் விரைந்து முன்னேறுகிறான். புதுவகையான புரட்சிச் சேனைகள் புதுவகையான போர் முறைகளைக் கையாண்டன. அவை பழைய போர் முறைகளையெல்லாம் மாற்றிவிட்டன. அடுத்த நூறு ஆண்டுகளில் அவையே ஐரோப்பிய சேனைகளுக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்தன. ஆனால், புரட்சிச் சேனைகளின் உண்மையான பலம் அவர்களுடைய ஆவேசத்திலும் சாகசத்திலும்தான் இருந்தது. அந்தக் கட்டத்தில், புரட்சிச் சேனைகளுக்கும் சரி, புரட்சிக்கும் சரி, கீழ்வரும் தாந்தேயின் வாக்கியமே ஆதர்ச வாக்கியமாக இருந்தது: "நமது தந்தை நாட்டின் பகைவர்களை வெல்வதற்கு நமக்குத் தைரியம் வேண்டும், அதிகத் தைரியம் வேண்டும். எக்காலத்தும் தைரியம் வேண்டும், எல்லாத் தைரியமும் வேண்டும்."

யுத்தம் பரவியது. தன்னுடைய கப்பற்படை காரணமாக இங்கிலாந்து பலம் மிகுந்த விரோதியாய் விட்டது. புரட்சிப் பிரான்சின் தரைப் படை பெரிதாயிருந்தது.

ஆனால், கடலில் அது வலியற்றதாயிருந்தது. பிரெஞ்சுத் துறைமுகங்களையெல்லாம் இங்கிலாந்து முற்றுகையிட்டது. பிரான்சிலிருந்து இங்கிலாந்துக்கு ஓடிப்போனவர்கள் அங்கிருந்து பிரெஞ்சுக் குடியரசு நோட்டுகளைப் போன்ற கள்ள நோட்டுகளை லட்சக்கணக்கில் அச்சடித்துப் பிரான்சில் தள்ளிக்கொண்டிருந்தார்கள். இவ்வாறு, பிரான்சின் நாணயச் செலாவணியையும், நிதி நிருவாகத்தையும் அவர்கள் சீரழிக்க முயன்றார்கள்.

வெளிநாடுகளுடன் நடந்து வந்த யுத்தமே மற்றெல்லாவற்றையும்விடப் பிரான்சின் கவனத்தைக் கவர்ந்தது. தேசத்தின் முழுச் சக்தியும் யுத்தத்தில் செலுத்தப்பட்டது. இத்தகைய யுத்தங்கள் புரட்சிகளுக்குப் பெருங்கேடு விளைப்பனவாகும். ஏனெனில், அவை தேசத்தின் கவனத்தைச் சமூகப் பிரச்சினைகளிலிருந்து வெளிநாட்டு விரோதியை வெல்லும் பிரச்சினைகளில் திருப்பி விடுகின்றன. அதனால், புரட்சியின் உண்மை நோக்கம் நிறைவேறாது போய்விடுகிறது. புரட்சி ஜுரத்துக்குப் பதிலாக யுத்த ஜுரம் அடிக்க ஆரம்பித்துவிடுகிறது. பிரான்சிலும் இதுவே நிகழ்ந்தது. பிரான்சின் கடைசிநிலை ஒரு பெரிய ராணுவத் தளகர்த்தனின் சர்வாதிகாரத்தில் வந்து முடிந்ததைப் பின்பு காண்போம்.

உள்நாட்டிலேயே குழப்பம் உண்டாயிற்று. மேல் பிரான்சில் வெண்டே என்னுமிடத்தில் ஒரு பெரிய குடியானவர் கலகம் விளைந்தது. அதற்கு ஒரு காரணம் அங்குள்ள குடியானவர்கள் புதிய சேனையில் சேர மறுத்ததாகும். இன்னொரு காரணம் ராஜவிசுவாசக் கட்சித்தலைவர்கள், ஓடிப்போனவர்கள் ஆகியோருடைய தூண்டுதலாகும். பாரிஸ் மக்கள்தான் புரட்சிக்குத் தலைமைவகித்து அதை உண்மையில் நடத்திவந்தவர்கள்.

தலைநகரான பாரிசில் தோன்றும் துரிதமான மாறுதல்களை மாகாணங்களிலுள்ள குடியானவர்கள் அறிந்துகொள்ள முடிவதில்லை. ஆகவே, அவர்கள் பின் தங்கிவிட்டார்கள். வெண்டே கலகம் மிக்க குரூரமான முறையில் அடக்கப்பட்டது. போர் நடக்குங்காலையில், அதுவும் உள்நாட்டுப் போர் நடக்குங்காலையில் மக்களின் காம, குரோத, மத, மாற்சரியங்கள் கங்கு கரையின்றிப் பெருகிவிடுகின்றன. அத்தகைய சந்தர்ப்பங்களில் ஜீவதயை என்பது புகலிடமின்றி அலைந்துதிரிகிறது. லியான்ஸ் நகரில் புரட்சிக்கு எதிரான கலகம் ஒன்று விளைந்தது. அது உடனே அடக்கப்பட்டது. லியான்ஸ் நகரின் நடத்தைக்குத் தண்டனையாக அந் நகரையே அழித்துவிட வேண்டுமென்று ஒரு யோசனை கூறப்பட்டது. "லியான்ஸ் சுதந்திரத்துக்கு விரோதமாக யுத்தம் புரிந்தது. லியான்ஸ் இனி இருக்கக் கூடாது" என்கிற கூக்குரல் எழுந்தது. அதிருஷ்டவசமாக லியான்சை அழிக்கும் யோசனை ஒப்புக்கொள்ளப்படவில்லை. ஆனால், அது பெருந்துன்பத்துக்கு உள்ளாக்கப்பட்டது.

இதற்கிடையில், பாரிசில் என்ன நிகழ்ந்துகொண்டிருந்தது? அங்கே ஆதிக்கம் செலுத்திவந்தது யார்? புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு கம்யூனும் அதன் பிரிவுகளும் பாரிசின்மீது ஆதிக்கம் செலுத்திவந்தன. தேசிய கன்வென்ஷனில் பல்வேறு கட்சிகள் அதிகாரத்துக்காகப் போராடிக்கொண்டிருந்தன. அவற்றில், கிராண்டின்கள் அல்லது மிதவாதக் குடியரசுவாதிகளின் கட்சியும், ஜாகோபின்கள் அல்லது தீவிரக் குடியரசுவாதிகளின் கட்சியும் முக்கியமானவை. கடைசியில் ஜாகோபின்களுக்கு வெற்றி கிடைத்தது. 1793 ஜூனில் கிராண்டின் பிரதிநிதிகளில் பெரும்

பாலோர் கன்வென்ஷனிலிருந்து நீக்கப்பட்டனர். நிலமானிய உரிமைகளை ஒழிப்பதற்கான முடிவான நடவடிக்கையைக் கன்வென்ஷன் எடுத்துக்கொண்டது. நிலமானியப் பிரபுக்களுக்குச் சொந்தமான நிலங்கள் அவ்வவ்விடங்களிலுள்ள கம்யூன்கள் அல்லது முனிசிபாலிடிகளுக்குத் திருப்பித் தரப்பட்டன. அதாவது, அந்நிலங்கள் சமுதாயப் பொது உடைமையாகி விட்டன.

இப்போது கன்வென்ஷன் ஜாகோபின்களின் கையில் இருந்தது. அது, பொது நன்மைக் கமிட்டி (Committee of Public Welfare), பொதுப் பாதுகாப்புக்கமிட்டி (Committee of Public Safety) என இரு கமிட்டிகளை நியமித்து அவற்றிற்கு நிறைய அதிகாரம் கொடுத்தது. இக்கமிட்டிகள்—சிறப்பாகப் பாதுகாப்புக் கமிட்டி—விரைவில் அதிகப் பலம் பொருந்தியவையாகிவிட்டன. அவற்றைக் கண்டு அனைவரும் அஞ்சி நடுங்கினார்கள். அக்கமிட்டிகள் கன்வென்ஷனை ஒரு காரியத்திலிருந்து மற்றொரு காரியத்துக்கு உந்திக்கொண்டே சென்றன. கடைசியில் புரட்சியே 'பீதி' என்கிற கிடுகிடு பாதாளத்தில் கால் தடுக்கித் தலை குப்புற வீழ்ந்துவிட்டது. அச்சத்தின் நிழல் யாவர் மீதும் படர்ந்தது. ஒரு பக்கம், அவர்களைச் சூழ்ந்துநின்ற வெளிநாட்டு விரோதிகளிடத்து அச்சம்; மற்றொரு பக்கம் நாடு முழுதும் நிறைந்திருந்த உளவாளிகள், துரோகிகளிடத்து அச்சம். அச்சம் மனிதனைக் குருடாக்கிவிடுகிறது. அச்சத்துக்கு ஆட்பட்டவன் ஒன்றையும் கவனியாமல் எதையும் செய்யத்துணிந்துவிடுகிறான். இத்தகைய அச்சத்தால் சதாசர்வகாலமும் அலைக்கப்பட்டுவந்த கன்வென்ஷனானது 1793, செப்டம்பரில் 'சந்தேகிக்கப்பட்டோர் சட்டம்' (Law of Suspects) என்ற ஒரு பயங்கரச் சட்டத்தை இயற்றியது.

யார் சந்தேகிக்கப்பட்டாலும் சரி, அவனுடைய உயிர் அவனுக்குச் சொந்தமல்ல. சந்தேகம் கொள்வதென்றால் யார்தான் அதற்குத் தப்பிப் பிழைக்க முடியும்? ஒரு மாதத்துக்குப் பிறகு கன்வென்ஷனைச் சேர்ந்த 22 கிராண்டின் பிரதிநிதிகள் புரட்சி நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டு அவசர அவசரமாக மரண தண்டனை அளிக்கப்பட்டார்கள்.

இவ்வாறு, 'பீதி' — பயங்கர அடக்குமுறை — ஆரம்பமாயிற்று. தினந்தோறும் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்கள் கிலடினுக்குக் கொண்டுபோகப்பட்டார்கள். அவர்களை ஏற்றிச்சென்ற வண்டிகள் 'டம் பிரில்' என்று அழைக்கப்பட்டன. நாள்தோறும் கிலடினுக்கு இரையாக வேண்டியவர்களை ஏற்றிக்கொண்டு அவ் வண்டிகள் 'கிரீச்'சிடும் சப்தத்துடன் வட்டக்கல் புதைத்த பாரிஸ் தெருக்களில் 'கட கட'வென்று உருண்டோடிக்கொண்டிருந்தன. துரதிருஷ்டம் பிடித்த அம்மரண யாத்திரீகர்களைக் கண்டு ஜனங்கள் கைகொட்டி நகைத்தார்கள். அரசாளும் கும்பலுக்கு எதிராகக் கன்வென்ஷனில் பேசுவதுகூட அபாயத்தை விளைவிப்பதாயிருந்தது. ஏனெனில், அத்தகைய பேச்சு சந்தேகத்திலும், சந்தேகம் விசாரணையிலும், விசாரணை கிலடினிலும் வந்து முடிவதாயிருந்தது. பொது நன்மைக் கமிட்டி, பொதுப் பாதுகாப்புக் கமிட்டி ஆகிய இரு கமிட்டிகளின் ஆதிக்கத்தின்கீழ் கன்வென்ஷன் நடைபெற்று வந்தது. உயிரைக் காப்பதற்கும் மாய்ப்பதற்கும் அதிகாரமுள்ள அக்கமிட்டிகள் தங்களுடைய அதிகாரத்தைப் பிறருடன் பகிர்ந்துகொள்ள விரும்பவில்லை. பாரிஸ் கம்யூனையே அவை ஆட்சேபித்தன. தங்களுடன் ஒத்துப்போகாத எல்லோரையும் அவை ஆட்சேபித்தன. அதிகாரம் என்பது

மக்களை அதியாச்சரியமான முறையில் கெடுத்துவிடுகிறது. ஆகவே, அக்கமிட்டிகள் கம்யூனை அழிக்க முனைந்தன. கம்யூனும் அதன் பிரிவுகளும்தான் புரட்சிக்கு முதுகெலும்பாயிருந்தவை. கமிட்டிகள் முதலில் கம்யூனின் ஆதாரத் தூண்களாகிய அதன் பிரிவுகளையும், பிறகு கம்யூனையும் ஒழித்தன. இவ்வாறு, புரட்சி தன்னையே தான் சாப்பிடுவது வழக்கமாயிருக்கிறது. பாரிஸ் நகரின் பல பாகங்களிலுமுள்ள கம்யூன் பிரிவுகள்தான் அடித்தளத்திலுள்ள சாமானிய ஜனங்களை மேல் தளத்திலுள்ள தலைவர்களுடன் பிணிக்கும் பிணைப்பாயிருந்தன. அவற்றைப் புரட்சிக்கு உயிரும் உரனும் அளித்துவந்த ரத்த நாளங்கள் என்று சொல்லலாம். 1794-ல் கம்யூனும் அதன் பிரிவுகளும் அழிக்கப்பட்டதானது புரட்சிக்கு வேண்டிய ஜீவரத்த ஓட்டத்தைத் தடுத்துவிட்டது போலாய்விட்டது. அதற்குப் பிறகு, கன்வென்ஷனும் கமிட்டிகளும் கேவலம் மேலேயுள்ள அரசாங்க உறுப்புகளாக மட்டும் இருந்துவந்தன. அவற்றிற்கும் ஜனங்களுக்கும் இருந்த ஜீவ சம்பந்தம் அற்றுப் போய்விட்டது. அவையும், அதிகாரத்தை வகிக்கும் பிறரைப் போலவே, 'பீதி'யின் துணைகொண்டு ஆளத் தொடங்கின. இதுதான் புரட்சி முடிவின் தொடக்கமாகும். இதற்குப்பின் ஆறு மாதங்கள் வரையில் 'பீதி' தலைவிரித்தாடியது. புரட்சியும் ஒருவாறு காலத்தைத் தள்ளிக் கொண்டு வந்தது. ஆனால், அதன் முடிவு நெருங்கிவிட்டதென்பது ஐயமறத் தெரிந்தது.

புரட்சிப் புயல் கொந்தளித்து வீசிய காலையில் பாரிசையும் பிரான்சையும் தலைமைவகித்து நடத்தியவர்கள் யார்? பல பெயர்கள் பிரதானமாக விளங்குகின்றன. காமில்தே மோலின் என்பவன் ஒரு பிரதான புருஷன். 1789-ல், அவன் பாஸ்டில் சிறைத் தாக்குதலைத்

தலைமை வகித்து நடத்தினான். வேறு பல சந்தர்ப்பங்களிலும் அவன் பயனுள்ள சேவை புரிந்தான். 'பீதி' தாண்டவமாடிய காலத்தில், அவன் சற்றுக் கருணையுடன் நடந்துகொள்ள வேண்டுமென்று கமிட்டிகளைக் கேட்டுக் கொண்டான். அதன் பயனாக அவனே கிலடினுக்குப் பலியானான். சில நாட்களுக்குப் பின் அவனுடைய இளம் மனைவி 'லூசில்' அவனைப் பின் தொடர்ந்தாள். கணவனின்றி உயிர் வாழ்வதைவிட இறந்து விடுவதே மேலானது என்று அவ்வுத்தமி கருதினாள். பேபர்டி எக்லண்டைன் என்பவன் பிரசித்திபெற்ற புரட்சிக் கவி. பூகியர் டின்வில் என்பவன் பப்ளிக் பிராசிகூடர் (சர்க்கார் வக்கீல்). அவனைக் கண்டாலே எல்லோருக்கும் நடுக்கம். அடுத்தபடியாக மாரட். புரட்சியின்போது தோன்றிய தலைவர்களில் பெருமையிலும் திறமையிலும் அவனே தலையானவன். சார்லடி கார்டே என்னும் இள நங்கை ஒருத்தி அவனைக் குத்திக் கொன்றுவிட்டாள். தாந்தன்: இவனுடைய வாக்கியங்களிருலிந்து முன்பே இரு மேற்கோள்கள் எடுத்துக் காட்டியிருக்கிறேன், சிங்கத்தை யொத்த கம்பீரமும் ஆண்மையும் படைத்தவன்; சொல் மாரி பொழிவதில் நிகரற்றவன். இப்பேர்பட்ட தாந்தனும் கிலடினுக்கு இரையாகி விட்டான். கடைசியாக, ரோப்ஸ்பியர் என்பவன் யாவரினும் பிரசித்தி பெற்றவன். ஜாகோபின்களின் தலைவன் அவனே. 'பீதி' நாட்களில், கன்வென்ஷனில் அவன் ஒரு சர்வாதிகாரியைப் போலவே விளங்கினான். அவன் 'பீதி' யின் உருவம் என்று சொல்லலாம். அவனை நினைத்தாலே பலருக்குக் குலை நடுக்கம் உண்டாயிற்று. ஆயினும், அவனுடைய தேசபக்தியைப் பற்றியோ, யோக்கியதையைப் பற்றியோ ஒருவரும் அப்பழுக்குச் சொல்ல முடியாது. 'மாசு மருவற்றவன்' என்னும் கீர்த்தியை

அவன் அடைந்திருக்கிறான். அவன் மிகவும் எளிய வாழ்க்கையையே நடத்தினான். ஆனால், அவன் 'தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்' என்று சாதிக்க ஆரம்பித்தான். தன்னோடு மாறுபட்ட அபிப்பிராயம் கொண்டவர்களெல்லாம் குடியரசுக்கும் புரட்சிக்கும் துரோகிகள் என்று அவன் நினைக்கலானான். அவனுடனிருந்து புரட்சிக்குத் தொண்டாற்றிய பெரியார்களில் பலர் அவனுடைய யோசனையின்பேரில் கிலடினுக்கு அனுப்பப்பட்டார்கள். கடைசியில், அவனுக்குப் பணிந்து நடந்து வந்த கன்வென்ஷனே அவன்மீது திரும்பிப் பாய ஆரம்பித்தது. அவர்கள் அவனை யதேச்சாதிகாரம் செலுத்த விரும்பும் கொடுங்கோலன் என்று குற்றஞ்சாட்டி அவனையும் அவனுடைய யதேச்சாதிகாரத்தையும் ஒழித்து விட்டார்கள்.

புரட்சியின்போது தோன்றிய தலைவர்கள் எல்லாரும் இளைஞர்கள். கிழவர்கள் புரட்சியைத் தோற்றுவிப்பதென்பது மிகவும் அபூர்வமான ஒரு காரியம். அவர்களில் பலர் முக்கியம் வாய்ந்தவர்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால், அவர்களில் ஒருவராவது, ரோப்ஸ்பியரும் கூட, அம்மாபெரும் புரட்சி நாடகத்தில் முக்கிய பாத்திரம் அல்ல என்பதை நாம் உணர வேண்டும். 'புரட்சி' என்கிற பேருண்மைக்கு முன்னால் அவர்கள் மிகவும் சிறியவர்களாகத் தென்படுகிறார்கள். ஏனெனில் அவர்கள் புரட்சியைத் தோற்றுவிக்கவும் இல்லை; அதை நடத்தவும் இல்லை. சரித்திரத்தில் அவ்வப்போது தோன்றும் சுபாவீகமான மானுஷீக பூகம்பம் என்றே புரட்சியைக் கூற வேண்டும். யதேச்சாதிகார ஆட்சியும், சமூக நிலைமைகளும், ஜன சமுதாயத்தின் நெடுங்காலத் துன்பமும் அத்தகைய பூகம்பங்களை மெதுவாக, ஆனால், நிச்சயமாக ஆக்குகின்றன.

கன்வென்ஷனானது சதா சண்டையிட்டுக்கொண்டும், எதிரிகளைக் கிலடினுக்கு அனுப்பிக்கொண்டும் இருந்ததைத் தவிர வேறு உருப்படியான காரியம் எதுவும் செய்யவில்லை என்று நீ எண்ணி விடக்கூடாது. எப்பொழுதுமே உண்மையான புரட்சியினால் அதுவரை அழுந்திக் கிடந்த மா பெரும் சக்திகள் வெளிப்படுகின்றன. அவ்வாறு, பிரான்சில் வெளிப்பட்ட சக்தியின் பெரும் பகுதி வெளிநாட்டினரோடு போரிடுவதில் செலவாயிற்றென்பது உண்மையே. ஆனால், செலவழிந்தது போக எஞ்சி நின்ற சக்தியே மகத்தாயிருந்தது. பெரிய அளவில் ஆக்க வேலை செய்வதற்கு அது மிகவும் பயன் பட்டது. குறிப்பாக, தேசியக் கல்வி முறை முழுதும் திருத்தி அமைக்கப் பட்டது இப்போது ஒவ்வொரு குழந்தைக்கும் பள்ளிக்கூடத்தில் கற்றுக் கொடுக்கப் படுகிற 'மீட்டர் அளவை முறை' (Metric System) அப்போது தான் புகுத்தப் பட்டது. அதனால் நிறுத்தலளவை, நீட்டலளவை, கன அளவை முதலிய அளவைகள் சுலபமாகச் செய்யப்பட்டன. இப்போது மீட்டர் அளவை முறையே நாகரிக உலகின் பெரும் பாகத்திலும் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. ஆனால், பழைமைப் பற்றுள்ள இங்கிலாந்து மட்டும் இன்னும் கர்நாடகமான காலத்துக் கொவ்வாத அளவை முறைகளைக் கட்டிக் கொண்டு அழுகிறது. நீட்டலளவைக்குக் கஜம், பர்லாங்கு ஆகியவற்றையும், நிறுத்தலளவைக்குப் பவுண்டு, அந்தர் வெயிட் ஆகியவற்றையும் அது உபயோகிக்கிறது. இந்தியாவிலுள்ள நாமோ இங்கிலாந்தின் சிக்கலான நீட்டல், நிறுத்தல் அளவைகளோடு சேர், மணங்கு முதலிய சங்கடங்களையும் சகிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம்.

ஒரு புதிய குடியரசுப் பஞ்சாங்கமும் வெளியிடப்

பட்டது. இப் பஞ்சாங்கம் மீட்டர் அளவை முறையின் தருக்க ரீதியான விளைவாகும். புதிய பஞ்சாங்கம், குடியரசு பிரகடனம் செய்யப்பட்ட தினத்திலிருந்து (1792 செப்டம்பர், 22) ஆரம்பமாயிற்று. ஏழுநாள் கொண்ட வாரத்துக்குப் பதிலாகப் பத்து நாள் கொண்ட வாரம் ஏற்படுத்தப் பட்டது. வாரத்தில் பத்தாவது நாள் விடுமுறை நாளாகும். மாதங்கள் மட்டும் பழைய படியே பன்னிரண்டாக இருந்தன. ஆனால், அவற்றிற்கு வேறு பெயர்கள் கொடுக்கப்பட்டன. கவிஞனாகிய பேபர் டி எக் லண்டைன் பருவத்துக்கு ஏற்றாற்போல் மாதங்களின் பெயர்களை அழகிய முறையில் மாற்றி அமைத்தான். இங்கு புதிய பிரெஞ்சு மாதப் பெயர்கள் பன்னிரண்டும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. குடியரசு முடிவுற்ற பிறகு இப் புதிய பஞ்சாங்கம் அதிகக் காலம் நீடிக்கவில்லை.

ஒரு சமயம், கிறிஸ்தவ மதத்துக்கு விரோதமாக ஒரு பெரிய இயக்கம் தோன்றியது. அதற்குப் பதிலாகப் 'பகுத்தறிவு வணக்கம்' அவலம்பிக்கலாம் என்று சொல்லப்பட்டது. 'சத்திய'த்துக்குக் கோயில்கள் எழுப்பப் பட்டன. இந்த இயக்கம் மாகாணங்களில் விரைவில் பரவியது. 1793 நவம்பரில் பாரிசிலுள்ள 'நாட்டர்டாம்' ஆலயத்தில் 'சுதந்திரத்துக்கும் பகுத்தறிவுக்கும் திருவிழா'க் கொண்டாடப்பட்டது. அவ்விழாவில் ஒரு அழகிய நங்கை பகுத்தறிவை உருவகப்படுத்தி நின்றாள். ஆனால், இம்மாதிரி விஷயங்களில் ரோப்ஸ்பியர் பழைமையோம்பியாக இருந்தான். அவன் இந்த இயக்கத்தை அங்கீகரிக்கவில்லை. தாந்தனும் அவ்வாறே. ஆகவே, அவ்வியக்கத் தலைவர்கள் கிலடினுக்குப் பலியானார்கள். ஒன்று அதிகாரத்தின் நிழலில் இருக்க வேண்டும்; அல்லது, கிலடினுக்குப் போகவேண்டும். இரண்டுக்கும் இடையில் தங்குவதற்கு இடம் கிடை

யாது. சுதந்திரத்துக்கும் பகுத்தறிவுக்கும் நடந்த திரு
விழாவுக்கு எதிரிடையாகப் 'பரம்பொருள் திருவிழா'
ஒன்றை ரோப்ஸ்பியர் ஏற்பாடு செய்தான். பிரான்சுக்கு
ஒரு 'பரம்பொருளி'னிடத்து நம்பிக்கை உண்டு என்கிற
விஷயம் கன்வென்ஷன் வோட்டு மூலம் தீர்மானிக்கப்
பட்டது! மீண்டும் ரோமன் கத்தோலிக்க மதம் சிறிது
சிறிதாக இடம்பெறத் தொடங்கியது.

பாரிஸ் கம்யூனும் அதன் பிரிவுகளும் ஒடுக்கப்பட்ட
பின் நிலைமை விரைவில் நெருக்கடியாகிக் கொண்டு
வந்தது. ஜாகோபின்களின் கை மேலோங்கியிருந்தது.
அரசாங்கம் அவர்களுடைய ஆதிக்கத்தின் கீழ் இருந்து
வந்தது. ஆனால், அவர்களுக்குள் சச்சரவு ஏற்படத்
தொடங்கியது. சுதந்திரத்துக்கும் பகுத்தறிவுக்கும் எடுக்
கப்பட்ட திருவிழாவை அக்கிரகண்ணியமாக இருந்து
நடத்திவைத்த ஹீபர்ட்டும் அவனைச் சேர்ந்தவர்களும்
கிலடினுக்கு அனுப்பப்பட்டது காரணமாக ஜாகோபின்
கட்சியில் முதல் பெரிய பிளவு ஏற்பட்டது. ஹீபர்ட்
கோஷ்டியினரை அடுத்துப் பேபர்டி எக்லண்டைன்
பலியானான். 1794-ம் வருஷ ஆரம்பத்தில் தாந்தன்,
காமில்தேமோலின் முதலியவர்கள், சிறிதும் விவஸ்தை
யின்றி ஏராளமான பேரைக் கிலடினுக்கு அனுப்பிவருவ
தற்காக ரோப்ஸ்பியரைக் கண்டித்தபொழுது, அவர்க
ளுக்கும் அதேகதி நேர்ந்தது. 1794 ஏப்ரலில் எங்கே
ஜனங்கள் தலையிடுவார்களோ என்ற பயத்தினால் தாந்
தன் அவசரம் அவசரமாகக் கிலடினுக்கு அனுப்பப்பட்
டான். அந்த ஒரு நிகழ்ச்சி, பாரிசிலும் மாகாணங்களி
லும் உள்ளவர்களுக்குப் புரட்சி சமாப்தி ஆய்விட்டது
என்பதை நன்கு எடுத்துக் காட்டியது. தாந்தன்—புரட்
சியின் சிங்க ஏறு வீழ்ந்து விட்டான்! ஒரு சிறு கும்பலின்
கையில் அதிகாரம் அகப்பட்டுக்கொண்டது. அக் கும்

பலுக்கும் ஜனங்களுக்கும் தொடர்பு இல்லை. அதை நாலா
பக்கத்திலும் விரோதிகள் சூழ்ந்திருந்தார்கள். அதன்
கண்களுக்கு எங்குநோக்கினும் துரோகமே தென்பட்டது.
'பீதி'யை வளர்ப்பதைத் தவிர்த்துத் தன்னைக் காத்துக்
கொள்ள வேறொரு உபாயமும் அதற்குப் புலப்படவில்லை.

ஆகவே, 'பீதி'யின் கடுமை அதிகரித்தது. கிலடி
னுக்குச் செல்லும் டம்பிரில் வண்டிகள் வரவர அதிக
மான பேர்களை ஏற்றிக்கொண்டு செல்லலாயின. ஜூன்
மாதத்தில் ஒரு புதிய சட்டம் நிறைவேற்றப்பட்டது.
அதன்படி, ஜனங்களைப் பிரிப்பதற்காகவோ, குழப்பத்
துக் குள்ளாக்குவதற்காகவோ பொய் வதந்திகளைப்
பரப்புவதும், ஜனங்களின் திடத்தைக் குலைப்பதும்,
அவர்களுடைய மனச்சாட்சியைக் கெடுப்பதும் மரண
தண்டனைக்குரிய குற்றங்களாகச் செய்யப்பட்டன.
ரோப்ஸ்பியருக்கும் அவனுக்குக் கைதூக்குபவர்களுக்
கும் மாறுபட்ட அபிப்பிராயம் கொண்டவர்கள் அனைவ
ரும் இந்தச் சட்டத்தின் அகன்ற வலையில் அகப்பட்டுக்
கொள்ளக் கூடுமல்லவா? ஜனங்கள் கூட்டம் கூட்டமாக
விசாரித்துத் தண்டிக்கப்பட்டார்கள். ஒரு சமயத்தில்
150 பேர் மொத்தமாக விசாரிக்கப்பட்டார்கள். அவர்
களில் குற்றவாளிகள், ராயலிஸ்டுகள் முதலிய பல திறத்
தவர்கள் இருந்தார்கள்.

நாற்பத்தாறு நாட்கள் வரையில் இந்தப் புதிய பீதி
தலைவிரித்தாடியது. கடைசியில், தர்மிடார் மீ 9 உ
(1794 ஜூலை, 27) இதுவரையில் மிதித்து நசுக்கப்
பட்ட புழு திருப்பிக்கொள்ள ஆரம்பித்தது. கன்வென்
ஷன் திடீரென்று ரோப்ஸ்பியருக்கும் அவனைச் சேர்ந்த
வர்களுக்கும் விரோதமாகக் கிளம்பியது. 'கொடுங்
கோலன் ஒழிக!' என்னும் கோஷத்துடன் அவர்கள்
ரோப்ஸ்பியரையும் அவனுடைய தோழர்களையும் கைது

செய்தார்கள். ரோப்ஸ்பியர் பேசுவதற்குக் கூட அனுமதிக்கப்படவில்லை. மறுநாள் டம்பிரில் வண்டி ரோப்ஸ்பியரை, அவன் இதற்குமுன்னால் பலரை அனுப்பிவைத்த அதே கிலடினுக்குக் கொண்டு சென்றது. இவ்வாறு பிரெஞ்சுப் புரட்சி முடிவுற்றது.

ரோப்ஸ்பியரின் வீழ்ச்சிக்குப் பிறகு எதிர்ப்புரட்சி தொடங்கியது. இப்பொழுது, மிதவாதிகள் முன்னணிக்கு வந்தார்கள். அவர்கள் ஜர்கோபின்களைப் பயங்கரமாக இம்சிக்கலானார்கள். 'செந்நிறப்பீதி' (Red Terror) க்குப் பின் 'வெண்ணிற பீதி' (White Terror) யின் கோர தாண்டவம் நிகழ்ந்தது. பதினைந்து மாதங்களுக்குப்பின், 1795 அக்டோபரில் கன்வென்ஷன் கலைந்துவிட்டது. இப்போது, ஐந்து அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு பஞ்சாயம் அல்லது டைரக்டரி (Directory of five members) பிரான்சின் அரசாங்கத்தை ஏற்று நடத்த ஆரம்பித்தது. டைரக்டரி அரசாங்கம் ஒரு பூர்ஷுவா அரசாங்கம் என்பதில் ஐயமில்லை. அது சாமானிய ஜனங்களை அடக்கியாள முயன்றது. நாலு வருஷங்களுக்கு மேலாகவே அது பிரான்சை ஆண்டது. உள்நாட்டில் எத்தனை குழப்பங்கள் இருப்பினும் வெளிநாடுகளில் நடந்த போரில் குடியரசுக்கு வெற்றிக்குமேல் வெற்றி கிடைத்துவந்தது. குடியரசின் செல்வாக்கும் வல்லமையும் அத்தகையனவா யிருந்தன. அதற்கு விரோதமாகச் சில கலகங்கள் உண்டாயின. ஆனால், அவை உடனே அடக்கப்பட்டன. நெப்போலியன் போனபார்ட் என்னும் பெயர் பூண்ட குடியரசுச் சேனையின் இளந்தளபதி ஒருவன் அத்தகைய கலகம் ஒன்றை அடக்கினான். அவன் பாரிஸ் ஜனக்கூட்டத்தின்மீது துணிந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தான். அவர்களில் பலரை அவன் சுட்டுக் கொன்றான். இத் 'துப்பாக்கிப் பிரயோகம்', (Whiff of

Grapeshot), மிகவும் பிரசித்தி வாய்ந்தது. பிரான்சின் சாமானிய ஜனங்களைக் கொல்வதற்குப் பழைய புரட்சிச் சேனையே உபயோகிக்கப்பட்டதென்றால் புரட்சிபோன இடத்தில் புல்லும் முளைத்து விட்டது என்றுதான் அர்த்தம்.

இவ்வாறு, புரட்சி முற்றுப்பெற்றது. அத்துடன் லட்சியவாதிகள் கண்ட கனாக்களும், ஏழை எளியவர் கொண்ட நம்பிக்கைகளும் முற்றுப் பெற்றன. ஆயினும், தான் சாதிக்கத் தொடங்கியதில் பெரும் பகுதியையும் அது சாதித்து முடித்துவிட்டது. எந்த எதிர்ப்புரட்சியாலும் அடிமைத்தனத்தை மீண்டும் கொண்டுவர முடியவில்லை. பூர்பான் அரசர்கள்—பிரான்சை ஆண்டு வந்த அரசவமிசம் 'பூர்பான்' என்னும் பெயர் பூண்டது—மீண்டும் அரசை அடைந்த காலையில்கூடக் குடியானவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கப்பட்ட நிலங்களை மீண்டும் அவர்களிடமிருந்து பிடுங்கிக் கொள்ளக்கூடவில்லை. கிராமங்களிலும் பட்டணங்களிலும் வாழ்ந்து வந்த சாமானிய ஜனங்களின் நிலை முன்னைவிட எவ்வளவோ உயர்ந்திருந்தது. பீதி மும்முரமாக இருந்த போதுகூட, அவர்களுடைய நிலை புரட்சிக்கு முன்பிருந்ததைவிட க்ஷேமகரமாகவே இருந்தது. சாமானிய ஜனங்களைப் பீதி பாதிக்கவில்லை; உயர் வகுப்பாரையே அது பாதித்தது. கடைசியில்தான் சில ஏழைகளும் அதில் அகப்பட்டுக் கொண்டார்கள்.

புரட்சி வீழ்ந்துவிட்டது. ஆனால், குடியரசுக் கொள்கை ஐரோப்பாவெங்கும் பரவியது. அதோடு கூடவே மனித உரிமைப் பிரகடனத்தில் பறைசாற்றப்பட்டிருந்த கருத்துகளும் பரவின.

103

அரசாங்கங்களின் போக்கு

அக்டோபர் 27, 1932.

இரண்டு வாரமாக நான் ஒன்றும் எழுதவில்லை. வரவர எனக்குச் சோம்பல் அதிகமாகி வருகிறதென்று நினைக்கிறேன். என்னுடைய கதை முடியப்போகிறது என்கிற எண்ணம் என்னைச் சற்று மந்தமாகப் போகச் செய்கிறது. ஏற்கெனவே, நாம் 18-வது நூற்றாண்டின் முடிவை அடைந்து விட்டோம். நாம் 19-வது நூற்றாண்டை ஆராய்ந்து விட்டோமானால், அதற்கப்புறம் தற்காலத்துக்கு வருவதற்கு 20-வது நூற்றாண்டில் ஒரு முப்பது வருஷமும் இரண்டு வருஷமும் தான் இருக்கின்றன. ஆனால், இந்த 132 வருஷத்துக் கதை மிகவும் நீளமானது. இது நமக்கு மிகவும் சமீபமான காலத்தைச் சேர்ந்த கதையாகையால், ரொம்பவும் பெரிதாகவும் பழைய காலத்துக் கதையைவிட ரொம்ப முக்கியமானதாகவும் தோன்றுகிறது. இன்று நம்மைச் சுற்றி நாம் காண்பவற்றிற்கெல்லாம் வேர் பெரும்பாலும் இக்காலத்தில்தான் இருக்கிறது. காடுபோல் மண்டிக் கிடக்கும் சென்ற நூற்றாண்டு நிகழ்ச்சிகளில் ஒரு வழிதுறை வகுத்துக்கொண்டு உன்னை அழைத்துச் செல்வது, உண்மையில் எனக்கு மிகவும் கஷ்டமான காரியமாகத்தான் இருக்கப் போகிறது. ஒருவேளை, இதுவே என்னுடைய தயக்கத்துக்குக் காரணமாயிருக்கலாம். ஆனால், இன்னொன்றும் எனக்குத் தோன்றுமவில்லை. ஒருவாறு இந்த மானவ சரித்திரத்தை 1932-ம் ஆண்டுவரையில் கொண்டுவந்து விடுகிறேன் என்று வைத்துக்கொள். இறந்தகாலமானது நிகழ்காலத்தோடு தலைமயங்கி எதிர்காலத்தின் நிழலுக்கு முன்னால் நின்றுவிடப்போகிறது. அப்புறம் நான் என்ன செய்வது?

குழந்தாய்! அப்புறம் உனக்கு நான் என்ன எழுதுவேன்? அப்புறம், நான் எந்தச் சாக்கை முன்னிட்டுப் பேனாவைக் கையிலெடுத்துக் கொண்டு எழுதுகிற பாவனையாக உன்னை நினைப்பதோ, அல்லது நீ என் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு என்னைக் கேள்விகள் கேட்பது போலவும் நான் உனக்குப் பதில் கூறுவது போலவும் நடிப்பதோ முடியும்?

பிரெஞ்சுப் புரட்சியைப்பற்றி மூன்று கடிதங்கள் எழுதிவிட்டேன். பிரான்சு தேச சரித்திரத்தில் மிகக் குறுகிய காலமாகிய ஐந்து வருஷத்தைப்பற்றி மூன்று நீண்ட கடிதங்கள் எழுதிவிட்டேன். யுக யுகாந்தரங்களின் வழியாக நாம் செய்து வரும் பிரயாணத்தில் நூற்றாண்டுகளை ஒரு எட்டில் தாண்டியும், கண்டங்களை ஒரே கடைக்கண் பார்வையால் தரிசித்தும் வந்திருக்கிறோம். ஆனால், பிரான்சில், 1789—1794 வருஷங்களுங்கிடையில் நாம் சற்று நீண்டகாலம் தங்கி விட்டோம். ஆயினும், நான் விஷயத்தை மிகவும் சுருக்கமாகவே சொல்ல முயன்றிருக்கிறேன் என்பதைக் கேட்க நீ ஆச்சரியப்படுவாய். என்னுடைய மனதில் சொல்லவேண்டிய விஷயங்கள் எவ்வளவோ குவிந்து கிடந்தன; பேனாவோ ஓடிக் கொண்டே இருக்க முயன்றது. ஆனால், நான் மனதையும் பேனாவையும் அடக்கிக் கொண்டேன். பிரெஞ்சுப் புரட்சி பெரிய 'சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது. அது ஒரு சகாப்தத்தின் முடிவிடமாகவும் இன்னொரு சகாப்தத்தின் பிறப்பிடமாகவும் விளங்குகிறது. இதைவிட அதிகமாக அதனுடைய நாடகப்பாணி நம்மை வசீகரித்து விடுகிறது. அது நமக்குக் கற்பிக்கும் பாடங்களோ அனந்தம். உலகம் இன்று மீண்டும் ஒரு பெரும் கொந்தளிப்பில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறது. விரைவிலேயே பெரிய மாறுதல்கள்

தோன்றப் போகின்றன. நமது சொந்த நாட்டிலேயே நாம் இப்போது ஒரு புரட்சிக் காலத்தில் வாழ்ந்து வருகிறோம். நமது புரட்சி சாத்விகத்தன்மை கொண்டதாயிருக்கலாம். ஆனால், அது புரட்சிதான். ஆகவே, பிரெஞ்சுப் புரட்சியினின்றும், நமது காலத்திலேயே நமது கண்முன்பாகவே நடைபெற்ற பெரிய ருஷியப் புரட்சியினின்றும் நாம் எவ்வளவோ கற்றுக்கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம். இவ்விரு புரட்சிகளையும் ஒத்த ஜனங்களுடைய உண்மையான புரட்சிகள் வாழ்க்கையின் கொடூரமான உண்மைகளின் மீது கோரமான வெளிச்சத்தைச் சொரிகின்றன. ஆகாயத்தில் தோன்றும் மின்னலானது நிலத்தோற்றம் முழுதையும், முக்கியமாக அதன் இருண்ட பிரதேசங்களையும் பளிச்சென்று எடுத்துக் காட்டுவது போலப் புரட்சியும் மனித வாழ்க்கையையும் அதன் இருண்ட மூலைமுடுக்குகளையும் நமக்குத் தெளிவாகப் புலப்படுத்துகிறது. ஒருகணமாவது நாம் நமது லட்சியத்தைத் தெளிவாகவும் நமக்கு மிகவும் அருகாமையிலும் காண்கிறோம். நம்முள் சக்தியும் நம்பிக்கையும் ததும்பி நிற்கின்றன; ஐயமும் தயக்கமும் மாய்ந்து விடுகின்றன. அப்போது, நூற்றுக்கு நூறுக்குக் குறைந்த எதையும் ஒப்புக்கொள்ளுகிற பேச்சுக்கு இடமே இல்லை. புரட்சியை ஆக்குவோர் தங்களுடைய லட்சியத்தை நோக்கி அம்பைப்போல் நேராகச் செல்லுகிறார்கள். இந்தப் பக்கம் அந்தப் பக்கம் அவர்கள் திரும்பிப் பார்ப்பதே இல்லை. அவர்களுடைய காட்சித்தெளிவுக்கும் நேர்மைக்கும் தக்கவாறு புரட்சியும் சிறப்பெய்துகிறது. ஆனால், இந்நிலையைப் புரட்சியின் உன்னத காலத்தில்தான் காணமுடியும். அப்போது, புரட்சித் தலைவர்கள் மலையுச்சியின் மீது வீற்றிருக்கிறார்கள்; சாமானிய ஜனங்கள் மலைப் பக்கங்

களில் அணிவகுத்துச் செல்லுகிறார்கள். ஆனால், அந்தோ! நிலைமை எப்போதும் அப்படியே இருப்பதில்லை. மலையுச்சியில் இருப்பவர்கள் கீழேயுள்ள இருண்ட பள்ளத்தாக்குகளுக்கு இறங்கி வரவேண்டியவர்கள் ஆகிறார்கள். நம்பிக்கை மங்குகிறது; சக்தி குறைகிறது.

நாடு கடத்தப்பட்ட காரணத்தால், தன் வாழ்நாளில் பெரும் பகுதியையும் வேற்று நாடுகளில் கழித்த வால்டேர், 1778-ம் ஆண்டில், தன்னுடைய மூப்புக் காலத்தில் பாரிசுக்குத் திரும்பி வந்தான். கடைசிக் காலத்தில் பாரிஸ் மண்ணில் தன் உடம்பைக் கிடத்துவதற்காகவே அவன் திரும்பி வந்தான். அப்போது அவனுக்கு வயது எண்பத்துநான்கு. அவன் பாரிஸ் இளைஞர்களை நோக்கி, "வயதில் சிறியவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில், அவர்கள் பெரும் பெரும் நிகழ்ச்சிகளைக் காண்பார்கள்" என்று கூறினான். அவன் சொன்னது உண்மையாயிற்று. அவ்வாறு அவன் சொன்ன பதினொரு வருஷத்துக்குள் புரட்சி பொங்கிற்று. அவன் பேச்சைக் கேட்ட இளைஞர்கள் பெரு நிகழ்ச்சிகளைக் கண்டது மன்றி அவற்றில் பங்கும் எடுத்துக் கொண்டார்கள். புரட்சி நெடுநாளாகவே காத்துக்கொண்டிருந்தது. பேரரசனான, 14-வது லூயி 17-ம் நூற்றாண்டில் 'அரசாங்கமா, அது நான் தானே!' என்று கூறினான். அவனுக்குப் பின் வந்த 15-வது லூயி 18-ம் நூற்றாண்டில் 'பிரளயம் வருவதாயின் எனக்குப் பின் வரட்டும்' என்று கூறினான். இவ்வாறு தாம்பூலம் வைத்து அழைக்கப்பட்ட பிரளயம் பிரான்சுக்கு விஜயம் செய்து 16-வது லூயியையும் அவனுடைய கும்பலையும் அடித்துக்கொண்டு போய்விட்டது. இப்போது, வாசனைத் தூள் தூவப்பெற்ற டோப்பா மயிரும், பட்டுச் சல்லடமும் அணிந்த பிரபுக்களுக்குப் பதிலாகச் சல்லடம் அணியாதவர்களான சாமானிய ஜனங்கள் முதலிடம் வகித்தார்கள். பிரான்சின் சபை

ஸ்திரீ புருஷர்களும் "நகரமாந்தர்" ஆகிவிட்டார்கள்.
உலகத்தை நோக்கிப் பிரெஞ்சுக் குடியரசானது சுதந்
திரம், சமத்துவம், சகோதரத்துவம்' என்று இடிமுழக்கம்
செய்தது.

புரட்சி நாட்களில் நிகழ்ந்தவற்றுள் 'பீதி' தான்
நமக்குப் பெரிதாகத் தோன்றுகிறது. 'விசேஷப் புரட்சி
நீதி மன்ற' நியமனத்துக்கும் ரோப்ஸ்பியர் வீழ்ச்சிக்கும்
இடைப்பட்ட பதினாறு மாத காலத்தில் 4000 பேர் கில
டினுக்கு அனுப்பப்பட்டார்கள். இது பெருந் தொகை
என்பதில் ஐயமில்லை. அவர்களில் பல நிரபராதிகளும்
இருந்தார்கள் என்பதை நினைக்கும் போது நமக்குத் துக்
கமும் அதிர்ச்சியும் உண்டாவது இயற்கையே. ஆயினும்,
சில உண்மைகளை நாம் நினைவில் வைத்துக் கொள்வது
நல்லது. அப்பொழுது தான் பிரெஞ்சுப் பீதியின் உண்
மையான தன்மையும் அளவும் நமக்குப் புலனாகும்.
பிரெஞ்சுக் குடியரசை விரோதிகளும், துரோகிகளும்,
உளவாளிகளும் சூழ்ந்திருந்தார்கள். கிலடினுக்கு
அனுப்பப்பட்டவர்களில் பலர் தாங்கள் குடியரசை
ஒழிப்பதற்குக் கங்கணம் கட்டிக்கொண் டிருப்பதாக
வெளிப்படையாக ஒப்புக் கொண்டவர்கள். பீதியின்
இறுதி நாட்களில் அபராதிகளோடு நிரபராதிகளும்
தண்டிக்கப்பட்டது உண்மையே. அச்சம் நமது கண்ணை
மறைக்கும் போது இவன் குற்றவாளி, இவன் குற்றவாளி
அல்ல என்று வேற்றுமை தெரிவது கஷ்டமாகி விடுகிறது.
ஒரு நெருக்கடியான தருணத்தில் பிரெஞ்சுக் குடியர
சானது லபாயெத் போன்ற தனது தலைசிறந்த
தளபதிகள் சிலருடைய எதிர்ப்பையும் துரோகத்தையும்
சமாளிக்க வேண்டி யிருந்தது. ஆகவே, புரட்சித்
தலைவர்கள் நிதானம் தவறியவர்களாய் இன்னார் இனி
யார் என்று பாராமல் எல்லாரையும் அடித்து வீழ்த்தத்
தலைப்பட்டதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

ஆசிரியர் எச். ஜி. வெல்ஸ் தம்முடைய நூலில் கூறு
வது போல, அக்காலத்தில் இங்கிலாந்திலும் அமெரிக்கா
விலும் பிற நாடுகளிலும் என்ன நிகழ்ந்து வந்தது என்
பதையும் ஞாபகப்படுத்திக் கொள்வது நல்லது.
கிரிமினல் சட்டம், முக்கியமாகச் சொத்துப் பாதுகாப்பை
பற்றிய கிரிமினல் சட்டம் மிகவும் கொடுமையானதாக
இருந்தது. அற்பக் குற்றங்களுக் கெல்லாம் ஜனங்கள்
தூக்கிலிடப்பட்டார்கள். சில இடங்களில் அரசாங்க
அனுமதியுடன் சித்திரவதை கூட அனுஷ்டிக்கப்பட்டு
வந்தது. பிரெஞ்சுப் பீதியின் போது கிலடினுக்கு அனுப்
பப்பட்டவர்களை விட அதிகமான பேர்கள் அதே காலத்
தில் இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் தூக்கிலிடப்
பட்டிருக்கிறார்கள் என்று வெல்ஸ் கூறுகிறார்.

அக்காலத்து அடிமை வேட்டைகளை எடுத்துக்
கொள். அவை எத்துணை கோரமாகவும் ஈவிரக்கமற்றவை
யாகவும் இருந்தன! யுத்தத்தை எடுத்துக் கொள்.
சிறப்பாகத் தற்காலயுத்தங்களில் எத்தனை லட்சக் கணக்
கான இளைஞர்கள் தங்களுடைய இளமையிலேயே
மாண்டு மடிகிறார்கள்? இன்னும் அருகாமையில், நமது
தேசத்தையே எடுத்துக் கொள். இங்கு நடந்த சமீப
கால நிகழ்ச்சிகளை எண்ணிப்பார்! பதின்மூன்று ஆண்டு
களுக்கு முன்பு, ஏப்ரல் மாதத்தில் ஒரு சாயங்காலம்,
அமிருதசரசிலுள்ள ஜலியன் வாலா பாக் (தோட்டம்)
இல் வசந்தோற்சவ தினத்தன்று நூற்றுக்கணக்கான
பேர் கொல்லப் பட்டார்கள்; ஆயிரக் கணக்கான பேர்
படுகாயப் படுத்தப்பட்டார்கள். இஃதன்றி, எத்தனை சதி
வழக்குகள், எத்தனை விசேஷக் கோர்ட்டுகள், எத்தனை
அவசரச் சட்டங்கள்! இவற்றை ஜனங்களைப் பீதியுறச்
செய்து அடக்கும் முயற்சிகள் என்று சொல்வதன்றி
வேறு என்ன சொல்வது? அடக்கு முறைகளின் பயங்கர

வேகம் ஒரு அரசாங்கத்தின் அச்சத்துக்கு அளவு கோலாகும். எந்த அரசாங்கமும், அது பிற்போக்கா யிருக்கட்டும் புரட்சிகரமா யிருக்கட்டும், விதேசியா யிருக்கட்டும் சுதேசியாயிருக்கட்டும், தனக்கு அபாயம் நேரும் என்று அஞ்சுகிற போது பயங்கரச் செயல்களில் இறங்கி விடுகிறது. பிற்போக்கான அரசாங்கம் ஒரு சில சலுகையாளரின் சார்பாகவும் பொது ஜனங்களுக்கு விரோதமாகவும் பயங்கரச் செயல் புரிகிறது. புரட்சி கரமான அரசாங்கமோ பொது ஜனங்களின் சார்பாகவும் ஒரு சில சலுகையாளருக்கு விரோதமாகவும் பயங்கரச் செயல் புரிகிறது. புரட்சிகரமான அரசாங்கம் பிற் போக்கான அரசாங்கத்தை விட அதிக வெளிப்படை யாகவும் நேர்மையாகவும் காரியம் செய்கிறது. அது கடுமையும் கொடுமையும் காட்டுவது உண்மை. ஆனால், அதனிடம் கபடமோ சூதோ கிடையாது. பிற்போக்கான அரசாங்கம் கபடமும் சூதும் நிறைந்த உலகிலேயே சஞ் சரிக்கிறது. ஏனெனில், தன்னுடைய வேஷம் வெளிப் பட்டு விட்டால் அரை நிமிஷம் கூட வாழ்வு நடத்துவது அசாத்தியம் என்பது அதற்குத் தெரியும். அது சுதந்திரத் தைப் பற்றி வாய்ப்பறை அறைகிறது. ஆனால், சுதந்திரம் என்று சொல்லும் போது தன்னிஷ்டப்படி காரியம் செய் யும் சுதந்திரத்தையே அது மனதில் எண்ணிக்கொண் டிருக்கிறது. அது நியாயத்தைப் பற்றி வாய்ப்பந்தல் போடுகிறது. ஆனால், அதன் அர்த்தம் மற்றவர்கள் மாண்டாலும் தான் மட்டும் வாழக்கூடிய வர்த்தமான நிலைமை நீடிக்க வேண்டும் என்பது தான். எல்லாவற் றிற்கும் மேலாக, அது 'சட்டம்—ஒழுங்கு' என்பதைப் பற்றி வாய் ஓயாமல் பேசிக்கொண் டிருக்கிறது. 'சட்டம்—ஒழுங்கு' என்னும் சொற்களின் பின்னால் அது மறைந்து கொண்டு சுடுதல், கொல்லுதல், சிறை

யிடுதல், பேச்சு சுதந்திரம் பறித்தல், எழுத்து சுதந்திரம் பறித்தல் முதலிய சட்டத்துக்கும் ஒழுங்குக்கும் விரோத மான சகல காரியங்களையும் செய்து வருகிறது. 'சட்டம்— ஒழுங்கு' இவற்றின் பெயரால் நூற்றுக்கணக் கான நமது சகோதரர்கள் விசேஷக் கோர்ட்டுகளால் விசாரிக்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டிருக் கிறார்கள். இதே சட்டம்—ஒழுங்கின் பெயரால், இரண் டரை ஆண்டுகளுக்கு முன்பு, ஏப்ரல் மாதத்தில் ஒருநாள், பெஷாவரில், அஞ்சாநெஞ்சு படைத்த, நிராயுதபாணி களான நமது பட்டாணிய சகோதரர்கள் பலர் யந்திர பீரங்கிகளால் சுட்டுத்தள்ளப் பட்டார்கள். இதே சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டுவதற்காகப் பிரிட்டிஷ் ஆகாயப் படையானது நமது நாட்டில் வட மேற்கு எல்லைப்புறத்தைச் சேர்ந்த கிராமங்களிலும், இராக்கிலும் ஆகாய விமானங்களிலிருந்து குண்டுகளை வருஷித்து ஸ்திரீ புருஷர்களையும் குழந்தை குட்டிகளையும் வதைத்தும் அங்கவீனப்படுத்தியும் வருகிறது. ஆகாய விமானம் வரும் சத்தத்தைக் கேட்டுவிட்டு ஜனங்கள் ஓடித் தப்பித்துக் கொள்வார்கள் என்பதற்காக எந்த அசுர மூளையோ 'தாமத வெடிகுண்டுகள்' என்னும் உபாயத்தைக் கண்டு பிடித்தது. இத்தாமத வெடி குண்டுகள் கீழே விழுந்தவுடன் வெடிப்பதில்லை. இவற் றைப் போட்டுவிட்டு ஆகாய விமானங்கள் போய் விடும். ஆகாய விமானங்கள் போய்விட்டன, இனி அபாய மில்லை என்று கருதி ஜனங்கள் மறைவிடங்களிலிருந்து தங்கள் வீடுகளுக்குத் திரும்பி வருவார்கள். உடனே அக்குண்டுகள் வெடித்து உயிர்ச்சேத, பொருட் சேதங் களை உண்டாக்கும்.

தினந்தோறும் காணப்படும் இன்னொரு பீதியையும் நினைத்து பார். அதுதான் பட்டினிப் பீதி. பட்டினிப் பீதி

இன்று கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையைக் கவிந்து நிற்கிறது. நம்மைச் சுற்றியிருக்கும் துன்பத்தை நாம் சதா பார்த்துக்கொண் டிருப்பதால் அது நமக்குச் சகஜமாகப் போய்விடுகிறது. குடியானவர்களும் தொழிலாளர்களும் முரட்டுச் சுபாவம் படைத்தவர்கள், நம்மைப் போல் அவர்கள் நாசூக்கானவர்கள் அல்ல, ஆகவே, அவர்கள் துன்பத்தை அவ்வளவாக உணரமாட்டார்கள் என்று நாம் நினைக்கிறோம். இவையெல்லாம் குத்திக் காட்டும் நமது மனச்சாட்சியைத் திருப்திப்படுத்துவதற்கான நொண்டிச் சமாதானங்களே ஒழிய வேறில்லை. பீகாரில் ஜாரியா என்னுமிடத்திலுள்ள ஒரு நிலக்கரிச் சுரங்கத்தைப் பார்த்தது என் நினைவுக்கு வருகிறது. அதைக் கண்டபோது நான் அடைந்த அதிர்ச்சியை என்னால் மறக்கவே முடியாது. தரைமட்டத்துக்கு மிக மிகக் கீழே ஆடவரும் பெண்டிரும் நீண்ட, கரிய, இருண்ட நிலக்கரிக் கிடங்குகளில் வேலை செய்து கொண்டிருந்தார்கள். சுரங்கத் தொழிலாளர்கள் தினம் எட்டு மணி நேரம் வேலை செய்ய வேண்டுமென்று சிலர் சொல்லுகிறார்கள்; வேறு சிலர் அதை ஆட்சேபித்து அவர்கள் இன்னும் அதிகநேரம் வேலை செய்ய வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இந்த வாதப் பிரதிவாதங்களைப் படிக்கும்போதும் கேட்கும்போதும் நான் பார்த்த அக்கரிய நிலக்கரிக்கிடங்குகளின் ஞாபகம் எனக்கு வந்துவிடும். அங்கே எட்டு நிமிஷம் இருப்பதற்குள் நான் என்ன பாடுபட்டுவிட்டேன்!

பிரெஞ்சுப் பீதி மகா கோரமாயிருந்தது. ஆனால், ஏழ்மைத்தனத்தாலும் வேலையின்மையாலும் விளையும் தீராத கொடிய துன்பங்களை நோக்குமிடத்து அதை ஒரு கொசுக்கடி என்றுதான் சொல்லவேண்டும். சமூகப் புரட்சியினால் விளையும் கேடு மிகவும் பெரிதுதான்.

ஆனால், மேற்கூறிய தீமைகளாலும் நமது தற்கால அரசியல் பொருளியல் ஏற்பாட்டின் கீழ் அடிக்கடி நிகழும் போர்களாலும் ஏற்படும் கேட்டைவிட அது மிகவும் குறைவானது என்றே சொல்லவேண்டும். பிரெஞ்சுப் புரட்சியின்போது நிகழ்ந்த பீதி நமக்கு மிகைபடத் தோன்றுவதற்குக் காரணம் அதில் பல பட்டதாரிகளும் உயர்குலத்தோரும் வீழ்ந்து பட்டதேயாகும். சலுகைபெற்ற வகுப்பாருக்கு மரியாதை காட்டுவது நமக்கு வழக்கமாகப் போய்விட்டபடியால், அவர்களுக்குக் கஷ்டம் என்று சொல்லும்போதே நமக்கு அவர்கள்பால் மிகுந்த அநுதாபம் தோன்றிவிடுகிறது. பிறரிடத்தில் அநுதாபம் காட்டுவது போலவே அவர்களிடத்திலும் அநுதாபம் காட்டுவது நல்லதுதான். ஆனால், அவர்கள் ஒரு சிலர்தான் என்பதையும் கூடவே நினைவுகூர்ந்துகொள்வது நல்லது. அவர்கள் க்ஷேமமாயிருக்கவேண்டுமென்று நாம் விரும்பலாம். ஆனால், சாமானிய ஜனங்களின் யோகக்ஷேமந்தான் நமக்கு மிகவும் முக்கியமானது. ஒரு சிலருக்காக நாம் மிகப் பலரைப் பலிகொடுக்க முடியாது. ரூசோ சொல்லுகிறான்: "மனிதஜாதி என்பது சாமானியஜனங்களைக் கொண்டது. அந்த ஜனங்களில் அடங்காதவையெல்லாம் அற்பமானவையேயாகும். அவற்றை நாம் பொருட்படுத்த வேண்டியதில்லை."

இக்கடிதத்தில் உனக்கு நெப்போலியனைப் பற்றிச் சொல்லவேண்டுமென்று எண்ணியிருந்தேன். ஆனால், என்னுடைய மனம் வேறு எங்கோ பிரயாணம் செய்துவிட்டது, என்னுடைய பேனா வேறு எதையோ எழுதிவிட்டது. இன்னும் நாம் நெப்போலியனைப் பார்த்தபாடில்லை. அவன் அடுத்த கடிதம் வரையில் காத்துக் கிடக்கவேண்டியதுதான்.

104

நெப்போலியன்

நவம்பர் 4, 1932.

பிரெஞ்சுப் புரட்சியிலிருந்து நெப்போலியன் உதித்தான். பிரான்சு, குடியரசுப் பிரான்சு, ஐரோப்பாவின் முடிவேந்தர்களையெல்லாம் திரணமாகக் கருதி எதிர்த்துப் போராடிய பிரான்சு, கார்சிகா தீவிலிருந்து வந்த இந்தச் சின்னஞ் சிறு மனிதனிடம் பெட்டிப் பாம்பாக அடங்கி விட்டது. அந்தக் காலத்தில் பிரான்சு தேசமானது அமானுஷீகமான, விசித்திர செளந்தரியத்துடன் சோபித்துக்கொண் டிருந்தது. பார்பியர் என்னும் பிரெஞ்சுக்கவி அதை ஒரு பெண் குதிரைக்கு ஒப்பிட்டுப் பாடியிருக்கிறான். ஆனால் அது இன்னும் பழகாத காட்டு மிருகமாகவே இருக்கிறது. அதன் கம்பீரத் தோற்றமும், சுதந்திரப் போக்கும், நிமிர்ந்த தலையும், பளபளக்கும் உடம்பும் நேத்திரானந்தமா யிருக்கின்றன. அவ்வழகிய பரி ஒருவருக்கும் அடங்காமல் துள்ளிக் குதித்து அலைந்து திரிகிறது. அது சேணம், கடிவாளம், லகான் முதலியவற்றைச் சற்றேனும் பொறுக்காமல் கால்களைப் ‘பட் பட்’ என்று தரையில் அடித்துக் கொள்ளுகிறது. அதன் கனைப்பைக் கேட்டு உலகமே கிடுகிடுத்துப் போகிறது. இவ்வளவு கம்பீரம் வாய்ந்த அப் பெண் குதிரை கார்சிகா தீவிலிருந்து வந்த அந்த இளைஞன் தன்மீது ஏறிச் சவாரி செய்வதற்குச் சம்மதித்தது. அவன் அதைக் கொண்டு எத்தனையோ ஆச்சரியமான வேலைகளையெல்லாம் செய்தான். ஆனால், அவன் அதை ரொம்பவும் சாதுவாக்கி அதன் காட்டுத்தனத்தையும் சுதந்திரத்தையும் போக்கடித்து விட்டான். அவன் அதனிடம் அதிக

மாக வேலை வாங்கி அதை மிகவும் களைத்துப்போகுமாறு செய்து விட்டான். கடைசியில் அது அவனையும் கீழே தள்ளிவிட்டுத் தானும் கீழே விழுந்து விட்டது.

நெப்போலியன் எப்பேர்ப்பட்டவன்? அவன் இப் பூவுலகில் தோன்றிய பெரியார்களுள் ஒருவனா? அவன் ‘கர்ம புருஷன்’ (Man of Destiny) என்று அழைக்கப் படுகிறான். அந்தப் பெயர் அவனுக்குப் பொருந்துமா? அவன் மனித ஜாதியின் துன்பங்களைத் துடைக்க வந்த மகா வீரனா? அல்லது, ஆசிரியர் எச். ஜி. வெல்சும் வேறு சிலரும் கூறுவது போல, ஐரோப்பாவையும் நாகரிகத்தையும் அழிக்க வந்த வெறும் சாகசம் மட்டும் வாய்ந்த ஒரு நாசகாரனா? இவ்விரு திறத்தாருடைய கூற்றும் மிகையாக இருக்கலாம். இரண்டிலும் ஓரளவு உண்மை இருக்கிறது. நம்மெல்லோரிடத்திலும் குணம் குற்றம், பெருமை சிறுமை ஆகிய இரண்டும் கலந்தே இருக்கின்றன. நெப்போலியனிடத்திலும் இத்தகைய இருமை இயல்பை நாம் காண்கிறோம். ஆனால், நம்மில் பெரும்பாலோரைப் போலன்றி, அவன் அசாதாரணமான குணங்கள் படைத்தவனாயிருந்தான். நெப்போலியன் அஞ்சா நெஞ்சன், தன்னம்பிக்கை கொண்டவன், கற்பனா சக்தி வாய்ந்தவன், பேராற்றல் படைத்தவன், பேராசை உள்ளவன். அவன் ஒரு தலைசிறந்த தளகர்த்தன்; போர்க்கலையில் தேர்ந்த நிபுணன்; அலெக்சாந்தருக்கும் செங்கிஸ்கானுக்கும் நிகரான சேனைத் தலைவன். ஆனால், அவனிடம் சின்னத்தனமும் சுயநலமும் குடிகொண் டிருந்தன. அவன் அகப்பற்றும் புறப்பற்றும் கொண்டவனாயிருந்தான். அவனுடைய வாழ்க்கையை ஆட்கொண்டது ஒரு லட்சியமல்ல. ‘தனக்கு அதிகாரம் வேண்டும்’ என்னும் எண்ணத்தினால் உந்தப்பட்ட அவன் வாழ்நாள் முழுதும் அதிகாரத்தையே தேடி

அலேந்துகொண் டிருந்தான். 'அதிகாரம்! அதிகாரம் தான் என்னுடைய காதலி. அவளை அடைவதற்கு நான் பட்ட கஷ்ட நஷ்டம் கொஞ்சநஞ்ச மல்ல. ஆகவே, அவளை இன்னொருவன் கொண்டு போகவோ, அல்லது என்னுடன் சேர்ந்து அனுபவிக்கவோ நான் விட மாட்டேன்' என்று அவன் ஒரு முறை கூறினனும். நெப்போலியன் புரட்சித்தாயின் வயிற்றில் பிறந்த குழந்தை. ஆயினும், அவன் பெரிய சாம்ராஜ்யத்தைப் பற்றிக் கனவு கண்டுகொண் டிருந்தான். அலெக்சாந்த ருடைய வெற்றிகள் அவனை ஆகர்ஷித்தன. ஐரோப்பா அவனுக்கு மிகவும் சிறிதாகப்பட்டது. அவனை ஈர்த்தது கீழ்த்திசைதான். முக்கியமாக, எகிப்தும் இந்தியாவும் அவனைப் பெரிதும் கவர்ந்தன. அவன் 27 வயதாயிருக்கும் போதே, அதாவது தன்னுடைய வாழ்க்கையின் ஆரம் பத்திலேயே கூறியதைக் கேள்: "கிழக்கில்தான் பெரிய சாம்ராஜ்யங்கள் இருந்திருக்கின்றன; கிழக்கில்தான் பெரிய மாறுதல்கள் நிகழ்ந்திருக்கின்றன; கிழக்கில்தான் 60 கோடி மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். ஆசியாவை ஒரு குன்றுக்கு ஒப்பிட்டால் ஐரோப்பாவை ஒரு கறையான் புற்றுக்குச் சமமாகச் சொல்லலாம்."

1769-ம் ஆண்டில், கார்சிகா தீவில், நெப்போலியன் போனபார்ட் பிறந்தான். கார்சிகா பிரான்சுக்குக் கீழ்ப் பட்ட ஒரு தீவாகும். அவனுடைய உடம்பில் பிரெஞ்சு, கார்சிக, இதாலிய ரத்தம் மூன்றும் ஓடிக்கொண் டிருந்தது. அவன் பிரான்சிலுள்ள ஒரு ராணுவப் பள்ளியில் பயிற்சி பெற்றான். புரட்சியின் போது அவன் ஜாகோபின் சங்கத்தில் ஒரு அங்கத்தினன். ஜாகோபின் களுடைய லட்சியங்களில் தனக்கு இருந்த நம்பிக்கை காரணமாக அவன் அவர்களுடன் சேர்ந்தான் என்று சொல்ல முடியாது. ஒரு வேளை, தன்னுடைய நலன்களை

விருத்தி செய்வதற்காக வென்றே அவன் அவர்களுடன் சேர்ந்திருக்கலாம். 1793-ல், டூலானில் அவன் தன்னுடைய முதல் வெற்றியை அடைந்தான். டூலானில் வாழ்ந்த பணக்காரர்கள், புரட்சி அரசாங்கத்தின் கீழ்த் தங்க ளுடைய சொத்துச் சுதந்திரங்களை இழக்க நேரிடும் என்று அஞ்சியவர்களாய், ஆங்கிலேயரை அழைத்து அவர் களிடம் எஞ்சியிருந்த பிரெஞ்சுக் கடற் படையை ஒப்பித்து விட்டார்கள். இத்துடன் வேறு பல ஆபத்துக் களும் சேர்ந்து அக்காலத்தில் குழந்தைப் பருவத்திலிருந்த குடியரசுக்குப் பெரிய நோவை உண்டு பண்ணி விட்டன. எல்லா ஆண்களும், பெண்களும் கூடச் சேனையில் சேரு மாறு அழைக்கப்பட்டனர். அந்தச் சமயத்தில் நெப் போலியன் கலகக்காரர்களை அடக்கி டூலானிலிருந்த ஆங்கிலப் படையையும் வெகு லாகவமாக முறியடித் தான். அவனுக்கு நல்ல யோகம் அடிக்க ஆரம்பித்தது. தன்னுடைய இருபத்து நாலாவது வயதிலேயே அவன் ஒரு சேனைத்தலைவ னாகிவிட்டான். சில மாதங்களுக்குப் பிறகு ரோப்ஸ்பியர் கிலடீனில் இடப்பட்ட காலையில் அவனுக்குச் சிறிது சங்கடம் நேர்ந்தது. ரோப்ஸ்பியர் கட்சியில் சேர்ந்தவன் என்று அவன் சந்தேகிக்கப் பட்டான். ஆனல், அவன் எந்தக் கட்சியில் உண்மை யாகச் சேர்ந்திருந்தானே அந்தக் கட்சியின் அங்கத்தினர் தொகை ஒன்றே ஒன்றுதான். அந்த அங்கத்தினர் பெயர்—நெப்போலியன்! அதற்குப் பிறகு டைரக்டரியின் ஆட்சி நடந்தது. அப்போது நெப்போலியன், தான் ஜாகோபின் அல்ல என்பதையும், அது மட்டுமின்றித் தான் எதிர்ப் புரட்சிக்குத் தலைமை வகித்துச் சாமானிய ஜனங்களைச் சிறிதேனும் கலக்கமின்றிச் சுட்டுத் தள்ளக்கூடும் என் பதையும் நிரூபித்துக் காட்டினன். 1795-ல், பாரிஸ் மக்கள் மீது அவன் செய்த 'துப்பாக்கிப் பிரயோகம்'

பிரசித்தி பெற்றது. அதைப் பற்றி முன் கடிதத்தில் சொல்லியிருக்கிறேன். அன்றைய தினம் நெப்போலியன் குடியரசைப் படுகாயப்படுத்தினான். பத்து வருஷத்துக்குள் அவன் குடியரசைக் கொன்றுவிட்டுப் பிரான்சின் சக்கரவர்த்தி ஆனான்.

1796-ல், நெப்போலியன் இதாலிய சைனியத்தின் தலைவனானான். அவன் வடஇதாலியில் நடத்திய போர்களில் காட்டிய திறமையைக் கண்டு ஐரோப்பா முழுவதும் அதிசயத்தில் ஆழ்ந்தது. பிரெஞ்சுச் சைனியத்தில் இன்னும் புரட்சி நெருப்பு அணையாமல் இருந்து வந்தது. ஆனால், அவர்களுக்குச் சரியான உடைகளோ, பாதரட்சைகளோ, உணவோ பணமோ இல்லை. இவ்வாறு கந்தலுடுத்த, நடந்து நடந்து கால் தேய்ந்துபோன அந்தச் சைனியத்தை நெப்போலியன் ஆல்ப்ஸ் மலையைக் கடந்து நடத்திச் சென்றான். செழிப்பு மிகுந்த இதாலிய சமவெளிக்குச் சென்றதும் அவன் அவர்களுக்கு உணவும் பிறவும் கொடுப்பதாக வாக்களித்து அவர்களை அழைத்துச் சென்றான். இன்னொருபக்கம் இதாலிய ஜனங்களுக்கு அவன் சுதந்திரம் கொடுப்பதாக வாக்களித்தான். இதுகாறும் அவர்களை அடக்கி ஒடுக்கி வந்தவர்களிடமிருந்து அவர்களுக்கு விடுதலை அளிப்பதாக அவன் கூறினான். அவனுடைய வாய் புரட்சி வாசகங்களைப் பிதற்றுகிறது; மனம் கொள்ளையை நாடுகிறது! இது ரொம்பவும் அழகாயில்லையா? ஆகவே, பிரெஞ்சுக்காரர் இதாலியர் ஆகிய இருதிறத்தாரின் உணர்ச்சிகளையும் தந்திரமாகத் தூண்டிவிட்டான். அவன் ஓரளவு இதாலியனாகவும் இருந்தபடியால் அவனுடைய தந்திரம் வெற்றி பெற்றது. போரில் அவனுக்கு வெற்றிமேல் வெற்றியாகக் கிடைத்து வந்தது. அதனால், அவனுடைய கௌரவமும் கீர்த்தியும் எங்கும் பரவின. அவன், தன்

சைனியத்தைச் சேர்ந்த சாதாரணப் போர் வீரனுடைய கஷ்டநஷ்டங்களைத் தானும் அனுபவித்து வந்தான். சாதாரணப் போர் வீரனுடைய அபாயங்களையும் அவன் பகிர்ந்து கொண்டான். ஏனெனில், எந்தப் போரிலும் எங்கே அபாயம் அதிகமோ அங்கே நெப்போலியனைக் காணலாம். உண்மையான தகுதி உள்ளவர்களை அறிந்து சன்மானிப்பதில் அவன் எப்போதும் சிரத்தை காட்டி வந்தான். ஒருவனிடத்தில் ஒரு தகுதியை அவன் கண்டால், உடனே, போர்க்களத்திலேயே கூட, அவனைச் சன்மானிக்கத் தவறமாட்டான். அவனுடைய போர் வீரர்களுக்கு அவன் ஒரு தந்தையைப்போல் இருந்தான். ஆனால், அத்தந்தை தன் பிள்ளைகளைவிட வயதில் சிறியவனாயிருந்தான். அவனுடைய சேனா வீரர்கள் அவனை 'சோட்டா சுபேதார்' என்று அன்புடன் குறிப்பிடுவார்கள். அவர்கள் அவனை 'நீ' என்று ஒருமையில் அருமையாக அழைப்பது வழக்கம்! ஆகவே, இந்த இளங் தளபதி முப்பது வயது நிரம்பும் முன்னரே பிரெஞ்சுப் போர் வீரர்களின் அன்புக்குரிய செல்வத் தலைமகன் ஆனதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லையல்லவா?

நெப்போலியன் வட இதாலி முழுவதையும் ஜெயித்து, ஆஸ்திரியாவைப் புறங்கண்டு, பழைய வெனிஸ் குடியர[illegible]—ஆற்றுப் புள்ளி வைத்துவிட்டுப் பயனற்ற ஒரு சாம்[illegible] உடன்படிக்கையைச் செய்துகொண்டு பாரிசுக்கு மாபெரும் வெற்றி வீரனாகத் திரும்பி வந்தான். ஏற்கெனவே பிரான்சில் அவனுடைய ஆதிக்கம் வளர ஆரம்பித்துவிட்டது. ஆனால், அதிகாரத்தைக் கைப்பற்றுதற்குரிய தருணம் இன்னும் வரவில்லை என்று அவன் நினைத்தான் போலும். ஆகவே, அவன் ஒரு சேனையுடன் எகிப்துக்குப்போக ஆயத்தமானான். தன்னுடைய இளம் பருவத்திலிருந்தே கீழ்த்திசை தன்னை 'வா வா' என்று

அழைப்பது அவன் காதுகளில் ஒலித்துக்கொண்டிருந்தது. இப்போது, அவன் அந்த ஆசையை நிறைவேற்றிக் கொள்ளக்கூடியவனாயிருந்தான். அத்துடன் பெரிய சாம்ராஜ்யக் கனவுகள் அவனுடைய மனக் கடலில் மிதந்து கொண்டிருந்திருக்க வேண்டும். அவன் மத்தியதரைக் கடலிலுள்ள பிரிட்டிஷ் கடற் படைக்குக் கடுக்காய் கொடுத்துவிட்டு அலெக்சாந்திரியா சென்று சேர்ந்தான்.

அப்போது, எகிப்து உதுமானியத் துருக்கிய சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாயிருந்தது. ஆனால், அந்தச் சாம்ராஜ்யம் வலியிழந்து விட்டது. எகிப்து பெயருக்குத் தான் துருக்கி சுல்தானின் கீழ் இருந்தது. உண்மையில் அதை மாமலூகியர் ஆண்டு வந்தனர். அரசியல் புரட்சிகளும் யந்திரப் புரட்சிகளும் ஐரோப்பாவின் அஸ்திவாரத்தையே ஆட்டலாம். ஆனால், மாமலூகியர்மட்டும் இடைக்காலத்துப் பாணியிலேயே தங்கள் வாழ்க்கையை நடத்திக்கொண்டு போனார்கள். நெப்போலியன் கெய்ரோவை நெருங்கிய காலையில், ஒரு மாமலூகிய குதிரை வீரன் பளபளப்பான பட்டுடை அணிந்து, பொன்னிழைத்த போர்க்கவசம் பூண்டு, பிரெஞ்சுப்படைக்கு முன்னே சென்று அதன் தலைவனைத் துவந்துவ யுத்தத்துக்கு அழைத்தானாம்! பிரெஞ்சுப் போர் வீரர்களுக்குப் பழங்காலத்து யுத்த தருமம் என்ன [illegible] அந்தோ! அவர்களுடைய குண்டுகள் அம்மாமலூக்[illegible] மார்பில் பாய்ந்து அவனை யமனுலகுக்கு அனுப்பின. அதற்குப் பிறகு நெப்போலியன் 'பிரமிட் யுத்த'த்தில் வெற்றி பெற்றான். நெப்போலியனுக்கு நாடக நிலைகளில் பிரியம் அதிகம். அவன் எகிப்தியப் பிரமிட்களுக்கு (சமாதிக் கோபுரங்கள்) எதிரில் தன்னுடைய படை வீரர்களுக்கு முன்னால் குதிரைமீது அமர்ந்து சென்று அவர்களை நோக்கிப் பின்வருமாறு பேசினான்: "ஓ, போர்

வீரர்களே! உங்களை இப்போது நாற்பது நூற்றாண்டுகள் நோக்கிக்கொண்டிருக்கின்றன."

நெப்போலியன் தரைப் போரில் ஒப்புயர்வற்றவனாக இருந்தான். அவன் அதில் தொடர்ந்து வெற்றி பெற்று வந்தான். ஆனால், கடற் போரில் அவன் ஒன்றும் செய்ய முடியாதவனாயிருந்தான். அது அவனுக்கு அர்த்தமாக வில்லை. அவனுக்குத் திறமைவாய்ந்த கப்பற் படைத் தலைவர்கள் இருந்ததாகத் தெரியவில்லை. அந்தச் சமயம் கடற் போரில் மகாமேதாவியான ஒருவன் இங்கிலாந்தின் மத்தியதரைக் கடற்படைக்குத் தலைவனாயிருந்தான். அவன்தான் ஹொரேஷியோ நெல்சன். அவன் ஒருநாள் வெகு துணிச்சலுடன் பிரெஞ்சுக் கடற்படை இருந்த துறைமுகத்துக்குள் நேராகச்சென்று அதை முறியடித்து விட்டான். அந்தக் கடல் யுத்தம் 'நைல்நதி யுத்தம்' என்று அழைக்கப்படுகிறது. இவ்வாறு, நெப்போலியன் பிரான்சுக்கு வரமுடியாதபடி வெளி நாட்டில் அகப்பட்டுக்கொண்டான். பின்பு, அவன் ரகசியமாகத் தப்பித்துக் கொண்டு பிரான்சுக்கு வந்து சேர்ந்தான். ஆனால், அவ்வாறு செய்ததில், அவன் தன்னுடைய கிழக்குச் சைனியத்தைக் கைவிட வேண்டியதாயிற்று.

போரிலே புகழும் சில வெற்றிகளும் கிடைத்ததாயினும், நெப்போலியனுடைய கீழ்த்திசைப் படைச் செலவு தோல்வியில் முடிந்தது என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால், ஒரு விஷயம் நமது கவனத்தைக் கவர்கிறது. நெப்போலியன் எகிப்துக்குத் தன்னுடன் ஒரு கூட்டம் புலவர்களையும், கலைஞர்களையும், ஆசிரியர்களையும் அழைத்துச் சென்றான். அவர்களுடன் பல வகையான நூல்களும் விஞ்ஞான உபகரணங்களும் சென்றன. அக் "கழகத்"தில் தினந்தோறும் விவாதங்கள் நடைபெறுவது வழக்கம். அவ்விவாதங்களில் அம்

மகாபண்டிதர்களுக்குச் சரிசமானமாக நெப்போலியனும் கலந்து கொண்டான். அவர்கள் விஞ்ஞான ஆராய்ச்சித் துறையில் சிறந்த வேலை செய்தார்கள். அது வரையில், எகிப்திய சித்திரலிபி விடுவிக்கப்படாத ஒரு விடுகதையாக இருந்து வந்தது. அப்போது கிடைக்கப்பெற்ற ஒரு கருங்கற் பலகையின் உதவியால் அது விடுவிக்கப்பட்டது. அக் கருங்கற் பலகையில் கிரேக்க லிபியும் இருவகையான எகிப்திய சித்திர லிபிகளும் இருந்தன. கிரேக்க லிபியின் உதவி கொண்டு மற்ற இரு லிபிகளும் அறிந்து கொள்ளப்பட்டன. இன்னும், சூயஸ் வழியாக ஒரு கால்வாய் வெட்டவேண்டும் என்கிற யோசனை நெப்போலியனைப் பெரிதும் கவர்ந்தது என்று அறிய நாம் ஆச்சரியத்துக்குள்ளாகிறோம்.

நெப்போலியன், எகிப்தில் இருந்தபோது, பாரசீகத்தின் ஷாவுடனும், தென்னிந்தியாவில் அரசுபுரிந்து வந்த திப்பு சுல்தானுடனும் பேச்சுவார்த்தைகள் தொடங்கினான். அவன் கடலில் வலியற்றவனாயிருந்தபடியால் அப் பேச்சுவார்த்தைகளால் யாதொரு பலனும் உண்டாகவில்லை. நெப்போலியனைக் கடைசியாக ஒழித்ததும் கடலாதிக்கம்தான்; 19-வது நூற்றாண்டில் இங்கிலாந்துக்குப் பெருமை அளித்ததும் கடலாதிக்கம்தான்.

நெப்போலியன் எகிப்திலிருந்து பிரான்சுக்குத் திரும்பிய காலத்தில் அதன் நிலைமை மிகவும் சீர்கெட்டிருந்தது. டைரக்டரி பொதுஜன நிந்தைக்கும் அவகீர்த்திக்கும் ஆளாகியிருந்தது. எல்லோருடைய கண்களும் நெப்போலியனை நோக்கின. அவனுக்கும் அதிகாரத்தை ஏற்றுக் கொள்வதில் விருப்பம்தான். அவன், தான் திரும்பிவந்த ஒரு மாதத்துக்குப் பிறகு, 1799 நவம்பரில், தன்னுடைய சகோதரனான லூசியனின் துணையுடன் சட்ட சபையைப் பலாத்காரமாகக் கலைத்து

விட்டான். இவ்வாறு, எந்த அரசியலமைப்பின் கீழ் டைரக்டரி பிரான்சை ஆண்டு வந்ததோ அது முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. இத்தகைய பலாத்காரமான அரசியல் நடவடிக்கைகள் 'அரசு கவர் சூழ்ச்சிகள்' (Coup D'etat) என்று அழைக்கப்படுகின்றன. இப்போது, எல்லாம் நெப்போலியன் கையில் இருந்தது. அவனுக்கு ஜனங்களின் ஆதரவும் நம்பிக்கையும் இருந்தபடியால்தான் அவன் அவ்வாறு செய்ய முடிந்தது. இதற்கு நெடுங்காலம் முன்பே புரட்சி தூக்கிலிடப்பட்டு விட்டது. இப்பொழுது ஜனநாயகம் கூட மறைந்து வந்தது. ஜன ஆதரவு பெற்ற ஒரு சேனைத் தளகர்த்தன் ஆக்கவும் அழிக்கவும் வல்லவனாகிவிட்டான். ஒரு புதிய அரசியலமைப்புத் தயாரிக்கப்பட்டது. அதன்படி மூன்று கான்சல்கள் (கான்சல் என்னும் பெயர் புராதன ரோமாபுரியிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டது) இருப்பதென்றும், அவர்களில் 'பிரதம கான்சல்' ஆக இருப்பவன் சகல அதிகாரங்களையும் வகிப்பதென்றும், நெப்போலியன் பத்து வருஷங்களுக்குப் பிரதம கான்சலாயிருக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. இந்த அரசியலமைப்புப் பற்றி விவாதங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கையில் யாரோ ஒருவன் 'ஒரு பிரசிடெண்டு இருக்கவேண்டும். அவன் கையில் உண்மையான அதிகாரம் இருக்கக்கூடாது. பிரசிடெண்டின் முக்கிய வேலை தஸ்தாவேஜுகளில் கையெழுத்திடுவதும் ஒரு சம்பிரதாயத்துக்காகக் குடியரசுக்குப் பிரநிதித்வம் வகிப்பதுமாக இருக்கவேண்டும்' என்று கூறினான். அதாவது, தற்காலத்தில் உள்ள பிரெஞ்சுப் பிரசிடெண்டைப் போலவும் அரசியல் அமைப்புக்குட்பட்ட அரசர்களைப் போலவும் அப்பிரசிடெண்டு இருந்துவர வேண்டுமென்பது அவனுடைய கருத்து. ஆனால், நெப்போலியன் அதிகா

ரத்தை விரும்பினான்; வெறும் அரச சின்னத்தை அல்ல. ஆகவே, இந்தக் கம்பீரமான், ஆனால், அதிகாரமில்லாத 'பிரசிடெண்டு' உத்தியோகம் அவனுக்குப் பிடிக்க வில்லை. ஆகவே, அவன் 'இக் கொழுத்த பன்றியை அடித்து விரட்டுங்கள்' என்று கத்தினான்.

பத்து வருஷத்துக்கு நெப்போலியன் பிரதம கான்சலாக இருக்க வேண்டியது என்கிற அரசியலமைப்பு ஜனங்களின் வோட்டுக்கு விடப்பட்டது. முப்பது லட்சத்துக்கு மேற்பட்ட வோட்டுகளுடன் பெரும்பாலும் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது. இவ்வாறு, பிரெஞ்சு மகா ஜனங்கள் தாங்களாகவே சகல அதிகாரங்களையும் நெப்போலியனுக்கு அளித்தார்கள். அவன் தங்களுக்குச் சுகத்தையும் சுதந்திரத்தையும் கொடுப்பான் என்று அவர்கள் நம்பினார்கள். ஆனால், அந்த ஆசை நிராசையாயிற்று.

நாம் நெப்போலியனுடைய ஜீவிய சரித்திரத்தை விவரமாகக் கவனிப்பதற்கில்லை. அது இடைவிடாத முயற்சியாலும் முடிவடையாத அதிகாரப் பசியாலும் நிறைந்திருக்கிறது. 'அரசு கவர் சூழ்ச்சி' நிறைவேறிய அடுத்த நாளிரவே—அப்போது புதிய அரசியலமைப்பு தயாரிக்கப்படவுமில்லை, நிறைவேற்றப்படவுமில்லை—அவன் சட்டநீதி ஒன்றைத் தொகுப்பதற்காக இரு கமிட்டிகளை நியமனம் செய்தான். இதுதான் அவனுடைய சர்வாதிகார ஆட்சியின் முதல் காரியமாகும். நீண்ட விவாதங்களுக்குப் பின்—அவற்றில் நெப்போலியனும் கலந்து கொண்டான்—அது முடிவாக 1804-ம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டது. அது 'நெப்போலியன் சட்டநீதி' (Code Napoleon) என்று அழைக்கப்பட்டது. புரட்சிக் கருத்துகளையும் தற்காலக் கருத்துகளையும் மனதில் வைத்துக்கொண்டு பார்க்கும்

போது அது அவ்வளவு முற்போக்கு வாய்ந்ததாகத் தோன்றாது. ஆனால், அக்கால நிலைமைக்கு அது எவ்வளவோ முற்போக்கு வாய்ந்ததாக இருந்தது. அடுத்த நூறு வருஷங்களுக்கு அது சில அம்சங்களில் ஐரோப்பா முழுவதற்கும் முன்மாதிரியாகத் திகழ்ந்தது. நெப்போலியன் பலவழிகளிலும் பரிபாலன முறையில் எளிமையையும், திறமையையும் புகுத்தினான். அவன் தலையிடாத விஷயம் கிடையாது; அவனுக்கு ஞாபகம் இல்லாத விஷயமும் கிடையாது. அவனுடைய ஞாபக சக்தி அதியாச்சரியமானது. சிறு விஷயங்களைக்கூட அவன் மறப்பதில்லை. அவனுடைய சக்தியும் வீரியமும் அபாரமானது. அதைக்கொண்டு அவன் தன்னுடைய சக ஊழியர்களையும் காரியதரிசிகளையும் அதிகமாக வேலை வாங்கிவந்தான். அவர்கள் அவனுக்குச் சரியாக வேலை செய்யமுடியாது அயர்ந்து போவார்களாம். நெப்போலியன் அக்காலத்தில் செய்த வேலையைப்பற்றி அவனுடைய சக ஊழியர்களில் ஒருவன் எழுதுகிறான்: "அவன் தன்னுடைய தெளிந்த அறிவின் துணைகொண்டு அரசியற்றல், ஆட்சி புரிதல், பேச்சுவார்த்தை நடத்தல் ஆகிய எல்லாவற்றையும் செய்கிறான். ஒருநாளைக்குப் பதினெட்டு மணிநேரம் அவன் வேலை செய்கிறான். மற்ற அரசர்கள் நூறுவருஷங்களில் ஆண்டதைவிட அதிகமாக அவன் மூன்று வருஷங்களில் ஆண்டுவிட்டான்." இது மிகையான கூற்று என்பதில் ஐயமில்லை. ஆனால், அக்பரைப்போல் நெப்போலியனும் அசாதாரணமான ஞாபகசக்தியும் தெளிந்த நல்லறிவும் படைத்திருந்தான் என்பது உண்மை. அவனே சொல்லுகிறான்: "ஏதாவதொரு விஷயத்தை மனதிலிருந்து அகற்ற விரும்பும் போது நான் அவ்விஷயத்துக்குரிய அறையை மூடிவிட்டு இன்னொரு விஷயத்துக்குரிய அறையைத் திறந்து விடு

கிறேன். என் மன அறைகளிலுள்ள விஷயங்கள் ஒன்றோடொன்று கலந்து விடுவதில்லை. அவை ஒரு போதும் என்னைக் கவலைக்கும் களைப்புக்கும் உள்ளாக்குவதில்லை. நான் தூங்க வேண்டுமாயின் எல்லா அறைகளையும் மூடிவிடுகிறேன். உடனே எனக்குத் தூக்கம் வந்து விடுகிறது.'' போர்க்களத்தில் போர் நடந்து கொண்டிருக்கும் போதே அவன் அரைமணி சாவகாசம் தரையில் படுத்துக்கொண்டு தூங்குவானாம். பின்பு எழுந்திருந்து நீண்டநேர, கடுமையான வேலைக்குத் தயாராகி விடுவானாம்.

அவன் பத்து வருஷத்துக்குப் பிரதம கான்சல் ஆகச் செய்யப்பட்டான். மூன்று வருஷங்களுக்குப் பிறகு, 1802-ல், அவன் அதிகார ஏணியில் அடுத்தபடி ஏறினான். அப்போது அவன் தன்னை உயிருள்ளவரையில் கான்சல் ஆகச் செய்துகொண்டான். அவனுடைய அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டன. குடியரசு முடிவடைந்து விட்டது. அவன் பேருக்குமட்டும் அரசனல்லவே ஒழிய காரியாம்சத்தில் அரசனைவிட ஏற்றமுள்ளவனாகவே இருந்தான். 1804-ல் அடுத்தபடி ஏறுவது அவனுக்கு இன்றியமையாததாகிவிட்டது. ஜனங்களின் வோட்டைப் பெற்று அவன் தன்னைச் சக்கரவர்த்தி என அறிவித்துக் கொண்டான். பிரான்சில் அவன் சர்வவல்லமை வாய்ந்தவனாகிவிட்டான். ஆயினும், அவனுக்கும் பழங்காலத்து யதேச்சாதிகார அரசர்களுக்கும் பெரிய வேற்றுமை இருந்தது. அவன் தன்னுடைய அதிகாரத்தைப் பழைய சம்பிரதாயத்தின் மீதோ 'தெய்வீகஉரிமை' யின் மீதோ ஸ்தாபிப்பதற்கில்லை. அவன் அதைத் தன்னுடைய காரியத்திறமையின்மீதும், வெகு ஜனப்பிரியத்தின் மீதும் ஸ்தாபிக்க வேண்டியவனாயிருந்தான். அவனைக் கடைசி வரையில் அதிக விசுவாசத்துடன் ஆதரித்தவர்கள் குடியான

வர்கள். ஏனெனில், தங்களுடைய நிலங்களைத் தங்களுக்குக் காப்பாற்றித் தந்தவன் நெப்போலியன் என்று அவர்கள் நம்பினார்கள். 'உயர் வகுப்பாரின் அபிப்பிராயங்களையும் ஊர்வம்பிகளின் உளறல்களையும் பற்றி நான் கவலை கொள்ளப்போவதில்லை. நான் மதித்து நடப்பது ஒரே ஒரு அபிப்பிராயம். அந்த அபிப்பிராயம் குடியானவர்களுடையது' என்று நெப்போலியனே ஒருமுறை கூறினான். ஆனால், ஓயாமல் நடந்து வந்த யுத்தத்துக்குத் தங்களுடைய பிள்ளைகளைப் பலிகொடுத்துப் பலிகொடுத்துக் குடியானவர்களும் கடைசியில் நெப்போலியனிடம் சலிப்படைந்துவிட்டார்கள். குடியானவர்களின் ஆதரவு நீங்கியவுடனே நெப்போலியன் கட்டிய மாபெரும் மாளிகை நிலைகுலைந்து தள்ளாடத் தொடங்கியது.

நெப்போலியன் பத்தாண்டுகள் சக்கரவர்த்தியாக இருந்தான். அந்தப் பத்தாண்டுகளில் அவன் ஐரோப்பாக் கண்டம் முழுதும் சாரி திரிந்தபடியாக இருந்தான். அவன் பல போர்களை நடத்திப் பல சண்டைகளில் மறக்க முடியாத வெற்றி பெற்றான். அவனுடைய பெயரைக் கேட்டளவில் அகில ஐரோப்பாவும் நடுங்கியது. அவனுக்கு முன்னும் பின்னும் அவனைப் போல் ஐரோப்பா மீது ஆதிக்கம் செலுத்தியவர் வேறு யாருமில்லை. அவன் தரைப் போரில் அடைந்த வெற்றிகளில் மாரெங்கோ, அல்ம், ஆஸ்டர் லிட்ஸ், யேனா, ஐலா, பிரீட்லாந்து, வாக்ரம் ஆகிய இடங்களில் அடைந்த வெற்றிகள் சரித்திரப் பிரசித்தி பெற்றவையாகும். மாரெங்கோ வெற்றி அவனுக்கு 1800-ல் கிடைத்தது. அப்போது அவன் ஸ்விட்சர்லாந்திலுள்ள உறைபனி மூடிய செயின்ட் பர்னார்டு கணவாயைத் தன்னுடைய சேனையுடன் கடந்து சென்றான். அவனை எதிர்க்கலாற்றாது

ஆஸ்திரியா, பிரஷியா, ருஷியா அனைத்தும் வீழ்ந்து விட்டன. ஸ்பெயின், இதாலி, நெதர்லாந்து, ரைன் நதிக் கூட்டு அரசு என்னும் பெயர் பெற்ற ஜெர்மனியின் பெரும் பாகம், வார்சா கோமகன்நாடு என்று அழைக்கப்பட்ட போலந்து, ஆகிய எல்லாம் அவனுக்குக் கீழ்ப்பட்ட நாடுகள் ஆகிவிட்டன. நெடுங்காலமாகப் பெயரளவில் இருந்து வந்த பழைய பரிசுத்த ரோம சாம்ராஜ்யமும் அப்போது முடிவாக முடிந்து விட்டது.

ஐரோப்பாவின் பேரரசுகளில் இங்கிலாந்து மட்டுந்தான் நெப்போலியனுக்குத் தப்பிப் பிழைத்தது. நெப்போலியனுக்கு எப்போதும் விளங்காத ரகசியமாயிருந்து வந்த கடலானது இங்கிலாந்தைக் காப்பாற்றியது. கடலால் அளிக்கப்பட்ட பாதுகாப்புக் காரணமாக இங்கிலாந்து நெப்போலியனின் இரக்கமற்ற பரம விரோதி ஆகிவிட்டது. நெப்போலியனின் ஆரம்பக் காலத்திலேயே நைல்நதி யுத்தத்தில் நெல்சன் அவனுடைய கடற்படையை அழித்த விதத்தை முன்பே கூறியுள்ளேன். 1805-அக்டோபர், 21-ல் நெல்சன் அதைவிடப் பெரிய கடல் வெற்றியை அடைந்தான். இம்முறை அவன் ஸ்பானியத் தென்கரையிலுள்ள டிரபால்கர் முனைக்கு அருகில் பிரெஞ்சு, ஸ்பானியக் கடற்படை இரண்டையும் முறியடித்தான். இந்தக் கடற் போருக்கு முன்புதான் நெல்சன் தன்னுடைய கடற்படைக்கு 'ஒவ்வொருவனும் தன்னுடைய கடமையைச் செய்ய வேண்டும் என்று இங்கிலாந்து எதிர்பார்க்கிறது' என்னும் புகழ்பெற்ற போருரையை இயம்பினான். வெற்றி கிடைக்கப் போகும் தருணத்தில் நெல்சன் இறந்து விட்டான். அவனுடைய வெற்றியை ஆங்கிலேயர் மறவாது பெருமையுடன் பேணி வருகிறார்கள். லண்டனிலுள்ள நெல்சன் ஸ்தம்பமும், டிரபால்கர்

சதுக்கமும் அவ்வெற்றியின் ஞாபகச் சின்னங்களாக விளங்குகின்றன. இங்கிலாந்தின் மீது படையெடுக்க வேண்டுமென்று நெப்போலியன் கண்டுவந்த கனவை அவ்வெற்றி அழித்து விட்டது.

இதற்குப் பிரதியாக ஐரோப்பாவின் சகல துறைமுகங்களையும் இங்கிலாந்துக்கு மூடிவிடும்படி நெப்போலியன் உத்தரவு பிறப்பித்தான். இங்கிலாந்துடன் எவ்விதமான சம்பந்தமோ போக்கு வரவோ கூடாது. 'வர்த்தகத்தால் வயிறு வளர்க்கும் தேச'மாகிய இங்கிலாந்தை அடக்குவதற்கு இதுதான் வழி என்று அவன் நினைத்தான். இங்கிலாந்தும் ஐரோப்பியத் துறைமுகங்களை முற்றுகையிட்டு நெப்போலியனுடைய சாம்ராஜ்யத்துக்கும் அமெரிக்கா முதலான பிறகண்டங்களுக்கும் இடையில் வியாபாரம் நடக்க ஒட்டாமல் தடுத்தது. இதன்றி, இங்கிலாந்து நெப்போலியனுக்கு எதிராக ஐரோப்பாவில் இடைவிடாத சூழ்ச்சி புரிந்து வந்தது. அவனுடைய பகைவர் நாடுகளுக்கும் நொதுமலர் நாடுகளுக்கும் அது ஏராளமான பணத்தை அள்ளி இறைத்தது. இக்காரியத்தில் ஐரோப்பாவின் கோடீசுவரக் குடும்பங்கள் சில இங்கிலாந்துக்குத் துணையாக நின்றன. அவற்றில் 'ராத்சைல்டு' கோடீசுவரக் குடும்பத்தை முக்கியமாகச் சொல்லலாம்.

நெப்போலியனுக்கு விரோதமாக இங்கிலாந்து கையாண்ட இன்னொரு முறை 'பிரசாரம்' ஆகும். இப்பிரசாரமுறை அப்போது புதிதாக இருந்தது. இப்போது அது சர்வசாதாரணமாகப் போய்விட்டது. பிரான்சுக்கும், சிறப்பாக நெப்போலியனுக்கும் விரோதமாகப் பிரிட்டிஷ் பத்திரிகைகள் பிரசாரப் போர் தொடுத்தன. புதிய சக்கரவர்த்தியை நக்கல் பண்ணும் பலவிதமான கட்டுரைகளும், அறிக்கைகளும், துண்டுப்

பத்திரிகைகளும், கேலிச் சித்திரங்களும் புற்றீசல் போலப் புறப்பட்டன. நெப்போலியனைப் பற்றி இல்லாத வம்பும் தும்பும் திரித்துப் பொய்க் கதைகள் கட்டிவிடப்பட்டன. அவை லண்டனில் வெளியிடப்பட்டுப் பிரான்சுக்குத் திருட்டுத்தனமாக அனுப்பப்பட்டன. பத்திரிகைகளின் பொய்ப் பிரசாரமானது தற்கால யுத்தத்திற்கு ஒரு முக்கிய அங்கமாக விளங்குகிறது. 1914-18 மகா யுத்தத்தின் போது யுத்தத்தில் ஈடுபட்ட அரசாங்கங்கள் அனைத்தும் இல்லாத பொல்லாத அண்டப்புளுகுகளை யெல்லாம் வெட்கம் மானம் இன்றி இயம்பிவந்தன. இவ்வாறு பொய்யைப் புனைந்து அதை உலகெங்கும் பரப்பும் கலையில் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்குத்தான் முதல் தாம்பூலம் கொடுக்க வேண்டும். நெப்போலியன் காலத்திலிருந்தே, ஒருநூற்றாண்டாக அதற்கு இதில் நல்ல பயிற்சி ஏற்பட்டிருக்கிறது. இந்தியாவிலுள்ள நாம், நம்மைப் பற்றிய உண்மை எவ்வாறு மறைக்கப்படுகிற தென்பதையும் நம்மைப் பற்றிய அசாத்தியமான பொய்கள் இங்கிலாந்திலும் இந்தியாவிலும் எவ்வாறு பிரசாரம் செய்யப்படுகின்றன என்பதையும் நன்கறிவோம்.

105

நெப்போலியன் (தொடர்ச்சி)

நவம்பர் 6, 1932.

சென்ற கடிதத்தில் விட்ட இடத்திலிருந்து நெப்போலியன் கதையைத் தொடர்ந்து பார்ப்போம்.

நெப்போலியன் தான் சென்ற இடங்களிலெல்லாம் பிரெஞ்சுப் புரட்சியின் அம்சத்தையும் தன்னுடன் கூடவே கொண்டு சென்றான். அவனால் ஜெயிக்கப்பட்ட தேசங்களில் வாழ்ந்துவந்த மக்கள் அவனுடைய வருகையை முற்றிலும் விரும்பவில்லை என்று சொல்வதற்கில்லை. அரைநிலமானிய முறையில் அவர்களை ஆண்டு வந்த அரசர்கள் கையாலாகதவர்களாக இருந்ததோடு அவர்களுக்குப் பெரும் பாரமாகமாகவும் இருந்துவந்தார்கள். அவர்களிடம் ஜனங்களுக்கு அலுப்புத் தட்டிவிட்டது. இந்த நிலைமை நெப்போலியனுக்குப் பெரிதும் உதவியாயிருந்தது. நெப்போலியன் படையெடுத்துச் செல்லவேண்டியதுதான் தாமதம், நிலமானியத் திட்டம் செத்தேன் பிழைத்தேன் என்று ஓட்டம் பிடித்தது. சிறப்பாக, ஜெர்மனியில் அது போன இடம் தெரியாமல் போய்விட்டது. நெப்போலியன் ஸ்பெயினில் இருந்த 'மதவிசாரணை சபை' யையும் ஒழித்தான். ஆனால், அவன் தன்னை அறியாமலே உயிர்ப்பித்த உணர்ச்சியானது அவனுக்கு விரோதமாகவே திரும்பி அவனை முடிவாக அழித்து விட்டது. அவன் பழங்காலத்து மன்னர்களையும் மன்னர் மன்னர்களையும் வெல்லக் கூடியவனாயிருந்தான். ஆனால், அவனுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த ஒரு முழு ஜன சமூகத்தை அடக்கக்கூடிய ஆற்றல் அவனுக்கு இல்லை. ஸ்பானியர் அவனுக்கு விரோதமாக எழுந்தார்கள். அவன் பல வருஷங்கள்

வரையில் தன்னுடைய சக்தியையும் சாதனங்களையும் அவர்களை அடக்கும் முயற்சியில் செலவழிக்க வேண்டியிருந்தது. பாரன் வான்ஸ்டீன் என்னும் பெருந் தேச பக்தனின் தலைமையில் கிளர்ந்தெழுந்த ஜெர்மானிய மக்களும் நெப்போலியனுக்குத் தீராப் பகையாக வந்து வாய்த்தார்கள். அவர்கள் தங்களுடைய விடுதலைக்காக யுத்தம் தொடங்கினார்கள். இவ்வாறு, நெப்போலியனாலேயே கிளப்பிவிடப்பட்ட தேசிய உணர்ச்சியும், கடலாதிக்கமும் சேர்ந்துகொண்டு அவனை அழித்துவிட்டன. எப்படியிருந்தாலும் ஐரோப்பா முழுதும் ஒரு சர்வாதிகாரியின்கீழ் இருப்பதென்பது முடியாத காரியம். "என்னுடைய வீழ்ச்சிக்குப் பிறரைக் கூறிப் பயனில்லை. குற்றம் என்னுடையதே. எனக்கு நானே கொடிய சத்துருவாகிவிட்டேன். என்னை அழித்த விதிக்கு நானே மூலகாரணன்" என்று நெப்போலியனே பின்பு கூறிய வசனங்கள் ஒருகால் வாஸ்தவமாகவும் இருக்கலாம்.

நெப்போலியன் அசாதாரணமான மேதை வாய்ந்தவன் என்பதில் ஐயமில்லை. ஆனால், அவனிடத்தில் அசாதாரணமான குறைகளும் இருந்தன. நடுவாந்தரத்தில் வாழ்வு படைத்த ஒரு அற்பனுக்குரிய சுபாவம் அவனிடத்தில் காணப்பட்டது. பழைய அரசர்களும் சக்கரவர்த்திகளும் தங்களில் ஒருவனாகத் தன்னை மதித்துத் தங்களுக்குச் சமமானவனாகத் தன்னை நடத்த வேண்டும் என்கிற ஒரு விசித்திர எண்ணம் அவனுக்கு இருந்து வந்தது. அவன் தன்னுடைய சகோதர சகோதரிகளைப் பெரியவர்களாகச் செய்த விதம் எள்ளி நகையாடத் தக்கதாயிருந்தது. அவர்கள் திறமையற்றவர்கள் என்பதைக்கூட அவன் கவனிக்கவில்லை. அவனுடன் பிறந்தவர்களில் ஒழுங்கானவன் லூசியன் ஒருவன்தான். 1799-ல், ஒரு நெருக்கடியான தருணத்தில், 'அரசுகவர் சூழ்ச்சி'யின்போது அவன் நெப்போலியனுக்கு உதவி புரிந்தான். ஆனால், பிறகு அவன் நெப்போலியனுடன் மனஸ்தாபப்பட்டுக்கொண்டு இதாலிக்குப் போய்விட்டான். நெப்போலியனுடைய மற்றச் சகோதரர்கள் அறிவற்ற வெறும் வீணர்கள். அவர்களை நெப்போலியன் அரசர்கள் ஆக்கினான். தன்னுடைய குடும்பத்தை முன்னுக்குக் கொண்டுவருவதில் அவன் காட்டிய ஆத்திரம் மிகவும் இழிந்ததாகவும் சற்று அசாதாரணமானதாகவும் நமக்குத் தோன்றுகிறது. அவனுடைய குடும்பத்தைச் சேர்ந்த யாரும் அவனிடம் உண்மையாக நடந்துகொள்ளவில்லை. அவனுக்குத் துன்பம் நேர்ந்த காலத்தில் அவர்கள் அவனைக் கைவிட்டுவிட்டார்கள். தன் பெயரால் ஒரு அரசவமிசம் ஸ்தாபிக்க வேண்டும் என்கிற சபலமும் அவனுக்கு அதிகமாக இருந்தது. அவன் பாலியத்திலேயே, அதாவது, இதாலிக்குப் போய்ப் பெரும் புகழும் அடைவதற்கு முன்னரே, போஹர்னை ஜோசபைன் என்பவளை மணந்துகொண்டிருந்தான். அவள் அழகானவள்தான்; ஆனால், சஞ்சல சித்தம் உள்ளவள். அவளிடம் அவனுக்குக் குழந்தைகள் பிறவாதது அவனுக்குப் பெரிய ஏமாற்றத்தை அளித்தது. ஏனெனில், ஒரு அரச பரம்பரையைத் தோற்றுவிக்க வேண்டுமென்று அவன் பெரிதும் விரும்பினான். ஆகவே, ஜோசபைனிடத்தில் அவனுக்குப் பிரியம் இருந்தாலும், அவன் அவளை விவாகரத்து செய்துவிட்டு வேறொருத்தியை மணப்பதென்று தீர்மானித்தான். அவன் ருஷியப் பெருங்கோமகளை மனைவியாக அடைய விரும்பினான். ஆனால், ஜார் சக்கரவர்த்தி அதற்கு இணங்கவில்லை. நெப்போலியன் ஐரோப்பாவின் ஏகசக்கராதிபதியாக இருக்கலாம், ஆயினும், ருஷியச் சக்கரவர்த்தி குடும்பத்

தில் அவன் பெண் கொள்ள நினைப்பது சற்று அகம்பாவமான காரியம் என்று ஜார் கருதினான். அதற்குப் பிறகு, நெப்போலியன் ஆஸ்திரியாவை ஆண்டுவந்த ஹாப்ஸ்பர்க் சக்கரவர்த்தியை நிர்ப்பந்தப்படுத்தி அவனுடைய மகள் மேரி லூயிசியை விவாகம் செய்து கொண்டான். அவள் நெப்போலியனுக்கு ஒரு ஆண்மகவை ஈன்றளித்தாள். ஆனால், அவள் மந்தமதி படைத்தவளாகவும் கணவனிடத்தில் அன்பில்லாதவளாகவும் இருந்தாள். அதனால், அவர்களுடைய மணவாழ்க்கையில் இன்பம் இல்லாது போயிற்று. நெப்போலியனுக்கு ஆபத்து நேர்ந்த காலத்தில் மேரி லூயிசி அவனைக் கைவிட்டுச் சென்றதோடு அவனை அடியோடு மறந்தும் போனாள்.

நெப்போலியன் சில வழிகளில், தன் காலத்துத் தலைமுறையைவிட மிகவும் உயர்ந்தவனாக விளங்குகிறான். ஆயினும், அரசப்பதவி என்கிற அப் பழைய மனோபாவம் அவனை மருட்டியது விந்தையினும் விந்தையே. அவன் அடிக்கடி புரட்சிக்குரிய பரிபாஷையில் பேசி வந்தான். ஆண்மையற்ற பழைய அரசர்கள் அவனுடைய பரிகாசத்துக்கு ஆளானார்கள். ஆனால், புரட்சியையும் புதிய ஏற்பாட்டையும் நெப்போலியன் வேண்டுமென்றே உதறி எறிந்தான். பழைய ஏற்பாடோ அவனுக்கு ஏற்றதாக இல்லை. அதுவும் அவனை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. ஆக, இரண்டிற்கும் இடையில் அவன் வீழ்ந்துபட்டான்.

போரினால் வரும் புகழைத் துணையாகக் கொண்ட அவனுடைய வாழ்க்கையானது தவிர்க்க முடியாதபடி சிறிது சிறிதாகத் தனது சோக முடிவை நெருங்குகிறது. அவனுடைய மந்திரிகளிலேயே சிலர் துரோகிகளாக மாறி அவனுக்கு விரோதமாகச் சூழ்ச்சி புரிகிறார்கள். டாலிராண்ட் என்பவன் ருஷிய ஜாருடனும், பூஷே என்பவன்

ஆங்கிலேயருடனும் சூழ்ச்சி செய்கிறார்கள். அத்துரோகிகளை நெப்போலியன் கையும் மெய்யுமாகப் பிடித்து விடுகிறான். ஆயினும், ஆச்சரியம் என்னவென்றால், அவர்களை அவன் வெறுமே கண்டித்து விட்டுப் பழையபடியே மந்திரிகளாக இருக்குமாறு அனுமதிக்கிறான். அவனுடைய சேனாதிபதிகளில் ஒருவனான பர்னடாட் என்பவன் அவனுக்கு விரோதமாகத் திரும்பி அவனுடைய கொடிய பகைவன் ஆய்விடுகிறான். அவனுடைய குடும்பத்தில் அவனுடைய தாயாரும் லூசியனும் நீங்கலாக மற்றவர்கள் சரிவர நடந்து கொள்ளவில்லை. அவர்கள் பெரும்பாலும் அவனுக்கு விரோதமாகவே வேலை செய்கிறார்கள். பிரான்சிலும் அதிருப்தி வளர்கிறது. அவனுடைய சர்வாதிகார ஆட்சி கடுமையானதாகவும் இரக்கமற்றதாகவும் மாறுகிறது. பலர் விசாரணையின்றிச் சிறைகளில் அடைக்கப்படுகிறார்கள். அவனுக்குத் துர்த்தசை ஆரம்பித்து விட்டதென்கிற விஷயம் திட்டமாகத் தெரிகிறது. அதை உணர்ந்த பலர் அவனிடமிருந்து மெதுவாக நழுவி விடுகிறார்கள். அவனுடைய யௌவன தசை இன்னும் மாறவில்லை. ஆயினும் அவனுடைய தேகபலமும் மனோபலமும் குன்றுகின்றன. போர்க்களத்தில் போர் நடந்துகொண்டிருக்கும் போதே அவனுக்குக் கொடிய வயிற்றுவலி உண்டாகிறது. அதிகாரம் அவனைக் கெடுத்துவிடுகிறது. அவனுடைய பழைய திறமை இன்னும் போகவில்லை. ஆனால், முன்னைப்போல் அவ்வளவு லாகவமாக இயங்குவதற்கு அவனால் முடியவில்லை. ஐயமும் தயக்கமும் மேலிடுகின்றன. அவனுடைய சேனைகளின் லாகவமும் குறைகிறது.

1812-ம் ஆண்டில் ஒரு பெருஞ் சேனையுடன்-அது மாபெருஞ் சேனை என்று அழைக்கப் பட்டது-நெப்

போலியன் ருஷியா மீது படையெடுத்துச் செல்கிறான். அவன் ருஷியரை வென்று அதிக எதிர்ப்பு இன்றியே முன்னேறுகிறான். ருஷியப் படைகள் மேலும் மேலும் பின் வாங்கிச் செல்கின்றனவே ஒழிய எதிர் ஊன்றிப் போர் புரிவதாகக் காணோம். அதனுடன் எதிர் நின்று போர் புரிவதற்குப் பிரெஞ்சு மா பெருஞ் சேனை செய்த முயற்சிகளெல்லாம் வீணாகின்றன. கடைசியில் மா பெருஞ் சேனை மாஸ்கோவை அடைகிறது. நெப்போலியனுக்குப் பணிந்து போய்விடலாம் என்று ஜார் எண்ணுகிறான். ஆனால், இருவர் அவனை அவ்வாறு செய்ய ஒட்டாமல் தடுத்து விடுகிறார்கள். ஒருவன் பிரெஞ்சு சேனாதிபதியான பர்னடாட்; அவன் நெப்போலியனுடைய பழைய தோழன். இன்னொருவன் ஜெர்மானிய தேசியத் தலைவனான பாரன் வான்ஸ்டீன். நெப்போலியன் அவனை நாடு கடத்தியிருந்தான். பகைவனைப் பொசுக்கித் துரத்தும் பொருட்டு ருஷியர் தங்களுடைய அருமை நகரமாகிய மாஸ்கோவுக்குத் தாங்களே தீ யிடுகிறார்கள். மாஸ்கோ நகரம் தீப் பற்றி எரியும் செய்தி செயின்ட் பீட்டர்ஸ்பர்கிலுள்ள ஸ்டீனுக்கு எட்டுகிறது. அப் அப்போது அவன் உணவருந்தும் பொருட்டு மேஜையருகே உட்கார்ந்திருக்கிறான். உடனே அவன் தன் மதுக் கிண்ணத்தை உயர்த்திப் பின் வருமாறு கூவுகிறான்: "இதற்கு முன் மூன்று நான்கு தடவைகள் நான் என்னுடைய உடைமைகளை யெல்லாம் இழந்திருக்கிறேன். சமயம் வரும்போது நமது உடைமைகளைத் தூர எறிந்து விடுவதற்கு நம்மை நாம் பழக்கிக் கொள்ள வேண்டும். நாம் இறக்கப்போவது திண்ணம் என்று தெரிந்த பிறகு தீரர்களாகவே இருந்து இறப்பது நலமல்லவா?"

அப்போதுதான் குளிர்காலம் ஆரம்பமாகிறது. நெப்போலியன் நெருப்புப்பற்றி எரியும் மாஸ்கோவை நீத்துப்

பிரான்சுக்குத் திரும்புவதென்று தீர்மானிக்கிறான். மாபெருஞ் சேனை மாபெரும் சோர்வினால் பீடிக்கப்பட்டுத் தள்ளாடிக் கொண்டே திரும்பிச் செல்கிறது. வழியெல்லாம் உறைபனி, பக்கங்களிலும் பின்புறத்திலும் ருஷியக்காசக்குகள் இடைவிடாது தாக்கித் துன்புறுத்துகிறார்கள். சேனையிலிருந்து விலகித் திரிவோரை அவர்கள் கொன்றுவிடுகிறார்கள். கொடும் காசக்குகளாலும் கடும் குளிரினாலும் பல்லாயிரக்கணக்கான பேர் மாண்டு மடிகிறார்கள். இப்போது மாபெருஞ் சேனையைப் பார்த்தால் அதன் ஆவி தான் ஊர்வலமாகச் செல்லுகிறதோ என்னும் படியாக இருக்கிறது. எல்லோரும் கந்தலுடுத்துக் கால் தேயக் குளிரினால் நடுங்கிக்கொண்டு களைப்பு மேலிட நடந்து செல்கிறார்கள். நெப்போலியனும் தனது போர் வீரர்களுடன் கால் நடையாகச் செல்கிறான். அப் படைச் செலவை நினைத்தாலே நமக்குக் குலைநடுக்கம் கொள்கிறது. அந்தப் பெரிய சைனியம் சிறிதுசிறிதாகக் குறைந்து வந்து கடைசியில் மறைந்தே விடுகிறது. ஒரு சிலரே தாய்நாடு திரும்புகிறார்கள்.

ருஷியப் போர் பிரான்சையும் நெப்போலியனையும் பொறிகலங்க அடித்தது. அது பிரான்சின் ஆள்பலத்தை உறிஞ்சி விட்டது. நெப்போலியனை அது வயது முதிரப் பண்ணிவிட்டது. நெப்போலியனை இப்போது கவலை அரித்துத் தின்றது. போரில் அவனுக்கு அலுப்புத் தோன்றியது. ஆனால், அவனுடைய விரோதிகள் அவனை நிம்மதியாக இருக்கவிடவில்லை. அவர்கள் அவனைச் சூழ்ந்து கொண்டார்கள். அவன் இன்னும் போர்க்களத்தில் சேனைகளை நன்கு நடத்தி வாகை புனைந்த வண்ணமாகத் தான் இருந்தான். ஆயினும், அவனை அகப்படுத்தப் பகைவர் விரித்த வலை அவனைச் சுற்றிச் சுருங்கிக் கொண்டே வந்தது. டாலிராண்டின் சதிகள் அதிகரித்தன.

நெப்போலியனுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமான சில தளபதிகள் கூட அவனுக்கு விரோதமாகத் திரும்பி விட்டார்கள். வெறுப்பும் சோர்வும் விஞ்சியவனாய் நெப்போலியன் 1814 ஏப்ரலில் முடிதுறந்தான்.

ஐரோப்பிய அரசுகளெல்லாம் வியன்னாவில் சபை கூடின. நெப்போலியன் என்கிற தடை இப்போது நீங்கி விட்டபடியால் அவர்கள் ஐரோப்பாவின் படத்தைப் புதுமாதிரியாக எழுத முயன்றார்கள். மத்தியதரைக் கடலிலுள்ள எல்பா என்னும் சிறிய தீவிற்கு நெப்போலியன் அனுப்பப்பட்டு விட்டான். பூர்பான் வமிசத்தைச் சேர்ந்தவனும் கிலடினில் கொல்லப்பட்ட லூயியின் சகோதரனுமான இன்னொரு லூயி எங்கேயோ தனிமையில் வாழ்ந்து வந்தான். அவனைக் கொண்டுவந்து பிரான்சின் சிம்மாசனத்தில் அமர்த்திப் பதினெட்டாவது லூயி என்று முடிசூட்டினார்கள். இவ்வாறு, பூர்பான் வமிசம் மீண்டும் பிரான்சை ஆளத்தொடங்கியது. அதனோடு பழைய கொடுங்கோன்மையும் வந்து சேர்ந்தது. பாஸ்டில் சிறை வீழ்ந்தபின் இருபத்தைந்து ஆண்டுகளாக மக்கள் விளைத்த வீரதீரச் செயல்களின் முடிவு இதுதான் போலும்! வியன்னாவில் அரசர்களும் அவர்களுடைய மந்திரிகளும் தங்களுக்குள் விவாதித்துக் கொண்டும் சண்டையிட்டுக் கொண்டும் இருந்தார்கள். இடையிடையே இன்பமான கேளிக்கைகளில் பொழுதைப் போக்கி வந்தார்கள். அவர்களுக்குப் பெரிய பாரம் நீங்கியதுபோலிருந்தது. அவர்களைப் பீடித்திருந்த பெரிய பயம் விலகிவிட்டது. இனி அவர்கள் நிம்மதியாக உறங்கலாம். நெப்போலியனைக் காட்டிக் கொடுத்த துரோகியான டாலிராண்ட், அரசர்கள் மந்திரிகள் அடங்கிய அக்கூட்டத்துக்கு மிகவும் பிரியமானவனாயிருந்தான். வியன்னா காங்கிரசில் அவன் எடுத்துக் கொண்ட பங்கு

முக்கியமானதாகும். ஆஸ்திரியாவின் அயல் நாட்டு மந்திரியாகிய மெட்டர்னிக் என்பவன் அக்காங்கிரசில் புகழ்பெற்று விளங்கிய இன்னொரு ராஜதந்திரி ஆவன்.

ஒரு வருஷம் கழிவதற்குள்ளாகவே நெப்போலியனுக்கு எல்பா தீவு போதும் போதும் என்றாகிவிட்டது. பிரான்சுக்கும் பூர்பான் ஆட்சி போதும் போதும் என்றாகி விட்டது. நெப்போலியன் எல்பாவிலிருந்து தப்பித்துக் கொண்டு ஒரு சிறிய படகில் ஏறி ரிவீரா கரையிலுள்ள கான்ஸ் என்னுமிடத்தைத் தன்னந் தனியனாகவே 1815 பிப்ரவரி, 26-ல் அடைந்தான். குடியானவர்கள் அவனைக் குதூகலத்துடன் வரவேற்றார்கள். அவனுக்கு விரோதமாக அனுப்பப்பட்ட சைனியங்கள் தங்களுடைய பழைய தலைவனான 'சோட்டா சுபேதாரை'க் கண்டதும் 'சக்கரவர்த்தி நீடூழி வாழ்க' என்று கோஷித்துக் கொண்டு அவனோடு சேர்ந்துகொண்டன. நெப்போலியன் ஜெய சீலனாகப் பாரிசை அடைந்தான். பூர்பான் அரசன் ஓடிவிட்டான். ஆனால், ஐரோப்பாவின் மற்றத் தலைநகரங்களில் அச்சமும் பீதியும் குடிகொண்டன. வியன்னா காங்கிரஸ் இன்னும் நடைபெற்றுக்கொண்டிருந்தது. அங்கு நடந்துகொண்டிருந்த விருந்தும் களியாட்டமும் திடீரென்று முடிவு பெற்றன. நெப்போலியனிடத்துள்ள பொதுவான பயத்தினால் அரசர்களும் மந்திரிகளும் தங்களுடைய சண்டைச் சச்சரவுகளையெல்லாம் மறந்து மீண்டும் அவனை அடக்கி ஒடுக்கும் அந்த ஒரு காரியத்திலேயே கருத்தைச் செலுத்தலானார்கள். ஆக, ஐரோப்பா முழுவதும் நெப்போலியனுக்கு விரோதமாகப் படையெடுத்துக் கிளம்பியது. ஆனால், பிரான்சோ போரிட்டுப் போரிட்டுச் சோர்வுற்றிருந்தது. நெப்போலியனுக்கு அப்போது வயது நாற்

பத்தாறுதான் என்றாலும் அவன் மூப்பும் களைப்பும் மேலிட்டவனா யிருந்தான். அவனுடைய மனைவியாகிய மேரிலூயிசிகூட அவனைக் கைவிட்டுவிட்டாள். சில போர்களில் அவன் வெற்றி அடைந்தான். ஆயினும், பிரசல்ஸ் நகருக்கருகிலுள்ள வாட்டர்லூ என்னு மிடத்தில் அவன் கடைசியாகத் தோற்கடிக்கப்பட்டான். வெலிங்டனால் நடத்தப்பட்ட பிரிட்டிஷ் சேனையும் புருஷரால் நடத்தப்பட்ட பிரஷிய சேனையும், அவன் பிரெஞ்சுக் கரையில் இறங்கிய நூறு நாட்களுக்குப் பிறகு, அவனை முறியடித்தன. நெப்போலியன் திரும்பி வந்து ஆண்ட காலம் 'நூறு நாட்கள்' என்று அழைக்கப்படுகிறது. வாட்டர்லூவில் இருதிறத்துச் சேனைகளும் தோற்பு கெலிப்பு இன்றிச் சமமாகப்போரிட்டன. இன்னாருக்குத் தான் வெற்றி கிடைக்கும் என்று சொல்வது கடினமாக இருந்தது. நெப்போலியனுக்கு அதிருஷ்டம் இல்லை. இருந்திருந்தால் அவன் அப்போரில் வெற்றி பெற்றிருக்கலாம். ஆயினும், சில காலத்துக்குப் பின்பாவது ஒன்றுபட்ட ஐரோப்பாவுக்கு முன்னால் அவன் வீழ்ச்சி அடைவது திண்ணம். இப்போது அவன் தோற்றுவிட்ட படியால் அவனை ஆதரித்தவர்களில் பலர் அவனுக்கு விரோதமாகத் திரும்பித் தங்களைக் காத்துக் கொள்ளத் தலைப்பட்டார்கள். இனிமேல் போரிடுவதில் பயனில்லை என்று நெப்போலியன் கண்டான். ஆகவே அவன் இரண்டாவது முறையாக முடிதுறந்தான். அவன் பிரெஞ்சுத் துறைமுகத்திலிருந்த ஒரு பிரிட்டிஷ் கப்பலுக்கு சென்று, தான் இங்கிலாந்தில் அமைதியாக வாழவிரும்புவதாகக் கூறி, அக் கப்பலின் காப்டனிடம் தன்னை ஒப்புக் கொடுத்தான்.

ஆனால், இங்கிலாந்தோ அல்லது ஐரோப்பாவோ தன்னை மரியாதையாகவும் தயாள சித்தத்துடனும்

நடத்தும் என்று நெப்போலியன் எதிர்பார்த்திருக்கும் பட்சத்தில் அது அவனுடைய தவறாகும். அவனிடத்தில் அவற்றிற்கு அவ்வளவு பயம் இருந்தது. முன்பு அவன் எல்பாவிலிருந்து தப்பித்துக்கொண்டு வந்து விட்டபடியால் இப்போது அவனை வெகு தூரமான ஒரு இடத்தில் தகுந்த பந்தோபஸ்தின்கீழ் வைக்க வேண்டுமென்று அவர்கள் உறுதிபூண்டிருந்தார்கள். ஆகவே, நெப்போலியனுடைய ஆட்சேபனைகள் அனைத்தும் விருதாவாயின. அவர்கள் அவனைக் கைதி என்று கூறித் தென் அட்லாண்டிக் சமுத்திரத்தில் வெகு தொலைவில் உள்ள ஒரு கண்காணாத் தீவுக்குச் சில தோழர்களுடன் அனுப்பி விட்டார்கள். அத்தீவின் பெயர் செயின்ட் ஹெலினா என்பது. நெப்போலியன் 'ஐரோப்பாவின் கைதி' என்று கருதப்பட்டான். அத்தீவில் அவனைக் கண்காணிப்பதற்குப் பல அரசாங்கங்கள் தங்களுடைய கமிஷனர்களை அனுப்பி வைத்தன. ஆனால், உண்மையில் அவனைக் காவல்புரியும் முழுப்பொறுப்பையும் பிரிட்டிஷ் அரசாங்கம் ஏற்றுக்கொண் டிருந்தது. வெளி உலகத் தொடர்பு அறவே அற்றதும், வெகு தொலைவில் உள்ளதுமான அத்தீவில்கூட அவர்கள் நெப்போலியனைக் காவல் புரிவதற்கு ஒரு பெருஞ் சேனையை அனுப்பி வைத்தார்கள். ருஷியக் கமிஷனரான கவுண்ட் பால்மைன் என்பவர் அந்த நிர்மானுஷியமான தீவை "உலகத்திலேயே ஒதுக்குப்புறமானதும், துக்ககரமானதும், நெருங்கமுடியாததும், தாக்கரிதானதும், காப்பெனிதானதும், மனித வாசத்துக்குத் தகுதியற்றதுமான ஒரு ஏகாந்த ஸ்தலம்" என்று அக்காலத்தில் வருணித்தார். அத்தீவின் ஆங்கிலேய கவர்னர் நாகரிகம் என்பதையே அறியாத ஒரு இழிமகன். அவன் நெப்போலியனை மிகவும் கேவலமாக நடத்தினான். அத்தீவிலேயே ஆரோக்கியத்

துக்குச் சிறிதும் தகுதியில்லாத ஒரு இடத்தில் ஒரு பாழ் மனையில் நெப்போலியன் வைக்கப்பட்டான். அவன் மீதும் அவனுடைய சகாக்கள் மீதும் இல்லாத பொல்லாத தடைகளெல்லாம் விதிக்கப்பட்டன. சில சமயம், ஆரோக்கியமான ஆகாரங்கூட அவனுக்குக் கிடைப்பதில்லை. ஐரோப்பாவிலுள்ள தன்னுடைய நண்பர்களுடனும், தன்னுடைய சின்னஞ்சிறு பாலகனுடனும் கூட அவன் யாதொரு கடிதப்போக்கும் வைத்துக் கொள்ள முடியாதபடி தடுத்துவிட்டார்கள். அவன் வாழ்ந்த காலத்தில் தன்னுடைய மகனுக்கு 'ரோமாபுரி மன்னன்' என்னும் பட்டத்தை அளித்திருந்தான். அவனுடைய மகனைப்பற்றிய செய்திகூட அவனுக்கு எட்டுமாறு அவர்கள் விடவில்லை.

நெப்போலியன் நடத்தப்பட்ட விதம் நம்மை ஆச்சரியத்துக்குள்ளாக்குகிறது. ஆனால், செயின்ட் ஹெலினாவின் கவர்னர் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கைக் கருவியே ஒழிய வேறல்ல. நெப்போலியனை வேண்டுமென்றே இழிவாக நடத்தி மானபங்கப் படுத்த வேண்டும் என்பது அவ்வரசாங்கத்தின் கொள்கையாக இருந்தது. மற்ற அரசாங்கங்கள் இதற்கு உடந்தையாயிருந்தன. நெப்போலியனுடைய தாயார், பாவம், தனது தள்ளா வயதில் தன்னுடைய புத்திரனுடன் செயின்ட் ஹெலினாவில் வசிக்க விரும்பினாள். ஆனால் அதற்கு ஐரோப்பிய வல்லரசுகள் 'முடியாது' என்று சொல்லிவிட்டன. நெப்போலியன் இறகொடிந்த பட்சியைப்போல் சக்தியெல்லாம் ஒடுங்கி நெடுந்தொலைவிலுள்ள ஒரு தீவில் கிடந்த காலத்தும் ஐரோப்பாவில் அவன் பேரைக் கேட்ட மாத்திரத்திலேயே எவ்வளவு அச்சம் தோன்றியது என்பதைக் காட்டும் அளவு கருவியாக விளங்குகின்றன அவர்கள் அவனை நடத்திய கொடுமையும் கீழ்மையும்.

இவ்வாறு ஐந்தரை ஆண்டுகள் செயின்ட் ஹெலினாவில் நெப்போலியன் ஜீவப்பிரேதமாகக் காலத்தைக் கடத்தினான். பேராற்றலும் பேரவாவும் நிறைந்த அவன் கூட்டில் அடைக்கப்பட்ட சிம்மத்தைப் போல் அத்தீவிலுள்ள குன்றில் தினந்தோறும் சிறு சிறு அவமானங்களுக்கு உட்படுத்தப்பட்டவனாய் வாழ்க்கை நடத்துவதென்றால் அது அவனுக்கு எவ்வளவு கஷ்டமாயிருந்திருக்கும் என்பதைக் கற்பனை செய்வது கஷ்டமல்ல. 1821 மே மாதத்தில் அவன் இவ்வுலக வாழ்வை நீத்துச் சென்றான். அவன் இறந்த பின்பும் கூட அவன் மீது அக் கவர்னர் கொண்டிருந்த வெறுப்புத் தணியவில்லை. அவன் நெப்போலியனுடைய சவத்தை ஒரு மோசமான இடத்தில் அடக்கம் செய்வித்தான். நெப்போலியனுக்கு இழைக்கப்பட்ட அவமானமும் கொடுமையும் சிறிது சிறிதாக ஐரோப்பாவுக்கு எட்டியது. (அக்காலத்தில் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குச் செய்தி செல்வதென்றால் அதிகக் காலம் பிடிக்கும்.) அதைக் கேட்டு இங்கிலாந்து உட்பட பல நாடுகளில் கூக்குரல் எழுந்தது. ஆங்கிலேய அந்நிய நாட்டு மந்திரியான காஸில்ரீ என்பவன்தான் நெப்போலியன் இழிவாக நடத்தப்பட்டதற்கு முக்கிய காரணமாயிருந்தவன். அது காரணமாகவும், அவனுடைய கடுமையான உள்நாட்டுக் கொள்கை காரணமாகவும் அவன் மீது பொது ஜனங்களுக்கு வெறுப்பு ஏற்பட்டது. அவனை இது பெரிதும் வருத்தியபடியால் அவன் தற்கொலை செய்து கொண்டான்.

மகா புருஷர்களையும் அசாதாரண புருஷர்களையும் பற்றி அபிப்பிராயம் கூறுவது கடினம். நெப்போலியன் தனக்குரிய முறையில் ஒரு மகா புருஷன் என்பதில் ஐயமில்லை. அவன் அசாதாரணமானவன் என்பதிலும் ஐய

மில்லை. அவனுடைய சக்தியை மண், நீர், தீ, காற்று, வான் ஆகிய ஐம்பெரும் பூதங்களின் சக்தியோடு தான் ஒப்பிடலாம். அவன் கருத்துக்கும் கற்பனைக்கும் களஞ்சியமாக விளங்கினான். ஆனால், லட்சியங்களின் உயர்வையும் தியாகத்தின் மேன்மையையும் அவன் உணரவில்லை. அவன் செல்வத்தையும் உயர் பதவியையும் ஈந்து பிறரைத் தன்வசமாக்க முயன்றான். அவன் கைவசமிருந்த அந்தச் சரக்குக் குறையத் தலைப்பட்டவுடன் அவனால் உயர்த்தப்பட்டவர்களில் பலர் அவனைக் கைவிடத் தலைப்பட்டார்கள். அவர்களை அவனோடு சேர்த்துப் பிணிக்கும் லட்சியம் யாதொன்றும் இல்லை. ஏழைகளையும் கஷ்டப்படுவோரையும் தங்களுடைய நிலையில் திருப்தி கொள்ளச் செய்யும் ஒரு சாதனமாகவே அவன் மதத்தைக் கருதினான். 'சாக்ரடீசையும் பிளேட்டோவையும் கண்டிக்கும் ஒரு மதத்தை நான் எவ்வாறு ஒப்புக்கொள்ள முடியும்?' என்று அவன் ஒரு சமயம் கிறிஸ்தவ மதத்தைப் பற்றிக் கூறினான். எகிப்திலிருந்தபோது அவன் இஸ்லாம் மதத்தைச் சிறிது ஆதரித்தான். அதற்குக் காரணம் அங்குள்ள ஜனங்களின் பிரியத்தைச் சம்பாதிப்பதற்குத்தான் என்று சொல்ல வேண்டியதில்லை. அவன் மதாசாரங்களை மதித்து நடந்தவனல்ல. ஆனால், அவன் மதத்துக்கு ஊக்கமளித்து வந்தான். காரணம், நடைமுறையிலுள்ள சமூக ஏற்பாட்டைத் தாங்கி நிற்கும் ஒரு தூணாக அவன் மதத்தைக் கருதியதுதான். அவன் கூறுவதைக் கேள் : " மதம் சொர்க்கத்தைப் பற்றிப் பேசுகிறது ; சொர்க்கத்தோடு சமத்துவ பாவத்தையும் சேர்த்துப் பேசுகிறது. அதனால் தான் ஏழைகள் பணக்காரர்களை வெட்டி மடிக்காதிருக்கிறார்கள். அம்மைகுத்துவதால் உண்டாகும் பிரயோஜனம்தான் மதத்தினாலும் உண்டாகிறது. அற்புத நிகழ்ச்சிகளில் நமக்குள்ள அபிருசியை அது திருப்திப்படுத்துகிறது. மோசக்காரரிடமிருந்து அது நம்மைக் காப்பாற்றுகிறது. சொத்துரிமையில் ஏற்றத் தாழ்வின்றி மனித சமூகம் வாழ முடியாது. அந்த ஏற்றத் தாழ்வு மதத்தையின்றி அமையாது. ஒருவன் பட்டினியால் வாடி மடிகிறான். பக்கத்தில் இன்னொருவன் அறுசுவையோடு கூடிய விருந்தை விலாப்புடைக்க அருந்திக் கொண்டிருக்கிறான். முற்கூறிய பசியேப்பக்காரன் பிற்கூறிய புளியேப்பக்காரனைச் சகித்துக் கொண்டு வாழ்க்கை நடத்துவதெப்படி? மனுஷ சக்திக்கு மீறிய ஒரு சக்தி உண்டென்றும், இவ்வுலகத்திலிருப்பதற்கு மாறாக அடுத்த உலக இன்பதுன்பங்கள் இருக்குமென்றும் அவன் நம்ப வேண்டும். அந்த நம்பிக்கைதான் அவனை உயிர் வாழச் செய்ய வல்லது." நெப்போலியன் தன்னுடைய பலத்தினால் மதங்கொண்டிருந்த காலையில், 'உச்சி மீது வான் இடிந்து விழுமாயினும் நமது ஈட்டி முனைகளால் அதைத் தடுத்து நிறுத்துவோம்' என்று செருக்குடன் புகன்றானும்.

பெரியோர்களுக்குள்ள காந்தசக்தி நெப்போலியனிடம் இருந்தது. பலருடைய உண்மையான அன்பை அவன் பெற்றான். அக்பருடைய நோக்கில் இருந்த காந்த சக்தி அவனுடைய நோக்கிலும் இருந்தது. 'என்னுடைய வாளை நான் உறை கழிப்பது வெகு அபூர்வம். என்னுடைய கண்களாலேயே நான் போர்களில் வெற்றி பெற்றிருக்கிறேன் ; ஆயுதங்களால் அல்ல' என்று அவன் ஒரு முறை கூறினானும். ஐரோப்பாவையே போர்ப்படுகுழியில் தள்ளிய ஒருவனுடைய வாயிலிருந்து வெளிவரும் இவ்வார்த்தைகள் நமக்கு ஆச்சரியத்தைத் தருகின்றன அல்லவா? பிற்காலத்தில் அவன் நாடு கடத்தப்பட்டபோது 'பலாத்காரம்

எதற்கும் பரிகாரம் ஆகாது. மனிதனுடைய ஆன்மபலம் அவனுடைய ஆயுத பலத்தைவிட மேலானது' என்று இயம்பினான். மேலும் அவன் கூறியதாவது : "எல்லாவற்றையும்விட இதுதான் என்னை வியப்புக்குள்ளாக்குகிறது. பலாத்காரத்தினால் எதையும் சாதிக்க முடியாது. உலகில் இரண்டே இரண்டு சக்திகள்தான் உள்ளன. ஒன்று ஆன்ம பலத்தினின்றும் பிறப்பது; மற்றொன்று ஆயுதபலத்தினின்றும் தோன்றுவது. ஏறுங் கடைசியில் ஆன்மபலம் ஆயுத பலத்தைவென்று விளங்குமென்பதில் ஐயமில்லை." ஆனால், அவனுக்கு 'ஏறுங்கடைசி' என்பது இல்லாமற் போய் விட்டது. அவன் ஒரே அவசரத்தில் இருந்தான். தன்னுடைய வாழ்க்கையின் தொடக்கத்திலேயே அவன் ஆயுத வழியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டான். ஆயுத பலத்தால் அவன் வென்றான்; ஆயுத பலத்தால் அவன் வீழ்ந்தான். 'யுத்தம் என்பதே மனித இயற்கைக்குப் பொருந்தாத ஒரு விபரீத விளைவாகும். பீரங்கிகளின் துணையின்றியும் துப்பாக்கிச் சனியன்களின் உதவியின்றியும் வெற்றிபெறுங் காலம் ஒருநாள் வரும்' என்று அவன் ஓரிடத்தில் கூறுகிறான். காலதேச வர்த்தமானங்கள் அவனையும் மீறி நின்றன. அவனுடைய பேராசை, யுத்தத்தில் அவன் எளிதில் வெற்றி அடைந்த விதம், திடீரென்று வாழ்வுபெற்ற அற்பன் என்று அவன்பால் ஐரோப்பிய அரசர்கள் கொண்ட வெறுப்பு, அவனிடம் அவர்களுக்குள்ள அச்சம், அது காரணமாக அவர்கள் அவனை நிம்மதியாகத் தலைவைத்து உறங்கவிடாமை—எல்லாம் ஒன்று சேரவே அவனால் எதையும் சமாளிக்க முடியவில்லை. அவன் போரில் ஆயிரக் கணக்கான உயிர்களைப் பலி கொடுத்தான். ஆயினும், அவன் பிறர் துன்பம் காணப் பொருதவன் என்று சொல்லப்படுகிறது.

அவன் எளிய வாழ்வைக் கைக்கொண்டிருந்தான். அளவுக்கு மீறிய போகங்களை அவன் விழைந்ததில்லை. எதிலாவது அவன் அளவுக்கு மீறி இறங்கினான் என்றால் அது உழைப்பில்தான். "மனிதன் எவ்வளவுதான் குறைவாக உண்பதாக நினைத்து உண்டாலும் அது அளவுக்கு மீறியதாகவே போய்விடுகிறது. அளவுக்கு மீறி உண்பதால் ஒருவன் நோயுறலாம். அளவுக்குக் குறைய உண்பதால் ஒருவன் ஒருபோதும் நோயுறுவதில்லை" என்பது அவனுடைய சித்தாந்தம். இந்த எளிய வாழ்வுதான் அவனுடைய அற்புதமான ஆரோக்கியத்துக்கும் ஆற்றலுக்கும் காரணமாயிருந்தது. அவன் விரும்பிய காலத்தில் விரும்பிய அளவுக்கு (அது எவ்வளவு குறைவாயிருப்பினும்) உறங்கக் கூடியவனாயிருந்தான். காலையிலும் மாலையிலும் நூறுமைல் குதிரைச் சவாரி போவது அவனுக்குப் பிள்ளைவிளையாட்டாக இருந்தது.

அவனுடைய பேராசையானது அவனை ஐரோப்பா வெங்கும் கொண்டு சென்றபோது அவன் அதை ஒரே அரசாங்கமும் ஒரே நீதியும் உள்ள ஒரே ராஜ்யமாகப் பாவிக்கத் தொடங்கினான். அவன் செயின்ட் ஹெலினாவில் சிறைவைக்கப்பட்டிருந்த காலையில் இதே எண்ணம் அவனுக்கு மீண்டும் ஏற்பட்டது. முன்னைவிட அனுபவ முதிர்ச்சியை அடைந்துள்ள அவன் பொதுப்படக் கூறுகிறான் :

"காலக்கிரமத்தில், உடனே இல்லாவிட்டாலும் பிற்பட்டாவது, ஐரோப்பிய நாடுகளின் ஐக்கியம் நிகழ்ச்சிகளின் வேகத்தால் நிச்சயம் ஏற்பட்டே தீரும். அதற்கு வேண்டிய உத்வேகத்தை முதன் முதலில் நானே கொடுத்து விட்டேன். என்னுடைய ஏற்பாடு வீழ்ச்சியுற்ற பிறகு ஒரு சர்வ தேச சங்கத்தின் மூலமாகத்தான் ஐரோப்பாவில் அமைதி காண முடியும் என்று எனக்குத்

தோன்றுகிறது.'' அவன் மேற்கூறியவாறு மொழிந்து நூறு ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. இன்னும் ஐரோப்பா இருட்டில் தடவிக் கொண்டும் சர்வதேச சங்க முறையில் சோதனை செய்து கொண்டும் இருக்கிறது.

அவன் கடைசியாக எழுதி வைத்த மரண சாசனத்தில் இளம் பிராயத்தினனான தன்னுடைய மகனுக்கு அறிவுரை கூறியிருக்கிறான். அவன் தன்னுடைய மகனை 'ரோமாபுரி மன்னன்' என்று அழைத்தான். அம்மகனுடைய செய்திகூட அவனுக்கு எட்டாமல் செய்தனர் அவனைக் காவலில் வைத்த கொடியோர். நெப்போலியனுக்குத் தன்மகன் ஒரு நாள் மண்ணாளும் மன்னன் ஆவான் என்னும் நம்பிக்கை இருந்தது. ஆகவே, அவன் தன் மகனைப் பலாத்காரத்தைக் கையாளாமல் அமைதியாக அரசு புரியுமாறு கேட்டுக் கொண்டான். "நான் ஐரோப்பாவை ஆயுத பலத்தால் அடக்கி ஆள வேண்டியவனாயிருந்தேன். ஆனால், தற்காலத்தில் அறிவைத் துணைகொண்டு ஆள்வதுதான் சாலச் சிறந்ததாகும்" என்று அவன் மகனுக்கு இதோபதேசம் செய்கிறான். ஆனால்; மகனுடைய தலையெழுத்து வேறு வகையில் மண்ணாள்வதாயிருந்தது. தந்தை இறந்த பதினொரு வருஷங்களுக்கெல்லாம் மகனும் இளம்பிராயத்திலேயே வியன்னாவில் இறந்து விட்டான்.

ஆனால், இந்த எண்ணங்களெல்லாம் நெப்போலியனுக்குச் சிறையில் இருக்கும்போதுதான் வந்தன. அப்போது அவன் உலகத்தில் அடிபட்டு நன்கு திருந்தியவனாயிருந்தான். ஒருகால், பிற்காலத்தில் வரும் தலைமுறைகள் தன்னைப்பற்றி நல்லெண்ணம் கொள்ள வேண்டுமென்பதற்காகவும் அவன் அவ்வாறு எழுதியிருக்கலாம். அவன் உன்னதநிலையில் இருந்த காலத்திலெல்லாம் ஒருகர்மவீரனாகவே விளங்கினான். அப்போது

அவனுக்குத் தத்துவம் பேசுவதற்கு அவகாசம் இல்லை. அவன் வணக்கம் செலுத்தியதெல்லாம் அதிகாரத்தின் பலிபீடத்தில்தான். அதிகாரத்தைத்தவிர வேறெதையும் அவன் உண்மையாகக் காதலிக்கவில்லை. அவனுடைய காதல் கரடுமுரடானதல்ல; அது ஒரு கலைஞனின் காதலைப்போன்றது. 'நான் அதிகாரத்தைக் காதலிக்கிறேன்; ஆமாம், நான் அதிகாரத்தைக் காதலிக்கிறேன். ஆனால், என்னுடைய காதல் ஒரு கலைஞனுடையதைப் போன்றது. ஒரு வைணிகன் தன்னுடைய வீணையைக் காதலிக்கிறான். எதற்காக? அதனின்று இன்னிசை எழுப்புவதற்காக. அவனுடைய விரல் வீணைத் தந்திகளைப் பரிசித்த மாத்திரத்தில் மதுர நாதம் பொங்கிவழிகிறதல்லவா? என்னுடைய அதிகாரக் காதலும் அதைப் போன்றதே' என்று அவன் மொழிகிறான். ஆனால், அளவுக்கு மீறி அதிகாரத்தைத் தேடி அலைவது அபாயகரமானது. அதைத்தேடி அலையும் மனிதர்களுக்கும் சரி, தேசங்களுக்கும் சரி, இன்றில்லாவிட்டாலும் நாளைக்கு வீழ்ச்சியும் அழிவும் நேர்வது திண்ணம். ஆகவே, நெப்போலியன் வீழ்ச்சியுற்றான். அதுவும் ஒரு நன்மைக்குத்தான்.

இதற்கிடையில் பூர்பான் வமிசத்தார் பிரான்சை ஆண்டுவந்தார்கள். அவர்கள் புதிதாக ஒன்றையும் கற்றுக் கொள்ளவில்லை. பழைமையாகக் கற்றுக் கொண்ட எதையும் மறக்கவில்லை என்று சொல்லப் படுகி து. நெப்போலியன் இறந்து ஒன்பதாண்டுகள் கழிய ன்னரே பிரான்சு அவர்களிடம் வெறுப்புற்று அவ ளை ஓட்டிவிட்டது. வேறொரு முடியரசு ஸ்தாபிக்கப்பட்டது. வெண்டோம் ஸ்தம்பத்தின் மீதிருந்து எடுக்கப்பட்டிருந்த நெப்போலியன் உருவச்சிலையானது அவனுடைய ஞாபகத்துக்கு மரியாதை செலுத்துவதற்

காகவும் அவன்பாலுள்ள நல்லெண்ணத்தின் அறிகுறியாகவும் மீண்டும் அந்த ஸ்தம்பத்தின் மீது நாட்டப்பட்டது. முதுமையினால் பார்வையிழந்த துர்ப்பாக்கிய நிதியான நெப்போலியனின் தாயார் அச்செய்தியைக் கேள்வியுற்று, 'சக்கரவர்த்தி மீண்டும் பாரிசுக்கு வந்துவிட்டார்' என்று கூறினுளாம்.

106

உலகத்தைப் பார்வையிடல்

நவம்பர் 19, 1932.

உலக வானில் தனது பிரபாவமாகிய ஒளியைநெடுங்காலமாக வீசிக்கொண்டிருந்த நெப்போலியன் என்னும் சூரியன் அஸ்தமித்து விட்டது. நெப்போலியன் மறைந்து இன்று நூறு வருஷங்களுக்குமேல் ஆய்விட்டது. பல பழைய சண்டைகளின் புழுதி அடங்கி விட்டது. ஆனால், நெப்போலியனைப் பற்றிய அபிப்பிராய பேதம் மட்டும் இன்னும் இருந்து வருகிறது. ஒருவேளை, நெப்போலியன் இன்னும் அமைதியான வேறொரு காலத்தில் தோன்றியிருந்தால், அவன் ஒரு பிரசித்திபெற்ற தளகர்த்தனாக மட்டும் இருந்து உலகோரால் கவனிக்கப்படாமலேயே மறைந்திருக்கலாம். ஆனால், பிரெஞ்சுப் புரட்சியும் கால மாறுதலும் சேர்ந்து முன் செல்வதற்குரிய சந்தர்ப்பத்தை அவனுக்கு அளித்தன. கிடைத்த சந்தர்ப்பத்தை அவன் நழுவ விடாமல் பற்றிக்கொண்டான். அவனுடைய வீழ்ச்சியும், ஐரோப்பிய அரசியல் அரங்கிலிருந்து அவன் மறைந்ததும் ஐரோப்பிய மக்களுக்குப் பெரிய ஆறுதலை அளித்திருக்க வேண்டும். ஏனெனில், இடைவிடாது நடந்துவந்த போர்களினால் அவர்கள் களைத்துப் போயிருந்தார்கள். ஒரு தலைமுறை முழுதும் யுத்தமே நடந்துகொண் டிருந்தால் அவர்களுக்கு எப்படியிருக்கும்? அவர்கள் அமைதியைக் காண ஆவல்கொண்டிருந்தார்கள். எல்லோரையும் விட நெப்போலியனுடைய வீழ்ச்சியினால் அதிகமாக ஆறுதல் பெற்றவர்கள் ஐரோப்பாவின் அரசர்கள்தான். ஏனெனில், பல வருஷங்களாக அவர்கள் நெப்போலியனுடைய பெயரைக்

கேட்டமாத்திரத்திலேயே கிலியினால் நடுங்கிக்கொண்டிருந்தார்கள்.

நாம் பிரான்சிலும் ஐரோப்பாவிலும் நீண்ட காலம் இருந்து விட்டோம். இப்போது நாம் பத்தொன்பதாவது நூற்றாண்டுக்குள் பிரவேசித்துவிட்டோம். நெப்போலியன் வீழ்ச்சியுற்ற காலத்தில் உலகம் எவ்வாறிருந்தது என்று ஒருமுறை பார்ப்போமாக!

ஐரோப்பாவில் பழைய அரசர்களும் அவர்களுடைய அமைச்சர்களும் வியன்னா காங்கிரசில் கூடியிருந்த விஷயம் உனக்கு நினைவிருக்கும். அவர்களை வெருட்டியடித்த நெப்போலியன் போய்விட்டான். இனி, அவர்கள் தங்களுடைய பழைய சதுரங்க ஆட்டத்தை ஆடலாம்; தங்களுடைய இஷ்டம்போல் கோடிக்கணக்கான மக்களின் தலைவிதியை நிர்ணயம் செய்யலாம். ஜனங்களுக்கு என்ன தேவை என்பதைப்பற்றி அவர்களுக்கு அக்கறை இல்லை. ஒரு நாட்டின் எல்லை அதன் இயற்கை நிலைமைகளையும் அங்கு வழங்கும் மொழியையும் அனுசரித்து வகுக்கப்படவேண்டும் என்பதைப்பற்றியும் அவர்கள் கவலை கொள்ளவில்லை. ருஷியா, இங்கிலாந்து (பிரதிநிதி: காசில்ரி), ஆஸ்திரியா (பிரதிநிதி: மெட்டர்னிக்), பிரஷ்யா ஆகியவைதான் முக்கிய வல்லரசுகள். அக்கூட்டத்தில் சதுரனும், சமர்த்தனும், சர்வப்பிரியனுமாகிய டாலிராண்ட் இருக்கவே இருந்தான். முன்பு நெப்போலியனுக்கு மந்திரியாயிருந்த அவன் இப்போது பூர்பான் அரசனுக்கும் மந்திரியாயிருந்தான். இவர்களெல்லோரும் குடியிலும் கூத்திலும் கழிந்த நேரம்போக, ஒழிந்த நேரத்தில் நெப்போலியனால் பெரிதும் மாற்றிவிடப்பட்ட ஐரோப்பாவின் படத்தைத் திருத்தி அமைத்துக் கொண்டிருந்தார்கள்.

பூர்பான் வமிசத்தைச் சேர்ந்த 18-வது லூயி பிரான்

சின்மீது திணிக்கப்பட்டான். ஸ்பெயினில் மதவிசாரணை சபை கூட மீண்டும் ஸ்தாபிக்கப்பட்டது. வியன்னாவில் குழுமியிருந்த வேந்தர் குழாத்துக்குக் குடியரசு என்றால் வேப்பங் காயாக இருந்தது. ஆகவே, அவர்கள் ஹாலந்தில் மீண்டும் பழைய குடியரசை ஏற்படுத்தவில்லை. அதற்குப் பதிலாக ஹாலந்தையும் பெல்ஜியத்தையும் ஒன்று சேர்த்து நெதர்லாந்து என்று ஒரு ராஜ்யத்தைச் சிருட்டித்தார்கள். போலந்து ஒரு தனி நாடு என்கிற நிலையை மீண்டும் இழந்தது. அதைப் பிரஷியாவும், ஆஸ்திரியாவும், முக்கியமாக ருஷியாவும் கபளீகரம் செய்துவிட்டன. வெனிசும், வட இதாலியும் ஆஸ்திரியாவுக்குக் கிடைத்தன. ஸ்விட்சர்லாந்துக்கும் ரிவீரா கடற்கரைக்கும் இடையில், இதாலியில் ஒரு சிறு பகுதியையும் பிரான்ஸில் ஒரு சிறு பகுதியையும் சேர்த்துச் 'சார்டினியா' என்று ஒரு தனிராஜ்யம் தோற்றுவிக்கப்பட்டது. மத்திய ஐரோப்பாவில் விசித்திரமானதும், விசதமற்றதுமான ஒரு ஜெர்மானியக் கூட்டரசு ஏற்படுத்தப்பட்டது. ஆனால், பிரஷியாவும் ஆஸ்திரியாவும் பழையபடியே அதன் முக்கிய ராஜ்யங்களாக இருந்துவந்தன. இன்னும் வேறுபல மாறுதல்களும் செய்யப்பட்டன. இவ்வாறு வியன்னாவில் கூடிய பிரகஸ்பதிகள் ஜனங்களை இங்குமங்கும் தள்ளி அவர்களைத் தங்களுக்கு இஷ்டமில்லாத அரசின் கீழ் இருக்குமாறும் தங்களுக்குச் சொந்தமில்லாத மொழியைப் பேசுமாறும் விதித்தனர். பொதுவாக வருங்காலத்தில் போரையும் குழப்பத்தையும் விளைவிக்கும் விதைகளை அவர்கள் விதைத்தனர்.

1814-15-ல் வியன்னாவில் கூடிய காங்கிரசானது அரசர்களுடைய நிலைமையை உறுதிப் படுத்துவதில் தான் அதிகச் சிரத்தை காட்டியது. பிரெஞ்சுப் புரட்சி அவர்களைக் கதிகலங்க அடித்து விட்டது. புரட்சியின் புதுக்

கருத்துகளைப் பரவ விடாமல் தாங்கள் தடுத்து விடக் கூடும் என்று அவர்கள் முட்டாள்தனமாக நம்பிக் கொண்டிருந்தார்கள். ருஷிய ஜாரும், ஆஸ்திரிய சக்கரவர்த்தியும், பிரஷிய அரசரும் சேர்ந்து தங்களையும் தங்களுடைய ராஜ வர்க்கத்தையும் காப்பாற்றுவதற்காகத் தங்களுக்குள் ஒரு 'பரிசுத்தக் கூட்டுறவு' கூட ஏற்படுத்திக் கொண்டார்கள். மீண்டும் 14-வது லூயி, 15-வது லூயி ஆகியோருடைய காலம் திரும்பி வந்துவிட்டது போல் தோன்றிற்று. இங்கிலாந்து உட்பட ஐரோப்பாவெங்கும் முற்போக்கான கருத்துகள் ஒடுக்கப்பட்டன. இவ்வாறு பிரெஞ்சுப் புரட்சியின்போது ஜனங்கள் பட்ட கஷ்டமெல்லாம் விழலுக்கிறைத்த நீரானது கண்டு ஐரோப்பாவிலிருந்த நல்லோர்களுடைய உள்ளமெல்லாம் எவ்வாறு கலங்கிற்றோ!

கீழ் ஐரோப்பாவில் துருக்கி வலி குன்றி விட்டது. அது சிறிது சிறிதாக நசித்து வந்தது. எகிப்து துருக்கிய சாம்ராஜ்யத்துக்குட்பட்ட நாடாகத்தான் கருதப் பட்டது. ஆனால் அது பாதி சுதந்திர நாடாக இருந்தது. 1821-ல் கிரீஸ் தேசம் துருக்கிய ஆதிக்கத்தை எதிர்த்துக் கலகம் செய்தது. எட்டு வருஷங்கள் போராடிய பிறகு அது இங்கிலாந்து, பிரான்சு, ருஷியா இவற்றின் உதவி கொண்டு தன் சுதந்திரத்தை அடைந்தது. அந்த யுத்தத்தில் தான் ஆங்கில மகா கவியான பைரன் கிரீசுக்காகப் போரிட்டு உயிர் துறந்தான். கிரீசைப் பற்றி அவன் சில அழகான கவிதைகள் இயற்றியிருக்கிறான். அவற்றை நீ படித்திருக்கலாம்.

1830-ல் ஐரோப்பாவில் நிகழ்ந்த இன்னுமிரு அரசியல் மாறுதல்களை இங்கு குறிப்பிடுவது நலம். பூர்பான்களின் கொடுங்கோன்மையைப் பிரான்சினால் பொறுக்க முடியவில்லை. அது மீண்டும் அவர்களை

ஆட்சியினின்று ஓட்டி விட்டது. அந்த ஸ்தானத்தில் குடியரசு ஏற்படுத்துவதற்குப் பதிலாக இன்னொரு அரசன் தேர்ந்தெடுக்கப்பட்டான். அவனுடைய பெயர் லூயி பிலிப் என்பது. இவன் ஏறக்குறையச் சட்டத்துக்குட்பட்ட அரசனைப் போலச் சற்றுச் சுமாராக நடந்து கொண்டான். இவன் 1848 வரையில் அரசுபுரிந்தான். அதற்குப் பிறகு இன்னொரு பெருங் கொந்தளிப்பு உண்டாயிற்று. 1830-ல் பெல்ஜியத்திலும் ஒரு கலகம் விளைந்தது. அதன் பயனாகப் பெல்ஜியமும் ஹாலந்தும் பிரிந்து போயின. ஐரோப்பிய வல்லரசுகள் குடியரசு ஆட்சி முறையைப் பலமாக எதிர்த்தன. ஆகவே, அவர்கள் ஒரு ஜெர்மானிய அரச குமாரனைப் பெல்ஜியத்துக்கு அளித்து அந்நாட்டுக்கு அரசனாக அவனை முடி சூட்டினார்கள். இன்னொரு ஜெர்மானிய அரச குமாரனை அவர்கள் கிரீசுக்கு அரசனாக்கினார்கள். பலவாகச் சிடந்த ஜெர்மானிய ராஜ்யங்களில் இத்தகைய அரச குமாரர்களுக்குக் குறைவே இல்லை போலும். எங்கேயாவது ஒரு சிம்மாசனம் காலியாக வேண்டியதுதான் தாமதம்; உடனே அதற்கொரு ஜெர்மானிய அரசகுமாரன் கிடைத்து விடுவான். பிரிட்டனில் இப்போது அரசு புரிந்துவரும் பிரிட்டிஷ் ராஜ குடும்பம் ஜெர்மனியிலுள்ள ஹனோவர் என்னும் ஒரு சிறு ராஜ்யத்திலிருந்து வந்ததென்று உனக்குத் தெரியுமல்லவா?

1830-ம் ஆண்டில், ஐரோப்பாவில் ஜெர்மனி, இதாலி, முக்கியமாகப் போலந்து முதலிய பல இடங்களில் கலகங்கள் விளைந்தன. ஆனால், அக்கலகங்களையெல்லாம் அரசர்கள் அடக்கிவிட்டார்கள். போலந்தில் ருஷியர் கொடூரமான அடக்குமுறையைக் கையாண்டார்கள். அந்நாட்டு மொழியைக்கூட உபயோகிக்கக் கூடாதென்று அவர்கள் தடுத்துவிட்டார்கள். 1830-ம்

ஆண்டு 1848-ம் ஆண்டுக்கு ஒரு முன்னறிவிப்புப் போல இருந்தது. 1848-ம் ஆண்டு ஐரோப்பாவில் புரட்சி ஆண்டாக விளங்கியதைப் பின்பு காண்போம்.

ஐரோப்பா நிற்க. அட்லாண்டிக் சாகரத்துக் கப்பால், ஐக்கிய அமெரிக்க நாடுகள் மேற்கே பரவிக் கொண்டு சென்றன. அமெரிக்கா ஐரோப்பியப் போட்டிகளுக்கும் போர்களுக்கும் வெகு தொலைவில் இருந்தது. அமெரிக்கர்களுக்குப் பூமிப் பஞ்சமும் இல்லை. பரந்த அப்பூமியில் அவர்கள் காடுகொன்று நாடாக்கிக் கொண்டே சென்றார்கள். அவர்கள் விரைவில் முன்னேறியதோடு ஐரோப்பாவையும் எட்டிப் பிடித்துக் கொண்டிருந்தார்கள். தென் அமெரிக்காவிலும் பெரிய மாறுதல்கள் விளைந்தன. அவற்றிற்கு நெப்போலியன் மறைமுகமான காரணமாயிருந்தான். அவன் ஸ்பெயினை ஜெயித்துத் தன்னுடைய சகோதரன் ஒருவனை ஸ்பெயின் சிம்மாசனத்தில் அமர்த்தியபோது தென் அமெரிக்காவிலிருந்த ஸ்பானியக் காலனிகள் கலகம் செய்தன. பழைய ஸ்பானிய அரசவம்சத்தினிடம் ஸ்பானியக் காலனிகள் கொண்டிருந்த விசுவாசமே அவற்றுடைய சுதந்திரத்துக்குக் காரணமாயிருந்த தென்றறிய நாம் ஆச்சரியப்படுகிறோம். ஆனால், அது ஒரு சமீப காரணமேயாகும். தென் அமெரிக்காவெங்கும் சுதந்திர உணர்ச்சி வளர்ந்து வந்த காரணத்தால் அப்போதில்லா விட்டாலும் சிறிது காலம் சென்ற பிறகாவது அங்குச் சுதந்திரக் கிளர்ச்சி தோன்றியிருக்கும். தென் அமெரிக்கச் சுதந்திர இயக்கத்தின் மாபெருந் தலைவன் சைமன் பொலிவர் என்பவன். அவன் 'விடுவிக்க வந்தவன்' என்று அழைக்கப்படுகிறான். தென் அமெரிக்காவிலுள்ள பொலிவியா குடியரசு அவன் பெயராலேயே வழங்கி வருகிறது. இவ்வாறு, நெப்போலியன் வீழ்ச்சியுற்ற காலத்தில், தென்

அமெரிக்கா ஸ்பெயினிலிருந்து பிரிந்து தன் சுதந்திரத்துக்காகப் போராடிக்கொண்டிருந்தது. நெப்போலியன் போய்விட்டதற்காகப் போராட்டம் நின்று விடவில்லை. பல வருஷங்கள் வரையில் புதிய ஸ்பெயினுடன் அப்போராட்டம் நடந்துவந்தது. சில ஐரோப்பிய அரசர்கள் அமெரிக்கக் காலனிகளின் புரட்சியை அடக்குவதில் தங்களுடைய வர்க்கத்தைச் சேர்ந்தவனான ஸ்பெயின் அரசனுக்கு உதவிசெய்ய விரும்பினார்கள். அவ்விதத் தலையீட்டை ஐக்கிய அமெரிக்கா முடிவாகத் தடுத்துவிட்டது. அப்போது மன்ரோ என்பவன் ஐக்கிய அமெரிக்காவின் பிரசிடெண்டாக இருந்தான். அவன் ஐரோப்பிய அரசுகளைப் பார்த்து அவை வட அமெரிக்காவிலோ தென் அமெரிக்காவிலோ தலையிடுவதாயின் தங்களுடன் போரிட நேரிடும் என்று சொல்லிவிட்டான். இதைக் கண்டு ஐரோப்பிய நாடுகள் அஞ்சி நின்றன. அவை அதிலிருந்து தென் அமெரிக்காவை நெருங்காமலே இருந்து வருகின்றன. பிரசிடெண்டு மன்ரோவின் பயமுறுத்தல் 'மன்ரோ கோட்பாடு' என்று பிரசித்தி பெற்றுவிட்டது. அது தென் அமெரிக்கக் காலனிகளை ஐரோப்பாவின் ஆசைவலையிலிருந்து நெடுங்காலம் காப்பாற்றி அவற்றை வளரச் செய்தது. அவை ஐரோப்பாவிடமிருந்து நன்கு காப்பாற்றப்பட்டது உண்மையே. ஆனால், அவற்றைக் காப்பாற்றிய ஐக்கிய அமெரிக்காவிடமிருந்து அவற்றைக் காப்பதற்கு ஒருவரும் இல்லை. இன்று தென் அமெரிக்கா ஐக்கிய அமெரிக்காவின் ஆதிக்கத்தில்தான் இருக்கிறது. பல சிறிய தென் அமெரிக்கக் குடியரசுகள் அமெரிக்காவின் வசத்தில் நன்கு மாட்டிக்கொண்டிருக்கின்றன.

பரந்த பிரேஜில் பிரதேசமானது போர்ச்சுகல் தேசத்தின் காலனியாக இருந்தது. ஸ்பானியக் காலனிகள்

சுதந்திரமடைந்த காலத்திலேயே அதுவும் சுதந்திரமடைந்து விட்டது. ஆக, 1830-ம் ஆண்டிற்குள் தென் அமெரிக்கா முழுவதும் ஐரோப்பிய ஆதிக்கத்தினின்றும் விடுபட்டு நிற்பதை நாம் காண்கிறோம். வட அமெரிக்காவில் மட்டும் பிரிட்டிஷ் காலனியாகிய கானடா இருந்து வந்தது.

இப்போது நாம் ஆசியாவுக்கு வருகிறோம். இந்தியாவில் ஐயமற ஆங்கிலேயரின் ஆதிக்கம் மேலோங்கியிருந்தது. ஐரோப்பாவில் நெப்போலிய யுத்தங்கள் நடந்துகொண்டிருந்த காலையில் ஆங்கிலேயர் தங்களுடைய நிலையைப் பலப்படுத்திக் கொண்டதோடு ஜாவா தீவையும் கைப்பற்றிக் கொண்டார்கள். மைசூரை ஆண்டு வந்த திப்பு சுல்தான் தோற்கடிக்கப்பட்டான். 1819-ல் மராட்டியர் முடிவாக வெல்லப்பட்டார்கள். பஞ்சாபில் மட்டும் ரஞ்சித் சிங்கின் கீழ் ஒரு சீக்கிய ராஜ்யம் நடைபெற்று வந்தது. இந்தியாவெங்கும் பிரிட்டிஷ் ஆதிக்கம் படர்ந்து வந்தது. கிழக்கே அஸ்ஸாமை அவர்கள் சேர்த்துக்கொண்டார்கள். அரகானும் பர்மாவும் அடுத்த கவளம் ஆவதற்குக் காத்து நின்றன.

இந்தியாவில் பிரிட்டன் பரவி வந்த காலத்தில் இன்னொரு ஐரோப்பிய வல்லரசான ருஷியா மத்திய ஆசியாவில் பரவி வந்தது. ஏற்கெனவே, அது கிழக்கில் பசிபிக் சமுத்திரத்தையும் சீனாவையும் தொட்டு நின்றது. இப்போது அது மத்திய ஆசியாவிலிருந்த சிறு சிறு ராஜ்யங்களை வாரிச் சுருட்டிக்கொண்டு ஆப்கானிஸ்தானத்தின் எல்லை வரையில் வந்துவிட்டது. தங்களை நோக்கி நெருங்கும் இப் பெரும் பூதத்தைக் கண்டு இந்தியாவிலிருந்த பிரிட்டிஷார் நடுநடுங்கிப் போனார்கள். அந்த நடுக்கத்தில் இன்னது செய்கிறோம் என்று தெரியாமல் அவர்கள் யாதொரு முகாந்தரமும் இன்றி ஆப்கானிஸ்தானத்துடன் வலுச்சண்டைக்குப் போனார்கள். ஆனால், ஆழந்தெரியாமல் காலையிட்டுக்கொண்ட அவர்களுடைய வாலை ஆப்கானிஸ்தானம் ஒட்டக் கத்தரித்துவிட்டது.

சீனாவை மஞ்சு மன்னர்கள் ஆண்டுவந்தார்கள். வியாபாரத்தின் பேராலும் மதத்தின் பேராலும் வந்த அந்நியரை அவர்கள் நம்பவில்லை. அவர்களுடைய அவநம்பிக்கைக்குத் தகுந்த காரணம் இருந்தது. ஆகவே, அவர்கள் அந்நியரைச் சீனாவுக்குள் வரவொட்டாமல் தடுக்க முயன்றனர். ஆனால், அவ்வந்நியர் சீனாவின் வாயிலில் சத்தமிட்டுக்கொண்டும் போக்கிரித்தனம் செய்து கொண்டும் இருந்தார்கள். முக்கியமாக அவர்கள் அபினி வியாபாரத்தை வளர்த்து வந்தார்கள். பிரிட்டிஷ் சீன வியாபாரம் கிழக்கிந்தியக் கம்பெனியின் கையில் இருந்தது. சீனச் சக்கரவர்த்தி அபினிக்குத் தடை விதித்தார். ஆனால், அந்நியர்கள் அபினியைக் கள்ளத்தனமாகச் சீனாவுக்குள் அனுப்பிக் கள்ள வியாபாரம் செய்து வந்தார்கள். கடைசியில் இது சீனாவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையில் யுத்தமாக வந்து முடிந்தது. இந்த யுத்தத்துக்கு 'அபினி யுத்தம்' என்று பேரிட்டது மிகவும் பொருத்தமேயாகும். அதன் பயன், இங்கிலாந்து சீனாவின் மீது அபினியைப் பலவந்தமாகத் திணித்தது.

1634-ம் ஆண்டிலேயே ஜப்பான் கதவைச் சாத்தித் தாளிட்டுக் கொண்ட விஷயம் முன்பே கூறியிருக்கிறேன். 19-வது நூற்றாண்டின் ஆரம்பத்திலும் மூடிய கதவு மூடியபடியேதான் இருந்தது. ஆனால், அவ்வாறு மூடப்பட்ட காற்பால் எல்லைக்குள் பழைய ஷோகன் அரசு பலம் குன்றி வந்தது. புதிய நிலைமைகள் தோன்றி வளர்ந்தன. பிற்பாடு அவை பழைய முறையைத்

திடீரென்று ஒழித்துவிட்டன. ஆசியாவின் தென் கிழக்குக் கோடியில் ஐரோப்பிய அரசுகள் நாடு கவரும் தொழிலில் ஈடுபட்டிருந்தன. பிலிப்பைன் தீவுகள் இன்னும் ஸ்பானியர் வசமே இருந்து வந்தன. ஆங்கிலேயரும் டச்சுக்காரரும் சேர்ந்து போர்த்துகீசியரை ஓட்டிவிட்டார்கள். வியன்னுவுக்குப் பிறகு டச்சுக்காரர் ஜாவா தீவையும் வேறு சில தீவுகளையும் திரும்பப் பெற்ருர்கள். ஆங்கிலேயர் சிங்கப்பூரிலும் மலாய் தீபகற்பத்திலும் பரவி வந்தார்கள். அன்னும், சையாம், பர்மா— இம்மூன்றும் இன்னும் சுதந்திரமாகவே இருந்து வந்தன. ஆனுல், அவை சீனுவுக்கு எப்போதாவது கப்பம் செலுத்துவதுண்டு.

வாட்டர்லூ போருக்குப் பிற்பட்ட பதினைந்து ஆண்டுகளில் உலகத்தின் அரசியல் நிலை ஏறக்குறைய மேற்கூறியவாறு இருந்தது. ஐரோப்பா உலகத்தை ஆளத் தொடங்கி விட்டது என்பது திட்டமாகத் தெரிந்தது. ஐரோப்பாவுக்குள்ளும் பிற்போக்கு வாதம் வெற்றிப் பாதையில் சென்றுகொண்டிருந்தது. ஐரோப்பாவின் மன்னர்களும், மன்னர் மன்னர்களும், இங்கிலாந்தின் பிற்போக்குப் பார்லிமெண்டும் கூடத் தாங்கள் முற்போக்குக் கருத்துகளைக் குழிதோண்டிப் புதைத்து விட்டதாகக் கருதிஞர்கள். அவர்கள் அக்கருத்துகளைப் பெட்டியிலிட்டுப் பூட்டிவைக்க முயன்ருர்கள். அவர்களுடைய முயற்சி வெற்றி பெறவில்லை என்பதைச் சொல்லவும் வேண்டுமா? அடிக்கடி கலகங்கள் விளைந்தன.

அரசியல் மாறுதல்களை நாம் பெரிதாக எண்ணிவிடுகிருேம். ஆனுல், இங்கிலாந்தில் தோன்றிய தொழிற் புரட்சியின்றும் பிறந்த விளைவுகள் அரசியல் மாறுதல்களை விட அதிக முக்கியமானவை. உற்பத்தி முறைகளிலும், விநியோக முறைகளிலும், யாத்திரை முறைகளிலும் விளைந்த புரட்சியின் பிரபாவமானது ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் ஓசைபடாமலும் ஆனுல், உறுதியாகவும் பரவிவந்தது. அதனுல், கோடிக்கணக்கான மக்களின் மனோபாவமும், பழக்க வழக்கங்களும், பலதிறப்பட்ட வகுப்புகளுக் கிடையேயுள்ள உறவுகளும் மாறிவந்தன. கருவி சாதனத்தில் விளைந்த மாறுதலின் காரணமாகப் புதுக் கொள்கைகள் வெளிப்போந்து உலாவத் தொடங்கின; புதிய உலகம் தோன்றி மலரத் தொடங்கியது. ஐரோப்பாவின் திறமையும் நச்சுத் தன்மையும் நாளுக்கு நாள் வளர்ந்து வந்தன. அதன் நெஞ்சிலிருந்த ஈரஉணர்ச்சி வற்றி அது கல்லாகிவிட்டது. அத்தகைய கந்நெஞ்சில் ஊரை அடித்து உலையில் போட வேண்டும் என்கிற பேராசையும், உலகத்தை யெல்லாம் கட்டி ஆள வேண்டும் என்கிற சாம்ராஜ்யப் பித்தும் தலைவிரித்தாடின. நெப்போலியனுடைய நீர்மை (Spirit) ஐரோப்பாவின் உள்ளும் புறமும் பரந்து நிற்பது போலத் தோன்றிற்று. ஆனுல், அதே சமயத்தில், சாம்ராஜ்ய வாதத்துடன் போராடி அதை வென்று வீழ்த்தும் ஊழ் படைத்த கருத்துகளும் அங்கே தோன்றி வளர்ந்து கொண்டிருந்தன.

அக்காலத்தில் தோன்றிய இலக்கியமும், கவிதையும், இசையும் நமது உள்ளத்தைக் கவர்ந்து உணர்ச்சியை உருக்குகின்றன. அவற்றைப் பற்றி எழுதப் புகுந்தால் என்னுடைய பேனு நிற்காமல் ஓடிக்கொண்டே இருக்கும். இன்றைக்குச் செய்ய வேண்டிய கடமையை அது செய்து விட்டது. ஆகவே, அதற்கு ஓய்வு கொடுத்து விட்டேன்.

107

உலக யுத்தத்துக்கு முற்பட்ட நூறு ஆண்டுகள்

நவம்பர் 22, 1932.

1814-ம் ஆண்டில் நெப்போலியன் வீழ்ச்சியுற்றான். அதற்கு அடுத்த ஆண்டு அவன் எல்பாவிலிருந்து திரும்பி வந்து மீண்டும் தோல்வியுற்றான். ஆனால், அவன் ஏற்படுத்திய முறை 1814-ம் ஆண்டிலேயே வீழ்ந்துவிட்டது. அதற்கப்புறம் சரியாக நூறு ஆண்டுகள் கழித்து, அதாவது 1914-ம் ஆண்டில், மாக யுத்தம் ஆரம்பமாயிற்று. அது உலகெங்கும் பரவியது. அது நடந்த நாலு வருஷங்களில் உலகம் பயங்கரமான கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாயிற்று. 1814-க்கும் 1914-க்கும் இடைப்பட்ட நூற்றாண்டுப் பகுதியை நாம் சற்று விரிவாக ஆராயவேண்டும். அக்காலப்பகுதியின் ஆரம்பத்தில் உலகம் எவ்வாறிருந்ததென்று சென்ற கடிதத்தில் ஒருவாறு காட்ட முயன்றேன். அக்காலப் பகுதியைத் தேசங்கள் வாரியாகப் பகுத்து ஆராயத் தொடங்குமுன் அதை முழுமையாக ஒரு முறை பார்ப்பது நலமாயிருக்குமென்று கருதுகிறேன். அதனால், அக்காலப் பகுதியின் முக்கியப் போக்குகளை மொத்தமாகவும்-தனித் தனியாகவும் நன்கு அறிவது சாத்தியமாகும் என்று நம்புகிறேன்.

1814-க்கும் 1914-க்கும் இடைப்பட்ட நூறு ஆண்டுகள் பெரும்பாலும் 19-வது நூற்றாண்டைச் சேர்ந்தவை என்பதை நீ கவனித்திருப்பாய். ஆகவே, அவற்றை நாம் 19-வது நூற்றாண்டு என்று குறிப்பிடுவதில் அதிகத் தவறு இல்லை.

பத்தொன்பதாவது நூற்றாண்டு நமது உள்ளத்தைப் பெரிதும் கவர்கிறது. ஆனால், அதைக் கசடறத் தெரிந்துகொள்வது அவ்வளவு எளிதல்ல. அதை ஒரு பெரிய படக் காட்சிக்கு ஒப்பிடலாம். அதற்கு நாம் மிகவும் அருகில் இருப்பதால் அது முந்தைய நூற்றாண்டுகளை விடப் பெரிதாகவும் நிறைவாகவும் காணப்படுகிறது. அதில் குறுக்கும் நெடுக்குமாகப் பின்னிக் கிடக்கும் ஆயிரக்கணக்கான நூல்களை நாம் அவிழ்த்தெடுக்க முயலும்போது அதன் பெருமையும் சிக்கலான தன்மையும் நம்மைச் சில வேளைகளில் மயக்கத்தில் ஆழ்த்தி விடுகின்றன.

அந்நூற்றாண்டு ஆச்சரியகரமான யந்திர முன்னேற்றத்துக்குப் பேர்போனதாகும். தொழிற் புரட்சியின் விளைவாக யந்திரப் புரட்சி தோன்றியது. மனிதனுடைய வாழ்க்கையில் யந்திரங்களின் முக்கியத்துவம் அதிகரித்துக்கொண்டே சென்றது. இதற்குமுன் மனிதன் செய்து வந்த காரியங்களில் பெரும்பகுதியை இப்போது யந்திரங்கள் செய்யத் தலைப்பட்டன. அதனால் மனிதனுடைய தேகசிரமம் சற்றுக் குறைந்தது. அவன் பஞ்சபூதங்களை நம்பியிருக்கவேண்டிய நிலையும் சற்று மாறியது. யந்திரங்கள் மனிதனுக்காகச் செல்வத்தை உற்பத்தி செய்தன. இவற்றிற்கெல்லாம் விஞ்ஞானம் பேருதவி புரிந்தது. மனிதர்களும் பண்டங்களும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு முன்னையிலும் பன்மடங்கு வேகமாகச் செல்ல முடிந்தது. ரயில்வண்டி வந்து கோச்சு வண்டியைத் தொலைத்தது. பாய்மரக்கப்பலின் ஸ்தானத்தில் நீராவிக்கப்பல் தோன்றியது. அதற்குப்பின் கம்பீரமும் பெருமையும் வாய்ந்த கடல் யாத்திரைக் கப்பல்கள் ஒரு கண்டத்திலிருந்து மற்றொரு கண்டத்துக்கு வேகமாகவும் ஒழுங்காகவும் பவனி போகத்

தொடங்கின. அந்த நூற்றாண்டின் முடிவில் மோட்டார் கார்கள் தோன்றி உலகெங்கும் பரந்தன. கடைசியாக ஆகாயவிமானம் வந்தது. அதில் ஏறிக்கொண்டு மனிதன் விண்ணில் பறந்து சென்றான். அதே சமயத்தில் இன்னொரு புதிய விந்தைச்சக்தி மனிதனுக்கு வசமாயிற்று. அதை அவன் பயன்படுத்தத் தொடங்கினான். அதுதான் மின்சார சக்தி. அதிலிருந்து தந்தியும் டெலிபோனும் பிறந்தன. இவையெல்லாம் சேர்ந்து உலகத்தில் பெரு மாறுதலை விளைவித்தன. போக்குவரவு வசதிகள் விருத்தியடையவே ஜனங்கள் முன்னையினும் அதிவேகமாக உலகத்தின் ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலைக்குப் போகத் தலைப்பட்டார்கள். அதனால், உலகமே சுருங்கிச் சிறிதாகி விட்டது போல் தோன்றியது. இவையெல்லாம் நமக்கு இப்போது சகஜமாகிவிட்டன. இவற்றைப்பற்றி நாம் சிந்திப்பது கூடக் கிடையாது. ஆனால், மேற்கூறிய மாறுதல்கள், அபிவிருத்திகள் எல்லாம் நமது உலகத்துக்குச் சென்ற நூற்றாண்டில் புதிதாக வந்த விருந்தாளிகள் ஆகும்.

19-வது நூற்றாண்டை ஐரோப்பாவின் நூற்றாண்டு, அதிலும் சிறப்பாக மேல் ஐரோப்பாவின் நூற்றாண்டு, அதிலும் சிறப்பாக இங்கிலாந்தின் நூற்றாண்டு என்று சொல்லலாம். தொழில், யந்திரப் புரட்சிகளைத் தோற்றி வளர்த்த காரணத்தால் மேல் ஐரோப்பா உலகின் மற்றப் பாகங்களைப் பெரிதும் விஞ்சி நின்றது. கடலாதிக்கத்திலும் தொழில் அபிவிருத்தியிலும் இங்கிலாந்து தலை சிறந்து விளங்கியது. ஆனால், சிறிது சிறிதாக மேல் ஐரோப்பாவின் மற்ற நாடுகளும் இங்கிலாந்தை எட்டிப் பிடித்து விட்டன. புதிய யந்திர நாகரிகத்தில் ஐக்கிய அமெரிக்காவும் விரைவில் முன்னேறியது. ரயில் வண்டித் தொடர்கள் ஏற்பட்டு அதைப் பசிபிக் சமுத்

திரம்வரையில் கொண்டு சென்றன. அதனால், விசாலமான அந்நிலப்பரப்பு ஒரு பெரிய தேசமாக மாறியது. அமெரிக்கர்களுக்குத் தங்களுடைய பிரச்சினைகளுக்கு வழி காண்பதற்கே பொழுது சரியாயிருந்தது. அவர்களுடைய தேசம் தினே தினே விரிவடைந்து வந்தபடியால் அவர்கள் ஐரோப்பாவைப் பற்றியோ உலகின் மற்றப் பாகங்களைப் பற்றியோ அதிகமாகக் கவலை கொள்ளவில்லை. ஆனால், ஐரோப்பாவின் தலையீட்டைக் கண்டிக்கவும் தடுக்கவும் அவர்களுக்குப் போதிய பலம் இருந்தது. சென்ற கடிதத்தில் 'மன்ரோ கோட்பாடு' என்பதைப் பற்றிச் சொன்னேன். அது தென் அமெரிக்கக் குடியரசுகளை ஐரோப்பாவின் ஆசை வலையிலிருந்து காப்பாற்றியது. ஸ்பெயினிலிருந்தும் போர்ச்சுகலிலிருந்தும் வந்தவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட காரணத்தால் தென் அமெரிக்கக் குடியரசுகள் லத்தீன் குடியரசுகள் என்று அழைக்கப்படுகின்றன. ஸ்பெயின், போர்ச்சுகல், இதாலி, பிரான்சு ஆகிய நாடுகளுக்கு லத்தீன் நாடுகள் என்று பெயர். இதற்கு மாறாக வட ஐரோப்பிய நாடுகள் டியூடானிய நாடுகள் என்று சொல்லப்படுகின்றன. இங்கிலாந்தில் உள்ளவர்கள் டியூடானியரில் ஒரு கிளையினரான ஆங்கிலோ-சாக்சன் பிரிவைச் சேர்ந்தவர்கள். முதல் முதல் அமெரிக்காவுக்குச் சென்று குடியேறியவர்கள் ஆங்கிலோ-சாக்சன் பிரிவைச் சேர்ந்தவர்கள்தான். காலக்கிரமத்தில் வேறு பல பிரிவினரும் அங்குச் சென்று குடியேறினார்கள்.

உலகின் பிற பாகங்கள் தொழில் முறையிலும் யந்திர சாதனங்களிலும் பிற்பட்டிருந்தன. அவற்றால் மேனாட்டு யந்திர நாகரித்துடன் போட்டியிட முடியவில்லை. ஐரோப்பாவின் யந்திரத் தொழில்கள் பழைய குடிசைக் கைத்தொழில்களைவிடப் பன்மடங்கு அதிக

மாகவும் வேகமாகவும் பொருள்களை உற்பத்தி செய்தன. ஆனால், அவற்றை உற்பத்தி செய்வதற்குமூலப்பொருள்கள் தேவையாயிருந்தன. அதாவது, துணி உற்பத்தி செய்வதற்குப் பஞ்சு வேண்டுமல்லவா, அது போல! துணி யந்திரப் பொருள்; பஞ்சு மூலப்பொருள். இம் மூலப்பொருள்கள் பெரும்பாலும் மேல் ஐரோப்பாவில் கிடைப்பது அரிதாயிருந்தது. மேலும், யந்திரத்தில் பொருள்களை உற்பத்தி செய்தபிறகு அவற்றை விற்பதற்கு நல்ல மார்க்கெட்டுகளும் தேவையாயிருந்தன. ஆகவே, மூலப் பொருள்களைத் தனக்குக் கொடுத்துத் தன்னிடமிருந்து யந்திரப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய தேசங்கள் எங்கே இருக்கின்றன என்று மேல் ஐரோப்பா தேடத் தொடங்கியது. ஆசியாவும் ஆப்பிரிக்காவும் திறன் அற்றுக் கிடப்பதை ஐரோப்பா கண்டது. உடனே அவற்றின் மீது, பிராணிகளை வதைத்துண்ணும் காட்டு மிருகத்தைப் போல், அது பாய்ந்தது. சாம்ராஜ்யம் சம்பாதிக்கும் போட்டியில் இங்கிலாந்து, தன்னுடைய தொழில் முன்னேற்றம், கடலாதிக்கம் இவை காரணமாகப் பிற நாடுகளை எளிதில் விஞ்சி நின்றது.

ஐரோப்பியர்கள் முதன் முதலில் இந்தியாவுக்கும் இதரக் கீழ்நாடுகளுக்கும் ஐரோப்பாவுக்குத் தேவையான வாசனைத் திரவியங்களையும் மற்றப் பொருள்களையும் வாங்குவதற்கு வந்தார்கள் என்கிற விஷயம் உனக்கு நினைவிருக்கும். இவ்வாறு, கீழ்நாட்டுப் பொருள்களும், கீழ்நாட்டுக் கைத்தறிகளில் உற்பத்தி செய்யப்பட்ட ஏராளமான துணி வகைகளும் மேல் நாட்டுக்குச் சென்றன. மேல்நாட்டில் யந்திர சாதனம் அபிவிருத்தி அடைந்த பிறகு இந்தப் பாடம் தலைகீழாக மாறி விட்டது. மேல் நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்ட

மலிவான யந்திரப் பொருள்கள் கீழ்நாடுகளுக்கு வரத் தொடங்கின. பிரிட்டிஷ் பொருள்களை இந்தியாவில் விற்பனை செய்வதற்காக இந்தியாவின் குடிசைக் கைத்தொழில்களைக் கிழக்கிந்தியக் கம்பெனியானது வேண்டுமென்றே கொன்றுவிட்டது.

பிரம்மாண்டமான ஆசியாவின் மீது குட்டி ஐரோப்பா ஏறி உட்கார்ந்து கொண்டது. ஆசியாவின் வடபாகத்தில் ருஷிய சாம்ராஜ்யம் அகன்றும் பரந்தும் கிடந்தது. அதன் தென்பாகத்தில் கொள்ளைப் பொருள்கள் யாவற்றினும் தலை சிறந்த இந்தியாவை இங்கிலாந்து அழுத்திக் கொண்டது. மேல் ஆசியாவில் துருக்கிய சாம்ராஜ்யம் சிதறுண்டு வந்தது. 'ஐரோப்பாவின் நோயாளி' என்று நையாண்டி செய்யப்படும் நிலைமையில் துருக்கி இருந்தது. பாரசீகம் பெயரளவில் சுதந்திர நாடாயிருந்ததே ஒழிய இங்கிலாந்தும் ருஷியாவும் அதன்மீது ஆதிக்கம் செலுத்தி வந்தன. சையாம் ஒன்று நீங்கலாகத் தென்கிழக்கு ஆசியா முழுதையும்—பர்மா, இந்தோ-சீனா, மலாய்நாடு, ஜாவா, சுமத்திரா, போர்னியோ, பிலிப்பைன் தீவுகள் முதலிய எல்லாவற்றையும்—ஐரோப்பா கபளீகரம் செய்துவிட்டது. கீழ்க் கோடியில் உள்ள சீனாவை ஐரோப்பிய அரசுகள் கொத்திக் கொறித்துக்கொண் டிருந்தன. அவை சீனாவிடமிருந்து சலுகைக்குப்பின் சலுகையாகப் பறித்து வந்தன. ஐரோப்பாவுக்கு எதிரில் ஜப்பான் ஒன்று தான் அதற்குச் சமமாகத் தலை தூக்கி நின்றது. அது தன்னுடைய கூட்டுக்குள்ளிருந்து வெளிவந்து புதிய நிலைமைகளுக்குத் தகத் தன்னை வெகு விரைவில் திருத்தி அமைத்துக் கொண்டவிதம் விந்தையினும் விந்தையாகும்.

ஆப்பிரிக்கா மிகவும் பிற்போக்கான நிலையில்

இருந்தது. எகிப்து ஒன்றைத்தான் இதற்கு விலக்காகச் சொல்லலாம். ஐரோப்பாவை எதிர்த்து நிற்கும் ஆற்றல் ஆப்பிரிக்காவிற்கு இல்லை. ஆகவே, சாம்ராஜ்ய வெறி படைத்த ஐரோப்பிய நாடுகள் அப்பெரிய கண்டத்தின் மீது விழுந்து அதைத் தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டன. இந்தியாவுக்குப் போகும் வழியில் எகிப்து இருந்தபடியால் அதை இங்கிலாந்து கைப்பற்றிக் கொண்டது. அதிலிருந்து பிரிட்டிஷ் கொள்கையானது இந்தியாவை அதன் பிடியில் வைத்திருக்கும் விருப்பத்தை அடிப்படையாகக்கொண்டு வகுக்கப்பட்டுவந்தது. 1869-ல் சூயஸ் கால்வாய் திறக்கப்பட்டது. அதனால், ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்குச் செல்லும் பிரயாணம் மிகவும் குறுகிவிட்டது. அதனால், எகிப்தும் இங்கிலாந்துக்கு அதிகப் பயனுள்ளதாக மாறிவிட்டது. இந்தியாவுக்குச் செல்லும் கடல் மார்க்கம் எகிப்தின் வசத்தில் இருந்ததும், சூயஸ்கால்வாயில் தலையிடக் கூடிய நிலையில் அது இருந்ததும் தான் அதற்குக் காரணம்.

ஆக, யந்திரப் புரட்சியின் காரணமாக முதலாளித்துவ நாகரிகம் உலகெங்கும் பரவியது. உலகெங்கும் ஐரோப்பாவின் ஆதிக்கம் கொடிகட்டிப் பறந்தது. முதலாளித்துவம் சாம்ராஜ்ய வாதத்தை உண்டு பண்ணியது. ஆகவே, 19-வது நூற்றாண்டைச் சாம்ராஜ்ய வாதத்தின் நூற்றாண்டு என்றும் சொல்லலாம். இப்புதிய சாம்ராஜ்ய வாதம், ரோமர், சீனர், இந்தியர், அரேபியர், மங்கோலியர் ஆகியோருடைய பழைய சாம்ராஜ்ய வாதங்களினின்று முற்றிலும் மாறுபட்டிருந்தது. புதுவகையான இச்சாம்ராஜ்யம் மூலப் பொருள்களுக்கும் மார்கெட்டுகளுக்கும் ஆவல் கொண்டு பேய் போல் அலைந்தது. இப்புதிய சாம்ராஜ்ய வாதம் புதிய தொழில் வாதம் பெற்றெடுத்த பிள்ளையாகும். 'வியாபாரம் வரும் பின்னே; கொடி வரும் முன்னே' என்று சொல்லப்பட்டது. ஆனால் 'கொடி வரும் பின்னே; பைபிள் வரும் முன்னே' என்பதும் பெரும்பாலும் உண்மையாயிருந்தது. மதம், விஞ்ஞானம், தேசபக்தி ஆகிய புனிதங்கள் யாவும் ஒரே ஒரு குறிக்கோளுக்காகத் துஷ்பிரயோஜனப் படுத்தப் பட்டன. அக்குறிக்கோளாவது, பூமியிலுள்ள வலி குன்றிய தொழில்முறையில் பிற்போக்கான நாட்டவரின் ரத்தத்தையெல்லாம் உறிஞ்சிப் பெரிய யந்திரத்தைப் படைத்த பிரபுக்களும் புதிய தொழில் முறையின் தலைவர்களும் மேலும் மேலும் கொழுக்க வேண்டும் என்பது தான். சத்தியத்தின் பேராலும் அன்பின் பேராலும் வெளி நாடுகளுக்குச் செல்லும் கிறிஸ்தவப் பாதிரியார் சாம்ராஜ்யத்தின் எல்லைக்கல்லாக விளங்கினர். போன இடத்தில் அவருக்கு ஏதாவது சிறு கெடுதல் ஏற்பட்டாலும் போதும். உடனே, அப்பாதிரிக்குச் சொந்தமான நாடு அதை ஒரு வியாஜமாக வைத்துக் கொண்டு அவருக்குத் தீங்கிழைத்த நாட்டைப் பிடித்துக் கொண்டு அதன் உயிர்ச்சத்தை உறிஞ்ச ஆரம்பித்துவிடும்.

முதலாளித்துவ ரீதியில் அமைக்கப்பட்ட தொழில் முறை, நாகரிகம் இவற்றின் பயனாக இத்தகைய சாம்ராஜ்ய வாதம் தோன்றுவது தவிர்க்க முடியாததாகி விட்டது. முதலாளித்துவத்தினால் தேசிய உணர்ச்சியும் அதிகத் தீவிரமடையத் தொடங்கியது. ஆகவே, இந் நூற்றாண்டைத் தேசிய வாதத்தின் நூற்றாண்டு என்றும் அழைக்கலாம். இந்தத் தேசியத்தில் சொந்த நாட்டினிடம் அன்பு செலுத்துவது மட்டுமின்றிப் பிற நாடுகளைத் துவேஷிப்பதும் அடங்கியிருந்தது. தனக்குச் சொந்தமான நாட்டை வானளாவப் புகழ்வது, பிறருக்குச் சொந்தமான நாடுகளை இகழ்ந்துரைப்பது என்னும் வழக்கம் வலுத்தால் பல்வேறு நாடுகள் ஒன்றோ

டொன்று முட்டி மோதிக்கொள்ளக் கேட்கவா வேண்டும்? ஐரோப்பிய நாடுகளுக்கிடையே ஏற்பட்ட தொழில், சாம்ராஜ்யப் போட்டிகளால் நிலைமை இன்னும் சீர்கேடடைந்தது. 1814-15ல் வியன்னா காங்கிரஸ் வகுத்த ஐரோப்பாப் படமானது மன வேக்காட்டுக்குரிய இன்னொரு காரணமாக இருந்தது. அதன்படி, சில தேசிய சமுதாயங்கள் அடக்கப்பட்டுப் பிறருடைய ஆட்சியின் கீழ்ப் பலவந்தமாகத் தள்ளப் பட்டன. போலந்து தேசம் அடியோடு மறைந்து விட்டது. ஆஸ்திரிய - ஹங்கேரி சாம்ராஜ்யத்தில் பகைபூண்ட (எலி பூனை சிநேகமுள்ள) பல்வேறு வகுப்பினர் ஒன்றாகச் சேர்க்கப்பட்டிருந்தனர். தென் கிழக்கு ஐரோப்பாவில் துருக்கிய சாம்ராஜ்யத்துக்கு உட்பட்ட பால்கன் நாடுகளில் துருக்கியரல்லாத பல ஜாதியார்கள் வாழ்ந்து வந்தார்கள். இதாலி பல சிறு ராஜ்யங்களாகத் துண்டாடப்பட்டது. இதாலியின் ஒருபாகம் ஆஸ்திரியாவுக்குக் கீழ்க் கொண்டுவரப் பட்டது. இவ்வாறு வகுக்கப்பட்ட ஐரோப்பியப் படத்தை யுத்தத்தின் மூலமாகவும் புரட்சியின் மூலமாகவும் மாற்றுவதற்கு அடிக்கடி முயற்சிகள் செய்யப் பட்டன. வியன்னா ஏற்பாட்டுக்குப் பிறகு விளைந்த சில புரட்சிகளைப் பற்றிச் சென்ற கடிதத்தில் குறிப்பிட்டேன். 19-வது நூற்றாண்டின் பிற்பாதியில் இதாலியானது வடக்கே ஆஸ்திரியர்களின் ஆதிக்கத்தையும், நடுவில் போப்பாண்டவரின் ஆதிக்கத்தையும் உதறி எறிந்துவிட்டு ஒரு ஐக்கிய நாடாகத் தலையெடுத்தது. இதையடுத்துப் பிரஷியாவின் தலைமையில் ஜெர்மனி உடனே ஒன்றுபட்டது. ஜெர்மனி பிரான்சைத் தோற்கடித்து, அல்சாஸ், லோரெய்ன் என்னும் அதன் எல்லைப்புற மாகாணங்கள் இரண்டையும் பிடுங்கிக்

கொண்டு அதைப் பெரிய அவமானத்துக்குள்ளாக்கியது. அன்றைய தினத்திலிருந்து பிரான்சு பழிக்குப்பழி வாங்குவதைப் பற்றியே கனவு கண்டு வந்தது. ஐம்பது ஆண்டுகளுக்குள்ளாகவே அது மிகவும் பயங்கரமான முறையில் தனது வஞ்சத்தைத் தீர்த்துக்கொண்டது.

ஐரோப்பிய நாடுகளில் பாக்கியலட்சுமியின் கடாட்சத்தைப் பரிபூரணமாகப் பெற்ற நாடு இங்கிலாந்துதான். அதற்குக் காரணம் அது பிற நாடுகளை வெகுவாக முந்திக்கொண்டதாகும். உலகிலுள்ள உத்கிருஷ்டமான பொருள்கள் அனைத்தையும் அது கவர்ந்து கொண்டது. அதன் தொந்தி நிறைந்துவிட்டபடியால் அது பரமதிருப்தியுடன் இருந்து வந்தது. புதுவகையான சாம்ராஜ்யத்துக்கு இந்தியா ஒரு மாதிரியாக விளங்கியது. இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்கு ஒரு சொர்ண நதி இடைவிடாது ஓடிக்கொண்டே இருந்தது. வளப்பம் மிகுந்த இந்தியாவை இங்கிலாந்து அவ்வளவு நன்றாகக் கறந்து வந்தது. தாங்களும் ஒரு சாம்ராஜ்யத்தைக் கட்டி ஆளவேண்டும் என்னும் விழைவுள்ள வேறு பிறர் இங்கிலாந்துக்கு இந்தியா கிடைத்து விட்டதைக் கண்டு அழுக்காறினால் மனம் புழுங்கினர். இந்தியாவை முன்-மாதிரியாக வைத்துக்கொண்டு அவர்கள் வேறு இடங்களில் சாம்ராஜ்யங்கள் காண முயன்றனர். இதில் பிரெஞ்சுக்காரர் ஓரளவு வெற்றி பெற்றார்கள். ஜெர்மானியர் இத்துறையில் மிகவும் காலம் தாழ்த்து இறங்கியபடியால் அவர்களுக்கு ஒன்றும் மிஞ்சவில்லை. ஆகவே, ஐரோப்பிய வல்லரசுகளுக்கிடையே உலகெங்கும் அரசியல் முரண்பாடு முதிர்ந்து வந்தது. ஒவ்வொன்றும் மேலும் மேலும் பூமியை விழுங்கிக் கொண்டே போகையில் அதே வேலையில் ஈடுபட்டுள்ள இன்னொரு வல்லரசுடன் மோதிக்கொள்ள

சேர்ந்தது. முக்கியமாக இங்கிலாந்தும் ருஷியாவும் சதா ஒன்றோடொன்று முரணி நின்றன. ஏனெனில், ருஷியாவின் நிலை மத்திய ஆசியாவிலிருந்து பிரிட்டிஷ் உடைமையான இந்தியாவுக்கு உலைவைக்கக் கூடியதாயிருந்தது. ஆகவே, இங்கிலாந்து எப்போதும் ருஷியாவுக்கு இடையூறு விளைக்க முயன்று வந்தது. 19-வது நூற்றாண்டின் இடையில் ருஷியா துருக்கியைத் தோற்கடித்து கான்ஸ்டாண்டிநோபிளைக் கவர இச்சித்த போது இங்கிலாந்து துருக்கியின் பக்கம் சேர்ந்துகொண்டு ருஷியாவை விரட்டியடித்தது. துருக்கியின் மீதுள்ள பிரேமையினால் இங்கிலாந்து அவ்விதம் செய்யவில்லை. ருஷியாவினிடம் அதற்குள்ள அச்சமும், ருஷியா வலுத்துவிட்டால் எங்கே இந்தியாவை இழக்க நேரிடுமோ என்கிற பயமுந்தான் இங்கிலாந்தின் செய்கைக்குக் காரணங்களாகும்.

ஜெர்மனியும், பிரான்சும், அமெரிக்காவும் தொழில் முறையில் இங்கிலாந்தைப் பின்பற்றி முன்னேற யத்தனித்தவுடன் இங்கிலாந்தின் முதன்மை சிறிது சிறிதாகக் குறைந்து வந்தது. அந்நூற்றாண்டு முடிவதற்குள் நிலைமை நெருக்கடி அடைந்து விட்டது. ஐரோப்பிய வல்லரசுகளின் அளவற்ற ஆசைக்கு முன்பு உலகம் மிகவும் சிறிதாகத் தென்பட்டது. அவை பரஸ்பரம் அச்சமும் வெறுப்பும் பொறாமையும் கொண்டிருந்தன. அது காரணமாக அவை தங்களுடைய தரைப்படையையும், கடற்படையையும் பெருக்கி வந்தன. போர்க்குரிய கொலைக் கருவிகளை வார்ப்பதிலும் வடிப்பதிலும் அவற்றிற்குள் கடும்போட்டி ஏற்பட்டது. சில தேசங்கள் ஒன்று சேர்ந்து வேறு சில தேசங்களுடன் போரிடுவதற்காகத் தங்களுக்குள் ஒரு கூட்டுறவை ஏற்படுத்திக் கொண்டன. ஐரோப்பாவில் முடிவாக இரு கூட்டுறவுகள்

எதிரெதிராக நின்றன. ஒன்று பிரான்சைத் தலைமையாகக் கொண்டது; மற்றொன்று ஜெர்மனியைத் தலைமையாகக்கொண்டது. பிரான்சைத் தலைமையாகக் கொண்ட கூட்டுறவில் இங்கிலாந்தும் அந்தரங்கத்தில் சேர்ந்திருந்தது. ஐரோப்பா ஒரு பெரிய படைவீடாக மாறிவிட்டது. தொழிலிலும், வியாபாரத்திலும், யுத்த தளவாடங்களிலும் விளைந்த போட்டி நாளுக்கு நாள் கடுமையாகிக்கொண்டு வந்தது. ஒவ்வொரு நாட்டிலும் ஒரு குறுகிய தேசிய உணர்ச்சி தூண்டிவிடப்பட்டது. ஜனங்களை யுத்தத்துக்குத் தயார் செய்வதற்கு அவர்களைத் தவறான வழியில் திருப்பி அயல்நாடுகளில் உள்ளவர்களை வெறுக்கும்படி செய்யவேண்டியது அவசியமல்லவா?

இவ்வாறு, ஐரோப்பாவில் ஒரு குருட்டுத் தேசியம் மக்களை ஆட்சிகொள்ளத் தொடங்கியது. இந் நிகழ்ச்சி நமக்குச் சற்று விபரீதமாகத் தோன்றுகிறது. போக்குவரவு சாதனங்களில் ஏற்பட்ட அபிவிருத்தி காரணமாக தேசங்களுக்கிடையே உள்ள நெருக்கமும் ஜனங்கள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குப் பிரயாணம் செய்வதும் அதிகரித்தன. ஒரு நாட்டார் பிறநாடுகளில் உள்ளவர்களை நன்கு அறியத் தொடங்கியவுடன் அவர்கள் ஒருவர் மற்றவரைப்பற்றிக் கொண்டுள்ள துரபிப்பிராயங்கள் குறையுமென்றும், அவர்களுடைய குறுகிய மனப்பான்மை மாய்ந்து, பரந்த மனப்பான்மை தோன்றுமென்றும் நாம் சாதாரணமாக எதிர்பார்ப்போம். ஓரளவு இவ்வாறு நிகழ்ந்தது உண்மையே. ஆயினும், தொழில் முதலாளித்துவத்தின் கீழ் அமைக்கப்பட்ட சமுதாயக் கட்டுக்கோப்பின் தன்மை ஒரு தேசத்துக்கும் இன்னொரு தேசத்துக்கும், ஒரு வகுப்புக்கும் இன்னொரு வகுப்புக்கும், ஒரு மனிதனுக்கும் இன்னொரு மனிதனுக்கும் முரண்பாட்டை வளர்ப்பதாயிருந்தது.

கீழைநாடுகளிலும் தேசியம் வளர்ந்து வந்தது. அது தேசத்தை அடக்கியும் ஆண்டும் சுரண்டியும் வருகிற அந்நியனுக்கு விரோதமான எதிர்ப்பு உணர்ச்சியாகப் பரிணமித்தது. முதலில், கீழை நாடுகளிலுள்ள நிலமானிய வர்க்கத்தின் சேஷங்கள் அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்துப் போரிட்டன. ஏனெனில், அந்நிய ஆதிக்கம் தங்களுக்கு அபாயத்தை விளைவிப்பதாயிருக்கிறதென்று அவை கருதின. ஆனால், அவை அம்முயற்சியில் தோல்வியுற்றன. அவை தோல்வியடையாமல் வேறென்ன செய்ய முடியும்? அதற்குப்பின் மதாபிமான உணர்ச்சி கலந்த ஒரு புதிய தேசியம் உதயம் செய்தது. சிறிது சிறிதாக அம் மதாபிமான உணர்ச்சி மறைந்து, மேலை நாடுகளில் காணப்படுவது போன்ற தேசியம் தோன்றியது. ஜப்பானில் அந்நிய ஆதிக்கம் தவிர்க்கப்பட்டது. ஆனால், அரைநிலமானியத் தன்மை பொருந்திய தீவிரமான தேசியம் அங்கே தோற்றுவிக்கப்பட்டது.

ஆசியா முதலிலிருந்தே ஐரோப்பாவின் பலாத்கார ஆக்கிரமிப்பை எதிர்க்கத் தொடங்கியது. ஆனால், ஐரோப்பியச் சேனைகள் கையாண்ட புதிய போர்க் கருவிகளின் ஆற்றலும் திறமையும் தெரிய வந்தவுடன் அந்த எதிர்ப்பின் வேகம் குன்றி விட்டது. விஞ்ஞானத் துறையிலும் யந்திர சாதனங்களிலும் ஐரோப்பா அடைந்திருந்த முன்னேற்றம் காரணமாக ஐரோப்பிய சேனைகள் அக்காலத்துக் கீழை நாட்டுச் சேனைகளை விட எத்தனையோ மடங்கு அதிகச் சக்தி வாய்ந்தவையாக இருந்தன. ஆகவே, கீழ் நாடுகள் தங்களுடைய வலியின்மையை உணர்ந்து மேல் நாடுகளுக்கு முன் செயலொடுங்கித் தலைகுனிந்து நின்றன. கீழ் நாடுகள் அவ்வுலக நோக்கும், மேல் நாடுகள் இவ்வுலக நோக்கும் உடையன என்று சிலர் கூறுகிறார்கள். இது தவறான

ஒரு அபிப்பிராய மாகும். 18, 19-வது நூற்றாண்டுகளில் ஐரோப்பா ஆக்கிரமிப்பில் இறங்கிய காலையில் கிழக்குக்கும் மேற்குக்கும் இருந்த உண்மையான வேற்றுமை இதுதான்: கிழக்கு, இடைக்கால வாழ்க்கை முறையில் உழன்றுகொண்டிருந்தது; மேற்கு, தொழில் முறையிலும் யந்திரத் துறையிலும் பெருத்த முன்னேற்றம் அடைந்திருந்தது. இந்தியாவும் இதரக் கீழ் நாடுகளும் முதன் முதலில் மேல் நாடுகளின் போர்த் திறமையைக் கண்டு அதிசயத்தது போலவே அவற்றின் விஞ்ஞான அறிவையும் தொழில் ஞானத்தையும் கண்டு பிரமித்துப் போயின. இவையெல்லாம் சேர்ந்து போர் முறைகளிலும் தொழில் முறைகளிலும் தாங்கள் மேனாட்டினரை விடத் தாழ்ந்தவர்கள் என்னும் அபிப்பிராயத்தைக் கீழ் நாட்டினருக்கு உண்டாக்கி விட்டன. இத்தகைய நிலையிலும் தேசிய உணர்ச்சியும் அந்நியனை நாட்டை விட்டு ஓட்ட வேண்டும் என்னும் விருப்பமும் கீழ் நாட்டினரிடையே வளர்ந்து வந்தன. இருபதாவது நூற்றாண்டின் தொடக்கத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவம் ஆசியாவின் மனதில் நன்கு பதிந்து பயன் விளைத்தது. ஜார் சக்கரவர்த்தியின் ருஷியாவை ஜப்பான் தோற்கடித்த சம்பவத்தைத்தான் நான் குறிப்பிடுகிறேன். குட்டி ஜப்பான் ஐரோப்பிய வல்லரசுகளில் மிகவும் பெரியதும் ஆற்றல் பொருந்தியதுமான ஒன்றைத் தோற்கடிப்ப தென்றால் அது உலகில் பலருக்கு ஆச்சரியத்தை விளைத்தது. ஆசியாவில் அந்த ஆச்சரியத்துடன் சந்தோஷமும் கலந்திருந்தது. ஐரோப்பிய நாடுகளின் அக்கிரமமான ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடும் ஆசிய நாடுகளின் பிரதிநிதியாக ஜப்பான் கருதப்பட்டது. அந்தச் சமயம், ஆசியா வெங்கும் ஜப்பான் அதிகப் பிராபல்யம் அடைந்தது. உண்மையில், ஜப்பான்

அத்தகைய ஆசியப் பிரதிநிதி அல்ல. ஜப்பானும் ஐரோப்பிய வல்லரசுகளைப் போலவே தன் சொந்த நன்மையை நாடிப் போரிட்டது. அவ்வளவுதான். அந் நாட்களில், ஜப்பானியர் பெற்றுவரும் வெற்றிகளைப் பற்றிய செய்திகள் வரவர நான் எத்தகைய பரபரப் புற்றேன் என்பது எனக்கு நன்முக நினைவிருக்கிறது. எனக்கு அப்போது உன் வயதிருக்கும்.

ஆக, மேல் நாட்டு சாம்ராஜ்ய வாதத்தின் ஆக்கிர மிப்புத் தன்மை வளர வளர அதை எதிர்த்துப் போராடு வதற்காகக் கீழ் நாட்டுத் தேசியமும் வளர்ந்து வந்தது. மேற்குக் கோடியில் அரேபிய நாடுகளிலிருந்து கிழக்குக் கோடியில் மங்கோலிய நாடுகள் வரையில், ஆசியா வெங்கும், தேசிய இயக்கங்கள் உருவாகி வந்தன. ஆரம்பத்தில் அவற்றின் போக்கு எச்சரிக்கை வாய்ந்ததாகவும் மிதவாதத் தன்மை கொண்டதாகவும் இருந்தது. வரவர அவற்றின் கோரிக்கைகள் தீவிரமாக மாறின. இந்தியாவில் தேசிய காங்கிரஸ் பிறந்து வளர்ந்து பிள்ளைப் பருவத்தை எய்தியது. ஆசியாவின் போர் தொடங்கிவிட்டது.

பத்தொன்பதாவது நூற்றுண்டைப் பற்றிய நமது ஆராய்ச்சியில் செம்பாதி கூட இன்னும் முடியவில்லை. ஆயினும், இக்கடிதம் மிகவும் நீண்டு விட்டபடியால் இங்கே நிறுத்திக் கொள்கிறேன்.

108

பத்தொன்பதாவது நூற்றுண்டு
(தொடர்ச்சி)

நவம்பர் 24, 1932.

பத்தொன்பதாவது நூற்றுண்டின் முக்கிய அம் சங்கள் சிலவற்றைப் பற்றிச் சென்ற கடிதத்தில் கூறி னேன். மேல் ஐரோப்பாவுக்குப் பெரிய யந்திரம் வந்த பிறகு அங்குத் தோன்றிய தொழில் முதலாளித்துவத்தின் விளைவுகளைப் பற்றியும் கூறினேன். இதில் மேல் ஐரோப்பா முதன்மை வகித்ததற்கு ஒரு காரணம் அங்கு நிலக்கரிச் சுரங்கங்களும் இரும்புக் கனிகளும் இருந்ததே யாகும். பெரிய யந்திரங்களைச் செய்வதற்கும் இயக்கு வதற்கும் நிலக்கரியும் இரும்பும் இன்றியமையாத பொருள்களல்லவா ?

முதலாளித்துவமானது சாம்ராஜ்ய வாதத்திலும் தேசியவாதத்திலும் கொண்டுவிட்டதை நாம் கண்டோம். தேசிய வாதம் நமக்குப் புதிதல்ல. அது முன்பே இருந் தது தான். ஆனால், அது இப்போது அதிகக் கடுமை யாகவும் குறுகலாகவும் மாறியது. ஏககாலத்தில் அது ஒன்று சேர்க்கும் சக்தியாகவும் வேறு பிரிக்கும் சக்தி யாகவும் விளங்கியது. அதன் பயனுக ஒரு தேசத்தில் வாழ்வோருக் கிடையேயுள்ள இடைவெளி குறுகியும், ஒரு தேசத்தாருக்கும் பிறிதொரு தேசத்தாருக்கும் இடையேயுள்ள இடைவெளி பெருகியும் வந்தன. ஒவ் வொரு தேசத்திலும் மக்களுக்கிடையே தேசபக்தி வளர்ந்து வந்தது. ஆனால், அவர்கள் பிற தேசத்தா ரிடம் துவேஷமும் அவ நம்பிக்கையும் கொள்ளத் தொடங்கினுர்கள். தொழில் முறையில் முன்னேற்றம்

அடைந்திருந்த ஐரோப்பிய தேசங்கள் ஒன்றையொன்று வனவிலங்குகளைப் போல் வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தன. கொள்ளையில் பெரும் பங்கு இங்கிலாந்துக்குக் கிடைத்து விட்டபடியால், கிடைத்ததை விடுவதற்கு அதற்கு மனமில்லை. ஆனால், மற்ற நாடுகளுக்கு, முக்கியமாக ஜெர்மனிக்கு எங்குப் பார்த்தாலும் இங்கிலாந்தின் எழுவு பேரிழவாயிருந்தது. ஆகவே, அவற்றிற் கிடையில் மாறுபாடு வளர்ந்து, கடைசியில் பகிரங்க யுத்தத்தில் வந்து முடிந்தது. தொழில் முதலாளித்துவத்தின் அமைப்பு முறையும், அதன் ஔரச புத்திரனான சாம்ராஜ்ய வாதமும் இத்தகைய மாறுபாட்டுக்கும் போராட்டத்துக்கும் கொண்டு செல்கின்றன. அவை போட்டியையும், போராட்டத்தையும், சுரண்டலையும் அடிப்படையாகக்கொண்டிருப்பதால் அவற்றில் இயல்பாக உள்ள முரண்பாடுகளை ஒக்கப்பண்ணுவது முடியாத காரியம் என்றே தோன்றுகிறது. இவ்வாறு, கீழ் நாடுகளில், சாம்ராஜ்ய வாதத்துக்குப் பிறந்த குழந்தையான தேசியவாதம் அதற்கே கூற்றமாக வந்து தோன்றியது.

இம் முரண்பாடுகளெல்லாம் இருந்தும் முதலாளித்துவ நாகரிகமானது உலகிற்குப் பல வழிகளிலும் நல்லறிவு கொளுத்தியது. ஒன்றை அமைத்து நடத்துவது இப்படியென்று அது உலகுக்கு அறிவுறுத்தியது. பெரிய யந்திரமும், பெரிய அளவில் தொழிலும் நடைபெற வேண்டுமாயின் அதற்கு முன் செய்ய வேண்டிய அமைப்பு வேலை (Organisation) எவ்வளவோ இருக்கிறது. பெரிய காரியங்களை எடுத்து நடத்துவதற்கு வேண்டிய கூட்டுறவையும் அது போதித்தது. ஒரு காரியத்தைத் திறம்படச் செய்யும் முறையையும், குறித்த நேரம் தப்பாமல் செய்யும் வழக்கத்தையும் அது கற்பித்தது. மேற்கூறிய குணங்கள் இன்றிப் பெரிய

தொழிற்சாலைகளையோ ரயில் வண்டித் தொடர்களையோ நடத்துவது கடினம். இக்குணங்கள் மேல் நாட்டினருக்கே உரியவை என்றும், கீழ் நாட்டினருக்கு ஜன்மத்திலேயே இவை கிடையாவென்றும் சில சமயங்களில் சொல்லப்படுகிறது. வேறு பல விஷயங்களிற் போலவே இதிலும் கிழக்கென்றும் மேற்கென்றும் கிடையாது. இக்குணங்கள் புதிய தொழில் முறை (Industrialism) யினின்றும் தோன்றி வளர்ந்தவை யாகும். மேல்நாடுகள் இத் தொழில் முறையில் சிறந்திருக்கிறபடியால் இக் குணங்கள் அங்கே காணப்படுகின்றன. கீழ்நாடுகள் பெரும்பாலும் விவசாய நாடுகளாகவும் தொழில் அபிவிருத்தி அடையாத நாடுகளாகவும் இருக்கிறபடியால் அவற்றில் குறையுடையனவாக இருக்கின்றன.

தொழில் முதலாளித்துவம் இன்னொரு பெரு நன்மையும் புரிந்தது. யந்திர சக்தியை உற்பத்தி செய்வதன் மூலம், அதாவது, யந்திரம் நிலக்கரி நீராவி இவற்றின் உதவியால் செல்வத்தை உற்பத்தி செய்யும் முறையை அது உலகுக்குக் காட்டியது. முன் காலத்தில் ஒரு பயம் இருந்து வந்தது. அதாவது, உலகில் உயிர் வாழும் மனித ஜாதிக்குப் போதிய உணவும் உடையும் பிறவும் கிடைக்க ஏது இன்மையால் மிகப்பலர் ஏழைகளாகத்தான் இருந்து தீரவேண்டும் என்ற ஒரு எண்ணம் இருந்து வந்தது. அந்த எண்ணத்தை அது ஆதாரமற்றதாகச் செய்துவிட்டது. விஞ்ஞானம், யந்திரம் இவற்றின் உதவியால் உலகின் ஜனத்தொகை முழுவதற்கும் தேவையான உணவும் உடையும் பிறவும் உற்பத்தி செய்ய முடியும் என்கிற நிலை ஏற்பட்டது. இவ்வாறு, உற்பத்திப் பிரச்சினை—ஏட்டளவிலாவது—தீர்க்கப்பட்டது. ஆயினும், அதற்கு மேல் அது போகவில்லை. ஏராளமான செல்வம் உற்பத்தி செய்யப்பட்டது வாஸ்தவம். ஆனால், ஏழைகள்

மட்டும் ஏழைகளாகவே இருந்து வந்தார்கள். உண்மையில் அவர்கள் இன்னும் அதிக ஏழைகள் ஆகிக்கொண்டிருந்தார்கள் என்றே சொல்ல வேண்டும். ஐரோப்பிய ஆதிக்கத்துக்கு உட்பட்ட கீழ் நாடுகளிலும், ஆப்பிரிக்க நாடுகளிலும் மானங்கெட்ட சுரண்டல் முறை பச்சையாக அனுஷ்டிக்கப்பட்டு வந்தது அங்கு வாழ்ந்த துர்ப்பாக்கியசாலிகளை ஏறெடுத்துப் பார்ப்பார் எவருமில்லை. அவர்களுடைய நிலைதான் அப்படி யென்றால், மேல் ஐரோப்பாவில் கூட ஏழைகளின் வறுமை தீரவில்லை. அதற்கு மாறாக, அவர்களுடைய வறுமைத் துன்பம் சற்று அதிகமாகவே தெரிய ஆரம்பித்தது. உலகின் பிறபாகங்களைச் சுரண்டி வந்த காரணத்தால் சிறிது காலம் மேல் ஐரோப்பாவில் செல்வம் கொழித்துக் கொண்டிருந்தது. அந்தச் செல்வத்தில் பெரும் பகுதி உயர்நிலையில் உள்ள பணக்காரர் வசம் தங்கி விட்டது. அதில் ஒரு சிறு பாகம் ஏழைகளுக்கும் பொசிந்தது. அதனால் அவர்களுடைய வாழ்க்கைத் தரம் ஒரு சிறிது உயர்ந்தது. மேல் ஐரோப்பிய நாடுகளில் வாழ்வோரின் தொகையும் மிகுதியாகப் பெருகியது.

ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் இன்றும் இதரத் தொழிலபிவிருத்தி அடையாத பிரதேசங்களிலும் வாழ்ந்து வந்த மக்களை வயிற்றில் அடித்துத்தான் மேற்கூறிய செல்வமும் வாழ்க்கைத் தர உயர்வும் ஐரோப்பாவில் ஏற்பட்டன. இவ்வாறு, வேற்று நாடுகளைப் பிழிந்து பெற்ற செல்வம் சில காலம் வரையில் முதலாளித்துவ முறையின் முரண்பாடுகளை மறைத்து நின்றது. ஆயினும், ஏழைகளுக்கும் பணக்காரருக்கும் இடையேயுள்ள வேற்றுமையும், பிளவும் அதிகரித்து வந்தன. அவர்கள் ஒருவருக்கொருவர் தொடர்பற்ற இரு தனியான ஜாதியாராகவும், தேசத்தாராகவும் இருந்து

வந்தார்கள். 19-வது நூற்றாண்டில் வாழ்ந்த பிரிட்டிஷ் ராஜ தந்திரியான பெஞ்சமின் டிஸ்ராலி என்பவர் அவர்களைக் கீழ்க்கண்டவாறு வருணிக்கிறார்:

"ஏழைகள், பணக்காரர்கள், இவ்விரு திறத்தாரும் இரு தனிப்பட்ட தேசத்தினராகக் காட்சியளிக்கிறார்கள். அவர்களுக்கிடையே யாதொரு உறவும் கிடையாது. அவர்கள் ஒருவர்பால் மற்றொருவர் அநுதாபம் கொள்வதில்லை. வெவ்வேறு உலகங்களில், அல்லது, வெவ்வேறு கிராமங்களில் வாழ்வோர் எப்படி ஒருவரை யொருவர் அறியார்களோ, அப்படியே, ஏழை பணக்காரரும் ஒருவர் மற்றொருவருடைய பழக்க வழக்கங்களையோ, சிந்தனைகளையோ, உணர்ச்சிகளையோ அறியமாட்டார்கள். அவர்களுடைய பிறப்பு வளர்ப்பு வேறு, ஆகாராதிகள் வேறு, நடை உடை பாவனைகள் வேறு, சட்டதிட்டங்கள் வேறு, எல்லாம் வேறு."

புதிய தொழில் நிலைமைகள் காரணமாக ஏராளமான தொழிலாளர்கள் பெரிய பெரிய தொழிற்சாலைகளில் வேலை செய்யத் தொடங்கினார்கள். ஆகவே, 'தொழிற்சாலைத் தொழிலாளிகள்' என்னும் புதிய வகுப்பு அல்லது வர்க்கம் ஒன்று தோன்றியது. இவர்கள் நிலங்களில் வேலை செய்யும் குடியானவர்களிடமிருந்து பல வழிகளிலும் வேறுபட்டிருந்தார்கள். குடியானவன் பெரும்பாலும் பருவங்களையும் மழையையும் நம்பி வாழ வேண்டியவனாயிருக்கிறான். இவை அவனுடைய வசத்தில் இல்லை. ஆகவே, அவன் தன்னுடைய இன்பமும் துன்பமும் தெய்வாதீனமானவை என்று நினைத்துக் கொள்ளுகிறான். அவன் தன்னுடைய நிலைமைக்கான பொருளியல் காரணங்களைச் சிந்தித்துப் பாராமல் மூட நம்பிக்கையை மேற்கொள்ளுகிறான். எல்லாவற்றிற்கும் அவன் தன் தலை விதியும் போதாத காலமுமே காரணம் என்று

எண்ணி அவற்றை நொந்துகொண்டு சும்மா இருந்து விடுகிறான். அவனுடைய வாழ்க்கை, நம்பிக்கையும் பிரகாசமும் அற்றதாகி விடுகிறது. ஆனால், தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளியோ மனிதனால் செய்யப்பட்ட யந்திரங்களைக் கொண்டு வேலை செய்கிறான். அவன் பருவ காலங்களையும் மழை மாரியையும் எதிர்பாராமல் பொருள்களை உற்பத்தி செய்கிறான். அவன் செல்வத்தை உண்டாக்குகிறான். ஆனால், அச்செல்வத்தில் பெரும் பகுதி பிறருக்குப் போவதையும் தான்மட்டும் பழையபடியே ஏழையாகி இருப்பதையும் அவன் காண்கிறான். ஓரளவுக்குப் பொருளியல் விதிகள் வேலை செய்யும் முறையை அவனால் காண முடிகிறது. ஆகவே, அவன் குடியானவனைப் போலத் தன்னுடைய ஊழ்வினைப் பயனை நினைத்துக் கொண்டு மூட நம்பிக்கையில் உழலுவதில்லை. தன்னுடைய இல்லாமைக்கும் ஏழ்மைத் தனத்துக்கும் அவன் தெய்வத்தை நோவதில்லை; சமுதாயத்தையும், சமுதாய அமைப்பையும், தன்னுடைய உழைப்பினால் வரும் லாபத்தில் பெரும் பகுதியை எடுத்துக் கொள்ளும் தொழிற்சாலை முதலாளியையுமே அவன் குறைகூறுகிறான். அவனுக்கு வர்க்க உணர்ச்சி உண்டாகிறது. வெவ்வேறு வர்க்கங்கள் இருப்பதையும் முதலாளி வர்க்கம் தொழிலாளி வர்க்கத்தை அட்டை போல் உறிஞ்சுவதையும் அவன் கரதலாமலகம் போலக் காண்கிறான். இதிலிருந்து அதிருப்தியும் எழுச்சியும் தோன்றுகின்றன. அதிருப்தியின் முதல் முணு முணுப்புகள் தெளிவும் உணர்ச்சியும் அற்றனவாக இருக்கின்றன. எழுச்சியின் முதல் தோற்றங்கள் அறிவும் பலமும் அற்றனவாகவும் குருட்டுத் தன்மை கொண்டனவாகவும் இருக்கின்றன. அவற்றை அரசாங்கம் எளிதில் அடக்கி விடுகிறது. ஏனெனில்,

அரசாங்கம் இப்போது தொழிற்சாலைகளின் மீதும் அதன் விளைவுகளின் மீதும் ஆதிக்கம் செலுத்தும் புதிய மத்திய வகுப்பாரின் நலன்களுக்கும் பிரதிநிதியாக விளங்குகிறது. ஆனால், அரசாங்கம் கூடப் பசியை நெடுங்காலம் அடக்கி வைக்க முடியாதல்லவா? ஆகவே, ஏழைத் தொழிலாளி தன்னுடைய தோழர்களுடன் ஒன்றுபட்டுச் செயலாற்றுவதில் ஒரு புதிய பலத்தைக் காண்கிறான். தொழிலாளியின் உரிமைகளைக் காப்பாற்றவும் அவற்றிற்காகப் போராடவும் தொழிற் சங்கங்கள் தோன்றுகின்றன. அவை முதலில் ரகசியமாக வேலை செய்கின்றன. ஏனெனில், தொழிலாளிகள் சங்கம் அமைத்துக் கொள்வதற்குக்கூட அரசாங்கம் அனுமதி அளிக்க மறுக்கிறது. அரசாங்கம் வர்க்கத் தன்மை கொண்டதென்னும் உண்மை தெளிவாகத் தெரியத் தொடங்குகிறது. அது தன்னுடைய வர்க்கத்தை எவ்விதத்தும் காக்கத் துணிவுகொண்டிருக்கிறது என்னும் உண்மையும் புலனாகிறது. சட்டங்களும் வர்க்கச் சார்பு கொண்டவையாகவே இருக்கின்றன. தொழிலாளரின் பலம் சிறிது சிறிதாக வளர்ந்து வருகிறது. அவர்களுடைய தொழிற்சங்கங்களும் பலம் பொருந்திய ஸ்தாபனங்களாக மாறுகின்றன. பல்வகைப்பட்ட தொழிலாளர்கள், அதிகாரத்தை வகிக்கும் சுரண்டும் வர்க்கத்துக்கு எதிரில், தங்களுடைய நலன்கள் யாவும் உண்மையில் ஒன்றே என்பதை உணர்கிறார்கள். பலதிறப்பட்ட தொழிற் சங்கங்களும் தங்களுக்குள் சேர்ந்து ஒத்துழைக்கத் தலைப்படுகின்றன. இவ்வாறு, ஒரு தேசத்தின் தொழிலாளர்கள் அனைவரும் ஒரு கட்டுப்பாடான கூட்டமாக விளங்குகிறார்கள். இதற்கு அடுத்தபடியாகச் செய்ய வேண்டிய காரியம் பல்வேறு தேசங்களிலும் உள்ள தொழிலாளர்கள் ஒன்றுபட

வேண்டியதுதான். 'தங்களுடைய நலன்கள் பொதுவானவை, தங்களுடைய விரோதிகளும் பொதுவானவர்கள்' என்னும் உண்மையை உலகெங்குமுள்ள தொழிலாளர் சமூகம் உணர்கிறது. அவ்வுணர்ச்சியிலிருந்து 'உலகத் தொழிலாளர்களே! ஒன்றுபடுங்கள்' என்னும் முழக்கம் எழுகிறது. சர்வ தேசத் தொழிலாளர் ஸ்தாபனங்கள் அமைக்கப் படுகின்றன. இதற்கிடையில், தொழில் முதலாளித்துவமும் வளர்ச்சி அடைந்து சர்வ தேசியத் தன்மையை எய்துகிறது. தொழில் முதலாளித்துவம் ஓங்கி நிற்கும் இடங்களில் எல்லாம் தொழிலாளர் சக்தி அதை எதிர்த்து நிற்பதைக் காண்கிறோம்.

நான் மிகவும் வேகமாகப் போய்விட்டேன். ஆகவே, மீண்டும் திரும்பி வரவேண்டும். ஆனால், இந்தப் பத்தொன்பதாவது நூற்றாண்டு உலகமே ஒரு பெருங் குழப்பமாகத்தான் இருக்கிறது. ஒன்றுக்கொன்று மாறான பல போக்குகளும் பான்மைகளும் அதில் தாறுமாறாகப் பின்னிக்கொண்டு கிடக்கின்றன. அவையெல்லாவற்றையும் மனக் கண்ணுக்கு முன்னால் கொண்டு வருவது கஷ்டமாயிருக்கிறது. முதலாளித்துவம், சாம்ராஜ்யவாதம், தேசியவாதம், சர்வ தேசியவாதம், செல்வம், வறுமை இவையெல்லாம் சேர்ந்த இக் கதம்பம் உனக்கு அர்த்தமாகுமா என்று எனக்கே ஆச்சரியமாயிருக்கிறது. ஆனால், வாழ்க்கையே ஒரு விசித்திரமான கதம்பம்தான். நாம் அதை உள்ளது உள்ளவாறே எடுத்துக்கொண்டு, முதலில் அதை அறியவும், பின்னர் அதைச் சீர்திருத்தவும் முயலவேண்டும்.

இத்தாறுமாறான நிலைமையைக் குறித்து ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் பலர் தீவிரமாக ஆலோசிக்கலானார்கள். அந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில், நெப்போலியன் வீழ்ச்சியுற்ற பிறகு, எந்த ஐரோப்பிய

தேசத்திலும் சுதந்திரம் என்பது அருபொருளாயிருந்தது. சில நாடுகளில் அரசனுடைய யதேச்சாதிகார அமுல் நடந்து வந்தது. இங்கிலாந்தைப் போன்ற வேறு சில நாடுகளில் உயர்குலப் பிரபுக்களும் பணக்காரர்களும் அடங்கிய ஒரு சிறு கூட்டம் அதிகாரத்தை வகித்து வந்தது. நான் ஏற்கெனவே கூறியபடி, தாராள வாதிகள் எங்கும் ஒடுக்கப்பட்டனர். ஆயினும், அமெரிக்கப் புரட்சியும் பிரெஞ்சுப் புரட்சியும் ஜனநாயகம், அரசியல் சுதந்திரம் முதலியவற்றைப் பற்றிய எண்ணங்களை மக்கள் மனத்தில் வேரூன்றச் செய்து விட்டன. அவற்றின் பெருமையைத் தாராள வாதிகளான அறிஞர்கள் உணரத் தொடங்கினார்கள். அரசாங்கத்தின் கேடுகளுக்கும் மக்களின் இன்னல்களுக்கும் ஜனநாயகமே மருந்து என்று பலரும் கருதத் தலைப்பட்டனர். ஜனநாயகத்தின் லட்சியம் என்ன? யாருக்கும் விசேஷ உரிமை இருப்பது கூடாது. எல்லோரையும் சமமான அரசியல், சமூக அந்தஸ்துடையவர்களாகக் கருதி அரசாங்கம் நடத்த வேண்டும். ஜனங்கள் ஒருவரைப் போல மற்றவர் இருப்பதில்லை. அவர்கள் பல வழிகளில் பெரிதும் மாறுபட்டிருக்கிறார்கள் என்பது உண்மையே. சிலர் மற்றவர்களை விட அதிகப் பலசாலிகளாக இருக்கிறார்கள்; சிலர் அதிகப் புத்திசாலிகளாக இருக்கிறார்கள்; சிலர் 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளரா'யிருக்கிறார்கள். ஆனால், ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் மனிதர்களுக்குள் எவ்வளவுதான் வேற்றுமையிருந்த போதிலும் அவர்கள் அனைவரும் சமமான அரசியல் அந்தஸ்தை உடையவர்களாக இருக்கவேண்டும் என்று சொன்னார்கள். ஒவ்வொருவருக்கும் வோட்டுரிமை அளிப்பதன் மூலம் இதைச் சாதிக்கலாம் என்று அவர்கள் நினைத்தார்கள். முற்போக்கு வாய்ந்த அறிஞர்

களும் தாராள வாதிகளும் ஜனநாயகத்துக்குக் கூறப்பட்ட குணங்கள் உண்மையானவை என்று ஆர்வத்துடன் நம்பினார்கள். ஆகவே, அவர்கள் ஜனநாயகத்தை ஸ்தாபிக்க அரும்பாடு பட்டார்கள். பழைமையோம்பிகளும் பிற்போக்காளரும் அவர்களை எதிர்த்து நின்றார்கள். இவ்விருதிறத்தாருக் கிடையே எங்கும் பெரும் போராட்டம் நிகழ்ந்தது. சில தேசங்களில் புரட்சிகள் விளைந்தன. இங்கிலாந்தில் உள்நாட்டுப் போர் ஆரம்பிக்கும் நிலையில் இருந்தது. அதற்குப் பிறகு தான் அங்கு வோட்டுரிமை விஸ்தரிக்கப் பட்டது. அதாவது, பார்லிமெண்டுக்கு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பதற்குரிய வோட்டுரிமை அதிகமாக இன்னும் சிலருக்குக் கொடுக்கப்பட்டது. சிறிது சிறிதாக ஜனநாயகம் அநேகமாக எல்லா இடங்களிலும் வெற்றி பெற்று விட்டது. அந்த நூற்றாண்டு முடியு முன்னரே மேல் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் பெரும்பாலோருக்குக் குறைந்தபட்சம் வோட்டுரிமையாவது கிடைத்து விட்டது. பத்தொன்பதாவது நூற்றாண்டின் தலை சிறந்த லட்சியம் ஜனநாயகம்தான். ஆகவே அந்நூற்றாண்டை ஜனநாயகத்தின் நூற்றாண்டு என்றும் கூறலாம். முடிவில் ஜனநாயகம் வெற்றி பெற்றது. அவ்வாறு அது வெற்றி பெற்ற காலையில் ஜனங்கள் அதனிடம் வைத்திருந்த நம்பிக்கையை இழக்கத் தொடங்கி விட்டார்கள். ஜனநாயகத்தினால் ஏழ்மையையும், துன்பத்தையும் முதலாளித்துவ முறையின் முரண்பாடுகளையும் போக்க முடியவில்லை என்பதை அவர்கள் கண்டு கொண்டார்கள். பசியினால் வாடும் ஒருவனுக்கு வோட்டுரிமையினால் என்ன பிரயோஜனம்? அவனுடைய வோட்டுரிமையோ அல்லது ஊழியமோ ஒருவேளைச் சோற்றுக்கு வாங்கப்படக் கூடுமாயின் அவன் அடைந்

துள்ள சுதந்திரத்தின் அளவுதான் என்ன? ஆகவே, ஜனநாயகத்திற்கு அதாவது அரசியல் ஜனநாயகத்திற்கு அவகீர்த்தி ஏற்பட்டு விட்டது. ஆனால் இந்த விளைவு 19-வது நூற்றாண்டுக்குப் புறம்பானதாகும்.

ஜனநாயகமானது சுதந்திரத்தின் அரசியல் அம்சத்தைப்பற்றி மட்டும் கவனம் செலுத்தியது. அது தடையற்ற யதேச்சாதிகார ஆட்சிகளின் எதிர்விளைவாகும். யந்திரத்தின் வருகைக்குப் பின் தோன்றிவரும் தொழில் பிரச்சினைகளுக்கோ, ஏழ்மைத்தனத்துக்கோ, வர்க்கப் போராட்டத்துக்கோ ஏற்ற விடையளிக்கும் சக்தி ஜனநாயகத்துக்கு இல்லை. ஒவ்வொருவனும் தனக்கிஷ்டமான வேலையைச் செய்வதற்கு உரிமை இருக்க வேண்டும் என்கிற ஏட்டுச் சுதந்திரத்தை மட்டும் அது வற்புறுத்தியது. அத்தகைய ஒரு நிலையில் ஒவ்வொருவனும் சுயநலத்தால் தூண்டப்பட்டவனாய்த் தன்னுடைய அபிவிருத்தியை முன்னிட்டுப் பாடுபடுவான் என்றும் அதனால் சமூகமே முன்னேற்றம் அடையுமென்றும் அது நம்பியது. இதுதான் 'தலையிடாக் கொள்கை' (Laissez Faire) என்று அழைக்கப்பட்டது. இதைப்பற்றி முன் கடிதம் ஒன்றில் எழுதியிருப்பதாக ஞாபகம். ஆனால், இத் தனிமனிதனின் சுதந்திரக் கொள்கையானது தோல்வி அடைந்துவிட்டது. ஏனெனில், கூலிக்கு வேலை செய்யுமாறு நிர்ப்பந்திக்கப்படும் நிலையிலுள்ள ஒருவனுக்கும் உண்மையான சுதந்திரத்துக்கும் வெகுதூரம் அல்லவா?

தொழில் முதலாளித்துவத்தின் கீழ் விளைந்த பேரல்லல் இதுதான்; யார் நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபட்டு உழைத்துச் சமூகத்துக்கு உண்மையான தொண்டு புரிந்தார்களோ அவர்களுக்கு மிகவும் குறைந்த கூலி கொடுக்கப்பட்டது. அவர்களுடைய உழைப்பின்

பயனெல்லாம் ஒரு வேலையும் செய்யாதவர்களுக்குக் கிடைத்தது. இவ்வாறு, உழைப்பு ஓரிடம் பயன் ஓரிடமாகப் பிரிந்து நின்றன. இதனால், ஒருபக்கம் பாட்டாளி மக்கள் சிறுமையும் வறுமையும் உற்று வந்தார்கள்; இன்னொரு பக்கம், தொழிலை நம்பி அல்லது உறிஞ்சிப் பிழைக்கும் ஒரு சோம்பேறி வகுப்புத் தோன்றியது. அவ்வகுப்புச் செல்வ உற்பத்திக்காக ஒரு சிறு துரும்பையும் அசைக்கவில்லை. இந்த நிலை குடியானவனையும் ஜமீன்தாரையும் நமக்கு ஞாபகப்படுத்துகிறது. குடியானவன் நிலத்தில் பாடுபடுகிறான்; ஜமீன்தார் நிலத்தில் பாடுபடுவதில்லை; ஆனால், குடியானவனுடைய உழைப்பின் பயனை மட்டும் நுகர்கிறான். உழைப்பின் பயன் இவ்வாறு பங்கிடப்படுவது அநியாயம் என்பது சொல்லாமலே விளங்கும். நீண்டகாலமாகக் கஷ்டத்தை அனுபவித்து வரும் குடியானவன் இந்த அநியாயத்தை உணரவில்லை. ஆனால், தொழிலாளியோ அவ்வநியாயத்தை உணர்ந்ததோடு அதை வெறுக்கவும் வெறுத்தான். நாளடைவில் அவனுடைய நிலை சீர்கேடடைந்து கொண்டே சென்றது. தொழில் அபிவிருத்தி அடைந்த மேனாடுகளில் எல்லாம் இந்த வேற்றுமைகளும் முரண்பாடுகளும் வரவர வளர்ந்துவந்தன. ஊக்கமும் உண்மையும் வாய்ந்த விவேகிகள் இதற்கொரு வழி காண முயன்றனர். இவ்விதமாக 'அபேதவாதம்' என்னும் பெயரில் நாம் இப்போது அறிந்துள்ள கொள்கைகள் பிறந்தன. அபேதவாதமானது முதலாளித்துவம் பெற்றெடுத்த குழவியாயினும் அதற்கு முற்றும் வைரியாக வந்து மூண்டது. அது, முதலாளித்துவத்தைக் கருவறுத்து விட்டு அதன் இடத்தைக் கைப்பற்றிக் கொள்ள வேண்டும் என்பது விதியின் நியமமாக இருந்தாலும் இருக்கலாம். இங்கிலாந்தில் தோன்றிய அபேதவாதம் மித

வாதத்தன்மையை மேற்கொண்டது. பிரான்சிலும் ஜெர்மனியிலும் அது அதிகப் புரட்சிகரமாயிருந்தது. ஐக்கிய அமெரிக்க நாடுகளில் நிலைமை வேறு விதமாயிருந்தது. அங்கே ஜனத் தொகையோ குறைவு; நிலப்பரப்போ பெரிது. ஆகவே, வளர்ச்சிக்கு நிறைய இடம் இருந்தது. அது காரணமாக முதலாளித்துவத்தினால் மேல் ஐரோப்பாவில் விளைந்த கஷ்டங்களும் அநியாயங்களும் நெடுங்காலம் வரையில் அமெரிக்காவில் தலைகாட்டவில்லை.

19-வது நூற்றாண்டின் இடையில் ஜெர்மனியில் ஒருவன் தோன்றினான். அவன் பிற்காலத்தில் அபேதவாதத்தின் தீர்க்கதரிசியாகவும், அபேதவாதத்தின் இன்னொரு உருவமாகிய பொது உடைமை வாதத்தின் தந்தையாகவும் விளங்கவேண்டுமென்று விதி வகுத்திருந்தது. அவன்தான் கார்ல் மார்க்ஸ். அவன் விவகாரத்துக்குதவாத வெறும் வறட்டுச் சித்தாந்தங்களை விவாதிக்கும் தர்க்கசாஸ்திரியோ, வழவழா குழகுழா என்று பேசும் தத்துவ சாஸ்திரியோ அல்ல. அவன் காரியசித்தியில் கண்ணுள்ள ஒரு பேராசிரியன். அரசியல், பொருளியல் பிரச்சினைகளை விஞ்ஞான முறைப்படி ஆராய்ச்சி செய்து, உலகத்தின் தீமைகளுக்குப் பரிகாரம் காண்பதுதான் அவன் வகுத்துக் கொண்ட வழியாகும். 'இதுவரையில் தோன்றிய தத்துவ நூல்களெல்லாம் உலகத்தை வியாக்கியானம் செய்ய முயன்றன. பொதுஉடைமைத் தத்துவம் உலகத்தை மாற்றி அமைக்கும் காரியத்தில் முனைய வேண்டும்' என்று அவன் கூறினான். அவனும் எஞ்சல்ஸ் என்னும் இன்னொருவனுமாகச் சேர்ந்து 'பொது உடைமைக் கொள்கைப் பிரகடனம்' ஒன்றை வெளியிட்டார்கள். அதில் அவனுடைய தத்துவம் சுருக்கமாகக் கூறப்பட்டிருந்தது. பின்னர், அவன் ஜெர்மன் மொழியில் 'மூலதனம்' (DASA KAPITEL) என்னும்

மாபெரும் நூலை எழுதி வெளியிட்டான். அந்நூலில் அவன் உலக சரித்திரத்தை விஞ்ஞான முறைப்படி விமரிசனம் செய்து, மனித சமுதாயம் எத்திசையில் வளர்ந்து வருகிறதென்றும், அவ்வளர்ச்சியை எவ்வாறு துரிதப்படுத்த முடியும் என்றும் எடுத்துக் காட்டியிருந்தான். இங்கே, மார்க்சின் தத்துவத்தை விளக்கிக் கூறுவது என்னுடைய நோக்கமல்ல. ஆனால், ஒரு விஷயம் நீ நினைவில் வைக்கவேண்டும். மார்க்ஸ் இயற்றிய மகாகிரந்தமானது அபேதவாத வளர்ச்சிக்குப் பெரிய உத்வேகத்தை அளித்தது. இன்று அதுவே பொது உடைமை ருஷியாவின் வேதப்புஸ்தகமாக விளங்குகிறது.

ஏறக்குறைய அந்நூற்றாண்டின் மத்தியில் இங்கிலாந்தில் இன்னொரு புகழ் பெற்ற நூல் வெளிவந்தது. டார்வின் என்பான் எழுதிய 'உயிர் வகைத் தோற்றக் காரணம்' (Origin of Species) என்னும் அந் நூலானது மக்களிடையே பெருத்த கிளர்ச்சியை உண்டு பண்ணியது. டார்வின் ஒரு இயற்கைத் தத்துவாசிரியன். அதாவது, அவன் இயற்கையை ஆராய்ந்து வந்தான். சிறப்பாகத் தாவரவர்க்க, பிராணிவர்க்க ஆராய்ச்சியில் அவன் ஈடுபட்டிருந்தான். தாவர வகைகளும் பிராணி வகைகளும் இயற்கையில் தோன்றி வளர்ந்த விதத்தையும், இயற்கையின் துணைகொண்டே ஒருவகை இன்னொரு வகையாக மாறிய விதத்தையும், ஆதியில் சாதாரணமாயிருந்த உருவங்கள் சிறிது சிறிதாகச் சற்றுச் சிக்கலாக மாறிய விதத்தையும் அவன் பல உதாரணங்கள் மூலமாக விளக்கிக் காட்டினான். இத்தகைய விஞ்ஞான ரீதியான அறிவாராய்ச்சி உலகின் சிருஷ்டியைப்பற்றிய மதக் கோட்பாடுகள் சிலவற்றிற்கு நேர் விரோதமாக இருந்தது. அதனால் விஞ்ஞானிகளுக்கும் மதவாதிகளுக்கும் இடையே பெருத்த வாதப் பிரதிவாதம்

எழுந்தது. இருதிறத்தாருக்குமுள்ள உண்மையான மாறுபாடு அவ்வளவாக உண்மைகளைப் பொறுத்ததாக இல்லை; பொதுவாக வாழ்க்கையைப் பற்றிக் கொள்ளவேண்டிய மனப்பான்மையைப் பொறுத்ததாகவே அது இருந்தது. மதம் போதித்த மனப்பான்மை குறுகியதாகவும், மூட நம்பிக்கை, பயம், மாந்திரிகம் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டதாகவும் இருந்தது. அது அறிவாராய்ச்சிக்கு ஆக்கம் அளிக்கவில்லை. 'சொன்னதை நம்ப வேண்டியது ஜனங்களுடைய கடமை. அது சரியா தப்பா என்று கேள்வி கேட்கும் உரிமை அவர்களுக்குக் கிடையாது' என்பதுதான் மதத்தின் சித்தாந்தமாயிருந்தது. பல விஷயங்கள் பவித்திரம் என்றும் பாவனம் என்றும் இரகசியம் என்றும் மூடி மூடி வைக்கப்பட்டன. ஜனங்கள் அவற்றைத் திறந்து பார்ப்பதோ தொட்டுப் பார்ப்பதோ பாவம் என்று கருதப்பட்டது. விஞ்ஞானத்தின் நீர்மையும் முறையும் இதற்கு முற்றிலும் மாறாயிருந்தன. ஏனெனில், அது ஒவ்வொன்றையும் நுணித்தறியும் ஆவல் கொண்டதாயிருந்தது. பிறர் சொல்லுவதற்காக அது எதையும் ஒப்புக்கொள்ளத் தயாராயில்லை. ஒரு விஷயம் பரிசுத்தமானது என்று சொல்லி அதைப் பயமுறுத்த முடியாது. ஒவ்வொன்றிலும் அது ஆழ நுழைந்து ஆராய்ச்சி செய்தது. அது மூட நம்பிக்கையை அறிவென்னும் கோல் கொண்டு சாடியது. பகுத்தறிவாலும் சோதனையாலும் நிலைநாட்டக் கூடிய விஷயங்களையே அது நம்பியது.

விஞ்ஞான நீர்மைக்கும் மதத்தொடக்குண்ட கர்நாடக மனோபாவத்துக்கும் இடையே விளைந்த போரில் முன்னது வெற்றி பெற்றது. ஏற்கெனவே இவ்விஷயங்களைப் பற்றிப் புத்திபூர்வகமாகச் சிந்தனை செய்த விவேகிகள் 18-வது நூற்றாண்டிலேயே 'காரணவாதிகள்'

ஆக மாறியிருந்தனர். புரட்சிக்கு முன்பு பிரான்சில் தத்துவ விசாரணை அலையெறிந்து கிளர்ந்தெழுந்தது உனக்கு நினைவிருக்கும். ஆனால், இப்போது விளைந்த மாறுதல் சமூகத்தில் இன்னும் ஆழமாக ஊடுருவிப் பாய்ந்தது. சாதாரணக் கல்வியறிவு படைத்த ஒருவனை விஞ்ஞான முன்னேற்றம் பாதிக்கத் தொடங்கியது. அவன் சுயமாக ஆழ்ந்து சிந்தித்தான் என்றோ, அவனுக்கு விஞ்ஞானத்தைப் பற்றி அதிகமாகத் தெரியும் என்றோ சொல்ல முடியாது. இதுகாறும் தனது அறிவை மறைத்திருந்த திரை விலகியதும், அரங்கின்மீது அவன் கண்ட விஞ்ஞான அற்புதக் காட்சிகள் அவனைத் திக்பிரமையில் ஆழ்த்தி விட்டன. ரயில்வண்டி என்ன, மின்சாரம் என்ன, தந்தி என்ன, டெலிபோன் என்ன, போனகிராப் (கிராமபோன்) என்ன! இவையும் இன்னும் இவை போன்ற பல அற்புதங்களும் ஒன்றின்பின் ஒன்றாக வந்து அவனுடைய பொறி புலன்களைக் கலங்க அடித்து விட்டன. மேற் கூறியவையெல்லாம் விஞ்ஞானத்தின் குழந்தைகள் தானே! அவை விஞ்ஞானத்தின் வெற்றிகள் என்று கொண்டாடப் பட்டன. விஞ்ஞானம் மனிதனுடைய அறிவை அதிகரித்தது மட்டுமின்றி இயற்கையின் மீது அவன் செலுத்தக் கூடிய ஆதிக்கத்தையும் அதிகரித்தது. ஆகவே, வெற்றிமேல் வெற்றியாகப் பெற்று வரும் விஞ்ஞானம் என்னும் எல்லாம் வல்ல இப்புதிய தெய்வத்துக்கு முன்னால் மக்கள் முடி தாழ்த்தி வணக்கம் செலுத்தியதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை யல்லவா? 19-வது நூற்றாண்டைச் சேர்ந்த விஞ்ஞானப் பண்டிதர்கள் திருப்தி பூரணர்களாகவும் திடநிச்சயர்களாகவும் இருந்தார்கள். அவர்களுக்குப் பிற்பட்ட அரை நூற்றாண்டுக் காலத்தில் விஞ்ஞானம் வெகு தூரம் முன்னேறி யிருக்கிறது. ஆனால், இன்றைய

விஞ்ஞானப் பண்டிதர்களின் மனப்பான்மை 19-வது நூற்றாண்டில் காணப்பட்ட திருப்திபூரண, திடநிச்சய மனப்பான்மையினின்றும் பெரிதும் மாறுபட்டிருக்கிறது. இன்று, உண்மையான விஞ்ஞான சாஸ்திரி என்று தன்னைக் கூறிக்கொள்ளும் ஒவ்வொருவனும் கல்விக் கடலானது எல்லையற்றுப் பரந்து கிடக்கிறது என்னும் உண்மையை உணர்ந்திருக்கிறான். ஆராய்ச்சிப் பாய் கட்டிய அறிவுத் தோணியில் அமர்ந்து அவன் அதைக் கடக்க முயற்சிப்பது உண்மையேயாயினும் அவன் தன் முன்னோர்களைவிட அதிக அடக்கம் வாய்ந்தவனாகவும் தயக்கம் காட்டுபவனாகவும் இருக்கிறான்.

19-வது நூற்றாண்டின் இன்னொரு விசேஷம் என்னவென்றால், மேனாடுகளில் பொது ஜனக் கல்வி அடைந்த பெரு முன்னேற்றமேயாகும். ஆனாலும் வகுப்போரில் பலர் இதை அதி தீவிரமாக எதிர்த்தார்கள். 'சாதாரண ஜனங்களுக்குக் கல்வி அளித்தால் கருவம் தலைக்கேறி அவர்கள் அதிகமாகக் கெட்டுப் போய்விடுவார்கள்; ஒருவரையும் மதிக்கமாட்டார்கள்; இது சொத்தை அது சொள்ளை என்பார்கள், அரசனுக்குத் துரோகம் செய்வார்கள், கிறிஸ்தவ மதத்துக்குத் துரோகம் செய்வார்கள்' என்றெல்லாம் அவர்கள் வாதித்தார்கள். அவர்களுடைய சொற்படி கிறிஸ்தவ மதம் என்பது, அறியாமையில் மூழ்கிக் கிடப்பதும், பணக்காரருக்கும் அதிகார பதவி வகிப்போருக்கும் கைகட்டி வாய்புதைத்து ஏவல் செய்வதும் தான் என்று ஏற்படுகிறதல்லவா? ஆனால், அவர்களுடைய எதிர்ப்பையும் மீறி, ஆரம்பப் பாடசாலைகள் எங்கும் ஏற்பட்டன. அதனால் பொது ஜனக் கல்வி பரவியது. 19-வது நூற்றாண்டின் பல விளைவுகளைப் போல இதுவும் புதிய தொழில் முறையின் விளைவுதான். ஏனெனில், புதிய தொழிற்சாலையையும் பெரிய யந்திரத்

தையும், நடத்துவதற்குத் தொழில் திறமை இன்றியமையாததாயிருந்தது. அந்தத் திறமையை அடைவதற்குக் கல்வி அவசியமாயிருந்தது. அக்காலத்தில் பலவகையான தேர்ச்சி பெற்ற தொழிலாளிகளுக்குத் தேவை இருந்தது. அத்தேவை பொது ஜனக் கல்வியினால் பூர்த்தியாயிற்று.

பொது ஜனக் கல்வி எங்கும் பரந்த காரணத்தால் பலர் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் ஆனார்கள். அவர்களைக் கற்றவர்கள் என்று சொல்வதற்கில்லை. ஆனால், அவர்கள் எழுதவும் படிக்கவும் வல்லவர்களாயிருந்தார்கள். அவர்களிடையே பத்திரிகை படிக்கும் வழக்கமும் பரவலாயிற்று. குறைந்த விலையில் பத்திரிகைகள் தோன்றி அதிக வியாபகமுற்றன. அவை மக்களின் மனதைப் பெரிதும் ஆட்கொள்ளத் தொடங்கின. பத்திரிகைகள் பெரும்பாலும் மக்களைத் தவறான வழியில் திருப்பியும் அண்டைநாட்டுக்கு விரோதமாக அவர்களுடைய மதமாற்சரியங்களைத் தூண்டியும் வந்தன என்பதும், அதனால் யுத்தங்கள் விளைந்தன என்பதும் உண்மையே. ஆயினும், பத்திரிகைகள் ஒரு பெரிய சக்தியாகப் பரிணமித்து விட்டன. அவற்றை யாரும் புறக்கணிப்பதற்கில்லை.

இக் கடிதத்தில் நான் கூறியுள்ள விஷயங்கள் பெரும்பாலும் ஐரோப்பாவுக்குத் தான் பொருந்தும். அதிலும் சிறப்பாக மேல் ஐரோப்பாவுக்குத்தான் பொருந்தும். வட அமெரிக்காவுக்கும் அவை ஓரளவு பொருந்தும். உலகின் பிற பாகங்களும், ஆசியாவும் (ஜப்பான் நீங்கலாக), ஆப்பிரிக்காவும் ஐரோப்பா ஆட்டிவைத்தபடி ஆடும் தற் சுதந்திரமற்ற கைப் பொம்மைகளாக இருந்தன. நான் ஏற்கெனவே கூறியுள்ளபடி 19-வது நூற்றாண்டு ஐரோப்பாவின் நூற்றாண்டாகும். ஐரோப்பாவின் ஒளிதான் எங்கும்

வீசிக்கொண்டிருந்தது. ஐரோப்பாதான் உலக அரங்கின் நடுநாயக மணியாக விளங்கியது. கடந்துபோன காலத்தில் ஆசியாவின் ஆதிக்கம் ஐரோப்பாவின் மீது படர்ந்திருந்த நீண்ட காலப் பகுதிகளை நாம் கண்டோம். நாகரிகத்துக்கும் முன்னேற்றத்துக்கும் மூலஸ்தானங்களாக எகிப்தோ, இராக்கோ, இந்தியாவோ, சீனாவோ, கிரீசோ, ரோமாபுரியோ, அரேபியாவோ, விளங்கிய காலங்களும் இருந்தன. ஆனால், அந்தக் காலம் இப்போது மலையேறி விட்டது. பழைய நாகரிகங்களெல்லாம் வலியிழந்து உணர்ச்சியற்று மரத்துப் போய்விட்டன. மாறுதலும் முன்னேறுதலுமே ஒரு நாகரிகத்தின் உயிரும், பிராணனும் ஆகும். அந்த உயிரும் பிராணனும் பழைய நாகரிகங்களை விட்டு நீங்கி விட்டன. அவ்வுயிர் வேறு இடங்களுக்குச் சென்று விட்டது. இப்போது ஐரோப்பாவின் முறை. மேலும், போக்கு வரவு சாதனங்களில் ஏற்பட்ட முன்னேற்றத்தால் ஐரோப்பாவின் ஆதிக்கம் இன்னும் அதிகமாயிற்று. ஏனெனில், உலகில் எல்லாப் பாகங்களுக்கும் போக்கு வரவு எளிதாகவும் விரைவாகவும் மாறி விட்டதல்லவா?

பத்தொன்பதாவது நூற்றாண்டில் ஐரோப்பிய நாகரிகம் மடலவிழ்ந்து மணங்கமழ்ந்தது. அது, பூர்ஷுவா நாகரிகம் என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில், தொழில் முதலாளித்துவத்தினின்றும் தோன்றிய பூர்ஷுவா வகுப்புத்தான் அந் நாகரிகத்தின் மீது ஆட்சி புரிந்தது. அந் நாகரிகத்தின் முரண்பாடுகளைப் பற்றியும் தீமைகளைப் பற்றியும் நான் உனக்குக் கூறியுள்ளேன். இந்தியாவிலுள்ள நாமும், கீழ்நாடுகளில் உள்ள மற்றவர்களும் அந்நாகரிகத்தின் தீய அம்சங்களைத்தான் கண்டோம். அவற்றால் நாம் அல்லலும் பட்டோம். ஆனால், ஒரு தேசமோ அல்லது ஒரு ஜனமோ

பெருமையில் உயர்கிறதென்றால் பெருமைக்குரிய அம்சம் அதனிடம் இருந்தாலொழிய அது சாத்தியமாகாது. மேல் ஐரோப்பாவினிடத்து அத்தகைய அம்சம் இருந்தது. ஐரோப்பாவின் கௌரவம் அதன் ராணுவ பலத்தைவிட அதன் உயர் குணங்களின் மீது தான் அதிகமாக நிலை பெற்றிருந்தது. அளவற்ற ஜீவவேகமும் சிருஷ்டித் திறனும் எங்கும் பொங்கி வழிந்துகொண்டிருந்தன. மகா கவிகளும், பேராசிரியர்களும், தத்துவ சாஸ்திரிகளும், விஞ்ஞானப் பண்டிதர்களும், இசைவாணர்களும் கலைவாணர்களும், எஞ்சினியர்களும், கர்மவீரர்களும் ஐரோப்பிய மண்ணில் உதித்தார்கள். மேல் ஐரோப்பாவில் வாழ்ந்து வந்த சாமானிய ஜனங்களின் நிலையும் முன்னைவிடப் பன்மடங்கு உயர்வுற்றதென்பதில் ஐயமில்லை. லண்டன், பாரிஸ், பர்லின், நியூயார்க் போன்ற பெரிய பெரிய தலைநகரங்கள் மேலும் மேலும் பெருகிக் கொண்டே சென்றன. அந்நகரங்களின் மாட மாளிகைகள் 'வன்கொண்டல் விட்டு மதிமுட்டுவன' போன்று மேலும் மேலும் விண்ணில் உயர்ந்து கொண்டே சென்றன. ஆடம்பர போகங்கள் அளவில்லாது பெருகின. விஞ்ஞானம் வந்து மனிதன் வேலை செய்ய வேண்டிய அவசியத்தையும், அவனுடைய உழைப்பின் சிரமத்தையும் வெகுவாகக் குறைத்து விட்டது. அது அவனுடைய சுகபோகங்களை வளர்ப்பதற்கும் ஆயிரம் வழிகளைக் காண்பித்தது. செல்வம் படைத்த வகுப்பினரின் வாழ்வானது கலையும் பண்பும், கனிவும் நிறைவும், உவப்பும் நெய்ப்பும் பெற்றுப் பொலிந்தது. அதைக் காணும்போது ஒரு நாகரிகத்தின் இன்பமயமான அழகிய மாலைக் காலம் நமக்கு நினைவு வருகிறது.

ஆக, 19-வது நூற்றாண்டின் பிற்பாதியில், ஐரோப்பாவின் தோற்றம் அழகும் ஆக்கமும் இனிமையும் பெற்றுத், திகழ்ந்தது. மேற் பார்வைக்கு மட்டிலுமாவது, அதன் கனிந்த கலைப் பண்பும் முதிர்ந்த நாகரிகமும் நிலைத்து நின்று வெற்றி பெறும் என்றே தோன்றியது. ஆனால், சற்று உட்புகுந்து பார்ப்போமாயின், விசித்திரமான ஒரு குழப்பத்தையும் விகாரமான பல காட்சிகளையும் காண்போம். ஏனெனில் இவ் வாக்கமும் பண்பும் ஐரோப்பாவின் மேன்மக்களுக்கே பெரும்பாலும் உரியவையாக இருந்தன. மேலும், பல தேசங்களையும் பல ஜனங்களையும் சுரண்டிப் பிழைக்கும் தத்துவத்தை அவை அடிப்படையாகக்கொண்டிருந்தன. நான் குறிப்பிட்டுள்ள சில முரண்பாடுகளையும், தேசியத் துவேஷங்களையும், சாம்ராஜ்ய வாதத்தின் கோர சொரூபத்தையும் நீ தெளிவாகக் காணலாம். அவ்வாறு காணும்போது, இத்தகைய பத்தொன்பதாவது நூற்றாண்டு நாகரிகம் நிலைத்திருக்குமா, உண்மையில் இது இனிமையானதா என்கிற ஐயங்கள் உன் மனத்தில் தவறாமல் எழும். பூர்ஷுவா நாகரிகத்தின் வெளி உடல் என்னவோ தளதள வென்றுதான் ஒளிர்ந்து கொண்டிருந்தது; ஆனால், அதன் இருதயமோ புரையேறி இருந்தது. அதை நலனுறச் செய்வதற்காக ஓயாமல் பேச்சு நடந்து வந்தது. ஆனால், நோய்ப் புழு அதன் உயிர் நிலையை அரித்து வந்தது.

1914-ல் அது 'தடால்' என்ற ஓசையுடன் முறிந்து விழுந்தது. நாலேகால் வருஷ யுத்தத்துக்குப் பின் ஐரோப்பா மீண்டும் எழுந்து நின்றது. ஆனால், அது படுகாயம் அடைந்து விட்டது. அப்போது ஏற்பட்ட காயங்கள் இன்னும் ஆறவில்லை. அதைப்பற்றிப் பின்பு கூறுகிறேன்.

109

இந்தியாவில் யுத்தங்களும் கலகமும்

நவம்பர் 27, 1932.

பத்தொன்பதாவது நூற்றாண்டைப் பொதுவாக நன்கு ஆராய்ந்தோம். இப்போது, உலகின் சில பாகங்களை இன்னும் சற்றுக் கூர்மையாக நோக்குவோம். முதலில் இந்தியாவை எடுத்துக் கொள்வோம்.

இந்தியாவில் தங்களுக்குப் போட்டியாக இருந்தவர்கள் மீது ஆங்கிலேயர் எவ்வாறு வெற்றி பெற்றார்கள் என்று முன்பு கூறினேன். நெப்போலிய யுத்தங்களின் போது இந்தியாவிலிருந்த பிரெஞ்சுக்காரர்களை மீண்டும் தலையெடுக்க ஒட்டாதபடி ஆங்கிலேயர் ஒழித்து விட்டார்கள். மராட்டியரும், மைசூரை ஆண்ட திப்புசுல்தானும், பஞ்சாபை ஆண்ட சீக்கியரும் ஆங்கிலேயரைச் சிறிது காலம் தடுத்து நின்றார்கள். ஆனால், அவர்களால் அதிகக் காலம் எதிர்த்து நிற்க முடியவில்லை. ஆங்கிலேயர் ஆயுத பலத்திலும் ஸ்தாபன பலத்திலும் மற்றெல்லோரையும் விஞ்சி நின்றார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. எல்லாவற்றையும்விட அவர்களுடைய கடலாதிக்கமானது அவர்களை ஆபத்துக் காலத்தில் தாங்கி நின்றது. அவர்கள் அடிக்கடி தோல்வியுற்றார்கள். ஆயினும், அவர்கள் அழிந்து விடவில்லை. கடல் மார்க்கங்கள் அவர்களுடைய கையில் இருந்தபடியால் அவற்றின் மூலமாக அவர்கள் ஆதரவு பெற முடிந்தது. ஆனால், இந்தியாவிலேயே இருந்த ராஜ்யங்களுக்குத் தோல்வி என்பது பெரும்பாலும் தவிர்க்க முடியாத அழிவாகவே முடிந்தது. ஆங்கிலேயர் ஸ்தாபன

பலத்திலும் ஆயுத பலத்திலும் சிறந்திருந்தது மட்டுமின்றிப் புத்தி பலத்திலும் தங்களுடைய எதிரிகளை விடச் சிறந்து விளங்கினார்கள். அவர்கள் தங்களுடைய பகைவரின் பரஸ்பர விரோதத்தைப் பரிபூரணமாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். பிரிட்டிஷ் ஆதிக்கம் பரவிக் கொண்டே சென்றது. அவர்கள் தங்களுடைய பகைவர்களை ஒருவர்பின் ஒருவராக வீழ்த்தி வந்தார்கள். ஒருவருடைய வீழ்ச்சிக்குப் பிறருடைய உதவியை அவர்கள் பயன்படுத்திக் கொண்டார்கள். ஆனால், அந்தப் பிறருடைய முறை அடுத்தபடியாக வந்து கொண்டே இருந்தது. அக்காலத்தில் இந்தியாவில் இருந்த நிலமானியத் தலைவர்கள் எவ்வளவு குறுகிய திருஷ்டி உடையவர்களாக இருந்தார்கள் என்பதை நினைக்கும்போது நமக்கு ஆச்சரியம் உண்டாகிறது. விரோதியாகிய அந்நியனைத் தாங்கள் அனைவரும் சேர்ந்து எதிர்க்க வேண்டும் என்கிற எண்ணமே அவர்களுக்கு உண்டாகவில்லை. அவர்கள் தனித்தனியாகப் போரிட்டுத் தோற்றார்கள். அவர்கள் தோற்காமல் வேறு என்ன செய்ய முடியும்?

பிரிட்டிஷாரின் ஆதிக்கம் வலுக்க வலுக்க அவர்களுடைய ஆக்கிரமிப்பும் கொடுமையும் அதிகரித்தன. அவர்கள் காரணத்துடனும் காரணமின்றியும் பிறருடன் போர் தொடுத்தார்கள். அத்தகைய போர்கள் பல நிகழ்ந்தன. அவைபற்றியெல்லாம் விரிவாகச் சொல்லி உனக்குத் தலைவலி உண்டாக்க நான் விரும்பவில்லை. யுத்தங்களே அவ்வளவு உவப்பான விஷயங்கள் அல்ல. சரித்திரத்தில், தகுதிக்கு மீறிய முக்கியத்துவம் அவற்றிற்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அவற்றைப் பற்றிச் சிறிதாவது கூறுவிட்டால் நமது சித்திரம் பூர்த்தியாகாது.

மைசூரை ஆண்ட ஹைதர் அலிக்கும் பிரிட்டிஷாருக்கும் நடந்த இரு யுத்தங்களைப் பற்றி ஏற்கெனவே கூறியுள்ளேன். ஹைதர் அலி அவற்றில் பெரும்பான்மை வெற்றியே அடைந்தான். அவனுடைய மகனான திப்பு சுல்தானும் பிரிட்டிஷாருக்குத் தீராப் பகையாக வந்து வாய்த்தான். அவனை விரட்டுவதற்குப் பிரிட்டிஷார் மேலும் இரு யுத்தங்கள் (1790-92, 1799) புரியவேண்டியதாயிற்று. திப்பு போரிட்டுக்கொண்டே மடிந்தான். மைசூர் நகருக்கு அருகில் அவனுடைய பழைய ராஜதானியாகிய ஸ்ரீரங்கப் பட்டணத்தின் அழிவுகளை இன்றும் காணலாம். அங்குதான் அவன் அடக்கம் செய்யப்பட்டிருக்கிறான்.

இப்பொழுது பிரிட்டிஷ் ஆதிக்கத்தை எதிர்த்து நின்றவர்கள் மராட்டியர் ஒருவர்தான். மேற்கே ஆட்சி புரிந்த பேஷ்வாவும், குவாலியரை ஆண்ட சிந்தியாவும், இந்தூரை ஆண்ட ஹோல்காரும் வேறு சில சிற்றரசர்களும் மராட்டியர் ஆதிக்கத்தின் சின்னங்களாக இருந்தார்கள். ஆனால், இரு பெரிய ராஜதந்திரிகளின் மரணத்துக்குப் பின்பு மராட்டிய ஆதிக்கம் சிதறுண்டது. ஒருவர் குவாலியரின் அதிபதியான மஹாதாஜி சிந்தியா. அவர் 1794-ல் இறந்தார். இன்னொருவர் பேஷ்வாவின் மந்திரியாகிய நானாபர்னவிஸ். அவர் 1800-ல் இறந்தார். ஆயினும், மராட்டியரின் எதிர்ப்பாற்றல் குன்றவில்லை. அவர்கள் 1819-ம் ஆண்டில் முடிவாக வீழ்ச்சி உற்றனர். பிரிட்டிஷாரை நையப் புடைத்த பின்னரே அவர்கள் வீழ்ந்தனர். மராட்டியச் சிற்றரசர்கள் தனித்தனியாக வீழ்த்தப்பட்டார்கள். ஒவ்வொருவனும் பிறனுக்கு உதவிசெய்யாமல் அவன் வீழ்வதைக் கையைக் கட்டிக்கொண்டு பார்த்திருந்தான். சிந்தியாவும் ஹோல்காரும் பிரிட்டி

ஷாரின் நாயகத்தை ஒப்புக்கொண்டு அவர்களுக்கு அடங்கிய சிற்றரசர்கள் ஆய்விட்டனர். பரோடா கெய்க்வார் இதற்கு முன்பே பிரிட்டிஷாருடன் அத்தகைய ஏற்பாடு ஒன்றைச் செய்துகொண்டு விட்டார்.

மராட்டியரிடமிருந்து விடைபெற்றுக் கொள்ளுமுன் மத்திய இந்தியாவில் பிரசித்தி பெற்று விளங்கிய ஒருவரைப்பற்றி உனக்குக் கூறவேண்டும். அவருடைய பெயர் அகல்யா பாய் என்பது. அவ்வம்மையார் முப்பதாண்டுகள் (1765-1795) இந்தூரைப் பரிபாலனம் செய்தார். அவர் இளமையிலேயே கைம்மையை எய்தினார். அந்த நிலையில் அவர் சிம்மாசனம் ஏற வேண்டியதாயிற்று. அப்போது அவருக்கு வயது முப்பதுதான். அவர் திறம்பட அரசு புரிந்தார். அவர் கோஷா வழக்கத்தை அனுஷ்டிக்கவில்லை என்று சொல்ல வேண்டியதில்லை. மராட்டியரிடம் அவ்வழக்கம் எப்போதும் இருந்ததில்லை. அவர் தர்பாரில் அமர்ந்து தாமே ராஜ்ய காரியங்களைக் கவனித்தார். அவருடைய முயற்சியினால் சிறிய கிராமமாயிருந்த இந்தூர் செல்வம் கொழிக்கும் நகரமாயிற்று. அவர் போர்களைத் தவிர்த்து அமைதியை ஓம்பினார். இந்தியாவின் பெரும் பகுதி குழப்பத்தில் அகப்பட்டுக்கொண்டு தத்தளித்த காலையில் அவருடைய ராஜ்யம் செழிப்பு மிகுந்து விளங்கியது. ஆகவே, அவ்வம்மையார் இன்றும் மத்திய இந்தியாவில் ஒரு தபஸ்வினியாகக் கருதிப் போற்றப்படுவதில் யாதொரு ஆச்சரியமும் இல்லையல்லவா?

கடைசி மராட்டிய யுத்தத்துக்குச் சிறிது முன்பு பிரிட்டிஷார் நேபாளத்துடன் 1814-ம் ஆண்டிலிருந்து 1816-வரை ஒரு போர் நடத்தினார்கள். நேபாளத்து மலைப் பிரதேசங்களில் அவர்கள் பெருந் தொல்லைகளுக்கு ஆளானார்கள். ஆனால், முடிவில் வெற்றி பெற்றார்கள்,

அதன் பயனாக, டேராடூன் ஜில்லாவும் (டேராடூன் சிறையிலிருந்துதான் இப்போது நான் உனக்குக் கடிதம் எழுதிக்கொண் டிருக்கிறேன்), குமான், நைனிடால் ஆகிய இடங்களும் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் வந்தன. சீனாவைப் பற்றிய கடிதம் ஒன்றில், ஒரு சீனச் சைனியம் திபெத்தைக் கடந்து, இமயமலையைத் தாண்டி வந்து கூர்க்கர்களை அவர்களுடைய தாய் நாடாகிய நேபாளத்திலேயே முறியடித்த வீர வரலாற்றைக் கூறியிருக்கிறேன். அது உனக்கு நினைவிருக்கலாம். பிரிட்டிஷ்-நேபாள யுத்தத்துக்கு இருபத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்புதான் அது நிகழ்ந்தது. அந்நாளிலிருந்து நேபாளம் சீனாவின் ஆதிபத்தியத்தைப் பெயரளவில் ஒப்புக்கொண்டு இருந்து வந்தது. ஆனால், இப்போது அது அவ்வாறு செய்வதில்லை என்று நினைக்கிறேன். அது ஒரு விசித்திரமான தேசம்; மிகவும் பிற்போக்கானது. அதற்கும் வெளி உலகத்துக்கும் சம்பந்தமே கிடையாது. ஆயினும், நான் கேள்விப்பட்ட வரையில், அது மிகவும் மனோரம்மியமான இடத்தில் அமைந்திருக்கிறது. அது இயற்கைச் செல்வம் நிறைந்த ஒரு நாடு. காஷ்மீரத்தைப் போலவோ, ஹைதராபாதைப் போலவோ, அது பிரிட்டிஷ் ஆட்சிக்கு அடங்கிய சமஸ்தானம் அல்ல. அது சுதந்திர நாடு என்று சொல்லப்படுகிறது. ஆனால், அந்தச் சுதந்திரம் அளவு மீறிப் போகாமல் பிரிட்டிஷார் பார்த்துக் கொள்ளுகிறார்கள். வீரர்களான நேபாளத்துக் கூர்க்கர்கள் இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் சைனியத்தில் சேர்க்கப்பட்டு இந்தியரை அடக்குவதற்கு உபயோகப் படுத்தப்படுகிறார்கள்.

கிழக்கே, பர்மாவானது அஸ்ஸாம் வரையில் பரவியிருந்தது. ஆகவே, பர்மாவுக்கும் இடைவிடாது முன்னேறிவரும் பிரிட்டிஷாருக்கும் யுத்தம் நேர்வது தவிர்க்க முடியாததாகிவிட்டது. பர்மாவுடன் மூன்று யுத்தங்கள் நிகழ்ந்தன. ஒவ்வொரு யுத்தத்தின் முடிவிலும் பிரிட்டிஷார் சில பிரதேசங்களைத் தங்களுடைய சாம்ராஜ்யத்தில் சேர்த்துக்கொண்டு வந்தார்கள். 1824-26-ல் நடந்த முதல் யுத்தத்தின் பயனாக அஸ்ஸாம் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ்வந்தது. 1852-ல் நடந்த இரண்டாவது யுத்தத்தின் பயனாகத் தென்பர்மா பிரிட்டிஷ் ராஜ்யத்துடன் சேர்த்துக்கொள்ளப்பட்டது. அதற்குப் பிறகு, மாண்டலேக்கு அருகிலுள்ள ஆவாவைத் தலைநகராகக் கொண்ட வடபர்மா சமுத்திரத்தின் தொடர்பும் வெளி உலகத்தின் தொடர்பும் அற்றதாகவும் பிரிட்டிஷாரின் தயவை எதிர்பார்ப்பதாகவும் ஆய்விட்டது. அதற்கும் 1885-ல் முடிவு ஏற்பட்டுவிட்டது. அப்போது நடந்த மூன்றாவது பர்மா யுத்தத்தின் பயனாகப் பர்மா முழுதும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தோடு இணைக்கப்பட்டுவிட்டது. ஆனால், பெயரளவில் பர்மா சீனாவுக்கு அடங்கிய நாடாக இருந்தது. அது சீனாவுக்கு ஒழுங்காகத் திறை இறுத்தும் வந்தது. பிரிட்டிஷார் பர்மாவைச் சேர்த்துக்கொண்ட காலையில் சீனாவுக்குத் திறை செலுத்த ஒப்புக்கொண்டது நமக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. 1885-ல் கூடச் சீனாவின் வல்லமையைப் பிரிட்டிஷார் நன்கு மதித்திருந்தார்கள் என்பதையே அது காட்டுகிறது. இத்தனைக்கும் சீனா அப்போது உள்நாட்டுத் தொல்லைகளில் அகப்பட்டுக்கொண்டு தனக்குக் கீழ்ப்பட்ட நாடான பர்மாவுக்கு ஆபத்துக்காலத்தில் உதவிசெய்ய முடியாத நிலையில் இருந்தது. 1885-க்குப் பிறகு ஒருமுறை பிரிட்டிஷார் சீனாவுக்குக் கப்பம் செலுத்தினார்கள். பிறகு அதை நிறுத்திவிட்டார்கள்.

பர்மா யுத்தங்கள் நம்மை 1885-ம் ஆண்டுக்குக் கொண்டு சென்று விட்டன. அவை மூன்றையும் சேர்த்

துச் சொல்லி விடலாம் என்று நினைத்தேன். இப்போது நாம் அதற்கு முற்பட்ட காலத்துக்குத் திரும்பிச் சென்று வட இந்தியாவைப் பார்க்க வேண்டும். பஞ்சாபில் ரஞ்சித் சிங்கின் கீழ் ஒரு பெரிய சீக்கிய ராஜ்யம் தோன்றியது. 19-வது நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே அமிருதசரஸ் ரஞ்சித் சிங்கின் கைக்கு வந்து விட்டது. 1820-க்குள் அவன் பஞ்சாப் முழுமைக்கும் காஷ்மீரத்துக்கும் அதிபதி ஆகிவிட்டான். 1839-ல் அவன் காலமான பிறகு சீக்கிய ராஜ்யம் வலிகுன்றிச் சிதறத் தொடங்கியது. 'மனிதன் சுருக்கத்தில் உயர்ந்து பெருக்கத்தில் தாழ்கிறான்' என்னும் பழமொழிக்குச் சீக்கியர் ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறார்கள். சீக்கியர் வேட்டையாடப்பட்ட ஒரு சிறு கூட்டத்தாராக இருந்த காலத்தில், பிற்கால மொகலாயச் சக்கரவர்த்திகளால் கூட அவர்களை அடக்க முடியவில்லை. அப்பேர்ப்பட்டவர்களுக்கு அரசியலில் வெற்றி கிடைத்தவுடன் அந்த வெற்றியின் அஸ்திவாரமே பலவீனம் அடைந்து விட்டது. 1845–46-லும் 1848-49-லும் இரண்டு யுத்தங்கள் பிரிட்டிஷாருக்கும் சீக்கியருக்கும் இடையே நடைபெற்றன. இரண்டாவது யுத்தத்தில், சிலியன்வாலா என்னுமிடத்தில் பிரிட்டிஷார் படு தோல்வி அடைந்தார்கள். ஆயினும், அவர்கள் முடிவில் வெற்றி பெற்றுப் பஞ்சாபைச் சேர்த்துக் கொண்டார்கள். நீ காஷ்மீரத்தைச் சேர்ந்தவள் ஆனபடியால் நான் கூறப் போகும் விஷயம் உனக்கு ரசமாயிருக்கும். ஜம்முவைச் சேர்ந்த ஒரு ராஜா குலாப் சிங் என்பவனுக்குப் பிரிட்டிஷார் காஷ்மீரத்தை 75-லட்ச ரூபாய்க்கு விற்று விட்டார்கள். இந்தப் பேரத்தில் லாபக்காரன் குலாப் சிங் தான் என்பதைச் சொல்லவும் வேண்டுமா? ஏழைக் காஷ்மீர மக்களுக்கும் இந்தப் பேரத்துக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. காஷ்மீரம் இப்போது பிரிட்டிஷாருக்குக் கீழ்ப்பட்ட இந்திய சுதேச சமஸ்தானங்களுள் ஒன்றாக இருக்கிறது. இப்போதுள்ள காஷ்மீர மகாராஜா குலாப் சிங்கின் கால்வழியில் வந்தவர் ஆவர்.

பஞ்சாபுக்கு இன்னும் வடக்கில் அல்லது வடமேற்கில் ஆப்கானிஸ்தானம் இருந்தது. ஆப்கானிஸ்தானத்துக்கு அருகில், அந்தப் புறமாக ருஷியாவின் எல்லைப் புறம் இருந்தது. மத்திய ஆசியாவில் ருஷிய சாம்ராஜ்யம் பரவி வந்ததானது பிரிட்டிஷாரின் மன அமைதியைக் குலைத்து விட்டது. ருஷியா இந்தியாவைத் தாக்கலாம் என்கிற அச்சம் அவர்களைப் பற்றிக்கொண்டது. 19-வது நூற்றாண்டு முழுதும் ருஷிய அபாயத்தைப் பற்றியே பேச்சாக இருந்தது. 1839-ம் ஆண்டிலேயே இந்தியாவிலிருந்த பிரிட்டிஷார் ஆப்கானிஸ்தானத்தின் மீது காபூலில் போருக்குச் சென்றார்கள். அந்தச் சமயத்தில் ஆப்கானிஸ்தானத்தின் எல்லை பிரிட்டிஷ் இந்தியாவின் எல்லைக்கு வெகு தூரத்தில் இருந்தது. இரண்டிற்கும் இடையில் சுதந்திரச் சீக்கிய ராஜ்யமான பஞ்சாப் இருந்தது. ஆயினும், பிரிட்டிஷார் சீக்கியரைச் சிநேகம் செய்துகொண்டு காபூலை நோக்கிப் படையெடுத்துச் சென்றார்கள். ஆனால், ஆப்கானியர் அவர்களைப் பழி வாங்கிய விதம் அவர்களுக்கு எப்போதும் ஞாபகம் இருக்கக் கூடியதாக இருந்தது. ஆப்கானியர் பல அம்சங்களில் பிற்போக்கு வாய்ந்தவர்களாக இருக்கலாம். ஆயினும், அவர்கள் சுதந்திரப் பிரியர்கள். தங்களுடைய சுதந்திரத்தைக் காத்துக் கொள்வதற்காக அவர்கள் கடைசி வரையில் போராடுவார்கள். ஆகவே, ஆப்கானிஸ்தானம் தன்னைத் தாக்க வரும் அந்நியப் படைகளுக்கெல்லாம் எப்போதுமே ஒரு 'குளவிக்கூடு' ஆக இருந்து வருகிறது. பிரிட்டிஷார் காபூலையும் வேறு பல இடங்

களையும் கைப்பற்றிக் கொண்டார்கள். ஆனால், திடீரென்று எங்கும் கலகங்கள் தோன்றின. பிரிட்டிஷார் நாட்டை விட்டு ஓட்டப்பட்டார்கள். ஒரு பிரிட்டிஷ் சைனியம் முழுதும் அழிந்தொழிந்தது. இதற்குப் பழி வாங்குவதற்காக இன்னொரு முறை பிரிட்டிஷார் ஆப்கானிஸ்தானத்தின் மீது படையெடுத்துச் சென்றார்கள். அவர்கள் காபூலைக் கைப்பற்றிக்கொண்டு அந்நகரின் பெரிய மூடுகடை வீதியைத் தகர்த்தெறிந்தார்கள். பிரிட்டிஷ் படைவீரர் நகரின் பல பாகங்களைச் சூறையாடியும், தீயிட்டும் அழித்தார்கள். ஆனால், இடைவிடாது போரிட்டுக் கொண்டே இருந்தாலன்றி ஆப்கானிஸ்தானத்தைக் கட்டி ஆள்வது கடினம் என்பதைப் பிரிட்டிஷார் உணர்ந்து அங்கிருந்து மீண்டு விட்டார்கள்.

இதற்கு நாற்பதாண்டுகளுக்குப் பிறகு, 1878-ல், ஆப்கானிஸ்தானத்தின் அரசனான அமீர் ருஷியாவுடன் நட்புப் பூண்டிருக்கிறான் என்பதைக் கேள்வியுற்று, மீண்டும் பிரிட்டிஷார் கலகலத்துப் போய்விட்டார்கள். பழைய சரித்திரமே பெரும்பாலும் திரும்ப நிகழ்ந்தது. இன்னொரு யுத்தம் மூண்டது. பிரிட்டிஷார் ஆப்கானிஸ்தானத்தின்மீது படையெடுத்துச் சென்றார்கள். அவர்கள் அநேகமாக ஜெயித்துவிட்டார்கள் என்றே தோன்றியது. அந்தச் சமயத்தில் ஆப்கானியர் பிரிட்டிஷ் தூதரையும் அவருடைய கோஷ்டியையும் கொன்று பிரிட்டிஷ் சைனியத்தையும் விரட்டி அடித்தார்கள். பிரிட்டிஷார் அதற்குப் பிரதியாகச் சில நடவடிக்கைகள் எடுத்தபின்பு மீண்டும் அக் ‘குளவிக் கூட்டி’லிருந்து திரும்பி வந்துவிட்டார்கள். அதற்குப்பின் பல வருஷங்கள் வரையில் ஆப்கானிஸ்தானத்தின் நிலை ஒரு தனிமாதிரியாக இருந்து வந்தது. ஆப்கானிஸ்தானத்து அமீர் மற்ற வெளி நாடு

களுடன் நேர்முகமான தொடர்பு வைத்துக் கொள்வதற்குப் பிரிட்டிஷார் அனுமதிக்கவில்லை. அதே சமயத்தில் அவர்கள் அமீருக்குப் பெருந் தொகையை வருஷாசலமாக அளித்து வந்தார்கள். பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன்னால், 1919-ல், மூன்றாவது ஆப்கானிய யுத்தம் நடந்தது. அதன் பயனாக ஆப்கானிஸ்தானம் பூரண சுதந்திரம் பெற்றது. ஆனால், இந்த விஷயம் நாம் சர்ச்சைக்கு எடுத்துக்கொண்டிருக்கிற காலத்துக்கு அப்பாற்பட்டதாகும்.

மேற்கூறியவை அன்றி வேறு பல சிறு யுத்தங்களையும் பிரிட்டிஷார் நடத்தினார்கள். இத்தகைய யுத்தங்களில் சிந்து யுத்தம் ஒன்றாகும். 1843-ல் அவர்கள் சிந்துவின் மீது மானங்கெட்ட முறையில் வலியப் போரைத் திணித்தார்கள். அங்கிருந்த பிரிட்டிஷ் ஏஜெண்டு சும்மா இருந்த சிந்து மக்களை வேண்டுமென்றே கோபமூட்டி வலுச்சண்டைக்கு இழுத்தான். பின்னர், போரில் அவர்களை நசுக்கி அவர்களுடைய மாகாணத்தை ராஜ்யத்தோடு ராஜ்யமாகச் சேர்த்துக் கொண்டான். இந்தக் காரியத்துக்காகச் சிந்துவில் அப்போது பிரிட்டிஷ் ஏஜெண்டாக இருந்த சர் சார்லஸ் நேபியருக்கும் மற்றப் பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கும் சன்மானம் வழங்கப்பட்டது. ஏஜெண்டின் பங்குக்கு மட்டும் ஏழுலட்ச ரூபாய் கிடைத்தது! பழிபாவத்துக் கஞ்சாத, எதற்கும் துணிந்த ஆங்கிலேயரை அக்கால இந்தியா ஆகர்ஷித்ததில் வியப்பு ஒன்றும் இல்லையல்லவா?

1856-ல் அயோத்தி ராஜ்யமும் பிரிட்டிஷாரால் சேர்த்துக் கொள்ளப்பட்டது. அதன் பரிபாலனம் அப்போது மிகவும் சீர்கேடடைந்திருந்தது. அதைச் சில காலமாக நவாப் வஜீர்கள் என்போர் ஆண்டு வந்தனர். டில்லி

யிலிருந்த மொகலாயச் சக்கரவர்த்தியால் அயோத்தி ராஜ்யத்துக்குக் கவர்னர்களாக ஆதியில் நியமிக்கப்பட்டவர்கள் நவாப் வஜீர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். மொகலாய சாம்ராஜ்யம் க்ஷீணிக்கத் தொடங்கியதும் அயோத்தி சுதந்திர ராஜ்யமாக மாறியது. கவர்னர்களாயிருந்த நவாப் வஜீர்கள் அரசர்கள் ஆனார்கள். அயோத்தியின் சுதந்திரம் நெடுநாளைக்கு நீடிக்கவில்லை. பிற்காலத்து நவாப் வஜீர்கள் பெரிதும் குணம் கெட்டவர்களாகவும் சிறிதும் திறமை யற்றவர்களாகவும் இருந்தார்கள். அவர்கள் ஏதாவது நல்லது செய்ய விரும்பியிருந்தாலும் செய்திருக்க முடியாது. அவ்வளவு தூரம் கிழக்கிந்தியக் கம்பெனி அவர்களுடைய காரியங்களில் தலையிட்டு வந்தது. அவர்களுக்கு உண்மையான அதிகாரம் ஒன்றும் இல்லை. அயோத்தியின் உள்நாட்டுப் பரிபாலனம் எக்கேடாவது கெட்டுப் போகட்டும் என்று பிரிட்டிஷார் விட்டு விட்டார்கள். ஆகவே, அயோத்தி ராஜ்யம் சிதறுண்டு பிரிட்டிஷ் ராஜ்யத்தின் ஒரு பாகம் ஆகிவிட்டது.

நான் யுத்தங்களைப்பற்றியும் ராஜ்யங்களைச் சேர்த்துக்கொள்வதைப் பற்றியும் போதிய அளவுக்கு அதிகமாகவே பேசிவிட்டேன் என்று நினைக்கிறேன். ஆனால், இவையெல்லாம் புதிதாக உருவாகிவந்த ஒரு பெரிய மாறுபாட்டின் புறச்சுட்டுகளே ஒழிய வேறில்லை. அம்மாறுபாடு தவிர்க்க முடியாதது. பிரிட்டிஷார் இந்தியாவுக்கு வந்த சமயத்திலேயே இந்தியாவின் பழைய பொருளியல் ஏற்பாடு சீர்குலைந்து வந்தது. நிலமானிய முறை வீறி வெடித்துக்கொண்டிருந்தது. அந்நியர் இந்தியாவுக்கு வந்திரா விட்டாலும் அது நெடுநாள் உயிர் வாழ்ந்திருக்க முடியாது. ஐரோப்பாவில் நிகழ்ந்தது போலவே இந்தியாவிலும் பழைய பொருளியல்

ஏற்பாடு (நிலமானிய முறை) மாறிப் புதிய ஏற்பாடு தோன்றியிருக்கும். புதிய ஏற்பாட்டின் கீழ் உற்பத்தி சாதனங்களை யுடைய வகுப்பாருக்கு அதிகமான அதிகாரம் கிடைத்திருக்கும். ஆனால், பிரிட்டிஷார் இந்தியாவுக்கு வந்தபோது நிலைமை எப்படியிருந்ததென்றால், பழைய ஏற்பாட்டில் பிளவுமட்டும் தோன்றியிருந்ததே ஒழியப் புதிய ஏற்பாடு இன்னும் உருவாகவில்லை. அவ்வாறு ஏற்பட்ட பிளவில் அவர்கள் அதிக சிரமமின்றிப் புகுந்து குச்சடித்துக் கொண்டு உட்கார்ந்து விட்டார்கள். இந்தியாவில் அவர்களோடு போரிட்டுத் தோல்வி அடைந்த அரசர்கள் மறைந்துவரும் ஒரு கடந்துபோன சகாப்தத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தார்கள். அவர்களுக்கு வருங்கால வாழ்வு இல்லை. அத்தகைய நிலைமையில் பிரிட்டிஷார் வெற்றிபெறுவது சரதம். அவர்கள் செய்ததெல்லாம் இந்திய நிலமானிய முறையின் முடிவைத் துரிதப்படுத்தியதுதான். ஆனால், அவர்களே பிற்காலத்தில் அந் நிலமானிய முறைக்கு முட்டுக்கொடுத்து அதை வெளிப்பார்வைக்குத் தாங்கி நின்றதுதான் ஆச்சரியத்துக் குரிய விஷயமாகும். இவ்வாறு, புதிய ஏற்பாட்டை நாடிச்செல்லும் இந்திய முன்னேற்றத்துக்கு அவர்கள் தடை விளைவிக்க முயன்றார்கள்.

ஆக, இந்தியாவில் ஒரு சரித்திர மாறுபாட்டு ஏஜெண்டுகளாகப் பிரிட்டிஷார் விளங்கினார்கள். நிலமானிய இந்தியா நவீனகாலத் தொழில் முதலாளித்துவ நாடாக மாறும் நிகழ்ச்சிக் கிரமத்தையே நான் குறிப்பிடுகிறேன். ஆனால், அவர்கள் இவ்வுண்மையை உணரவில்லை. அவர்களை எதிர்த்துப் போரிட்ட அரசர்களுக்கும் இதைப்பற்றி ஒன்றும் தெரியாது. நாசத்தை எதிர்நோக்கி நிற்கும் எந்த ஏற்பாடும் காலத்தின் அறிகுறி

களைத் தெரிந்துகொள்வதில்லை. 'நாம் வந்த வேலை முடிந்து விட்டது, இனி மரியாதையாக ஒதுங்கிக் கொள்வதுதான் அழகு, இல்லாவிட்டால், சர்வ வல்லமையுள்ள சம்பவங்களின் சக்தி நம்மைக் கழுத்தைப்பிடித்து நெட்டித் தள்ளிவிடும்' என்னும் உண்மையை அது உணர்வதில்லை. சரித்திரம் கூறும் பாடத்தையும் அது கற்றுக்கொள்வதில்லை. "உலகம் இருந்த இடத்திலேயே இருப்பதில்லை. யாரோ சொன்னதுபோல் நம்மைச் 'சரித்திரத்தின் குப்பைத்தொட்டி'யில் தள்ளிவிட்டு அது முன்னேறிக் கொண்டே இருக்கிறது" என்னும் உலகியலும் அதன் மூளையில் ஏறுவதில்லை. இதற்கேற்ப, இந்திய நிலமானிய ஏற்பாடும் மேற்கூறிய உண்மைகளை யெல்லாம் உணராமல் பிரிட்டிஷாரோடு போரிட்டுத் தோற்றது. இதற்கேற்பவே, இன்று இந்தியாவிலும் இதரக் கீழ் நாடுகளிலும் உள்ள பிரிட்டிஷார் "தங்களுடைய காலம் முடிந்துவிட்டது, சாம்ராஜ்யத்தின் காலமும் முடிந்து விட்டது, காலாவதி ஆகிவிட்ட பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைச் 'சரித்திரத்தின் குப்பைத்தொட்டி"யில் தள்ளிவிட்டு உலகம் ஓடிக்கொண்டே இருக்கிறது" என்னும் உண்மையை உணருகிறார்களில்லை.

பிரிட்டிஷார் இந்தியாவில் பரவிவந்த காலையில் இந்தியாவில் பழைமையாக இருந்து வந்த நிலமானிய ஏற்பாடானது இழந்த அதிகாரத்தை மீண்டும் பெறவும் அந்நியரை நாட்டை விட்டு ஓட்டவும் கடைசி முறையாக ஒரு முயற்சி செய்தது. அதுவே 1857-ம் ஆண்டில் தோன்றிய பெருங்கலகமாகும். நாடெங்கும் பிரிட்டிஷாரிடத்துக் கோபமும் அதிருப்தியும் குடிகொண்டிருந்தன. கிழக்கிந்தியக் கம்பெனியின் கொள்கை பொருள் ஈட்டுவதிலே குறியாயிருந்ததே ஒழிய வேறொன்றிலும் அது கவனம் செலுத்தவில்லை. இதுவும்,

கம்பெனி உத்தியோகஸ்தர்களுடைய அறியாமையும் பேராசைக் குணமும் சேர்ந்து மக்களிடையே பெருந் துன்பம் நேர்வதற்குக் காரணமாயிருந்தன. இந்த அதிருப்தி நெருப்புப் பிரிட்டிஷ் இந்தியச் சைன்யத்திலும் பற்றியது. அச்சைன்யத்தில் பல சிறு கலகங்கள் நிகழ்ந்தன. நிலமானியத் தலைவர்களும் அவர்களுடைய சந்ததிகளும் இயற்கையாகவே தங்களுடைய புதிய எஜமானர்களான கம்பெனியை மனமார வெறுத்தார்கள். ஆகவே, இரகசியத்தில் ஒரு பெருங்கலகத்துக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. முக்கியமாக, இவ்வேற்பாடுகள் ஐக்கிய மாகாணத்தைச் சுற்றியும் மத்திய இந்தியாவிலும் ஜரூராக நடந்து வந்தன. இவ்வளவெல்லாம் நடந்தும் இந்தியாவிலிருந்த பிரிட்டிஷார் அதை ஒரு சிறிதும் தெரிந்து கொள்ளவில்லை. இந்தியருடைய செய்கைகளையும் எண்ணங்களையும் பொறுத்த வரையில் அவர்கள் அவ்வளவு குருடர்களாயிருந்தார்கள். பல இடங்களிலும் ஏககாலத்தில் கலகத்தை ஆரம்பிப்பதற்கு ஒரு நாள் குறிப்பிடப்பட் டிருந்தது. ஆனால், மீரட்டிலிருந்த சில துருப்புகள் அவசரப்பட்டு 1857 மே, 10-ம் தேதியில் கலகத்தைத் தொடங்கி விட்டன. ஆய்ந்தோய்ந்து பாராத இவ்வவசரச் செய்கை கலகத் தலைவர்களின் திட்டங்களைக் கீழ் மேலாக்கி விட்டது. அதனால் அரசாங்கம் எச்சரிக்கை அடைந்து விட்டது. ஆயினும், கலகமானது ஐக்கிய மாகாண முழுதிலும், டில்லியிலும், மத்திய இந்தியாவின் ஒரு பகுதியிலும், பீகாரிலும் பரவி விட்டது. அதை வெறும் சிப்பாய்க் கலகம் என்று சொல்லிக் கழித்து விட முடியாது. மேற்கூறிய இடங்களில் பிரிட்டிஷாருக்கு விரோதமாக விளைந்த பொதுஜன எழுச்சி என்றே அதைக் கூற வேண்டும். பெரிய மொகலாயச் சக்கரவர்த்திகளின் பரம்

பரையில் கடைசியாக வந்த பகதூர்ஷா என்பவனைச் சிலர் சக்கரவர்த்தி என்று பிரகடனம் செய்தார்கள். அவன் ஒரு கவி. அப்போது அவன் தள்ளாத கிழவனாயிருந்தான். அக்கலகம், விஷமென வெறுக்கப்பட்ட அந்நியனுக்கு விரோதமான இந்திய சுதந்திர யுத்தமாக மலர்ந்தது. ஆனால், அந்தச் சுதந்திரம் யதேச்சாதிகாரச் சக்கரவர்த்திகளின் தலைமையைக் கொண்ட பழைய நிலமானிய வகையைச் சேர்ந்ததாயிருந்தது. அந்தச் சுதந்திரத்தில் சாமானிய ஜனங்களுக்கு இடமில்லை. ஆனால், ஜனங்கள் பெருவாரியாக அதில் கலந்து கொண்டார்கள். ஏனெனில், அவர்கள் தங்களுடைய வறுமைக்கும் துன்பத்துக்கும் பிரிட்டிஷாரின் வரவுதான் காரணம் என்று நினைத்தார்கள். சில இடங்களில், ஜனங்கள் மீது பெரிய நிலச்சுவான்தார்களுக்கு இருந்த ஆதிக்கம் காரணமாகவும் அவர்கள் கிளர்ச்சியில் இறங்கினார்கள். மத விரோதமும் அவர்களுக்கு ஒரு தூண்டுகோலாயிருந்தது. ஹிந்துக்கள் முஸ்லிம்கள் ஆகிய இரு இனத்தாரும் இந்த யுத்தத்தில் பரிபூரண பங்கு எடுத்துக் கொண்டார்கள்.

பல மாதங்கள் வரையில், வட இந்தியாவிலும் மத்திய இந்தியாவிலும் பிரிட்டிஷ் ஆட்சி ஒரு மயிரிழையில் தொங்கிக்கொண்டிருந்தது. ஆனால், கலகத்தின் தலைவிதியை இந்தியரே நிர்ணயம் செய்துவிட்டார்கள். சீக்கியரும் கூர்க்கரும் பிரிட்டிஷாருக்கு ஆதரவாக நின்றார்கள். தெற்கே நிஜாமும், வடக்கே சிந்தியாவும், வேறு பல சுதேச மன்னர்களும் பிரிட்டிஷாரின் கட்சியில் சேர்ந்து கொண்டார்கள். இவையெல்லாம் ஒருபுறமிருக்க, அக்கிளர்ச்சியிலேயே தோல்வியின் விதைகள் இருந்தன. காலம் கடந்த ஒரு லட்சியத்துக்காக, அதாவது, நிலமானிய ஏற்பாட்டை உயிர்ப்பிப்பதற்காக,

அவர்கள் போரிட்டார்கள். அவர்களுக்குச் சரியான தலைமையும் இல்லை. போராட்டமும் நன்கு வகுத்து நடத்தப்படவில்லை. பரஸ்பர மாற்சரியங்கள் வேறு. சில கலகக்காரர்கள் பிரிட்டிஷாரைப் படுகொலை புரிந்து தங்களுடைய புனிதமான லட்சியத்தைக் கறைப்படுத்தி விட்டார்கள். இக் குரூரச் செய்கை பிரிட்டிஷாருக்குப் பேராத்திர மூட்டியது. அவர்கள் இதை ஒன்று, பத்து, நூறு, ஆயிரமாகத் திருப்பித் தந்தார்கள். கான்பூரில் ஆங்கிலேய ஸ்திரீ புருஷர்களும் குழந்தைகளும் படுகொலை செய்யப்பட்டார்கள். பேஷ்வாவின் சந்ததியில் வந்தவனாகிய நானாசாகிப் என்பவன் அவர்களைக் காப்பாற்றுவதாக வாக்களித்து விட்டுப் பிறகு வஞ்சனையாகக் கொன்றுவிட்டான் என்று பிரிட்டிஷார் சொன்னார்கள். இது அவர்களுடைய கோபாக்கினியைக் கொழுந்து விட்டெரியச் செய்தது. இக் கோர சம்பவத்தைக் குறிக்கும் கிணறு ஒன்று கான்பூரில் இருக்கிறது.

சற்றுப் புறம்பான இடங்களிலெல்லாம் ஜனங்கள் ஆங்கிலேயரைச் சூழ்ந்து கொண்டு விட்டார்கள். சில சமயங்களில், ஜனங்கள் அவர்களை நன்றாக நடத்தினார்கள்; பெரும்பாலும் அவ்வாறு நடத்தவில்லை. தங்களைவிட அதிகப் பலம்படைத்த கலகக்காரரை எதிர்த்து ஆங்கிலேயர் அதிதீரத்துடன் போராடினர். லக்ஷ்மணபுரி (லக்நோ) முற்றுகை பிரிட்டிஷாரின் வீரதீரத்துக்கும் பொறுக்கும் ஆற்றலுக்கும் பெயர்பெற்ற உதாரணமாக விளங்குகிறது. அதை நினைக்கும் போது உட்ராம், ஹாவ்லக் என்னும் பெயர்களும் நமது நினைவுக்கு வருகின்றன. 1857 செப்டம்பரில் நிகழ்ந்த டில்லி முற்றுகையும் அதன் வீழ்ச்சியும் கலகம் தோல்விப் பாதையில் திரும்பி விட்டது என்பதைக் காட்டின. அதி

லிருந்து பல மாதங்கள் வரையில் பிரிட்டிஷார் கலகத்தை அடக்குவதில் ஈடுபட்டிருந்தார்கள். அவர்கள் எங்கும் மகா கோரமான பீதியை விளைத்தார்கள். அவர்கள் பலரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றார்கள்; பலரைப் பீரங்கி வாயில் வைத்துச் சுட்டுக் கிழித்தார்கள்; ஆயிரக்கணக்கான பேரை வழியிலுள்ள மரங்களில் கட்டித் தூக்கிவிட்டார்கள். அலகாபாத்திலிருந்து கான்பூருக்குச் சென்ற இங்கிலீஷ் சேனாதிபதியான நீல் என்பவன் வழி நெடுக ஒரு மரம் தவறாமல் மக்களைத் தொங்கவிட்டுக் கொண்டே போனானாம். செழிப்பான கிராமங்களெல்லாம் நிர்மூலமாக்கப்பட்டன. அந்தக் கதை மகா பயங்கரமானது. அதை நினைக்கும் போதே மனம் வேதனைக்குள்ளாகிறது. அதைப் பற்றிய முழு உண்மையையும் எடுத்துரைப்பதற்கு என் நா கூசுகிறது. நானாசாகிப் குரூரமாகவும் துரோகமாகவும் நடந்து கொண்டான் என்றால் அதை விட நூறுமடங்கு குரூரமாகப் பல பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்கள் நடந்து கொண்டார்கள். முன்னின்று நடத்தும் தலைவர்களோ, ராணுவ உத்தியோகஸ்தர்களோ இல்லாத இந்தியப் படை வீரர்கள் வெறுக்கத்தகுந்த கொடிய செயல்களில் இறங்கினார்கள் என்றால், பிரிட்டிஷ் ராணுவ உத்தியோகஸ்தர்களால் நடத்தப்பட்ட பிரிட்டிஷ் படை வீரர்கள் அதைவிடக் கொடிய காட்டுமிராண்டித் தனத்தில் இறங்கினார்கள். இருதிறத்துக் கொடுமைகளையும் நான் ஒப்பிட்டுப் பார்க்க விரும்பவில்லை. இருதிறத்தாருக்கும் அது பெருமை தரக்கூடியதல்ல. ஆனால், விபரீத முறையில் எழுதப்பட்டுள்ள நமது சரித்திரப் புஸ்தகங்கள் இந்தியரின் துரோகத்தையும் குரூரத்தையும் விரிவாக எடுத்துக் கூறுகின்றனவே ஒழியப் பிரிட்டிஷாரின் அக்கிரமங்களைப் பற்றி மௌனம்

சாதிக்கின்றன. மேலும், ஒரு ஜனக் கூட்டத்தின் குரூரமானது, முறை தவறி நடக்கும் ஒரு கட்டுப்பாடான அரசாங்கத்தின் குரூரத்தை நோக்க மிகவும் அற்பமானது என்பதை நினைவில் வைப்பது நலம். இன்றுகூட நமது மாகாணத்திலுள்ள கிராமங்களுக்குச் சென்றால் பலருக்கு அந்நாளைய கோர சம்பவங்களும் இம்சைகளும் இன்றும் ஞாபகமிருப்பதைக் காணலாம்.

சிப்பாய்க் கலகத்தின் பயங்கரமான கொடுமைகளுக்கு இடையில் ஜான்சி ராணியான லக்ஷ்மி பாயின் பெயர் இருண்ட வானில் ஒளிரும் சித்திரை நட்சத்திரத்தைப் போல் பிரகாசிக்கிறது. அவளுக்கு அப்போது வயது இருபதுதான். அந்த வயதிலேயே அவள் கணவனை இழந்த காரிகையாயிருந்தாள். அவள் அஞ்சா நெஞ்சத்துடன் ஆணுடை தரித்துப் பிரிட்டிஷாருக்கு எதிராகத் தன்னுடைய சேனையை நடத்திச் சென்றாள். அவள் போர்க்களத்தில் விளைத்த வீரச் செயல்களைப் பற்றிப் பல கதைகள் வழங்குகின்றன. அவளை எதிர்த்துப் போரிட்ட பிரிட்டிஷ் சேனாதிபதிகூடக் கலகத்தலைவர்களில் வீர தீரத்திலும் உயர்குணத்திலும் அவளே சிறந்தவள் என்று பாராட்டிக் கூறியிருக்கிறான். அவள் போர்க்களத்தில் போரிட்டுக் கொண்டே உயிர்துறந்தாள்.

1857—58-ம் வருஷத்துக் கலகமானது நில மானிய இந்தியா என்னும் அணையும் விளக்கின் கடைசிச் சுடராக முடிந்தது. அக்கலகம் பல விஷயங்களின் முடிவுக்குக் காரணமாயிருந்தது. பெரிய மொகலாயச் சக்கரவர்த்திகளின் பரம்பரையை அது முடிவுக்குக் கொண்டு வந்தது. ஹாட்சன் என்னும் பிரிட்டிஷ் உத்தியோகஸ்தன் ஒருவன் பகதூர்ஷாவின் புதல்வர்கள் இருவரையும் பேரன் ஒருவரையும் டில்லிக்கு அழைத்துச் செல்லும் வழியில் நிர்நிமித்தமாகச் சுட்டுக் கொன்று விட்டான்.

தைமூர், பாபர், அக்பர் ஆகியோருடைய கால்வழி இவ்வாறு கேவலமான முறையில் முடிந்தொழிந்தது.

சிப்பாய்க் கலகம் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சிக்கும் முற்றுப் புள்ளி வைத்தது. அதற்குப்பின் பிரிட்டிஷ் அரசாங்கம் இந்திய நிருவாகத்தைத் தானே நேரில் மேற்கொண்டது. இதுவரை பிரிட்டிஷ் கவர்னர்-ஜெனரலாக இருந்தவர் இப்போது "வைசிராய்" (ராஜப்பிரதிநிதி) ஆனார். பத்தொன்பது ஆண்டுகளுக்குப் பிறகு, 1877-ல், இங்கிலாந்தின் அரசியான விக்டோரியா "கெய்சர்-இ-ஹிந்து" (இந்தியாவின் சக்கரவர்த்தினி) என்னும் பட்டத்தை மேற்கொண்டார். இவ்வாறு, பழைய சீசர்களும் பைஜாண்டியச் சக்கரவர்த்திகளும் மேற்கொண்டிருந்த பட்டமானது இந்தியாவுக்குப் பொருந்த மாற்றி அமைக்கப்பட்டு இங்கிலாந்தின் அரசிக்குரிய விருது ஆயிற்று. மொகலாய வமிசம் பூண்டற்றுப் போயிற்று. ஆனால், யதேச்சாதிகார ஆட்சியின் சீர்மையும் சின்னங்களும் அப்படியே இருந்தன. டில்லியில் வீற்றிருந்த பழைய மொகலாயச் சக்கரவர்த்திக்குப் பதிலாக இன்னொரு புதிய மொகலாயச் சக்கரவர்த்தி இப்போது இங்கிலாந்தில் வீற்றிருந்தார்.

110

இந்தியக் கைத்தொழிலாளி அதோகதி ஆகிறான்

டிசம்பர் 1, 1932.

இந்தியாவில் 19-வது நூற்றாண்டில் நடந்த யுத்தங்களின் சரிதையை முடித்து விட்டோம். அதைப் பற்றி எனக்குச் சந்தோஷமே. இனி, அதே காலத்தில் இந்தியாவில் நிகழ்ந்த வேறு முக்கியச் சம்பவங்களை நாம் கவனிக்கலாம். ஆனால், இங்கிலாந்தின் நன்மைக்காக நடத்தப்பட்ட மேற்படி யுத்தங்களின் செலவைப் பொறுத்துக் கொண்டது இந்தியா என்கிற விஷயத்தை நீ மறந்துவிடக் கூடாது. பிரிட்டிஷார் இந்தியாவை வெல்வதற்குரிய செலவை இந்தியாவின் தலையிலேயே கட்டிய சமர்த்தை நாம் பாராட்டாமல் இருக்கமுடியாது. அயல் நாட்டாரான பர்மியரையும் ஆப்கானியரையும் ஜெயிப்பதற்குக் கூட — அவர்களுடன் இந்தியருக்கு யாதொரு விரோதமும் இல்லை.—இந்தியர் தங்களுடைய ரத்தத்தைச் சிந்திப் பொருளையும் அழுதார்கள். அந்த யுத்தங்கள் இந்தியாவின் செல்வத்தை ஓரளவு வறட்டி விட்டன. யுத்தம் என்றாலே பொருள் நாசம் என்று தானே அர்த்தம்? அதே சமயத்தில், யுத்தத்தில் ஜெயித்தவர்கள் நல்ல கொள்ளையும் அடித்தார்கள். அதைச் சிந்து விஷயத்தில் நாம் கண்டோம். இந்தியாவின் செல்வம் வறட்சியுற்றும், மேற்கூறிய காரணங்களாலும் வேறு பல காரணங்களாலும் கிழக்கிந்தியக் கம்பெனியின் பொக்கிஷத்தில் பொன்னும் வெள்ளியும் வந்து நிரம்புவது நிற்கவில்லை. அதனால் கம்பெனிப் பங்கு

தாரர்களுக்கு வருஷாவருஷம் கொழுத்த லாபப் பங்கீடு கிடைத்து வந்தது.

இந்தியாவில் பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் ஆரம்ப நாட்களில் பழிபாவத்துக்கஞ்சாத பிரிட்டிஷ் வியாபாரிகள் வியாபாரம் செய்தும், விவஸ்தையின்றிக் கொள்ளையடித்தும் பணத்தை மலையாகக் குவித்து வந்தார்கள் என்கிற விஷயம் உனக்கு முன்பே கூறியிருக்கிறேன் என்று நினைக்கிறேன். கிழக்கிந்தியக் கம்பெனியும் அதன் ஏஜெண்டுகளும் இத்திரண்ட செல்வத்தை இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்கு வாரிக்கொண்டு போனார்கள். இதற்குப் பிரதியாக இங்கிலாந்தினிடமிருந்து இந்தியாவுக்கு ஒன்றும் கிடைக்கவில்லை. வியாபாரம் என்றால் சாதாரணமாகக் கொடுப்பதும் கொள்வதும் என்று பொருள். ஆனால், 18-வது நூற்றாண்டின் பிற்பாதியில், பிளாசி யுத்தத்துக்குப் பிறகு, இந்தியா இங்கிலாந்துக்குக் கொடுத்துக் கொண்டு வந்ததே ஒழிய அதனிடமிருந்து கொண்டது ஒன்றுமில்லை. இவ்வாறு, இந்தியா இழந்த அதன் பழந்தனமானது இங்கிலாந்தின் தொழில் அபிவிருத்திக்குச் சென்று உதவியது. இங்கிலாந்து அப்போது தான் பழையநிலைமையிலிருந்து புதிய நிலைமைக்கு மாறிக் கொண்டிருந்த தருணம். ஆகவே, இந்தியாவின் உதவி தருணத்தில் வாய்த்த உதவியாக முடிந்தது. இந்தியாவில், வியாபாரத்தையும் பச்சையாகக் கொள்ளையடிப்பதையும் ஆதாரமாகக்கொண்ட முதல் பிரிட்டிஷ் சகாப்தம் ஏறக்குறைய 18-வது நூற்றாண்டோடு முடிந்தது என்று சொல்லலாம்.

பத்தொன்பதாவது நூற்றாண்டைப் பிரிட்டிஷ் ஆட்சியின் இரண்டாவது சகாப்தம் என்று சொல்லலாம். அப்பொழுது இந்தியாவானது இங்கிலாந்தின் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய மூலப் பொருள்களை அனுப்பும்

முக்கிய இடமாகவும் இங்கிலாந்தில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை வாங்கும் மார்க்கெட்டாகவும் விளங்கியது. இந்தியாவின் முன்னேற்றத்தையும் பொருளியல் அபிவிருத்தியையும் கெடுத்தே இங்கிலாந்து இந்த நன்மையை அடைந்தது. வியாபாரம் செய்து பொருளீட்டும் நோக்கத்துடன் ஆதியில் ஆரம்பிக்கப்பட்ட கிழக்கிந்தியக் கம்பெனி 19-வது நூற்றாண்டின் முற்பாதியில் இந்தியாவை ஆண்டு வந்தது. ஆனால், பிரிட்டிஷ் பார்லிமெண்டும் இந்திய விவகாரங்களில் வரவர அதிகக் கவனம் செலுத்தியது. 1857--58-ல் நடந்த கலகத்துக்குப் பின்னர் பிரிட்டிஷ் அரசாங்கமே இந்தியாவை நேரில் ஆளத்தொடங்கியது. இதைச் சென்ற கடிதத்தில் கண்டோம். இவ்வாட்சி மாறுதலினால் அடிப்படையான கொள்கையில் அதிக வித்தியாசம் ஒன்றும் ஏற்படவில்லை. ஏனெனில் கிழக்கிந்தியக் கம்பெனிக்குச் சொந்தமான வர்க்கத்தின் பிரதிநிதியாகவே பிரிட்டிஷ் அரசாங்கமும் இருந்தது.

இந்தியாவின் பொருளியல் நலன்களும் இங்கிலாந்தின் பொருளியல் நலன்களும் மாறுபட்டவை என்பது தெளிவு. இம்மாறுபாடு தோன்றும் போதெல்லாம், இங்கிலாந்தின் கையில் அதிகாரம் இருந்தபடியால், முடிவு அதற்குச் சாதகமாகவே இருந்தது. இங்கிலாந்து தொழில் மயமாகு முன்னரே ஒரு பிரசித்தி பெற்ற ஆங்கில ஆசிரியர் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சியால் நேரக்கூடிய தீங்குகளை எடுத்துக் காட்டியுள்ளார். அவருடைய பெயர் ஆடம்ஸ்மித் என்பது. அவரை 'அரசியல் பொருளியல்' சாஸ்திரத்தின் தந்தை என்று சொல்லுகிறார்கள். 1776-ம் ஆண்டிலேயே அவர் 'தேசங்களின் செல்வம்' (The Wealth of Nations) என்றொரு நூலை எழுதி வெளியிட்டார். அந்நூல் மிகவும்

புகழ் பெற்றதாகும். அதில் அவர் கிழக்கிந்தியக் கம்பெனியைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிருர்:

"வியாபாரிகளை மட்டும் கொண்ட ஒரு கம்பெனியின் ஆட்சி முறையைவிடக் கெடுதலான ஆட்சி முறை எந்தத் தேசத்துக்கும் இருக்க முடியாது. கிழக்கிந்தியக் கம்பெனியானது, இந்தியாவின் ஆட்சி கர்த்தர்கள் என்கிற முறையில், ஐரோப்பியப் பொருள்களை இந்தியாவில் குறைந்த விலைக்கு விற்க வேண்டும் என்றும் இந்தியப் பொருள்களை ஐரோப்பாவில் அதிக விலைக்கு விற்க வேண்டும் என்றும் விரும்ப வேண்டும். ஆனால், வியாபாரிகள் என்கிற முறையில் கம்பெனியின் நலன் இதற்கு நேர்மாருக இருக்கிறது. ஆட்சி கர்த்தர்கள் என்கிற முறையில் அவர்களுடைய நலனும் அவர்கள் ஆளும் தேசத்தின் நலனும் ஒன்றேயாகும். வியாபாரிகள் என்கிற முறையில் அவை ஒன்றுக் கொன்று நேர் மாறுபாடுடையனவாக இருக்கின்றன."

பிரிட்டிஷார் இந்தியாவுக்கு வந்த காலத்தில் இங்கு நிலமானிய முறை சிதறுண்டு வந்தது என்று கூறினேன் அல்லவா? மொகலாய சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சி இந்தியாவின் பல பாகங்களிலும் அரசியல் குழப்பத்தையும் கொந்தளிப்பையும் உண்டாக்கியது. அப்படியிருந்தும் "18-வது நூற்றுண்டில் இந்தியா கைத்தொழிலிலும் விவசாயத்திலும் சிறந்து விளங்கியது. இந்தியாவின் கைத்தறிகள் ஆசியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் தேவையான ஆடைகளை அனுப்பி வந்தன" என்று இந்தியப் பொருளியல் புலவரான ரமேச சந்திர தத்தர் எழுதி யுள்ளார். பண்டைக்காலத்தில் வெளி தேச மார்க்கெட்டுகளின் மீது இந்தியாவுக்கிருந்த ஆதிக்கத்தைப்பற்றி இக் கடிதங்களில் கூறியிருக்கிறேன். நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன் எகிப்தில் தைலப்பதமிட்ட சவங்களை மெல்லிய இந்திய மஸ்லின் துணிகளில் சுற்றி வைத்தார்கள் என்று அறிகிருேம். இந்தியக் கைவினைஞரின் கைத்திறனைக் கிழக்கிலும் மேற்கிலும் புகழாதவர் இல்லை. அரசியல் வீழ்ச்சிக்குப் பின்பும் அவர்கள் தங்களுடைய கைத்திறனை மறக்கவில்லை. இந்தியாவுக்கு வியாபாரத்தை முன்னிட்டு வந்த ஆங்கில வியாபாரிகளும் வேறு அந்நிய வியாபாரிகளும் வெளி நாட்டுப் பொருள்களை இங்கு விற்பதற்காக வரவில்லை. இந்தியாவில் செய்யப்பட்ட அருமையும் நேர்த்தியும் வாய்ந்த பொருள்களை வாங்கி அவற்றை ஐரோப்பாவில் கொள்ளை லாபத்துக்கு விற்பதற்காகவே அவர்கள் இங்கு வந்தார்கள். ஆக, ஐரோப்பிய வியாபாரிகளை முதன் முதலில் ஆகர்ஷித்தது இந்தியாவின் இயற்கைப் பொருள்கள் (மூலப் பொருள்கள்) அல்ல; இந்தியாவின் செயற்கைப் பொருள்களே அவர்களை முதன் முதலில் ஆகர்ஷித்தன. கிழக்கிந்தியக் கம்பெனி, இந்தியாவில் ஆதிக்கம் பெறு முன்னர், இந்தியாவில் செய்யப்பட்ட நூலாடைகளையும், பட்டாடைகளையும், எலிமயிர்க் கம்பளங்களையும், சித்திரத் தையல் வேலைப் பாடமைந்த மேலான ஆடைகளையும் வெளி நாடுகளில் விற்று நல்ல லாபம் சம்பாதித்து வந்தது. சிறப்பாக, நூல், பட்டு, கம்பளி நெசவில் இந்தியாவின் திறமை ஒப்புயர்வற்றதாயிருந்தது. "நெசவுத் தொழில் இந்தியாவின் தேசியக் கைத்தொழிலாக விளங்கியது. கோடிக் கணக்கான பெண்மணிகள் ராட்டினத்தில் நூல் நூற்று வந்தார்கள்" என்று ரமேச சந்திர தத்தர் கூறுகிருர். இந்தியாவில் நெய்யப்பட்ட ஆடை வகைகள் இங்கிலாந்துக்கும், ஐரோப்பாவின் இதரப் பாகங்களுக்கும், சீன, ஜப்பான், பர்மா, அரேபியா, பாரசீகம் ஆகிய நாடுகளுக்கும் ஆப்பிரிக்காவில் சில பாகங்களுக்கும் சென்றுகொண்டிருந்தன.

1757-ல் வங்காளத்திலுள்ள மூர்ஷிதாபாத் நகரைக் கிளைவ் கீழ்க்கண்டவாறு வருணித்திருக்கிறன்: "இந்நகர் பரப்பிலும், மக்கள் தொகையிலும், செல்வப் பெருக்கிலும் லண்டன் நகரை ஒத்திருக்கிறது. இரண்டிற்கும் ஒரே ஒரு வித்தியாசந்தான். லண்டனில் உள்ளவர்களை விடப் பன்மடங்கு திரண்ட ஐசுவரியம் படைத்தவர்கள் இங்கே இருக்கிறார்கள்." இந்த வருஷத்தில் தான் பிரிட்டிஷார் பிளாசிப்போரை வென்று வங்காளத்தில் தங்கள் ஆட்சியை முடிவாக ஸ்தாபித்தார்கள். ஆக, வங்காளம் அரசியலில் வீழ்ச்சியுற்ற அதே சமயத்தில், செல்வத்திலும் கைத்தொழில்களிலும் உயர்ந்து விளங்கியதை நாம் காண்கிறோம். அது தன்னுடைய நேர்த்தியான ஆடைவகைகளை உலகின் பிற பாகங்களுக்கு அனுப்பிக் கொண்டிருந்தது. சிறப்பாக, டாக்கா நகரம் மெல்லிய மஸ்லின் ஆடைகளுக்குப் பேர் போனதாகும். அங்கிருந்து மஸ்லின் வகைகள் பெருவாரியாக ஏற்றுமதி செய்யப்பட்டன.

ஆகவே, இந்தியா அக்காலத்தில் வெறும் விவசாய நிலையையும் கிராமநிலையையும் தாண்டி வெகுதூரம் முன்னேறியிருந்தது. இந்தியா அன்றும் இன்றும் இன்னும் நெடுங்காலம் வரையிலும் பெரும்பான்மை விவசாய நாடு என்பதில் ஐயமில்லை. ஆனல், கிராம வாழ்க்கை விவசாய வாழ்க்கையுடன் கூடவே பட்டண வாழ்க்கையும் வளர்ந்து வந்தது. இந்தப் பட்டணங்களில் கைவினைஞரும் தொழிலாளிகளும் கூடி வாழ்ந்து வந்தார்கள். நூறு அல்லது நூறுக்கு மேற்பட்ட தொழிலாளிகள் வேலை செய்யும் தொழிற்சாலைகள் பொருள்களை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டிருந்தன. இந்தத் தொழிற்சாலைகளைப் பிற்காலத்தில் யந்திர சகாப்தத்தின் போது தோன்றிய பெரிய தொழிற்சாலைகளோடு

ஒப்பிடுவதற்கில்லை. தொழில்கள் யந்திரமயமாகுமுன் மேல் ஐரோப்பாவிலும், முக்கியமாக, நெதர்லாந்திலும் இத்தகைய தொழிற்சாலைகள் பல இருந்தன.

இந்தியா அப்போது மாறுதல் அடையும் ஒரு கட்டத்தில் இருந்தது. அது கைத்தொழில் உற்பத்தியில் சிறந்திருந்தது. பட்டணங்களில் ஒரு பூர்ஷுவா வகுப்புத் தோன்றி வந்தது. பட்டணங்களிலிருந்த தொழிற்சாலைகளின் சொந்தக்காரர்கள் அத்தொழிலாளிகளுக்கு மூலப் பொருள்களைக் கொடுக்கும் முதலாளிகளாக இருந்தார்கள். காலக்கிரமத்தில், இவ்வகுப்பு பலத்தில் வளர்ந்து, நிலமானிய வகுப்பை ஒழித்து விட்டு அதன் ஸ்தானத்தை அடைந்திருக்கும். ஐரோப்பாவில் நிகழ்ந்தது இதுவே. ஆனல், அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில் பிரிட்டிஷார் குறுக்கே புகுந்து இந்தியாவின் கைத்தொழில்களைக் கொன்றுவிட்டார்கள்.

முதலில், கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியக் கைத்தொழில்களுக்கு ஊக்கம் அளித்தது. ஏனெனில், அவற்றல் கம்பெனிக்கு நிறைய லாபம் கிடைத்து வந்தது. இந்தியாவில் செய்யப்பட்ட பொருள்கள் வெளி நாடுகளில் விற்பனை ஆகி வந்த காரணத்தால் இங்கு பொன்னும் வெள்ளியும் குவிந்து வந்தது. ஆனல், இங்கிலாந்தின் பொருளுற்பத்தியாளர்கள் இந்தியாவின் போட்டியை விரும்பவில்லை. அவர்கள் 18-வது நூற்றண்டின் ஆரம்பத்திலேயே தங்களுடைய அரசாங்கத்தைத் தூண்டி இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்கு வரும் சாமான்களுக்கு வரி விதிக்குமாறு செய்தார்கள். சில இந்தியச் சாமான்கள் இங்கிலாந்தில் இறக்குமதியே ஆகக் கூடாது என்று தடை விதிக்கப்பட்டது. இந்தியாவில் செய்யப்பட்ட வஸ்து ஏதோ ஒன்றைப் பகிரங்கமாக அணிந்து கொள்வது கூடக் குற்றம் என்று சட்டம்

செய்யப்பட்டதென்று நினைக்கிறேன். சட்டத்தின் துணைகொண்டு அவர்கள் அக்காலத்தில் இந்தியச் சாமான் பகிஷ்காரத்தை நிறைவேற்றுவது சாத்தியமாயிருந்தது. தற்காலத்தில், இந்தியாவில் யாராவது பிரிட்டிஷ் துணிப் பகிஷ்காரம் என்று மூச்சு விட்டால் போதும்; உடனே அவன் ஜெயிலுக்குக் கொண்டு போகப்படுகிறான்! இங்கிலாந்தின் இந்தியச் சாமான் பகிஷ்காரக் கொள்கை ஒன்று மட்டும் அவ்வளவு அதிகமாகத் தீங்கிழைத்திருக்க முடியாது. ஏனெனில், இந்தியாவுக்கு வேறு பல மார்க்கெட்டுகளும் இருந்தன. ஆனால், அக்காலத்தில் கிழக்கிந்தியக் கம்பெனியின் மூலம் இங்கிலாந்து இந்தியாவின் பெரும் பாகத்தின் மீது ஆதிக்கம் செலுத்தி வந்தது. அந்த நிலையில் அது இந்தியக் கைத்தொழில்களை ஒடுக்கிப் பிரிட்டிஷ் கைத்தொழில்களை முன்னுக்குக் கொண்டு வரவேண்டும் என்னும் கொள்கையைத் தெரிந்து கடைப்பிடித்தது. பிரிட்டிஷ் சாமான்கள் யாதொரு வரியும் செலுத்தாமல் இந்தியாவுக்குள் வந்தன. இந்தியாவில் கைவினைஞரும் தொழிலாளிகளும் கொடுந்துன்பங்களுக்கு உள்ளாக்கப்பட்டார்கள். கம்பெனியின் தொழிற்சாலைகளில் வேலை செய்யுமாறு அவர்கள் கட்டாயப் படுத்தப்பட்டார்கள். இந்தியாவிலேயே ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குச் சாமான்கள் போவதற்கு வரி விதிக்கப்பட்டபடியால் உள் நாட்டு வியாபாரம் கூட ஒடுக்கப்பட்டது.

இந்தியாவின் துணித்தொழில், விருத்தியாகி வரும் இங்கிலாந்தின் யந்திரத் தொழிலுடன் போட்டி யிடக் கூடிய அளவுக்குத் திறமை வாய்ந்திருந்தது. அப்போட்டியினின்று இங்கிலாந்தின் தொழிலைக் காப்பாற்றுவதற்கு இந்தியத் தொழிலுக்கு 80 சதவிகிதம் வரி விதிக்க வேண்டியிருந்தது. 19-வது நூற்றாண்டின் தொடக்

கத்தில், இந்தியாவில் செய்யப்பட்ட சில பட்டாடை, நூலாடை வகைகள் இங்கிலாந்தில் செய்யப்பட்டவைகளை விடக் குறைந்த விலைக்கு இங்கிலாந்திலேயே விற்கக் கூடியவையாக இருந்தன. ஆனால் இந்தியாவை ஆண்டுவந்த இங்கிலாந்து இந்தியக் கைத்தொழில்களை அழிப்பதென்று துஜங்கட்டிக் கொண்டிருக்கும் போது இந்நிலைமை நீடிக்க முடியுமா? எப்படியிருந்தாலும், இந்தியாவின் குடிசைக் கைத்தொழில்கள் விருத்தியாகி வரும் யந்திரத் தொழில்களுடன் நெடு நாள் போட்டியிடுவது என்பது முடியாத காரியம். பொருள்களைப் பெரிய அளவில் உற்பத்தி செய்வதற்கு யந்திரத் தொழில் எவ்வளவோ சிறந்த சாதனம். ஆகவே யந்திரத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் கையினால் உற்பத்தி செய்யப்படும் பொருள்களைவிட மலிவாகத்தான் இருக்கும். ஆனால், மாறும் நிலைமைகளுக்குத் தக இந்தியா தன்னைத் திருத்தி அமைத்துக் கொள்வதற்கு இடம் கொடுக்காமல் இங்கிலாந்து அதைப் பலவந்தமாகப் பிடித்துத் தள்ளிவிட்டது.

ஆக, பல நூற்றாண்டுகளாகக் 'கீழ்த்திசையின் லங்காஷயரா'க விளங்கிய இந்தியா, 18-வது நூற்றாண்டில் ஆடை வகைகளைப் பெரிய அளவில் உற்பத்தி செய்து ஐரோப்பாவுக்கு அனுப்பிய இந்தியா பொருள்களை உற்பத்தி செய்யும் நிலையை இழந்து, வெறுமே பிரிட்டிஷ் சாமான்களை வாங்கி உபயோகிக்கும் நிலைக்கு வந்துவிட்டது. சாதாரணமாகக் காலக்கிரமத்தில் இந்தியாவுக்கு வரவேண்டிய யந்திரம் வரவில்லை. ஆனால், யந்திரத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் வெளியிலிருந்து இந்தியாவுக்கு வந்தன. இதுவரையில் இந்தியாவிலிருந்து சாமான்களை வெளி நாடுகளுக்குக்கொண்டு செல்வதும் அங்கிருந்து பொன்னை-

யும் வெள்ளியையும் இங்கு கொண்டு வருவதுமாக இருந்த பிரவாகம் இப்போது நேர்மாறாக ஓடத் தலைப்பட்டது. இதற்குப்பின் வெளிநாட்டுச் சாமான்கள் இந்தியாவுக்கு வந்தன; பொன்னும் வெள்ளியும் இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்குச் சென்றன.

இந்த வெளிநாட்டுச் சாமான் தாக்குதலுக்கு ஆற்றாது முதலில் வீழ்ந்தது இந்தியாவின் நெய்தற்றொழில்தான். இங்கிலாந்தில் யந்திரத் தொழில் விருத்தியாக ஆக இந்தியாவின் இதரக் கைத்தொழில்களும் நெய்தற்றொழில் சென்ற வழியே சென்றன. சாதாரணமாக ஒரு அரசாங்கத்தின் கடமை அதன் நாட்டுக் கைத்தொழில்களை ஓம்புவதும் ஊக்குவதும் ஆகும். ஆனால், கிழக்கிந்தியக் கம்பெனியோ அவ்வாறு செய்யத் தவறியது மன்றி பிரிட்டிஷ் கைத்தொழில் வளர்ச்சிக்குத் தடையாக இருந்த எல்லா இந்தியக் கைத்தொழில்களையும் அழிக்கத் தலைப்பட்டது. இந்தியாவின் கப்பல் கட்டும் தொழிலும், கன்னார் தொழிலும், கண்ணாடித் தொழிலும், காகிதத் தொழிலும் அழிந்தொழிந்தன.

முதலில் அந்நிய சாமான்கள் துறைமுகப்பட்டணங்களை அடைந்து அவற்றிற்கு அருகிலுள்ள இடங்களில் மட்டும் பரவின. பெரிய பாதைகளும் ரயில் வண்டித்தொடர்களும் போடப்பட்டவுடன் அவை மேலும் மேலும் உள்நாட்டில் பரவிக் கிராமத் தொழிலாளிகளின் பிழைப்பில்கூட மண்ணைப் போட்டுவிட்டன. சூயஸ் கால்வாய் வெட்டப்பட்டதும் இங்கிலாந்து இந்தியாவுக்கு இன்னும் நெருங்கி வந்து விட்டது. அதனால் பிரிட்டிஷ் சாமான்களை இன்னும் மலிவாக இந்தியாவுக்குக் கொண்டுவர முடிந்தது. வெளிநாட்டு யந்திர சாமான்கள் மேலும் மேலும் வந்து குவிந்துகொண்டிருந்தன. அவை மூலை முடுக்கிலுள்ள கிராமாந்தரங்

களுக்கும் சென்றன. 19-வது நூற்றாண்டு பூராவும் இது நடைபெற்றுக் கொண்டே வந்தது. இன்றும் ஓரளவு நடைபெற்றுக் கொண்டும் இருக்கிறது. கடந்த சில வருஷங்களாக இதற்குச் சில தடைகள் நேர்ந்திருக்கின்றன. அவற்றைப் பின்பு கவனிப்போம்.

பிரிட்டிஷ் சாமான்கள், முக்கியமாகப் பிரிட்டிஷ் துணி, இந்தியாவில் படர்ந்து இந்தியக் கைத்தொழில்களைக் கொன்று விட்டன. ஆனால், இதைவிடப் பயங்கரமான அம்சம் இன்னொன்று இருந்தது. வேலையிழந்த கோடிக்கணக்கான கைவினைஞரின் கதி என்ன வாயிற்று? தொழிலை இழந்த ஏராளமான நெசவாளிகளும் இதரத் தொழிலாளிகளும் என்னவானார்கள்? இங்கிலாந்திலும் பெரிய தொழிற்சாலைகள் ஏற்பட்ட காலத்தில் பழைய கைத்தொழிலாளிகள் வேலையற்றவர்களாகத்தான் நடுத்தெருவில் விடப்பட்டார்கள். அவர்கள் பெருந்துன்பம் உற்றார்கள். ஆனால், அவர்களுக்குப் புதிதாகத் தோன்றிய தொழிற்சாலைகளில் வேலை கிடைத்தது. அவர்களும் புதிய நிலைமைகளுக்கு ஏற்றாற்போல் தங்கள் வாழ்க்கையை மாற்றிக் கொண்டார்கள். இந்தியத் தொழிலாளிகளுக்கு அத்தகைய வேறுவழி ஒன்றுமில்லை. அவர்கள் போய் வேலை செய்வதற்குரிய தொழிற்சாலைகள் இங்கே தோன்றவில்லை. இந்தியா நவீன யந்திரத்தொழில் நாடாவதைப் பிரிட்டிஷார் விரும்பவில்லை. அவர்கள் இங்கே தொழிற்சாலைகள் தோன்றுவதை ஆதரிக்கவில்லை. ஆகவே, இருக்க இடமும் உண்ண உணவும் செய்வதற்கு வேலையும் அற்ற ஏழை இந்தியக் கைத்தொழிலாளிகள் வேறு போக்கிடமின்றி விவசாயத் தொழிலில் புகல் புகுந்தார்கள். ஆனால், விவசாயத் தொழில் அவர்களை வரவேற்கவில்லை. ஏற்கெனவே, வேண்டிய பேர் அதில் ஈடுபட்டிருந்தார்கள்.

புதிதாகச் சென்றவர்களுக்கு நிலம் கிடைக்கவில்லை. வேலையற்ற தொழிலாளிகளில் சிலர் மட்டும் எப்படியோ கொஞ்சம் நிலம் தேடிக்கொண்டு குடியானவர்கள் ஆனார்கள். பெரும்பான்மையோருக்கு நிலம் கிடைக்காமையால் அவர்கள் கூலிக்கு ஏதாவது வேலை கிடைக்குமா என்று ஏக்கமுற்றிருந்தார்கள். அவர்களில் பலர் இராப் பட்டினி பகல் பட்டினி கிடந்து மாண்டு போயிருக்க வேண்டும். 1834-ல் இந்தியாவில் கவர்னர்-ஜெனரலாக இருந்த இங்கிலீஷ்காரன் பின் வருமாறு கூறினான்: "இந்தியாவில் இப்போது காணப்படும் துன்பம் தொழிலாளர்களின் சரித்திரத்திலேயே இது வரையில் காணப்படாத ஒன்றாகும். இந்தியாவின் பரந்த வெளிகள் இந்தியக் கைத்தறி நெசவாளர்களின் எலும்புக் கூடுகள் சிதறிக் கிடக்கும் சுடுகாடாக விளங்குகின்றன."

நெசவுத் தொழிலிலும் வேறு தொழிலிலும் ஈடுபட்டிருந்தவர்களில் பெரும்பாலோர் பட்டணங்களிலும் நகரங்களிலும் வசித்து வந்தவர்கள். இப்போது அவர்களுடைய தொழில்கள் கெட்டுப் போய் விட்ட படியால் அவர்கள் நிலத்தை நாடிக் கிராமங்களுக்குச் சென்றார்கள். அதனால் நகரங்களின் ஜனத்தொகை குறைந்து கிராமங்களின் ஜனத்தொகை பெருகலாயிற்று. இதையே இன்னொரு விதமாகச் சொல்ல வேண்டுமாயின், இந்தியாவின் நகர் நீர்மை குன்றி நாடு நீர்மை பெருகியது என்று சொல்லலாம். இந்த நாடு நீர்மை 19-வது நூற்றாண்டு முழுவதும் வளர்ந்து கொண்டே சென்றது. இன்னும் அது நின்றபாடில்லை. இந்தியாவில் இவ்வாறு நிகழ்ந்தது விசித்திரமான ஒரு விஷயமாகும். உலகமெங்கும் யந்திரத் தொழிலின் பிரபாவமானது மக்களை நாட்டிலிருந்து நகரத்திற்கு ஈர்த்துக்கொண்டிருந்தது. இந்தியாவில் மட்டும் இதற்கு நேர்மாறாக நிகழ்ந்து வந்தது. நகரங்களும் பட்டணங்களும் வாடி வதங்கிச் சிறுத்து விட்டன. மேலும் மேலும் அதிகமான தொகையினர் விவசாயத்தைக் கட்டிக் கொண்டு கஷ்டப்பட்டு வந்தார்கள்.

இந்தியாவில், முக்கியக் கைத்தொழில்களுடன் பல துணைத் தொழில்களும் மறையத் தொடங்கின. பஞ்சு கொட்டுதல், சாயமேற்றுதல், அச்சடித்தல் (துணிகளுக்கு) முதலிய தொழில்கள் க்ஷீணித்தன. கையினால் நூல் நூற்பது நின்று விட்டது. கோடிக் கணக்கான வீடுகளில் ஒலித்துக் கொண்டிருந்த இராட்டினங்களின் இன்னிசை ஓய்ந்து விட்டது. ஒரு குடியானவனுடைய குடும்பம் நூற்று அடையும் வருமானம் அதன் நில வருமானத்துடன் சேர்ந்து அதற்குச் சற்று ஆதரவாயிருந்தது. நூற்கும் தொழில் அழிந்துவிடவே குடியானவர்கள் தங்களுக்குக் கிடைத்து வந்த துணை வருமானத்தை இழந்து விட்டார்கள். யந்திரத்தொழில் ஆரம்பித்த காலையில் மேல் ஐரோப்பாவிலும் இவையெல்லாம் நிகழ்ந்தன. ஆனால், அங்கு விளைந்த மாறுதல் இயற்கையை அநுசரித்ததாக இருந்தது. பழைய தொழில் முறை மறைந்தது; ஆனால், அதே சமயத்தில் புதிய தொழில் முறை பிறந்தது; இந்தியாவில் விளைந்த மாறுதலோ நன்மை கலவாத தீமையாக முடிந்தது. இங்கே பழைய குடிசைத் தொழில் முறை கொல்லப் பட்டது; ஆனால், அதன் ஸ்தானத்தில் புதிய தொழில் முறை பிறக்கவில்லை. இந்தியாவின் பிரிட்டிஷ் எஜமானர்கள் பிரிட்டிஷ் தொழிலின் நன்மையை முன்னிட்டு இங்குப் புதிய தொழில் முறை பிறப்பதைத் தடுத்து விட்டார்கள்.

பிரிட்டிஷார் அதிகாரத்தை அடைந்த காலையில் இந்தியா பொருளுற்பத்தியும் செழிப்பும் மிகுந்த தேச

மாக இருந்தது. காலக்கிரமத்தில் இங்குப் பெரிய யந்திரம் ஸ்தாபிக்கப்பட்டுத் தொழில்களும் யந்திரமயம் ஆகியிருக்கும். சாதாரண நிலையில் இதுவே இந்தியாவின் முன்னேற்றத்தில் அடுத்த கட்டமாக இருந்திருக்கும். ஆனால், பிரிட்டிஷார் அனுஷ்டித்த கொள்கையின் பயனாக, இந்தியா முன்னோக்கிச் செல்வதற்குப் பதிலாக வாஸ்தவத்தில் பின்னோக்கிச் சென்றது. இப்போது அது தன் குடிசைகளில் பொருள் உற்பத்தி செய்யும் நிலையையும் இழந்து விட்டது. இதற்கு முன்பு இருந்ததைவிட அதிகமாக அது விவசாயத்தையே நம்பி வாழும்படியான நிலை ஏற்பட்டுவிட்டது.

ஆகவே, ஏழை விவசாயம் வேலை இழந்த பல்லாயிரக்கணக்கான கைவினைஞரையும் தொழிலாளிகளையும் காப்பாற்ற வேண்டியிருந்தது. ஏற்கெனவே, விவசாயத்தில் அதிக நெருக்கடி இருந்தது. அது இன்னும் அதிகமாயிற்று. இதுதான் இந்தியாவின் 'ஏழ்மைத் தனம்' என்கிற பிரச்சினைக்கு அடிப்படையும், ஆதாரமும் ஆகும். இந்த அடிப்படையான பிரச்சினையைத் தீர்த்தாலொழிய கிராமங்களில் வாழும் இந்தியக் குடியானவர்களின் தரித்திரத்தையும் கஷ்டத்தையும் போக்க முடியாது.

அளவுக்கு அதிகமானபேர் நிலத்தை நம்பிக்கொண்டிருந்தார்கள். விவசாயத்தைத் தவிர அவர்களுக்கு வேறு தொழில் இல்லை. ஆகவே, அவர்கள் தங்களுடைய பண்ணைகளையும் நிலங்களையும் சிறுசிறு பாகங்களாகவும் தளைகளாகவும் பங்கிட்டுக் கொண்டார்கள். ஒவ்வொரு குடியானவனுக்கும் இருந்த சொற்ப நிலம் அவனுடைய குடும்பத்தைச் சற்று சீராகக் காப்பாற்றுவதற்குப் போதுமானதாயில்லை. நன்றாக விளைந்த காலங்களில் கூட வறுமை அவர்களை வாட்டி வந்தது. பகலில் உணவு

கொண்டால் இரவில் சாப்பிடுவதற்கு ஒன்றும் இராது. இரவில் வயிற்றை நிறைத்தால் பகலில் பட்டினிதான். நல்ல காலங்களிலேயே அவர்கள் இவ்வாறு அரைப் பட்டினி கிடந்து வயிற்றைக் கழுவி வந்தார்கள். அந்த நல்ல காலமும் அபூர்வமாய்த்தான் வரும். நல்லகாலத்திலேயே இப்படி யென்றால் கெட்ட காலத்தைப் பற்றிக் கேட்கவேண்டியதில்லை. பருவகாலங்களும், பஞ்சபூதங்களும், மழைமாரியும் கருணைசெய்தால்தான் அவர்கள் பிழைக்கமுடியும். இந்த நிலைமையில், பஞ்சங்களுக்கும் கொள்ளை நோய்களுக்கும் குறைவில்லை. அவை அடிக்கடி வந்து கோடிக்கணக்கான உயிர்களை வாரிச் சென்றன. குடியானவர்கள் கிராமத்திலுள்ள பனியா (வணிகர் - ரொக்க லேவாதேவி செய்வோருக்கு வட இந்தியாவில் வழங்கும் பெயர்) அல்லது சாவகாரிடம் சென்று கடன் வாங்கினார்கள். நாளுக்குநாள் ராமபாணம் போல் ஏறிக் கடன்சுமை பெரிதாகிக் கொண்டே சென்றது. கடைசியில் அதைத் திருப்பிக் கொடுப்பதற்கான நம்பிக்கையையும் சக்தியையும் அவர்கள் இழந்துவிட்டார்கள். அவர்களுக்கு வாழ்க்கை என்பது தாங்க முடியாத சுமையாகிவிட்டது, இவ்வாறிருந்தது பெரும்பாலான இந்திய மக்களின் நிலைமை, பத்தொன்பதாவது நூற்றாண்டில், பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ்.

111

இந்தியக் கிராமங்களும் குடியானவர்களும் நிலச்சுவான்தார்களும்

டிசம்பர் 2, 1932.

பிரிட்டிஷார் இந்தியாவில் அனுஷ்டித்து வந்த கொள்கையைப் பற்றிச் சென்ற கடிதத்தில் கூறினேன். அதன் பயனாக இந்தியக் குடிசைக் கைத்தொழில்கள் அழிந்தொழிந்தன என்றும் பட்டணங்களில் தொழில் செய்து வாழ்ந்துவந்த கைவினைஞர் கிராமங்களுக்குச் சென்று பயிர் மூல ஜீவனத்தை மேற்கொண்டார்கள் என்றும் கூறினேன். இவ்வாறு, வேறு வேலை இல்லாத காரணத்தால் மிகப் பெரும்பாலோர் உழவை நம்பி உயிர் வாழவேண்டியதாயிற்று. அதனால் விவசாயத்தில் ஏற்பட்ட பெரும் நெருக்கடியே இந்தியாவின் பெரும் பிரச்சினை என்று நான் கூறினேன். இந்தியாவின் ஏழ்மைக்குப் பெரும்பாலும் அதுவே காரணம். அவர்களை உழவுத் தொழிலிலிருந்து திருப்பி அவர்களுக்கு வேறு இலாபகரமான தொழில்களைக் காட்டக் கூடுமாயின், அவர்கள் தேசத்தின் செல்வத்தைப் பெருக்குவதைக் காண்போம். அத்துடன், நிலத்திலுள்ள நெருக்கடியும் தீர்ந்து உழவுத் தொழிலும் செழித்தோங்கும்.

இவ்வதிகப்படியான நெருக்கடிக்குக் காரணம் இந்தியாவின் ஜனத்தொகையில் ஏற்பட்ட பெருக்கே ஒழிய பிரிட்டிஷ் கொள்கை அல்ல என்று அடிக்கடி பேசப்படுகிறது. இது சரியல்ல. கடந்த நூறு ஆண்டுகளில் இந்தியாவின் ஜனத்தொகை பெருகியிருப்பது உண்மையே. ஆனால், அநேகமாக எல்லா நாடுகளின்

ஜனத்தொகையும் அவ்வாறே பெருகியிருக்கிறது. ஐரோப்பாவில், முக்கியமாக இங்கிலாந்து, பெல்ஜியம், ஹாலந்து, ஜெர்மனி ஆகிய நாடுகளில், ஜனத்தொகைப் பெருக்க வீதாசாரம் இந்தியாவை விட அதிகமாகவே இருக்கிறது. ஒரு தேசத்தின் ஜனத்தொகைப் பெருக்கம் அல்லது உலகத்தின் ஜனத்தொகைப் பெருக்கம்: அதற்கு வழி செய்வது எப்படி? அவசியமானபோது அதைக் கட்டுப்படுத்துவது எவ்வாறு? என்பன போன்ற விஷயங்களெல்லாம் மிக முக்கியமானவையே. ஆனால், அவற்றை நான் இங்கே எடுத்துக் கொண்டு ஆராயப் புகின், அது மற்ற விஷயங்களைக் குழப்பிவிடும். ஆனால், ஒரு விஷயத்தை மட்டும் நான் தெளிவுபடுத்த வேண்டும். இந்தியாவின் நில நெருக்கடிக்கு அதன் ஜனநெருக்கடி காரணமல்ல; உழவுத் தொழிலைத் தவிர்த்து வேறு தொழில்கள் இன்மையே அதற்குக் காரணம். வேறு தொழில்களும் வேலைகளும் தோன்றுமாயின் அவை இந்தியாவின் ஜனத் தொகையை ஏற்றுக் கொண்டு அதை நன்கு போஷிக்கக் கூடிய நிலையில் இருக்கும். இதற்குப் பின்னால் ஒருவேளை நாம் ஜனத்தொகை அதிகரிப்புப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டியிருக்கலாம்.

இந்தியாவில் பிரிட்டிஷார் அனுஷ்டித்து வரும் கொள்கையின் வேறு சில அம்சங்களை இப்போது ஆராய்வோம். முதலில் கிராமத்தை எடுத்துக்கொள்வோம்.

இந்தியாவின் கிராமப் பஞ்சாயத்துகளைப் பற்றியும், அவை படையெடுப்புகளாலும் மாறுதல்களாலும் பாதிக்கப்படாமல் தொன்று தொட்டு இருந்து வந்ததைப் பற்றியும் நான் அடிக்கடி எழுதியுள்ளேன். இந்தியாவிலிருந்த பிரிட்டிஷ் கவர்னரான சர் சார்லஸ்மெட்காப் என்பவன் 1830-ம் ஆண்டிலேயே கிராம சமுதாயங்களைப் பற்றிப் பின்வருமாறு கூறியுள்ளான்:

"கிராம சமுதாயங்களைச் சிறு குடியரசுகளுக்கு ஒப்பிடலாம். அவற்றிற்குத் தேவையானவை யாவும் அவற்றிடமே இருக்கின்றன. அவை வெளித்தொடர்புகள் இன்றித் தனியே இயங்க வல்லவை. வேறு ஒன்றும் நிலைத்து நில்லாத இடத்தில் அவை மட்டும் நிலைத்து நிற்கின்றன. கிராம சமுதாயங்களின் இவ்வொற்றுமையும், அவை ஒவ்வொன்றும் ஒரு சிறு தனி ராஜ்யமாக இருக்கும் தன்மையும்......அவற்றின் சுக வாழ்க்கைக்கும் சுதந்திர வாழ்க்கைக்கும் பெரும்பாலும் காரணமாயிருக்கின்றன."

பழைய கிராம வாழ்க்கையைப் பற்றிய மேற் கூறிய வருணனை அதற்கு மிகவும் பெருமை அளிப்பதாக இருக்கிறது. அதில் காட்டப்பட்டுள்ள சித்திரம் பாவலர் தம் பாமாலையால் போற்றக் கூடியதாக இருக்கிறது. அக்காலக் கிராம வாழ்க்கையில் காணப்பட்ட சுதந்திரம் மிகவும் நன்மையான தென்பதில் ஐயமில்லை. அதில் வேறு பல நல்ல அம்சங்களும் இருந்தன. ஆனால், அம் முறையிலுள்ள குறைகளுக்கு நாம் குருடர்கள் ஆகிவிடக்கூடாது. வெளி உலகத் தொடர்பு அற்றதும் தன்னிலே தான் நிறைவு பெற்றதுமான ஒரு கிராம வாழ்க்கையால் எதிலும் முன்னேற்றம் ஏற்படாது. வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் பெரிய பெரிய ஜன சமுதாயங்களுக்கிடையே கூட்டுறவு அவசியம். ஒரு தனி மனிதனோ அன்றி ஒரு கூட்டமோ பிறருடைய கலப்பின்றித் தனக்குத் தானே வாழ்க்கை நடத்துவதில் அதிக அபாயம் இருக்கிறது. அதனால் அகம்பாவமும், தன்னலமும் குறுகிய நோக்கும் உண்டாகின்றன. கிராம ஜனங்கள் நகர ஜனங்களை விடப் பெரும்பாலும் குறுகிய நோக்கும் மூட நம்பிக்கையும் கொண்டவர்களாக இருப்பதை நாம் காண்கிறோம். ஆகவே, கிராம

சமுதாயங்கள் பல நல்ல அம்சங்கள் படைத்தவையாக இருப்பினும் முன்னேற்றத்துக் குரிய ஸ்தாபனங்கள் ஆகமாட்டா. அவை காலத்துக் கொவ்வாத கர்நாடகத் தன்மையும் பிற்போக்கும் வாய்ந்திருந்தன. கைத்தொழில்கள் பெரும்பாலும் நகரங்களிலேதான் சிறந்திருந்தன. ஏராளமான நெசவாளிகள் கிராமங்களில் பரவியிருந்ததும் உண்மையே. கிராமங்கள் ஒன்றோடொன்று அதிகத் தொடர்பின்றித் தனியாக வாழ்க்கை நடத்தி வந்ததற்குப் போதிய போக்கு வரவு சாதனம் இன்மையே உண்மையான காரணமாகும். கிராமங்களை ஒன்று சேர்க்கக் கூடிய நல்ல நிலைமையிலுள்ள சாலைகள் மிகவும் குறைவாயிருந்தன. உண்மையில், இந் நாட்டின் மத்திய அரசாங்கம் கிராம விவகாரங்களில் அதிகமாகத் தலையிட முடியாமைக்கு நல்ல சாலைகள் இன்மையே காரணமாயிருந்தது. பெரிய நதிகளின் கரைகளிலும் அவற்றின் அருகிலும் இருந்த பட்டணங்களும் கிராமங்களும் படகுப் போக்கு வரவு மூலமாக ஒன்றோடொன்று தொடர்பு கொள்வது சாத்தியமாக இருந்தது. ஆனால், அவ்வாறு பயன்படக் கூடிய நதிகள் மிகச் சிலவே. போக்கு வரவு சாதனங்களின் அருமை காரணமாக உள்நாட்டு வியாபார வளர்ச்சியும் தடைப்பட்டது.

பல வருஷங்கள் வரையில் கிழக்கிந்தியக் கம்பெனியானது பணம் பண்ணுவதிலும் தன் பங்குதாரர்களுக்குப் பெரிய பெரிய லாபப் பங்கீடுகள் அளிப்பதிலும் தான் சிரத்தைகொண்டிருந்தது. நல்ல சாலைகளும் மார்க்கங்களும் அமைப்பதற்கு அவர்கள் செலவழித்த தொகை மிகவும் குறைவு. கல்வி, சுகாதாரம், ஆஸ்பத்திரிகள் போன்ற விஷயங்களுக்கு அவர்கள் செம்பாலடித்த காசு செலவழிக்கவில்லை. ஆனால், பிறகு, இந்தியாவிலுள்ள மூலப் பொருள்களை வாங்குவதிலும் பிரிட்

டனில் செய்யப்பட்ட யந்திர சாமான்களை இங்கே விற்பதிலும் பிரிட்டிஷார் விசேஷக் கவனம் செலுத்தத் தொடங்கினார்கள். அப்பொழுது அவர்கள் போக்குவரவு சாதனங்களைப்பற்றிய தங்களுடைய பழைய கொள்கையை மாற்றிக்கொண்டார்கள். இந்தியாவின் கடற்கரையில் புதிய நகரங்கள் தோன்றின. அவை நாள்தோறும் பெருகிவரும் வெளிநாட்டு வியாபாரத்துக்கு உதவிபுரிந்தன. இந்நகரங்கள்—பம்பாய், கல்கத்தா, சென்னை, பிற்பாடு கராச்சி போன்றவை—இந்தியாவிலுள்ள மூலப் பொருள்களை வாங்கி வெளிநாடுகளுக்கு அனுப்பியும், வெளிநாடுகளிலிருந்து, முக்கியமாக இங்கிலாந்திலிருந்து வரும் யந்திர சாமான்களை ஏற்று இந்தியாவில் விற்பனைக்காக விநியோகம் செய்தும் வந்தன. இப்புதிய நகரங்கள் மேனாடுகளில் தோன்றி வளர்ந்து வந்த, யந்திரத் தொழிலில் சிறந்த, லிவர்பூல், மான்செஸ்டர், பர்மிங்ஹாம், ஷெப்பீல்டு போன்ற பெரிய நகரங்களினின்று பெரிதும் வேறுபட்டிருந்தன. மேற்கூறிய நகரங்கள் பெரிய தொழிற்சாலைகளில் ஏராளமான சாமான்களை உற்பத்தி செய்பவையாகவும், அவற்றை வெளிநாடுகளுக்கு அனுப்பும் துறைமுகங்களாகவும் இருந்தன. ஆனால், புதிய இந்திய நகரங்களோ ஒன்றையும் உற்பத்தி செய்யவில்லை. அவை வெறுமே வெளிநாட்டு வியாபாரத்துக்குரிய கிடங்குகளாகவும், அந்நிய ஆட்சியின் சின்னங்களாகவும் இருந்தன.

பிரிட்டிஷார் இந்தியாவில் அனுஷ்டித்த கொள்கையின் பயனாக இந்தியா மேலும் மேலும் நாடு நீர்மை கொண்டதாக ஆகிவந்ததென்றும், ஜனங்கள் பட்டணங்களைவிட்டுக் கிராமங்களையும் விவசாயத்தையும் நாடிச் சென்றார்கள் என்றும் நான் உனக்குக் கூறினேன்.

ஆயினும், அதை யாதொருவிதத்தும் தடுக்காமலேயே, இப்புதிய நகரங்கள் கடற்கரையோரத்தில் தோன்றின. அவை சிறிய நகரங்களிலும் பட்டணங்களிலும் உள்ள ஜனங்களைத் தம்பால் ஈர்த்தனவே ஒழியக் கிராம ஜனங்களை ஈர்க்கவில்லை. பொதுவாக இந்தியா கிராமமயமாகி வந்த அந்த மாறுதல் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டே இருந்தது.

கடற்கரை ஓரத்தில் தோன்றிய இப்புதிய நகரங்களை உள்நாட்டுடன் இணைக்கவேண்டியது அவசியமாயிருந்தது. அப்பொழுதுதானே உள்நாட்டு மூலப் பொருள்களைச் சேகரம் பண்ணவும் வெளிநாட்டு யந்திரப் பொருள்களை விநியோகம் செய்யவும் சவுகரியமாயிருக்கும்? கடற்கரை நகரங்களையன்றி உள்நாட்டில் வேறுசில மாகாணத் தலைநகர்களும் தோன்றின. இவற்றையெல்லாம் ஒன்றோடொன்று இணைப்பதற்கு நல்ல போக்குவரவு சாதனங்கள் இன்றியமையாதனவாயிருந்தன. முதலில் நல்ல சாலைகளும் பிறகு ரயில் மார்க்கங்களும் போடப்பட்டன. முதல் ரயில் மார்க்கம் பம்பாயில் 1853-ம் ஆண்டில் போடப்பட்டது.

இந்தியக் கைத்தொழில்கள் அழிக்கப்பட்டமை காரணமாகத் தோன்றிய புதிய நிலைமைகளுக்குப் பொருந்தத் தங்களுடைய போக்கை மாற்றிக் கொள்வது கிராம சமுதாயங்களுக்கு மிகவும் கஷ்டமாயிருந்தது. ஆனால், தரைமார்க்கங்களும் ரயில் மார்க்கங்களும் நாடெங்கும் பெருகப் பெருகத் தொன்று தொட்டுக் காலந் தள்ளி வந்த கிராம சமுதாய முறை இறுதியாக முறிந்து வீழ்ந்தது. உலகமே வந்து அதன் கதவைத் தட்டும்போது அச் சிறிய கிராமக் குடியரசு எவ்வாறு அதனின்றும் ஒதுங்கியிருக்க முடியும்? இப்பொழுது ஒரு கிராமத்திலிருந்து இன்னொரு கிராமத்துக்குப்

பொருள்களை அனுப்புவது சுலபமாகப் போய்விட்டது. ஆகவே, ஒரு கிராமத்தின் விலைவாசிகள் உடனே இன்னொரு கிராமத்தின் விலைவாசிகளைப் பாதிக்கத் தொடங்கின. உலகப் போக்கு வரவு சாதனங்களின் அபிவிருத்தி காரணமாகக் கானடா அல்லது ஐக்கிய அமெரிக்காவின் கோதுமை விலையானது இந்தியாவின் கோதுமை விலையைப் பாதிப்பது சாத்தியமாயிற்று. இவ்வாறு, காலத்தின் சக்தியால் இந்தியக் கிராம சமுதாய முறையானது உலக விலைவாசிகளின் சுழலில் அகப்பட்டுக்கொண்டது. இந்தியக் கிராமத்தின் பழைய பொருளியல்முறை சிதைந்து போய்விட்டது; புதிய முறை அதன்மீது பலவந்தமாகச் சுமத்தப்பட்டது. அதைக் கண்டு விவசாயி பிரமித்துப் போனான். தன்னுடைய கிராமச் சந்தைக்கு வேண்டிய உணவுப் பொருள்களையும் பிறபொருள்களையும் உற்பத்தி செய்வதற்கு மாறாக அவன் இப்போது உலகச்சந்தைக்கு அவற்றை உற்பத்தி செய்யத் தலைப்பட்டான். உலகப் பொருள் உற்பத்தி, உலக விலைவாசிகள் என்னும் சுழலில் சிக்கிக்கொண்ட அவ்ன் ஆழ அமிழ்ந்துகொண்டே சென்றான். இதற்கு முன்பெல்லாம் இந்தியாவில் பஞ்சங்கள் ஏற்படுவதுண்டு. பயிர் சாவியாகப்போய்விடும். ஜனங்களின் உணவுக்கு வேறு வழி இராது. தேசத்தின் மற்றப் பாகங்களிலிருந்தும் உணவைக்கொண்டு வருவதற்கும் சவுகரியம் இருப்பதில்லை. இதனாலெல்லாம் உணவுப் பஞ்சங்கள் தோன்றும். ஆனால், இப்பொழுதோ ஒரு விசித்திரம் நிகழ்ந்தது. தேசத்தில் உணவுக்குக் குறைவில்லை. ஆனால், ஜனங்கள் மட்டும் பட்டினி கிடந்தார்கள். ஒரு குறிப்பிட்ட இடத்தில் உணவுப் பொருள்கள் இல்லாவிட்டாலும் வேறு இடங்களிலிருந்து ரயில் மூலமாகவும் வேறு துரித சாதனங்கள் மூலமாகவும் அவற்றைக் கொண்டுவரக்

கூடும். ஆகவே, உணவு இருந்தது; ஆனால், அதை வாங்குவதற்குப் பணம் இல்லை. இவ்வாறு, உணவுப் பஞ்சங்களுக்குப் பதிலாகப் பணப் பஞ்சங்கள் உண்டாயின. இதைவிட வேடிக்கை என்னவென்றால், விளைவு மிகுதியாக இருந்த காரணத்தாலேயே விவசாயிகளுடைய கஷ்டம் அதிகரித்தது. சென்ற மூன்று வருஷத்துச் சுணக்கத்தில் இதை நாம் நிதரிசனமாகப் பார்த்து வருகிறோம். ஆக, பழைய கிராம சமுதாய முறை ஒழிந்தது. கிராமப் பஞ்சாயத்தும் மறைந்தது. இதற்காக நாம் அதிகமாக ஒன்றும் வருந்த வேண்டியதில்லை. அம்முறை காலாவதி ஆகிவிட்டது. அது நவீன நிலைமைகளுக்கு ஏற்றதாயில்லை. ஆனால், மீண்டும், பழைய முறை மறைந்ததே ஒழிய அதன் ஸ்தானத்தில் புதிய நிலைமைகளுக்கு ஏற்ற புதிய முறை ஒன்றும் தோன்றவில்லை. இந்தக் கிராமப் புனர்ஜன்மமும், கிராமப் புனருத்தாரணமும் இனி நம்மால் ஏற்பட வேண்டியவை ஆகும்.

பிரிட்டிஷ் கொள்கை காரணமாக நிலத்துக்கும் விவசாயிக்கும் நேரிட்ட மறைமுகமான பலன்களையே நாம் இதுவரை ஆராய்ந்தோம். இனி, நிலம் சம்பந்தப்பட்ட மட்டில் கிழக்கிந்தியக் கம்பெனியின் கொள்கை எவ்வாறிருந்தது என்று பார்ப்போம். அதாவது, எந்தக் கொள்கை விவசாயியையும் இன்னும் நிலத்தோடு தொடர்பு கொண்ட எல்லோரையும் நேர்முகமாகப் பாதித்ததோ அதைப் பார்ப்போம். இந்த விஷயம் மிகவும் சிக்கலானது; அதோடு அவ்வளவு இன்பமாகவும் இராது. ஆனால், நமது தேசம் ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடி வரையில் ஏழை விவசாயிகள் மயமாகவே இருக்கிறது. ஆகவே, அவர்களுடைய கஷ்டம் என்ன என்பதை அறிய நாம் சிறிதாவது முயற்சிக்க

வேண்டும். அதை அறிந்து கொண்ட பிறகு, அவர்களுக்கு எவ்விதத்தில் தொண்டு புரியலாம், அவர்களுடைய நிலையை எவ்வாறு உயர்த்தலாம் என்று பார்க்க வேண்டும்.

ஜமீன்தார்கள் என்றும், தாலுக்காதார்கள் என்றும், அவர்களுடைய குடிகள் அல்லது குடிவாரதார்கள் (Tenants) என்றும் நாம் கேள்விப்படுகிறோம். குடிவாரதார்களில் பலவகை உண்டு. இன்னும், குடி வாரதார்களுக்கும் குடிவாரதார்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு உள்குடிவாரதார்கள் (Sub-Tenants) என்று பெயர். இந்தக் கொக்குச் சிக்குகளெல்லாம் உனக்கு வேண்டாம். பொதுவாகச் சொல்லின், இன்று ஜமீன்தார்கள் என்போர் அரசாங்கத்துக்கும் விவசாயிக்கும் நடுவிலுள்ள 'நடு மனிதர்' (Middle men) ஆவர். நிலத்தை உழுது பயிரிடும் விவசாயிதான் அவர்களுடைய குடிவாரதாரன். அவன் தான் உபயோகிக்கும் நிலத்திற்காக ஜமீன்தார்களுக்கு வாரம் (Rent) அல்லது ஒரு வித வரி செலுத்துகிறான். அவ்வாரம் ஜமீன்தாருக்கு உரியதென்று கருதப்படுகிறது. அவ்வாரத்திலிருந்து ஒரு பகுதியை எடுத்து ஜமீன்தார் தன் நிலத்துக்கு வரியாக அரசாங்கத்துக்குச் செலுத்துகிறான். இவ்வாறு நிலத்தின் விளையுள் மூன்று பாகமாகப் பகுக்கப்படுகிறது. ஒரு பாகம் அரசாங்கத்துக்கும் இன்னொரு பாகம் ஜமீன்தாருக்கும் போகின்றன. மூன்றாவது பாகம் விவசாயி-குடிவாரதாரனிடம் தங்கி விடுகிறது. இம் மூன்று பாகங்களும் சம பாகங்கள் என்று நீ எண்ணி விடக் கூடாது. விவசாயி நிலத்தில் பாடுபடுகிறான். அவன் உழுதும், விதைத்தும், உரம் போட்டும், நீர் பாய்ச்சியும், களை பறித்தும், காவல் காத்தும் இன்னும் பல்விதத்தும் உழைப்பு எடுப்பதால்தான் நிலம்

விளைகிறது. அவனுடைய உழைப்பின் பலனை அனுபவிக்க அவன் உரிமை உடையவன் என்பது தெளிவு. அரசாங்கமோ சமூகம் முழுமைக்கும் பிரதிநிதியாக விளங்குகிறது. அது எல்லாருடைய நலன்களையும் முன்னிட்டுப் பல முக்கியமான காரியங்கள் செய்யவேண்டியிருக்கிறது. உதாரணமாக, அரசாங்கம் எல்லாக் குழந்தைகளும் கல்வி கற்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்; நல்ல சாலைகளையும் இதரப் போக்கு வரவு சாதனங்களையும் அமைக்க வேண்டும்; வைத்திய சாலைகள் வைக்க வேண்டும்; பொது சுகாதார ஏற்பாடுகள் செய்ய வேண்டும்; நகரங்களில் இளமரச் சோலைகளும் பொருட்காட்சிச் சாலைகளும் ஏற்படுத்த வேண்டும்; இன்னும் பற்பல செய்ய வேண்டும். இவையெல்லாம் செய்வதற்கு அரசாங்கத்துக்குப் பணம் தேவை. ஆகவே, நிலத்தின் விளையுளில் ஒரு பாகத்தைப் பெறுவதற்கு அதற்கு உரிமை உண்டு. அந்தப் பாகம் எவ்வளவு என்பது வேறு விஷயம். விவசாயி அரசாங்கத்துக்குச் செலுத்தும் பணம் சாலையென்றும், கல்வியென்றும், சுகாதாரம் என்றும், இன்னும் பலபடியாகவும் திரும்பி வருகிறது, அல்லது, வரவேண்டும். இந்தியாவில் தற்போதுள்ள அரசாங்கம் அந்நிய அரசாங்கமாயிருப்பதால் நாம் அதை வெறுப்பது சகஜம். ஆனால், நன்கு அமைக்கப் பட்ட ஒரு சுதந்திர நாட்டில் அரசாங்கம் வேறு, ஜனங்கள் வேறு என்பதில்லை; இரண்டும் ஒன்றே.

ஆகவே, நிலவருவாயில் விவசாயிக்குச் செல்லும் பாகத்தையும் அரசாங்கத்துக்குச் செல்லும் பாகத்தையும் இப்போது கவனித்தோம். மூன்றாவது பாகம் ஜமீன்தார் அல்லது நடு மனிதனுக்குச் செல்கிறது. அதை அடைய அவன் தகுதி உடையவனா? அதை அடைவதற்கு அவன் மலக்குவது தான் என்ன? ஒன்றுமில்லை, ஒன்றுமே

யில்லை. வெறுமே நில வருமானத்தில் ஒரு பெரும் பகுதியை—வாரத்தை—அவன் எடுத்துக் கொள்ளுகிறான். உற்பத்திக்கு யாதொரு உதவியும் புரியாமலேயே அவன் அதைப் பெறுகிறான். ஆகவே, ஜமீன்தார் என்போன் வெறும் அஜாகளஸ்தமாகவே—ஆட்டுக்குக் கழுத்தில் இரண்டு தொங்குகிறதே அது—முடிகிறான். அவன் பூமிக்குப் பயனற்றவன் என்பது மட்டு மல்ல; அவன் அதற்கொரு பாரமாகவும் வில்லங்கமாகவுமே இருக்கிறான். இந்த அநாவசியமான பாரத்தைத் தாங்க மாட்டாமல் விவசாயியின் முதுகு நெளிகிறது. அவன் தானே தன் வருமானத்தில் பெரும் பகுதியை ஜமீன்தாருக்கு அழுகிறான்? அதனால்தான் 'ஜமீன்தார் அல்லது தாலுக்காதார் என்பவன் முற்றிலும் அநாவசியமான ஒரு நடு மனிதன், ஜமீன்தாரி முறையே தீயது, அதை மாற்ற வேண்டும், நடு மனிதன் ஒழிய வேண்டும்' என்று பலர் எண்ணுகிறார்கள். தற்போது இந்தியாவில் முக்கியமாக மூன்று மாகாணங்களில்—வங்காளம், பீகார், ஐக்கிய மாகாணம்—இந்த ஜமீன்தாரி முறை அமுலில் இருக்கிறது.

மற்ற மாகாணங்களிலுள்ள விவசாயிகள் அரசாங்கத்துக்குத் தாங்கள் செலுத்தவேண்டிய நிலத்தீர்வையை நேரில் செலுத்துகிறார்கள். அங்கே நடு மனிதர்கள் இல்லை. அவர்கள் ஒரோவழி 'நிலச்சுவான் விவசாயிகள்' (Peasant Proprietors) என்று அழைக்கப் படுகிறார்கள். பஞ்சாபில் அவர்களுக்கு 'ஜமீன்தார்கள்' என்று பெயர். ஆனால், அவர்களுக்கும் வங்காளம், பீகார், ஐக்கிய மாகாணம் ஆகிய இடங்களிலுள்ள பெரிய ஜமீன்தார்களுக்கும் அதிக வித்தியாசம் உண்டு.

இந்த நீண்ட விளக்கத்துக்குப் பின் உனக்கு நான் ஒன்று கூற விரும்புகிறேன். வங்காளத்திலும், பீகாரிலும், ஐக்கிய மாகாணத்திலும் ஜமீன்தாரி முறை பிரபலமாயிருக்கிறது. தற்போது நாம் அதைப் பற்றி அதிகமாகக் கேள்விப்படுகிறோம். ஆனால், அது இந்தியாவுக்கு முற்றிலும் புதிது என்னும் விஷயத்தை நீ அறிந்து கொள்ள வேண்டும். ஜமீன்தாரி முறை பிரிட்டிஷாரின் சிருஷ்டியாகும். பிரிட்டிஷார் வருவதற்கு முன் இந்தியாவில் ஜமீன்தாரி முறை கிடையாது.

பழைய காலத்தில் ஜமீன்தார்களோ நடு மனிதர்களோ இல்லை. விவசாயிகள் தங்கள் வருமானத்தின் ஒரு பகுதியை அரசாங்கத்துக்கு நேரில் செலுத்தி வந்தார்கள். சில சமயங்களில் ஒரு கிராம விவசாயிகளின் சார்பாக அந்தக் கிராமப் பஞ்சாயத்து அரசாங்கத்துக்கு வரி செலுத்தி வந்தது. அக்பருடைய காலத்தில், புகழ் பெற்ற அவருடைய நிதி மந்திரியான ராஜாதோதர்மல் என்பவன் நிலம் பூராவையும் ஒழுங்காகச் சர்வே (அளவு, தரம், மதிப்பு முதலியன நிர்ணயத்தல்) செய்வித்தான். அரசாங்கம் விவசாயியினிடமிருந்து மூன்றிலொரு கடமை பெற்று வந்தது. அவன் விரும்பினால் அதை ரொக்கமாகவும் கொடுக்கலாம். மொத்தத்தில் வரிப் பளு அதிகமாக இல்லை. வரிகள் மிகவும் சிறிது சிறிதாக உயர்ந்து வந்தன. அதற்குப் பிறகு மொகலாய சாம்ராஜ்யம் சீர் குலைந்தது. மத்திய அரசாங்கம் பலவீனம் அடைந்தது. அவ்வரசாங்கத்தால் ஒழுங்காக வரி வசூலிக்க முடியவில்லை. ஆகவே, ஒரு புதுவகையான வசூல்முறை தோன்றியது. வரிவசூல் செய்வதற்குத் தண்டல்காரர்கள் (Tax Collectors) நியமிக்கப் பட்டார்கள். அவர்கள் சம்பளம் பெறும் ஊழியர்களாக இல்லை; வரி வசூல் செய்யும் ஏஜெண்டுகளாகவே அவர்கள் கருதப்பட்டார்கள். வசூல் செய்ததில் பத்தில் ஒரு பாகத்தை அவர்கள் எடுத்துக்கொண்டார்கள். அவர்கள் நிலவரி

குத்தகைக்காரர் (Revenue Formers) என்றும் ஒரோவழி ஜமீன்தார்கள் அல்லது தாலுக்காதார்கள் என்றும் அழைக்கப்பட்டார்கள். ஆனால், அந்த வார்த்தைகளுக்கு இப்போதுள்ள அர்த்தம் அப்போது இல்லை என்பதை நீ மறந்துவிடக்கூடாது.

மத்திய அரசாங்கம் க்ஷீணிக்கவும் இவ்வரி வசூல் முறையும் சீர்கேடுற்று வந்தது. சில இடங்களில் நிலவரிக் குத்தகை ஏலம்போடும் நிலைமைக்குக்கூட வந்துவிட்டது. ஏலத்தில் அதிகத் தொகைக்குக் கேட்பவனுக்கு அவ்வுரிமை தரப்பட்டது. இத்தகைய நிலவரிக் குத்தகைதாரனுக்கு ஏழை விவசாயிகளிடமிருந்து எவ்வளவு வேண்டுமானாலும் பறிப்பதற்கு உரிமை இருந்தது. அவன் அவ்வுரிமையைப் பரிபூரணமாகப் பயன்படுத்திக் கொண்டான். சிறிது சிறிதாக இந்நிலவரிக் குத்தகைதாரர்கள் பரம்பரைப் பாத்தியதை கொண்டாடவும் தலைப்பட்டார்கள். அவர்களை நீக்கக்கூடிய சக்தி அரசாங்கத்துக்கு இல்லை.

உண்மையில் கிழக்கிந்தியக் கம்பெனியானது முதன் முதலில் வங்காளத்தில் பெற்ற சட்ட பூர்வமான உரிமை மொகலாயச் சக்ரவர்த்தியின் சார்பில் நிலவரி தண்டும் உரிமையே ஆகும். 1765-ல், கம்பெனிக்கு, ‘திவானி’ அளிக்கப்பட்டது என்பது இதுதான். ஆகவே, டில்லியிலுள்ள மொகலாயச் சக்கரவர்த்திக்குக் கம்பெனி ஒரு திவான்போல இருந்தது. ஆனால், அது வெறும் பெயரளவில்தான். 1757-ல் நடந்த பிளாசி யுத்தத்துக்குப் பின்பு வங்காளம் எங்கும் ஆங்கிலேயர் ஓங்கி இருந்தனர். ஏழை மொகலாயச் சக்கரவர்த்தியை ஏனென்று கேட்பார் ஒருவருமில்லை.

கிழக்கிந்தியக் கம்பெனியும் அதன் அதிகாரிகளும் பணத்துக்குப் பேயாயலைந்தார்கள். அவர்களுடைய

ஆசைக்கு அளவில்லை. நான் முன்பே சொன்னபடி, அவர்கள் வங்காளத்தின் கஜானாவைக் காலிசெய்து விட்டார்கள். எங்குப் பணத்தைக் கண்டாலும் அவர்கள் அதைப் பறித்துக் கொண்டார்கள். அவர்கள் வங்காளத்தையும் பீகாரையும் கசக்கிப்பிழிந்து, அவ்விடங்களில் எவ்வளவு அதிகமாக நிலவரி பெறமுடியுமோ அவ்வளவும் பெற்றுவந்தார்கள். அவர்கள் தங்களுக்குக் கீழே நிலவரிக் குத்தகைதார்களை ஏற்படுத்தி அவர்கள் செலுத்த வேண்டிய தொகையை அநியாயமாக அதிகரித்துக்கொண்டே சென்றார்கள். மிகக்குறைந்த காலத்திற்குள்ளேயே நிலவரியானது இரட்டிக்கப்பட்டு இரக்கமற்ற முறையில் வசூலிக்கவும் பட்டது. வரிகட்டமுடியாத நிலவரிக் குத்தகைதாரன் தட்சணமே அகற்றப்பட்டான். நிலவரிக் குத்தகைதார்கள் தங்கள் பங்குக்கு விவசாயிகளை வறுத்தெடுத்தார்கள். அவர்கள் விவசாயிகளுக்குத் தாங்கமுடியாத வரிவிதித்துக் கட்டத் தவறியவர்களை நிலத்தைவிட்டு நீக்கினார்கள். பிளாசி யுத்தம் நடந்து பன்னிரண்டாண்டுகள் முடியுமுன், கம்பெனிக்குத் ‘திவானி’ வழங்கி நாலாண்டுகள் கழியுமுன், கம்பெனியின் நிலவரிக்கொள்கையும் மழையின்மையும் சேர்ந்து வங்காளத்திலும் பீகாரிலும் கொடிய பஞ்சம் ஒன்றை உண்டாக்கின. அந்தப் பஞ்சத்தின் போது ஜனத்தொகையில் மூன்றிலொருபங்கு இறந்துபட்டது. 1769-70-ல் நேர்ந்த இப்பஞ்சத்தைப் பற்றி முன்கடிதம் ஒன்றில் பிரஸ்தாபித்திருக்கிறேன். மக்கள் மாண்டு மடிந்த அக்கருப்பிலும் கம்பெனி நிலவரித் தொகை பூராவும் வசூலித்துவிட்டது. இதற்குக் காரணமான கம்பெனி அதிகாரிகளின் ஆச்சரியமான திறமையைப் பாராட்டாமலிருக்க முடியாது. ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் கோடிக்கணக்கில் மாண்டார்கள்.

மாண்டவர்களின் பிணங்களிலிருந்தும் கம்பெனி அதிகாரிகள் பணம் பறித்துக் கொண்டார்கள் என்ருல் அவர்களுடைய திறமையை யார்தான் வியவாமல் இருக்க முடியும்? இவ்வளவும் இங்கிலாந்திலுள்ள கொழுத்த முதலாளிகளுக்குக் கொழுத்த லாபப் பங்கீடுகள் அளிப்பதற்காகச் செய்யப்பட்டது.

இந்த நிலைமை இருபது வருஷங்களுக்கு மேலும் நீடித்தது. கருப்போ பஞ்சமோ பிணம் பிடுங்கிக் கம்பெனியின் பணம் பிடுங்கி வேலைமட்டும் நிற்கவில்லை. செழிப்பு மிகுந்த வங்காளம் அழிக்கப்பட்டு விட்டது. பெரிய நிலவரிக் குத்தகைதார்கள் கூடப் பிச்சையெடுக்கும் நிலைமைக்கு வந்துவிட்டார்கள் என்ருல் ஏழை விவசாயிகளின் நிலைமையைக் குறித்துக் கூற வேண்டியதே இல்லை. நிலைமை இவ்வளவு தூரம் சீர்கேடடைந்தபின் கிழக்கிந்தியக் கம்பெனி விழித்தெழுந்து, அதற்குப் பரிகாரம் காண முயன்றது. அப்போது லார்டு கார்ன்வாலிஸ் என்பவன் கவர்னர் ஜெனராலாயிருந்தான். அவன் இங்கிலாந்தில் ஒரு பெரிய நிலச்சுவான்தார். பிரிட்டிஷ் நிலச்சுவான்தார்களைப் போலவே அவன் இந்தியாவிலும் நிலச்சுவான்தார்களை உண்டாக்க விரும்பினுன். நிலவரிக் குத்தகைதார்கள் சிலகாலமாகப் பெரிய நிலச்சுவான்தார்களைப் போலவே நடந்து வந்தார்கள். கார்ன்வாலிஸ் அவர்களை அவ்வாறே கருதி அவர்களுடன் ஒரு ஏற்பாடு செய்துகொண்டான். அதன் பயனுக, இந்தியா முதல்தடவையாக இப்புதுவகையான நடுமனிதர் கூட்டத்தைப் பெற்றது. நிலத்தை உழுது பயிரிட்ட விவசாயிகள் வெறும் குடிவாரதார்கள் ஆனுர்கள். பிரிட்டிஷார் இந்நிலச்சுவான்தார்கள் அல்லது ஜமீன்தார்களுடன் நேர்முகமான தொடர்பு வைத்துக்கொண்டு, குடிவார்தார்களை ஜமீன்தார்கள் தங்கள் இஷ்டப்படி நடத்துவதற்கு விட்டுவிட்டார்கள். ஜமீன்தார்களின் பேராசையிலிருந்து குடிவாரதார்களைக் காப்பாற்றுவதற்கு ஒருவரும் இல்லை.

1793-ம் ஆண்டில், வங்காளத்தையும் பீகாரையும் சேர்ந்த ஜமீன்தார்களுடன் கார்ன்வாலிஸ் பிரபு செய்துகொண்ட ஏற்பாடு 'சாசுவத நிலத்தீர்வை ஏற்பாடு' (Permanent Settlement) என்று அழைக்கப்படுகிறது. 'ஏற்பாடு' அல்லது 'செட்டில்மெண்டு' என்னும் சொல்லுக்கு ஒவ்வொரு ஜமீன்தாரும் அரசாங்கத்துக்குச் செலுத்தவேண்டிய நிலத்தீர்வையை நிர்ணயிப்பது என்று பொருள். வங்காளத்திலும் பீகாரிலும் இது சாசுவதமாக நிர்ணயிக்கப்பட்டது. அதாவது, என்றென்றும் மாருதது என்று பொருள். பிற்பாடு, வடமேற்கில் அயோத்தியும் ஆக்ராவும் பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் வந்தன. அவ்விடங்களில் பிரிட்டிஷார் தங்கள் கொள்கையை மாற்றிக்கொண்டு விட்டார்கள். அங்கே அவர்கள் ஜமீன்தார்களுடன் தாற்காலிக ஏற்பாடு செய்துகொண்டார்கள். அது வங்காளத்தில் செய்து கொண்டது போன்ற சாசுவதமான ஏற்பாடு அல்ல. முப்பது வருஷங்களுக்கு ஒருமுறை அவ்வேற்பாடு அல்லது 'செட்டில்மெண்டு' மீண்டும் பரிசீலனை செய்யப்பட்டு நிலத்தீர்வையும் புதிதாக நிர்ணயிக்கப்படும். ஒவ்வொரு 'செட்டில்மெண்டின்' போதும் தீர்வை ஏறிக்கொண்டே சென்றது.

தெற்கே, சென்னை மாகாணத்திலும் அதைச் சார்ந்த இடங்களிலும் ஜமீன்தாரிமுறை அமுலில் இல்லை. அங்கே விவசாயிகளே நிலத்திற்குச் சொந்தக்காரர்களாகவும் இருந்தார்கள். ஆகவே, கிழக்கிந்தியக் கம்பெனி அவர்களுடன் நேரில் ஏற்பாடு செய்துகொண்டது. ஆனுல், அங்கும் எங்கும் கம்பெனி அதி

காரிகள் நிலத்தீர்வையை மிகவும் உயர்வாக நிர்ணயம் செய்தார்கள். அப்படியும் அவர்களுடைய ஆசை அடங்குவதாயில்லை. அவ்வாறு விதிக்கப்பட்ட வரியை அவர்கள் நிர்த்தாட்சணியமாக வசூலித்தார்கள். வரி கொடாத விவசாயி உடனே நிலத்தை விட்டு அகற்றப்பட்டான். திக்கற்ற அவ்வேழைக்குப் போக்கிடம் ஏது? நிலத்திலுள்ள நெருக்கடி காரணமாக அதற்கு எப்போதும் கிராக்கி இருந்தது. எந்த நிபந்தனையின் மீதும் நிலத்தை ஏற்றுக் கொள்வதற்கு மக்கள் தயாராக இருந்தார்கள். அவர்களுடைய பசிக்கொடுமையே அதற்குக் காரணம். விவசாயிகளின் பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டல்லவா? அந்த எல்லையும் மீறிப் போன காலத்தில் அவர்கள் கலகம் செய்தார்கள். அத்தகைய கலகங்கள் அடிக்கடி நேர்ந்தன.

பத்தொன்பதாவது நூற்றாண்டின் இடையில் வங்காளத்தில் இன்னொரு பெரிய கொடுமை தோன்றியது. சில ஆங்கிலேயர்கள் நிலச்சுவான்தார்கள் ஆகி அவுரி வியாபாரம் செய்யத் தலைப்பட்டார்கள். அவுரிச் செடி பயிரிடும் விஷயத்தில் அவர்கள் தங்களுடைய குடிவாரதார்களுக்குக் கடும் நிபந்தனைகள் விதித்தார்கள். குடிவாரதார்கள் தங்களுடைய நிலத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் தான் அவுரி பயிரிட வேண்டும். பிறகு ஒரு குறிப்பிட்ட விலைக்கு அதை ஆங்கிலேய நிலச்சுவான்தார்களுக்கு—அவர்கள் தோட்ட முதலாளிகள் என்று அழைக்கப்பட்டார்கள்—விற்கவேண்டும். இது 'தோட்ட விவசாய முறை' (Plantation System) என்று சொல்லப்படுகிறது. குடிவாரதார்கள் மீது சுமத்தப்பட்ட நிபந்தனைகள் மிகவும் கடுமையாக இருந்தபடியால் அவற்றின்படி நடப்பது அவர்களுக்கு மிகவும் கஷ்டமாயிருந்தது. உடனே, பிரிட்டிஷ் அரசாங்கம், தோட்ட

முதலாளிகளுக்கு உதவி செய்வதற்காக, விசேஷச் சட்டங்களை இயற்றி அந்நிபந்தனைகளின்படி அவுரி பயிரிடுமாறு ஏழைக் குடிவாரதார்களைக் கட்டாயப் படுத்தியது. அச்சட்டங்களும், அவற்றில் காணப்பட்ட தண்டனைகளும் தோட்டக் குடிவாரதார்களைச் சில அம்சங்களில் தோட்ட முதலாளிகளின் அடிமைகள் ஆக்கிவிட்டன. அவுரித் தொழிற்சாலைகளின் ஆங்கில ஏஜெண்டுகளும் இந்திய ஏஜெண்டுகளும் குடிவாரதார்களைப் பயமுறுத்தி அவர்களுடைய உயிரை எடுத்து வந்தார்கள். என்ன அக்கிரமம் புரிந்தாலும் அரசாங்கம் நம்மைக் கைவிடாது என்கிற உறுதி அந்த ஏஜெண்டுகளுக்கு இருந்தது. அவுரி விலை வீழ்ந்து விடுகிற காலத்தில், நெல் போன்ற வேறு பயிர் பயிரிடுவதால் விவசாயிகள் லாபம் அடையக் கூடும். ஆனால், அவ்வாறு செய்வதற்கு அவர்கள் அனுமதிக்கப்பட வில்லை. அத்தோட்ட விவசாயிகள் அளவில்லாத கஷ்ட நஷ்டங்களுந்கு ஆளானார்கள். அவர்களுந்தான் எவ்வளவு தூரம் பொறுப்பார்கள். கடைசியில், அவர்கள் பொறுமை இழந்து, தோட்ட முதலாளிகளுக்கு விரோதமாகக் கிளம்பி, ஒரு தொழிற்சாலையைச் சூறையாடி நாசம் செய்து விட்டார்கள். ஆனால், அவர்கள் அடக்கப்பட்டார்கள். மீண்டும் அவர்கள் முதலாளிகளுக்குப் பணிந்து வாழவேண்டியதாயிற்று.

19-வது நூற்றாண்டில் விவசாயிகளின் நிலை எவ்வாறு இருந்தது என்று இக் கடிதத்தில் சற்று விரிவாகக் காட்ட முயன்றேன். இந்திய விவசாயியின் நிலை வர வரச் சீர்கெட்டு வந்தது. அவனை ஒருவர் இருவர் அல்ல, எல்லாரும் கசக்கிப் பிழிந்தார்கள். வரி வசூலிப்பவன், நிலச்சுவான்தார், சாவகார், தோட்ட முதலாளி, அவனுடைய ஏஜெண்டு எல்லாரும் விவசாயியைச் சுரண்டி வந்தார்கள். எல்லோரையும் விடப் பெரிய சாவகார் ஆன

பிரிட்டிஷ் சர்க்கார் கிழக்கிந்தியக் கம்பெனி மூலமாகவோ அல்லது நேரிடையாகவோ அவனுடைய உயிர்ச்சத்தை உறிஞ்சி வந்தது. ஏனெனில், எல்லாவிதமான சுரண்டலுக்கும் அடிப்படையாக இருந்து வந்தது பிரிட்டிஷார் இந்தியாவில் தெரிந்து வேண்டுமென்றே அனுஷ்டித்து வந்த கொள்கைதான். குடிசைத் தொழில்கள் அழிக்கப் பட்டன. அவற்றின் ஸ்தானத்தில் வேறுவகையான தொழில்கள் தோன்றவில்லை. பட்டணத்தில் வேலை இழந்த கைத்தொழிலாளி கிராமத்துக்குச் சென்றான். அதன் பயனாக உழவுத் தொழிலில் நெருக்கடி மிருந்தது. ஜமீன்தாரி முறையும், தோட்ட விவசாய முறையும் விவசாயியை அற வடிகட்டின. ஜமீன்தாருக்கு அதிக வரி விதிக்கப்பட்டது. அவன் குடிவாரதாருக்கு அதைவிட அதிகமான வாரம் விதித்து அதை நிர்த்தாட்சிணியமாக வசூல் செய்தான். ஜமீன்தாருக்கு வாரம் செலுத்துவதற்காக விவசாயி சாவாகாரிடம் கடன்பட்டான். சாவாகாரின் இரும்புப் பிடியிலிருந்து அவனால் மீளவே முடியவில்லை. காலத்தில் வாரம் அல்லது வரி செலுத்தத் தவறியதற்காகப் பலர் நிலத்தினின்றும் அகற்றப்பட்டனர். இவை எல்லாவற்றிற்கும் மேலாகப் போலீஸ்காரன், வரி தண்டுவோன், ஜமீன் ஏஜண்டு, தொழிற்சாலை ஏஜண்டு இவர்களுடைய அட்டகாசமும் கொடுமையும் வேறு. எல்லாமாகச் சேர்ந்து விவசாயியின் உணர்ச்சியையும் உயிரையும் அநேகமாகக் கொன்றுவிட்டன. இவற்றின் பயனாக நாடு சோகக் கடலில் மூழ்கிக் கரையேற வழி காணாது தத்தளித்தது.

கொடிய பஞ்சங்கள் தோன்றிக் கோடிக் கணக்கான உயிரைக் கூற்றுவனுக்கு விருந்திட்டன. ஜனங்கள் உணவின்றிப் பட்டினியால் வாடினார்கள். ஆனால், அதே

சமயத்தில் கோதுமையும் வேறு உணவுப் பொருள்களும் வியாபாரிகளின் லாபத்துக்காக இந் நாட்டிலிருந்து வேற்று நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இந்த அநியாயத்தை என்னென்பது? ஆனால், உண்மையில் உணவின்மை கூட அவ்வளவு பெரிய அநியாயம் அல்ல. ஏனெனில், ரயில் மூலமாகப் பிற இடங்களிலிருந்து உணவுப் பொருள்களைக் கொண்டுவர வசதி இருந்தது. ஆனால், அதை வாங்குவதற்கு ஜனங்களிடம் பணம் இல்லை. அதுதான் அநியாயத்திலும் அநியாயம்! 1861-ல் வட இந்தியாவைப் பெரிய பஞ்சம் வாட்டியது. முக்கியமாக, நமது மாகாணம் (ஐக்கிய மாகாணம்) அதனால் அதிக இன்னல் உற்றது. ஜனத்தொகையில் 8½ சதவிகிதம் பேரை யமன் வாயில் போட்டுக்கொண்டான். பதினைந்தாண்டுகளுக்குப் பின் 1876-ல் இன்னொரு கொடிய பஞ்சம் தோன்றி வட இந்தியாவையும், மத்திய இந்தியாவையும், தென்னிந்தியாவையும் அலைத்தது. மீண்டும் ஐக்கிய மாகாணம் கொடுந்துன்பத்துக்கு ஆளாயிற்று. அவ்வாறே மத்தியமாகாணமும் பஞ்சாபில் ஒரு பகுதியும் கஷ்டத்துக்குள்ளாயின. ஏறக்குறைய ஒரு கோடி மக்கள் உயிர் துறந்தனர். மறுபடியும், இருபதாண்டுகளுக்குப் பிறகு, 1896-ல், துர்ப்பாக்கியம் நிறைந்த இப்பிரதேசத்தை இன்னொரு பஞ்சம் பீடித்தது. இந்தியச் சரித்திரத்திலேயே இதை விடக் கொடிய பஞ்சத்தைக் கேட்டறியோம் என்று சொல்லும்படியாக அது இருந்தது. மகா கோரமான அப் பஞ்சம் வட இந்தியாவையும் மத்திய இந்தியாவையும் சர்வ நாசம் செய்து விட்டது. 1900-ம் ஆண்டில் மற்றுமொரு வற்கடம் தோன்றி மக்களை வதைத்தது.

நாற்பது வருஷங்களுக்குள் ஒன்றின் பின் ஒன்றாக வந்து நாட்டை வருத்திய நாலு பெரிய கொடிய பஞ்சங்

களைப் பற்றி நான் ஒரு சிறு பாராவில் சுருக்கமாகக் கூறி விட்டேன். அவற்றில் அடங்கியுள்ள நரகத்துன்பத்தையும் கோரக் கொடுமையையும் நானும் வருணிக்க முடியாது, நீயும் உணர முடியாது. உண்மையில், நீ அதை உணராதிருப்பதே நலம் என்று நான் நினைக்கிறேன். ஏனெனில் அவ் வுணர்ச்சியினால் உனக்கு ஆங்கிலேயரிடம் ஆறாத சினமும் தீராத பகையும் மூள்வது நிச்சயம். உன்னுடைய கன்னி நெஞ்சில் அத்தகைய நஞ்சு தோய்வதை நான் விரும்பவில்லை.

நீ ப்ளாரன்ஸ் நைடிங்கேலைப் பற்றிக் கேள்வியுற்றிருக்கிறாய். அவ்வீர ஆங்கில மாது யுத்தத்தில் காயமுற்றவர்களின் சிகிச்சைக்காக முதன் முதலில் ஒரு திறமை வாய்ந்த 'நர்ஸ்' படையை அமைத்து நடத்தியவள். 1878-ம் ஆண்டிலேயே அவள் எழுதியிருப்பதைப் பார்: 'நமது கீழ் சாம்ராஜ்யத்தின் விவசாயியைப் போன்ற சோகக் காட்சி கீழ்நாடுகளிலேயே, ஏன், இவ்வுலகத்திலேயே காணக் கிடைப்பதரிது......... நமது சட்டங்களின் பயனாக உலகிலேயே செழிப்பு மிக்க நாடாகிய இந்தியாவில் ஜனங்கள் என்றென்றும் அரை வயிற்றுக் கஞ்சி கூட இல்லாமல் திண்டாடுகிறார்கள். ஜனங்களின் நிலை காலமுழுதும் இவ்வாறே இருப்பதால் ஒரு குறிப்பிட்ட காலத்தில் மட்டும் தோன்றி மறையும் பஞ்சம் என்று அதை அழைப்பதற்கில்லை.'

ஆம்; நமது விவசாயிகளைப் போன்ற ஒரு சோகக் காட்சி உலகிலேயே வேறு இருக்க முடியாது. அவர்களுடைய குழி விழுந்த கண்களையும் அக் கண்களில் காணப்படும் திக்கற்ற மருண்ட பார்வையையும் பார்த்தாலே அது தெரியும். அவர்கள் இத்தனை வருஷங்களாக எத்தனை பெரிய சுமையைச் சுமந்து வருகிறார்கள்! அவர்களை விடச் சற்று நல்ல நிலையில் உள்ள நாம்

அவர்கள் தாங்கிவரும் சுமையின் ஒரு பகுதியாக இருக்கிறோம் என்பதை மறந்துவிடக் கூடாது. வெள்ளையர் கறுப்பர் எல்லோருமாகச் சேர்ந்து நெடுங் காலமாகத் துன்புற்று வரும் அவ் விவசாயிகளின் முதுகின் மீது ஏறிச் சவாரி செய்து வருகிறோம். இந்தச் சுமையைத் தாங்க மாட்டாமல் அவர்களுடைய முதுகு ஒடிவதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது?

ஆனால், கடைசியில், இருண்டுபோன விவசாயியின் வாழ்க்கையில் நம்பிக்கையின் ஒரு சிறு ரேகை ஒளிவிட ஆரம்பித்தது. அவனுக்கும் நல்ல காலம் பிறந்து விட்டது, அவனுடைய துன்பங்கள் குறையும் நாளும் குறுகி விட்டது என்று அவனுடைய காதில் யாரோ குசு குசு என்று ஓதுவது போல் இருந்தது. எங்கிருந்தோ ஒரு சிறு மனிதர் வந்தார். அவர் அவனுடைய குழி விழுந்த கண்களைக் கூர்ந்து நோக்கினார். அவருடைய பார்வை சுருங்கிப் போன அவனுடைய இருதயத்தையும் ஊடுருவிச் சென்றது. அந்த ஒரு பார்வையிலேயே அவன் நெடுங்காலமாக அனுபவித்து வரும் நரக வேதனையையும் அவர் உணர்ந்து கொண்டார். அவருடைய பார்வையில் காந்தம் இருந்தது. அவருடைய பரிசத்தில் தீயனைய தூய்மை இருந்தது. அவருடைய குரலில் அளவற்ற அன்பும் ஆர்வமும் அறிவு... ...ரக் கொடுக்கும் மகா விசுவாசமும் ...லித்தன. ... தொழிலாளி, ஏழை, எளியவ... காலின் கீழ் மிதிக்கப் படுபவன் ஆகிய எல்லாரு... அவருடைய வடிவைக் கண்டார்கள், வார்த்தையைக் கேட்டார்கள். உடனே மடிந்துபோன அவர்களுடைய இருதயங்கள் புத்துயிர் கொண்டு துடித்தன. வறண்டுபோன அவர்களுடைய உள்ளத்தில் ஒரு விசித்திரமான நம்பிக்கை துளிர்த்தது. ஆனந்த மிகுதியால் அவர்கள், 'மகாத்மா காந்திக்கு ஜே

என்று கோஷித்தார்கள். அவர்களுடைய உள்ளத்தில் உற்சாகம் பிறந்தது. துன்பக் கடலில் ஆழ்ந்திருந்தவர்கள் அதனின்றும் நீந்திக் கரையேற முயன்றார்கள். ஆனால் அவர்களை இதுகாறும் அழுத்தி வந்த பழைய யந்திரம் அவர்களை அவ்வளவு சுலபமாகத் தப்பிக்க விடுவதாயில்லை. அது மீண்டும் வேலை செய்ய ஆரம்பித்தது. அவர்களை அதல பாதலத்தில் அழுந்துவதற்காக அது புதிய ஆயுதங்களையும் புதிய சட்டங்களையும் அவசரச் சட்டங்களையும் சிருஷ்டிசெய்தது. அவர்களைக் கட்டிப் போடுவதற்காக அது புதிய சங்கிலிகளைத் தயாரித்தது. அதன் விளைவு யாதாகும்? அது என்னுடைய கதையில் அடங்கிய விஷயம் அல்ல. அது இன்னும் எதிர் காலத்தைச் சேர்ந்தது. நாளை இன்றாகும்போது அதை நாம் அறிந்து கொள்வோம். ஆனால், அது எவ்வாறிருக்கும் என்பதில் யாருக்கும் சம்சயம் இல்லை.

112

இந்தியாவைப் பிரிட்டன் ஆளும் விதம்

டிசம்பர் 5, 1932.

பத்தொன்பதாவது நூற்றாண்டு இந்தியாவைப் பற்றி மூன்று நீண்ட கடிதங்கள் எழுதிவிட்டேன். அந்தக் கதையே ஒரு பாரதம். முடிவற்ற வேதனை நிறைந்த அக்கதையை அதிகமாகச் சுருக்கிவிட்டால் அதை விளங்கவைப்பது கஷ்டமாகிவிடும். மற்றத் தேசங்களுக்கும் மற்றக் காலப் பகுதிகளுக்கும் செலுத்திய கவனத்தைவிட இந்தியச் சரித்திரத்தின் இக்காலப் பகுதிக்குஒருவேளை நான் அதிகக் கவனம் செலுத்துவதாக இருக்கலாம். அது ஒன்றும் இயற்கைக்கு மாறானதல்ல. நான் ஒரு இந்தியன். ஆகவே, எனக்கு அதில் அக்கறை அதிகம். மேலும் எனக்கு அதைப்பற்றி அதிகமாகத் தெரியும். ஆகவே, நான் அதைப்பற்றிக் குறைவர எழுதக்கூடும். மேலும், நம்மைப் பொறுத்தவரையில் இக் காலப் பகுதி வெறும் சரித்திர முக்கியத்தைவிட அதிக விசேஷம் வாய்ந்ததாகும். இன்று நாம் காணும் நவீன இந்தியா 19-வது நூற்றாண்டின் பிரசவ வேதனையில் பிறந்து வளர்ந்து உருப்பெற்றதாகும். இந்தியாவின் இன்றைய இருப்பை நாம் அறிந்துகொள்ள வேண்டுமாயின் அதை ஆக்கிய அல்லது அழித்த சக்திகளை நாம் முதலில் அறிந்துகொள்ள வேண்டும். அப்பொழுது தான் எந்த வழியில் என்ன செய்யவேண்டுமென்பது நமக்குத் தெரியும். அப்பொழுதுதான் நம்முடைய தொண்டு அறிவுடன் கூடியதாக இருக்கும்.

அந்தக்காலத்து இந்தியாவின் கதை முழுவதையும் இன்னும் நான் உனக்குச் சொல்லவில்லை. சொல்ல

வேண்டியது இன்னும் அதிகமாக இருக்கிறது. ஒவ்வொரு கடிதத்திலும் ஒன்றிரண்டு அம்சங்களை மட்டும் எடுத்துக்கொண்டு அவற்றைப்பற்றி மட்டும் சிறிது கூறுகிறேன். ஒவ்வொரு அம்சத்தையும் தனித்தனியாக எடுத்துக் கூறினால் புரிந்துகொள்வது எளிதாயிருக்கும். ஆனால், இதுவரையில் கூறிவந்துள்ள செயல்களும் மாறுதல்களும், இக்கடிதத்திலும் இனிவரும் கடிதங்களிலும் கூறப்போகின்றவைகளும் எல்லாம் ஏறக்குறைய ஒரே காலத்தில் நிகழ்ந்தன என்பதையும், அவை ஒன்றையொன்று தாக்கின என்பதையும், அவை எல்லாமாகச் சேர்ந்து 19-வது நூற்றாண்டு இந்தியாவைச் சிருஷ்டி செய்தன என்பதையும் நீ மறந்துவிட மாட்டாய் என்று நம்புகிறேன்.

இந்தியாவில் பிரிட்டிஷார் செய்த, செய்துவரும் அக்கிரமங்களைப் பற்றிப் படிக்கும்போது உனக்கு அவர்கள் மீது கோபம் உண்டாகலாம், இவ்வளவு பெருந் துன்பத்துக்குக் காரணமான அவர்களுடைய கொள்கையை நீ கண்டிக்கலாம். ஆனால், அது யாருடைய குற்றம்? நம்முடைய பலவீனமும் அறியாமையுமே அதற்குக் காரணம் அல்லவா? எப்பொழுதும் பலவீனமும் அறியைாமயும் யதேச்சாதிகாரத்தைத் தாம்பூலம் வைத்து அழைப்பனவாகும். பரஸ்பரம் நம்மிடையே உள்ள பேதங்களால் பிரிட்டிஷார் லாபம் அடைகிறார்கள் என்று சொன்னால், ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொள்வது நம்முடைய தப்பிதம் அல்லவா? அவர்கள் நம்மைப் பிரித்துவைத்துப் பலவீனப் படுத்த முடிகிறது என்றால், நம்மில் ஒவ்வொரு வகுப்பினரின் சுய நலத்தையும் அவர்கள் பிற வகுப்புகளுக்குப் பிரதிகூலமாகவும் தங்களுக்கு அனுகூலமாகவும் பயன்படுத்த முடிகிறது என்றால், அதுவே அவர்களுடைய உயர்வையும்

நமது தாழ்வையும் காட்டுகிறதல்லவா? ஆகவே, நீ யார் மீதாவது கோபித்துக்கொள்ள வேண்டுமாயின், பலவீனத்தையும் அறியாமையையும் பரஸ்பர விரோதத்தையும் கோபித்துக்கொள். ஏனெனில், இவைதான் நமது இன்னல்களுக்குக் காரணமானவை.

பிரிட்டிஷார் கொடுங்கோன்மை செலுத்துகிறார்கள் என்று நாம் சொல்லுகிறோம். பார்க்கப் போனால் கொடுங்கோன்மை செலுத்துவது யார்? அதனால் நன்மை பெறுவது யார்? பிரிட்டிஷார் அனைவரும் அல்ல என்பது நிச்சயம். ஏனெனில், அவர்களிலேயே லட்சக்கணக்கானவர்கள் கொடுமைகளுக் குள்ளாக்கப்பட்டுத் துன்பம் அநுபவித்து வருகின்றனர். பிரிட்டிஷார் இந்தியாவைச் சுரண்டுவதனால் இந்தியர்களிலும் சில சிறு கும்பல்களும், வகுப்புகளும் நன்மை பெற்றிருக்கின்றன. இந்நிலையில், மேற்கூறிய வினாக்களுக்கு அறுதியிட்டு விடை கூறுவது எப்படி? ஆகவே, அது தனிப்பட்டவர்களைப் பொறுத்ததல்ல, ஒரு முறையைப் பொறுத்தது என்னும் முடிவுக்கு நாம் வருகிறோம். நாம் ஒரு பெரிய யந்திரத்தின் கீழ் அகப்பட்டுக் கொண்டிருக்கிறோம். அது, கரும்பைச்சாறு பிழிவது போல், கோடிக்கணக்கான இந்தியர்களைக் கசக்கிப் பிழிந்து வருகிறது. இந்த யந்திரம் தான் தொழில் முதலாளித்துவத்தினின்றும் தோன்றிய புதிய சாம்ராஜ்யவாதம் ஆகும். இச் சுரண்டலினால் வரும் லாபத்தில் பெரும் பகுதியும் இங்கிலாந்துக்குச் செல்கிறது. ஆனால், இங்கிலாந்தில் அது ஒரு சில வகுப்பாருக்கு மட்டும்தான் போகிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. லாபத்தில் ஒரு பகுதி இந்தியாவிலேயே தங்கிவிடுகிறது. அது இங்குள்ள ஒரு சில வகுப்பாருக்குச் செல்கிறது. ஆகவே, தனிப்பட்டவர்களை முனிவதோ அல்லது பிரிட்டிஷார் அனைவரையும்

நோவதோ மடமையாகும். ஒரு முறை தவறானது, அது நமக்குத் தீங்கிழைக்கிறது என்றால் உடனே அதை மாற்ற வேண்டுவதுதான் அறிஞர் கடன். அதை நடத்துவோர் யார் என்பது பற்றிக் கவலைப்படவேண்டியதில்லை. தீயமுறையில் சிக்கிக்கொண்ட நல்லவர்களும் செயலற்று நிற்பதை நாம் காண்கிறோம். நம்மிடத்தில் நல்லெண்ணம் நிறைந்திருக்கலாம். ஆனால், அதைக் கொண்டு கல்லையும் மண்ணையும் எவ்வளவு சமையல் செய்தாலும் அவை சோறாகிவிடுமா? அதைப் போல் தான் சாம்ராஜ்ய வாதமும் முதலாளித்துவமும் அவற்றைச் சீர்திருத்த முடியாது. ஒரே ஒரு வழியில்தான் அவற்றை உண்மையாகச் சீர்திருத்த முடியும். அதாவது அவற்றை அடியோடு ஒழித்து விடுவதுதான். ஆனால், இது என்னுடைய அபிப்பிராயம். சிலர் இவ்வபிப்பிராயத்திலிருந்து மாறுபடுகிறார்கள். பிறர் சொல்கிறார்கள் என்பதற்காக நீ எதையும் முடிவாக எடுத்துக் கொள்ள வேண்டாம். காலம் வரும்போது, நீயே சுதந்திரமாகச் சிந்தித்து முடிவு செய்யலாம். ஆனால், ஒரு விஷயத்தை அநேகமாக எல்லாரும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். 'தவறு முறையில்தான் இருக்கிறது. தனிப்பட்டவர்களை நோவதில் யாதொரு பயனும் இல்லை' என்பதுதான் அது. மாறுதலை வேண்டுவோர் எம்முறை தீயதோ அதைத் தாக்கி அதை மாற்றவேண்டும். இந்தியாவில் 'முதலாளித்துவ — சாம்ராஜ்ய வாதம்' என்னும் முறையினால் விளையும் சில சீர்கேடுகளை நாம் பார்த்தோம். சீனாவையும் எகிப்தையும் இன்னும் மற்ற நாடுகளையும் ஆராய்வோமாயின் அதே முறை, அதே யந்திரம் அங்குள்ள ஜனங்களைச் சுரண்டுவதைக் காண்போம்.

இப்போது, நாம் நமது கதையை விட்ட இடத்தி

லிருந்து ஆரம்பிப்போம். பிரிட்டிஷார் இந்தியாவுக்கு வந்தபோது இந்தியக் குடிசைக் கைத்தொழில்கள் உயர் நிலையிலிருந்தன என்று நான் கூறியுள்ளேன். வெளியார் தலையிட்டிரா விட்டால், உற்பத்தி முறைகளில் தோன்றும் இயற்கையான முன்னேற்றம் காரணமாக, உடனே இல்லாவிட்டாலும் சிறிது காலம் தாழ்த்தாவது யந்திரத் தொழில் இந்தியாவுக்கு வந்திருக்கும். நம் நாட்டில் இரும்புக்கும் நிலக்கரிக்கும் குறைவில்லை. இங்கிலாந்தில் புதிய தொழில்முறை தோன்றுவதற்கு ஓரளவு காரணமாயிருந்ததும், அதற்குப் பேருதவி செய்ததும் இரும்பும் நிலக்கரியுமே என்பதை நாம் பார்த்தோம். இந்தியாவிலும் இறுதியில் அதுவே நிகழ்ந்திருக்கும். அரசியல் நிலை குழப்பமாயிருந்தபடியால் இங்கு அதில் சற்றுத் தாமதம் ஏற்பட்டிருக்கலாம். ஆனால், இதற்குள் பிரிட்டிஷார் வந்து தலையிட்டு விட்டார்கள். அவர்கள், ஏற்கெனவே புதிய யந்திர உற்பத்திக்கு மாறிவிட்ட ஒரு தேசத்துக்கும் வகுப்புக்கும் பிரதிநிதிகளாயிருந்தார்கள். ஆகவே, இந்தியாவிலும் அத்தகைய மாறுதல் ஏற்படுவதை அவர்கள் விரும்புவார்கள் என்றும், அம்மாறுதலை உண்டாக்கக் கூடிய ஒரு வகுப்பையே அவர்கள் ஆதரிப்பார்கள் என்றும் நாம் எதிர்பார்ப்பது இயற்கை. ஆனால், அவர்கள் அவ்வாறு ஒன்றும் செய்யவில்லை. உண்மையில், அதற்கு நேர்மாறாகச் செய்தார்கள். இந்தியா எங்கே தங்களுக்குப் போட்டியாக முளைத்து விடுமோ என்று அஞ்சி அவர்கள் அதன் கைத்தொழில்களை அழித்து விட்டார்கள். இங்கே யந்திரத் தொழில் தோன்றுவதற்கும் அவர்கள் இடையூறு இயற்றினார்கள்.

இவ்வாறு, இந்தியாவில் விபரீதமான ஒரு நிலைமை தோன்றுவதைக் காண்கிறோம். அக்காலத்தில் ஐரோப்

பாவிலேயே மிகவும் முற்போக்கு வாய்ந்தவர்களாக இருந்த பிரிட்டிஷார் இந்தியாவில் மிகவும் பிற்போக்கு வாய்ந்த பழைமையோம்பி வகுப்புகளுடன் கூட்டுறவு கொள்கிறார்கள். செத்து விழும் நிலமானிய வகுப்புக்கு முட்டுக் கொடுத்து அதைத் தாங்குகிறார்கள். ஜமீன்தார்களைச் சிருஷ்டிக்கிறார்கள். அரை நிலமானிய முறையில் ஆளப்படும் நூற்றுக் கணக்கான இந்திய சமஸ்தானங்களில் பொம்மை ராஜாக்களையும் மகாராஜாக்களையும் ஆதரித்து நிற்கிறார்கள். இந்தியாவில் நிலமானிய முறையை அவர்கள் பலப்படுத்துகிறார்கள். ஆனால் இதே பிரிட்ஷார்தான் ஐரோப்பாவில் நிலமானிய முறைக்கு எதிரான மத்திய வகுப்பு அல்லது பூர்ஷுவா புரட்சிக்கு வழிகாட்டிகளாக இருந்தார்கள். அப்புரட்சியினால் அவர்களுடைய பார்லிமெண்டுக்கு நாட்டை ஆளும் அதிகாரம் கிடைத்தது. தொழில் முதலாளித்துவத்தை உலகில் புகுத்திய தொழிற் புரட்சிக்கும் அவர்களே வழிகாட்டிகளாக இருந்தார்கள். பூர்ஷுவா புரட்சியிலும் தொழிற் புரட்சியிலும் அவர்கள் பிறரை வெகுவாக முந்திக் கொண்டதால் தான் போட்டியை வென்றேறிப் பெரிய சாம்ராஜ்யத்தை உலகில் ஸ்தாபிப்பது அவர்களுக்குச் சாத்தியமாயிற்று.

இந்தியாவில் மட்டும் பிரிட்டிஷார் இவ்வாறு விபரீதமாக நடந்துகொண்டதற்குக் காரணம் கண்டுபிடிப்பது கஷ்டமல்ல. முதலாளித்துவத்தின் முழு அடிப்படையும் கழுத்தறுக்கும் போட்டியும் கருணையற்ற சுரண்டலும் தான். முதலாளித்துவம் முற்றி முதிர்ந்த நிலையே சாம்ராஜ்யவாதம் எனப்படும். பிரிட்டிஷாருக்குப் பலமும் அதிகாரமும் இருந்தபடியால் அவர்கள் தங்களுக்குப் போட்டியாயிருந்தவர்களை அழித்தொழித்ததோடு வருங்காலத்தில் வேறு போட்டிகள் உண்டா

வதையும் முன்யோசனையுடன் தடுத்து விட்டார்கள். அவர்கள் இந்தியாவின் பொதுமக்களுடன் நட்பு கொள்வதற்கில்லை. அவர்கள் இந்தியாவில் இருப்பதன் முழு நோக்கமும் ஜனங்களைக் கசக்கிப் பிழிவது தானே! அப்பேர்ப்பட்டவர்கள் ஜனங்களுடன் எவ்வாறு நட்புப்பூண முடியும்? சுரண்டுவோர் சுரண்டப்படுவோர் இவ்விரு திறத்தாரின் நலன்களும் என்றாவது ஒன்றாயிருக்க முடியுமா? ஆகவே, பிரிட்டிஷார் இந்தியாவில் இன்னும் நிலமானிய முறையின் சின்னங்களாக இருந்து வந்தவர்களைத் துணையாகக் கொண்டார்கள். பிரிட்டிஷார் முதல் முதல் இங்கு வந்தபோதே அவ்வகுப்புக்கு உண்மையில் அதிகப் பலம் இல்லை. ஆனால், பிரிட்டிஷார் அவர்களை முட்டுக்கொடுத்துத் தூக்கி நாட்டின் சுரண்டலில் அவர்களுக்கு ஒரு சிறு பங்கும் அளித்தார்கள். வாழ்க்கையின் பிரயோஜனத்தைக் கடந்துவிட்ட ஒரு வகுப்புக்குப் பிறருடைய முட்டுத் தாங்கல் தற்காலிகமான ஒரு சாந்தியைத்தான் அளிக்கமுடியும். அவர்களைத் தாங்கி நிற்கும் முட்டுகள் அகற்றப்பட்டவுடன் அவர்கள் வீழ்ந்து விடுவது நிச்சயம். அல்லது, புதிய நிலைமைகளுக்குப் பொருந்த அவர்கள் தங்களைத் திருத்தி அமைத்துக்கொள்ள வேண்டும். இந்தியாவில் பிரிட்டிஷாரின் நல்லெண்ணத்தை நம்பி வாழும் சுதேச சமஸ்தானங்கள் பெரிதும் சிறிதுமாக எழுநூறு இருக்கின்றன. இவைகளில் ஹைதராபாத், காஷ்மீரம், மைசூர், பரோடா, குவாலியர் முதலிய பெரிய சமஸ்தானங்கள் உனக்குத் தெரிந்தவை. இதில் இன்னொரு விந்தை என்னவென்றால், இச்சமஸ்தானாதிபதிகள் பழைய ராஜ வம்சங்களைச் சேர்ந்தவர்கள் அல்ல. அவ்வாறே, பெரும்பாலான பெரிய ஜமீன்தார்களுடைய வம்சாவளிகளும் பூர்விகமானவை அல்ல. இதற்கு

விலக்காயிருப்பவர் உதயபூர் மகாராணா ஒருவர்தான். அவர் சூரியவம்ச ரஜபுத்திர குலதிலகர். சரித்திர காலத்துக்கு முற்பட்டதான அவருடைய குலம் பழம் பெருமை வாய்ந்ததாகும். இவ்விஷயத்தில் அவருடன் போட்டியிடக் கூடியவர் ஜப்பானியச் சக்கரவர்த்தியான மிகாடோ ஒருவர்தான்.

பிரிட்டிஷ் ஆட்சியானது மதவிஷயத்திலும் பழைமை யோம்பிகளையே ஆதரித்தது. கிறிஸ்தவ மதத்தை அவலம்பிக்கும் பிரிட்டிஷார் இவ்வாறு செய்தது நமக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. ஆயினும், அவர்கள் வருகையால் இந்தியாவில் ஹிந்து மதமும் இஸ்லாம் மதமும் இறுகிப் போயின என்பது உண்மையே. ஓரளவு இது இயற்கையும் ஆகும். அந்நியரின் படையெடுப்பினின்று தம்மைக் காத்துக் கொள்வதற்காக ஒரு தேசத்தின் மதமும் கலாசாரமும் இறுகிக் கடுமையாவதை நாம் காண்கிறோம். முஸ்லிம் படையெடுப்புகளுக்குப் பிறகு ஹிந்து மதமும் இவ்வாறு இறுகி அதில் ஜாதிப் பாகுபாடுகள் தோன்றியதை நாம் கண்டோம். இப்பொழுது, ஹிந்துமதம் இஸ்லாம் மதம் இரண்டும் அத்தகைய மாறுதலை அடைந்தன. இது ஒருபுறமிருக்க, இந்தியாவிலிருந்த பிரிட்டிஷ் அரசாங்கமானது தெரிந்தும் தெரியாமலும் இவ்விரு மதங்களிலும் உள்ள பிற்போக்காளர்களுக்கு உதவி செய்தது. பிரிட்டிஷாருக்கு மதத்திலும் மதமாற்றத்திலும் அக்கறை இல்லை. பொருள் சேர்ப்பதிலேயே அவர்கள் கண்ணும் கருத்துமாயிருந்தார்கள். மதவிஷயங்களில் தலையிடுவதற்கு அவர்கள் அஞ்சினார்கள். எங்கே ஜனங்கள் ஆத்திரமுற்றுத் தங்கள் மீது திரும்பி விடுவார்களோ என்று அவர்களுக்குப் பயம். தாங்கள் மதவிஷயங்களில் தலையிடுகிறோம் என்கிற சந்தேகம் கூட ஜனங்களுக்கு ஏற்படக்கூடாது என்று

நினைத்து அவர்கள் இந்நாட்டு மதங்களை அல்லது அவற்றின் புறத் தோற்றங்களைக் காப்பாற்றவும் தலைப்பட்டார்கள். அதன் பயனாகப் புறத்தோற்றம் நின்றதே ஒழிய அகத்தூய்மை போய் விட்டது.

வைதிகர்களின் கோபத்துக்குப் பயந்த பிரிட்டிஷ் அரசாங்கம் சீர்திருத்த விஷயங்களில் அவர்களுடன் சேர்ந்து கொண்டது. அதனால் சீர்திருத்தம் தடையுற்றது. ஒரு அந்நிய அரசாங்கம் சமூக சீர் திருத்தங்கள் செய்வதென்பது சாத்தியமல்ல. ஏனெனில், அது செய்ய விரும்பும் எந்த மாறுதலையும் ஜனங்கள் விரும்ப மாட்டார்கள். ஹிந்து மதமும் ஹிந்துச் சட்டமும் பல அம்சங்களில் காலத்துக்கு ஏற்ப மாறுபவையாகவும் முற்போக்கு வாய்ந்தவையாகவும் தான் இருந்தன. ஆனால், அம்முற்போக்குக் கடந்த சில நூற்றாண்டுகளில் மிகவும் மந்தமாயிருந்தது உண்மையே. ஹிந்துச் சட்டம் என்பதே பெரும்பாலும் ஆசார சம்பிரதாயங்களை ஆதாரமாகக் கொண்டது. அவை மாறியும் வளர்ந்தும் வந்தன. பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் ஹிந்து மதத்தின் இந்நெகிழ்ப்புத் தன்மை மறைந்து விட்டது. அவர்கள் பரம வைதிகர்களின் ஆலோசனையின் பேரில் கடுமையான சட்டங்களை வகுத்தார்கள். ஹிந்து மதத்தின் வளர்ச்சி ஏற்கெனவே மெதுவாக இருந்தது. அதுவும் இப்போது தடைப்பட்டு விட்டது. புதிய நிலைமைகளை முஸ்லிம்கள் இன்னும் அதிகமாக வெறுத்தார்கள். ஆகவே, அவர்கள் தங்களுடைய கூட்டுக்குள் சென்று ஒடுங்கிவிட்டார்கள்.

ஹிந்துக்களில் கணவன் இறந்து விட்டால் மனைவி உடன் கட்டை ஏறுவது வழக்கம். அவ்வழக்கம் ‘சதி’ (‘சதி’ என்றால் கற்புடைப் பத்தினி என்று பொருள்) என்று அழைக்கப்பட்டது. (அது அவ்வளவு பொருத்தமான பெயர் அல்ல) அந்தச் ‘சதி’யைத் தடுத்து விட்டதற்

காகப் பிரிட்டிஷார் தங்களை மிகவும் பாராட்டிக் கொள்ளுகிறார்கள். அதைத் தடுத்த பெருமையில் அவர்களுக்குச் சிறிது பங்கு உண்டு என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால், உண்மையில், ராஜாராம் மோஹனராயின் தலைமையில் இந்திய சீர்திருத்த வாதிகள் பல வருஷங்கள் கிளர்ச்சி செய்த பின்னரே அரசாங்கம் அது விஷயத்தில் நடவடிக்கை எடுத்துக் கொண்டது. பிரிட்டிஷாருக்கு முன்னால் அரசாண்ட வேறு சிலர், முக்கியமாக மராட்டியர் அதைத் தடுத்திருந்தார்கள். போர்த்துகீசிய கவர்னரான அல்புகர்க் கோவாவில் அவ்வழக்கத்தை நிறுத்தியிருந்தான். இந்திய சீர்திருத்தக்காரரின் கிளர்ச்சி காரணமாகவும் கிறிஸ்தவப்பாதிரிகளின் முயற்சி காரணமாகவுமே பிரிட்டிஷார் உடன்கட்டை ஏறும் வழக்கத்தை ஒழித்தார்கள். எனக்குத் தெரிந்த வரையில் பிரிட்டிஷ் அரசாங்கம் செய்த முக்கியமான மதச் சீர்திருத்தம் இது ஒன்று தான்.

ஆக, நாட்டில் பிற்போக்கும் பழம் பற்றும் கொண்டவர்களுடன் பிரிட்டிஷார் சேர்ந்து கொண்டார்கள். தங்களுடைய யந்திரத் தொழில்களுக்கு வேண்டிய மூலப் பொருள்களை உற்பத்தி செய்யும் பொருட்டு, அவர்கள் இந்தியாவை வெறும் விவசாய நாடாகவே வைத்திருக்க முயன்றார்கள். இந்தியாவில் தொழிற்சாலைகள் தோன்றுவதைத் தடுப்பதற்காக அவர்கள் இந்தியாவுக்கு வரும் யந்திரங்களுக்கு வரி விதித்தார்கள். மற்ற நாடுகள் தங்களுடைய யந்திரத் தொழில்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்தன. ஜப்பான் தன்னை அதிவேகமாகத் தொழில் மயமாக்கிக் கொண்ட வரலாற்றைப் பின்பு காண்போம். ஆனால், இந்தியாவில் பிரிட்டிஷ் அரசாங்கம் தொழில் வளர்ச்சியை மிதித்து நசுக்கியது. இந்தியாவில் இறக்குமதியாகும் யந்திரங்களுக்கு விதிக்கப்

பட்ட வரி காரணமாக இங்கிலாந்தில் ஒரு தொழிற்சாலை கட்டுவதற்கு ஆகும் செலவைப் போல் நாலு பங்கு செலவு இந்தியாவில் ஆயிற்று. இத்தனைக்கும் இந்தியாவில் கொடுக்கப்படும் கூலி இங்கிலாந்தில் கொடுக்கப்படுவதை விடக் குறைவாயிருந்தது. அவ்வரி 1860-ல் தான் நீக்கப்பட்டது. இத்தகைய முட்டுக்கட்டைக் கொள்கை சம்பவங்களைச் சற்றுத் தாமதப்படுத்த முடியுமே ஒழிய அவற்றின் தவிர்க்க முடியாத போக்கை அடியோடு தடுத்துவிட முடியாதல்லவா? 19-வது நூற்றாண்டின் இடையில் யந்திரத் தொழில் இந்தியாவில் தோன்றி வளர ஆரம்பித்தது. பிரிட்டிஷ் முதலாளிகள் வங்காளத்தில் சணல் தொழிலை ஆரம்பித்தார்கள். ரயில் வண்டியின் வருகை தொழில்வளர்ச்சிக்கு உதவியது. 1880-ம் ஆண்டுக்குப் பிறகு, பெரும்பாலும் இந்திய மூலதனத்தைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட பஞ்சாலைகள் பம்பாயிலும் ஆமதாபாத்திலும் தோன்றி வளர்ந்தன. இவற்றிற்குப் பின் சுரங்கத் தொழில் ஆரம்பமாயிற்று. பஞ்சுத் தொழிலைத் தவிர்த்துப் பிற தொழில்கள் பெரும்பாலும் பிரிட்டிஷ் மூலதனத்தைக் கொண்டே நடத்தப்பட்டன. இவ்வாறு, அரசாங்கத்தின் ஆதரவு இல்லாமலிருந்தும், இந்தியா மெள்ள மெள்ளத் தொழில் மயமாகி வந்தது. அரசாங்கம் ‘தலையிடாக் கொள்கை’யைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தது. காரியங்களை அதனதன் போக்கில் விட்டுவிடவேண்டுமென்றும், தனிப்பட்டவர் தொடங்கும் முயற்சியில் தலையிடுவது நியாயமல்லவென்றும் அது சொல்லிற்று. ஆனால், பிரிட்டிஷ் அரசாங்கம் இதற்கு முன் செய்ததென்ன? 18-வது நூற்றாண்டிலும், 19-வது நூற்றாண்டின் ஆரம்பத்திலும் இந்திய வியாபாரம் பிரிட்டிஷ் வியாபாரத்துக்குப் போட்டியாயிருந்த[illegible] பிரிட்டிஷ் அரசாங்கம் இந்திய வியாபாரத்துக்கு

வரி விதித்தும் தடை விதித்தும் அதை நசுக்கியது. இது தலையீடு அல்லவா? இப்பொழுது நிலைமை மாறிவிட்டது. அவர்கள் உச்ச நிலையை அடைந்து விட்டார்கள். ஆகவே, அவர்கள் 'தலையிடாக் கொள்கை' என்று பேசலானார்கள். ஆனால், உண்மையில், அவர்கள் ஒன்றிலும் தலையிடாமல் உதாசீனமாயிருந்து விடவில்லை. சில இந்தியத் தொழில்களுக்கு, முக்கியமாகப் பம்பாயிலும் ஆமதாபாத்திலும் வளர்ந்து வந்த துணித் தொழிலுக்கு அவர்கள் வேண்டிய இடைஞ்சல் செய்தார்கள். இந்திய மில் (பஞ்சாலை) களில் உற்பத்தி செய்யப்பட்ட துணிகளின் மீது வரிப் போடப்பட்டது. அது 'உள் நாட்டுப் பருத்தி வரி' என்று அழைக்கப்பட்டது. இந்திய மார்க்கெட்டில் இந்திய மில் துணிகளுடன் பிரிட்டனிலிருந்து வரும் லங்காஷயர் மில் துணிகள் போட்டி யிடுவதற்கு உதவி செய்வதே அவ்வரியின் நோக்கம். அநேகமாக உலகிலுள்ள எல்லா நாடுகளும் சில வெளிநாட்டுப் பொருள்கள் மீது வரி விதிக்கின்றன. தங்களுடைய தொழில்களைக் காத்துக் கொள்வதற்கோ அல்லது வருமானத்தை உத்தேசித்தோ அவை அவ்வாறு செய்கின்றன. ஆனால், பூலோகத்தில் எங்கும் நடக்காத அதிசயத்தைப் பிரிட்டிஷார் இந்தியாவில் செய்தார்கள். உள்நாட்டுப் பொருள்கள்மீதே, அதாவது, இந்தியாவில் செய்யப்பட்டப் பொருள்கள் மீதே அவர்கள் வரி விதித்தார்கள். இவ்வரியை எதிர்த்துப் பெருங் கிளர்ச்சி செய்யப்பட்டது. ஆனால், சில வருஷங்களுக்கு முன்பு தான் அது கைவிடப்பட்டது.

இவ்வாறு, அரசாங்கத்தின் எதிர்ப்பையும் மீறி, இந்தியத் தொழில் மெள்ள மெள்ள வளர்ந்து வந்தது. இந்தியாவின் பணக்கார வகுப்பார் மேலும் மேலும் தொழில் அபிவிருத்தி வேண்டுமென்று கூக்குர

லிட்டார்கள். பல வருஷங்களுக்குப் பின் (1905-ல் என்று நினைக்கிறேன்) வர்த்தகத் தொழில் இலாகா ஒன்றைச் சர்க்கார் ஏற்படுத்தியது. உலக யுத்தத்துக்கு முன் வரையில் உருப்படியாக அது ஒன்றும் செய்யவில்லை. தொழில் நிலைமையில் ஏற்பட்ட வளர்ச்சியினால் ஆலைத் தொழிலாளர் வர்க்கம் தோன்றியது. அவர்கள் நகரங்களிலுள்ள தொழிற் சாலைகளில் வேலை செய்தார்கள். நில நெருக்கடி காரணமாகவும், கிராமாந்தரங்களின் அரைப் பஞ்ச நிலை காரணமாகவும் பலர் கிராமங்களிலிருந்து நகரங்களிலுள்ள தொழிற் சாலைகளுக்கு வேலை செய்யச் சென்றார்கள். அவர்கள் வங்காளத்திலும் அஸ்ஸாமிலும் உள்ள பெரிய தோட்டங்களிலும் வேலை செய்யச் சென்றார்கள். இன்னும் பலர், வெளி நாடுகளில் கூலி அதிகமாகக் கிடைக்கும் என்று கேள்விப்பட்டு தென் ஆப்பிரிக்கா, பீஜித் தீவுகள், மோரீசுத் தீவுகள், இலங்கை முதலான இடங்களுக்கும் சென்றார்கள். ஆனால், வெளிநாடு சென்ற இந்தியத் தொழிலாளர் நன்மை ஒன்றும் அடையவில்லை. அவர்கள் சில இடங்களில் பெரும்பாலும் அடிமைகளைப் போல் நடத்தப் பட்டார்கள். அஸ்ஸாம் தேயிலைத் தோட்டங்களிலும் நிலைமை அதைவிடச் சிலாக்கியமாக ஒன்றும் இல்லை. இவ்வாறு, இன்னலுக்கும் சோர்வுக்கும் ஆளான பலர் பிற்காலத்தில் ஊர் திரும்ப விரும்பினார்கள். ஆனால்; அவர்கள் தங்கள் சொந்த ஊர்களிலும் வரவேற்கப் படவில்லை. அவர்கள் பயிரிட்டுப் பிழைப்பதற்கு அங்கு மிச்ச மீதியாக நிலம் இருந்தால் தானே!

தொழிற்சாலைகளில் வேலை செய்து வரும் தொழிலாளர்கள் தங்களுக்குச் சற்று அதிகமாகக் கிடைக்கும் கூலியினால் அதிகப் பலன் இல்லை என்பதை விரைவிலேயே

கண்டுகொண்டார்கள். பட்டணத்தில் விலைவாசிகள் எல்லாம் ஒன்றுக்குப் பத்தாயிருந்தன. மொத்தத்தில் அவர்களுடைய வாழ்க்கைச் செலவு மிகவும் அதிகமாகி விட்டது. அவர்கள் அழுக்கும் துர்நாற்றமும் ஈரமும் இருட்டும் நிறைந்த பொத்தல் குடிசைகளில் வாழ வேண்டியதாயிற்று. கிராமங்களில் அவர்கள் பட்டினி கிடந்தாலும் அங்குச் சூரிய வெளிச்சத்துக்கும் சுத்தமான காற்றுக்கும் குறைவில்லை. தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளி சூரிய வெளிச்சத்தையும் காண முடியாது, சுத்தமான காற்றையும் சுவாசிக்க முடியாது. அவனுடைய அதிகப்படியான வாழ்க்கைச் செலவுக்கு அவனுக்குக் கிடைத்த கூலி கட்டி வரவில்லை. பெண்களும் குழந்தைகளும் கூட நீண்ட நேரம் வேலை செய்ய வேண்டியிருந்தது. கைக் குழந்தைகளைப் படைத்த தாய்மார்கள் குழந்தைகளால் தங்கள் வேலைக்கு இடையூறு நேரும் என்று எண்ணி அவற்றிற்கு அபினி கொடுத்துத் தூங்கவைத்து விட்டு வேலை செய்யும்படியான நிலை ஏற்பட்டது. ஆலைத் தொழிலாளர்களின் நிலை அவ்வளவு கேவலமாயிருந்தது. அவர்கள் துன்பத்தில் ஆழ்ந்திருந்தார்கள். அவர்களுடைய அதிருப்தி வளர்ந்தது. வேறு வழி ஒன்றும் புலப்படாதபோது, அவர்கள் சில சமயங்களில் வேலை நிறுத்தம் செய்தார்கள். ஆனால், அவர்கள் பலமற்றவர்களாயிருந்தபடியால் அவர்களுடைய முதலாளிகள் அரசாங்கத்தின் ஆதரவுடன் அவர்களை எளிதில் அடக்கிவிட முடிந்தது. சொல்லொணாக் கஷ்டங்கள் அனுபவித்த பின்பு, சிறிது சிறிதாக அவர்கள் கூடிச் செயலாற்றுவதன் சிறப்பை உணர்ந்தார்கள். அவர்கள் அதற்காகத் தொழிற்சங்கங்கள் அமைத்தார்கள்.

நான் மேலே கூறியுள்ள நிலைமை கடந்துபோன

காலத்தைச் சேர்ந்தது என்று நினைத்து விடாதே. இன்றைய நிலைமையும் பெரும்பாலும் அவ்வாறே இருக்கிறது. இன்று, ‘தொழிலாளர் நிலைமையில் சிறிதளவு அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. ஏழைத் தொழிலாளிக்கு ஓரளவு பாதுகாப்பு அளிக்கக்கூடிய சட்டங்கள் சில இயற்றப்பட்டிருக்கின்றன’ என்று சொல்லலாம். ஆனால், இன்றுகூட நீ கான்பூருக்கோ, பம்பாய்க்கோ, அல்லது தொழிற்சாலைகள் உள்ள வேறு இடங்களுக்கோ சென்று பார்த்தால், தொழிலாளர் வசிக்கும் வீடுகளையும்—அவற்றை வீடுகள் என்றே சொல்ல முடியாது-இடங்களையும் கண்டு திடுக்கிட்டுப் போவாய்.

இக்கடிதத்திலும் மற்றக் கடிதங்களிலும் இந்தியாவிலுள்ள பிரிட்டிஷாரைப் பற்றியும் பிரிட்டிஷ் அரசாங்கத்தைப் பற்றியும் நான் பேசி வந்திருக்கிறேன். அது எம்மாதிரி இருந்தது, எப்படி வேலை செய்தது என்று பார்ப்போம். ஆரம்பத்தில் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சி புரிந்து வந்தது. ஆனால், அதற்குப் பின் பலமாகப் பிரிட்டிஷ் பார்லிமெண்டு இருந்தது. சிப்பாய்க் கலகம் என்று அழைக்கப்படும் சுதந்திரப் போருக்குப் பிறகு, 1858-ல், பிரிட்டிஷ் பார்லிமெண்டு ஆட்சிப் பொறுப்பை நேரில் ஏற்றுக்கொண்டது. அதற்கப்புறம் இங்கிலாந்தின் ராணி கெய்சர்-இ-ஹிந்து (இந்தியாவின் சக்கரவர்த்தினி) ஆனாள். இந்தியாவில் இருந்த கவர்னர் ஜெனரல் இப்போது வைசிராயும் (ராஜப் பிரதிநிதி) ஆனார். வைசிராய்க்குக் கீழ் ஒரு பெரும் உத்தியோகஸ்தர் கூட்டம் இருந்தது. இந்தியா பெரிய மாகாணங்களாகவும் சுதேச சமஸ்தானங்களாகவும் பிரிக்கப்பட்டது. அப் பிரிவினையே பெரும்பாலும் இன்றளவும் நிலைத்திருக்கிறது. இந்திய ராஜாக்களால் ஆளப்படும் சுதேச சமஸ்தானங்கள் அரைவாசி சுதந்திரம் உள்ளவை என்று

கருதப்பட்டன. உண்மையில், அவை பெரும்பாலும் பிரிட்டிஷாரையே சார்ந்து நின்றன. பெரிய சமஸ்தானம் ஒவ்வொன்றிலும் 'ரெசிடெண்டு' (Resident-ஸ்தல அதிகாரி) என்று அழைக்கப்பட்ட ஒரு ஆங்கில அதிகாரி இருந்தார். அவருடைய பார்வையில் சமஸ்தான நிர்வாகம் நடந்துவந்தது. உள்நாட்டுச் சீர்திருத்தத்தில் அவருக்குச் சிரத்தை கிடையாது. சமஸ்தானத்தின் அரசாங்க அமைப்புக் கெடுதலாயிருப்பினும் காலத்துக் கொவ்வாததாயிருப்பினும் அதைப் பற்றி அவருக்குக் கவலை இல்லை. சமஸ்தானத்தில் பிரிட்டிஷ் அதிகாரத்தை வலுப்படுத்துகிற அந்த ஒரு காரியத்தில்தான் அவருக்குக் குறி.

இந்தியாவில் ஏறக்குறைய மூன்றிலொரு பாகம் இத்தகைய சமஸ்தானங்கள் பலவற்றைக் கொண்டதாகும். மீதி மூன்றில் இரண்டு பங்கு நாட்டைப் பிரிட்டிஷார் நேரில் ஆண்டு வந்தார்கள். பிரிட்டிஷாரால் ஆளப்படும் பாகம் பிரிட்டிஷ் இந்தியா என்று வழங்குகிறது. பிரிட்டிஷ் இந்தியாவில் உயர்ந்த பதவிகளில் எல்லாம் பிரிட்டிஷாரே இருந்தார்கள். சென்ற நூற்றாண்டு முடிவில் சில இந்தியர்களும் அப்பதவிகளில் சென்று ஒட்டிக் கொண்டார்கள். ஆயினும், அதிகாரம் அனைத்தும் அன்றும் பிரிட்டிஷார் கையில் தான் இருந்தது, இன்றும் அவர்கள் கையில் தான் இருக்கிறது. அவர்களுக்குத் துணையாக ராணுவம் இருக்கிறது. இந்தியாவை ஆளும் உயர்ந்த உத்தியோகஸ்தர்கள் ஐ. சி. எஸ். (I. C. S.—Indian Civil Service) என்று அழைக்கப்படும், இந்தியன் சிவில் சர்வீசைச் சேர்ந்தோர் ஆவர். இந்திய அரசாங்கத்தை நடத்துவது அவர்களே. இவ்வாறு, உத்தியோகஸ்தர்கள் தாங்களே ஒருவரையொருவர் நியமித்துக் கொண்டு, ஜனங்களுக்குப் பொறுப்

பில்லாமல் அரசாங்கம் நடத்துவதற்கு 'உத்தியோக அல்லது அதிகார வர்க்க ஆட்சி முறை'' (Bureaucracy; Bureau-Office) என்று பெயர்.

இந்த ஐ. சி. எஸ். வர்க்கத்தைப் பற்றி நாம் அதிகமாகக் கேள்விப்படுகிறோம். இது ஒரு விசித்திரமான கூட்டம். சில வழிகளில் அவர்கள் திறமை சாலிகளாயிருந்தார்கள். அவர்கள் அரசாங்கத்தைச் செவ்வனே அமைத்து, நாட்டில் பிரிட்டிஷ் ஆட்சியை வலுப்படுத்தினார்கள். அதன் பயனாகத் தாங்களும் பெருநன்மை அடைந்தார்கள். பிரிட்டிஷ் ஆட்சியை வலுப்படுத்தும் இலாகாக்களும் வரிவசூல் செய்யும் இலாகாக்களும் திறம்பட வகுக்கப்பட்டன. மற்ற இலாகாக்கள் புறக்கணிக்கப் பட்டன. ஜனங்களால் நியமிக்கப்படாதவர்களும், ஜனங்களுக்குப் பொறுப்பற்றவர்களுமான ஐ. சி. எஸ். வர்க்கத்தார் ஜனங்களின் நலத்தைப் பொறுத்த மற்ற இலாகாக்களைக் கவனிக்காது விட்டுவிட்டார்கள். இந்த நிலைமையில் அவர்கள் அகம்பாவமும் திமிரும் பிடித்துப் பொது ஜன அபிப்பிராயத்தை மதிக்காமல் அலட்சியமாக நடந்து வந்ததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. குறுகிய மனப்பான்மை கொண்ட அவர்கள் தங்களைப் போன்ற மேதாவிகள் உலகிலேயே கிடையாது என்று எண்ணத் தலைப்பட்டார்கள். இந்தியாவின் நன்மை என்பது முக்கியமாகத் தங்களுடைய வர்க்கத்தின் நன்மை என்றே அவர்களுக்குத் தோன்றியது. அவர்கள் தங்களுக்குள்ளேயே ஒருவரையொருவர் 'இந்திரன், சந்திரன்' என்று புகழ்ந்து கொண்டு ஒரு பரஸ்பர துதிபாடுவோர் சங்கமாக விளங்கினார்கள். எல்லையற்ற அதிகாரம் யார் கையில் இருந்தாலும் அது இத்தகைய பலனைத்தான் கொடுக்கும். ஐ. சி. எஸ். வர்க்கத்தின் ஆணையோ இந்தியா வெங்கும்

தடையின்றிச் சென்றது. பிரிட்டிஷ் பார்லிமெண்டு வெகு தூரத்தில் இருந்தபடியால் அவர்களுடைய நிர்வாகத்தில் அது அதிகமாகத் தலையிடவில்லை; தலையிடும்படியான அவகாசமும் அதற்கு நேரவில்லை. ஏனெனில், ஐ. சி. எஸ். காரர்கள் பிரிட்டிஷ் பார்லிமெண்டின் நலன்களுக்கும் பிரிட்டிஷ் தொழில் முதலாளிகளின் நலன்களுக்கும் உண்மையான தொண்டு புரிந்து வந்தார்கள். இந்திய மகா ஜனங்களின் நலன்களை அவர்களுக்கு எட்டவைப்பதற்குக் கூட வழி இல்லை. அவர்களுடைய செய்கைகளை அற்பமாகக் குறை கூறினாலும் அவர்கள் கோபித்துக் கொள்வார்கள். அவர்களிடம் பொறுமை அவ்வளவு குறைவாயிருந்தது.

ஆயினும், ஐ. சி. எஸ். வர்க்கத்தில் நல்லவர்களும். யோக்கியர்களும், திறமையுள்ளவர்களும் பலர் இருந்தார்கள். ஆனால், பிரிட்டிஷ் கொள்கையின் போக்கை மாற்றவோ, இந்தியாவை இழுத்துச் செல்லும் வெள்ளத்தைத் திருப்பவோ அவர்களால் முடியாது. அவர்கள் இங்கிலாந்தின் தொழில், நிதி நலன்களின் ஏஜெண்டுகள் தானே! அந்நலன்கள் இந்தியாவைச் சுரண்டுவதிலேயே நாட்டம் கொண்டிருந்தன.

பிரிட்டிஷ் தொழில் நலன்களையும், தங்களுடைய நலன்களையும் பொறுத்தவரையில் இந்தியாவில் அதிகார வர்க்கத்தாரின் ஆட்சி முறை திறமையாகவே நடந்து வந்தது. ஆனால், ஒரு தேசத்தின் முன்னேற்றத்துக்கும் சுகவாழ்வுக்கும் இன்றியமையாத ஏற்பாடுகளான கல்வி, சுகாதாரம், வைத்தியம் முதலியன கவனிக்கப் படவில்லை. பல வருஷங்கள் வரையில் அதிகார வர்க்கத்தார் அவற்றைக் காதில்கூடப் போட்டுக் கொள்ளவில்லை. பழைய கிராமப் பள்ளிக்கூடங்கள் மறைந்தொழிந்தன, அதன் பிறகு மூக்கால் அழுதுகொண்டு கல்விக்கு ஏற்பாடு

செய்யலானார்கள். அது கூட அவர்களுடைய தேவையை முன்னிட்டுத்தான் செய்யப்பட்டது. பெரிய உத்தியோகங்களிலெல்லாம் பிரிட்டிஷாரே இருந்தார்கள். சின்ன உத்தியோகங்களையும் குமாஸ்தா வேலைகளையும் கூட அவர்களே பார்க்க முடியுமா? ஆகவே, குமாஸ்தா வேலைக்கு ஆள் தேவையாயிருந்தது. குமாஸ்தாக்களை உண்டாக்குவதற்காகவே பிரிட்டிஷார் முதன் முதலில் பள்ளிக்கூடங்களையும் கலாசாலைகளையும் ஆரம்பித்தார்கள். அன்று தொட்டு இன்றுவரை அதுவே அவர்கள் அளிக்கும் கல்வியின் பண்பும் பயனுமாக இருந்து வருகிறது. அவர்களுடைய கல்விச்சாலைகளில் கல்வி கற்றுத் தேறியவர்களில் பெரும்பாலோர் குமாஸ்தாவேலை ஒன்றுக்குத்தான் லாயக்குடையவர்களாக இருக்கிறார்கள். ஆனால், விரைவிலேயே, அரசாங்கக் காரியாலயங்களின் தேவைக்கும் இதரக் காரியாலயங்களின் தேவைக்கும் மீறிய குமாஸ்தாக்களை அக்கல்விச்சாலைகள் உற்பத்தி செய்து விட்டன. படித்தவர்களில் பலருக்கு வேலை கிடைக்கவில்லை. ஆகவே, நாட்டில் ஒரு புதிய வகுப்புத்—படித்த வேலையில்லாதார் வகுப்பு—தோன்றியது.

இப்புதிய ஆங்கிலக் கல்வியைக் கற்பதில் வங்காளம் பிற மாகாணங்களை விட முன்னணியில் இருந்தது. ஆகவே, ஆதியில் குமாஸ்தா ஸ்தானங்களைப் பெரும்பாலும் வங்காளிகளே நிரப்பி வந்தனர். 1857-ல், கல்கத்தா, பம்பாய், சென்னை (மதராஸ்) ஆகிய மூன்று இடங்களிலும் சர்வகலாசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டன. இங்கே ஒரு விஷயம் கவனிக்கவேண்டும். முஸ்லிம்கள் இப்புதிய கல்வியைப் பிரியத்துடன் வரவேற்கவில்லை. ஆகவே, குமாஸ்தா வேலைக்கும் அரசாங்க உத்தியோகத்தும் விளைந்த போட்டியில் அவர்கள் பின்தங்கி

விட்டார்கள். பிற்பட்டு, அதுவே அவர்களுடைய குற்றங்களில் ஒன்ருக முடிந்தது.

இன்னெரு விஷயத்தையும் நாம் இங்கே கவனிக்க வேண்டும். பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவில் கல்விக்கு ஆரம்பம் செய்தபோது பெண் கல்வியை அவர்கள் அடியோடு புறக்கணித்து விட்டார்கள். அதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. கல்வியின் நோக்கம் குமாஸ்தா உற்பத்தியாக இருந்தது. குமாஸ்தா வேலைக்கு ஆண்களே வேண்டப்பட்டார்கள். அதற்குக் கிடைத்தவர்களும் ஆண்களே. பிற்போக்கான சமூகப் பழக்க வழக்கங்கள் காரணமாகப் பெண்கள் அவ்வேலைக்கு முன் வரவில்லை. ஆகவே, அவர்கள் பெண் கல்வியை முற்றிலும் பராமுகம் செய்து விட்டார்கள். நெடுங் காலத்துக்குப் பின்னரே, அதுவும் சிறிய அளவில், பெண்கல்விக்கான ஏற்பாடு ஆரம்பம் செய்யப்பட்டது.

113

இந்தியா விழித்தெழுகிறது

டிஸம்பர் 7, 1932.

பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவில் பலப்படுத்தப்பட்டதைப் பற்றியும், இந்தியப் பொது மக்களை மிடியிலும் துன்பத்திலும் ஆழ்த்திய பிரிட்டிஷ் கொள்கையைப் பற்றியும் நான் உனக்குக் கூறினேன். பிரிட்டிஷ் ஆட்சியின் பயனுக நாட்டில் அமைதியும் ஒழுங்கும் ஏற்பட்டன. மொகலாய சாம்ராஜ்யத்தின் சீர்குலைவுக்குப் பின் விளைந்த குழப்பங்களால் கஷ்டப்பட்ட இந் நாட்டவருக்கு அவை யிரண்டும் வரவேற்கத் தக்கனவாகவே இருந்தன. நாட்டை நலிந்த கொள்ளைக் கூட்டங்கள் அடக்கப்பட்டன. ஆனுல், கழனியில் வேலை செய்யும் உழவனுக்கும், தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளிக்கும் அமைதியினுலும் ஒழுங்கினுலும் ஆகும் பயன் என்ன? புதிய ஆட்சியின் பாரம் அவர்களுடைய எலும்புகளை நொறுக்கியது. ஆனுல், இங்கே மீண்டும் ஒரு விஷயம் உனக்கு ஞாபகமூட்டவும் அறிவுறுத்தவும் விரும்புகிறேன். ஒரு நாட்டையோ அல்லது அந் நாட்டாரையோ கோபித்துக் கொள்வதில் அர்த்தமே இல்லை. நமது இடும்பைகளுக்காக நாம் பிரிட்டன் மீதோ பிரிட்டிஷார் மீதோ கோபப் படுவது அறிவுடைமை ஆகாது. வீணே ஆத்திரம் கொள்வதாலும், வெறுமே பிறரை நோவதாலும் ஒரு பலனும் விளையாது. நமது ஆவி போவதுதான் மிஞ்சும். நமது வறுமைக்கும், துன்பத்துக்கும் நம்மைப் பிறர் சுரண்டுவதற்கும் காரணங்களைக் கண்டறிந்து அவற்றை நீக்க முற்படுவதுதான் அறிவுடைமையாகும். இவ்வாறு தற் சோதனை

செய்யவும், உலகத்தோடு ஒக்க ஓடவும் தவறி விடுவோமாயின் நாம் அலக்கண் உறுவது நிச்சயம். இந்தியா இக்காரியங்களைச் செய்யத் தவறியதால்தான் வீழ்ந்துபட்டது. அது பிரேதம் போலாகி விட்டது. அதன் சமூகம் பழைய சம்பிரதாயம் என்னும் குளிரில் உறைந்து இறுகி விட்டது. அதன் சமூக அமைப்புமுறை உயிரையும் திறமையும் இழந்து துருப்பிடித்து விட்டது. ஆகவே, இந்தியா துன்புற்றதில் வியப்புக்கு இடமே இல்லை. இந்தியாவைத் துன்புறுத்தும் கருவிகளாகப் பிரிட்டிஷார் வந்து வாய்த்தனர். அவ்வளவுதான். அவர்கள் இல்லாவிட்டால் வேறு யாராவது அதே கைங்கரியத்தைச் செய்திருப்பார்கள்.

ஆனால், பிரிட்டிஷார் இந்தியாவுக்குச் செய்த ஒரு பெரு நன்மையை நாம் மறந்துவிடக் கூடாது. அவர்களுடைய ஆண்மையும் வீரமும் நிறைந்த புதிய வாழ்க்கை முறையானது இந்தியாவைத் தாக்கி அதிரச் செய்து அதன் பயனாக இந்தியாவில் அரசியல் ஒற்றுமை உணர்ச்சியும் தேசிய உணர்ச்சியும் தோன்றின. முதுமை எய்திவிட்ட நமது தேசத்தையும் ஜனங்களையும் மீண்டும் இளமை எய்துவிப்பதற்கு அத்தகைய அதிர்ச்சி—அது துன்பத்தைக் தந்தாலும்—அவசியமாயிருந்தது போலும். குமாஸ்தா உற்பத்திக்காக ஏற்பட்ட ஆங்கிலக் கல்வி மேனாட்டு அறிவு உலகத்தையும் இந்தியர்களுக்குத் திறந்து காட்டியது. நாட்டில் ஆங்கிலம் படித்த புதிய வகுப்பு ஒன்று தோன்றியது. அவ்வகுப்பு சிறியதாயினும், பொதுஜனத் தொடர்பு அற்றதாயினும், அதுவே புதிய தேசிய இயக்கங்களைத் தலைமைவகித்து நடத்த வேண்டுமென்று தெய்வம் விதித்திருந்தது. ஆரம்பத்தில், அவ்வகுப்பு இங்கிலாந்தையும், சுதந்திரத்தைப் பற்றிய இங்கிலீஷ் கருத்துகளையும் போற்றிப்

புகழ்ந்துகொண்டிருந்தது. அந்தச் சமயத்தில்தான் இங்கிலாந்திலுள்ளவர்கள் சுதந்திரத்தைப் பற்றியும் ஜனநாயகத்தைப் பற்றியும் வாய்ப்பதர் தூற்றிக்கொண்டிருந்தார்கள். அவையெல்லாம் தெளிவற்ற பேச்சு என்பதில் ஐயமில்லை. இந்தியாவில் இங்கிலாந்து தன் சொந்த நன்மையைக் கோரி யதேச்சாதிகார ஆட்சி நடத்திவந்ததே அதற்குச் சான்று. ஆனால், உரிய தருணத்தில் இங்கிலாந்து இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்கும் என்று அப்போது ஆசையோடு எதிர்பார்க்கப்பட்டது.

மேனாட்டுக் கருத்துகள் இந்தியாமீது மோதியதன் பயனாக ஹிந்துமதம் ஓரளவு பாதிக்கப்பட்டது. ஆனால். பொதுஜனங்கள் பாதிக்கப்படவில்லை. மத விஷயங்களில் அரசாங்கம் வைதிகர்களை ஆதரித்தது என்று நான் ஏற்கெனவே கூறியுள்ளேன். ஆங்கிலம் படித்த புதிய மத்திய வகுப்பாரையும் அது பாதித்தது. அவர்கள் அரசாங்க உத்தியோகஸ்தர்களும் வேறு தொழிற் பிரவிருத்தி உள்ளவர்களும் ஆவர். 19-வது நூற்றாண்டின் தொடக்கத்தில், ஹிந்து மதத்தை மேனாட்டு ரீதியில் சீர்திருத்தம் செய்வதற்கு வங்காளத்தில் முயற்சி செய்யப்பட்டது. இதற்குமுன் ஹிந்துமதத்தில் எண்ணற்ற சீர்திருத்தவாதிகள் தோன்றியிருக்கிறார்கள் என்பது உண்மையே. அவர்களில் சிலரைப்பற்றி நான் இக்கடிதங்களில் கூறியுள்ளேன். ஆனால், இப்புதிய சீர்திருத்த முயற்சி கிறிஸ்தவமதத்தின் சார்பும் மேனாட்டுக் கருத்துகளின் சார்பும் கொண்டதாக இருந்தது. இம்முயற்சிக்குக் காரணகர்த்தர் ராஜாராம் மோகனராய் என்பவர். அவர் பெருமையும் புலமையும் சான்றவர். 'சதி' ஒழிப்பு சம்பந்தமாக நாம் அவருடைய பெயரை முன்பே கேள்விப்பட்டோம். அவர் சமஸ்

கிருதம், அரபு முதலான பல மொழிகளைக் கசடறக் கற்றவர். அவர் சகல மதங்களின் கிரந்தங்களையும் பக்தி சிரத்தையுடன் கற்றாராய்ந்தார். அவர் சடங்குகளையும் பூஜை முதலான கருமங்களையும் எதிர்த்தார், சமூக சீர்திருத்தமும் பெண்கல்வியும் அவசியம் என்று வற்புறுத்தினார். அவர் 'பிரம்மசமாஜம்' என ஒரு சங்கத்தை நிறுவினார். எண்ணிக்கையைப் பொறுத்த வரையில் அது அன்றும் இன்றும் சிறிதுதான். ஆங்கிலம் படித்த வங்காளிகளோடு மட்டும் அது இருந்து வருகிறது. ஆயினும், அது வங்காளத்தின் வாழ்க்கையைப் பாதிக்காமல் இல்லை. தாகுர் குடும்பம் அதை அவலம்பித்தது. நமது கவி ரவீந்திரநாதரின் தந்தையாரான மகரிஷி தேவேந்திர நாத தாகுர் நெடுங்காலம் வரையில் பிரம்மசமாஜத்தின் தூணாக விளங்கினார். கேசவ சந்திர சேனர் என்பவர் இன்னொரு சமாஜ முக்கியஸ்தர் ஆவர்.

அந்நூற்றாண்டின் பிற்பாதியில் இன்னொரு மதச் சீர்திருத்த இயக்கம் தோன்றியது. இது பஞ்சாபில் தோன்றியது. இதை நிறுவியவர் சுவாமி தயானந்த சரசுவதி ஆவர். அவர் 'ஆரிய சமாஜம்' என்றொரு சங்கத்தைத் தோற்றுவித்தார். ஆரிய சமாஜமும் ஹிந்து மதத்தின் பிற்கால வளர்ச்சிகளை ஒப்புக்கொள்ளவில்லை. அது ஜாதிப் பாகுபாட்டைப் பலமாக எதிர்த்தது. "வேதங்களுக்குத் திரும்பிச் செல்லுங்கள்" என்று அது முழங்கியது. அது முஸ்லிம், கிருஸ்தவக் கருத்துகளால் பாதிக்கப்பட்ட ஒரு மதச் சீர்திருத்த இயக்கமாயினும் உண்மையில் அது வீரமும் வேகமும் கொண்டதாயிருந்தது. ஹிந்து மதத்தின் பிரிவுகளுக்குள்ளே ஆரிய சமாஜம்தான் இஸ்லாம் மதத்தை அதிகமாக ஒத்திருப்பது. ஆனால், அதுதான் இஸ்லாம் மதத்துக்குப் போட்டியாகவும் எதிரியாகவும் வந்து வாய்த்தது. இருந்த நிலையிலேயே இருந்துகொண்டு தற்காப்பில்மட்டும் கவனம் செலுத்தி வந்த ஹிந்துமதத்தை மேல் விழுந்து அடிக்கும் ஒரு பிரசார மதமாக்குவதே அவ்வியக்கத்தின் நோக்கமாகும். அது ஹிந்துமதத்துக்குப் புத்துயிர் அளிப்பதற்காகவே தோன்றியது. அதில் தேசியத்தின் நிறம் படிந்திருந்த காரணத்தால் அதற்குச் சிறிது பலம் உண்டாயிற்று. உண்மையில் அது ஹிந்து தேசியத்தின் எழுச்சியே யாகும். அது ஹிந்து தேசியமாயிருந்த காரணத்தாலேயே இந்திய தேசியமாவது அதற்குக் கஷ்டமாயிருந்தது.

ஆரிய சமாஜம் பிரம்ம சமாஜத்தைவிட இந்தியாவில், முக்கியமாகப் பஞ்சாபில், அதிகமாகப் பரவியது. ஆனால், அது பெரும்பாலும் மத்திய வகுப்பாருடன் நின்றுவிட்டது. அது ஆண்களுக்கும் பெண்களுக்கும் பல பள்ளிகளையும் கல்லூரிகளையும் ஏற்படுத்திக் கல்வித் துறையில் பெருந்தொண்டாற்றி வருகிறது.

19-வது நூற்றாண்டில் வதிந்த இன்னொரு மகா புருஷரைப்பற்றியும் நான் உனக்குக் கூற வேண்டும். இக்கடிதத்தில் நான்மேலே கூறிய பெரியார்களிலிருந்து அவர் பெரிதும் மாறுபட்டிருந்தார். ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ச தேவரையே நான் இங்குக் குறிப்பிடுகிறேன். அம்மகான் சீர்திருத்த வேகம் நிறைந்த சங்கம் எதையும் ஸ்தாபிக்கவில்லை. ஏழை எளியவர்களுக்குச் சேவை புரிவதையே அவர் அதிகமாக வற்புறுத்தினார். நாடெங்குமுள்ள ராமகிருஷ்ண சேவாசிரமங்கள் தங்கள் குருதேவரிட்ட அப்பணியை ஆற்றிவருகின்றன. ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் பிரிய சிஷ்யரான சுவாமி விவேகானந்தரின் புகழ் இப் பூமண்டலமெங்கும் பரந்தது. அவர் மிகுந்த வாக்குவன்மையுடன் தீவிரமான தேசியப் பிரசாரம் செய்தார். அவருடைய தேசியம்

முஸ்லிம்களுக்கோ வேறு பிறருக்கோ விரோதமானதல்ல. ஆரிய சமாஜத்தின் தேசியம் போன்று அது குறுகியதுமல்ல. ஆயினும், சுவாமிகளின் தேசியத்தை ஹிந்து தேசியம் என்றே கூறவேண்டும். அதனுடைய வேர் ஹிந்து மதத்திலும் ஹிந்துக் கலைப் பண்பிலும் இருந்தது.

ஆக, ஹிந்துஸ்தானத்தில் 19-வது நூற்றாண்டில் முதன்முதலாக வீசிய தேசிய அலைகள் ஹிந்து சம்பந்தமும் மத சம்பந்தமும் பெற்றிருந்தன என்று அறிகிறோம். இந்த ஹிந்து தேசியத்தில் முஸ்லிம்கள் பங்கு கொள்ளவில்லை. அவர்கள் அதனின்றும் ஒதுங்கியிருந்தது இயற்கையே. அவர்கள் ஆங்கிலக் கல்வியினின்றும் விலகி நின்ற படியால் புதிய கருத்துகள் அவர்களை அதிகமாகப் பாதிக்கவில்லை. அவர்களிடையே அறிவுத்துறையிலும் யாதொரு கொந்தளிப்பும் நிகழவில்லை. பலஆண்டுகளுக்குப் பிறகு அவர்கள் தங்கள் கூட்டைவிட்டு வெளிப்போந்தார்கள். அப்பொழுது அவர்களுடைய தேசியமும், ஹிந்துக்களுடைய தேசியம் ஹிந்து தேசியமாயிருந்தது போலவே, முஸ்லிம் தேசியமாயிருந்தது. அவர்கள் தங்களுக்கு ஆதாரமாக இஸ்லாமிய சம்பிரதாயங்களையும் கலைப்பண்பையும் நோக்க ஆரம்பித்தார்கள். ஹிந்துக்கள் பெரும்பான்மையோரா யிருந்த படியால், தங்களுடைய கலாசம்பிரதாயங்களை எங்கே இழந்துவிட நேரிடுமோ என்கிற பயம் முஸ்லிம்களுக்கு உண்டாயிற்று. ஆனால், இந்த முஸ்லிம் இய கம் வெகுகாலத்துக்குப் பிறகு, அந்நூற்றாண்டி இறுதியில்தான் உருப்பெற்றது.

இன்னொரு விநோதம் என்னவென்றால், ஹி மதத்திலும் இஸ்லாம் மதத்திலும் தோன்றிய இ இருந்த முன்னேற்ற இயக்கங்கள் மேனாட்டுப் ப

விஞ்ஞான, அரசியல் கருத்துகளைக் கூடியவரையில் தங்களுடைய பழைய மதக்கருத்துகளுடனும், பழக்க வழக்கங்களுடனும் ஒட்டவைக்க முயன்றன. தங்களுடைய பழைய கருத்துகளையும் பழக்க வழக்கங்களையும் அச்சமின்றி எதிர்த்து ஆராயக் கூடிய துணிவு அவர்களுக்கு இல்லை; புதிய விஞ்ஞான, அரசியல், சமூகக் கருத்துகள் கொண்ட புதிய உலகத்தைப் புறக்கணிக்கக் கூடிய தைரியமும் அவர்களுக்கு இல்லை. ஆகவே, அவர்கள் இரண்டையும் சமரசப்படுத்தித் தங்களுடைய புராதன மதக்கிரந்தங்களிலிருந்துதான் நவீனக் கொள்கைகளும் முன்னேற்றமும் உண்டாயின என்று எடுத்துக் காட்ட முயன்றார்கள். இம்முயற்சி தோல்வியில் முடிவது திண்ணம். இது ஜனங்கள் நேர்மையாகச் சிந்திப்பதற்குக் குறுக்கே நின்றது. உலகத்தையே மாற்றிக் கொண்டு வந்த புதிய கருத்துகளையும் சக்திகளையும் பற்றித் தைரியமாகச் சிந்தனை செய்து அவற்றை அறிந்து கொள்வதற்குப் பதிலாக, அவர்கள் பழைய வழக்கம் என்னும் பாறுங்கல்லைக் கட்டிக்கொண்டு அழுதார்கள். தைரியமாக முன்னோக்கி முன் செல்வதற்குப் பதிலாக அவர்கள் சதா கடைக்கண்ணால் பின்புறமாகவே நோக்கிக்கொண்டிருந்தார்கள். எப்பொழுதும் பின்புறமாகவே நோக்கிக் கொண்டிருப்பவர்கள் முன்னேறிச் செல்வது எளிதல்ல.

நகரங்களில் ஆங்கிலம் படித்த வகுப்பு சிறிது சிறிதாக வளர்ந்து வந்தது. கூடவே, வக்கீல்கள், டாக்டர்கள் போன்ற தொழில் பிரவிருத்தி உடையோரையும், வியாபாரிகள், வர்த்தகர்களையும் கொண்ட ஒரு புதிய மத்திய வகுப்புத் தோன்றி வளர்ந்தது. இதற்கு முன்பே ஒரு மத்திய வகுப்பு நாட்டில் இருந்தது வாஸ்தவம். ஆனால், பிரிட்டிஷார் ஆரம்பத்தில் அனுஷ்டித்த கொள்கை அவ்வமைப்பைப் பெரும்பாலும் அழித்துவிட்டது. இப்புதிய

பூர்ஷுவா அல்லது மத்திய வகுப்பு பிரிட்டிஷ் ஆட்சியின் நேர்விளைவாகும். ஒருவகையில், அவர்களைப் பிரிட்டிஷ் ஆட்சியை அண்டிப் பிழைப்பவர்கள் என்றும் கூறலாம். பொது ஜனங்களைச் சுரண்டுவதில் அவர்களும் பிரிட்டிஷ் ஆட்சியுடன் ஓரளவு பங்கெடுத்துக் கொண்டார்கள். நன்கு நிறைக்கப்பட்டுள்ள பிரிட்டிஷ் எஜமானனின் மேஜையிலிருந்து சிந்தும் துண்டு துணுக்குகளை உண்டு அவர்கள் உயிர் வாழ்ந்தார்கள். அவர்கள் சிறு சிறு உத்தியோகங்களில் அமர்ந்து இந்நாட்டில் பிரிட்டிஷ் ஆட்சி நடைபெறுவதற்கு உதவி வந்தார்கள். பலர் வக்கீல்களாக இருந்து நாட்டில் கோர்ட்டுகள் நடைபெற உதவினார்கள். ஊர் வழக்கினால் இவர்கள் பணக்காரர்கள் ஆனார்கள். இவர்களையன்றி வியாபாரிகளும் துபாசிகளும் பிரிட்டிஷ் சாமான்களை லாபத்துக்கோ கமிஷனுக்கோ விற்றுப் பிழைத்து வந்தார்கள்.

இப் புதிய மத்திய வகுப்பில் பெரும்பாலோர் ஹிந்துக்கள். அதற்குக் காரணம் காண்பது கஷ்டமல்ல. ஹிந்துக்களின் பொருளியல் நிலை முஸ்லிம்களுடையதை விடச் சற்று மேலாயிருந்தது. மேலும், சர்க்கார் சேவகத்துக்கும் மற்றத் தொழில்களுக்கும் உரிய முத்திரையான ஆங்கிலப் படிப்பு ஹிந்துக்களுக்கு இருந்தது. முஸ்லிம்கள் பொதுவாக ஏழைகளாக இருந்தார்கள். பிரிட்டிஷார் இந்தியக் கைத்தொழில்களை அழித்ததன் விளைவாக அதோகதியாகப் போன நெசவாளர்களில் பெரும்பாலோர் முஸ்லிம்களே. இந்திய மாகாணங்களில் வங்காளம்தான் முஸ்லிம்கள் அதிகமாக உள்ள மாகாணம். அங்கு அவர்கள் ஏழைக் குடிவாரதார்களாகவோ சின்ன நிலச்சுவான்தார்களாகவோ இருந்தார்கள். ஜமீன்தார் சாதாரணமாக ஒரு ஹிந்துவாக இருப்பான். கிராமப் பனியாவும் ஹிந்துவாகவே இருப்பான். பனியாவின்

தொழில் கடன் கொடுக்கல் வாங்கலும் கடை விற்பதும் ஆகும். இவ்வாறு ஹிந்து ஜமீன்தாரும் ஹிந்து பனியாவும் முஸ்லிம் விவசாயியைத் துன்புறுத்திச் சுரண்டிப் பிழைக்கும் நிலையில் இருந்தார்கள். அந்த நிலையை அவர்கள் பூரணமாக உபயோகித்துக் கொண்டார்கள். ஹிந்து-முஸ்லிம் பிணக்கின் மூலகாரணம் இதுதான். ஆகவே, இதை நினைவில் வைக்க வேண்டியது அவசியம்.

இவ்வாறே, தென்னிந்தியாவில் உயர் ஜாதி ஹிந்துக்கள் என்போர் 'தாழ்த்தப்பட்ட' வகுப்பினரைச் சுரண்டிப் பிழைத்து வந்தார்கள். 'தாழ்த்தப்பட்ட' வகுப்பினர் என்போர் பெரும்பாலும் வயலில் வேலை செய்து ஜீவிப்பவர்கள். சமீப காலத்தில் சிறப்பாக பாபு (காந்திஜி) வின் உண்ணா விரதத்திலிருந்து, அவர்களுடைய பிரச்சினை நம் கவனத்தைப் பெரிதும் கவர்ந்து வருகிறது. தீண்டாமை என்னும் கொடிய வழக்கம் எல்லா முனைகளிலும் தாக்கப்பட்டு வருகிறது. நூற்றுக்கணக்கான கோயில்களும் வேறு இடங்களும் அவர்களுக்குத் திறந்து விடப்படுகின்றன. ஆனால், பொருளியல் துறையில் அவர்கள் சுரண்டப்படுவதுதான் இப் பிரச்சினையின் அடிப்படையான விஷயம். அது ஒழிந்தாலொழிய, தாழ்த்தப்பட்ட வகுப்பினர் தாழ்த்தப்பட்டவர்களாகவே இருப்பார்கள். தீண்டாதவர்கள் விவசாய அடிமைகளாக வாழ்கிறார்கள். அவர்கள் சொந்தத்தில் நிலம் வைத்துக்கொள்ள அனுமதிக்கப் படுவதில்லை. வேறு பல கஷ்டங்களும் அவர்களுக்கு இருக்கின்றன.

மொத்தத்தில், இந்தியாவும் அதில் வாழும் ஜனங்களும் நாளுக்குநாள் தரித்திரம் மேலிட்டு வந்தாலும், புதிய பூர்ஷுவா வகுப்பைச் சேர்ந்த ஒரு சிலர் மட்டும் ஐசுவரியம் பெருத்து வந்தார்கள். அதற்குக் காரணம் அவர்கள் தேசத்தின் சுரண்டலில் பங்கு கொண்டது

தான். வக்கீல்களும், வேறு தொழில்கள் நடத்தி வந்தவர்களும், வியாபாரிகளும் சிறிது பணம் சேர்த்துக் கொண்டார்கள். சேர்த்த பணத்தை வட்டி கிடைக்கக் கூடிய வகையில் அவர்கள் எதிலாவது போட்டு வைக்க விரும்பினார்கள். அவர்களில் பலர் நொந்துபோன ஜமீன்தார்கள், மிராசுதார்களிடமிருந்து நிலத்தை வாங்கித் தாங்களே ஜமீன்தார்களாகவும் மிராசுதார்களாகவும் ஆனார்கள். வேறு சிலர் இந்தியாவில் ஆங்கிலத் தொழில் முதலாளிகள் அடிக்கும் கொள்ளை லாபத்தைப் பார்த்துத் தாங்களும் தொழிற்சாலைகளில் பணம் போட விரும்பினார்கள். ஆகவே, இந்திய முதலைக் கொண்டு பெரிய யந்திரத் தொழிற்சாலைகள் ஆக்கப்பட்டன. ஒரு இந்தியத் தொழில் முதலாளி வகுப்பும் தோன்றியது. இது ஏறக்குறைய 50 ஆண்டுகளுக்கு முன்னால், அதாவது 1880-ம் ஆண்டுக்குப் பிறகு நிகழ்ந்தது.

புதிய பூர்ஷுவா வகுப்பு வளர வளர அவர்களுடைய பணப்பசியும் வளர்ந்தது. அவர்கள் மேலும் மேலும் முன்னேறவும் மேலும் மேலும் பணம் சம்பாதிக்கவும் விரும்பினார்கள். அவர்களுக்கு அரசாங்கத்தில் அதிகமான உத்தியோகங்களும், தொழிற்சாலைகள் ஆரம்பிப்பதற்கு அதிகமான சலுகைகளும் வேண்டியிருந்தன. எல்லா வழிகளையும் பிரிட்டிஷார் அடைத்து நிற்பதை அவர்கள் கண்டார்கள். அரசாங்க உயர் பதவிகள் எல்லாம் பிரிட்டிஷாரின் ஏகபோக உரிமையாயிருந்தன. பிரிட்டிஷ் முதலாளிகளின் லாபத்துக்காகவே யந்திரத் தொழில்கள் நடத்தப்பட்டு வந்தன. ஆகவே, அவர்கள் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தார்கள். இதுதான் புதிய தேசிய இயக்கத்தின் தோற்றுவாய் ஆகும். 1857-ம் வருஷத்துக் கலகம் குரூரமாக அடக்கப்பட்ட பிறகு ஜனங்கள் அடியோடு படுத்து விட்டார்கள். வீறு

கொண்டெழுந்து ஒரு இயக்கமோ கிளர்ச்சியோ ஆரம்பிக்கக்கூடிய தென்பு அவர்களுக்கு இல்லை. அவர்கள் மறுபடியும் ஒருவாறு தலை தூக்குவதற்குப் பல வருஷங்கள் பிடித்தன.

நாடெங்கும் தேசியக் கருத்துகள் விரைவில் பரவி வந்தன. இதில் வங்காளம் முன்னணியில் நின்றது. வங்காளி மொழியில் புதுநூல்கள் வெளிவந்தன. அவை வங்காளி மொழியை வளம்படுத்தவும் வங்காளத்தில் தேசியத்தை வளர்க்கவும் பெரிதும் உதவின. அவற்றில் பங்கிம் சந்திர சட்டர்ஜி எழுதிய 'ஆனந்தமடம்' என்னும் நூலும் ஒன்றாகும். அதில்தான் நமது புகழ் பெற்ற தேசிய கீதமான 'வந்தே மாதரம்' காணப்படுகிறது. 'நீலதர்ப்பணம்' ('நீலக்கண்ணாடி'; அதாவது, நீலி அல்லது அவுரித்தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர் கஷ்டங்களைக் கண்ணாடிபோல் எடுத்துக் காட்டுவது என்று பொருள். பாரதியாரின் 'கரும்புத் தோட்டத்திலே' என்னும் பாட்டுப் போல) என்னும் வங்கப்பாடல் ஒன்று உறங்கிக் கிடந்த மக்களைத் தட்டி எழுப்பியது. அப்பாடல் அவுரித்தோட்டங்களில் வங்கத் தொழிலாளர் படும் அல்லல்களையெல்லாம் அவலம் தோய்ந்த சொல்லிலும் துயரம் தோய்ந்த பண்ணிலும் கல்லும் கரைந்துருகும் வண்ணம் இசைத்தது.

இதற்கிடையில், இந்திய முதலாளிகள் ஆக்கம் பெற்று வந்தார்கள். அவர்கள் தங்களுடைய வளர்ச்சிக்கு அதிக இடம் வேண்டுமென்று கேட்டார்கள். கடைசியில், 1885-ம் ஆண்டில் புதிய பூர்ஷுவா வகுப்பின் பல்வேறு பிரிவினரும் ஒன்று சேர்ந்து தங்களுடைய கட்சியை எடுத்துச் சொல்வதற்கு ஒரு ஸ்தாபனம் ஆரம்பிப்பது என்னும் முடிவுக்கு வந்தார்கள். இவ்வாறாக, 1885-ம் ஆண்டில், இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபை

யானது நிறுவப்பட்டது. இன்று 'காங்கிரஸ்' என்றால் இந்தியாவிலுள்ள சிறுவர் சிறுமியர் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். சமீப வருஷங்களில் அது மிகவும் பெரிதாகவும் பலமுள்ளதாகவும் வளர்ந்திருக்கிறது. அது பொது ஜனங்களின் சார்பில் நின்று பொதுஜனங்களுக்காகப் போராடிவருகிறது. அது இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் அஸ்திவாரத்தையே எதிர்க்கிறது. அரசாங்கத்தை எதிர்த்துப் பல பெரிய பொதுஜனப் போராட்டங்களையும் அது நடத்தி யிருக்கிறது. அது நாட்டின் சுதந்திரக் கொடியை உயர்த்தி அச்சுதந்திரத்தைப் பெறுவதற்காக ஆண்மையுடன் போரிட்டது. இன்னும், அது தன்னுடைய போரைத் தொடர்ந்து நடத்திக் கொண்டுதான் வருகிறது. ஆனால், இதெல்லாம் அதன் பிற்காலச் சரித்திரமாகும். முதலில் ஆரம்பிக்கப்பட்டபோது காங்கிரஸ் மகாசபை மிதவாதப் போக்கும் எச்சரிக்கையும் மிகுந்த ஒரு ஸ்தாபனமாக இருந்தது. பிரிட்டிஷ் அரசாங்கத்தினிடம் தனக்குள்ள விசுவாசத்தை அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்துக் கொண்டதோடு, ஏதாவது சில சிறிய சீர்திருத்தங்கள் அருளுமாறு அது அரசாங்கத்தை மிகுந்த பணிவுடன் வேண்டிக் கொண்டது. பணக்கார மத்திய வகுப்புக்கே அது பிரதிநிதியா யிருந்தது. சற்று ஏழைகளான மத்திய வகுப்பாருக்குக் கூட அதில் இடமில்லை. பொது ஜனங்களைப் பொறுத்த வரையில், அதாவது, விவசாயிகளையும் தொழிலாளர்களையும் பொறுத்த வரையில், அவர்களுக்கும் அக்காலக் காங்கிரசுக்கும் சம்பந்தமே இல்லை. முக்கியமாக, ஆங்கிலம் படித்த வகுப்பாரின் கட்சியை எடுத்துக் கூறும் கருவியாகவே அது இருந்தது. அதனுடைய நடவடிக்கைகள் நமது தாய் மொழியில் இன்றி நமது மாற்றாந்தாய் மொழியான ஆங்கிலத்தில்

நடைபெற்று வந்தன. அதன் கோரிக்கைகள் எல்லாம் ஜமீன்தார்கள், இந்திய முதலாளிகள், உத்தியோகம் கேட்கும் படித்த வேலையில்லாதார் ஆகியோரின் கோரிக்கைகளாகவே இருந்தன. பொது ஜனங்களுடைய கொடிய வறுமையையும் அவர்களுடைய தேவைகளையும் பற்றி அது கவலைகொள்ளவில்லை. உத்தியோகப் பதவிகள் 'இந்தியமயம்' ஆகவேண்டுமென்று அது கோரியது. அதாவது, சர்க்கார் உத்தியோகங்களில் ஆங்கிலேயரை விட இந்தியரையே அதிகமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அது கேட்டது. இந்தியாவின் கேட்டிற்கு மூலகாரணம் ஜனங்களைச் சுரண்டும் ஆட்சிமுறைதான் என்பதையும், அம்முறையை மாற்றாமல் அம்முறையை நடத்தும் ஆங்கிலேயரை இந்தியராக மாற்றுவதால் மட்டும் யாதொரு பலனும் விளையாதென்பதையும் அது உணரவில்லை. ராணுவ, சிவில் நிருவாகங்களில் பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களுக்கு ஆகும் அபரிமிதமான செலவை அது கண்டித்தது. இந்தியாவை அறவடிகட்டிப் பொன்னும் வெள்ளியும் இங்கிலாந்துக்குக் கொண்டு போகப் படுகிறதென்றும் அது எடுத்துக் காட்டியது.

ஆதிக் காங்கிரசின் மிதவாதப் போக்கை எடுத்துக் காட்டுவதன் மூலம் நான் அதைக் குறைகூறுகிறேன் என்றோ இகழ்ந்துரைக்கிறேன் என்றோ நீ எண்ணி விடக் கூடாது. என்னுடைய நோக்கம் அதுவல்ல. அக்காலத்தில், காங்கிரசும் அதன் தலைவர்களும் பெருந்தொண்டாற்றினார்கள் என்றே நான் நம்புகிறேன். இந்திய அரசியலில் மாற்ற முடியாத உண்மைகள், அதற்கிஷ்டமில்லாவிட்டாலும், அதைப் படிப்படியாக மேலும் மேலும் தீவிர வாதத்துக்குப் பிடர் பிடித்து உந்தின. ஆனால், ஆரம்பகாலத்தில், அது இருந்ததை

விட வேறு எவ்விதமாகவும் இருந்திருக்க முடியாது. மேலும், அக் காலத்தில், காங்கிரசை நிறுவியவர்கள் அவ்வளவு தூரம் செய்ததே எவ்வளவோ பெரிய காரியம். ஏனெனில், முன்னேறிச் செல்வதற்கு அப்பொழுது அதிகத் தைரியம் வேண்டியதா யிருந்தது. இந்தக் காலத்தில் சுதந்திரத்தைப் பற்றி வீரப் பிரசங்கம் புரிவது எளிது. ஏனெனில், ஜனங்கள் அதற்காக நம்மைப் போற்றிப் புகழ்ந்து ஆதரிக்கிறார்கள். ஆனால், ஒரு பெருஞ் செயலை முதன் முதலாக எடுத்து ஆற்றப் புகுவது மிக மிக அரிதாகும்.

முதல் காங்கிரஸ் 1885-ல் பம்பாயில் கூடியது. வங்காளத்தைச் சேர்ந்த டபிள்யு. சி. பானர்ஜி அதற்குத் தலைமை வகித்தார். அக் காலத்தில் பிரசித்தி பெற்று விளங்கிய காங்கிரஸ் தலைவர்களுள் சுரேந்திர நாத பானர்ஜி, பத்ருதீன் தயாப்ஜி, பிரோசிஷா மேதா ஆகியோர் முக்கியமானவர்கள். ஆனால், ஒருவருடைய பெயர் மற்றெல்லோரையும் விட மேம்பட்டுப் பிரகாசிக்கிறது. அவர்தான் இந்தியாவின் முது பெருங் கிழவர் (**Grand Old Man of India**) ஆன தாதாபாய் நௌரோஜி. இந்தியாவின் லட்சியம் சம்பந்தமாகச் 'சுயராஜ்யம்' என்னும் வார்த்தையை முதன் முதலில் உபயோகித்தவர் அவர்தான். இன்னொருவருடைய பெயரையும் நான் உனக்குச் சொல்ல வேண்டும். காங்கிரசின் பழைய தலைவர்களில் இன்று ஜீவதசையோடு இருப்பவர் அவர் ஒருவர்தான். உனக்கு அவரை நன்றாகத் தெரியும். அவர் தான் பண்டித மதன் மோகன மாளவியாஜி. ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகவே அவர் பாரதத் தாய்க்குத் தொண்டு புரிந்து வருகிறார். மூப்பும் சோர்வும் மேலிட்ட முதுமை நிலையிலும் அவர் தாம் இளமையில் கண்ட கனவை நனவாக்க உழைத்து வருகிறார்.

ஆக, காங்கிரஸ் ஆண்டு தோறும் கூடி வந்தது. அதன் வலிமையும் நாளுக்குநாள் பெருகி வந்தது. அதற்கு முன் தோன்றிய ஹிந்து தேசியத்தைப் போல் காங்கிரசின் நோக்கம் குறுகியதாக இல்லை. ஆனால், அது பெரும்பாலும் ஹிந்துக்களைக் கொண்டதாகவே இருந்தது. சில முஸ்லிம் பிரமுகர்கள் காங்கிரசில் சேர்ந்து அதற்குப் பிரசிடெண்டுகளாகவும் இருந்தார்கள். ஆனால், மொத்தத்தில் முஸ்லிம்கள் காங்கிரசினின்று விலகி நின்றார்கள். அக்காலத்தில் சர் சையது அகமது கான் என்பவர் ஒரு பெரிய முஸ்லிம் தலைவராயிருந்தார். முஸ்லிம்களின் பிற்போக்கான நிலைமைக்குக் கல்வியின்மையே காரணம் என்று அவர் கண்டார். முக்கியமாக, நவீனக் கல்வி கற்காததால் அவர்கள் பெருந் தீங்குக்கு ஆளாகி யிருக்கிறார்கள் என்று அவர் நினைத்தார். ஆகவே, அவர் முஸ்லிம்கள் அரசியலில் தலையிடுவதற்கு முன் கல்வியில் முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டியது அவசியம் என்பதை உணர்ந்து அவ்வாறே அவர்களுக்கு ஆலோசனையும் கூறினார். காங்கிரசிலிருந்து விலகி நிற்கும்படி அவர் முஸ்லிம்களைக் கேட்டுக் கொண்டார். அவர் அரசாங்கத்துடன் ஒத்துழைத்து அலிகாரில் ஓர் அரிய கலாசாலையை நிறுவினார். அது இப்பொழுது ஒரு சர்வகலாசாலையாக விளங்குகிறது. சர் சையதின் புத்திமதியைக் கடைப் பிடித்துப் பெரும்பாலான முஸ்லிம்கள் காங்கிரசில் சேராது ஒதுங்கி நின்றனர். ஆனால், ஒரு சிறுபான்மை முஸ்லிம் கோஷ்டி எப்பொழுதுமே காங்கிரசுடன் இருந்து வந்திருக்கிறது. நான் 'பெரும்பான்மையோர்' என்றும் 'சிறுபான்மையோர்' என்றும் பேசும் போது முஸ்லிம்களிலும் சரி, ஹிந்துக்களிலும் சரி, ஆங்கிலம் படித்த உயர் மத்திய வகுப்பாரில் பெரும்பான்மை

யானவர்களையும் சிறுபான்மையானவர்களையுமே குறிப்பிடுகிறேன் என்பதை நீ மறந்து விடக் கூடாது. ஹிந்து முஸ்லிம் பொது ஜனங்களுக்கும் காங்கிரசுக்கும் அக் காலத்தில் யாதொரு தொடர்பும் இல்லை. அவர்களில் பலர் அதைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கவும் மாட்டார்கள். அப்போது, கீழ் மத்திய வகுப்பாரைக்கூடக் காங்கிரஸ் பாதிக்கவில்லை.

காங்கிரஸ் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தது. ஆனால், தேசியக் கருத்துகளும் சுதந்திர தாகமும் அதைவிட விரைவாக வளர்ந்து வந்தன. காங்கிரஸ் ஆங்கிலம் கற்றவர்களிடையில் மட்டும் கட்டுண்டு கிடந்தபடியால் அதன் செய்தியும் ஒரு குறுகிய எல்லைக்குள்தான் கேட்கப்பட்டது. ஆயினும், அதன் வாயிலாகப் பல்வேறு மாகாணங்கள் ஒன்றோடொன்று நெருக்கமாக வரவும் தேசத்தில் ஒரு பொதுவான மனோபாவம் வளரவும் சாத்தியமாயிற்று. ஆனால், அது ஜனங்களிடையே வேர் கொள்ளாதபடியால் அதிகப் பலம் அடையவில்லை. முன் கடிதம் ஒன்றில் ஆசியாவைப் பெரிதும் கலக்கிய ஒரு நிகழ்ச்சியைப் பற்றி உனக்குச் சொல்லியிருக்கிறேன். 1904–5-ல் வாமன ஜப்பான் மகாபல ருஷியாவின் மீது கொண்ட வெற்றியையே நான் குறிப்பிடுகிறேன். மற்ற ஆசிய நாடுகளைப் போலவே இந்தியாவும் அவ் வெற்றியின் பாடத்தை மனதில் நன்கு வாங்கிக் கொண்டது; அதாவது, இந்தியாவின் படித்த மத்திய வகுப்பார் வாங்கிக் கொண்டார்கள். அவர்களுடைய தன்னம்பிக்கை வளர்ந்தது. ஜப்பான் ஐரோப்பிய வல்லரசுகளில் மிகப் பெரிய ஒன்றை எதிர்த்து வெற்றி பெறக் கூடுமாயின், இந்தியாவும் ஏன் அவ்வாறு செய்யக் கூடாது? நெடுங் காலமாகவே இந்தியர் தாங்கள் ஆங்கிலேயரை விடத்

தாழ்ந்தவர்கள் என்று எண்ணி வந்திருக்கிறார்கள். பிரிட்டிஷாரின் நீண்டகால ஆதிபத்தியமும், 1857-ம் ஆண்டுக் கலகம் குரூரமாக அடக்கப்பட்டதும் சேர்ந்து இந்தியரைக் கோழைகள் ஆக்கிவிட்டன. பிரிட்டிஷாரால் இயற்றப்பட்ட ஆயுதச் சட்டம் இந்தியரை நிராயுத பாணிகளாக்கியது. இந்தியாவில் பிரிட்டிஷார் செய்த ஒவ்வொரு செய்கையும் இந்தியரைப் பார்த்து 'நீங்கள் அடிமைகள், நீங்கள் தாழ்ந்தவர்கள்' என்று குத்திக் காட்டுவதாயிருந்தது. இந்தியருக்கு அளிக்கப்பட்ட கல்வியும் அவர்கள் தாழ்ந்தவர்கள் என்கிற உணர்ச்சியையே அவர்களுக்கு ஊட்டியது. இல்லாதைப் புனைந்தும் உள்ளதைத் திரித்தும் இந்தியருக்குச் சரித்திரம் போதிக்கப்பட்டது. அதிலிருந்து அவர்கள் இந்தியாவில் எப்போதுமே அராஜகம் தான் தாண்டவமாடிக் கொண்டிருந்த தென்றும், ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் ஒருவர் மற்றவர் கழுத்தை வெட்டுவதைத் தவிர்த்து வேறு வேலை கிடையாதென்றும், காருணியமுள்ள பிரிட்டிஷார் இந்தியாவுக்கு வந்து அதை இன்னலினின்றும் மீட்டு அதற்கு அமைதியும் ஆக்கமும் வழங்கினார்கள் என்றும் தெரிந்துகொண்டார்கள். உண்மையில், ஆசியா முழுவதும் பிற்போக்கு வாய்ந்த ஒரு கண்டம் என்றும் அது ஐரோப்பாவின் ஆதிக்கத்தின் கீழ் நிரந்தரமாக இருக்க வேண்டுமென்றும் ஐரோப்பியர் மனமார நம்பியும் வாயாரப் பறைசாற்றியும் வருகிறார்கள். உண்மையும் சரித்திரமும் தங்கள் கூற்றுக்கு மாறாயிருப்பதைக் கூட அவர்கள் உள்ளத்திற் கொள்வதில்லை.

ஆகவே, ஜப்பானின் வெற்றி ஆசியாவுக்குச் சமயத்தில் வாய்த்த சஞ்சீவியாக இருந்தது. இந்தியாவில் பரவியிருந்த தாழ்மை உணர்ச்சியை அது குறைத்தது. தேசியக் கருத்துகள் எங்கும் பரவின. சிறப்பாக, அவை

வங்காளத்திலும் மகாராஷ்டிரத்திலும் அதிகமாகப் பரவின. அப்பொழுதுதான் நடந்த ஒரு நிகழ்ச்சி வங்காளத்தை ஒரு உலுக்கு உலுக்கி இந்தியா முழுவதையும் ஒரு கலக்குக் கலக்கி விட்டது. பிரிட்டிஷ் அரசாங்கம் பெரிய வங்காள மாகாணத்தை (அப்போது அதில் பீகாரும் அடங்கி யிருந்தது) கீழ் வங்காளம், மேல் வங்காளம் என இரு பாகங்களாகப் பிரித்தது. அதைக் கண்டு வங்காளத்தில் பூர்ஷுவா வகுப்பினரிடையே வளர்ந்து வந்த தேசியமானது கொதிப்படைந்தது. பிரிட்டிஷார் வங்காளத்தைப் பிரிப்பதன் மூலம் தங்களைப் பலவீனப்படுத்த விரும்புகிறார்கள் என்று அவர்கள் சந்தேகப் பட்டார்கள். கீழ் வங்காளத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையோரா யிருந்தனர். ஆகவே, வங்காளப் பிரிவினையின் மூலம் ஹிந்து—முஸ்லிம் பிரச்சினையும் கிளப்பப்பட்டது. வங்காளத்தில் பிரிட்டிஷாருக்கு விரோதமாக ஒரு பேரியக்கம் தோன்றியது. ஜமீன்தார்களிலும் முதலாளிகளிலும் பெரும்பாலோர் அதில் சேர்ந்துகொண்டார்கள். அப்போதுதான் தேசத்தில் 'சுதேசி' முழக்கம் முதன் முதலாக எழுந்தது. அத்துடன் பிரிட்டிஷ் (விதேசி) சாமான் பகிஷ்காரமும் சேர்ந்து கொண்டது. இந்த இயக்கத்தினால் இந்தியத் தொழில் முதலாளிகள் லாபம் அடைந்தனர். ஓரளவு இது ஜனங்களிடத்திலும் பரவியது. ஹிந்து மதமும் அதற்கு ஓரளவு ஊக்கம் அளித்தது. அவ்வியக்கத்தின் கூடவே வங்காளத்தில் பலாத்காரப் புரட்சிக் கொள்கையும் பிறந்தது. இந்திய அரசியலில் முதன் முதலாக வெடிகுண்டு தோற்றமளித்தது. அரவிந்தகோஷ் என்பவர் வங்காள இயக்கத்தின் மிகச் சிறந்த தலைவர்களில் ஒருவராக விளங்கினார். அவர் இன்னும் உயிருடன் இருக்கிறார். ஆனால், அவர் பிரெஞ்சு இந்தியாவிலுள்ள புதுச்சேரியில் பொது வாழ்விலிருந்து விலகி வாழ்ந்து வருகிறார்.

மேல் இந்தியாவில், மகாராஷ்டிர தேசத்திலும் அக்காலத்தில் ஒரு பெருங் கொந்தளிப்பு உண்டாயிற்று; அங்கே ஹிந்து மதத்தின் சாயம் தோய்ந்த தீவிர தேசிய வாதம் வீறுகொண்டு எழுந்தது. மகாராஷ்டிரத்தில் பால கங்காதர திலகர் என்னும் பேர்பூண்ட ஒரு பெருந் தலைவர் தோன்றினார். அவர் இந்தியாவெங்கும் "லோக மானியர்" என்று கொண்டாடப்பட்டார். திலகர் கீழ் நாட்டுப் பழங் கல்வியையும் மேனாட்டுப் புதுக் கல்வியையும் கரைகண்ட புலவர் பெருமான். அவர் சிறந்த அரசியல் அறிஞர். எல்லாவற்றிற்கும் மேலாக அவர் பெரிய பொதுஜனத் தலைவர். இதுவரையில் காங்கிரஸ் தலைவர்கள் ஆங்கிலம் படித்தவரிடையில் மட்டும் பிரசாரம் செய்து வந்தார்கள். அவர்களை ஜனங்கள் அறிய மாட்டார்கள். ஜனங்களிடம் தொடர்பு பூண்டு, ஜனங்களிடமிருந்து பலம் பெற்ற, நவபாரதத்தின் முதல் அரசியல் தலைவர் திலகர்தான். அவருடைய ஆண்மையும் ஆற்றலும் வாய்ந்த தோற்றச் சிறப்பு தேசிய இயக்கத்துக்கு ஒரு புதிய சக்தியையும் அசைக்க முடியாத தைரியத்தையும் அளித்தது. அத்துடன் வங்காளத்தின் புதிய தேசிய உணர்ச்சியும் தியாக உணர்ச்சியும் சேரவே, இந்திய அரசியலின் தோற்றமே மாறிவிட்டது.

1906, 1907, 1908-ம் வருஷத்துக் கொந்தளிப்பின் போது காங்கிரஸ் என்ன செய்துகொண் டிருந்தது? காங்கிரஸ் தலைவர்கள், தேசிய ஆவேசம் மறுமலர்ச்சி பெற்று விளங்கிய அக்காலத்தில் தேசத்தை முன்னின்று நடத்துவதற்குப் பதிலாகத் தாங்களே பின்தங்கி விட்டார்கள். பொது ஜனங்கள் வந்து நுழையாத அமைதியான அரசியலைத்தான் அவர்கள் அறிவார்கள். வங்கா

ளத்தில் கொழுந்துவிட்டெரிந்த தேசிய ஆவேசத்தையும், மகாராஷ்டிரத்தில் திலகராக உருவெடுத்து நின்ற எதற்கும் முடிதாழ்த்தாத புதிய சக்தியையும் அவர்கள் விரும்பவில்லை. அவர்கள் 'சுதேசி' இயக்கத்தைப் போற்றினார்கள்; ஆனால், பிரிட்டிஷ் சாமான் பகிஷ்காரத்துக்கு வரும்போது தயக்கம் காட்டினார்கள். காங்கிரசில் இரு கட்சிகள் தோன்றி வளர்ந்தன. ஒன்று, திலகரைத் தலைவராகக் கொண்ட தீவிர வாதிகளின் கட்சி. இதில் சில வங்காளத் தலைவர்களும் இருந்தார்கள். இன்னொன்று, கோபால கிருஷ்ண கோகலேயைத் தலைவராகக்கொண்ட மிதவாதிகளின் கட்சி. இதில் பழைய காங்கிரஸ் தலைவர்கள் இருந்தார்கள். மிதவாதத் தலைவர்களில் சிறந்த கோகலே ஓர் இளைஞர், திறமை மிகுந்தவர், தேச ஊழியத்துக்கே தம் உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணம் செய்தவர். கோகலேயும் மகாராஷ்டிர தேசத்தவர்தான். மகாராஷ்டிரம் ஈன்றெடுத்த இவ்விரு புத்திர சிகாமணிகளும் தங்கள் தங்கள் கோஷ்டிகளுடன் ஒருவரையொருவர் எதிர்த்து நின்றார்கள். 1907-ல் காங்கிரஸ் பிளவுபடுவது தவிர்க்க முடியாததாயிற்று. தீவிரவாதிகள் காங்கிரசிலிருந்து விரட்டப்பட்டனர். பழையபடி மிதவாதிகள் கையிலேயே காங்கிரஸ் இருந்து வந்தது. மிதவாதிகள் வெற்றி பெற்றார்கள்; ஆனால், அவர்கள் ஜனங்களிடையே செல்வாக்கை இழந்துவிட்டார்கள். காங்கிரசிலிருந்து விரட்டப்பட்டாலும் திலகருடைய தீவிரவாதக் கட்சியின் செல்வாக்கு நாட்டில் நாளுக்குநாள் பெருகி வந்தது. காங்கிரஸ் பலவீனமுற்றது. சில வருஷங்கள் வரையில் அதன் செல்வாக்குக் குன்றியிருந்தது.

அக்காலத்தில் அரசாங்கம் என்ன செய்தது? இந்திய தேசிய வளர்ச்சிக்கு எதிராக அது என்ன நடவடிக்கை எடுத்தது? தங்களுக்குப் பிடிக்காத ஒரு வாதத்

துக்கோ அல்லது கோரிக்கைக்கோ அரசாங்கங்களுக்கு ஒரே ஒரு வழியில்தான் பதில் அளிக்கத் தெரியும். அதுதான் குண்டாந்தடிப் பிரயோகம். ஆகவே, பிரிட்டிஷ் அரசாங்கமும் அடக்குமுறையில் இறங்கியது. ஜனங்கள் சிறைக்கு அனுப்பப் பட்டார்கள். பத்திரிகைச் சட்டங்கள் மூலம் பத்திரிகைகள் ஒடுக்கப்பட்டன. தனக்குப் பிடிக்காதவர்களை நிழல்போல் தொடர்ந்து அவர்களுடைய நடவடிக்கைகளை வேவு பார்த்து வந்து சொல்வதற்காக அரசாங்கம் கூட்டம் கூட்டமாக ரகசியப் போலீசாரை ஏவியது. அந்த நாளிலிருந்து சி. ஐ. டி (C. I. D) போலீசார் முக்கியமான இந்திய அரசியல் தலைவர்களின் இணைபிரியாத் தோழர்களாக இருந்து வருகிறார்கள். பல வங்காளத் தலைவர்களுக்குச் சிறைவாசத் தண்டனை அளிக்கப்பட்டது. லோகமானிய திலகருடைய விசாரணை மிகவும் பிரசித்தி பெற்றது. அவருக்கு ஆறு வருஷம் சிறைவாசம் அளிக்கப்பட்டது. அவர் மாண்டலேயில் சிறை வைக்கப்பட்டார். அங்கே அவர் 'கீதா ரஹஸ்யம்' என்னும் புகழ் பெற்ற நூல் ஒன்றை எழுதினார். லாலா லஜபதிராயும் பர்மாவுக்கு நாடு கடத்தப்பட்டார்.

ஆனால், வங்காளத்தில் அடக்குமுறை வெற்றி பெறவில்லை. ஆகவே, சில பேரையாவது திருப்திப்படுத்துவதற்காக அவசர அவசரமாய் ஒரு ஆட்சி முறைச் சீர்திருத்தம் தயாரிக்கப்பட்டது. அரசாங்கத்தாருடைய கொள்கை அன்றும், அதற்குப்பிறகும், இன்றும் தேசியவாதிகளிடையே பிளவு உண்டு பண்ணுவதுதான். மிதவாதிகளைத் தம்பக்கல் சேர்த்துக் கொள்வதென்றும், தீவிரவாதிகளை நசுக்கி விடுவதென்றும் அவர்கள் தீர்மானித்தார்கள். 1908-ல் மின்டோ-மார்லி சீர்திருத்தங்கள் என்று அழைக்கப்பட்ட புதிய சீர்திருத்தங்கள் பிரகடனம் செய்யப்பட்டன. அவற்றைக் கண்டு மித

வாதிகள் மகிழ்ந்து போனார்கள். அவர்கள் அரசாங்கத்தாரின் பக்கம் சேர்ந்து கொண்டார்கள். தீவிரவாதிகளின் தலைவர்களோ சிறையில் இருந்தார்கள். ஆகவே, அவர்கள் மனமொடிந்து, உற்சாகம் இழந்து நின்றார்கள். தேசிய இயக்கமும் வலிகுன்றியது. வங்காளத்தில் மட்டும் பிரிவினைக்கு எதிரான கிளர்ச்சி நிற்காமல் நடந்து வந்தது. அது வெற்றியும் பெற்றது. 1911-ல் பிரிட்டிஷார் வங்காளப் பிரிவினையை ரத்துசெய்தார்கள். இந்த வெற்றி வங்காளிகளுக்குப் புதிய ஊக்கத்தை அளித்தது. ஆனால், 1907-ம் வருஷத்து இயக்கம் சிறிது சிறிதாகத் தேய்ந்து விட்டது. இந்தியா மீண்டும் அரசியல் உறக்கத்தில் ஆழ்ந்தது.

டில்லிமா நகரம் இனி இந்தியாவின் புதிய தலைநகராக இருக்கும் என்று 1911-ம் ஆண்டில் அறிவிக்கப்பட்டது. டில்லி எத்தனையோ சாம்ராஜ்யங்களைத் தன் மடியில் இருத்தித் தாலாட்டியும் இருக்கிறது; எத்தனையோ சாம்ராஜ்யங்களைத் தன் வாயில்போட்டு விழுங்கியும் இருக்கிறது.

ஆக, ஐரோப்பாவில் உலகயுத்தம் தொடங்கி நாம் பேசிவரும் நூற்றாண்டு முடிந்தகாலையில் இந்தியா மேற்கூறிய நிலையில் இருந்தது. அந்த யுத்தம் இந்தியாவையும் வெகுவாகப் பாதித்தது. ஆனால், அதைப்பற்றிப் பிறகு கூறுகிறேன்.

கடைசியாக, 19-வது நூற்றாண்டு இந்தியாவின் கதையை நானும் முடித்துவிட்டேன். இன்றைக்குப் பதினெட்டு வருஷங்களுக்குமுன் வரையில் கதையைக் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறேன். இப்பொழுது நாம் இந்தியாவிடம் விடைபெற்றுக்கொண்டு அடுத்த கடிதத்தில் சீனாவுக்குச் செல்லவேண்டும். அங்கே, இன்னொரு வகையான சாம்ராஜ்யச் சுரண்டல் முறையைக் காண்போம்.

114

பிரிட்டன் சீனா மீது அபினியைத் திணிக்கிறது

டிசம்பர் 14, 1932.

தொழில், யந்திரப் புரட்சிகளால் இந்தியாவில் விளைந்த பலன்களைப் பற்றியும், புதிய சாம்ராஜ்ய வாதம் இந்தியாவில் வேலை செய்த விதத்தைப் பற்றியும் நான் உனக்குச் சற்று விரிவாகவே எடுத்துரைத்தேன். நான் இந்தியன் ஆனபடியால் இந்தியாவின் விஷயத்தில் ஒருதலைப் பட்சமாகத்தான் பேசமுடியும் என்று நினைக்கிறேன். நடுநிலை கோடாத நடுக்கறு காட்சி எனக்கு அரிதென்றே நான் அஞ்சுகிறேன். ஆனால், நீயோ, தன் கட்சியே நியாயமானது என்று சாதிக்கப் புறப்படும் ஒரு தேசிய வாதியைப் போலன்றி உண்மைகளை விருப்பு வெறுப்பின்றி ஆராயும் ஒரு விஞ்ஞானியைப் போல், இவ்விஷயங்களைப் பரிசீலனை செய்ய முயற்சிக்க வேண்டுமென்பது என் அவா. நானும் அவ்வாறே செய்ய முயன்று வந்திருக்கிறேன். உலகில் தேசியத்துக்கு இடமுண்டு. அந்த இடத்தில் அது நல்லது. ஆனால், அது நம்பமுடியாத தோழனாகவும் உறுதியற்ற சரித்திராசிரியனாகவும் இருக்கிறது. பல நிகழ்ச்சிகளுக்கு அது நம்மைக் குருடாக்கி விடுகிறது. அதனால், உண்மையை நேர்பட உரைக்க முடிவதில்லை. முக்கியமாக, நம்மையோ நமது நாட்டையோ பொறுத்த விஷயங்களில் அது உண்மையைத் திரித்துக் கூறவே முயலுகிறது. ஆகவே, இந்தியாவின் சமீபகாலச் சரித்திரத்தை ஆராயும்போது நாம் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். நமது

கஷ்ட நஷ்டங்களுக் கெல்லாம் முழுப் பழியையும் பிரிட்டிஷார் தலைமீது போடுவது முறையாகாது.

19-வது நூற்றுண்டில், பிரிட்டனின் தொழில் அதிபர்களும் முதலாளிகளும் இந்தியாவை எவ்வாறு சுரண்டினார்கள் என்று பார்த்தோம். இப்பொழுது, ஆசியாவின் இன்னொரு பெரிய நாடும், உலகத்து நாடுகளிலே ஜாம்பவானை ஒப்பதும், பழங்காலந் தொட்டே இந்தியாவுடன் நட்புக்கிழமை பூண்டு விளங்குவதும் ஆகிய சீனாவுக்கு விஜயம் செய்வோம். சீனாவில் மேனாடுகள் வேறுவிதமான சுரண்டல் முறையைக் கையாள்வதை நாம் காண்போம். இந்தியாவைப் போல், சீனா எந்த ஐரோப்பிய நாட்டுக்கும் காலனியாகவோ, சார்பு நாடாகவோ ஆகிவிடவில்லை. அத்தீங்கினின்றும் அது தப்பி உய்ந்தது. 19-வது நூற்றுண்டின் நடு வரையிலும், சீனாவின் மத்திய அரசாங்கம் பலத்துடன் இருந்து தேசத்தைச் சிதறவிடாமல் இழுத்துப் பிடித்துக் கொண்டிருந்தது. இதற்கு நூறு வருஷங்களுக்கு முன்பே, மொகலாய சாம்ராஜ்யம் வீழ்ந்ததும், இந்தியா பலவாறாகச் சிதறுண்டு போனதை நாம் கண்டோம். 19-வது நூற்றுண்டில் சீனா வலிகுன்றி வந்தது. ஆயினும், அது சிதறவில்லை. மேலும் வெளிநாடுகள் தங்களுடைய பரஸ்பர மாற்சரியங்கள் காரணமாகச் சீனாவின் பலவீனத்தை அதிகமாகப் பயன்படுத்திக் கொள்ள முடியவில்லை.

சீனாவைப்பற்றிய என்னுடைய கடைசிக் கடிதத்தில் (94-வது கடிதம்) பிரிட்டிஷார் சீனாவுடன் தங்கள் வியாபாரத்தை அதிகரிக்கச் செய்த முயற்சிகளைப் பற்றிக் கூறினேன். அதில், இங்கிலாந்தின் மன்னரான மூன்றாவது ஜார்ஜ் எழுதிய நிருபத்துக்குச் சீனாவின் மஞ்சு சக்கரவர்த்தியான சியான்லுங் விடுத்த எடுப்பும் பெரு

மிதமும் வாய்ந்த மறுமொழியிலிருந்து ஒரு நீண்ட பகுதியைக் கொடுத்திருந்தேன். அது நடந்தது 1792-ல். அந்த வருஷத்தைச் சொன்னவுடனே அப்போது ஐரோப்பாவில் வீசிய பெரும்புயல் உன் நினைவுக்கு வரும். அது பிரெஞ்சுப் புரட்சியின் காலம். அதற்குப் பின் நெப்போலியன் தோன்றினான். நெப்போலிய யுத்தங்கள் நடந்தன. அக்கால முழுதும் இங்கிலாந்து நெப்போலியனுடன் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு போராடி வந்தது. நெப்போலியன் ஒழிகிற வரையில் இங்கிலாந்துக்கு மூச்சுவிட நேரமில்லை. அந்தச் சமயத்தில் அது சீன வியாபாரத்தைப் பற்றிச் சிந்தித்துக்கொண் டிருக்க முடியுமா? ஆயினும், உடனே, 1816-ல் இன்னொரு பிரிட்டிஷ் தூதுகோஷ்டி சீனாவுக்கு அனுப்பப்பட்டது. ஆனால், சீனச் சக்கரவர்த்தியைத் தரிசிப்போர் அனுஷ்டிக்கவேண்டிய சம்பிரதாயத்தைப் பற்றி ஏதோ தகராறு ஏற்பட்டபடியால், அவர் பிரிட்டிஷ் தூதரான லார்டு ஆம்ஹர்ஸ்ட் என்பவரைப் பார்க்க மறுத்து அவரைத் திரும்பிப் போகுமாறு கட்டளையிட்டு விட்டார். அந்தச் சம்பிரதாயம் 'கோடோ' (Kotow) என்பதாகும். அதாவது, சக்கரவர்த்தியைக் காண வருவோர் அவருடைய திருமுன்னர் படிமிசை உடல்தோய விழுந்து வணங்கவேண்டும். 'கோ-டோ' என்னும் சொல் ஆங்கிலத்தில் உபயோகிக்கப்பட்டு வருவதை நீ கேள்விப் பட்டிருக்கலாம்.

ஆகவே, ஒன்றும் நடக்கவில்லை. இதற்கிடையில் ஒரு புதிய வியாபாரம் விரைவில் பெருகிவந்தது. அது தான் அபினி வியாபாரம். ஆனால், அதைப் புதிய வியாபாரம் என்று சொல்வது அவ்வளவு சரியல்ல. ஏனெனில், 15-வது நூற்றுண்டிலேயே இந்தியா சீனாவுக்கு அபினி அனுப்பி வந்தது. முன்காலத்தில் இந்தியா

எத்தனையோ நல்ல வஸ்துக்களைச் சீனாவுக்கு அனுப்பிவந்திருக்கிறது. அது அனுப்பிய கெட்ட வஸ்துக்களில் நிச்சயமாக அபினி ஒன்றாகும். ஆனால், அப்போது அபினி வியாபாரம் அளவுக்கு மீறிப் போகவில்லை. 19-வது நூற்றாண்டில் அது விருத்தியடைந்தது. ஐரோப்பியர்தான் அதற்குக் காரணம். அவர்களிலும் முக்கியமாகப் பிரிட்டிஷ் வியாபாரத்தை ஏகபோக உரிமையாக அனுபவித்துவந்த கிழக்கிந்தியக் கம்பெனியைத்தான் சொல்லவேண்டும். கீழ்நாடுகளில் வாழ்ந்துவந்த டச்சுக்காரர், மலேரியாக் காய்ச்சல் வரவொட்டாமல் தடுப்பதற்காகப் புகையிலையுடன் அபினியைக் கலந்து புகைப்பது வழக்கம் என்று சொல்லப்படுகிறது. அவர்கள் மூலமாக அபினி புகைக்கும் வழக்கம் சீனாவுக்குச் சென்றது. ஆனால், சீனர்கள் இது விஷயத்தில் குருவை மிஞ்சிய சிஷ்யர்கள் ஆகிவிட்டார்கள். அவர்கள் அசல் அபினியையே புகைக்க ஆரம்பித்து விட்டார்கள். இத்தீய வழக்கத்தினால் ஜனங்களுக்குத் தீங்கு நேர்ந்ததோடு நாட்டின் செல்வமும் பறிபோயிற்று. ஆகவே, சீன அரசாங்கம் இவ்வழக்கத்தை நிறுத்த விரும்பியது.

1800-ம் ஆண்டில், எந்தக் காரணத்தை முன்னிட்டும் சீனாவில் அபினி இறக்குமதி செய்யக்கூடாது என்று சீன அரசாங்கம் உத்தரவு பிறப்பித்தது. ஆனால், அபினி வியாபாரத்தால் அந்நியர் கொள்ளைலாபம் அடைந்து வந்தனர். அவர்கள் கள்ளத்தனமாக அபினியை இறக்குமதிசெய்து நாட்டில் வியாபாரம் செய்துவந்தார்கள். இதற்காக அவர்கள் சீன உத்தியோகஸ்தர்களுக்கு நிறைய லஞ்சம் கொடுத்தார்கள். அதை அறிந்த சீன அரசாங்கம் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் அந்நிய வியாபாரிகளைச் சந்திக்கக் கூடாது என்று விதி செய்தது. சீன, மஞ்சு மொழிகளை அந்நியருக்குக் கற்றுக்கொடுப்ப

வர்களுக்குக் கடுமையான தண்டனை விதிக்கப்படும் என்று சட்டம் செய்யப்பட்டது. ஆனால், இதனாலெல்லாம் கண்ட பலன் ஒன்றுமில்லை. அபினி வியாபாரம் பழைய படியே குறைவற நடந்து வந்தது. அத்துடன் லஞ்சமும் ஊழலும் தலைவிரித்தாடின. 1834-ல் நிலைமை மிகவும் சீர்கேடடைந்து விட்டது. பிரிட்டிஷ் அரசாங்கம் சீன வியாபாரத்தில் கிழக்கிந்தியக் கம்பெனி அனுபவித்து வந்த ஏகபோக உரிமையை ஒழித்து அதை எல்லாப் பிரிட்டிஷ் வியாபாரிகளுக்கும் பொதுவாக்கினார்கள்.

கள்ள அபினி வியாபாரம் திடீரென்று பெருகியது. கடைசியாகச் சீன அரசாங்கமும் அதை ஒழிப்பதற்குக் கடுமையான நடவடிக்கை எடுப்பதென்று தீர்மானித்தது. அதற்கு அவர்கள் ஒரு சரியான ஆளைப் பொறுக்கி எடுத்தார்கள். லின் சேஹ்சி என்பவன் கள்ள வியாபாரத்தை ஒழிப்பதற்கு விசேஷக் கமிஷனராக நியமிக்கப்பட்டான். அவன் உடனே தீவிரமான நடவடிக்கை எடுத்துக்கொண்டான். தென் சீனாவில் கள்ள வியாபாரத்துக்குப் பேர்போன நகரம் கான்டன். அவன் உடனே அங்குச் சென்று, தங்கள் கைவசமுள்ள அபினி அனைத்தையும் தன்னிடம் ஒப்புவிக்கும்படி அந்நிய வியாபாரிகளுக்கு உத்தரவிட்டான். முதலில் அவர்கள் அவ்வுத்தரவுக்குக் கீழ்ப்படிய மறுத்தார்கள். ஆனால், கமிஷனர் லின் அவர்களைக் கீழ்ப்படியுமாறு செய்தான். அவன் அவர்களுடைய சீனத்தொழிலாளர்களையும் பணியாளரையும் அவர்களை விட்டு நீங்கச் செய்ததோடு வெளியிலிருந்து அவர்களுக்கு உணவு செல்லாதவாறும் செய்து விட்டான். அவர்கள் தங்களுடைய தொழிற்சாலைகளில் தனித்து நின்றுவிட வேண்டியதாயிற்று. இந்தத் தீரமும் தீர்க்கமும் வாய்ந்த நடவடிக்கையின் பயனாக அந்நிய வியாபாரிகள் வழிக்கு வந்து, தங்களிட

மிருந்த 20,000 பெட்டி அபினியையும் ஒப்புவித்து விட்டார்கள். கள்ள வியாபாரத்தின் பொருட்டுச் சேமித்து வைக்கப்பட்டிருந்த இவ்வபினிக் குவியலை லின் நாசம் செய்வித்தான். தன் கப்பலில் அபினி இல்லை என்று கப்பல் காப்டன் உறுதி கூறினுலொழிய, எந்தக் கப்பலும் கான்டன் துறைமுகத்தில் பிரவேசிக்கக்கூடாது என்றும், இந்த வாக்குறுதி மீறப்பட்டால் அந்தக் கப்பலும் அதிலுள்ள பொருள்களும் சீன அரசாங்கத்தால் பறிமுதல் செய்யப்படும் என்றும் அவன் அவர்களுக்குத் தெரிவித்தான். கமிஷனர் லின் அரைகுறையாகக் காரியம் செய்பவன் அல்ல. அவன் தனக்கு ஒப்படைக்கப்பட்ட வேலையைச் செவ்வையாகச் செய்து முடித்தான். ஆனல், சீனுவுக்கு அதனுல் நேரவிருக்கும் கோரவிளைவுகளை அவன் உணரவில்லை.

அவ் விளைவுகள் யாவை? சீனுவுக்கும் பிரிட்டனுக்கும் போர் மூண்டது. அதில் சீனு தோல்வியுற்றது. அதன் பயனுகத் தனக்கு அவமானகரமான ஒரு உடன்படிக்கையைச் சீனு பிரிட்டனுடன் செய்து கொள்ள நேரிட்டது. இவற்றிற் கெல்லாம் சிகரம் வைத்தது போல், எந்த அபினி சீனுவுக்குள் வரக்கூடாதென்று சீன அரசாங்கம் தடுத்ததோ, அதே அபினி சீனுவின் மீது பலவந்தமாகத் திணிக்கப்பட்டது. சீனருக்கு அபினி நல்லதா கெட்டதா என்பது பற்றியும், சீன அரசாங்கம் அவ்விஷயத்தில் என்ன செய்ய விரும்பியது என்பது பற்றியும் பிரிட்டனுக்கு அக்கறை இல்லை. சீனுவில் கள்ளத்தனமாக அபினி விற்பதன்மூலம் பிரிட்டிஷ் வியாபாரிகள் கொள்ளை லாபம் அடித்து வந்தார்கள்; அந்த லாபத்துக்குக் கேடு வரக் கூடாது; அதுதான் பிரிட்டனுடைய அக்கறை. கமிஷனர் லின் அழித்த அபினியில் பெரும் பகுதி பிரிட்டிஷ் வியாபாரிகளுடையது. ஆகவே, தேசிய

கவுரவத்தின் பேரைச் சொல்லிக் கொண்டு, 1840-ம் ஆண்டில், பிரிட்டன் சீனு மீது போர் தொடுத்தது. இது 'அபினி யுத்தம்' என்று அழைக்கப்படுகிறது. இப்பெயர் இதற்கு மிகவும் பொருத்தமானதே. ஏனெனில் சீனு மீது அபினியைப் பலவந்தமாகத் திணிக்கும் உரிமையின் பொருட்டே பிரிட்டன் சீனுவுடன் போரிட்டு வெற்றியும் பெற்றது.

பிரிட்டிஷ் கடற் படை கான்டனையும் வேறு இடங்களையும் முற்றுகையிட்டது. சீனுவால் ஒன்றும் செய்ய முடிய வில்லை. இரண்டு வருஷங்களுக்குப்பின் அது பணிய வேண்டியதாயிற்று. 1842-ல் ஏற்பட்ட நாங்கிங் உடன்படிக்கைப்படி ஐந்து சீனத் துறைமுகங்கள் அந்நிய வியாபாரத்துக்குத் திறந்து விடப்பட்டன. அப்போது வியாபாரம் என்றுல் அபினி வியாபாரம் என்று தான் அர்த்தம். கான்டன், ஷாங்காய், அமாய், நிங்போ, பூசௌ ஆகிய இவ்வைந்தும் "உடன்படிக்கைத் துறைமுகங்கள்" என்று அழைக்கப்பட்டன. கான்டனுக்கு அருகிலுள்ள ஹாங்காங் தீவையும் பிரிட்டன் கைப்பற்றிக் கொண்டது. இவை போதா என்று சீனுவால் அழிக்கப்பட்ட அபினிக்காகவும், சீனு மீது தானே வலியத் தொடுத்த போரின் செலவுக்காகவும் நஷ்ட ஈடாகப் பிரிட்டன் ஒரு பெருந் தொகையை அதனிடமிருந்து பறித்துக் கொண்டது.

இவ்வாறு, பிரிட்டிஷார் அபினி யுத்தத்தில் ஜெயம் பெற்றுர்கள். சீனச் சக்கரவர்த்தி சொந்த முறையில் இங்கிலீஷ் ராணியான விக்டோரியாவுக்கு ஒரு நிருபம் வரைந்து விடுத்தார். அதில் அவர் சீனுவின் மீது அபினி வியாபாரத்தைத் திணிப்பதால் நேரும் கொடிய கேடுகளை வினயபூர்வமாக எடுத்துக் காட்டி அதைத் தவிர்க்கும் படி விண்ணப்பித்துக் கொண்டார். ராணியிடமிருந்து

அதற்கு மறுமொழி கிடைக்கவில்லை. என்னே காலத்தின் மாறுதல்! ஐம்பது ஆண்டுகளுக்கு முன் இதே சீன சக்கரவர்த்தியின் முன்னோரான சியான்லுங் இங்கிலாந்து மன்னருக்குப் போக்கிய நிருபம் முற்றிலும் வேறு தோரணையில் இருந்ததல்லவா?

மேனாட்டுச் சாம்ராஜ்ய வல்லரசுகளின் கையில் சீனா அடைந்த முதல் பரிபவம் இதுதான். அதன் ஏகாந்த வாழ்வு முடிவுற்றது. அது அந்நிய வியாபாரத்தை ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று; அத்துடன் கிறிஸ்தவப் பாதிரிகளையும் ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று. அக் கிறிஸ்தவப் பாதிரிகள் சீனாவில் சாம்ராஜ்ய வாதத்தின் முன்னணிப் படையாக விளங்கினார்கள். சாம்ராஜ்யத்தை விஸ்தரிப்பதில் அவர்கள் எடுத்துக் கொண்ட பங்கு மிகவும் முக்கியமானது. அதற்குப் பின் சீனாவுக்கு விளைந்த இன்னல்கள் பலவற்றிலும் பாதிரிகளின் சம்பந்தம் சிறிதாவது இல்லாமல் இல்லை. அவர்களுடைய நடவடிக்கை செருக்கு நிரம்பியதாகவும் சினமூட்டுவதாகவும் இருந்தது. ஆனால், சீனக் கோர்ட்டுகள் அவர்களை விசாரிப்பதற்கில்லை. புதிய உடன்படிக்கையின் கீழ்ச் சீனாவில் வாழும் மேனாட்டினர் சீனச் சட்டத்துக்கோ நியாயத்துக்கோ உட்பட்டவர்கள் அல்ல. அவர்கள் அவர்களுடைய கோர்ட்டுகளாலேயே விசாரிக்கப்பட்டார்கள். அது 'உபரி பிரதேசத்துவ உரிமை' (Extra-territoriality) என்று அழைக்கப்பட்டது. அது இன்னும் சீனாவில் அமுலில் இருந்து வருகிறது. சீனர் அதை மிகவும் வெறுக்கிறார்கள். பாதிரிகளால் மத மாற்றம் செய்யப்பட்ட சீனரும் இந்த உபரிப் பிரதேசத்துவ உரிமை தங்களுக்கும் உண்டென்று வாதாடினார்கள். அவர்கள் எவ்விதத்தும் அதற்கு உரியவர்களல்ல. அவர்களுக்கு உரிமை உண்டோ இல்லையோ, அதைப் பற்றி

என்ன கவலை? ஒரு சாம்ராஜ்ய வல்லரசின் பிரதிநிதியாகிய பாதிரிப் பெரியார் அதை ஆதரிக்கும்போது யார்தான் அதைக் தட்டிப் பேச முடியும்? இவ்வாறு பாதிரிகள் ஒரு கிராமத்துக்கும் இன்னொரு கிராமத்துக்கும் சிண்டு முடிந்து சண்டை உண்டாக்கிக் கொண்டே இருந்தார்கள். அளவுக்கு மீறி ஆத்திர மூட்டப்பட்ட ஜனங்கள் பாதிரியைத் தாக்குவதும் சில வேளைகளில் கொன்று விடுவதும் கூட உண்டு. உடனே அந்தப் பாதிரியைச் சேர்ந்த சாம்ராஜ்ய வல்லரசு சீனாவின் மீது பாய்ந்து பாதிரியின் கொலையை மிகவும் லாபகரமான முறையில் ஈடு செய்து கொள்ளும். ஐரோப்பிய வல்லரசுகளுக்குச் சீனாவில் தங்கள் பாதிரிகள் கொலையுண்டது போன்ற அவ்வளவு லாபகரமான நிகழ்ச்சிகள் வேறு இல்லை என்றே சொல்ல வேண்டும்! ஏனெனில், அவர்கள் ஒவ்வொரு கொலையையும் சீனாவிடமிருந்து மேலும் மேலும் சலுகைகள் பறிப்பதற்குச் சாக்காகப் பயன்படுத்திக் கொண்டார்கள்.

இன்னும், கிறிஸ்தவ மதத்துக்கு மாற்றப்பட்ட சீனன் ஒருவன்தான் சீனாவில் நிகழ்ந்த கலகங்களில் மிகவும் பயங்கரமும் குரூரமும் நிறைந்த கலகம் ஒன்றை ஆரம்பித்தவன். அது தாய்பிங் கலகம் என்று அழைக்கப்படுகிறது. அரைப்பைத்தியக்காரனான ஹுங்ஹிசின்சுவான் என்பவன் 1850-ம் ஆண்டில் அதை ஆரம்பித்தான். அம் மதவெறியன் 'விக்கிரக ஆராதனைக்காரரைக் கொல்லுங்கள்' என்று போர் முழக்கம் செய்து கொண்டே போனான். அவன் அதில் அசாதாரணமான வெற்றி அடைந்தான். எண்ணற்ற பேர் கொல்லப்பட்டார்கள். அக் கலகத்தால் சீனாவில் பாதிக்குமேல் பாழாயிற்று. அக் கலகம் ஏறக்குறையப் பத்துப் பன்னிரண்டு வருஷங்கள் வரையில் ஓய

வில்லை. அது காரணமாக மாண்டவர்களின் தொகை இரண்டு கோடி என்று மதிப்பிடப்படுகிறது. ஆனால், அக் கலகத்துக்கும் அதன் பயனாக விளைந்த படுகொலைகளுக்கும் கிறிஸ்தவப் பாதிரிகளையோ ஐரோப்பிய வல்லரசுகளையோ பொறுப்பாளிகள் ஆக்குவது சரியல்ல. முதலில் பாதிரிகள் அதை ஆசீர்வதிப்பது போலத் தோன்றியது. ஆனால், பிறகு அவர்கள் ஹுங்கை நிராகரித்து விட்டார்கள். சீன அரசாங்கம் மட்டும் எல்லாவற்றிற்கும் காரணம் பாதிரிகளே என்று நம்பியது. பாதிரிகளையும் அவர்களுடைய காரியங்களையும் சீனர் அச்சமயத்தும் அதற்குப் பின்பும் எவ்வளவு தூரம் வெறுத்தார்கள் என்பதை அது நன்கு காட்டுகிறது. அவர்களிடம் மதத்தையும் அன்பையும் போதிக்கும் தூதனாகப் பாதிரி செல்லவில்லை. ஏகாதிபத்தியத்தின் ஏஜெண்டாகவே அவன் சென்றான்.

'முதலில் பாதிரி, பிறகு துப்பாக்கிப் படகு, பிறகு நாடு கவர்தல்—ஒரு சீனனுடைய மனக்கண்ணுக்கு இந்த வரிசையிலேயே நிகழ்ச்சிகள் தோன்றுகின்றன' என்று ஒரு ஆங்கில ஆசிரியர் கூறியுள்ளார். இவ்வுண்மையை நாம் நினைவில் வைக்கவேண்டும். ஏனெனில், சீனாவின் சோக நாடகத்தில் பாதிரியின் பாத்திரத்தையே நாம் அடிக்கடி காண்கிறோம்.

அறிவு கலங்கிய வெறியன் ஒருவனால் ஆரம்பிக்கப் பட்ட ஒரு கலகம் இவ்வளவு அனர்த்தத்துக்கும் காரணமா யிருப்பதென்றால் அது அசாதாரணமாகவே தோன்றுகிறது. கடைசியாக அக் கலகம் அடக்கப் பட்டது. சீனாவின் பழைய ஏற்பாடு சீர்குலைந்து வந்தது தான் எல்லாவற்றிற்கும் உண்மையான காரணமாகும். சீனாவைப் பற்றி நான் கடைசியாக எழுதிய கடிதத்தில், மாறிவரும் பொருளியல் நிலைமைகளைப் பற்றியும், வரிப்

பளுவைப் பற்றியும், ஜனங்களிடையே அதிருப்தி பெருகி வந்ததைப் பற்றியும் எழுதியிருப்பதாக ஞாபகம். மஞ்சு அரசாங்கத்துக்கு விரோதமாக எங்கும் இரகசியச் சங்கங்கள் தோன்றி வந்தன. புரட்சியைப் பற்றிய பேச்சு காற்றில் கலந்து வீசியது. அந்நிய நாட்டார் அபினி முதலான பொருள்களில் செய்துவந்த வியாபாரம் நிலைமையை இன்னும் சீர்கேடாக்கியது. முற்காலத்தில் அந்நிய வியாபாரம் சீனாவுக்குப் புதிதல்ல. ஆனால், தற்போதைய நிலைமைகள் வேறு விதமாயிருந்தன. மேனாட்டு யந்திரத்தொழில் மிகவும் துரிதமாகப் பொருள்களை உற்பத்தி செய்துகொண் டிருந்தது. அவை எல்லாவற்றையும் உள் நாட்டிலேயே விற்கக் கூடவில்லை. ஆகவே, அவர்கள் அப் பொருள்களை விற்பதற்கு வேறு மார்க்கெட்டுகள் தேட வேண்டியதாயிற்று. அதுவே இந்தியாவையும் சீனாவையும் மார்க்கெட்டுகளாகக் கொள்ளுமாறு அவர்களைத் தூண்டிற்று. அவ் வெளி நாட்டுப் பொருள்களின் வியாபாரம், முக்கியமாக அபினி வியாபாரம், பழைய வியாபார ஏற்பாடுகளைக் குலைத்துப் பொருளியல் நிலையில் குழப்பம் உண்டு பண்ணி விட்டது. இந்தியாவைப் போலவே, சீனாவிலும் விலை வாசிகள் உலக விலைவாசிகளால் பாதிக்கப்பட்டன. ஜனங்களுக்கு ஏற்கெனவே இருந்த அதிருப்தியும் துன்பமும் போதா என்று இவையும் அவற்றுடன் சேர்ந்து கொண்டன. தாய்பிங் கலகம் அவ்வளவு பிரமாதமாக மூண்டதற்குக் காரணம் இது தான்.

சீனாவில் மேனாட்டு வல்லரசுகளின் அகம்பாவமும் தலையீடும் அதிகரித்து வந்த அக்காலத்தில் அத்துர்ப் பாக்கிய நாட்டின் நிலை மேலே கூறிய விதமாக இருந்தது. அவற்றின் கோரிக்கைகளை எதிர்த்துச் சீனாவால் ஒன்றும் செய்ய முடியாமற் போனதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

முதலில் ஐரோப்பிய வல்லரசுகளும் பிறகு ஜப்பானும் சீனாவின் குழப்ப நிலையையும் கஷ்டங்களையும் பூரணமாகப் பயன்படுத்திக் கொண்டு அதனிடமிருந்து சலுகைகளையும் பிரதேசங்களையும் பறித்து வந்ததைப் பின்பு காண்போம். சீனாவுக்கும் இந்தியாவுக்கு நேர்ந்த கதியே நேர்ந்திருக்கும். மேனாடுகள், ஜப்பான் இவற்றில் ஒன்றிற்கோ அன்றிப் பலவிற்கோ சீனாவும் ஒரு சாம்ராஜ்ய நாடு ஆகியிருக்கும். ஆனால், அத்தேசங்களின் பரஸ்பர போட்டியும் பொறாமையும் சீனாவை அத்தகைய கேட்டினின்றும் காப்பாற்றியது.

முக்கியமான கதையை விடுத்துப் பத்தொன்பதாவது நூற்றாண்டில் சீனாவின் பொது நிலைமை, அதன் பொருளியல் சீர்குலைவு, தாய்பிங் கலகம், கிறிஸ்தவப் பாதிரிகள், அந்நிய ஆக்கிரமணம் முதலிய வேறு பல விஷயங்களைப் பற்றிப் பேச ஆரம்பித்து விட்டேன். ஆனால், முக்கிய நிகழ்ச்சிகளை நன்கு அறிவதற்கு அவை ஏதுவாயிருக்கின்றன. சரித்திர நிகழ்ச்சிகள் அற்புதங்களைப் போலத் திடீரென்று தோன்றுவதில்லை. பல்வேறு காரணங்களால் அவை தோன்றுகின்றன. ஆனால், அக்காரணங்கள் தெளிவாகப் புலப்படுவதில்லை. அவை அந்நிகழ்சிகளுக் கடியில் தொக்கி நிற்கின்றன. சீனாவில் நேற்று வரையில் வல்லமையும் பெருமையும் வாய்ந்து விளங்கிய மஞ்சு மன்னர்கள் தங்களுடைய அதிருஷ்டச் சக்கரத்தில் திடீரென்று தோன்றிய மாறுதலைக் கண்டு வியப்படைந்திருக்க வேண்டும். அவர்களுடைய நாசத்தின் ஆதிகாரணம் அவர்களுடைய பூர்வ கருமங்களிலேயே இருந்த தென்பதை அவர்கள் உணரவில்லை. மேனாடுகளின் தொழில் அபிவிருத்தியையும் அதனால் சீனாவின் பொருளியல் முறைக்கு நேர்ந்த கேடுகளையும் அவர்கள் சரிவரத் தெரிந்து கொள்ளவில்லை.

‘காட்டு மிராண்டி’ களான அந்நியரின் ஆக்கிரமிப்பைக் கண்டு அவர்கள் ஆத்திரமுற்றார்கள். அதைக் குறித்துச் சீனச் சக்கரவர்த்தி சீனமொழியில் அழகான ஒரு பதப் பிரயோகம் செய்தானாம்: ‘என்னுடைய சயனத்துக் கருகில் எந்தப் பயலையும் குறட்டைவிட அனுமதிக்க மாட்டேன்’ என்று அவன் சொன்னானாம். ஆனால், பண்டைய சீன இலக்கியங்களின் அறிவாழமும் நகைச் சுவையும், யாது நேரினும் கலங்காத மனஅமைதியையும் இடுக்கண் வருங்கால் அதனைச் சிரிக்கவல்ல பொறுமையையும் போதித்தனவாயினும் அப்போதனை அந்நியனைத் தடுத்து நிறுத்தப் போதுமானதாயில்லை.

நாங்கிங் உடன்படிக்கையினால் பிரிட்டனுக்குச் சீனாவின் கதவு திறக்கப்பட்டது. ஆனால், எல்லா லாபத்தையும் பிரிட்டனே தட்டிக் கொண்டு போவதற்கு மற்ற நாடுகள் விடவில்லை. பிரான்சும் அமெரிக்காவும் கூடச் சீனாவுடன் வியாபார உடன்படிக்கைகள் செய்து கொண்டன. எல்லாவற்றிற்கும் சீனா தலைவணங்க வேண்டியதாயிற்று. அந்நியர் அதைக் கட்டாயப்படுத்தி அதற்கு இஷ்டமில்லாததைச் செய்ய வைத்ததன் காரணமாக அது அவர்களிடம் அன்போ மரியாதையோ கொள்ள இடமில்லாது போயிற்று. தங்கள் தேசத்தில் அக் ‘காட்டு மிராண்டிகள்’ இருப்பதையே சீனர் வெறுத்தனர். அந்நியரின் மனமும் திருப்தி அடையவில்லை. அவர்களுடைய ‘சுரண்டல் பசி’ தணியவில்லை. மறுபடியும் பிரிட்டிஷார் பிறரை முந்திக் கொண்டார்கள்.

சீனா தாய்பிங் கலகத்தை அடக்குவதில் ஈடுபட்டிருந்த தருணம் அந்நியருடைய பாதகச் சிந்தனைகள் பலிப்பதற்கு மிகவும் ஏற்ற தருணமாயிருந்தது. ஏனெனில், சீனர் உட்பகை புறப்பகை இரண்டையும் ஏககாலத்தில் எதிர்க்க முடியாதவர்களா யிருந்தார்கள்.

ஆகவே, போர் தொடங்குவதற்கு என்ன சாக்கு அகப் படும் என்று பிரிட்டிஷார் தேடலானார்கள். 1856-ல் காண்டனிலிருந்த சீன வைசிராய் ஒரு சீனக் கப்பலின் மாலுமிகளைக் கடற்கொள்ளைக் குற்றத்துக்காகக் கைது செய்தார். அந்தக் கப்பல் சீனருக்குச் சொந்தமானது. அதில் அந்நியர் யாரும் சம்பந்தப்படவும் இல்லை. ஆனால், அது ஹாங்காங் கவர்ன்மெண்டினிட மிருந்து அநுமதிச் சீட்டுப் பெற்றதற்கு அறிகுறியாகப் பிரிட்டிஷ் கொடியைப் பறக்கவிட்டிருந்தது. இன்னும் உட்புகுந்து பார்ப்பின், அவ்வநுமதிச் சீட்டுக்கூடக் காலாவதியாகி விட்டிருந்தது. ஆனால், அதைப் பற்றி யெல்லாம் யாருக்கு என்ன வேண்டும்? போர் தொடங்குவதற்குப் பிரிட்டிஷாருக்குச் சாக்குக் கிடைத்து விட்டது. பிரிட்டிஷார் செய்தது நியாயமா என்று கேட்காதே. கதையில் வரும் ஓநாய் ஆட்டுக்குட்டிக்கு என்ன நியாயம் சொல்லிற்று?

இங்கிலாந்திலிருந்து துருப்புகள் சீனாவுக்கு அனுப்பப்பட்டன. அந்தச் சமயத்தில்தான் இந்தியாவில் 1857-ம் ஆண்டுக்கலகம் ஆரம்பமாயிற்று. உடனே அத்துருப்புகள் இந்தியாவுக்குத் திருப்பப்பட்டன. இந்தியக் கலகத்தை அடக்குகிற வரையில் சீனயுத்தம் காத்துக் கொண்டிருக்க வேண்டியதாயிற்று. 1858-ல் இரண்டாவது சீனயுத்தம் ஆரம்பமாயிற்று. இதற்கிடையில், யுத்தத்தில் கலந்து கொள்வதற்குப் பிரெஞ்சுக்காரருக்கும் ஒரு வியாஜம் கிடைத்தது. சீனாவில் எங்கேயோ ஒரு பிரெஞ்சுப் பாதிரி கொல்லப்பட்டார். போர் தொடங்குவதற்கு இந்த ஒரு 'காரணம்' போதாதா? ஆகவே, தாய்பிங் கலகத்தை அடக்குவதில் முழுக்கவனத்தையும் செலுத்திக்கொண்டிருந்த ஏழைச் சீனாவின் மீது பிரிட்டிஷாரும் பிரெஞ்சுக்காரரும் விழுந்து பிடுங்கினார்கள். அவர்கள் ருஷியாவையும் அமெரிக்காவையும்

தங்களுடன் சேர்ந்துகொள்ளுமாறு அழைத்தார்கள். ஆனால், ருஷியரும் அமெரிக்கரும் மறுத்து விட்டார்கள். அவர்கள் யுத்தத்தில் சேர மறுத்தார்களே ஒழியக் கொள்ளையில் பங்கு கொள்ளத் தயாராகவே இருந்தார்கள். சண்டை என்று பேர் சொல்லத்தக்கது ஒன்றும் நடக்கவே இல்லை. சீனர் பணிந்து விட்டார்கள். பிரிட்டன், பிரான்சு, ருஷியா, அமெரிக்கா ஆகிய நான்கு நாடுகளும் சீனாவுடன் புதிய உடன்படிக்கைகள் செய்து கொண்டு மேலும் சில சலுகைகளைப் பறித்துக் கொண்டன. அந்நிய வியாபாரத்துக்கு மேலும் சில துறைமுகங்கள் திறக்கப்பட்டன,

ஆனால், இரண்டாவது சீனயுத்தத்தின் கதை இன்னும் முடியவில்லை. அதில் இன்னொரு அங்கம் பாக்கி இருக்கிறது. அதன் முடிவு முன் அங்கத்தின் முடிவைவிட அதிகத் துக்ககரமானது. உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்படும் போது சம்பந்தப்பட்ட அரசாங்கங்கள் அவற்றை ஊர்ஜிதம் செய்வது வழக்கம். அவ்வாறே, புதிய உடன்படிக்கைகளை ஓராண்டுக்குள் பீகிங் நகரில் ஊர்ஜிதம் செய்வதென்று ஏற்பாடாயிற்று. அதற்குரிய காலம் வந்தபோது, ருஷியத்தூதர் ருஷியாவிலிருந்து தரைமார்க்கமாகப் பீகிங் நகருக்கு நேராக வந்துவிட்டார். மற்ற மூவரும் கடல் மார்க்கமாக வந்தார்கள். அவர்கள் தங்களுடைய படகுகளைப் பீஹோ நதி வழியாகப் பீகிங்வரையில் கொண்டுவர விரும்பினார்கள். அப்போதுதான் தாய்பிங் கலகக்காரர் பீகிங் நகரை வளைத்துக்கொண் டிருந்தார்கள். அதற்காக அந்நதியரணைச் சீனர் பலப்படுத்தி யிருந்தார்கள். ஆகவே, சீன அரசாங்கம் அம்மூவரையும் நதி வழியாக வராமல் சற்று வடக்காகச் சென்று தரைவழியாக வரும்படி கேட்டுக் கொண்டது. அவ்வேண்டுகோள்

நியாயமானதே என்று குருடன்கூடச் சொல்லுவான். அமெரிக்கத் தூதர் அதற்கு இசைந்தார்; ஆனால், பிரிட்டிஷ் பிரெஞ்சுத் தூதர்கள் அதற்கு இசையவில்லை. அரண்களையும் மீறி அவர்கள் பீஹோ நதிவழியாகச் செல்ல முயன்றார்கள். அதன் பேரில், சீனர் துப்பாக்கிப் பிரயோகம் செய்து அவர்களை வந்தவழியே திருப்பியடித்தார்கள். துப்பாக்கிப் பிரயோகத்தால் பலத்த சேதம் உண்டாயிற்று.

வேறொன்றுமில்லையே! 'வேறு வழியாக வாருங்கள்' என்று தானே சீன அரசாங்கம் கேட்டுக் கொண்டது? அதற்குக் கூடச் செவி சாய்க்க முடியாத அளவுக்கு அகம்பாவமும் மமதையும் ஏறிப் போயுள்ள பிரிட்டிஷ் பிரெஞ்சுக்காரரா துப்பாக்கிப் பிரயோகத்தைச் சகிப்பார்கள்? பழி வாங்குவதற்காக மேலும் துருப்புகள் அனுப்பப்பட்டன. 1860-ல், அவர்கள் புராதன நகரமாகிய பீகிங் மீது படையெடுத்துச் சென்றார்கள். அவர்கள் அந்நகர மாளிகைகளுள் மிகவும் அழகும் அற்புதமும் வாய்ந்த ஒன்றை அழித்தும், சூறையாடியும், கொளுத்தியும் தங்கள் பழியைத் தீர்த்துக் கொண்டார்கள். சக்கரவர்த்தியின் வசந்த மாளிகையாகிய அதற்கு 'யுவன்-மிங்-யுவன்' என்று பெயர். அது சியான் லுங்கின் ஆட்சிக் காலத்தில் கட்டி முடிக்கப்பட்டது. அதில் சீன தேசத்தின் அபூர்வமான கலைச் செல்வங்களும், இலக்கியக் கருவூலங்களும் நிறைந்திருந்தன. வெண்கலத்தினாலும் பீங்கானாலும் செய்யப்பட்ட அழகும் அற்புதமும் வாய்ந்த பொருள்களும், அருமையான ஓவியங்களும், பழமையான கையெழுத்துப் பிரதிகளும், இன்னும் பல்வகையான காட்சிப் பொருள்களும் கலைப் பொருள்களும் அம்மாளிகையில் வைக்கப்பட்டிருந்தன. ஆயிர வருஷங்களுக்கு மேலாகவே சீனா

அப் பொருள்களுக்குப் பேர் போனதாயிருந்து வருகிறது. ஆனால், கழுதைக்குத் தெரியுமா கருப்பூர வாசனை? மூர்க்கர்களான பிரிட்டிஷ் பிரெஞ்சுப் போர் வீரர்களுக்கு அவற்றின் அருமை என்ன தெரியும்? அவர்கள் அவ்வரிய ஆயிரங்காலத்துப் பொக்கிஷங்களை ஒன்று குவித்துச் சொக்கப்பனை கொளுத்தினார்கள். அத்தீ பலநாட்கள் வரையில் அணையாது எரிந்துகொண்டிருந்தது. பல்லாயிரம் ஆண்டுகளாகப் பண்பாடும் கலையும் பழுத்து விளங்கும் சீனருடைய உள்ளம் மூர்க்கத் தனமான அந்நாசத்தைக் கண்டு ரத்தக் கண்ணீர் வடித்திருக்க வேண்டும். ஆகவே, அவர்கள் அந்நாசத்துக்குக் காரணமானவர்களைக் கொல்லவும் அழிக்கவும் மட்டும் தெரிந்த அறிவற்ற காட்டு மிராண்டிகள் என்று எண்ணியதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை அல்லவா? ஹூணர், மங்கோலியர் முதலிய புராதன காட்டு மிராண்டிகளின் ஞாபகம் அவர்களுக்கு வந்திருக்கும்.

ஆனால், அம்மிலேச்சக் 'காட்டுமிராண்டிகள்' சீனர் தங்களைப் பற்றி என்ன எண்ணுகிறார்கள் என்று எள்ளளவும் கவலை கொள்ளவில்லை. துப்பாக்கிப் படகுகளும் நவீனப் போர்க் கருவிகளும் படைத்த அவர்களை யார் என்ன செய்ய முடியும்? சீனாவில் ஆயிரக் கணக்கான ஆண்டுகளாகச் சேமித்து வைக்கப்பட்ட அரிய பொக்கிஷங்கள் அழிந்து போனால் அவர்களுக்கு என்ன? சீனக் கலையையும் பண்பையும் பற்றி அவர்களுக்குக் கிஞ்சித்தும் கவலை இல்லை.

"நம்மிடம் 'மாக்சிம்' துப்பாக்கி
அவர்களிடம் அது இல்லை.
எது வந்தால் நமக் கென்ன?
எது போனால் நமக் கென்ன?"

என்று அவர்கள் குஷாலாகப்பாடிக்கொண் டிருந்தார்கள்.

115

சீனாவின் கஷ்டதசை

டிசம்பர் 24, 1932.

பீகிங் நகரின் அற்புதமான வசந்த மாளிகையைப் பிரிட்டிஷாரும் பிரெஞ்சுக்காரரும் 1860-ல் அழித்துப் போட்டதைச் சென்ற கடிதத்தில் கண்டோம். போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறிய சீனர்களைத் தண்டிப்பதற்காக அவ்வாறு செய்தோம் என்று அழித்தகட்சியினர் சொல்லுகிறார்கள். அவர்கள் கூறும் குற்றத்தைச் சில சீனத்துருப்புகள் செய்திருக்கலாம். ஆயினும், அதற்காக ஒரு புராதன நாட்டின் போற்றற்குரிய பழம் பொக்கிஷங்களை யெல்லாம் வேண்டு மென்றே அழிப்பதென்பது நமது அறிவுக்கு எட்டக் கூடாததாயிருக்கிறது. அதை, அறியாத போர் வீரர்களின் செயல் என்றும் சொல்வதற்கில்லை. அரசாங்க அதிகாரத்தை வகித்தவர்களே அதற்குப் பொறுப்பாளிகளா யிருந்திருக்கிறார்கள். இத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்குக் காரணம் என்ன? பிரிட்டிஷாரும் பிரெஞ்சுக்காரரும் நாகரிகமும் பண்பாடும் வாய்ந்தவர்கள். அவர்கள் பல்லாற்றானும் நவீன நாகரிகத்தின் முன்னணியில் இருப்பவர்கள். அவர்கள் தனிப்பட்டமுறையில் பிறருடன் பழகும் போது அன்பாகவும், விநயமாகவும், பாடறிந்தும் ஒழுகுகிறார்கள். ஆயினும் அதே மனிதர்கள் பொது விவகாரங்களிலும், பிற நாட்டாருடன் விளையும் தகராறுகளிலும் நாகரிகத்தையும் பண்பாட்டையும் மறந்து ஒழுகுவதற்குக் காரணம் என்ன? தனிப்பட்டவர்கள் ஒருவருக்கொருவர் நடந்து கொள்ளும் முறைக்கும், தேசங்கள் ஒன்றோடொன்று நடந்து கொள்ளும் முறைக்கும் ஒரு விசித்திரமான

வேற்றுமை தென்படுகிறது. ‘அதிகமான சுய நலம் பாராட்டக் கூடாது; பிறர் மனம் நோவாமல் நடந்து கொள்ள வேண்டும்’ என்று குழந்தைகளுக்கும், சிறுவர் சிறுமியருக்கும் பாடம் போதிக்கப்படுகிறது. நமது கல்வியின் நோக்கமே இப்பாடத்தைப் போதிப்பது தான். நாமும் அதை ஓரளவு கற்றுக் கொள்ளுகிறோம். பிறகு, யுத்தம் வருகிறது. நாம் நமது பழைய பாடத்தை மறந்து விடுகிறோம். நம்மிடமுள்ள விலங்குணர்ச்சி தலைகாட்டுகிறது. இவ்வாறு மக்கள் மாக்களாகவும் விலங்குகளாகவும் மாறி விடுகிறார்கள்.

பிரெஞ்சுக்காரர் ஜெர்மானியர் போன்ற ஒரே வகுப்பைச் சேர்ந்தவர்களே சண்டை என்று வந்து விட்டால் இவ்வாறு நடந்து கொள்ளுகிறார்கள். வெவ்வேறு வகுப்பைச் சேர்ந்த இருதிறத்தாருக்குள் போர் மூளும் போது இன்னும் கேட்கவே வேண்டியதில்லை. ஐரோப்பியரும், ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் வாழும் வகுப்புகளும் ஜனங்களும் இகலி நிற்கும் போது இந்த நிலைமைதான் ஏற்படுகிறது. அவர்கள் ஒருவரை யொருவர் அறியார்கள். ஒருவரை யொருவர் அறிந்து கொள்ளாத நிலையில் ஒருவருக்கொருவர் அன்பு காட்டுவது முடியாது. வகுப்புத் துவேஷமும் பகைமையும் வளர்கின்றன. இத்தகைய இரு வகுப்புகளுக்குள் யுத்தம் நேரும்போது அது வெறும் அரசியல் யுத்தமாக மட்டும் இல்லாமல் வகுப்பு யுத்த(Racial War)மாகவும் முடிந்து விடுகிறது. 1857-ம் வருஷத்து இந்தியக் கலகத்தின்போது பிரிட்டிஷார் இயற்றிய பயங்கரக் கொடுமைகளுக்கும், ஐரோப்பிய வல்லரசுகள் ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் புரிந்து வரும் குரூர நாசத்துக்கும் மேற் கூறியவாறுதான் சமாதானம் சொல்ல முடியும்.

இவையெல்லாம் சிறுபிள்ளைத்தனமாகவும், விசன கரமாகவும் தோன்றுகிறது. ஆனால், ஒரு நாடு இன்னொரு நாட்டையும், ஒரு ஜனம் இன்னொரு ஜனத்தையும், ஒரு இனம் இன்னொரு இனத்தையும் எங்கே அடக்கி யாண்டு சுரண்டி வருகிறதோ அங்கே அதிருப்தியும், முரண்பாடும், எதிர்ப்பும், கலகமும் கட்டாயம் இருந்தே தீரும். சுரண்டப் படுகிறவர்கள் சுரண்டுபவர்களை உதறிஎறிய முயற்சித்துக் கொண்டுதான் இருப்பார்கள். இவ்வாறு ஒருவர் மற்றவரைச் சுரண்டிவாழும் முறைதான் நமது தற்கால மனித சமூகத்தின் அடிப்படையா யிருந்து வருகிறது. அதையே முதலாளித்துவம் என்று சொல்லுகிறார்கள். அம் முதலாளித்துவத்திலிருந்து தான் சாம்ராஜ்ய வாதம் தோன்றியுள்ளது.

19-வது நூற்றாண்டில் ஏற்பட்ட யந்திர முன்னேற்றமும் தொழில் முன்னேற்றமும் மேல் ஐரோப்பிய நாடுகளையும் ஐக்கிய அமெரிக்காவையும் செல்வமும் பலமும் பொருந்திய நாடுகளாகச் செய்துவிட்டன. உடனே, அவர்கள் தாங்கள்தான் உலகத்தையே ஆளப் பிறந்தவர்கள் என்றும், மற்ற வகுப்பார் தங்களைவிட மிகவும் தாழ்ந்தவர்கள் என்றும், ஆகவே அவர்கள் தங்களுக்கு இடம் கொடுத்துவிட்டு ஒதுங்கி நிற்கவேண்டும் என்றும் நினைக்க ஆரம்பித்தார்கள். இயற்கைச் சக்திகளை ஓரளவு அடக்கியாளும் வல்லமைபெற்ற அவர்கள் ஆணவம் மிஞ்சிப் பிறரிடம் கொடுமையாக நடந்து கொள்ளத் தலைப்பட்டார்கள். நாகரிகம் வாய்ந்த மனிதன் இயற்கையை அடக்கியாள்வது மட்டுமின்றித் தன்னையும் அடக்கியாள வேண்டுமென்பதை அவர்கள் மறந்துவிட்டார்கள். அதனால்தான், 19-வது நூற்றாண்டில், மற்றவர்களைவிடப் பலவழிகளிலும் முன்

னேற்றம் அடைந்துள்ள வகுப்பார், மிருகப்பிராயமாக வாழும் கிராதகர்களும் வெட்கப்படத்தக்க முறையில் காரியங்கள் செய்வதை நாம் காண்கிறோம். சென்ற நூற்றாண்டிலும் சரி, இப்போதும் சரி, ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் ஐரோப்பிய நாட்டார் புரிந்துவரும் அட்டூழியங்களை அறிந்துகொள்ள இது உனக்கு உதவியாயிருக்கும் என்று நம்புகிறேன்.

இதிலிருந்து ஐரோப்பியர்களைவிட நாமோ மற்ற வகுப்பாரோ மேலானவர்கள் என்று நான் சொல்வதாக நீ அர்த்தம் செய்யக் கூடாது. அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. நம்மிடம் எவ்வளவோ குற்றம் குறைகள் இருக்கின்றன. அவற்றில் சில மிகவும் தீயவை. இல்லாவிட்டால் இவ்வளவு அதலபாதலத்தில் நாம் வீழ்ந்திருக்கமாட்டோம்.

இப்பொழுது சீனாவுக்குத் திரும்பிச் செல்வோம். பிரிட்டிஷாரும் பிரெஞ்சுக்காரரும் வசந்த மாளிகையை அழித்துத் தங்களுடைய பலம் இவ்வளவென்று சீனருக்குக் காட்டியதைப் பார்த்தோம். அடுத்த படியாகப் பழைய உடன்படிக்கைகளை ஊர்ஜிதம் செய்யுமாறு அவர்கள் சீனாவைக் கட்டாயப் படுத்தியதோடு அதனிடமிருந்து மேலும் சில சலுகைகளையும் பறித்துக் கொண்டார்கள். அந்த உடன்படிக்கைகளின்படி, ஷாங்காயில் அந்நிய உத்தியோகஸ்தர்களின் கீழ்க் கடற்சுங்க இலாகா ஒன்றைச் சீனஅரசாங்கம் அமைத்தது. அது 'சாம்ராஜ்யக் கடற்சுங்கம்' (Imperial Maritime Customs) என்று அழைக்கப்பட்டது.

இதற்கிடையில், சீனாவைப் பலவீனப் படுத்தி அந்நிய வல்லரசுகளுக்கு ஒரு நல்ல சந்தர்ப்பத்தை அளித்த தாய்பிங் கலகம் ஓய்ந்தபாடில்லை. லிஹுங்சங் என்னும் சீனகவர்னர் அதைக் கடைசியாக 1864-ல் அடக்கினான்.

அவன் சீனாவின் தலைசிறந்த ராஜதந்திரியாக விளங்கினான்.

பிரிட்டனும் பிரான்சும் பயங்கர முறைகளைக் கையாண்டு சீனாவிடமிருந்து உரிமைகளையும் சலுகைகளையும் பறித்துக்கொண்டிருந்த காலையில், ருஷியாவானது அதே சீனாவிடம் அமைதியான முறைகளைக் கையாண்டு ஆச்சரியகரமான வெற்றி பெற்றது. சில வருஷங்களுக்கு முன்புதான், கான்ஸ்டாண்டிநோபிளை அடைய ஆசை கொண்ட ருஷியா ஐரோப்பாவில் துருக்கியைச் சென்று தாக்கியது. ருஷியாவின் பலம் வளர்ந்து வருவதைக் கண்டு அஞ்சிய பிரிட்டனும் பிரான்சும் துருக்கியுடன் சேர்ந்துகொண்டு ருஷியாவைத் தோற்கடித்தன. 1854—56-ல் நடந்த அந்த யுத்தம் கிரைமிய யுத்தம் என வழங்குகிறது. மேற்கே தோல்வியுற்ற ருஷியா கிழக்கே நோக்கத் தலைப்பட்டது. கிழக்கில் அதற்குப் பெரிய வெற்றியும் கிடைத்தது. அது சீனாவிடம் சமாதானமாகவே வடகிழக்குக் கடலைச் சார்ந்துள்ள ஒரு மாகாணத்தைக் கேட்டு வாங்கிக் கொண்டது. அந்த மாகாணத்தில் தான் விலாடிவாஸ்டாக் என்னும் துறைமுகப்பட்டணம் இருக்கிறது. ருஷியாவின் வெற்றிக்கு முராவியப் என்னும் ஒரு கெட்டிக்கார வாலிப ருஷிய உத்தியோகஸ்தனே காரணம். இவ்வாறு, பிரிட்டனும் பிரான்சும் மூன்று வருஷமாகச் சண்டைபோட்டும் நாட்டை அழித்தும் சாதித்துக் கொண்டதைவிட அதிகமாகவே ருஷியா சமாதான முறைகளால் சாதித்துக் கொண்டது.

1860-ம் ஆண்டில் சீனாவின் நிலைமை இவ்வண்ணமிருந்தது. 18-வது நூற்றாண்டின் முடிவில், ஆசியாவில் ஏறக்குறையப் பாதியளவுக்கு வியாபித்துப் பலம் பொருந்தி விளங்கிய மஞ்சுக்களின் சீன மகா சாம்ராஜ்ய

மானது இப்போது நெடுந்தொலைவிலிருந்து வந்த ஐரோப்பிய வல்லரசுகளால் தோல்விக்கும் அவமானத்துக்கும் உள்ளாக்கப்பட்டது. அங்குத் தோன்றிய உள்நாட்டுக் கலகம் சாம்ராஜ்யத்தைப் பெரும்பாலும் கவிழ்த்துவிட்டது என்றே சொல்லவேண்டும். மேற்கூறிய நிகழ்ச்சிகளால் சீனா அடியோடு நிலைகுலைந்து விட்டது. அதன் அமைப்பில் தவறு இருப்பது தெளிவாகப் புலப்பட்டது. அந்நிய அபாயத்தைத் தடுக்கும் விதமாகவும் புதிய நிலைமைகளுக்குப் பொருந்தும் விதமாகவும் தேசத்தைப் புனர் நிர்மாணம் பண்ணுவதற்கு முயற்சி செய்யப்பட்டது. 1860-ல் சீனா அந்நிய ஆக்கிரமிப்பைத் தடுக்கும் முயற்சியில் முனைந்தது. அவ்வாண்டில் சீனாவின் புதிய சகாப்தம் ஆரம்பமாகிறது என்று கொள்ளலாம். சீனாவுக்கு அண்டையிலுள்ள ஜப்பானும் அப்போது அதே முயற்சியில் ஈடுபட்டிருந்தது. அது சீனாவுக்கு ஓர் எடுத்துக்காட்டாகவும் விளங்கியது. அம்முயற்சியில் சீனாவைவிட ஜப்பான் அடைந்த வெற்றி மிகப் பெரிது. ஆயினும், சில காலம் வரையில் சீனா அந்நிய வல்லரசுகளைத் தடுத்து நின்றது.

சீனாவிடம் மிகுந்த நேசமுள்ள பர்லிங்கேம் என்னும் ஒரு அமெரிக்கர் தலைமையில் ஒரு சீனத் தூது கோஷ்டி சீனாவுடன் உடன்படிக்கை செய்து கொண்ட வல்லரசுகளிடம் அனுப்பப்பட்டது. அவர் சீனாவுக்குச் சற்றுச் சாதகமாகக் காரியத்தை முடித்துத் தந்தார். 1868-ல் ஒரு புதிய சீன-அமெரிக்க உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி சீன அரசாங்கம் தயவும் சலுகையும் காட்டுகிற முறையில் அமெரிக்காவுக்குச் சீனத் தொழிலாளர்களை அனுப்ப ஒப்புக் கொண்டது. அப்போது அமெரிக்கா பசிபிக் சமுத்திரத்தை ஒட்டிய மேல்நாடுகளை, முக்கியமாகக் காலிபோர்னியாவை, அபிவிருத்தி செய்து

கொண்டிருந்தது. அங்கே கூலி ஆள் பஞ்சம் அதிகமாயி ருந்தது. அதற்காக அவர்கள் சீனத் தொழிலாளர்களைக் கொண்டு வந்தனர். ஆனால், இதிலிருந்து ஒரு தகராறு முளைத்தது. குறைந்த கூலியில் சீனர்களிடம் வேலை வாங்கிக் கொள்வதை அமெரிக்கர் ஆட்சேபித்தனர். அதனால், இரு அரசாங்கங்களுக்கும் அபிப்பிராயபேதம் ஏற்பட்டது. பிறகு அமெரிக்க அரசாங்கம் சீனர் குடி யேறுவதையே தடுத்து விட்டது. இவ்வாறு தங்களுக்கு இழைக்கப்பட்ட அவமானத்தைக் கண்டு ஆத்திரமுற்ற சீனர் அமெரிக்கச் சாமான்களைப் பகிஷ்கரிக்கலாயினர். அது ஒரு பெரிய கதை. அதை முழுதும் தெரிந்து கொள்ள நாம் 20-வது நூற்றாண்டுக்குச் செல்ல வேண்டும். இங்கு நாம் அதைக் கவனிக்க வேண்டிய தில்லை.

தாய்பிங் கலகம் அடக்கப்பட்டவுடனே மஞ்சுக் களுக்கு விரோதமாக இன்னொரு கலகம் கிளம்பியது. இக்கலகம் உள்சீனாவில் நிகழவில்லை. மத்திய ஆசியாவில், சீனாவின் மேற்குக்கோடியிலுள்ள துருக்கிஸ்தானத்தில் இது நிகழ்ந்தது. அங்கு வசிப்பவர்களில் பெரும் பான்மையோர் முஸ்லிம்கள். அவர்கள், 1863-ல், யாகூப் பேக் என்பவனின் தலைமையில் அரசாங்கத்துக்கு விரோதமாக எழுந்து சீன அதிகாரிகளைத் துரத்தி விட்டார்கள். இரண்டு காரணங்களுக்காக இச் சிறிய கலகம் நம் கவனத்தைக் கவர்கிறது. ஒன்று: ருஷியா அதைப் பயன்படுத்திக் கொண்டு சீனாவிடமிருந்து நாட்டை அபகரிக்க முயன்றது. சீனாவுக்குக் கஷ்டம் நேரும்போதெல்லாம் இவ்வாறு செய்வது ஐரோப்பிய நாடுகளுக்கு வழக்கமாகிவிட்டது. இரண்டு: யாவரும் கண்டு ஆச்சரியப்படத்தக்க விதத்தில் சீனா ருஷியாவின் ஆக்கிரமிப்பை ஒப்புக் கொள்ள மறுத்ததோடு அது

சேர்ந்த நாட்டையும் கக்கும்படி செய்துவிட்டது. சீனத் தளபதியான சோ-சுங்-டாங் என்பவன் மத்திய ஆசியா வில் யாகூப் பேக்குக்கு விரோதமாக நடத்திய அசா தாரணமான போர் முறையே அதற்குக் காரணமாகும். அத் தளபதி மிகவும் சாவதானமாகவே காரியங்களைச் செய்து கொண்டு போனான். அவன் பையப் பையத் தன் படைகளை நடத்திக் கொண்டு சென்றான். அவன் கலகக் காரரைச் சென்று சேர்வதற்குள் பல வருஷங்கள் கடந்து விட்டன. இருமுறை அவன் தன் படைகளை நெடுங்காலம் ஒரே இடத்தில் நிறுத்தி விட்டான். அவ்வாறு அவர்கள் தங்கிய இடங்களில் தங்கள் உண வுக்கு வேண்டிய தானியங்களை விதைத்து அது விளைந்து முற்றியபின் அதை அறுத்து எடுத்துக் கொண்ட பின்னரே அவ்விடங்களை விட்டுக் கிளம்பினார்கள்! யுத்தத்தில் ஈடுபட்டுள்ள சேனைகளுக்கு உணவு அளிப்ப தென்பது எப்போதுமே கஷ்டமான ஒரு காரியம். அதுவும், ஒரு சேனை கோபிப் பாலைவனத்தைக் கடந்து செல்ல வேண்டுமாயின் அதற்கு உணவளிக்கும் பிரச் சினையைப்பற்றிக் கேட்கவே வேண்டியதில்லை. ஆகவே, தளபதி சோ அதை ஒரு புதியமுறையில் தீர்த்தான். அதற்குப்பின் அவன் யாகூப் பேக்கை ஜெயித்துக் கல கத்தை அடக்கினான். காஷ்கர், துர்பான், யார்கண்ட் முதலிய இடங்களில் அவன் நடத்திய போர் முறைகள் போர்க்கலை முறையில் மிகவும் ஆச்சரியமானவையாகும்.

மத்திய ஆசியாவில் ருஷியாவின் தலையைத் தட்டி அடக்கிய உடனே சீன அரசாங்கமானது சிதறுண்டு வரும் பரந்த சீன சாம்ராஜ்யத்தின் இன்னொரு கோடி யில் ஏற்பட்ட ஒரு குழப்பத்தைச் சமாளிக்க வேண்டிய தாயிற்று. அன்னாம் மாகாணம் சீனாவுக்கு அடங்கிய ஒரு தேசம். பிரான்சுக்கு அதன் மீது கண். அது காரண

மாகச் சீனுவுக்கும் பிரான்சுக்கும் போர் மூண்டது. மீண்டும் சீனு வெற்றி பெற்றதைக் கண்டு அனைவரும் ஆச்சரியமுற்றனர். சீனுவை அடக்குவதற்குப் பிரான்சால் முடியவில்லை. 1885-ல் சீனுவுக்குச் சாதகமான ஒரு உடன்படிக்கை ஏற்பட்டது.

சீனுவின் இப் புதிய பலத்தைக் கண்டு சாம்ராஜ்ய வல்லரசுகள் திகைத்து நின்றன. அது 1860-க்கு முற்பட்ட தன் பலவீனத்தை உதறி எறிந்து விட்டுப் புதிய பலத்துடன் எழுந்திருப்பது போல் தோன்றியது. அதைச் சீர்திருத்துவது பற்றி ஆலோசனைகள் செய்யப்பட்டன. சீனுவுக்கு வந்த கண்டம் நீங்கி விட்டது என்றே பலரும் எண்ணலானுர்கள். அதனுல்தான், 1886-ல் பர்மாவைத் தங்கள் ராஜ்யத்துடன் இணைத்துக் கொண்ட பிரிட்டிஷார், பர்மா பத்து வருஷத்துக்கொரு முறை சீனுவுக்கு வழக்கமாகச் செலுத்தி வந்த கப்பத்தைத் தாங்களும் செலுத்துவதாக வாக்குறுதி அளித்தார்கள்.

ஆனுல், சீனுவுக்கு வந்த கண்டம் அப்படி ஒன்றும் நீங்கிவிட வில்லை. அது இன்னும் எவ்வளவோ கஷ்ட நஷ்டங்களையும் அவமானத்தையும் அனுபவிக்க வேண்டியிருந்தது. அதன் தாழ்வுக்கு அதன் தரைப்படையும் கடற் படையும் பலவீனமாயிருந்தது மட்டும் காரணமல்ல. உண்மைக் காரணத்தை அறிய நாம் இன்னும் ஆழ்ந்து நோக்கவேண்டும். சீனுவின் சமூகப் பொருளியல் கட்டுக்கோப்பு முழுவதும் பொல பொல என்று பிதிர்ந்து வந்தது. 19-வது நூற்றுண்டில் அது அடைந்திருந்த சீர்கேட்டைப்பற்றித்தான் ஏற்கெனவே கூறியுள்ளேன். அப்போது மஞ்சு மன்னர்களுக்கு விரோதமாக நாடெங்கும் இரகசியச் சங்கங்கள் தோன்றின. அந்நிய வியாபாரமும் தொழில் அபிவிருத்தி அடைந்துள்ள நாடுகளுடன் ஏற்பட்ட தொடர்பும் நிலைமையை இன்னும் மோசமாக்கின.

1860-க்குப் பிறகு சீனு காட்டிய பலத்துக்கு உண்மையான அஸ்திவாரம் ஏதுமில்லை. சில அதிகாரிகள் அங்கும் இங்கும் சில சீர்திருத்தங்கள் செய்தனர். அவர்களில் லிஹுங் சங்கை முக்கியமாகச் சொல்ல வேண்டும். ஆனுல், இச் சீர்திருத்தங்கள் சீனுவின் ஊனுயிரை உருக்கி வந்த நோயின் வேர் முதலைத் தொடவில்லை.

அப்போது சீனுவின் சாம்ராஜ்ய பீடத்தில் ஒரு ஸ்திரீ அமர்ந்திருந்தாள். அவளுடைய கணவன் இறந்து விட்டான். அடுத்தபடி சக்கரவர்த்தியாக வர வேண்டிய அவளுடைய புதல்வன் அறியாப் பாலகனுயிருந்தான். ஆகவே, இருபத்தாறு வயதாயிருக்கும்போதே அவள் சாம்ராஜ்யத்தின் பொறுப்பை ஏற்றுக் கொண்டாள். அவள் ஆச்சரியகரமான சக்தியும் திடமும் வாய்ந்தவள். அவளுடைய பெயர் சூ-ஹிசி என்பது. 1860-க்குபின் சீனு காட்டிய புது பலத்துக்கு அவளுடைய ஆட்சிச் சிறப்பே முக்கியக் காரணம். அவள் 47 ஆண்டுகள் வீரத்துடன் ராஜ்யபாரம் புரிந்தாள். அவள் திறமையான அதிகாரிகளைப் பொறுக்கி எடுத்து அவர்களிடம் ராஜ்ய நிருவாகத்தை ஒப்படைத்தாள். அவளுடைய வீரம் அவர்களுக்கும் தொத்திக் கொண்டது. பல வருஷங்களாக இல்லாத ஒரு புதிய சக்தியைச் சீனு காட்டியதற்கு இதுவே முக்கியக் காரணம்.

இதற்கிடையில், சீனுவிடமிருந்து ஒரு குறுகிய கடலால் மட்டும் பிரிக்கப்பட்டுள்ள ஜப்பான் தேசமானது அடையாளம் கண்டுகொள்ள முடியாதபடி 'கிடு கிடு' என்று மாறிக்கொண் டிருந்தது. அது இந்திரஜால மகேந்திரஜாலங்களை யெல்லாம் இயற்றிக்கொண் டிருந்தது. ஆகவே, நாம் ஜப்பானுக்குப் போய் அதைப் பார்ப்போமாக.

116

ஜப்பான் ஒரேயடியாகத் தாவுகிறது

டிசம்பர் 27, 1932.

ஜப்பானைப் பற்றி எழுதி நெடுங்காலம் ஆகி விட்டது. ஐந்து மாதங்களுக்கு முன்னால் (கடிதம்–81), 17-வது நூற்றாண்டில் அது தன் வீட்டுக் கதவைச் சாத்தித் தாளிட்டுக்கொண்ட விந்தையைக் கூறினேன். 1641-ம் ஆண்டிலிருந்து 200 ஆண்டுகளுக்கு மேலாகவே ஜப்பான் வெளி உலகத்துடன் யாதொரு தொடர்பும் இன்றி வாழ்ந்து வந்தது. அந்த 200 ஆண்டுக் காலத்தில் ஐரோப்பாவிலும், ஆசியாவிலும், அமெரிக்காவிலும், ஆப்பிரிக்காவிலுங்கூடப் பெரும்பெரும் மாறுதல்கள் விளைந்தன. அவற்றில் முக்கியமான சில சம்பவங்களைப் பற்றி முன்பே கூறியுள்ளேன். ஆனால், அஃதொன்றும் இந்தக் 'கோஷா' நாடாகிய ஜப்பானுக்கு எட்டவே இல்லை. ஜப்பானின், பழைய உலகத்தைச் சேர்ந்த நிலமானியத் தன்மையின் புனிதத்தை மிலேச்சர்களின் மூச்சுக் காற்றுக்கூடத் தீண்டவில்லை. ஜப்பானைப் பொறுத்தவரையில் காலச் சக்கரம் சுழலாமல் ஒரே நிலையில் நின்றுவிட்டது போலத் தோன்றியது. இடைப்பட்ட 17-வது நூற்றாண்டு ஜப்பானின் நாற்பால் எல்லைக்குள் சிறைப்பட்டுக் கிடந்ததுபோலக் காணப்பட்டது. காலம் மாறியதே ஒழியக் காட்சி மாறவில்லை. பழைய நிலமானிய ஜப்பானில் பழைய நிலச்சுவான்தார் வர்க்கம் ஆட்சி புரிந்து வந்தது. சக்கரவர்த்திக்கு உண்மையில் யாதொரு அதிகாரமும் இல்லை. ஷோகன் கையில்தான் சர்வ அதிகாரமும் இருந்தது. (ஷோகன் என்பவர் ஒரு பெரிய 'கூட்டத்' தின் தலைவர்) இந்தியாவில் க்ஷத்திரியர்களைப் போல ஜப்பானிலும் 'சாமுராய்' என்னும் போர் புரியும் வகுப்பு ஒன்று இருந்தது. அடிக்கடி அக்கூட்டங்களும், பிரபுக்களும் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்வார்கள். ஆனால், எல்லாருமாகச் சேர்ந்து கொண்டு விவசாயிகளையும் மற்றவர்களையும் வருத்தியும் சுரண்டியும் வாழ்ந்து வந்தார்கள்.

ஆயினும், ஜப்பானில் அமைதி நிலவியது. நெடுங் காலமாக நாட்டை நலிந்து வந்த உள்நாட்டுப் போர்களுக்குப் பின் அவ்வமைதி வரவேற்கத் தக்கதாயிருந்தது. சதா சண்டையிட்டுக்கொண் டிருந்த சில 'தாய்மியோ'ப் பிரபுக்கள் ஒடுக்கப்பட்டார்கள். உள்நாட்டுப் போர்களால் விளைந்த நாசத்திலிருந்து ஜப்பான் சிறிது சிறிதாகத் தலைதூக்க ஆரம்பித்தது. ஜனங்களுடைய கவனம் கைத்தொழில், கலை, இலக்கியம், மதம் ஆகிய விஷயங்களில் அதிகமாகத் திரும்பியது. கிறிஸ்தவ மதம் ஒடுக்கப்பட்டது. பௌத்த மதம் புத்துயிர் பெற்றது. அதற்குப்பின் ஷின்டோ மதம் பிரபலமடைந்தது. 'ஷின்டோ' என்பது ஜப்பானியருக்குச் சிறப்பாக உரிய மூதாதையர் வணக்கமாகும். சமூக ஆசார அனுஷ்டானங்களிலும் சன்மார்க்கத் துறையிலும் ஜப்பானியர் சீனமகானான கன்பூஷியசின் லட்சியத்தைப் பின்பற்றத் தொடங்கினார்கள். ராஜ தர்பாரிலும் உயர் குலத்தாரிடையிலும் கலைகள் சிறப்புற்றோங்கின. ஜப்பானின் நிலை ஏறக்குறைய இடைக்கால ஐரோப்பாவின் நிலையை ஒத்திருந்தது.

ஆயினும், மாறுதலை விலக்குவது அவ்வளவு எளிதல்ல. வெளித் தொடர்புகள் விலக்கப்பட்டாலும் ஜப்பானுக் குள்ளேயே மாறுதல் நிகழ்வதை யாரும் விலக்க முடியவில்லை. ஆனால், அந்த மாறுதல் மிகவும் நிதானமாக நிகழ்ந்து வந்தது. பிறநாடுகளிற் போலவே

ஜப்பானிலும் நிலமானிய ஏற்பாடு பொருளியல் சீர்குலைவை நாடிச் சென்றது. நாட்டில் அதிருப்தி வளர்ந்தது. அந்த அதிருப்தி எல்லாவற்றிற்கும் பிரதான அதிகாரியாயிருந்த ஷோகன்மீது திரும்பியது. 'ஷின்டோ' மதம் பரவியதன் காரணமாக ஜனங்களின் கவனம் சக்கரவர்த்தியின்பால் அதிகமாகத் திரும்பியது. சக்கரவர்த்தி சூரியனிலிருந்து நேராக வந்தவர் என்று கருதப்பட்டார். இவ்வாறு, அதிருப்தியிலிருந்து தேசிய உணர்ச்சி தோன்றி வளர்ந்தது. அத்தேசிய உணர்ச்சி பொருளியல் சீர்குலைவை அடிப்படையாகக்கொண் டிருந்தபடியால் எப்படியும் அது ஜப்பானில் மாறுதலை உண்டாக்கி அதன் கதவுகளை வெளி உலகத்துக்குத் திறந்துவிட்டிருக்கும்.

இதற்கு முன் ஜப்பானின் கதவுகளைத் திறப்பதற்கு அந்நிய வல்லரசுகள் செய்த முயற்சியெல்லாம் வீணாயின. 19-வது நூற்றாண்டின் இடையில் அமெரிக்கா இவ் விஷயத்தில் மிகுந்த சிரத்தை காட்டியது. அவர்கள் அப்பொழுதுதான் காலிபோர்னியாவில் பரவியிருந்தார்கள். அங்குள்ள சான்பிரான்சிஸ்கோ ஒரு முக்கியத் துறைமுகப்பட்டணமாகி வந்தது. சீனாவுடன் புதிதாகத் தொடங்கப்பட்ட வியாபாரம் மிகுந்த லாபகரமாயிருந்தது. ஆனால், பசிபிக் சமுத்திரத்தைக் கடந்து செல்லும் பிரயாணம் மிகவும் நீண்டதாயிருந்தது. ஆகவே, அவர்கள் மத்தியில் ஜப்பானியத் துறைமுகம் ஒன்றில் தங்கித் தங்கள் கப்பல்களுக்கு வேண்டிய கரியும் பிறவும் நிறப்பிக்கொண்டு செல்ல விரும்பினார்கள். ஜப்பானின் கதவுகளைத் திறப்பதற்கு அமெரிக்கா இடைவிடாது முயற்சித்ததற்கு இதுவே காரணம்.

1853-ல் ஒரு அமெரிக்கக் கப்பற் படைப் பிரிவு, அமெரிக்கப் பிரசிடெண்டின் கடிதத்துடன், ஜப்பானுக்கு

வந்தது. நீராவிக் கப்பல்களை ஜப்பானியர் அப்பொழுதுதான் முதல் தடவையாகப் பார்த்தனர். ஒரு வருஷத்துக்குப் பிறகு இரண்டு துறைமுகங்களைத் திறந்துவிடுவதற்கு ஷோகன் ஒப்புக் கொண்டார். இதைக் கேள்விப்பட்ட பிரிட்டிஷாரும், ருஷியரும், டச்சுக்காரரும் உடனே வந்து ஷோகனுடன் அமெரிக்கரைப் போன்று உடன்படிக்கைகள் செய்து கொண்டார்கள். ஆக, 213 ஆண்டுகளுக்குப் பிறகு ஜப்பான் மீண்டும் தன் கதவின் தாளை நீக்கியது.

ஆனால், உடனே தகராறு ஏற்பட்டது. அந்நிய வல்லரசுகளின் முன்னால் ஷோகன் தாமே சக்கரவர்த்தி போல நடித்துக் காரியங்களை நடத்தினார். அவர் ஜனங்களின் பிரியத்தையும் ஆதரவையும் இழந்துவிட்டபடியால் அவருக்கும், அவர் அந்நிய நாடுகளுடன் செய்து கொண்ட உடன்படிக்கைகளுக்கும் எதிராகக் கிளர்ச்சி தோன்றியது. சில அந்நிய நாட்டார் கொல்லப்பட்டார்கள். அதன் விளைவாக அந்நிய நாடுகள் ஜப்பானைக் கடலிலிருந்து தாக்கின. நிலைமை மேலும் மேலும் கஷ்டமாகி வந்தது. கடைசியில், பிறருடைய ஆலோசனையின் பேரில் ஷோகன் தம் பதவியை 1867-ல் ராஜிநாமா செய்தார். டோகுகாவா ஷோகன் அரசு இவ்வாறு முடிவுற்றது. அது இயேயாசுவின் தலைமையில் 1603-ல் ஆரம்பித்த விஷயம் உனக்கு மறந்து போயிருக்கலாம். டோகுகாவா ஷோகன் அரசு முடிந்தது மட்டுமின்றி, 700 ஆண்டுகளாக நடைபெற்று வந்த ஷோகன் அரசு முறையே முடிந்து விட்டது.

இப்பொழுது புதிய சக்கரவர்த்தி தமக்குரிய ஸ்தானத்தை அடைந்தார். அவர் மத்சிஹிதோ என்னும் பெயருடன் அப்பொழுதுதான் சிம்மாசனம் ஏறினார். சிம்மாசனம் ஏறிய போது அவருக்கு வயது பதினான்கு.

அவர் 45 ஆண்டுகள் (1867—1912) அரசு புரிந்தார். அவருடைய ஆட்சிக்காலம் 'மெய்ஜி சகாப்தம்' (ஒளி பொருந்திய ஆட்சி) என வழங்குகிறது. அந்தக் காலத்தில்தான் ஜப்பான் மேனாடுகளைக் 'காப்பி' அடித்து வெகு வேகமாக முன்னேறியது. பல அம்சங்களில் அது மேனாடுகளுக்குச் சமமான ஒரு நிலையை அடைந்து விட்டது. ஒரே தலை முறையில் விளைந்த இப்பெருமாறுதல் மிகவும் ஆச்சரியகரமானது. சரித்திரத்திலேயே இதற்கு ஒப்புசொல்லக் கூடிய வேறு நிகழ்ச்சியை நம்மால் காண முடியவில்லை. யந்திரத் தொழில்களில் ஜப்பான் அபாரமான அபிவிருத்தி அடைந்தது. மேனாடுகளைப் போலவே அதையும் நாடாசையும் சாம்ராஜ்ய மோகமும் பிடித்துக்கொண்டன. முன்னேற்றத்துக்குரிய புறச்சின்னங்கள் யாவும் ஜப்பானிடம் காணப்பட்டன. தொழில் அபிவிருத்தியில் அது வாத்தியாரையும் மிஞ்சி விட்டது. அதன் ஜனத்தொகை விரைவில் பெருகியது. அதன் கப்பல்கள் பஞ்ச மகா சமுத்திரங்களிலும் பவனி சென்றன. ஜப்பான் மிகப் பெரிய வல்லரசாகி விட்டது. சர்வ தேச விவகாரங்களில் ஜப்பானின் பேச்சுக்கு அதிக மதிப்பு ஏற்பட்டது. ஆயினும், இம்மகத்தான மாறுதல் ஜப்பானின் இருதய கமலத்தின் ஆழத்தில் பாய்ந்தது என்று சொல்ல முடியாது. அதை மேற் போக்கான மாறுதல் என்று கருதுவதும் தவறாகும். மேற்புறத்திற்கும் கீழே அது ஊடுருவிச் சென்றது. ஆனால், ஆட்சியை நடத்தியவர்களின் மனோபாவம் நிலமானிய முறையைப் பற்றியதாகவே இருந்தது. அவர்கள் நிலமானிய முறை என்கிற பழைய தோற்பையில் புரட்சிகரமான சீர்திருத்தம் என்னும் புதிய திராட்சை ரசத்தை ஊற்ற முயன்றார்கள். அம்முயற்சியில் அவர்கள்

வெகு தூரத்திற்கு வெற்றி அடைந்ததாகவே தோன்றியது.

ஜப்பானில் விளைந்த பெருமாறுதல்களுக்குக் காரணமானவர்கள் "ராஜதந்திர மூதறிஞர்" என்று அழைக்கப்பட்ட தீர்க்கதிருஷ்டி மிகுந்த உயர்குலப் பிரபுக் கூட்டத்தார் ஆவர். அந்நியருக்கு விரோதமாக ஜப்பான் கலகம் செய்தபோது அந்நிய யுத்தக்கப்பல்கள் அதன் மீது பீரங்கிப் பிரயோகம் செய்தன. ஜப்பான் அப்போதுதான் தன்னுடைய நிர்க்கதியான நிலைமையை உணர்ந்தது. அதற்கு அவமானம் தாங்கமுடியவில்லை. ஆனால், அது தன் தலைவிதியை நொந்துகொண்டு வாளா இருக்கவில்லை. அந்தத் தோல்வியிலிருந்தும் அவமானத்திலிருந்தும் அது ஒரு பாடம் கற்றுக் கொள்ளத் தீர்மானித்தது. ராஜதந்திர மூதறிஞர் சீர்திருத்தத் திட்டம் ஒன்றைத் தயாரித்தார்கள். தேசம் அத்திட்டத்தை ஒட்டி நடந்தது.

பழைய நிலமானியத் தாய்மியோக்கள் ஒழிக்கப்பட்டனர். சக்கரவர்த்தியின் தலைநகரம் கியோடோவிலிருந்து யேடோவுக்கு மாற்றப்பட்டது. யேடோவுக்கு இப்போது டோகியோ என்று நாமகரணம் செய்யப்பட்டது. இரண்டு பார்லிமெண்டு சபைகளைக் கொண்ட ஒரு அரசியல் அமைப்பு பிரகடனம் செய்யப்பட்டது. கீழ்ச்சபை தேர்ந்தெடுக்கப் படுவதாகவும் மேல்சபை நியமிக்கப்படுவதாகவும் இருந்தன. கல்வி, சட்டம், தொழில் முதலிய எல்லாத் துறைகளிலும் மாறுதல்கள் செய்யப்பட்டன. பெரிய பெரிய தொழிற்சாலைகள் தோன்றின. தரைப்படையும் கடற்படையும் நவீன முறையில் சீர்திருத்தி அமைக்கப்பட்டன. வெளிநாடுகளிலிருந்து நிபுணர்கள் வரவழைக்கப்பட்டார்கள். ஜப்பானிய மாணவர்கள் ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் அனுப்பப்பட்டார்கள். முன்காலத்து இந்திய

மாணவர்களைப் போல் அவர்கள் பாரிஸ்டர் முதலிய படிப்புகள் படித்து விட்டுத் திரும்பிவராமல், சிறந்த விஞ்ஞானிகளாகவும் தேர்ந்த தொழில் நிபுணர்களாகவும் அங்கிருந்து திரும்பிவந்தார்கள்.

ராஜதந்திர மூதறிஞர் மேற்கூறிய சீர்திருத்தங்களை எல்லாம் சக்கரவர்த்தியின் பேரால் நிறைவேற்றி வைத்தனர். புதிய பார்லிமெண்டும் வேறு பிறவும் இருப்பினும் சட்டத்தின் முன்னிலையில் சக்கரவர்த்தியே ஜப்பானிய சாம்ராஜ்யத்தின் தடையற்ற ஆணையாளராக இருந்தார். ராஜதந்திர மூதறிஞர் இச் சீர்திருத்தங்களை நிறைவேற்றி வந்த காலையில் அவற்றோடு கூடவே சக்கரவர்த்தி வணக்கத்தையும் பரப்பி வந்தார்கள். ஜப்பானில் ஒரு விசித்திர சேர்க்கை காணப்பட்டது. ஒரு பக்கம் நவீன தொழில்களும் தொழிற் சாலைகளும் பார்லிமெண்டு ஆட்சி முறையின் தோற்றமும் இருந்தன. இன்னொரு பக்கம் சக்கரவர்த்தி தெய்வத் தன்மை பொருந்தியவர் என்னும் இடைக்காலத்துக்குரிய கொள்கையும் அவருடைய வணக்கமும் இருந்தன. இவ்விரண்டும், சிறிது காலம் என்றாலும், சேர்ந்திருப்பது கடினமாயிற்றே என்று நமக்குத் தோன்றுகிறது. ஆயினும், அவை சேர்ந்தே நடந்தன. இன்றுகூட அவை பிரியவில்லை. சக்கரவர்த்தியின்பால் ஜனங்களுக்குள்ள பரம பக்தியை ராஜதந்திர மூதறிஞர் இரு வழிகளில் பயன்படுத்திக் கொண்டார்கள். பழைமையோம்பிகளான நிலமானிய வகுப்பாரின் மீது அவர்கள் சீர்திருத்தங்களைச் சுமத்தினார்கள். அச் சீர்திருத்தங்களுடன் சக்கரவர்த்தியின் நாமத்துக்குரிய மகிமை இணைக்கப்பட்டிருந்தபடியால் அவர்களால் அவற்றை எதிர்க்க முடியவில்லை. அதே உபாயத்தினால், நிலமானிய முறையை அடியோடு தலைமுழுகி விட்டு இன்னும் அதிவேகமாகச் செல்ல

விரும்பிய தீவிரவாதிகளையும் அவர்கள் அடக்கிப் பிடித்தார்கள்.

19-வது நூற்றாண்டின் பிற்பாதியில் சீனாவுக்கும் ஜப்பானுக்கும் இடையே காணப்படும் வேற்றுமை மிகவும் ஆச்சரியமானதாகும். ஜப்பான் விரைவில் தன்னை மேனாட்டு மயமாக்கிக் கொண்டது. சீனாவோ சொல்ல முடியாத ஈதி பாதைகளில் சிக்கிக்கொண்டு தவித்தது. இதை நாம் ஏற்கெனவே பார்த்தோம்; இனியும் பார்ப்போம். இதற்குக் காரணம் என்ன? சீனாவின் விரிந்த நிலப்பரப்பும் மிகுந்த ஜனத்தொகையும் மாறுதலுக்குத் தடைகளாக இருந்தன. இந்தியாவுக்கும் இதே கஷ்டம் தான். ஒருநாடு பெரிதாகவும் அதிக ஜனத்தொகை கொண்டதாகவும் இருப்பது அதற்குப் பலம் அளிப்பது போலத் தோன்றினாலும் சீனாவுக்கும் இந்தியாவுக்கும் அதனால் கஷ்டமே விளைந்தது. மேலும், சீனாவின் மத்திய அரசாங்கம் போதிய அளவு பலமும் அதிகாரமும் பொருந்தியதாக இல்லை. அதாவது, அதன் ஒவ்வொரு பகுதியிலும் அதிகமான அளவுக்குச் சுயஆட்சி உரிமை நிலவியது. ஆகவே, சீனாவில், மத்திய அரசாங்கம் தலையிட்டுப் பெரிய மாறுதல்களைச் செய்வது அரிதாயிருந்தது. ஜப்பானின் நிலைமை இதற்கு நேர்மாறாயிருந்தது. மேலும், ஆயிரக்கணக்கான வருஷங்களாக முதிர்ந்து கனிந்த சீன நாகரிகம் மக்களுடைய வாழ்க்கையில் அதிகமாகப் பின்னிக்கொண்டிருந்தபடியால் அதை உதறி எறிவது அவ்வளவு எளிதாயில்லை. இவ் விஷயத்திலும் இந்தியா சீனாவை ஒத்திருப்பதை நாம் காண்கிறோம். ஜப்பானோ தன்னுடைய நாகரிகத்தைச் சீனாவிடமிருந்து கடன் வாங்கியிருந்தபடியால் அதை எளிதில் மாற்றக்கூடிய நிலையில் இருந்தது. சீனாவின் இன்னல்களுக்கு ஐரோப்பிய வல்லரசுகளின் இடை

விடாத் தலையீடு இன்னொரு காரணமாகும். சீனா ஆசியாக் கண்டத்தைச் சேர்ந்த ஒரு பெரிய தேசம். ஜப்பானியத் தீவுகளைப்போல் அது தன் கதவுகளைச் சாத்தித் தாழ்ப்பாளிட்டுக்கொள்வது சாத்தியமில்லை. வடக்கிலும் வடமேற்கிலும் அதன் எல்லை ருஷிய எல்லையுடன் முட்டிக்கொண்டிருந்தது. தென்மேற்கில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் அதைத் தொட்டுக்கொண்டிருந்தது. தெற்கே பிரெஞ்சு சாம்ராஜ்யம் அதை நோக்கி ஊர்ந்து வந்துகொண்டிருந்தது. இந்த ஐரோப்பிய வல்லரசுகள் சீனாவிடமிருந்து முக்கியமான சலுகைகளைப் பறித்துக் கொண்டு அங்கே வியாபார நலன்களையும் அதிகமாக அபிவிருத்தி செய்து கொண்டன. வியாபாரத்தை வியாஜமாக வைத்துக்கெண்டு அவை அடிக்கடி சீன விவகாரங்களில் தலையிட்டுவந்தன.

ஆக, சீனா கண்தெரியாமல் தட்டுத்தடுமாறிக் கொண்டு, புதிய நிலைமைகளுக்குப் பொருந்தத் தன்னை அமைத்துக் கொள்ள முயல்வதும் சறுக்கி விழுவதுமாயிருந்த காலையில் ஜப்பான் ஒரேயடியாகத் தாவிக்கொண்டிருந்தது. ஆனால், சீனாவுக்கும் ஜப்பானுக்குமுள்ள இன்னொரு விசித்திரமான தாரதம்மியத்தையும் நாம் இங்கே கவனிக்கவேண்டும். ஜப்பான் மேனாட்டு முறையில், யந்திரத்தையும் தொழிலையும் வகுத்துக் கொண்டு, தரைப்படையையும் கடற்படையையும் அமைத்துக் கொண்டு, தொழிற் சிறப்பும் முற்போக்கும் வாய்ந்த ஒரு நவீன நாட்டின் போர்வையைப் போர்த்துக் கொண்டு விளங்கியது. ஆனால், ஐரோப்பாவின் புதிய கருத்துகளையும் கொள்கைகளையும் அது அவ்வளவு எளிதில் ஏற்றுக் கொள்ளவில்லை. தனிப்பட்டவர் சுதந்திரம், சமுதாய சுதந்திரம் ஆகியவற்றைப் பற்றிய கருத்துகளையும் விஞ்ஞான ரீதியான வாழ்க்கை-சமுதாய மனோ

பாவத்தையும், அது கைக்கொள்ளவில்லை. அதன் இருதயத்தில் நிலமானியக் கருத்துகளும், சர்வாதிகார மனப்பான்மையும் குடிகொண்டிருந்தன. உலகின் பிற பாகங்கள் வெகு காலத்துக்கு முன்பே நிராகரித்துவிட்ட சக்கரவர்த்தி வணக்கத்தை அது விடாது பற்றிக் கொண்டிருந்தது. ஜப்பானியரின் தீவிர தேச பக்தியும், தேசத்துக்காக உயிரையே அர்ப்பணம் செய்யும் தியாக புத்தியும், அவர்களுக்குச் சக்கரவர்த்தியின் பாலுள்ள பயபக்தி விசுவாசத்துடன் பிரிக்க முடியாதபடி பிணைந்து நின்றன. தேசிய உணர்ச்சியும், சக்கரவர்த்தி தெய்வீகத் தன்மை வாய்ந்தவர் என்கிற உணர்ச்சியும் கைகோத்துக் கொண்டு சென்றன. இனிச் சீனாவைப் பார்ப்போம். அது மேனாடுகளின் யந்திரத்தையும் தொழில் முறையையும் கைக்கொள்ள வில்லை. ஆனால், நவீன சீனா மேனாட்டுப் புதிய கருத்துகளையும் விஞ்ஞான மனோபாவத்தையும் விரைந்தேற்றுக் கொண்டது. அவை சீனாவின் கொள்கைகளோடு ஏறக்குறைய ஒத்திருந்தன. இவ்வாறு, மேனாட்டு நாகரிகத்தின் உள்சத்தைச் சீனாவும் வெளிச் சட்டையை ஜப்பானும் கிரகித்துக் கொண்டன. ஆயினும், ஜப்பான் சீனாவை விஞ்சி வெகு தூரம் சென்று விட்டதை நாம் காண்கிறோம். ஜப்பானின் வெளிச் சட்டை பலமாயிருந்தபடியால் மேனாடுகள் அனைத்தும் அதைப் போற்றிப் புகழ்ந்து தங்கள் இனத்தில் ஒன்றாகச் சேர்த்துக் கொண்டன. ஆனால், சீனாவுக்கோ ஆயுத பலம் இல்லை. ஆகவே, அவை சீனாவின் மனோபாவத்தையும் கொள்கைகளையும் பொருட்படுத்தாமல் அதை இழிவுபடுத்தியும் சுரண்டியும் வந்தன; அத்துடன் சீனாவுக்கு உபதேசமும் செய்தன.

தொழில் முறைகளில் மட்டுமின்றிச் சாம்ராஜ்ய ஆக்கிரமிப்பிலும் ஜப்பான் ஐரோப்பாவைப் பின்

பற்றியது. அது ஐரோப்பிய நாடுகளின் அடிச்சுவட்டை அப்படியே பின்பற்றியதோடு நின்று விடவில்லை. அவற்றின் முறைகளை அது அபிவிருத்தியும் செய்தது. பழைய நிலமானிய முறையையும் புதிய தொழில் முறையையும் ஒக்கப்பண்ணிக்கொண்டு போவதுதான் அதற்கு உண்மையில் இருந்த கஷ்டம். இரண்டையும் கைவிட முடியாத நிலைமையில் அது தன் பொருளியல் நிலையைச் சரிப்படுத்துவதற்குச் சங்கடப்பட்டுக்கொண்டிருந்தது. வரிச்சுமை பெருகியது. ஜனங்கள் முணுமுணுத்தார்கள். உள்நாட்டில் குழப்பத்தைத் தவிர்ப்பதற்கு அது பழைய தந்திரத்தைக் கையாண்டது. வெளிநாடுகளில் சாம்ராஜ்யத்தை விஸ்தரிக்க முயன்றும் யுத்தத்தை ஆரம்பித்தும் அது ஜனங்களின் கவனத்தை வேறுபக்கம் திருப்பியது. அதன் புதிய தொழில் வளர்ச்சிக்கு மூலப்பொருள்களும் மார்க்கெட்டுகளும் தேவையாயிருந்தன. அவற்றிற்காக அது பிறநாடுகளை நோக்கவேண்டிய நிர்ப்பந்தம் நேரிட்டது. தொழிற்புரட்சிக்குப்பின் இங்கிலாந்தும் அதற்குச் சிறிது காலத்துக்குப்பின் மற்ற மேல் ஐரோப்பிய நாடுகளும் இவ்வாறே வெளிநாடுகளை நோக்கவும் அவற்றை ஜெயிக்கவும் ஆரம்பித்ததைக் கண்டோம். ஜப்பானில் பொருள் உற்பத்தி பெருகி ஜனத்தொகையும் அதிகரித்தது. உணவுப்பொருள்களும் மூலப்பொருள்களும் வரவர அதிகமாகத் தேவையாயிருந்தன. அவற்றை அது எங்கிருந்து பெறுவது? அதற்கு மிகவும் அருகிலுள்ள நாடுகள் சீனாவும் கொரியாவும். சீனாவில் வியாபாரம் செய்வதற்குரிய வசதிகள் ஏராளமாக இருந்தன. ஆனால், அது ஒரு ஜனத்தொகை பெருத்த தேசம். சீன சாம்ராஜ்யத்தின் வடகிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மஞ்சூரியா பிர

தேசத்தில் அபிவிருத்திக்கும் குடியேற்றத்துக்கும் நிறைய இடம் இருந்தது. ஆகவே, கொரியாவையும் மஞ்சூரியாவையும் ஜப்பான் பேராவலுடன் நோக்கலாயிற்று.

மேனாட்டு வல்லரசுகள் சீனாவிடமிருந்து பலவகையான சலுகைகளைப் பறித்து வருவதையும், பிரதேசத்தைக் கூடப் பெறமுயல்வதையும் கண்டு ஜப்பான் மிகுந்த கவலைகொண்டது. அதற்கு இது ஒன்றும் பிடிக்கவே இல்லை. அவ்வல்லரசுகள் ஜப்பானையடுத்த சீனப்பிரதேசத்தில் வேரூன்றிவிட்டால் பின்னர் அதன் பாதுகாப்பு என்னாவது? எப்படியும், ஆசியாக் கண்டத்தில் அது செய்துவரும் முயற்சிகள் பலிக்காமற் போய்விடும்.

ஜப்பான் வெளி உலகத்தோடு தொடர்பு கொள்ள ஆரம்பித்த 20 வருஷங்களுக் குள்ளாகவே சீனாவை ஆக்கிரமிக்கத் தொடங்கி விட்டது. ஏதோ சில மீன் பிடிப்போர் விஷயமாக ஒரு சின்னத் தகராறு உண்டாயிற்று. அவர்களுடைய கப்பல் கவிழ்க்கப்பட்டு அவர்களும் கொல்லப் பட்டார்கள். இந்தச் சாக்கு அகப்பட்டவுடன் ஜப்பான் சீனாவிடமிருந்து நஷ்டஈடு கோரியது. சீனா முதலில் மறுத்தது. ஜப்பான் போரிடுவதாகப் பயமுறுத்தியது. அந்தச் சமயத்தில் அன்னம் நாட்டில் பிரெஞ்சுக்காரர் வேறு தொந்திரவு கொடுத்துக் கொண்டிருந்தார்கள். ஆகவே, சீனா ஜப்பானுக்குப் பணிந்து கொடுத்து விட்டது. ஜப்பானுக்கு இவ்வெற்றி 1874-ல் கிடைத்தது. அதனால் இறுமாப்புற்ற ஜப்பான் மேலும் மேலும் வெற்றிகளைத் தேடலாயிற்று. கொரியாவின் நிலைமை அதை 'வா, வா' என்று அழைப்பது போலிருந்தது. ஏதோ ஒரு அற்பக் காரணத்தை முன்னிட்டு அது கொரியாவுடன் வலுவில் சண்டைக்குச் சென்றது. கொரியாவின்மீது அது படையெடுத்துச் செல்லவும்

கொரியா வேறு வழியின்றி அதற்கு ஒரு பெருந்தொகை
யைக் கொடுத்ததோடு சில துறைமுகங்களையும் ஜப்
பானிய வியாபாரத்துக்குத் திறந்துவிட்டது.

கொரியா நெடுங்காலமாகவே சீனுவுக்குக் கீழ்ப்
பட்ட ஒருநாடாக இருந்து வந்தது. ஆகவே, அது உதவிக்
குச் சீனுவை நோக்கியது. ஆனால், சீனு யாதொரு உதவி
யும் செய்யக்கூடவில்லை. ஜப்பானின் செல்வாக்குப்
பெருகி விடுமென்று அஞ்சிய சீன அரசாங்கம், அந்தச்
சமயத்துக்கு அதற்கு விட்டுக் கொடுக்குமாறும், அதன்
தலையைத் தட்டுவதற்கு மேனாட்டு வல்லரசுகளுடன்
உடன்படிக்கைகள் செய்து கொள்ளுமாறும் கொரியா
வுக்கு ஆலோசனை கூறியது. ஆகவே, 1882-ல் கொரியா
வின் கதவும் உலகுக்குத் திறக்கப்பட்டது. ஆனால்,
ஜப்பான் அத்துடன் திருப்தி அடைந்து விடவில்லை. சீனு
வின் கஷ்டங்களைப் பயன் படுத்திக்கொண்டு அது
மீண்டும் கொரியாப் பிரச்சினையைக் கிளப்பியது. சீனு
வேறு வழியின்றிக் கொரியாவை ஒரு 'கூட்டுப் பாது
காப்பரசு' (Joint Protectorate) நாடாக்குவதற்கு
இணங்கவேண்டியதாயிற்று. அதாவது, ஏழைக் கொரியா
சீனு ஜப்பான் இரண்டுக்கும் அடிமை நாடாயிற்று.
இந்த ஏற்பாடு அம்மூத்திறத்தாரில் எத்திறத்தாருக்கும்
ஏற்றதாயில்லை. அதனால் தகராறு விளைவது நிச்சயம்.
ஜப்பான் அந்தத் தகராறைத்தான் எதிர்பார்த்துக்
கொண்டிருந்தது. 1894-ல் அது சீனுவின் மீது வலியப்
போர்தொடுத்தது.

1894-95-ல் நடந்த சீன-ஜப்பானியப் போர் ஜப்பா
னுக்கு வெறும் பிள்ளை விளையாட்டாக முடிந்தது. அதன்
தரைப்படையும் கடற்படையும் நவீன சாதனங்கள்
வாய்ந்தவை; சீனப்படைகளோ கர்நாடகத் தன்மை
வாய்ந்தவை; திறமையற்றவை. ஜப்பானுக்கு எங்கும்

எதனிலும் வெற்றி கிடைத்தது. கடைசியில் சீனுமீது
அது ஒரு உடன்படிக்கையைச் சுமத்தியது. இப்பொழுது
ஜப்பான் மற்ற மேல்நாட்டு உடன்படிக்கை வல்லரசு
களுக்குச் சமமான ஒரு நிலையை அடைந்துவிட்டது.
கொரியா சுதந்திரநாடு என்று அறிவிக்கப்பட்டது.
ஆனால், கொரியாவின் சுதந்திரம் ஜப்பானிய ஆதிபத்தி
யத்தை மறைப்பதற்குரிய ஒரு திரையாகவே விளங்கியது.
மஞ்சூரியாவில் போர்ட் ஆர்தர் என்னும் துறைமுகத்தை
உடைய லியோடுங் தீபகற்பத்தையும், பர்மோசா முத
லான வேறு சில தீவுகளையும் சீனு ஜப்பானுக்குக்
கொடுக்க வேண்டியதாயிற்று.

குட்டி ஜப்பான் சீனுவின்மீது கொண்ட இவ்வெற்றி
உலகத்தை விந்தைக்கடலுள் ஆழ்த்தியது. கீழ்க்கோடி
யில் ஒரு பலம் பொருந்திய நாடு தோன்றுவதை
மேனாட்டு வல்லரசுகள் விரும்பவில்லை. சீன ஜப்பானிய
யுத்தத்தில் ஜப்பான் ஜெயித்து வருவதாகத் தோன்றிய
காலத்திலேயே அது சீனுவிடமிருந்து எந்தப் பிரதேசத்
தையும் கவர்வதைத் தாங்கள் ஒப்புக்கொள்ள முடியா
தென்று அவை ஜப்பானை எச்சரித்தன. அப்படி
யிருந்தும் போர்ட் ஆர்தர் என்னும் முக்கியமான துறை
முகத்தை உடைய லியோடுங் தீபகற்பத்தை ஜப்பான்
எடுத்துக்கொண்டது. ஆனால், மூன்று பெரிய வல்லரசு
களான ருஷியாவும் ஜெர்மனியும் பிரான்சும் அதைக்
கொடுத்துவிட வேண்டுமென்று ஜப்பானை வற்புறுத்தின.
அம்மூன்றையும் எதிர்க்கக்கூடிய பலம் ஜப்பானுக்கு
இல்லை. ஆகவே, தான் அபகரித்ததை இழப்பதைத்
தவிர்த்து அதற்கு வேறு வழியில்லாது போயிற்று.
ஆனால், கைக்கெட்டியது வாய்க்கெட்டாது போய்
விடுவதில் அதற்கு வந்த ஆத்திரமும் கோபமும்
சொல்லும் தரமன்று.

தனக்கு ஏற்பட்ட இந்த அவமானத்தை ஜப்பான் மறந்து விடவில்லை. அந்த அவமானம் எப்போதும் அதன் மனத்தில் உறுத்திக் கொண்டே இருந்தது. அது இன்னும் பெரிய யுத்தம் ஒன்றுக்குத் தன்னைத் தயார் செய்துகொண்டு வந்தது. ஒன்பது வருஷங்களுக்குப் பிறகு அந்த யுத்தம் ருஷியாவுடன் மூண்டது.

இதற்கிடையில், சீனாவின்மீது அடைந்த வெற்றி காரணமாகக் கீழ்க்கோடியிலேயே பலம் மிகுந்த நாடு என்கிற ஒரு நிலையை ஜப்பான் பெற்றுவிட்டது. சீனாவின் பலவீனம் முற்றும் வெளியாகிவிட்டது. மேனாட்டு வல்லரசுகளுக்கு அதனிடம் கொஞ்சநஞ்சம் இருந்த அச்சமும் போய்விட்டது. அவை பிணங்களைக் கொத்தித் தின்னும் கழுகுகளைப் போல் சீனாவின் மீது பாய்ந்து அதைக் கொத்தத் தொடங்கின. பிரான்சு, ருஷியா, இங்கிலாந்து, ஜெர்மனி எல்லாம் சீனாவின் கரையில் துறைமுகங்கள் சம்பாதிப்பதற்கும் அதனிடமிருந்து சலுகைகள் பெறுவதற்கும் ஒன்றோடொன்று மேல் விழுந்து போட்டியிட்டன. சலுகைகளுக்காக அவர்கள் போட்ட பாதகச் சண்டை மிகவும் கண்ணராவியாயிருந்தது. ஏதாவது ஒரு சிறு சாக்கு அகப்பட்டால் போதும். அதை வைத்துக்கொண்டு அவை மேலும் சில சலுகைகளைப் பிடுங்கிக் கொண்டன. இரு பாதிரிகள் கொல்லப்பட்டதைச் சாக்காக வைத்துக்கொண்டு ஜெர்மனி கிழக்கே ஷாண்டுங் தீபகற்பத்திலுள்ள கியோசோ என்னுமிடத்தைப் பலவந்தமாகப் பறித்துக் கொண்டது. ஜெர்மனி கியோசோவைக் கைப்பற்றிக் கொண்டதால் மற்ற வல்லரசுகளும் தங்களுக்கு ஏதாவது வேண்டும் என்று கேட்டன. ருஷியா போர்ட் ஆர்தரைப் பற்றிக்கொண்டது. மூன்று வருஷத்துக்கு முன் அதே போர்ட் ஆர்தரைக் கைவிடும்படி ஜப்பானைக்

கட்டாயப் படுத்தியது ருஷியாதான். ருஷியா போர்ட் ஆர்தரை எடுத்துக் கொண்டதற்குப் பிரதியாகப் பிரிட்டன் வை-ஹை-வை என்னுமிடத்தைப் பிடித்துக் கொண்டது. பிரான்சு மட்டும் சும்மா இருக்குமா? அது பார்த்தது. இதுதான் சமயம் என்று அன்னம் நாட்டில் ஒரு பகுதியையும் ஒரு துறைமுகத்தையும் சுவாகா பண்ணிவிட்டது. வட மஞ்சூரியாவில் டிரான்ஸ்-சைபீரிய ரயில்வேயைத் தொடர்ந்து ஒரு ரயில்வே போடுவதற்கு ருஷியா அனுமதி பெற்றுக்கொண்டது. இவ்வாறு 'எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம்' என்கிற கொள்கையை ஐரோப்பிய நாடுகள் சீனாவில் அனுஷ்டித்தன.

இத்தகைய மானங்கெட்ட பகற்கொள்ளை உலகில் கண்டும் கேட்டும் இராத ஒன்றாகும். சீனா மனப்பூர்த்தியாகத் தன் பிரதேசத்தைப் பிற நாடுகளுக்குத் தானம் செய்யவில்லை; சந்தோஷப்பட்டுக்கொண்டு சலுகைகளைத் தத்தம் செய்யவில்லை. ஆனால், அது 'ஆருமற்ற பாவி'யாக இருந்தது. ஒவ்வொரு தடவையும் வேற்று நாடுகள் கடற்படையையும் பீரங்கிகளையும் காட்டி அதைப் பயமுறுத்தின. இவ்வநியாயத்தை என்னென்றுரைப்பது? வழிப்பறி என்பதா? பகற்கொள்ளை என்பதா? சாம்ராஜ்யவாதத்தின் போக்கே இதுதான். சில சமயம் அது தன்னுடைய தீச்செயல்களை மறைப்பதற்குப் 'பரோபகாரம், தருமசிந்தை' என்னும் வேஷம் போட்டுக்கொண்டு ஊரை ஏமாற்றித் திரிவதுண்டு. ஆனால், 1898-ல் சீனாவில் அது அந்த வேஷத்தையும் களைந்துவிட்டுத் தன்னுடைய நிஜமான கோர சொரூபத்தில் காட்சி அளித்தது.

117

ஜப்பான் ருஷியாவைத் தோற்கடிக்கிறது

டிசம்பர் 29, 1932.

சென்ற கடிதத்தில் கீழ்க்கோடியைப் பற்றி உனக்குச் சொல்லிக்கொண் டிருந்தேன். இக்கடிதத் திலும் அதையே தொடர்ந்து சொல்லலாம் என்று நினைக்கிறேன். முன்காலத்தில் நடந்த சண்டை சச்சரவு களைப்பற்றிக் கூறுவதால் கண்ட பலன் என்னவென்று நீ வியப்புறலாம். அவை கேட்பதற்கு இனிமையானவை அல்ல. மேலும், அவை முடிந்துபோன விஷயங்கள். அவற்றை அதிகமாக வற்புறுத்த நான் விரும்பவில்லை. ஆனால், கீழ்க்கோடியில் இன்று நடைபெறும் நிகழ்ச்சி களில் பலவற்றிற்கு அவை மூலமாயமைந்திருப்பதால் அவற்றை அறிந்து கொள்வது தற்காலப் பிரச்சினைகளைப் புரிந்துகொள்ள உதவியாயிருக்கும். இன்றைய உலகப் பிரச்சினைகளில் இந்தியாவைப் போல் சீனாவும் ஒன்று. நான் இதை எழுதும்போதே, மஞ்சூரியாவை ஜப்பான் ஜெயித்தது பற்றி ஒரு கடும் விவாதம் நடந்து கொண்டிருக்கிறது.

சென்ற கடிதத்தில், மேனாட்டு வல்லரசுகள், 1898-ல், தங்களுடைய போர்க்கப்பல்களின் துணையுடன் 'நீ முந்தி, நான் முந்தி' என்று விழுந்தடித்துக் கொண்டு சீனாவிட மிருந்து சலுகைகளைப் பறித்த கதையைக் கூறினேன். நல்ல துறைமுகங்களையெல்லாம் அவர்கள் வாயடி கையடி அடித்துப் பிடுங்கிக் கொண்டார்கள். துறைமுகங்களை யடுத்த மாகாணங்களில் சுரங்கம் வெட்டுதல், ரயில் தொடர் அமைத்தல் முதலான சகல உரிமைகளையும் பெற்றுக் கொண்டார்கள். ஆயினும், குண்டோதரனைப்

போல் அவர்களுடைய பசி அடங்கவில்லை. அந்நிய அரசாங்கங்கள் சீனாவில் "செல்வாக்குப் பிரதேசங்கள்" (Sphere of Influence) ஏற்படுத்துவது பற்றிப் பேசலானார்கள். இது ஒரு தேசத்தைப் பங்கிட்டுக் கொள்வதற்கு நவீன சாம்ராஜ்ய அரசாங்கங்கள் கையாளும் நாகரிக முறையாகும். ஒரு தேசத்தைச் சுவாதீனப்படுத்திக் கொள்வதிலும் ஆள்வதிலும் பல வகைகள் உண்டு. 'இணைத்துக் கொள்ளல்' என்பது பரிபூரண சுவாதீனத்தைக் குறிக்கிறது. 'பாதுகாப்பரசு' என்பது அதைவிடச் சற்றுக் குறைந்தது. 'செல்வாக்குப் பிரதேசம்' என்பது இன்னும் சற்றுக் குறைந்தது. ஆனால், அவை அனைத்தும் ஒரு லட்சியத்தையே குறிக் கின்றன. ஒன்று மற்றொன்றில் கொண்டு விடுகிறது. 'இணைத்துக் கொள்ளல்' என்பது பழைய முறை. அது [illegible]யக் குழப்பங்களுக்குக் காரணமாயிருக்கிறது என்று கருதி அதை யாரும் இப்போது அதிகமாகக் கையாளு வதில்லை. ஒரு நாட்டின் பொருளியல் ஆதிக்கத்தை மட்டும் கையில் வைத்துக் கொண்டு மற்றவை பற்றிக் கவலைகொள்ளாது விட்டுவிடுவதே சிறந்த முறை என்று இப்போது கருதப்படுகிறது. அது சுலப மாகவும் இருக்கிறது. அதைப்பற்றி நாம் பின்னர் விவாதிப்போம்.

ஆகவே, மேனாட்டு வல்லரசுகள் சீனாவைப் பங்கு போட்டுக் கொள்வது தவிர்க்கமுடியாத தெனத் தோன்றியது. அதைக் கண்டு ஜப்பான் ரொம்பவும் அரண்டு விட்டது. அது சீனாவை ஜெயித்ததன் பலன் மேல்நாடுகளுக்குப் போய்விட்டது போல் காணப் பட்டது. சீனாவை அவர்கள் துண்டுபோட முயற்சிப் பதைக் கண்டு அதற்குக் கோபம் கோபமாக வந்தது. மற்றெல்லா நாடுகளையும்விட ருஷியாவிடம் அதற்குக்

கோபம் அதிகம். அது போர்ட் ஆர்தரை எடுத்துக் கொள்ள ஒட்டாமல் ஜப்பானைத் தடுத்துவிட்டுப் பிறகு தானே அதைக் கைப்பற்றிக் கொண்டதல்லவா? ஆனால், ஒன்றும் செய்ய முடியாத நிலையில் ஜப்பானுடைய கோபம் உள்ளேயே கனன்றுகொண்டிருந்தது.

சீனாவிடமிருந்து சலுகை பறிக்கும் போட்டியிலிருந்தும், அதைப் பங்குபோட்டுக் கொள்ளும் திட்டங்களிலிருந்தும் ஒரே ஒரு வல்லரசு மட்டும் ஒதுங்கி நின்றது. அதுதான் ஐக்கிய அமெரிக்கா. அதனால் அமெரிக்கர் மற்றவர்களைவிடத் தருமாத்துமாக்கள் என்று அர்த்தமல்ல. அவர்கள் தங்களுடைய பரந்த தேசத்தை அபிவிருத்தி செய்துகொண்டிருந்தபடியால் மற்ற விஷயங்களில் கவனம் செலுத்த முடியவில்லை. பசிபிக் சமுத்திரத்தை நோக்கி அவர்கள் மேற்கே செல்லச் செல்லப் புதிய பிரதேசங்களை அபிவி[illegible] செய்ய வேண்டியிருந்தது. அந்தக் காரியத்தில் அவர்கள் தங்களுடைய சக்தியையும் பணத்தையும் செலவழித்து வந்தார்கள். ஏராளமான ஐரோப்பிய மூலதனம் கூட அமெரிக்காவில் இதற்காகப் போடப்பட்டது. ஆனால், 19-வது நூற்றாண்டு முடியுமுன் அமெரிக்கா தன்னுடைய மூலதனத்தைப் போடுவதற்கு வேறு இடங்களை நோக்கலாயிற்று. அவர்கள் சீனாவை நோக்கினார்கள். கடைசியாக இணைத்துக் கொள்ளும் நோக்கத்துடன், ஐரோப்பிய வல்லரசுகள் சீனாவைச் "செல்வாக்குப் பிரதேசங்கள்" என்று பிரித்துத் தங்களுக்குள் பங்கு போட்டுக் கொள்ளும் தருணத்தில் இருப்பதை அவர்கள் கண்டார்கள். அவ் வல்லரசுகள் அமெரிக்காவைக் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. ஆகவே, அமெரிக்கர் சீனாவில் "திறந்தவாயில்" கொள்கை ("Open door" Policy) அனுஷ்டிக்கப்பட வேண்டு

மென்று வற்புறுத்தினார்கள். சீனாவில் வியாபாரம் செய்வதற்கு எல்லோருக்கும் சமமான சவுகரியங்கள் இருக்க வேண்டுமென்பதுதான் அதன் பொருள். மற்ற வல்லரசுகள் அதற்கு ஒப்புக்கொண்டன.

ஐரோப்பிய நாடுகளின் ஓயாத தொல்லையும் இடைவிடாத ஆக்கிரமிப்பும் சீன அரசாங்கத்தைப் பெரிதும் அச்சுறுத்தி விட்டன. நாட்டைத் திருத்தி அமைத்துச் சீர்திருத்தம் செய்தாலொழியத் தப்புவதற்கு மார்க்கமில்லை யென்று அது கண்டு கொண்டது. ஆனால், ஐரோப்பிய நாடுகள் புதிது புதிதாகச் சலுகைகள் கோரிக்கொண்டே இருந்தபடியால் அதன் முயற்சி பலிப்பதற்கு இடமில்லாமலிருந்தது. ராஜ விதவையான சக்கரவர்த்தினி ஸூ-ஹிசி சில காலமாக ராஜ்ய விவகாரத்திலிருந்து ஒதுங்கி வாழ்ந்து வந்தாள். நாட்டைக் காப்பாற்றுவதற்குச் சீன மக்கள் அவளை எதிர்பார்க்கலானார்கள். அப்பொழுது சக்கரவர்த்தியாயிருந்தவன் தனக்கு விரோதமாக ஏதோ சதி நடக்கிறதென்று ஐயுற்று அவளைச் சிறைப்படுத்த விரும்பினான். ஆனால், அவ்வயோதிக மாது அவனை அதிகாரத்தினின்று நீக்கி விட்டுத் தானே அதை மேற்கொண்டாள். ஜப்பானைப் போல் அடிப்படையான சீர்திருத்தங்கள் செய்ய அவள் முயற்சிக்கவில்லை. ஆனால், நவீன முறையில் சீனச் சைனியம் ஒன்றை ஏற்படுத்துவதில் அவள் தன் முழு கவனத்தையும் செலுத்தினாள். பாதுகாப்பை உத்தேசித்து அங்கங்கே ஸ்தலப் படைகள் அமைப்பதற்கு அவள் ஊக்கமளித்தாள். அப்படைகள் 'ஐ ஹோடுவான்' (தரும ஐக்கியப் படை) என்றும் 'ஐ ஹோசுவான்' (தரும ஐக்கியமுஷ்டி) என்றும் தம்மை அழைத்துக் கொண்டன. 'ஐ ஹோசுவான்' என்கிற பெயர் துறைமுகப் பட்டணங்களில் வசித்து வந்த சில ஐரோப்பியரின் காதுகளுக்கு

எட்டிற்று. அவர்கள் அந்த அழகான சீனப் பெயரைப் 'பாக்சர்' (Boxers - முஷ்டி யுத்தக்காரர்) என்று ஆபாசமாக மொழிபெயர்த்தார்கள்.

வெளியிலிருந்து வந்த அன்னியர் சீனாவை ஆக்கிரமித்தும் சீனரை எண்ணற்ற அவமானங்களுக்கு உள்ளாக்கியும் வந்தார்கள். அதற்கு விரோதமாக எழுந்த தேச பக்தி உணர்ச்சியே 'பாக்சர்' இயக்கமாகும். 'பாக்சர்'கள் அந்நியரை நேசிக்காததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. உலகத்திலுள்ள தீமையெல்லாம் உருண்டு திரண்டு அன்னியருடைய ரூபத்தில் அவர்களுடைய நாட்டைப் பிடித்திருப்பதாக அவர்களுக்குத் தோன்றியது. முக்கியமாகப் பாதிரிகளைப் பார்க்கும்போது அவர்களுடைய உடலும் உளமும் பற்றி எரிந்தன. பாதிரிகள் அவ்வளவு துன்மார்க்கமாக நடந்துகொண்டார்கள். 'பாக்சர்'கள் கிறிஸ்துவ மதத்துக்கு மாறிய சீனர்களைத் தேசத் துரோகிகளாகக் கருதினார்கள். புராதன சீனா நவீன வாழ்க்கை முறையினின்றும் தன்னைக் காத்துக் கொள்ளச் செய்யும் கடைசி முயற்சியின் பிரதிநிதிகளாகப் 'பாக்சர்'கள் விளங்கினார்கள். அவர்கள் மேற்கொண்ட முறையில் அவர்களுடைய முயற்சி வெற்றி பெறுவதற்கு வழியில்லை.

'பாக்சர்'கள் தேசபக்தி உள்ளவர்களாகவும், பழைமை யோம்பிகளாகவும், அந்நிய நாட்டினருக்கும் பாதிரிகளுக்கும் விரோதிகளாகவும் இருந்தார்கள். அந்நிலையில் அவர்களுக்கும் அந்நியரான மேனாட்டினருக்கும் பூசல் உண்டாவது இயல்புதானே? அவ்வாறே பூசல் உண்டாயிற்று. ஒரு பிரிட்டிஷ் பாதிரியும், பல ஐரோப்பியரும், ஏராளமான சீனக் கிறிஸ்தவர்களும் கொல்லப்பட்டார்கள். உடனே, அந்நிய அரசாங்கங்கள் தேசபக்திமிகுந்த 'பாக்சர்' இயக்கத்தை அடக்கவேண்டுமென்று

சீன அரசாங்கத்தைக் கேட்டன. சீன அரசாங்கம் கொலைக் குற்றம் செய்தவர்களை மட்டும் தண்டித்தது. அதற்கு மேலும் சென்று அது தன்னுடைய குழந்தையான 'பாக்சர்' இயக்கத்தையே எவ்வாறு அடக்கக் கூடும்? இதற்கிடையில் அவ்வியக்கம் தேசமெங்கும் வேகமாகப் பரவியது. அதைக் கண்டு பயந்த அயல் நாட்டு ஸ்தானாதிபதிகள் தத்தம் நாட்டுப் போர்க் கப்பல்களிலிருந்து துருப்புகளைத் தருவித்தார்கள். அதைப் பார்த்த சீனர் அன்னியர் தங்கள் நாட்டின்மீது படையெடுக்கத் தொடங்கிவிட்டார்கள் என்று எண்ணலானார்கள். உடனே போர் மூண்டது. ஜெர்மானிய ஸ்தானாதிபதி கொல்லப்பட்டார். பீகிங் நகரிலுள்ள அந்நிய ஸ்தானாதிபதிகளின் காரியாலயங்கள் முற்றுகையிடப் பட்டன.

தேசபக்தி ஆர்வம் நிறைந்த 'பாக்சர்' இயக்கத்தினிடத்துச் சீனாவின் பெரும் பகுதி அநுதாபம் காட்டியதோடு ஆயுதம் தாங்கி அதற்கு உதவியும் அளித்தது. ஆனால், சில மாகாணங்களின் வைசிராய்கள் மட்டும் நடுநிலைமை வகித்து அந்தவிதமாக வெளிநாட்டாருக்கு உதவி புரிந்தார்கள். விதவைச் சக்கரவர்த்தினியின் அநுதாபம் முழுதும் 'பாக்சர்'கள் பால் இருந்தது. ஆனால், அவள்கூட அவர்களுடன் பகிரங்கமாகச் சேர்ந்து கொள்ளவில்லை. 'பாக்சர்'கள் வெறும் கொள்ளைக்காரர்கள் என்று ஐரோப்பியர் எண்பிக்க முயன்றனர். ஆனால், உண்மையில், 1900-ம் ஆண்டில் நடைபெற்ற அக்கலகம் அந்நியரின் தலையீட்டினின்று சீனாவை விடுவிக்கச் செய்யப்பட்ட தேசபக்தி வாய்ந்த முயற்சியேயாகும். சீனாவில் அப்போது சுங்க இலாகா இன்ஸ்பெக்டர் ஜெனரலாக இருந்த சர் ராபர்ட் ஹார்ட் என்னும் ஒரு பெரிய பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர் அந்நிய ஸ்தானாதிபதி

காரியாலங்களின் முற்றுகையில் அகப்பட்டுக் கொண்டவர்களுள் ஒருவர். சீனரை மானபங்கப்படுத்திய குற்றம் அந்நியருடையதே, முக்கியமாகப் பாதிரிகளுடையதே என்று அவர் கூறுகிறார். மேலும் அவர் கூறுவதாவது: "'பாக்சர்' கலகம் சீனருடைய தேசபக்தியிலிருந்து பிறந்ததாகும். அவர்களுடைய லட்சியங்களில் பெரும்பாலானவை நியாயமானவையே. அவற்றை வற்புறுத்துவதற்காக நாம் அவர்களைக் குறைகூற முடியாது."

இதுவரையில் கொடுத்த உதைகளையெல்லாம் வாயைத் திறக்காமல் வாங்கிக்கொண்டிருந்த சீனா இப்பொழுது எதிர்க்க ஆரம்பித்தது ஐரோப்பிய வல்லரசுகளுக்கு எரிச்சலை மூட்டியது. பீகிங்கில் முற்றுகையிடப்பட்டுக் கிடந்த தங்களுடைய ஜனங்களைக் காப்பாற்றுவதற்கு அவர்கள் தங்களுடைய துருப்புகளை அனுப்பினார்கள். அது நியாயமே. ஒரு ஜெர்மன் தளபதி தலைமையில் ஒரு சர்வதேசப்படை ஸ்தானாதிபதி காரியாலயங்களை மீட்கச் சென்றது. ஜெர்மனியை ஆண்ட கெய்சர் தம்முடைய துருப்புகள் ஹூணர்களைப்போல் நடந்துகொள்ள வேண்டுமென்று உத்தரவிட்டார். சென்ற உலக யுத்தத்தின்போது பிரிட்டிஷார் ஜெர்மானியரை ஹூணர்கள் என்று அழைத்ததற்கு, ஒருவேளை இது காரணமாயிருக்கலாம்.

கெய்சருடைய புத்திமதியை அவருடைய துருப்புகள் மட்டுமின்றி எல்லா அந்நியத் துருப்புகளுமே கடைப்பிடித்தன. அத்துருப்புகள் பீகிங்குக்குச் செல்லும் வழியில் சீனமக்களைப் படுத்திய பாட்டைப் பகவானே அறிவார். எண்ணற்ற பேர்கள் அவர்கள் கையில் அகப்படுவதைவிடத் தற்கொலை செய்து கொள்வதே மேலானது என்று கருதி அவ்வாறே செய்தார்கள் என்றால் அப்படைகள் புரிந்த கொடுமையை வாயினால்

உரைப்பதைவிட மனத்தினால் ஊகித்துக்கொள்வதே பொருத்தமாகும். சீன மாதர்கள் அக்காலத்தில் தங்கள் பாதங்களைக் குறுக்கிக்கொண்டிருந்தபடியால் அவர்களால் எளிதில் ஓட முடியவில்லை. ஆகவே, அவர்களில் பலர் தற்கொலை புரிந்து கொண்டார்கள். இவ்வாறு ஐரோப்பியப் படைகள் மக்களை மடித்துக்கொண்டும், ஊர்களைக் கொளுத்திக்கொண்டும் சென்றன. அவர்கள் கால் பட்ட இடம் சுடுகாடாயிற்று. அப்படைகளுடன் சென்ற ஒரு பிரிட்டிஷ் யுத்த நிருபர் கூறுகிறார்:

"நான் எழுதக் கூடாத விஷயங்கள் பல இருக்கின்றன. அவற்றை இங்கிலாந்தில் அச்சிடுவதும் உசிதமாகாது. அவை அம்பலத்துக்கு வருமாயின் நமது மேனாட்டு நாகரிகம் என்பது நமது காட்டுமிராண்டித்தனத்தை மறைத்து நிற்கும் வெறும் மேற்பூச்சு என்பது வெட்ட வெளிச்சமாகி விடும். இது வரை எந்த யுத்தத்தைப்பற்றிய வரலாறும் உண்மையாக, நடந்தது நடந்தபடியே எழுதப்பட்டதில்லை. அந்தப் பொது விதிக்கு இந்த யுத்தமும் விலக்கானதல்ல."

அப் படைகள் பீகிங் நகருக்குச் சென்று முற்றுகையிடப்பட்ட ஸ்தானாதிபதி காரியாலயங்களை மீட்டன. அப்புறம் அவை பீகிங் நகரைச் சூறையாடின. "பிசாரோவின் காலத்திற்குப் பின் இத்தகைய சூறைக் கொள்ளை எங்கும் நடக்கவில்லை" என்று தெரிந்தவர்கள் சொல்லுகிறார்கள். பீகிங் நகரின் கலைப் பொக்கிஷங்களெல்லாம் அவற்றின் அருமையறியாத, கலைப் பண்பும் நாகரிகப் பண்பும் அற்ற கயவர்கள்பால் சிக்கிக் கொண்டன. இந்தச் சூறைக் கொள்ளையில் பாதிரிகள் முக்கியமான பங்கு எடுத்துக் கொண்டார்கள் என்று அறிய நமக்குத் துக்கம் உண்டாகிறது. அக் கொள்ளைக்காரர்கள் ஒவ்வொரு வீட்டுக்கும் கூட்டம் கூட்டமாகச்

சென்று அது தங்களைச் சேர்ந்தது என்று 'நோட்டீஸ்' ஒட்டுவார்கள். பிறகு அவ் வீட்டிலுள்ள சாமான்களை விற்பார்கள். அதற்குப் பின் வேறொரு பெரிய வீட்டை நாடிச் செல்வார்கள். இவ்வாறு அவர்கள் கொள்ளையடித்துக் கொண்டே சென்றார்கள்.

வல்லரசுகளுக் கிடையே இருந்த போட்டியும், ஓரளவு அமெரிக்காவின் மனப்பான்மையுமே சீனாவைக் கூறிடப்படுவதினின்றும் காப்பாற்றியது. ஆனால், அது கொடிய மானபங்கத்துக்கு உள்ளாக்கப் பட்டது. எத்தனை விதமான அவமானங்கள் அதன் மீது சொரியப் பட்டன என்று சொல்ல முடியாது. 1901-ல் கையெழுத்திடப்பட்ட 'பீகிங் ஒப்பந்த மசோதா' (Peking Protocol) என்கிற அந்தத் தஸ்தாவேஜியில் கீழ்க் கண்ட நிபந்தனைகள் அடங்கி யிருந்தன: 'பீகிங் நகரில் அந்நிய ராணுவம் நிரந்தரமா யிருக்க வேண்டியது; அந்த ராணுவம் ரயில் தொடரையும் பாதுகாத்து வரும். சீனருடைய கோட்டைகளில் பலவற்றை அழித்து விட வேண்டும். அந்நியருக்கு விரோதமான சங்கங்களில் சேர்பவர்களுக்கு மரண தண்டனை அளிக்கப்படும் என்பதாகச் சீன அரசாங்கம் சட்டம் செய்ய வேண்டும்.' சீனாவிடமிருந்து மேலும் சில வர்த்தகச் சலுகைகளும் நஷ்டஈடாக ஒரு பெருந்தொகையும் பறித்துக் கொள்ளப் பட்டன. இவற்றை யெல்லாம் தூக்கி அடிக்கிற ஒரு கொடுமை என்னவென்றால், 'பாக்சர்' இயக்கத்தின் தேச பக்தி மிகுந்த தலைவர்களை யெல்லாம் 'கலகக் காரர்' என்று கூறி அவர்களுக்கு மரண தண்டனை அளிக்கும்படி சீனா கட்டாயப்படுத்தப்பட்டதுதான்.

சீனாவில், பீகிங் நகரைச் சுற்றியுள்ள பகுதியில் இவை யெல்லாம் நிகழ்ந்துகொண் டிருந்தபோது, அதைப் பயன்படுத்திக்கொள்ள எண்ணிய ருஷியா சைபீரியா

வழியாகத் தன்னுடைய துருப்புகளை மஞ்சூரியாவுக்கு அனுப்பியது. சீனாவின் நிலை நிர்க்கதியாயிருந்தது. வெறும் ஆட்சேபனைக்குமேல் அதனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆனால், இவ்வாறு ஒரு பெரும் பிரதேசத்தை ருஷியா நோவாமல் எடுத்துக்கொள்ள விரும்புவதை மற்ற வல்லரசுகள் ஒப்புக்கொள்ளவில்லை. எல்லோரையும் விட ஜப்பான் அதைக் கண்டு அதிகமான அச்சமும் கவலையும் கொண்டது. ஆகவே, வல்லரசுகள் எல்லாம் சேர்ந்துகொண்டு ருஷியாவை வந்த வழியே போகுமாறு வற்புறுத்தின. தன்னுடைய நல்லெண்ணங்களைப் பிறர் சந்தேகிக்கவும் ஆச்சே என்று ஆச்சரியமும் துக்கமும் அடைவதுபோல ருஷிய அரசாங்கம் காட்டிக் கொண்டது. சீனாவின் தலையாய ராஜ்யாதிகார உரிமைகளில் தலையிடும் நோக்கம் தனக்கு எள்ளளவும் கிடையாதென்றும், மஞ்சூரியாவிலுள்ள ருஷிய ரயில் தொடரைப் பற்றிய நிலைமை அமைதியுற்றதும் தன்னுடைய துருப்புகளை 'வாபஸ்' பெற்றுக் கொள்வதாகவும் ருஷிய அரசாங்கம் மற்ற வல்லரசுகளுக்கு உறுதி கூறியது. ஆகவே, எல்லோருக்கும் திருப்தி எற்பட்டு விட்டது. அவ்வல்லரசுகள் எல்லாம் தங்களுடைய தன்னலங்கருதாப் பிறர் நலங்கருதும் பெற்றியைப்பற்றியும் மறம்கடிந்து அறம் பேணும் மாட்சியைப் பற்றியும் ஒன்றுக்கொன்று புகழ்மாலை பரிமாறிக்கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆயினும், ருஷியத்துருப்புகள் மஞ்சூரியாவை விட்டு நகரவில்லை. அவை கொரியா வரையிலும் பரவின.

ருஷியாவின் செய்கையைக் கண்ட ஜப்பான் சீற்றம் கொண்டது. அமைதியாக, ஆனால், தீவிரமாக அது போருக்குத் தயார் செய்துவந்தது. 1895-ல் மூன்று வல்லரசுகள் தனக்கு எதிராகக் கூடிக்கொண்டு, தான் சீன யுத்தத்துக்குப்பின் கைப்பற்றிய போர்ட் ஆர்தர் துறை

முகத்தைக் கைவிடும்படி பலவந்தம் செய்ததை அது மறக்கவில்லை. மீண்டும் அவ்வாறு நேராவண்ணம் தடுக்க அது முயற்சித்தது. இங்கிலாந்து ருஷியாவின் முன்னேற்றத்தைக் கண்டு அஞ்சி அதைத் தடுக்கவும் அடக்கவும் விரும்புவதை ஜப்பான் கண்டு கொண்டது. ஆகவே, 1902-ல் இங்கிலாந்தும் ஜப்பானும் ஒரு கூட்டுறவு ஒப்பந்தம் செய்துகொண்டன. மற்ற வல்லரசுகள் சேர்ந்துகொண்டு கீழ்க்கோடியில் ஜப்பானையும் இங்கிலாந்தையும் துன்புறுத்துவதைத் தடுப்பதே அவ்வொப்பந்தத்தின் நோக்கம். 'இனி நமக்குப் பயமில்லை' என்று ஜப்பான் எண்ணியது. ஆகவே, அது ருஷியாவை அதிகமாக விரட்டத் தொடங்கியது. ருஷியத் துருப்புகளை மஞ்சூரியாவிலிருந்து வாபஸ் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று அது கோரியது. ஆனால், மடமைக்குப் பேர்போன அக்கால ஜார் அரசாங்கம் ஜப்பானை மிகவும் இழிவாகக் கருதி அலட்சியம் செய்தது. ஜப்பான் சண்டை போடும் என்று அது நம்பவே இல்லை.

1904-ம் வருஷ ஆரம்பத்தில் இரு நாடுகளுக்கும் யுத்தம் மூண்டது. ஜப்பான் யுத்தத்துக்குச் சன்னைமாக இருந்தது. ஜப்பானியர் சக்கரவர்த்தி வணக்கத்தை மதமாகக் கொண்டவர்கள். மேலும், ஜப்பானிய அரசாங்கத்தின் பிரசாரம் அவர்களுக்கு நன்றாகத் தூபம் போட்டு அவர்களை உசுப்பி விட்டிருந்தது. ஆகவே, ஜப்பானியருடைய தேசபக்தி ஆவேசம் உச்சநிலையில் இருந்தது. ருஷியாவோ போருக்குத் தயாராகவே இல்லை. யதேச்சாதிகாரம் வாய்ந்த ருஷிய அரசாங்கம் இடைவிடாத அடக்குமுறையாலேயே ஜனங்களை ஆண்டு வந்தது. ஒன்றரை வருஷம் போர் நடந்தது. நிலத்திலும் நீரிலும் ஜப்பான் அடைந்த வெற்றிகளை அகில ஆசியாவும் ஐரோப்பாவும் அமெரிக்காவும் பார்த்துக் கொண்டி

ருந்தன. ஏராளமான உயிரைப் பலிகொடுத்து வியக்கத்தக்க தியாகங்கள் புரிந்தபின் ஜப்பானுக்குப் போர்ட் ஆர்தர் துறைமுகம் கிடைத்தது. ஐரோப்பாவிலிருந்து கீழ்க்கோடிக்கு ஒரு பெரிய கப்பற்படையை ருஷியா அனுப்பியது. பாதி உலகத்தைச் சுற்றிக் கொண்டு, பல்லாயிரக்கணக்கான மைல்கள் கடலில் பிரயாணம் செய்த பின் அப்பெரிய கப்பற்படை ஜப்பானியக் கடலுக்கு வந்துசேர்ந்தது. அங்கே, ஜப்பானுக்கும் கொரியாவுக்கும் இடையே உள்ள குறுகிய ஜலசந்தியில், அது ஜப்பானியரால் மூழ்கடிக்கப்பட்டது. அக்கப்பற்படையுடன் அதன் தளகர்த்தனும் சமுத்திரத்தின் அடிக்குப் போய்ச் சேர்ந்தான். சர்வமும் நாசமாகி விட்டது.

ருஷியாவுக்கு, ஜாரின் ருஷியாவுக்குத் தோல்விக்கு மேல் தோல்வி நேர்ந்து வந்தது. ஜப்பான் கொடுத்த அடி அதை மருமத்தில் தாக்கிவிட்டது. ருஷியாவுக்கு மூல பலம் அதிகம் உண்டு. நூறு வருஷங்களுக்கு முன்பு அது நெப்போலியனைக் கருவபங்கம் செய்யவில்லையா? ஆனால், அப்போது பேசியது உண்மையான ருஷியா—அதாவது ருஷியாவின் சாமானிய ஜனங்கள்—ஆகும்.

இக்கடிதங்களில் நான் அடிக்கடி ருஷியா அதைச் செய்தது, ஜப்பான் இதைச் செய்தது, இங்கிலாந்து அப்படி நடந்துகொண்டது, பிரான்சு இப்படி நடந்து கொண்டது என்று ஒவ்வொரு தேசத்தைப்பற்றிச் சொல்லிவருவதைப் பார்த்தால் அவை என்னவோ உயிருள்ள பொருள்களைப் போலத் தோன்றும். இது நான் புஸ்தகங்களிலிருந்தும் பத்திரிகைகளிலிருந்தும் கற்றுக் கொண்ட ஒரு கெட்ட வழக்கமாகும். ருஷியா என்னும்போது ருஷிய அரசாங்கத்தையும், பிரிட்டன் என்னும்போது பிரிட்டிஷ் அரசாங்கத்தையும், இவ்வாறே அந்தந்தத் தேசத்தைச்

சொல்லும்போது அந்தந்தத் தேச அரசாங்கத்தையும் மனத்தில் வைத்துக் கொண்டே நான் பேசுகிறேன். அந்த அரசாங்கம் ஒரு சிறு கூட்டத்தையோ அல்லது ஒரு வகுப்பையோ தவிர்த்து வேறு யாருக்கும் பிரதிநிதியாக இல்லாமலிருக்கலாம். ஆகவே, அத்தகைய அரசாங்கத்தை அந்நாட்டு மக்கள் அனைவருக்கும் பிரதிநிதி என்று கொள்வது தவறாகும். 19-வது நூற்றாண்டில், பிரிட்டிஷ் அரசாங்கம், நிலச் சுவான்தார்களையும் உயர் மத்திய வகுப்பாரையும் கொண்ட ஒரு சிறு பணக்காரக் கும்பலுக்குப் பிரதிநிதியாக இருந்தது என்று சொல்லலாம். அந்தக் கும்பலின் கையில்தான் பார்லிமெண்டு இருந்தது. பெரும்பான்மையான மக்களை எந்த விஷயத்துக்கும் ஏன் என்று கேட்பாரில்லை. ‘சர்வதேச சங்கத்துக்கோ அல்லது வட்டமேஜை மகாநாட்டுக்கோ அல்லது வேறு ஏதாவது காரியத்துக்கோ இந்தியாவின் பிரதிநிதி போயிருக்கிறார்’ என்று இந்தியாவிலுள்ள நாம் சில சமயங்களில் கேள்விப்படுகிறோம். இது வெறும் அபத்தப் பேச்சு. அப்பிரதிநிதிகள், இந்திய மகாஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டாலொழிய, இந்தியாவின் பிரதிநிதிகளாக ஒருநாளும் ஆகமாட்டார்கள். அவர்கள் இந்திய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட வெறும் ‘நாம்கேவாஸ்தே’ பேர்வழிகள். இந்திய அரசாங்கம் என்கிற பெத்தபேர் அதற்கு இருந்தாலும் அது வெறுமே பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஒரு பகுதிதான். ருஷிய-ஜப்பானிய யுத்த சமயத்தில் ருஷியா ஒரு யதேச்சாதிகார ஆட்சி நாடாக இருந்தது. ‘அகில ருஷியாவுக்கும் யதேச்சாதிகாரி’ யாக ஜார் விளங்கினான். மேலும், அவன் ஒரு முட்டாள் யதேச்சாதிகாரியாகவும் இருந்தான். ராணுவத்தின் துணைகொண்டு விவசாயிகளும் தொழிலாளிகளும் அடக்கப்பட்டார்கள். மத்திய வகுப்பாருக்குக்

கூட அரசாங்கத்தில் யாதொரு விதமான செல்வாக்கும் இல்லை. வீரத்துடன் ருஷியக் கொடுங்கோன்மையை எதிர்த்து நின்ற எத்தனையோ யுவர்களும் யுவதிகளும் சுதந்திரப் போராட்டத்தில் தங்களுடைய உயிரைப் பலி கொடுத்தார்கள். ஆகவே, நான் ‘ருஷியா’ என்று பேசும் போது ஜாரின் ருஷிய அரசாங்கத்தைத்தான் குறிப்பிடுகிறேன் என்பதை நீ மறந்து விடக்கூடாது.

ஜப்பானுடன் நடந்த யுத்தம் நஷ்டத்திலும் தோல்வியிலும் முடிந்தது ருஷியப் பொது மக்களின் துன்பத்தை மேலும் பெருக்கியது. அரசாங்கத்தை நெருக்குவதற்காகத் தொழிலாளர் அடிக்கடி வேலைநிறுத்தம் செய்தார்கள். 1905 ஜனவரி, 22-ல் ஒரு மதகுருவின் தலைமையில் ஆயிரக்கணக்கான விவசாயிகளும் தொழிலாளிகளும் ஜார் சக்கரவர்த்தியின் குளிர்கால மாளிகையை நோக்கி ஊர்வலமாகச் சென்றார்கள். அவர்கள் ஜாரிடம் தங்களுடைய குறைகளைக்கூறி முறையிடுவதற்காகவும் அவற்றைக் களையுமாறு அவனை மன்றாடுதற்காகவுமே அவ்வாறு சென்றார்கள். அவர்களுடைய முறையீட்டைக் கேட்பதற்குப் பதிலாக ஜார் அவர்களைச் சுட்டுக் கொல்வித்தான். இருநூறுபேர் கொல்லப்பட்டார்கள். பீட்டர்ஸ்பர்க் நகரின் வெண்ணிற உறைபனி மாந்தரின் குருதி தோய்ந்து செந்நிறம் பெற்று விளங்கியது. அந்தக் காட்சி மிகவும் பயங்கரமாயிருந்தது. அன்றைய தினம் ஞாயிற்றுக் கிழமை. ஆகவே, அன்று முதல் அத்தினம் ‘குருதி ஞாயிறு’ என்று வழங்குகிறது. அச்செய்தியைக் கேட்ட ஊரும் நாடும் கொதித்தன; தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். அவர்கள் புரட்சி செய்யவும் முயன்றார்கள். 1905-ம் வருஷத்திய அப்புரட்சியை ஜாரின் அரசாங்கம் மிகவும் குரூரமாக அடக்கியது. அப்புரட்சி பல காரணங்

களுக்காக நமக்கு முக்கியமானது. பன்னிரண்டாண்டு களுக்குப்பின் ருஷியாவின் தோற்றத்தையே அடியோடு மாற்றிவிட்ட 1917-ம் வருஷத்துப் பெரும் புரட்சிக்கு அது ஒரு ஒத்திகைபோல இருந்தது. வெற்றி பெறாத இந்த 1905-ம் வருஷத்துப் புரட்சியின்போதுதான் பிற்காலத்தில் பேரும்புகழும் பெற்று விளங்கிய 'சோவியத்து' என்னும் புதிய ஸ்தாபனம் சிருஷ்டிக்கப் பட்டது.

சீனவையும் ஜப்பானையும் ருஷிய-ஜப்பானிய யுத்தத் தையும் பற்றிச் சொல்லப் புகுந்த நான், என்னுடைய வழக்கத்துக்கு விரோத மில்லாமல், 1905-ம் வருஷத்து ருஷியப் புரட்சிக்குப் போய் விட்டேன். ஆனல், ருஷிய-ஜப்பானிய யுத்தத்தின் போது ருஷியா இருந்த நிலையை விளக்குவதற்கு நான் அதைப் பற்றிச் சிறிது கூற வேண்டியதாயிற்று. ஜப்பானுடன் ஜார் சமரசம் செய்து கொண்டதற்கு 1905-ம் வருஷத்துப் புரட்சியும் ஜனங் களின் மனநிலையுமே முக்கியக் காரணங்களாகும்.

ருஷிய-ஜப்பானிய யுத்தம் போர்ட்ஸ்மத் உடன் படிக்கையோடு முடிந்தது. போர்ட்ஸ்மத் என்பது அமெரிக்காவில் ஒரு ஊர். அமெரிக்கப் பிரசிடெண்டு உபய வாதிகளையும் அங்கே அழைத்திருந்தார். 1905 செப்டம்பரில் அங்கே சமாதான உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது. அதன் பயனகப் போர்ட் ஆர்தரும் லியோடுங் தீபகற்பமும் ஜப்பானுக்குக் கடைசி யாகக் கிடைத்தன. சீனயுத்தத்துக்குப் பின் அவற்றைக் கைவிடும்படி ஜப்பான் கட்டாயப் படுத்தப்பட்டது உனக்கு நினைவிருக்கலாம். அல்லாமலும் மஞ்சூரியாவில் ருஷியர் கட்டிய ரயில் தொடரில் பெரும் பகுதியையும், ஜப்பானுக்கு வடக்கேயுள்ள சாகலீன் தீவில் பாதியையும் ஜப்பானியர் எடுத்துக் கொண்டார்கள். மேலும்,

கொரியாவின்மீது தனக்கிருந்த உரிமைகள் யாவற்றையும் ருஷியா கைவிட்டுவிட்டது.

ஆக, ஜப்பான் வெற்றி பெற்று விட்டது. இப்போது அதுவும் வல்லரசுகளின் நல்லினத்தில் ஒன்ருய் விளங்கியது. ஜப்பான் ஒரு ஆசிய நாடு. ஆகவே, அதன் வெற்றி மற்ற ஆசிய நாடுகளிலும் சீள்பலனே அளித்தது. நான் சிறு பையனுயிருந்தபோது ஜப்பானிய வெற்றியைக் கேட்டு எவ்வாறு பரபரப்புற்றேன் என்று உனக்குச் சொல்லி யிருக்கிறேன். அந்தப் பரபரப்பை ஆசியாவைச் சேர்ந்த பால, குமார, விருத்தர் பலரும் அடைந்தார்கள். ஒரு பெரிய ஐரோப்பிய வல்லரசு ஒரு ஆசிய நாட்டினுல் தோற்கடிக்கப் பட்டது. ஆகவே, முன்காலத்தில் செய்தது போல இன்னும் ஆசியா ஐரோப்பாவைத் தோற்கடிக்க முடியும் என்று ஏற்பட்டது. கீழ்நாடுகளில் தேசிய உணர்ச்சி விரைவாகப் பரவியது. எங்கும் 'ஆசியா ஆசியருக்கே' என்னும் கோஷம் வானைப் பிளந்தது. ஆனுல், இந்தத் தேசியம் பழைய வழக்கங்களேயும் நம்பிக்கைகளேயும் மீண்டும் பற்றிக் கொண்டு பழைய காலத்துக்கே திரும்பிச் செல்வதைக் குறிக்கவில்லே. மேனுடுகளின் புதிய தொழில் முறைகளேக் கையாண்டதுதான் ஜப்பானின் வெற்றிக்குக் காரணம் என்பதைக் கீழ்நாடுகள் யாவும் நன்கு கண்டன. ஆகவே, அக்கருத்துகளும் முறைகளும் கீழ்நாடுகளில் அதிகமாகப் பரவலாயின.

118

சீனு குடியரசாக மாறுகிறது

டிசம்பர் 30, 1932.

ருஷியாமீது ஜப்பான் கொண்ட வெற்றியைக்
கண்டு ஆசிய நாடுகள் உளமகிழ்ச்சியால் பூரித்துப்
போய் தம்மையேதாம் பாராட்டிக் கொண்டதைச் சொன்
னேன். அதனுல் உடனே கண்ட பலன் என்ன
வென்ருல் ஆக்கிரமிப்புத் தன்மையும் சாம்ராஜ்யப்
பித்தும் ஏறிய நாடுகளின் கோஷ்டியில் இன்னொரு நாடு
அதிகமாகச் சேர்ந்து கொண்டது தான். அந்தப் பலனை
முதன் முதல் அனுபவித்தது கொரியா. ஜப்பானின்
உயர்வு கொரியாவின் வீழ்ச்சியாக முடிந்தது. ஜப்பான்
வெளி உலகத்துடன் தொடர்பு கொள்ள ஆரம்பித்த
காலத்திலிருந்தே கொரியாவையும் மஞ்சூரியாவில் ஒரு
பகுதியையும் தனக்குச் சொந்தமாகக் குறித்து வைத்[illegible]
கொண்டது. சீனுவின் எல்லைத்தூய்மையையும் கொரி[illegible]
வின் சுதந்திரத்தையும் தான் மீறப் போவதில்லை என்று
அது அடிக்கடி அறிவித்து வந்தது வாஸ்தவமே. ஒரு
வனைக் கொள்ளையடிக்கும் போதே அவனிடம் தங்
களுக்கு நல்லெண்ணம் பொங்கித் ததும்புவதாக உறுதி
கூறுவதும், ஒரு உயிரைக் கொல்லும் போதே உயிர்க்
கொலைபுரிவது பாவம், அதை ஓம்புவதே மேலான
தருமம் என்று வாய்ப்பறை சாற்றுவதும் சாம்ராஜ்ய
வல்லரசுகள் சிறப்பாகப் பயின்றுவரும் ஒரு தனிக்கலை
யாகும். ஆகவே, கொரியாவில் தலையிடுவதில்லை என்று
கூறிக்கொண்டே அதைச் சுவாதீனப்படுத்திக்கொள்ளும்
தன்னுடைய பழைய கொள்கையை ஜப்பான் அனுஷ்
டித்து வந்தது. கொரியாவையும் மஞ்சூரியாவையும்

குறியாகக் கொண்டுதான் அது சீனுவுடனும் ருஷியா
வுடனும் யுத்தங்கள் புரிந்தது. அது தன்னுடைய
முயற்சியில் படிப்படியாக முன்னேறிவந்தது. சீனுவும்
ருஷியாவும் தோற்ருேடியவுடன் அது செல்லவேண்டிய
வழி தடையற்றதாகிவிட்டது.

தன்னுடைய சாம்ராஜ்யக் கொள்கையை அனுஷ்
டிப்பதில் ஜப்பான் எப்போதுமே பாவ புண்ணியம்
பார்த்ததில்லை. தன்னுடைய சூழ்ச்சிகளைத் திரையிட்டு
மறைக்கவும் அது கவலை கொண்டதில்லை. பகிரங்க
மாகவே அது பிறர் நாட்டையும் பொருளையும் அபகரித்
தது. 1894-ம் ஆண்டிலேயே, அதாவது, சீனயுத்தத்
துக்கு முன்பே, ஜப்பானியர் கொரியாவின் தலைநகராகிய
சியௌலில் உள்ள அரண்மனையில் பிரவேசித்துத்
தங்களுடைய சொற்படி நடக்க மறுத்த அரசியைச்
சிறைப்படுத்திஞர்கள். 1905-ல், ருஷிய யுத்தத்துக்குப்
பின், அவர்கள் கொரியாவின் அரசனைக் கட்டாயப்
படுத்தி அந்நாட்டைத் தங்களுக்குப் பராதீனப்படுத்தும்
பத்திரத்தில் கையெழுத்து வாங்கிக் கொண்டார்கள்.
இதற்குப் பின்பும் அவர்களுக்கு அரைமனதாகவே இருந்
தது. ஆகவே, அவர்கள் ஐந்துவருஷ காலத்திற்குள்
ளாகவே அந்த நல்வினையில்லா மன்னனைச் சிம்மாசனத்
திலிருந்து நீக்கி விட்டுக் கொரியாவை ஜப்பானிய சாம்
ராஜ்யத்தில் சேர்த்துக்கொண்டார்கள். 1910-ல் இது
நிகழ்ந்தது. ஒன்றல்ல, இரண்டல்ல, மூவாயிரம்
ஆண்டுகள் சுதந்திரவாழ்வு வாழ்ந்த பிறகு கொரியா
தன்னுடைய தனி உரிமையை இழந்துவிட்டது. சிம்மா
சனத்திலிருந்து நீக்கப்பட்ட அதன் அரசனே 500 ஆண்டு
களுக்கு முன் மங்கோலியரை விரட்டியடித்த வீரபரம்
பரையைச் சேர்ந்தவன். ஆனுல், கொரியாவும் அதன்
தவ்வையாகிய சீனுவைப்போல் கருத்திலும் கருமத்தி

லும் துருப்பிடித்துப் பிரேதம் போல் ஆகிவிட்டது. அகவே, அதற்குரிய பிராயச்சித்தத்தை அது அனுபவிக்க வேண்டியதாயிற்று.

கொரியா தன்னுடைய பழைய பெயரை—தேர்ந்தெடுக்கப்பட்ட நாடு அல்லது காலை நேரத்துச் சாந்தி நிறைந்த நாடு—மீண்டும் பெற்றது. ஜப்பானியர் சில நவீன சீர்திருத்தங்களை அதற்கு வழங்கினார்கள். ஆனால், கொரிய மக்களின் சுதந்திர உணர்ச்சியை அவர்கள் ஈவிரக்கமின்றி அடக்கினார்கள். கொரியா பல வருஷங்கள் வரையில் தன்னுடைய சுதந்திரத்துக்காக இடைவிடாது போராடியது. எத்தனையோ கலகங்கள் நிகழ்ந்தன. அவற்றில் முக்கியமானது 1919-ல் நிகழ்ந்த கலகமாகும். கொரிய மக்கள், முக்கியமாக யௌவன ஸ்திரீ புருஷர்கள், தங்களை விடப் பன்மடங்கு பலம் மிகுந்த எதிரியோடு வீரத்துடன் போராடினார்கள். கொரியாவின் சுதந்திரத்துக்காகப் போராடும் ஸ்தாபனம் ஒன்று ஒருமுறை ஜப்பானியரை நிராகரித்துத் தங்கள் நாட்டின் சுதந்திரத்தைப் பிரகடனம் செய்தபொழுது அவர்கள் தாங்கள் செய்த காரியத்தைத் தாங்களே டெலிபோனில் போலீசுக்குத் தெரிவித்து விட்டார்களாம். இவ்வாறு, அவர்கள் தெரிந்தே தங்களுடைய லட்சியத்துக்காகத் தங்களைத் தியாகம் செய்து கொண்டார்கள். கொரியரை ஜப்பானியர் அடக்கிய முறை சரித்திரத்திலேயே மிகவும் இருண்ட துக்ககரமான ஒரு கட்டமாகும். கொரியப் பெண்கள்—அவர்களில் பலர் கலாசாலை மாணவிகள்—சுதந்திரப் போராட்டத்தில் முக்கியப் பங்கு எடுத்துக் கொண்டார்கள் என்பதை அறிய நீ உவகை அடைவாய்.

இப்பொழுது நாம் சீனாவுக்குத் திரும்பிச் செல்வோம். அங்கே, 'பாக்சர்' இயக்கம் அடக்கப் பட்டதையும் 1901-ல் பீகிங் ஒப்பந்த மசோதா கையெழுத்திடப் பட்டதையும் பார்த்தோம். அந்த இடத்தில் நாம் சீனாவைத் திடீரென்று விட்டு விட்டு வந்து விட்டோம். சீனா பரிபூரணமான பரிபவம் அடைந்து விட்டது. மீண்டும் அது தன்னைச் சீர்திருத்திக் கொள்ள முயன்றது. விதவைச் சக்கரவர்த்தினி கூட நாட்டின் நிலைமைக்கு ஏதாவது பரிகாரம் தேடவேண்டுமென்று எண்ணலானாள். ருஷியாவும் ஜப்பானும் சீனாவைச் சேர்ந்த மஞ்சூரியாவில் யுத்தம் புரிந்தாலும், சீனா அந்த யுத்தத்தை வெறுமே கையைக் கட்டிக் கொண்டு பார்த்திருந்தது. ஜப்பானுடைய வெற்றியினால் சீனாவில் சீர்திருத்தவாதிகளுடைய கட்சி வலுத்தது. கல்வித் திட்டம் நவீன முறையில் திருத்தி அமைக்கப்பட்டது. நவீன விஞ்ஞான சாஸ்திரங்களைக் கற்று வருவதற்காகப் பல மாணவர்கள் ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் அனுப்பப்பட்டார்கள். அரசாங்க உத்தியோகஸ்தர்கள் நியமன விஷயத்தில் கையாளப்பட்ட பழைய இலக்கியப் பரீட்சை முறை ஒழிக்கப் பட்டது. சீனாவுக்கே சிறப்பாக உரிய அம்முறை, ஹான் வமிச காலத்திலிருந்து அதாவது 2000 ஆண்டுகளாக வழக்கில் இருந்து வந்தது ஆச்சரியமாகும். ஆனால், அது தன் பயனை இழந்து வெகு காலமாகி விட்டது. ஆகவே, அது ஒழிக்கப்பட்டது நன்றே ஒழியத் தீதில்லை. ஆயினும், பல நீண்ட காலமாக அது ஒரு விந்தையாக விளங்கி வந்தது. சீனருடைய வாழ்க்கைத் தத்துவத்தை அது நன்கு பிரதிபலித்தது. பெரும்பாலான மற்ற ஆசிய நாடுகளிலும் ஐரோப்பாவிலும் காணப்படுவதுபோல் அவ் வாழ்க்கைத் தத்துவம் நிலமானியத் தன்மையோ மதச் சார்போ கொண்டதல்ல; பகுத்தறிவையே அடிப்படையாகக் கொண்டது என்பதை அப் பழைய பரீட்சை

முறை நன்கு எடுத்துக் காட்டியது. உலகிலுள்ள மற்றெல்லோரைக் காட்டிலும் சீனரே குறைவான மதப் பற்று உள்ளவர்கள். ஆனால், மதப்பற்று மிக்க எந்த ஜன சமூகத்தையும் விட அதிகக் கண்டிப்பாக அவர்கள் தங்களுடைய முன்னோர் வகுத்த சன்மார்க்க நெறியில் ஒழுகி வந்திருக்கிறார்கள். பகுத்தறிவை ஆதாரமாகக் கொண்ட ஒரு ஜன சமூகத்தை அவர்கள் சிருஷ்டிக்க முயன்றார்கள். அவர்கள் அம் முயற்சியைத் தங்களுடைய பழைய இலக்கியங்களின் எல்லைக்குள் கட்டுப்படுத்திக் கொண்டதாலும், முன்னேற்றமும் அவசியமான மாறுதல்களும் தடுக்கப்பட்டு விட்டமையாலும் அவர்களுடைய சமூகம் உயிரியக்கமற்றுச் சவமாகி விட்டது. சீனர்களுடைய பகுத்தறிவு வாதத்திலிருந்து இந்தியர்களாகிய நாம் கற்றுக் கொள்ள வேண்டியது எவ்வளவோ இருக்கிறது. ஜாதி, மதம், புரோகிதப் புரட்டு, நிலமானியக் கொள்கை ஆகியவற்றின் பிடியிலிருந்து இன்னும் நாம் விடுதலை அடையவில்லை. சீன மகானாகிய கன்பூஷியஸ் தம்முடைய நாட்டினருக்கு விடுத்துள்ள எச்சரிக்கை எந்நாட்டினராலும் நினைவுகூரத் தக்கது. "மனித அறிவுக்கு அப்பாற்பட்ட பரலோக விஷயங்களை அறிந்தவர்கள் எனப் பாசாங்கு செய்யும் ஆஷாடபூதிகளை அறவே நம்பாதீர்கள். ஆஷாடபூதித்தனத்துக்கு இடம் கொடுத்து விட்டால் நாடு நாசமடைந்துவிடும்" என்று அவர் கூறுகிறார். நமது துர்ப்பாக்கிய நாட்டிலோ ஒருவன் தலைமயிரைச் சடையாகத் திரித்துக் கொண்டாலோ அல்லது நீண்ட தாடி வைத்துக்கொண்டாலோ அல்லது விபூதியையோ நாமத்தையோ பட்டை பட்டையாகக் குழைத்துப் போட்டுக் கொண்டாலோ அல்லது காஷாயம் தரித்துக் கொண்டாலோ போதும்; உடனே அவன் 'சாமியார்' ஆகி விடுகிறான். இத்தகைய 'சாமியார்'

கள் எத்தனையோ பேர்கள் தங்களைக் கடவுளின் ஏஜெண்டுகள் என்று சொல்லிக் கொண்டு பாமர மக்களை வஞ்சித்துப் பிழைத்து வருகிறார்கள்.

ஆனால், சீனாவின் பழங்காலப் பண்பும் பகுத்தறிவு வாதமும் ஆபத்துக் காலத்தில் அதற்கு யாதொரு உதவியும் அளிக்கவில்லை. ஆகவே நிகழ்காலம் சீனாவின் வசத்தில் நில்லாது போய் விட்டது. ஆனால், சம்பவங்களின் வேகம் சீனர் பலருக்குப் புத்துயிர் அளித்தது. அவர்கள் வேறு இடங்களிலிருந்து ஒளிபெற முனைந்தார்கள். அந்த வேகம் விதவையான கிழச் சக்கரவர்த்தினியையும் பாதித்தது. அவள் சீனாவுக்குச் சுயஆட்சியும் அரசியல் அமைப்பும் வழங்குவதுபற்றிப் பேசலானாள். வெளிநாடுகளின் அரசியல் அமைப்புகளை அறிந்துவர அவள் ஒரு கமிஷனையும் அனுப்பிவைத்தாள்.

கிழச் சக்கரவர்த்தினியின் கீழ்ச் சீன அரசாங்கம் கடைசியாகக் காரியம் செய்ய ஆரம்பித்தது. ஆனால், ஜனங்கள் அரசாங்கத்தைவிட அதிவேகமாகச் சென்று கொண்டிருந்தார்கள். 1894-ம் ஆண்டிலேயே டாக்டர் சன்-யாட்-சென் என்பவர் 'சீனப்புனருத்தாரண சங்கம்' என ஒரு சங்கத்தை நிறுவினார். அந்த சங்கத்தில், சீனாவின் மீது நிர்ப்பந்தமாக வெளிநாடுகள் சுமத்திய ஒருதலைச் சார்பான உடன்படிக்கைகளை எதிர்த்தவர்கள் எல்லோரும் சேர்ந்தார்கள். சீனர் அவ்வநியாய உடன்படிக்கைகளை "ஏற்றத் தாழ்வான உடன்படிக்கைகள்" என்று அழைத்தார்கள். அந்தச் சங்கம் வளர்ந்து வாலிபரைத் தன்பால் ஈர்த்தது. 1911-ல் அதன் பெயர் 'கோமின் டாங்' (ஜனங்களின் தேசியக் கட்சி) என்று மாற்றி அமைக்கப்பட்டது. அதிலிருந்து அது சீனப்புரட்சியின் இருதய ஸ்தானமாக மாறியது. அவ்வியக்கத்தின் மூலகர்த்தாவான டாக்டர் சன் அமெரிக்

காலை முன்-மாதிரியாகக் கொண்டார். அவர் தம்முடைய நாட்டுக்குக் குடியரசு முறையையே வேண்டினார். இங்கிலாந்தில் இருப்பதைப் போன்ற சட்டரீதியான குடியரசையோ ஜப்பானின் சக்கரவர்த்தி வணக்கத்தையோ அவர் விரும்பவில்லை. சீனர்கள் எப்பொழுதுமே தங்கள் சக்கரவர்த்திகளைத் தலைமேல் வைத்துக் கொண்டு கூத்தாடியதில்லை. மேலும், சீனாவின் அரச வமிசம் பெரும்பாலும் அந்நிய வம்சமாகவே இருந்து வந்தது. மஞ்சு அரச வமிசத்துக்கு விரோதமான உணர்ச்சி நாட்டில் அதிகமாக இருந்தது. ஜனங்களின் இந்த உணர்ச்சிதான் விதவைச் சக்கரவர்த்தினியைக் காரியம் செய்யத் தூண்டியது. ஆனால், அரசியல் அமைப்பு அளிப்பதாகப் பிரகடனம் செய்த சிறிது காலத்திற்குள் அவள் இறந்து விட்டாள். அவள் இறந்த 24-மணி நேரத்துக் கெல்லாம் அவளால் சிம்மாசனத்திலிருந்து தள்ளப்பட்ட அவளுடைய மருமகனும் இறந்து விட்டான். 1908, நவம்பரில் இது நடந்தது. அவர்கள் இருவரும் இறந்தபின் ஒரு குழந்தை பெயரளவில் சக்கரவர்த்தியாயிற்று.

மீண்டும் மஞ்சு வமிசத்துக்கும் முடியாட்சிக்கும் விரோதமான உணர்ச்சி நாட்டில் மேலோங்கியது. ஒரு பார்லிமெண்டைக் கூட்டவேண்டும் என்று பலரும் கேட்கலானார்கள். புரட்சிக்காரரின் கட்சி வலுத்தது. புரட்சிக்காரரை எதிர்த்து நிற்கக்கூடிய பலமுள்ளவன் ஒருவன்தான் சீனாவில் இருந்தான். அவன் பெயர் யுவான்ஷிகே என்பது. அவன் ஒரு பழம்பெருச்சாளி; மகா தந்திரசாலி. அவன் ஒரு மாகாணத்துக்கு வைசிராயாக இருந்தான். சீனச் சேனைகளுள் "மாதிரிச் சேனை" என்று அழைக்கப்பட்ட சேனை ஒன்றுதான் நவீன சாதனங்களும் திறமையும் வாய்ந்ததாகும். அந்தச்

சேனை யுவான் வசத்தில் இருந்தது. அவனைப் போய் மஞ்சு பரம்பரை முட்டாள்தனமாகப் பகைத்துக் கொண்டு அவனை வேலையிலிருந்தும் நீக்கிவிட்டது. இவ்வாறு, தன்னைச் சிலகாலமாவது காத்து நிற்கக்கூடிய அந்த ஒரு மனிதனையும் அது இழந்துவிட்டது. 1911-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் யாங்ச்சி பள்ளத்தாக்கில் புரட்சி ஆரம்பித்தது. விரைவிலேயே மத்திய சீனாவிலும் தென் சீனாவிலும் பெரும்பகுதி அதில் கலந்துகொண்டது. 1912-ம் வருஷம் பிறந்த நாளன்று, புரட்சிசெய்த மாகாணங்கள் நாங்கிங்கைத் தலைநகராகக் கொண்ட ஒரு குடியரசைப் பிரகடனம் செய்தன. டாக்டர் சன்-யாட்-சென் அக்குடியரசின் பிரசிடெண்டாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதற்கிடையில், யுவான்ஷிகே என்ன நடக்கிறது என்று கவனமாகப் பார்த்துக்கொண்டிருந்தான். தனக்கு அனுகூலமான சமயம் பார்த்துத் தலையிட வேண்டும் என்பது அவனுடைய நோக்கம். குழந்தைச் சக்கரவர்த்திக்குப் பிரதிநிதி ஸ்தானத்தில் இருந்து 'ரீஜெண்ட்' ஆக அரசு புரிந்துவந்த அக்குழந்தையின் தகப்பன் யுவானை வேலையிலிருந்து தள்ளியதும் மறுபடி அவனை வேலைக்கு எடுத்துக் கொண்டதும் ஒரு ரசமான கதையாகும். பழைய சீனாவில் எதையும் மரியாதைக்குப் பங்கம் உண்டாகுமாறோ கவுரவத்துக்குக் குறைவு நேருமாறோ செய்யமாட்டார்கள். யுவானை வேலையிலிருந்து தள்ளுமுன் அவனுக்குக் காலில் ஏதோ ஊனம் என்று அறிவிக்கப்பட்டது. எல்லாருக்கும் அவனுடைய காலில் ஒரு ஊனமும் இல்லை என்று தெரியும். வெறுமே, அவனை வெளியே அனுப்புவதற்கு அப்படிச் சொல்லுவது ஒரு சம்பிரதாயம். ஆனால், யுவான் அதற்குப் பழி வாங்கிவிட்டான். இரண்டு வருஷங்களுக்குப் பின்

1911-ல், அரசாங்கத்துக்கு எதிராகப் புரட்சியும் கலகமும் தோன்றிய காலையில் 'ரீஜெண்டு' பயந்துபோய் யுவானைக் கூப்பிட்டனுப்பினான். தன்னுடைய நிபந்தனைகள் ஒப்புக்கொள்ளப் பட்டாலொழிய யுவானுக்குப் போக இஷ்டமில்லை. ஆகவே, அவன் தன்னுடைய கால் இன்னும் குணப்படாததால் வீட்டைவிட்டு வெளியே கிளம்பமுடியாத நிலையில் தான் இருப்பதாகவும் அதற்காகத் தான் பெரிதும் வருந்துவதாகவும் ரீஜெண்டுக்குச் சொல்லி அனுப்பினான்! ஒரு மாதத்துக்குப் பின் அவனுடைய நிபந்தனைகள் ஒப்புக்கொள்ளப்பட்டன. உடனே, அவனுடைய காலும் அதிசயிக்கத் தக்க விதமாக அவ்வளவு சீக்கிரத்தில் குணமடைந்துவிட்டது.

ஆனால், புரட்சியை அடக்குவதென்பது அதற்கு மேல் சாத்தியமில்லை. யுவானும் கெட்டிக்காரத்தனமாக எந்தக் கட்சியிலும் பட்டுக்கொள்ளாமல் இருந்தான். முடிவாக, அவன் மஞ்சுக்கள் முடிதுறப்பதே உத்தமம் என்று புத்திமதி கூறினான். ஒருபக்கம் குடியரசு அவர்களை எதிர்த்தது; இன்னொரு பக்கம் அவர்களுடைய சொந்தத் தளகர்த்தனே அவர்களைக் கைவிட்டுவிட்டான். அந்த நிலையில் மஞ்சுக்களுக்கு முடிதுறப்பதைத் தவிர்த்து வேறுவழியே இல்லை. 1912 பிப்ரவரி, 12-ல் முடிதுறத்தற் பிரகடனம் வெளியிடப்பட்டது. இவ்வாறு, இரண்டரை நூற்றாண்டுகள் சீர் பெருகச் செங்கோல் ஓச்சியபின் மஞ்சுவமிசம் சீன அரங்கத்திலிருந்து மறைந்தது. 'புலிபோல் உறுமிக்கொண்டு வந்தவன் பாம்பின் வாலைப்போல் நழுவி விட்டான்' என்பது சீனாவில் வழங்கும் ஒரு வசனம். மஞ்சுக்களின் தோற்றமும் மறைவும் அதைப் போலிருந்தது.

அந்தப் பிப்ரவரி பன்னிரண்டாந் தேதியன்றே குடியரசின் தலைநகரான நாங்கிங்கில் ஒரு விசித்திர சம்பவம்

நிகழ்ந்தது. நாங்கிங்கில்தான் முதல் மிங் மன்னனின் அலங்கார சமாதியும் இருந்தது. அன்று நடந்த சம்பவம் பழைமையையும் புதுமையையும் ஒன்று சேர்த்து இரண்டுக்குமுள்ள வேற்றுமையை நன்கு எடுத்துக் காட்டியது. குடியரசின் பிரசிடெண்டாகிய (தலைவர்) சன்-யாட்-சென் தன்னுடைய மந்திரி மண்டலத்தாருடன் அந்தச் சாமதிக்குச் சென்று பழைய முறையில் செய்ய வேண்டிய கிரியைகளைச் செய்தார். பின்னர் அவர் தம் முடைய பிரசங்கத்தில் பின் வருமாறு கூறினார்: "இன்று நாம் கீழ் ஆசியாவில் குடியரசு ஆட்சிமுறையை அங்குரார்ப்பணம் செய்கிறோம். முயற்சி உடையோர் இகழ்ச்சி அடையார். இன்றில்லாவிட்டாலும் நாளைக்கு முயற்சி வெற்றி பெறுவது நிச்சயம். முடிவில் நல்லோர் நினைத்த பலம் பெறுவார்கள். ஆகவே, வெற்றி தாழ்த்துவிட்டதே என்று நாம் மனம் அழுங்கக் காரணம் இல்லை."

நாட்டிலிருந்தபோதும், நாடு கடத்தப்பட்டு நாட்டுக்கு வெளியில் இருந்தபோதும் டாக்டர் சன் சீன சுதந்திரத்துக்காகப் பல வருஷங்கள் ஓயாதுழைத்தார். கடைசியில், அவருக்கு வெற்றி கிடைத்து விட்டதுபோல் தோன்றியது. ஆனால், சுதந்திரம் என்பது நழுவி விடும் இயல்புடையது; கையில் இருப்பது போலத் தோன்றும்; பின்னர் பார்த்தால் இராது. வெற்றி என்பது முழுத் தியாகமும் செய்த பின்னரே கிடைக்கக்கூடிய ஒன்று. அது நம்மை அடிக்கடி ஆசை காட்டி மோசம் செய்யும். நம்மைக் கொடிய சோதனைகளுக்கு உள்ளாக்கிய பின்னரே அது நமக்குக் கிடைக்கும். சீனாவின் பிரயாணமும் டாக்டர் சன் அவர்களின் பிரயாணமும் முடிவதற்கு இன்னும் வெகுதூரம் இருந்தது. பாலப் பருவத்திலிருந்த சீனக்குடியரசு பல வருஷங்கள் வரையில் தன் உயிருக்குப் போராட வேண்டியிருந்தது. இன்று

அதற்கு வயது இருபத்தொன்று. நியாயமாக அது இப்போது 'மேஜர்' ஆகியிருக்கவேண்டும். ஆயினும், சீனாவின் வருங்காலம் இன்னும் ஊசலாடிக் கொண்டுதான் இருக்கிறது.

மஞ்சுக்கள் முடிதுறந்து விட்டார்கள். ஆனால், யுவான் குடியரசுக்குக் குறுக்கே நின்றான். அவன் என்ன செய்வான் என்பது ஒருவருக்கும் தெரியவில்லை. வடசீனா அவனுடைய ஆதிக்கத்திலும் தென்சீனா குடியரசின் ஆதிக்கத்திலும் இருந்தன. உள்நாட்டுப் போரைத் தவிர்த்து அமைதியையும் ஒற்றுமையையும் நிலைநாட்டுவதற்காக டாக்டர் சன் தம்மையே தியாகம் செய்து கொண்டார். அவர், தாம் பிரசிடெண்டு பதவியிலிருந்து விலகிக் கொண்டு யுவானைப் பிரசிடெண்டு ஆக்கினார். ஆனால், யுவான் ஒரு குடியரசு வாதி அல்ல. அவன் தனக்கு அதிகாரம் தேடவும் தன்னை உயர்த்திக் கொள்ளவுமே முயன்றான். அவன் வெளிநாடுகளிலிருந்து கடன் வாங்கித் தன்னைப் பிரசிடெண்டு ஆக்கிக் கவுரவித்த குடியரசை அழிப்பதற்கு அதை உபயோகித்தான். அவன் பார்லிமெண்டை நீக்கிவிட்டுக் கோமின்டாங்கைக் கலைத்துவிட்டான். அதனால் பிளவு ஏற்பட்டது. உடனே டாக்டர் சன்னின் தலைமையில் தென் சீனாவில் ஒரு போட்டி அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. எந்தப் பிளவு ஏற்படுவதை எவ்வகையானும் டாக்டர் சன் தடுக்க முயன்றாரோ அந்தப் பிளவு ஏற்பட்டு விட்டது. உலக யுத்தம் தொடங்கிய போது சீனாவில் இரு அரசாங்கங்கள் இருந்தன. யுவான் சக்கரவர்த்திஆக முயன்று முடியாமல் இறந்துவிட்டான்.

119

அதீத இந்தியாவும் கிழக்கிந்தியத் தீவுகளும்

டிசம்பர் 31, 1932.

கிழக் கோடியின் கதை தற்போதைக்கு ஒருவாறு
முடிந்தது. 19-வது நூற்றாண்டில் இந்தியா இருந்த
நிலைமையையும் சிறிது பார்த்தோம். இனி நாம் மேற்கே
திரும்பி ஐரோப்பாவுக்கும் ஆப்பிரிக்காவுக்கும் அமெரிக்
காவுக்கும் போக வேண்டியது தான். ஆனால், இந்த நீண்ட
பிரயாணத்தைத் தொடங்குமுன் ஆசியாவின் தென்
கிழக்குக் கோடி அக்காலத்தில் எப்படி யிருந்தது என்று
போகிற போக்கில் பார்த்துவிடுவது நலம். நாம் தென்
கீழ் ஆசிய நாடுகளைப் பார்த்து நெடுங்காலமாயிற்று.
முன் கடிதங்கள் சிலவற்றில் அவற்றை நான் மலாயாசியா
என்றும் இந்து ஆசியா என்றும் கிழக்கிந்தியத் தீவுகள்
என்றும் அதீத இந்தியா என்றும் பலபடியாகத் தெளி
வின்றிச் செப்பி வந்துள்ளேன். அப்பெயர்கள் நாம்
மனத்தில் கருதியிருக்கும் முழுப்பிரதேசத்தையும் குறிக்
கின்றனவா என்பது சந்தேகமே. ஆனால், நாம் ஒருவரை
யொருவர் புரிந்து கொள்ளுகிற வரையில் பெயரைப்
பற்றிக் கவலைப்படுவானேன்?

உலகப்படம் ஒன்று உன் கைவசம் இருந்தால்
அதைப் பிரித்துப்பார். ஆசியாவின் தென் கீழ்ப்பாகத்தில்
பர்மாவையும், சையாமையும், இப்போது பிரெஞ்சு
இந்தோ-சீனா என்று அழைக்கப்படும் பகுதியையும்
கொண்ட ஒரு தீபகற்பத்தைக் காண்பாய். பர்மாவுக்கும்
சையாமுக்கும் இடையிலிருந்து ஒரு குறுகிய நிலப்பகுதி
நீண்டு செல்கிறது. அது தான் மலாய் தீபகற்பம். அது

நுனியில் பருத்துச் சிங்கப்பூருடன் முடிகிறது. மலாய் நாட்டுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையே விசித்திர வடிவமுள்ள, சிறிதும் பெரிதுமான பல தீவுகள் இருக்கின்றன. அவற்றைப் பார்த்தால் ஆசியாவையும் ஆஸ்திரேலியாவையும் பிணைக்கும் மாபெரும் பாலம் ஒன்று உடைந்து கிடப்பது போலத்தோன்றும். அவையே கிழக்கிந்தியத் தீவுகள். அவற்றிற்கு வடக்கே பிலிப்பைன் தீவுகள் இருக்கின்றன. தற்கால உலகப்படம் ஒன்றை நீ பார்வையிட்டால் பர்மாவும் மலாய்நாடும் பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் கீழும், இந்தோ–சீனா பிரெஞ்சு ஆதிக்கத்தின் கீழும், சையாம் சுதந்திரநாடாகவும் இருப்பது தெரியவரும். கிழக்கிந்தியத்தீவுகள்—சுமத்திரா, ஜாவா போர்னியோவில் பெரும்பகுதி, செலிபீஸ், ஐரோப்பியரைப் பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கப்பாலிருந்து, அபாயமான கடல்களைக் கடந்து தன்னைநாடி வரும்படி செய்த வாசனைத் திரவியங்களுக்குப் பேர் போன மலுகாஸ் தீவு ஆகியவை—டச்சு ஆதிக்கத்தின் கீழ் இருப்பவை. பிலிப்பைன் தீவுகள் அமெரிக்க ஆதிக்கத்தின் கீழ் உள்ளன.

கீழ்க் கடல்களிலுள்ள அந்நாடுகளின் தற்கால நிலைமை இதுதான். ஆனால், ஏறக்குறைய 2000 ஆண்டுகளுக்கு முன்னர் பாரதத்தாயின் புதல்வர்கள் அங்குச் சென்று குடியேறி அவற்றை வளப்படுத்தியதையும், அங்கே ஓங்கி வளர்ந்து நீண்டகாலமாக நிலைபெற்றிருந்த பெரிய சாம்ராஜ்யங்களையும், இன்னும் அங்குத் தோன்றிய அற்புத மாடமாளிகைகள் கொண்ட அழகான நகரங்களையும், அங்கு வளர்ந்தோங்கிய வர்த்தகச் சிறப்பையும், முக்கியமாக இந்திய-சீனக் கலை நாகரிகங்கள் அங்கு உறவாடிக் கலந்து மகிழ்ந்த விந்தையையும் நீ மறந்திருக்க மாட்டாய் என்று நம்புகிறேன்.

அந்நாடுகளைப் பற்றிய எனது கடைசிக் கடிதத்தில் (கடிதம்–79) போர்த்துகீசியரின் கீழ்ச் சாம்ராஜ்யம் வீழ்ந்து, பிரிட்டிஷ், டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனிகள் உயர்ந்ததைப் பற்றிக் கூறினேன். பிலிப்பைன் தீவுகளில் அப்போதும் ஸ்பானிய ஆட்சி நடந்து வந்தது.

பிரிட்டிஷ்காரரும் டச்சுக்காரரும் சேர்ந்துகொண்டு போர்த்துகீசியரைப் புறமுதுகு கண்டார்கள். வெற்றி பெற்றபின் அவர்கள் அடிக்கடி தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்ள ஆரம்பித்தார்கள். 1623-ல், ஒரு சமயம், மலுகாஸ் தீவிலுள்ள அம்பாய்னாவின் டச்சுக் கவர்னர் கிழக்கிந்தியக் கம்பெனியின் பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்கள் அனைவரையும் கைது செய்து டச்சு அரசாங்கத்துக்கு விரோதமாகச் சதி செய்ததாகக் குற்றம் சாட்டிக் கொன்று விட்டான். இது அம்பாய்னாப் படுகொலை என்று அழைக்கப்படுகிறது.

ஒரு விஷயம் நீ நினைவில் வைக்க வேண்டும். அதை முன் கடிதங்களிலும் நான் உனக்குச் சொல்லியுள்ளேன். 17-வது நூற்றாண்டிலும் அதற்குப் பிற்பட்ட காலத்திலும் ஐரோப்பா தொழில் துறையில் அபிவிருத்தி அடையவில்லை. அது பெரிய அளவில் பொருள்களை உற்பத்தி செய்து அவற்றை வெளி தேசங்களுக்கு ஏற்றுமதி செய்யவில்லை. வெகு காலத்துக்குப் பின்னரே அங்கு யந்திரத் தொழிற் புரட்சி தோன்றியது. அதற்கு முன் பொருள்களை உற்பத்தி செய்வதிலும் ஏற்றுமதி செய்வதிலும் ஐரோப்பாவை விட ஆசியாவே மேலாயிருந்தது. ஆசியப் பொருள்கள் ஐரோப்பாவுக்குச் சென்ற காலையில் அவற்றை ஐரோப்பியர் ஒருபாகம் தங்களுடைய பொருள்களைக் கொடுத்தும் மற்றொரு பாகம் ஸ்பானிய அமெரிக்காவிலிருந்து வந்த தனத்தைக் கொடுத்தும் வாங்கினார்கள். ஆசியாவுக்கும் ஐரோப்பாவுக்கும்

இடையே நடந்து வந்த அவ்வியாபாரம் மிகவும் லாபகரமாயிருந்தது. அதை நெடுங்காலமாக நடத்தி வந்த போர்த்துகீசியர் அதனால் கொழுத்த பணக்காரர் ஆனார்கள். அவ் வியாபாரத்தால் வரும் லாபத்தைப் பகிர்ந்து கொள்வதற்காகவே பிரிட்டிஷ், டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனிகள் ஏற்பட்டன. ஆனால், போர்த்துகீசியர் அவ் வியாபாரம் தங்களுக்கே உரியது என்று நினைத்தார்கள். அதில் பிறர் தலையிடுவதை அவர்கள் விரும்பவில்லை. பிலிப்பைன் தீவிலிருந்த ஸ்பானியரைப் பற்றி அவர்கள் கவலை கொள்ளவில்லை. ஸ்பானியர் வியாபாரத்தை விட மதத்தில் அதிக அக்கறைகொண்டிருந்தார்கள். புதிய பிரிட்டிஷ், டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனிகளைச் சேர்ந்தவர்களிடம் மதப்பற்று மருந்துக்கும் இல்லை. உடனே போர்த்துகீசியருக்கும் அவர்களுக்கும் மாறுபாடு உண்டாயிற்று.

ஒன்றேகால் நூற்றாண்டுக்கு மேலாகவே போர்த்துகீசியர் கீழ்நாடுகளை ஆண்டு வந்தார்கள். அவர்களால் ஆளப்பட்டோர் அவர்களிடம் அதிருப்திகொண்டிருந்தார்கள். அந்த அதிருப்தியைப் பிரிட்டிஷ், டச்சு வியாபாரக் கம்பெனிகள் பயன்படுத்திக் கொண்டன. போர்த்துகீசியரை ஒழிப்பதற்கு அவர்கள் கீழ்நாடுகளிலுள்ள மக்களுக்கு உதவிபுரிந்தார்கள். ஆனால், போர்த்துகீசியர் காலிசெய்த இடத்தில் அவர்கள் உடனே வந்து புகுந்து கொண்டார்கள். பிரிட்டிஷார் இந்தியாவையும் டச்சுக்காரர் கிழக்கிந்தியத் தீவுகளையும் ஆண்டு வந்தபடியால் அவர்கள் அதிக வரி விதித்தும் இன்னும் வேறு வழிகளிலும் (அவ்விடங்களிலிருந்து) பணத்தைக் கொள்ளைகொண்டு சென்றார்கள். அதன் பயனாக அவர்கள் ஐரோப்பாவுக்கு அதிகக் கஷ்டமின்றித் தங்கள் வெளிநாட்டு வியாபாரத்தை நடத்தி வந்தார்கள்.

கீழ்நாட்டுப் பொருள்களை விலை கொடுத்து வாங்குவதற்கு ஐரோப்பா முன்பு பட்ட கஷ்டம் இப்போது குறைந்துவிட்டது. அப்படியிருந்தும் இந்தியப் பொருள்கள் இங்கிலாந்தில் இறக்குமதியாவதைச் சட்டத்தின் மூலமாகவும் அப்பொருள்களுக்கு அதிக வரிவிதிப்பதன் மூலமாகவும் இங்கிலீஷ் அரசாங்கம் தடுக்க முயன்றது. தொழிற்புரட்சி ஏற்படும் வரையில் நிலைமை இவ்வாறு இருந்தது.

கிழக்கிந்தியத் தீவுகளில் இங்கிலீஷ்காரரும் டச்சுக்காரரும் அதிகநாள் போட்டிபோட்டுக்கொண்டு இருக்கவில்லை. இங்கிலீஷ்காரர் அப்போட்டியிலிருந்து விலகிக்கொண்டார்கள். இந்தியாவில் செய்யவேண்டிய வேலையே அவர்களுக்குத் தலைக்குமேல் இருந்தது. ஆகவே, கிழக்கிந்தியத் தீவுகள் எல்லாம் டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆதிக்கத்துக்கு வந்துவிட்டன. பிலிப்பைன் தீவுமட்டும் ஸ்பானியரின் கீழ் இருந்தது. ஆனால், ஸ்பானியரோ வியாபாரத்தில் நாட்டம் கொள்ளவில்லை. மேலும் பிரதேசங்களை ஜெயிக்கவும் அவர்கள் முயற்சிக்கவில்லை. ஆகவே, கீழ்க்கடற் பிரதேசத்தில் டச்சுக்காரருக்குப் போட்டியாக இப்போது ஒருவரும் இல்லை.

டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியும் இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியைப்போலவே பணத்தைக் குவிப்பதற்கு ஆரம்பித்தது. அது 150 ஆண்டுகள் கிழக்கிந்தியத் தீவுகளை ஆண்டது. ஜனங்களின் யோகக்ஷேமத்தைப்பற்றி அவர்கள் சற்றேனும் கவலை கொள்ளவில்லை. அவர்கள் ஜனங்களை வருத்தி மிகுதியான இறையைக் கறந்து வந்தார்கள். இறை வாங்கிப் பணம் சேர்க்க வழியிருக்கும்போது வியாபாரத்தை அவர்கள் ஏன் பிரதானமாகக் கருதப்போகிறார்கள்? ஆகவே, அவர்களுடைய வியாபாரம் க்ஷீணித்தது. கம்பெனி முற்றும் திறமையற்றதாயிருந்தது. இந்தியாவுக்கு

வந்த பிரிட்டிஷ் கம்பெனி உத்தியோகஸ்தர்களைப் போலவே அங்குச் சென்ற டச்சுக் கம்பெனி உத்தியோகஸ்தர்களும் பழிபாவத்துக்கஞ்சாத சாகசக்காரரா யிருந்தார்கள். அறவழியோ பிறவழியோ பொருளீட்டுவது ஒன்றுதான் அவர்களுக்குக் குறியாயிருந்தது. இந்தியா பெரியதேசம். இங்குச் சாதனங்களும் அதிகம். ஆகவே, இங்கு நெறிமுறை கோடிய ஆட்சியை மூடி வைப்பதற்கு வசதி இருந்தது. மேலும், இந்தியாவில் பல கவர்னர்கள் திறமையாக நிருவாகம் நடத்தினர்கள். அந்த நிருவாகம் அடியில் ஜனங்களை வாட்டினாலும் மேலே திறமையாக நடந்துவந்தது. ஆனால், 1857-ல் இந்தியாவில் விளைந்த பெரும் புரட்சி கம்பெனி ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி நிருவாகம் மேலும் மேலும் மோசமாகிக்கொண்டே சென்றது. கடைசியாக, 1798-ம் ஆண்டில் நெதர்லாந்து (ஹாலந்து) அரசாங்கம் கீழ்த் தீவுகளின் நிருவாகத்தைத் தானே நேரில் ஏற்றுக் கொண்டது. அதையடுத்து, உடனே ஐரோப்பாவில் நெப்போலிய யுத்தங்கள் மூண்டன. நெதர்லாந்து நெப்போலியனுடைய சாம்ராஜ்யத்தில் ஒருபகுதி ஆகி விட்டது. ஆகவே, பிரிட்டிஷ் அரசாங்கம் கிழக்கிந்தியத் தீவுகளைக் கைப்பற்றிக் கொண்டது. ஐந்து வருஷங்கள் வரையில் அத்தீவுகள் பிரிட்டிஷ் இந்தியாவின் ஒரு மாகாணமாகக் கருதப்பட்டு அவ்வாறே ஆளப்பட்டும் வந்தன. அந்தக் காலத்தில் பல சீர்திருத்தங்கள் செய்யப் பட்டன. நெப்போலியனின் வீழ்ச்சிக்குப் பிறகு அத் தீவுகள் ஹாலந்துக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்டன. ஜாவா பிரிட்டிஷ் இந்திய அரசாங்கத்தின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த அந்த ஐந்து வருஷ காலத்தில் தாமஸ் ஸ்டாம்போர்டு ராபின்ஸ் என்னும் திறமை

மிக்க ஆங்கிலேயன் அதற்கு லெப்டினண்ட்—கவர்னரா யிருந்தான். டச்சுக்காரரின் காலனி பரிபாலனத்தைப் பற்றி அவன் கூறுகிறன்: "வஞ்சகமும் லஞ்சமும் இழி பாடும் கொலையும் அங்குத் தாண்டவமாடுகின்றன." டச்சு உத்தியோகஸ்தர்களின் தீயபழக்கங்களுள் நர சோரமும் ஒன்றாகும். அவர்கள் செலிபிஸ் தீவில் உள்ளவர்களைத் திருட்டுத்தனமாகக் கொண்டுபோய் ஜாவாவில் அடிமைகளாக உபயோகித்து வந்தார்கள். இந்த நரசோரத்தில் ஊரழிவும் உயிரழிவும் உடன் நிகழ்ந்தன.

நெதர்லாந்து அரசாங்கத்தின் நேராட்சி கம்பெனி ஆட்சியைவிட அதிகமாக ஒன்றும் வாழவில்லை. சில அம்சங்களில் அது கம்பெனி ஆட்சியைவிட ஜனங்களை அதிகமாக வருத்தியது. வங்காளத்தில் விவசாயிகளின் உயிரை எடுத்துவந்த அவுரித்தோட்ட முறையைப் பற்றி நான் கூறியது உனக்கு நினைவிருக்கலாம். அதை ஒத்த, ஆனால், அதைவிட இன்னும் சீர்கேடான ஒரு முறை ஜாவாவிலும் மற்ற இடங்களிலும் புகுத்தப்பட்டது. கம்பெனி ஆண்ட காலத்தில் ஜனங்கள் தேவையான பண்டங்களை மட்டும் கொடுக்க வேண்டியிருந்தது. இப்பொழுதோ விவசாயிகள் ஒரு வருஷத்தில் இவ்வளவு காலம் கட்டாயமாக வேலை செய்ய வேண்டுமென்று விதிக்கப்பட்டது. அதாவது, விவசாயி வேலை செய்யும் காலத்தில் மூன்றில் ஒருபங்கோ நாலில் ஒருபங்கோ அவன் கட்டாய வேலை செய்வதாகக் கருதப்பட்டது. ஆனால், வாஸ்தவத்தில் அவன் முழு நேரமும் பாழுக் குழைக்க வேண்டியதாயிற்று. இதற்கு 'அமிஞ்சி வேலைத் திட்டம்' ('Culture System') என்று பெயர். டச்சு அரசாங்கம் கண்டிராக்டர்கள் மூலம் இந்தக் காரியத்தைச் செய்து வந்தது. அவர்களுக்கு அது வட்டியின்றி

முன்பணம் கொடுத்து உதவியது. பிறகு, அந்தக் கண்டிராக்டர்கள் விவசாயிகளிடமிருந்து கட்டாய வேலை வாங்கி நிலத்தைப் பயிரிட்டார்கள். நிலத்தின் கண்டுமுதலை அரசாங்கமும் கண்டிராக்டரும் விவசாயியும் ஒரு குறிப்பிட்ட வீதாசாரப்படி பங்கிட்டுக் கொள்வதாகக் கருதப்பட்டது. ஆனால், அதில் ஏழை விவசாயியின் பங்குதான் மிகவும் குறைவாயிருந்திருக்கும்; எனக்கு அது திட்டமாகத் தெரியாது. ஐரோப்பாவுக்கு அவசியமான தேயிலை, காப்பி, கரும்பு, அவுரி முதலிய சில பயிர்கள் கட்டாயமாக நிலத்தின் ஒருபகுதியில் பயிரிடப்படவேண்டுமென்று அரசாங்கம் விதித்தது. வங்காளத்திலுள்ள அவுரித் தோட்டங்களைப் போலவே இங்கும் அவற்றால் வரும் பயன் குறைவாயிருப்பினும் விவசாயி அவசியமாக அவற்றைப் பயிரிடவேண்டி யிருந்தது.

டச்சு அரசாங்கத்துக்கு ஏராளமான லாபம் கிடைத்தது. கண்டிராக்டர்கள் பாடு கொண்டாட்டந்தான். ஆனால், ஏழை விவசாயிகளின்பாடு திண்டாட்டமாயிருந்தது. அவர்கள் பட்டினியிலும் துன்பத்திலும் பட்டு உழன்றார்கள். 19-வது நூற்றாண்டின் நடுவில் ஒரு கொடிய பஞ்சம் உண்டாயிற்று. அதில் ஏராளமான பேர் மாண்டனர். அதற்குப் பின்னர்தான் அப்பாவி விவசாயிகளுக்கு ஏதாவது செய்ய வேண்டுமென்று அரசாங்கத்துக்குத் தோன்றியது. சிறிது சிறிதாக அவர்களுடைய நிலை சீர்திருந்தியது. ஆனால், 1916-ம் ஆண்டில் கூடக் கட்டாய வேலை வாங்குவது நிற்கவில்லை.

19-வது நூற்றாண்டின் பிற்பாதியில் கல்வித் துறையிலும் பிற துறைகளிலும் பல சீர்திருத்தங்கள் செய்யப் பட்டன. புதிய மத்திய வகுப்பு ஒன்று தோன்றி வளர்ந்தது. தேசிய இயக்கம் ஒன்று தோன்றி சுதந்திரம் கோரியது. இந்தியாவைப்போல் அரைகுறை

யான ஒரு சிறு முன்னேற்றம் வழங்கப்பட்டது. உண்மை அதிகாரமில்லாத சட்டசபைகள் ஏற்படுத்தப்பட்டன. ஐந்தாண்டுகளுக்கு முன்பு டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளில் ஒரு புரட்சி தோன்றியது. அதை அரசாங்கம் குரூரமான முறையில் அடக்கியது. ஆனால், எவ்வளவுதான் குரூரமான அடக்கு முறையைக் கையாண்டாலும் ஜாவாவிலும் மற்றத் தீவுகளிலும் தோன்றியுள்ள சுதந்திர ஆர்வத்தைக் கொன்று விடுவதென்பது முடியாத காரியம்.

டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள் இப்போது நெதர்லாந்து இந்தியா என அழைக்கப்படுகின்றன. பட்சத்துக்கொருமுறை ஹாலந்திலிருந்து ஒரு ஆகாய விமானம் புறப்பட்டு ஐரோப்பாவையும் ஆசியாவையும் கடந்து ஜாவாவிலுள்ள படேவியா நகருக்குப் போய் வருகிறது.

கிழக்கிந்தியத் தீவுகளின் கதையைச் சுருக்கமாக முடித்து விட்டேன். இப்போது ஆசியாவின் பிரதான பூமிக்குச் (தீவல்லாத) செல்ல வேண்டும். பர்மாவைப் பற்றிச் சொல்ல வேண்டியது அதிகம் ஒன்றுமில்லை. அது பெரும்பாலும் வடபர்மா தென்பர்மா என்று பிளவுபட்டிருந்தது. இரண்டுக்கும் ஓயாத போராட்டம் தான். எப்போதாவது வல்லமை வாய்ந்த ஒரு அரசன் தோன்றி இரண்டையும் ஒன்று சேர்ப்பதும் உண்டு. அத்தகையவன் அயல் நாடாகிய சையாமை ஜெயிக்க முயல்வதும் உண்டு. இவ்வாறிருந்த போது, 19-வது நூற்றாண்டில், பிரிட்டிஷாருடன் தகராறு ஏற்பட்டது. தன்னுடைய பலத்தில் அளவுக்கு மீறிய நம்பிக்கை வைத்திருந்த பர்மிய அரசன் படையெடுத்துச் சென்று அஸ்ஸாமைத் தன்னாட்டுடன் சேர்த்துக் கொண்டான். 1824-ல் இந்தியாவிலுள்ள பிரிட்டிஷாருடன் விளைந்த

முதல் பர்மிய யுத்தத்தின் பயனாக அஸ்ஸாம் பிரிட்டிஷாருக்குக் கிடைத்தது. பர்மிய அரசாங்கம், பர்மியச் சேனை இவற்றின் பலவீனத்தைப் பிரிட்டிஷார் இப்பொழுது கண்டு கொண்டார்கள். ஆகவே, பர்மா முழுதையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என்கிற ஆசை அவர்களுடைய உள்ளத்தில் உதித்தது. ஏதோ அர்த்தமற்ற சாக்குப் போக்குகளைச் சொல்லிக் கொண்டு அவர்கள் இரண்டாவது பர்மா யுத்தத்தையும் மூன்றாவது பர்மா யுத்தத்தையும் நடத்தினார்கள். 1885-ம் ஆண்டுக்குள் பர்மா முழுதும் பிரிட்டிஷ் இந்திய சாம்ராஜ்யத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டு அதில் ஒரு பகுதியாகிவிட்டது. அதிலிருந்து பர்மாவின் தலைவிதி இந்தியாவின் தலைவிதியுடன் பிணைக்கப்பட்டு விட்டது.

பர்மாவுக்குத் தெற்கே உள்ள மலாய் தீபகற்பத்திலும் பிரிட்டிஷார் பரவினார்கள். 19-வது நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே அவர்கள் சிங்கப்பூர் தீவைக் கைப்பற்றிக் கொண்டார்கள். சிங்கப்பூர் நல்ல வாய்ப்பான இடத்தில் அமைந்திருந்த படியால் அது விரைவிலேயே ஒரு பெரிய வியாபாரஸ்தலம் ஆகிவிட்டது. கீழ்க்கோடிக்குச் செல்லும் கப்பல்கள் அதன் துறைமுகத்தில் வந்து தங்கிப் போகலாயின. அதற்கு வடக்கே மலாய் தீபகற்பத்தைச் சேர்ந்த பழைய துறைமுகமான மலாக்கா [illegible] விட்டது. சிங்கப்பூரிலிருந்து பிரிட்டிஷார் வடக்கே பரவினார்கள். மலாய் தீபகற்பத்தில் பல சிறு நாடுகள் இருந்தன. அவற்றில் பெரும்பாலானவை சையாமுக்குக் கீழ்ப்பட்டவை. அந்த நூற்றாண்டு முடிவதற்குள் அவையனைத்தும் பிரிட்டிஷ் பாதுகாப்பு நாடுகள் ஆகிவிட்டன. அவையெல்லாம் ஒரு கூட்டரசாக ஒன்று சேர்க்கப்பட்டு 'மலாய் நாடுகள் கூட்டரசு' என்று அழைக்கப்பட்டன. அந்நாடுகளில் சையாமுக்கு

இருந்த உரிமைகள் அனைத்தையும் சையாம் இங்கிலாந்துக்கு விட்டுக் கொடுக்க வேண்டியதாயிற்று.

இவ்வாறு ஐரோப்பிய வல்லரசுகள் சையாமைச் சூழ்ந்து கொண்டன. அதற்கு மேற்கிலும் தெற்கிலும் உள்ள பர்மாவிலும் மலேயாவிலும் பிரிட்டிஷ் ஆட்சி கொடிகட்டிப் பறந்தது. கிழக்கே பிரான்சு அன்னாம் நாட்டை விழுங்கி ஏப்பம் விட்டுக்கொண்டிருந்தது. அன்னாம் சீனாவுக்குக் கீழ்ப்பட்ட நாடாயினும், தொந்திரவுகளில் மூழ்கியிருந்த சீனாவால் அதற்கு உதவி செய்யக் கூடவில்லை. பிரான்சு அன்னாம் மீது படையெடுத்துச் சென்றது காரணமாக அதற்கும் சீனாவுக்கும் சண்டை மூண்ட விஷயம் சீனாவைப் பற்றிய கடிதம் ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறேன். பிரான்சு சிறிதுகாலம் வரையில் ஓரளவு தடுக்கப்பட்டது உண்மையே. ஆனால், 19-வது நூற்றாண்டின் பிற்பாதியில் அன்னாமையும் கம்போடியாவையும் கொண்ட பிரெஞ்சு இந்தோ-சீனா என்கிற ஒரு பெரிய காலனியைப் பிரான்சு ஸ்தாபித்து விட்டது. கம்போடியாவில்தான் பழைய காலத்தில் அங்கோர் அணிநகர சாம்ராஜ்யம் புகழ்பெற்று விளங்கியது. அந்தக் கம்போடியா நாம் பேசுகிற காலத்தில் சையாமுக்குக் கீழ்ப்பட்ட ஒரு நாடாயிருந்தது. அதைக் கொடாவிட்டால் போர் தொடுப்பதாகப் பயமுறுத்திச் சையாமிடத்திலிருந்து பிரான்சு அதைப் பிடுங்கிக் கொண்டது. அப்பிரதேசங்களில் பிரெஞ்சுக்காரரின் ஆதி சூழ்ச்சிகள் பிரெஞ்சுப் பாதிரிகள் மூலமாகவே நடந்தன என்பதை நாம் இங்கே கவனிக்க வேண்டும். அந்தப் பாதிரிகளில் ஒருவருக்கு ஏதோ காரணத்துக்காக மரண தண்டனை விதிக்கப்பட்டது. அவருடைய மரணத்துக்கு ஈடுசெய்வதற்காகவே 1857-ல் முதன்முதலாகப் பிரெஞ்சுக்காரர் தங்களுடைய சைனி

யத்தை அனுப்பினார்கள். அந்தச் சைனியம் தெற்குத் துறைமுகமாகிய சைகோனைக் கைப்பற்றியது. பின்னர், சைகோனிலிருந்து பிரெஞ்சு ஆதிக்கம் வடக்கே பரவியது.

ஆசிய நாடுகளில் ஐரோப்பா சாம்ராஜ்யம் கண்டதைப் பற்றிய இவ் வரலாறுகளில் நான் சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். எல்லா இடங்களிலும் ஏறக்குறைய ஒரே விதமான முறைகள் கையாளப்பட்டன. எல்லா இடங்களிலும் அவை வெற்றியும் பெற்றன. எல்லா நாடுகளின் கதையும் முடிந்துவிட்டது. ஒவ்வொரு நாடும் ஏதாவது ஒரு ஐரோப்பிய வல்லரசின் பிடியில் அகப்பட்டுக் கொண்டது. தென் கிழக்கு ஆசியாவில் சையாம் மட்டும் அத்தீக்கதிக்கு ஆளாகாமல் தப்பிப் பிழைத்தது.

பர்மாவில் பிரிட்டிஷாரும் இந்தோ-சீனாவில் பிரெஞ்சுக்காரருமாக இருந்து இருபுறமும் சையாமை நெருக்கியும் அது தப்பித்துக் கொண்டது அதிருஷ்ட வசம்தான். ஒருவேளை அவர்கள் இருவருக்கும் இடையேயுள்ள போட்டியே அது தப்பித்துக் கொண்டதற்குக் காரணமாக இருக்கலாம். அதன் அரசாங்கம் நன்முறையில் நடைபெற்று வந்ததும் அதற்கு ஒரு காரணம். பிற நாடுகளில் இருந்தது போன்ற உள்நாட்டுத் தகராறுகள் சையாமில் இல்லை. ஆனால், ஒரு நாட்டின் அரசாங்கம் நல்ல முறையில் நடைபெறுகிறது என்பதற்காக வெளிநாட்டார் அதன்மீது படையெடுக்க மாட்டார்கள் என்று சொல்வதற்கில்லை. விஷயம் என்னவென்றால், இங்கிலாந்துக்கு இந்தியாவிலும் பர்மாவிலும் பிரான்சுக்கு இந்தோ-சீனாவிலும் வேலை சரியாயிருந்தது. அவை இரண்டும் 19-வது நூற்றாண்டின் கடைசியில் சையாம் எல்லையை அடைந்தபோது ஒரு நாட்டைப் பச்சையாக இணைத்துக்கொள்ளும் காலம்

மலையேறிவிட்டது. கீழ்நாடுகள் எங்கும் மேல்நாடுகளுக்கு விரோதமான எதிர்ப்பு உணர்ச்சி தோன்றி வலுத்து வந்தது. காலனிகளிலும் சார்புநாடுகளிலும் தேசிய இயக்கங்கள் தோன்றின. கம்போடியா விஷயமாகப் பிரான்சுக்கும் சையாமுக்கும் போர் மூளும் போலிருந்தது. ஆனால், சையாம் விட்டுக்கொடுக்கவே அது தவிர்க்கப்பட்டது. மேற்கேயுள்ள பெரிய மலைசையாமைப் பர்மாவிலுள்ள பிரிட்டிஷாரிடமிருந்து காத்து நின்றது.

கடந்த காலத்தில் இருமுறை பர்மிய மன்னர்கள் சையாம் மீது படையெடுத்துச் சென்று அதைத் தங்கள் ராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டும் விட்டார்கள் என்று முன்பே கூறியுள்ளேன். கடைசிப் படையெடுப்பு 1767-ல் நிகழ்ந்தது. அப்போது பர்மியர் சையாமின் தலைநகராகிய அயுதியாவை (இத்தகைய இந்தியப் பெயர்கள் அடிக்கடி வருதைக் கவனி) அழித்துவிட்டார்கள். ஆனால், விரைவிலேயே ஒரு பொதுஜன எழுச்சி தோன்றிப் பர்மியரை நாட்டைவிட்டு ஓட்டிவிட்டது. 1782-ல் ஒரு புதிய அரச வமிசம் சையாமை ஆளத் தொடங்கியது. அதன் முதல் அரசர் முதலாவது ராமன் என்று அழைக்கப்பட்டார். இன்றுகூட, அதாவது 150 ஆண்டுகளுக்குப் பின்பும் அதே வமிசம் சையாமை ஆண்டுவருகிறது. அவ்வமிச அரசர்கள் அனைவருடைய பெயரும் 'ராமன்' என்று முடிவதாகத் தெரிகிறது. அப்புதிய வமிசம் சையாமைச் சீருற ஆண்டது. அரசன் குடிமக்களைத் தன் மக்களைபோல் கருதி ஆண்டுவந்தான். ஆனால், அரசாங்கத்தில் அவர்களுக்கு அதிகச் சுதந்திரமில்லை. அவ்வரசாங்கம் புத்திசாலித்தனமாக அந்நிய வல்லரசுகளுடன் நட்பை வளர்த்துக்கொள்ள முயன்றது. சையாம் அந்நிய வியாபாரத்துக்குத் தன் துறைமுகங்களைத் திறந்துவிட்டது. சில அந்நிய வல்லரசுகளுடன் அது வியாபார

உடன்படிக்கைகளும் செய்துகொண்டது. ஆட்சிமுறையில் சில சீர்திருத்தங்களும் செய்யப்பட்டன. பாங்காக் புதிய தலைநகராக விளங்கியது. மேற்கூறியவை அனைத்தும் சாம்ராஜ்ய வேட்கைகொண்ட ஓநாய்களைத் தடுத்து நிறுத்தும் வல்லமை வாய்ந்தனவாக இல்லை. இங்கிலாந்து மலேயாவில் பரவி அங்குச் சையாமுக்குச் சொந்தமாயுள்ள பிரதேசத்தை வாயில் போட்டுக் கொண்டது. கிழக்கே, பிரான்சு கம்போடியாவையும் வேறு இடங்களையும் விழுங்கிவிட்டது. 1896-ல் சையாமை முன்னிட்டுப் பிரான்சும் இங்கிலாந்தும் கைகலக்கிற நிலைக்கு வந்துவிட்டன. பிறகு அவை, அந்தப் பேர்போன சாம்ராஜ்ய பந்தாவில், எஞ்சியுள்ள சையாமின் எல்லைத் தூய்மையை அழிப்பதில்லை என்று ஒப்பந்தம் செய்துகொண்டன. ஆனால், அதே சமயத்தில் அவை சையாமை மூன்று "செல்வாக்குப் பிரதேசங்கள்" ஆகப் பிரித்துக்கொண்டன. சையாமின் கீழ்ப்பிரதேசம் பிரெஞ்சுக்காரருக்கும் மேற்பிரதேசம் பிரிட்டிஷாருக்கும் உரியவை என்றும் நடுவிலுள்ள நொதுமல் பிரதேசத்தில் இருதிறத்தாரும் இயன்றவரையில் பார்த்துக்கொள்வதென்றும் முடிவு செய்யப்பட்டது. இவ்வாறு சையாமின் எல்லைத் தூய்மையைக் காப்பதாகப் பஞ்சபூத சாட்சியாக ஒப்பந்தம் செய்துகொண்ட சில வருஷங்களுக்குள் பிரான்சு கிழக்கே இன்னும் கொஞ்சம் பிரதேசத்தைப் பலகாரம் செய்துவிட்டது. அதை ஈடு செய்வதற்கு இங்கிலாந்து தானும் ஓரளவு பிரதேசத்தை உட்கொள்ள வேண்டியது நியாயம் தானே!

இத்தனை ஈதி பாதைகளுக் கிடையிலும் எப்படியோ சையாமின் ஒரு பகுதி ஐரோப்பிய ஆதிக்கத்தின் கீழ் அகப்பட்டுக் கொள்ளாமல் தப்பித்துக் கொண்டது. ஆசியாவின் தென்கீழ்ப் பகுதியில் அவ்வாறு தப்பித்துக் கொண்ட நாடு சையாம் ஒன்றுதான். இப்போது

ஐரோப்பிய ஆக்கிரமண அலை தடுத்து நிறுத்தப்பட்டு விட்டது. இனிமேல் ஐரோப்பா ஆசியாவில் நாடு கவர்வதற்கு இடமில்லை. ஆசியாவிலுள்ள ஐரோப்பிய வல்லரசுகள் தங்கள் மூட்டைமுடிச்சுகளைக் கட்டிக் கொண்டு வீட்டுக்குப் போகவேண்டிய காலம் விரைவில் வந்துகொண் டிருக்கிறது.

சமீபகாலம் வரையில் சையாம் ஒரு யதேச்சாதிகார முடியரசு நாடாக இருந்தது. ஆட்சிமுறையில் சில சீர்திருத்தங்கள் செய்யப்பட்டாலும் நிலமானிய அமிசங்கள் அதில் அதிகமாகவே இருந்தன. சில மாதங்களுக்கு முன்புதான் அங்கொரு புரட்சி தோன்றியது. ஆனால், அது ஒரு அமைதியான புரட்சி. உயர் மத்திய வகுப்பினர் முன்னுக்கு வந்தனர். அப்புரட்சியின் பயனாக ஒரு விதமான பார்லிமெண்டு அங்கே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இப்போதுள்ள அரசர்—முதலாவது ராமனின் வமிசத்தில் வந்தவர்—அம்மாறுதலுக்கு இணங்கியது அறிவுடைமையாகும். அதனால், அவருடைய வம்சம் இன்னும் சிம்மாசனத்தில் இருக்கிறது. இப்போது சையாம் ஒரு சட்ட ரீதியான முடியரசு நாடாகும்.

தென்கீழ் ஆசியாவில் பிலிப்பைன் தீவு ஒண்டிதான் நாம் பார்க்காத நாடாகும். அதைப்பற்றியும் இக் கடிதத்திலேயே எழுதிவிடலாம் என்றுதான் எண்ணியிருந்தேன். ஆனால், பொழுது போய்விட்டது. எனக்கும் உடம்பு அலுப்பாயிருக்கிறது. கடிதமும் நீண்டு விட்டது. இந்த வருஷம், அதாவது, 1932-ம் வருஷம் நான் உனக்கு எழுதுகிற கடைசிக் கடிதம் இதுதான். பழைய வருஷத்தின் ஆட்டமும் பாட்டமும் அடங்கி விட்டது. இன்னும் மூன்று மணிநேரத்துக்குள் அதன் உச்சுவாச நிச்சுவாசமும் ஓய்ந்து விடும். பிற்பாடு எல்லாம் பழைய கதையாகிவிடும்.

120

மற்றுமொரு புது வருஷப் பிறப்பு

புதுவருஷப் பிறப்பு தினம், 1933.

இன்றைக்குப் புது வருஷம் பிறக்கிறது. நாம் வசிக்கும் இப்பூமி சூரியனை இன்னுமொரு சுற்றுச் சுற்றி விட்டது. பூமிக்கு விசேஷ நாட்களோ விடுமுறை நாட்களோ கிடையா. அகண்ட வெளியில் ஒரே வேகமாக அது ஓடிக்கொண்டிருக்கிறது. அதன் மீது ஊரும் எண்ணற்ற சிற்றுயிர்களாகிய நமக்கு என்ன ஆகிறது என்று அது கவலை கொள்வதில்லை. ஆனால், நாமோ—ஆண்களும் பெண்களும்—ஈசுவர சிருஷ்டியிலேயே நம்மைவிட மேலானவர்கள் கிடையாதென்றும், நாமே இவ்வுலகத்தின் ஆணியென்றும் முட்டாள்தனமாக எண்ணிக் கொண்டு ஒருவரையொருவர் வெட்டி மடிகிறோம். பூமித்தாய் தன் குழந்தைகளாகிய நம்மைப் புறக்கணிக்கிறாள். ஆனால், நம்மை நாம் புறக்கணிப்பதற்கில்லை. புது வருஷம் பிறந்த தினமாகிய இன்று பலர் தங்களுடைய வாழ்க்கை யாத்திரையில் சற்றே ஓய்வெடுத்துக் கொண்டு சென்ற காலத்தையும் வருங்காலத்தையும் பற்றி ஆற அமரச் சிந்தித்துத் தீரத் தெளிய முயல்வது இயல்பு. ஆகவே, நானும் இன்று சென்றகாலச் சிந்தனையில் மனத்தை ஓடவிட்டிருக்கிறேன். சிறையில் இது எனக்கு மூன்றாவது தொடர்ச்சியான வருஷப் பிறப்பு. இடையில் நான் பல மாதங்கள் வெளி உலகில் சஞ்சரித்திருக்கிறேன் என்பது உண்மையே. இன்னும் பின் தள்ளிப் பார்த்தால் கடந்த பதினொரு வருஷங்களில் ஐந்து வருஷப் பிறப்புக்கு நான் சிறையில் இருந்திருக்கிறேன். இன்னும் எத்தனை காலம் சிறையிலிருந்து

இன்னும் எத்தனை வருஷப் பிறப்புகளை நான் சிறையில் கழிக்கவேண்டியிருக்குமோ!

ஆனால், ஜெயில் பாஷையில் நான் இப்போது ஒரு 'கறுப்புக் குல்லாய்.' அதுவும் சரியான 'கறுப்புக் குல்லாய்.' எனக்குச் சிறை வாழ்க்கை பழக்கமாகி விட்டது. என்னுடைய சிறை வாழ்க்கை என்னுடைய வெளி வாழ்க்கைக்கு முற்றிலும் மாறானது. வெளியில் என்னுடைய வாழ்க்கை ஒரே வேலை மயம், சுறுசுறுப்பு மயம். வெளியில், சுற்றுப் பிரயாணமும் பொதுக் கூட்டங்களும் மேடைப் பிரசங்கங்களுமாக என் பொழுது போய்க் கொண்டிருக்கும். இங்கோ, எல்லாம் மாறாயிருக்கிறது. 'ஓம் சாந்தி : சாந்தி : சாந்தி :' தான். சிறையில் இடப் பெயர்ச்சிக்கு இடமேது? இங்கு நான் நீண்ட நேரம் இந்தண்டை அந்தண்டை அசையாமல் ஒரே இடத்தில் உட்கார்ந்துகொண்டிருக்கிறேன். வெகுநேரம் பேசாமல் மௌனமாகவும் இருக்கிறேன். நாட்களும் வாரங்களும் மாதங்களும் ஓடிக்கொண்டே இருக்கின்றன. அவை ஒன்றில் மற்றொன்று கலந்து விடுகின்றன. அவற்றைப் பிரித்தறியக் கூடியது எதுவும் இங்கு நிகழ்வதில்லை. சிறையில் சென்ற காலம் புகையுண்ட ஓவியம் போலக் காட்சி அளிக்கிறது. அதில் விளங்கித் தோன்றுவது ஒன்றுமில்லை. சிறையில் நேற்றைய தினம் என்பது கைதியான தினம்தான். இடையில் மனத்தைக் கவரக் கூடியது ஏதாவது இருந்தால்தானே? எல்லாம் ஒரே சூனியம், சிறை வாழ்க்கை மரவாழ்க்கை. மரம் ஒரே இடத்தில் வேரூன்றி விடுகிறது. அது இடம் விட்டு இடம் பெயர்வதில்லை; பேசுவதுமில்லை. அதைப்பற்றி நினைப்பாருமில்லை, பேசுவாருமில்லை. அதைப் போலத்தான் சிறையிலிருப்பவனும். சிறையிலிருப்பவர்களுக்கு வெளியுலக நிகழ்ச்சிகள் வேடிக்கையாகவும் சிறிது

திகைப்பை உண்டுபண்ணுவனவாகவும் இருக்கின்றன. அவை தூரத்தே நிகழும் வெறும் மாயத் தோற்றமாக அவர்கள் கண்களுக்குத் தென்படுகின்றன. ஆகவே, ராபர்ட் லூயி ஸ்டீவென்சன் எழுதியுள்ள கதையில் வரும் டாக்டர் ஜெகில் மிஸ்டர் ஹைட் என்னும் பாத்திரங்களைப் போல், நாங்களும் ஒன்று அசைவும் ஒன்று அமைதியுமாகவுள்ள இரு இயற்கைத் தத்துவங்களாகவும், இரு வாழ்க்கை முறைகளாகவும், இரு தோற்ற இயல்புகளாகவும் மலர்ச்சி அடைகிறோம்.

நாள் செல்லச் செல்ல எல்லாம் பழக்கமாகி விடுகிறது. சிறை வாழ்க்கையும் அப்படித்தான். சிறையின் மாறுபாடில்லாத காரியக் கிரமமும் நாளாவட்டத்தில் 'மாமூல்' ஆகிவிடுகிறது. ஓய்வு உடம்புக்கு நல்லது. அமைதி மனதுக்கு நல்லது. மன அமைதியினின்றே நற்சிந்தனைகள் பிறக்கின்றன. 'ஓய்வு நல்லதுதான். ஆனால், அளவுக்கு மீறினால் அதுவும் பொறுக்க முடியாததாகி விடும்' என்னும் பொருளுள்ள ஒரு பிரெஞ்சு வசனம் உண்டு. சிறையில் உனக்குக் கடிதங்கள் எழுதும் இவ்வேலை எனக்கு எவ்வளவு ஆறுதலாயிருந்து வந்திருக்கிறது என்பது இப்போது உனக்கு விளங்கியிருக்கும் என்று நம்புகிறேன். இக் கடிதங்கள் உனக்குப் பிடிக்காமலிருக்கலாம்; அலுப்பும் சலிப்பும் உண்டாக்கலாம். ஆனால், இவை என்னுடைய சிறை வாழ்க்கையின் சூனியத்தைப் போக்கி எனக்கு அளவற்ற ஆனந்தத்தைக் கொடுத்துள்ளன. சரியாக இரண்டு வருஷங்களுக்கு முன்னால், வருஷப் பிறப்பன்று, நைனி சிறையில் நான் இவற்றை எழுதத் தொடங்கினேன். அங்கிருந்து விடுதலையாகி வெளியிலிருந்த போது எழுத வில்லை. மீண்டும் சிறைக்கு வந்ததும் தொடர்ந்து எழுதலானேன். சில சமயம், வாரக் கணக்காக ஒன்றும் எழுத மாட்டேன். சில சமயம், தினந்தோறும் தவறாமல் எழுதுவேன். எழுதுகிற 'ஜோர்' பிறக்கும் போது, கையில் பேனாவையும் காகிதத்தையும் எடுத்துக்கொண்டு உட்கார்ந்து விட்டால், அது தன் பாட்டில் ஓடிக் கொண்டே இருக்கும். அப்போது நான் ஒரு தனி உலகில் சஞ்சரிப்பேன். அந்த உலகில் என் கண்ணாகிய நீதான் எனக்குத் துணை. அங்கே சிறைக்கட்டும் சிறைக் காவலும் கிடையா. ஆகவே, நான் சிறையிலிருந்து தப்பித்துக் கொண்ட சந்தர்ப்பங்களையே இக் கடிதங்கள் எனக்குக் குறிக்கின்றன.

இப்போது நான் எழுதுகிற கடிதத்தின் எண் 120. ஒன்பது மாதங்களுக்கு முன் பரில்லி சிறையில்தான் இக் கடிதங்களுக்கு எண் குறிக்க ஆரம்பித்தேன். இது வரையில் எழுதியிருப்பதே இவ்வளவு ஆய் விட்டதே என்று எனக்கே ஆச்சரியமாயிருக்கிறது. இக் கடிதங்கள் அனைத்தும் மலைபோல் உன் தலைமீது இறங்குகிறபோது நீ என்ன நினைப்பாய்? என்ன சொல்லுவாய்? ஆனால், இவ்வாறு நான் சிறையிலிருந்து தப்பித்துக் கொண்டு புறம் போந்து சஞ்சரிப்பது பற்றி நீ மனத்தாங்கல் அடையமாட்டாய் என்று நம்புகிறேன். என் செல்வமே! நான் உன்னைப் பார்த்து ஏழு மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டனவே! அந்த ஏழு மாதமும் ஏழு யுகம் போலல்லவோ எனக்குத் தோன்றுகிறது!

என்னுடைய கடிதங்களில் உள்ள கதை இன்பமானதல்ல. சரித்திரமே இன்பமானதல்ல. மனிதன், தான் என்னவோ அபார முன்னேற்றம் அடைந்து விட்டதாக வீம்பு பாராட்டிக் கொண்டாலும், இன்னும் சண்டைபோடும் சுயநல மிருகமாகத்தான் இருக்கிறான். ஆயினும், மனிதனுடைய சண்டைக் குணம், சுயநல சுபாவம், ஈவிரக்கமற்ற ராட்சசத் தன்மை என்கிற

நீண்ட இரவினிடையில் முன்னேற்றம் என்னும் ஒளி இடைவிடாது மின்னிக்கொண்டுதான் இருக்கிறது. நன்மை வாதத்தில் நான் ஓரளவு நம்பிக்கை உடையவன். அதாவது, எல்லாம் நன்மைக்கே என்னும் எண்ணம் கொண்டவன். ஆனால், நன்மை வாதம் நம்முடைய குற்றங் குறைகளுக்கு நம்மைக் குருடாக்கி விடக் கூடாது. அறிவற்ற நன்மை வாதம் நம்மை ஆபத்தில் தான் கொண்டு விடும். ஏனெனில், உலகத்தின் இறந்த காலத்தையும் நிகழ் காலத்தையும் உன்னிப் பார்க்கும் போது நன்மை வாதத்துக்கு அதிக இடம் இருப்பதாகத் தோன்றவில்லை. லட்சிய வாதிக்கும், குருட்டு நம்பிக்கை கொள்ளாதவனுக்கும், இவ்வுலகம் அவ்வளவு சுகமான இடமல்ல. பல்வகை வினாக்கள் எழுகின்றன; அவை ஒன்றிற்கும் நேரான விடை கிடைப்பதில்லை. பல்வகை ஐயங்கள் தோன்றுகின்றன; அவை எளிதில் மறைவதில்லை. உலகில் இவ்வளவு அறியாமையும் துன்பமும் மலிந்திருக்கக் காரணம் என்ன? இது மிகவும் பழைய கேள்வி. இக் கேள்வி 2500 ஆண்டுகளுக்கு முன் நம் நாட்டில் தோன்றிய இளவரசன் சித்தார்த்தனை வாட்டியது. அவன் ஞான ஒளி பெற்றுப் புத்தனாகு முன் இக் கேள்வியைப் பன்முறை திருப்பித் திருப்பிக் கேட்டுக் கொண்டான் என்று சொல்லப்படுகிறது. அவன் பின் வருமாறு கேட்டுக் கொண்டானாம்:

"பரப்பிரம்மம் உலகைப் படைத்து அதைத் துன்பத்தில் நிலை பெறுத்துகிறது என்பது எப்படிப் பொருந்தும்? அது எல்லாம் வல்லதாயிருந்து, உலகை இவ்வாறு விட்டு வைக்குமாயின் அதை நல்லதென்று சொல்ல முடியாது. அன்றி, அது எல்லாம் வல்லது அல்லதாயின் அதன் இறைமைக்கு இழுக்கு நேரிடுகிறது."

நமது சொந்த நாட்டில் சுதந்திரப்போர் நடந்து

வருகிறது. ஆயினும், நம்முடன் பிறந்த நமது நாட்டவர் பலர் அதைப்பற்றிச் சிந்திக்காமல் தங்களுக்குள் சொற் போரும் மற்போரும் நிகழ்த்துகிறார்கள். அவர்கள் தேசத்தின் பரந்த நன்மையை மறந்து ஜாதி என்றும் மதம் என்றும் வகுப்பு என்றும் குறுகிய நினைவு கொள்ளுகிறார்கள். சிலர் விடுதலை நினைப்பு அறவே நீங்கியவர்களாய்ப் பகைவன் காலில் விழுந்து பணிந்து எச்சில் நச்சும் நாய் வாழ்வு வாழ்ந்து வருகிறார்கள்.

சட்டத்தின் பெயராலும் ஒழுங்கின்' பெயராலும் கொடுங்கோன்மை கோல் ஓச்சுகிறது. அதற்குப்பணிய மறுக்கிறவர்களை அது மிதித்து நசுக்கிறது. ஏழை எளியவர்க்குப் புகலிடமாயிருக்க வேண்டிய சட்டமும் ஒழுங்கும் அவர்களை வருத்துவோர் கையில் ஆயுதமாக விளங்குவது விந்தையே. இக்கடிதத்தில் ஏற்கெனவே சில மேற்கோள்கள் எடுத்தாண்டிருக்கிறேன். 18-வது நூற்றாண்டில் வாழ்ந்த பிரெஞ்சுத் தத்துவ சாஸ்திரியாகிய மான்டெஸ்கியு எழுதிய ஒரு நூலிலிருந்து எனக்குப் பிடித்த இன்னும் ஒரு மேற்கோள் மட்டும் தர விரும்புகிறேன். அவரைப்பற்றிமுன்கடிதங்களுள்ஒன்றில் கூறியுள்ளேன். அவருடைய கூற்று நமது தற்கால நிலைக்கு மிகவும் பொருத்தமா யிருக்கிறது.

இக்கடிதம் ஒரே அழுகையும் புலம்பலும் ஆகி விட்டது. வருஷப்பிறப்பன்று எழுதும் ஒரு கடிதம் துக்கத்தில் தோய்ந்திருப்பது சிறிதும் தகாது. உண்மையில், நான் ஒன்றும் துக்கப்படவில்லை. நாம் ஏன் துக்கப் படவேண்டும்? ஒரு பெரிய லட்சியத்துக்காகப் போராடும் ஆனந்தம் நமக்கு இல்லையா? நாம் பெற்றுள்ள தலைவரைப் போன்ற ஒரு தலைவரை உலகில் வேறு யார் பெற்றிருக்கிறார்கள்? அவர் ஒப்புயர்வற்ற உத்தமர்; அன்புமிக்கதோழர்; நெறிபிறழா வழிகாட்டி; அவ

ருடைய பார்வை நமக்குப் பலமளிக்கிறது, அவருடைய பரிசம் நம்மைப் பரவசமாக்குகிறது. 'வெற்றி செயலுக்குண்டு' என்னும் உறுதியை நாம் பூண்டுள்ளோம். இப்பவோ பின்னையோ அதை நாம் அடையவே போகிறோம். கடப்பதற்குத் தடைகளும் வெல்வதற்குப் போர்களும் இல்லையெனில் வாழ்க்கை சப்பிட்டுப் போய் விடும். அதில் சுவையோ பொலிவோ இராது. என் அன்பே! நீயோ வாழ்க்கையின் வாயிலில் நின்று கொண்டிருக்கிறாய். துக்க நினைவென்பதே உனக்கு ஆகாது. புன்முறுவலும் அமைதியும் பூத்த முகத்துடன் நீ வாழ்க்கையை எதிர் கொள்ள வேண்டும். வாழ்க்கையின் கஷ்டங்களையும் நீ வரவேற்க வேண்டும். ஏனெனில், அவற்றை வென்றேறுவதில் ஆனந்தம் உண்டல்லவா?

சரி, குழந்தாய்! போய் வருகிறேன்.

121

பிலிப்பைன் தீவுகளும் ஐக்கிய அமெரிக்க நாடுகளும்

ஜனவரி 3, 1933.

வருஷப்பிறப்பன்று வேறு விஷயங்களைப் பற்றிப் பேசிவிட்டோம். இனி நம் கதையைத் தொடர்ந்து கவனிக்க வேண்டும். கீழ் ஆசியாவில் பிலிப்பைன் தீவுகள்தான் பாக்கியிருக்கின்றன. ஆகவே, அவற்றைப் பார்ப்போம். ஆசியாவிலும் பிற இடங்களிலும் வேறு பல தீவுகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் பற்றி நான் இக்கடிதங்களில் பிரஸ்தாபிக்கக் கூடவில்லை. அப்படியிருக்கும் போது பிலிப்பைன் தீவுகள் விஷயத்தில் மட்டும் விசேஷக் கவனம் செலுத்துவானேன்? ஆசியாவில் புதிய சாம்ராஜ்ய வாதம் வளர்ந்த விதத்தையும், அதனால் தாக்குண்ட பழைய நாகரிகங்கள் எத்தகைய மாறுதலுற்றன என்பதையும் நாம் இப்போது ஆராய்ந்துகொண் டிருக்கிறோம். இந்தச் சாம்ராஜ்ய ஆராய்ச்சிக்கு எடுத்தது இந்தியா. சீனாவில் இன்னொரு வகையான சாம்ராஜ்யத்தைக் காண்கிறோம். ஆனால், அதுவும் மிக முக்கியமானதே. கிழக்கிந்தியத் தீவுகள், இந்தோ- சீனா முதலிய இடங்களும் நமக்குச் சில விஷயங்கள் போதிக்கின்றன. அதேமாதிரி பிலிப்பைன் தீவுகளிலும் நாம் அக்கறைகொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். பிலிப்பைன் தீவுகளில் நாம் புதிய வல்லரசு ஒன்றை—ஐக்கிய அமெரிக்க நாடுகளை—சந்திக்கிறோம். அதனால் நமது அக்கறை இன்னும் அதிகமாகிறது.

சீனாவில், அமெரிக்கா மற்ற வல்லரசுகளைப்போல் ஆக்கிரமிப்பில் இறங்கவில்லை என்பதைப் பார்த்தோம். சில சமயங்களில் அது மற்ற வல்லரசுகளை அடக்கி சீனாவுக்கு ஒத்தாசையும் செய்தது. அதற்குக் காரணம் சாம்ராஜ்யத்தின் மீதுள்ள வெறுப்போ, சீனாவின் மீதுள்ள அன்போ அல்ல, சில உள்நாட்டு நிலைமைகளில் அமெரிக்காவுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் வேற்றுமை இருந்தது. ஐரோப்பிய நாடுகள் ஒரு சிறிய கண்டத்தில் 'புளி மூட்டைகள்' மாதிரி அடைபட்டுக்கிடந்தன. அந்நாடுகளில் ஜனத்தொகை நெருக்கம் அதிகம். ஐரோப்பாவில் அவை வளர்ச்சி அடைவதற்கு இடமில்லை. மேலும், அவற்றிற்கிடையே எப்பொழுதும் போட்டியும் போராட்டமுமாயிருந்தன. தொழிற் புரட்சிக்குப்பின் அவற்றின் ஜனத்தொகை விரைவில் வளர்ந்தது. அவை மேலும் மேலும் பொருள்களை உற்பத்தி செய்தன. அப்பொருள்களை உள்நாட்டிலேயே விற்றுத் தீர்க்க முடியவில்லை. பெருகிவரும் ஜனத்தொகைக்கு உணவும், தொழிற்சாலைகளுக்கு மூலப்பொருள்களும், உற்பத்தி செய்த பொருள்களை விற்பதற்கு மார்க்கெட்டுகளும் தேவையாயிருந்தன. அத்தேவைகளைப் பூர்த்திசெய்ய வேண்டிய அவசரப் பொருளியல் நிர்ப்பந்தமானது ஐரோப்பிய நாடுகளை வெளிநாடுகளுக்குச் செல்லத் தூண்டியதோடு, அவை தங்களுக்குள் சாம்ராஜ்யத்துக்காகப் போரிட்டுக்கொள்ளவும் காரணமாயிருந்தது.

மேற்கூறிய காரணங்கள் எதுவும் அமெரிக்காவுக்கு இல்லை. அது ஏறக்குறைய ஐரோப்பா அளவு பெரியது. அதன் ஜனத்தொகையோ குறைவு. எல்லோருடைய வளர்ச்சிக்கும் போதுமான இடம் அங்கு இருந்தது. அமெரிக்கர் தங்களுடைய சக்தி முழுவதையும் செலவழித்துத் தங்களுடைய விசாலமான நாட்டை அபி/

விருத்தி செய்யவேண்டிய நிலையில் இருந்தார்கள். ரயில் தொடர்கள் ஏற்பட ஏற்பட அவர்கள் மேலும் மேலும் மேற்கே பரவிக் கடைசியில் பசிபிக் சமுத்திரதீரத்தை அடைந்தார்கள். அவர்களுக்குத் தங்கள் சொந்த நாட்டிலேயே இந்த வேலையெல்லாம் இருந்தபடியால் சாம்ராஜ்ய சாகசக்கியங்களில் அவர்கள் சிந்தை செலுத்தவில்லை; அதற்கு அவர்களுக்கு நேரமும் இல்லை. ஒரு சமயம், காலிபோர்னியாவில் தொழிலாளர்கள் தேவையாயிருந்தபோது அவர்கள் சீன அரசாங்கத்தைத் தொழிலாளர்கள் அனுப்பும்படி கேட்டுக்கொண்டார்கள். அவ்வாறே, சீனா அமெரிக்காவுக்குத் தொழிலாளர்களை அனுப்பியது. பின்னர், அதுவே அவ்விரண்டு நாடுகளுக்கும் இடையில் மனக் கசப்பு வளர்வதற்குக் காரணமாயிருந்தது. இதைப்பற்றி முன்பே கூறியுள்ளேன். இம்மாதிரியான சொந்தநாட்டு விஷயங்களில் அமெரிக்கர் ஈடுபட்டிருந்தபடியால் சாம்ராஜ்யப் பந்தயத்தில் அவர்கள் ஐரோப்பிய நாடுகளுடன் கலந்துகொள்ளவில்லை. மற்றநாடுகள் சீனாவைப் பங்குபோட்டுக்கொள்ளும் என்கிற பயம் தோன்றிய காலத்தில்தான் அவர்கள் சீன விவகாரங்களில் வேறு வழியின்றித் தலையிட்டார்கள்.

ஆனால், பிலிப்பைன் தீவுகள் அமெரிக்காவின் நேர்முகமான ஆட்சியின் கீழ் இருந்தன. அமெரிக்க சாம்ராஜ்ய வாதத்தை நாம் அங்கே காணமுடிகிறது. ஆகவே, பிலிப்பைன் தீவுகளின் கதையில் நமக்கு ஒரு அக்கறை பிறக்கிறது. அமெரிக்க சாம்ராஜ்யம் பிலிப்பைன் தீவுகளில்தான் இருக்கிறதென்று நீ எண்ணிவிடக் கூடாது; வெளிப்படையாகப் பார்த்தால் அது ஒன்றுதான் அவர்களுக்கு இருக்கும் சாம்ராஜ்யம். மற்ற சாம்ராஜ்ய வல்லரசுகளின் அனுபவங்களிலிருந்தும்

கஷ்டங்களிலிருந்தும் பாடம் கற்றுக் கொண்ட அமெரிக்கா அவர்கள் கையாண்ட பழைய முறைகளைத் தான் அபிவிருத்தி செய்தது. பிரிட்டன் இந்தியாவை இணைத்துக் கொண்டது போல் அவர்கள் எத் தேசத்தையும் இணைத்துக் கொள்ளும் சிரமத்தை மேற் கொள்ள வில்லை. அவர்களுக்கு வேண்டிய தெல்லாம் லாபம் ஒன்றுதான். அதற்காக அவர்கள் ஒரு நாட்டின் செல்வத்தின் மீது ஆதிக்கம் செலுத்தத் தலைப்பட்டார் கள். அத்தகைய ஆதிக்கத்தின் மூலம் அந்த நாட்டின் ஜனங்களையும் அந்த நாட்டையும் இஷ்டப்படி ஆட்டி வைப்பது சாத்தியமாகிறது. இந்த முறையைக் கையாளுவதால் அமெரிக்கர், ஒரு விதத் தொந்திரவு இன்றியும், தீவிரத் தன்மை வாய்ந்த தேசியத்துடன் போராட வேண்டிய அவசியமின்றியும், ஒரு நாட்டை ஆளவும் அதன் செல்வத்தைப் பகிர்ந்து கொள்ளவும் முடிகிறது. இந்தச் சூட்சும முறை 'பொருளியல் சாம் ராஜ்ய வாதம்' என அழைக்கப்படுகிறது. மற்ற சாம்ராஜ்யங்களைக் கண்டு கொள்வது போல் படத்தைப் பார்த்து இதைக் கண்டு கொள்ள முடியாது. பூகோள புஸ்தகத்தையோ தேசப் படப் புஸ்தகத்தையோ பார்த் தால் ஒரு தேசம் சுதந்திரமாக இருப்பதாகத் தோன்றும். ஆனால், திரைக்குப் பின் கூர்ந்து நோக்கின் அது இன்னொரு நாட்டின், அதாவது, இன்னொரு நாட்டுப் பாங்கி முதலாளிகள் வியாபார முதலாளிகள் ஆகியோரின் பிடிப்பில் அகப்பட்டுக் கொண்டு திணறுவது தெரிய வரும். அமெரிக்காவுக்கு இருப்பது இந்தக் கண் காணா சாம்ராஜ்யம் தான். இது கண்ணுக்குப் புலனாகா விட்டாலும் பிரபாவத்தில் குறைந்த தல்ல. இந்தியா விலும் பிற இடங்களிலும் அவ்வந்நாட்டு மக்களிடம் வெளிப்படையாக அரசியல் அதிகாரத்தை ஒப்படைக்கும்

போது பிரிட்டன் இந்தக் கண் காணா சாம் ராஜ்யத்தைத்தான் தனக்கென்று வைத்துக் கொள்ள முயலுகிறது. இது மிகவும் அபாயகரமானது. இது விஷயத்தில் நாம் மிகவும் எச்சரிக்கையா யிருக்க வேண்டும்.

அமெரிக்காவின் இக்கண் காணா சாம்ராஜ்யத்தைப் பற்றி நாம் இப்போது ஆராய்ச்சி செய்ய வேண்டியதில்லை. ஏனெனில், பிலிப்பைன் தீவுகள் கண்காணும் சாம் ராஜ்யத்தின் ஒரு பகுதியாகவே விளங்குகின்றன.

பிலிப்பைன் தீவுகளில் நாம் அக்கறை கொள்வதற்கு இன்னொரு சின்னக் காரணமும் இருக்கிறது. அக் காரணம் உள்உணர்வின் பாற்பட்டது. பிலிப்பைன் தீவுகளின் தோற்றம் இன்று ஸ்பானிய-அமெரிக்க மயமா யிருக்கலாம். ஆனால், அவர்களுடைய பழைய கலைப் பண்பின் அடிப்படைத் தத்துவம் இந்தியாவைச் சேர்ந்த தாகும். இந்தியக் கலைப் பண்பு சுமத்திரா, ஜாவா வழியாக அங்குச் சென்று அவர்களுடைய மத, சமூக, அரசியல் வாழ்க்கை முழுவதையும் தன் மயமாக்கியது. நமது புராண, இதிகாசக் கதைகளும் காவியங்களும் அங்குச் சென்றன. அவர்களுடைய பாஷைகளில் சம்ஸ்கிருதச் சொற்கள் பல கலந்திருக்கின்றன. அவர்களுடைய சிற்பம் முதலாய கலைகளிலும் சட்ட திட்டங்களிலும் கைத்தொழில்களிலும் இந்தியாவின் பிரபாவம் நன்கு காணப்படுகிறது. அவர்களுடைய ஆடை அணிகளிலும் இந்தியாவின் சாயலைக் காண்கிறோம். ஸ்பானியர், தங்களுடைய 300 வருஷ ஆட்சிக் காலத்தில், பழமையான இவ்விந்தியக் கலைப் பண்பைப் பூண்டோடு அழிக்க முயன்றார்கள். ஆகவே, அதில் ஒரு சிறு அம்சமே இன்று எஞ்சி நின்றுள்ளது.

1565-ம் ஆண்டிலேயே ஸ்பானியர் பிலிப்பைன் தீவு

களைக் கைப்பற்றிக் கொண்டார்கள். ஆகவே, ஆசி யாவில் முதன்முதலாக ஐரோப்பியர் காலடி எடுத்து வைத்த இடங்களுள் பிலிப்பைன் தீவுகள் ஒன்றாகும். பிலிப்பைன் தீவுகளின் ஸ்பானிய ஆட்சி முறை போர்த்து கீசிய, பிரிட்டிஷ், டச்சுக் காலனிகளின் ஆட்சி முறையி னின்றும் வேறானது. அங்கு வியாபாரத்துக்கு ஊக்கம் அளிக்கப் படவில்லை. மதமே அரசாங்கத்தின் அடிப் படையாயிருந்தது. அரசாங்க உத்தியோகஸ்தர்கள் பெரும்பாலும் மதஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களாக வும் பாதிரிகளாகவும் இருந்தார்கள். ஆகவே, அது "பாதிரிகளின் சாம்ராஜ்யம்" என்று அழைக்கப் பட்டது. ஜனங்களின் நிலைமையை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் யாதொரு முயற்சியும் எடுக்கவில்லை. அதற்கு மாறாக அது அதிக வரி விதித்து அவர்களை வருத் தியது. அவர்கள் பலாத்காரமாகக் கிறிஸ்தவ மதத் துக்கு மாற்றப்பட்டார்கள். இந்த நிலையில் கலகங்கள் விளைவது சகஜமே. வியாபார நிமித்தம் பல சீனர்கள் பிலிப்பைன் தீவுகளுக்கு வந்தார்கள். அவர்கள் கிறிஸ்த வர்கள் ஆக மறுத்த காரணத்துக்காகப் படுகொலை செய்யப் பட்டார்கள். பிரிட்டிஷ், டச்சு வியாபாரிகள் அத்தீவுகளில் காலடி வைக்க அநுமதிக்கப் படவில்லை. அதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று, அவர்கள் விரோதிகள் என்பது. இன்னொன்று, அவர்கள் பிராடெஸ்டண்டுக் கிறிஸ்தவர்கள் என்பது. ரோமன் கத் தோலிக்கரான ஸ்பானியருக்குப் பிராடெஸ்டண்டுகள் என்றால் பாஷண்டர்கள் தானே?

நிலைமை நாளுக்கு நாள் சீர்கேடுற்று வந்தது. ஆனால், ஸ்பானிய ஆட்சியின் கீழ் ஒரு நற்பயன் விளைந்தது. அதாவது, பிலிப்பைன் தீவுகளின் பல்வேறு பகுதிகள் ஒரு ஐகமத்தியத்தை அடைந்தன. 19-வது நூற்றாண்டில் அங்கே தேசிய உணர்ச்சி தோன்றத் தொடங்கியது. அந் நூற்றாண்டின் இடையில் அந்நிய வியாபாரிகளின் வருகை காரணமாகக் கல்வி முதலான துறைகளில் சில சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. வியாபாரமும் வளரத் தொடங்கியது. பிலிப்பைன் மத்திய வகுப்பு ஒன்று தோன்றி உருப்பெற்றது. ஸ்பானியருக்கும் பிலிப்பைனிய ருக்கும் இடையே கலப்பு மணங்கள் நிகழ்ந்தன. ஸ்பெயின் ஏறக்குறையத் தாய்நாடு போலவே பாவிக்கப் பட்டது. ஸ்பானியக் கருத்துகள் பரவின. ஆயினும், தேசிய உணர்ச்சி குன்றாது ஓங்கிவந்தது. அது அடக்கப் படவே புரட்சிகரமாக மாறியது. ஸ்பெயினிலிருந்து பிரிந்துவிடவேண்டும் என்கிற எண்ணம் முதலில் இல்லை. சுயாட்சியும் 'கோர்டேஸ்' என்னும் ஸ்பானியப் பார்லி மெண்டில் பிரதிநிதித்துவமும் தான் அவர்கள் முதலில் கோரியது. அந்தப் பார்லிமெண்டுக்கு அதிக அதிகாரம் கூடக் கிடையாது. தேசிய இயக்கங்கள் எங்குமே மிதப் போக்கில் ஆரம்பித்து வரவரத் தீவிரமாக மாறிக் கடைசியில் பிரிவினையையும் சுதந்திரத்தையும் குறியாகக் கொண்டு நிற்பதைக் கவனித்தால் நமக்கு ஆச்சரியம் உண்டாகிறது. ஒரு சுதந்திரக் கோரிக்கையை அடக்கின உடனே அதுவே பிற்பாடு ஒன்று பத்தாகக் கிளைத்து விடுகிறது. இவ்வாறே, பிலிப்பைனிலும் தேசிய கோரிக்கை வளர்ந்தது. அதை வற்புறுத்தத் தேசியக் ஸ்தாபனங்கள் தோன்றின. இரகசிய ஸ்தாபனங்களும் முளைத்தன. டாக்டர் ஜோசேரிசால் என்பவரைத் தலைவ ராகக் கொண்ட 'யௌவனப் பிலிப்பைன் கட்சி' தேசிய இயக்கத்தில் முக்கியப் பங்கு எடுத்துக் கொண்டது. ஸ்பானிய அரசாங்கம் அவ்வியக்கத்தை அடக்குவதற்குப் பயங்கர அடக்குமுறையைக் கையாண்டது. அரசாங் கங்களுக்குத் தெரிந்துள்ள முறை அது ஒன்றுதானே!

1896-ல் ரிசாலுக்கும் இன்னும் பல தலைவர்களுக்கும் மரணதண்டனை விதிக்கப்பட்டது. அதன்படி அவர்கள் தூக்கிலிடப்பட்டார்கள்.

அதற்குமேல் ஜனங்களால் பொறுக்க முடியவில்லை. அவர்கள் ஸ்பானிய அரசாங்கத்தை எதிர்த்துப் பகிரங்கமாகக் கலகம் செய்தார்கள். பிலிப்பைன் மக்களின் "சுதந்திரப் பிரகடனம்" வெளியிடப்பட்டது. பூரா ஒரு வருஷம் போராட்டம் நடந்தது. ஸ்பானியரால் அதை அடக்க முடியவில்லை. உருப்படியான சீர்திருத்தங்கள் அளிப்பதாக வாக்குறுதி தரப்படவே போராட்டம் சிறிதுகாலம் நிறுத்தி வைக்கப்பட்டது. ஆனால், ஸ்பெயின் ஒன்றும் செய்வதாகக் காணோம். ஆகவே, மீண்டும் 1898-ல் போராட்டம் துவங்கியது.

இதற்கிடையில், அமெரிக்காவுக்கும் ஸ்பெயினுக்கும் வேறு ஏதோ விஷயமாகத் தகராறு ஏற்பட்டுப் போர் மூண்டது. 1898, ஏப்ரலில் ஒரு அமெரிக்கக் கடற்படை பிலிப்பைன் தீவுகளைத் தாக்கியது. அமெரிக்கக் குடியரசு தங்களுடைய சுதந்திரத்தை ஆதரிக்கும் என்று கருதிய பிலிப்பைன் கலகத் தலைவர்கள் யுத்தத்தில் அதற்கு உதவி புரிந்தார்கள். அவர்கள் மீண்டும் தங்களுடைய சுதந்திரத்தைப் பிரகடனம் செய்து ஒரு குடியரசு அரசாங்கத்தையும் ஏற்படுத்தினார்கள். 1898, செப்டம்பரில் ஒரு பிலிப்பைன் காங்கிரஸ் கூடியது. நவம்பர் மாதத்துக்குள் ஒரு அரசியல் அமைப்புத் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுவிட்டது. காங்கிரசில் அந்த அரசியல் அமைப்பைப் பற்றிய விவாதம் நடந்துகொண்டிருந்த போது ஸ்பெயினுக்கு யுத்தத்தில் தோல்வி மேல் தோல்வி கிடைத்து வந்தது. ஸ்பெயினுக்குப் பலம் இல்லை. அவ்வருஷம் முடிவிற்குள்ளாகவே அது தன் தோல்வியை ஒப்புக்கொண்டது. யுத்தமும் முடிந்தது. சமாதான உடன்படிக்கையில் ஸ்பெயின் பிலிப்பைன் தீவுகளை அமெரிக்காவுக்குக் கொடுத்துவிட்டது. இந்தத் தாராள தானத்தினால் ஸ்பெயினுக்கு வந்த நஷ்டம் ஒன்றுமில்லை. அதற்கு முன்பே பிலிப்பைன் மக்கள் தங்கள் நாட்டிலிருந்து ஸ்பானிய ஆட்சியை ஒழித்து விட்டார்கள்.

இப்போது அமெரிக்க அரசாங்கம் பிலிப்பைன் தீவுகளைச் சுவாதீனப்படுத்திக் கொள்ள ஆரம்பித்தது. பிலிப்பைன் மக்கள் அதை எதிர்த்தார்கள். ஸ்பெயின் தங்கள் நாட்டை அமெரிக்காவுக்கு வழங்கிய காலத்தில் அதற்குத் தங்கள் நாட்டில் எவ்விதமான அக்குத்தொக்கும் இல்லை என்பதையும், ஆகவே, கடைத்தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைப்பது போல் தங்களை அமெரிக்காவுக்கு அடிமைப்படுத்த ஸ்பெயினுக்கு யாதொரு அதிகாரமும் இல்லை என்பதையும் அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். அவர்களுடைய வாதம் பயன் படவில்லை. ஆகவே, அவர்கள் 'சுதந்திரம் பெற்று விட்டோம்' என்று மகிழ்ந்திருந்த தருணத்தில் ஸ்பெயினைவிடப் பன்மடங்கு பலம் பொருந்திய ஒரு அரசாங்கத்துடன் புதிதாகப் போர் தொடங்க வேண்டியிருந்தது. மூணரை வருஷங்கள் அவர்கள் வீரத்துடன் போராடினார்கள். சில மாதங்கள் வரையில் அரசாங்க ஹோதாவுடன் போராடினார்கள். அதற்குப் பின் குரங்குச் சண்டை முறையை அனுஷ்டித்தார்கள்.

முடிவாக அமெரிக்கா கலகத்தை அடக்கிப் பிலிப்பைனில் தன்னுடைய ஆட்சியை நிறுவியது. பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. அவற்றில் கல்விச் சீர்திருத்தங்களை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். ஆயினும், சுதந்திரக் கோரிக்கை மறையவில்லை. 1916-ல், அமெரிக்கக் காங்கிரஸ் 'ஜோன்ஸ் மசோதா' என்னும்

மசோதா ஒன்றை நிறைவேற்றியது. அதன்படி, தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சட்டசபைக்குச் சில அதிகாரங்கள் மாற்றித் தரப்பட்டன. ஆனால், அமெரிக்கக் கவர்னர்-ஜெனரலுக்கு எதிலும் தலையிடும் அதிகாரம் இருந்தது. அந்த அதிகாரத்தை அவர் அடிக்கடி உபயோகிக்கத் தயங்கியதில்லை.

பிலிப்பைனில் அமெரிக்க அரசாங்கத்துக்கு விரோதமாகக் கலகங்கள் எழவில்லை. ஆனால். அவர்கள் தங்களுடைய தற்கால இருப்பில் திருப்தி அடைய மறுத்துச் சுதந்தரத்துக்காகக் கிளர்ச்சி செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். பிலிப்பைன் மக்களுடைய நன்மைக்காகவே தாங்கள் பிலிப்பைனில் இருப்பதாகவும், அவர்கள் தங்களுடைய விவகாரங்களைத் தாங்களே பார்த்துக் கொள்ளும் திறமை பெற்றுவிட்டவுடனே தாங்கள் பிலிப்பைனை விட்டுப் போய் விடுவதாகவும் அமெரிக்கர் அசல் சாம்ராஜ்ய தோரணையில் உறுதி கூறுகிறார்கள். 1916-ல் நிறைவேற்றப்பட்ட ஜோன்ஸ் மசோதாவில் பின்வரும் வாசகம் காணப்படுகிறது: 'பிலிப்பைனில் நிலையான அரசாங்கம் ஒன்றை ஸ்தாபிக்கக் கூடிய நிலை ஏற்பட்டதும், அதன்மீது அமெரிக்காவுக்குள்ள ஆதிக்கத்தைத் துறந்துவிட்டு அதன் சுதந்திரத்தை அங்கீகரிக்க வேண்டும் என்பது தான் அன்றும் இன்றும் அமெரிக்க மக்களின் நோக்கமாகும்." இவ்வாறு ஜோன்ஸ் மசோதா கூறுகின்றதாயினும் பிலிப்பைன் சுதந்திரத்தை வெளிப்படையாக எதிர்க்கும் பலர் இன்று அமெரிக்காவில் இருக்கிறார்கள்.

நான் இதை எழுதிக்கொண்டிருக்கும் போதே, இன்னும் பத்து வருஷங்களில் பிலிப்பைனுக்குச் சுதந்திரம் அளிப்பதாக அமெரிக்கக் காங்கிரஸ் ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறதென்னும் செய்தி பத்திரிகைகளில் வந்திருக்கிறது.

பிலிப்பைனில் அமெரிக்காவுக்குச் சில பொருளியல் நலன்கள் இருக்கின்றன. அவற்றைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்பதுதான் அவர்களுடைய கவலை. அங்கேயுள்ள ரப்பர் தோட்டங்களில் அவர்களுக்கு விசேஷ அக்கறை உண்டு. அவர்களுக்குத் தங்கள் நாட்டில் கிடைக்காத மிகவும் அவசியமான பொருள்களில் ரப்பரும் ஒன்று. ஆனால், அவர்கள் பிலிப்பைனை விடாமல் பற்றிக் கொண்டிருப்பதற்கு முக்கியக் காரணம் அவர்களுக்கு ஜப்பானிடத்துள்ள பயம் தான் என்று நான் நம்புகிறேன். ஜப்பான் பிலிப்பைனுக்கு மிகவும் அருகில் இருக்கிறது. நாளுக்கு நாள் பெருகி வரும் அதன் ஜனத்தொகை கொள்வதற்கு ஜப்பானில் இடமில்லை. பிலிப்பைன் தீவுகளைக் கண்டு ஜப்பானுடைய நாக்கில் ஜலம் ஊறுவது சகஜமே. மேலும், அமெரிக்க அரசாங்கமும் ஜப்பானிய அரசாங்கமும் ஒன்றையொன்று மனமார வெறுக்கின்றன. ஆகவே, பிலிப்பைன் தீவுகளின் வருங்காலம் பசிபிக் வல்லரசுகளைப் பற்றிய பெரிய பிரச்சினையில் அடங்கி நிற்கிறது.

122

மூன்று கண்டங்கள் சந்திக்குமிடம்

ஜனவரி 16, 1933.

என்னுடைய புது வருஷ மனோரதங்களில் ஒன்று நான் எதிர்பார்த்ததைவிடச் சீக்கிரமாகவே நிறைவேறி விட்டது. வருஷப் பிறப்பன்று கடிதம் எழுதியபோது இவ்வளவு சீக்கிரம் அது நிறைவேறுமென்று நான் நினைக்கவில்லை. நெடுங் காலத்துக்குப் பின்பு நாம் ஒருவரை யொருவர் பார்த்து மகிழ்ந்தோம். உன்னையும் மற்றவர்களையும் பார்த்த சந்தோஷத்தில் எனக்குத் தலைகால் புரியவில்லை. என்னுடைய மனம் நிரம்பியிருக்கிறது. என்னுடைய வழக்கமான வேலையைக்கூட நான் கவனிப்பதில்லை. என்னுடைய காரியக்கிரமமெல்லாம் தலைகீழாகிவிட்டது. 'கடமை யறியோம், தொழிலறியோம், கட்டென்பதனை வெட்டென்போம்' என்று என் மனம் பாடுகிறது. நாம் ஒருவரை யொருவர் பார்த்து நாலு நாள்தான் ஆயிற்றென்றாலும் அதற்குள் நாலு வருஷம் ஆய்விட்டதுபோல் இருக்கிறது! இதற்குள் வருங்காலத்தைப் பற்றிய சிந்தனை என் மனதில் ஆரம்பித்துவிட்டது. மறுபடியும், நாம் எப்பொழுது, எங்கே சந்திப்போமென்று எண்ணமிட ஆரம்பித்து விட்டேன்.

அதுவரையில் என்னுடைய மனோபாவனையை—அதாவது இக்கடிதங்கள் எழுதும்போது நீயும் நானும் வார்த்தையாடுவதாக நான் கற்பித்துக் கொண்டிருக்கிறேனே, அதை—எந்த ஜெயில் விதியும் தடுக்க முடியாது. ஆகவே, தொடர்ந்து எழுதுகிறேன்.

சிலகாலமாகப் பத்தொன்பதாவது நூற்றாண்டைப் பற்றி நான் உனக்கு எழுதி வருகிறேன். நெப்போலியனுடைய வீழ்ச்சிக்குப் பிற்பட்ட 100 ஆண்டுகளை நாம் தோராயமாக 19-வது நூற்றாண்டு என்று எடுத்துக் கொண்டோம். முதலில் அக்காலப் பகுதியை நாம் பொதுவாகப் பார்த்தோம். பிறகு, சில தேசங்களைச் சிறப்பாக ஆராய்ந்தோம். இந்தியாவைச் சற்று விரிவாகவே ஆராய்ந்தோம். பிறகு சீனாவையும் ஜப்பானையும் கடைசியாக அதீத இந்தியாவையும் கீழ்த்தீவுகளையும் (பிலிப்பைன்) கண்டோம். இந்த விரிவான ஆராய்ச்சியில் உலகின் ஒரு பகுதியைத்தான் நாம் இதுவரையில் உற்று நோக்கினோம். உலகின் ஏனைய பகுதிகள் இன்னும் பார்க்கப் படாமலே இருக்கின்றன. நான் சொல்ல ஆரம்பித்திருக்கும் கதை ஒரு ராமாயணம். அதை நேராகவும் தெளிவாகவும் கொண்டுபோவது கடினம். கண்டங்களையும் தேசங்களையும் ஒன்றின்பின் ஒன்றாகவும் தனித்தனியாகவும் ஆராய வேண்டியிருக்கிறது. ஒரே காலப் பகுதியைப் பல தேசங்களில் திரும்பத் திரும்ப ஆராயவேண்டி யிருக்கிறது. இவை யெல்லாம் சிறிது குழப்பத்தைத்தான் உண்டுபண்ணும். ஆனால், இப் பத்தொன்பதாவது நூற்றாண்டு நிகழ்ச்சிகள் அனைத்தும் ஏறக்குறைய ஏககாலத்தில் நிகழ்ந்தன என்பதையும், அவை ஒன்றையொன்று மோதிப் பயன் விளைத்தன என்பதையும் நீ நினைவில் வைக்கவேண்டும். ஆகவே, நாம் ஒரு தேசச் சரித்திரத்தை மட்டும் படித்துவிட்டு முழு உண்மையையும் தெரிந்துகொள்ள முடியாது. இறந்த காலத்தை உருவாக்கி அதை நிகழ் காலமாகத் தோற்றுவிக்கும் நிகழ்ச்சிகளையும் சக்திகளையும் உண்மையாக உணரவேண்டுமாயின் நாம் உலக சரித்திரத்தைக் கற்க வேண்டும். இக்கடிதங்களில் நான் உலக சரித்திரத்தை உனக்கு எடுத்துக் கூறுவதாக நடிக்க விரும்பவில்லை. அது என் சக்திக்கு மீறிய காரியம்.

உலக சரித்திரத்தைப் பற்றிய நூல்கள் வேறு பல இருக்கின்றன. உலக சரித்திரத்தில் உனக்கு ஒரு ஆர்வத்தை உண்டாக்க வேண்டும், அதன் முக்கிய அம்சங்கள் சிலவற்றை உனக்குக் காட்டவேண்டும், ஆதி காலத்திலிருந்து அறுபடாது வரும் மனித வாழ்வின் போக்குகளை நீ உணருமாறு செய்ய வேண்டும் என்பது தான் நான் உனக்கு இக்கடிதங்கள் எழுதுவதன் நோக்கமாகும். இந்த நோக்கத்தில் நான் எவ்வளவு தூரம் வெற்றி பெறுவேன் என்பது எனக்குத் தெரியாது. ஒரு வேளை உன் மூளையைத் தெளிவிப்பதற்கு மாறாக எல்லாவற்றையும் ஒரே கதம்பமாக அடித்து எங்கே அதைக் குட்டை குழப்பி விடுகிறேனோ என்றுகூட அஞ்சுகிறேன்.

19-வது நூற்றாண்டின் மூலசக்தியாக ஐரோப்பா விளங்கியது. அங்கே தேசியவாதம் மேலோங்கி நின்றது. அங்கிருந்து தொழில்வாதம் உலகின் நாலாமூலைகளுக்கும் பரவிச் சாம்ராஜ்ய வாதமாக உருவெடுத்தது. இதை அந்த நூற்றாண்டைச் சுருக்கமாகக் கவனித்தபோது நாம் பார்த்தோம். இந்தியாவிலும் கீழ்ஆசியாவிலும் சாம்ராஜ்ய வாதத்தால் விளைந்த பலன்களைச் சற்று விரிவாகப் பார்த்தோம். மீண்டும் நாம் ஐரோப்பாவுக்குச் சென்று அதைச் சற்று உன்னிப்பாகப் பார்க்க வேண்டும். அதற்குமுன் நாம் மேற்கு ஆசியாவுக்கு ஒரு முறை போய்வந்து விடுவது நலம். அதை நெடுங்காலமாகவே நான் புறக்கணித்து வந்திருக்கிறேன். அதற்கு முக்கியக் காரணம் அதன் பிற்காலச் சரித்திரத்தைப் பற்றிய என் அறியாமையேயாகும்.

மேற்குஆசியாவானது கிழக்குஆசியாவினின்றும், இந்தியாவினின்றும் பெரிதும் மாறுபட்டிருக்கிறது. பண்டைக்காலத்தில் பல வகுப்பார்களும் ஜாதியார்களும் மத்தியஆசியாவிலிருந்தும் கீழ்ஆசியாவிலிருந்தும் வந்து

அதன்மீது படர்ந்தது வாஸ்தவம்தான். துருக்கியர் இம்மாதிரி வந்தவர்களே. கிறிஸ்தவ சகாப்தத்துக்கு முன்னால் பௌத்தமதம்கூடச் சின்ன ஆசியாவரையில் பரவியது. ஆனால், அங்கே அது கால்கொண்டதாகத் தெரியவில்லை. மேல்ஆசியா நெடுங்காலமாகவே ஆசியாவைவிட ஐரோப்பாவையே நோக்கி வந்திருக்கிறது. ஒரு விதத்தில் ஐரோப்பாவுக்கு அது ஆசியாவின் ஜன்னல் ஆக விளங்குகிறது என்று சொல்லலாம். ஆசியாவின் பல்வேறு பாகங்களில் இஸ்லாம் பரவியும், மேல்ஆசியாவின் இம் மேற்கத்திய மனோபாவம் மாறவில்லை.

இந்தியாவும் சீனாவும் இவற்றை அடுத்த நாடுகளும் இவ்வாறு ஐரோப்பாவை நோக்கியதே இல்லை. அவை ஆசியாவிலேயே கட்டுண்டு கிடந்தன. இந்தியாவுக்கும் சீனாவுக்கும் வகுப்பிலும் (Race), வாழ்க்கைத் தத்துவத்திலும், கலைப்பண்பிலும் பெரிய வேற்றுமை இருக்கிறது. சீனா ஒரு காலத்தும் மதத்துக்கு அடிமையாயிருந்ததில்லை. அங்குப் புரோகிதக் கும்பல் கிடையாது. இந்தியாவோ எப்பொழுதும் தன்னுடைய மதப் பெருமையைக் கொண்டாடிவந்திருக்கிறது. இந்திய சமூகத்தில் புரோகிதர்களின் ஆதிக்கம் அதிகம். புத்தர் பெருமானால் கூட அதை ஒழிக்கமுடியவில்லை. இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே இன்னும் பல வேற்றுமைகள் இருக்கின்றன. ஆயினும், இந்தியாவுக்கும் கீழ், தென் கீழ் ஆசியாவுக்கும் ஒரு அதிசயமான ஒற்றுமை இருக்கத்தான் செய்கிறது. இவ்வாறு, இவ்விடங்களில் வாழும் மக்களை மணியூடு செல்லும் கயிறுபோல் பிணைத்து நிற்பது புத்தர்பிரானின் திருச்சரிதையாகும். அதனால் தான் அவர்களுடைய பாட்டும் பண்ணும் கலையும் இலக்கியமும் பல அம்சங்களில் ஒத்திருக்கின்றன.

இஸ்லாம் மேல்ஆசியப் பண்பை இந்தியாவுக்குக்

கொண்டுவந்தது. இஸ்லாம் ஒரு தனிப்பண்பு; அது ஒரு தனி மனோபாவம். அரேபியர் இந்தியாவை ஜெயித்திருந்தால் மேல் ஆசிய மனோபாவம் இந்தியாவுக்கு நேராகவும் அதன் இயற்கை சொரூபத்திலும் வந்திருக்கும். அது தோன்றி நெடுங்காலம் சென்ற பிறகு மத்திய ஆசிய வகுப்பார் மூலம் அது இந்தியாவுக்கு வந்தது. அவர்கள் அதற்குச் சரியான பிரதிநிதிகள் ஆகமாட்டார்கள். ஆயினும், இஸ்லாம் இந்தியாவையும் மேல் ஆசியாவையும் பிணைத்தது. இவ்வாறு, இவ்விரு பெரும் கலைப்பண்புகளின் கூடலாக இந்தியா விளங்கியது. இஸ்லாம் சீனாவுக்கும் சென்றது. சீனர் பலர் அதைத் தழுவினார்கள். ஆனால், சீனாவின் பழைய கலைப்பண்பை இஸ்லாம் எப்போதும் எதிர்த்ததில்லை. இந்தியாவில் மட்டும் இஸ்லாம் அதன் பழம் பண்பை எதிர்த்ததற்குக் காரணம் அது நெடுங்காலமாக ஆளுவோரின் மதமாக இருந்ததுதான். ஆகவே, இவ்விரு பண்புகளும் ஒன்றையொன்று எதிர்த்து நிற்கும் நாடாக இந்தியா ஆயிற்று. இக்கஷ்டமான பிரச்சினையைத் தீர்த்து, இரண்டுக்கும் ஒரு சமரசம் காணச் செய்யப்பட்ட முயற்சிகளைப் பற்றி ஏற்கெனவே கூறியிருக்கிறேன். அம்முயற்சிகள் பெரும்பாலும் வெற்றி பெற்றுவிட்டன என்றே சொல்ல வேண்டும். அந்த நல்ல தருணத்தில் பிரிட்டிஷாருடைய ரூபத்தில் ஒரு புதிய அபாயமும் புதிய தடையும் வந்து முளைத்தன. இன்று அவ்விரு பண்புகளும் தங்களுடைய பழையபொருளை இழந்து விட்டன. தேசிய வாதமும் தொழில் வாதமும் உலகை அடியோடு மாற்றிவிட்டன. பழைய பண்புகள் புதிய பொருளியல் நிலைமைகளுக்குத்தகத் தங்களைத் திருத்தி அமைத்துக் கொள்ளக் கூடிய அளவுக்குத்தான் உலகில் இன்று உயிர் வாழமுடியும். அவற்றின் உயிர்

போய் விட்டது, வெற்றுடல்தான் எஞ்சி நிற்கிறது. இஸ்லாமின் தாயகமான மேல் ஆசியாவிலேயே பெரும் பெரும் மாறுதல்கள் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. சீனாவும் கீழ்க்கோடியும் ஒரே குழப்பத்தில் ஆழ்ந்திருக்கின்றன. இந்தியாவில் நிகழ்வதை நாம் கண்ணெதிரிலேயே பார்க்கிறோம்.

நான் மேல் ஆசியாவைப்பற்றி எழுதி வெகுநாளாகி விட்டபடியால், விட்ட இடத்தைக் கண்டு பிடித்துத் தொடங்குவதே சற்றுக் கஷ்டமாயிருக்கிறது. பாக்தாதில் விளங்கிய புகழ் மிக்க அரேபிய சாம்ராஜ்யத்தைப் பற்றியும், செல்ஜக் துருக்கியருக்கு முன்னால்—உதுமானியத் துருக்கியர் அல்ல—அது வீழ்ந்ததைப்பற்றியும், செங்கிஸ்கானின் வழியில் வந்த மங்கோலியர் முடிவாக அதை அழித்தொழித்ததைப் பற்றியும் நான் கூறியது உனக்கு நினைவிருக்கும். அம்மங்கோலியர் பாரசீகத்தை உள்ளடக்கிய மத்திய ஆசிய சாம்ராஜ்யமாகிய கொராசம் சாம்ராஜ்யத்தையும் முடித்து விட்டார்கள். அதற்குப் பின் மூடத்தைமூர் தோன்றினான். அவன் சிறிதுகாலம் போரில் வெற்றிபெற்று மக்களைப் படுகொலை செய்தபின் மறைந்தான். ஆயினும், மேற்கே, ஒருபுதிய சாம்ராஜ்யம் தோன்றிப் பரவியது. தைமூரிடம் அடைந்த தோல்வியினால் அது பாதிக்கப்படவில்லை. உதுமானியத் துருக்கியரின் சாம்ராஜ்யத்தையே நான் குறிக்கிறேன். அவர்கள் பாரசீகத்துக்கு மேற்கிலுள்ள ஆசியாவையும், எகிப்தையும், தென் கீழ் ஐரோப்பாவில் பெரும்பகுதியையும் கைப்பற்றிக்கொண்டார்கள். பல தலைமுறைகள் வரையில் அவர்கள் ஐரோப்பாவை அச்சுறுத்திக்கொண்டிருந்தார்கள். அப்பொழுதுதான் இடைக்கால இருளிலிருந்து வெளிப்பட்டுக்கொண்டிருந்த, மதப்பற்றும் மூடநம்பிக்கையும் மிகுந்த ஐரோப்பிய மக்கள், துருக்கியரைப்

பாவிகளைத் தண்டிப்பதற்கென்றே கடவுளால் அனுப்பப்பட்டவர்கள் என்று கருதினார்கள்.

உதுமானிய ஆட்சியின்கீழ் மேல்ஆசியா சரித்திர அரங்கிலிருந்து மறைந்து விட்டதென்றே சொல்ல வேண்டும். அது உலகவாழ்வென்னும் நீரோட்டத்தினின்று பிரிந்து வெறும் குட்டையாகத் தேங்கிநின்று விட்டது. பலநூற்றாண்டுகளாக, ஏன், பல்லாயிரம் ஆண்டுகளாகவே, ஆசியாவையும் ஐரோப்பாவையும் சேர்க்கும் ராஜமார்க்கமாக மேல் ஆசியா விளங்கியது. ஒரு கண்டத்திலிருந்து மற்றொரு கண்டத்துக்கு ஒட்டகங்களின்மீது பண்டங்களை ஏற்றிக்கொண்டு எண்ணற்ற வியாபாரக்கூட்டத்தார் அதன் நகரங்களையும் பாலைவனங்களையும் கடந்து சென்றார்கள். ஆனால், துருக்கியர் வியாபாரத்தை ஆதரிக்கவில்லை. அவர்கள் ஆதரித்திருந்தாலும் அதனால் ஒன்றும் பலன்விளைந்திராது. ஏனெனில், ஆசியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் இடையே போக்குவரவுக்குக் கடல் மார்க்கங்கள் அபிவிருத்தி ஆகிவிட்டன. இப்பொழுது கடல் ராஜமார்க்கமாகி விட்டது. ஒட்டகத்தின் இடத்தைக் கப்பல் எடுத்துக்கொண்டது. இம்மாறுதல் காரணமாக உலகில் மேல் ஆசியாவுக்கு இருந்த முக்கியம் பெரும்பாலும் போய்விட்டது. அது தனித்து வாழத் தலைப்பட்டது. 19-வது நூற்றாண்டின் பிற்பாதியில், சூயஸ்கால்வாய் திறக்கப்பட்டதன் பயண கடல் மார்க்கத்தின் முக்கியம் இன்னும் பெருகிவிட்டது. கீழுலகம் மேலுலகம் இரண்டுக்கும் இடையிலுள்ள குறுக்குவழியாகச் சூயஸ்கால்வாய் விளங்கியது.

இந்த இருபதாம் நூற்றாண்டில் நம் கண்ணெதிரில் இன்னொரு மாறுதல் நிகழ்ந்துகொண்டிருக்கிறது. தரைக்கும் கடலுக்கும் உள்ள பழைய போட்டியில் தரை ஜெயம் பெற்று வருகிறது. உலகின் முக்கிய ராஜ

மார்க்கத்துக்கு உரிய ஸ்தானம் இப்போது கடலினிடமிருந்து தரைக்கு மாறி வருகிறது. மோட்டார்காரின் வருகை இம்மாறுதலுக்கு ஒரு காரணமாயிருந்தது. ஆகாய விமானம் வந்து அதை இன்னும் அதிகமாக்கி விட்டது. நெடுங்காலமாகத் திரும்பிப் பார்ப்பார் அற்றுக் கிடந்த புராதன வியாபார மார்க்கங்களில் மீண்டும் போக்கு வரவு தொடங்கி விட்டது. ஆனால், அப்பாலைவனங்களின் வழியாக ஆடி அசைந்து செல்லும் ஒட்டகங்களுக்குப் பதிலாக இப்போது மோட்டார்கார்கள் வேகமாக ஓடுகின்றன; தலைக்கு மேலே ஆகாயவிமானங்கள் பறந்து செல்கின்றன.

ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா ஆகிய மூன்று கண்டங்களையும் உதுமானியத் துருக்கிய சாம்ராஜ்யம் ஒன்றுகூட்டிப் பிடித்துக்கொண்டிருந்தது. ஆனால், 19-வது நூற்றாண்டுக்கு வெகுகாலம் முன்பே அது வலி குன்றி விட்டது. இந்த நூற்றாண்டில் அது சிதறியோடிவிட்டது. ‘கடவுளின் தண்டனைக் கருவி’யாக இருந்த துருக்கி ‘ஐரோப்பாவின் நோயாளி’ ஆகிவிட்டது. 1914-18-ல் நடந்த உலக யுத்தம் அதை முடிவாக ஒழித்து விட்டது. பழைய துருக்கியின் சாம்பலிலிருந்து தன்னம்பிக்கையும் முற்போக்கும் தோளாற்றலும் வாய்ந்த புதிய துருக்கியும், வேறு சில புதிய நாடுகளும் தோன்றின.

மேல் ஆசியா ஐரோப்பாவுக்கு ஆசியாவின் ஜன்னலைப் போலிருக்கிறது என்று முன்பே கூறினேன். மத்தியதரைக்கடல் அதைச் சூழ்ந்து நிற்கிறது. ஆசியாவையும் ஆப்பிரிக்காவையும் ஐரோப்பாவையும் பிரிப்பதும் சேர்ப்பதும் மத்தியதரைக்கடலே ஆகும். கடந்த காலத்தில் இச்சேர்க்கை மிகவும் வலியுள்ளதாயிருந்தது. மத்தியதரைக் கடலின் ஓரத்திலிருந்த நாடுகள் பல

பொதுவான அம்சங்களைக் கொண்டிருந்தன. பழைய கிரீசின் குடியேற்றங்கள் மத்தியதரைக் கடற்கரையில் மூன்று கண்டங்களிலும் இருந்தன. ரோம சாம்ராஜ்யம் அக்கடலைச் சூழ்ந்தே பரவியது. மத்தியதரைக் கடலைச் சூழ்ந்த பிரதேசமே ஆதியில் கிறிஸ்தவ மதத்தின் உறைவிடமாயிருந்தது. அரேபியர் தங்களுடைய கலைநாகரிகத்தை கீழ்க்கரையிலிருந்து சிசிலிக்கும், பின்னர் தென் ஆப்பிரிக்கக் கரைவழியாக மேற்கே ஸ்பெயினுக்கும் கொண்டு சென்று அங்கே 700-ஆண்டுகள் தங்கியிருந்தார்கள்.

இதிலிருந்து, ஆசிய மத்தியதரைக் கடல் நாடுகளுக்கும் தென் ஐரோப்பாவுக்கும் வட ஆப்பிரிக்காவுக்கும் உள்ள சம்பந்தம் எத்துணை நெருக்கமானதென்பது நமக்குப் புலனாகிறது. இவ்வாறு, முன் காலத்தில் மேல் ஆசியாவானது மற்ற இரு கண்டங்களையும் ஆசியாவுடன் பிணைக்கும் ஒரு பிணைப்பாக இருந்து வந்தது. உற்று நோக்கினால் இத்தகைய பிணைப்புகளை உலகெங்கணும் காண்பது எளிது. தேசிய வாதம் நமது மனோபாவத்தை மிகவும் குறுக்கி விட்டது. உலகத்தின் ஒற்றுமையையும் உலகின் பல்வேறு நாடுகளின் பொது நலங்களையும் எண்ணுவதை விடுத்து நாடுகளைப் பிரித்தெண்ணும்படியான மனோபாவத்தை அது நம்மிடம் உண்டாக்கி விட்டது.

123

சிம்மாவலோகனம்

ஜனவரி 19, 1933.

சமீபத்தில் நான் இரண்டு புஸ்தகங்கள் வாசித்தேன். அவை எனக்கு மிகவும் இன்பமளித்தன. அந்த இன்பத்தை உன்னுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். அப் புஸ்தகங்கள் ரெனிகுரூசே என்னும் பிரெஞ்சுக்காரரால் எழுதப்பட்டவை. அவர் பாரிசிலுள்ள கைமே பொருட்காட்சி சாலையில் டைரக்டர் (மேலதிகாரி) அல்லது கன்சர் வேடர் (பாதுகாப்பதிகாரி) ஆக இருக்கிறார். கீழைநாட்டுக் கலையின், முக்கியமாக பௌத்தக் கலையின், அவ் வானந்தமான பொருட்காட்சி சாலைக்கு நீ சென்றிருக்கிறாயா? நான் அதைக் காணச் சென்றபோது நீ என்னுடன் வரவில்லை என்று நினைக்கிறேன். குரூசே கீழ் நாகரிகங்களை, அதாவது, ஆசிய நாகரிகங்களை ஆராய்ந்து நான்கு புஸ்தகங்கள் எழுதியுள்ளார். இந்தியா, மத்திய கிழக்கு (மேல் ஆசியாவும் பாரசீகமும்), சீனா, ஜப்பான் இவை ஒவ்வொன்றையும் பற்றி ஒரு புஸ்தகம் எழுதியிருக்கிறார். கலையில் கருத்துடைய அவர், தாம் எடுத்துக் கொண்ட விஷயத்தைக் கலைக் கண்கொண்டு பார்த்திருக்கிறார். அவர் பல அழகிய படங்களைத் தமது புஸ்தகங்களில் தந்துள்ளார். யுத்தங்கள், சண்டைகள், அரசருடைய சூழ்ச்சிகள் இவற்றின் மூலமாகச் சரித்திரம் கற்பதை விட இம் முறையில் கற்பது சாலப் பயன் தருவதாகவும் சுவை பயப்பதாகவும் இருக்கிறது.

இந்தியாவைப் பற்றியும் மத்திய கிழக்கைப் பற்றியும் குரூசே எழுதியுள்ள இரு புஸ்தகங்களை மட்டும் தான் இது வரையில் படித்தேன். அவை

எனக்குப் பேரின்பம் அளித்தன. அவற்றிலுள்ள மனத்தைக் கவரும் அழகிய கட்டிடங்கள், உருவச் சிலைகள், காரைச் சித்திரங்கள், ஓவியங்கள் ஆகியவற்றின் படங்கள் என்னை டேராடூன் ஜெயிலிலிருந்து தூரதேசங்களுக்கும், சென்று போன காலங்களுக்கும் கொண்டு சென்று விட்டன.

வட மேற்கு இந்தியாவில் சிந்து நதிப் பள்ளத்தாக்கிலுள்ள மொஹெஞ்சோதாரோ, ஹாரப்பா என்னும் இடங்களைப் பற்றி வெகு நாளைக்கு முன்பு எழுதினேன். ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் வளர்ந்தோங்கிய புராதன நாகரிகத்தின் அழிவுகளை அங்கே கண்டோம். மொஹெஞ்சோதாரோவில் மக்கள் உண்டு உடுத்து ஓடியாடி வாழ்ந்த அப்புராதன காலத்தில் இவ்வுலகின் வேறு பல இடங்களும் நாகரிகங்களின் தொட்டில்களாக விளங்கின. அவற்றைப் பற்றி நாம் அறிந்திருப்பது மிகவும் குறைவு. நாம் அறிந்திருப்பதெல்லாம் ஆசியாவில் சில இடங்களிலும் எகிப்திலும் அகழ்ந்து கண்ட சில அழிவுகளேயாம். ஒரு வேளை, பூமியை இன்னும் பரவலாகவும் ஆழமாகவும் தோண்டிப் பார்த்தால் அத்தகைய அழிவுகள் இன்னும் பலவற்றைக் கண்டாலும் காணலாம். ஆனால், ஏற்கெனவே நாம் அறிந்துள்ளவற்றிலிருந்தே அக் காலத்தில் கீழ்க்கண்ட இடங்கள் உயர்ந்த நாகரிகங்களுக்கு உறைவிடமாயிருந்தன என்று தெரிகிறது: 1. எகிப்திலுள்ள நைல் நதிப் பள்ளத்தாக்கு. 2. சால்டியா (மெசபொடேமியா) அங்கேயிருந்த இலம் ராஜ்யத்துக்குச் சூசா தலை நகராக விளங்கியது. 3. கீழ்ப் பாரசீகத்திலுள்ள பர்சிபோலீஸ். 4. மத்திய ஆசியாவிலுள்ள துருக்கிஸ்தானம். 5. சீனாவில் மஞ்சள் நதி அல்லது ஹொயாங்ஹோ நதியைச் சார்ந்த இடம்.

நாம் பேசுகிற அக்காலத்தில் கற்கருவிகள் மறைந்து செம்புக்கருவிகள் தோன்றலாயின. எகிப்திலிருந்து சீனா வரையில் பரந்துள்ள அவ்விடங்களிலெல்லாம் ஏறக்குறைய ஒரே படித்தான வளர்ச்சி காணப்படுகிறது. ஒரு பொது நாகரிகம் ஆசியாவின் பல இடங்களிலும் பரவி நின்றது என்பதற்குச் சில அறிகுறிகள் காணப்படுகின்றன. அவ்விடங்கள் தனித்திராமல் ஒன்றோடொன்று தொடர்பு பூண்டே வாழ்ந்தன என்பதையே அது காட்டுகிறது. அக்காலத்தில் விவசாயம் நல்ல நிலையில் இருந்தது என்று தெரிகிறது. வீட்டுமிருகங்கள் வளர்க்கப்பட்டுவந்தன. ஓரளவு வியாபாரமும் நடந்து வந்தது. அக்கால மக்கள் எழுதக் கற்றிருந்தார்கள். ஆனால், அவர்களுடைய பட எழுத்தின் பொருள் நமக்கு விளங்குவதாயில்லை. ஒன்றுக்கொன்று நெடுந்தொலைவிலுள்ள இடங்களில் ஒரே மாதிரியான கருவிகள் காணப்படுகின்றன. அவற்றின் கலைப்பொருள்களும் வியக்கத்தக்க விதத்தில் பெரிதும் ஒத்திருக்கின்றன. அக்காலப் பொருள்களில் நமது கவனத்தைக் கவருபவை வர்ணம் தீட்டிய மட்பாண்டங்களும், பலவகையான சித்திர வேலைப்பாடமைந்த பூம்பாத்திரங்களும் ஆகும். அவ்வர்ண மட்பாண்டங்கள் எங்கும் மிகுதியாகக் காணப்படுவதால் அக்காலம் முழுவதற்குமே 'வர்ண மட்பாண்ட நாகரிகக் காலம்' என்று பெயர் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் பொன்னாலும் வெள்ளியாலும் செய்த அணிவகைகளும், வெண் கல்லிலும் சலவைக் கல்லிலும் செய்த பாத்திர வகைகளும், பஞ்சினால் செய்த ஆடை வகைகளும் காணப்படுகின்றன. எகிப்திலிருந்து சிந்துநதிப் பள்ளத்தாக்கு, சீனாவரையிலும் உள்ள ஆதிநாகரிகத்தின் தாயகங்களாகிய அவ்விடங்கள் ஒவ்வொன்றும் தத்தமக்குரிய சிறப்பியல்புகளோடு பொருந்தித் தனி வாழ்வு நடத்தி

வந்தனவாயினும் அவற்றினூடு அறுபடாத ஒரு பொது நாகரிகத்தின் சரடு ஓடுவதை நாம் காண்கிறோம்.

அந்நாகரிகம் ஏறக்குறைய 5,000 ஆண்டுகளுக்கு முந்தையதாகும். ஆனால், அது அதற்கு முன் பல்லாயிரம் ஆண்டுகளாகச் சிறிது சிறிதாக அபிவிருத்தி அடைந்து வந்து 5000 வருஷ காலத்துக்கு முன் அந்நிலையை அடைந்திருக்கவேண்டும் என்பதில் ஐயமில்லை. நைல் பள்ளத்தாக்கிலும் சால்டியாவிலும் தவழ்ந்த நாகரிகங்களின் பூர்வோத்திரத்தை அதற்கும் 2000 வருஷ காலத்துக்குமுன் வரையில் அறிய முடிகிறது. மற்ற இடங்களின் நாகரிகங்களும் அவ்வளவு பழைமை வாய்ந்தனவாக இருக்கலாம்.

ஆதி செம்புக்கருவிக் காலத்தைச் (கி. மு. 3000) சேர்ந்த அப்பரந்த பொதுநாகரிகத்திலிருந்தே நாற்பெருங் கீழ்நாகரிகங்கள் தனித்தனி கிளைத்துப் படர்ந்தன என்று கொள்ளலாம். அவை எகிப்திய, மெசபொடேமிய, இந்திய, சீன நாகரிகங்களாகும். இப்பிற்காலத்தில் தான் எகிப்தில் 'பிரமிட்' என்னும் பெரிய சமாதிக் கோபுரங்களும், கிசேயிலுள்ள 'ஸ்பிங்சு' என்னும் பேருருவும் தோன்றின. அதற்கும் பிற்பட்டகாலத்தில், அதாவது, கி. மு. 2000 ஆண்டில், அங்கே தீபிய சாம்ராஜ்யம் செழித்தோங்கியது. அப்போது வியப்பே வடிவாகிய கற்சிலைகளும் காரைச்சித்திரங்களும் சிருஷ்டிக்கப் பட்டன. அது கலை புத்துயிர் பெற்று மலர்ந்த காலமாகும். லக்சாரிலுள்ள பெருங்கோயில் அப்போது தான் கட்டப்பட்டது. தீபியபாரோக்களில் (மன்னர்களில்) ஒருவனான 'துதங்காமன்' அரசாண்ட காலமும் அதுவே. 'துதங்காமன்' என்னும் பெயரை எல்லாரும் அறிந்திருக்கிறார்களே ஒழிய அவனைப்பற்றிய மற்ற விவரங்கள் யாருக்கும் தெரியவில்லை.

சால்டியாவில் சுமேர், அக்கட் என்னும் இரு பிரதேசங்களிலும் நன்கு அமைக்கப்பட்ட, பலம்பொருந்திய இரு ராஜ்யங்கள் தோன்றின. சால்டியாவின் புகழ்மிக்க ஊர் நகரமானது மொஹெஞ்சோதாரோ காலத்திலேயே உத்தமமான கலைப் பொருள்களை உற்பத்தி செய்துவந்தது. அது 700 ஆண்டுகள் வீறு கொண்டு வாழ்ந்தபின் வீழ்ந்துபட்டது. சிரியாவிலிருந்து வந்த செமிடிக் வகுப்பைச் சேர்ந்த (யூதர் அல்லது அரேபியர் போன்றவர்கள்) பாபிலோனியர் புதிதாக அரசைக் கைப்பற்றினார்கள். பாபிலோன் நகரம் ஒரு புதிய சாம்ராஜ்யத்தின் ராஜதானியாயிற்று. பைபிளில் பாபிலோன் நகரைப்பற்றிய பிரஸ்தாபம் அடிக்கடி வருகிறது. அக்காலத்தில் இலக்கியம் மறுமலர்ச்சி பெற்றுத் திகழ்ந்தது. இசையோடு பாடக்கூடிய இதிகாசக் கவிதைகள் தோன்றின. உலகத்தின் தோற்றத்தையும் அப்போது உண்டான மகாப்பிரளயத்தையும் வருணிக்கும் அக்கவிதைகளைப் பொருளாகக் கொண்டே பைபிளின் ஆரம்ப அத்தியாயங்கள் எழுதப்பட்டன.

பிறகு பாபிலோன் வீழ்ச்சியுற்றது. அதற்குப் பல நூற்றாண்டுகளுக்குப்பின் (கி. மு. 1000-த்திலிருந்து தொடங்கி) அசீரியர் தோன்றி நினேவேயைத் தலைநகராகக் கொண்ட ஒரு சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்தார்கள். அசீரியர் அசாதாரணமான ஒரு வகுப்பார். அவர்கள் அளவுக்கு மீறிய கொடுமையும் மிருகத்தனமும் உடையவர்களாயிருந்தார்கள். அவர்களுடைய அரசாங்கம் முழுதும் பயங்கர முறையை ஆதாரமாகக் கொண்டிருந்தது. ஊரை அழித்தும் உயிரை வதைத்தும் அவர்கள் மத்தியகிழக்கு முழுதும் தங்கள் சாம்ராஜ்யத்தைப் பரப்பினார்கள். அவர்களை அக்காலத்துச் சாம்ராஜ்யவாதிகள் என்று சொல்லலாம். ஆயினும்,

அவர்கள் சில வழிகளில் மேலான கலைப்பண்பு வாய்ந்திருந்தார்கள். அப்போது வழங்கிய கலா சாஸ்திர வகைகள் அனைத்தையும் கொண்ட ஒரு பெரிய நூல் நிலையம் நினேவேயில் இருந்தது. அந்த நூல் நிலையத்தில் தற்காலத்தைப் போன்ற காகிதநூல்கள் இல்லை என்று சொல்லவேண்டியதில்லை. அந்நூல்கள் செப்பேடுகளில் எழுதப்பட்டிருந்தன. நினேவேயின் பழைய நூல் நிலையத்தைச் சேர்ந்த அச் செப்பேடுகள் ஆயிரக்கணக்கில் இன்று லண்டனிலுள்ள பிரிட்டிஷ் மியூசியத்தில் (பொருட்காட்சி சாலை) உள்ளன. அவற்றில் சிலவற்றைப் பார்ப்பதற்கே பயமாயிருக்கிறது. அவற்றில் அசீரிய அரசன் தன் பகைவரை இம்சித்த விதமும் அதை அவன் கண்டு மகிழ்ந்த விதமும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

இந்தியாவுக்கு மொஹெஞ்சோதாரோ காலத்துக்குப்பின் ஆரியர் வந்தார்கள். ஆரியரின் ஆதிகால வாழ்வைக் குறிக்கும் அழிவுகளோ உருவச்சிலைகளோ இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால், வேதங்கள் முதலான அவர்களுடைய ஆதி கிரந்தங்கள் அவர்களுடைய நாகரிகத்தின் ஒப்புயர்வற்ற ஞாபகச் சின்னங்களாக விளங்குகின்றன. அக்கிரந்தங்கள், இந்தியச் சமவெளிகளில் வந்து குடியேறிய போர் விருப்புமிக்க அவ்வாரியரின் மனக்குகையை நமக்குத் திறந்து காட்டுகின்றன. அவற்றில் இயற்கைக் கவிதை பொங்கி வழிகிறது. அவர்களுடைய கடவுளர் எல்லாம் இயற்கைக் கடவுளரே. இயற்கைக் காதல் எப்போதுமே கலைவளர்ச்சிக்கு உதவி புரியும் இயல்புடையது. இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் ஆரியக் கலைச்சின்னங்களில் பழைமையானவை போபாலுக்கு அருகிலுள்ள சாஞ்ச்சி வாயில்களாகும். அவை ஆதி பௌத்தகாலத்தைச் சேர்ந்

தவை. அவற்றில் செதுக்கியுள்ள அழகே மலர்ந்த மலர்களும் இலைகளும் கொடிகளும் விலங்குருவங்களும் அவற்றைச் சமைத்த கலைவல்லோரின் இயற்கைக் காதலையும் அறிவையும் தெள்ளிதில் புலப்படுத்துகின்றன.

அதற்குப் பின் வடமேற்கிலிருந்து கிரேக்கப் பிரபாவம் இந்தியாவுக்கு வந்தது. அலெக்சாந்தர் காலத்துக்குப்பின் கிரேக்க சாம்ராஜ்யங்கள் இந்திய எல்லையை ஒட்டியிருந்தமை உனக்கு நினைவிருக்கும். அதற்குப் பின் குஷாணர்களின் எல்லைப்புற சாம்ராஜ்யம் தோன்றியது. அதிலும் கிரேக்கப் பிரபாவம் மிகுதியாகக் காணப்பட்டது. புத்தர் உருவவழிபாட்டை ஆதரிக்கவில்லை. அவர் தம்மைக் கடவுள் என்றும், தம்மைப் பிறர் வணங்க வேண்டும் என்றும் சொல்லவில்லை. புரோகிதப் புரட்டினால் விளைந்த தீமைகளை அவர் சமூகத்திலிருந்து அகற்ற விரும்பினார். துன்பக்கடலில் வீழ்ந்திருப்போரைக் கைதூக்கிக் கரையேற்ற வந்த கருணைக்கடல் (சீர்திருத்தக்காரர்) அவர். காசிக்கருகிலுள்ள இசி பட்டணம் அல்லது சாரநாத் என்னுமிடத்தில் அவர் செய்த முதல் பிரசங்கத்தில் அவர் கூறுவதாவது: "அஞ்ஞானத்தில் ஆழ்ந்திருப்பவர்களுக்கு ஞானம் வழங்குவதற்காகவே நான் வந்திருக்கிறேன். உத்தம புருஷனானவன் ஜீவகோடிகளுக்கு நன்மை புரிவதில் தன்னை இழந்துவிட வேண்டும். கைவிடப்பட்டோரை அவன் கை தூக்கிவிடவேண்டும். இல்லாவிட்டால் அவன் உத்தம புருஷன் ஆகான்.........ஜீவகாருணியமே என்னுடைய மதம். அதனால்தான் இவ்வுலகில் சுகபோகங்களில் வாழ்பவர்களுக்கு அதை அனுஷ்டிப்பது கஷ்டமாயிருக்கிறது. முத்திக்கான வழி எல்லோருக்கும் திறந்திருக்கிறது. சண்டாளனைப் போலவே பிராமணனும் பெண்ணின் வயிற்றில் தான் பிறந்தான். ஆனால், பிராமணன்

முத்திக்கு வழியைச் சண்டாளனுக்கு மூடிவிடுகிறான். நாணற் குடிசையை யானை முறித்தெற்றுவது போல உங்களுடைய ஆர்வச் செற்றங்களை அழித்து நூறுங்கள் ......தீமையை நீக்கும் ஒரு தனி மருந்து அறிவுண்மையே யாகும்.” இத்தகைய நன்னெறியையும் ஒழுக்க முறையை யும் புத்தர் போதித்தார். ஆனால், அவருடைய சீடர்கள் அவர் விதித்த புறஒழுக்கங்களை மட்டும் கடைப் பிடித்த வர்களாய் அவற்றின் அகப்பொருளை அறியாது விட்டனர். குருமொழியின் உட்பொருளை உணராத முட்டாள் சீடர் களின் வேலையே எப்பொழுதும் இப்படித்தான். புத்தரின் சீடர்கள் அவருடைய அறவுரையைப் பின்பற்றுவதற்குப் பதிலாக அவரை வணங்கத் தலைப்பட்டார்கள். ஆயினும், அதுவரையில் புத்தருடைய சிலைகளோ, விக்கிரகங்களோ தோன்றவில்லை.

பின்னர், கிரீஸ் முதலான நாடுகளின் கருத்துகள் இந்தியாவுக்கு வந்தன. அந்நாட்டவர் தங்களுடைய கடவுளுக்கு அழகிய உருவச் சிலைகள் எடுத்து அவற்றை வழிபட்டு வந்தார்கள். இந்தியாவின் வடமேற்கிலுள்ள காந்தார நாட்டில் கிரேக்கப் பிரபாவம் அதிகமாயிருந் தது. அங்கேதான் முதன் முதலாகக் கல்லில் புத்தருடைய குழந்தை வடிவத்தைச் செதுக்கினார்கள். கிரேக்கருடைய காமதேவனைப் போல் அது சிறிதாகவும் அழகாகவும் இருந்தது. பின்னர் தோன்றப் போகும், இதாலியர் தெய்வக் குழந்தை என அழைக்கும், கிறிஸ்துவின் குழந்தை வடிவத்தைப் போல் அது இருந்தது. பௌத்த மதத்தில் உருவ வழிபாடு இவ்வாறு ஆரம்பமாயிற்று. கடைசியில் புத்தருடைய உருவங்கள் இல்லாத பௌத்தர் கோயிலே இல்லை என்று ஆய்விட்டது.

ஈரானிய அல்லது பாரசீகப் பிரபாவமும் இந்தியக் கலையைப் பாதித்தது. பௌத்தக் கதைகளும் ஹிந்து

புராண இதிகாசங்களும் இந்தியக் கலைஞருக்கு வற்றாத விஷய ஊற்றாக இருந்தன. ஆந்திர தேசத்திலுள்ள அமராவதியிலும், பம்பாய்க்கு அருகிலுள்ள அஜந்தா எலிபன்டா குகைகளிலும், அஜந்தாவிலும், எல்லூ ரிலும் இன்னும் பல இடங்களிலும் அப்புராணக் கதைகள் கல்லில் செதுக்கிய உருவத்திலும் காரையில் தீட்டிய ஓவியத்திலும் சிரஞ்சீவியாயிருப்பதைக் காண லாம். அவ்விடங்களுக்குச் சென்று அவ்வாச்சரியத்தை அனைவரும் பார்க்க வேண்டும். நமது பள்ளிச்சிறுரும் சிறுமியரும் அவற்றில் சில இடங்களையாவது பார்க்க வேண்டும் என்பது எனது அவா.

இந்தியக் கதைகளும் காவியங்களும் கடலுக்கு அப்பாலுள்ள நாடுகளுக்கும் (அதீத இந்தியா) சென்றன. ஜாவாவிலுள்ள பொரபுதூரில் புத்தர் பெருமானுடைய சரித்திரம் பூராவும் அற்புதமான காரைச் சித்திரங்களில் பொறிக்கப்பட் டிருக்கின்றன. அழிந்து கிடக்கும் அங்கோர்வாட் நகரின் அழகிய உருவச் சிலைகள் அந்நகர் 800 ஆண்டுகளுக்கு முன் ‘அங்கோர்வாட் அணி நகரம்’ என்னும் பெயருடன் கீழ் ஆசியாவில் பிரசித்தி பெற்று விளங்கிய மகோன்னத காலத்தை நமக்கு நினைவூட்டு கின்றன. அவ்வுருவச் சிலைகளின் முகங்களில் ஜீவகளையும் அன்பும் ததும்பி வழிகின்றன. அம்முகங்களில் அதிசய மான மாயப் புன்னகை ஒன்று தவழ்கிறது. அப்புன்னகை ‘அங்கோர் நகரின் அதிசயப் புன்னகை’ என்று ஆசை யுடன் அழைக்கப்படுகிறது. முகவடிவு மாறினாலும் அப் புன்னகை மாறுவதில்லை. அப்புன்னகையின் அழகு பருகப் பருகத் தெவிட்டாதது.

ஒரு குறிப்பிட்ட காலத்தைச் சேர்ந்த மக்களின் வாழ்வையும் நாகரிகத்தையும் உள்ளவாறு பிரதிபலிக் கும் கண்ணாடி கலையாகும். இந்திய நாகரிகம் உயிராற்

றல் பொங்கித் ததும்பிய காலத்தில் அது அழகுப் பொருள்களைப் படைத்தது. கலைகள் சிறந்தோங்கின. அவற்றின் எதிரொலி தொலைநாடுகளிலும் கேட்கப்பட்டது. ஆனால், அதற்குப்பின் உயிரியக்கம் தடைப்பட்டு அழிவு காலம் பிறந்தது. நாடு வீழ்ச்சியுறவே கலைகளும் வீழ்ச்சியுற்றன. அவை ஆக்கமும் வன்மையும் இழந்து விபரீத அலங்காரங்களின் விளைநிலமாக விரிந்தன. முஸ்லிம்களின் வருகை அக் கலைகளுக்குப் பேரதிர்ச்சியைக் கொடுத்தது. முஸ்லிம் பிரபாவம் இந்தியக் கலையின் இழிந்த விபரீத அலங்காரங்களை அகற்றின. இந்தியாவின் பழைய லட்சியம் அரேபியாவிலிருந்தும் பாரசீகத்திலிருந்தும் வந்த எளிமையும் அழகும் வாய்ந்த புதிய உடைகளில் காட்சி அளித்தன. பழைய காலத்தில் ஆயிரக்கணக்கான உத்தம சிற்பிகள் இந்தியாவிலிருந்து மத்திய ஆசியாவுக்குச் சென்றார்கள். இப்பொழுதோ சிற்பியரும் ஓவியரும் மேல் ஆசியாவிலிருந்து இந்தியாவுக்கு வந்தார்கள். பாரசீகத்திலும் மத்திய ஆசியாவிலும் கலை மறுமலர்ச்சிபெற்றுத் திகழ்ந்தது. கான்ஸ்டாண்டிநோபிளில் கட்டிடக் கலை வல்லோர் மாபெரும் கட்டிடங்களை எழுப்பிக்கொண்டிருந்தார்கள். அக் காலத்தில் இதாலியிலும் கலை புத்துயிர் பெற்று வளர்ந்துகொண்டிருந்தது. அங்கே தலையாளரான கலையாளர் தோன்றி அழகு மிக்க ஓவியங்களையும் சிற்பங்களையும் ஆக்கிக்கொண்டிருந்தார்கள்.

அக்காலத்தில் சினான் என்னும் சிற்பி துருக்கியில் புகழ்பெற்று விளங்கினான். அவனுடைய பிரிய சிஷ்யனான யூசுப்பைத்தான் பாபர் இந்தியாவுக்குத் தருவித்தார். ஈரானில் பிஜாத் என்பவன் சித்திரக் கலையில் சிரேஷ்டனாக விளங்கினான். அவனுடைய சிஷ்யர்களில் பலரை அக்பர் தருவித்துத் தன்னுடைய சமஸ்தான

சைத்திரிகர்கள் ஆக்கிக் கொண்டான். இந்தியச் சிற்பம், சித்திரம் இரண்டிலும் பாரசீகத்தின் பிரபாவம் அதிகமாகத் தென்பட்டது. முன்கடிதம் ஒன்றில் மொகலாய இந்தியாவில் இவ்விந்திய—முஸ்லிம் கலையின் சின்னங்கள் விளங்கிய பெரிய கட்டிடங்களைப் பற்றிக் கூறியுள்ளேன். அவற்றில் பலவற்றை நீ பார்த்திருக்கிறாய். இந்திய—பாரசீகக் கலையின் வெற்றிச் சிகரம் தாஜ்மஹல். மாபெரும் சிற்பிகள் பலர் சேர்ந்து அதை நிருமாணித்தார்கள். அவர்களில் உஸ்தாது ஈசா என்பவன் தலைமைச் சிற்பி. அவன் துருக்கி அல்லது பாரசீகத்தைச் சேர்ந்தவன். அவனுக்கு உதவியாகப் பல இந்தியச் சிற்பிகள் இருந்தார்கள். தாஜ்மஹலின் உட்புற அலங்கார வேலையைச் சில ஐரோப்பியச் சிற்பிகள்-அவர்களில் ஒரு இதாலியச் சிற்பியை முக்கியமாகச் சொல்லவேண்டும்—செய்ததாகக் கருதப்படுகிறது. பல்வேறு சிற்பிகள் வேலை செய்தும் அதில் யாதொரு விதமான முரண்பாடும் காணப்படாததுதான் ஆச்சரியமாகும். பல்வேறு பிரபாவங்கள் தம்முள் தலைமயங்கித் தாஜ்மஹல் என்னும் அற்புதக் கலைக் கோயிலாகப் பூத்தன. பல்வேறு பிரபாவங்கள் அதை ஆக்கினவாயினும் அவற்றில் தலையாயவை பாரசீக, இந்தியப் பிரபாவங்களே ஆகும். ஆகையால்தான் “தாஜ்மஹல் இந்தியாவை உடலாகவும் ஈரானை உயிராகவும் கொண்டது” என்று குரூசே கூறுகிறான்.

124

தொன்றுதொட்டு இன்றுகாறும் அழியாதிருந்து வரும் ஈரானின் பழைய மரபு

ஜனவரி 20, 1933.

எந்தப் பாரசீகத்தின் உயிர் இந்தியாவுக்கு வந்து தாஜ்மஹாலைத் தனக்குரிய உறைவிடமாகக்கொண் டிருக்கிறதோ அந்தப் பாரசீகத்துக்கு நாம் இப்போது செல்வோம். பாரசீகத்தின் கலைமரபு மிகவும் தொன்மை வாய்ந்தது. அசீரியர் காலத்திலிருந்து, அதாவது, 2000 வருஷ காலமாக அழியாதிருந்து வரும் அதன் ஆற்றலைக் காணும் போது நமக்கு வியப்பு உண்டாகிறது. அந் நீண்டகாலத்தில் அந்நாட்டின் அரசியல், மதத்துறைகளில் மாறுதல்கள் நிகழாமலில்லை. அரச பரம்பரைகளிலும் அரசாங்கங்களிலும் மாறுதல்கள் ஏற்பட்டன. விதேச அரசர்களும் சுதேச அரசர்களும் அதை ஆட்சி புரிந்தார்கள். இஸ்லாம் மார்க்கம் வந்து பெரும் புரட்சியை உண்டுபண்ணியது. இவ்வாறு பாரசீகம் காலப்போக்கில் மாறுதலுற்று அபிவிருத்தி அடைந்து வந்திருப்பது உண்மையே. ஆயினும், பாரசீகத்தின் கலைமரபு மட்டும் அன்று பார்த்த கண்ணுக்கு அழிவில்லாமல் சிரஞ்சீவியாகவே இருந்து வருகிறது. அதற்குக் காரணம் பாரசீகக் கலைக்கும் பாரசீக நிலத்தோற்றத்துக்கும் உள்ள தொடர்புதான் என்று கூறப்படுகிறது.

நினேவேயைத் தலைநகராகக் கொண்ட அசீரிய சாம்ராஜ்யத்தைப் பற்றிச் சென்ற கடிதத்தில் கூறினேன். அது பாரசீகத்தைத் தன்னுள் கொண்டிருந்தது.

கிறிஸ்துவுக்கு 500 அல்லது 600 ஆண்டுகளுக்கு முன்னால் ஆரிய வகுப்பைச் சேர்ந்த ஈரானியர் நினேவேயைக் கைப்பற்றி அசீரிய சாம்ராஜ்யத்தை முடிவுக்குக் கொண்டு வந்தார்கள். அப்புறம் பாரசீக—ஆரியர் சிந்துநதிக்கரையிலிருந்து எகிப்து வரையில் தங்களுக்கென்று ஒரு பெரும் சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்து அதை ஆண்டுவந்தார்கள். பண்டைய உலகில் அவர்களுடைய ஆதிக்கம் மிகுந்திருந்தது. கிரேக்க வரலாறுகளில் அவர்களுடைய அரசன் 'பேரரசன்' என்று குறிக்கப்படுகிறான். சைரஸ், டரையஸ், ஸெர்க்ஸிஸ் ஆகியோர் அப் 'பேரரசரில்' சிலராவர். டரையஸ், ஸெர்க்ஸிஸ் ஆகிய இருவரும் கிரீசை வெல்ல முயன்று தோல்வி அடைந்த கதை உனக்கு ஞாபகமிருக்கலாம். அவர்களுடைய வமிசம் அகீமெனிது வமிசம் என்று அழைக்கப்படுகிறது. அந்த வமிசம் 220 ஆண்டுகள் வரையில் ஒரு பரந்த சாம்ராஜ்யத்தைக் கட்டி ஆண்டது. மாசிடோனியாவைச் சேர்ந்த மகா அலெக்சாந்தர் வந்து அதைத் தீர்த்துக் கட்டினான்.

பாபிலோனியர், அசீரியர் ஆகியோருடைய கொடுங்கோல் ஆட்சிக்குப்பின் பாரசீகமன்னரின் ஆட்சி மக்களுக்குப் பெரிய ஆறுதலை அளித்திருக்க வேண்டும். அவர்கள் பொறையும் நாகரிகமும் பொருந்தியவர்களாயிருந்தார்கள். அவர்களுடைய குடை நிழலில் பல்வேறு மதங்களும் கலைப்பண்புகளும் செழித்தோங்கின. அவர்கள் தங்களுடைய பரந்த சாம்ராஜ்யத்தை நன்கு பரிபாலித்து வந்தார்கள். சாம்ராஜ்யத்தின் சகல பாகங்களையும் நல்ல போக்குவரவு மார்க்கங்கள் பிணித்து நின்றன. அப் பாரசீக ஆரியருக்கும் இந்தியாவுக்கு வந்த இந்திய—ஆரியருக்கும் நெருங்கிய உறவு உண்டு. பாரசீக ஆரியரின் ஜாரதுஷ்டிரமதம் இந்திய ஆரியரின் ஆதி

வைதிக மதத்தோடு தொடர்புடையது. இருமதங்களும் ஆரியரின் ஆதித்தாயகத்தில்—அத்தாயகம் எதுவாயிருப்பினும்—தோன்றின என்று கொள்ளலாம்.

அகிமெனிது வமிசத்தைச் சேர்ந்த அரசர்கள் கட்டிடநிருமாணத்தில் அதிகக் கவனம் செலுத்தினுர்கள். அவர்களுடைய தலைநகராகிய பர்சிபோலிசில் அவர்கள் பெரிய பெரிய அரண்மனைகளைக் கட்டினுர்கள்; அவ்வரண்மனைகளில் விசாலமான ஆயிரக்கால் மண்டபங்களை அமைத்தார்கள். அவர்கள் கோயில்கள் கட்டவில்லை. இப்போதுள்ள சில அழிவுகளைப் பார்த்தாலே அவர்கள் எழுப்பிய கட்டிடங்களின் பெருமை ஒருவாறு தெரியவரும். அகிமெனிது கலை மவுரியர் (அசோகர் முதலானவர்கள்) காலத்து இந்தியக் கலையுடன் தொடர்புகொண்டு அதைப் பாதித்ததாகத் தெரிகிறது.

அலெக்சாந்தர் 'பேரரச' னுன டரையசைத் தோற்கடித்து அகிமெனிது வமிசத்துக்கு முற்றுப் புள்ளி வைத்தான். அதற்குப்பின் அலெக்சாந்தரின் தளபதியான செலூகசும் அவன் சந்ததியாரும் சிறிதுகாலம் பாரசீகத்தை ஆண்டார்கள். அதற்கப்புறம் அவர்களில் வேறுன அரை அந்நியரான பிற அரசர்கள் நெடுங்காலம் பாரசீகத்தை ஆண்டார்கள். அவர்களுடைய ஆட்சியில் கிரேக்கப் பிரபாவம் அதிகமாயிருந்தது. அதேகாலத்தில் இந்திய எல்லைப் புறத்தில் குஷாணர்கள் அரசு வீற்றிருந்தார்கள். அவர்களுடைய சாம்ராஜ்யம் தெற்கே காசி வரையிலும் வடக்கே மத்திய ஆசியா வரையிலும் பரவியிருந்தது. அவர்களுடைய ஆட்சியிலும் கிரேக்கப் பிரபாவம் அதிகமாயிருந்தது. ஆக, இந்தியாவுக்கு மேல் பாரிசத்திலுள்ள ஆசியப் பகுதிமுழுதும் அலெக்சாந்தருக்குப்பின் 500 ஆண்டுகளுக்கு மேலாக, அதாவது, கி. பி. மூன்ருவது நூற்ருண்டு வரையில் கிரேக்கப் பிரபாவத்துக்கு ஆட்பட்டிருந்தது. அப்பிரபாவம் பெரும்பாலும் கலைத்துறையைப் பற்றியதாக இருந்தது. அது பாரசீக மதத்தில் தலையிடவில்லை. ஜாரதுஷ்டிரமதமே பாரசீகத்தின் மதமாயிருந்து வந்தது.

கி. பி. மூன்ருவது நூற்ருண்டில் பாரசீகத்தில் தேசிய மறு மலர்ச்சி தோன்றியது. ஒரு புதிய வமிசம் அதிகாரத்துக்கு வந்தது. அது சசநீத வமிசம் என்று அழைக்கப் படுகிறது. அது பழைய அகிமெனிது அரசர்களின் பரம்பரையில் தானும் வந்ததாகச் சொல்லிக்கொண்டது. அதன் தேசியம் மிகவும் தீவிரப் போக்கு வாய்ந்ததாக இருந்தது. தீவிர தேசியத்துக்கு உரிய இலக்கணப்படி சசநீதரின் தேசியமும் குறுகியதாகவும் பொறுமையற்றதாகவும் இருந்தது. அதற்குக் காரணம் மேற்கே ரோம, பைஜாண்டிய சாம்ராஜ்யங்களும் கிழக்கே முன்னேறி வரும் துருக்கிய வகுப்பாரும் அதை நெருக்கியது தான். ஆயினும், சசநீதர் 400 வருஷங்கள் வரையில், அதாவது, இஸ்லாம் வரும்வரையிலும் ஆட்சி புரிந்தார்கள். அவர்களுடைய ஆட்சியில் ஜாரதுஷ்டிரப் புரோகித வகுப்பு வைத்ததுதான் சட்டம். அரசாங்கம் அப்புரோகிதர்களுடைய வசத்தில் இருந்தது. அவர்கள் தங்களை எதிர்த்தவர்களை ஒறுத்தார்கள். சசநீதருடைய ஆட்சிக் காலத்தில்தான் பாரசீகரின் பரிசுத்த வேதமாக ஜெந்த் அவெஸ்தா முடிவாகத் தொகுக்கப்பட்டது.

அக்காலத்தில் இந்தியாவில் குப்தசாம்ராஜ்யம் மகோன்னத நிலையில் இருந்தது. குஷாணர், பௌத்தருடைய ஆட்சிக் காலத்துக்குப் பின்தோன்றிய குப்த சாம்ராஜ்யம் இந்திய தேசிய மறுமலர்ச்சியைக் குறித்து நின்றது. கலையும் இலக்கியமும் புத்தொளி பெற்றுத் திகழ்ந்தன. காளிதாசன் முதலான சம்ஸ்கிருத மகாகவிகள் வாழ்ந்த காலம் அதுதான். சசநீதப் பாரசீகமும்

குப்த இந்தியாவும் கலைத்தொடர்பு பூண்டிருந்தன என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. சசநீதர் காலத்துச் சிற்பங்களிலும் சித்திரங்களிலும் இன்று எஞ்சியுள்ளவை மிகச்சிலவே. அவற்றில் உயிரும் இயக்கமும் ததும்பக் காண்கிறோம். அவர்கள் தீட்டியுள்ள விலங்குருவங்கள் அஜந்தா குகைச் சித்திரங்களை ஒத்திருக்கின்றன. சசநீதக் கலைப் பிரபாவம் சீனு, கோபி பாலைவனம் வரையில் வியாபித்திருந்ததாகத் தெரிகிறது.

அவர்களுடைய நீண்ட ஆட்சியின் முடிவில் சசநீதர் வலிகுன்றிப்போனார்கள். நாடும் சீர்கேடுற்றது. பைஜாண்டிய சாம்ராஜ்யத்துக்கும் பாரசீகத்துக்கும் நடந்துவந்த நெடிய போரின் பயனாக இரு திறத்தாரும் களைத்துப் போனார்கள். அந்த நிலையில் தங்களுடைய புதிய மார்க்கத்தில் ஆர்வம்கொண்ட அரேபியச் சேனைகளுக்குப் பாரசீகத்தை ஜெயிப்பது கஷ்டமாயில்லை. ஏழாவது நூற்றாண்டின் இடையில், அதாவது, முகம்மது நபிகள் இறந்து பத்தாண்டுகள் கழியுமுன்னரே, பாரசீகம் கலீபாவின் ஆட்சிக்குக் கீழ் வந்துவிட்டது. மத்திய ஆசியாவிலும் வட ஆப்பிரிக்காவிலும் படர்ந்த அரேபிய சேனைகள் தங்களுடன் தங்களுடைய புதிய மதத்தை மட்டுமின்றி வளரும் பருவத்து இளம் நாகரிகம் ஒன்றையும் கொண்டு சென்றன. அரேபிய கலைப் பண்பு சிரியாவையும், மெசபொடேமியாவையும் எகிப்தையும் ஆட்கொண்டு விட்டது. அரேபிய மொழியே அந்நாடுகளின் மொழியாயிற்று. அந்நாடுகளில் வாழ்ந்த மக்களும் அரேபிய ஜாதியில் ஐக்கியமாகி விட்டார்கள். பாக்தாது, டமாஸ்கஸ், கெய்ரோ ஆகிய நகரங்கள் அரேபியக் கலைப்பண்பின் கேந்திர ஸ்தானங்களாக விளங்கின. அந்நகர்களில் புதிய நாகரிகத்தின் உத்வேகத்தினால் பற்பல அழகிய மாடமாளிகைகள் தோன்றின. இன்றுகூட அந்நாடுகளெல்லாம் அரேபிய நாடுகளேயாகும். அவை இன்று ஒன்று சேரமுடியாமல் பிரிக்கப்பட்டிருந்தாலும் ஒற்றுமையைப் பற்றிக் கனவுகண்டுகொண்டிருக்கின்றன.

மற்ற நாடுகளைப் போலவே அரேபியர் பாரசீகத்தையும் ஜெயித்தார்கள். ஆனால், சிரியாவிலும் எகிப்திலும் செய்தது போல் அரேபியர் பாரசீக மக்களைத் தங்கள் ஜாதியில் சேர்த்துக் கொள்ள முடியவில்லை. ஈரானிய வகுப்பு பழைய ஆரிய வகுப்பைச் சேர்ந்ததாகையால் செமிடிக் வகுப்பைச் சேர்ந்த அரேபியரிடமிருந்து சற்று அதிகமாக விலகியிருந்தது. ஈரானிய மொழியும் ஆரிய மொழி. ஆகவே, ஈரானியர் தனித்து நின்றார்கள். அவர்களுடைய மொழியும் வளம் மிக்குச் செழித்தது. இஸ்லாம் விரைவில் பரவி ஜாரதுஷ்டிரமதத்தைப் பாரசீகத்திலிருந்து ஓட்டிவிட்டது. ஜாரதுஷ்டிரமதம் கடைசியில் இந்தியாவில் வந்து சரண்புக வேண்டியதாயிற்று. இஸ்லாம் மதத்தில்கூடப் பாரசீகர் தங்கள் சொந்தவழியைப் பின்பற்றினார்கள். அதில் பிளவு ஏற்பட்டு இருகட்சிகள் தோன்றின. இஸ்லாம் மதத்தில் ஷியா, சுன்னி என்று இரு கிளைகள் பிரிந்தன. பாரசீகம் அன்றும் இன்றும் பெரும்பாலும் ஷியா நெறியில் நின்று வருகிறது. ஏனைய இஸ்லாமிய உலகம் பெரும்பாலும் சுன்னி நெறியைப் பின்பற்றுவதாகும்.

அரேபியாவால் பாரசீகத்தைத் தன் மயமாக்கக் கூடவில்லையாயினும், அரேபிய நாகரிகம் பாரசீகத்தைப் பெரிதும் ஆட்கொண்டது. இந்தியாவைப் போலவே பாரசீகத்திலும் கலை வாழ்வுக்கு இஸ்லாம் புத்துயிர் அளித்தது. அதைப் போலவே பாரசீக நாகரிகமும் அரேபியக் கலையையும் பண்பையும் பெரிதும் ஆட் கொண்டது. பாரசீகத்துக்குரிய சுகபோகப் பெரு வாழ்வு பாலைவனத்துக்

குழந்தைகளாகிய எளிய அரேபியர் இல்லங்களுக்குப் படையெடுத்துச் சென்றது. அரேபிய கலீபாவின் தர்பார் ஆடம்பரத்திலும் பகட்டிலும் வேறு எந்தச் சாம்ராஜ்யத் தர்பாருக்கும் குறைந்ததாயில்லை. அரேபிய சாம்ராஜ்யத்தின் தலைநகராகிய பாக்தாது உலகிலேயே திருமிக்க பெரு நகராக விளங்கியது. அதற்கு வடக்கே சமாராவில் டைகிரிஸ் நதிக்கரையின் மீது கலீபாக்கள் தங்களுக்கென்று ஒரு பெரிய மசூதியையும் அரண்மனையையும் கட்டினார்கள். அவற்றின் அழிவுகள் இன்னும் காணக் கிடக்கின்றன. அம்மசூதி பெரிய கூடங்களையும், நீர் விசிறிகளுள்ள முற்றங்களையும் கொண்டதாயிருந்தது. அவ்வரண்மனை நீள் சதுர வடிவத்தில் அமைந்திருந்தது. அதன் ஒரு பக்கத்து நீளம் சுமார் முக்கால் மைல் ஆகும்.

ஒன்பதாவது நூற்றாண்டில் பாக்தாது சாம்ராஜ்யம் க்ஷீணித்துப் பல ராஜ்யங்களாகப் பிரிந்து விட்டது. பாரசீகம் சுதந்திர நாடாயிற்று. கிழக்கில் துருக்கியர் பல ராஜ்யங்கள் கண்டார்கள். அவர்கள் முடிவில் பாரசீகத்தையும் கைப்பற்றிப் பாக்தாதில் பெயரளவுக்குக் கலீபாவாயிருந்தவர் மீது ஆதிக்கம் செலுத்தினார்கள். பதினோராவது நூற்றாண்டில் கஜினி முகம்மது தோன்றி இந்தியா மீது படையெடுத்தான். அவன் பாக்தாது கலீபாவையும் மிரட்டினான். சிறிது காலமே நிலைபெற்றிருந்த அவனுடைய சாம்ராஜ்யம் செல்ஜக் துருக்கியர் என்னும் இன்னொரு துருக்கிய வகுப்பாரால் ஒழிக்கப்பட்டது. செல்ஜக் துருக்கியர் கிறிஸ்தவச் சிலுவைப் படைகளை நெடுங்காலம் எதிர்த்துப் போராடி வெற்றியும் பெற்றார்கள். அவர்களுடைய சாம்ராஜ்யம் 150 வருஷ காலம் நிலைபெற்றிருந்தது. 12-வது நூற்றாண்டில் மற்றுமொரு துருக்கிய ஜாதியார் கிளம்பி

செல்ஜக் துருக்கியரைப் பாரசீகத்திலிருந்து விரட்டியடித்துக் கொராசம் அல்லது கிவா ராஜ்யத்தை ஸ்தாபித்தார்கள். அந்த ராஜ்யம் அல்பாயுசாக முடிந்தது. செங்கிஸ்கானின் தூதனைக் கொராசம் ஷா அவமானத்துக்கு உள்ளாக்கினான். அதைப் பொறாத செங்கிஸ் கான் தன்னுடைய மங்கோலியப் படைகளுடன் வந்து அந்த ராஜ்யத்தையும் மக்களையும் அழித்தொழித்தான்.

ஒரு சின்னப் பாராவில் பற்பல மாறுதல்களைப் பற்றியும் சாம்ராஜ்யங்களைப் பற்றியும் சொல்லி விட்டேன். இவையெல்லாம் உனக்குப் பெருங் குழப்பமாக இருக்கும். பற்பல அரச வமிசத்தார், மக்கள் வகுப்பார் ஆகியோருடைய உயர்வு வீழ்ச்சிகளைப் பற்றி நான் பேசிய காரணம் அத்தனை மாறுதல்களுக்கிடையிலும் பாரசீகக் கலைமரபும் வாழ்வும் அழியாது இருந்து வந்தன என்பதை வற்புறுத்துவதற்காகத்தான். கிழக்கிலிருந்து துருக்கியர் அலை அலையாகப் பாரசீகத்தின் மீது படையெடுத்து வந்தார்கள். ஆனால், அவர்கள் பொகாராவிலிருந்து இராக் வரையில் பரவியிருந்த பாரசீக-அரேபிய நாகரிகத்துக்கு அடிமையானார்கள். பாரசீகத்துக்கு வெகு தூரத்திலுள்ள சின்ன ஆசியாவுக்குப் போய்ச் சேர்ந்த துருக்கியர் மட்டும் அரேபிய நாகரிகத்துக்கும் பண்புக்கும் பணிய மறுத்துத் தங்களுடைய வாழ்க்கை முறைகளை விடாது கடைப்பிடித்து வந்தார்கள். அவர்கள் சின்ன ஆசியாவைத் தங்கள் தாய்நாடான துருக்கி ஸ்தானத்தின் ஒரு பகுதியைப் போலவே செய்து விட்டார்கள். ஆனால், பாரசீகத்திலும் அதைச் சார்ந்த நாடுகளிலும் அவர்கள் பழைய ஈரானியக் கலைப்பண்பை ஏற்றுக்கொண்டு அதற்கு இணங்கத் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டார்கள்.

ஈரானியக் கலைமரபின் ஆற்றலுக்கு அது சான்று பகர்கிறது. பாரசீகத்தை ஆண்ட துருக்கிய வமிசங்கள் எல்லாவற்றின் கீழும் பாரசீகக் கலையும் இலக்கியமும் வளர்ந்தோங்கின. கஜினி முகம்மது காலத்தில் வாழ்ந்த பிர்தாசி என்னும் பாரசீகக் கவியைப் பற்றி உனக்கு முன்பே கூறியிருக்கிறேன். கஜினி முகம்மதுவின் வேண்டுகோளின் பேரில் அவர் 'ஷாநாமா' என்னும் பாரசீக தேசியப் பேரிதிகாசத்தை இயற்றினார். இஸ்லாம் காலத்துக்கு முற்பட்ட கதையை விஷயமாகக் கொண்ட அக்காவியத்துக்குத் தலைவன் ருஸ்தம் என்னும் மகா வீரன். பாரசீகக் கலையும் இலக்கியமும் தொன்றுதொட்டு வரும் அந்நாட்டின் பழைய தேசிய மரபுடன் எவ்வாறு இரண்டறக் கலந்திருந்தன என்பதையே அது காட்டுகிறது. காரைச் சித்திரங்கள் வரைவோரும் அழகிய சிற்றோவியங்கள் எழுதுவோரும் பெரும்பாலும் 'ஷாநாமா'விலுள்ள கதைகளையே தங்களுக்கு விஷயமாக எடுத்தாண்டிருக்கிறார்கள்.

காலச்சக்கரம் அந்த நூற்றாண்டையும் கிறிஸ்துவுக்குப் பிற்பட்ட ஆயிரவருஷ காலத்தையும் சுற்றிவிட்டு அடுத்த சகாப்தத்தில் பிரவேசிக்கும் கட்டத்தில் (932—1021) பிர்தாசி உயிர் வாழ்ந்தார். அவரை அடுத்துப் பாரசீகக் கவிதை உலகிற்போலவே ஆங்கில உலகிலும் பெயர்பெற்று விளங்கும் உமர் கயாம் என்னும் கவிராஜ மத்த கோகிலம் தோன்றித் தன்னுடைய இன்னிசையால் உலகையே களிக்கச்செய்தது. உமர் கயாம் பாரசீகத்தில் நிசாபூர் என்னும் ஊரில் தோன்றியவர். அவர் ஒரு வான நூற்புலவருங்கூட. உமருக்குப்பின் ஷீராஸ் என்னும் ஊரில் பாரசீக மகாகவிகளுள் ஒருவராகிய ஷேக்சாதி என்பவர் தோன்றினார். அக்கவி வண்டு ஊதிய கவிதைப் பூஞ்சோலைகளாகிற 'குலிஸ்தான்' (பூஞ்சோலை) 'போஸ்

தான்' (இளமாக்கா) என்னும் நூல்களை முன்காலத்தில் இந்தியப் பள்ளிக்கூடங்களில் படித்த மாணவர்கள் தலைமுறை தலைமுறையாக மனப்பாடம் செய்து வந்தார்கள்.

சில பெரியார்களுடைய பெயர்களைமட்டும் நான் உனக்குக் கூறுகிறேன். எல்லாப் பெயர்களையும் நீளமாகத் தொகுத்துக் கூறுவதில் அர்த்தமில்லை. ஆனால், அந்நூற்றாண்டுகளில் பாரசீகத்திலிருந்து மத்திய ஆசியாவிலுள்ள புற ஆக்சியானா வரையில் பாரசீகக் கலைப்பண்பென்னும் மணிவிளக்கு சுடரொளி பரப்பிநின்றது என்பதை நீ உணரவேண்டும். புற ஆக்சியானாவின் மாநகர்களாகிய பொகாராவும் பால்க்கும் கலைமாண்பிலும் இலக்கிய மேன்மையிலும் பாரசீகப் பெருநகர்களுடன் போட்டியிட்டன. பொகாராவில்தான், பத்தாவது நூற்றாண்டின் இறுதியில் புகழ்மிக்க அரேபியத் தத்துவ சாஸ்திரியாகிய இபின் சினா அல்லது அவிசென்னா என்பவர் தோன்றினார். அதற்கு 200 ஆண்டுகளுக்குப் பின் பால்க் நகரில் ஜலாலுதீன் ரூமி என்னும் இன்னொரு பெரிய பாரசீகக் கவி தோன்றினார். அவர் பெரிய ஞானியாகக் கருதப்படுகிறார். 'கூத்தாடும் பக்கிரிகள்' என்றொரு சங்கத்தை அவர் நிறுவினார்.

ஆக, அரசியல் மாறுதல்கள், போராட்டங்கள் இவற்றிற்கிடையிலும் பாரசீக—அரேபியக் கலையும் பண்பும் வற்றாத உயிரூற்றாக இருந்து இலக்கியம், சித்திரம், சிற்பம் முதலிய கலைகளின் சிகரத்தை எட்டிப் பிடித்தன. பின்னர், அதற்கு அழிவு காலம் நேரிட்டது. 13-வது நூற்றாண்டில் (கி. பி. 1220) செங்கிஸ்கான் கொராசம், ஈரான் இரண்டையும் நிர்மூலமாக்கிவிட்டான். அதற்குச் சில வருஷங்களுக்குப் பிறகு ஹுலாகு பாக்தாத் நகரை நாசம் செய்தான். இவ்வாறு, பல நூற்றாண்டுகளாகச் சேமித்து வைக்கப்பட்ட கலைச்

செல்வம் அழிந்தொழிந்தது. முன் கடிதம் ஒன்றில் மங்கோலியர் மத்திய ஆசியாவை அழித்துப் பாலைவன மாக்கிய விதத்தையும் அதன் பெருநகர்கள் நிர்ஜனப் பிரதேசங்களாக மாறிய விதத்தையும் பற்றிக் கூறி யுள்ளேன்.

அந்த அழிவுக்குப் பின் மத்திய ஆசியா முழுதும் தேறிப் பழைய நிலைமையை அடையவில்லை. இந்த அளவுக்குத் தேறியதே பெரிய விந்தையாகும். செங்கிஸ் கானின் மரணத்துக்குப் பின் அவனுடைய பரந்த சாம் ராஜ்யம் பல பகுதிகளாகப் பிரிந்தது உனக்கு நினை விருக்கும். பாரசீகமும் அதைச் சூழ்ந்த பகுதியும் ஹுலகுவின் பங்குக்கு வந்தன. அவன் எல்லாவற்றையும் அழித்துத் திருப்தி அடைந்தபின் அமைதியும் பொறையும் பூண்டு அரசாளத் தலைப்பட்டான். அவன் இல்கான் என்றொரு வமிசத்தையும் ஸ்தாபித்தான். சில காலம் வரையில் இல்கானியர் மங்கோலியரின் பழைய மத மாகிய 'வாள் வணக்க'த்தை அவலம்பித்து வந்தனர். அதற்குப் பின் அவர்கள் இஸ்லாமைத் தழுவினார்கள். அம் மத மாற்றத்துக்கு முன்னும் பின்னும் அவர்கள் பிற மதங்கள்பால் துவேஷம் காட்டவில்லை. சீனவை அரசாண்ட, அவர்களுடைய ஒன்று விட்ட சகோதரர்க ளாகிய மகாகானும் அவனுடைய வமிசத்தாரும் பௌத்த மதத்தை அனுஷ்டித்து வந்தார்கள். அவர்களுக்கும் இவர்களுக்கும் நெருங்கிய உறவு இருந்துவந்தது. இல்கானியர் சீனவிலிருந்து பெண்கூடக் கொண்டார்கள்.

பாரசீகத்திலும் சீனவிலும் வாழ்ந்த மங்கோலியரின் இரு கிளையைச் சேர்ந்த இல்கானியருக்கும் மகாகான் வமிசத்தாருக்கும் இருந்து வந்த உறவு கலைத் துறையில் பெரும் பயன் விளைத்தது. சீனப் பிரபாவம் பாரசீகத்துக்குள் பிரவேசித்தது. சித்திரக் கலையில்

அரேபிய, பாரசீக, சீனப் பிரபாவங்கள் உறவாடிக் கலந்து மகிழ்ந்தன. மீண்டும், ஆபத்துகளுக் கிடையில், பாரசீகப் பண்பு வெற்றிபெறுவதைக் காண்கிறோம். 14-வது நூற்றாண்டின் இடையில் ஹபீஸ் என்னும் இன்னொரு பாரசீகக் கவிமணி தோன்றினார். அவ ருடைய புகழ் இந்தியாவில் கூட இன்றும் நின்று நிலவுகிறது.

மங்கோலிய இல்கானியரின் வாழ்வு அதிக காலம் நீடிக்கவில்லை. புற ஆக்சியானவிலுள்ள சாமர்கண்டில் தைமூர் என்னும் பெரும் போர்வீரன் தோன்றி அவர்களில் கடைசியாக எஞ்சியிருந்தோரையும் அழித் தொழித்தான். கொடுமைக்குப் பேர்போன இம் மூர்க்கனின் ராட்சசச் செயல்களைப் பற்றி நான் உனக்குக் கூறியிருக்கிறேன். அவன் ஒரு கல்விமான் என்று கருதப்படுகிறான். அவன் கலைகளைப் பேணி வளர்த்தான். அவனுடைய கலைக்காதல், டில்லி, ஷீராஸ், பாக்தாத், டமாஸ்கஸ் போன்ற பெருநகர்களின் திருவைக் கவர்ந்து அதைக் கொண்டு தன்னுடைய தலைநகராகிய சாமர் கண்டை அணிவிப்பதில் அடங்கி யிருந்தது என்று கொள்ளலாம். ஆனால், சாமர்கண்டிலேயே ஆச்சரியமும் கம்பீரமும் பொருந்திய கட்டிடம் 'அமீர்கோரி' என்னும் தைமூரின் கோரிதான். அந்தக் கோரி அவனுக்கு மிகவும் ஏற்றதாகவே இருக்கிறது. அதனுடைய கம்பீரமான தோற்றத்தில் அவனுடைய அரசவீறும், ஆள்வலியும், அரக்கத் தன்மையும் ஓரளவு காணப்படுகின்றன.

தைமூர் தன் தோள்வலியால் வென்று கொண்ட பரந்த நாடுகள் அவன் இறந்தபின் சிதறிப் போய் விட்டன. புற ஆக்சியானவையும் பாரசீகத்தையும் கொண்ட ஒரு சிறுராஜ்யமே அவனுடைய சந்ததி

யாருக்கு மீந்தது. அவனுடைய சந்ததியார் 'தைமூரியர்' என்று அழைக்கப் பட்டார்கள். அவர்கள் சரியாக 100 ஆண்டுள், அதாவது, 15-வது நூற்றாண்டு முழுதும் ஈரான், பொகாரா, ஹீரெட் ஆகிய பிரதேசத்தை ஆண்டார்கள். ஈரமற்ற ஒரு கொடிய அரக்கனுடைய கால்வழியில் வந்த அவர்கள் இரக்கத்துக்கும் வள்ளன்மைக்கும் பேர் போனவர்களாய்க் கலைகளையும் கலைவல்லோரையும் ஆதரித்தது பெரிய விந்தையே. தைமூரின் சொந்த மகனாகிய ஷாருக் என்பவன் அவர்களில் தலைசிறந்தவன். அவன் தன் தலைநகராகிய ஹீரெட்டில் அற்புதமான நூல்நிலையம் ஒன்றை நிறுவினான். கற்றோர் அதனைக் கூட்டம் கூட்டமாக வந்து மொய்த்தனர்.

தைமூரியரின் ஆட்சிக்காலமாகிய அந் நூறு வருஷ காலம் கலை, இலக்கிய மறுமலர்ச்சிக்குப் பேர்போனதாகும். அது 'தைமூரிய மறுமலர்ச்சி' என வழங்கப்படுகிறது. அப்போது பாரசீக இலக்கியப் பயிர் தழைத்தோங்கியது. எழில் மிக்க ஓவியங்கள் பல எழுதப்பட்டன. ஓவிய வல்லோனாகிய பிஜாத் ஒரு ஓவிய முறையைக் கண்டு அதனைப் பரப்பி வந்தான். தைமூரியர் காலத்துக் கற்றோரிடையில் பாரசீக இலக்கியத்தோடு துருக்கிய இலக்கியமும் வளர்ந்து வந்தது. அந்தக் காலமே இதாலிய மறுமலர்ச்சிக்காலம் என்பதை உனக்கு மீண்டும் நினைவூட்டுகிறேன்.

துருக்கியரான தைமூரியர் பாரசீகக் கலைப்பண்புக்குப் பெரிதும் வசப்பட்டுப் போனார்கள். ஈரான்நாடு அரசியல் துறையில் தன்னை ஆட்கொண்ட துருக்கியரையும் மங்கோலியரையும் கலைத்துறையில் தான் ஆட்கொண்டது. அதேசமயத்தில் அது அரசியல் துறையிலும் அந்நியரிடமிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளப்

போராடி வந்தது. தைமூரியர் சிறிது சிறிதாகக் கிழக்கு நோக்கித் தள்ளப்பட்டார்கள். அவர்களுடைய ராஜ்யம் வரவரச் சிறுத்துப் புறஆக்சியானாவைச் சுற்றியுள்ள ஒரு சிறு பகுதியாகச் சுருங்கிவிட்டது. 16-வது நூற்றாண்டின் தொடக்கத்தில் ஈரானிய தேசியம் வெற்றிபெற்றது. தைமூரியர் முடிவாக நாட்டைவிட்டு ஓட்டப்பட்டனர். சபாவி வமிசம் என அழைக்கப்பட்ட ஒரு தேசிய அரச வமிசம் பாரசீக சிம்மாசனத்தை அடைந்தது. அந்த வமிசத்தில் இரண்டாவதாக வந்த முதலாவது தாமாஸ்ப் என்னும் அரசன்தான் ஷேர்கானுக்குப் பயந்து ஓடிவந்த ஹுமாயூனுக்குப் புகலிடம் அளித்தவன்.

சபாவி வமிசத்தார் 220 வருஷகாலம் (1502-1722) ஆண்டார்கள். அவர்களுடைய ஆட்சிக்காலம் பாரசீகக் கலையின் பொற்காலம் என அழைக்கப்படுகிறது. அவர்களுடைய தலைநகராகிய இஸ்பஹான் மாடமாளிகைகளும் கூடகோபுரங்களும் நிறைந்து கலைமகளின் கொலு மண்டபமாகத் திகழ்ந்தது. முக்கியமாகச் சித்திரக்கலை அங்கே சிறந்து விளங்கியது. சபாவி வமிசத்தில் முக்கியமான அரசன் ஷா அப்பாஸ் என்பவன். அவன் 1587-லிருந்து 1629-வரையில் அரசுபுரிந்தான். அவன் பாரசீகத்தின் தலைசிறந்த அரசர்களுள் ஒருவனாகக் கருதப்படுகிறான். அவனை உஸ்பெக்கியர் ஒரு புறத்திலும் உதுமானியத் துருக்கியர் மற்றொரு புறத்திலும் நெருக்கினார்கள். அவன் இருவரையும் துரத்தியடித்துப் பலம் பொருந்திய ஒரு ராஜ்யத்தை ஸ்தாபித்தான். அவன் மேனாடுகளுடனும் மற்றத் தொலைநாடுகளுடனும் நல்லுறவை வளர்த்தான். அவன் தன்னுடைய தலைநகரை அழகு படுத்துவதில் பெரிதும் ஈடுபட்டான். இஸ்பஹானில் அவன் வகுத்த நகர் அமைப்பு முறையானது 'மாசற்ற தூய்மையிலும் கேடற்ற சுவையிலும் இணை

யற்றது'' என்று சொல்லப்படுகிறது. அழகிலும் அணியி லும் மிகுந்த அந் நகரின் மாடமாளிகைகள் அவை கட்டப் பட்டிருந்த இடத்தின் அழகினால் இன்னும் எழில் மிகுந்து விளங்கின. அக்காலத்தில் பாரசீகத்தைச் சென்று கண்ட ஐரோப்பியர் அவற்றை வானளாவப் புகழ்ந்திருக் கிறார்கள்.

பாரசீகக் கலையின் பொற்காலம் என்று சொல்லப் பட்ட அக்காலத்தில் கட்டிடக்கலை, இலக்கியம், காரைச் சித்திரம், சிற்றோவியம், ரத்தின சமுக்காளங்கள் நெய்தல், மண் அல்லது பீங்கானால் இயன்ற பாத்திர வேலைகள், நானா வர்ணக் கல் வேலைகள் ஆகிய யாவும் உயர்நிலை எய்தியிருந்தன. அக்காலத்துக் காரைச் சித்திரங்களிலும் சிற்றோவியங்களிலும் சில அற்புத மான அழகுடன் விளங்குகின்றன. கலை என்பது ஒரு நாட்டின் எல்லைக்குள் கட்டுப்பட்டிருப்பதல்ல. அவ்வாறு அது கட்டுப்பட்டிருப்பதும் கூடாது. ஆகவே 16-வது, 17-வது நூற்றாண்டுகளில் சிறந்து விளங்கிய பாரசீகக் கலையைப் பல்வேறு பிரபாவங்கள் வளம்படுத்தியிருக்க வேண்டும். இதாலிய பிரபாவம் பிரத்தியட்சமாகத் தென்படுகிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால், இவை எல்லாவற்றிற்கும் பின்னால் 2000 வருஷ காலமாக அழியாது சிரஞ்சீவியாக இருந்து வரும் ஈரானின் தொன்மையான கலை மரபை நாம் காண முடிகிறது. ஈரானியக் கலைப் பண்பு பாரசீகத்தின் எல்லைக்குள் அடங்கி விடவில்லை. மேற்கே துருக்கியி லிருந்து கிழக்கே இந்தியா வரையில் அது பரவி நின்றது. இந்தியாவில் மொகலாய ராஜதர்பாரிலும் மேல் ஆசியா விலும் பாரசீக மொழியே உயர்ந்தோரிடையில் வழங்கி வந்தது. ஐரோப்பாவில் பிரெஞ்சு மொழி வகித்த ஸ்தா னத்தை இவ் விடங்களில் பாரசீகமொழி வகித்தது.

ஆக்ராவிலுள்ள தாஜ்மஹால் பாரசீகக் கலையின் பழைய சீர்மைக்கு அழியாச் சின்னமாக விளங்குகிறது. ஏறக் குறைய இதே முறையில் பாரசீகக் கலை மேற்கே கான்ஸ்டாண்டிநோபிள் வரையில் உதுமானியக் கட்டி டக் கலையைப் பாதித்தது. பாரசீக முத்திரையுடன் அங்கே பல பெரிய கட்டிடங்கள் தோன்றின.

பாரசீகத்தின் சபாவி வமிசத்தாரும் இந்தியாவின் பெரிய மொகலாய சக்கரவர்த்திகளும் ஏறக்குறையச் சம காலத்தவர்கள். மொகலாய சக்கரவர்த்திகளில் முதல்வ னான பாபர் சாமர்கண்டைச் சேர்ந்த தைமூரிய சிற்றரசர் களுள் ஒருவன். பாரசீகரின் பலம் வளர வளர அவர்கள் தைமூரியரை மேலும் மேலும் விரட்டி வந்தார்கள். கடைசியாகப் புற ஆக்சியானாவில் சில பகுதிகளும் ஆப்கா னிஸ்தானமும் தான் தைமூரிய சிற்றரசர்களுக்கு எஞ்சி நின்றன. இத் தைமூரிய சிற்றரசர்களுக்கு இடையில் தான் பாபர் தன்னுடைய பன்னிரண்டாவது வயதி லிருந்து போரிட வேண்டியிருந்தது. அவன் அதில் வெற்றி பெற்றுக் காபூலுக்கு அரசனானான். அதற்கப் புறம் அவன் இந்தியாவுக்கு வந்தான். பாபரைக் கொண்டு நாம் அக்காலத்துத் தைமூரியரின் உயர்ந்த கலைப் பண்பை மதிப்பிடலாம். முன் கடிதம் ஒன்றில் அவனுடைய வாழ்க்கைக் குறிப்புகளிலிருந்து சில மேற் கோள்கள் எடுத்து காட்டியிருக்கிறேன். சபாவி மன்னர் களில் தலை சிறந்தவனான ஷா அப்பாஸ் அக்பர்—ஜஹாங் கீர் காலத்தில் வாழ்ந்தவன். அக்காலத்தில் இந்தியா வுக்கும் பாரசீகத்துக்கும் இடையே மிக நெருங்கிய உறவு இருந்திருக்க வேண்டும். ஆப்கானிஸ்தானம் இந்திய மொகலாய சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாயிருந்த படியால், நெடுங்காலம் வரையில் இரு நாடுகளுக்கும் பொதுவான எல்லை இருந்து வந்தது.

125

பாரசீகத்தில் சாம்ராஜ்யவாதமும் தேசிய வாதமும்

ஜனவரி 21, 1933.

நீ என்மீது கோபம் கொள்வதற்கு நியாயம் இருக்கிறது. சரித்திரத்தின் நடைபாதைகளில் முன்னும் பின்னுமாக விரைந்து நான் உனக்குக் கஷ்டம் கொடுத்துவிட்டேன். பல்வேறு பாதைகள் வழியாகப் பத்தொன்பதாவது நூற்றாண்டை அடைந்தபின்பு, திடீரென்று சில ஆயிரவருஷங்கள் உன்னைப் பின்கொண்டு சென்று, எகிப்திலிருந்து இந்தியாவுக்கும் அங்கிருந்து சீனாவுக்கும் பாரசீகத்துக்குமாகத் தாவிக்குதித்துக் கொண்டிருக்கிறேன். என்னுடைய இக்காரியம் உனக்குக் கோபத்தையும் குழப்பத்தையும் உண்டு பண்ணியிருக்கவேண்டும் என்பதில் ஐயமில்லை. நீ ஆட்சேபம் செய்வது என்செவிகளில் வந்து விழுகிறது. அதற்கு நான் திருப்திகரமான சமாதானம் ஒன்றும் சொல்லமுடியாதவனாக இருக்கிறேன். ரெனிகுரூசேயின் நூல்களைப் படித்தது என்னுடைய மனத்தில் பற்பல சிந்தனை அலைகளை எழுப்பிவிட்டது. அவற்றில் சிலவற்றையாவது உன்னுடன் பகிர்ந்து கொள்ளாமலிருக்க என்னால் முடியவில்லை. மேலும், இக்கடிதங்களில் நான் பாரசீகத்தைப் பராமுகம் செய்துவிட்டதாகவும் உணர்ந்தேன். அதற்குப் பரிகாரம் செய்யவேண்டுமென்பதும் என்னுடைய விருப்பம். இப்போது நாம் பாரசீகத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தபடியால் அதன் கதையைத் தற்காலத்துக்குக் கொண்டுவந்து விடுவோம்.

பாரசீகக் கலைமரபின் தொன்மையைப் பற்றியும் உன்னதியைப் பற்றியும் அதன் பொற்காலத்தைப் பற்றியும் நான் ரொம்பவும் சிலாகித்துப் பேசிவிட்டேன். இப்போது பார்க்கும்போது என்னுடைய சொற்களில் புனைந்துரையும் உயர்வு நவிற்சியும் மிக்கிருப்பதாகத் தோன்றுகிறது. அவை உன்னைத் தவறான வழியில் செலுத்தக்கூடும். என்னுடைய வருணனையைப் படிக்கும் ஒருவன், பாரசீக மக்களுக்கு உண்மையாகவே பொற்காலம் வந்துவிட்டதென்றும், அவர்கள் கதையில் வரும் கந்தர்வலோக மக்களைப்போல் துன்பம் கலவாத இன்பப் பெருவாழ்வில் திளைத்தார்கள் என்றும் நினைக்கக்கூடும். அப்படியொன்றும் இல்லை என்று சொல்லவேண்டியதில்லை. அக்காலத்தில் கலையும் பண்பும் ஒரு சிலருடைய ஏகபோக உரிமையாகவே இருந்தன. இக்காலத்திலும் பெரும்பாலும் அப்படித்தான். சாமானிய ஜனங்களுக்கும் கலைக்கும் பண்புக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. ஆதிகாலத்திலிருந்தே அவர்களுக்குத் தங்கள் வயிற்றுப்பாடே பெரும்பாடாக இருந்துவருகிறது. அவர்களுடைய வாழ்க்கைக்கும் மிருகங்களுடைய வாழ்க்கைக்கும் அதிக வித்தியாசம் இல்லை. அவர்களுக்குக் கலையையும் பண்பையும் நுகர்வதற்கு ஒழிவேது? அன்றாடம், எழுந்ததிலிருந்து படுக்கப்போகும் வரையில், வயிற்றைக் கழுவுவதற்குத்தான் பொழுது சரியாய்ப் போகிறதே! கலையைப் பற்றியும் பண்பைப் பற்றியும் அவர்களுக்கு நினைக்க நாழி ஏது? பாரசீகத்திலும், இந்தியாவிலும், சீனாவிலும், இதாலியிலும் வேறு பல ஐரோப்பிய நாடுகளிலும் கலை செழித்தோங்கியது உண்மையே. ஆனால், அக் கலாவிநோதங்களை அனுபவித்தவர்கள் அரசரும், அரசரைச் சார்ந்தோரும், வேறு வேலையில்லாத பணம் படைத்த வகுப்பாருமே ஆவர்.

சமயக்கலை ஒன்றுதான் ஓரளவு பொதுமக்களின் வாழ்க்கையைத் தொட்டது.

கலைகளுக்கு அனுகூலமான ஒரு அரசாங்கம் பிரஜைகளுக்கும் அனுகூலமானது என்று கொள்வதற்கில்லை. கலையையும் இலக்கியத்தையும் ஆதரிப்பதாக விருது கூறிக் கொண்ட அரசர் பலர் கொடுங்கோலராகவும் திறமையற்றோராகவும் இருந்திருக்கிறார்கள். அக்காலத்தைச் சேர்ந்த மற்ற நாடுகளைப் போலவே பாரசீகத்திலும் சமூகம் நிலமானிய முறையை அடிப்படையாகக் கொண்டிருந்தது. நிலமானியப் பிரபுக்கள் எடுத்ததற்கெல்லாம் வரிவிதித்து ஜனங்களை வருத்தி வந்தார்கள். அந்தக் கஷ்டத்திலிருந்து ஜனங்களைக் காப்பாற்றிய வல்லமை மிக்க அரசர்களை ஜனங்கள் வாழ்த்தினார்கள். பாரசீகத்தில் நல்ல ஆட்சி நடைபெற்ற காலங்களும் உண்டு. அதே மாதிரி தீய ஆட்சி நடைபெற்ற காலங்களும் உண்டு.

இந்தியாவில் மொகலாய அரசு தன்னுடைய அந்திமக் காலத்தை அடைந்தபோது பாரசீகத்திலும் சபாவி வம்ச ஆட்சி கி. பி. 1725 வாக்கில் முடிவு பெற்றது. வழக்கம் போல், சபாவி வமிசமும் தன்பயனை இழந்து விட்டது. நிலமானிய முறை சிறிது சிறிதாகப் பக்குவிட்டு நொறுங்கி வந்தது. தேசத்தில் நிகழ்ந்து வந்த பொருளியல் மாறுதல்கள் பழைய முறையைத் தலைகீழாக்கி வந்தன. தாங்க முடியாத வரிச் சுமை நிலைமையை இன்னும் மோசமாக்கியது. ஜனங்களிடையே அதிருப்தி வளர்ந்தது. அப்போது சபாவி வமிச ஆட்சிக்கு உட்பட்டிருந்த ஆப்கானியர் கிளர்ந்தெழுந்து தங்கள் நாட்டை விடுவித்துக் கொண்டதோடு இஸ்பஹானையும் கைப்பற்றி ஷாவையும் சிம்மாசனத்திலிருந்து நீக்கினார்கள். ஆனால், நாதிர்ஷா என்னும் பாரசீகச் சிற்றரசன் ஒருவன் விரைவிலேயே ஆப்கானி

யரை விரட்டி அடித்தான். அவன் பிறகு தன்னைப் பாரசீக மன்னனாக முடிசூட்டிக் கொண்டான். இந்த நாதிர்ஷா தான் மொகலாயர் வலியொடுங்கி நின்ற கடைசிக் காலத்தில் இந்தியாவின் மீது படையெடுத்து வந்து, டில்லி மக்களைப் படுகொலை புரிந்து, ஏராளமான நிதித்திரளையும் ஷாஜஹானுடைய மயில் சிங்காதனத்தையும் கவர்ந்து சென்றவன். 18-வது நூற்றாண்டுப் பாரசீக சரித்திரம் உள்நாட்டுப் போரும், அடிக்கடி மாறும் அரசும், கொடுங்கோலாட்சியும் நிறைந்த ஒரு துக்கக் கதையாகும்.

19-வது நூற்றாண்டில் பாரசீகம் புதிய இன்னல்களுக்கு ஆளாயிற்று. எதிர்ப்படுவனவற்றையெல்லாம் வாரி வாய்ப்பெய்துகொண்டு பெருகி வந்த ஐரோப்பிய சாம்ராஜ்ய வாதம் அதன் கரைகளில் வந்து மோதியது. வட எல்லையில் ருஷியர் இடைவிடாது நெருக்கிக் கொண்டிருந்தார்கள். பாரசீக வளைகுடாவிலிருந்து பிரிட்டிஷார் ஆக்கிரமித்து வந்தார்கள். பாரசீகமும் இந்தியாவும் ஒன்றுக் கொன்று தூரமானவை அல்ல. அவற்றின் எல்லைகள் வரவர நெருங்கி வந்தன. இன்று இரண்டிற்கும் பொதுவான எல்லையே ஏற்பட்டுவிட்டது. பாரசீகம் இந்தியாவுக்குச் செல்லும் நேரான தரை மார்க்கத்திலும், இந்தியாவுக்குச் செல்லும் கடல் மார்க்கத்தை நோக்கினாற் போலவும் இருந்தது. தங்களுடைய இந்திய சாம்ராஜ்யத்தையும் அதற்குச் செல்லும் மார்க்கங்களையும் காப்பதையே பிரிட்டிஷ் கொள்கை அடிப்படையாகக்கொண்டிருந்தபடியால் பிரிட்டனுக்குப் பெரிய போட்டி நாடான ருஷியா இந்தியாவுக்குப் போகும் மார்க்கத்தில் உட்கார்ந்து கொண்டு இந்தியாவை ஆசையோடு பார்ப்பதைப் பிரிட்டிஷார் விரும்பவில்லை. ஆகவே, இருதிறத்தாரும் பாரசீக விவகாரங்களில் கரும

சிரத்தை எடுத்துக் கொண்டு அவ்வேழை நாட்டைத் துன்புறுத்தி வந்தார்கள். பாரசீகத்தை ஆண்ட ஷாக்கள் சுத்த முட்டாள்கள்; திறமை கெட்டவர்கள். அவர்களுடைய செய்கை எதிரிகளுக்கு எப்போதும் அனுகூலமாகவே இருந்தது. ஒன்று, அவர்கள் காலமல்லாக் காலத்தில் எதிரிகளுடன் சண்டைக்குப் போனார்கள்; அல்லது, தங்களுடைய ஜனங்களுடனேயே சண்டை போட்டுக் கொண்டார்கள். ருஷியாவுக்கும் பிரிட்டனுக்கும் உள்ள போட்டியினால் பாரசீகம் ஒரு தனி நாடாகத் தப்பிப் பிழைத்தது. இல்லாவிட்டால் இரண்டில் ஒன்று அதை ஜெயித்துத் தன்னுடன் இணைத்துக் கொண்டிருக்கும்; அல்லது, எகிப்தைப் போல் பாரசீகமும் ஒரு பாதுகாப்பரசு நாடாகி யிருக்கும்.

இருபதாவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் வேறொரு காரணத்துக்காகப் பிற நாடுகள் பாரசீகத்தின் மீது கண்வைக்க ஆரம்பித்தன. அங்கே மண்ணெண்ணெய் அல்லது பெட்ரோல் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. மண்ணெண்ணெய் மிகவும் மதிப்புடைய தல்லவா? ஆகவே, பாரசீகத்திலுள்ள எண்ணெய் வயல்களை வேலை செய்து பலன் காண்பதற்கு டார்சி என்னும் பிரிட்டிஷ் பிரஜை ஒருவனுக்கு அறுபது வருஷ காலத்துக்கு ஒரு ஒப்பந்தம் செய்து கொடுக்கும்படி முன்பு ஷாவாயிருந்தவரைத் தூண்டிப் பிரிட்டிஷார் 1901-ல் காரியத்தை முடித்துக் கொண்டார்கள். அதற்குச் சில வருஷங்களுக்குப் பிறகு எண்ணெய் வயல்களை வேலை செய்வதற்காக ஆங்கிலோ-பாரசீக எண்ணெய்க் கம்பெனி என்றொரு பிரிட்டிஷ் கம்பெனி ஏற்படுத்தப்பட்டது. அதிலிருந்து அக்கம்பெனி அங்கு வேலை செய்து வருகிறது. இந்த எண்ணெய் வியாபாரத்தில் அது அடிக்கும் லாபத்துக்குக் கணக்கு வழக்கில்லை. அந்த லாபத்தில் ஒரு

சிறு பகுதி மட்டும்தான் பாரசீக அரசாங்கத்துக்குப் போகிறது. பெரும் பகுதி பாரசீகத்துக்கு வெளியிலுள்ள கம்பெனியின் பங்குதாரர்களுக்குப் போகிறது. அப் பங்குதாரர்களில் பெரிய பங்குதார் பிரிட்டிஷ் அரசாங்கம்தான். இப்போதுள்ள பாரசீக அரசாங்கம் அதி தீவிரமான தேசியப் போக்கு வாய்ந்தது. அந்நியர் தங்கள் நாட்டைச் சுரண்டுவதை அது பலமாக ஆட்சேபிக்கிறது. அவ் வரசாங்கம் 1901-ம் ஆண்டில் டார்சிக்கு அளித்த அறுபது வருஷ முச்சிலிக்கையை ரத்து செய்துவிட்டது. அந்த முச்சிலிக்கையின் கீழ்த்தான் ஆங்கிலோ-பாரசீக எண்ணெய்க் கம்பெனி வேலை செய்து வந்தது. அதைக் கண்ட பிரிட்டிஷ் அரசாங்கம் ரொம்ப ரொம்ப உடம்பை அலட்டிக் கொண்டது. அது பாரசீக அரசாங்கதை அதட்டி மிரட்டிக் காரியத்தைச் சாதித்துக் கொள்ள முயன்றது. ஆனால், ஆசியமக்களை முன் போல் அதட்டி ஏய்த்துக் காரியத்தைச் சாயவைத்துக் கொள்வது அவ்வளவு எளிதல்ல, அந்தக் காலம் மலையேறி விட்டது என்பதை அது உணரவில்லை. கடைசியில் ஈரான் அரசாங்கத்துக்கு முன்னையினும் அதிகச் சாதமாகமான ஒரு புதிய ஒப்பந்தத்தைப் பிரிட்டிஷ் அரசாங்கமும் எண்ணெய்க் கம்பெனியும் ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று.

ஆனால், இவையெல்லாம் பின்னால் நடந்தவை. ஐரோப்பிய சாம்ராஜ்ய வாதம் பாரசீகத்தைப் பயமுறுத்தியதை நாம் பார்த்தோம். பாரசீகத்தை ஆண்ட ஷா வரவர சாம்ராஜ்ய வாதத்தின் கைக்கருவியானார். அதன் பயனாகத் தேசிய வாதம் ஓங்கியது. ஒரு தேசியக் கட்சியும் தோன்றியது. அது அந்நியரின் தலையீட்டையும் ஷாவின் யதேச்சாதிகாரத்தையும் பலமாக எதிர்த்தது. ஒரு ஜனநாயக அரசியல் அமைப்பும் நவீன சீர்திருத்தங்

களும் நாட்டுக்கு வேண்டும் என்று அது கோரியது. பாரசீகத்தின் ஆட்சிமுறை சீர்கேடுற்றுக் கிடந்தது. ஜனங்கள் வரிப்பளுவினால் வருந்தினார்கள். பிரிட்டிஷாரும் ருஷியரும் பாரசீக விவகாரங்களில் ஓயாமல் தலையிட்டு வந்தார்கள். பிற்போக்கு வாய்ந்த ஷாவுக்கு அந்நிய அரசாங்கங்களின் தலையீட்டை விடத் தம்முடைய ஜனங்கள் ஓரளவு சுதந்திரம் கோரியதுதான் அதிகத் தொல்லையாயிருந்தது. ஜனநாயக அரசியல் அமைப்பைக் கோரியவர்களுள் புதிய மத்திய வகுப்பாரும் படித்த வகுப்பாரும் முக்கியமானவர்கள். 1904-ல் ஜார் ருஷியாமீது ஜப்பான்கொண்ட வெற்றி பாரசீக தேசிய வாதிகளிடையே அதிக நம்பிக்கையையும் கிளர்ச்சியையும் உண்டாக்கியது. அதற்குக் காரணம், ஒரு ஆசியநாடு ஒரு ஐரோப்பிய நாட்டை ஜெயித்தது என்பது ஒன்று; இரண்டாவது, ஜார் ருஷியா அவர்களுடைய நாட்டை ஆக்கிரமித்துக்கொண்டும் அவர்களுக்குத் தொந்திரவு கொடுத்துக்கொண்டும் இருந்தது. 1905-ம் வருஷத்து ருஷியப் புரட்சியானது கடுமையாக அடக்கப்பட்டுத் தோல்வியுற்றாலும் பாரசீக தேசிய வாதிகளுக்குச் செயலாற்றும் விருப்பத்தையும் ஊக்கத்தையும் அளித்தது. கடைசியில் வற்புறுத்தல் தாங்கமாட்டாமல், ஒரு ஜனநாயக அரசியல் அமைப்பு வழங்குவதற்கு 1906-ல் ஷா மனமின்றி ஒப்புக்கொண்டார் "மஜ்லிஸ்" (சபை) என்று அழைக்கப்பட்ட தேசியப் பார்லிமெண்டு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. பாரசீகப் புரட்சி வெற்றி பெற்றுவிட்டதென்றே தோன்றியது.

ஆனால், பாரசீகத்தின் துன்பம் இன்னும் விடியவில்லை. தன்னுடைய அதிகாரத்தை இழப்பதை ஷா விரும்பவில்லை. ஜனநாயகப் பாரசீகம் தோன்றுவதை ருஷியரும் பிரிட்டிஷாரும் விரும்பவில்லை. ஏனெனில்,

ஜனநாயகப் பாரசீகம் பலம்பெற்றுத் தங்களுக்குத் தொந்திரவு கொடுக்கும் என்று அவர்களுக்குப் பயம். ஷாவுக்கும் மஜ்லிசுக்கும் பூசல் விளைந்தது. ஷா தன்னுடைய சொந்தப் பார்லிமெண்டையே பீரங்கியினால் சுடுவித்தான். ஆனால் ஜனங்களும் துருப்புகளும் மஜ்லிசையும் தேசிய வாதிகளையும் ஆதரித்தார்கள். கடைசியில் ருஷியத் துருப்புகளின் உதவியால் ஷாவின் உயிர் காக்கப்பட்டது. ருஷ்யாவும் பிரிட்டனும் ஏதாவது ஒரு சாக்கை வைத்துக்கொண்டு—தங்களுடைய பிரஜைகளைக் காப்பாற்ற வேண்டும் என்பதுதான் வழக்கமாகச் சொல்லப்படும் சாக்கு—தங்களுடைய துருப்புகளைப் பாரசீகத்தில் வைத்திருந்தார்கள். ருஷ்யர் பயங்கரமான காசக்குப் படைகளை வைத்திருந்தார்கள். பிரிட்டிஷார் இந்தியத் துருப்புகளைக்கொண்டு பாரசீகரை மிரட்டிவந்தார்கள். இந்தியருக்கும் பாரசீகருக்கும் ஒரு சண்டை சச்சரவு கிடையாது.

பாரசீகத்துக்கு மலைபோன்ற இக்கட்டுகள் நேர்ந்தன. அதன் கஜானா காலியாயிருந்தது. ஜனங்களின் நிலையோ மோசமாயிருந்தது. நிலைமையைச் சீர்திருத்த மஜ்லிஸ் பெரிதும் முயன்றது. அதன் முயற்சிகள் யாவற்றையும் ருஷியரோ, பிரிட்டிஷாரோ அல்லது இருவருமோ குலைத்து வந்தார்கள். கடைசியில், மஜ்லிஸ் அமெரிக்காவின் உதவியை நாடியது. அவர்கள் தங்களுடைய நாட்டின் நிதி நிருவாகத்தைச் சீர்திருத்துவதற்கு அமெரிக்க நிதி நிபுணர் ஒருவரை நியமித்தார்கள். மார்கன் ஷுஸ்டர் என்னும் அவ்வமெரிக்கர் தம்மாலியன்ற வரையில் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட காரியத்தைச் செய்ய முயன்றார். ஆனால், ஒவ்வொரு தடவையும் ருஷிய எதிர்ப்போ அல்லது பிரிட்டிஷ் எதிர்ப்போ அவருக்குக் குறுக்கே நின்றது. கடைசியில் அவருக்கும் 'சீ' என்று

ஆய்விட்டது. அவர் தம் வேலையை ராஜிநாமா செய்து விட்டு அமெரிக்காவுக்குப் போய்விட்டார். பிறகு அவர் ஒரு புஸ்தகம் எழுதினார். அதில் அவர் ருஷிய, பிரிட்டிஷ் சாம்ராஜ்ய வாதங்கள் எவ்வாறு பாரசீகத்தின் மென்னியைத் திருகி அதன் உயிரை எடுக்கின்றன என்பதை நன்கு விளக்கியிருந்தார். 'உயிருக்கு மன்றாடும் பாரசீகம்' (The Struggling of Persia) என்பது அப் புஸ்தகத்தின் பெயர். புஸ்தகத்தின் பெயரே அர்த்தபுஷ்டியுடையதாக இருக்கிறதல்லவா?

பாரசீகம் தன் சுதந்திர நிலையை இழந்துவிடும் என்றே தோன்றியது. அதற்கு முதற்படியாக ருஷ்யாவும் பிரிட்டனும் பாரசீகத்தைத் தங்களுக்குள் செல்வாக்குப் பிரதேசங்களாகப் பிரித்துக் கொண்டன. அவ்விருநாடுகளும் தங்கள் துருப்புகளை முக்கியமான இடங்களில் வைத்திருந்தன. எண்ணெய் எடுப்பதனால் வரும் லாபத்தை ஒரு பிரிட்டிஷ் கம்பெனி அடைந்து வந்தது. பாரசீகத்தின் துன்பம் வாயினால் சொல்லக் கூடாததாக இருந்தது. ஏதாவது ஒரு அந்நிய தேசம் அதை ஜெயித்துத் தன்னுடன் சேர்த்துக்கொண்டிருந்தாலும் அதன் நிலை சற்று மேலாயிருந்திருக்கும். ஏனெனில், ஜெயித்த தேசத்துக்கு அப்போது சிறிதாவது பொறுப்பு இருந்திருக்கும். பாரசீகம் இத்தகைய நிலையில் இருந்தபோது 1914-ம் வருஷத்து உலக யுத்தம் தொடங்கியது.

உலக யுத்தத்தில் தான் நடு நிலைமை வகிக்கப் போவதாகப் பாரசீகம் அறிவித்தது. ஆனால், எளிய நாடுகளின் நடு நிலைமையை வலிய நாடுகள் மதிப்பதில்லை. பாரசீகத்தின் நடு நிலைமையையும் எந்தக் கட்சியும் மதிக்கவில்லை. அந்நிய சேனைகள் பாரசீகத்துக்குள் பிரவேசித்துப் பாரசீக மண்ணில் போரிட்டன. துர்ப்பாக்கியமுள்ள பாரசீக அரசாங்கத்தின் அபிப்பிராயத்தை ஒருவரும் பொருட்படுத்தவே இல்லை. பாரசீகத்தைச் சுற்றியுள்ள நாடுகள் யுத்தத்தில் ஈடுபட்டிருந்தன. பிரிட்டனும் ருஷியாவும் ஒரு கட்சியில் இருந்தன. துருக்கி ஜெர்மனியின் கட்சியில் இருந்தது. அந்தச் சமயம் துருக்கியில் இராக்கும் அரேபியாவும் அடங்கியிருந்தன. யுத்தம் 1918-ல் முடிந்தது. பிரிட்டனும் பிரான்சும் அவற்றைச் சேர்ந்த நேச நாடுகளும் வெற்றிபெற்றன. பாரசீகம் முழுதும் பிரிட்டிஷ் படைகள் வசம் இருந்தது. பிரிட்டன் பாரசீகத்தைத் தனக்குட்பட்ட பாதுகாப்பு நாடாக அறிவிக்கும் நிலையில் இருந்தது. (ஒரு நாட்டை வென்று பச்சையாக இணைத்துக்கொள்வதைக் காட்டிலும் அதைப் பாதுகாப்பு நாடாகக்கொள்வது சற்று இலைமறைவு காய்மறைவான விஷயம்) மத்தியதரைக் கடலிலிருந்து பலுசிஸ்தானம், இந்தியா வரையில் ஒரு பரந்த மத்திய கிழக்கு சாம்ராஜ்யத்தைப் பற்றிய கனவுகள் பிரிட்டிஷாரின் மனோராஜ்யத்தில் ஓடலாயின. ஆனால், அக்கனவுகள் நனவாக இல்லை. பிரிட்டனுடைய போதாதகாலம், ஜார் ருஷியா மறைந்து அதன் இடத்தில் சோவியத் ருஷியா தோன்றியிருந்தது. இன்னும் பிரிட்டனுடைய துரதிருஷ்டத்தை என்னென்பது? துருக்கி விஷயமாக அது போட்ட திட்டங்கள் எதுவும் பலிக்கவில்லை. அங்கே, கமால்பாஷா தோன்றி நேசக்கட்சியாரின் புலிவாயிலிருந்து தம் நாட்டை மீட்டார்.

இவையெல்லாம் பாரசீக தேசியவாதிகளுக்கு உதவி புரிந்தன. பாரசீகம் பெயரளவிலாவது தன் சுதந்திரத்தை இழவாமல் தப்பித்துக் கொண்டது. 1921-ல் ரிசாகான் என்னும் ஒரு பாரசீகப் போர் வீரன் ஒரு 'அரசு கவர் சூழ்ச்சி'யின் மூலம் முக்கியம் பெற்றான். அவன் ராஜ்யத்தைத் தன் வசப்படுத்திக்கொண்டு

பின்னர் பிரதம மந்திரி ஆனான். 1925-ல் பழைய ஷா சிம்மாசனத்திலிருந்து அகற்றப்பட்டார். ஒரு ஜனப் பிரதிநிதி சபை (Constituent Assembly) ரிசா கானைப் புதிய ஷாவாகத் தேர்ந்தெடுத்தது. ரிசா ஷா பஹ்லவி என்னும் பட்டத்தை அவன் மேற்கொண்டான்.

ரிசா ஷா அமைதியான முறைகளையும் வெளிப் பார்வைக்கு ஜனநாயகத் தன்மைகொண்ட முறைகளையும் கையாண்டு சிம்மாசனத்தை அடைந்தான். மஜ்லிஸ் இன்னும் தன் காரியங்களைச் செய்து வருகிறது. புதிய ஷா ஒருயதேச்சாதிகார மன்னனின் தோரணையை மேற்கொள்ளவில்லை. ஆனால், பாரசீக அரசாங்கம் புதிய ஷாவின் சொற்படி நடைபெறுகிறது என்பதில் ஐயமில்லை. கடந்த சில வருஷங்களில் பாரசீகம் பெரிதும் மாறி விட்டது. ரிசா ஷா தன்னுடைய நாட்டில் பல சீர்திருத்தங்களைப் புகுத்தி அதை ஒரு நவீன நாடாக்க வேண்டுமென்று ஜீமுதமாக வேலை செய்து வருகிறான். நாட்டில் தேசியம் புத்துயிரும் புத்துரனும் பெற்று விளங்குகிறது. அதனால், நாட்டிலேயே ஒரு புது சக்தி காணப்படுகிறது. பாரசீகத்தில் வெளி நாட்டாரின் நலன்கள், உரிமைகள் சம்பந்தப்பட்ட வரையில் அத் தேசியம் மிகவும் தீவிரமாக மாறி வருகிறது.

இந்தத் தேசிய மறுமலர்ச்சியும் ஈரானின் 2000 வருஷத்துப் புராதன மரபில் வந்துள்ளது என்பதை அறிய நாம் ஆச்சரியமடைவோம். இஸ்லாமுக்கு முற்பட்ட காலத்து ஈரானின் பழம் பெருமையையே அது நோக்குகிறது. அதிலிருந்தே அது உத்வேகம் பெற முயல்கிறது. ரிசா ஷா மேற்கொண்ட 'பஹ்லவி' என்னும் பட்டப் பெயர்கூடப் பழைய காலத்து வமிசப் பெயராகும். பாரசீக மக்கள் முஸ்லிம்கள்—ஷியா முஸ்லிம்கள்— என்பது உண்மையே. ஆனால், தங்களுடைய தேசத்தைப்

பொறுத்தவரையில், மதத்தை விடத் தேசிய உணர்ச்சியே அவர்களைப் பெரிதும் ஆட்கொண்டிருக்கிறது. ஆசியா எங்கும் தேசிய உணர்ச்சி வலுப்பெறுவதை நாம் காண்கிறோம். ஐரோப்பாவில் நூறு வருஷங்களுக்கு முன்னால், அதாவது, 19-வது நூற்றாண்டில் இது நிகழ்ந்தது. ஆனால், இப்போது அங்கே பலர் தேசிய வாதத்தைக் காலத்துக் கொவ்வாத ஒரு கொள்கை என்று கருதத் தொடங்கி விட்டார்கள். தற்கால நிலைமைகளுக்கு ஏற்ற கொள்கைகளையும் நம்பிக்கைகளையும் அவர்கள் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

இப்பொழுது பாரசீகம் 'ஈரான்' என்றே உத்தியோக முறையில் வழங்கப்படுகிறது. இனிப் பாரசீகம் என்கிற பெயரை உபயோகிக்கக் கூடாதென்று ரிசா ஷா உத்தரவு பிறப்பித்துள்ளான்.

126

பொதுவாகப் புரட்சிகளைப் பற்றியும், சிறப்பாக 1848-ல் நிகழ்ந்த ஐரோப்பியப் புரட்சிகளைப் பற்றியும்

ஜனவரி 28, 1933.

ஈத் பண்டிகை தினம்.

இப்போது நாம் 19-வது நூற்றுண்டு ஐரோப்பாவுக்குத் திரும்பிச் சென்று இடைவிடாது மாறிவரும் அதன் சிக்கலான தோற்றத்தை மீண்டும் ஒரு முறை பார்க்க வேண்டும். இரண்டு மாதங்களுக்கு முன்பு எழுதிய கடிதங்களில் நாம் அந்நூற்றுண்டை ஆராய்ந்த போது, அதன் சிறப்பியல்புகள் சிலவற்றை நான் உனக்குச் சுட்டிக் காட்டினேன். நான் அப்போது குறிப்பிட்ட 'வாதங்கள்' அனைத்தையும் நீ நினைவில் வைத்திருப்பாய் என்று நான் எதிர்பார்க்கவில்லை. தொழில் வாதம், முதலாளித்துவ வாதம், சாம்ராஜ்ய வாதம், அபேத வாதம், தேசிய வாதம், சர்வ தேசிய வாதம் ஆகியவை நான் குறிப்பிட்ட 'வாதங்களில்' சிலவாகும். ஜனநாயகத்தைப்பற்றியும், விஞ்ஞானத்தைப்பற்றியும், போக்குவரவு சாதனங்களில் விளைந்த புரட்சிகரமான மாறுதல்களைப் பற்றியும், பொதுஜனக் கல்வியைப்பற்றியும், அதன் விளைவாகிய நவீன பத்திரிகையைப் பற்றியும் அப்போது நான் உனக்குக் கூறினேன். இவையும் இன்னும் பலவும் சேர்ந்து அக்கால ஐரோப்பிய 'பூர்ஷுவா' நாகரிகத்தை ஆக்கின. அந்நாகரிகத்தில் புதிய மத்திய வகுப்பார் முதலாளித்துவ முறையின் கீழ் யந்திரத்தொழில் மீது ஆதிக்கம் வகித்துவந்தார்கள். அவ் ஐரோப்பிய பூர்ஷுவா நாக

ரிகம் வெற்றிக்கு மேல் வெற்றியாகப் பெற்றுவந்தது. அதன் கீர்த்திப் பிரபாவம் மேலும் மேலும் உயர்ந்து வந்தது. அந்நூற்றுண்டு முடிவில், உலகமெல்லாம் அதன் வல்லமையைக் கண்டு வாயைப் பிளந்துகொண்டு நின்ற காலையில், அதற்குச் சனி பிடித்தது.

ஆசியாவில் அந்நாகரிகம் வேலை செய்த முறையையும் நாம் சற்று விரிவாகப் பார்த்தோம். அபாரமாகப் பெருகிவரும் தன்னுடைய தொழில் அபிவிருத்தியினுல் உந்தப்பட்ட ஐரோப்பா, தன்னிருகைகளையும் நீட்டித் தூரதேசங்களையெல்லாம் பற்றிக் கொள்ளவும், அவற்றைத் தனக்கு அனுகூலமான விதத்தில் அடக்கி ஆளவும் முயன்று வந்தது. இங்கே 'ஐரோப்பா' என்று சொல்லும்போது நான் மேற்கு ஐரோப்பாவையே சிறப்பாகக் குறிக்கிறேன். மேற்கு ஐரோப்பாதான் தொழில் முறையில் முன்னணியில் நின்றது. மேற்கு ஐரோப்பிய நாடுகளுள்ளும் நெடுங்காலமாக அக்கிரஸ்தானம் வகித்தது இங்கிலாந்துதான். அது மற்ற நாடுகளை மிகவும் முந்திக்கொண்டது. அதனுல் அது கொள்ளைநன்மை அடைந்தது.

அந்நூற்றுண்டின் தொடக்கத்தில் இங்கிலாந்திலும் இதர மேல் ஐரோப்பிய நாடுகளிலும் விளைந்துகொண்டிருந்த அம்மாபெரும் மாறுதல்களை அரசர்களும் சக்கரவர்த்திகளும் தெரிந்துகொள்ளவில்லை. புதிய சக்திகளின் முக்கியத்தை அவர்கள் உணரவில்லை. நெப்போலியன் முடிவாக ஒழிக்கப்பட்ட பிறகு, தங்களையும் தங்கள் வர்க்கத்தாரையும் நிரந்தரமாகக் காப்பாற்றிக்கொண்டு உலகில் யதேச்சாதிகாரத்துக்கு என்றென்றும் அழிம்பு நேராமல் பார்த்துக்கொள்ளவேண்டும் என்பதுதான் ஐரோப்பிய அரசர்களின் ஒரே நோக்கமாயிருந்தது. பிரெஞ்சுப் புரட்சியும் நெப்போலியனுடைய செய்கையும்

அவர்களை மிகவும் வெருட்டிவிட்டன. அந்த வெருட்சியிலிருந்து அவர்கள் இன்னும் முழுவதும் தெளியவில்லை. வருவது வரட்டும் என்று கையைக்கட்டிக்கொண்டு உட்கார்ந்திருக்க அவர்கள் இனிமேல் தயாராயில்லை. நான் முன்கடிதம் ஒன்றில் கூறியதுபோல, அவர்கள் தங்களுக்குள் 'பரிசுத்தக் கூட்டுறவுகள்' போன்ற கூட்டுறவுகளை ஏற்படுத்திக்கொண்டு தங்களுடைய 'தெய்வீக உரிமை'யைக் காக்கவும் ஜனங்களைத் தலை தூக்கவொட்டாமல் அடிக்கவும் முயன்றுவந்தார்கள். இதற்காக யதேச்சாதிகாரமும் மதமும் ஒன்று சேர்ந்து கொண்டன. இவ்வாறு இவ் விரண்டும் சேர்ந்து கொள்வது புதிதல்ல; இதற்குமுன் எத்தனையோ தடவை இம்மாதிரி நிகழ்ந்திருக்கிறது. இக்கூட்டுறவுகளை ஆக்குவதில் முதன்மையாயிருந்தவன் ருஷிய ஜாராகிய அலெக்சாந்தர். அவனுடைய நாடாகிய ருஷியாவில் தொழில் முறையோ நவீன உணர்வோ தலைகாட்டவில்லை. அது மிகவும் பிற்போக்கான இடைக்கால நிலைமையிலேயே உழன்றுகொண்டிருந்தது. ருஷியாவில் பெரிய நகரங்கள் மிகச் சிலவே. அங்கே வர்த்தகம் அபிவிருத்தி செய்யப்படவில்லை. குடிசைக் கைத்தொழில்கள் கூட நல்ல நிலைமையில் இல்லை. யதேச்சாதிகர்ரம் தலைவிரித்தாடியது. மற்ற ஐரோப்பிய நாடுகளில் நிலைமை வேறு விதமாயிருந்தது. மேற்கே போகப்போக மத்திய வகுப்பாரின் செல்வாக்கு அதிகமாகக் காணப்பட்டது. இங்கிலாந்தில் அரசன் யதேச்சாதிகாரமாகத் தன்போக்கில் நடக்கவில்லை. அரசன் அத்துமீறுவண்ணம் பார்லிமெண்டு பார்த்துக்கொண்டது. ஆனால், பார்லிமெண்டே ஒரு சில பணக்காரரின் வசத்தில்தான் இருந்தது. இதை 'ஒரு சிலராட்சி' (Oligarchy) என்று கூறலாம். ருஷியாவின் யதேச்சாதிகார ஆட்சிக்கும் இங்கிலாந்தின் ஒருசில

ராட்சிக்கும் அதிக வித்தியாசம் உண்டு. ஆனால் இரண்டுக்கும் ஒரு அம்சம் மட்டும் பொதுவாயிருந்தது. அதுதான் பொதுஜனங்களிடத்தும் புரட்சியினிடத்தும் உள்ள பயம்.

ஆகவே, ஐரோப்பா வெங்கும் பிற்போக்குச் சக்தி வெற்றி பெற்றது. தாராள நோக்கம் கொண்டவையெல்லாம் தயவு தாட்சணியமின்றி அடக்கி ஒடுக்கப்பட்டன. 1815-ல், வியன்னா காங்கிரசில் செய்யப்பட்ட முடிவுகளின்படி, பல தேசியப் பிரிவினர்கள் மீது—உதாரணமாக, இதாலியையும் கீழ் ஐரோப்பாவையும் சேர்ந்தவர்கள்மீது - அந்நிய ஆட்சி சுமத்தப்பட்டது. அவர்களையெல்லாம் பலாத்காரத்தால் அடக்கியாள வேண்டியிருந்தது. ஆனால், இம்முறையை நெடுநாளைக்கு வெற்றிகரமாகக் கையாளுவது சாத்தியமில்லை. ஒரு இடம் இல்லாவிட்டால் ஒரு இடம் பிய்த்துக்கொள்ளும். அது ஆவி கிளம்பும்படியாகக் கொதிக்கும் ஒரு வெந்நீர்க் கடாரத்தின் மூடியை அமுக்கிப் பிடிப்பதைப் போன்றது. ஐரோப்பா அப்படித்தான் கொதித்துக் கொண்டிருந்தது. அடிக்கடி அதன் ஆவி பீறிட்டுக் கொண்டு வெளிக்கிளம்பியது. 1830-ல் நிகழ்ந்த எழுச்சிகளைப் பற்றி முன்கடிதம் ஒன்றில் கூறியிருக்கிறேன். ஐரோப்பாவில் அப்போது பல மாறுதல்கள் விளைந்தன. முக்கியமாக, பிரான்சிலிருந்து பூர்பான் வமிசம் முடிவாக விரட்டியடிக்கப் பட்டது. அவ்வெழுச்சிகள் அரசர்களையும் அரசர்க்கரசர்களையும் அவர்களுடைய அமைச்சர்களையும் இன்னும் அதிகமாக அச்சுறுத்தி விட்டன. அவர்களும் இன்னும் அதிகமாகப் பலாத்காரத்தை உபயோகித்து ஜனங்களை அடக்கி வந்தார்கள்.

போர்களாலும் புரட்சிகளாலும் தேசங்கள் பெரு மாறுதல் உறுவதை நாம் இக் கடிதங்களில் அடிக்கடி

பார்த்து வருகிறோம். பழைய காலத்துப் போர்களை மதப் போர், வமிசப்போர் என்று இருவகையாகப் பிரிக்கலாம். அவை பெரும்பாலும் ஒரு தேசியப் பிரிவினர் இன்னொரு தேசியப் பிரிவினர் மீது செல்லும் அரசியல் படையெடுப்புகளாகவே இருந்தன. அப் படையெடுப்புகளுக்கான காரணங்களுக்குப் பின்னால் ஏதாவதொரு பொருளியல் காரணமும் இருப்பது வழக்கம். உதாரணமாக, முன்காலத்தில் மத்திய ஆசிய ஜாதியார்கள் ஐரோப்பா மீதும் ஆசியா மீதும் படையெடுத்துச் சென்றதற்குக் காரணம் அவர்களுடைய பசிக் கொடுமைதான். பசி அவர்களை மேற்கே செல்லும்படி பிடர்பிடித்துந்தியது. பொருளியல் முன்னேற்றமானது ஒரு தேசத்துக்கோ அல்லது ஒரு ஜனத்துக்கோ பலம் அளித்து அவர்களை மற்றவர்களைவிட உயர் நிலையில் வைக்க வல்லது. ஐரோப்பாவிலும் பிற இடங்களிலும் மதத்தின் பெயரால் நடந்த போர்களுக்குக்கூடப் பொருளியல் காரணம் அடிப்படையாயிருந்ததென்பதை நான் உனக்குச் சுட்டிக் காட்டியுள்ளேன். நவீன காலத்தை நாம் குறுகக் குறுக மதப் போர்களும் வமிசப் போர்களும் மறைவதைக் காண்கிறோம். ஆனால், போருக்கு மட்டும் முடிவென்பதைக் காணோம். துரதிருஷ்டவசமாக, அது மேலும் மேலும் உக்கிரமாக மாறுகிறது. ஆனால், அப்போருக்கான காரணங்கள் அரசியல், பொருளியல் சம்பந்தமுடையவை என்பது துலக்கம். அரசியல் காரணங்கள் பெரும்பாலும் தேசியச் சார்புடையவை. அத் தேசியச் சார்பு இருவகைப்படும். ஒரு தேசம் இன்னொரு தேசத்தை அடக்கியாளும் போதும், ஆக்கிரமிப்பில் ஈடுபட்டுள்ள இரு தேசங்கள் தம்முள் இகலி நிற்கும் போதும் தேசியச் சார்புபற்றிய அரசியல் போர்கள் நிகழ்கின்றன. ஆய்ந்து பார்ப்பின், அத்தகைய போர்களும்

பெரும்பாலும் பொருளியல் காரணங்களை அடிப்படையாக உடையன என்பது புலனாகும். தொழில் அபிவிருத்தி மிக்க நவீன நாடுகள் மூலப்பொருள்களுக்காகவும் மார்க்கெட்டுகளுக்காகவும் போரிடுகின்றன. அதைத்தான் பொருளியல் காரணம் என்பது. ஆகவே, போர்களுக்கு வரவரப் பொருளியல் காரணங்களே முக்கியமாக விளங்குவதை நாம் காண்கிறோம். அதுவும், இன்றைய போர்களில் பொருளியல் காரணங்களே மற்றெல்லாவற்றையும் மறைத்து நிற்கின்றன.

போர்களைப் போலவே புரட்சிகளும் மாறுதலுற்று வந்திருக்கின்றன. ஆதிகாலத்துப் புரட்சிகள் பெரும்பாலும் அரண்மனைப் புரட்சிகளாகத்தான் இருப்பது வழக்கம். அரசகுடும்பங்களைச் சேர்ந்தவர்கள் ஒருவர் மற்றவருக்கு விரோதமாகச் சூழ்ச்சி செய்து, ஒருவரோடொருவர் போரிட்டுக்கொண்டு ஒருவரையொருவர் கொன்றுவிடுவார்கள்; அல்லது, ஒரு கொடுங்கோல் மன்னனால் அளவுக்குமீறித் துன்புறுத்தப்பட்ட ஜனங்கள் வெகுளி பொங்க எழுந்து அவனை ஒழித்துவிடுவார்கள்; அல்லது, அரசனாகும் விருப்புடைய ஒரு போர் வீரன் தன் படைத்துணை கொண்டு ஏற்கெனவே அரசனாயுள்ளவனைத் தள்ளிவிட்டுத் தான் அரசைக் கவர்ந்து கொள்வான். இத்தகைய அரண்மனைப் புரட்சிகளில் பெரும்பாலானவை ஒரு சிலரிடையில்தான் நிகழும். அவை பொதுஜனங்களை அதிகமாகப் பாதிப்பதில்லை. அவர்கள் அவற்றைக் காதில் போட்டுக் கொள்வதும் இல்லை. அப்புரட்சிகளால் அரசர்கள் மாறினார்களே ஒழிய அரசாட்சி முறை மாறவில்லை. ஜனங்கள் பழையபடியே தங்கள் வாழ்க்கையை நடத்தி வந்தார்கள். ஆயினும், கெட்ட அரசன் ஜனங்களை அதிகமாகத் துன்புறுத்திப் பொறுக்க முடியாத ஒரு

நிலையை உண்டுபண்ணுவான் என்பதும், நல்ல அரசனுடைய ஆட்சி சற்றுச் சுமராயிருக்கும் என்பதும் உண்மையே. ஆனால், அரசன் நல்லவனாயினும் கெட்டவனாயினும், வெறும் அரசியல் மாறுதலால் மட்டும் ஜனங்களுடைய சமூகப் பொருளியல் நிலை வழக்கமாகப் பாதிக்கப் படுவதில்லை; சமூகப் புரட்சி தோன்றுவதில்லை.

தேசியப் புரட்சிகள் அரண்மனைப் புரட்சிகளைவிட அதிக மாறுதல் விளைப்பனவாகும். ஒரு தேசம் இன்னொரு தேசத்தால் ஆளப்படும்போது அங்கே அந்நிய வகுப்பு ஒன்று ஆதிக்கம் செலுத்துகிறது. அந்நிய ஆதிக்கம் பல வழிகளில் தீமை பயப்பதாகும். ஒரு தேசம் அந்நியரால் ஆளப்படும்போது, அதனால் அந்த அந்நிய தேசமோ அல்லது அந்த அந்நிய வகுப்போதான் நன்மை அடைகிறது. அந்நிய ஆட்சி, அடிமைப்பட்டுக் கிடக்கும் நாட்டாரின் சுயமரியாதைக்குப் பெரிதும் பங்கம் விளைக்கிறதென்பது ஒன்று. இரண்டாவது, ஆளுகின்ற அந்நியவகுப்பு அதிகாரப்பதவிகளையும் உயர்பதவிகளையும் தனக்கென்று வைத்துக் கொள்வதால் ஆளப்படும் நாட்டைச் சேர்ந்த உயர் வகுப்பார் அவற்றை அடைய முடியாமல் போய்விடுகிறது. அவர்களுடைய நாடு சுதந்திர நாடாயிருந்திருப்பின் அவர்களுக்கே அப் பதவிகள் கிடைத்திருக்கும். வெற்றிகரமான ஒரு தேசியப் புரட்சி அந்நிய வகுப்பை முதலில் ஒழிக்கிறது. உடனே அவ்வந்நிய வகுப்பு வகித்த ஸ்தானத்தை தேசத்தின் உயர் வகுப்பார் அடைகிறார்கள். இவ்வாறு, அதிகாரம் செலுத்தும் அந்நிய வகுப்பு ஒழிவதால் தேசத்தின் உயர் வகுப்பார் பெரிதும் நன்மை அடைகிறார்கள்; அதற்குப்பின் அந்தத் தேசம் இன்னொரு தேசத்தின் நன்மைக்காக ஆளப்பட மாட்டாதாகையால் பொதுவாக தேசமும் நன்மை அடைகிறது. தேசியப் புரட்சியுடன்

சமூகப் புரட்சியும் தோன்றினாலொழிய, விடுதலையடைந்த நாட்டின் கீழ்வகுப்பார் அதிக நன்மை அடையமுடியாது போகலாம்.

சமூகப் புரட்சி என்பது மற்றப் புரட்சிகளினின்று மிகவும் மாறுபட்டதாகும். மற்றப் புரட்சிகள் வெறும் மேற்போக்கான மாறுதல்களையே உண்டாக்குகின்றன. சமூகப் புரட்சியில் அரசியல் புரட்சியும் அடங்கியிருக்கிறது. ஆனால், அது சமூகத்தின் கட்டுக்கோப்பையே மாற்றி விடுவதால் அரசியல் புரட்சியை விட அதிகப் பிரபாவம் வாய்ந்ததாகும். பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கு அதிகாரத்தை அளித்த பிரிட்டிஷ் புரட்சி வெறும் அரசியல் புரட்சிமட்டு மல்ல. அது பணக்கார பூர்ஷ்வா வகுப்பை அதிகாரத்தை வகித்தவர்களுடன் சேர்த்து வைத்தபடியால், ஓரளவு சமூகப் புரட்சியும் ஆகும். அதனால், உயர் பூர்ஷ்வா வகுப்பு அரசியலிலும் சமூக இயலிலும் உயர்வடைந்தது. கீழ்ப் பூர்ஷ்வா வகுப்பும் சாமானிய ஜனங்களும் அதனால் பாதிக்கப்படவில்லை. பிரெஞ்சுப் புரட்சியைப் பிரிட்டிஷ் புரட்சியைக் காட்டிலும் பெரிய சமூகப் புரட்சி என்று சொல்லவேண்டும். அது சமூக அமைப்பை அடியோடு தலைகீழாக்கிவிட்டதை நாம் கண்டோம். சில காலம் சாமானிய ஜனங்களின் அமுல்கூட அப்போது நடந்தது. பிரான்சிலும் முடிவாக வெற்றி பெற்றது பூர்ஷ்வா வகுப்புதான். புரட்சியில் சாமானிய ஜனங்கள் செய்ய வேண்டிய வேலை முடிந்த பிறகு, அவர்கள் தங்களுடைய பழைய இடத்துக்கே திருப்பி அனுப்பப்பட்டார்கள். ஆனால், அப் புரட்சியின் பயனாக விசேஷச் சலுகைகளை அனுபவித்து வந்த பிரபு வகுப்பு ஒழிந்தது.

வெறும் அரசியல் மாறுதல்களைவிட மேற்கூறியது போன்ற சமூகப் புரட்சிகள் தீர்க்கமான பலனைக் கொடுக்

கக் கூடியவை என்பது அங்கை நெல்லிக் கனியென விளங்குகிறது. சமூகப் புரட்சிகள் சமூக நிலைமைகளோடு நெருங்கிய தொடர்புடையன. ஜனங்கள் சமூகப் புரட்சிக்குத் தயாராயிருக்கும்படியான நிலைமை ஏற்பட்டாலொழிய, பேராசையும் பேராத்திரமும் கொண்ட ஒரு தனி மனிதனோ அல்லது ஒரு சிறு கூட்டமோ சமூகப் புரட்சியைச் சிருஷ்டித்துவிட முடியாது. பிறருடைய சொல்லின் பேரில் ஜனங்கள் புரட்சிக்குத் தயாராவதை நான் இங்கே குறிப்பிட வில்லை. 'இப்போதுள்ள சமூகப் பொருளியல் நிலைமைகளின் கீழ் இனி ஒரு நிமிஷமும் வாழ முடியாது. புரட்சி செய்து இதை மாற்றினாலொழிய நமக்கு விமோசனமில்லை' என்னும் மனநிலை ஜனங்களுக்கு ஏற்படவேண்டும். உண்மை என்னவென்றால் கடந்த பல்லாயிர வருஷங்களாகவே பெரும்பாலான ஜனங்களுக்கு வாழ்க்கை பொறுக்க முடியாத ஒரு பெருஞ் சுமையாகத்தான் இருந்து வருகிறது. அதை அவர்கள் பொறுத்துக் கொண்டிருப்பதுதான் ஆச்சரியத்துக் குரிய விஷயம். சில சமயங்களில் அவர்கள் வீறு கொண்டு கிளர்ந்தெழுந்தார்கள். குடியானவர் கலகங்களும் 'ஜாக்கெரி' களும் நிகழ்ந்தன. ஜனங்கள் கோப வெறியில் அறிவிழந்தவர்களாய்க் கைக்கு அகப்பட்டதை யெல்லாம் அழித்தார்கள். ஆனால், அவர்கள் சமூக அமைப்பை மாற்ற வேண்டும் என்னும் தெளிவான ஒரு விருப்பத்துடன் தெரிந்து எதையும் செய்தவர்களல்ல. அவ்வாறிருந்தும் முன்காலத்தில் சமூக அமைப்பு அநேகமுறை முறிந்து விழுந்தது. புராதன ரோமாபுரியிலும், ஐரோப்பாவில் இடைக் காலத்தின் போதும், இந்தியாவிலும், சீனாவிலும் சமூக அமைப்புப் பன்முறை குலைவுற்றது. அது காரணமாகப் பல சாம்ராஜ்யங்கள் வீழ்ந்தொழிந்தன.

முன் காலத்தில் சமூகப் பொருளியல் மாறுதல்கள் மிகவும் மெள்ள நிகழ்ந்தன. நெடுங்காலம் வரையில் உற்பத்தி, விநியோக, போக்கு வரவு முறைகள் யாதொரு மாறுதலுமின்றி ஒரே மாதிரியாக இருந்து வந்தன. ஆகவே, ஜனங்கள் மாறுதல் கிரமத்தைக் கவனிக்க முடியவில்லை. தொன்று தொட்டு இருந்துவரும் சமூக ஏற்பாடே நிலையானது, மாறுதல் இல்லாதது என்று அவர்கள் எண்ணிக்கொண் டிருந்தார்கள். அவ்வேற்பாட்டுக்கும் அதைச்சார்ந்த நம்பிக்கைகளுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் மதம் ஒரு தெய்வீகச் சோபையை அளித்தது. புதிய நிலைமைகளின் கீழ்ப் பழைய ஏற்பாடு சாத்தியமில்லை என்பது தெளிவாகத் தெரிந்த பின்பும் ஜனங்கள் அதை மாற்ற வேண்டுமென்று கனவிலும் நினைக்கவில்லை என்றால், அதன் மாற்றமுடியாத தன்மையில் அவர்களுக்கிருந்த உறுதியான நம்பிக்கையை நீயே ஊகித்துக் கொள்ளலாம். தொழிற்புரட்சி காரணமாகவும், போக்கு வரவு சாதனங்களில் விளைந்த பெரு மாறுதல்கள் காரணமாகவும், சமூக மாறுதல்கள் துரிதமாக நிகழலாயின. புதிய வகுப்புகள் முன்னுக்கு வந்து செல்வத்தில் உயர்ந்தன. ஒரு புதிய யந்திரத்தொழிலாளி வகுப்பும் தோன்றியது. இவர்களுக்கும் பழைய கைத்தொழிலாளிகள், பண்ணைத் தொழிலாளிகள் ஆகியோருக்கும் அதிக வித்தியாசம் காணப்பட்டது. புதிய நிலைமைகளின் கீழ் ஒரு புதிய பொருளியல் ஏற்பாடும் அரசியல் மாறுதலும் அவசியமா யிருந்தன. மேல் ஐரோப்பா ஒரு விதமான பொருத்தமற்ற நிலைமையில் இருந்தது. ஒரு சமூகம் அறிவுள்ளதாயிருப்பின் அது காலத்துக்கேற்ற அவசிய மாறுதல்களைச் செய்துகொண்டு அதனால் வரும் பலனையும் பூரணமாக அடையும். ஆனால், சமூகங்கள் அறிவுடையனவாக இருப்பதில்லை. அவை

பொதுவான முறையிலும் தம்மைப்பற்றிச் சிந்திப்பதில்லை. தனி மனிதர்கள் தங்களைப்பற்றியும் தங்களுக்கு நன்மையான விஷயங்களைப்பற்றியுமே எண்ணுகிறார்கள். ஒரேவிதமான நலன்களில் அக்கறையுடைய வகுப்பாரும் அவ்வாறே செய்கிறார்கள். ஒருவகுப்பு ஒரு சமூகத்தின் மீது ஆதிக்கம் செலுத்தினால் அது தனக்குக் கிடைத்துள்ள ஸ்தானத்தை உடும்புப் பிடியாகப் பற்றிக்கொண்டு அங்கேயே இருக்கவும், தனக்குக் கீழுள்ள மற்ற வகுப்புகளைச் சுரண்டிப் பிழைக்கவும் முயற்சிக்கிறது. முடிவாகப் பார்க்குமிடத்து, தன்னை உயர்த்திக்கொள்வதற்குச் சிறந்த உபாயம் தான் வாழும் சமூகம் முழுதையும் உயர்த்துவதுதான் என்னும் உண்மையை அறிவும் தீர்க்கதிருஷ்டியும் உடைய எவனும் உணர்வான். ஆனால், அதிகாரத்தில் உள்ள ஒரு தனி மனிதனோ அல்லது வகுப்பாரோ உள்ளதை விடாது பற்றிக்கொள்ளவே விரும்புகிறார்கள். அதற்குச் சுலபமான வழி, மற்ற வகுப்பாரையும் ஜனங்களையும் ஏற்கெனவே நடைமுதலில் உள்ள சமூக ஏற்பாடுதான் எல்லாவற்றையும் விடச் சிறந்தது என்று நம்பும்படி செய்வதுதான். இதை ஜனங்கள் மனத்தில் பதியவைப்பதற்கு அவர்கள் மதத்தையும் இழுத்துக் கொள்ளுகிறார்கள். ஜனங்களுக்கு அளிக்கப்படும் கல்வியும் இந்தப் பாடத்தையே வற்புறுத்துகிறது. கடைசியில், ஆச்சரியம் என்னவென்றால், நடைமுதல் ஏற்பாடே சிறந்தது, அதை மாற்றவேண்டிய அவசியமே இல்லை என்று அநேகமாக எல்லோரும் பரிபூரணமாக நம்பி விடுகிறார்கள். அந்த ஏற்பாட்டின் கீழ்க் கஷ்டப்படுகிறவர்கள் கூடப் பிறர் தங்களை உதைப்பதும் தாங்கள் பிறரிடம் உதைபடுவதும், பிறர் உண்டு கொழுத்து உல்லாசமாக வாழ்வதும் தாங்கள் ஒன்றுமின்றிப் பட்டினி கிடப்பதும் நியாயம் தான் என்று உண்மையாக நம்புகிறார்கள்.

ஆகவே, சமூக ஏற்பாடு மாற்ற முடியாதது, அதன் கீழ்ப் பெரும்பாலோர் கஷ்டப்பட்டால் அது யாருடைய பிசகும் இல்லை என்று ஜனங்கள் எண்ணுகிறார்கள். "கஷ்டப்படுவது கஷ்டப்படுகிறவர்களுடைய பிசகு. அது அவர்களுடைய தலைவிதி; பூர்வ ஜென்மங்களில் செய்த பாபங்களின் பலன்களையே அவர்கள் அனுபவிக்கிறார்கள். அதற்கு யார் என்ன செய்ய முடியும்?" என்று சமூகம் எண்ணுகிறது. சமூகம் எப்பொழுதுமே பழமைப் பற்றுடையது. மாறுதல் என்றாலே அதற்குப் பிடிப்பதில்லை. அது தான் போகிற போக்கிலேயே போய்க்கொண்டிருக்க விரும்புகிறது. தான் போகிற போக்குதான் சரியான போக்கு என்றும் அது உறுதியாக நம்புகிறது. ஆகவே, நிலைமையைச் சீர்திருத்தவேண்டும் என்னும் நோக்கத்துடன் சமூகம் தன் போக்கை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று சொல்லுகிறவர்களை அது தண்டிக்கிறது.

ஆனால், ஆத்ம திருப்தி கொண்டவர்களுக்காகவும் அறிவுக்கு வேலை கொடுக்க மறுப்பவர்களுக்காகவும் சமூகப் பொருளியல் நிலைமைகள் காத்துக்கொண்டிருப்பதில்லை. ஜனங்களின் கருத்துகள் நின்ற நிலையிலேயே இருக்கலாம். ஆனால், சமூகப் பொருளியல் நிலைமைகள் நின்ற நிலையிலேயே இருப்பதில்லை. அவை வேகமாக முன்னேறிச் செல்கின்றன. காலத்துக் கொவ்வாத கருத்துகளுக்கும் உண்மையான நிலைமைக்கும் உள்ள இடைவெளி அதிகமாகிக்கொண்டே போகிறது. அந்த இடைவெளியைக் குறைத்து இரண்டையும் ஒன்று சேர்க்காவிட்டால் சமூகக் கட்டிடம் இடிந்து விழுகிறது. உண்மையான சமூகப் புரட்சிகள் இப்படித்தான் ஏற்படுகின்றன. நிலைமைகள் மேற்கூறிய பக்குவத்தில் இருந்தால் புரட்சி கட்டாயம் ஏற்பட்டே தீரும்.

கர்நாடகமான கட்டுப்பெட்டிக் கருத்துகள் அதை ஓரளவு தாமதிக்கச் செய்யலாமே ஒழிய நிறுத்திவிட முடியாது. ஆனால், புரட்சிக்குரிய பரிபக்குவ நிலைமை இல்லாவிட்டால், ஒருசிலர் என்னதான் பிரம்மப் பிரயத்தனம் செய்தாலும் அதை உண்டுபண்ண முடியாது. புரட்சி தோன்றுகிறபோது உண்மையான நிலைமையை ஜனங்களிடமிருந்து மறைத்து நிற்கும் திரை விலகுகிறது. அப்போது உண்மை அவர்களுக்குத் துலாம்பரமாகக் காட்சி அளிக்கிறது. அவர்கள் இதுவரையில் போய்க் கொண்டிருந்த பழைய போக்கு மாறியவுடனே, அவர்கள் வேகமாகச் செல்ல ஆரம்பிக்கிறார்கள். அதனால்தான், புரட்சிகளின் போது கருதவும் கழறவும் முடியாத பேராற்றலுடன் அவர்கள் விரைந்து முன்னேறுகிறார்கள். ஆகவே, பழைமையைக் கட்டிக்கொண்டு அழுவதாலும், முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தப் பார்ப்பதாலுமே புரட்சி தவிர்க்க முடியாததாகிவிடுகிறது என்பது வெளிச்சமாகிறதல்லவா? சமூகம் மாறுதலற்றது என்னும் மூடக்கொள்கையை விட்டுவிட்டுக் காலத்துக்கேற்றவாறு அது தன்னை மாற்றிக் கொள்ளுமாயின் சமூகப் புரட்சி தோன்றவே தோன்றாது. அப்போது புரட்சிக்குப் பதிலாகச் சமூகம் இயற்கையை ஒட்டி இடைவிடாது வளரும் வளர்ச்சியைக் காணலாம்.

புரட்சிகளைப் பற்றி எழுதவேண்டும் என்கிற எண்ணமின்றியே அவற்றைப் பற்றிச் சற்று விரிவாக எழுதிவிட்டேன். புரட்சி விஷயம் எனக்கு மிகவும் உகந்தது. ஏனெனில், இன்று உலகெங்கும் பொருத்தமற்ற நிலைமையே காணப்படுகிறது. பல இடங்களில் சமூக ஏற்பாடு தகர்ந்து வருகிறது. முன் காலத்தில் இத் தகைய நிலையே புரட்சியின் வரவை முன்னதாகத் தெரிவிக்கும் கட்டியக்காரனாக இருந்தது. உலகத்தில் நாளைக்கே பெரு

மாறுதல்கள் தோன்றப் போகின்றன என்னும் எண்ணம் நமக்கு இயற்கையாகவே உண்டாகிறது. இந்தியாவிலும் அந்நிய ஆட்சிக்குட்பட்ட மற்ற நாடுகளிலும் தேசிய உணர்ச்சியும், அந்நிய ஆட்சியை ஒழித்துத் தலை முழுக வேண்டும் என்னும் விருப்பமும் தீவிரமாக இருக்கின்றன. ஆனால், இத்தேசிய உணர்ச்சி பெரும்பாலும் பணக்கார வகுப்பாரிடையில் தான் அதிகமாகக் காணப்படுகிறது. விவசாயிகளும் தொழிலாளிகளும் இன்னும் பசியோடுடன் பிறந்தவர்களும் தங்களுடைய குட்சி பாதையை நிவர்த்தித்துக் கொள்வதில்தான் அக்கறை கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அர்த்தமற்ற தேசியக் கனவுகள் காண்பதில்லை. அது இயற்கையே. அவர்களுக்கு 'தேசியம்' 'சுயராஜ்யம்' என்பனவெல்லாம் விளங்குவதில்லை. சுயராஜ்யம் வந்தால் தங்களுக்குச் சோறு அதிகமாகக் கிடைக்குமா, சுயராஜ்யத்தினால் தங்களுடைய நிலைமை சீர்திருந்துமா என்று அவர்கள் கேட்கிறார்கள். ஆகவே, இந்தியாவில் தற்போது முன்னிற்கும் பிரச்சினை வெறும் அரசியல் பிரச்சினை மட்டுமல்ல; அது அதிகாம்சம் சமூகப் பிரச்சினையும் ஆகும்.

நான் எடுத்த விஷயத்தை விடுத்துப் புரட்சிகளைப் பற்றி அதிகமாகப் பேசிவிட்ட காரணம், 19-வது நூற்றாண்டில் ஐரோப்பாவில் விளைந்த பற்பல புரட்சிகளைப் பற்றியும் கலகங்களைப்பற்றியும் நான் விவாதித்துக் கொண்டிருந்தது தான். அந்நூற்றாண்டின் முற்பாதியில் விளைந்த புரட்சிகள் பல அந்நிய ஆட்சிக்கு விரோதமான தேசிய எழுச்சிகளாகும். அவற்றோடு கூடவே, தொழிலபிவிருத்தி மிக்க நாடுகளில் சமூகப் புரட்சியைப் பற்றிய கருத்துகளும் பரவிவந்தன. புதிய தொழிலாளி வகுப்புக்கும் அதற்கு யஜமான ஸ்தானத்தில் இருந்த முதலாளி வகுப்புக்கும் விரோதம் முற்றி வந்தது. ஜனங்கள் சமூகப்

புரட்சியைப் பற்றிப் புத்திபூர்வமாகச் சிந்தித்து அதற்காக வேலையும் செய்யத் தொடங்கினர்கள்.

ஐரோப்பாவில் 1848-ம் ஆண்டு, புரட்சி ஆண்டு என்று அழைக்கப்படுகிறது. அவ்வாண்டில் பலநாடுகளில் புரட்சிகள் தோன்றின. அவற்றில் சில ஓரளவு வெற்றி பெற்றன. ஆனல், அவை பெரும்பாலும் தோல்வியிலேயே முடிந்தன. போலந்திலும், இதாலியிலும், பொஹிமியாவிலும், ஹங்கேரியிலும் தோன்றிய புரட்சிகளுக்கு அடக்கப்பட்ட தேசிய உணர்ச்சி காரணமாயிருந்தது. போலந்து பிரஷியாவுக்கு விரோதமாகவும், பொஹிமியாவும் வடஇதாலியும் ஆஸ்திரியாவுக்கு விரோதமாகவும் புரட்சி செய்தன. ஆனல், அப்புரட்சிகள் அடக்கப்பட்டு விட்டன. ஆஸ்திரியாவுக்கு விரோதமாக ஹங்கேரி செய்த புரட்சிதான் எல்லாவற்றிலும் பெரிது. அதை லோஜஸ் கோசத் என்பவர் தலைமை வகித்து நடத்தினர். அவர் ஹங்கேரியச் சரித்திரத்தில் பிரசித்திபெற்ற தேசபக்தரும் விடுதலைப் போர்வீரரும் ஆவர். இரண்டு வருஷ எதிர்ப்புக்குப்பின் அப்புரட்சி அடக்கப்பட்டது. சில வருஷங்களுக்குப்பின் டேயக் என்னும் வேெருரு பெரிய தலைவரின் கீழ் வேெருரு விதமான போர்முறையை அனுஷ்டித்து ஹங்கேரி வெற்றிபெற்றது. டேயக்கின் முறைகள் சாத்வீக எதிர்ப்பை அடிப்படையாகக் கொண்டவை என்று அறிய நாம் ஆச்சரியப்படுவோம். 1867-ல் ஹங்கேரியும் ஆஸ்திரியாவும் ஏறக்குறையச் சமமான ஒரு அந்தஸ்தின் கீழ் ஒன்றுசேர்க்கப்பட்டன. அது "இரட்டை முடியாட்சி" என்று அழைக்கப்பட்டது. ஹாப்ஸ்பர்க் வமிசத்தைச் சேர்ந்த சக்கரவர்த்தியான பிரான்சிஸ் ஜோஸப் அதை ஆண்டுவந்தார். டேயக்கின் சாத்வீக எதிர்ப்பு முறைகளை முன்-மாதிரியாக வைத்துக்

கொண்டு, அரை நூற்றுண்டுக்குப்பின், அயர்லாந்து பிரிட்டனுடன் போரிட்டது. 1920-ல், இந்தியாவில் ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பிக்கப்பட்டபோது சிலருக்கு டேயக்கின் போராட்டம் ஞாபகத்துக்கு வந்தது. ஆனல், இவ்விரு முறைகளுக்கும் அதிக வித்தியாசம் உண்டு.

1848-ல் ஜெர்மனியிலும் கலகங்கள் நிகழ்ந்தன. ஆனல், அவை அவ்வளவு பிரமாதமானவை அல்ல. அவை அடக்கப்பட்டன. அதற்குப்பின், சில சீர்திருத்தங்கள் வழங்குவதாக உறுதி அளிக்கப் பட்டது. பிரான்சில் பெருமாறுதல் உண்டாயிற்று. 1830-ல் பூர்பான் அரச வமிசம் நாட்டைவிட்டு ஓட்டப்பட்டதிலிருந்து, லூயி பிலிப் என்பவன் பிரான்சை ஆண்டுவந்தான். அவனை அரைவாசி சட்ட ரீதியான அரசன் என்று சொல்லலாம். 1848-க்குள் ஜனங்களுக்கு அவனிடம் சலிப்பு ஏற்பட்டு விட்டது. அவன் வேறுவழியின்றி முடிதுறந்தான். மீண்டும் குடியரசு ஸ்தாபிக்கப்பட்டது. இது பிரான்சின் இரண்டாவது குடியரசாகும். முதல் குடியரசு பிரெஞ்சுப் புரட்சியின் போது தோன்றியது. இரண்டாவது குடியரசு தோன்றிய போது இருந்த குழப்பமான நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டு நெப்போலியனின் உறவினனை லூயி போனபார்ட் என்பவன் பாரிசுக்கு வந்து சுதந்திரத்துக்குப் பெரிய நண்பன் மாதிரி நடிக்கவே அவனைக் குடியரசின் பிரசிடெண்டாகத் தேர்ந்தெடுத்தார்கள். ஆனல், அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகவே அவன் அவ்வாறு சூழ்ச்சி செய்தான். அவன் தன்னுடைய ஸ்தானத்தில் நன்கு நிலைத்த பிறகு, ராணுவத்தைக் கைக்குள் போட்டுக் கொண்டு, 1851-ல் ஒரு 'அரசு கவர் சூழ்ச்சி' புரிந்தான். அவன் தன்னுடைய படைகளைக் காட்டிப்

பாரிசையும் தேசிய சபையையும் நடுங்கவைத்து ஜனங்களில் பலரைச் சுட்டுக் கொன்றான். அடுத்த வருஷம் அவன் மூன்றாவது நெப்போலியன் என்னும் பெயருடன் தன்னைச் சக்கரவர்த்தியாக மௌலி புனைந்துகொண்டான். நெப்போலியனுடைய பிள்ளை, அரசாளாமல் மாண்டாலும், இரண்டாவது நெப்போலியன் என்று கருதப்பட்டான். ஆகவே, இவன் மூன்றாவது நெப்போலியன் ஆனான். இவ்வாறு நாலே சொச்சம் வருஷம் ஜீவனம் நடத்திவிட்டு இரண்டாவது குடியரசு இறந்தொழிந்தது.

இங்கிலாந்தில் 1848-ல் புரட்சி ஒன்றும் ஏற்படவில்லை. ஆனால், நிலைமை குழப்பமும் கொந்தளிப்புமாயிருந்தது. ஏதாவது தகராறு முற்றும் போலிருந்தால் அதற்கு வளைந்து கொடுத்து அதைத் தவிர்த்துவிடும் சாமர்த்தியம் இங்கிலாந்துக்கு எப்போதுமே உண்டு. இங்கிலாந்தின் அரசியல் அமைப்பும் இவ்வாறு வளைந்து கொடுப்பதற்கு அனுகுணமாகவே இருக்கிறது. மேலும், நீண்டகால வழக்கத்தின் பயனாக, வேறு வழியில்லாத போது சட்டென்று விட்டுக்கொடுத்து ஏதாவது ஒரு ராஜியான ஏற்பாட்டை ஒப்புக்கொள்ளும் குணம் ஆங்கிலேயரின் ரத்தத்தில் ஊறிப்போயிருந்தது. இவ்வுபாயத்தினால், திடீர் திடீர் என்று பெரிய மாறுதல்கள் தங்கள் நாட்டில் தோன்றாவண்ணம் ஆங்கிலேயர் தடுத்து வந்திருக்கிறார்கள். ஆங்கிலேயரைப் போல் வளைந்து கொடுக்கும் சுபாவம் இல்லாத ஜனங்களையும் ஆங்கிலேய அரசியலமைப்பைப்போல் வளைந்து கொடுக்காத அரசியல் அமைப்பையும் கொண்ட நாடுகளில் அத்தகைய மாறுதல்கள் அடிக்கடி தோன்றி வந்தன. 1832-ல் ஒரு சீர்திருத்த மசோதா விஷயமாக இங்கிலாந்தில் ஒரு பெரிய கிளர்ச்சிப் புயல் வீசியது. அம்மசோதா

பார்லிமெண்டுக்கு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் வோட்டுரிமையை மேலும் பலருக்கு அளித்தது. நவீன அளவைகளின்படி அம்மசோதா அப்படி ஒன்றும் தீவிரமானதல்ல; மிகவும் மிதவாதப் போக்குடையதுதான். அதன்படி, மத்திய வகுப்பைச்சேர்ந்த இன்னும் சிலருக்கு மட்டும்தான் வோட்டுரிமை வழங்கப்பட்டது; தொழிலாளிகளுக்கும் மற்றும் பலருக்கும் அது அவ்வுரிமையை வழங்கவில்லை. அவர்கள் "பழைய பொன்னனே பொன்னன்" என்றுதான் இருந்தார்கள். அப்போது, பார்லிமெண்டு ஒரு சில பணக்காரரின் கையில் இருந்தது. அவர்களுடைய "உபயோகமற்ற சட்டைப்பைத் தொகுதிகள்" அவர்களை யாதொரு சிரமமுமின்றிப் பார்லிமெண்டுக்கு அனுப்பி வந்தன. இன்னும் அவர்கள் எத்தனையோ சலுகைகளையெல்லாம் அனுபவித்து வந்தார்கள். புதிய மசோதா சட்டமாகிவிட்டால் எங்கே அந்தச் சவுகரியங்களையெல்லாம் இழந்துவிட நேரிடுமோ என்று அவர்களுக்குப் பயம். ஆகவே, அவர்கள் அம்மசோதாவைத் தங்களுடைய முழுபலத்தைக் கொண்டும் எதிர்த்தார்கள். மசோதா நிறைவேறினால் இங்கிலாந்து பாழாய்ப் போய்விடும் என்றும், உலகமே அஸ்தமித்துவிடும் என்றும் அவர்கள் பிதற்றினார்கள். இங்கிலாந்தில் உள்நாட்டுப் போர் ஏற்படுகிற அளவுக்கு விவகாரம் முற்றிவிட்டது. மசோதாவை எதிர்த்தவர்கள் பார்த்தார்கள்; அதற்கு மேலும் முடக்கினால் காரியம் கெட்டுவிடும் என்று பயந்து மசோதா நிறைவேறுவதற்கு ஒப்புக் கொண்டார்கள். அவர்கள் அதற்குமுன் பூச்சி காட்டியபடி இங்கிலாந்தும் பாழாகவில்லை, உலகமும் அஸ்தமிக்கவில்லை என்று சொல்லத் தேவையில்லை. பார்லிமெண்டு பழையபடி பணக்காரர் கையிலேயே இருந்து வந்தது. அம்மசோதாவின் பயனாகப் பணக்கார

மத்திய வகுப்பார் மேலும் அதிகாரத்தை அடைந்தார்கள்.

1848-வாக்கில் இங்கிலாந்தில் இன்னொரு பெரிய அல்லோலகல்லோலம் ஏற்பட்டது. அது உரிமை விண்ணப்பக் கிளர்ச்சி என்று அழைக்கப்பட்டது. பல்வேறு சீர்திருத்தங்களைக் கோரும் 'ஜனங்களின் உரிமைப்பத்திரம்' ஒன்றைக் கொண்ட விசுவ விண்ணப்பம் ஒன்றைப் பார்லிமெண்டுக்குச் சமர்ப்பிக்க வேண்டுமென்பதுதான் அக்கிளர்ச்சி. அதைக் கண்டு ஆளும் வகுப்பார் மிகவும் பயந்து போய்விட்டார்கள். கடைசியில் அவர்கள் அக்கிளர்ச்சியை அடக்கி விட்டார்கள். தொழிற்சாலைகளில் வேலை செய்துவந்த தொழிலாளரிடையே அதிருப்தியும் கஷ்டமும் அதிகரித்து வந்தன. அந்தச் சமயத்தில் சில தொழில் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. அச்சட்டங்களால் தொழிலாளரின் நிலைமை சிறிது சீர்திருந்தியது. இங்கிலாந்தின் வியாபாரம் பெருகியது. அதனால் அதன் செல்வமும் பெருகியது. அது 'உலகத்தின் தொழில் பட்டறை' ஆகி வந்தது. லாபத்தில் பெரும் பகுதியும் தொழிற்சாலை முதலாளிகளுக்குச் சென்றது. ஏரி நிறைந்தால் அடைகரை பொசிவதுபோல, முதலாளிகளுக்குக் கிடைத்த லாபத்தில் ஒரு சிறு பகுதி தொழிலாளிகளுக்கும் கிடைத்தது. இவை யெல்லாம் சேர்ந்து 1848-ல் இங்கிலாந்தில் புரட்சி ஏற்படாதவாறு செய்தன. ஆனால், அந்தச் சமயத்தில், புரட்சி எந்தச் சமயத்திலும் ஏற்படலாம் என்றுதான் தோன்றியது.

1848-ம் வருஷத்துக் கதையை நான் இன்னும் முடிக்கவில்லை. அவ் வருஷம் ரோமாபுரியில் என்ன நடந்ததென்று நான் இன்னும் உனக்குச் சொல்லவில்லை. அதை அடுத்த கடிதத்தில்தான் சொல்ல வேண்டும்.

127

இதாலி ஐக்கியமும் சுதந்திரமும் அடைகிறது.

ஜனவரி 30, 1933.

வசந்தபஞ்சமி

1848-ம் வருஷத்துக் கதையில் இதாலியைப் பற்றிய படலத்தை நான் கடைசியாக வைத்துக்கொண்டேன். அவ்வருஷம் நிகழ்ந்த கிளர்ச்சிமிக்க சம்பவங்கள் எல்லாவற்றுள்ளும் ரோமாபுரியில் நிகழ்ந்த வீரப் போராட்டமே நம் மனத்தை அள்ளுகிறது.

நெப்போலியனுடைய காலத்துக்கு முன்னால் இதாலியானது குட்டி ராஜாக்களால் ஆளப்படும் குட்டி நாடுகளால் ஒட்டுப்போடப்பட்டதாக இருந்தது. சிறிது காலம் வரையில் நெப்போலியன் அவற்றை ஐக்கியப் படுத்தி ஆண்டுவந்தான். அவனுக்குப் பிற்பாடு இதாலி பழைய நிலையை அடைந்து விட்டது; அல்லது அதைவிட மோசமான ஒரு நிலையை அடைந்தது என்று சொல்லலாம். 1815-ல் வியன்னா காங்கிரசில் கூடிய, வெற்றிபெற்ற தேசநாடுகள் மிகுந்த கருணையுடன் இதாலியைத் தங்களுக்குள் பங்கிட்டுக்கொண்டன. ஆஸ்திரியா வெனிசையும் அதைச் சூழ்ந்த பெரும் பிரதேசத்தையும் தான் எடுத்துக்கொண்டது. ஆஸ்திரிய இளவரசர் பலருக்கு வாய்ப்பான வளநாடுகள் வழங்கப்பட்டன. போப்பாண்டவருக்கு ரோமாபுரியும் அதைச் சார்ந்த நாடுகளும் கிடைத்தன. அவை போப்பாண்டவர் நாடுகள் என்று அழைக்கப்பட்டன. நேபிள்சும் இதாலியின் தென் பகுதியும் ஒரு பூர்பான் அரசனுக்குக் கிடைத்தது. அது

'இரு சிசிலி ராஜ்யம்' என்று அழைக்கப்பட்டது. வட மேற்கே, பிரெஞ்சு எல்லைக்கு அருகில் பீட்மாண்ட் - சார்டினியா ராஜ்யம் ஓர் அரசனின் கீழ் இருந்தது. பீட்மாண்ட் அரசனைத் தவிர்த்து மற்றச் சிற்றரசர்களும் குட்டி ராஜாக்களும் தாங்தோன்றி தர்பார் நடத்திவந்தார்கள். நெப்போலியன் காலத்துக்கு முன் அவர்களோ மற்றவர்களோ குடிகளை வருத்தியதைவிட ஒருபடி அதிகமாகவே அவர்கள் இப்போது நடந்துகொண்டார்கள். ஆனால், நெப்போலியனுடைய வருகை தேசத்தை ஒரு கலக்குக் கலக்கிவிட்டது. ஐக்கிய, சுதந்திர இதாலியைப் பற்றி இதாலிய இளைஞர்கள் கனவு காண ஆரம்பித்தார்கள். அரசர்களின் கொடுங்கோல் ஆட்சியையும் மீறியோ அல்லது அது காரணமாகவோ இதாலியில் பல சிறு கலகங்கள் நிகழ்ந்தன. இரகசியச் சங்கங்களும் தோன்றின.

விரைவிலேயே இதாலியில் ஆர்வமிக்க ஓர் இளைஞன் தோன்றினன். அவனை இதாலிய சுதந்திர இயக்கத்தின் தலைவனாக அனைவரும் ஏற்றுக்கொண்டார்கள். அவன் தான் ஜோசப் மாஜினி. அவனே இதாலிய தேசியத்தின் தீர்க்கதரிசி. இதாலியில் குடியரசு நிறுவுவதை லட்சியமாகக் கொண்ட 'இதாலிய இளைஞர் சங்கம்' என்னும் சங்கம் ஒன்றை அவன் 1831-ல் தோற்றுவித்தான். குடியரசு லட்சியத்துக்காக அவன் பல வருஷங்கள் உயிரையே பணயமாக வைத்து இதாலியிலும், நாடு கடத்தப்பட்ட நிலையில் இதாலிக்கு வெளியிலும் ஓயாதுழைத்து வந்தான். அவன் எழுதிய கட்டுரைகளும் அறிவுரைகளும் தேசியத்தின் மூல இலக்கியமாயின. 1848-ல், வட இதாலி எங்கும் கலகமயமாயிருந்தபோது, அதுதான் தக்க சமயம் என்று நினைத்த மாஜினி ரோமாபுரிக்கு வந்தான். போப்பாண்டவர் ரோமாபுரியிலிருந்து விரட்டப்பட்டார். மூவர் அடங்கிய ஒரு கமிட்டியின் கீழ் இதாலியக் குடியரசு பிரகடனம் செய்யப்பட்டது. அவர்கள் 'மூவதிகாரிகள்' (Triumvirs) என்று அழைக்கப்பட்டார்கள். அப்பெயர் பழைய ரோமாபுரிச் சரித்திரத்திலிருந்து எடுக்கப்பட்டதாகும். அம் மூவருள் மாஜினியும் ஒருவர். குழந்தைப் பருவத்திலிருந்த இதாலியக் குடியரசை நாலாபக்கமும் பகைவர் தாக்கினர். ஒரு பக்கம் ஆஸ்திரியரும், ஒரு பக்கம் நேபிள்ஸ்வாசிகளும், ஒரு பக்கம் பிரெஞ்சுக்காரரும் அதைத் தாக்கினார்கள். போப்பாண்டவரை மீண்டும் பழைய நிலையில் இருத்துவதற்குப் பிரெஞ்சுக்காரர் போரிட்டார்கள். குடியரசின் சார்பில் போரிட்டவர்களில் முதன்மையானவன் கரிபால்டி என்னும் மகாவீரன். அவன் ஆஸ்திரியருக்குப் போர் கொடுத்து, நேபிள்ஸ் வாசிகளைத் தோற்கடித்துப் பிரெஞ்சுக்காரரையும் தடுத்து நிறுத்தினன். இவ்வளவும் செய்தவர்கள் சம்பளம் வாங்கும் போர்ப் பயிற்சி மிக்க படைஞர் அல்ல. தொண்டர் படைகளே எல்லாவற்றையும் சாதித்தன. குடியரசைக் காப்பாற்றுவதற்காக மறமும் மானமும் மிக்க ரோமாபுரி வீர இளைஞர்கள் தங்கள் உயிரைத் தியாகம் செய்தார்கள். ஆனால், அவ் வீரப்போரின் முடிவில் பிரெஞ்சுக்காரர் ரோமானியக் குடியரசைத் தோற்கடித்துப் போப்பாண்ட வரைமீண்டும் கொண்டுவந்தார்கள்.

போராட்டத்தின் முதல் காண்டம் இவ்வாறு முடிந்தது. மாஜினியும் கரிபால்டியும் மனம் தளரவில்லை. அவர்கள் இருவரும் வெவ்வேறு வழிகளில் இடைவிடாது முயற்சித்து வந்தனர். மாஜினி தீவிரப் பிரசாரத்திலும் கரிபால்டி அடுத்துவரும் பெரும் போராட்டத்துக்கு வேண்டிய முஸ்தீப்புகள் செய்வதிலும் ஈடுபட்டார்கள். மாஜினியும் கரிபால்டியும் ஒருவர்க்கொருவர் பெரிதும்

மாறுபட்ட இரு மனிதர்கள். மாஜினி ஒரு பெரிய அறிவாளி, லட்சியவாதி. கரிபால்டியோ ஒரு போர் வீரன், (குரங்குச்) சண்டையில் மகா நிபுணன். இருவரும், இதாலி விடுதலை அடையவேண்டும், ஒற்றுமை அடையவேண்டும் என்னும் லட்சியத்தில் அளவிலா ஆர்வம் பூண்டிருந்தார்கள். இம் மகா நாடகத்தில் இவ்விருவரையும் தவிர்த்து இன்னொரு முக்கியமான பாத்திரமும் உண்டு. அவன்தான் பீட்மாண்ட் மன்னனாகிய விக்டர் இமானுவேலின் முதன் மந்திரி கவூர் என்பவன். விக்டர் இமானுவேலை இதாலியின் அரசனாக முடிசூட்ட வேண்டும் என்பதுதான் கவூரின் முக்கிய நோக்கம். அதற்கு இதாலியின் சிற்றரசர்களையும் குட்டி ராஜாக்களையும் ஒழிக்கவேண்டியது அவசியமாயிருந்தது. ஆகவே, மாஜினி, கரிபால்டி ஆகியோரின் முயற்சிகளைத் தன்னெண்ணம் நிறைவேறுவதற்குச் சாதகமாகக் கவூர் உபயோகித்துக்கொள்ள விரும்பினான். அவன் பிரெஞ்சுக்காரருடன் சூழ்ச்சி செய்து—அப்போது பிரெஞ்சுச் சிம்மாசனத்தில் மூன்றாவது நெப்போலியன் வீற்றிருந்தான்—அவர்களுக்கும் அவர்களுடைய விரோதிகளான ஆஸ்திரியருக்கும் சிண்டு முடிந்துவிட்டான். 1859-ல் இது நிகழ்ந்தது. பிரெஞ்சுக்காரர் ஆஸ்திரியரைத் தோற்கடித்தார்கள். அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு அசகாய சூரனான கரிபால்டி துணைவலி ஏதுமின்றியே நேபிள்ஸ்-சிசிலி அரசன் மீது படையெடுத்துச் சென்றான். அப்படையெடுப்பு சரித்திரத்திலேயே மிகவும் அசாதாரணமானது; ஆகவே, மிகவும் புகழ் பெற்றது. கரிபால்டி தன்னுடைய ஆயிரம் செஞ்சட்டை வீரரை நடத்திக்கொண்டு தண்ட யாத்திரை கிளம்பினான். போர்ப் பயிற்சியும் போதிய ஆயுதபலமும் இல்லாத கரிபால்டியின் படைகள் அவை

இரண்டு முடைய பகைப் படைகளை மேல் விழுந்து தாக்கின. கரிபால்டியின் படை தன்னைவிடப் பன்மடங்கு எண்ணிக்கையில் மிகுந்த எதிரிப் படைகளுடன் போரிடவேண்டியிருந்தது. ஆயினும், அவர்களுடைய ஊக்கமுடைமையும் உள் வலி மிகுதியும் ஜனங்களுடைய நல்லெண்ணமும் பேராதரவும் சேர்ந்து அவர்களுக்கு வெற்றிக்குமேல் வெற்றியாக வழங்கின. கரிபால்டியின் புகழ் ஆசையின் அந்தத்தைச் சென்று முட்டியது. கரிபால்டி நெருங்கிவிட்டான் என்று கேட்ட மாத்திரத்திலேயே பகைவர் படைகள் சூரியனைக் கண்ட பனி போல் ஓடி ஒளிந்தன. அவனுடைய பெயரில் அத்துணை மந்திர சக்தி இருந்தது. ஆயினும், அவன் எடுத்த காரியம் எளிதில் முடிவு பெறுவதாயில்லை. கரிபால்டியும் அவனுடைய வீரத் தொண்டர் படையும் பன்முறை தோல்வியிலும் அபாயத்திலும் அகப்பட்டுக் கொள்ள இருந்தார்கள். ஆயினும், தோல்வி நிச்சயம் என்று தோன்றியபொழுதும் பாக்கியலட்சுமி அவன் பங்கில் இருந்தாள். தோல்வி வெற்றியாக மாறியது. உயிரையே எடுத்து நீட்டும் வீரர் தம் தோள்களிலன்றோ வெற்றித் திரு மணமாலை சூட்டி மகிழ்கிறாள்!

கரிபால்டியும் அவனுடைய ஆயிரம் வீரரும் சிசிலியில் இறங்கினார்கள். அங்கிருந்து அவர்கள் மெள்ள மெள்ள இதாலியைச் சென்று சேர்ந்தார்கள். தென் இதாலியின் கிராமங்கள் வழியாகச் சென்றபோது கரிபால்டி தன் படையில் வந்து சேரும்படி இதாலிய இளைஞரை அழைத்தான். அவர்களுக்கு அவன் தருவதாகச் சொன்ன பரிசுகள் இதற்குமுன் எங்கும் கேட்கப்படாதவை. அவன் சொன்னான்: “வாருங்கள்! வந்து என் படையில் சேருங்கள். வீர முரசு ஆர்க்கும்போது வீட்டிற்குள்ளிருப்பவன் கோழை. உங்களுக்கு நான் போரும் துன்ப

மூம் களைப்பும் அளிக்கிறேன். ஒன்று நாம் வெல்வோம் அல்லது வீழ்வோம்." வெற்றியைப் போல் வெற்றி தருவது வேறெதுவும் இல்லை யல்லவா? கரிபால்டி முதலில் பெற்ற வெற்றிகள் இதாலியரின் தேசபக்தி ஆவேசத்தைக் கொழுந்து விட்டெரியச் செய்தன. எண்ணற்ற தொண்டர் கரிபால்டியின் படையில் வந்து சேர்ந்தனர். அவர்கள் கரிபால்டியின் யுத்த கீதத்தை முழங்கிக் கொண்டு கவடு நடந்தனர். ('ஓ, அந்நியனே! இதாலியிலிருந்து ஒழிந்து போ' என்பதைப் பல்லவியாக உடைய அக்கீதம் ஆங்கிலத்தில் தரப்பட்டுள்ளது.) தேசிய கீதங்கள் எந்நாட்டிலும் ஒரே மாதிரியாக உள்ள ஆச்சரியத்தை என்னென்பது!

கரிபால்டியின் வெற்றிகளைக் கவூர் பயன்படுத்திக் கொண்டான். இவை யெல்லாவற்றின் முடிவும் என்னவென்றால், பீட்மாண்ட் அரசனான விக்டர் இமானுவேல் 1861-ல் இதாலியின் அரசன் ஆனான். அப்போதும் ரோமாபுரி பிரெஞ்சுக்காரரின் கீழும், வெனிஸ் ஆஸ்திரியரின் கீழும் இருந்தன. பத்து வருஷத்துக்குள் அவை இதாலியுடன் சேர்ந்துவிட்டன. ரோமாபுரி இதாலியின் தலைநகரமாயிற்று. கடைசியில் இதாலி ஒரு ஐக்கிய நாடாயிற்று. ஆனால், மாஜினியின் உள்ளம் மகிழ்ச்சி கொள்ளவில்லை. அவன் தன் ஆயுள் முழுதும் குடியரசு லட்சியத்துக்காக உழைத்தவன். இப்போது இதாலி விக்டர் இமானுவேலின் ராஜ்யம் தானே? இப்புதிய ராஜ்யம் சட்டரீதியான முடியரசு என்பது உண்மையே. விக்டர் இமானுவேல் அரசனான உடனே இதாலியப் பார்லிமெண்டு டூரின் என்னுமிடத்தில் கூடியது. ஆயினும், மாஜினிக்குத் திருப்தி இல்லை.

ஆக, இதாலி அந்நிய ஆட்சியினின்று சுதந்திரம் பெற்று மீண்டும் ஐக்கியம் அடைந்தது. மாஜினி, கரி-

பால்டி, கவூர் ஆகிய மூவரும் அதற்கு மூலகாரணர். அம்மூவரில் யாராவது ஒருவர் இல்லையென்றாலும் இதாலி விடுதலை பெறுவது இன்னும் நீண்ட காலம் தாழ்த்திருக்கலாம். அதற்குப் பல ஆண்டுகளுக்குப் பின்னர், ஆங்கிலக் கவியும் நாவலாசிரியருமாகிய ஜார்ஜ் மெரிடித் என்பவர் அம்மூவரையும் புகழ்ந்து ஒரு பாடல் எழுதியுள்ளார். அதில் அவர் மாஜினியை இதாலியின் ஆத்மா என்றும், கரிபால்டியை அதன் வாள் என்றும், கவூரை அதன் அறிவு என்றும் பாராட்டியிருக்கிறார்.

இதாலியின் சுதந்திரப் போராட்டத்தை உனக்கு நான் சுருக்கமாகவும் தெளிவாகவும் எடுத்துரைத்தேன். மாண்டொழிந்த சரித்திரத்தின் மற்றப் பகுதிகளைப் போலவே இவ்வரலாறும் உனக்குத் தென்படலாம். ஆனால், இப்போராட்டத்தை உயிருள்ளதாகச் செய்து கொண்டு, அதன் இன்பதுன்பங்களை நீ அனுபவிக்கக் கூடிய மார்க்கத்தை உனக்குச் சொல்ல விரும்புகிறேன். இது விஷயமாக டிரெவெலியன் எழுதியுள்ள மூன்று நூல்களை நான் பள்ளிக்கூடத்துப் பையனா யிருந்தபோது படித்தேன். அப்போது எனக்கு யேற்கண்ட உணர்ச்சி தான் உண்டாயிற்று. அவற்றை நீ படித்தால் உனக்கும் எனக்கு ஏற்பட்ட அனுபவம் உண்டாகலாம். 'கரிபால்டியும் ரோமானியக் குடியரசுக்கான போரும்' (Garibaldi and his fight for the Roman Republic), 'கரிபால்டியும் ஆயிரம் வீரரும்' (Garibaldi and his thousand), 'கரிபால்டியும் புது இதாலி ஆக்கமும்' (Garibaldi and his Making of Italy) என்பன அந்நூல்களாகும்.

இதாலிய சுதந்திரப்போர் நிகழ்ந்து கொண்டிருந்தபோது ஆங்கிலேயர் கரிபால்டியிடமும் அவனுடைய ஆயிரம் படை வீரரிடமும் அதிக அநுதாபம் காட்டினர்.

ஆங்கிலப் பாவலர் பலர் அப்போரைப் புகழ்ந்து வீரஞ் செறிந்த பல பாடல்கள் இயற்றினர். அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடுவோரிடத்தெல்லாம் ஆங்கில மக்கள் அநுதாபம் காட்டத் தவறுவதில்லை. ஆனால், அதற்கு ஒரே ஒரு நிபந்தனை மட்டும் உண்டு. அப்போராட்டத்தினால் அவர்களுடைய சொந்த நலன் பாதிக்கப்படாமலிருக்கவேண்டும். அதுதான் அங்கே இருக்கிற சுவாரஸ்யம். தன்னுடைய சுதந்திரத்திற்காகப் போராடிய கிரீசுக்கு அவர்கள் தங்களுடைய கவிஞர் கோமானாகிய பைரனையும் மற்றவர்களையும் அனுப்பி வந்தார்கள். இதாலியை அவர்கள் பெரிதும் ஊக்கி அதற்குத் தங்களுடைய நல்லெண்ணத்தையெல்லாம் அனுப்பி வைத்தார்கள். ஆனால், இங்கிலாந்துக்குப் பக்கத்திலேயே உள்ள அயர்லாந்திலும், வெகு தூரத்திலுள்ள எகிப்திலும், இந்தியாவிலும், இன்னும் மற்ற இடங்களிலும் அவர்களுடைய தூதர்கள் 'மாக்சிம்' துப்பாக்கிகளையும் சங்காரத்தையும் வழங்குகிறார்கள். ஆங்கிலக் கவிஞரான ஸ்வின்பர்ன், மெரிடித், எலிசபெத் பாரட் பிரௌனிங் ஆகியோர் அக்காலத்தில் இதாலியை அழகிய பாக்களில் பாடியிருக்கிறார்கள். மெரிடித் அதைப் பொருளாக உடைய நாவல்களும் எழுதினர். இதாலியப் போராட்டம் நடந்துகொண்டிருக்கிறது, அதற்குப் பல தடைகள் எதிர்ப்படுகின்றன, தேசத்துரோகிகள் பலர் அந்நியருக்குத் தேசத்தைக் காட்டிக் கொடுக்கின்றனர்; அந்தச் சமயத்தில் ஸ்வின்பர்ன் இயற்றிய 'ரோமாபுரிக்கு முன் தங்குதல்' (The Halt Before Rome) என்னும் பாட்டிலிருந்து ஒரு மேற்கோள் தருகிறேன். கேட்பாயாக.

128

ஜெர்மனி உதயம்

ஜனவரி 31, 1933.

இன்று நமக்கு நன்கு தெரிந்துள்ள ஐரோப்பிய வல்லரசுகளில் ஒன்றான இதாலியின் ஆக்கத்தைச் சென்ற கடிதத்தில் பார்த்தோம். இக்கடிதத்தில் இன்னொரு பெரிய நவீன வல்லரசான ஜெர்மனியின் ஆக்கத்தைப் பார்ப்போம்.

பாஷை முதலிய பல அம்சங்களில் ஒத்திருந்தும் ஜெர்மனியானது சிறிதும் பெரிதுமான பல நாடுகளாகப் பிளவுபட்டுக் கிடந்து வந்தது. பல நூற்றாண்டுகள் வரையில் ஹாப்ஸ்பர்க் வமிசத்தாரால் ஆளப்பட்டு வந்த ஆஸ்திரியாவே முதன்மையான ஜெர்மனி நாடாயிருந்தது. அதற்குப்பின் பிரஷியா பிரதானியம் பெற்றது. ஜெர்மன் மக்களுக்கு யார் தலைமை வகிப்பது என்பது பற்றி இவ்விரு நாடுகளுக்குள் போட்டி ஏற்பட்டது. இரண்டையும் நெப்போலியன் மட்டந் தட்டினான். அதன் பயனாக ஜெர்மன் தேசியம் வலுவடைந்து நெப்போலியனை முடிவாக ஒழிப்பதற்கு உதவி புரிந்தது. இவ்வாறு, இதாலி, ஜெர்மனி இவ்விரு நாடுகளிலும் நெப்போலியன் தன்னையறியாமலும் தான் விரும்பாமலும் தேசிய உணர்ச்சிக்கும் சுதந்திர எண்ணத்துக்கும் ஓர் உத்வேகம் அளித்துவிட்டான். பிக்டே என்னும் தத்துவ சாஸ்திரி நெப்போலியன் காலத்து ஜெர்மன் தேசியவாதிகளில் முக்கியமானவர். தீவிர தேச பக்தரான அவர் ஜெர்மன் மக்களைத் தட்டி எழுப்பப் பெரிதும் முயன்றார்.

நெப்போலியன் மறைந்த பின்பும் ஐம்பது வருஷங்கள் வரையில் ஜெர்மனி சிறு சிறு நாடுகளாகப் பிளவுபட்டே இருந்தது. அவற்றை ஒரு கூட்டரசின் கீழ் ஒன்று சேர்ப்பதற்குப் பல முயற்சிகள் செய்யப்பட்டன. ஆஸ்திரியா, பிரஷியா இரண்டும் அக்கூட்டரசுக்குத் தலைமை வகிக்க விரும்பியதால் அம்முயற்சிகள் வெற்றி பெறவில்லை. இதற்கிடையில் ஜெர்மன் நாடுகளில் அடக்கு முறை தாண்டவமாடியது. தாராளவாதிகள் எல்லாம் அடக்கப்பட்டார்கள். 1830-லும் 1848-லும் பல கலைகங்கள் நிகழ்ந்தன. அவையனைத்தும் அடக்கப்பட்டன. ஜனங்களைக் கண் துடைப்பதற்குச் சில அற்பச் சீர்திருத்தங்கள் வழங்கப்பட்டன.

ஜெர்மனியின் சில பாகங்களில், இங்கிலாந்தைப் போல், நிலக்கரி வயல்களும் இரும்புத் தாதுக்களும் இருந்தன. ஆகவே, ஜெர்மனியின் நிலைமை தொழிலபிவிருத்திக்கு ஏற்றதாயிருந்தது. இன்னும், ஜெர்மனி தத்துவ சாஸ்திரிகளுக்கும் விஞ்ஞானப் புலவர்களுக்கும் போர் வீரர்களுக்கும் புகழ் பெற்றதாயிருந்தது. அங்குத் தொழிற்சாலைகள் தோன்றின. யந்திரத் தொழிலாளி வகுப்பும் வளர்ந்து வந்தது.

இந்தக் கட்டத்தில், அந்நூற்றாண்டின் இடையில் பிரஷியாவில் ஒருவன் தோன்றினான். அவன் பல வருஷங்கள் வரையில் ஜெர்மனியை மட்டுமின்றி ஐரோப்பிய அரசியலையே ஆட்டி வைத்தான். அவனுடைய பெயர் ஆட்டோ வான் பிஸ்மார்க் என்பது. அவன் ஒரு ஜங்க்கர். பிரஷிய ஜமீன்தார்களுக்கு ஜங்க்கர்கள் என்று பெயர். அவன் வாட்டர்லூ போர் நடந்த வருஷத்தில் பிறந்தான். அவன் பல வருஷங்கள் பல நாடுகளில் ஜெர்மன் அரசாங்கத் தூதனாகயிருந்து சேவகம் செய்தான். 1862-ல் அவன் பிரஷியாவின் பிரதம மந்திரி ஆனான். உடனே,

அவன் தன்னுடைய பிரபாவத்தைப் பலரும் உணரும்படி செய்ய ஆரம்பித்தான். பிரதம மந்திரி ஆகி ஒரு வருஷத்துக்குள்ளேயே, அவன் செய்த பிரசங்கம் ஒன்றில் பின்வருமாறு கூறினான்: "நம் காலத்துப் பெரும் பிரச்சினைகள் பிரசங்கங்களாலும் பெரும்பான்மையோர் தீர்மானங்களாலும் தீர்க்கப்படப் போவதில்லை. அவை இரும்பாலும் இரத்தத்தாலுமே தீர்க்கப்படும்."

இரும்பாம்! இரத்தமாம்! பிஸ்மார்க் கூறிய அவ்வார்த்தைகள் உலகெங்கும் எதிரொலித்தன. அவ்வார்த்தைகளே, அவன் தீர்க்க திருஷ்டியுடனும் மலை கலங்கினும் நிலை கலங்காத மன உறுதியுடனும் அனுஷ்டித்த கொள்கையை உள்ளவாறு உணர்த்தின. அவன் ஜனநாயக முறையை மனமார வெறுத்தான். அவன் பார்லிமெண்டுகளையும் ஜனப் பிரதிநிதி சபைகளையும் கிள்ளுக்கீரையாக நினைத்து நடத்தினான். அவன் எங்கிருந்தோ வந்த இறந்த காலத்தின் எச்சமாக விளங்கினான். ஆனால், அவன் தன்னுடைய உறுதியாலும் திறமையாலும் நிகழ் காலத்தைத் தன் இஷ்டப்படி ஆட்டிப் படைத்தான். நவீன ஜெர்மனியை ஆக்கியவன் அவனே. 19-வது நூற்றாண்டின் பிற்பாதியில் ஐரோப்பியச் சரித்திரத்தை உருவாக்கியவனும் அவனே. தத்துவ சாஸ்திரிகளுக்கும் விஞ்ஞான சாஸ்திரிகளுக்கும் பேர்போன பழைய ஜெர்மனி பின்னணிக்குச் சென்றுவிட்டது. இரும்பாலும் இரத்தத்தாலும் ஆகிய புதிய ஜெர்மனி, படைமாட்சிக்கும் படைச் செருக்குக்கும் பேர்போன புதிய ஜெர்மனி, ஐரோப்பாக் கண்டத்தையே ஆட்கொளத் தொடங்கியது. 'பிஸ்மார்க் ஜெர்மனியைப் பெரிதாகவும் ஜெர்மானியரைச் சிறியோராகவும் செய்கிறான்' என்று அக்காலத்து ஜெர்மன் பிரமுகர் ஒருவர் கூறினாராம். 'ஜெர்மனி ஐரோப்பாவில் ஒரு பெரிய வல்லரசாக விளங்க வேண்டும், சர்வ தேசிய

விவகாரங்களில் ஜெர்மனியின் சொல்லை உலகம் கேட்டு நடக்க வேண்டும்' என்னும் பிஸ்மார்க்கின் கொள்கையானது ஜெர்மன் மக்களுக்கு மிகவும் உகப்பாயிருந்தது. ஜெர்மனியின் கவுரவம் உலகில் மேலும் மேலும் வளர்ந்து வந்ததைக் கண்டு அறிவு மயங்கிய அவர்கள் பிஸ்மார்க்கின் அடக்கு முறைகளை யெல்லாம் பொறுத்துக் கொண்டார்கள்.

பிஸ்மார்க் அதிகாரத்துக்கு வந்தபோது, தான் என்னென்ன காரியங்கள் செய்யவேண்டும் என்பதைப்பற்றி யாதொரு விதமான சந்தேகமோ, மயக்கமோ உடையவனாக வரவில்லை. இன்னின்னது செய்ய வேண்டும் என்னும் தெளிவான எண்ணத்தோடேயே அவன் அதிகாரத்துக்கு வந்தான். அவன் தன்னுடைய திட்டத்தை அதிஜாக்கிரதையாக முன்கூட்டியே வகுத்து வைத்துக் கொண்டான். அத்திட்டத்திலிருந்து அவன் ஒரு அட்சரம் அப்படி இப்படி விலகவில்லை. அதில் அவன் அடைந்த வெற்றியைக்கண்டு நமக்குப் பிரமை தட்டிப் போகிறது. ஜெர்மனியும் ஜெர்மனியின் மூலமாகப் பிரஷியாவும் ஐரோப்பாவின் மீது ஆதிக்கம் செலுத்தவேண்டும் என்பது அவனுடைய விருப்பம். அப்போது மூன்றாவது நெப்போலியனின் ஆட்சிக்குள்ளிருந்த பிரான்சுதான் ஐரோப்பாவிலேயே மிகவும் பலம் பொருந்திய நாடாகக் கருதப்பட்டது. அந்த ஸ்தானத்துக்கு ஆஸ்திரியாவும் போட்டியிட்டது. பிஸ்மார்க் மற்ற வல்லரசுகளை முதலில் ஒன்றோடொன்று முட்டவிட்டுப் பின்னர் ஒவ்வொன்றையும் தான் முறையாக மட்டம் தட்டிய விதத்தைக் காண நாம் ஆச்சரியம் அடைகிறோம். பழைய சர்வதேசிய அரசியல் முறைக்கும் அரச தந்திரத்துக்கும் அது ஒரு 'மாதிரி'யாக விளங்குகிறது. பிஸ்மார்க் முதன் முதல் செய்யத் தொடங்கிய காரியம் ஜெர்மானியருக்குத்

தலைமை வகிக்க வேண்டியது பிரஷியாவா அல்லது ஆஸ்திரியாவா என்னும் பிரச்சினையை முடிவாகப் பைசல் செய்வதுதான். இதுவா அதுவா என்கிற பழைய போட்டி இனியும் இருப்பது கூடாது. தலைமை பிரஷியாவுக்குத்தான் என்கிற விஷயம் பிக்கின்றி முடிவாகத் தீர்க்கப்படவேண்டும். ஆஸ்திரியா, தான் பிரஷியாவுக்கு ஒத்தூதவேண்டும் என்கிற விஷயத்தைத் தெளிவாக உணர வேண்டும். ஆஸ்திரியாவுக்குப்பின் பிரான்சின் முறை வரும் (பிரஷியா, ஆஸ்திரியா, பிரான்சு என்று நான் பேசும்போது அவற்றின் அரசாங்கங்களையே குறிக்கிறேன் என்பதை மறந்து விடாதே. அவ்வரசாங்கங்கள் பெரும்பாலும் யதேச்சாதிகாரமாகவே நடந்து வந்தன. அந்நாடுகளின் பார்லிமெண்டுகளுக்கு இருந்த அதிகாரம் மிகவும் சொற்பமே).

பிஸ்மார்க் ஓசைபடாமல் தன்னுடைய ராணுவ யந்திரத்தைச் செப்பம் செய்துகொண்டான். இதற்கிடையில் மூன்றாவது நெப்போலியன் ஆஸ்திரியாவைத் தாக்கித் தோற்கடித்தான். அத்தோல்வியின் பயனாகத் தென் இதாலியில் தோன்றிய கரிபால்டியின் படையெழுச்சி இதாலிய சுதந்திரத்தில் வந்து முடிந்ததை நாம் பார்த்தோம். ஆஸ்திரியாவைப் பலவினப் படுத்திய இந்நிகழ்ச்சிகளெல்லாம் பிஸ்மார்க்குக்கு மிகவும் அனுகூலமாயிருந்தன. ருஷியப் போலந்தில் ஒரு தேசியக் கிளர்ச்சி தோன்றியபோது, பிஸ்மார்க் ஜாருக்குப் படைத்துணை புரிவதாக வாக்களித்தான். அவசியமாயின் போலந்து மக்களைச் சுட்டுத் தள்ளுவதற்குக்கூட அவன் தயாராயிருந்தான். இது மிகவும் அவமானகரமான செயல் என்பதில் ஐயமில்லை. ஆனால், இனி வரும் ஐரோப்பியச் சிக்கல்களில் ஜாரின் நல்லெண்ணமும் ஆதரவும் தன்பக்கம் இருக்கவேண்டும் என்கிற பிஸ்

மார்க்கின் நோக்கம் அதனால் நிறைவேறியது. பிறகு அவன் ஆஸ்திரியாவின் துணைகொண்டு டென்மார்க்கைத் தோற்கடித்தான். அது ஆனவுடனே அவன் ஆஸ்திரியா மீது பாய்ந்தான். அவ்வாறு பாயுமுன் பிரான்சு, இதாலி ஆகிய இவ்விரு நாடுகளின் ஆதரவையும் முன் ஜாக்கிரதையுடன் தேடிக்கொண்டான். அதிசீக்கிரத்திலேயே பிரஷியா ஆஸ்திரியாவை நசுக்கிவிட்டது. 1866-ல் அது நடந்தது. இப்போது ஜெர்மனியின் தலைமை பிரஷியாவுக்குத்தான் என்பது தெளிவாகிவிட்ட படியால், ஆஸ்திரியாவுக்கு யாதொரு விதமான மனக் கசப்பும் பகைமையும் இராதவண்ணம் பிஸ்மார்க் அதைத் தாராளமாக நடத்தினான். எவ்விதத் தடையுமின்றிப் பிரஷியாவின் தலைமையில் வடஜெர்மன் கூட்டரசு ஏற்படுத்தப்பட்டது (ஆஸ்திரியா அதில் சேரவில்லை). பிஸ்மார்க் கூட்டரசு சான்சலர் (தலைமை அதிகாரி) ஆனான். தற்காலத்தில், நமது அரசியல் நிபுணர்களும் சட்டப் பண்டிதர்களும் கூட்டரசுகளைப் பற்றியும் அரசியல் அமைப்புகளைப் பற்றியும் மாதக் கணக்காகவும் வருஷக் கணக்காகவும் பேச்சும் விவாதமும் நடத்துவதைப் பார்க்கும்போது, பிஸ்மார்க் ஐந்தே மணி நேரத்தில் வடஜெர்மன் கூட்டரசின் புதிய அரசியலமைப்பைச் சொல்லி எழுத வைத்தான் என்றால் நமக்கு ஆச்சரியம் உண்டாகிறது. அதுவே சிற்சில மாறுதல்களுடன் ஐம்பது வருஷங்கள் வரையில் ஜெர்மனியின் அரசியல் அமைப்பாயிருந்தது. உலகயுத்தம் முடிந்தபின், 1918-ல், ஜெர்மன் குடியரசு ஏற்பட்ட போதுதான் அது மாற்றப்பட்டது.

பிஸ்மார்க்கின் முதல் நோக்கம் கைகூடிவிட்டது. அடுத்தபடியாகச் செய்யவேண்டியது பிரான்சின் தலையைத்தட்டி ஐரோப்பிய அக்கிரஸ்தானத்தை ஜெர்மனிக்கு அளிக்கவேண்டியதுதான். சந்தடியின்றி அவன்

இதற்கு வேண்டிய ஆயத்தம் செய்து வந்தான். முதலில், அவன் ஜெர்மனியை ஒற்றுமைப் படுத்தினான். அதே சமயத்தில் மற்ற ஐரோப்பிய நாடுகள் தன்னிடம் சந்தேகம் கொள்ளாதபடியும் நடந்துகொண்டான். தோல்வியுற்ற ஆஸ்திரியாகூடத் தன்னிடம் விரோத பாவம் கொள்ளாதபடி அவன் அதனிடம் அவ்வளவு சௌஜன்யமாக நடந்துகொண்டான். இங்கிலாந்துதான் பிரான்சுக்குப் பரம்பரைப் பகையாளி. மூன்றாவது நெப்போலியனின் பேராசைத் திட்டங்களைக் கண்டு அது ரொம்பவும் சந்தேகம் கொண்டிருந்தது. ஆகவே, பிரான்சோடு நேரும் எந்தப் போராட்டத்திலும் இங்கிலாந்தின் நல்லெண்ணத்தைப் பெறுவது பிஸ்மார்க்குக் கஷ்டமான காரியம் அல்ல. அவன் யுத்தத்துக்கு முற்றிலும் சித்தமானவுடன், மூன்றாவது நெப்போலியனே முதலில் போர் தொடுக்கும்படியான விதத்தில் அவ்வளவு தந்திரமாகக் காரியங்கள் செய்தான். 1870-ல் மூன்றாவது நெப்போலியனே முதலில் பிரஷியாவுடன் போருக்குச் சென்றான். 'பிரஷியா ஒரு பாவமும் செய்யவில்லை, பிரான்சே அதன்மீது வலியப் போர்தொடுக்கிறது' என்று அகில ஐரோப்பாவும் எண்ணியது. 'பர்லினைத் தாக்கு, பர்லினைத்தாக்கு' என்று பாரிசில் மக்கள் கோஷம் செய்தார்கள். மூன்றாவது நெப்போலியனும் ஜெயப்பிரதமான ஒரு சேனையை நடத்திக்கொண்டு தான் விரைவிலேயே பர்லினைக் கைப்பற்றிவிட முடியும் என்று கனவு கண்டான். ஆனால், விஷயம் வேறு விதமாக முடிந்தது. பிஸ்மார்க்கின் பயிற்சி மிக்க போர்யந்திரம் பிரான்சின் வடகீழ் எல்லையில் வந்து மோதியவுடன், பிரெஞ்சுச் சைனியம் அதன்கீழ் அகப்பட்டுக்கொண்டு நசுங்கிப் போய்விட்டது. சில வாரங்களுக்குள்ளாகவே, சக்கரவர்த்தி மூன்றாவது நெப்போலியனும் அவனுடைய சைனி

யமும் செடன் என்னும் ஊரில் ஜெர்மானியரால் சிறைப் பிடிக்கப்பட்டார்கள்.

இவ்வாறு பிரான்சின் இரண்டாவது நெப்போலிய சாம்ராஜ்யம் முடிவுற்றது. உடனே பாரிசில் ஒரு குடியரசு அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. 3-வது நெப்போலியன் வீழ்ந்ததற்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றில் முக்கியமானது அவன் தன்னுடைய அடக்குமுறைக் கொள்கையால் ஜனங்களின் வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டதுதான். அவன் அவர்களுடைய கவனத்தை வெளிநாட்டுப் போர்களில் திருப்ப முயன்றான். இவ்வுபாயம் சங்கடத்தில் மாட்டிக்கொண்ட அரசர்களும் அரசாங்கங்களும் வாலாயமாகக் கையாளுவதுதான். அவனுடைய எண்ணம் ஈடேறவில்லை. அவனுடைய ஆசைகளைப் போர் குழிதோண்டிப் புதைத்துவிட்டது.

பாரிசில் தேசியப் பாதுகாப்பு அரசாங்கம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அவ்வரசாங்கம் பிரஷியாவிடம் சமாதானம் கோரியது. ஆனால், பிஸ்மார்க்கின் நிபந்தனைகள் பிரான்சின் சுயமரியாதைக்குப் பங்கம் விளைப்பனவாயிருந்தன. ஆகவே, சேனாபலம் இன்றியும் பிரெஞ்சு அரசாங்கம் போரைத் தொடர்ந்து நடத்தத் தீர்மானித்தது. பாரிஸ் நீண்ட முற்றுகைக்கு உள்ளாயிற்று. ஜெர்மன் சைனியங்கள் வார்சேல்சிலும் பாரிசைச் சுற்றியும் நின்றன. கடைசியில் பாரிஸ் பணிந்தது. புதிய குடியரசு தோல்வியையும் பிஸ்மார்க்கின் கடுமையான நிபந்தனைகளையும் ஒப்புக்கொண்டது. யுத்தத்துக்கு நஷ்ட ஈடாக ஒரு பெருந்தொகை கொடுக்கவும் அது சம்மதித்தது. ஆனால், 200 ஆண்டுகளாக ஆண்டனுபவித்த அல்சாஸ், லோரெய்ன் மாகாணங்களை ஜெர்மனிக்கு விட்டுக் கொடுக்கவேண்டியிருந்ததுதான் பிரான்சின் மருமத்தைத் துளைத்தது.

ஆனால், பாரிஸ் முற்றுகை முடியு முன்னரே, வார்சேல்சில் ஒரு புதிய சாம்ராஜ்யம் பிறந்துவிட்டது. 1870, செப்டம்பரில் 3-வது நெப்போலியனின் பிரெஞ்சு சாம்ராஜ்யம் முடிவுற்றது. 1871, ஜனவரியில் பிரஷிய அரசரைக் கெய்சர் அல்லது சக்கரவர்த்தியாகக் கொண்ட ஒரு ஐக்கிய ஜெர்மன் சாம்ராஜ்யம், வார்சேல்ஸ் அரண்மனையிலுள்ள 14-வது லூயியின் திருவோலக்க மண்டபத்திலிருந்து உலகுக்கு அறிவிக்கப்பட்டது. ஜெர்மனியின் சிற்றரசர்களும் பிரதிநிதிகளும் அம்மண்டபத்தில் கூடித் தங்கள் புதிய சக்கரவர்த்தியாகிய கெய்சருக்கு மரியாதை செலுத்தினார்கள். பிரஷிய அரசவமிசமாகிய ஹோஹென் ஜாலன் வமிசம் இப்போது சாம்ராஜ்ய பீடத்தில் அமர்ந்தது. ஐக்கிய ஜெர்மனி உலகத்தின் பெரிய வல்லரசுகளில் ஒன்றாக விளங்கியது.

வார்சேல்சில் கொண்டாட்டமும் கோலாகலமுமாய் இருந்தது. அதை அடுத்த பாரிசில் அழுகையும் அவலமுமாயிருந்தது. மலை மலையாக வந்து குவிந்த ஆபத்துகளைக் கண்டு பிரெஞ்சுமக்கள் திக்பிரமை அடைந்து விட்டார்கள். நாட்டில் நிலையான அரசாங்கம் இல்லை. ஏராளமான முடியரசு வாதிகள் தேசிய சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் மீண்டும் முடியரசை நிறுவச் சூழ்ச்சி செய்தார்கள். அதற்குத் தடையாயிருந்த தேசியப் பாதுகாப்புப் படைஞரை அவர்கள் நிராயுதபாணிகளாக்க முயன்றார்கள். அப்படை குடியரசுச் சார்புடையதென்று நம்பப்பட்டதே அதற்குக் காரணம். பாரிசிலுள்ள ஜனநாயக வாதிகளும் புரட்சிவாதிகளும் இதைக் கண்டு மீண்டும் பிற்போக்கும் அடக்குமுறையும் அமுல் தொடங்கி விட்டனவோ என்று கருதினார்கள். ஜனங்கள் பொங்கி எழுந்தார்கள். 1871, மார்ச்சில் பாரிஸ் 'கம்யூன்' பிரகடனம் செய்யப்பட்டது. அக்

'கம்யூனை' ஒரு விதமான முனிசிபாலிடி (நகரசபை) என்று சொல்லலாம். அதற்குப் பிரெஞ்சுப் புரட்சி பிரமாணமாயிருந்தது. ஆனால், அதைவிட இது பன் மடங்கு விசேஷம் வாய்ந்ததாகும். பிரெஞ்சுப் புரட்சிக்குப்பின் தோன்றிய புதிய அபேதவாதக் கருத்துகளின் உருவமாகப் புதிய 'கம்யூன்' விளங்கியது. (அக் கருத்துகள் அச்சமயத்தில் அவ்வளவு தெளிவுறுமலிருக்கலாம்) ஒரு விதத்தில் பாரிஸ் 'கம்யூனை' ருஷ்ய 'சோவியத்'தின் முன்தோன்றல் என்று கூறலாம்.

ஆனால், 1871-ல் பிறந்த அப்பாரிஸ் 'கம்யூன்' அற்பாயுசாக மரித்துவிட்டது. சாமானிய ஜனங்களின் அவ்வெழுச்சியைக் கண்டு பீதியுற்ற முடியரசுவாதிகளும் பூர்ஷுவா வகுப்பினரும் கம்யூனின் ஆட்சிக்குட்பட்ட பாரிஸ் பகுதியை முற்றுகையிட்டார்கள். பக்கத்தில் வார்சேல்சிலும் பிற இடங்களிலுமுள்ள ஜெர்மன் சைனியம் இதை வெறுமே வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றது. ஜெர்மானியரால் கைது செய்யப்பட்டுப் பின் விடுதலை செய்யப்பட்ட பிரெஞ்சுப் போர்வீரர்கள் பாரிசுக்கு வந்து சேர்ந்தார்கள். அவர்கள் தங்களுடைய பழைய உத்தியோகஸ்தர்களின் கட்சியில் சேர்ந்து கொண்டு பாரிஸ் கம்யூனுக்கு விரோதமாகப் போரிட்டார்கள். அவர்கள் கம்யூன்காரருக்கு எதிராகப் படையெடுத்துச் சென்று 1871, மே கடைசியில் அவர்களைத் தோற்கடித்துப் பாரிஸ் தெருக்களில் 30,000 ஸ்திரீ புருஷர்களைச் சுட்டு வீழ்த்தினார்கள். அதற்குப்பின், சிறைபிடிக்கப்பட்ட கம்யூன்காரர் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இவ்வாறு பாரிஸ் கம்யூனின் வாழ்க்கை முடிந்தது. அந்தச் சமயம் அது ஐரோப்பாவைப் பெரிதும் கலக்கியது. அதற்குக் காரணம் அது குரூரமாக அடக்கப்பட்டது மட்டுமல்ல; நடைமுதல் ஏற்பாட்டை

எதிர்த்துச் செய்யப்பட்ட முதல் அபேதவாதப் புரட்சி என்கிற முறையில் அது பலருடைய மனத்தில் சிந்தனை அலைகளை எழுப்பியது. இதற்குமுன் பன்முறை ஏழைகள் பணக்காரருக்கு விரோதமாகக் கலகம் செய்திருக்கிறார்கள். ஆனால், எந்த ஏற்பாட்டின் கீழ் தாங்கள் ஏழைகளாக வாழ்ந்து வருகிறார்களோ அதை மாற்ற அவர்கள் எண்ணியதில்லை. ஆனால், பாரிஸ் கம்யூனது ஜனநாயகச் சார்பு, பொருளியல் சார்பு இரண்டும் கொண்ட ஒரு புரட்சியாகும். ஆகவே, அதை, ஐரோப்பாவின் அபேதவாதக் கொள்கை வளர்ச்சியில் ஒரு முக்கியமான கட்டம் என்றே சொல்ல வேண்டும். பிரான்சில், கம்யூன் பலாத்காரமாக அடக்கப்பட்ட காரணத்தால், அபேதவாதக் கொள்கைகள் பகிரங்கமாக உலாவ முடியவில்லை. அவை அங்கு மீண்டும் பழையபடி நிலைபெறுவதற்குச் சற்றுத் தாமதமாயிற்று.

கம்யூன் அடக்கப்பட்டாலும், பிரான்சில் முடியாட்சி முயற்சிகள் முடிவாகக் கைவிடப்பட்டன. சிறிது காலத்துக்குப் பிறகு, அது தீர்மானமாகக் குடியரசு முறையை மேற்கொண்டது. 1875, ஜனவரியில் ஒரு புதிய அரசியலமைப்பின் கீழ் மூன்றாவது குடியரசு பிரகடனம் செய்யப்பட்டது. அக்குடியரசு முறையே இன்னும் பிரான்சில் இருந்துவருகிறது. இப்பொழுது கூட, நாட்டுக்கு ஒரு அரசன் வேண்டும் என்று சொல்லுகிறவர்கள் பிரான்சில் இல்லாமலில்லை. ஆனால், அவர்கள் மிகமிகச் சிலரே. பிரான்சு இனிக் குடியரசு முறையைக் கைவிடாது என்றே தோன்றுகிறது. பிரெஞ்சுக் குடியரசு பணக்கார மத்திய வகுப்பாரின் ஆதிக்கத்தின் கீழுள்ள ஒரு பூர்ஷுவாக் குடியரசாகும்.

1870-71 ஜெர்மன் யுத்தத்தினின்று பிரான்சு ஒரு

வாறு சமாளித்துக்கொண்டு எழுந்து நின்றது. யுத்த நஷ்ட ஈடாக விதிக்கப்பட்ட பெருந்தொகையை யும் ஜெர்மனிக்குக் கொடுத்தது. ஆனால், பகைவனால் அவமானப்படுத்தப்பட்ட பிரெஞ்சுமக்களின் உள்ளத் தில் கோபம் கொதித்துக்கொண் டிருந்தது. மானத்தில் திருஷ்டி உள்ள அவர்களால் ஜெர்மனியிடம் பட்ட பரிப வத்தை மறக்க முடியவில்லை. பழிக்குப்பழி வாங்க வேண்டும் என்று அவர்கள் மனதில் கறு வைத்துக் கொண்டே இருந்தார்கள். முக்கியமாக, அல்சாஸ், லோரெய்ன் மாகாணங்களை இழந்தது அவர்கள் மன தைக் குத்திக்கொண்டே இருந்தது. பிஸ்மார்க் ஆஸ்திரி யாவைத் தோற்கடித்த பிறகு, அதனிடம் தாராளமாக நடந்துகொண்டது மிகவும் புத்திசாலித்தனமான காரி யமே. ஆனால், அத்தகைய புத்திசாலித்தனத்தை அவன் பிரான்சு விஷயத்தில் காட்டவில்லை. அவன் அதைத் தாராளமாக நடத்தாவிட்டாலும் கொடுமையாக நடத் தாமலாவது இருக்கலாம். மானமிக்க தன் பகைவனை அவமானத்துக் குள்ளாக்கவேண்டும் என்கிற எண்ணத் துக்கு ஆட்பட்ட பிஸ்மார்க் பிரெஞ்சுமக்களின் தீராப் பகைமையையும் மீளா வயிரத்தையும் விலைக்குவாங்கிக் கொண்டான். செடன் சண்டை முடிந்தவுடனே, ஆனால் யுத்தம் முடிவதற்கு முன்பே, கார்ல் மார்க்ஸ் என்னும் பிரசித்திபெற்ற ஜெர்மன் அபேதவாதி ஓர் அறிக்கை வெளியிட்டான். அல்சாசை ஜெர்மனி இணைத்துக் கொண்டதன் பயனாக "இருநாடுகளுக் கிடையிலும் தீராப்பகை மூளுமென்றும், போர் ஒழிந்து நிரந்தர சமா தானம் நிலவுவதற்குப் பதிலாக இருபோர்களுக்கு இடைப்பட்ட தற்காலிக சமாதானமே நிலவும்" என்றும் கார்ல் மார்க்ஸ் தன் அறிக்கையில் கூறியிருந்தான். அவனுடைய வாக்கு அப்படியே பலித்தது. இதைப் போலவே வேறு பல விஷயங்களிலும் அவனுடைய தீர்க்கதரிசனம் மெய்யாயிற்று.

ஜெர்மனியின் சர்வ வல்லமையுள்ள சாம்ராஜ்ய சான்சலராக பிஸ்மார்க் விளங்கினான். அவனுடைய 'இரும்பு-இரத்த'க் கொள்கை அந்தச் சமயத்துக்கு வெற்றி பெற்றது. ஜெர்மனியும் அதை அங்கீகாரம் செய்தது. தாராளக் கொள்கைகளைக் கேட்பார் இல்லை. பிஸ்மார்க்குக்கு ஜனநாயகத்தில் நம்பிக்கை கிடையாது. சகல அதிகாரங்களும் அரசன் கையில் இருக்க வேண்டு மென்றே அவன் முயன்று வந்தான். ஜெர்மன் யந்திரத் தொழில் வளர்ச்சி பெற்றது. ஜெர்மன் தொழிலாளி வகுப்பும் வளர்ச்சி அடைந்தது. அது ஆக்கம் பெற்றுத் தீவிரமான கோரிக்கைகளைச் சமர்ப்பிக்க ஆரம்பித்தது. இந்தப் பிரச்சினையைப் பிஸ்மார்க் இரண்டு விதமாகத் தீர்க்க முயன்றான். ஒன்று, தொழிலாளர் நிலைமையைச் சீர்திருத்துவது, இரண்டு, அபேதவாதத்தைத் தலை யெடுக்க ஒட்டாமல் அடிப்பது. தொழிலாளருக்கு அனு கூலமான சட்டங்கள் இயற்றுவதன் மூலம் அவன் அவர் களைத் தன் வசப்படுத்தவோ, அல்லது, அவர்களைத் தீவிர வாதிகள் ஆகாமல் தடுக்கவோ முயன்றான். ஆகவே, இத்தகைய சட்டங்கள் இயற்றுவதில் ஜெர்மனி பிற நாடுகளை முந்திக்கொண்டது. வயது சென்றவர்களுக்கு உபகாரச் சம்பளம், ஆயுள்நிதி (இன்ஷூரன்ஸ்), தொழிலாளருக்கு வைத்திய உதவி ஆகியவைபோன்ற தொழிலாளர் நிலைமையைச் சீர்திருத்தும் சட்டங்கள் ஜெர்மனியில் இயற்றப்பட்டன. இங்கிலாந்தின் யந்திரத் தொழிலும், தொழிலாளர் இயக்கமும் ஜெர்மனியை விடப் பழையன ஆயினும், அங்குகூட இவ்வளவு முற் போக்கான சட்டங்கள் செய்யப்படவில்லை. பிஸ்மார்க் கின் இக்கொள்கை ஓரளவு வெற்றிபெற்றது. ஆயினும், தொழிலாளர் ஸ்தாபனங்கள் வளர்ந்து வந்தன.

ஜெர்மன் தொழிலாளர் திறமைவாய்ந்த தலைவர்களைப் படைத்திருந்தார்கள். பர்டினண்ட் லாசால் என்று ஒருவன். அவன் மகா மேதாவி. கடல்மடை திறந்தது போல் சொற்பொழிவு ஆற்றுவதில் அப்பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே அவனை ஒப்பாரும் மிக்காரும் இல்லை என்று சொல்லப்படுகிறது. அவன் சிறு வயதிலேயே ஒரு துவந்துவ யுத்தத்தில் இறந்துவிட்டான். விலம் லீப்நெக்ட் என்று இன்னொருவன். இவன் மகா தீரன்; தொழிலாளருக்காக அரசாங்கத்தை எதிர்த்துக் கலகம் செய்தவன். இவன் சுடப்பட்டும் தப்பித்துக் கொண்டு நெடுங்காலம் ஜீவித்திருந்தான். இவனுடைய மகனான கார்ல் சுதந்திரப் போராட்டைத் தொடர்ந்து நடத்திவந்தான். சில வருஷங்களுக்குமுன், அதாவது, 1918-ல் ஜெர்மன் குடியரசு ஸ்தாபிக்கப்பட்ட போது தான் கார்ல் கொல்லப்பட்டான். கடைசியாகக் கார்ல் மார்க்ஸ். கார்ல் மார்க்ஸைப் பற்றி இன்னொரு கடிதத்தில் கூறுகிறேன். ஆனால், ஜெர்மனியிலிருந்து நாடு கடத்தப்பட்ட மார்க்ஸ் தன் வாழ்க்கையின் பெரும்பகுதியையும், ஜெர்மனிக்கு வெளியிலேயே கழிக்க வேண்டியதாயிற்று.

தொழிலாளர் ஸ்தாபனங்கள் பலத்தில் பெருகி வந்தன. 1875-ல் அவை அபேதவாத ஜனநாயகக் கட்சியாக ஒன்றுபட்டன. இந்த அபேதவாத வளர்ச்சி பிஸ்மார்க்கின் கண்ணைக் குத்தியது. சக்கரவர்த்தியைக் கொல்ல ஒரு முயற்சி செய்யப்பட்டது. அதை வியாஜமாக வைத்துக் கொண்டு பிஸ்மார்க் அபேதவாதிகள் மீது பாய்ந்தான். அவர்களுக்கு விரோதமான சட்டங்கள் இயற்றப்பட்டன. அவர்களுடைய காரியங்கள் யாவும் அடக்கப்பட்டன. அவர்களைப் பொறுத்த வரையில் ராணுவச் சட்டமே அமுலில் இருந்தது என்று சொல்லலாம். அவர்களில் ஆயிரக்கணக்கானவர் நாடு கடத்தப்பட்டனர்; அல்லது, சிறைத் தண்டனை விதிக்கப்

பட்டனர். நாடு கடத்தப்பட்டவர்களில் பலர் அமெரிக்காவுக்குச் சென்று அங்கே அபேதவாதத்தை முதன் முதலாகப் பரப்பினார்கள். அபேதவாத ஜனநாயகக் கட்சி நையப் புடைக்கப்பட்டது. ஆனால், அது அதற்கும் மீந்து மீண்டும் வலுவடையத் தொடங்கியது. பிஸ்மார்க்கின் பயங்கர அடக்குமுறைகூட அதைக் கொல்லக் கூடவில்லை. ஆனால், அதன் வெற்றியே அதற்கு யமனாக முடிந்தது. அதன் சக்தி வளர வளர, அது ஏராளமான ஆஸ்திபாஸ்திகளையும் ஆயிரக்கணக்கான சம்பள ஊழியர்களையும் கொண்ட ஒரு மகத்தான ஸ்தாபனமாகி விட்டது. ஒரு தனி மனிதனுக்கோ அன்றி ஸ்தாபனத்துக்கோ சொத்துச் சேர்ந்துவிட்டால், அவனோ அதுவோ புரட்சித் தன்மையை இழக்க வேண்டியது தான். இந்தக் கதிதான் ஜெர்மனியின் அபேதவாத ஜனநாயகக் கட்சிக்கும் நேர்ந்தது.

பிஸ்மார்க்கின் ராஜதந்திர சாமர்த்தியம் அவனைக் கடைசி வரையில் விட்டு அகலவில்லை. அவன் காலத்து சர்வ தேசிய அரசியல் சதுரங்கத்தில் அவன் பிரதான புருஷனாக விளங்கினான். அந்தச் சதுரங்கம் எப்படிப் பட்டது? அது சூழ்ச்சியும் எதிர்ச் சூழ்ச்சியும், சூதும் வாதும், பொய்யும் புனைசுருட்டும், ஏமாற்றும் ஏய்ப்பும் நிறைந்த ஒரு சிக்கலான வலைப் பின்னலாகும். அதன் தன்மை அன்றும் இன்றும் என்றும் ஒன்றுதான். இவையனைத்தும் திரை மறைவில் இரகசியமாகவே நடைபெறும். இவை, வெட்ட வெளிச்சத்துக்கு வந்தால், அதிக நாள் நீடிக்க முடியாது. பிஸ்மார்க் ஆஸ்திரியாவுடனும் இத்தாலியுடனும் சேர்ந்து முக்கூட்டு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டான். ஏனெனில், பிரான்சு பழிக்குப் பழி வாங்கக் கூடுமென்று அவன் அஞ்சினான். இரு திறத்தாரும் ஆயுத பலத்தைப் பெருக்கிக் கொண்டும்,

சூழ்ச்சி புரிந்து கொண்டும், ஒருவரையொருவர் முறைத்துப் பார்த்துக் கொண்டும் இருந்தார்கள்.

1888-ல் சக்கரவர்த்தி இரண்டாவது விலம் ஜெர்மன் கெய்சர் ஆனான். அவன் இளம் பருவத்தினன். மேலும், தான் மகாப் பெரியவன் என்றும் மிகுந்த பலவான் என்றும் அவனுக்கு எண்ணம். ஆகவே, அவனுக்கும் பிஸ்மார்க்குக்கும் மனஸ்தாபம் உண்டாக அதிகநாள் பிடிக்கவில்லை. அவன் இரும்பு சான்சலராகிய பிஸ்மார்க்கைக் கிழ வயதில் பதவியினின்று நீக்கி விட்டான். கிழச்சிங்கம் கோபத்தால் கொதித்தது. அதைச் சமனப்படுத்துவதற்காக 'இளவரசன்' என்னும் பட்டம் பிஸ்மார்க்குக்கு வழங்கப்பட்டது. அவன் மிகுந்த வெறுப்புடன் தன்னுடைய எஸ்டேட்டுக்குப் போய்ச் சேர்ந்தான். அரசர்களைப் பற்றி அவன் கொண்டிருந்த மேலான அபிப்பிராயமெல்லாம் இப்போது போய்விட்டது. ஒரு நண்பனிடம் அவன் பின் வருமாறு கூறினான்: "நான் பதவி ஏற்றுக் கொண்டபோது அரசர்களிடத்து எனக்கிருந்த குருத்துவமும் மரியாதையும் இவ்வளவு அவ்வளவென்று சொல்ல முடியாது. ஆனால், நாளுக்கு நாள் அது குறைந்து கொண்டே வந்தது. அதைப் பற்றி எனக்கு வருத்தம்தான்......மூன்று அரசர்களுடைய உள்ளும் புறமும் எனக்கு நன்கு தெரியும். நான் கண்ட காட்சி அவ்வளவு இனிமையானதல்ல."

அந்தச் சிடுமூஞ்சிக் கிழம் அதற்கப்புறம் பல ஆண்டுகள் உயிரோடிருந்தது. 1898-ல் தனது எண்பத்து மூன்றாவது வயதில் அது உயிர் துறந்தது. அது வேலையிலிருந்து நீக்கப்பட்ட பின்பும், அது இறந்த பின்பும்கூட அதன் நிழல் ஜெர்மனியை விட்டு நீங்கவில்லை. அதன் ஆவி அதற்குப்பின் வந்தோரை ஆட்டிவைத்தது. ஆனால், அவர்கள் சின்னவர்கள்.

129

சில பேராசிரியர்களும் கவிகளும்

பிப்ரவரி 1, 1933.

நேற்று ஜெர்மனியின் உதயத்தைப் பற்றி உனக்கு எழுதிக்கொண்டிருந்த போது, 19-வது நூற்றுண்டின் ஆரம்ப ஆண்டுகளில் வாழ்ந்த ஜெர்மனியின் ஒப்புயர்வற்ற ஒரு பெரியாரைப் பற்றி உனக்கு நான் ஒன்றுமே கூறவில்லை என்பது என் நினைவுக்கு வந்தது. அவர்தான் புகழ்பெற்ற ஜெர்மன் கவிவாணராகிய கதே. அவர் தேகவியோகமுற்று நூறு ஆண்டுகள் ஆகின்றன. அந்த நூற்றுண்டுவிழா சில மாதங்களுக்குமுன் ஜெர்மனி எங்கும் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. இன்னும் அக்காலத்தில் ஐரோப்பாவில் வாழ்ந்த புகழ்பெற்ற ஆசிரியர்களைப் பற்றியும் கவிகளைப் பற்றியும் உனக்குச் சிறிது கூறலாம் என்று எனக்குத் தோன்றியது. ஆனால், அவ் விஷயத்தைப்பற்றி எழுதுவது அவ்வளவு எளிதல்ல. ஏனெனில், அதைப்பற்றி நான் எழுதப்புகின் என்னுடைய அறியாமைதான் வெளிப்படும். வெறுமே சில பெயர்களை மட்டும் வரிசையாகக் கூறுவது அர்த்தமற்ற காரியமாயிருக்கும். அதற்குமேல் ஏதாவது சொல்லத் தொடங்கினாலும் ஆபத்தாக முடியும். இங்கிலீஷ் இலக்கியத்தைப் பற்றி நான் அறிந்துள்ளதே மிகவும் சொற்பம். மற்ற ஐரோப்பிய இலக்கியங்களுடன், எனக்குச் சில மொழி பெயர்ப்புகள் மூலமாகத்தான், பரிச்சயம். இந்த நிலைமையில் நான் என்ன எழுதுவது?

இந்த விஷயத்தைப்பற்றி ஏதாவது சொல்லியாக வேண்டும் என்கிற எண்ணம் என்னைப் பலமாகப் பற்றிக் கொண்டது. அவ்வெண்ணத்தை அகற்றவும் என்னால்

முடியவில்லை. கவியுலகமாகிய கந்தர்வ லோகத்துக்குப் போகும் வழியில் உன்னை நான் நெடுந்தூரம் அழைத்துச் செல்ல முடியாதவனா யிருப்பினும், அந்தத் திசையை யாவதுஉனக்குக் காட்டவேண்டும் என்கிற அவா என்னைப் பிடர் பிடித்துந்துகிறது. ஏனெனில் ஒரு நாட்டின் உயிர்த் தத்துவத்தை உள்ளபடி அறிய வேண்டுமாயின் அந் நாட்டின் கலையையும் இலக்கியத்தையும் கண்ணாகக் கொண்டு காணினல்லாது அந் நாட்டவரின் மேற்புறத் தொழில்களைக் கொண்டு அதை அறியமுடியாது. கலையும் இலக்கியமும் நம்மை அழகும் அமைதியும் குடிகொண்ட ஒரு பொன்னாட்டுக்கு அழைத்துச் சென்றுவிடுகின்றன. அப் பொன்னாட்டை மாந்தரின் ஆர்வச் செற்றங்களும் விருப்பு வெறுப்புகளும் தீண்டுவதில்லை. ஆனால், இன்று கவிஞரையும் கலைஞரையும் திரிகால ஞானிகள் என்று யார் கருதுகிறார்கள்? அவர்களைக் கவுரவிப்போர்தாம் யார் இருக்கிறார்கள்? அவர்களுக்கு ஏதாவது பேரும் புகழும் வருவதாயின் அது அவர்களுடைய மரணத்துக்குப் பின்பே வருகிறது.

ஆகவே, சில பெயர்களைமட்டும் நான் உனக்குச் சொல்லப்போகிறேன். அவற்றில் சில உனக்கு முன்பே தெரிந்திருக்க வேண்டும். 19-வது நூற்றாண்டின் ஆரம்பக் காலத்தைப்பற்றி மிகவும் சுருக்கமாகச் சொல்லுகிறேன். இது வெறுமே உன்னுடைய ஆவலைத் தூண்டுவதற்காகத்தான். அந் நூற்றாண்டில் பல ஐரோப்பிய நாடுகளில் இலக்கியச் செல்வம் மலைபோல் குவிந்ததென்பதை நீ மறந்து விடக்கூடாது.

கதே உண்மையில் 18-வது நூற்றாண்டைச் சேர்ந்தவர். அவர் பிறந்த வருஷம் 1749. ஆனால், அவர் 83 ஆண்டுகள் ஜீவியவந்தரா யிருந்து 19-வது நூற்றாண்டில் அனேகமாக மூன்றில் ஒரு பாகத்தைப் பார்த்து

விட்டார். ஐரோப்பியச் சரித்திரத்திலேயே மிகவும் கொந்தளிப்பான ஒரு காலப் பகுதியில் அவர் உயிர் வாழ்ந்தார். அவருடைய சொந்த நாட்டை நெப்போலியனுடைய படைகள் ஜெயித்துக் கைப்பற்றிக் கொண்டதையும் அவர் கண்டார். அவருடைய சொந்த வாழ்க்கையும் துன்பம் நிறைந்ததாயிருந்தது. ஆனால், சிறிது சிறிதாக அவர் மனதைக் கட்டுப்படுத்தி வாழ்க்கையின் துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளும் ஆற்றல் பெற்றார். அவருடைய பற்றின்மை அவருக்கு அமைதியை அளித்தது. நெப்போலியன் அவரை முதன் முதலாகப் பார்த்தபோது அவருக்கு வயது அறுபதுக்கு மேலிருக்கும். அவர் அப்போது தம் வீட்டு வாயிற்படியில் நின்று கொண்டிருந்தார். அவருடைய முகத்தில் சாந்தம் பொங்கி வழிந்தது. அவருடைய பார்வையில் கனிவு ததும்பியது. அவருடைய தோற்றம் ‘நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்—மலையினு மாணப் பெரிது’ என்னும் பொய்யாமொழிக்கு இலக்கியமாக விளங்கியது. இந்த நிலையில் அவரைக் கண்ட நெப்போலியன் ஆச்சரியம் தாங்க மாட்டாமல் ‘என்ன மனுஷன்! என்ன மனுஷன்!’ என்று கூவினான். அவர் கலைத்துறைகள் பலவற்றையும் உட்புகுந்து கண்டவர், அவர் தொட்ட தொட்ட கலையெல்லாம் சிறந்து விளங்கியது. அவர் ஒரு கவி, நாடகாசிரியர், தத்துவ ஞானி, விஞ்ஞான சாஸ்திரி. பல சாஸ்திரங்களில் அவருக்கு ஈடுபாடு உண்டு. இவற்றோடு கூட, அவர் ஒரு ஜெர்மன் சிற்றரசனிடம் மந்திரத் தொழிலும் புரிந்து வந்தார்! அவரை ஒரு கவி என்கிற முறையில்தான் உலகம் நன்கு அறிந்துள்ளது. அவருடைய தலை சிறந்த காவியம் ‘பாஸ்ட்’ (Faust) என்பது. அவருடைய வாழ்நாளிலேயே அவருடைய இசை திசைகளெலாம் சென்று பரந்தது. அவரை ஒரு

தெய்வமாக் கவி யென்றே அவருடைய நாட்டவர் கருதினார்கள்.

கதேயின் ஜீவியகாலத்திலேயே ஷில்லர் என்கிற இன்னொரு ஜெர்மன் மகாகவியும் உயிர் வாழ்ந்து வந்தார். ஆனால், ஷில்லர் கதேயைவிட வயதில் சிறியவர். ஹென்ரிக்ஹைன் என்பவர் இன்னொரு பெரிய கவி. இவர் முன்சொன்ன இருவரையும் விட வயதில் மிகவும் இளைஞர். இவருடைய பாட்டுகள் மிகவும் நளினமானவை. இவர் யாழில் அமைத்துப் பாடக்கூடிய அழகிய இசைப்பாடல்கள் பல இயற்றியுள்ளார். கதே, ஷில்லர், ஹைன் ஆகிய இம்மூன்று கவிமணிகளும் கிரீசின் பண்டை இலக்கியத்தை நன்கு சுவைத்து அதன் பண்பாட்டில் தங்களை இழந்தவர்கள்.

ஜெர்மனி நீண்ட காலமாகவே தத்துவசாஸ்திரிகளுக்குப் பெயர்போனது. அவர்களில் ஒருவர் இருவரை மட்டும் இங்கே கூற விரும்புகிறேன். அவர்களைப்பற்றி அறிந்துகொள்ள உனக்கு அதிக அக்கறை இல்லாமலிருக்கலாம். தத்துவசாஸ்திரத்தைக் கற்கவேண்டும் என்னும் ஆர்வம் மிக்கோரே அவர்களுடைய நூல்களைப் படிக்கலாம். மற்றவர்களுக்கு அவை எளிதில் பொருள் விளங்கா. விஷயம் அவ்வளவு நெரடானது. ஆயினும், அவர்களும் இன்னும் மற்றத் தத்துவநூலோரும் நம்மை மிகவும் ஆகர்ஷிக்கிறார்கள். அவர்களே அறிவின் வைப்பு. அவர்களே ஞானவிளக்கை அணையாது காத்தவர்கள். கருத்துலகின் விரிவை அவர்கள் மூலமாக நாம் அறிந்துகொள்ளலாம். இமானுவேல் கான்ட் என்பவர் 18-வது நூற்றாண்டின் தலைசிறந்த ஜெர்மன் தத்துவசாஸ்திரி. அவர் எண்பதாண்டுகள் உயிர் வாழ்ந்தார். தத்துவவானில் இன்னொரு ஒளிமிகுந்த நட்சத்திரம் ஹெகல். அவர் கான்ட்டுக்குப்பின் வந்தவர். பொது உடைமை

வாதத்தின் தந்தையான கார்ல் மார்க்சை ஹெகலின் பிரபாவம் அதிகமாகப் பாதித்தது என்று கருதப்படுகிறது. தத்துவசாஸ்திரிகளைப் பற்றி இவ்வளவுடன் நிறுத்திக்கொள்ளுகிறேன்.

19-வது நூற்றாண்டின் ஆரம்ப ஆண்டுகளில் ஐரோப்பா முதல்தரமான கவிகள் பலரைத் தோற்றுவித்தது. ஐரோப்பாவிலும் இங்கிலாந்தை முக்கியமாகக் கூறவேண்டும். ருஷியாவின் பிரசித்திபெற்ற தேசியக் கவியாகிய புஷ்கின் அக்காலத்தவர்தான். அவர் ஒரு துவந்துவ யுத்தத்தின் பயனாகச் சிறுவயதிலேயே உயிர் துறக்க நேர்ந்தது. அக்காலத்தில் பிரான்சிலும் பல கவிசிரேஷ்டர்கள் இருந்தார்கள். அவர்களில் இருவரை மட்டும் இங்கே குறிப்பிடுகிறேன். ஒருவர் விக்டர் ஹ்யூகோ. அவர் 1802-ல் பிறந்து கதேயைப்போல் 83 ஆண்டுகள் உயிர் வாழ்ந்தார். கதேயைப்போல் அவரும் தம்முடைய நாட்டில் ஒரு தெய்வாம்சம் பொருந்திய கவியாக விளங்கினார். அவர் அரசியலிலும் தலையிட்டுக் கொண்டார். ஆசிரியர் என்கிற முறையிலும், அரசியல்வாதி என்கிற முறையிலும் அவருடைய வாழ்க்கை விகற்பம் மிகவும் உடையது. அவர் தீவிரமான 'ராயலிஸ்ட்' (முடியரசுவாதி) ஆகவும், யதேச்சாதிகாரத்தில் நம்பிக்கை உடையோராகவும் வாழ்க்கை தொடங்கினார். பின்னர், படிப்படியாக மாறிவந்து 1848-ல் குடியரசுவாதி ஆனார். அற்பாயுசாக ஒழிந்து போன இரண்டாவது பிரெஞ்சுக் குடியரசுக்கு லூயி நெப்போலியன் பிரசிடெண்டு ஆனதும், அவரை அவருடைய குடியரசுக் கொள்கைகளுக்காகத் தேசப்பிரஷ்டம் செய்தான். 1871-ல் அவர் பாரிஸ் கம்யூனை ஆதரித்தார். அவர் தீவிரமான பழைமையோம்பியாக இருந்து சிறிது சிறிதாக மாறிக்கொண்டே வந்து தீவிர

அபேதவாதி ஆனார். வயது ஏற ஏறப் பிற்போக்குத் தன்மையும் பழமைப்பற்றும் மேலிடுவதுதான் பெரும்பாலோருக்கு வழக்கம். ஹ்யூகோவின் போக்கு அதற்கு நேர்மாறாயிருந்தது. ஆனால், அரசியல்வாதி ஹ்யூகோவைப் பற்றி நமக்கு அக்கறை இல்லை. ஆசிரியர் ஹ்யூகோவைப் பற்றித்தான் நாம் பேசுகிறோம். ஹ்யூகோ பெரிய கவியும் நாவலாசிரியரும் நாடகாசிரியரும் ஆவர்.

ஹொளரே பால்ஜக் என்பவர் இன்னொரு பிரெஞ்சுப் பேராசிரியர். அவரும் ஹ்யூகோவும் சமகாலத்தவர்களே. ஆனால், அவருக்கும், ஹ்யூகோவுக்கும் அதிக வித்தியாசம் உண்டு. அவர் தம்முடைய குறுகிய வாழ்நாளில் ஏகப்பட்ட நாவல்கள் எழுதிக்குவித்தார். அவை ஒன்றோடொன்று தொடர்புடையன. ஒரே பாத்திரங்கள் அவற்றில் அடிக்கடி வருகிறார்கள். அவர் காலத்துப் பிரெஞ்சுவாழ்க்கை முழுதையும் தம்முடைய நாவல்களில் சித்திரித்து விடவேண்டும் என்பது அவருடைய அவா. அவர் தம்முடைய நாவல் வரிசைக்கு 'மனித ஜாதியின் விசித்திரம்' என்று பெயர் கொடுத்தார். அவருடைய நோக்கம் மிகவும் அபாரமானது. அவர் நெடுங்காலம் வருந்தி முயன்றும் தாம் எடுத்துக் கொண்ட மகத்தான காரியத்தைப் பூர்த்தி செய்ய முடியவில்லை.

19-வது நூற்றாண்டின் ஆரம்பக் காலத்தில், இங்கிலாந்தில் மூன்று கவிரத்தினங்கள் ஒளிவிடுகிறார்கள். அம்மூவரும் சமகாலத்தவர், யௌவனப் பிராயத்தினர். மூவரும் அந்த யௌவனப் பிராயத்திலேயே ஒருவர் பின் ஒருவராக மூன்று ஆண்டுகளுக்குள் இவ்வுலக வாழ்வை நீத்தனர். அவர்கள்தான் ஆங்கிலக் கவியுலகின் மும்மூர்த்திகளான கீட்ஸ், ஷெல்லி, பைரன் என்போர். கீட்ஸ் வறுமையுடன் போராடவேண்டியிருந்தது. அவனை ஆதரிப்போரும் இல்லை. 1821-ல், தன்னுடைய இருபத்

தாறாவது வயதில் அவன் ரோமாபுரியில் மாண்டபோது அவனை அறிந்தவர் மிகச்சிலர். ஆனால், இளமையிலேயே வேர் கல்லப்பட்ட அந்தச் சிறுசெடியில் வாடாத சில கவி மலர்கள் பூத்திருந்தன. இத்தனை பாட்டுக்கும் கீட்ஸ் மத்திய வகுப்பைச் சேர்ந்தவன். அத்தகைய ஒருவனே வறுமையின் காரணத்தால் முன்னுக்கு வரமுடியவில்லை என்றால், ஏழைவகுப்பார் கவிகளாகவும் ஆசிரியர்களாகவும் மலர்வது எவ்வளவு அரிதான ஒருகாரியம், பார்! தற்போது கேம்பிரிட்ஜில் ஆங்கில இலக்கிய ஆசிரியராக இருப்பவர் இது விஷயமாகச் சில பொன் மொழிகள் புகன்றுள்ளார். அவை வருமாறு:

“நமது பொதுநலக் கூட்டுறவில் ஒரு ஏழை புலவன் ஆவதென்பது முயற்கொம்புதான். இந்த நிலைமை, இன்று மட்டு மல்ல. சென்ற 200 ஆண்டுகளாகவே நீடித்து வந்துளது. ஆகவே, நமது ஏற்பாட்டில் ஏதோ பிழை இருக்க வேண்டும். நான் கடந்த பத்தாண்டுகளில் பெரும்பகுதியை 320 ஆரம்பப் பாடசாலைகளைக் கவனிப்பதிலேயே செலவழித்துள்ளேன். ஆகவே, நான் கூறும் அனுபவ பூர்வமான வார்த்தைகளை நம்புங்கள். நாம் ஜனநாயகத்தைப் பற்றி வாய்கிழியப் பேசலாம். அறிவு எல்லாவிதமான கட்டுகளினின்றும் விடுபடும் போது தான் உண்மையான புலமை உதிக்கிறது. அத்தகைய நிலையை அடைவதற்கு முன்காலத்தில் ஒரு ஏதென்ஸ் நகர அடிமையின் மகனுக்கு இருந்த வசதிதான் இன்று ஒரு ஏழை ஆங்கிலேயன் மகனுக்கும் இருக்கிறது.”

இன்றைய தினம் கவிதையும், புலமையும், பண்பாடும் பணக்கார வகுப்பாரின் ஏகபோக உரிமையாக விளங்குகின்றன என்பதை நாம் மறந்து விடக்கூடும். அதற்காகவே நான் கேம்பிரிட்ஜ் ஆசிரியரின் வார்த்தைகளை உனக்குக் கூறினேன். கவிதைக்கும் பண்பாட்டுக்கும்

ஏழையின் குடிசையில் இடமேது? வயிறு உணவு கொள்ளாத போது செவியும் உணவு கொள்ள மறுத்து விடுகிறது. ஆகவே, தற்காலத்தில் நாம் காணும் பண்பாடு பணக்கார பூர்ஷுவா இருதயத்தையே பிரதிபலிக்கிறது. தற்போதுள்ள சமூக ஏற்பாடு மாறிப் பண்பாட்டில் உள்ளத்தைச் செலுத்துவதற்கான ஒழிவும் வாய்ப்பும் தொழிலாளிக்கு நேருகிற போது அப்பண்பாட்டின் தன்மை பெரிதும் மாறுதலுறலாம். அது போன்ற ஒரு மாறுதல் நிகழும் விந்தையை இன்று சோவியத் ருஷியாவில் காண்கிறோம்.

சென்ற சில தலைமுறைகளாக இந்தியா பண்பாட்டு வறுமையில் ஆழ்ந்திருப்பதற்குக் காரணம் நமது ஜனங்களின் சொல்ல முடியாத பொருள் வறுமையே என்பது இதனால் தெளிவாகிறது. சோற்றுக்குத் தாளம் போடுபவர்களிடம் பண்பாட்டைப் பற்றிப் பேசுவது வெறும் கேலிக்கூத்தாகும். இந்தியாவில் இன்று சற்றுப் பணக்காரராயுள்ள ஒரு சிலரையும் இந்த வறுமைத் தீ சுடுகிறது. ஆகவே, துரதிருஷ்டவசமாக இன்று அவர்கள் கூடப் பண்பாடு படி என்ன விலை என்று கேட்கிற நிலையில் இருக்கிறார்கள். ஆகா! அந்நிய ஆட்சியால் விளையும் தீமைகள் ஒன்றா, இரண்டா? அவற்றை எண்ணவே முடியாது. ஆனால், இவ்வாறு சீரழிந்து நல்கூர்ந்த நிலையிலும், பண்பாட்டுக்கோர் இலக்கியமாகவும் நிலைக்களனாகவும் விளங்கும் மகாத்மா காந்தி, ரவீந்திரநாத தாகூர் போன்ற உத்தமப் புதல்வர்களை உலகுக்கு அளித்துள்ள பாரதத்தாயின் மகிமையை என்னென்பது!

நான் எடுத்த விஷயத்தை விடுத்து வேறெங்கேயோ போய்விட்டேன்.

ஷெல்லியின் குணநலம் அவனை நாம் காமுறச் செய்கிறது. சிறுவயதிலிருந்தே அவன் தீமையைக் காணின் சீறி எழுவான். எதிலும் சுதந்திரத்தின் கட்சியிலிருந்து அவன் போராடுவான். 'நாஸ்திகத்தின் அவசியம்' என்றொரு கட்டுரை எழுதியதற்காக அவன் தான் படித்து வந்த ஆக்ஸ்போர்டு கலாசாலையிலிருந்து தள்ளப் பட்டான். ஷெல்லி, கீட்ஸ் இருவருமே, கவிகளின் இயல்புக்கு ஏற்ப, இம்மண்ணுலகத்தின் கஷ்டங்களை மறந்து பறவைகள் போல் கற்பனைவானில் சஞ்சரித்தனர். கீட்ஸ் இறந்து ஒரு வருஷத்திற்குப் பின் ஷெல்லி இதாலிக்கரைக் கருகில் கடலில் மூழ்கி இறந்து விட்டான். அவனுடைய பிரசித்தி பெற்ற கவிதைகளைப் பற்றி நான் உனக்குக் கூறப் போவதில்லை. அவற்றை நீயே எளிதில் படித்தறிந்து கொள்ளலாம். அவனுடைய சிறிய பாக்களில் ஒன்றை மட்டும் இங்கே தருகிறேன். அது அவனுடைய முதல்தரமான பாவினத்தைச் சேர்ந்ததல்ல. ஆனால், நமது நவீன நாகரிகத்தின் கீழ் ஏழைத் தொழிலாளி அனுபவிக்கும் தலைவிதியை அது நன்கு எடுத்துக் காட்டுகிறது. பழைய காலத்தில் அடிமைகள் என்ன துர்த்தசையில் இருந்தார்களோ அதே தசையில் தான் இன்றைய தொழிலாளர்களும் இருக்கிறார்கள். அந்தப் பாட்டை ஷெல்லி எழுதி நூறு வருஷங்கள் ஆகின்றன. ஆயினும், அது தற்கால நிலைமைக்குப் பொருந்துவதாயுள்ளது. அப்பாட்டுக்கு 'அராஜக முகமூடி' என்று பெயர்.

பைரனும் சுதந்திரத் தேவியின் திருவடிகளில் அழகிய பாமாலைகள் சூட்டியுள்ளான். ஆனால், ஷெல்லி பொருளியல் சுதந்திரத்தைப் பாடினான். பைரனோ தேசிய சுதந்திரத்தைப் பாடினான். அவன் துருக்கியை எதிர்த்துக் கிரீஸ் விளைத்த தேசிய சுதந்திர யுத்தத்தில் மாண்டான் என்று முன்பே கூறியுள்ளேன். அப்போது ஷெல்லி இறந்து இரண்டாண்டுகள் ஆகியிருந்தது. ஒரு மனிதன்

என்கிற முறையில் எனக்கு அவனிடம் சற்றுத் தாங்கல் உண்டு. ஆனால், நான் படித்த ஹாரோ பள்ளிக்கூடத்திலும், கேம்பிரிட்ஜ், டிரினிடி கலாசாலையிலுமே அவனும் படித்ததால் அவனிடம் எனக்குத் தோழமை உணர்ச்சியும் உண்டு. அவன் கீட்சையும் ஷெல்லியையும் போலன்றி இளமையிலேயே புகழ் பெற்றான். லண்டன் வாசிகள் அவனைச் சில காலம் தலைமீது வைத்துக் கொண்டு கூத்தாடினார்கள். அதற்குப் பின் கீழே போட்டு விட்டார்கள்.

அக்காலத்தில் இன்னும் இரு ஆங்கிலக் கவிகள் பிரசித்தி பெற்று விளங்கினார்கள். அவர்கள் முற்கூறிய அற்பாயுள் முப்பாவலரைவிட அதிக காலம் உயிர் வாழ்ந்தார்கள். வொர்ட்ஸ் வொர்த் 80 ஆண்டுகள் (1770-1850) உயிரோடிருந்தார். அவர் ஆங்கில மகா கவிகளுள் ஒருவராகக் கருதப்படுகிறார். அவருக்கு இயற்கையினிடத்து ஈடுபாடு அதிகம். அவருடைய கவிதைகள் இயற்கை வருணனை நிறைந்து விளங்குகின்றன. இன்னொருவர் கோல்ரிட்ஜ். அவருடைய பாடல்களில் சில மிகவும் சிறந்தனவாகும்.

19-வது நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் ஆங்கில நாவலாசிரியர்கள் மூவர் புகழ்பெற்று விளங்கினார்கள். அவர்களில் மூத்தவர் வால்டர் ஸ்காட். அவருடைய வேவர்லி நாவல்கள் மிகவும் பிரசித்தி வாய்ந்தவை. அவற்றில் சிலவற்றை நீ படித்திருக்கலாம். நான் சிறுவனாயிருந்த பொழுது அவை எனக்கு மிகவும் பிடிக்கும். ஆனால், வயது ஆக ஆக ஒருவனுடைய ருசியும் மாறுதல் அடைகிறது. சிறு வயதில் எனக்கு மிகவும் உகப்பாயிருந்த அந்நாவல்கள் இப்போது எனக்குத் தலைவலி உண்டாக்கும் என்பதில் ஐயமில்லை. மற்றுமிருவர் தாக்கரேயும், டிக்கன்சும் ஆவர். அவர்கள் ஸ்காட்டை விட உயர்ந்தவர்கள் என்பது என் எண்ணம். அவர்கள் இருவருந்தான் உனக்குத் தோழர்களாயிற்றே! தாக்கரே 1811-ல் கல்கத்தாவில் பிறந்தார். அங்கே அவர் ஐந்தாறு ஆண்டுகள் கழித்தார். அவருடைய நூல்கள் சிலவற்றில் 'இந்திய நவாபு'களைப் பற்றிய எதார்த்தமான வருணனை காணப்படுகிறது. இங்கே 'இந்திய நவாபு'கள் என்றது, இந்தியாவில் ஏராளமான பணத்தைச் சேர்த்துக்கொண்டு 'பெரிய மனிதர்கள்' ஆனபின்பு இங்கிலாந்துக்குத் திரும்பி அங்கே அதை அனுபவிக்கப் புகும் ஆங்கிலேயரையே.

19-வது நூற்றாண்டின் ஆரம்பத்தில் வாழ்ந்த செல்லேர் உழவரைப்பற்றி இதற்கு மேல் அதிகமாக நான் ஒன்றும் எழுத விரும்பவில்லை. நான் எடுத்துக் கொண்ட விஷயமோ மிகவும் பெரிது. ஆனால், அதைப் பற்றி நான் எழுதியுள்ளதோ மிகவும் குறைவு. விஷயமறிந்தவன் ஒருவன் இதைப்பற்றி மிகவும் அழகாக எழுதக் கூடும். அக்காலத்தில் வளர்ந்தோங்கிய இசை, கலையாதிகளையும் அவன் உனக்கு அதிகமாக எடுத்துரைக்கக் கூடும். அதற்கெல்லாம் முதலில் விஷயம் தெரிந்திருக்க வேண்டும், பின்னர் சொல்லுந்திறனும் வேண்டும். அவ்விரண்டும் என் பாரமல்ல. ஆகவே, எனக்கு எட்டாத உயரத்திலிருப்பதை நோக்கி நான் தாவப் போவதில்லை.

கதேயின் 'பாஸ்டு' என்னும் காவியத்திலிருந்து ஒரு பாட்டை மட்டும் கூறிவிட்டு இக் கடிதத்தை முடித்து விடுகிறேன்.

130

டார்வினும் விஞ்ஞானத்தின் வெற்றியும்

பிப்ரவரி 3, 1933.

கவிகளிடமிருந்து விஞ்ஞானிகளிடம் செல்வோம். கவிகளைப்பற்றி அதிகமாக யாரும் கவலை கொள்வதில்லை என்றே நான் அஞ்சுகிறேன். ஆனால், விஞ்ஞானிகள் அப்படியில்லை. தற்காலத்தில் அவர்கள் தாம் அற்புத சித்தியெல்லாம் வல்லவர்களாக விளங்குகிறார்கள். இன்றைய தினம் அவர்களுக்குத்தான் சிறப்பு, செல்வாக்கு எல்லாம். 19-வது நூற்றாண்டுக்கு முன் நிலைமை இவ்வாறில்லை. அதற்கு முற்பட்ட நூற்றாண்டுகளில், ஐரோப்பாவில் ஒரு விஞ்ஞானியின் உயிர் அவனுடையது தான் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. சில சமயம், அவனுடைய வாழ்க்கை எரி மரத்தில் வந்து முடிவதுண்டு. ரோமாபுரி மதஸ்தாபனம் கியார்டானோ புரூனோ என்பவனை உயிரோடு எரித்த வரலாற்றை உனக்கு நான் முன்பே சொல்லியிருக்கிறேன். அதற்குச் சில வருஷங்களுக்குப் பின், 17-வது நூற்றாண்டில், காலிலேயோவுக்கும் அதேகதி நேரவிருந்தது. அவன், பூமி சூரியனை வலம் வருகிறது என்று சொன்னதுதான் அதற்குக் காரணம். ஆனால், பிறகு அவன் தன் பிழைக்காக மன்னிப்புக்கோரித் தான் சொன்னதை வாபஸ் பெற்றுக் கொண்ட படியால் பாஷண்டருக்குரிய தண்டனையாகிய எரி மரத்தினின்றும் தப்பித்துக் கொண்டான். இவ்வாறு, ஐரோப்பாவில் மதஸ்தாபனமானது எப்பொழுதும் விஞ்ஞானத்துடன் மோதிக் கொண்டும், புதிய கருத்துகளை அடக்க முயன்று கொண்டும் இருந்து வந்தது. ஐரோப்பாவிலும் சரி, பிற இடங்களிலும் சரி, ஒரு மதஸ்தாபனம் என்றால் அதற்கு

எத்தனையோ கோட்பாடுகள் உண்டு. அந்தந்த மதத்தைச் சேர்ந்தவர்கள் அவற்றை அப்படியே கண்ணை மூடிக் கொண்டு ஒப்புக்கொள்ள வேண்டும். அதில் சங்கை கொண்டு கேள்வி கேட்பது கூடாது. விஞ்ஞானத்தின் பத்ததியோ இதனின்று முற்றிலும் மாறுபட்டது. அது ஒருவர் சொல்வதற்காக ஒன்றையும் ஒப்புக்கொள்வதில்லை. அதற்கு மாற்ற முடியாத கோட்பாடுகளும் கிடையா; அவ்வாறு இருப்பதும் கூடாது. ஒரு சார்பு பற்றாத மன நிலையை அது வளர்க்க முயலுகிறது. அது மேலும் மேலும் சோதனை இயற்றியே உண்மையைக் காண முயல்கிறது. இத்தகைய விஞ்ஞான மனோபாவம் மதம் காட்டும் மனோபாவத்திலிருந்து முற்றிலும் வேறாயிருக்கிறதல்லவா? ஆகவே, இரண்டும் ஓயாமல் முட்டிக் கொண்டதில் வியப்பு ஒன்றும் இல்லை.

பல்வேறு காலங்களில், பல்வேறு மக்கள் பல்வேறு விஞ்ஞான ஆராய்ச்சிகள் இயற்றியுள்ளார்கள் என்றே தோன்றுகிறது. புராதன இந்தியா ரசாயன சாஸ்திரத்திலும் சத்திர சிகிச்சையிலும் முன்னேறியிருந்ததாகச் சொல்லப்படுகிறது. எண்ணற்ற சோதனைகளுக்குப் பின்பே அது சாத்தியமாதல் கூடும். புராதன கிரேக்கரும் இத்தகைய சோதனைகளில் ஈடுபட்டிருந்ததாகத் தெரிகிறது. சீனரைப் பற்றிச் சமீபத்தில்தான் ஆச்சரியமான வரலாறு ஒன்று படித்தேன். 1500 ஆண்டுகளுக்கு முற்பட்ட சீன ஆசிரியர்கள் எழுதியுள்ளவற்றிலிருந்து சில பகுதிகள் அதில் தரப்பட்டிருந்தன. அதிலிருந்து சீனர் பரிணாம வாதத்தைப் பற்றியும் உடம்பின் ரத்த ஓட்டத்தைப் பற்றியும் அறிந்திருந்தார்கள் என்றும், சீன சத்திர நிபுணர் மயக்க மருந்து உபயோகித்தார்கள் என்றும் தெரிகிறது. ஆனால், அக்காலத்தைப் பற்றிப் போதிய அளவு நமக்குத் தெரியாதாகையால் நாம் எம் முடிவுக்கும்

வர முடியாதவர்களாக இருக்கிறோம். புராதன நாகரிகங்கள் இம்முறைகளைக் கண்டு அறிந்திருப்பின், பிற்பட்டு அவற்றை மறக்கக் காரணம் என்ன? அவை ஏன் அத்துறைகளில் மேலும் மேலும் முன்னேற்றம் அடையவில்லை? அல்லது அவை அம்முன்னேற்றத்தை முக்கியமானதாகக் கருதவில்லையா? இவ்வாறு, ரசமான கேள்விகள் பல பிறக்கின்றன. ஆனால், அவற்றிற்கு விடையிறுப்பதற்கு வேண்டிய சாதனங்கள் நம்மிடம் இல்லை.

அரேபியர் விஞ்ஞான சோதனையில் பெரிதும் விருப்புடையோராயிருந்தனர். இடைக்கால ஐரோப்பா இதில் அவர்களைப் பின்பற்றியது. ஆனால், அவர்களுடைய சோதனைகள் எல்லாம் உண்மையான விஞ்ஞானத் தன்மை கொண்டவை அல்ல. அவர்களுடைய நாட்டம் பூராவும் 'ரசவாதக்கல்' என்ற ஒன்றை அடைவதிலேயே லயித்திருந்தது. அது சாதாரண உலோகங்களைப் பொன்னாக்க வல்லது என்று கருதப்பட்டது. இதர உலோகங்களைப் பொன்னாக்கும் இந்த ரசவாத வித்தையின் மர்மங்களை அறிவதற்காகவே பலர் எத்தனையோ சிக்கலான சோதனைகளில் தங்கள் வாழ்நாள் முழுதையும் செலவழித்தனர். சாவாமல் இருக்கவேண்டி அவர்கள் 'அமிருத'த்தையும் தேடி அலைந்தார்கள். அமிருதத்தையோ அல்லது ரசவாதக் கல்லையோ கதைகளுக்கு வெளியில் யாரும் அடைந்ததாக நாம் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. இவையெல்லாம், நீண்ட வாழ்நாளையும் திரண்ட செல்வத்தையும் மிகுந்த அதிகாரத்தையும் அடையலாம் என்னும் நம்பிக்கையுடன் செய்யப்படும் மந்திர வித்தையே ஒழிய வேறில்லை. இதற்கும் விஞ்ஞான நேர்மைக்கும் யாதொரு தொந்தார்த்தமும் கிடையாது. விஞ்ஞானம் வேறு; மந்திரவித்தை வேறு.

உண்மையான விஞ்ஞானமுறை ஐரோப்பாவில் சிறிது சிறிதாக அபிவிருத்தி அடைந்தது. விஞ்ஞான உலகை விளங்கப்பண்ணும் ஜோதிகளுள் ஐசக் நியூடன் தலைசிறந்தவர். அவர் ஒரு ஆங்கிலேயர். 1642-லிருந்து 1727-வரை அவர் உயிர் வாழ்ந்தார். ஆகர்ஷண விதியை, அதாவது, உயர எறிந்த பொருள்கள் கீழே விழுவதன் காரணத்தை, அவர்தான் முதன் முதலில் எடுத்து விளக்கினார். ஆகர்ஷண விதியின் துணைகொண்டும் இன்னும் மற்ற விதிகளின் துணைகொண்டும், சூரியன், கிரகங்கள் ஆகியவற்றின் இயக்கத்தை அவர் விளக்கினார். அவருடைய சித்தாந்தங்கள் சிறிய பெரிய உண்மைகள் யாவற்றையும் விளக்கக்கூடியன என்று தோன்றியது. அவர் பெரும்புகழ் பெற்றார்.

விஞ்ஞான நேர்மைக்கும் மதஸ்தாபனத்தின் குருட்டு நேர்மைக்கும் நடந்த போராட்டத்தில் முன்னது வெற்றி பெற்று வந்தது. விஞ்ஞானத்தை அடக்குவதோ, அதை ஆராதிப்போரைத் தூக்கு மேடைக்கு அனுப்புவதோ இனிச் சாத்தியமில்லை. முக்கியமாக இங்கிலாந்திலும், பிரான்சிலும், பின்னர் ஜெர்மனியிலும், அமெரிக்காவிலும் பல விஞ்ஞானிகள் சலிப்பின்றிப் பொறுமையுடன் சோதனைகள் பல புரிந்து அறிவை வளர்த்தும் உண்மைகளைச் சேகரித்தும் வந்தார்கள். இவ்வாறு, விஞ்ஞான அறிவு பெருகியது. 18-வது நூற்றாண்டில், ஐரோப்பாவில் படித்த வகுப்பாரிடையே பகுத்தறிவுவாதம் பரவிவந்தது உனக்கு ஞாபகம் இருக்கலாம். அந் நூற்றாண்டில் வால்டேரும் ரூசோவும் இன்னும் பல பிரெஞ்சுப் பேராசிரியர்களும் பற்பல விஷயங்களைப்பற்றி எழுதி மக்களின் மனதில் சிந்தனைப் புயலைக் கிளப்பி விட்டார்கள். மகத்தான பிரெஞ்சுப் புரட்சியை வயிறு வாய்ந்தது அப்பதினெட்டாவது நூற்றாண்டுதான்.

பகுத்தறிவு மனப்பான்மையும் விஞ்ஞான மனப்பான்மையும் தம்முள் நன்கு பொருந்தின. அவை இரண்டுமாகச் சேர்ந்து மதஸ்தாபனத்தின் குருட்டுப் பிடிவாத மனப்பான்மையை எதிர்த்தன.

19-வது நூற்றாண்டு, வேறு பலவற்றிற்கிடையே விஞ்ஞானத்துக்கும் உரியது என்று நான் கூறியுள்ளேன். தொழிற்புரட்சி,யந்திரப்புரட்சி, போக்குவரவு சாதனங்களில் விளைந்த வியத்தகு மாறுதல்கள் எல்லாவற்றிற்கும் விஞ்ஞானமே மூலகாரணம். எண்ணற்ற தொழிற்சாலைகள் தோன்றி உற்பத்தி முறைகளை மாற்றின. ரயில் வண்டிகளும் நீராவிக்கப்பல்களும் உலகத்தைத் திடீரென்று குறுக்கிவிட்டன. மின்சாரத் தந்தி எல்லாவற்றையும் விடப் பெரிய ஆச்சரியம். இங்கிலாந்தில், அதன் பரந்த சாம்ராஜ்யத்திலிருந்து செல்வம் வந்து குவிந்த வண்ணமாயிருந்தது. இவையெல்லாம் சேர்ந்து பழைய கருத்துகளைப் பெரிதும் ஆட்டிவிட்டன. மதத்தின் பிடிப்புத் தளர்ந்தது. விவசாய வாழ்க்கை குறைந்து தொழிற்சாலை வாழ்க்கை பெருகவே, மக்கள் மதக்கோட்பாடுகளைவிட்டுப் பொருளியல் உறவுகளைப் பற்றிச் சிந்திக்கலானார்கள்.

சார்லஸ் டார்வின் என்பான் 1859-ல், இங்கிலாந்தில், ‘உயிர்வகைத் தோற்ற காரணம்’ (Origin of Species) என்றொரு நூல் எழுதி வெளியிட்டான். அதனால் மதத்தின் குருட்டு மனப்பான்மைக்கும் விஞ்ஞான மனப்பான்மைக்கும் உள்ள போராட்டம் ஒரு நெருக்கடியான கட்டத்தை அடைந்தது. டார்வின் அப்படி ஒன்றும் பெரிய விஞ்ஞானிகளின் வரிசையில் வைத்து எண்ணக்கூடியவன் அல்ல. அவன் கூறியதிலும் அப்படிப் புதிதாக ஒன்றும் இல்லை. அவனுக்கு முன்னால், வேறு பல பூமி தத்துவ சாஸ்திரிகளும் இயற்கைதத்துவ

சாஸ்திரிகளும் தங்களுடைய உழைப்பின் பயனாகப் பல உண்மைகளைக் கண்டு வைத்துப் போயிருக்கிறார்கள். ஆயினும், டார்வின் எழுதிய நூல் ஒரு புதிய சகாப்தத்தையே தோற்றுவித்தது. அது மக்கள் மனதில் ஊடுருவிப் பாய்ந்தது. வேறெந்த விஞ்ஞான நூலையும்விட அதுவே மக்களின் மனோபாவத்தை மாற்றுவதற்குப் பெரிதும் உதவியது. அதனால் அவர்களுடைய மனதில் ஒரு பூகம்பமே உண்டாகி விட்டது என்று சொல்லலாம். அந்நூல் டார்வினுக்குக் கீர்த்தியை அளித்தது.

டார்வின் தென்அமெரிக்காவிலும் பசிபிக்கிலும் இயற்கைத் தத்துவ ஆராய்ச்சி நிமித்தம் அலைந்து திரிந்து ஏகப்பட்ட விஷயங்களையும் மூலதத்துவங்களையும் சேகரம் செய்தான். அவன் அவற்றைக்கொண்டு, ஒவ்வொரு விலங்குவகையும் ‘இயற்கை ஆய்வுமுறை’ (Natural Selection) மூலம் எவ்வாறு மாறுதலும் அபிவிருத்தியும் அடைந்து வந்திருக்கிறதென்று நிரூபித்துக் காட்டினான். அதுவரையில், மனிதன் உட்பட விலங்குவகை யாவும் தனித்தனியாக ஈசுவரனால் சிருஷ்டிக்கப்பட்டன என்றும் அவை ஆதியிலிருந்து பிரிந்தும் மாறாமலும் இருந்துவருகின்றன என்றும் பலர் எண்ணிக்கொண்டிருந்தார்கள். அதாவது, ஒருவகை உயிர் இன்னொரு வகை உயிராக மாறமுடியாதென்பது அவர்களுடைய எண்ணம். டார்வின் அதை மறுத்து, ஒரு வகை உயிர் இன்னொரு வகை உயிராக மாறிவந்துள்ளது என்றும், அதுவே இயல்பான அபிவிருத்திக்கிரமம் என்றும் எண்ணற்ற பிரத்தியட்சப் பிரமாணங்கள் மூலம் எடுத்துக் காட்டினான். அம்மாறுதல்கள் ‘இயற்கை ஆய்வு’ முறையை ஒட்டிநிகழ்ந்தன. ஒரு உயிர் வகை இருக்கிறது, அதில் ஒரு சிறுமாறுதல் ஏற்படுகிறது என்று வைத்துக்கொள்வோம். அந்த

மாறுதல் அதற்கு எவ்விதத்திலாவது அனுகூலமாயிருக்குமாயினும் அல்லது பிறவகைகளுக்குப்பின் தான் எஞ்சியிருக்க உதவுமாயினும், அதுவே சிறிது சிறிதாக நிரந்தரமாகிவிடுகிறது. ஏனெனில், மாறுதலுற்ற உயிர்வகைதான் அதிகமாக எஞ்சி நிற்கிறது. சிறிது காலத்துக்குப்பின் இதுவே பெரும்பான்மையாகி மற்றவற்றை ஒழித்துவிடுகிறது. இவ்வாறு, ஒன்றின்பின் ஒன்றாகப் பல மாறுதல்கள் நிகழ்ந்துகொண்டே போகும். கடைசியில் முற்றிலும் புதிய ஓர் உயிர்வகையே உண்டாகிவிடும். காலக் கிரமத்தில் பல புதிய உயிர்வகைகள் இயற்கை ஆய்வு முறைப்படி தோன்றிவிடுகின்றன. இதையே 'ஏற்றவர் எஞ்சும் கொள்கை' (Survival of the fittest) என அவன் கூறினான். இந்தச் சித்தாந்தம் தாவரம், விலங்கு முதலிய உயிர் வகைகளுக்கும் மனிதனுக்கும் கூடப் பொருந்துவதாகும். இதன்படி இன்று நாம் காணும் பல திறப்பட்ட தாவர, விலங்கு வகைகள் ஒரு பொதுவான உயிர்வகையிலிருந்து தோன்றியிருத்தல் சாத்தியம்.

சில வருஷங்களுக்குப் பிறகு டார்வின் மனிதனின் தோற்ற வரலாறு, (The Descent Of Man) என்று இன்னொரு நூல் வெளியிட்டான். அதில் அவன் மனிதனுடைய தோற்றத்தையும் தன்னுடைய பரிணாமவாதக் கொள்கையை ஒட்டி விவகரித்திருந்தான். இன்று பெரும்பாலோர் பரிணாமவாதத்தையும் இயற்கை ஆய்வு முறையையும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். டார்வினும் அவனுடைய சீடர்களும் சொன்ன அதே முறையில் அவை ஒப்புக்கொள்ளப்படாமலிருக்கலாம். இந்தத் தத்துவத்தைச் செயற்கை முறையில் உபயோகித்துப் புதுவகையான மிருகங்களையும், செடிகளையும், பழங்களையும், பூக்களையும் உண்டு பண்ணுவதை இன்று

நாம் பொதுவாகக் காண்கிறோம். இன்றைய தினம் பரிசு பெறும் மிருகங்களிலும் செடிகளிலும் பல செயற்கை முறையில் உற்பத்தி செய்யப்பட்ட புதிய வகைகளைச் சேர்ந்தனவே ஆகும். ஒரு குறுகிய கால எல்லைக்குள், மனிதனே இத்தகைய மாறுதல்களையும், புது வகை உயிர்களையும் தோற்றுவிக்கக் கூடும் என்றால் கோடிக் கணக்கான வருஷங்களில் இயற்கை எதைத்தான் சாதிக்க இயலாது? லண்டனிலுள்ள தென் கென்சிங்டன் பொருட்காட்சிசாலை போன்ற ஒரு இயற்கை உயிர் வரலாற்றுப் பொருட்காட்சி சாலைக்குச் சென்றால், தாவரங்களும் மிருகங்களும் இயற்கையோடு இசையத் தங்களை இடைவிடாது மாற்றி அமைத்துக் கொள்ளும் உண்மையைக் காணலாம்.

மேற்கூறிய விஷயங்கள் எல்லாம் இப்போது எல்லோருக்கும் தெளிவாகப் புலப்படுகின்றன. ஆனால், எழுபது ஆண்டுகளுக்கு முன் அவ்வாறு இல்லை. அக்காலத்தில் ஐரோப்பாவில் பெரும்பாலோர் பைபிளில் கூறப்பட்டிருக்கும் சிருஷ்டிக் கிரமத்தில் நம்பிக்கை உடையோராய் இருந்தார்கள். கிறிஸ்து பிறப்பதற்கு 4004 ஆண்டுகளுக்கு முன்புதான் கர்த்தர் இவ்வுலகத்தைப் படைத்தார் என்றும், அவர் தாவர வருக்கங்களையும் மிருக வருக்கங்களையும் தனித்தனி சிருஷ்டித்துக் கடைசியாக மனிதனைச் சிருஷ்டித்தார் என்றும் அவர்கள் நம்பினார்கள். பைபிளில் கூறப்பட்டுள்ள பிரளயம், எல்லாப் பிராணிகளிலும் ஆண், பெண் ஜோடி கொண்ட நோவாவின் நாவாய் ஆகிய கதைகளில் அவர்களுக்கு நம்பிக்கை இருந்தது. அதன்படி எந்த உயிர் வகையும் ஒரு காலத்தில் இருந்து பின் இல்லாமற் போக முடியாது. இவையெல்லாம் டார்வினிய சித்தாந்தத்துடன் பொருந்தவில்லை. டார்வினும் மற்றப் பூமிதத்துவ நிபுணர்களும்

நமது பூமி வெறும் 6000 ஆண்டு மட்டும் நிரம்பிய பல் முளைக்காத குழந்தை என்பதை ஒப்புக் கொள்ளவில்லை. அவர்கள் அதன் வயதைக் கோடிக் கணக்கான ஆண்டுகளில் கணக்கிட்டார்கள். ஆகவே, மக்களுடைய மனதில் ஒரு பெரும் போராட்டம் நிகழ்ந்து வந்தது. நல்லோர் பலருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அவர்களுடைய மதம், ஒன்றை நம்பும்படி அவர்களுக்குச் சொல்லியது. அவர்களுடைய பகுத்தறிவோ, இன்னொன்றை நம்பும்படி சொல்லியது. இரண்டுக்கும் இடையில் அகப்பட்டுக் கொண்ட அவர்கள் இருதலைக் கொள்ளி எறும்பு போல் விழித்தார்கள். ஜனங்கள் கண்மூடித்தனமாகச் சில கோட்பாடுகளை நம்பி வருகிறார்கள். அக்கோட்பாடுகளுக்கே ஆபத்து வந்துவிட்டால் அவர்கள் பிடிப்பு இழந்தவர்களாய்த் துயரமுற்றுத் தவிக்கிறார்கள். ஆனால், அத்தகைய அதிர்ச்சி காரணமாக நாம் அறியாமைத் துயிலினின்றும் விழித்தெழுந்து உண்மையைக் காணுவோமாயின் அது மிகவும் நல்லதே.

ஆக, இங்கிலாந்திலும் மற்ற ஐரோப்பிய நாடுகளிலும் மதத்துக்கும் விஞ்ஞானத்துக்கும் பெரிய போட்டி ஏற்பட்டது. வாதப்பிரதிவாதங்கள் பறந்தன. அதன் முடிவைப்பற்றி யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது. யந்திரத்தொழிலையும் யந்திரப்போக்குவரவு சாதனங்களையும் கொண்ட புதிய உலகம் விஞ்ஞானத்தையே பற்றுக்கோடாகக் கொண்டிருந்தது. ஆகவே, விஞ்ஞானத்தைப் புறக்கணிப்பது என்ற பேச்சுக்கு இடமே இல்லை. மதத்துக்கும் விஞ்ஞானத்துக்கும் விளைந்த போரில் விஞ்ஞானமே வெற்றி பெற்றது. ‘இயற்கை ஆய்வுமுறை’, ‘ஏற்றவர் எஞ்சும் கொள்கை’ என்கிற பேச்சு எல்லோர் வாயிலும் கேட்கப்பட்டது. அவற்றின் அர்த்தத்தை முழுதும் அறிந்து

கொள்ளாமலேயே அவர்கள் பேசினார்கள். டார்வின் தன்னுடைய ‘மனிதனின் தோற்ற வரலாறு’ என்னும் நூலில், மனிதனும் சில வாலில்லாக் குரங்கு வகைகளும் ஒரே பிராணியிடமிருந்து தோன்றியிருக்கலாம் என்று குறிப்பாகத் தெரிவித்திருந்தான். ஆனால், படிப்படியாக இது வந்த வரலாற்றை உதாரணங்களின் மூலம் அவனால் நிரூபிக்க முடியவில்லை. இதிலிருந்து, குரங்குக்கும் மனிதனுக்கும் பொதுவான அக் ‘காணப்படாத மூதாதை’யைப் பற்றி அனைவரும் வேடிக்கையாகப் பேச ஆரம்பித்தார்கள். இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால், ஆளும் வகுப்பார் டார்வினுடைய சித்தாந்தத்தைத் தங்களுடைய நன்மைக்கு ஏற்றமுறையில் திரித்துக்கூறத் தொடங்கினார்கள். தாங்கள் தங்களால் ஆளப்படுவோரை விட உயர்ந்தவர்கள் என்பதற்கு மற்றுமோர் திருஷ்டாந்தமாக அவர்கள் அதைக் கொண்டார்கள். வாழ்க்கைப் போராட்டத்தில் எஞ்சி நிற்பதற்கு அவர்களே ஏற்றவர்கள் என்றும் ‘இயற்கை ஆய்வு’ முறைப்படி அவர்கள் யாரினும் உயர்ந்து ஆளும் வகுப்போராக விளங்குகிறார்கள் என்றும் அவர்கள் நம்பினார்கள். இவ்வாறு, டார்வினின் கொள்கையே ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கத்தை ஆளுவதற்கும், ஒரு வகுப்பு இன்னொரு வகுப்பை ஆளுவதற்கும் நியாயமாக முடிந்தது. சாம்ராஜ்யவாதத்துக்கும் வெள்ளைக்காரரின் உயர்வுக்கும் அதுவே முடிவான வாதமாயிற்று. மேனாட்டினர் பலர் தாங்கள் எவ்வளவுக்கெவ்வளவு அதிகாரமாகவும் இரக்கமின்றியும் குரூரமாகவும் நடந்துகொள்ளுகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு மானிடப்பண்பில் உயர்ந்தவர்களாகக் கருதப்படலாம் என்று எண்ணினார்கள். இந்தத் தத்துவம் அவ்வளவு இனிமையானதல்ல. ஆனால், மேனாட்டுச் சாம்ராஜ்ய வல்லரசுகள் ஆசியாவிலும்

ஆப்பிரிக்காவிலும் நடந்துகொண்ட விதத்தை அது ஓரளவு நமக்கு விளக்குகிறது.

டார்வினுடைய சித்தாந்தங்களை அவனுக்குப் பின்னால் வந்த விஞ்ஞானிகள் குற்றம் குறை கூறியுள்ளார்கள். ஆயினும், அவன் கண்ட பொதுத் தத்துவங்கள் இன்னும் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்படுகின்றன. அவனுடைய சித்தாந்தங்கள் பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்டதனால் விளைந்த பலன்களுள் 'முன்னேற்ற'த்தில் ஜனங்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டதும் ஒன்றாகும். டார்வினுடைய கொள்கைப்படி மனிதனும் மனித சமூகமும் இவ்வுலக முழுவதும் காலக்கிரமத்தில் திருத்தம் அடைந்துகொண்டு குற்றமற்ற ஒரு நிலையை நோக்கி முன்னேறிச் செல்லுகிறார்கள் என்று ஏற்படுகிறதல்லவா? இந்த முன்னேற்றக் கருத்து டார்வினுடைய கொள்கையால் மட்டும் விளைந்ததல்ல. விஞ்ஞான ஆராய்ச்சியின் போக்கும், தொழிற் புரட்சியின் பயனும் அதற்குப் பின்பும் விளைந்த மாறுதல்களும் ஜனங்களுடைய மனதை அதற்குப் பரிபக்குவப்படுத்தியிருந்தன. டார்வினின் கொள்கை அதை ஊர்ஜிதம் செய்தது. எல்லாக் குற்றம் குறைகளினின்றும் நீங்கிய உத்தமமான ஒரு நிலையை நோக்கித் தாங்கள் ஜெயப் பிரதமான ஒரு யாத்திரை செல்வதாக மாந்தர் எண்ணத் தொடங்கினார்கள். அவர்களுக்கு ஏற்பட்ட இம் முன்னேற்றக் கருத்து முற்றிலும் புதிதாகும். அதற்கு முற்பட்ட காலத்தில் ஐரோப்பாவிலோ ஆசியாவிலோ அல்லது பழைய நாகரிகங்களிலோ அத்தகைய கருத்து இருந்ததாகத் தெரியவில்லை. ஐரோப்பாவில், தொழிற் புரட்சி தோன்றும் வரையில், இறந்த காலமே சிறந்த காலம் என்று ஜனங்கள் எண்ணிக்கொண்டிருந்தார்கள். புராதன கிரேக்க, ரோம காலப் பகுதியானது அதற்குப் பிற்பட்ட காலப் பகுதிகளை விட நாகரிகத்திலும் பண்பாட்டிலும் சாலச் சிறந்தது என்பது அவர்களுடைய எண்ணம். அதிலிருந்து மனித சமுதாயம் படிப் படியாகக் கீழ் நோக்கி வந்துளது என்று அவர்கள் நம்பினார்கள். அல்லது, அது வரையில் அவர்கள் மனதில் படக்கூடிய பெரிய மாறுதல் எதுவும் நிகழவில்லை.

இந்தியாவிலும் ஏறக்குறைய இதே மனோபாவம் காணப்படுகிறது. இக்கலியுகத்தை விடச் சென்று போன கிருத, திரேத, துவாபரயுகங்களே புண்ணிய யுகங்கள் என்று நம்மவர்கள் நம்புகிறார்கள். இந்தியப் புராணேதிகாசங்கள், தற்காலப் பூமி தத்துவ நூல்களைப் போலவே, காலத்தை லட்சம், கோடிக் கணக்கான ஆண்டுகளில் அளவிடுகின்றன. அது சத்திய யுகமாகிய கிருத யுகத்தில் ஆரம்பித்துப் பாவ யுகமாகிய கலியுகத்தில் வந்து முடிகிறது.

ஆகவே, மனித ஜாதி முன்னேறி வருகிறது என்கிற கொள்கை தற்காலத்தைச் சேர்ந்ததாகும். நமது சரித்திர அறிவு நம்மை இதில் நம்பிக்கை கொள்ளச் செய்கிறது. ஆனால், நமது அறிவு இன்னும் குறுகியதாகவே இருக்கிறது. ஒருவேளை, நமது அறிவு இன்னும் பூரணமாகும்போது இக் கொள்கை மாறுதல் அடையலாம். அவ்வளவு தூரம் போகவேண்டியதில்லை. இம் 'முன்னேற்ற'க் கொள்கையைக் குறித்து 19-வது நூற்றாண்டின் பிற்பாதியில் காணப்பட்ட உற்சாகம் இப்போது காணப்படவில்லை. 'முன்னேற்றம்' என்பது, நாம் சென்ற உலக யுத்தத்தில் கண்டதுபோல், சகோதர மனிதர்கள் ஒருவரையொருவர் பெருவாரியாக அழித்துக்கொள்வதில் நம்மைக் கொண்டு விடுமாயின், அத்தகைய முன்னேற்றத்தில் ஏதோ அடிப்படையான தவறுதல் இருக்க வேண்டும். இன்னொரு

விஷயமும் இங்கே நினைவுகூர்தற் குரியது. டார்வினுடைய 'ஏற்றவர் எஞ்சும் கொள்கை'ப்படி, 'ஏற்றவர்' என்போர் நல்லவராகவும் இருக்கவேண்டும் என்கிற அவசியம் இல்லை. இவையெல்லாம் கற்றோர் ஆராய்ச்சிக்குரிய விஷயங்கள். ஒன்றுமட்டும் நாம் கவனிக்க வேண்டும். மனித சமூகம் நின்ற நிலையிலே நிற்பது, மாறுதலில்லாதது, அல்லது கீழ்நோக்கிச் செல்வது என்னும் பழைய கொள்கையை, 19-வது நூற்றாண்டில், நவீன விஞ்ஞானம் வந்து கழுத்தைப் பிடித்துத் தள்ளிவிட்டது. அதற்குப் பதிலாகச் சமூகம் ஆற்றல் வாய்ந்தது, மாறும் இயல்புள்ளது, முற்போக்குப் பாதையில் செல்வது என்னும் கொள்கை பிறந்தது. அக்காலத்தில் மனித சமூகம் அடையாளம் கண்டுகொள்ள முடியாதபடி அவ்வளவு மாறிவிட்டது என்பதில் ஐயமில்லை.

உயிர் வகைகளின் தோற்றத்தைப் பற்றிய டார்வின் சித்தாந்தத்தைப் பற்றி நான் உனக்குச் சொல்லிக் கொண்டிருந்தேன். இதே விஷயத்தைப் பற்றி 2500 ஆண்டுகளுக்கு முன்னிருந்த சீனத் தத்துவஞானி ஒருவர் கூறியுள்ளதை அறிய நீ ஆவலுறலாம். கி. பி. ஆறாவது நூற்றாண்டில், அதாவது புத்தருடைய காலத்தில், வாழ்ந்த சோன் சே என்னும் அப்பெரியார் பின் வருமாறு எழுதியுள்ளார் :

"உயிரினம் யாவுக்கும் மூலம் ஒன்றே. அந்த மூல உயிர் இடைவிடாது சிறிது சிறிதாகப் பற்பல மாறுதல்கள் உற்றுப் பல்வேறு உயிர்த்திரளாய்ப் பரந்தது. அத்தகைய உயிர்த்திரள் உடனே ஒன்றோடொன்று வேறுபட்டு விளங்கவில்லை. அவ் வேற்றுமைகளை அவை சிறிது சிறிதாகப் பல தலைமுறைகள் மாறிவந்தே பெற்றன."

இது டார்வினிய சித்தாந்தத்தைப் பெரிதும் ஒத்திருக்கிறது, அப்பிராணி தத்துவ நிபுணர் கண்ட ஒரு

உண்மையை இவ்வுலகம் மீண்டும் கண்டுபிடிப்பதற்கு 2500 ஆண்டுகள் சென்றன என்பதை நினைக்கும்போது நாம் வியப்புக்கடலில் ஆழ்கிறோம்.

19-வது நூற்றாண்டு முதிரமுதிர மாறுதலின் வேகமும் அதிகரித்தது. விஞ்ஞானம் மேலும் மேலும் வியப்புகளைச் சிருஷ்டித்துக் கொண்டே சென்றது. அது ஒன்றின்பின் ஒன்றாகக் கண்டுபிடித்து வந்த உண்மைகளையும் கருவிகளையும் கண்ட உலகம் மூக்கின்மேல் விரலைவைத்தது. அப்புதுமைகளில் பல மாந்தரின் வாழ்க்கையை அடியோடு மாற்றிவிட்டன. தந்தி, டெலிபோன், மோட்டார்கார், ஆகாயவிமானம் முதலியவற்றை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். நமது பூமிக்கு நெடுந்தொலைவிலுள்ள அண்டங்களையெல்லாம் விஞ்ஞானம் அளக்க ஆரம்பித்தது. கட்புலனுக்கு விஷயமாகாத அணுவையும் அது பிளந்து பிளந்து ஆராயத் தொடங்கியது. விஞ்ஞானம் மனிதனுடைய தேகசிரமத்தைக் குறைத்தது. அதனால் லட்சக்கணக்கானவர்களுடைய வாழ்க்கையில் கஷ்டம் குறைந்தது. விஞ்ஞானத்தினால் உலகத்தின் ஜனத்தொகை, சிறப்பாகத் தொழிலபிவிருத்தி அடைந்த நாடுகளின் ஜனத்தொகை அதிகரித்தது. அதேசமயத்தில், சர்வத்தையும் நாசம் செய்யக்கூடிய அழிப்பு முறைகளையும் விஞ்ஞானம் தோற்றுவித்தது. ஆனால், அது விஞ்ஞானத்தின் குற்றமல்ல. விஞ்ஞானம் மனிதனுக்கு இயற்கையை அடக்கி ஆளக்கூடிய சக்தியை அளித்தது. அந்தச் சக்தியைப்பெற்ற மனிதன் தன்னைத்தான் அடக்கி ஆளும் வழியை அறியாமல் தவறான பாதையில் சென்று விஞ்ஞானத்தின் வரங்களையே சாபங்கள் ஆக்கிக்கொண்டான். ஆனால், விஞ்ஞானம் மட்டும் வெற்றிகரமாக முன்னேறிக்கொண்டே இருந்தது. அதன் பயனாகப்

பல்லாயிர வருஷங்களில் அடையாத மாறுதலை நூற்றைம்பது வருஷங்களில் இவ்வுலகம் அடைந்து விட்டது. விஞ்ஞானம் வாழ்க்கையின் வழி, துறைகள் எல்லாவற்றையும் அடியோடு மாற்றிவிட்டது. அது உலகிலேயே ஒரு புரட்சியை உண்டு பண்ணி விட்டது.

விஞ்ஞானம் இன்னும் முன்னேறிக் கொண்டுதான் இருக்கிறது. அதன் வேகம் முன்னையினும் அதிகரித்துத் தோன்றுகிறது. அதற்கு ஓய்வு என்பது இல்லை. ஒரு ரயில் தொடர் கட்டப்படுகிறது என்று வைத்துக்கொள்வோம். அது வேலைசெய்யத் தொடங்கு முன்னரே பழசாகிவிடுகிறது. அதாவது, விஞ்ஞானம் அதற்குள் அவ்வளவு முன்னேறி அதைவிட நவீன முறைகளைக் கண்டு பிடித்து விடுகிறது. ஒரு யந்திரத்தை ஒருவன் வாங்கிப் பூட்டுகிறான். அதைப் பூட்டிய ஒன்றிரண்டு வருஷங்களுக்குள் அதைவிடச் சிறந்த யந்திரமோ அல்லது அதே யந்திரம் இன்னும் திறமையாக வேலை செய்யக் கூடியதாகவோ தோன்றிவிடுகிறது. ஆகவே, இந்த வேகம் கண்மண் தெரியாமல் போய்க்கொண்டே இருக்கிறது. நம்முடைய காலத்தில் நீராவியின் ஸ்தானத்தை மின்சாரம் பெற்று வருகிறது. அதனால் ஒன்றரை நூற்றாண்டுக்கு முன் தோன்றிய தொழிற் புரட்சியைப் போன்றதொரு பெரும்புரட்சி தற்போது தோன்றும் போலிருக்கிறது.

பலவாறாகப் பிரிந்து செல்லும் விஞ்ஞானத்தின் பெருவழிகளிலும் சிறுவழிகளிலும் இன்று எண்ணற்ற விஞ்ஞானிகளும் நிபுணர்களும் இடைவிடாது வேலை செய்துகொண்டே இருக்கிறார்கள். விஞ்ஞானிகளின் வரிசையிலே இன்று நடுநாயகமணியாகத் துலங்குபவர் ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் என்பார். அவர் நியூடனின் பேர் பெற்ற சித்தாந்தத்தை ஓரளவு திருத்தி அமைத்துள்ளார்.

சமீபக் காலத்தில் விஞ்ஞானத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் அபாரமானது. பழைய விஞ்ஞான சித்தாந்தங்களில் ஏற்பட்டுள்ள மாறுதல்களும், புதிதாகக் கண்டுபிடிக்கப் பட்டுள்ள விஞ்ஞான சித்தாந்தங்களும் அனந்தம். அதைக் கண்டு விஞ்ஞானிகளின் தலையே சுற்றுகிறதென்றால் நம்போலியரைப் பற்றிக் கேட்க வேண்டியதில்லை. விஞ்ஞானிகள் தங்களுடைய பழைய திருப்தியையும், எதையும் உறுதியாகக் கூறும் செருக்கையும் இப்போது இழந்து விட்டார்கள். தங்களுடைய முடிவுகளையும் தீர்க்க தரிசனங்களையும் பற்றி அவர்களே தீர்மானமாகக் கூறத் தயங்குகிறார்கள்.

ஆனால், இது 20-வது நூற்றாண்டில் நமது காலத்தில் ஏற்பட்ட மாறுதலாகும். 19-வது நூற்றாண்டில் விஞ்ஞானிகள் உறுதிப்பாடு நிறைந்தவர்களாக இருந்தார்கள். தான் அடைந்துள்ள எண்ணற்ற வெற்றிகளைக் கண்டு விஞ்ஞானத்துக்குத் தாங்கமுடியாத பெருமை. அது தன்னுடைய ஆட்சியை ஜனங்கள் மீது திணித்தது. ஜனங்கள் கடவுளுக்குத் தலைவணங்குவது போல் விஞ்ஞானத்துக்குத் தலைவணங்கினார்கள்.

131

ஜனநாயகத் தத்துவத்தின் வளர்ச்சி

பிப்ரவரி 10, 1933.

சென்ற கடிதத்தில், 19-வது நூற்றுண்டில் விஞ்ஞானம் அடைந்த முன்னேற்றத்தை ஒருவாறு பார்த்தோம். இக்கடிதத்தில் அந்நூற்றுண்டின் மற்ருேர் அம்சமாகிய ஜனநாயகக் கொள்கையின் வளர்ச்சியைப் பார்ப்போம்.

18-வது நூற்றுண்டில் பிரான்சில், கருத்துலகில் நிகழ்ந்த போராட்டத்தைப் பற்றி நான் கூறியது உனக்கு நினைவிருக்கும். அக்காலத்தில் தலைசிறந்த அறிவாளியும் ஆசிரியருமான வால்டேரும் மற்றும் பலரும் பழைய மத, சமூகக் கருத்துகள் பலவற்றை அச்சமின்றித் தாக்கிப் புதுச் சித்தாந்தங்களைத் தைரியமாக எடுத்துரைத்தார்கள். அக்காலத்தில் இத்தகைய அரசியல் சிந்தனை பெரும்பாலும் பிரான்சுக்கு வெளியில் காணப்படவில்லை. ஜெர்மனியின் தத்துவ சாஸ்திரிகள், எளிதில் விளங்காத அதி நுட்பமான தத்துவ ஆராய்ச்சிகளில் தலையிட்டுக் கொண்டார்கள். இங்கிலாந்தில் தொழிலும் வியாபாரமும் பெருகி வந்தன. ஆகவே, அங்கு வாழ்ந்தவர்களில் பெரும்பாலோர், நிர்ப்பந்தம் ஏற்பட்டாலொழிய அறிவாராய்ச்சிகளில் தங்கள் அரிய காலத்தை வீணுக்க விரும்பவில்லை. ஆயினும், 18-வது நூற்றுண்டின் பிற்பாதியில், ஆடம் ஸ்மித் என்பார் எழுதிய ‘தேசங்களின் செல்வம்’ என்னும் அரிய நூலொன்று இங்கிலாந்தில் வெளி வந்தது. அது வெறும் அரசியலை மட்டும் பற்றிய நூலாயிராமல் அரசியலை ஒட்டிய பொருளியல் அல்லது பொருளியலைப் பற்றியதா

யிருந்தது. பொருளியல் நூல் எனினும் அர்த்த சாஸ்திரம் எனினும் ஒக்கும். அக்காலத்தில், மற்ற விஷயங்களைப் போலவே, பொருளியலும் மதம், தருமம் ஆகியவற்றுடன் பின்னிக்கொண்டு தெளிவுருமல் கிடந்தது. ஆடம்ஸ்மித் அதை அம் மதச் சிக்கலினின்று விடுத்து, விஞ்ஞான ரீதியில் ஆராயத் தொடங்கினுர். அவர் பொருளியலை நியமிக்கும் சில இயற்கை விதிகளைக் கண்டுபிடிக்க முயன்ருர். பொருளியல் என்பது ஒரு ஜன சமூகம் அல்லது தேசத்தின் மொத்த வரவுசெலவுகளையும், உற்பத்தி உபயோகங்களையும், அவர்களுக்குள் இருக்க வேண்டிய உறவையும் அவர்களுக்கும் மற்ற நாட்டாருக்கும் இருக்க வேண்டிய உறவையும் பற்றிய ஒரு சாஸ்திரம் என்று உனக்குத் தெரிந்திருக்கலாம். இந்தச் சிக்கலான விவகாரங்களெல்லாம் சில நிலையான இயற்கை விதிகளை அனுசரித்தே நடை பெறுகின்றன என்று ஆடம் ஸ்மித் நம்பினுர். அவ்விதிகளை அவர் தமது நூலில் வெளியிட்டார். அவ்விதிகளில் பிறர் தலையிடாமலிருக்க வேண்டுமாயின் தொழிலபிவிருத்திக்குப் பூரண சுதந்திரம் அளிக்க வேண்டுமென்பது அவருடைய நம்பிக்கை. அதிலிருந்துதான் ‘தலையிடாக் கொள்கை’ தோன்றியது. அதைப்பற்றி நான் ஏற்கெனவே சிறிது கூறியிருக்கிறேன். அக்காலத்தில் பிரான்சில் உதித்து வந்த புதிய ஜனநாயகக் கருத்துகளுக்கும் ஆடம் ஸ்மித்தின் நூலுக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது. ஆனுல், மனிதர்களையும் தேசங்களையும் பாதிக்கும்படியான ஒரு முக்கியமான பிரச்சினையை அவர் விஞ்ஞான ரீதியில் ஆராய முயன்றது, எதையும் மதக்கண் கொண்டு பார்க்கும் பழைய முறையை விடுத்து மாந்தர் புது முறையை மேற்கொள்ளத் தொடங்கி விட்டார்கள் என்பதையே காட்டுகிறது. ஆடம் ஸ்மித் அர்த்த-

சாஸ்திரத்தின் தந்தை என்று கருதப்படுகிறார். 19-வது நூற்றாண்டின் ஆங்கில அர்த்த சாஸ்திரிகள் பலருக்கு அவரே ஆதர்சமாக விளங்கினார்.

புதிய பொருளியல் சாஸ்திரம் சில ஆசிரியர்களிடத்திலும் கற்றோரிடத்திலும் அடைபட்டுக் கிடந்தது. ஆனால், புதிய ஜனநாயகக் கருத்துகளோ ஜனங்களிடையில் பரவி வந்தன. அமெரிக்க, பிரெஞ்சுப் புரட்சிகள் அவற்றை எங்கும் பறையறைந்தன. அமெரிக்கச் சுதந்திரப் பிரகடனத்திலும், பிரெஞ்சு உரிமைப் பிரகடனத்திலும் காணப்பட்ட ஆரவாரச் சொற்கள் மக்களின் உள்ளத்தை அடிவரையில் கலக்கின. அழுத்தப்பட்டும் சுரண்டப்பட்டும் வந்த கோடிக்கணக்கான மக்களுக்கு அவை விடுதலைச் செய்தியைக் கொணர்ந்து ஓர் ஆவேசத்தை அளித்தன. அவ்விரண்டு பிரகடனங்களும் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்று முழங்கின. ஒவ்வொருவனுக்கும் இன்பமாக வாழ உரிமை உண்டு என்று அவை எடுத்துமொழிந்தன. அவ்வரிய வுரிமைகளை உலகறியப் பெருமிதத்துடன் முரசறைந்து விட்டதாலேயே அவை ஜனங்களுக்குக் கிடைத்து விடவில்லை. இப்பொழுது கூட, அதாவது, அப் பிரகடனங்கள் தோன்றி 150 ஆண்டுகள் சென்ற பிறகும், அவ் வுரிமைகளை அனுபவிப்பவர் மிகச் சிலரே என்று சொல்லலாம். ஆயினும், அக்கொள்கைகளைப் பிரகடனம் செய்ததே ஜனங்களுக்குப் புத்துயிரையும் புதிய ஊக்கத்தையும் அளித்தது.

மற்ற இடங்களைப் போலவே ஐரோப்பாவிலும், மற்ற மதங்களைப் போலவே கிறிஸ்துவ மதத்திலும், மனிதன் பாவத்திலும் துன்பத்திலும் உழலவே பிறந்திருக்கிறான் என்பதுதான் பழைமையான கொள்கையாகும். மதம் வறுமைக்கும் துன்பத்துக்கும், இவ்வுலகில்

கௌரவம் பொருந்திய நிரந்தரமான ஒரு ஸ்தானத்தை அளிப்பதாகவே தோன்றியது. எல்லாவிதமான சுகங்களையும் அடுத்த உலகில் கொடுப்பதாக மதம் வாக்களித்தது. ஆனால், இவ்வுலகில் நாம் நமது கஷ்டங்களைப் பொறுமையுடன் சகித்துக் கொள்ள வேண்டும் என்றும், அடிப்படையான மாறுதல் எதையும் செய்ய முயற்சிக்கக் கூடாதென்றும் மதம் நமக்கு உபதேசம் செய்தது. ஏழைகளுக்குத் தான தருமங்கள் செய்வதை மதம் ஆதரித்தது. ஆனால், ஏழ்மைத் தனத்தை ஒழிக்கும் எண்ணமோ அல்லது ஏழ்மைத் தனத்தை உண்டாக்கும் ஏற்பாட்டை ஒழிக்கும் எண்ணமோ அதற்கு இல்லை. சுதந்திரம், சமத்துவம் என்கிற கருத்துகளோ மதஸ்தாபனமும் சமூகமும் கொண்டிருந்த சர்வாதிகார மனோபாவத்துக்கு மாறாயிருந்தன.

ஜனநாயகத் தத்துவமானது எல்லா மனிதர்களும் உண்மையில் சமமானவர்கள் என்று சொல்லவில்லை. அவ்வாறு சொல்லவும் முடியாது. ஏனெனில், மனிதர்களுக்கிடையே காணப்படும் ஏற்றத்தாழ்வுகள் வெள்ளிடைமலை. உடலைப்பற்றிய ஏற்றத்தாழ்வுகள் காரணமாகச் சிலர் மற்றவர்களைவிட வலிமை மிக்கோராயிருக்கிறார்கள். அறிவைப்பற்றிய ஏற்றத்தாழ்வுகள் காரணமாகச் சிலர் மற்றவர்களை விட அறிவும் திறமையும் வாய்ந்தவர்களாக இருக்கிறார்கள். ஒழுக்கத்தைப்பற்றிய ஏற்றத்தாழ்வுகள் காரணமாகச் சிலர் மற்றவர்களை விடத் தன்னலமற்றவர்களாயிருக்கிறார்கள். இவ் வேற்றத் தாழ்வுகளுக்கு வளர்ப்பு முறையிலும் கல்வி முறையிலும் உள்ள வேற்றுமைகளோ அல்லது கல்வியின்மையோ காரணமாக இருக்கலாம். எல்லாவிதத்தும் ஒன்று போலுள்ள இரு சிறுவர்களில், ஒருவனுக்குக்

கல்வி அளித்தும் மற்றவனுக்குக் கல்வி அளிக்காதும் விட்டால், சில வருஷங்களில் இருவரிடையிலும் பெரிய வேற்றுமை புலனாகும். அல்லது, ஒருவனுக்கு நல்ல உணவு அளித்தும், இன்னொருவனுக்குச் சரியான உணவோ அல்லது போதிய உணவோ அளிக்காதும் வருவோமாயின், முன்னவன் நன்கு வளர்வதையும் பின்னவன் நோயுற்று நோஞ்சலாகவும் கறளையாகவும் போவதையும் காண்போம். ஆகவே, ஒருவனை ஆக்குவனவும் அழிப்பனவும் வளர்ப்புமுறையும், சூழ் நிலையும், பயிற்சியும், கல்வியுமே என்று ஏற்படுகிறது. எல்லோருக்கும் ஒரே விதமான பயிற்சியும் சந்தர்ப்பமும் கிடைக்கும்படி செய்யக் கூடுமாயின், இப்போதிருப்பதைவிட ஏற்றத்தாழ்வுகள் மிகவும் குறைந்து காணப்படலாம். இது சகஜமாக நிகழக் கூடியதே. ஆனால், ஜனநாயகத் தத்துவத்தைப் பொறுத்த வரையில், அது மனிதர்களுக் கிடையில் ஏற்றத் தாழ்வுகள் உண்டென்பதை ஒப்புக்கொண்டது. ஆயினும், அனைவரும் சமமான அரசியல், சமூக அந்தஸ்துடையவர்களாகவே நடத்தப்படவேண்டும் என்று அது சொல்லிற்று. இந்த ஜனநாயகச் சித்தாந்தத்தை நாம் அப்படியே ஒப்புக்கொள்வோமாயின், நாம் பலவிதப் புரட்சிகரமான முடிவுகளுக்கு வரவேண்டியவர்களாகிறோம். அவற்றையெல்லாம் பற்றி நாம் இவ்விடத்தில் விவாதிக்க வேண்டியதில்லை. ஆனால், அந்தச் சித்தாந்தத்திலிருந்து தோன்றிய ஒரு விளைவு என்னவென்றால், ஆளும் சபை அல்லது பார்லிமெண்டுக்குப் பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்க ஒவ்வொருவருக்கும் வோட்டுரிமை இருக்க வேண்டும் என்பதுதான். வோட்டுத்தான் அரசியல் அதிகாரத்தின் சின்னம். அனைவருக்கும் வோட்டுரிமை இருப்பின், அனைவரும் அரசியல் அதிகாரத்தைச் சமமாகப் பகிர்ந்து கொள்வதாக

அர்த்தம். ஆகவே, 19-ம் நூற்றாண்டு முழுதும் வோட்டுரிமையை விஸ்தரிக்கவேண்டும் என்பது ஜனநாயகத்தின் முக்கியக் கோரிக்கைகளில் ஒன்றாக இருந்தது. அதாவது, வயது வந்தவர் ஒவ்வொருவருக்கும் வோட்டுரிமை இருக்கவேண்டும் என்பது அதன் பொருள். நெடுங்காலம் வரையில் இவ்வோட்டுரிமை பெண்களுக்கு இல்லாமலிருந்தது. சிலகாலத்துக்கு முன்புதான் பெண்கள் அதற்காகப் பெருங்கிளர்ச்சி செய்தார்கள். முக்கியமாக இக்கிளர்ச்சி பிரிட்டனில் பலமாயிருந்தது. அநேகமாக முன்னேற்றமடைந்துள்ள நாடுகள் எல்லாவற்றிலும், வயது வந்த ஆண், பெண் இருபாலாருக்கும் இப்போது வோட்டுரிமை இருக்கிறது.

சரி, பெரும்பாலோருக்கு வோட்டுரிமை கிடைத்துவிட்டது. அப்புறம் என்ன? வோட்டுரிமையினால் தங்களுடைய நிலை சீர்திருந்தவில்லை என்பதையே அவர்கள் கண்டார்கள். வோட்டு இருந்தும் ராஜ்யத்தில் அவர்களுக்கு யாதொரு அதிகாரமும் இல்லை. பசியால் வாடும் ஒருவனுக்கு வோட்டினால் என்ன பிரயோஜனம்? அவனுடைய பசியைப் பயன்படுத்திக்கொண்டு, தங்களுடைய சொந்த நன்மைக்காக அவனை எதையும் செய்ய வைக்கக் கூடியவர்கள் கையில்தான் உண்மையான அதிகாரம் இருந்தது. வோட்டு என்பது ஒவ்வொருவனுக்கும் அரசியல் அதிகாரத்தை அளிப்பதாகக் கருதப்பட்டது. அந்த அரசியல் அதிகாரம் பொருளியல் அதிகாரத்துடன் கூடாதாயின், சாரமற்ற வெறும் சக்கை போல்வது என்பது தெளிவாயிற்று. வோட்டுரிமையினால் சமத்துவம் ஏற்படும் என்கிற ஆதி ஜனநாயகவாதிகளின் கூற்று வெறும் பகற் கனவாக முடிந்தது.

ஆனால், இந்த ஞானம் பிறகுதான் உண்டாயிற்று. ஆரம்பத்தில்—18-வது நூற்றாண்டின் முடிவிலும்

19-வது நூற்றாண்டின் தொடக்கத்திலும்—ஜனநாயகவாதிகளிடையே உற்சாகம் கரைபுரண்டோடியது. ஜனநாயகத்தினால் ஒவ்வொருவனும் சுதந்திரமும் சமத்துவமும் அடையப் போகிறான், நாட்டின் அரசாங்கம் ஒவ்வொருவனுடைய க்ஷேமத்துக்காகவும் பாடுபடப் போகிறது என்கிற எண்ணமே அப்போது மேலோங்கி நின்றது. 18-வது நூற்றாண்டில் அரசர்களும், அரசாங்கங்களும் வகித்த யதேச்சாதிகாரத்தையும் அவர்கள் அதைத் துஷ்பிரயோகம் செய்த விதத்தையும் கண்டு ஜனங்கள் கொதித்தெழுந்தார்கள். ஆகவே, அவர்களுடைய பிரகடனங்களில் தனி மனிதர்களின் உரிமைகள் அதிகமாக வற்புறுத்தப்பட்டன. அமெரிக்க, பிரெஞ்சுப் பிரகடனங்கள் இவ்விஷயத்தில் சற்று அதியாகவே போய் விட்டன என்று தோன்றுகிறது. பலவிதச் சிக்கல்கள் நிறைந்த ஒரு மனித சமூகத்தில், தனி மனிதர்களைப் பிரித்து அவர்களுக்குப் பூரண சுதந்திரம் வழங்குவதென்பது எளிதல்ல. அத்தகைய ஒரு தனிமனிதனின் நலன்களும் சமூகத்தின் பொதுநலன்களும் நிச்சயம் ஒன்றையொன்று மோதத்தான் மோதும். இது எவ்வாறாயினும், ஜனநாயகம் தனிமனிதர் உரிமைகளை அதிகரிப்பதையே ஆதரித்து நின்றது.

18-வது நூற்றாண்டில், அரசியல் கருத்துகளில் மிகவும் பிற்பட்டிருந்த இங்கிலாந்தை அமெரிக்க, பிரெஞ்சுப் புரட்சிகள் பெரிதும் பாதித்தன. புதிய ஜனநாயகக் கருத்துகளைக் கண்டு இங்கிலாந்தில் முதலில் பயம்தான் உண்டாயிற்று. அவற்றால் எங்கே சமூகப் புரட்சி தோன்றிவிடுமோ என்று அவர்கள் பயந்தார்கள். ஆளும் வகுப்பாரின் பழைமைப் பற்றும் பிற்போக்குத் தன்மையும் முன்னைவிட அதிகமாயின. ஆயினும், புதிய கருத்துகள் அறிவாளிகளிடையே பரவ்வந்தன. அக்

காலத்தில் வாழ்ந்தவர்களில் தாமஸ் பெயின் என்னும் ஆங்கிலேயர் நமது கவனத்தைக் கவர்கிறார். அமெரிக்கா சுதந்திரத்துக்காகப் போராடிய போது அவர் அங்கு இருந்தார். அவர் அமெரிக்காவுக்கு உதவியும் புரிந்தார். பூரண சுதந்திர லட்சியத்துக்கு அமெரிக்காவைத் திருப்பிய கைங்கரியத்தில் அவருக்கும் பங்கு உண்டு. அவர் இங்கிலாந்துக்குத் திரும்பியதும், அப்பொழுதுதான் ஆரம்பித்திருந்த பிரெஞ்சுப் புரட்சியை ஆதரித்து 'மனிதனின் உரிமைகள்' என்றொரு நூல் எழுதினார். அந்நூலில் அவர் முடியரசைத் தாக்கியும் ஜனநாயகத்தைத் தாக்கியும் எழுதியிருந்தார். அது காரணமாகப் பிரிட்டிஷ் அரசாங்கம் அவரைச் சட்டத்துக்குப் புறம்பாக்கவே, அவர் பிரான்சுக்கு ஓடினார். பாரிசில், அவர் விரைவிலேயே தேசிய கன்வென்ஷனில் ஒரு அங்கத்தினர் ஆனார். 1793-ல், 16-வது லூயியின் சிரச்சேதத்தை ஆட்சேபித்ததற்காக, 'ஜாகோபின்'கள் அவரைச் சிறையிலிட்டார்கள். பாரிஸ் சிறையில் அவர் 'பகுத்தறிவு சகாப்தம்' என்று இன்னொரு நூல் எழுதினார். அதில் அவர் மதத்தொடக்குண்ட மனோபாவத்தைக் கண்டித்திருந்தார். பெயினை ஒன்றும் செய்யமுடியாது போகவே (ரோப்ஸ்பியரின் மரணத்துக்குப்பின் அவர் பாரிஸ் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார்), பிரிட்டிஷ் கோர்ட்டார் அவருடைய புஸ்தகத்தை வெளியிட்ட ஆங்கிலப் பிரசுரகர்த்தர்களுக்குச் சிறைத் தண்டனை விதித்தார்கள். ஏழைகளை வீண் கிளர்ச்சி செய்ய வொட்டாமல் தடுப்பதற்கு மதம் அவசியமாயிருப்பதால் மதத்தைத் தாக்கும் பெயினின் புஸ்தகம் போன்ற ஒரு புஸ்தகம் சமூகத்துக்கு மிகவும் அபாயகரமானது என்று அவர்கள் எண்ணினார்கள். பெயினின் புஸ்தகத்தை வெளியிட்ட, பெண்கள்

உள்ளிட்ட பல பிரசுரகர்த்தர்கள் சிறைக்கு அனுப்பப்பட்டார்கள். அதை ஆட்சேபித்து நமது கவிஞனான ஷெல்லி நீதிபதிக்கு ஒரு கடிதம் எழுதினான்.

ஐரோப்பாவில் ஜனநாயகக் கொள்கைகளை ஈன்றெடுத்தது பிரெஞ்சுப் புரட்சி தான். 19-வது நூற்றாண்டின் முற்பாதியில் அவை நெடுகிலும் பரவின. ஆனால், பிரெஞ்சுப் புரட்சியின் போதிருந்த நிலைமை விரைவில் மாறிவந்தது. ஆயினும், புரட்சியின் போது தோன்றிய ஜனநாயகக் கருத்துகள் மட்டும் மாறவில்லை. அவை அரசர்களையும் அவர்களுடைய யதேச்சாதிகாரத்தையும் எதிர்த்து எழுந்தவையாகும். ஐரோப்பா தொழில்மயமாவதற்கு முன்னிருந்த நிலைமைகளை அவை அடிப்படையாகக் கொண்டிருந்தன. ஆனால், புதிய தொழில்—நீராவியும் பெரிய யந்திரமும்—வந்து பழைய ஏற்பாட்டைத் தலைகீழாக்கிக் கொண்டிருந்தது. ஆயினும், 19-வது நூற்றாண்டின் ஆரம்பத்தில் வாழ்ந்த ஜனநாயகவாதிகளும் தீவிரவாதிகளும் இம்மாறுதல்களைச் சிறிதேனும் சட்டை செய்யாமல், புரட்சி, மனித உரிமைப் பிரகடனப் பல்லவிகளை உச்சஸ்தாயியில் ஓயாமல் பாடிக் கொண்டிருந்தது தான் விசித்திரமாயிருக்கிறது. ஒருவேளை, அவர்கள் இம்மாறுதல்கள் வெறும் லோகாயதத் தன்மை கொண்டன என்றும், அவை தங்களுடைய உயரிய ஆத்மீக, தார்மிகத்தன்மை கொண்ட ஜனநாயகத் தத்துவத்தின் அரசியல் கோரிக்கைகளைப் பாதிக்க மாட்டா என்றும் கருதினார்கள் போலும். ஆனால், லோகாயத விஷயங்கள் பிறர் தம்மைப் புறக்கணிப்பதற்கு எளிதில் இடம் கொடுப்பதில்லை. பழைய கொள்கைகளைக் கைவிட்டுப் புதிய கொள்கைகளை ஏற்றுக் கொள்வது ஜனங்களுக்கு எவ்வளவு அரிதான ஒரு காரியம் என்பது இதிலிருந்து தெரிகிறது. அவர்கள்

புறக்கண், அகக்கண் இரண்டையும் கெட்டியாக மூடிக் கொண்டு எதிரில் மலைபோல் நிற்கும் உண்மைகளையும் காண மறுத்து விடுகிறார்கள். பழையன தீங்கு பயப்பினும் அவர்கள் அவற்றைக் கட்டிக் கொண்டு அழுவார்களே ஒழியப் புதியனவற்றை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். புதிய கருத்துகளை ஏற்றுக் கொண்டு புதிய நிலைமைகளுக்குத் தகத் தங்களை அமைத்துக் கொள்வது ஒன்று தவிர அவர்கள் வேறு எதையும் செய்வார்கள். பழைமையோம்பி வாதத்தின் சக்தி அவ்வளவு மகத்தானது. மிகவும் முற்போக்குள்ள தீவிர வாதிகள் என்று தம்மை நினைத்துக்கொள்வோரும் காலாவதியாகி விட்ட பழைய கருத்துகளைப் பற்றிக் கொண்டு மாறிவரும் நிலைமைகளைக் கண்கொண்டும் காணமாட்டார்கள். இந்த நிலைமையில் ஜனங்களின் முன்னேற்றம் மெதுவாயிருப்பதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது? ஜனங்களின் கருத்துகள் கால நிலைமைகளோடு சேர அடி எடுத்து வைக்காமல் பெரிதும் பின் தங்கி விடுகின்றன. அத்தகைய சந்தர்ப்பங்களில் தான் புரட்சி பிறக்கிறது.

ஆகவே, ஜனநாயகம் என்பது பல ஆண்டுகள் வரையில் பிரெஞ்சுப் புரட்சியின் சம்பிரதாயங்களை அழியவிடாமல் பாதுகாப்பதாகவும், அதன் கருத்துகளையே கிளிப்பிள்ளை போல் திருப்பித் திருப்பி ஒப்பிவிப்பதாகவும் இருந்துவந்தது. புதிய நிலைமைகளுக்கு ஏற்பத் தன்னை மாற்றி அமைத்துக்கொள்ளத் தவறியதன் பயனாக, அந்நூற்றாண்டு முடிவில், ஜனநாயகம் பலவீனம் அடைந்துவிட்டது. பிற்பாடு, இருபதாம் நூற்றாண்டில் அதைப் பலர் நிராகரிக்கவும் ஆரம்பித்து விட்டார்கள். இன்றுகூட அக்கிரகண்ணியமான இந்திய அரசியல் வாதிகள் பலர் பிரெஞ்சுப் புரட்சி, மனித உரிமைப் பிரகடனம் ஆகியவற்றின் பரிபாஷையில் பேசிக்கொண்டி

ருக்கிறார்கள். பிரெஞ்சுப் புரட்சிக்குப்பின் காலம் எவ்வளவோ மாறிவிட்டதென்பதை அவர்கள் உணர்வதில்லை.

ஆதி ஜனநாயக வாதிகள் பகுத்தறிவு வாதத்தை அவலம்பித்தார்கள். கருத்து சுதந்திரமும் பேச்சு சுதந்திரமும் கோரும் அவர்கள் தான் சொன்னதே சரியென்று சாதிக்கும் மதக்கோட்பாடுகளை எங்ஙனம் ஒப்புக்கொள்ள முடியும்? இவ்வாறு ஜனநாயகத் தத்துவம் விஞ்ஞானத்துடன் சேர்ந்துகொண்டு மதக்கோட்பாடுகளின் பிடியைத் தளர்த்த முயன்றது. ஜனங்கள் சாதாரண நூலைப்போல் பைபிளையும் ஆராயத் துணிந்துவிட்டார்கள். பைபிள் கேள்வி கேட்காமல் குருட்டுத்தனமாக ஒப்புக்கொள்ள வேண்டிய நூல் என்பதை அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. இந்தப் பைபிள் விமரிசனம் 'விசேஷ விமரிசனம்' என்று அழைக்கப்பட்டது. பல்வேறு மனிதர்கள் பல்வேறு காலங்களில் எழுதிய உரைகளின் திரட்டே பைபிள் என்னும் முடிவுக்கு அவ்விமரிசகர்கள் வந்தார்கள். ஏசுகிறிஸ்துவுக்கு ஒரு தனிமதத்தை ஸ்தாபிக்கும் எண்ணமே கிடையாது என்றும் அவர்கள் அபிப்பிராயப்பட்டார்கள். இந்த விமரிசனத்தினால் பழைய நம்பிக்கைகள் பல ஆடிப்போயின.

விஞ்ஞானமும் ஜனநாயகத் தத்துவமும் சேர்ந்து தாக்கியதன் பயனாகப் பழைய மத அஸ்திவாரங்கள் ஆட்டம்கொடுத்தன. ஆகவே, பழைய மதத்தின் ஸ்தானத்தில் புதிய தத்துவம் ஒன்றை ஸ்தாபிக்க முயற்சிகள் செய்யப்பட்டன. அகஸ்ட் காம்டே (1798–1857) என்னும் பிரெஞ்சுத் தத்துவசாஸ்திரி இத்தகைய முயற்சி ஒன்றைச் செய்தார். பழைய ஆஸ்திகக் கொள்கையும் சமயக்கோட்பாடுகளும் இக்காலத்துக்குப் பயனில்லை

என்று அவர் கண்டார். ஆனால், ஏதாவது ஒருவகையான மதம் சமூகத்துக்கு அவசியம் என்று அவர் நம்பினார். ஆகவே, அவர் 'ஜீவகாருணிய மதம்' என ஒன்றை எடுத்துக் கூறி அதைப் 'பிரத்தியட்ச வாதம்' என்று அழைத்தார். அது அன்பையும் ஒழுங்கையும் முன்னேற்றத்தையும் அடிப்படையாகக் கொண்டதாயிருந்தது. அதில் பாரமார்த்திக அம்சங்கள் கிடையா. அது விஞ்ஞானத்தையே ஆதாரமாகக் கொண்டிருந்தது. அதற்கும் இன்னும் மற்ற 19-வது நூற்றாண்டுக் கருத்துகளுக்கும் மனித ஜாதியின் முன்னேற்றக் கொள்கை பின்னால் இருந்தது. காம்டேயின் மதம் சில அறிவாளிகளைத் தாண்டிப் போகவில்லை. ஆனால், ஐரோப்பியக் கருத்துலகில் அதன் பிரபாவம் பெரியதாயிருந்தது. மனித சமூகத்தையும் அதன் பண்பாட்டையும் பற்றிய 'சமூக சாஸ்திர' (Science & Sociology) ஆராய்ச்சியைக் காம்டே தொடங்கியதாகக் கூறலாம்.

ஆங்கிலத் தத்துவ சாஸ்திரியும் பொருளியல் சாஸ்திரியுமாகிய ஜான் ஸ்டூவர்ட் மில் என்பவர் காம்டேயின் காலத்திலும் அவருக்குப்பின் நெடுங்காலம் (1806-1873) வரையிலும் வாழ்ந்தவர். காம்டேயின் மதமும் அவருடைய அபேதவாதக் கருத்துகளும் அவரைப் பெரிதும் ஆகர்ஷித்தன. ஆடம் ஸ்மித்தின் கொள்கைகளைச் சுற்றி வளர்ந்த ஆங்கிலப் பொருளியல் சித்தாந்தத்தை அவர் ஒரு புதிய வழியில் திருப்பி அதில் சில அபேதவாதத் தத்துவங்களைக் கொண்டுவந்து சேர்த்தார். ஆனால், ஒரு 'பிரயோஜனவாதி' (Utilitarian) என்கிற முறையில் அவரை எல்லோரும் நன்கு அறிந்துள்ளார்கள். 'பிரயோஜனவாதம்' என்பது இங்கிலாந்தில் மில்லின் காலத்துக்குச் சிறிது முன்பு ஆரம்பிக்கப்பட்ட ஒரு புதிய கொள்கையாகும். அதை அதிகமாகப் பிரபலப்படுத்தி

யவர் மில். அதன் பெயரிலிருந்தே அதன் மூலதத்துவம் பிரயோஜனம் அல்லது உபயோகம் என்று ஏற்படுகிறது. 'மிகப் பெரும்பான்மையோருக்கு மிகப்பெரிய சுகம்' என்பதுதான் பிரயோஜனவாதிகளின் அடிப்படையான கொள்கையாகும். ஒன்று சரியா தப்பா என்று நிர்ணயம் செய்வதற்கு அதுதான் அளவுகோல். காரியங்கள் எந்த அளவுக்குச் சுகமோ அல்லது துக்கமோ கொடுக்கின்றனவோ அந்த அளவுக்கு அவை சரியானவை, அல்லது தப்பானவை என்று கொள்ளப்பட்டன. 'மிகப்பெரும் பான்மையோருக்கு மிகப்பெரிய சுகம்' என்கிற இந்த ஒரு தத்துவத்தை நினைவில் வைத்துக்கொண்டுதான் சமூகமும் அரசாங்கமும் வகுக்கப்படவேண்டும். 'அனைவருக்கும் சமமான உரிமைகள்' என்னும் பழைய ஜனநாயகக் கொள்கையும் இதுவும் ஒன்றல்ல. மிகப் பெரும்பான்மையோரின் மிகப்பெரிய சுகத்துக்காக ஒரு சிறு தொகையினரின் நன்மையைத் தியாகம் செய்யவேண்டி வரலாம். இரண்டுக்குமுள்ள இவ்வேற்றுமையை மட்டும் நான் இங்கு உனக்குச் சுட்டிக் காட்டுகிறேன். அதை இங்கு நாம் விரிவாக விவாதிக்க வேண்டிய அவசியமில்லை. இவ்வாறு, ஜனநாயகம் என்பது பெரும்பான்மையோரின் உரிமைகள் என்று பொருள்பட ஆரம்பித்தது.

'தனிமனிதனுக்குச் சுதந்திரம்' என்கிற ஜனநாயகக் கருத்தை ஜான் ஸ்டூவர்ட் மில் பலமாக ஆதரித்தார். அவர் 'சுதந்திரம்' என்ஞெரு சிறிய நூல் எழுதினர். அந்நூல் பெரும்புகழை அடைந்தது. ஒருவன் தன்னுடைய அபிப்பிராயத்தைத் தாராளமாக எடுத்துக் கூறும் உரிமையான பேச்சு சுதந்திரத்தை ஆதரிக்கும் ஒரு பகுதியை அந்நூலிலிருந்து தருகிறேன் :

"ஒரு அபிப்பிராயத்தை வெளியிட ஒட்டாமல்

அடக்குவதனால் பெருந்தீமை விளைகிறது. அது மனித ஜாதி அடையக்கூடிய ஒரு நன்மையைப் பறிப்பது போலாகும். அதனால், அந்தத் தலைமுறை மட்டுமின்றி வருங்காலத் தலைமுறைகளும் நஷ்டமடைகின்றன; அதனால், அடக்கப்படும் அபிப்பிராயத்துக்குச் சாதகமானவர்களைக் காட்டிலும் அதற்குப் பாதகமானவர்களுக்குத்தான் அதிக நஷ்டம். அவ்வபிப்பிராயம் சரியானதாயின், தனது தவறைத் திருத்திக்கொண்டு சத்தியத்தைத் தெரிந்துகொள்ளும் ஒரு அரிய சந்தர்ப்பத்தை மனித சமூகம் இழந்துவிடுகிறது. அது தவறுயினும் அதை அடக்குவதனால் முன்சொன்னதைப் போன்ற அவ்வளவு பெரிய நஷ்டம் ஏற்படுகிறது. ஏனெனில், சத்தியம் அசத்தியத்தோடு மோதும்போது இன்னும் அதிகப் பிரகாசமும் தெளிவும் பெறுகிறது. அந்த நன்மை தவருன அபிப்பிராயத்தை அடக்குவதனால் இல்லாது போய்விடுகிறது......நாம் அடக்க முயற்சிக்கும் அபிப்பிராயம் தவருனது என்று நாம் நிச்சயமாகச் சொல்ல முடியாது. அத்தகைய நிச்சயம் நமக்கு இருக்குமாயினும் அதை அடக்குவதனால் விளைவது தீமையே ஒழிய வேறில்லை."

மேற்கூறிய மனேபாவம் பிடிவாதமான மதக் கோட்பாட்டுடனும் யதேச்சாதிகாரப் போக்குடனும் பொருந்துவதல்ல. அது ஒரு தத்துவ ஆராய்ச்சியாளனின் மனேபாவமாகும்.

கருத்துகள் அபிவிருத்தி அடைந்த விதத்தையும் கருத்துலகின் முக்கியமான கட்டங்களையும் உனக்குக் காட்டுவதற்காக, 19-வது நூற்றுண்டில் மேல் ஐரோப்பாவில் வாழ்ந்த சில தலைசிறந்த அறிவாளிகளின் பெயர்களை இங்குக் கூறினேன். ஆனல், அவர்களுடைய பிரபாவமும், ஆதி ஜனநாயக வாதிகளின் பிரபாவமும் அறிவாளி

களிடையில் மட்டும்தான் காணப்பட்டன. ஓரளவுக்கு அது அவ்வறிவாளிகளின் மூலமாக மற்றவர்களுக்கும் பொசிந்தது. ஜனநாயகத் தத்துவத்தினால் சாமானிய ஜனங்கள் நேர்முகமாக அதிகம் பாதிக்கப்படாவிட்டா லும் மறைமுகமாகப் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். வோட்டுரிமைக் கோரிக்கை போன்ற சில விஷயங்களில் அதன் நேர்முகமான பிரபாவமும் பெரிதாயிருந்தது.

19-வது நூற்றாண்டு முதிர முதிர வேறு இயக்கங்க ளும் கருத்துகளும்—தொழிலாளர் இயக்கமும் அபேத வாதமும்—தோன்றிவளர்ந்தன. அவை அக்கால ஜன நாயகக் கருத்துகளையும், ஜனநாயகக் கருத்துகள் அவற்றையும் பாதித்தன. அபேதவாதம் ஜனநாயக வாதத்துக்கு மாற்று என்று சிலரும், அது ஜனநாயக வாதத்தின் அவசியமான ஒரு பகுதி என்று சிலரும் கொண்டார்கள். ஜனநாயக வாதிகள் 'சுதந்திரம், சமத்துவம், சுகத்தைப்பெற அனைவருக்கும் சம உரிமை' முதலிய கருத்துகள் நிரம்பியவர்களாக இருந்ததை நாம் கண்டோம். ஆனால், சுகம் என்பது, அதை ஒரு அடிப்படையான உரிமையாகக் கொண்ட மாத்திரத்திலேயே வந்துவிடுவதல்ல என்னும் உண் மையை அவர்கள் விரைவிலேயே கண்டு கொண்டார்கள். மற்றவை ஒரு புறம் இருப்பினும், சுகத்துக்கு ஓரளவு உடல்நலம் அவசியமாயிருந்தது. பட்டினியால் வருந்தும் ஒருவன் சுகமாயிருக்க முடியாது. ஆகவே, சுகம் என்பது செல்வத்தை இன்னும் சிறந்த முறையில் ஜனங்களிடை யில் விநியோகிப்பதைப் பொறுத்திருக்கிறது என்று அவர்கள் எண்ணத் தொடங்கினார்கள். இவ் விஷயம் நம்மை அபேதவாதத்துக்குக் கொண்டு செல்கிறது. அதை நாம் அடுத்த கடிதத்தில் பார்ப்போம்.

19-வது நூற்றாண்டின் முற்பாதியில், அடிமை

நாடுகளோ அல்லது ஜனங்களோ தங்களுடைய சுதந் திரத்துக்காகப் போராடிய இடங்களிலெல்லாம் ஜன நாயகம் தேசியத்துடன் கைகோத்து நின்றது. இதாலி யின் தலைவரான மாஜினி இத்தகைய ஜனநாயக—தேசி யத்தின் சின்னமாக விளங்கினார். அந்நூற்றாண்டின் இறுதியில் தேசியம் சிறிது சிறிதாகத் தன் ஜனநாயகத் தன்மையை இழந்து அதிகத் தீவிரமாகவும் சர்வாதிகாரப் போக்கு கொண்டதாகவும் மாறியது. அரசாங்கம் என்பது அனைவரும் வணக்கம் செலுத்த வேண்டிய ஒரு தேவதையின் ஸ்தானத்தை அடைந்தது.

பிரிட்டிஷ் வியாபாரிகள் புதிய யந்திரத் தொழி லுக்குத் தலைமை பூண்டிருந்தார்கள். உயர்ந்த ஜனநாயகத் தத்துவங்களிலோ, ஜனங்களின் சுதந்திர உரிமைகளிலோ அவர்களுக்கு அதிகச் சிரத்தை இல்லை. ஆனால், ஜனங் களுக்கு அதிகச் சுதந்திரம் இருப்பது வியாபாரத்துக்கு நல்லது என்பதை அவர்கள் கண்டு கொண்டார்கள். அதனால், தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் உயர் கிறது. அத்துடன் அவர்கள் தங்களுக்கு ஏதோ ஒரு வித மான சுதந்திரம் இருப்பதாக ஒரு பிரமையையும் அடை கிறார்கள். அதன் பயனாக, அவர்கள் இன்னும் திறமை யாக வேலை செய்கிறார்கள். தொழில் திறமைக்குப் பொது ஜனக் கல்வியும் அவசியமாக இருந்தது. ஆகவே, சுதந் திரம் கல்வி யாதிகளால் தங்களுக்கும் கைமேல் பலன் உண்டென்று கண்ட வியாபாரிகளும் தொழில் முதலாளி களும் அந்நலன்களை ஜனங்களுக்கு மனமுவந்து அளிக்க முன்வந்தார்கள். 19-வது நூற்றாண்டின் பிற்பாதியில் இங்கிலாந்திலும், மேல் ஐரோப்பாவிலும் கல்வி என்னும் பெயருக்குத் தகுதியில்லாத ஒருவகைக் கல்வி ஜனங்களிடையில் பரவியது.

132

அபேதவாதத் தத்துவத்தின் தோற்றம்

பிப்ரவரி 13, 1933.

ஜனநாயகத் தத்துவத்தின் வளர்ச்சியைப் பற்றிச் சென்ற கடிதத்தில் கூறினேன். ஆனால், அது படிப்படியாகப் போரிட்டே வளர வேண்டியிருந்தது என்பதை நீ நினைவில் வைக்க வேண்டும். நடைமுதல் ஏற்பாட்டினால் நன்மை அடைகிறவர்கள் மாறுதலை விரும்புவதில்லை. அவர்கள் மாறுதலைத் தங்களால் ஆனமட்டும் எதிர்க்கிறார்கள். ஆயினும், முன்னேற்றம் அல்லது சீர்திருத்தம் ஏற்பட வேண்டுமாயின் மாறுதல் இன்றியமையாததாயிருக்கிறது. ஒரு ஸ்தாபனமோ அல்லது அரசாங்க முறையோ தன்னைவிடச் சிறந்த ஒன்றுக்கு இடம் கொடுப்பதுதான் முன்னேற்றம். அத்தகைய முன்னேற்றத்தை விரும்புவோர் பழைய ஸ்தாபனத்தையோ அல்லது வழக்கத்தையோ ஓயாது தாக்கித்தான் தீரவேண்டும். ஆகவே, நடைமுதல் ஏற்பாட்டை நிராகரிப்போர் அதனால் நன்மை அடைவோருடன் மோத வேண்டியிருக்கிறது. மேல் ஐரோப்பாவின் ஆளும் வகுப்பார் எல்லா முன்னேற்றத்தையும் படிப்படியாக எதிர்த்தார்கள். இங்கிலாந்தில் அவர்கள் இன்னும் பிடிவாதம் பண்ணினால் பலாத்காரப் புரட்சிதான் உண்டாகும் என்று அறிந்தபின்பே விட்டுக் கொடுத்தார்கள். முன்னேற்றத்தை அவர்கள் ஒப்புக் கொண்டதற்கு இன்னொரு காரணம் முன்பே கூறியிருக்கிறேன். புதிய வியாபார வகுப்பினர் ஓரளவு ஜனநாயகம் தங்களுடைய வியாபாரத்துக்கும் உகந்ததே என்று உணர்ந்ததுதான் அக்காரணம்.

ஆனால், 19-வது நூற்றாண்டின் முற்பாதியில், ஜனநாயகக் கருத்துகள் பெரும்பாலும் அறிவாளிகளிடையில்தான் உலவி வந்தன என்பதை உனக்கு நான் மீண்டும் நினைவுறுத்த வேண்டும். தொழிலபிவிருத்தியினால் சாமானிய ஜனங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். அது அவர்களை வயல்களிலிருந்து தொழிற்சாலைகளுக்கு வலித்தது. ஒரு யந்திரத் தொழிலாளி வகுப்புத் தோன்றி வளர்ந்தது. நிலக்கரி வயல்களை அடுத்த, அவலட்சணமும் அநாரோக்கியமும் பொருந்திய தொழிற்சாலைப் பட்டணங்களில் அவர்கள் மூட்டை முடிச்சுகள் போல் அடைபட்டுக் கிடந்தார்கள். அத்தொழிலாளர் விரைவில் மாறுதலுற்று வந்தார்கள். அவர்களிடையே ஒரு புதிய மனப்பான்மை தோன்றி வளர்ந்தது. முதல் முதல் பசி பொறுக்கமாட்டாமல் தொழிற்சாலைகளில் வந்து நிறைந்த விவசாயிகளையும் கைத்தொழிலாளரையும் போல இப் புதிய தொழிலாளர் இல்லை. யந்திரத் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதில் பிறநாடுகளை முந்திக் கொண்ட இங்கிலாந்து, யந்திரத் தொழிலாளி வகுப்பு அபிவிருத்தியிலும் முதன்மையாக இருந்தது. தொழிற்சாலை நிலைமைகள் மகா கேவலமாயிருந்தன. தொழிலாளர் வசித்த குடிசைகளைப் பற்றியோ சொல்ல வேண்டியதில்லை. அவர்கள் அளவற்ற துன்பம் அனுபவித்தார்கள். சிறு குழந்தைகளும் ஸ்திரீகளும் மிக நீண்ட நேரம் வேலை செய்தார்கள். அப்படி யிருந்தும், தொழிற்சாலைகளையும் தொழிலாளர் வீடுகளையும் சட்டத்தின்மூலம் சீர்திருத்துவதற்குச் செய்யப்பட்ட எல்லா முயற்சிகளையும் முதலாளிகள் பலமாக எதிர்த்தார்கள். எங்களுடைய சொத்துரிமையில் வெட்கமில்லாமல் தலையிடுகிறீர்களே என்று அவர்கள் கேட்டார்கள். இதே காரணத்தைச் சொல்லித்

தனி மனிதர் தங்கள் வீடுகளைக் கட்டாயமாக ஆரோக்கிய ஸ்திதியில் வைத்திருக்க வேண்டும் என்னும் சட்டத்தையும் அவர்கள் எதிர்த்தார்கள்.

ஏழைப் பிரிட்டிஷ் தொழிலாளர் அரைப்பட்டினியாலும் அதிக வேலையாலும் மடிந்து வந்தார்கள். நெப்போலிய யுத்தங்கள் நாட்டைச் சப்பி எடுத்து விட்டன. பொருளியல் சுணக்கம் ஏற்பட்டது. அதனால், தொழிலாளர்கள் தான் அதிகமாகப் பாதிக்கப் பட்டார்கள். அவர்கள் தங்களைக் காத்துக் கொள்ளவும் தங்களுடைய நிலையை உயர்த்துவதற்குப் போராடவும் சங்கங்கள் அமைத்துக் கொள்ள விரும்பினார்கள். பழைய காலத்தில் கைத் தொழிலாளிகள் சங்கங்கள் அமைத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவைகளுக்கும் புதிய சங்கங்களுக்கும் வித்தியாசம் உண்டு. ஆயினும், அப்பழைய சங்கங்களின் ஞாபகம் புதிய சங்கங்கள் அமைப்பதற்குப் பெரிய தூண்டுகோலாயிருந்திருக்க வேண்டும். ஆனால், அவர்கள் அவ்வாறு செய்யாமல் தடுக்கப் பட்டார்கள். பிரெஞ்சுப் புரட்சியைக் கண்டு பிரிட்டிஷ் ஆளும் வகுப்பார் பெரிதும் பயந்து போயிருந்தார்கள். ஆகவே, தொழிலாளர் தங்கள் குறைகளைக் கூடி விவாதிப்பதைத் தடுப்பதற்காக, அவர்கள் 'கூட்டத் தடைச் சட்டங்கள்' இயற்றினார்கள். இப்போது நாம் இந்தியாவில் காணுவதைப் போல, அப்போது இங்கிலாந்திலும் 'சட்டமும் ஒழுங்கும்' அதிகாரத்திலுள்ள ஒரு சிலரின் நன்மையை வளர்ப்பதற்குச் சமய சஞ்சீவியாக விளங்கின.

தொழிலாளர்கள் கூடக்கூடாது என்று சட்டம் இயற்றியதால் அவர்களுடைய நிலைமை சீர்திருந்தவில்லை. அதனால் அவர்களுக்கு ஆத்திரமும் கோபமும் மூண்டது தான் கண்ட பலன். அவர்கள் எதற்கும் துணிந்து

இரகசியச் சங்கங்கள் ஏற்படுத்திக் கொண்டார்கள். அவர்கள் அந்த இரகசியத்தை ஒருவருக்கும் தெரிவிப்பதில்லை என்று பிரமாணம் எடுத்துக்கொண்டு நள்ளிரவில் ஊருக்குப் புறம்பான இடங்களில் சந்தித்து வந்தார்கள். அந்தச் சமயத்தில் அவர்கள், காட்டிக் கொடுக்கப் பட்டாலும் கண்டு பிடிக்கப்பட்டாலும், சதிவழக்குகளுக்கும் கொடுந் தண்டனைகளுக்கும் ஆளானார்கள். சில சமயங்களில், தொழிலாளர்கள் கோபவெறியில் யந்திரங்களை அழிப்பதும், தொழிற்சாலைகளைக் கொளுத்துவதும், முதலாளிகளைக் கொல்லுவதும் உண்டு. கடைசியாக, 1825-ல், தொழிலாளர்கள் சங்கம் சேரக் கூடாது என்கிற தடைகள் ஓரளவு நீக்கப்பட்டன. அதன் பயனாகத் தொழிற் சங்கங்கள் (Trade Unions) தோன்றின. சற்று அதிகக் கூலிவாங்கும் தேர்ச்சி பெற்ற தொழிலாளரே மேற்படி சங்கங்களை அமைத்தார்கள். பெரும்பான்மையோரான தேர்ச்சியற்ற தொழிலாளர் நெடுங்காலம் வரையில் தங்களுக்குள் சங்கம் முதலிய கட்டுப்பாடு ஒன்றும் இன்றியே இருந்தார்கள். இவ்வாறு, தொழிலாளர் இயக்கம் தொழிற் சங்கங்களின் வடிவை அடைந்தது. அவற்றின் மூலம் அவர்கள் கூட்டுபேரம் (Collective Bargaining) செய்து தங்கள் நிலைமையைச் சீர்திருத்திக் கொள்ள முயன்றார்கள். வேலை நிறுத்தம் செய்து தொழிற்சாலையை ஸ்தம்பிக்கச் செய்வது ஒன்றுதான் தொழிலாளர் கையிலுள்ள ஆயுதம். அந்த ஆயுதம் ஒப்பற்றதென்பதில் ஐயமில்லை. ஆனால், முதலாளிகளின் கையில் அதை விடப் பெரிய ஆயுதம் ஒன்று இருந்தது. அதுதான் தொழிலாளரைப் பட்டினி போட்டு அடக்குவது. தொழிலாளர் பெரிய தியாகங்கள் செய்தார்கள். ஆனால், அவர்களுக்குக் கிடைத்த லாபம் சிறிதாகத்தான் இருந்தது. இவ்வாறு அவர்களுடைய போராட்டம்

நடந்து வந்தது. அவர்களுக்கு வோட்டுரிமைகூட இல்லை. ஆகவே, பார்லிமெண்டில் அவர்களுக்கு நேரான செல்வாக்கு ஒன்று மில்லை. 1832-ம் வருஷத்துச் சீர்திருத்த மசோதாகூட பணக்கார மத்திய வகுப்பாருக்குத்தான் வோட்டுரிமை அளித்தது. அதற்கே ஆட்சேபம் பலமாயிருந்தது. தொழிலாளருக்கு மட்டுமின்றிக் கீழ் மத்திய வகுப்பாருக்குக்கூட வோட்டுரிமை என்பதில்லை.

இதற்கிடையில், மாஞ்செஸ்டர் தொழிற்சாலை முதலாளிகளுக் கிடையே ஒருவன் தோன்றினான். அவனுடைய பெயர் ராபர்ட் ஓவன் என்பது. அவன் பரம தயாளு. தொழிலாளரின் நிலையைக் கண்டு அவன் கண்ணீர் வடித்தான். அவன் தன்னுடைய தொழிற்சாலைகளில் பலவிதமான சீர்திருத்தங்களை உயர்த்தித் தொழிலாளரின் நிலைமையை உயர்த்தினான். அவன் தன்னைப் போன்ற முதலாளிகளுக்குத் தொழிலாளரை நன்றாக நடத்த வேண்டும் என்பதற்குரிய நியாயங்களை எடுத்துக் காட்டி அவர்களைத் தன் வழிக்குத் திருப்ப முயன்றான். பிரிட்டிஷ் பார்லிமெண்டும், தொழிலாளரை முதலாளிகளின் சுயநலத்தினின்றும் பேராசையினின்றும் காப்பாற்றுவதற்கு முதன் முதலாகச் சட்டம் செய்தது. அதற்கு ஓவனின் முயற்சியும் ஓரளவு காரணமாகும். 1819-ல் நிறைவேற்றப்பட்ட அச்சட்டத்துக்குத் 'தொழிற்சாலைச் சட்டம்' என்று பெயர். அது ஒன்பது வயதுக் குழந்தைகளிடம் ஒரு நாளைக்குப் பன்னிரண்டு மணி நேரத்துக்கு மேல் வேலை வாங்கக் கூடாது என்று விதித்தது! இதிலிருந்தே தொழிலாளரின் கோரமான நிலையை நீ ஒருவாறு ஊகித்துக் கொள்ளலாம்.

ராபர்ட் ஓவன்தான் 'அபேதவாதம்' என்னும் வார்த்தையை, 1830-ம் வருஷவாக்கில், முதன் முதலாக உபயோகித்ததாகச் சொல்லப்படுகிறது. ஏழை பணக்காரர் என்கிற வித்தியாசம் இன்றிச் சொத்துச் சுதந்திரங்களை அனைவருக்கும் ஏறக்குறையச் சமமாகப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும் என்கிற கொள்கை புதிதல்ல. இதற்குமுன் பலர் அதை ஆதரித்து வந்திருக்கிறார்கள். ஆதிகாலத்தில் வாழ்ந்த ஜனசமுதாயங்களிடையே ஒரு விதமான பொதுஉடைமை ஏற்பாடு அமுலில் இருந்தது. நிலம், ஆடு மாடு முதலிய உடைமைகளை ஒரு கிராமம் அல்லது சமுதாயம் முழுவதும் பொதுவாக ஆண்டனுபவித்து வந்தது. இது 'ஆதிப்பொதுஉடைமை வாதம்' என்று அழைக்கப்படுகிறது. இது இந்தியா முதலான பல நாடுகளில் இருந்ததாகத் தெரிகிறது. ஆனால், புதிய அபேதவாதமானது, ஏழை பணக்காரர் என்கிற வித்தியாசத்தைப் போக்க வேண்டும் என்னும் தெளிவற்ற பழைய கொள்கையைவிட எவ்வளவோ மேலாயிருந்தது. அது திட்டமான ஒரு வடிவத்தை உடையதாயிருந்தது. ஆரம்பத்தில், அதைத் தொழிற்சாலை உற்பத்தி முறையில் நுழைக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. ஆகவே, 'அபேதவாதம்' என்பது புதிய தொழில்முறை பெற்றெடுத்த பிள்ளையாகும். தொழிலாளர் கூட்டுறவு சங்கங்கள் வேண்டுமென்பதும், தொழிலாளருக்குத் தொழிற்சாலைகளில் பங்கு வேண்டுமென்பதும் ஓவனுடைய கொள்கையாகும். அவன் இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் மாதிரித் தொழிற்சாலைகளும் குடியேற்றங்களும் ஏற்படுத்தி, அதில் ஏறக்குறைய வெற்றியும் பெற்றான். ஆனால், அவனால் தன்னுடைய சகோதர முதலாளிகளையோ அரசாங்கத்தையோ தன் வழிக்குத் திருப்ப முடியவில்லை. அவன் காலத்தில் அவனுடைய செல்வாக்கு அதிகமாயிருந்தது என்பதில் ஐயமில்லை. மேலும் அவன் 'அபேதவாதம்' (சோஷலிசம்) என்னும் சொல்லையும் வழக்குக்குக்

கொண்டு வந்தான். அச் சொல் பின்பு லட்சக்கணக்கானவர்களின் உள்ளத்தைக் கொள்ளைகொண்டு விட்டது.

இவையெல்லாம் நிகழ்ந்து வந்த சமயத்தில் முதலாளித்துவத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில் வளர்ந்துகொண்டே சென்றது. அதற்கு வெற்றிமேல் வெற்றி கிடைத்து வந்தது. அத்துடன் தொழிலாளர் பிரச்சினையும் வளர்ந்து வந்தது. முதலாளித்துவத்தின் பயனாக உற்பத்தி பெருகியது. உற்பத்தி பெருகவே ஜனத்தொகையும் அதிவேகமாகப் பெருகியது. ஏனெனில், அதிக உற்பத்தியினால் அதிக ஜனங்களுக்கு உணவு கொடுத்துப் போஷிக்கக் கூடிய நிலை ஏற்பட்டது. பெரிய வியாபாரங்கள் தோன்றின. அவற்றில் பல பிரிவுகளும் அப் பிரிவுகளுக்குள் நுட்பமான கூட்டுறவும் இருந்தன. அதே சமயத்தில் அவை சிறிய வியாபாரங்களின் போட்டியை அடியோடு நசுக்கிவிட்டன. இங்கிலாந்தில் ஐசுவரியம் ஆறுபோல் பெருக்கெடுத்தது. அதில் பெரும்பகுதியும் புதிய தொழிற்சாலைகளையும் ரயில்வேக்களையும் இன்னும் இவை போன்றவற்றையும் ஆரம்பிப்பதற்குப் பயன்பட்டது. தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்வதன்மூலம் தங்கள் நிலையை உயர்த்திக்கொள்ள முயன்றார்கள். ஆனால், அவ்வேலை நிறுத்தங்கள் பரிதாபகரமாகத் தோல்வியுற்றன. பின்னர் அவர்கள் உரிமை விண்ணப்பக் கிளர்ச்சியில் சேர்ந்தார்கள். ஆனால், அதுவும் 1848-ல் அடக்கப்பட்டது.

முதலாளித்துவத்தின் வெற்றி அனைவரையும் திகைக்கப் பண்ணியது. ஆயினும், முற்போக்குக் கொள்கைகளை உடைய சில தீவிர வாதிகளும் தயாள வாதிகளும் அதில் திருப்தி கொள்ளவில்லை. முதலாளித்துவத்தின் கழுத்தறுக்கும் போட்டியையும், அதன் கீழ்த் தேசத்தின் செல்வம் பெருகினாலும் தொழிலாளருக்கு

ஏற்படும் துன்பத்தையும் கண்டு அவர்கள் வருத்தமுற்றார்கள். இங்கிலாந்திலும், ஜெர்மனியிலும், பிரான்சிலும் அவர்கள் முதலாளித்துவத்துக்கு மாற்றாக இருக்கக்கூடிய பல ஏற்பாடுகளை ஆலோசித்துப் பார்த்தார்கள். பல யோசனைகள் கூறப்பட்டன. அவை அனைத்தும், 'அபேதவாதம்,' அல்லது 'கூட்டுத்தத்துவம்' (Collectivism), அல்லது 'அபேதவாத ஜனநாயகம்' என்கிற பெயர்களின் கீழ் அடக்கப்பட்டன. அம்மூன்றும் தெளிவற்ற முறையில் ஒன்றையே குறித்தன. தொழில்கள் தனி மனிதர்களின் உடைமையாகவும் தனி மனிதர்கள் வசத்திலும் இருப்பதுதான் தகராறுக்கு மூல காரணம் என்பதை அச்சீர்திருத்தவாதிகள் அனைவரும் ஒருமுகமாக ஒப்புக்கொண்டார்கள். அதற்குப்பதிலாக அவை அரசாங்கத்தின் உடைமையாகவும் அரசாங்கத்தின் வசத்திலும் இருப்பின் தொழிலாளர் சுரண்டப்படமாட்டார்கள். எல்லாம் இல்லாவிட்டாலும், நிலம், சில முக்கிய தொழில்கள் போன்ற உற்பத்தி சாதனங்களாவது அவ்வாறு இருக்கவேண்டும். ஆக, தெளிவற்ற முறையில், ஜனங்கள் முதலாளித்துவ முறைக்கு ஓர் மாற்றுக் காணமுயன்றார்கள். ஆனால், முதலாளித்துவ முறைக்கு அப்படி ஒன்றும் முடிந்துபோகிற எண்ணம் இல்லை. அது நாளுக்கு நாள் பலம் பெற்றுவந்தது.

சில அறிவாளிகளாலேயே அபேதவாதக் கொள்கைகள் தோற்றுவிக்கப்பட்டன. அவர்களில் ராபர்ட் ஓவன் ஒரு தொழிற்சாலை முதலாளியாகவும் இருந்தான். தொழிற் சங்க இயக்கம் சிறிது காலம் வரையில் பலவழிகளில் அபிவிருத்தி அடைந்தது. அது தொழிலாளருக்கு அதிகக் கூலியையும் சற்று நல்ல நிலைமைகளையுமே தேடிற்று. ஆனால், அபேதவாதக் கருத்துகள் இயற்கையாகவே தொழிற்சங்க இயக்கத்தைப் பெரிதும் பாதித்

தன; அதுவும் அபேதவாதத்தின் வளர்ச்சியைப் பெரிதும் பாதித்தன. தொழில் அபிவிருத்தியில் தலையான இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி ஆகிய மூன்று நாடுகளிலும், அந்தந்த நாட்டுத் தொழிலாளர் இயக்கத்தின் பலத்துக்கும் தன்மைக்கும் ஏற்ப வெவ்வேறு விதமாக அபேதவாதம் அபிவிருத்தி அடைந்தது. மொத்தத்தில், இங்கிலாந்தின் அபேதவாதம் பழைமைப் பற்றுள்ளதாகவும், பரிணாம முறைகளின் மூலம் பைய முன்னேறுவதில் நம்பிக்கை உடையதாகவும் இருந்தது. ஐரோப்பாக் கண்டத்தின் அபேதவாதம் தீவிரப் போக்கு வாய்ந்ததாகவும் புரட்சிகரமானதாகவும் இருந்தது. அமெரிக்காவில் நிலைமைகள் வேறு விதமாயிருந்தன. அதன் பரப்பு, தொழிலாளருக்கு அங்கிருந்த தேவை முதலியன காரணமாக, அமெரிக்காவில் நெடுங்காலம் வரையில் பலம் பொருந்திய ஒரு தொழிலாளர் இயக்கம் தோன்றி வளரவில்லை.

19-வது நூற்றாண்டின் இடையிலிருந்து, ஒரு தலைமுறை வரையில், பிரிட்டிஷ் தொழில்தான் உலகத்தின் மீது ஆதிக்கம் செலுத்தியது. அந்த லாபம் ஒருபுறம், இந்தியா முதலான சார்புநாடுகளைச் சுரண்டி அடைந்த லாபம் ஒருபுறம்; இவ்வாறு, பணம் பலவழிகளிலிருந்தும் வந்து இங்கிலாந்தில் குவிந்தது. இந்தக் குபேர சம்பத்தில் ஒரு பகுதி தொழிலாளருக்கும் சென்று சேர்ந்தது. அதனால், அவர்களுடைய வாழ்க்கைத்தரம் அவர்கள் கனவிலும் நினைக்காத அளவுக்கு உயர்ந்தது. சற்றுப் “பீச்” சென்றிருப்பவன் எப்போதுமே புரட்சி செய்யமாட்டான். ஆகவே, நல்ல நிலைமையை அடைந்துவிட்ட பிரிட்டிஷ் தொழிலாளர் தங்களுடைய பழைய புரட்சி நீர்மையை இழந்துவிட்டார்கள். பிரிட்டனின் அபேதவாதம் கூட மற்ற நாடுகளின் அபேதவாதத்தைக்

காட்டிலும் அதிக மிதவாதப் போக்குக் கொண்டதாக மாறியது. அது, ‘பேபியன் வாதம்’ என்று அழைக்கப்பட்டது. ‘பேபியன்’ என்னும் பெயருடைய பழைய ரோம சேனாதிபதி ஒருவன் தன் பகைவரை நேர்முகமாக எதிர்த்துச் சண்டை போடாமல் சிறிது சிறிதாகச் சளைக்க வைத்தான். ஆகவே, பேபியனின் தந்திரத்தைக் கையாண்ட பிரிட்டிஷ் அபேதவாதமும் ‘பேபியன் வாதம்’ என்று அழைக்கப்பட்டது. 1867-ல் இங்கிலாந்தில் வோட்டுரிமை இன்னும் விஸ்தரிக்கப்பட்டது. அதன் பயனாக நகரங்களில் வாழ்ந்த சில தொழிலாளருக்கும் வோட்டுரிமை கிடைத்தது. தேர்தலில் பிரிட்டிஷ் தொழிலாளரின் வோட்டுகள் பிரிட்டிஷ் லிபரல் கட்சிக்கு அளிக்கப்பட்டன வென்றால், பிரிட்டிஷ் தொழிற்சங்கங்கள் எவ்வளவு பணம்படைத்தனவாகவும் நல்ல பிள்ளைகளாகவும் இருந்திருக்கவேண்டும் என்று நீயே ஊகித்துக்கொள்.

இங்கிலாந்து சீரும் செழிப்பும் உற்றுச் சுகமாகவும் திருப்தியாகவும் வாழ்க்கை நடத்திவந்த காலத்தில் ஐரோப்பாக் கண்டத்தில் ஒரு புதிய கொள்கை தோன்றி வளர்ந்தது. பலர் அதை உற்சாகமாகவும் தீவிரமாகவும் ஆதரித்தார்கள். அதுதான் அராஜகவாதம். அதைப் பற்றி ஒன்றும் தெரியாத அநேகர் அதைக் கேட்ட மாத்திரத்தில் கூசிக்குலைந்தார்கள். ஒரு அராஜக சமூகத்தில் மத்திய அரசாங்கம் என்பது அதமபட்சமாகவே இருக்கும்; அதில் தனி மனிதர்களுக்கு ஏராளமான சுதந்திரம் உண்டு. அராஜக வாதியின் லட்சியம் மிகமிக உன்னதமானது. ‘பிறர் நயத்தையும், கட்டுப்பாட்டையும், தாமாகவே பிறர் உரிமைகளை மதித்து நடத்தலையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு பொது நலக் கூட்டுறவே’ அந்த லட்சியமாகும். அரசாங்கம்

என்பது யாரையும், பலாத்காரமோ நிர்ப்பந்தமோ செய்யக் கூடாது. 'எந்த அரசாங்கம் அரசாளுவதே இல்லையோ அதுவே சிறந்த அரசாங்கமாகும். மனிதர்கள் அத்தகைய அரசாங்கத்தை ஏற்றுக்கொள்ளத் தயாரா யிருக்கும்போது அவர்கள் அதை அடைவார்கள்' என்று அமெரிக்க ஆசிரியராகிய தோரோ கூறுகிறுர்.

ஒவ்வொருவருக்கும் பூரண சுதந்திரம், ஒவ்வொரு வனும் பிறன் உரிமையை மதித்து நடக்கவேண்டியது, ஒவ்வொருவனும் தன்னயம் ஒழிந்து பிறர் நயம் பேண வேண்டியது, அனைவரும் மனமொத்துக் கூடிவாழ வேண்டியது—இது மிகவும் உயர்ந்த லட்சியம் என்பதில் ஐயமில்லை. ஆனுல், சுயநலமும் பலாத்காரமும் நிறைந்த நமது தற்கால உலகம் இன்னும் அதற்கு வெகு தூரத்தில் இருக்கிறது. அரசாங்கமே கூடாது, அதவா இருந்தாலும் அதம பட்சமாகத்தான் இருக்கவேண்டும் என்னும் அராஜகவாதியின் கூற்றுக்கு, ஜனங்கள் நெடுங் காலமாக யதேச்சாதிகார அரசாங்கங்களின் கீழ்க் கஷ்டப்பட்டு வந்ததே காரணமாயிருக்கவேண்டும். அரசாங்கங்கள் ஜனங்களை நசுக்கி மிதித்தும், வெரு வந்த செய்தும், கொடுங்கோல் ஓச்சியும் வந்துள்ளன; ஆகவே, இவ்வுலகில் அரசாங்கங்களே இல்லாமலிருக் கட்டும் என்று அராஜகவாதி நினைத்தான். மேலும், சில அபேதவாத ஏற்பாடுகளின் கீழும், உற்பத்தி சாதனங்களை யெல்லாம் தன்வசத்தில் கொண்டுள்ள அரசாங்கமே யதேச்சாதிகாரமாக நடப்பது சாத்தியம் என்றும் அவன் நினைத்தான். ஆகவே, அராகஜவாதியை யும் ஒருவித அபேதவாதி என்றே சொல்லவேண்டும். ஆனுல், அவன் தனி மனிதர் சுதந்திரத்தையும், ஸ்தல சுதந்திரத்தையும் அதிகமாக வற்புறுத்தினுன். இதற்கு மாருக, அபேதவாதிகளில் பலர் அராஜகக் கொள்கையை

ஒரு தூரலட்சியமாக ஒப்புக் கொள்வதற்குத் தயாரா யிருந்தார்கள்; ஆனுல், சிலகாலம் வரையில் அபேதவாத முறையின் கீழ் ஒரு பலம் பொருந்திய மத்திய அரசாங்கம் இருக்கவேண்டியது அவசியம் என்று அவர்கள் அபிப் பிராயப்பட்டார்கள். ஆக, அபேதவாதத்துக்கும் அராஜகவாதத்துக்கும் வேற்றுமை பெரிதாயிருந்தாலும், இரண்டிற்கும் பல அம்சங்கள் பொதுவாயிருப்பதைக் காண்கிறேம்.

நவீன தொழில்முறை கட்டுப்பாடான ஒரு தொழி லாளர் வர்க்கத்தைத் தோற்றுவித்தது. கட்டுப்பாடான ஒரு இயக்கமாக இருப்பதென்பது அராஜகத்தின் இயற்கைக்கே விரோதம். ஆகவே, தொழிற்சங்கங்கள் போன்ற இயக்கங்கள் தோன்றி வளர்ந்த தொழி லபிவிருத்தி மிக்க நாடுகளில் அராஜகக் கருத்துகள் பரவு வதற்கு இடமில்லை. இங்கிலாந்தில் இருந்த அராஜக வாதிகளை விரல்விட்டு எண்ணிவிடலாம். ஜெர்மனியி லும் அவ்வாறே. ஆனுல், தொழிலபிவிருத்தியில் பிற் பட்ட தென், கீழ் ஐரோப்பாவில் நிலைமை வேறுவிதமா யிருந்தது. அங்கே அராஜகக் கருத்துகள் செழித்தோங் கின. நவீன தொழில் பரவ ஆரம்பித்ததும் அங்கும் அராஜகக் கொள்கை பலவீனமுற்றது. இன்றைய தினம் அது பெரும்பாலும் வழக்கொழிந்து மாண்டுபோய் விட்டது என்றே சொல்லவேண்டும். ஆனுல், இன்று கூட, ஸ்பெயின் போன்ற தொழில்மயமாகாத ஒரு நாட்டில் அது தலைகாட்டிக் கொண்டுதான் இருக் கிறது.

ஒரு லட்சியம் என்கிற முறையில் அராஜகவாதம் மிகவும் சிறந்ததாயிருக்கலாம். ஆனுல், அதன் நிழலில், அதிருப்திகொண்டோர் ஆத்திரம் மிக்கோர் மட்டு மின்றிச் சுயநலமிகளும் வந்து சூழ்ந்தார்கள். அவர்கள்

அந்த லட்சியப் போர்வையின் கீழ் மறைந்துகொண்டு தங்களுடைய சொந்த நன்மையை வளர்த்துக்கொள்ள முயன்றார்கள். மேலும், அராஜகம் ஒருவிதமான பலாத்காரத்திலும் கொண்டுவிட்டது. ‘அராஜகம்’ என்று எண்ணும்போது பலருக்கும் அந்தப் பலாத்காரம்தான் நினைவுக்கு வருகிறது. அதனால் அராஜகத்தின் நற்பெயருக்கே ஒரு களங்கம் ஏற்பட்டுவிட்டது. அராஜகவாதிகளால் தாங்கள் விரும்பியபடி சமூகத்தை மாற்றி அமைக்கப் பெரிய அளவில் ஏதும் செய்ய முடியவில்லை. ஆகவே, அவர்களில் சிலர் புதுமுறையான பிரசாரம் ஒன்றைத் தொடங்கினார்கள். அது ‘கிரியாம்சைப் பிரசாரம்’ என்று அழைக்கப்பட்டது. அது ஒருவன் தன்னுடைய உயிரையே தியாகம் செய்து கொடுங்கோன்மையைத் தீரமாக எதிர்ப்பதன்மூலம் லட்சியத்தை வளர்ப்பதாகும். இந்த எண்ணத்துடன் பல இடங்களில் பல எழுச்சிகள் தோன்றின. எழுச்சிகளில் கலந்துகொண்டவர்கள் அச்சமயத்தில் யாதொரு வெற்றியையும் எதிர்பார்க்கவில்லை. தங்களுடைய லட்சியத்துக்காகப் புதுமுறையில் பிரசாரம் செய்ய வேண்டி அவர்கள் தங்கள் உயிரை மனமுவந்து பணயம் வைத்தார்கள். அவ்வெழுச்சிகள் உடனே அடக்கப்பட்டன. அதற்குப்பின் அராஜகவாதிகள் தனி முறையில் வெடிகுண்டெறிதல், அரசர்களையும் பெரிய அதிகாரிகளையும் சுட்டுக் கொல்லுதல் போன்ற பயங்கரச் செயல்களில் ஈடுபட்டார்கள். இந்த முட்டாள்தனமான பலாத்காரம் அவர்களுடைய பலவீனத்துக்கும் நிர்க்கதியான நிலைமைக்குமே அடையாளம் என்பது தெளிவு. சிறிது சிறிதாக, 19-வது நூற்றாண்டின் அந்தியத்தில், அராஜக இயக்கம் மங்கி மறைந்து விட்டது. முன்னணி அராஜகவாதிகள் பலர் வெடிகுண்டெறிவதையும் ‘கிரியாம்சைப்

பிரசார’த்தையும் ஒப்புக்கொள்ளவில்லை. அவர்கள் அம்முறைகளை மறுத்தார்கள்.

அராஜகவாதிகளில் நன்கு தெரிந்த சிலருடைய பெயர்களை உனக்குக் கூற விரும்புகிறேன். அராஜகத் தலைவர்களில் பலர் தங்களுடைய சொந்த வாழ்க்கையில் இனிமையான இயல்பும், நெறி பிறழா மாண்பும், பிறர் காமுறும் தன்மையும் வாய்ந்திருந்தார்கள் என்று அறிய நாம் வியப்புறுகிறோம். அராஜகத் தலைவர்களில் முந்தியவன் பியர்புரோதான் என்னும் பிரெஞ்சுக்காரன் (1809–1865). மைக்கேல் பகுனின் என்னும் ருஷியப் பிரபு அவனைவிடச் சற்று வயதில் குறைந்தவன். அவன் தென் ஐரோப்பாவில் பிரபல தொழிலாளர் தலைவனாயிருந்தான். அவனுக்கும் கார்ல் மார்க்சுக்கும் அபிப்பிராயபேதம் ஏற்படவே, கார்ல் மார்க்ஸ் பகுனினையும் அவனைப் பின்பற்றுவோரையும் தான் நிறுவிய சர்வதேச சங்கத்திலிருந்து துரத்திவிட்டான். மூன்றாவதாக பீட்டர்குரோபாட்கின் என்பவனைச் சொல்லவேண்டும். அவனைப் பற்றிப் பேசுகையில் நாம் தற்காலத்துக்கே வந்துவிடுகிறோம். அவனும் ஒரு ருஷியன்தான். ராஜவம்சத்தைச் சேர்ந்த அவன் அராஜகம் முதலிய விஷயங்களைப்பற்றிச் சில அருமையான நூல்கள் எழுதியுள்ளான். என்ரிகோ மாலடெஸ்டா என்னும் இதாலியனின் பெயரைத்தான் நான் இங்கே கடைசியாகச் சொல்லப் போகிறேன். அவன் 80 ஆண்டுகளுக்குமேல் ஜீவித்திருந்தான். 19-வது நூற்றாண்டின் பிரபல அராஜகவாதிகளில் அவனே கடைசியாக எஞ்சி நின்றவன்.

மாலடெஸ்டாவைப் பற்றிச் சுவாரசியமான கதை ஒன்று உண்டு. அதை நான் உனக்கு அவசியம் சொல்ல வேண்டும். இதாலியில் அவனை ஒரு கோர்ட்டில் குற்ற

வாளியாகக் கொண்டுவந்து நிறுத்தினார்கள். அந்தப் பிராந்தியத் தொழிலாளரிடையே மாலடெஸ்டாவுக்குப் பெரிய செல்வாக்கு இருக்கிறதென்றும், அது அவர்களுடைய குணத்தையே அடியோடு மாற்றி விட்டதென்றும் கவர்ன்மெண்டு பிராசிகூடர் வாதித்தார். மாலடெஸ்டா செய்துவரும் வேலையினால் குற்றம் புரியும் சுபாவமே மறைந்து குற்றங்கள் மிகவும் குறைந்து வந்தன. யாரும் குற்றம் செய்யாவிட்டால் கோர்ட்டுகளுக்கு வேலை ஏது? ஆகவே, மாலடெஸ்டாவை ஜெயிலுக்கு அனுப்பவேண்டும். இதுதான் கவர்ன்மெண்டு தரப்புவாதம்! இதை ஏற்றுக்கொண்டு கோர்ட்டார் அவர்கள் மாலடெஸ்டாவுக்கு ஆறுமாதச் சிட்சை அளித்தார்கள்.

துரதிருஷ்டவசமாக அராஜகவாதம் பெரும்பாலும் பலாத்காரத்துடன் சேர்த்து எண்ணப் படுகிறது. அராஜகவாதம் என்பது நல்லோர் பலருடைய இருதயத்தைக் கவர்ந்த ஒரு உயரிய தத்துவம், சிறந்த லட்சியம் என்பதை ஜனங்கள் மறந்துவிட்டார்கள். ஒரு லட்சியம் என்கிற முறையில் அது நமது கோதுநிறைந்த தற்கால உலகினின்று இன்னும் நெடுந் தொலைவிலேயே இருக்கிறது. நமது தற்கால நாகரிகத்தின் சிக்கல்களை அராஜகம் காட்டும் எளிய மாற்றுகளைக் கொண்டு தீர்ப்பது இயலாத காரியம்.

133

கார்ல் மார்க்சும் தொழிலாளர் ஸ்தாபனங்களின் வளர்ச்சியும்

பிப்ரவரி 14, 1933.

19-வது நூற்றாண்டின் நடுவில், ஐரோப்பியத் தொழிலாளர் உலகத்திலும் அபேதவாத உலகத்திலும் நமது உள்ளத்தைக் கவரும் புதிய மனிதன் ஒருவன் தோன்றினான். அவன் தான் கார்ல் மார்க்ஸ். அவனுடைய பெயர் இக்கடிதங்களில் முன்பே வந்துள்ளது. அவன் ஒரு ஜெர்மன் யூதன். அவன் ஜனனமான வருஷம் 1818. அவன் சட்டம், சரித்திரம், தத்துவ சாஸ்திரம் மூன்றையும் கசடறக் கற்றான். அவன் வெளியிட்ட ஒரு பத்திரிகை விஷயமாக அவனுக்கும் ஜெர்மன் அதிகாரிகளுக்கும் தகராறு ஏற்பட்டது. அவன் பாரிசுக்குப் போனான். அங்கே அவனுக்குப் புதிய மனிதர்கள் பரிச்சயமானார்கள். அபேதவாதம், அராஜகவாதம் ஆகிய பொருள் பற்றிய புது நூல்களை அங்கே அவன் படித்தான். அவனுடைய மனம் அபேதவாதத்தைத் தழுவியது. பாரிசில் பிரடெரிக் எஞ்செல்ஸ் என்னும் இன்னொரு ஜெர்மானியனை மார்க்ஸ் சந்தித்தான். எஞ்செல்ஸ் இங்கிலாந்தில் குடியேறி அங்கு ஒரு பெரிய பஞ்சாலை முதலாளியாக இருந்தான். எஞ்சல்சும் அக்காலச் சமூக நிலைமைகளில் அதிருப்தியும் துயரமும் கொண்டிருந்தான். அவனுடைய மனம் அவனைச் சுற்றிக் காணப்பட்ட ஏழ்மையையும் சுரண்டலையும் ஒழிக்கும் உபாயங்களை நாடிக்கொண்டிருந்தது. ராபர்ட் ஓவனின் கருத்துகளும், சீர்திருத்த முயற்சிகளும் எஞ்சல்சைப் பெரிதும் கவர்ந்தன. ஓவனைப்

பின்பற்றுவோரில் அவனும் ஒருவன் ஆனுன். பாரிசில் தான் அவன் முதல் முதல் கார்ல் மார்க்சைச் சந்தித் தான். அந்தச் சந்திப்பு அவனுடைய வாழ்க்கையிலும் மாறுதலை உண்டாக்கியது. அதிலிருந்து மார்க்சும் எஞ்சல் சும் இணைபிரியாத் தோழர்கள் ஆயினர். அவர்கள் கருத் தொருமித்து ஒரே லட்சியத்துக்காக முழு மனதோடும் உழைக்க ஆரம்பித்தார்கள். வயதிலும் அவர்கள் ஒரு வரை யொருவர் ஒத்திருந்தனர். அவர்கள் வெளியிட்ட நூல்களுள் பெரும்பாலானவை அவர்கள் இருவரும் சேர்ந்தே இயற்றியனவாகும். அவர்களுக்குள் அவ் வளவு ஒற்றுமை இருந்தது.

அப்பொழுது பிரான்சை லூயி பிலிப் ஆண்டுகொண் டிருந்தான். அவனுடைய அரசாங்கம் மார்க்சைப் பாரிசை விட்டு வெளியேற்றியது. அவன் லண்டனுக் குச் சென்ருன். அங்கே அவன் பல வருஷங்கள் வரை யில் பிரிட்டிஷ் மியூசியத்திலுள்ள புஸ்தகங்களில் ஆழ்ந்து கிடந்தான். அவன் வருந்தி முயன்று தன்னு டைய சித்தாந்தங்களை உருவாக்கியும் அவற்றைப் பற்றி எழுதியும் வந்தான். ஆயினும், அவனை வெறும் பண்டி தன் என்ருே வாய்ப் பந்தல் போடும் தத்துவ சாஸ்திரி என்ருே கூறுவதற்கில்லை. அவன் லௌகிக விவகாரங் களில் தொடர்பற்றவனுய் வெறும் மானச உலகில் சஞ் சரிக்கவில்லை. அபேதவாத இயக்கத்தின் தெளிவற்ற தத்துவங்களை அவன் சிக்கறுத்துத் தெளிவு படுத்தி விருத்தியும் செய்தான். அவ்வியக்கத்துக்கு அவன் ஐயந்திரிபுக்கிடமின்றித் தெளிவாக வரையறை செய்யப் பட்ட கருத்துகளையும் லட்சியங்களையும் அளித்தான். அதே சமயத்தில், அவ்வியக்கத்தை உருவாக்கும் முயற்சி யிலும், தொழிலாளரை ஒரு ஸ்தாபனத்தின் கீழ் ஒன்று திரட்டும் முயற்சியிலும் அவன் முதன்மையாகவும் மும்

முரமாகவும் ஈடுபட்டான். ஐரோப்பாவின் புரட்சி ஆண்டாகிய 1848-ம் ஆண்டில் நிகழ்ந்த சம்பவங்கள் அவனைப் பெரிதும் பாதித்தன. அவ்வருஷம் அவனும் எஞ்சல்சும் கூட்டாக ஒரு அறிக்கை வெளியிட்டார்கள். அவர்கள் வெளியிட்ட அப் 'பொது உடைமைக் கொள்கை அறிக்கை' யானது மிகவும் பிரசித்தி பெற்றதாகும். அவர்கள் அவ்வறிக்கையில், பிரெஞ்சுப் புரட்சிக்கும் 1830, 1848-ம் வருஷக் கலகங்களுக்கும் ஆதாரமாயிருந்த கருத்துகளை எடுத்து விவாதித்து, அவை எவ்வாறு அக் கால நிலைமைகளுக்குப் பொருந்தாதனவாகவும் போதா தனவாகவும் இருந்தன என்பதைச் சுட்டிக்காட்டினுர்கள். அக்காலத்தில் வழங்கிய 'சுதந்திரம், சமத்துவம், சகோத ரத்துவம்' என்னும் ஜனநாயகக் கருத்துகளை அவர்கள் குறை கூறினுர்கள். அவற்ருல் ஜனங்களுக்கு யாதொரு உருப்படியான பலனும் கிடையாதென்றும், அவை பூர்ஷுவா அரசாங்கத்தின் தீமைகளை மறைப்பதற் குரிய போர்வையாகவே இருக்கின்றன என்றும் அவர்கள் விளக்கிக் காட்டினுர்கள். அப்புறம் அவர்கள் தங்க ளுடைய அபேதவாதக் கொள்கையைச் சுருக்கமாக எடுத்துக்கூறிக் கீழ்க்கண்டவாறு அவ்வறிக்கையை முடித்திருந்தார்கள்: "உலகத் தொழிலாளர்களே, ஒன்று படுங்கள்! உங்களைப் பிணித்து நிற்கும் தளைகளைத் தவிர வேறு ஒன்றும் உங்களுக்கு நஷ்டமாகப் போவதில்லை. இவ்வுலகம் முழுதும் உங்களை அடையக் காத்திருக் கிறது."

இந்த வேண்டுகோள் தொழிலாளரைச் செயலில் இறங்க அழைக்கும் சங்கநாதமாயிருந்தது. அதைத் தொடர்ந்து மார்க்ஸ் பத்திரிகைகள் மூலமாகவும், துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும் இடைவிடாது பிர சாரம் செய்து வந்தான். தொழிலாளர் ஸ்தாபனங்

களை ஒன்றுபடுத்தும் முயற்சிகளிலும் அவன் ஈடுபட்டான். ஐரோப்பாவில் ஒரு பெரிய நெருக்கடி நேரப் போகிறது என்று அவன் நினைத்ததாகத் தெரிகிறது. தொழிலாளர் அதற்குத் தயாராக இருக்க வேண்டும் என்றும், அவர்கள் அதைப் பூராவும் பயன் படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவன் விரும்பினான். அவனுடைய அபேதவாத சித்தாந்தப்படி, முதலாளித்துவ முறையின்கீழ் நெருக்கடி கட்டாயம் ஏற்பட்டே தீரவேண்டும் என்று அவன் நம்பினான். 1854-ல், ஒரு நியூயார்க் பத்திரிகையில் மார்க்ஸ் பின்வருமாறு எழுதியிருந்தான் :

"ஐரோப்பாவில் ஆறுவது வல்லரசு ஒன்று இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. சில சமயங்களில், அது மற்ற ஐந்து 'வல்லரசு'களையும் அடக்கி ஆளுகிறது. அதைக் கண்டு மற்ற வல்லரசுகள் நடுங்குகின்றன. புரட்சிதான் அந்த ஆறுவது வல்லரசு. நெடுங்காலம் அது ஒதுங்கி வாழ்ந்து வந்தது. நெருக்கடியும் பட்டினியும் அதை மீண்டும் போர்க்களத்துக்குக் கூவி அழைக்கின்றன.........ஒரு சமிக்ஞை செய்ய வேண்டியதுதான் தாமதம். உடனே அது போர்க்கோலம் பூண்டு யுத்தத்துக்குப் புறப்பட்டு விடும். ஒலிம்ப மலை உச்சியில் தோன்றும் 'மினர்வா' என்னும் யுத்த தேவதை போன்று அது மார்பில் கவசம் தரித்துக் கையில் வாளேந்திப் போருக்குப் புறப்படும். வரப்போகிற ஐரோப்பிய யுத்தமே அந்தச் சமிக்ஞையாகும்."

ஐரோப்பாவில் அதிசீக்கிரத்திலேயே புரட்சி தோன்றப் போகிறது என்று மார்க்ஸ் கூறிய தீர்க்க தரிசனம் பலிக்கவில்லை. அறுபது ஆண்டுகள் சென்ற பின்பே அவன் கூறிய புரட்சி தோன்றியது. அதைத் தோற்றுவிப்பதற்கும் ஒரு உலகயுத்தம் அவசியமாயிருந்தது. அவ்வாறு தோன்றிய புரட்சியும் ஐரோப்பாவின் ஒரு பாகத்தில்தான் தோன்றியது. 1871-ல் செய்யப்பட்ட புரட்சி முயற்சியான பாரிஸ் கம்யூன் நிர்த்தாட்சணியமாக நசுக்கப்பட்டதை நாம் ஏற்கெனவே பார்த்தோம்.

1864-ல், லண்டனில் மார்க்சுக்கும் பத்துப் பேர் சேர்ந்தார்கள். அந்தப் பத்துப் பேரும் பத்துவிதமாயிருந்தார்கள். அவர்கள் அனைவரும் தங்களை அபேதவாதிகள் என்று அழைத்துக் கொண்டார்கள். ஆனால், அவர்கள் வேறு வேறான பல கோஷ்டிகளைச் சேர்ந்தவர்கள். ஒருபக்கம் ஜனநாயகவாதிகளும் தேசியவாதிகளும் இருந்தார்கள். அவர்கள் அந்நிய ஆட்சிக்குட்பட்ட ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்தவர்கள். அபேதவாதம் என்பதெல்லாம் அவர்களுக்கு வெகுதூரத்திலுள்ள ஒரு லட்சியமாகவே இருந்தது. தங்களுடைய நாட்டுக்கு உடனடியாகச் சுதந்திரம் பெறுவதில்தான் அவர்கள் அதிக அக்கறை கொண்டிருந்தார்கள். இன்னொருபக்கம் அராஜகவாதிகள். அவர்கள் உடனே போர்தொடங்கவேண்டுமென்று துடித்துக்கொண்டிருந்தார்கள். அக்கூட்டத்தில் மார்க்சைப்போல் பகுனின்என்னும் அராஜகத்தலைவனும் பிரபலமாயிருந்தான். அவன் பல வருஷங்கள் சைபீரியாவில் சிறைவாசம் அனுபவித்தபிறகு மூன்று வருஷங்களுக்கு முன்புதான் அங்கிருந்து தப்பித்துக்கொண்டு வந்தான். அவனைப் பின்பற்றுவோர் பெரும்பாலும் தொழில் அபிவிருத்தியில் பிற்போக்கான தென் ஐரோப்பாவையும், இதாலி, ஸ்பெயின் போன்ற லத்தீன்நாடுகளையும் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். அவர்கள் வேலையில்லாத அறிவாளிகளும், சமூகத்தில் இடம்பெறாத சில்லறைப் புரட்சிக்காரரும் ஆவர். மார்க்சைப் பின்பற்றுவோர் தொழிலபிவிருத்திமிக்க நாடுகளை, முக்கியமாக

ஜெர்மனியைச் சேர்ந்தவர்கள். அந்நாடுகளில் தொழிலாளர் சற்று நல்ல நிலைமையில் இருந்தார்கள், ஆகவே, மார்க்ஸ் வளர்ந்து வருகிற, கட்டுப்பாடான, சற்று நல்ல நிலைமையிலுள்ள தொழிலாளர் வர்க்கத்தின் பிரதிநிதியாகவும், பகுனின் கட்டுப்பாடற்ற ஏழைத் தொழிலாளருக்கும் அறிவாளிகளுக்கும் அதிருப்திகொண்டோருக்கும் பிரதிநிதியாகவும் விளங்கினார்கள். காரியத்தில் இறங்க வேண்டிய காலம் வரும்வரையில், பொறுமையுடன் இருந்து தொழிலாளர் ஸ்தாபனத்தை வலுப்படுத்தியும் அவர்களுக்கு அபேதவாதக் கொள்கைகளை நன்குபுகட்டியும் வரவேண்டும் என்பது மார்க்சின் கட்சி. பகுனினும் அவனைச் சேர்ந்தவர்களும் உடனே காரியத்தில் இறங்க வேண்டுமென்று குதித்தார்கள். இதில் பொதுவாக மார்க்சே வெற்றிபெற்றான். அவன் 'சர்வதேசத் தொழிலாளர் சங்கம்' (International Working-Men's Association) ஒன்றை நிறுவினான். அத்தொழிலாளர் சங்கங்கள் 'இன்டர் நாஷனல்'கள் (Internationals) என்று அழைக்கப்பட்டன. மார்க்ஸ் நிறுவியதுதான் முதல் 'இன்டர் நாஷனல்' ஆகும்.

மூன்று வருஷம் கழித்து, 1867-ல் 'மூலதனம்' (Das Kapital or 'Capital') என்னும் தன்னுடைய மூல கிரந்தத்தைக் கார்ல் மார்க்ஸ் ஜெர்மன் மொழியில் எழுதி வெளியிட்டான். அவன் லண்டனில் பல ஆண்டுகளாக உழைத்த உழைப்பின் பயனே அந்நூலாகும். அவன் அந்நூலில் அக்காலத்து வழங்கிய பொருளியல் சித்தாந்தங்களையெல்லாம் பூர்வபட்சம் செய்து தன்னுடைய சித்தாந்தமான அபேதவாதத்தை நன்கு விளக்கி நிலைநாட்டி யிருந்தான். அந்நூல் முழுவதும் சுத்த விஞ்ஞான பூர்வமான ஆராய்ச்சியே அடங்கியுள்ளது. சரித்திரம், பொருளியல் ஆகியவற்றின்

வளர்ச்சியை அவன் விருப்பு வெறுப்பின்றி விஞ்ஞான ரீதியில் ஆராய்ந்திருந்தான். அவனுடைய வாதத்தில் மயக்க உரைகளையோ கற்பித உரைகளையோ காண முடியாது. முக்கியமாக, யந்திரத் தொழில் நாகரிகத்தை அவன் அலசி ஆராய்ந்திருந்தான். அதன் பயனாக அவன் பரிணாமம், சரித்திரம், மனித சமூகத்திலுள்ள வர்க்கப் போராட்டம் ஆகியவை பற்றித் தான் கண்ட தீர்க்கமான முடிவுகளை எடுத்துக் கூறினான். இவ்வாறு, அறிவுக்குப் பொருந்திய வாதங்களின் துணை கொண்டு, ஐயந்திரிபுக்கு இடமின்றி மார்க்ஸ் நாட்டிய அபேதவாத சித்தாந்தம் 'விஞ்ஞான ரீதியான அபேதவாதம்' என்று அழைக்கப்படுகிறது. அது வரை வழக்கிலிருந்த தெளிவற்ற அபேதவாதம் 'கற்பனை அல்லது பாவனை' (Utopian or Idealistic) உலகைச் சேர்ந்ததாகவே இருந்தது. மார்க்ஸ் எழுதிய 'மூலதனம்' என்னும் நூல் எளிதில் படித்தறிய முடியாதது. பொழுது போக்காகப் படிக்கலாம் என்னும் எண்ணத்துடன் அந்நூலைக் கையில் எடுப்பவர்கள் ஏமாற்றம்தான் அடைவார்கள். ஆயினும், அது, பெருவாரியான மக்களின் சிந்தனை உலகில் தம் பிரபாவத்தைப் பரப்பி, அவர்களுடைய லட்சியத்தையே அடியோடு மாற்றி, அவர்களுடைய வாழ்க்கையையே புது முறையில் ஆக்குவித்த ஒருசில பெரு நூல்களின் வரிசையில் வைத்து எண்ணத் தகுந்த பெருமை சான்றதாகும்.

1871-ல் பாரிஸ் கம்யூன் வீழ்ச்சியுற்றது. அதுதான் புத்திபூர்வமான முதல் அபேதவாதப் புரட்சியாகும். அதைக் கண்டு ஐரோப்பிய அரசாங்கங்கள் அனைத்தும் துணுக்குற்றன. அவை தொழிலாளர் இயக்கத்தை முன்னையினும் கடுமையாகத் தாக்க ஆரம்பித்தன. அதற்கு அடுத்த வருஷம், மார்க்ஸ் நிறுவிய தொழி

லாளர் 'இன்டர்நாஷனல்' கூடியது. அவன் பிரயத்தனப்பட்டு அதன் தலைமைக் காரியாலயத்தை நியூயார்க்குக்கு மாற்றினான். பகுனினைப் பின்பற்றும் அராஜகவாதிகளை ஒழிப்பதற்காக மார்க்ஸ் அவ்வாறு செய்திருக்கலாம். மேலும், பாரிஸ் கம்யூனிடத்துக் கோபங் கொண்டுள்ள ஐரோப்பிய அரசாங்கங்களை விட அமெரிக்கா நல்ல இடம் என்று அவன் கருதியிருக்கலாம். ஆனால், தன்னுடைய நாடிப் பிரதேசங்களிலிருந்து நெடுந்தூரம் நீங்கி உயிர் வாழ்வதென்பது 'இன்டர்நாஷன'லுக்குச் சாத்தியமில்லாது போய்விட்டது. அதற்கு உயிர் நிலை ஐரோப்பா. ஐரோப்பாவிலேயே தொழிலாளர் இயக்கம் திணறிக்கொண்டிருந்தது. இந்த நிலையில் முதல் 'இன்டர்நாஷனல்' சிறிது சிறிதாக மாண்டொழிந்தது.

மார்க்சியம் அல்லது மார்க்சின் அபேதவாதக் கொள்கையானது ஐரோப்பிய அபேதவாதிகளிடையே பரவியது. முக்கியமாக, ஜெர்மனியிலும் ஆஸ்திரியாவிலும் அது பரவியது. இங்கிலாந்து அவ்வளவாக அதை விரும்பி ஏற்கவில்லை. அது கொழித்த கொழிப்பில் முற்போக்கான அபேதவாதக் கொள்கை எதையும் கண் விழித்து நோக்கும் நிலையில் இல்லை. பேபியன் சங்கம் பிரிட்டிஷ் அபேதவாதத்தின் பிரதிநிதியாக விளங்கியது. அவர்களுடைய திட்டம் மிகுந்த மிதவாதப் போக்குக் கொண்டதாகவும் வெகு காலத்துக்குப் பின் மாறுதலை எதிர்பார்ப்பதாகவும் இருந்தது. பேபியன் சங்கத்தாருக்கும் தொழிலாளருக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது. மிகுந்த தாராள நோக்குடைய அறிவாளிகளே அச்சங்கத்தில் சேர்ந்திருந்தார்கள். ஆதியில் ஜார்ஜ் பர்னார்டுஷாவும் அதில் அங்கத்தினராயிருந்தவர் தான். அச் சங்கத்தின் இன்னொரு அங்கத்தினரான

சிட்னிவெப் என்பவர் பிரயோகித்த "சிறிது சிறிதாகத்தான் முன்னேற முடியும்" என்கிற வாசகம் மிகவும் பிரசித்தி பெற்றதாகும். அதிலிருந்து பேபியன் சங்கத்தின் கொள்கையை நாம் எளிதில் ஊகித்துக் கொள்ளலாம்.

பிரான்சில் பாரிஸ் கம்யூன் அடக்கப்பட்ட பிறகு, அபேதவாதம் மீண்டும் தலையெடுப்பதற்குப் பன்னிரண்டு ஆண்டுகள் பிடித்தது. ஆனால், அங்கே அது ஒரு புதிய வடிவத்தை எய்தியது. அராஜகவாதமும் அபேதவாதமும் சேர்ந்து பெற்ற ஒரு கலப்புவாதமாக அது இருந்தது. அது 'சிண்டிகலிசம்' (Syndicalism) என்று அழைக்கப்பட்டது. 'சிண்டிகேட்' (Syndicate) என்னும் பிரெஞ்சு வார்த்தைக்குத் தொழிலாளர் ஸ்தாபனம் அல்லது தொழிற்சங்கம் என்பது பொருள். ஆகவே, 'சிண்டிகலிசம்' என்பது 'தொழிற் சங்கப் பொது உடைமை வாதம்' என்று பொருள்படுகிறது. அதன் அடிப்படையான சித்தாந்தம் வருமாறு: 'அரசாங்கம் என்பது சமூகம் முழுதுக்கும் பிரதிநிதியாயுள்ளது. ஆகவே, நிலம், தொழிற்சாலைகள் போன்ற உற்பத்தி சாதனங்கள் அரசாங்கத்துக்குச் சொந்தமாகவும் அதன் ஆதிக்கத்திலும் இருக்கவேண்டும்.' ஆனால், இந்தப் பொது உடைமையை எவ்வளவு தூரம் கொண்டுபோவது என்பது பற்றிச் சிறிது அபிப்பிராயபேதம் இருந்தது. தொழிற் கருவிகள், வீட்டு வேலைக்கு உபயோகப்படும் யந்திரங்கள் போன்ற சில தனிப்பட்ட சொத்துகளைப் பொது உடைமையாக்குவது அறிவுடைமையாகாது. ஆனால், பிறருடைய உழைப்பைக்கொண்டு தனிப்பட்டவர் லாபம் அடையக்கூடிய யாவற்றையும் பொது உடைமையாக்க வேண்டும், அதாவது, அரசாங்கத்தின் உடைமையாக்க வேண்டும் என்பதில் அபேதவாதி

களிடையே அபிப்பிராயபேதம் இல்லை. அராஜகவாதிகளைப் போலவே தொ. ச. பொ. உ. வாதிகளுக்கும் அரசாங்கத்தைக் கண்டால் ஆகவில்லை. அவர்கள் அரசாங்கத்தின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தவே முயன்றார்கள். ஒவ்வொரு தொழிலும் அதற்குரிய தொழிற் சங்கத்தின் ஆதிக்கத்தில் இருக்கவேண்டுமென்பது அவர்களுடைய கொள்கை. இவ்வாறு, எல்லாத் தொழில்களுக்கும் உரிய சங்கங்கள் ஒரு பொதுச் சபைக்குத் தங்களுடைய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்பவேண்டியது. அந்தச் சபை ஒரு பார்லிமெண்டைப் போலிருந்து தேசத்தின் பொது விவகாரங்களைக் கவனித்துக் கொள்ளும். ஆனால், தொழில்களின் உள்விவகாரங்களிலும் அது தலையிடக்கூடாது. இந்த லட்சியத்தை அடைவதற்குப் பொதுவேலை நிறுத்தமே சாதனம் என்று தொ. ச. பொ. உ. வாதிகள் கூறினார்கள். அதன் மூலம் தேசத்தை ஸ்தம்பிக்கச் செய்து அதிகாரத்தைக் கைப்பற்ற முடியும் என்பது அவர்களுடைய எண்ணம். மார்க்சிய வாதிகள் இந்த தொ. ச. பொ. உ. வாதத்தை ஒப்புக்கொள்ளவில்லை. ஆனால், தொ. ச. பொ. உ. வாதிகள் மார்க்சைத் தங்களில் ஒருவன் என்றே (அவன் இறந்த பின்பு) கூறிக்கொண்டார்கள்.

கார்ல் மார்க்ஸ் 1883-ல் இறந்தான். அவன் இறந்து இன்று சரியாக 50 ஆண்டுகள் ஆகின்றன. அதற்குள் இங்கிலாந்திலும் ஜெர்மனியிலும் மற்றத் தொழிலபிவிருத்தி மிக்க நாடுகளிலும் பலம் பொருந்திய தொழிற் சங்கங்கள் தோன்றிவிட்டன. பிரிட்டிஷ் தொழில் உச்ச நிலையில் இருந்த காலம் போய் இறங்கு முகத்துக்கு வந்து விட்டது. ஜெர்மனியின் போட்டியும் அமெரிக்காவின் போட்டியும் நாளுக்குநாள் வளர்ந்து வந்தன. அமெரிக்காவுக்கு இயற்கைவசதிகள் ஏராளமாயிருந்தன.

அதனால் அதன் தொழில் விரைவில் முன்னேற்றம் அடைந்தது. ஜெர்மனியில் அரசியல் யதேச்சாதிகாரமும் (அதிகாரமும் பலமும் அற்ற ஒரு பார்லிமெண்டு அதை ஓரளவு சமனம் செய்தது) தொழில் முன்னேற்றமும் விசித்திரமாகக் கலந்து மிளிர்ந்தன. ஜெர்மன் அரசாங்கமானது பிஸ்மார்க்கின் கீழும் அதற்குப் பின்பும் கூடப் பல வழிகளில் தொழிலுக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்து வந்தது. தொழிலாளர் நிலைமையைச் சீர்திருத்தும்படியான சட்டங்கள் செய்து அது அவர்களைக் கவர முயன்றது. அவ்வாறே, பிரிட்டிஷ் லிபரல் கட்சியாரும் சில சீர்திருத்தச் சட்டங்கள் இயற்றி வேலை நேரத்தைக் குறைக்கவும், தொழிலாளர் நிலையைச் சிறிதளவு உயர்த்தவும் முயன்றார்கள். தேசம் செல்வச் செழிப்புடன் இருந்த வரையில் இம் முறை பலன் அளித்து வந்தது. பிரிட்டிஷ் தொழிலாளரும் அத்து மீறிப் போகாமல் அடக்க ஒடுக்கத்துடனிருந்து லிபரல்களுக்குத் தங்கள் வோட்டுகளை விசுவாசத்துடன் அளித்து வந்தார்கள். ஆனால் 1880-89-ல் பிற நாடுகளின் போட்டி காரணமாக இங்கிலாந்தின் நீண்ட சுக்கிரதசை ஒரு முடிவுக்கு வந்தது. அங்கே வியாபார மந்தம் ஏற்பட்டு, தொழிலாளருக்குக் கிடைத்து வந்த கூலியும் குறைந்தது. உடனே, தொழிலாளர் விழித்தெழுந்தனர். புரட்சித் தத்துவம் மீண்டும் அவர்களை ஆகர்ஷித்தது. இங்கிலாந்தில் பலர் மார்க்சியத்தை நோக்கலானார்கள்.

1889-ல், தொழிலாளர் 'இன்டர் நாஷனல்' ஒன்றை நிறுவ, இன்னொரு முயற்சி செய்யப்பட்டது. இப்போது, பல தொழிற்சங்கங்களும் தொழிற்கட்சிகளும் பணமும் பலமும் படைத்து விளங்கின. அவை ஏராளமான சம்பள உத்தியோகஸ்தர்களைக் கொண்டிருந்தன. 1889-ல் நிறுவப்பட்ட 'இன்டர் நாஷனல்'

'இரண்டாவது இன்டர் நாஷனல்' என்று அழைக்கப்பட்டது. அதற்குத் 'தொழில் அபேதவாத இன்டர் நாஷனல்' என்பது பெயரென்று நினைக்கிறேன். அது கால் நூற்றாண்டு உயிர் வாழ்ந்தது. உலகயுத்தம் அதற்குப் பெருஞ் சோதனையாக வந்து மூண்டது. அந்தச் சோதனையில் அது வெற்றி பெறவில்லை. இரண்டாவது இன்டர் நாஷனலைச் சேர்ந்த பலர் பிற்காலத்தில் தத்தம் நாடுகளில் பெரிய பெரிய பதவிகளையெல்லாம் வகித்தார்கள். சிலர் தொழிலாளர் இயக்கத்தை ஏணியாகக் கொண்டு உச்சியை அடைந்தபின்பு அதை உதைத்துத் தள்ளி விட்டார்கள். அவர்கள் பிரதம மந்திரிகளாகவும் பிரசிடெண்டுகளாகவும் ஆனார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் வாழ்க்கையில் அவர்களுக்கு வெற்றி கிடைத்துவிட்டது. அவர்களிடத்தில் நம்பிக்கை வைத்து, அவர்கள் 'பெரிய மனிதர்கள்' ஆவதற்கு உதவிபுரிந்த லட்சோபலட்சம் ஏழைத் தொழிலாளரின் கதி என்ன வாயிற்று? அவர்கள் தங்களுடைய தலைவர்களால் கைவிடப்பட்டுப் 'பழைய குருடி கதவைத் திறடி' என்கிற நிலையிலேயே இருந்தார்கள். ஆனால், அத்தலைவர்களோ—தாங்கள் உண்மையான மார்க்சிய வாதிகள் என்றும் தீவிர தொ. ச. பொ. உ. வாதிகள் என்றும் தலையிலடித்துச் சத்தியம் செய்தவர்கள்கூட—பார்லிமெண்டு மெம்பர்களாகவும் கொழுத்த சம்பளம் வாங்கும் தொழிற்சங்கத் தலைவர்களாகவும் பரிணமித்தார்கள். தங்களுடைய சுக சௌகரியங்களுக்கும் பட்டம் பதவிகளுக்கும் அபாயம் விளைக்கக்கூடிய அவசர காரியங்களில் இறங்குவது அவர்களுக்கு மேலும் மேலும் கஷ்டமாகிவிட்டது. ஆகவே, அவர்கள் பெரிதும் தணிந்துவிட்டார்கள். கஷ்டம் மிகுந்த நிலையில், தொழிலாளர் வேறுவழியின்றிப் புரட்சியைக் கோரிய போதும் தலை

வர்கள் அவர்களை அடக்கி வைக்கவே முயன்றார்கள். ஜெர்மனியின் அபேதவாத ஜனநாயக வாதிகள் யுத்தத்துக்குப் பின்பு ஜெர்மன் குடியரசில் பிரசிடெண்டு பதவியையும் சான்சலர் பதவியையும் ஏற்றுக்கொண்டார்கள். பிரான்சின் நெருப்பைக் கக்கும் தொ. ச. பொ. உ. வாதியும் பொது வேலைநிறுத்தப் போதகனும் ஆகிய பிரையாண்ட் பதினொரு முறை பிரதம மந்திரியாகித் தன்னுடைய பழைய தோழர்கள் நடத்திய வேலைநிறுத்தம் ஒன்றையும் அடக்கினான். இங்கிலாந்தில் ராம்சே மாக்டொனால்டு பிரதம மந்திரி ஆனபின்பு தன்னை மனிதனாக்கிய தொழிற் கட்சியைத் துறந்தான். ஸ்வீடன், டென்மார்க், பெல்ஜியம், ஆஸ்திரியா ஆகிய நாடுகளிலும் இவ்வாறே நடந்தது. மேல் ஐரோப்பாவில் இன்று அதிகாரம் வகிக்கும் சர்வாதிகாரிகளும் பிறரும் தங்களுடைய பூர்வாசிரமத்தில் அபேதவாதிகளாயிருந்தவர்கள்தான். ஆனால், வயது ஆக ஆக அவர்களுடைய தீவிரம் குறைந்துவிட்டது. அவர்கள் தங்களுடைய லட்சியத்தின்பால் கொண்டிருந்த பழைய ஆர்வத்தை இழந்துவிட்டார்கள். சில சமயங்களில், அவர்கள் தங்களுடைய பழைய தோழர்களுக்கு விரோதமாகவும் திரும்பினார்கள். இன்று இதாலியின் 'தூசே' (சர்வாதிகாரி) யாக விளங்கும் முசோலினி ஒரு பழைய அபேதவாதியே. போலந்தின் சர்வாதிகாரியான பில்சுட்ஸ்கியும் அப்படித்தான்.

தலைவர்களாலும் பிரதான ஊழியர்களாலும் கைவிடப்படாத தொழிலாளர் இயக்கங்களோ, தேசிய சுதந்திர இயக்கங்களோ கிடையா. வெற்றியைக் காணாத அத்தலைவர்கள் சிறிது காலத்துக்குப்பின் அலுப்பும் சலிப்பும் அடைகிறார்கள். லட்சியத்துக்காகப் பிராணனைத் தியாகம் செய்கிறவன் அடைகிற 'வெறும்'

புகழ் அவர்கள் உள்ளத்தை அதிகக் காலம் கவர்ந்து நிற்பதில்லை. அவர்களுடைய ஆவேசப் புயல் அடங்கிவிடுகிறது, ஆர்வத் தீ குளிர்ந்து விடுகிறது. சிலர் அதிகார மோகத்தினாலோ அல்லது மனச்சாட்சியை மறந்துவிடுவதாலோ எதிர்க் கட்சியிலேயே போய்ச் சேர்ந்துகொண்டு தாங்கள் இதுவரை எதிர்த்துப் போரிட்டு வந்தவர்களுடன் தனிப்பட்ட முறையில் ராஜி செய்து கொள்ளுகிறார்கள். ஒரு காரியத்தைச் செய்ய விரும்பும் போது அதற்கு மனச்சாட்சியை இசைவிப்பது எளிது. தலைவர்கள் கட்சி மாறுவதால் அந்த இயக்கம் நஷ்டமடைந்து தடைப்படுகிறது. இவ்வுண்மையை நன்கு உணர்ந்திருப்பதால்தான், தொழிலாளர்களையும் பிறநாடுகளையும் அடக்கி ஆள்வோர் பலவாறாக ஆசை காட்டியும் நயமொழி புகன்றும் எதிர்க் கட்சி ஆட்களைத் தங்கள் பக்கம் இழுக்க முயற்சிக்கிறார்கள். ஆனால், தனிப்பட்டவர் பெறும் சலுகைகளோ நயமொழிகளோ தொழிலாளர் வர்க்கத்துக்கோ சுதந்திரம் பெற முயலும் ஒரு அடிமை நாட்டுக்கோ ஆறுதல் தருவதில்லை. ஆகவே தலைவர்கள் நீங்கினும் தடைகள் நேரினும் போராட்டம் என்னவோ தான் அடையவேண்டிய முடிவை நோக்கி முன்வைத்த காலைப் பின்வைக்காமல் சென்றுகொண்டே இருக்கிறது.

1889-ல் ஆரம்பிக்கப்பட்ட இரண்டாவது 'இன்டர்நாஷனல்' எண்ணிக்கையிலும் கண்ணியத்திலும் வளர்ந்தது. சில வருஷங்களுக்குப்பின் மாலடெஸ்டாவும் அவனைச் சேர்ந்த அராஜக வாதிகளும் அதிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். அவர்கள் பார்லிமெண்டு வோட்டுரிமையைப் பயன் படுத்திக்கொள்ள மறுத்ததே அதற்குக் காரணம். இன்டர் நேஷனலைச் சேர்ந்த அபேதவாதிகள் தங்களுடைய பழைய தோழர்களுடன்

சேர்ந்து போரிடுவதைக் காட்டிலும் பார்லிமெண்டு ஸ்தானங்களையே அதிகமாக விரும்பினார்கள். ஐரோப்பாவில் யுத்தம் நேரிட்டால் அபேதவாதிகள் இன்னின்ன கடமைகளை நிறைவேற்ற வேண்டும் என்று அவர்கள் வாய்வீரம் பேசினார்கள். அபேதவாதிகள் தங்களுடைய வேலையைப் பொறுத்தவரையில் தேசிய எல்லைகளை அங்கீகரிப்பதில்லை. அவர்கள் சாதாரண முறையில் தேசியவாதிகள் அல்ல. அவர்கள் யுத்தத்தை எதிர்க்கப் போவதாக வாய்ப்பறை அறைந்தார்கள். ஆனால், 1914-ல் உலக யுத்தம் ஆரம்பமான உடனே இரண்டாவது இன்டர்நாஷனல் சிதறிக் குலைந்தது. ஒவ்வொரு தேசத்திலுமுள்ள அபேதவாதிகளும், தொழிற் கட்சியினரும், குரோபாட்கின் போன்ற அராஜகவாதிகளுங்கூட மற்ற யாரையும் போலவே தேசிய வெறியர்களாகவும் பிறநாட்டவரை விஷமென வெறுப்போராகவும் மாறிவிட்டார்கள். ஒரு சிலர்தான் யுத்தத்தை எதிர்த்தார்கள். அதற்காக அவர்கள் நீண்ட சிறைவாசம் உட்படப் பல வழிகளில் பெருங் கஷ்டங்களுக்கு ஆளாக்கப் பட்டார்கள்.

யுத்தம் முடிந்த பிறகு, 1919-ல், லெனின் மாஸ்கோவில் ஒரு புதுத் தொழிலாளர் இன்டர்நாஷனலை ஆரம்பித்தான். இது அசல் பொது உடைமை ஸ்தாபனமாகும். இதில் நாடறிந்த பொது உடைமை வாதிகள் தான் சேர முடியும். இதற்கு மூன்றாவது இன்டர்நாஷனல் என்று பெயர். இது இன்னும் இருக்கிறது. யுத்தத்துக்குப் பின் இரண்டாவது இன்டர் நாஷனலில் எஞ்சியிருந்தவர்கள் மெள்ள ஒன்று சேர்ந்தார்கள். அவர்களில் ஒரு சிலர் மாஸ்கோவில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மூன்றாவது இன்டர் நாஷனில் போய்ச் சேர்ந்துகொண்டார்கள். ஆனால், அவர்களில் அநேகர் மாஸ்கோ

வையும் அதன் கொள்கையையும் மனமார வெறுத்தார்கள். ஆகவே, அவர்கள் அதை ஏறெடுத்துப் பார்க்கவும் மறுத்து விட்டார்கள். இரண்டாவது இன்டர் நாஷனலையே அவர்கள் மீண்டும் புதுப்பித்தார்கள். அதுவும் இப்போது இருக்கிறது. ஆக, இப்போது இரண்டாவது, மூன்ருவது இன்டர் நாஷனல்கள் என்று அழைக்கப்படும் இரண்டு சர்வதேசத் தொழிலாளர் ஸ்தாபனங்கள் உள்ளன. இதில் ஒரு வேடிக்கை என்னவென்ருல் அவை யிரண்டும் மார்க்சியத்தையே மூலக் கொள்கையாக உடையேம் என்று பிரமாணம் பண்ணுகின்றன. ஆனுல், ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக மார்க்சியத்தை வியாக்கியானம் செய்கிறது. இரண்டும் தங்களுடைய பொது விரோதியாகிய முதலாளித்துவத்தை வெறுப்பதை விட அதிகமாகவே ஒன்றையொன்று வெறுக்கின்றன.

இந்த இன்டர் நாஷனல்களில் உலகிலுள்ள எல்லாத் தொழிற் சங்கங்களும் தொழிலாளர் ஸ்தாபனங்களும் அடங்கியுள்ளன என்று சொல்லமுடியாது. அவற்றில் பல, இரண்டிலும் சேராது நிற்கின்றன. அமெரிக்கத் தொழிற்சங்கங்கள் ஒரு தனி வகையைச் சேர்ந்தவை. அவை பெரும்பாலும் பழமைப்பற்று மிகுந்தவை. இந்தியத் தொழிற் சங்கங்களும் எந்த இன்டர் நாஷனலையும் சேர்ந்தவை அல்ல.

'இன்டர் நாஷனேல்' (International) என்னும் சர்வதேசத் தொழிலாளர் கீதம் உனக்குத் தெரிந்திருக்கலாம். அது உலகெங்குமுள்ள தொழிலாளருக்கும் அபேதவாதிகளுக்கும் உரிய கீதமாகும்.

134

மார்க்சியம்

பிப்ரவரி 16, 1933.

ஐரோப்பிய அபேதவாத உலகில் பெருங்கொந்தளிப்பை உண்டாக்கிய மார்க்சின் சித்தாந்தத்தைப்பற்றிச் சென்ற கடிதத்தில் சிறிது கூறலாம் என்று எண்ணியிருந்தேன். ஆனுல், அந்தக் கடிதம் மிகவும் நீண்டு விட்ட படியால் நான் சொல்ல நினைத்ததை இதில் கூறுகிறேன். மார்க்சின் சித்தாந்தத்தை நான் நன்கு அறிந்தவனல்ல. அதை நன்கறிந்த பண்டிதர்களுக்குள்ளேயே அதைப்பற்றிய கருத்து வேற்றுமை காணப்படுகிறது. ஆகவே, அதைப்பற்றி எழுதுவது எனக்கு எளிதன்று. அதன் விசேஷ இயல்புகள் சிலவற்றை மட்டும் கூறிவிட்டு அதிலுள்ள கடினமான பகுதிகளை விட்டுவிடப் போகிறேன். அதனுல், நீ மார்க்சியத்தை இங்கு கொஞ்சமும் அங்கு கொஞ்சமுமாகப் பார்க்க முடியுமே ஒழிய அதன் முழு வடிவத்தையும் பார்க்க முடியாது. ஆனுல் இக்கடிதங்களில் எதைப் பற்றிய சித்திரத்தையும் விரிவாகவோ பூரணமாகவோ காட்டும் நோக்கம் எனக்கு இல்லை.

நான் கூறியபடி, அபேதவாதத்தில் பல வகைகள் உண்டு. ஆனுல், அதன் நோக்கத்தைப் பொதுவாக எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிருர்கள். அதன் நோக்கம் என்ன? நிலம், சுரங்கங்கள், தொழிற்சாலைகள் போன்ற உற்பத்தி சாதனங்களும், ரயில்வேக்கள் போன்ற விநியோக சாதனங்களும், பாங்குகள் போன்ற இதர ஸ்தாபனங்களும் அரசாங்கத்தின் ஆதிக்கத்தில் இருக்க வேண்டும் என்பதே அந்நோக்கமாகும். தனி மனிதர்கள்

மேற்கூறிய சாதனங்களையோ அல்லது ஸ்தாபனங்களையோ அல்லது பிறருடைய உழைப்பையோ தங்களுடைய சொந்த நன்மைக்குப் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது என்பதுதான் அதன் அடிப்படையான கருத்து. இன்று அவை பெரும்பாலும் தனிமனிதர் கையிலிருந்து தனிமனிதரின் சொந்த நன்மைக்குப் பயன்பட்டு வருவதால், சமூகம் மொத்தத்தில் ஏழையாயிருந்து துன்புறவும் சிலர் மட்டும் கொழுத்த பணக்காரர் ஆகி இன்புறவும் நேரிடுகிறது. மேலும், இன்று இவ்வுற்பத்தி சாதனங்களைக் கட்டி ஆளுகிறவர்களின் சக்தியெல்லாம் பெரும்பாலும் ஒருவரோடொருவர் போட்டியிட்டு ஒருவரையொருவர் கழுத்தறுப்பதில் தான் செலவழிந்து வருகிறது. இவ்வாறின்றி, உற்பத்தியும் விநியோகமும் தீர்க்காலோசனையின் பேரில் வகுக்கப்படுமாயின், வீண் போட்டியும் வீண் விரயமும் ஒழிவதோடு செல்வநிலையில் பல்வேறு வகுப்புகளுக்கும் மக்களுக்கும் இடையேயுள்ள பெரிய ஏற்றத்தாழ்வுகளும் இல்லாதொழியும். ஆகவே, உற்பத்தி, விநியோகம் முதலிய முக்கியக் காரியங்களை அரசாங்கம் தானே எடுத்துக் கொண்டு செய்யவேண்டியது அவசியமாகிறது. அதாவது, ஜனசமுதாயம் முழுவதும் அவற்றின்மீது ஆதிக்கம் செலுத்த வேண்டும். இதுதான் அபேதவாதத்தின் அடிப்படையான கொள்கையாகும்.

அபேதவாதத்தின் கீழ் அரசாங்கம் எப்படி இருக்க வேண்டும் என்பது வேறு விஷயம். அது மிக முக்கியமான விஷயமாயினும், இங்கே அதைப்பற்றி நாம் விவாதிக்க வேண்டியதில்லை.

அபேதவாதத்தின் லட்சியத்தைப்பற்றி ஒரு முடிவுக்கு வந்தபின்பு, அதை எவ்வழியில் அடைவதென்பது தான் அடுத்தபடியாக முடிவுசெய்ய வேண்டிய விஷய

மாகும். இந்த இடத்தில் அபேதவாதிகளுக்குள் கருத்து வேற்றுமை தோன்றிவிடுகிறது. அவர்கள் பல கோஷ்டிகளாகப் பிரிந்து பல வழிகளை நமக்குக் காட்டுகிறார்கள். அக்கோஷ்டிகளை ஏறக்குறைய இரு பிரிவாகப் பிரிக்கலாம்: (1) பரிணாம முறையில் சிறிதுசிறிதாக மாறுதல் செய்ய விரும்பும் கோஷ்டிகள்: இவர்களுக்குப் பார்லிமெண்டுகளிலும் படிப்படியாகப் போவதிலும்தான் நம்பிக்கை. இதற்கு உதாரணமாகப் பிரிட்டிஷ் தொழிற் கட்சியையும் பேபியன் சங்கத்தாரையும் சொல்லலாம். (2) புரட்சி வேண்டும் கோஷ்டிகள்: பார்லிமெண்டுகள் மூலம் தங்கள் லட்சியத்தை அடைய முடியும் என்கிற நம்பிக்கை இவர்களுக்குக் கிடையாது. இவர்கள் பெரும்பாலும் மார்க்சிய வாதிகள்.

முதலில் சொன்ன பரிணாம அபேதவாதக் கோஷ்டிகளின் தொகை இப்பொழுது மிகவும் குறைந்து விட்டது. இங்கிலாந்திலும் அவர்கள் பலவீனமடைந்து வருகிறார்கள். இங்கிலாந்தில் அவர்களுக்கும், லிபரல்கள் இன்னும் மற்ற அபேதவாதிகள் அல்லாதாருக்கும் இடையிலுள்ள வேற்றுமை பெரிதும் சுருங்கிக் கொண்டு வருகிறது. ஆகவே, இப்போது மார்க்சியம் என்பது அபேதவாதிகளின் பொதுவான கொள்கை என்று நாம் கொள்ளலாம். ஆனால், ஐரோப்பாவில் மார்க்சிய வாதிகளுக்குள்ளும் இருமுக்கிய பிரிவினர் இருக்கிறார்கள். ருஷியப் பொதுவுடைமை வாதிகள் ஒரு பிரிவினர்; ஜெர்மனியிலும் ஆஸ்திரியாவிலும் பிறஇடங்களிலும் உள்ள பழைய அபேதவாத ஜனநாயக வாதிகள் இன்னொரு பிரிவினர். இருபிரிவினரும் எலியும் பூனையும் போல் தான். அபேதவாத ஜனநாயக வாதிகள் உலகயுத்தத்தின் போதும் அதற்குப் பின்பும் தங்களுடைய சொற்படி நடக்கத் தவறிய காரணத்தால் தங்களுடைய பழைய கவுரவத்தை

இழந்து விட்டார்கள். அவர்களில் தீவிரவாதிகள் பலர் பொது உடைமைக்காரருடன் சேர்ந்து கொண்டார்கள். ஆனால், மேல் ஐரோப்பாவிலுள்ள பெரிய தொழிற் சங்கங்களெல்லாம் இன்னும் அபேதவாத ஜனநாயக வாதிகளின் ஆதிக்கத்தில்தான் இருக்கின்றன. பொது உடைமை, ருஷியாவில் வெற்றி பெற்றுள்ள காரணத்தால் விரைவில் முன்னேறி வரும் ஒரு கொள்கையாக விளங்குகிறது. ஐரோப்பாவிலும் சரி, உலகின் மற்றப் பாகங்களிலும் சரி, பொது உடைமைதான் இன்று முதலாளித்துவத்தின் முக்கிய எதிரியாக விளங்குகிறது.

மார்க்சியம் என்றால் என்ன? சரித்திரம், அரசியல், பொருளியல், மனித வாழ்க்கை, மனித அபிலாஷை ஆகியவற்றை விளக்கும் ஓர் வியாக்கியான முறை என்று அதைச் சொல்லலாம். அது தத்துவமும் பேசுகிறது, கருமத்தையும் விதிக்கிறது; ஆகவே, அது ஒரு தத்துவ-கரும நெறியாகும். மார்க்சின் தத்துவத்தில் மனித வாழ்க்கையின் சகல அம்சங்களும் அடங்கியுள்ளன. அது இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் முக்கால மனித சரித்திரத்தையும் திட்டமான ஒரு தருக்க முறையின் கீழ்க் கொண்டு வர முயற்சிக்கிறது. அத் தருக்க முறை ஊழ் முறையைப்போல் தவிர்க்க முடியாதது என்று அது சொல்லுகிறது. மனித வாழ்க்கையானது அவ்வளவு தருக்கமுறை பிறழாமலும், கண்டிப்பான சட்டங்களையும் விதிகளையும் அனுசரித்தும் நடைபெறுகிறதா என்பது சந்தேகத்துக்குரிய விஷயம். ஆனால், மார்க்ஸ் இறந்தகாலச் சரித்திரத்தை விஞ்ஞான ரீதியில் ஆராய்ந்து சில முடிவுகளுக்கு வந்திருக்கிறான். ஆதிகாலத்திலிருந்தே மனிதன் பிழைப்புக்காகப் போராடி வந்திருப்பதை அவன் கண்டான். மனிதன் தன் பிழைப்புக்காக இயற்கையை எதிர்த்தும் சகோதர மனிதனை

எதிர்த்தும் போராடுகிறான். உயிர் வாழ்க்கைக்கு வேண்டிய உணவையும் பிறபொருள்களையும் பெற அவன் உழைத்து வந்தான். அவற்றைப் பெற அவன் கையாண்ட முறைகள் நாளாவட்டத்தில் சிறிது சிறிதாக மாறி வந்தன. அவை காலம் செல்லச் செல்ல அதிகச் சிக்கலும் திருத்தமும் பெற்றன. வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பொருள்களை உற்பத்தி செய்வதற்கு மனிதன் கையாண்ட முறைகள்தான் மனிதனுடைய வாழ்க்கையிலும், சமூகத்தினுடைய வாழ்க்கையிலும் மிகமிக முக்கியமானவை என்பது மார்க்சின் கருத்து. அவ்வுற்பத்தி முறைகள் சரித்திரத்தின் ஒவ்வொரு காலப் பகுதியையும் ஆட்கொள்கின்றன. அவை அக்காலத்தில் மனிதன் செய்யும் சகல காரியங்களையும் சமூக உறவுகளையும் பாதிக்கின்றன. அவை மாறுதல் அடைந்த உடனே சரித்திரத்திலும் சமூகத்திலும் பெருமாறுதல்கள் விளைகின்றன. உற்பத்தி முறைகளில் தோன்றிய மாறுதல்களால் விளைந்த பெரும் பலன்களை நாம் இக்கடிதங்களில் ஓரளவு கண்டோம். உதாரணமாக, விவசாயம் முதன் முதலில் தோன்றியபோது மனிதனுடைய வாழ்க்கையில் பெரிய மாறுதல் உண்டாயிற்று. அது வரையில் வேட்டையாடிக் கொண்டு நாடோடிகளாகத் திரிந்தவர்கள் ஒரு இடத்தில் நிலைத்து வாழத் தலைப்பட்டார்கள். அதனால் கிராமங்களும் பட்டணங்களும் தோன்றி வளர்ந்தன. விவசாயத்தினால் உணவுப் பொருள் அதிகமாகக் கிடைத்தது; எல்லாருக்கும் வேண்டியது போக மிச்சமாகவும் இருந்தது. உணவு மிகுதியால் ஜனத்தொகை பெருகியது, செல்வம் வளர்ந்தது, ஓழிவு கிடைத்தது. உணவுக்காக உழைக்கவேண்டிய அவசியமில்லாதவர்கள் கலைகளிலும் கைத்தொழில்களிலும் ஈடுபட்டார்கள். உற்பத்தி முறையில் தோன்றிய

மாறுதலால் சமூக வாழ்க்கையே மாறியதற்கு இன்னொரு உதாரணம் தொழிற் புரட்சியாகும். தொழிற் புரட்சியின் போது உற்பத்தி முறையில் யந்திரம் புகுத்தப்பட்டது. அதனால் சமூக வாழ்க்கையில் இன்னொரு பெரிய மாறுதல் உண்டாயிற்று. இவ்வாறு பல உதாரணங்கள் கூறலாம்.

சரித்திரத்தில் ஒரு குறிப்பிட்ட காலத்தில், உற்பத்தி முறைகள் என்பன ஜனசமுதாயத்தின் வளர்ச்சியில் ஒரு திட்டமான கட்டத்தைக் குறிக்கின்றன. ஒரு உற்பத்தி முறையைக் கையாளும் போதும், அதன் விளைவாகவும் மனிதர் தங்களுக்குள் சில திட்டமான உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளுகிறார்கள். விற்பது, வாங்குவது, பண்டமாற்று, பரிவர்த்தனை போன்றவையே அத்தகைய உறவுகளாகும். அவை உற்பத்தி முறைகளை ஒட்டியும் உற்பத்தி முறைகளுக்கு ஏற்பவும் இருக்கின்றன. இவ்வுறவுகள் அனைத்தும் சேர்ந்ததுதான் ஒரு சமுதாயத்தின் பொருளியல் அமைப்பாகும். இப்பொருளியல் அடிப்படையின்மீதுதான் சட்டங்கள், சமூகப் பழக்க வழக்கங்கள், கருத்துகள், அரசியல் எல்லாம் ஆக்கப்படுகின்றன. இதுதான் மார்க்சின் கொள்கை. இதன்படி பார்த்தால், உற்பத்தி முறைகள் மாறவே பொருளியல் அமைப்பு மாறுகிறது. பொருளியல் அமைப்பு மாறவே ஜனங்களின் கருத்துகளும், சட்டங்களும், அரசியலும் மாறுகின்றன.

சரித்திரம் என்பது பல்வேறு வர்க்கங்களுக்கிடையே நிகழும் போராட்டங்களின் வரலாறு என்றும் மார்க்ஸ் கருதினான். 'மனித சமூகத்தின் இறந்தகால, நிகழ்காலச் சரித்திரம் முழுவதும் வர்க்கப் போராட்டங்களின் சரித்திரமேயாகும்' என்று அவன் கூறுகிறான். உற்பத்தி சாதனங்களைத் தன் ஆதிக்கத்தில் கொண்டுள்ள

வர்க்கம் பிறர்மீது ஆதிக்கம் செலுத்துகிறது. அது பிற வர்க்கத்தாரைச் சுரண்டி அவர்களுடைய உழைப்பைத் தனக்குப் பயன்படுத்திக் கொள்ளுகிறது. உழைப்பவர்கள் தங்களுடைய உழைப்பின் முழுப்பயன் அல்லது மதிப்பை அடைவதில்லை. அதில் ஒரு சிறு பகுதியே அவர்களுக்குக் கிடைக்கிறது. அதைக் கொண்டே அவர்கள் காலம் தள்ளுகிறார்கள். மீதி அல்லது எஞ்சி நிற்பது சுரண்டும் வர்க்கத்துக்குப் போகிறது. இந்த எச்ச மதிப்பை (Surplus value) அடையும் சுரண்டும் வர்க்கம் செல்வத்தில் உயர்கிறது. உற்பத்தியின் மீது ஆதிக்கம் செலுத்தும் இவ்வர்க்கமே நாட்டின் மீதும் அரசாங்கத்தின் மீதும் ஆதிக்கம் செலுத்துகிறது. ஆகவே, அரசாங்கத்தின் முதல் நோக்கம் இந்த ஆளும் வர்க்கத்தைக் காப்பாற்றுவதாக முடிகிறது. 'அரசாங்கம் என்பது ஆளும் வர்க்கத்தாரின் விவகாரங்களை மொத்தமாக நிருவாகம் செய்யும் ஒரு நிருவாகக் கமிட்டி' என்று மார்க்ஸ் கூறுகிறான். இதற்காகவே சட்டங்கள் இயற்றப் படுகின்றன. மக்களுக்கு அளிக்கப்படும் கல்வியும், போதிக்கப்படும் மதமும், வேறு பிறவும் ஆளும் வர்க்கத்தாரின் ஆதிக்கம் நியாயமானது, இயற்கையானது என்று அவர்களை நம்பும்படி செய்கின்றன. சுரண்டப்படும் வகுப்பார் உண்மையைக் கண்டுகொண்டு அதிருப்தி அடையக் கூடாது என்பதற்காக அரசாங்கம், சட்டம் ஆகியவற்றின் வர்க்கத்தன்மையை மூடி மறைப்பதற்கு மேற்கூறிய முறைகள் மூலம் எல்லாவித முயற்சிகளும் செய்யப்படுகின்றன. யாராவது ஒருவன் அதிருப்தியுற்று இம் முறையை எதிர்த்தால், உடனே அரசாங்கம் அவனைச் சமூகத்துக்கும் தருமத்துக்கும் விரோதி என்றும் புராதன சம்பிரதாயங்களைக் கெடுக்க வந்தவன் என்றும் கூறி நசுக்கிவிடுகிறது.

ஆனால், என்னதான் பிரயத்தனப் பட்டாலும் ஒரே வர்க்கம் நிரந்தரமாக ஆதிக்கம் செலுத்துவதென்பது முடியாத காரியம். அதன் ஆதிக்கத்துக்குக் காரணமாயிருந்த அதே விஷயங்கள் இப்போது அதற்கு விரோதமாக வேலை செய்ய ஆரம்பிக்கின்றன. அக்காலத்து உற்பத்தி சாதனங்கள் மீது ஆதிக்கம் செலுத்திய காரணத்தால் அது ஆளும் வர்க்கமாகவும் சுரண்டும் வர்க்கமாகவும் ஆயிற்று. இப்போது, புதிய உற்பத்தி சாதனங்கள் தோன்றவும், அவற்றின் மீது ஆதிக்கம் செலுத்தும் புதிய வர்க்கத்தார் முன்னுக்கு வருகிறார்கள். இப்புதிய வர்க்கத்தார் பழைய ஆளும் வர்க்கத்தாரின் சுரண்டலை எதிர்க்கிறார்கள். புதிய கருத்துகள் மனிதரை ஆட்கொள்கின்றன. அதாவது, கருத்துலகில் ஒரு புரட்சி தோன்றுகிறது. அதன் பயனாக மாந்தரின் அறிவைப் பிணித்து நிற்கும் பழைய கருத்துகளும் கோட்பாடுகளும் அறுபடுகின்றன. பிறகு, அதிகாரத்தை உடும்பு போல் பற்றிக்கொண் டிருக்கும் பழைய வர்க்கத்துக்கும் பலத்தில் வளர்ந்து வரும் புதிய வர்க்கத்துக்கும் போராட்டம் நிகழ்கிறது. பொருளியல் சக்தியைத் தன் வசத்தில் கொண்டுள்ள புதிய வர்க்கம் வெற்றி பெறுகிறது. சரித்திரம் என்னும் முடிவற்ற நாடகத்தில் தான் ஆடவேண்டிய கூத்தை ஆடி முடித்து விட்ட பழைய வர்க்கம் மங்கி மறைகிறது.

புதிய வர்க்கத்தின் வெற்றி, அரசியல் தன்மை பொருளியல் தன்மை இரண்டும் பொருந்தியதாகும். அது புதிய உற்பத்தி முறைகளின் வெற்றியைக் குறிக்கிறது. அதனால் சமூகத்தின் அமைப்பு முழுவதிலும் மாறுதல்கள் தோன்றுகின்றன. புதிய கருத்துகள், புதிய சட்டங்கள், புதிய சம்பிரதாயங்கள், புதிய அரசியலமைப்புத் தோன்றுகின்றன. இவ்வாறு வாழ்க்கையின் எல்லாத் துறைகளும் பாதிக்கப்படுகின்றன. இப்போது, வெற்றி அடைந்த புதிய வர்க்கம் தன் கீழுள்ள மற்ற வர்க்கங்களைச் சுரண்டத் தொடங்குகிறது. கடைசியில், அவ்வாறு சுரண்டப்படும் வர்க்கங்களில் ஒன்று தலையெடுத்து அதை ஒழிக்கிறது. இவ்வாறு, இவ்வர்க்கப் போராட்டம் முடிவின்றி நடந்துகொண்டே இருக்கிறது. ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கத்தைச் சுரண்டுவது என்கிற நிலை ஒழியும் வரையில் அது நடந்து கொண்டுதான் இருக்கும். வர்க்க வேற்றுமைகளெல்லாம் மறைந்து உலக முழுதும் ஒரே ஒரு வர்க்கமாக மாறும் போதுதான் அப்போராட்டம் முடிவுபெறும். ஏனெனில், அப்புறம் சுரண்டலுக்கு இடமிராது. அந்த ஒரு வர்க்கம் தன்னைத்தானே சுரண்டமுடியாது. அந்த நிலையில், சமூகத்தில் இப்போது காணப்படும் இடைவிடாத போராட்டமும் போட்டியும் ஒழிந்து சமநிலையும் பரிபூரணக் கூட்டுறவும் உண்டாகும். இப்பொழுது அரசாங்கத்தின் முக்கியக் காரியமாக விளங்கும் பலாத்கார அடக்கு முறைக்கு அப்பொழுது வேலையிராது. ஏனெனில், பலாத்கார அடக்கு முறைக்கு உட்படுத்த வேண்டிய வர்க்கம் அப்போது இராது. ஆகவே, அரசாங்கம் என்பதே மெல்ல 'வாடி உலர்ந்து' போகும். இவ்வாறு மார்க்சியத்தின் லட்சியம் அராஜகவாதியின் லட்சியத்தையும் நெருங்குகிறது.

மார்க்சின் காட்சியில், சரித்திரம் என்பது தவிர்க்க முடியாத வர்க்கப் போராட்டங்களால் காரியப்படும் ஒரு பரிணாமக் கிரமமாகவே தோன்றியது. கடந்த காலத்தில் இது நிகழ்ந்த விதத்தை அவன் எண்ணற்ற உதாரணங்கள் மூலமாகவும் விரிவான மேற்கோள்கள் மூலமாகவும் எடுத்துக் காட்டினான். உலகில் யந்திரத்தின் வருகைக்குப்பின், நிலமானியக் காலம் மாறி முதலாளித்

துவக் காலம் தோன்றிய விதத்தையும், நிலமானிய வர்க்கம் பூர்ஷுவா வர்க்கத்துக்கு இடம் கொடுத்த விதத்தையும் அவன் எடுத்துரைத்தான். அவனுடைய அபிப்பிராயப்படி, நம் காலத்தில் பூர்ஷுவா வர்க்கத்துக்கும் தொழிலாளி வர்க்கத்துக்கும் இடையே நிகழும் போராட்டம் தான் கடைசி வர்க்கப் போராட்டமாகும். முதலாளித்துவமே, தன்னை முடிவாக ஒழித்து வர்க்கமற்ற சமூகத்தையும் அபேதவாதத்தையும் நிலைநாட்டப் போகும் தொழிலாளி வர்க்கத்தை உண்டுபண்ணியும் அதன் பலத்தையும் எண்ணிக்கையையும் அதிகரித்தும் வருகிறது.

மார்க்சின் சரித்திர திருஷ்டி 'லோகாயத சரித்திர திருஷ்டி' என்று அழைக்கப்பட்டது. அது 'லோகாயத திருஷ்டி' (Materialist) என்று அழைக்கப்பட்டதற்குக் காரணம் அதில் "பாவனா திருஷ்டி" (Idealist) இல்லாததுதான். மார்க்ஸ் காலத்துத் தத்துவ சாஸ்திரிகள் 'பாவனா திருஷ்டி' என்னும் வார்த்தையை ஒரு விசேஷ அர்த்தத்தில் அதிகமாக உபயோகித்து வந்தார்கள். அக்காலத்தில் டார்வினின் பரிணாமவாதம் ஜனங்களிடையில் பிரபலமடைந்து வந்தது. உயிர் வகைகளின் தோற்றம், அபிவிருத்தியைப் பொறுத்தவரையில் அவன் தன் கொள்கையைப் பொதுமக்கள் மனதில் நன்கு பதியவைத்துவிட்டான். ஆனால், அது மனித சமூக உறவுகளுக்கு யாதொரு விளக்கமும் அளிக்கவில்லை. சில தத்துவ சாஸ்திரிகள் மனிதனுடைய முன்னேற்றத்தை மனத்தின் முன்னேற்றம் என்று வியாக்கியானம் செய்துகொண்டு பாவனை உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தார்கள். இது தவறான வழி என்று மார்க்ஸ் சொன்னான். மனோராஜ்யம் செய்வதும், பாவனை உலகில் சஞ்சரிப்பதும் அபாயகரமான காரியங்கள் என்பது

அவன் கருத்து. ஏனெனில், உண்மையில் யாதொரு ஆதாரமும் இல்லாத பல விஷயங்களை ஜனங்கள் தங்கள் மனம் போனவாறு கற்பனை செய்து கொள்ள அது இடந் தருகிறது. ஆகவே, அவன் விஞ்ஞான ரீதியில் பிரத்தியட்ச உண்மைகளையே ஆராய்ந்தான். அது காரணமாக, அவனுடைய ஆராய்ச்சி 'லோகாயத திருஷ்டி' கொண்டது என்று சொல்லப்படுகிறது.

மார்க்ஸ் சுரண்டலைப்பற்றியும் வர்க்கப் போராட்டத்தைப்பற்றியும் ஓயாது பேசுகிறான். நம்மைச் சூழ்ந்துள்ள அநியாயத்தைக் கண்டு நம்மில் பலர் கோபமும் கொதிப்பும் கொள்கிறோம். ஆனால், இது கோபம் கொள்வதற்கோ புத்திமதி கூறுவதற்கோ உரிய விஷயமல்ல என்பது மார்க்சின் அபிப்பிராயம். சுரண்டுவது சுரண்டுவோனின் குற்றமல்ல. ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கத்தை ஆளுவதென்பது இயற்கையான சரித்திர முன்னேற்றக் கிரமத்தின் பயனே ஒழிய வேறில்லை. காலக்கிரமத்தில் அதுவும் மாறி இன்னொரு ஏற்பாடு தோன்றுகிறது. ஒருவன் ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்தவனாயிருந்து அந்த முறையில் பிறரைச் சுரண்டுவானாயின், அதை ஒரு பாவச் செயல் என்று சொல்வதற்கில்லை. சுரண்டுவதைச் சாத்தியமாகச் செய்கிற முறையில் அவன் ஒரு உறுப்பு. ஆகவே, அவனைப் பாவி என்றும் தோஷி என்றும் வைவதில் அர்த்தமில்லை. தனி மனிதர்களுக்கும் ஒரு முறைக்கும் உள்ள இவ் வேற்றுமையை அடிக்கடி மறந்து விடுவது நமக்கு இயல்பாயிருக்கிறது. இந்தியா இப்போது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கீழ் அகப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதை எதிர்த்து நாம் நமது முழு பலத்தோடும் போராடுகிறோம். ஆனால், அவ்வேகாதிபத்திய முறையை இந்தியாவில் ஆதரித்து நிற்கும் ஆங்கிலேயரை நாம் குறைகூறுவதற்கில்லை. அவர்கள் ஒரு

பெரிய யந்திரத்தின் சிறு பற்கள் போல்வர். அவ்வியந் திரம் ஓடுவதும் நிற்பதும் அவர்கள் கையில் இல்லை. அதேபோல, நம்மில் சிலர் ஜமீன்தாரி முறை காலத்துக் கொவ்வாததென்றும், அதன் கீழ் விவசாயிகளின் உயிர் இரத்தம் உறிஞ்சப்படுகிறதென்றும் கருதலாம். அதனால், தனிப்பட்ட ஒரு ஜமீன்தார் தவறுடையவன் என்று அர்த்தமாகாது. தொழிலாளரின் உடம்பையும் உயிரையும் சாறு பிழிவோர் என்று நிந்திக்கப்படும் முதலாளிகளும் அவ்வாறே தவறுடையோர் ஆகார். எப்போதும் தவறென்பது முறையிடத்தே ஒழியத் தனி மனிதரிடத்தல்ல.

மார்க்ஸ் வர்க்கப் போராட்டத்தை உபதேசிக்க வில்லை. அது அன்றும் இருந்தது, இன்றும் இருக்கிறது, ஏதாவது ஒரு வடிவத்தில் என்றும் இருப்பது என்ப தையே அவன் எடுத்துக்காட்டினான். தற்காலச் சமூகம் எந்தப் பொருளியல் நியதியை ஒட்டி இயங்கிவருகிறது என்பதை எல்லோருக்கும் தெரியக்காட்டுவதுதான் அவன் 'மூலதனம்' என்னும் நூலை எழுதியதன் நோக்க மாகும். அதன்பயனாகச் சமூகத்தில் பல்வேறு வர்க்கங் களுக்கிடையே உள்ள கொடிய போராட்டங்கள் அனை வருக்கும் புலனாயின. அப்போராட்டங்கள் வர்க்கப் போராட்டங்கள்தான் என்று பார்த்த மாத்திரத்தில் அறிவது கடினம். ஏனெனில், ஆளும் வர்க்கம் தன் னுடைய வர்க்கத்தன்மையை எப்போதும் மறைக்கவே முயல்கிறது. ஆனால், நடைமுதல் ஏற்பாட்டுக்கு ஏதா வது அபாயம் தோன்றுமாயின், உடனே அது தன் போர் வையைத் தூர எறிந்துவிட்டுத் தன்னுடைய உண்மை யான சொரூபத்தில் காட்சி அளிக்கிறது. அப்புறம் வர்க்கங்களுக் கிடையே பகிரங்கப் போராட்டம் தான். இத்தகைய பகிரங்க வர்க்கப் போராட்டம் நிகழும்

போது ஜனநாயக வெளி வேஷம் கலைந்து சாதாரணச் சட்டதிட்டங்கள் புழைக்கடை வழியாக ஓட்டம் பிடிக் கின்றன. சிலர் சொல்வதுபோல, இவ்வர்க்கப் போராட் டங்கள் தப்பெண்ணம் காரணமாகவோ, கிளர்ச்சிக் காரரின் துஷ்பிரசாரத்தினாலோ தோன்றுவன அல்ல. அவை சமூகத்தில் இயல்பாகவே அமைந்துள்ளன. வர்க்க நலன்களின் மாறுபாட்டுணர்வு அதிகரிக்க அதி கரிக்க அவையும் அதிகரிக்கின்றன.

மார்க்சின் இந்தச் சித்தாந்தத்தை இந்தியாவின் தற்போதைய நிலைமைகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்போம். பிரிட்டிஷ் அரசாங்கமானது தான் இந்தியாவை நியா யத்தை ஒட்டி இந்தியருடைய நன்மைக்காகவே ஆண்டு வருவதாக நெடுங்காலமாகச் சொல்லிவந்திருக்கிறது. முன்காலத்தில், நமது தேசத்தவரில் பலர் இதில் ஓரளவு உண்மை உண்டென்று நம்பியும் வந்தார்கள். ஆனால், இந்தியாவில் இன்று பிரிட்டிஷ் ஆட்சியை ஒரு பெரிய பொதுஜன இயக்கம் எதிர்த்து நிற்பதால், அதன் உண்மையான கோர சொரூபம் எல்லோருக்கும் வெளியாகி வருகிறது. பிரிட்டிஷாரின் ஏகாதிபத்தியச் சுரண்டல் முறை துப்பாக்கி முனையைத்தான் ஆதார மாகக் கொண்டிருக்கிறது என்னும் உண்மையைக் கண்ணுள்ளவர் யாவரும் காணலாம். அதை மூடிநின்ற ஜிகினா உடையும் தேனொழுகும் இன்சொல்லும் இப் போது மாயமாய் மறைந்துவிட்டன. விசேஷ அவசரச் சட்டங்களின் அமுல் நாடெங்கும் தாண்டவமாடுகிறது. பேச்சுரிமை, கூட்டவுரிமை, பத்திரிகையுரிமை முதலிய சாதாரண உரிமைகள் கூடப் பறிமுதல் செய்யப்படு கின்றன. விசேஷ அவசரச் சட்டங்களே நாட்டின் சாதாரணச் சட்டங்களாக விளங்குகின்றன. அதிகார வர்க்கத்துக்கு எதிர்ப்பு அதிகம் ஆக ஆக இத்தகைய

அடக்குமுறைக் கொடுங்கோன்மையும் அதிகமாகும். ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கத்துக்கு உலைவைக்க முயலும்போதும் இதுவே நிகழ்கிறது. இன்றைய தினம் நம் நாட்டில் விவசாயிகளுக்கும் தொழிலாளருக்கும் அவர்களுக்காக வேலைசெய்பவர்களுக்கும் அளிக்கப்படும் நீண்ட கொடும் சிறைத்தண்டனைகளில் நாம் அதே நிகழ்ச்சியைக் காண்கிறோம்.

ஆகவே, மார்க்ஸ் தன்னுடைய சரித்திர ஆராய்ச்சியில் கண்ட சித்தாந்தமானது சமூகம் சதா மாறிக்கொண்டும் முன்னேறிக் கொண்டும் இருக்கிறது என்னும் உண்மையை நமக்குத் தெரிவிக்கிறது. மார்க்சின் சித்தாந்தம் மாறுதலின்றி என்றும் ஒரே நிலையில் இருப்பதன்று; அது இயங்கும் ஆற்றல் வாய்ந்த ஒரு கொள்கையாகும். எது நேரினும் அது முன்னேறிக்கொண்டே செல்கிறது. ஒரு சமூக அமைப்பின் ஸ்தானத்தில் இன்னொரு சமூக அமைப்புத் தோன்றுகிறது. ஆனால், ஒரு சமூக அமைப்புத் தன் முழுவாழ்க்கையையும் வாழ்ந்து முழுவளர்ச்சியையும் அடைந்த பின்பே மறையும். சமூகம் பழைய அமைப்பை மீறி வளர்கிற காலத்தில், தன் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும் பழைய அமைப்பை உதறி எறிந்து விட்டுப் புதிய அமைப்பை மேற்கொள்ளுகிறது.

இந்தப் பெரிய சரித்திர அபிவிருத்திக் கிரமத்தில் உதவி புரிவதற்காகவே மனிதன் பிறந்திருக்கிறான் என்பது மார்க்சின் துணிவு. சரித்திரம் தன்னுடைய முன் கட்டங்களையெல்லாம் தாண்டிவிட்டது. இப்போது முதலாளித்துவ பூர்ஷுவா வர்க்கத்துக்கும் தொழிலாளர் வர்க்கத்துக்கும் இடையே நடக்கும் போராட்டம்தான் கடைசி வர்க்கப் போராட்டமாகும். (முதலாளித்துவம் முழு வளர்ச்சி பெற்றுள்ள தொழிலபிவிருத்தி மிக்க நாடுகளுக்கே இது பொருந்தும். முதலாளித்துவம் முழுவளர்ச்சி பெறாத மற்ற நாடுகள் பிற்போக்கு வாய்ந்திருப்பதால் அவற்றின் போராட்டங்கள் முற்கூறிய போராட்டங்களுக்குச் சற்று மாறாகவும் கலப்புத்தன்மை வாய்ந்தும் இருக்கின்றன. ஆனால், அந் நாடுகளில்கூட, உலகத்தின் ஒரு பாகத்துக்கும் மற்றொரு பாகத்துக்கும் உள்ள தொடர்பு அதிகரிக்க அதிகரிக்க, வர்க்கப் போராட்டத்தின் சில முக்கிய அம்சங்கள் காணப்படுகின்றன).

முதலாளித்துவத்துக்குக் கஷ்டத்தின்மேல் கஷ்டமும் நெருக்கடிக்குமேல் நெருக்கடியும் நேருமென்றும் கடைசியில் அது நிலைதவறிக் கவிழ்ந்து விடுமென்றும் மார்க்ஸ் கூறினான். அவன் அவ்வாறு கூறி இன்று 60 ஆண்டுகளுக்குமேல் ஆகிறது. இந்த 60 ஆண்டுகளுக்குள் முதலாளித்துவம் எத்தனையோ நெருக்கடிகளைப் பார்த்து விட்டது. ஆனால், அது முடிவடைதற்குப் பதிலாக அந் நெருக்கடிகளுக்குத் தப்பிப் பிழைத்து முன்னையிலும் அதிகப் பலம் பொருந்தி விளங்குகிறது. ருஷியாவில் மட்டும் அது முடிவடைந்து விட்டது. ஆனால், இதை நான் எழுதும்போது, உலகெங்குமே முதலாளித்துவத்துக்குப் பெரிய நோய் கண்டிருப்பதாகத் தெரிகிறது. அதன் நாடியைப் பிடித்துப் பார்க்கும் வைத்தியர்களும் இனிமேல் நம்புதற்கில்லையென்று தலையாட்டுகிறார்கள்.

முதலாளித்துவம் இதுவரையில் தன் வாழ்நாளை நீட்டிக்க முடிந்ததற்குக் காரணம் தொழிலபிவிருத்தி மிக்க மேல்நாடுகள் தங்கள் சாம்ராஜ்ய நாடுகளைச் சுரண்டிப் பிழைத்ததுதான் என்று சொல்லப்படுகிறது. இதை மார்க்ஸ் தன் கணக்கில் அவ்வளவாகச் சேர்த்துக் கொள்ளவில்லை. இந்தச் சாம்ராஜ்யச் சுரண்டல்

முதலாளித்துவத்தின் ஆயுளை விருத்தி செய்து அதற்குச் செழிப்பையும் அளித்தது. ஆனால், சுரண்டப்பட்ட ஏழை நாடுகள் இன்னலுற்றன.

தற்கால முதலாளித்துவ முறையின்கீழ், முதலாளி தொழிலாளியைச் சுரண்டுவதையும் பணக்காரன் ஏழையைச் சுரண்டுவதையும் நாம் கண்டிக்கிறோம். ஏழைகளும் தொழிலாளிகளும் சுரண்டப்படுவது உண்மையே. ஆனால், அதற்குச் சுரண்டலை அடிப்படையாகக் கொண்டுள்ள முதலாளித்துவ முறை காரணமே ஒழிய முதலாளியின் பிழை காரணம் அல்ல. அதே சமயத்தில், சுரண்டல் என்பது முதலாளித்துவத்தின் கீழ்த் தோன்றிய ஒரு புதுப் பிறவி என்று யாரும் எண்ணி விடக் கூடாது. கடந்த காலங்களிலும், எல்லா முறைகளின் கீழும் ஏழைகளும் தொழிலாளரும் சுரண்டப்பட்டே வந்திருக்கிறார்கள். முதலாளித்துவத்தின் கீழ் அவர்கள் சுரண்டப்பட்டாலும், முன் எப்போதும் இருந்ததை விடச் சற்றுச் சுகமாக இருக்கிறார்கள் என்பதுமறுக்க முடியாத உண்மையாகும். ஆனால், இது ஒன்றும் பெரிய ஆறுதலுக்கு உரிய விஷயமல்ல.

மார்க்சியத்தின் நவீன வியாக்கியான கர்த்தர்களுள் லெனின் தலைசிறந்தவன். அவன் அதை விளக்கமும் வியாக்கியானமும் செய்தது மட்டுமின்றிக் கிரியாம்சையிலும் நடத்திக் காட்டினான். ஆயினும், மார்க்சியம் என்பது மாற்றமுடியாத ஒரு கோட்பாடு அல்ல என்று லெனினே நம்மை எச்சரித்திருக்கிறான். மார்க்சியத்தின் மூலதத்துவத்தில் அவனுக்கு நம்பிக்கை உண்டு. ஆனால், அதன் விரிவுகளை ஆலோசியாமல் ஒப்புக் கொள்ளவோ, வாழ்க்கையின் பிரச்சினைகளுக்குப் பிரயோகிக்கவோ அவன் தயாராயில்லை. அவன் பின்வருமாறு கூறுகிறான் :

“மார்க்சிய சித்தாந்தம் பூரணமானதென்றோ குற்றம் கூற முடியாததென்றோ நாம் ஒருபோதும் கருதவில்லை. அதற்கு மாறாக அபேதவாதிகள் பல்லாற்றானும் வளர்க்க வேண்டிய ஒரு சாஸ்திரத்தின் மூல சித்தாந்தம் என்றே அதை நாம் கருதுகிறோம். இதைச் செய்யாவிட்டால் அபேதவாதிகள் வாழ்க்கையில் பின் தங்கிவிடுவார்கள். மார்க்சிய சித்தாந்தத்தைச் சுதந்திரமாகக் கற்கவேண்டிய அவசியம் சிறப்பாக ருஷிய அபேதவாதிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பது நமது கருத்து. ஏனெனில், மார்க்சிய சித்தாந்தம் பொதுநெறிகளைத்தான் நமக்குக் காட்டுகிறது. அவற்றை இங்கிலாந்தில் ஒருவிதமாகவும் பிரான்சில் வேறுவிதமாகவும் பிரயோகிக்கும்படி இருக்கலாம். அதே மாதிரி, பிரான்சில் பிரயோகிக்கும் முறை ஜெர்மனிக்கு ஒவ்வாமலும், ஜெர்மனியில் பிரயோகிக்கும் முறை ருஷியாவுக்கு ஒவ்வாமலும் போகலாம்.”

இக்கடிதத்தில் மார்க்சின் சித்தாந்தங்களைப்பற்றி உனக்குச் சிறிது கூற முயன்றுள்ளேன். எல்லாவற்றையும் நான் ஒரே கதம்பமாக அடித்துவிட்டேன். அதிலிருந்து உனக்கு ஏதாவது தெளிவுபட்டிருக்குமா என்பது எனக்குச் சந்தேகமே. அந்தச் சித்தாந்தங்களை நீ அறிந்துகொள்வது நல்லது. ஏனெனில் இன்று அவை பெருந்திரளான ஆண்களையும் பெண்களையும் ஆட்டி வைக்கின்றன. அவை நம்முடைய தேசத்தில் நமக்கும் உதவியாயிருக்கலாம். ஒருபெரிய தேசமாகிய ருஷியாவும், சோவியத் யூனியனின் மற்றப் பாகங்களும் இன்று மார்க்சைத் தங்களுடைய பிரதம குருவாகக் கொண்டுள்ளன. இன்றைய உலகின் மாபெரும் இன்னல்களுக்கு

மாற்றுகள் காண விரும்புவோர் மார்க்சின் ஏடுகளையே புரட்டிப் பார்க்கிறார்கள்.

டென்னிசன் என்னும் ஆங்கிலக்கவி எழுதியுள்ள சில வரிகளைக் கூறிவிட்டு இக்கடிதத்தை முடித்து விடுகிறேன் :

'பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே"

என்பது அவ்வரிகளின் தாற்பரியம்

135

இங்கிலாந்தில் விக்டோரியா சகாப்தம்

பிப்ரவரி 22, 1933.

அபேதவாத வளர்ச்சியைப் பற்றிய என்னுடைய கடிதங்களில், பிரிட்டிஷ் அபேதவாதம்தான் மற்றெல்லாவற்றையும்விட அதிகமான மிதவாதப் போக்குக் கொண்டது என்று நான் குறிபிட்டுள்ளேன். அக்காலத்தில் ஐரோப்பாவில் வழங்கிய லட்சிய வாதங்களில் பிரிட்டிஷ் அபேதவாதம்தான் புரட்சித்தன்மையில் மிகவும் குறைந்ததாகும். சிறிதுசிறிதாகவும் படிப்படியாகவும் மெள்ளமெள்ள நிலைமைகளைச் சீர்திருத்தவே அது விரும்பியது. சிலசமயங்களில், இங்கிலாந்தில் வியாபாரச் சுணக்கம் ஏற்படுவதுண்டு. அப்போது தொழிலாளருக்கு வேலை கிடைப்பதில்லை. வேலை கிடைத்தாலும் கூலி குறைவாகத்தான் கிடைக்கும். இத்தியாதி காரணங்களால் ஜனங்கள் கஷ்டப்படும்போது இங்கிலாந்தில் கூடப் புரட்சிஅலை எழுவதுண்டு. ஆனால், நிலைமைகள் சற்றுச் சீர்திருந்தியவுடன் அவ் அலை அடங்கிவிடும். 19-வது நூற்றாண்டில் இங்கிலாந்து காட்டிய இம்மிதவாத மனப்பான்மைக்கும் அதன் செல்வச் செழிப்புக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. ஏனெனில், செழிப்புக்கும் புரட்சிக்கும் உள்ள பொருத்தம் எட்டாம்வீட்டுப் பொருத்தம்தான். புரட்சி என்றால் பெரிய மாறுதல் என்று பொருள். ஆகவே, உள்ள நிலைமைகளிலேயே சற்றேறக்குறையத் திருப்தி அடைந்துள்ளவர்கள் எதிலும் அவசரப்பட்டு இறங்கி உள்ளதையும் போக்கடித்துக் கொள்ள விரும்பமாட்டார்கள். ஏனெனில், உள்ளதை விட மேலானநிலை வாய்க்கும் என்பது பட்டால் பட்ட பாக்கியந்தானே?

19-வது நூற்றாண்டு உண்மையில் இங்கிலாந்தின் நூற்றாண்டாகும். அந்நூற்றாண்டில் இங்கிலாந்தின் பிரக்கியாதி உலகெங்கும் பரவியது. 18-வது நூற்றாண்டில், தொழிற் புரட்சியிலும் தொழிற் சாலைகள் கட்டுவதிலும் பிறநாடுகளை முந்திக் கொண்ட இங்கிலாந்து, 19-வது நூற்றாண்டின் பெரும் பகுதி வரையிலும் அந்த ஸ்தானத்தை இழவாமலிருந்தது. நான் ஏற்கெனவே கூறியபடி, அது உலகின் தொழிற் பட்டறையாக விளங்கியது. தூரதேசங்களிலிருந்து வரும் ஐசுவரிய ஆறுகள் கலக்கும் இரத்தினாகரமாகத் திகழ்ந்தது இங்கிலாந்து. இந்தியாவையும் இதரக் காலனிகளையும் சுரண்டுவது காரணமாக அதற்குக் கொழுத்த கப்பம் இடைவிடாது கிடைத்துக் கொண்டிருந்தது. அதனால் இங்கிலாந்தின் கவுரவம் பெரிதும் உயர்ந்தது. அநேகமாக எல்லா ஐரோப்பிய நாடுகளிலும் மாறுதல்கள் நிகழ்ந்து வந்த காலையில் இங்கிலாந்தில் மட்டும் புரட்சி என்கிற நாமதேயமே இல்லை. அது எதற்கும் அசையாமல் கற்பாறை போல் தலைநிமிர்ந்து நின்றது. அவ்வப்போது அங்கு நெருக்கடிகள் நேர்ந்தது உண்மையே. ஆனால், இன்னும் சிலருக்கு வோட்டுரிமை அளிப்பதன் மூலம் அந்நெருக்கடிகள் தவிர்க்கப்பட்டன. இதற்கிடையில் பிறநாடுகளில் விளைந்த மாறுதல்களையும் நாம் கண்டோம். பிரான்சில் குடியரசுகளும் சாம்ராஜ்யங்களும் அதிவிரைவில் மாறிமாறித் தோன்றிக் கொண்டிருந்தன. இதாலிய தீபகற்பம் நெடுங்காலமாகப் பிளவுபட்டுக் கிடந்த பின்பு ஐக்கியமடைந்த ஒரு புதிய நாடாக எழுந்தது. ஜெர்மனியில் ஒரு புதிய சாம்ராஜ்யம் பிறந்தது. பெல்ஜியம், டென்மார்க், கிரீஸ் போன்ற சிறு நாடுகளும் பல வழிகளில் மாறுதலுற்றன. ஐரோப்பாவிலேயே புராதன ராஜவமிசமாகிய ஹாப்ஸ்பர்க் வமிசத்தின்

அரச பீடமாக இன்றும் விளங்கிய ஆஸ்திரியாவானது பிரான்சு, இதாலி, பிரஷியா ஆகிய நாடுகளால் அடிக்கடி கருவபங்கம் செய்யப்பட்டது. கிழக்கே, ருஷியா மட்டும் மாறுதலின்றிப் பழையபடியே வாழ்ந்து வந்தது. அங்கே ஜார் சக்கரவர்த்தியானவர் பெரிய மொகலாயச் சக்கரவர்த்தியைப் போல யதேச்சாதிகாரம் செலுத்தி வந்தார். ஆனால், ருஷியா தொழிலபிவிருத்தியற்ற ஒரு விவசாய நாடாக இருந்தது. புதிய கருத்துகள், புதிய தொழில் ஆகியவற்றின் மூச்சுக் காற்றுகூட அதன் மீது வீசவில்லை.

இங்கிலாந்தின் சாம்ராஜ்யஸ்ரீயும் சமுத்திரா திக்கமும் அதற்கு ஐரோப்பாவிலும் உலகத்திலும் தலையான ஒரு இடத்தை நல்கின. உலகத்திலேயே முதலிடம் வகித்த நாடு இங்கிலாந்துதான். அது தன்னுடைய நீண்ட கைகளை உலகெங்கும் பரப்பி நின்றது. அமெரிக்கா அதன் சொந்தத் தொல்லைகளிலேயே இன்னும் ஆழ்ந்திருந்தது. அது உலக விவகாரங்களைவிட உள்நாட்டு வளர்ச்சியில் அதிகமாக ஈடுபட்டிருந்தது. போக்குவரவு சாதனங்களில் விளைந்து வந்த ஆச்சரியகரமான மாறுதல்கள் உலகைக் குறுக்கியும் சுருக்கியும் வந்தன. இதுவும் இங்கிலாந்துக்கு நன்மையாகவே முடிந்தது. இதனால் இங்கிலாந்து தூரதேசங்கள் மீதுள்ள தன்பிடியை இன்னும் இறுக்குவது சாத்தியமாயிற்று. இத்தனை மாறுதல்களுக்கிடையிலும் இங்கிலாந்தின் அரசாங்கம் மட்டும் மாறாமல் அப்படியே இருந்தது. அதற்குச் சட்டரீதியான முடியரசு என்று பெயர். அதாவது, ராஜா-பார்லிமெண்டு ஆட்சி முறை, இவ்விருதிறத்தாரில் ராஜாவுக்குள்ள அதிகாரம் மிகவும் குறைவு; சகல அதிகாரங்களும் பார்லிமெண்டுக்குத்தான். பார்லிமெண்டை முதன் முதலில் ஒரு சில நிலச்சுவான்தார்களும் பணக்கார வியாபாரிகளுமே

தேர்ந்தெடுத்து வந்தார்கள். ஆனால், 19-வது நூற்றாண்டில் நெருக்கடி ஏற்படும் போதெல்லாம் அதைத் தவிர்ப்பதற்காக மேலும் மேலும் அதிகமான பேருக்குப் பார்லிமெண்டு வோட்டுரிமை அளிக்கப்பட்டு வந்தது.

19-வது நூற்றாண்டின் பெரும்பகுதியும் இங்கிலாந்தின் ராணியாக இருந்தவள் விக்டோரியா. விக்டோரியா ராணி ஜெர்மன் அரசவமிசமாகிய ஹனோவர் வமிசத்தைச் சேர்ந்தவள். 18-வது நூற்றாண்டில் அவ்வமிசம் பிரிட்டிஷ் சிம்மாசனத்துக்குப் பல 'ஜார்ஜ்'களை அளித்தது. 1837-ல் விக்டோரியா ராணி சிம்மாசனம் ஏறியபோது அவளுக்கு வயது பதினெட்டு. அவள் அந் நூற்றாண்டு முடிவுவரையில், அதாவது 63 ஆண்டுகள் அரசுபுரிந்தாள். அவள் அரசுபுரிந்த அந் நீண்டகாலப் பகுதி இங்கிலாந்தில் 'விக்டோரியா சகாப்தம்' என்று சொல்லப்படுகிறது. விக்டோரியா ராணி ஐரோப்பாவிலும் பிற இடங்களிலும் நிகழ்ந்த பல பெரு மாறுதல்களைக் கண்டாள். பழைய எல்லைகள் மறைந்து புதிய எல்லைகள் தோன்றியதையும், ஐரோப்பாவில் விளைந்த புரட்சிகளையும், பிரான்சில் நிகழ்ந்த மாறுதலையும், ஐக்கிய இதாலியின் எழுச்சியையும், ஜெர்மன் சாம்ராஜ்யத்தின் உதயத்தையும் அவள் கண்டாள். அவள் இறப்பதற்குள் ஐரோப்பாவுக்கும் ஐரோப்பிய அரசர்களுக்கும் ஒரு பாட்டி மாதிரி ஆகிவிட்டாள். ஆனால், விக்டோரியாவைப் போல் நீண்டகாலம் அரசு புரிந்த இன்னொரு அரசன் ஐரோப்பாவில் இருந்தான். அவனும் விக்டோரியாவும் சமகாலத்தவர்களே. அவன்தான் ஆஸ்திரியாவை ஆண்ட ஹாப்ஸ்பர்க் வமிசத்தைச் சேர்ந்த பிரான்சிஸ் ஜோசப். ஐரோப்பாவின் புரட்சி ஆண்டாகிய 1848-ல் ஆடிக்கொண்டிருந்த தன் சாம்ராஜ்யச் சிம்மாசனத்தில் அமர்ந்தபோது அவனுக்கும் வயது பதினெட்டுதான். 68 ஆண்டுகள்

அவன் அரசுபுரிந்தான். அவன் தான் இருந்தவரையில் ஆஸ்திரியாவும் ஹங்கேரியும் இன்னும் மற்றப் பாகங்களும் தன்னுடைய சாம்ராஜ்யத்தைவிட்டுப் போகாதவாறு பார்த்துக் கொண்டான். ஆனால், உலகயுத்தம் வந்து அவனையும் அவனுடைய சாம்ராஜ்யத்தையும் ஒழித்தது.

பிரான்சிஸ் ஜோசப்பை விட விக்டோரியா அதிருஷ்டக்காரி. அவளுடைய ஆட்சிக்காலத்தில் இங்கிலாந்தின் வல்லமை வளர்ந்து அவளுடைய சாம்ராஜ்யம் பெருகியது. அவள் பட்டத்துக்கு வந்தபோது கானடாவில் தொல்லை விளைந்தது. இங்கிலாந்தின் காலனியாகிய கானடா இங்கிலாந்தை எதிர்த்துப் பகிரங்கமாகக் கலகம் செய்தது. கானடாவாசிகள் பலர் இங்கிலாந்தினிடமிருந்து பிரிந்து தங்களுக்கு அண்டையிலுள்ள அமெரிக்காவுடன் சேர விரும்பினார்கள். ஆனால், அமெரிக்கச் சுதந்திரயுத்தம் கற்பித்த பாடத்தை இங்கிலாந்து மறந்துவிடவில்லை. ஆகவே, உடனே அது கானடியருக்கு விரிவான சுயஆட்சி நல்கி அவர்களைத் திருப்திப்படுத்த முயன்றது. அதற்குப்பின் வெகுவிரைவில், அது பூரண சுயஆட்சி பெற்ற ஒரு குடியேற்றநாடு ஆகியது. ஒரு காலனியைக் குடியேற்ற நாட்டு அந்தஸ்துக்கு உயர்த்துவதென்பது சாம்ராஜ்ய அரசியலில் ஒரு புதுப் பரீட்சையாகும். ஏனெனில், சுதந்திரமும் சாம்ராஜ்யமும் சேர்ந்து வாழமுடியாது. ஆனால், கானடாவுக்குச் சுதந்திரம் அளிக்காத பட்சத்தில் அதை அடியோடு இழக்க நேர்ந்திருக்கும். கானடாவை இழவாமலிருப்பதற்காக இங்கிலாந்து அப்புதுப் பரீட்சையை மேற்கொள்ள வேண்டியதாயிற்று. கானடியரில் பெரும்பாலோர் ஆங்கிலேயரின் கால் வழியில் வந்தவர்கள். தாய்நாட்டுப் பாசம் அவர்களை இங்கிலாந்துடன் பிணித்து நின்றது. மேலும், கானடா அபிவிருத்தி செய்யப்படாத ஒரு பெரிய தேசம்.

அதன் ஜனத்தொகையும் குறைவு. ஆகவே, கானடியர் தங்கள் நாட்டை அபிவிருத்தி செய்வதற்குப் பிரிட்டிஷ் தொழிலையும் பிரிட்டிஷ் முதலையும் எதிர்பார்க்கும் நிலையில் இருந்தார்கள். அதனால், பரஸ்பரம் இருநாட்டின் நலன்களுக்கும் யாதொரு முரண்பாடும் நேரவில்லை. ஆகவே, அவ்விரு நாடுகளுக் கிடையில் முளைத்த விசித்திரமான புதிய உறவுக்கு இடையூறு ஒன்றும் நேரவில்லை.

அந்நூற்றாண்டின் கடைசியில், பிரிட்டிஷ் குடியேற்றங்களுக்குச் சுயாட்சி வழங்கும் இம்முறை ஆஸ்திரேலியா விஷயத்திலும் அனுஷ்டிக்கப்பட்டது. அந்நூற்றாண்டின் இடைக்காலம் வரையில் பிரிட்டனில் தண்டனை அடைந்தவர்கள் குடியேறிய இடமாகவே ஆஸ்திரேலியா இருந்தது. அந்நூற்றாண்டு முடிவதற்குள் அது பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் சுதந்திரம்பெற்ற ஒரு குடியேற்ற நாடு ஆகிவிட்டது.

இதற்கு மாறாக, இந்தியாவில் பிரிட்டிஷார் தங்களுடைய பிடியை இன்னும் இறுக்கினார்கள். அவர்கள் யுத்தத்துக்கு மேல் யுத்தம் செய்து தங்களுடைய இந்திய சாம்ராஜ்யத்தை விஸ்தரித்துக் கொண்டே போனார்கள். இந்தியா பிரிட்டனின் சார்பு நாடாக இருந்தது. சுயாட்சியின் வாசனைகூட இங்கு வீசவில்லை. பிரிட்டிஷார், இந்தியாவில் நிகழ்ந்த 1857-ம் வருஷத்துப் புரட்சியை அடக்கிச் சாம்ராஜ்யத்தின் முழுப் பலத்தையும் இந்தியர் உணருமாறு செய்தார்கள். அவர்கள் இந்தியாவை எத்தனை விதமான வழிகளில் சுரண்டி வந்தார்கள் என்கிற விஷயம் முன்பே கூறியிருக்கிறேன். பிரிட்டனுக்குச் சாம்ராஜ்யம் என்றாலே இந்தியாதான். இவ்வுண்மையை உலகுக்குப் பறை சாற்றுவதற்காக இந்தியாவின் சக்கரவர்த்தினி என்னும் பட்டத்தை விக்டோரியாராணி

மேற்கொண்டாள். இந்தியா அல்லாமல் வேறு பல சிறு சார்பு நாடுகளும் உலகின் பல்வேறு பாகங்களில் பிரிட்டனுக்கு இருந்தன.

இவ்வாறு, பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் இருவிதமான நாடுகளைக் கொண்ட ஒரு விசித்திரக் கலவையாக விளங்கியது. ஒரு பக்கம், சுயாட்சி பெற்ற நாடுகள்; அவை பிற்பட்டுச் சுதந்திரக் குடியேற்ற நாடுகள் ஆயின. இன்னொரு பக்கம் சார்பு நாடுகளும் பாதுகாப்பு நாடுகளும். குடியேற்ற நாடுகள் ஏறக்குறைய ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் போல்வன. அவை தாய்நாடாகிய இங்கிலாந்தின் தலைமையை ஒப்புக் கொண்டிருந்தன. சார்பு நாடுகளும் பாதுகாப்பு நாடுகளுமோ அக்குடும்பத்தில் வேலைக்காரரின் ஸ்தானத்தையும் அடிமைகளின் ஸ்தானத்தையும் வகித்தன. அவை கண்டார் சிரிக்கும்படியாகவும் கேட்டார் இகழும்படியாகவும் நடத்தப்பட்டும் ஓயாது சுரண்டப்பட்டும் வந்தன. குடியேற்ற நாடுகளில் வாழ்ந்தவர் அனைவரும் பிரிட்டிஷாரும் ஐரோப்பியரும் அவர்களுடைய சந்ததியாரும் ஆவர். சார்பு நாடுகளில் வாழ்ந்தவர் அனைவரும் பிரிட்டிஷார் அல்லாதவரும் ஐரோப்பியர் அல்லாதவரும் ஆவர். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் இவ்விரு பகுதிகளுக்குமுள்ள இவ்வேற்றுமை இன்றளவும் அப்படியே இருக்கிறது.

சாம்ராஜ்ய போகத்திலும் மகத்தான ஐசுவரியத்திலும் புரளும் இங்கிலாந்து ஏறக்குறையத் திருப்தி அடைந்த ஒரு நாடாகவே இருந்தது. ஆனால், பூராவும் திருப்தி அடைந்த ஒரு நாடு என்று அதைச் சொல்ல முடியாது. ஏனெனில், சாம்ராஜ்யப் பசி எளிதில் அடங்குவதன்று. அது தன்னுடைய எல்லையை எப்போதும் விஸ்தரிக்கவே முயல்கிறது. ஆயினும், இங்கிலாந்துக்குத் தன் சாம்ராஜ்யத்தை மேலும் விஸ்தரிக்க வேண்டும் என்னும்

எண்ணத்தைவிட உள்ளதைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்னும் கவலையே அதிகமாக இருந்தது. முக்கியமாக அதன் சாம்ராஜ்யத்துக்கே திலகம் போன்ற இந்தியாவை அது உயிர் போனாலும் இழக்கத் தயாரா யில்லை. இங்கிலாந்தின் அயல் நாட்டுக் கொள்கை முழுதும் இந்தியாவைச் சுற்றியும் இந்தியாவுக்குச் செல்லும் கடல் மார்க்கங்களைச் சுற்றியுமே சுழன்று கொண்டிருந்தது. இதற்காகவே, இங்கிலாந்து எகிப்து விவகாரங்களில் தலையிட்டுக் கடைசியில் அந்த நாட்டையே தன்னுடைய ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வந்துவிட்டது. இதேபோல் பாரசீகத்திலும் ஆப்கானிஸ்தானத்திலும் அது தலையிட்டது. அது சூயஸ் கால்வாய் கம்பெனியின் பங்குகளை யெல்லாம் சாமர்த்தியமாக வாங்கிக்கொண்டு சூயஸ் கால்வாயையும் தன் வசப்படுத்திக் கொண்டது.

19-வது நூற்றாண்டின் பெரும்பகுதியும் ஐரோப்பாக் கண்டத்திலுள்ள வல்லரசுகள் இங்கிலாந்துக்குத் தொந்திரவு கொடுக்கவில்லை. சொந்தத் தொல்லைகளும் சொந்தச் சண்டைகளுமே அவற்றிற்குச் சரியாயிருந்தன. அவற்றின் பரஸ்பர மாற்சரியங்களைப் பயன்படுத்திக்கொண்டு அவற்றிற்குள் சிண்டு முடிந்துவிடும் தன்னுடைய பரம்பரைத் தொழிலை இங்கிலாந்து எதோக்தமாக நடத்தி வந்தது. இவ்வாறு, இங்கிலாந்து ஐரோப்பியத் துலாக்கோலைச் சமநிலையில் தூக்கிப் பிடித்துக்கொண்டிருந்தது. பிரான்சை ஆண்ட மூன்றாவது நெப்போலியனிடம் அதற்குப் பயம் இருந்தது. ஆனால், அவன் வீழ்ச்சி அடைந்த பிறகு பிரான்சு மீண்டும் தலை தூக்குவதற்குச் சிறிது காலம் சென்றது. இங்கிலாந்து அதை ஒரு பெரிய எதிரியாகக் கருதக்கூடிய நிலைக்கு ஜெர்மனி இன்னும் வரவில்லை. ஆனால், ஒரு தேசம் மட்டும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை

அச்சுறுத்திக்கொண்டிருந்தது. அதுதான் ஜார் சக்கரவர்த்தியின் ருஷியா. ருஷியா பிற்போக்கு வாய்ந்திருந்தாலும், படத்தைப் பார்த்தால் அது எவ்வளவு பெரிய தேசம் என்பது தெரியவரும். இங்கிலாந்து இந்தியாவிலும் தென் ஆசியாவிலும் பரவிவந்த காலத்தில் ருஷியா வட ஆசியாவிலும் மத்திய ஆசியாவிலும் பரவிவந்தது. ருஷியாவின் எல்லைக்கும் இந்தியாவுக்கும் அதிக தூரம் இல்லை. ருஷியாவின் அண்மையே பிரிட்டிஷாருக்குச் சிம்ம சொப்பனமா யிருந்தது. இந்தியாவைப் பற்றிப் பேசிய காலையில் பிரிட்டிஷாரின் ஆப்கானியப் படையெடுப்புகளைப் பற்றியும் யுத்தங்களைப் பற்றியும் கூறியுள்ளேன். அவற்றிற்கு முக்கியக் காரணம் ஜார் ருஷியாவிடம் அவர்களுக்கிருந்த அச்சமேயாகும்.

ஐரோப்பாவிலும் இங்கிலாந்துக்கும் ருஷியாவுக்கும் கைகலப்பு ஏற்பட்டது. குளிர்காலத்தில் உறைந்து போகாமல் வருஷம் பூராவும் திறந்திருக்கக்கூடிய நல்ல துறைமுகம் ஒன்றை அடைய ருஷியா ஏங்கிக்கொண்டிருந்தது. அது எல்லை வெளிபெருத்த நாடாயினும், அதன் துறைமுகங்களெல்லாம் ஆர்க்டிக் வட்டத்தில் இருந்தபடியால் வருஷத்தில் சில மாதங்களாவது உறைந்து விடும். இந்தியா, ஆப்கானிஸ்தானம், பாரசீகம் ஆகிய நாடுகளின் வழியாக ருஷியா கடலை அடைய ஒட்டாமல் பிரிட்டன் தடுத்துவிட்டது. பாஸ்பரஸ் ஜலசந்தியும் டார்டனல்சும் துருக்கி வசத்திலிருந்தமையால் கருங்கடலும் ருஷியாவுக்கு உபயோகமில்லை. முன் காலத்தில் கான்ஸ்டாண்டிநோபிளை அடைய ருஷியா முயன்றதுண்டு. ஆனால், அப்போதெல்லாம் துருக்கி ஒரு பலம் பொருந்திய நாடாக இருந்தபடியால் அதன் எண்ணம் ஈடேறவில்லை. இப்போதோ துருக்கிக்குப் பழைய பலம் இல்லை. ருஷியா இத்தனை நாளாக ஆசைப்

பட்டுக்கொண்டிருந்த கான்ஸ்டாண்டிநோபிள் அதற்குக் கிடைத்துவிடும்போ லிருந்தது. அது கையை நீட்டிக் கான்ஸ்டாண்டிநோபிளை எடுத்துக்கொள்ள முயற்சித்தது. ஆனால், பிரிட்டன் அதற்குக் குறுக்கே நின்றது. முற்றிலும் தன்வல காரணங்களுக்காகப் பிரிட்டன் துருக்கியை ஆதரித்தது. 1854-ல் நடந்த கிரைமிய யுத்தமும், அதற்குப்பின் இன்னொரு யுத்தம் ஏற்படும் என்கிற பயமும் சேர்ந்து ருஷியாவின் வாயில் மண்ணைப் போட்டன.

1854-56-ல் நடந்த கிரைமிய யுத்தத்தில்தான், காயம் பட்டவர்களுக்கு உதவி புரிவதற்காக ஒரு வீரப் பெண் தொண்டர் படையைப் பிளாரன்ஸ் நைடிங்கேல் என்பவள் நடத்திச் சென்றாள். அக்காலத்தில் இது மிகவும் புதுமையான விஷயம். ஏனெனில், விக்டோரியா சகாப்தத்தில் வாழ்ந்த மத்திய வகுப்பு ஸ்திரீகள் வீட்டைவிட்டு வெளியில் கிளம்புபவர்கள் அல்ல. பிளாரன்ஸ் நைடிங்கேல் தன்னுடைய உதாரணத்தினால் அவர்களைத் தங்கள் வீடுகளிலிருந்து வெளியே இழுத்துப் பிறருக்குத் தொண்டு செய்யும் புது நெறியில் புகுத்தினாள். ஆகவே, மாதர் இயக்க வளர்ச்சியில் அவளுக்கு ஒரு முக்கிய ஸ்தானம் உண்டு.

பிரிட்டனின் அரசாங்க முறை சட்ட நீதியான முடியரசு வகையைச் சேர்ந்ததாகும். அல்லது, அதை ஒரு 'முடிசூடிய குடியரசு' என்று சொல்லலாம். இதன்கீழ் 'முடிசூடிய' பாகத்துக்கு (அரசருக்கு) உண்மையான அதிகாரம் ஒன்றும் கிடையாது. அரசர் பார்லிமெண்டின் நம்பிக்கைக்குப் பாத்திரமான மந்திரிகளின் கைப்பொம்மையாகவே கருதப்பட்டார். அரசியலில் மந்திரிகள் கிழித்த கோட்டை அவர் தாண்ட முடியாது. அவர்கள் சொல்வதைத்தான் அவர் சொல்ல

முடியும். அரசர் 'அரசியலுக்கு மேற்பட்டவர்' என்று சொல்லப்படுகிறது. ஆனால், அறிவோ திடசித்தமோ உள்ள எவனும் பிறர் ஆட்டியபடியே ஆடும் வெறும் பொம்மையாக இருக்க முடியாது. ஆகவே, பிரிட்டிஷ் அரசருக்கோ அல்லது அரசிக்கோ பொது விவகாரங்களில் தலையிடக்கூடிய சந்தர்ப்பம் நிறைய இருக்கிறது. ஆனால், அரசரின் தலையீடு திரை மறைவில்தான் நிகழ்வது வழக்கம். பொது ஜனங்கள் அதைத் தெரிந்து கொள்வதே அபூர்வம்; தெரிந்து கொண்டாலும் நெடுங் காலத்துக்குப் பின்புதான் தெரிந்துகொள்ள முடியும். அரசர் வெளிப்படையாகத் தலையிடுவாராயின் அது ஜனங்களால் பெரிதும் வெறுக்கப்படலாம். அதனால் முடியரசுக்கே ஆபத்து நேர்ந்தாலும் நேரலாம். ஒரு சட்டநீதியான முடியரசருக்கு விசேஷமாக இருக்க வேண்டிய குணம் சதுரப்பாடுதான். அது மட்டும் அவருக்கு இருக்குமாயின் அவர் பல விஷயங்களைத் தம்மிஷ்டம்போல் கொண்டுபோகக் கூடும்.

அரசியல் நீதியாகவும் சட்ட நீதியாகவும் பார்லிமெண்டு நாடுகளின் முடி சூடிய மன்னர்களுக்கு உள்ள அதிகாரத்தைவிட அமெரிக்கப் பிரசிடெண்டு போன்ற குடியரசு நாடுகளின் பிரசிடெண்டுகளுக்கு உள்ள அதிகாரம் எவ்வளவோ அதிகம். ஆனால், குடியரசுகளின் பிரசிடெண்டுகள் அடிக்கடி மாறுகிறார்கள். அரசர்களோ நெடுங்காலம் இருப்பவர்கள். ஆகையால் அவர்கள் விவகாரங்களை ஒரு குறிப்பிட்ட போக்கில் அமைதியாகவும், ஆனால், இடைவிடாமலும் கொண்டு செலுத்தக்கூடும். அரசர் சமூக உலகில் முதன்மையாக விளங்குகிறபடியால் அந்தச் செல்வாக்கை உபயோகித்துச் சூழ்ச்சிகள் புரிவதற்கு அவருக்கு எண்ணற்ற சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. அரச தர்பார்கள் என்றாலே

சர்வாதிகாரப் போக்குக்கும், உயர்வு தாழ்வுகளுக்கும், பட்டம் பதவிகளுக்கும், வகுப்பு வேற்றுமைகளுக்கும் விளைநிலம் என்றுதான் பொருள். இதுவே மொத்த தேசத்துக்கும் முன்மாதிரியாக விளங்குகிறது. இதற்கும் சமூக சமத்துவம், வகுப்பு வேற்றுமை ஒழிப்பு ஆகியவற்றுக்கும் பொருந்தவே பொருந்தாது. இங்கிலாந்தில் உள்ள ராஜ தர்பார் ஆங்கிலேயரின் மனப்பான்மையை உருவாக்குகிறது என்பதிலும், சமூகத்திலுள்ள வகுப்பு வேற்றுமைகளை அவர்கள் ஒப்புக் கொள்ளுமாறு செய்வது அதுவே என்பதிலும் ஐயமில்லை. அல்லது, ஒன்றுக்குமேல் ஒன்றாக உயர்ந்து செல்லும் வகுப்பு அமைப்பை இங்கிலாந்து ஒப்புக்கொண்டிருப்பதால் தான், உலகின் பெரும்பாலான பெரிய நாடுகளிலிருந்து மறைந்துவிட்ட முடியரசு இங்கிலாந்தில் மட்டும் இன்னும் உயிரோடிருக்கிறது என்று சொல்வது முன்சொல்லியதை விடச் சரியாக இருக்கலாம். 'ஆங்கிலேயர் பிரபுக்களைக் காதலிக்கிறார்கள்' என்பது ஒரு பழமொழி. இது சத்தியமான பேச்சு. ஐரோப்பாவிலோ, அல்லது அமெரிக்காவிலோ, அல்லது ஜப்பான் இந்தியா நீங்கலாக ஆசியாவிலோ, எவ்விடத்தும் இங்கிலாந்தில் காணப்படுவது போன்ற வகுப்பு வேற்றுமைகள் கிடையா. முன் காலத்தில் அரசியல் ஜனநாயகத்திலும், தொழில் முறையிலும் முன்னணியில் நின்ற இங்கிலாந்து சமூக இயலில் இவ்வளவு பிற்போக்கும் பழமைப்பற்றும் வாய்ந்ததாக இருந்தது ஒரு விந்தையே!

பிரிட்டிஷ் பார்லிமெண்டு "பார்லிமெண்டுகளுக்கெல்லாம் தாய்" என்று சொல்லப்படுகிறது. அது நீண்டகாலம் பெருமையோடு வாழ்ந்து வந்திருக்கிறது. அரசரின் யதேச்சாதிகாரத்துக்கு எதிரான போரில் அது பல்லாற்றானும் பிறருக்கு வழிகாட்டியாயிருந்தது. அதன்

முயற்சியால் அரசரின் யதேச்சாதிகாரம் போய்ப் பார்லிமெண்டின் 'ஒரு சிலராட்சி' வந்தது. அதாவது, ஒரு சில நிலச்சுவான்தார்கள், வியாபாரிகள் கைக்கு ஆட்சி மாறியது. அப்புறம், கொம்பு தம்பட்டத்துடன் ஜனநாயகம் அரங்கினுள் பிரவேசித்தது. பல போராட்டங்களுக்குப்பின், காமன்ஸ் சபைக்கு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் வோட்டுரிமை பெரும்பாலோருக்கு அளிக்கப்பட்டது. இதன்பயனாக, உண்மையான ஜனநாயக ஆட்சி தோன்றவில்லை; தனவந்தர்களான தொழில் முதலாளிகளின் கைக்குப் பார்லிமெண்டு மாறியதுதான் கண்ட பலன். இவ்வாறு, ஜனநாயக ஆட்சிக்குப் பதிலாகத் தனவந்தர் ஆட்சி ஏற்பட்டது.

ஆட்சி நடத்தவும் சட்டமியற்றவும் பிரிட்டிஷ் பார்லிமெண்டு ஒரு விசித்திர முறையை அபிவிருத்தி செய்தது. அதுதான் 'இரு கட்சி முறை' யாகும். அதாவது, தேசத்தில் அரசியல் கட்சிகள் இரண்டு உண்டு. அவ்விரு கட்சிகளுக்கும் அதிக வித்தியாசம் கிடையாது. ஒன்றுக்கொன்று விரோதமான இரு கொள்கைகளை அவை குறிக்கவில்லை. இரண்டும் பணக்காரர் கட்சிகளே. இரண்டுக்கும், அமுலிலுள்ள சமூக அமைப்பை மாற்றும் நோக்கம் கிடையாது. ஒரு கட்சியில் பழைய நிலச் சுவான்தார் வகுப்பைச் சேர்ந்தவர்கள் அதிகமாக இருந்தார்கள். இன்னொரு கட்சியில் புதிய தொழிற்சாலை முதலாளி வகுப்பைச் சேர்ந்தவர்கள் அதிகமாக இருந்தார்கள். இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் வலக்கண்ணுக்கும் இடக்கண்ணுக்கும் உள்ள வித்தியாசம் போன்றதே. ஒரு கட்சிக்கு 'டோரி' கட்சி (Tory) என்று பெயர். இன்னொரு கட்சிக்கு 'விக்கு' கட்சி (Whig) என்று பெயர். பிற்பட்டு, 19-வது நூற்றாண்டில், அவை 'கன்சர்வேடிவ்' (பழைமை

யோம்பிகள்) கட்சி என்றும் 'லிபரல்' (தாராள வாதிகள்) கட்சி என்றும் புதுப் பெயர்கள் பூண்டன.

மற்ற ஐரோப்பிய நாடுகளில் நிலைமை வேறு விதமாயிருந்தது. அந்நாடுகளில் வெவ்வேறு வேலைத் திட்டங்களையும் லட்சியங்களையும் கொண்ட உண்மையான கட்சிகள் பார்லிமெண்டுகளுக்கு உள்ளிலும் வெளியிலும் மும்முரமாகப் போரிட்டன. ஆனால், இங்கிலாந்தில் நடந்த கட்சிச் சண்டையெல்லாம் குடும்பச் சண்டை மாதிரி. அங்கு எதிர்ப்பு என்பதே ஒருவகையான ஒத்துழைப்பாக இருந்தது. ஒரு கட்சி அரசாங்கத்தை நடத்தும்போது இன்னொரு கட்சி எதிர்ப்பில் இருக்கும். பிறகு எதிர்ப்பில் இருந்த கட்சி அரசாங்கத்தை எடுத்துக் கொள்ளும்; அரசாங்கத்தை நடத்திய கட்சி எதிர்க் கட்சியாகிவிடும். பணக்காரருக்கும் ஏழைகளுக்கும் உள்ள உண்மையான மாறுபாடும் வர்க்கப் போராட்டமும் பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்குள் தலைகாட்டவில்லை. ஏனெனில், பார்லிமெண்டில் இருந்த இரண்டு பெரிய கட்சிகளும் பணக்காரர் கட்சிகளே. ஐரோப்பாக் கண்டத்திலுள்ள மற்ற நாடுகளைப் போல் மக்களின் உணர்ச்சியைத் தூண்டும் மதப் பிரச்சினைகளோ, வகுப்புப் பிரச்சினைகளோ, தேசியப் பிரச்சினைகளோ இங்கிலாந்தில் இல்லை. அந்நூற்றுண்டின் கடைசியில் ஐரிஷ் தேசிய அங்கத்தினர்கள் பார்லிமெண்டுக்கு வந்தபோதுதான் சற்று உண்மையான பரபரப்பு ஏற்பட்டது. ஏனெனில், அயர்லாந்தின் சுதந்திரம் அவர்களுக்கு ஒரு தேசியப் பிரச்சினை ஆகும்.

இத்தகைய இரு பெரிய கட்சிகள் பார்லிமெண்டுக்கு அபேட்சகர்களை நிறுத்தும்போது, தனி நபர்களும் சிறு கோஷ்டிகளும் தேர்தலில் நின்று வெற்றி பெறுவது கஷ்டம். ஜனநாயகம், வோட்டுரிமை எல்லாமிருந்தும்

ஏழைவோட்டருக்குச் செல்வாக்கு ஒன்றும் அதிகமாக இல்லை. அவன் ஏதாவது ஒரு கட்சி அபேட்சகருக்குத் தன் வோட்டைக் கொடுக்கலாம்; அல்லது, ஒருவருக்கும் வோட்டுச் செய்யாமல் வீட்டில் இருந்து விடலாம். வோட்டர்களின் கதிதான் இது வென்றால், அவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் பார்லிமெண்டுக் கட்சி அங்கத்தினர்களுக்கும் அதிகச் சுதந்திரம் ஒன்றும் இல்லை. அவர்கள் பார்லிமெண்டில் தங்கள் கட்சித் தலைவர்களின் கட்டளைக் கிணங்க வோட்டுச் செய்வதைவிட அதிகமாக வேறொன்றும் செய்துவிட முடியாது. ஏனெனில், இம் முறையில் தான் ஒரு கட்சி தன்னுடைய கட்டுப்பாட்டையும் பலத்தையும் பெருக்கி, எதிர்க்கட்சியைத் தோற்கடித்து, அரசாங்கத்தைக் கைப்பற்ற முடியும். அத்தகைய ஒற்றுமையும் கட்டுப்பாடும் ஒருவகையில் நல்லன என்பதில் ஐயமில்லை. ஆனால், மேற்கூறிய முறைக்கும் உண்மையான ஜனநாயகத்துக்கும் வெகுதூரம்.

ஜனநாயகத்தின் முன்னேற்றத்துக்கு உதாரணமாக இங்கிலாந்தையே பெரும்பாலும்சுட்டிக் காட்டுகிறார்கள். ஆனால், அங்குக்கூட ஜனநாயகம் சிறப்பான முறையில் வெற்றி பெற்றது என்று சொல்ல முடியாது. 'தகுதியால் மிக்கோரை ஜனங்கள் அரசாளத் தேர்ந்தெடுப்பது எப்படி?' என்பதுதான் அரசாங்கத்தின் பெரும் பிரச்சினையாகும். அப்பிரச்சினை இங்கிலாந்தில் திருப்திகரமாகத் தீர்க்கப்படவில்லை. நடைமுறையில் ஜனநாயகம் என்பது பொதுக் கூட்டத்தில் கரடியாய்க் கத்துவதும், தங்களுக்கு முன்பின் தெரியாத ஒருவனுக்கு வோட்டுக் கொடுக்கும்படி ஏழை வோட்டர்களைத் தூண்டுவதுமாக இருக்கிறது. பொதுத் தேர்தல்களை, யாரோ, பொது ஏலங்கள் என்று வருணித்தார்கள். அது உண்மையே. பொதுத் தேர்தல்களின் போது ஜனங்க

ளுக்குள்ளெல்லாவிதமான வாக்குறுதிகளும் வழங்கப்படுகின்றன. இத்தனை இப்பந்திகளுக்கிடையிலும் இங்கிலாந்தில் போலி ஜனநாயகம் தொடர்ந்து நடைபெற்று வந்ததற்குக் காரணம் அதன் செல்வச் செழிப்புதான். அது அரசாங்க முறையை முறிந்து விடாமல் காப்பாற்றியதோடு ஜனங்களுக்கு ஓரளவு திருப்தியையும் அளித்தது.

19-வது நூற்றாண்டின் பிற்பாதியில் பிரிட்டனின் இரு அரசியல் கட்சிகளுக்கும் பிரபல தலைவர்களாக விளங்கியவர்கள் டிஸ்ராலியும் கிளாட்ஸ்டனும் ஆவர். டிஸ்ராலி என்பவர் (அவர் பின்னர் பீகன்ஸ்பீல்டு பிரபு ஆனார்.) கன்சர்வேடிவ் கட்சிக்குத் தலைவர். அவர் பன்முறை பிரதம மந்திரியாக இருந்தார். அவர் ஒரு யூதர். யூதர்கள் என்றாலே ஆங்கிலேயருக்குப் பிடிக்காது. மேலும், அவருக்குப் பெரிய இடத்துச் சம்பந்தமும் கிடையாது. அத்தகைய ஒருவர் பன்முறை பிரிட்டனின் பிரதம மந்திரி ஆவதென்பது பெரிய காரியம். அவர் கேவலம் தம்முடைய திறமையாலும் விடாமுயற்சியாலுமே தமக்கிருந்த பிரதிகூலங்களை வென்று முன்னுக்கு வந்தார். அவர் ஒரு பெரிய சாம்ராஜ்யவாதி. அவர்தான் விக்டோரியா ராணியை இந்தியாவின் சக்கரவர்த்தினி ஆக்கினார். கிளாட்ஸ்டன் என்பவர் லிபரல் கட்சிக்குத் தலைவர். இங்கிலாந்தின் பழைமையான பணக்காரக் குடும்பங்கள் ஒன்றிலிருந்து வந்தவர். அவரும் பன்முறை பிரிட்டனின் பிரதம மந்திரியாக இருந்தார். சாம்ராஜ்ய வாதம், அயல்நாட்டுக் கொள்கை ஆகியவற்றைப் பொறுத்த வரையில் டிஸ்ராலிக்கும் கிளாட்ஸ்டனுக்கும் வகுப்புரீதியான (Racial) வேற்றுமை யாதொன்றும் கிடையாது. ஆனால், டிஸ்ராலி கொஞ்சம் வெகுளி; அவர் தம்முடைய சாம்ராஜ்ய வாதத்தை மறைத்து வைக்கத் தலைகொள்ளவில்லை.

கிளாட்ஸ்டன் அப்படியல்ல. அவர் சரியான ஆங்கிலேயர். தம்முடைய சாம்ராஜ்ய வாதத்தை அவர் இன் சொற்களாலும் இதோபதேசங்களாலும் மூடி மறைத்து வந்தார். அவர் பேசுவதைப் பார்த்தால் கடவுள் கட்டளைப் படிதான் அவர் ஒவ்வொன்றும் செய்வதாகத் தோன்றும். பால்கன் நாடுகளில் துருக்கியர் செய்த கொடுமைகளுக்கு எதிராக அவர் ஒரு பெரிய பிரசாரம் தொடங்கினார். கிளாட்ஸ்டனை எதிர்க்கவேண்டும் என்பதற்காகவே, டிஸ்ராலி துருக்கியர் பட்சமாகப் பேச ஆரம்பித்தார். உண்மை என்னவென்றால், துருக்கியரும், பால்கன் நாடுகளில் வாழ்ந்த பல தேசிய வகுப்புகளைச் சேர்ந்த அவர்களுடைய பிரஜைகளும் ஆகிய இரு திறத்தாரும் குற்றமுடையவர்களே. அவர்கள் மாறிமாறிப் படுகொலைகளும் கொடிய அக்கிரமங்களும் புரிந்து வந்தார்கள்.

கிளாட்ஸ்டன் அயர்லாந்துக்குச் சுயாட்சி வழங்குவதையும் ஆதரித்தார். ஆனால், அதற்குப் பிரிட்டிஷாரின் எதிர்ப்புப் பலமாயிருந்தது. அதனால், லிபரல் கட்சியே பிளவுபட்டு அதன் ஒரு பிரிவு கன்சர்வேடிவ் கட்சியில் போய்ச் சேர்ந்துகொண்டது. இவ்வாறு லிபரல் கட்சியிலிருந்து பிரிந்தவர்கள், அயர்லாந்து பிரிட்டனுடன் ஐக்கியப்பட்டே இருக்கவேண்டுமென்று விரும்பியதால், ஐக்கியவாதிகள் என்று அழைக்கப்பட்டார்கள்.

ஆனால், இதைப் பற்றியும், விக்டோரியா சகாப்தத்தில் நிகழ்ந்த இன்னும் மற்ற விஷயங்களைப்பற்றியும் பின்வரும் கடிதம் ஒன்றில் விரிவாகப் பேசுவோம்.

136

இங்கிலாந்து உலகத்தின் வட்டி வியாபாரியாக மாறுகிறது

பிப்ரவரி 23, 1933.

19-வது நூற்றாண்டில், இங்கிலாந்து செழிப்புற்றோங்கியதற்கு அதன் தொழில் மேன்மை ஒரு காரணமாகும்; காலனிகளையும் சார்பு நாடுகளையும் சுரண்டிப் படைத்த செல்வம் இன்னொரு காரணமாகும். முக்கியமாக, இங்கிலாந்தின் செல்வம் தினே தினே வளர்ந்து வந்ததற்கு நான்கு தொழில்கள் மூலகாரணமாயிருந்தன. அவற்றை 'அடிப்படைத்' (Basic) தொழில்கள் என்று சொல்லலாம். அவை பஞ்சு, இரும்பு, நிலக்கரி, கப்பல் கட்டுதல் ஆகிய தொழில்களாகும். அவையன்றி எத்தனையோ பெரியதொழில்களும் (Heavy Industries), சிறிய தொழில்களும் (Light Industries) அந் நான்கைச் சுற்றியும் அவற்றிற்குப் புறம்பாகவும் தோன்றி வளர்ந்தன. பெரிய வியாபார நிலையங்களும் பாங்கு நிலையங்களும் (Business and Banking Houses) தோன்றின. பிரிட்டிஷ் வியாபாரக் கப்பல்கள் உலகின் எல்லாப் பாகங்களிலும் காணப்பட்டன. அவை பிரிட்டிஷ் சரக்குகளை மட்டுமின்றி மற்றத் தொழிலபிவிருத்தி நாடுகளில் செய்யப்பட்ட பொருள்களையும் ஏற்றிச் சென்றன. உலகின் பல பாகங்களுக்கும் சரக்குகளை ஏற்றிச் செல்வதில் பிரிட்டிஷ் கப்பல்களே பிரதானமாக விளங்கின. லண்டனிலுள்ள லாயிட்ஸ் இன்ஷூரன்ஸ் ஆபீசு உலகத்தின் கப்பல் தொழிலுக்கெல்லாம் கேந்திரஸ்தானமாகத் திகழ்ந்தது. மேற்கூறிய தொழில்களையும்

வியாபாரங்களையும் நடத்தியவர்கள்தான் பார்லிமெண்டிலும் ஆதிக்கம் வகித்தார்கள்.

இங்கிலாந்தில் செல்வம் ஆறாகப் பிரவகித்தது. உயர் வகுப்பாரும் மத்திய வகுப்பாரும் மேலும் மேலும் பணக்காரர் ஆனார்கள். அச் செல்வத்தில் ஒரு பகுதி தொழிலாளருக்கும் கிடைத்தபடியால் அவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயர்ந்தது. பணக்காரர் தங்களுக்கு மேலும் மேலும் கிடைத்து வந்த பணத்தை என்ன செய்வது? அதை வெறுமே பூட்டிவைப்பது அறிவுடைமை ஆகாது. ஒவ்வொருவனும் தொழிலை அபிவிருத்தி செய்து மேலும் மேலும் பொருள்களை உற்பத்தி செய்யவும், மேலும் மேலும் லாபம் சம்பாதிக்கவும் துடியாய்த் துடித்துக் கொண்டிருந்தான். அந்தப் பணத்தில் பெரும் பகுதி இங்கிலாந்திலும் ஸ்காட்லாந்திலும் புதிய தொழிற்சாலைகள் கட்டுவதற்கும், புதிய ரயில்வேக்கள் போடுவதற்கும், இன்னும் இவை போன்ற காரியங்களுக்கும் பயன்பட்டது. சில காலத்துக்குப்பின் அங்கு ஏராளமான தொழிற்சாலைகள் தோன்றி, 'சர்வம் தொழில் மயம்' ஆகி விட்டது. அதனால் உள்நாட்டிலேயே போட்டி அதிகரித்தது. போட்டி அதிகரிக்கவே லாபம் குறைந்தது. ஆகவே, பணம் படைத்த முதலாளிகள் தங்கள் பணத்தை லாபகரமான வழிகளில் போடுவதற்கு வெளிநாடுகளை நோக்கலானார்கள். வெளிநாடுகளும் அதற்குரிய சந்தர்ப்பங்களை அவர்களுக்கு நிறைய அளித்தன. அப்போது உலகெங்கும் ரயில் போடுவதும், தந்திக்கம்பி ஸ்தாபிப்பதும், கடல் தந்தி அமைப்பதும், தொழிற்சாலைகள் கட்டுவதுமாயிருந்தார்கள். ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும், ஆப்பிரிக்காவிலும், பிரிட்டிஷ் சார்பு நாடுகளிலும் மேற்கூறிய தொழில்களில் பிரிட்டன் தன்னுடைய உபரி பணத்தைக் கொட்டியது.

அமெரிக்கா வளம் மிக்க நாடு என்பதில் ஐயமில்லை. ஆயினும், அது விரைவில் வளர்ந்து வந்தது. ஆகவே, அங்கும் ரயில் முதலியன போடுவதற்கு ஏராளமான பிரிட்டிஷ் மூலதனம் பயன்பட்டது. தென் அமெரிக்காவில், முக்கியமாக ஆர்ஜென்டைனில், பிரிட்டிஷாருக்குப் பெரிய தோட்டங்கள் இருந்தன. பிரிட்டிஷ் முதலைக்கொண்டுதான் கானடாவும் ஆஸ்திரேலியாவும் அபிவிருத்தி செய்யப்பட்டன. சீனாவில், சலுகைகள் பெறுவதற்காக நடந்த போராட்டத்தைப் பற்றி முன்பே கூறியிருக்கிறேன். இந்தியாவைப் பற்றிக் கேட்க வேண்டியதே இல்லை. இங்குப் பிரிட்டிஷார் வைத்தது தானே சட்டம்! இங்கு அவர்கள் ரயில் போடுதல் முதலிய காரியங்களுக்குக் கடன் கொடுத்து உதவினார்கள். ஆனால், அதற்குரிய வட்டி முதலான நிபந்தனைகளை அவர்கள் இஷ்டம்போல் ஏற்படுத்திக்கொண்டார்கள்.

இவ்வாறு, இங்கிலாந்து உலகத்தின் வட்டி வியாபாரியாகவும், லண்டன் உலகத்தின் பணமார்க்கெட்டாகவும் விளங்கின. இங்கிலாந்து மற்ற நாடுகளுக்குக் கடன் கொடுத்தது என்றால், வெள்ளியாகவோ தங்கமாகவோ ரொக்கமாகவோ பணத்தை மூட்டைகட்டி அனுப்பியது என்று அர்த்தமல்ல. நவீன வியாபாரம் இம்முறையில் நடப்பதில்லை. எல்லாவற்றிற்கும் வெள்ளியோ தங்கமோ கொடுப்பதற்குப் போதிய வெள்ளியும் தங்கமும் உலகில் கிடையா. முட்டாள்கள்தான் பொன்னுக்கும் வெள்ளிக்கும் இல்லாத ஏற்றத்தை அளிக்கிறார்கள். பரிவர்த்தனைக்கும், பண்டத்தைக் கைமாற்றுவதற்கும் அவை ஒரு சாதனமே ஒழிய வேறில்லை. பொன்னையும் வெள்ளியையும் யாரும் உண்ணவோ உடுக்கவோ அல்லது வேறு விதமாக உபயோகிக்கவோ முடியாது. வேண்டுமானால் அவற்றை நகைகளாகச் செய்து உடம்பில் மாட்டிக்கொள்ளலாம். அதனால் ஒருவருக்கும் பலனில்லை. உபயோகிக்கக்கூடிய சரக்குகள்தான் உண்மையான செல்வம். ஆகவே, இங்கிலாந்து, அல்லது பிரிட்டிஷ் முதலாளிகள் ஒரு நாட்டுக்கு முன்பணம் கொடுத்தார்கள் என்றால், ரொக்கமாகப் பணம் கொடுத்தார்கள் என்று அர்த்தமில்லை. தொழிற்சாலை அமைப்பதற்கு வேண்டிய யந்திரங்களையோ, ரயில் போடுவதற்கு வேண்டிய சாமான்களையோ அவர்கள் அந்நாட்டுக்கு அனுப்பினார்கள் என்றுதான் அர்த்தம். அதாவது, வெளி நாடு ஒன்றில் தொழிற்சாலையிலோ அல்லது ரயில்வேயிலோ அவர்கள் தங்களுடைய முதலைப் போட்டுவைத்தார்கள். அதனால் பிரிட்டிஷ் தொழிலுக்கு அனுகூலம் விளைந்ததோடு பிரிட்டிஷ் முதலாளிகள் தங்களுடைய உபரி பணத்தை நல்ல லாபம் தரும் வழிகளில் போடுவதற்கும் வழி ஏற்பட்டது.

வட்டிக்குக் கடன் கொடுப்பதென்பது மிகவும் லாபகரமான தொழில். அத்தொழிலை இங்கிலாந்து அதிகமாக மேற்கொள்ளவும் அதன் செல்வமும் வளர்ந்தது. அதிலிருந்து வரும் லாபத்தினாலும் லாபப் பங்கீடுகளாலுமே வாழக்கூடிய ஒரு பெருங்கூட்டம் அங்குத் தோன்றியது. அவர்கள் ஒரு வேலையும் செய்யாமல் வீட்டில் குந்திக்கொண்டே சாப்பிடக்கூடிய நிலையில் இருந்தார்கள். ஒரு ரயில்வேக் கம்பெனியிலோ, தேயிலைத் தோட்டத்திலோ அல்லது வேறு ஏதாவது தொழிலிலோ அவர்களுக்குப் பங்குகள் இருக்கும். அதிலிருந்து லாபப் பங்கீடுகள் ஒழுங்காக வந்துகொண்டிருக்கும். இவ்வாறு வேலை செய்யவேண்டிய அவசியமின்றிக் காலம் தள்ளக்கூடிய உல்லாச புருஷர்கள் பிரெஞ்சு ரிவீரா கடற்கரையிலும் இதாலியிலும் ஸ்விட்சர்லாந்திலும் குடியேறி

வாழ்ந்து வந்தார்கள். ஆனால், அவர்களில் பெரும்பாலோர் இங்கிலாந்திலேதான் இருந்தார்கள்.

இங்கிலாந்திடமிருந்து கடன் பெற்ற நாடுகள் அதற்குரிய வட்டியையோ அல்லது லாபப் பங்கீடு களையோ எவ்வாறு செலுத்தின? அந்நாடுகளும் அதைப் பொன்னாகவோ வெள்ளியாகவோ அனுப்ப முடியாது. வருஷா வருஷம் கொடுப்பதற்கு வேண்டிய பொன்னும் வெள்ளியும் அவர்களிடம் கிடையா. ஆகவே, அவர்கள் தாங்கள் கொடுக்க வேண்டியதைச் சரக்குகளாகக் கொடுத்தார்கள். சரக்குகள் என்றால் தொழிற்சாலை களில் செய்யப்பட்ட பொருள்கள் அல்ல. தொழிற் சாலை உற்பத்தியில்தான் இங்கிலாந்து முதன்மையான நாடாயிற்றே! எனவே, கடன்வாங்கிய நாடுகள் உணவுப் பொருள்களையும் மூலப்பொருள்களையுமே அனுப்ப வேண்டியதாயிற்று. இம்முறையில், கோதுமையும், தேயிலையும், காப்பியும், இறைச்சியும், பழமும், திராட்சை ரசங்களும், பஞ்சும், கம்பளியும் இங்கிலாந்துக்குள் வந்து குவிந்துகொண்டே இருந்தன.

இரு நாடுகளுக்கிடையே வர்த்தகம் என்பது பொருள்களைப் பரிவர்த்தனை செய்து கொள்வதில்தான் அடங்கியிருக்கிறது. ஒரு நாடு வாங்கிக்கொண்டே இருப்பதும் இன்னொரு நாடு விற்றுக்கொண்டே யிருப்பதும் முடியாத காரியம். இப்படி நடப்பதாயின், வாங்குகிற நாடு பொன்னையோ வெள்ளியையோதான் விற்கிற நாட்டுக்குக் கொடுக்கவேண்டி யிருக்கும். அவ்வாறு கொடுத்தால் சிறிது காலத்திற்குள் இருக்கிற பொன்னும் வெள்ளியும் தீர்ந்துபோய் அப்புறம் கொடுப்பதற்கு ...மிராது. அல்லது அந்த ஒருதலைப்பட்ச வர்த்தகம் ...நின்று போய்விடும். பரஸ்பர வர்த்தகம் ...ர்த்தனைதான். அது சில சமயங்களில் ஒரு

நாட்டுக்குச் சாதகமாகவும், சில சமயங்களில் இன்னொரு நாட்டுக்குச் சாதகமாகவும் இருந்து சரிக்கட்டிக்கொண்டு போகும். 19-வது நூற்றாண்டில் இங்கிலாந்தின் வர்த்த கத்தை நாம் பரிசோதிப்போமாயின், அது வெளியில் அனுப்பிய பொருள்களைவிடப் பிற நாடுகளிடம் வாங்கிக் கொண்ட பொருள்களே அதிகம் என்பது தெரியவரும். அதாவது, இங்கிலாந்து ஏராளமான பொருள்களை ஏற்றுமதி செய்தாலும், அது இறக்குமதி செய்த பொருள்கள் ஏற்றுமதி செய்த பொருள்களை விட மதிப் பில் அதிகமாயிருந்தன. இரண்டுக்கும் இன்னொரு வித்தியாசமும் இருந்தது. அது ஏற்றுமதி செய்த பொருள்கள் எல்லாம் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்டவை. இறக்குமதி செய்த பொருள்களோ பெரும்பாலும் உணவுப்பொருள்களும் மூலப்பொருள் களும் ஆகும். இம்முறையில் இங்கிலாந்து விற்றதை விட வாங்கியது அதிகம் என்று தோன்றுகிறது. இது நல்ல வியாபாரமுறை என்று தோன்றவில்லை. ஆனால், அந்த அதிகப்படியான இறக்குமதியைத்தான் இங்கி லாந்து கொடுத்திருந்த கடனுக்குக் கிடைத்த லாபம் என்று கொள்ளவேண்டும். அது, கடன்கார நாடுகளும் இந்தியாவைப் போன்ற சார்புநாடுகளும் இங்கிலாந்துக்கு அளித்த கப்பமாகும்.

இங்கிலாந்தின் முதலீடுகளிலிருந்து (Investment) கிடைத்த லாபம் முழுதும் இங்கிலாந்துக்கு வரவில்லை. அதில் பெரும் பகுதி கடன்வாங்கிய நாடுகளிலேயே தங்கி விட்டது. அதைப் பிரிட்டிஷ் முதலாளிகள் மீண்டும் அந் நாடுகளிலேயே முதலீடாக வைத்தார்கள். ஆகவே, பிரிட்டனிலிருந்து புதிதாகப் பணமோ சரக்குகளோ போகாமலேயே, வெளி நாடுகளிலுள்ள பிரிட்டிஷ் முதலீடுகள் பெருகிக் கொண்டே சென்றன.

இந்தியாவிலுள்ள ரயில்வேக்களிலும், கால்வாய்களிலும், இன்னும் எண்ணற்ற பல தொழில்களிலும் பிரிட்டிஷார் போட்டிருக்கும் ஏராளமான முதலீடுகளைப்பற்றி நமக்கு அடிக்கடி ஞாபக மூட்டப்படுகிறது. இந்த இனத்தில் மட்டும் இந்தியா இங்கிலாந்துக்குக் கொடுக்கவேண்டிய "கடன்" மிகப் பெரிய ஒரு தொகையாயிருக்கும் என்று சொல்லப்படுகிறது. இந்தியா இதை ஒப்புக் கொள்ளவில்லை. இந்தியா ஒப்புக் கொள்ளாததற்குப் பல ஆதாரங்கள் உண்டு. அவற்றையெல்லாம் நாம் இங்கே ஆராய வேண்டியதில்லை. பிரிட்டிஷார் தங்களுடைய முதலீடுகள் என்று சொல்வனவற்றில் பெரும் பகுதியும் பிரிட்டனிலிருந்து புதிதாக வந்த மூலதனத்தைக் குறிக்கவில்லை என்கிற ஒன்றை மட்டும் இங்கே நாம் கவனிக்க வேண்டும். இந்தியாவில் கிடைத்த லாபம் இந்தியாவிலேயே மீண்டும் முதலீடுகள் ஆக்கப்பட்டது. கிளைவ் காலத்தில் இந்தியாவிலிருந்து பொன்னும் மணியும் கொள்ளை கொள்ளையாக இங்கிலாந்துக்குக் கொண்டு போகப்பட்டன. அதற்கப்புறம் பிரிட்டிஷார் இந்தியாவை அவ்வளவு பச்சையாகச் சுரண்டவில்லை. அவர்களுடைய சுரண்டல்முறை சற்று இலை மறைவு காய் மறைவான வேறு ரூபங்களை எடுத்துக் கொண்டது. அவர்கள் அடைந்த லாபத்தில் ஒரு பகுதி இந்தியாவிலேயே மீண்டும் முதலீடாக்கப்பட்டது.

பிரிட்டன், தன்னுடைய வட்டி வியாபாரத்தைத் தொடர்ந்து நடத்தவேண்டுமாயின், தான் பிற நாடுகளுக்குக் கொடுக்கும் கடனுக்குரிய வட்டியை அவற்றிடமிருந்து சரக்குகளாகத்தான் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதை நன்கு உணர்ந்தது. அதைப் பொன்னாகத்தான் கொடுக்க வேண்டும் என்று அது வற்புறுத்துவதற்கில்லை. அதற்குரிய காரணங்களை மேலே

காட்டினேன். அதன் பயனாக இரு முக்கிய விளைவுகள் தோன்றின. முதலாவது, இங்கிலாந்து தனக்கு வேண்டிய உணவுப் பொருள்களை வெளி நாடுகளிலிருந்து வரவழைத்துக் கொண்டு தன் நாட்டின் விவசாயத்தைக் கவனிக்காமல் விட்டு விட்டது. அது வெளி நாட்டு விற்பனைக்காகத் தன்னுடைய தொழிற்சாலை உற்பத்தியைப் பெருக்குவதிலேயே முழுக் கவனத்தையும் செலுத்தியது. தன்னுடைய விவசாயிகளின் துயரத்தையும் அது பொருட்படுத்தவில்லை. அதற்கு வேண்டிய உணவுப் பொருள் வெளி நாடுகளிலிருந்து மலிவாகக் கிடைக்குமாயின், அதைத் தானே உற்பத்தி செய்ய வேண்டிய அவசியம் இல்லை அல்லவா? விவசாயத்தை விடத் தொழிலிலிருந்து அதிக வருமானம் கிடைக்குமாயின், விவசாயத்தைக் கட்டிக் கொண்டு மாரடிப்பானேன்? ஆகவே, இங்கிலாந்து கேவலம் தொழில் நாடாகித் தன்னுடைய உணவுக்கு வெளி நாடுகளை எதிர்பார்த்து நின்றது.

இரண்டாவதாக, இங்கிலாந்து 'தடையற்ற வியாபாரக்' கொள்கையை (Free Trade) அனுஷ்டிக்க ஆரம்பித்தது. அதாவது, வெளி நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் பொருள்களுக்கு அது வரி விதிக்கவில்லை; அல்லது, மிக மிகக் குறைவாக வரி விதித்தது. தொழில் உற்பத்தியில் அது முன்னணியில் இருந்த படியால், அத்துறையில் பிற நாடுகள் தன்னுடன் போட்டியிடும் என்கிற பயம் அதற்கு நெடுங்காலம் வரையில் உண்டாகவே இல்லை. வெளிநாட்டுப் பொருள்களுக்கு வரி விதிப்பதாயின் அது வெளி நாடுகளிலிருந்து இங்கிலாந்துக்கு வரும் உணவுப் பொருள்களையும் மூலப் பொருள்களையும் தான் பிடிக்கும். அதனால் அதன் ஜனங்களுக்கு இன்றியமையாத உணவுப் பொருள்களின் விலையும், அதன்

தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் சாமான்களின் விலையும்தான் உயரும். மேலும், இங்கிலாந்து வெளிநாட்டுப் பொருள்களுக்கு அதிக வரி விதித்து அவற்றை வர வொட்டாமல் தடுத்து விட்டால், இங்கிலாந்தினிடம் கடன் வாங்கியுள்ள அந்நாடுகள் தாங்கள் கொடுக்கவேண்டிய வட்டியைக் கொடுப்பது எங்ஙனம்? வட்டிக்காக அவை சரக்குகள் தானே கொடுக்க முடியும்? அமெரிக்கா, பிரான்சு, ஜெர்மனி ஆகிய நாடுகளெல்லாம் வளரும் பருவத்திலுள்ள தங்கள் தொழில்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக வெளி நாட்டுப் பொருள்களுக்கு வரி விதித்துவந்த போது, இங்கிலாந்து மட்டும் தடையற்ற வியாபாரத்தை மேற்கொண்டதற்கு இதுதான் காரணமாகும்.

விவசாயத்தைப் புறக்கணிப்பது, தொழிலை விருத்தி செய்வது, வெளியிலிருந்து உணவு தருவித்துக் கொள்வது, வெளிநாடுகளிலிருந்து வரும் திறைப் பணத்தைக் கொண்டு சுகமாகக் காலட்சேபம் செய்வது— என்கிற 19-வது நூற்றாண்டுப் பிரிட்டிஷ் கொள்கை பார்ப்பதற்கு லாபகரமாகவும் சவுகரியமாகவும்தான் இருந்தது. ஆனால், அதில் அபாயங்கள் இல்லாமலில்லை. அவ்வபாயங்கள் இப்போதும் உள்ளமை தெளிவு. அக்கொள்கை இரண்டு விஷயங்களை அடிப்படையாகக்கொண்டிருந்தது. முதலாவது, தொழில் துறையில் இங்கிலாந்தின் முதன்மை. இரண்டாவது, இங்கிலாந்தின் வெளிநாட்டு வியாபார மிகுதி. அவ்விரண்டுக்கும் ஆபத்து நேர்ந்தால் அதன் கதி என்ன? அப்புறம், இங்கிலாந்து தனக்கு வேண்டிய உணவை எவ்வாறு விலை கொடுத்துப் பெற முடியும்? சரி, விலை தான் கொடுத்து விடுகிறது. விலை கொடுத்து வாங்கிய உணவுப் பொருள்களை வெளி நாடுகளிலிருந்து கப்பல்களில் தானே கொண்டு வர வேண்டும்? அவ்வாறு

கொண்டு வரவொட்டாமல் பலம் பொருந்திய ஒரு பகைவன் வழி மறிப்பானாயின், அது என்ன செய்யும்? சென்ற உலக யுத்தத்தின் போது உணவுப்பொருள் சப்ளை அநேகமாகத் தடுக்கப்பட்டு விட்டபடியால் பிரிட்டிஷ் மக்கள் ஏறக்குறையப் பட்டினி கிடக்க வேண்டியதாயிற்று. இதைவிடப் பெரிய அபாயம், வெளிநாடுகளின் போட்டியால் அதன் வெளிநாட்டு வியாபாரம் நாளாவட்டத்தில் சுருங்கி வருவதேயாம். 1880—89-ல் அமெரிக்காவும் ஜெர்மனியும் தங்கள் பொருள்களை விற்பதற்கு வெளிமார்க்கெட்டுகளைத் தேட ஆரம்பித்த காலையில், இப்போட்டி ஒரு திட்டமான வடிவை அடைந்தது. சிறிது சிறிதாக மற்ற நாடுகளும் தொழிலபிவிருத்தி பெற்றுத் தங்கள் பொருள்களை விற்பதற்குரிய மார்க்கெட்டுகளைத் தேடலாயின. இப்பொழுதோ, உலகிலுள்ள எல்லா நாடுகளும் தொழில் துறையில் ஓரளவு முன்னேறியிருக்கின்றன. ஒவ்வொரு நாடும் பெரும்பாலும் தனக்கு வேண்டிய பொருள்களைத் தானே செய்து கொண்டு வெளிநாட்டுப் பொருள்களை வரவொட்டாமல் தடுக்க முயல்கிறது. இந்தியா வெளிநாட்டுத் துணியைப் பகிஷ்கரிக்க விரும்புகிறது. இந்நிலையில் லங்காஷயர் துணித் தொழில் என்னாவது? இவ்வாறே, வெளிநாட்டு வியாபாரத்தை நம்பியிருக்கும் மற்றப் பிரிட்டிஷ் தொழில்கள் என்னாகும்?

மேற்கூறிய வினாக்களுக்கெல்லாம் விடை காண்பது இங்கிலாந்துக்கு எளிதான ஒரு காரியமல்ல. வருங்காலத்தில் அது ரொம்பவும் கஷ்டப்பட வேண்டியிருக்கும் என்று தோன்றுகிறது. அது தன்னுடைய வெளிவியாபாரங்களையெல்லாம் அடக்கிக் கொண்டு, தனக்கு வேண்டிய உணவு முதலியவற்றைத் தானே உற்பத்தி செய்துகொண்டு தன்மட்டில் வாழ்வதென்பதும் முடி

யாத காரியம். சிக்கல் நிறைந்த நமது தற்கால உலகம்
அதற்கு இடம் கொடாது. அது தன்னை உலகிலிருந்து
துண்டித்துக் கொள்வதாயினும், அளவுக்கு மீறிப்
பெருகியிருக்கும் தன்னுடைய ஜனத்தொகைக்கு வேண்
டிய உணவை அது உற்பத்தி செய்ய முடியுமா என்பது
சந்தேகம். ஆனால், இவ்வினாக்களெல்லாம் தற்காலத்
தைச் சேர்ந்தவை. 19-வது நூற்றாண்டில் இவ்வினாக்கள்
அவ்வளவு முக்கியம் வாய்ந்தவையாக இல்லை. ஆகவே,
அப்போது இங்கிலாந்து தன்னுடைய வருங்காலத்தைப்
பணயமாக வைத்துச் சூதாடியது. தானே தொடர்ந்து
எப்பொழுதும் தலைமைஸ்தானம் வகிக்க முடியும்
என்னும் நம்பிக்கையின்பேரில்தான் அது அவ்வாட்டத்
தில் இறங்கியது. ஆட்டம் என்னவோ பெரிய ஆட்டம்.
செலித்தால் எல்லாம் உண்டு, தோற்றால் எல்லாம்
போய்விடும். இருந்தால் இவ்வுலகத்தின் தலைசிறந்த
நாடாயிருக்க வேண்டும், இல்லாவிட்டால் அடியோடு
தொலைந்து போகவேண்டும். இவ்விரண்டுக்கும் இடைப்
பட்ட நிலை இங்கிலாந்துக்கு இல்லை. ஆனால், விக்
டோரியா சகாப்தத்தில் வாழ்ந்த மத்திய வகுப்பு ஆங்கி
லேயன் தன்னம்பிக்கையிலோ மண்டைக் கருவத்திலோ
குறைந்தவனாயில்லை. நீண்ட காலமாகவே பாக்கிய
லட்சுமியும் ஜெயலட்சுமியும் அவன் பங்கில் இருந்து
வந்தார்கள். தொழிலிலும் வியாபாரத்திலும் அவனே
முதன்மை வகித்தான். இவையெல்லாம் சேர்ந்து அவன்
கண்ணை மறைத்து விட்டன. மற்ற மனிதவர்க்கத்தை
விடத் தானே உயர்ந்தவன் என்று அவன் உறுதியாக
நம்பத் தலைப்பட்டான். வெளி நாட்டினரைக் கண்
டாலே அவனுக்கு எகத்தாளியாகவும் இளக்காரமாகவும்
இருந்தது. ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் வாழ்ப
வர்கள் தான் மனிதநிலையில் தாழ்ந்த காட்டு

பிராண்டிகள். அவர்களை ஆண்டவன் படைத்ததன்
முழு நோக்கமும், பிற்போக்கான மனித சமூகங்களை
ஆளுவதற்கும் சீர்திருத்துவதற்கும் ஆங்கிலேயருக்கு
இயற்கையாக உள்ள மேதை வெளிப்படுவதற்கான ஒரு
சந்தர்ப்பத்தை அளிப்பதற்குத்தான். நிற்க, ஐரோப்
பாக்கண்டத்தில் வாழ்பவர்கள் கூட ஆங்கிலேயனின்
கண்ணுக்கு அறியாமையிலும் மூட நம்பிக்கையிலும்
உழலும் அந்நியர்களாகவே காட்சி அளித்தார்கள். நாக
ரிகச் சிகரத்தின் உச்சியில் வீற்றிருப்பது இங்கிலாந்து
தான். இன்னும் அவனுடைய எண்ணத்தில் உலகின் முன்
னணியில் ஐரோப்பாவும், ஐரோப்பாவின் முன்னணி
யில் இங்கிலாந்தும் பீடு நடை நடந்து செல்கின்றன.
பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் அரைவாசி தெய்வீகத் தன்மை
பொருந்தியதாகும். ஆங்கிலேயரின் பெருமைக்கு அதுவே
முடிவான சான்று. முப்பது ஆண்டுகளுக்கு முன் இந்தி
யாவில் ராஜப்பிரதிநிதியாக (வைசிராய்) இருந்த லார்டு
கர்சான் ஒரு புஸ்தகம் எழுதி, அதை இறைவன் ஆக்
ஞையின் கீழ், உலகில் தருமத்தை ரட்சிக்கவும் பிர
சாரம் செய்யவும் தோன்றியுள்ள ஒப்புயர்வற்ற தரும
ஸ்தாபனமே பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் என்னும் நம்
பிக்கை உடையவர்களுக்குச் சமர்ப்பித்திருந்தார். அவர்
காலத்து மிகப் பெரிய ஆங்கிலேயருள் கர்சான் பிரபுவும்
ஒருவர்.

விக்டோரியா சகாப்தத்தில் வாழ்ந்த ஆங்கி
லேயரைப் பற்றி நான் எழுதுவதெல்லாம் இயற்கைக்கு
விரோதமாகவும் வலிந்து கொண்டதாகவும் தோன்ற
லாம். ஒருவேளை அவர்களை நான் நக்கல் பண்ணுகிறேன்
என்றும் நீ எண்ணலாம். அறிவுள்ள தனி மனிதன்
எவனாவது மேற்கூறியவாறு தானே தர்மாத்மா என்கிற
மனோபாவமும், தனக்கு மிஞ்சியவர் உலகிலேயே கிடை

யாது என்கிற அகம்பாவமும் கொண்டு தருக்கி நடப்பானாயின் அது ரொம்பவும் ஆச்சரியமாகத்தான் இருக்கும். ஆனால், தேசிய சமூகங்கள் எதையும் நம்பும். அது அவர்களுக்கு அனுகூலமாகவும் வீண்பெருமை தருவதாகவும் மட்டும் இருந்துவிட்டால் போதும். தனி மனிதர்கள் தங்கள் அண்டை அயலாரிடம் இவ்வளவு அநாகரிகமாகவும் கீழ்த்தரமாகவும் நடந்துகொள்ள மாட்டார்கள். ஆனால், தனி மனிதர்களுக்கு உள்ள மனச்சாட்சி உபத்திரவங்கள் தேசங்களுக்குக் கிடையா. துரதிருஷ்டவசமாக நம்மெல்லோருக்குமே இது சுபாவமாகப் போய்விட்டது. நாம் அனைவரும் நமது தேசிய குண நலன்களைப் பீத்திக் கொண்டு திரிவதற்கு நாணுவதில்லை. விக்டோரியா சகாப்தத்து ஆங்கிலேயனைச் சிற்சில மாறுதல்களுடன் உலகெங்குமே காணலாம். ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் அவனைப் போன்றவர்கள் இருந்திருக்கிறார்கள். அவ்வாறே, அமெரிக்காவிலும் ஆசியாவிலும் கூட இருந்திருக்கிறார்கள்.

இங்கிலாந்தும் மேல்ஐரோப்பிய நாடுகளும் செல்வம் கொழித்தமைக்குக் காரணம் தொழில் முதலாளித்துவத்தின் வளர்ச்சியேயாகும். அம்முதலாளித்துவம் லாபத்தை நாடி இடைவிடாது முயன்று கொண்டிருந்தது. லாபத்தையும் வெற்றியையும்தான் ஜனங்கள் கடவுளாகக் கருதி வழிபட்டார்கள். ஏனெனில், முதலாளித்துவத்துக்கும் மதம், தருமம் என்பனவற்றிற்கும் துளிகூட சம்பந்தம் இல்லை. அது தனிமனிதர்களுக்குள்ளாகட்டும், தேசங்களுக்குள்ளாகட்டும் கழுத்தறுக்கும் போட்டியைக் கற்பிக்கும் ஒரு மதமாகும். இப்போட்டியில் பின்னிடுபவர்கள் எக்கேடு கெட்டாலும் அது க[illegible] கொள்வதில்லை. விக்டோரியா காலத்தவர் மதவிஷயங்களில் தாங்கள் காட்டும் சகிப்புத் தன்மையைத்

தாங்களே புகழ்ந்துகொள்வது வழக்கம். அவர்களுக்கு முன்னேற்றத்திலும் விஞ்ஞானத்திலும்தான் நம்பிக்கை. வியாபாரத்திலும் சாம்ராஜ்யத்திலும் அவர்கள் அடைந்த வெற்றி அவர்களே வாழ்க்கைப் போராட்டத்தை நீந்திக் கரையேறியவர்கள் என்பதை அவர்களுக்குக் காட்டியது. அவர்கள் தாங்களே கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்று நம்பினார்கள். டார்வின் இதைத்தானே சொன்னான்? அவர்கள் மதவிஷயங்களில் காட்டியது சகிப்புத்தன்மை அல்ல; அது உண்மையில் அலட்சியமாகும். ஆர். எச். டானி என்னும் ஆங்கில ஆசிரியர் இந்நிலைமையை அழகாக வருணித்திருக்கிறார். கடவுளுக்கும் லௌகிக விவகாரங்களுக்கும் என்ன சம்பந்தம்? ஆகவே, அவரை அவற்றினின்று விலக்கி அவர் இருக்கவேண்டிய இடத்தில் வைத்துவிட்டார்கள் என்று டானி கூறுகிறார். "இகலோகத்தில் வரையறுக்கப்பட்ட முடியரசு நடைபெறுவது போலவே பரலோகத்திலும் நடைபெறுகிறது!" என்பதுதான் குபேரசம்பத்தில் புரண்டு கொண்டிருந்த பூர்ஷ்வா வகுப்பினரின் நினைப்பு. ஆனால், சாமானிய ஜனங்கள் தேவாலயங்களுக்குச் செல்வதையும் மதாசாரங்களை அனுஷ்டிப்பதையும் அவர்கள் ஆதரித்தார்கள். அதன் மூலமாக ஜனங்களிடையில் புரட்சிக் கருத்துகள் பரவுவதைத் தடுத்துவிடலாம் என்பது அவர்களுடைய நம்பிக்கை. அவர்கள் மதவிஷயங்களில் சகிப்புத்தன்மை காட்டினார்கள் என்றால், மற்ற விஷயங்களிலும் அதே சகிப்புத்தன்மையைக் காட்டினார்கள் என்று அர்த்தமல்ல. பெரும்பான்மையோர் முக்கியம் என்று கருதிய விஷயங்களில் அவர்கள் சகிப்புத்தன்மை காட்டவில்லை. அவர்களுடைய நலன்களுக்குச் சிறிது பாதகம் விளைவதாயினும் எல்லாச் சகிப்புத்தன்மையும் காற்றில் பறந்து

விடும். இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் அரசாங்கம் மத விஷயங்களில் ரொம்ப ரொம்ப சகிப்புத்தன்மை காட்டுகிறது. அதையே தனக்குள்ள ஒரு பெரிய குணமாகவும் சொல்லிக் கொள்ளுகிறது. உண்மை என்னவென்றால், மதம் என்ன குட்டிச்சுவராகப் போனாலும் அரசாங்கத்துக்கு அதைப்பற்றிக் கவலை இல்லை. ஆனால், அதன் அரசியலையோ அல்லது அது செய்யும் இதரக் காரியங்களையோ யாராவது சிறிதளவு குறைகூறிவிட்டால், போதும். உடனே அது தன் காதைத் தீட்டிக் கொண்டு கவனிக்க ஆரம்பித்து விடுகிறது. அப்புறம் சகிப்புத்தன்மை என்னும் குற்றத்தை அது செய்வதாக யாரும் சொல்லமுடியாது! எதிர்ப்பு அதிகமாயிருந்தால் அரசாங்கத்தின் கொடுமையும் அதிகமாக இருக்கும். எதிர்ப்பு மிகவும் அதிகமாய்ப் போய்விட்டால் அரசாங்கம் தன் சகிப்புத்தன்மையையும் மானாபிமானங்களையும் அறவே துறந்து பகிரங்கமான பயங்கர அடக்குமுறைகளில் இறங்கிவிடுகிறது. இதை இன்று நாம் இந்தியாவில் நிதரிசனமாகக் காண்கிறோம். சில பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களைப் பயமுறுத்திக் கடிதங்கள் எழுதிய குற்றத்துக்காக இருபது வயது கூட நிரம்பாத ஒரு சிறுவனுக்கு எட்டு வருஷக் கடுங்காவல் தண்டனை அளிக்கப்பட்டிருக்கிறதென்று சில நாட்களுக்கு முன்பு தான் பத்திரிகைகளில் படித்தேன்!

முதலாளித்துவத்தின் கீழ் ஏற்பட்ட தொழில் வளர்ச்சியின் பயனாகப் பல மாறுதல்கள் தோன்றின. முதலாளித்துவம் மேலும் மேலும் பெரிய அளவில் வேலை செய்யலாயிற்று. சிறிய அளவு வியாபாரங்களை விடப் பெரிய அளவு வியாபாரங்களே அதிக லாபகரமாகவும் திறமையான முறையில் வேலை செய்வனவாகவும் இருந்தன. ஆகவே, பெரிய பெரிய வியாபாரக்

கூட்டுகள் (Combines and trusts) தோன்றின. அவை தொழில்கள் பூராவையும் தங்கள் ஆதிக்கத்தில் கொண்டு நடத்தின. அவை தனிப்பட்ட சிறு தொழிற்சாலை முதலாளிகளை விழுங்கி விட்டன. இதற்கு முன்னால் பழைய 'தலையிடாக் கொள்கை' தலையெடுக்க முடியவில்லை. தனி மனிதர்கள் சுதந்திரமாக ஒன்றை நடத்துவதற்குரிய சந்தர்ப்பம் இப்போது குறைந்து விட்டது. செல்வாக்கிலும் பலத்திலும் மிக்க வியாபாரக் கூட்டுகளும் வியாபார ஐக்கிய சங்கங்களும் (Combines and Corporations) அரசாங்கங்களைத் தங்கள் இஷ்டம் போல் ஆட்டி வைத்தன.

முதலாளித்துவத்தினால் சாம்ராஜ்யவாதம் இன்னொரு கொடிய உருவையும் அடைந்தது. 19-வது நூற்றாண்டின் பிற்பகுதியில் தொழில் வளர்ச்சி மிக்க நாடுகளுக்கிடையே போட்டி அதிகரித்தது. அவை மூலப்பொருள்களுக்காகவும் மார்க்கெட்டுகளுக்காகவும் தூர தேசங்களை நாடலாயின. அவை ஒன்றையொன்று இடித்துத் தள்ளிக்கொண்டு உலகெங்கும் சாம்ராஜ்யம் சம்பாதிக்க முனைந்தன. ஆசியாக் கண்டத்தில் இந்தியா, சீனா, அதீத இந்தியா, பாரசீகம் ஆகிய இடங்களில் ஐரோப்பிய வல்லரசுகளின் சாம்ராஜ்ய ஆசையினால் விளைந்த விபரீதங்களை முன்பே சற்று விவரமாகக் கூறியுள்ளேன். இப்போது அவை பிணம் பிடுங்கும் கழுகுகளைப் போல ஆப்பிரிக்காவின் மீது விழுந்து அதைத் தங்களுக்குள் பங்கு போட்டுக் கொண்டன. ஆப்பிரிக்காவிலும் பெரும் பகுதியைத் தட்டிக்கொண்டது இங்கிலாந்துதான். வடக்கில் எகிப்தையும், கிழக்கிலும் மேற்கிலும் தெற்கிலும் பெரும் பெரும் பிரதேசங்களையும் அது அபகரித்துக் கொண்டது. பிரான்சும் பரவாயில்லை. அதற்கும் விசாலமான பிரதேசங்கள் கிடைத்தன.

இதாலியும் இக்கொள்ளையில் பங்கு கொள்ள விரும்பியது. ஆனால், யாவரும் எதிர்பாராதவிதமாக, அபிசீனியா அதைப் பிய்த்து வாங்கிவிட்டது. ஜெர்மனிக்கும் ஒரு பங்கு கிடைத்தது. ஆனால், அதற்குத் திருப்தி ஏற்படவில்லை. எங்கும் சாம்ராஜ்யவாதம் கோரநர்த்தனம் புரிந்தது. அது மக்களை அச்சுறுத்திக் கொண்டும், ஆரவாரம் செய்துகொண்டும், அனைத்தையும் வாரி வாய்ப்பெய்து கொண்டும் உலகில் சாரி திரிந்து வந்தது. பிரிட்டிஷ் சாம்ராஜ்ய வாதத்தின் பிரபல கவியான ரட்யார்ட் கிப்ளிங் “வெள்ளையர் பொறுக்கும் சுமை” (White man's burden) யைப் பற்றிப் பாடினான். பிரெஞ்சுக்காரர், உலகில் தாங்கள் செய்தாக வேண்டிய “நாகரிகக் கைங்கரிய” (Mission Civilisatrice) த்தைப் பற்றிப் பேசலானார்கள். பிரிட்டிஷாரும் பிரெஞ்சுக்காரரும் இவ்வாறு பரோபகாரத் தொண்டில் ஈடுபடும்போது ஜெர்மானியர் மட்டும் வெறுமே இருந்து விடுவார்களா? அவர்களும் தங்களுடைய உயரிய ‘பண்பாட்’டை (Kultur) உலகில் பரப்பியே தீருவோம் என்று துஜங் கட்டிக் கொண்டார்கள். உலகுக்கே நாகரிகத்தை அளித்து அதை உத்தாரணம் செய்யவந்த இவ்வெள்ளையர், பிறர் வகிக்க வேண்டிய பாரங்களையெல்லாம் தங்கள் தலை மீது போட்டுக்கொண்ட இப் பரோபகாரிகள், தியாகம் ஒன்றைத் தவிர வேறு நினைவே இல்லாதவர்களாய் உலகின் நாலா பக்கங்களுக்கும் சென்று அங்கு வாழ்ந்து வந்த கறுப்பு நிறத்தவர், பழுப்பு நிறத்தவர், மஞ்சள் நிறத்தவர் ஆகியோர் முதுகின் மீது ஆரோகணித்துக் கொண்டார்கள். ஆனால், கறுப்பர் பொறுக்கும் சுமையைப்பற்றி யாரும் பாடவில்லை.

ஊரை அடித்து உலையில் போடும் இச் சாம்ராஜ்ய வாதங்கள் எல்லாவற்றையும் கொள்வதற்கு இவ்வுலகில்

இடம் போதவில்லை. முதலாளித்துவம் கொண்ட கொடிய மார்க்கெட்டுப் பசி ஒவ்வொரு நாட்டையும் மேலும் மேலும் உந்திக் கொண்டே இருந்தது. அதனால் ஒருநாடு இன்னொரு நாட்டுடன் மோதவேண்டியதாயிற்று. பல தடவைகள் இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் போர் மூளும் தறுவாயில் இருந்தது. ஆனால், இங்கிலாந்தின் நலன்களுக்கும் ஜெர்மனியின் நலன்களுக்கும்தான் உண்மையில் மாறுபாடு உண்டாயிற்று. கப்பலோட்டுவதிலும் மற்றத் தொழில்களிலும் ஜெர்மனி இங்கிலாந்துக்குச் சமமான ஒரு நிலையை அடைந்து ஒவ்வொரு மார்க்கெட்டிலும் அதனுடன் போட்டியிட்டது. ஆனால், உலகில் கண்ணான இடங்களையெல்லாம் ஏற்கெனவே இங்கிலாந்து பிடித்துக்கொண்டிருப்பதைக் கண்டு ஜெர்மனி மனம் புழுங்கியது. பிற நாடுகள் தன்னை முன்னேறவொட்டாமல் தடுப்பதைக் கண்டு, ஆண்மையும் அபிமானமும் மிகுந்த ஜெர்மனி கோபத்தால் கொதித்தது. அவற்றுடன் ஒரு மகாயுத்தம் தொடுப்பதற்கு அது ஊக்கத்துடன் ஆயத்தம் செய்தது. ஐரோப்பா முழுவதும் யுத்த சன்னாக முயற்சிகள் காணப்பட்டன. தரைப் படைகளும் கடற் படைகளும் பெருகின. சில நாடுகள் தங்களுக்குள் கூட்டுறவு ஒப்பந்தங்கள் செய்து கொண்டன. இரு மாபெருஞ் சேனைகள் ஆயுதபாணிகளாய் ஒன்றையொன்று தாக்கும் சமயத்தை எதிர்பார்த்து நின்றன. ஒரு பக்கத்தில் ஜெர்மனியும் ஆஸ்திரியாவும் இதாலியும் சேர்ந்து நின்றன. இன்னொரு பக்கத்தில் பிரான்சும், ருஷியாவும் சேர்ந்து நின்றன. பிரான்சு-ருஷ்யக் கட்சியில் இங்கிலாந்தும் ரகசியமாய்ச் சேர்ந்திருந்தது.

இதற்கிடையில், 19-வது நூற்றாண்டின் இறுதியில், இங்கிலாந்து தென் ஆப்பிரிக்காவில் சொந்தமாக ஒரு

சின்னச் சண்டையை நடத்தியது. போயர் குடியரசான டிரான்ஸ்வாலில் தங்கச் சுரங்கம் கண்டுபிடிக்கப்பட்டது காரணமாக இச்சண்டை 1899-ல் மூண்டது. ஐரோப்பாவின் முதன்மையான வல்லரசுடன் மூன்று வருஷங்கள் வரையில் போயர்கள் விடா முயற்சியுடன் வீரம் குன்றாமல் நடத்திய அந்த யுத்தம் மிகவும் ஆச்சரியகரமானது. முடிவில், அவர்கள் நசுக்கப்பட்டுத் தோல்வியை ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று. ஆனால், வெற்றிக்குப் பின் பிரிட்டிஷ் அரசாங்கம் (அப்போது லிபரல் கட்சி உத்தியோகம் வகித்தது) புத்திசாலித் தனமாகவும் தாராளமாகவும் நடந்து கொண்டது. அது நேற்று வரையில் தன்னை எதிர்த்துப் போரிட்ட போயர்களுக்குப் பூரண சுயாட்சி வழங்கியது. சிறிது காலத்திற்குப்பின் தென் ஆப்பிரிக்கா முழுவதுமே பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் ஒரு சுதந்திரக் குடியேற்ற நாட்டு அந்தஸ்தை அடைந்தது.

137

அமெரிக்காவில் உள்நாட்டுப் போர்

பிப்ரவரி 27, 1933.

பழைய உலகம் நமது காலத்தை அதிகமாக எடுத்துக்கொண்டது. நாம் அதன் போர்களையும் சூழ்ச்சிகளையும், அரசர்களையும் புரட்சிகளையும், தேசிய வாதங்களையும் பரஸ்பர விரோதங்களையும் கவனிப்பதில் ஆழ்ந்து விட்டோம். இப்போது நாம் அட்லாண்டிக் சாகரத்தைக் கடந்து சென்று புதிய உலகமாகிய அமெரிக்கா எப்படி இருக்கிறதென்று பார்ப்போம். அது ஐரோப்பாவின் பிடியை உதறி எறிந்தபிறகு எவ்வாறு வாழ்க்கை நடத்தியது? அமெரிக்காக்கண்டத்தில் முக்கியமாக நம் கவனத்தைக் கவர்வன ஐக்கிய அமெரிக்க நாடுகள் (அவற்றை அமெரிக்கா என்றே குறிப்போம்) ஆகும். அவை 'தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை' போன்று பிரம்மாண்டமாக வளர்ந்து இன்று உலகையே ஆட்சிபுரிகின்றன. இன்றைய தினம் உலகத்தில் முதல் இடம் வகிப்பது இங்கிலாந்து அல்ல. இப்போது அது உலகத்தின் வட்டிவியாபாரியும் அல்ல. மற்ற ஐரோப்பிய நாடுகளைப்போல் அதுவும் ஒரு கடன்கார நாடுதான். மற்ற நாடுகளுடன் சேர்ந்துகொண்டு அதுவும் அமெரிக்காவைச் சற்றுப் பெரியமனசு பண்ணும்படி கெஞ்சிக்கொண்டிருக்கிறது. இன்று உலகத்தின் வட்டி வியாபாரியாக விளங்குவது அமெரிக்காதான். அங்கே செல்வம் பொழிகிறது. அங்கே கோடீசுவரர்கள் புற்றிலிருந்து ஈசல் புறப்படுவதுபோல் தோன்றிக்கொண்டிருக்கிறார்கள். கதையில் வரும் மைடாசைப்போல் அது தொட்டதெல்லாம் தங்கமாக மாறுகிறது. ஆயினும்

அதற்கு மகிழ்ச்சி என்பதில்லை. அக்குபேர நாட்டிலும் கோமணத்துக்கு இல்லாதவர்கள் பலர் இருக்கிறார்கள்.

1775-ல் பிரிட்டனிடமிருந்து பிரிந்த பதின்மூன்று அமெரிக்கக்கடற்கரை நாடுகளின் மொத்த ஜனத்தொகை 40 லட்சத்துக்குக் குறைவாகவே இருக்கும். இன்றைய தினம் நியூயார்க் நகரின் ஜனத்தொகைமட்டும் அதைப் போல் இரண்டுமடங்கு இருக்கிறது. ஐக்கிய அமெரிக்காவின் மொத்த ஜனத்தொகையோ 12½ கோடிக்கு மேல் இருக்கிறது. ஐக்கிய அமெரிக்காவில் இப்போது இன்னும் பல நாடுகள் சேர்ந்திருக்கின்றன. அவை அக்கண்டம் முழுதும் விரிந்து பசிபிக் சமுத்திரத்தை எட்டுகின்றன. 19-வது நூற்றாண்டில் அமெரிக்கா விஸ்தீரணத்திலும் ஜனத்தொகையிலும் மட்டுமின்றி நவீனதொழில்களிலும் வர்த்தகத்திலும், செல்வத்திலும் செல்வாக்கிலும் வளர்ந்து வந்தது. அதற்குப் பல கஷ்டங்களும் தொந்தரைகளும் நேர்ந்தன. அது ஐரோப்பாவுடன் சில தகராறுகளில் மாட்டிக்கொண்டு சில போர்களும் புரிய வேண்டியதாயிற்று. ஆனால், அதன் வடபாதி நாடுகளுக்கும் தென்பாதி நாடுகளுக்கும் நிகழ்ந்த பேரழிவுக்குக் காரணமான கொடிய உள்நாட்டுப்போரே அதற்கு எல்லாவற்றைக் காட்டிலும் பெரிய சோதனையாக முடிந்தது.

அமெரிக்கா சுதந்திரம் அடைந்த சில வருஷங்களுக்குப்பின் பிரெஞ்சுப் புரட்சியும் அதைத் தொடர்ந்து நெப்போலிய யுத்தங்களும் நிகழ்ந்தன. பிரான்சும் இங்கிலாந்தும் ஒன்றின் வர்த்தகத்தை மற்றொன்று அழிக்க முயன்றன. இம் முயற்சியில் அந்நாடுகள் அமெரிக்காவுடன் மோதின. அமெரிக்க வெளிநாட்டு வர்த்தகம் அடியோடு நின்று போயிற்று. இதன் பயனாக அமெரிக்காவுக்கும் இங்கிலாந்துக்கும் 1812-ல் இன்னொரு யுத்தம் மூண்டது. இரண்டு வருஷங்கள்

நடந்த அந்த யுத்தத்தினால் அதிகப் பலன் ஒன்றும் விளையவில்லை. அந்த யுத்தம் நடந்து கொண்டிருந்தபோதுதான் நெப்போலியன் எல்பா தீவில் சிறை வைக்கப்பட்டான். அதனால் இங்கிலாந்துக்குச் சற்றுஉபத்திரவம் குறையவே அது அமெரிக்கத் தலைநகரான வாஷிங்டனைக் கைப்பற்ற முடிந்தது. பிரிட்டிஷார் அங்குள்ள முக்கியமான பொதுக் கட்டிடங்களை யெல்லாம் தீக்கிரையாக்கினார்கள். அமெரிக்கப் பார்லிமெண்டான 'காங்கிரஸ்' கூடும் 'காபிடல்' (Capital) என்னும் கட்டிடமும், அமெரிக்கப் பிரசிடெண்டுகளின் உறைவிடமான 'வெண் மாளிகை' (White House) யும் அக்கினி பகவானுக்கு அர்ப்பணம் ஆயின. அதற்குப்பின், பிரிட்டிஷார் அமெரிக்கரால் தோற்கடிக்கப்பட்டார்கள்.

இந்த யுத்தத்துக்கு முன்பே அமெரிக்கா தென்பகுதியில் ஒருபெரிய பிரதேசத்தைச் சேர்த்துக்கொண்டது. அது சேர்ந்தவிதம் வருமாறு: லூசியானா என்பது ஒரு பழைய பிரெஞ்சுக்காலனி. பிரிட்டிஷ் கப்பற்படையின் தாக்குதல்களிலிருந்து அதைக் காப்பாற்ற நெப்போலியனால் ஆகவில்லை. ஆகவே, அவன் லூசியானாவை அமெரிக்காவுக்கு விற்றுவிட்டான். அதற்குச் சில வருஷங்களுக்குப் பின், 1822-ல், ஸ்பெயின் பிளாரிடா என்னும் நாட்டை அதற்கு விற்றது. 1848-ல் மெக்சிகோவுடன் நடந்த போரில் வெற்றிபெற்றதன் விளைவாக அதற்குக் காலிபோர்னியா உட்படத் தென்மேற்கில் சில நாடுகள் கிடைத்தன. இத்தென்மேற்குப் பகுதியில் உள்ள பல நகரங்களின் பெயர்கள் இன்னும் ஸ்பானியப் பெயர்களாகவே இருக்கின்றன. அவை ஸ்பானியர் அல்லது ஸ்பானிய மொழி பேசும் மெக்சிகோவர் அங்கு ஆண்ட காலத்தை நமக்கு நினைப்பூட்டுகின்றன. சினிமா உலகின் தலைநகராகிய லாஸ் ஆங்கிலசையும், சான்

பிரான்சிஸ்கோ நகரையும்பற்றிக் கேள்விப்படாதவர்கள் அருமை. அப்பெயர்கள் ஸ்பானியப் பெயர்களேயாம்.

ஐரோப்பாவானது புரட்சியிலும் அடக்குமுறையிலும் மாறிமாறி உழன்றுகொண்டிருந்தபோது அமெரிக்கா மேற்கு நோக்கிப் பரவிக்கொண்டே சென்றது. ஐரோப்பாவில் நிகழ்ந்த அடக்குமுறை காரணமாகப் பலர் அங்கிருந்து அமெரிக்காவுக்குச் சென்றார்கள். 'அமெரிக்காவில் பூமிக்குக் குறைவில்லை, கூலியும் நிறையக் கிடைக்கிறது' என்கிற வதந்திகள் ஐரோப்பிய நாடுகளிலிருந்து ஏராளமான பேரை அமெரிக்காவுக்கு ஆகர்ஷித்தன. ஜனங்கள் மேற்கே பரவப் பரவப் புதுநாடுகள் ஏற்பட்டு யூனியனில் சேர்ந்துவந்தன.

ஆதியிலிருந்தே வடபாதி நாடுகளுக்கும் தென்பாதி நாடுகளுக்கும் பெரிய வேற்றுமை இருந்து வந்தது. வடபாதி நாடுகளில் புதிய யந்திரத் தொழில் விரைவில் பரவியது. தென்பாதி நாடுகளில் பெரிய தோட்டங்கள் இருந்தன. அத்தோட்டங்களில் அடிமைகள் வேலை செய்து வந்தார்கள். அடிமைகள் வைத்துக் கொள்வதைச் சட்டம் அனுமதித்தது. ஆனால், வடபாதி நாடுகளில் அவ் வழக்கம் அவ்வளவு பிரபலமாகவோ, முக்கியமாகவோ இல்லை. தென்பாதி நாடுகளோ அடிமைத் தொழிலையே முற்றிலும் ஆதாரமாகக்கொண்டிருந்தன. அடிமைகளாக இருந்தவர்கள் ஆப்பிரிக்காவிலிருந்து கொண்டு வரப்பட்ட நீக்கிரோவர்தான். வெள்ளைக்காரர் யாரும் அடிமைகளாக இல்லை. 'அனைவரும் சம உரிமையுடன் பிறக்கிறார்கள்' என்று அமெரிக்க சுதந்திரப் பிரகடனம் சாற்றுகிறது. ஆனால், இது வெள்ளையரைக் குறித்துச் சொல்லப்பட்டதே ஒழிய கறுப்பரைக் குறித்துச் சொல்லப்படவில்லை.

இந் நீக்கிரோவரை ஆப்பிரிக்காவிலிருந்து கொண்டு

வந்த கதை மிகுந்த சோகம் நிறைந்ததாகும். 17-வது நூற்றாண்டின் ஆரம்பத்தில் தொடங்கிய அடிமை வியாபாரம் 1863-வரையில் ஒழுங்காக நடந்து வந்தது. முதலில் அவ்வியாபாரம் இவ்வாறு ஆரம்பித்தது; மேற்கு ஆப்பிரிக்கக் கரை (அதன் ஒரு பகுதி இன்னும் 'அடிமைக் கரை' என்று அழைக்கப்படுகிறது) ஓரமாகச் செல்லும் சரக்குக் கப்பல்களில், சுலபமாகக் கிடைக்கக்கூடிய ஆப்பிரிக்கர்களைப் பிடித்து ஏற்றிக் கொண்டு அமெரிக்காவுக்குக் கொண்டு வந்தார்கள். ஆப்பிரிக்கர்களுக்கிடையில் அடிமைத்தனம் வழக்கில் இல்லை. அவர்கள் யுத்தத்தில் கைதிகளாகப் பிடிக்கப்பட்டவர்களையும் வாங்கின கடனைக் கொடுக்காதவர்களையுமே அடிமைகளாக நடத்தினார்கள். ஆப்பிரிக்காவிலிருந்து நீக்கிரோவரை அமெரிக்காவுக்குக் கொண்டு போய் அங்கே அவர்களை அடிமைகளாக விற்பதில் நல்ல லாபம் இருக்கிறதென்று வெள்ளையர் கண்டார்கள். உடனே அடிமை வியாபாரம் வளர்ந்தது. அதற்கு முக்கியமாக ஆங்கிலேயரும், ஸ்பானியரும், போர்த்துகீசியரும் பண உதவி கூடச் செய்தார்கள். அதற்கென்றே தனிவகையான கப்பல்கள் கட்டப்பட்டன. அக்கப்பல்களின் தட்டுகளுக்கிடையில் அடுக்குப் படிகள் (Galleries) அமைக்கப்பட்டிருந்தன. நீக்கிரோவரை இருவர் இருவராகப் பிணித்து அவற்றில் படுக்க வைப்பார்கள். அட்லாண்டிக் சமுத்திரத்தைக் கடப்பதற்குப் பல வாரங்கள் செல்லும்; சில சமயங்களில் மாதங்களும் செல்லும். அக்கால முழுதும் அத்துர்ப்பாக்கியசாலிகள் குறுகிய படிகளில் கட்டுண்டு படுத்துக்கிடக்க வேண்டியது தான். அவர்கள் ஒவ்வொருவருக்கும் விடப்பட்டிருந்த இடம் ஐந்தரை அடி நீளமும் பதினாறு அங்குல அகலமும் கொண்டதாகும்!

அடிமை வியாபாரத்துக்கு அஸ்திவாரம் போட்டவுடனே இங்கிலாந்திலுள்ள லிவர்பூல் நகரம் பெரிதும் வளர்ச்சியுற்றது. 1713-ம் ஆண்டிலேயே, உட்ரெக்ட் சமாதான உடன்படிக்கைப்படி, ஆப்பிரிக்காவிலிருந்து ஸ்பானிய அமெரிக்காவுக்கு அடிமைகளைக் கொண்டு செல்லும் உரிமையை ஸ்பெயினிடமிருந்து இங்கிலாந்து பறித்துக்கொண்டது. அதற்கு முன்பே அமெரிக்காவிலுள்ள பிரிட்டிஷ் பிரதேசங்களுக்கு இங்கிலாந்து அடிமைகளை அனுப்பி வந்தது. இவ்வாறு 18-ம் நூற்றுண்டில் ஆப்பிரிக்க-அமெரிக்க அடிமை வியாபாரத்தை ஏக போக உரிமையாகக் கொள்ள இங்கிலாந்து முயற்சித்தது. 1730-ல் லிவர்பூலில் அடிமை வியாபாரத்துக்கென்று பதினைந்து கப்பல்கள் இருந்தன. அக்கப்பல்களின் தொகை வளர்ந்து கொண்டே சென்றது. 1792-ல் அங்கே 132 கப்பல்கள் அடிமை வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தன. தொழிற் புரட்சியின் ஆரம்பக் காலத்தில் இங்கிலாந்தில், லங்காஷயர் நகரில் நூற்றல் தொழில் அபார முன்னேற்றம் அடைந்தது. லங்காஷயர் பஞ்சாலைகளுக்கு வேண்டிய பஞ்சு அமெரிக்கத் தென்பாதி நாடுகளின் பருத்தித் தோட்டங்களிலிருந்து வர வேண்டியிருந்தது. அதிகமான பஞ்சு சப்ளை செய்வதற்கு அதிகமான அடிமைகள் அத் தோட்டங்களில் வேலை செய்ய வேண்டுமல்லவா? ஆகவே, அமெரிக்கா அடிமைகளை அதிகமாகக் கோரியது. அதற்கு வேண்டிய அடிமைகள் ஆப்பிரிக்காவிலிருந்து கொண்டு போகப்பட்டார்கள். தென்பாதி நாடுகளின் பருத்தித் தோட்டங்கள் விஸ்தரிக்கப்பட்டன. 1790-ல் அமெரிக்காவில் 6,97,000 நீக்கிரோ அடிமைகள் இருந்தார்கள். 1861-ல் அவர்களுடைய தொகை 40 லட்சமாகப் பெருகியது.

19-வது நூற்றுண்டின் ஆரம்பத்தில் அடிமைத் தனத்திற்கு விரோதமாகப் பிரிட்டிஷ் பார்லிமெண்டு கடுமையான சட்டங்கள் இயற்றியது. ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் பிறநாடுகள் அதைப் பின்பற்றின. இவ்வாறு, அடிமை வியாபாரம் சட்டபூர்வமாகத் தடை செய்யப்பட்டபோதும், ஆப்பிரிக்காவிலிருந்து அமெரிக்காவுக்கு நீக்கிரோவர் கொண்டு போகப்பட்டு வந்தார்கள். அவர்கள் முன்பு கொண்டு போகப்பட்டதற்கும் இப்போது கொண்டு போகப்பட்டதற்கும் என்ன வித்தியாசம் என்றுல், அவர்களுடைய பிரயாணக் கஷ்டம் இன்னும் அதிகரித்தது. அவர்களைப் பகிரங்கமாகக் கொண்டு போவதற்கில்லை. ஆகவே, காற்றுப் புகக்கூடிய அலமாரிகளில் அவர்களை ஒருவர் மீதொருவர் அடுக்கிப் பிறர் கண்ணில் படாதவாறு மறைத்துக்கொண்டு சென்றுர்கள். "உறை பனியில் விளையாட்டாக வழுக்கு மரத்தில் ஏறி வழுக்கிச் செல்வோர் ஒருவர் மீதொருவர் கால்களைப் போட்டுக்கொண்டு ஒருவர் மடிமீதொருவர் நெருங்கி உட்காருவதுபோல் அந் நீக்கிரோவர் கப்பல்களில் அடைக்கப் பட்டார்கள்" என்று ஒரு அமெரிக்க ஆசிரியர் கூறுகிறுர். அவர்கள் அனுபவித்த கஷ்டங்களை மனதால் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாது. அடிமைகளை ஏற்றிச் சென்ற கப்பல்களை நாலைந்து பிரயாணங்களுக்குப் பிறகு உபயோகிக்க முடியவில்லை என்றுல் அக்கப்பல்களின் அசுத்த நிலையை நீயே ஊகித்துக் கொள்ளலாம். ஆனுல், அடிமை வியாபாரத்தில் கொள்ளை கொள்ளையாக லாபம் கிடைத்தது. 18-வது நூற்றுண்டின் இறுதியிலும் 19-வது நூற்றுண்டின் தொடக்கத்திலும் அவ்வியாபாரம் உச்சநிலையில் இருந்தபோது வருஷாவருஷம் ஒரு லட்சம் அடிமைகள் ஆப்ரிக்க அடிமைகளாயிருந்து அமெரிக்காவுக்குக் கொண்டு

செல்லப்பட்டார்கள். நீக்கிரோவர் அடிமைத்தனத்தில் காதல்கொண்டு அமெரிக்காவுக்குப் போகத் தாங்களாகவே முன் வரவில்லை. மிருகங்களை வேட்டையாடுவது போல் அவர்களை அடிமை வியாபாரிகள் வேட்டையாடித்தான் பிடித்தார்கள். ஆகவே, ஒரு லட்சம் நீக்கிரோவரை, அதற்கும் மேற்பட்ட தொகையினரைக் கொன்றுதான் பிடித்திருக்க வேண்டும் என்பதை நீ மறந்துவிடக்கூடாது.

19-வது நூற்றாண்டின் ஆரம்பக் காலத்தில் முக்கியமான நாடுகள் எல்லாம் அடிமை வியாபாரத்தைச் சட்ட விரோதமானதாகச் செய்துவிட்டன. அமெரிக்காவும் அவ்வாறே செய்தது. அமெரிக்காவில் அடிமை வியாபாரம் சட்ட விரோதமானதாகச் செய்யப்பட்டாலும் அடிமைத்தனம் சட்டபூர்வமானதாகவே இருந்து வந்தது. அதாவது, பழைய அடிமைகள் இன்னும் அடிமைகளாகவே இருந்து வந்தார்கள். அடிமைத்தனத்துக்குச் சட்டத்தடை இல்லாததால், சட்டத்தடை இருந்தும் அடிமை வியாபாரம் நடந்து வந்தது. பிரிட்டனும் அடிமைத்தனத்தை ஒழித்துவிட்டது. ஆகவே, இப்போது அடிமை வியாபாரத்துக்கு நியூயார்க் நகரம் முக்கியத் துறைமுகமாயிற்று.

நியூயார்க் நகரம் பல வருஷங்கள் வரையில்,—19-வது நூற்றாண்டின் இடைக்காலம் வரையில்—அடிமை வியாபாரத்துக்குத் துறைமுகமா யிருந்துவந்தபோதிலும், அமெரிக்காவின் வடபாதி நாடுகள் அடிமைத்தனத்துக்கு விரோதமாகவே இருந்தன. இதற்கு மாறாகத் தென்பாதி நாடுகளில் தோட்டங்களில் வேலை செய்வதற்கு அடிமைகள் தேவையா யிருந்தார்கள். சில நாடுகள் அடிமைத்தனத்தை ஒழித்துச் சட்டம் செய்தன. வேறு சில அவ்வாறு செய்யவில்லை. அடிமைத்

தனம் வழங்கும் நாட்டிலிருந்து அது வழங்காத நாட்டுக்கு நீக்கிரோவர் அடிக்கடி ஓடிவிடுவார்கள். அது விஷயமாக வழக்குகளும் உண்டாயின.

வடபாதியின் பொருளியல் நலன்களும் தென் பாதியின் பொருளியல் நலன்களும் வெவ்வேறுயிருந்தன. 1830-ம் ஆண்டிலேயே சுங்க வரிகள் விதிப்பது விஷயமாக வடபாதிக்கும் தென்பாதிக்கும் தகராறு உண்டாயிற்று. யூனியனிலிருந்து பிரிந்து விடுவதாகச் சில நாடுகள் பயமுறுத்தின. அந்நாடுகள் தங்கள் உரிமைகள் விஷயத்தில் அதிக எச்சரிக்கையுடன் இருந்தன. கூட்டு மத்திய அரசாங்கம் (Federal Government) தங்கள் உரிமைகளில் அதிகமாகத் தலையிடுவதை அவை விரும்பவில்லை. அமெரிக்காவில் இரு கட்சிகள் தோன்றின. ஒன்று நாடுகளின் தனி ஆட்சி உரிமையை (State Sovereignty) ஆதரித்தது. இன்னொன்று மத்திய அரசாங்கம் பலம் பொருந்தியதாக இருக்கவேண்டும் என்று விரும்பியது. இவ்வேற்றுமைகளெல்லாம் சேர்ந்து வடபாதிக்கும் தென்பாதிக்கும் உள்ள இடைவெளியை அதிகப்படுத்தின. புதிய நாடுகள் யூனியனில் சேர்த்துக் கொள்ளப்பட்டபோதெல்லாம், அவை எந்தப் பக்கத்தை ஆதரிக்கும் என்கிற கேள்வி உடனே எழுந்தது. எந்தப் பக்கத்துக்குப் பெரும்பான்மைப் பலம் இருக்கும் என்கிற பிரச்சினை முக்கியமாகி விட்டது. ஐரோப்பாவிலிருந்து மேலும் மேலும் பலர் வந்து குடியேறிய காரணத்தால் வடபாதியின் ஜனத்தொகை அதிகரித்து வந்தது. இதைக் கண்டு தென்பாதியார் அச்சம் கொண்டார்கள். வடபாதியார் எண்ணிக்கையில் பெருகி ஒவ்வொரு விஷயத்திலும் அதிக வோட்டுப் பலத்தால் தென்பாதியாரைத்தோற்கடித்து விடுவார்கள் என்பதுதான் அச்சத்

திற்குக் காரணம். இவ்வாறு, இருபாதிகளுக்கும் தகராறு முற்றிக் கொண்டே சென்றது.

இதற்கிடையில், அடிமைத்தனத்தை அடியோடு ஒழிக்க வேண்டும் என்கிற கிளர்ச்சி ஒன்று வடபாதியில் தோன்றி வளர்ந்தது. இதை ஆதரித்தவர்கள் "ஒழிப்பாளர்" என்று அழைக்கப்பட்டார்கள். அவர்களுடைய முக்கியமான தலைவர் வில்லியம் லாயிட் காரிசின் என்பவர். அவர் 1831-ல் தம்முடைய அடிமை-ஒழிப்புக் கிளர்ச்சியைப் பிரசாரம் செய்வதற்காக 'லிபரேடர்' (Liberator) என்றொரு பத்திரிகையை ஆரம்பித்தார். அப்பத்திரிகையின் முதல் இதழிலேயே அவர் இவ்விஷயத்தில் தாம் இம்மியேனும் விட்டுக் கொடுக்கப் போவதில்லை யென்றும், நிதானப் போக்கை அனுசரிக்கப் போவதில்லை யென்றும் தெளிவாகச் சொல்லிவிட்டார். அவர் அவ்விதழில் எழுதிய சில உரைகள் பொன் போல் இன்றளவும் போற்றப் படுகின்றன; அவற்றைக் கீழே தருகிறேன்:

"நான் சத்தியத்தைப் போல் கடுமையாகவும் நீதியைப்போல் நேர்மையாகவும் இருப்பேன். இவ்விஷயத்தில் நான் நிதானமாக யோசிக்கவோ, பேசவோ, எழுதவோ போவதில்லை. அது முடியவே முடியாது. ஒருவனுடைய வீடு பற்றி எரியும்போது அவன் நிதானமாகத்தான் கூச்சலிடுவானா? ஒருவனுடைய மனையாளைத் தூர்த்தன் ஒருவன் கற்பழிக்க முயலும்போது அவன் அவளை நிதானமாகத்தான் மீட்பானா? தன்னுடைய குழந்தை நெருப்பில் விழக்கண்ட தாயார் அதை நிதானமாகத்தான் எடுக்கப் போவாளா? ஒருவேளை, அவர்களெல்லாம் அவ்வாறு செய்தாலும், நான் இவ்விஷயத்தில் நிதானமாக இருக்கப் போவதில்லை. உங்களுக்கு நான் மெய்யாகவே உரைக்கின்றேன்; நான் சொன்ன சொல்

பிறழ மாட்டேன், ஒருவரையும் மன்னிக்க மாட்டேன். முன்வைத்த காலைப் பின்வாங்க மாட்டேன். நான் சொல்வதற்குப் பிறர் செவிசாய்த்துத்தான் தீர வேண்டும்."

ஆனால், இத்தகைய தீவிர மனப்பான்மை ஒரு சிலரிடம்தான் காணப்பட்டது. அடிமைத்தனத்தை எதிர்த்தவர்களில் பெரும்பாலோர், ஏற்கனவே அடிமைத்தனம் வழங்கி வந்த இடங்களில் அதில் தலையிட விரும்பவில்லை. ஆயினும், வடபாதிக்கும் தென்பாதிக்கும் விரோதம் முற்றி வந்தது. அவர்களுடைய பொருளியல் நலன்கள் வேறுபட்டிருந்தமை தான் அதற்குக் காரணம். முக்கியமாகச் சுங்கவரி விஷயத்தில் அவர்களுக்குள் மாறுபாடு இருந்தது.

1860-ம் ஆண்டில் ஆபிரகாம் லின்கன் அமெரிக்காவின் பிரசிடெண்டாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான். அவன் தேர்ந்தெடுக்கப்பட்ட வுடனே தென்பாதி யூனியனிலிருந்து பிரிய ஆரம்பித்தது. லின்கன் அடிமைத்தனத்துக்கு விரோதிதான். ஆயினும், அவன்கூட அது ஏற்கனவே வழங்கி வந்த இடங்களில் அதில் தலையிடுவதில்லை என்னும் விஷயத்தை நன்கு தெளிவுபடுத்தியிருந்தான். அடிமைத்தனம் புதிய நாடுகளில் பரவுவதையோ அல்லது அதைச் சட்டபூர்வமாக்குவதையோ தான் அவன் விரும்பவில்லை. லின்கனின் உறுதிமொழிகள் தென்பாதிக்குத் திருப்தி அளிக்கவில்லை. தென்பாதி நாடுகள் ஒவ்வொன்றாக யூனியனிலிருந்து பிரிந்து போயின. ஐக்கிய அமெரிக்க நாடுகளின் ஐக்கியத்துக்கு ஆபத்து வந்துவிட்டது. புதுப் பிரசிடெண்டு இத்தகைய பயங்கரமான ஒரு நிலைமையைச் சமாளிக்க வேண்டியிருந்தது. அவன் தென்பாதியைப் பிரிந்து போகாமல் தடுப்பதற்கு இன்னொரு முயற்சி செய்தான். அடிமைத்

தனத்தில் கைவைப்பதில்லை என்று அவன் அவர்களுக்குப் பலவிதமான வாக்குறுதிகள் அளித்தான். அது ஏற்கெனவே அமுலில் இருந்த இடங்களில் அதை அரசியல் அமைப்பின் ஒரு பாகமாகச் செய்து அதற்கு ஒரு நிரந்தர ஸ்தானத்தை அளிப்பதாகவும் அவன் கூறினான். சமாதானத்துக்காக வேண்டி அவன் எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் விட்டுக்கொடுக்கத் தயாராயிருந்தான். ஆனால், அமெரிக்க ஐக்கியக் குலைவை மட்டும் அவன் அங்கீகரிக்கத் தயாராயில்லை. யூனியனிலிருந்து பிரிந்து போவதற்கு எந்நாட்டுக்கும் உரிமை கிடையாது என்று அவன் உறுதியாகக் கூறினான்.

உள்நாட்டுப் போரைத் தவிர்ப்பதற்கு லிங்கன் செய்த முயற்சிகளெல்லாம் பயனற்றொழிந்தன. பிரிந்து போவதென்று தென்பாதி தீர்மானித்தது. பதினொரு நாடுகள் பிரிந்தும் போயின. எல்லைப்புறத்திலிருந்த சில நாடுகளும் அவற்றிடம் அனுதாபம் காட்டின. பிரிந்துபோன நாடுகள் தங்களைக் "கூட்டரசு நாடுகள்" (Confederate States) என்று அழைத்துக் கொண்டன. அவை ஜெபர்சன் டேவிஸ் என்பவனைத் தங்களுக்குப் பிரசிடெண்டாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டன. 1861-ல் உள்நாட்டுப்போர் ஆரம்பமாயிற்று. நான்கு நீண்ட வருஷங்கள் அது நடந்தது. அக்காலத்தில் சகோதரன் சகோதரனுக்கு விரோதமாகவும் நண்பன் நண்பனுக்கு விரோதமாகவும் போரிட்டுக்கொண்டார்கள். யுத்தம் நடக்க நடக்க இருதிறத்திலும் பெரிய சேனைகள் சேர்ந்தன. வடபாதிக்குப் பல அனுகூலங்கள் இருந்தன. அது ஜனத்தொகையும் செல்வமும் பெருத்த பிரதேசம். அது யந்திரத் தொழிலிலும் உற்பத்தியிலும் அபிவிருத்தி அடைந்திருந்தது. ரயில் வசதியும் அதற்கு அதிகமாக இருந்தது.

இன்னும் பலவகையான சாதனங்கள் அதற்கு இருந்தன. ஆனால், தென்பாதியின் சேனாவீரர்களும் சேனைத்தலைவர்களும் திறமை மிக்கவர்களாக இருந்தார்கள். தென்பாதியின் சேனைத்தலைவர்களில் ஜெனரல் லீ என்பவனை முக்கியமாகச் சொல்லவேண்டும். துவக்கத்தில் வெற்றிகளெல்லாம் தென்பாதிக்கே கிடைத்துவந்தன. ஆனால், கடைசியில் அது களைத்துப்போய் விட்டது. தென்பாதி ஐரோப்பாவுக்குப் பஞ்சும் புகையிலையும் ஏற்றுமதி செய்து வந்தது. அவ்வேற்றுமதியை வடபாதியின் கடற்படை அடியோடு தடுத்துவிட்டது. இதனால் தென்பாதி இடுப்பொடிந்து போனதல்லாமல் லங்காஷயரின் துணித்தொழிலும் வீழ்ச்சியுற்றது. தென்பாதியின் பஞ்சை நம்பிக்கொண்டிருந்த லங்காஷயரின் பஞ்சாலைகள் பல அப்பஞ்சு வராமற்போகவே மூடப்பட்டுவிட்டன. அவ்வாலைகளில் வேலைசெய்துவந்த தொழிலாளர் வேலையிழந்து கொடிய இன்னல்களுக்கு ஆளாயினர்.

பொதுவாக, பிரிட்டிஷ் அபிப்பிராயம் தென்பாதியின் சார்பில் இருந்தது. எப்படியும், பிரிட்டிஷ் பணக்கார வகுப்பினரின் அபிப்பிராயம் தென்பாதிக்குத்தான் சாதகமாக இருந்தது. தீவிரவாதிகள் வடபாதியை ஆதரித்தனர்.

உள்நாட்டுப் போருக்கு முக்கியக் காரணம் அடிமைத்தனம் அல்ல. அடிமைத்தனம் அமுலில் இருந்த இடங்களில் அதில் தலையிடுவதில்லை என்று லிங்கன் கடைசி வரையில் உறுதி கூறிய விஷயம் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளேன். வடபாதி, தென்பாதிகளின் பொருளியல் நலன்கள் வெவ்வேறாகவும் ஒன்றோடொன்று முரண்பாடுடையனவாகவும் இருந்தமைதான் உள்நாட்டுப் போருக்கு முக்கியக் காரணம். கடைசியாக, அமெரிக்க

ஐக்கியத்தைக் காப்பாற்றுவதற்காக லின்கன் போரிட்டான். போர் ஆரம்பித்த பின்பும், லின்கன் அடிமைத்தனத்தைப் பற்றித் தெளிவாக ஒன்றும் கூறவில்லை. வடபாதியிலும் அடிமைத்தனத்தை ஆதரிப்போர் அநேகர் இருந்தார்கள். ஏதாவது சொல்லி அவர்களுடைய மனஸ்தாபத்தைத் தேடிக் கொள்ளக் கூடாது என்பது அவனுடைய எண்ணம். ஆனால், போர் நடந்து வருகையில் அவனுடைய கொள்கை மேலும்மேலும் திட்டமான உருவை அடையலாயிற்று. காங்கிரஸ் (அமெரிக்கப் பார்லிமெண்டு) அடிமைகளின் சொந்தக்காரருக்கு நஷ்டஈடு கொடுத்துவிட்டு அடிமைகளை விடுவிக்க வேண்டும் என்று அவன் முதலில் கூறினான். பிற்பாடு, அவன் நஷ்டஈடு கொடுக்கும் விஷயத்தைக் கைவிட்டுவிட்டான். முடிவாக, அவன் 1862 செப்டம்பரில் தன்னுடைய 'விடுதலைப் பிரகடன'த்தை வெளியிட்டான். 1863 ஜனவரி 1-லிருந்து அரசாங்கத்தை எதிர்த்துக் கலகம் செய்யும் நாடுகளிலுள்ள எல்லா அடிமைகளும் சுதந்திரப் பிரஜைகள் ஆவார்கள் என்று அப்பிரகடனம் கூறியது. அப்பிரகடனத்தை வெளியிட்டதன் முக்கிய நோக்கம் யுத்தத்தில் தென்பாதியைப் பலவீனப் படுத்துவதாய் இருக்கலாம். அதன் பயனாக 40 லட்சம் அடிமைகள் விடுதலை அடைவார்கள். அதனால் கூட்டாக நாடுகளில் அவசியம் குழப்பம் ஏற்படும் என்று பிரகடனகர்த்தர்கள் எதிர்பார்த்தார்கள்.

1865-ல் உள்நாட்டுப்போர் முடிவுற்றது. தென்பாதி அடியோடு களைத்து வீழ்ந்துவிட்டது. போர் என்பது எக்காலத்திலும் ஒரு கொடிய நிகழ்ச்சியே. ஆனால், உள்நாட்டுப் போரோ எல்லாப் போர்களிலும் கொடியது. இந்த நான்கு வருஷத்துப் பயங்கரப் போராட்டத்தின் பாரம் பெரும்பாலும் பிரசிடெண்டு லின்கன் தலைமீது

விழுந்தது. ஏமாற்றங்களுக்கும் தோல்விகளுக்கும் கலங்காத அவனுடைய திடசித்தமும் விடாமுயற்சியுமே அப்போரின் முடிவுக்கு முக்கியக் காரணமாகும். அவனுடைய குறிக்கோள் வெற்றி பெறுவது மட்டுமல்ல; யாருக்கும் யாதொரு மனத்தாங்கலும் இன்றி அவன் வெற்றி பெற விரும்பினான். அவன் எந்த ஐக்கியத்துக்காகப் போரிட்டானோ அந்த ஐக்கியம் உண்மையான இருதய ஐக்கியமாக இருக்கவேண்டுமே ஒழியப் பலாத்காரப் பிணிப்பாக இருக்கக் கூடாதென்பது அவனுடைய எண்ணம். ஆகவே, போரை வென்று வாகை சூடிய அவன் தோல்வியுற்ற தென்பாதியைக் கருணையுடன் நடத்த ஆரம்பித்தான். ஆனால், சில நாட்களுக்குள் யாரோ ஒரு வெறியன் அவனைச் சுட்டுக் கொன்றுவிட்டான்.

அமெரிக்க மகாபுருஷர்களுள் ஒருவனாக ஆபிரகாம் லின்கன் விளங்குகிறான். அவன் உலக மகாபுருஷர்களுள் ஒருவனாகவும் மதிக்கப்படுகிறான். அவன் எளிமையில் பிறந்து வளர்ந்தவன். அவனுடைய பள்ளிப்படிப்பு பூச்சியம் என்றே சொல்லிவிடலாம். அவன் ஏதோ கற்றுக்கொண்டதும் சொந்த முயற்சியே ஒழியப் பிறர் சொல்லித்தந்ததல்ல. ஆயினும், அவன் மிகப் பெரிய அரசதந்திரியாகவும் இணையற்ற சொல்வலானாகவும் விளங்கித் தன் நாட்டை ஒரு நெருக்கடியான காலத்தில் நன்கு நடத்திக் கரைசேர்த்தான். லின்கனின் மரணத்துக்குப் பின்பு அமெரிக்கக் காங்கிரஸ் தென்பாதி நாட்டவரிடம் லின்கன் நடந்திருக்கக்கூடிய அளவுக்குத் தாராளமாக நடந்து கொள்ளவில்லை. அவர்கள் சில வழிகளில் தண்டிக்கப்பட்டார்கள். அவர்களில் பலர் தங்களுடைய வோட்டுரிமையை இழந்தார்கள். அதற்கு மாறாக, நீக்ரோவருக்குச் சகல பிரஜா உரிமைகளும் அளிக்கப்பட்டன. அவ்வுரிமைகள் அமெரிக்க அரசியல் அமைப்

820—56

பிலும் இடம் பெற்றன. எந்த நாடும் ஒருவனுடைய வோட்டுரிமையை அவனுடைய வகுப்பு, நிறம், பூர்வீக அடிமைத்தனம் காரணமாக அபகரிக்கக் கூடாது என்று விதிக்கப்பட்டது.

நீக்கிரோவர் அடிமைத்தளையிலிருந்து சட்டபூர்வமாக விடுதலை பெற்று விட்டார்கள். அவர்களுக்கு வோட்டுரிமையும் கிடைத்து விட்டது. அதனால், அவர்கள் அதிக நன்மை ஒன்றும் அடையவில்லை. ஏனெனில், அவர்களுடைய பொருளியல் அந்தஸ்து பழையபடியே இருந்தது. விடுதலை அடைந்த நீக்கிரோவர் அனைவருமே சொத்துச் சுதந்திரம் இல்லாதவர்கள். இப்போது அவர்களை என்ன செய்வதென்பது ஒரு பெரிய பிரச்சினை ஆகி விட்டது. அவர்களில் சிலர் வடக்கிலுள்ள நகரங்களுக்குச் சென்றார்கள். ஆனால், பெரும்பாலோர் தங்களுடைய பழைய இடத்திலேயே, பழைய வெள்ளை எஜமானர்களின் கீழேயே இருந்தார்கள். அவர்கள் தென்பாதியிலுள்ள தோட்டங்களில் கூலிக்கு வேலை செய்தார்கள். வெள்ளையரான தோட்ட முதலாளிகள் இஷ்டப்பட்டுக் கொடுத்த கூலியையே அவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. நீக்கிரோவரைப் பயங்கர முறைகளால் அடக்கிவைக்கவும் தென்பாதி வெள்ளையர் முயன்றார்கள். கு-குளுக்ஸ்-கிளான் என்னும் பெயர் பூண்ட விசித்திரமான ஒரு ஸ்தாபனம் தோன்றியது. அது பாதி இரகசியத்திலேயே வேலை செய்தது. அதன் அங்கத்தினர்கள் முகமூடி அணிந்து சென்று நீக்கிரோவரைப் பயமுறுத்தி வந்தார்கள். நீக்கிரோவரைத் தேர்தல்களில் கூட வோட்டுப் போடாதவாறு அவர்கள் தடுத்தார்கள்.

சென்ற அரை நூற்றாண்டில் நீக்கிரோவர் சிறிதளவு முன்னேறியிருக்கிறார்கள். பலர் சொத்துச்

சுதந்திரம் உடையவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் கல்வி பயிலுவதற்குச் சில அருமையான கல்வி ஸ்தாபனங்கள் இருக்கின்றன. ஆயினும், அவர்கள் ஒரு தாழ்த்தப்பட்ட ஜாதியார் என்பது அவர்களுடைய நெற்றியில் எழுதி ஒட்டப்பட்டிருக்கிறது. அமெரிக்காவில் அவர்கள் மொத்தம் ஒரு கோடியே இருபது லட்சம் பேர் இருக்கிறார்கள். அதாவது, மொத்த ஜனத்தொகையில் பத்தில் ஒரு பங்கு இருக்கிறார்கள். அவர்கள், வடபாதியில் சில பாகங்களில் வாழ்வது போல, சிறு தொகையினராக வாழும் இடங்களிலெல்லாம் அல்லலுக்கு ஆளாவதில்லை. ஆனால், அவர்களுடைய தொகை பெருகிய உடனே, வெள்ளையர் அவர்களுடைய முதுகின் மீது அழுந்த உட்கார்ந்து, அவர்களுக்கும் பழைய காலத்து அடிமைகளுக்கும் அதிக வித்தியாசம் இல்லை என்பதை அவர்கள் உணரும்படி செய்கிறார்கள். எல்லா இடங்களிலும் அவர்கள் வெள்ளையரினின்றும் ஒதுக்கப்பட்டுத் தனியாகத் தள்ளப்படுகிறார்கள். ஹோட்டல்களிலும், சிற்றுண்டிச் சாலைகளிலும், தேவாலயங்களிலும், கலாசாலைகளிலும், சிங்காரப் பூஞ்சோலைகளிலும், கடற்கரை ஸ்நானக்கட்டங்களிலும், டிராம் வண்டிகளிலும், கடைகளிலும் கூட நீக்கிரோவருக்கு இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ரயிலில் கூட அவர்கள் தனிப்பெட்டிகளில்தான் பிரயாணம் செய்ய வேண்டும். அவற்றிற்கு 'ஜிம்-குரோ வண்டிகள்' (Jim-Crow cars) என்று பெயர். வெள்ளையரும் நீக்கிரோவரும் கலியாணம் செய்து கொள்வதைச் சட்டம் தடைசெய்கிறது. இன்னும் எத்தனையோ விசித்திரமான சட்டங்கள் இருக்கின்றன. வெள்ளையரும் நீக்கிரோவரும் ஒரே தரையில் உட்காரக் கூடாதென்று வர்ஜினியா நாடு 1926-ல் தான் ஒரு சட்டம் செய்தது!

சில வேளைகளில் வெள்ளையருக்கும் நீக்கிரோவருக்கும் கோரமான வகுப்புக் கலகங்கள் நிகழ்வதுண்டு. தென்பாதியில் நீக்கிரோவர் அடிக்கடி 'கூட்டக்கொலை' (Lynching)க்கு ஆளாக்கப்படுகிறார்கள். அதாவது, ஒரு நீக்கிரோ ஏதோ குற்றம் செய்திருக்கிறான் என்கிற சந்தேகத்தின் பேரில் வெள்ளையர் கூட்டமாகக் கூடி அவனை நியாயஸ்தல விசாரணையின்றியே சித்திரவதை செய்து கொன்று விடுவது. சமீபத்தில், வெள்ளையர் கூட்டங்கள் நீக்கிரோவரை எரிமரத்தில் கட்டி உயிரோடு எரித்திருக்கின்றனர்.

அமெரிக்காவெங்கும், முக்கியமாகத் தென்பாதி நாடுகளில் நீக்கிரோவரின் நிலை இன்னும் இரங்கத்தக்கதாகத்தான் இருக்கிறது. சில தென்பாதி நாடுகளில், தொழிலாளருக்குப் பஞ்சம் ஏற்பட்டால், ஒரு பாவமுமறியாத நீக்கிரோவர் சிலரைப் பிடித்து அவர்கள் மீது ஏதாவது பொய்க் குற்றம் சாட்டி அவர்களைச் சிறைக்கு அனுப்பி விடுவதும் பிறகு அக் கைதிகளின் உழைப்பைக் கண்டிராக்டர்களுக்குக் குத்தகைவிடுவதும் வழக்கமாக இருக்கிறது. இத்தகைய நிலைமைகள் நாகரிக மனச்சாட்சிக்குப் பேரதிர்ச்சியை உண்டு பண்ணுகின்றன.

ஹாரியெட் பீச்சர் ஸ்டவ் என்பார் எழுதியுள்ள 'டாம் மாமா குடிசை' (Uncle Tom's Cabin ?) என்னும் புஸ்தகத்தை நீ படித்திருக்கிறாயா? அல்லது, அதைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாயா? அப்புஸ்தகம் தென்பாதி நாடுகளில் வாழ்ந்த நீக்கிரோ அடிமைகளின் துயரக் கதையைக் கல்லும் கரைந்துருகுமாறு எடுத்துக் கூறுகிறது. அது அமெரிக்க உள்நாட்டுப் போர் தொடங்குவதற்குப் பத்தாண்டுகளுக்கு முன் வெளியிடப்பட்டது. அடிமைத்தனத்துக்கு விரோதமாக அமெரிக்க மக்களின் உணர்ச்சியை அது பெரிதும் தட்டி எழுப்பியது.

138

கண்ணுக்குத் தோன்றாத அமெரிக்க சாம்ராஜ்யம்

பிப்ரவரி 28, 1933.

அமெரிக்காவில் நிகழ்ந்த உள்நாட்டுப்போர் வாலிபர்கள் பலருடைய உயிரைக் கூற்றுவனுக்கு உண்ணக் கொடுத்தது. அது தேசத்தின் தலைமீதும் பெரிய கடன்சுமையை ஏற்றியது. ஆனால், இளம் பருவத்து முறுக்கு நிறைந்த அமெரிக்கா அவற்றையெல்லாம் சட்டை செய்யாமல் மேலும் மேலும் வளர்ந்து கொண்டே சென்றது. அதற்கு இயற்கைச் சாதனங்கள் ஏராளமாயிருந்தன. முக்கியமாகக் கனிப்பொருள்களில் அதற்குக் குறைவென்பதே இல்லை. தற்கால நாகரிகத்துக்கும் தொழிலுக்கும் அடிப்படையாக விளங்கும் முப்பொருள்களான இரும்புக்கும் நிலக்கரிக்கும் மண்ணெண்ணெய்க்கும் (பெட்ரோல்) அது வற்றாத ஊற்றாக இருந்தது. ஜலசக்திக்கும் அங்குக் குறைவில்லை. அதிலிருந்து மின்சாரசக்தியும் அதற்குக் கிடைத்தது. இதைச் சொல்லும்போது உனக்கு நயகரா நீர்விழ்ச்சி நினைவுக்கு வரும். அமெரிக்கா மிகுந்த பரப்பும் குறைந்த ஜனத்தொகையும் உடையதாயிருந்ததால் எல்லோருக்கும் இடம் எதேஷ்டமாக இருந்தது. அதனுடைய தொழிலையும் உற்பத்தியையும் பெருக்குவதற்கு வேண்டிய அனுகூலங்கள் யாவும் அதற்கு வாய்த்திருந்தன. அதிவிரைவில் அது அவ்விரண்டையும் பெருக்கத் தொடங்கியது. 19-வது நூற்றாண்டின் எண்பத்தாம் ஆண்டுகளில் வெளி மார்க்கெட்டுகளில் அமெரிக்கா பிரிட்டனுடன் போட்டியிட ஆரம்பித்தது. நூறு ஆண்டுகளாக வெளிநாட்டு

வியாபாரத்தில் பிரிட்டன் எளிதாக வகித்துவந்த முதன்மை ஸ்தானத்தை அமெரிக்காவும் ஜெர்மனியும் ஏற்பட்டு அதற்கு இல்லாமல் செய்துவிட்டன.

ஐரோப்பாவிலிருந்து சகலவிதமான ஜனங்களும் அமெரிக்காவுக்கு வந்து குடியேறினார்கள். ஜெர்மானியர், ஸ்காண்டிநேவியர், ஐரிஷ்காரர், இதாலியர், போலந்துக்காரர், யூதர் அனைவரும் வந்தார்கள். தாய்நாட்டில் அரசியல் கொடுமை தாளாது வந்தவர் பலர்; சற்றுச்சுமாரான ஜீவனத்தை நாடிவந்தவர் பலர். ஜனநெருக்கம் மிகுந்த ஐரோப்பா தன்னுடைய உபரி ஜனத்தொகையை அமெரிக்காவுக்கு அனுப்பிவைத்தது. இவ்வாறு அமெரிக்காவில் வந்து குழுமியவர்கள் பலபட்டறையான வகுப்புகளையும், தேசங்களையும், பாஷைகளையும், மதங்களையும் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். ஐரோப்பாவில் அவர்கள் தத்தம் சிறு உலகங்களில் தனித்தனியாக வாழ்ந்துவந்தார்கள். அங்கே அவர்களுக்குள்ளிருந்த துவேஷங்களுக்கும் மாற்சரியங்களுக்கும் கணக்கு வழக்கில்லை. இங்கே அவர்கள் ஒருபுதிய உலகத்தில் ஒருசேரத் தள்ளப்பட்டார்கள். பழைய துவேஷங்களும் மாற்சரியங்களும் இங்கு அவ்வளவாகக் காணப்படவில்லை. அவர்களுக்கு அளிக்கப்பட்ட ஒரேவிதமான கட்டாயக் கல்வி அவர்களுடைய தேசிய வைஷம்மியங்களைத் துடைத்துப் போக்கிவிட்டது. பலபட்டறையான அவ்வகுப்புகளிலிருந்து அமெரிக்கச் சிறப்பியல்புகளுடன் கூடிய ஒருவகுப்புத் தோன்றி வளர ஆரம்பித்தது. பழைய ஆங்கிலோ-சாக்சன் வகுப்பைச் சேர்ந்தவர்கள் இன்னும் தங்களை உயர்குலத்தோராகவே பாவித்து வந்தார்கள். அவர்கள்தான் சமூகஉலகின் முன்னணியில் இருந்தார்கள். அவர்களை ஒட்டி அடுத்தஸ்தானம் வகித்தவர்கள் வட ஐரோப்பாவைச் சேர்ந்த வகுப்பார்கள். தென் ஐரோப்பாவைச் சேர்ந்தவர்கள், முக்கியமாக இதாலியைச் சேர்ந்தவர்கள், வட ஐரோப்பியரால் இழிவாக மதிக்கப்பட்டார்கள். வட ஐரோப்பியர் தென் ஐரோப்பியரை 'டேகோ'க்கள் என்கிற கேவலமான பெயரினால் அழைத்தார்கள். நீக்கிரோவர் ஒரு தனி வகுப்பாக வாழ்ந்து வந்தார்கள் என்பதைச் சொல்லவேண்டியதில்லை. அவர்கள்தான் சமூக ஏணியின் கீழ்ப்படியாய் இருந்தவர்கள். அவர்கள் வெள்ளையருடன் கலக்கவில்லை. அமெரிக்காவின் மேற்குக் கரையில் சில சீனரும் ஜப்பானியரும் இந்தியரும் வாழ்ந்துவந்தார்கள். அவர்கள், அமெரிக்காவில் தொழிலாளருக்குக் கிராக்கி ஏற்பட்ட காலத்தில் வந்தவர்கள். இந்த ஆசிய வகுப்பாரும் பிறருடன் கலவாமல் தனித்தே வாழ்ந்து வந்தார்கள்.

அமெரிக்காவில் ரயிலும் தந்தியும் பரவின. அப்பெரிய தேசத்தை அவை ஒன்றாகச் சேர்த்துப் பிணித்தன. ஒரு இடத்திலிருந்து மற்றோரிடத்துக்குச் செல்ல வாரக் கணக்காகவும், மாதக் கணக்காகவும் ஆகிக் கொண்டிருந்த பழைய காலத்தில் இவ்வொற்றுமையைச் சாதிப்பது அசாத்தியம். பழைய காலத்தில் ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் பெரிய பெரிய சாம்ராஜ்யங்கள் இருந்ததை நாம் கண்டோம். போக்கு வரவு சாதனங்களின் அருமை காரணமாக அவை நெருக்கமாக ஒன்றி நிற்கவில்லை. சாம்ராஜ்யத்தின் வெவ்வேறு பாகங்கள் சக்கரவர்த்தி ஒருவனை ஒப்புக்கொண்டு அவனுக்கு அடங்கிக் கப்பம்கட்டி வந்தது ஒன்றைத் தவிர மற்றபடி சுதந்திரமாகவும் தனித் தனியாகவும்தான் தங்கள் வாழ்க்கையை நடத்தி வந்தன. அவற்றை ஒரு தலைவனுக்குக் கீழ்ப்பட்ட பல நாடுகளின் கட்டுறுதியற்ற சேர்க்கைகள் என்று கூறலாம். அவற்றிற்குப் பொதுவான மனோபாவம் என்பது கிடையாது. அமெரிக்காவிலோ அப்படி

இல்லை. ரயில் முதலிய போக்கு வரவு சாதனங்கள் காரணமாகவும், ஒரேவிதமான கல்வியின் பயனாகவும் அமெரிக்காவில் வாழ்ந்த பல்வேறு வகுப்பினரிடையில் பொதுவான ஒரு மனோபாவம் வளர்ந்து வந்தது. அவர்கள் அனைவரும் சிறிது சிறிதாக ஒன்றுபட்டுப் பொதுவான ஒரு வமிசத்தைச் சேர்ந்தவர்கள் ஆகிவிட்டார்கள். இந்த ஒன்றுபடல் பூர்த்தியாகிவிட்டதென்று சொல்வதற்கில்லை. அது இன்னும் நடந்து கொண்டுதான் இருக்கிறது. சரித்திரத்தில் இவ்வளவு பெரிய அளவில் நிகழ்ந்த ஜாதிக் கலப்பு வேறெதுவும் இல்லை.

ஐரோப்பியச் சிக்கல்களிலிருந்தும் சூழ்ச்சிகளிலிருந்தும் அமெரிக்கா விலகி நிற்க விரும்பியது. அவ்வாறே, வடஅமெரிக்கா, தென்அமெரிக்கா இரண்டிலும் ஐரோப்பா தலையிடக் கூடாது என்பது அதன் விருப்பம். 'மன்ரோ கோட்பாட்டை'ப் பற்றி நான் ஏற்கெனவே உனக்குக் கூறியுள்ளேன். 'பரிசுத்தக் கூட்டுறவை'ச் சேர்ந்த ஐரோப்பிய நாடுகள் ஸ்பெயினின் சாம்ராஜ்யத்தைக் காப்பாற்றுவதற்காகத் தென் அமெரிக்காவில் தலையிட விரும்பியபோது பிரசிடெண்டு மன்ரோ அக்கோட்பாட்டை விதித்தார். அமெரிக்காக் கண்டத்தில் எப்பாகத்திலும் ஆயுத பலத்தைக் கொண்டு ஒரு ஐரோப்பிய வல்லரசு தலையிடுவதை ஐக்கிய அமெரிக்க நாடுகள் அனுமதிக்க மாட்டா என்று மன்ரோ கூறினார். அதனால் பாலப் பருவத்திலிருந்த தென் அமெரிக்கக் குடியரசுகள் ஐரோப்பாவின் பேராசையினின்றும் காப்பாற்றப்பட்டன. அதனால் ஒருமுறை பிரிட்டனுடன் போர் தொடுக்க வேண்டிய நிலைமைக்குக்கூட அமெரிக்கா வந்துவிட்டது. ஆனால், நூறு வருஷங்களுக்கு மேலாகவே அது அக்கொள்கையை வெற்றியுடன் அனுஷ்டித்து வருகிறது.

தென் அமெரிக்கா வட அமெரிக்காவிலிருந்து பெரிதும் வேறுபட்டிருந்தது. நூறு வருஷங்கள் ஆகியும் இரண்டுக்கும் உள்ள வேற்றுமை குறைந்ததாகத் தெரியவில்லை. வடக்கிலுள்ள கானடா தேசம் வரவர ஐக்கிய அமெரிக்காவைப் போல் ஆகி வருகிறது. ஆனால், தென் அமெரிக்கக் குடியரசுகள் அத்தகைய போக்கை அனுசரிக்கவில்லை. தென் அமெரிக்கக் குடியரசுகள் லத்தீன் நாடுகள் என்று முன்பே கூறியிருக்கிறேன். மெக்சிகோ வட அமெரிக்காவில் இருந்தாலும், அதுவும் ஒரு லத்தீன் நாடுதான். ஐக்கிய அமெரிக்காவையும் மெக்சிகோவையும் பிரிக்கும் எல்லைக் கோட்டுக்கு இருபுறமும் வாழ்பவர்கள் இரு வேறு பண்பாடுகளை உடைய இரு வேறு ஜனங்கள் ஆவர். அக்கோட்டுக்குத் தெற்கே, குறுகிய மத்திய அமெரிக்காவிலும் தென் அமெரிக்கா முழுவதிலும் ஜனங்கள் ஸ்பானிய, போர்த்துகீசிய மொழிகளையே பேசுகிறார்கள். இவ்விரண்டில் ஸ்பானிய மொழியே பெரும்பாலோர் பேசும் மொழியாகும். பிரேசில் நாடு ஒன்றில்தான் போர்த்துகீசிய மொழி பேசப்படுகிறதென்று நினைக்கிறேன். தென் அமெரிக்காவில் இன்று ஸ்பானிய மொழி உலகப் பெருமொழிகளுள் ஒன்றாக விளங்குகிறது. லத்தீன் அமெரிக்காவின் பண்பாட்டுக்கு ஸ்பெயினே ஆதரிசமாக விளங்குகிறது. கானடாவையும் ஐக்கிய அமெரிக்காவையும் போன்று, தென் அமெரிக்காவில் வகுப்பு வேற்றுமைகள் அவ்வளவாகப் பாராட்டப்படுவதில்லை. அங்கு ஸ்பானிய வமிசத்தில் வந்தவர்களுக்கும் அதன் பூர்வீககுடிகளான செந்நிற இந்தியருக்கும் இடையே கலப்பு மணங்கள் சாதாரணமாக நிகழ்கின்றன. ஓரளவு நீக்கிரோவருடனும் கலப்பு மணங்கள் செய்துகொள்ளப்படுகின்றன. அவற்றின் பயனாக அங்கே ஒரு கலப்பு ஜாதி தோன்றி வருகிறது.

நூறு வருஷச் சுதந்திர வாழ்வுக்குப் பின்பும் தென் அமெரிக்கக் குடியரசுகள் இன்னும் ஒரு வழியாகக் குதிர்ப்படவில்லை. அடிக்கடி அந் நாடுகளில் புரட்சிகளும் ராணுவ சர்வாதிகாரங்களும் தோன்றுகின்றன. சதா மாறிக்கொண்டிருக்கும் அந் நாடுகளின் அரசியலையும் அரசாங்கங்களையும் புரிந்துகொள்வது அரிதாயிருக்கிறது. ஆர்ஜெண்டினா, பிரேசில், சிலி ஆகிய மூன்றும் தென் அமெரிக்காவிலுள்ள முக்கியக் குடியரசு நாடுகளாகும். வட அமெரிக்காவிலுள்ள மெக்சிகோவும் ஒரு முக்கிய லத்தீன் அமெரிக்க நாடாகும்.

ஐக்கிய அமெரிக்காவானது மன்ரோ கோட்பாட்டின் மூலம் லத்தீன் அமெரிக்காவில் ஐரோப்பா தலையிடுவதைத் தடுத்தது. ஆனால், அதன் செல்வம் பெருகியதும் அது தன் வளர்ச்சிக்குப் புது இடங்களை நோக்கலாயிற்று. இயற்கையாக அதன் பார்வை பக்கத்திலுள்ள லத்தீன் அமெரிக்கா மீது விழுந்தது. பழைய காலத்தில் சாம்ராஜ்யம் காணும் முறையை ஒட்டி அது தென் அமெரிக்க நாடுகளைப் பலாத்காரமாகக் கைப்பற்றிக் கொள்ள முயலவில்லை. அதற்குப் பதிலாக அது தன் சாமான்களை அங்கே அனுப்பி அந்நாடுகளின் மார்க்கெட்டுகளைக் கைப்பற்றிக் கொண்டது. தென்அமெரிக்காவில் ரயில் போடுதல், சுரங்கம் வெட்டுதல் முதலிய காரியங்களில் அது தன்னுடைய முதலைப் போட்டது. அது தென் அமெரிக்க அரசாங்கங்களுக்குக் கடனாகப் பணம் கொடுத்தது. புரட்சி ஏற்படும் காலங்களில் எதிர்த்தரப்பினர் இருவருக்கும் அது பணம் கொடுப்பது வழக்கம். இங்கே "அது" என்று நான் குறிப்பது ஐக்கிய அமெரிக்க முதலாளிகளையும், பாங்கர் (நிதிக் கிழவர்)களையும், அவர்களுக்குப் பின்னால் அவர்களை ஆதரித்து நின்ற அமெரிக்க அரசாங்கத்தையுமேயாம்.

அமெரிக்கப் பாங்கர்கள் கடன் கொடுத்தும் முதலீடுகள் வைத்தும் சிறிது சிறிதாகத் தென், மத்திய அமெரிக்காவிலுள்ள சிறிய அரசாங்கங்களில் பலவற்றைத் தங்கள் வசத்தில் கொண்டு வந்து விட்டார்கள். ஒரு கட்சிக்குப் பணமோ அல்லது ஆயுதமோ கொடுத்துதவுவதாலும் இன்னொரு கட்சிக்கு அவற்றைக் கொடுக்காமல் விடுவதாலும், அவர்கள் அந் நாடுகளில் புரட்சியைக் கூட ஏற்படுத்தக் கூடிய நிலையில் இருந்தார்கள். அம் முதலாளிகளுக்கும் பாங்கர்களுக்கும் பின்னால் பலம் பொருந்திய ஐக்கிய அமெரிக்க அரசாங்கம் நிற்கும் போது, அளவிலும் பலத்திலும் சிறிய தென் அமெரிக்க நாடுகள் என்ன செய்ய முடியும்? சில சமயம், ஐக்கிய அமெரிக்கா அமைதியை நிலை நாட்டுகிற சாக்கில் ஒரு நாட்டில் ஏதாவது ஒரு கட்சிக்கு உதவியாகத் துருப்புகளையும் அனுப்புவதுண்டு.

இம்முறையில் ஐக்கிய அமெரிக்க முதலாளிகள் சிறிய தென் அமெரிக்க நாடுகள் எல்லாவற்றையும் தங்கள் ஆதிக்கத்தின் கீழ்க்கொண்டு வந்துவிட்டார்கள். அந் நாடுகளின் பாங்குகளையும், ரயில்வேக்களையும், சுரங்கங்களையும் அவர்களே நடத்தி அவற்றைத் தங்களுக்கு அனுகூலமாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். பெரிய லத்தீன் அமெரிக்க நாடுகளிலும் அவர்களுடைய முதலீடுகள், பண ஆதிக்கம் காரணமாக அவர்களுக்கு நிறையச் செல்வாக்கு இருந்தது. அதாவது, ஐக்கிய அமெரிக்கா அந்நாடுகளைத் தன்னுடைய அரசியல் ஆதிக்கத்தின் கீழ்க்கொண்டு வருவதற்குப் பதிலாக அந்நாடுகளின் செல்வம் முழுதையுமோ அல்லது அதில் பெரும் பகுதியையோ தன்னுடைய ஆதிக்கத்தின் கீழ்க்கொண்டு வந்துவிட்டது. இதை நாம் ஊன்றிக் கவனிக்க வேண்டும். இது ஒரு புதுவகையான சாம்ராஜ்யம். இந்தச் சாம்ராஜ்-

யம் நவீன முறையைச் சேர்ந்ததாகும். இது கண்ணுக்குத் தோன்றாதது; பொருளியல் தன்மை வாய்ந்தது. வெளி அறிகுறிகள் ஒன்றும் இல்லாமலே இது பிறநாடுகளைச் சுரண்டி அவற்றின் மீது ஆதிக்கம் செலுத்துகிறது. தென் அமெரிக்க நாடுகள் அரசியல் துறையிலும், சர்வதேச விவகாரங்களிலும் சுதந்திரமாகத்தான் இருக்கின்றன. படத்தில் பார்த்தால் அவை எத்துணை பெரிய நாடுகள் என்பது தெரியவரும். படத்திலிருந்து அவை சுதந்திர நாடுகள் அல்லவென்று நாம் எவ்விதத்தும் தெரிந்துகொள்ள முடியாது. ஆயினும், அவற்றில் பெரும்பாலான நாடுகள் ஐக்கிய அமெரிக்காவின் கைப்பிடியில் அடங்கி யிருக்கின்றன.

நமது சரித்திரக் காட்சிகளில் நாம் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு வகையான சாம்ராஜ்யங்கள் தழைத்ததைக் கண்டோம். ஆரம்பத்தில், ஒருநாட்டவர் இன்னொரு நாட்டவரைப் போரில் வென்றார்கள் என்றால் அவர்கள் தோற்றவர்களையும் தோற்றவர்களுடைய நாட்டையும் எது வேண்டுமானாலும் செய்யலாம் என்று இருந்தது. வென்றவர்கள் தோற்றவர்களையும் அவர்களுடைய நாட்டையும் தங்கள் நாட்டுடன் இணைத்துக் கொண்டார்கள். அதாவது, தோற்றவர்கள் வென்றவர்களின் அடிமைகள் ஆனார்கள். இதுதான் சாதாரணமாக அப்போதிருந்த வழக்கம். பைபிளில் நாம் படிக்கிறோம்: ‘பாபிலோனியர் யூதர்களை வென்று அவர்களைச் சிறைபிடித்துச் சென்றார்கள்.’ இன்னும் இதுபோன்ற உதாரணங்கள் பல கூறலாம். அதற்குப்பின், இந்தச் சாம்ராஜ்யம் சிறிது சிறிதாக மாறி இன்னொருவகையான சாம்ராஜ்யத்துக்கு இடம் கொடுத்தது. அதன்படி வென்றவர்கள் தோற்றவர்களை அடிமைகளாகச் செய்யாமல் அவர்களுடைய நாட்டை மட்டும் இணைத்துக்

கொண்டார்கள். இதற்குக் காரணம், வரிவிதித்தல் முதலான பலவழிகளில் தோற்றவர்களைச் சுரண்டிப் பணம் சம்பாதிப்பது எளிதென்று வென்றவர்கள் கண்டதுதான். நம்மில் பலர் சாம்ராஜ்யம் என்றால் இத்தகைய சாம்ராஜ்யங்களையே எண்ணிக்கொள்ளுகிறோம். பிரிட்டிஷாரின் இந்திய சாம்ராஜ்யம் இத்தகையது தான். இந்தியாவின் மீது பிரிட்டிஷாருக்குள்ள அரசியல் ஆதிக்கம் போய்விட்டால் இந்தியா சுதந்திரம் அடைந்துவிடும் என்று நாம் எண்ணுகிறோம். ஆனால், இவ்வகையான சாம்ராஜ்யத்தின் காலம் அநேகமாக முடிந்துவிட்டது போல்தான். இதன் ஸ்தானத்தில் இதைவிடச் சீர்திருத்தமும் முன்னேற்றமும் வாய்ந்த இன்னொருவகை சாம்ராஜ்யம் தோன்றிக்கொண் டிருக்கிறது. இந்தப் புதுவகையான சாம்ராஜ்யம் நாட்டைக்கூட இணைத்துக் கொள்வதில்லை. இது ஒரு நாட்டின் செல்வத்தையும் செல்வத்தை ஆக்கும் சாதனங்களையுமே இணைத்துக் கொள்ளுகிறது. இப்படிச் செய்வதால் அது அந்நாட்டைத் தன்னுடைய நன்மைக்கு முழுதும் சுரண்ட முடிவதோடு அதைப் பெரும்பாலும் தன் ஆதிக்கத்தின் கீழ் வைத்திருக்கவும் முடிகிறது. அதே சமயத்தில் அந்நாட்டை ஆளும் பொறுப்போ, அந்நாடு கலகம் செய்தால் அதை அடக்கும் சிரமமோ அதற்கு இல்லாது போய்விடுகின்றன. அதாவது, மிகக் குறைந்த சிரமத்தில் அது அந்நாட்டையும் அந்நாட்டவரையும் அடக்கி ஆளவும் தன்னிஷ்டம்போல் ஆட்டவும் முடிகிறது.

நாளடைவில் சாம்ராஜ்ய முறை இவ்வாறு திருத்தம் பெற்று வந்திருக்கிறது. காட்சிக்குப் புலனாகாத பொருளியல் சாம்ராஜ்யமே நவீன வகையைச் சேர்ந்ததாகும். ஆதிகாலத்தில் அடிமைத்தனம் ஒழிக்கப்பட்ட போதும், அதற்குப் பின்பு நிலமானிய அடிமைத்தனம் ஒழிக்கப்

பட்டபோதும், இனி ஜனங்கள் சுதந்திரமாக இருப்பார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், பணம் படைத்தவர்கள் அப்போதும் ஏழைகளைச் சுரண்டியும் அமுக்கியாண்டும் வந்தார்கள் என்பது உடனே தெரிய வந்தது. முன்பு அசல் அடிமைகளாக இருந்தவர்கள் இப்போது கூலிக்கு வேலை செய்யும் அடிமைகள் ஆனார்கள். இன்னும் சுதந்திரம் அவர்களுக்கு வெகு தூரத்தில்தான் இருந்தது. இவ்வுண்மை தனி மனிதர்களுக்கு மட்டுமின்றித் தேசங்களுக்கும் பொருந்துவதாகும். ஒரு நாடு இன்னொரு நாட்டின்மீது அரசியல் ஆதிக்கம் செலுத்துவதுதான் துன்பத்துக்குக் காரணம் என்றும் அவ்வாதிக்கம் ஒழிந்துவிட்டால் சுதந்திரம் தானாகவே வந்துவிடுமென்றும் ஜனங்கள் நினைக்கிறார்கள். அது ஒன்றும் அவ்வளவு நிச்சயமில்லை. அரசியலில் சுதந்திரமாக உள்ள நாடுகள் பொருளியலில் பிறருடைய ஆதிக்கத்தின் கீழ் இருப்பதால் அவர்களுக்கு அடிமைப்பட்டுக் கிடப்பதை நாம் பிரத்தியட்சமாகக் காண்கிறோம். இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் எல்லோருக்கும் கண்ணாடிபோல் தெரிகிறது. பிரிட்டன் இந்தியாமீது அரசியல் ஆதிக்கம் வகிக்கிறது. கண்ணுக்குப் பிரத்தியட்சமாகத் தெரியும் இவ்வரசியல் சாம்ராஜ்யத்தை அடுத்தும் அதன் இன்றியமையாத அங்கமாகவும் விளங்குவது பிரிட்டனுக்கு இந்தியா மீதுள்ள பொருளியல் ஆதிக்கம்தான். இந்தியா மீது பிரிட்டனுக்குள்ள வெளிப்படையான அரசியல் ஆதிக்கம் வெகு சீக்கிரத்தில் ஒழிந்து போகலாம். அதன் அரசியல் ஆதிக்கம் ஒழிந்தும் பொருளியல் ஆதிக்கம் ஒழியாமல் இருக்கலாம். அப்படியாயின், பிரிட்டன், இந்தியாவைப் பழையபடியே சுரண்டிக்கொண்டிருக்கும். இந்தியாவில் அதற்குச் சாம்ராஜ்யமும் இருக்கும். ஆனால், அந்தச்

சாம்ராஜ்யம் வெளிப்படையாக ஒருவர் கண்ணுக்கும் புலனாகாது.

அடக்கி ஆளுகிற ஒரு நாட்டுக்குப் பொருளியல் சாம்ராஜ்யம்தான் அதிகத் தொந்தரவு இல்லாதது. அது ஆளப்படுவோரிடையில் அரசியல் சாம்ராஜ்யத்தைப் போல் துவேஷத்தை உண்டாக்குவதில்லை. காரணம், அதைப் பலரும் அறியாததுதான். ஆனால், அது ஜனங்களுக்குக் கஷ்டத்தைக் கொடுக்கும்போது அவர்கள் அது வேலை செய்யும் விதத்தை அறிந்து அதை வெறுக்க ஆரம்பிக்கிறார்கள். லத்தீன் அமெரிக்காவுக்கு இப்போது ஐக்கிய அமெரிக்காவைக் கண்டால் ஆவதில்லை, லத்தீன் அமெரிக்க நாடுகள் ஒன்றுசேர்ந்து கூட்டாக ஐக்கிய அமெரிக்காவின் ஆதிக்கத்தை எதிர்ப்பதற்குப் பல முயற்சிகள் செய்து வருகின்றன. ஆனால், அவை தங்களுடைய அரண்மனைப் புரட்சிகளையும் பரஸ்பர விரோதங்களையும் தொலைத்துத் தலைமுழுகுகிற வரையில் அதில் வெற்றி பெறுவது கடினம்.

கண்ணுக்குத் தெரிகிற அமெரிக்க சாம்ராஜ்யத்தைப் பிலிப்பைன் தீவுகளில் காணலாம். அமெரிக்காவுக்கும் ஸ்பெயினுக்கும் விளைந்த போரின் பயனாக அத்தீவுகள் அமெரிக்காவுக்குக் கிடைத்த வரலாறு முன் கடிதம் ஒன்றில் கூறப்பட்டிருக்கிறது. அந்தப் போர் அட்லாண்டிக் சமுத்திரத்திலுள்ள கியூபா தீவு சம்பந்த[illegible] 1898-ல் ஆரம்பித்தது. கியூபா சுதந்திரம் பெற்றது; ஆனால், பெயரளவில்தான். கியூபா தீவும் அதையடுத்த ஹைட்டி தீவும் அமெரிக்காவின் ஆதிக்கத்திற்கு உட்பட்டவை.

பத்துப் பன்னிரெண்டு வருஷங்களுக்கு முன்னால் பனாமா கால்வாய் திறக்கப்பட்டது. மத்திய அமெரிக்காவின் குறுகிய பகுதியில் உள்ள இக்கால்வாய் அட்லாண்

டிக், பசிபிக் சமுத்திரங்களை ஒன்று சேர்க்கிறது. சூயஸ் கால்வாய் ஆக்கிய பர்டினண்ட் டிலெசப்ஸ் என்பவன் 50 ஆண்டுகளுக்கு முன்பே இதையும் வெட்டுதற்குத் திட்டம் வகுத்திருந்தான். ஆனால், அவனுக்கு ஏதோ சங்கடம் ஏற்பட்டு அவனால் இதை நிறைவேற்ற முடிய வில்லை. கடைசியில் பனாமா கால்வாயை அமெரிக்கர் தான் வெட்டினார்கள். அதையடுத்த பிரதேசத்தில் அவர்கள் விஷஜுரத்தையும் (மலேரியா) பித்தஜுரத் தையும் எதிர்த்துச் சமாளிக்க வேண்டியிருந்தது. அவர்கள் அந்நோய்களை ஒழிக்க முயற்சித்து அதில் வெற்றியும் பெற்றார்கள். மலேரியாக் கொசுக்களுக்கும் மற்ற நோய்க்கிருமிகளுக்கும் உற்பத்திஸ்தானமாயிருந்த வைகளை அவர்கள் அறவே துடைத்து நீக்கிக் கால்வாய்ப் பிரதேசத்தை ஆரோக்கியமுள்ளதாகச் செய்தார்கள். பனாமா கால்வாய் பனாமா குடியரசில் உள்ளது. பனாமா குடியரசு மிகவும் சிறியது. அக்குடியரசு, கால்வாய் இரண்டும் ஐக்கிய அமெரிக்காவின் ஆதிக்கத்தில் உள்ளன. ஐக்கிய அமெரிக்காவுக்குப் பனாமா கால்வாய் பெரிய வரப்பிரசாதம் என்றே சொல்ல வேண்டும். அது இல்லாவிட்டால் அதன் கப்பல்கள் தென்அமெரிக் காவைச் சுற்றிக்கொண்டு போகவேண்டியிருக்கும். ஆயினும், பனாமா கால்வாய் சூயஸ் கால்வாயைப்போல் அவ்வளவு முக்கியம் வாய்ந்ததல்ல.

ஆக, ஐக்கிய அமெரிக்கா பலத்திலும் சம்பத்திலும் வளர்ந்துகொண்டே சென்றது. அது உற்பத்தி செய்யாத பொருள்கள் இல்லை.. சிறப்பாகக் குபேரனை நிகர்த்த கோடீசுவரர்களையும் வானளாவிய மாடமாளிகை களையும் அது ஏராளமாக உற்பத்தி செய்தது. அது பல வழிகளில் ஐரோப்பாவை எட்டிப் பிடித்துவிட்டதோடு அதைத் தாண்டியும் சென்றுவிட்டது. தொழில் முறையில் உலகத்திலேயே தலைசிறந்த நாடாக அது

விளங்கியது. அமெரிக்கத் தொழிலாளரின் வாழ்க்கைத் தரம் மற்ற எந்நாட்டுத் தொழிலாளருடையதையும் விட உயர்வாக இருந்தது. 19-வது நூற்றாண்டு இங்கி லாந்தைப்போல், இந்தச் செல்வச்செழிப்புக் காரண மாக அமெரிக்காவிலும் அபேதவாதம் முதலிய தீவிரக் கொள்கைகள் வேரூன்ற முடியவில்லை. சிலர் நீங்கலாக மற்ற அமெரிக்கத் தொழிலாளர் எல்லோரும் அதிக மான மிதவாதப் போக்கும் பழைமைப் பற்றும் உடையவர்களாக இருந்தார்கள். அவர்களுக்கு நல்ல கூலி கிடைத்து வந்தது. புரட்சி செய்வதால் அதைவிட நல்ல நிலைமை வாய்க்குமா என்பது சந்தேகம். ஆகவே, சந்தேகமான ஒன்றுக்காக நிச்சயமாக உள்ள சுகத்தை அவர்கள் இழக்க விரும்பவில்லை. அமெரிக்கத் தொழி லாளரில் பெரும்பாலோர் 'டேகோ'க்கள்; அதாவது, இதாலியரும் பிறரும் 'டேகோ'க்கள் என்றாலே எல்லோ ருக்கும் ஒரு இளப்பம். மேலும், அவர்களுக்குப் பலமோ கட்டுப்பாடோ இல்லை. அதிகக் கூலி வாங்கும் தேர்ந்த தொழிலாளர்கூடத் தாங்கள் 'டேகோ'க்களை விட உயர்ந்தவர்கள் என்றே கருதி வந்தார்கள்.

அமெரிக்க அரசியலில் குடியரசுக் கட்சி, ஜன நாயகக் கட்சி என இரு கட்சிகள் தோன்றி வளர்ந்தன. பிரிட்டிஷ் கட்சிகளைப்போல், அல்லது அவற்றைவிட அதிகமாகவே, அக்கட்சிகள் பணக்கார வகுப்பினரின் பிரதிநிதிகளாக இருந்தன. மூலக் கொள்கையைப் பொறுத்தவரையில் அவற்றிற்குள் வித்தியாசம் மிக மிகக் குறைவு.

உலக யுத்தம் தொடங்கியபோது அமெரிக்காவின் நிலைமை மேற்கூறியவாறு இருந்தது. இறுதியில் அமெரிக்காவும் அந்த யுத்தச் சுழலில் அகப்பட்டுக் கொண்டது.

139

அயர்லாந்துக்கும் இங்கிலாந்துக்கும் நடந்த 700 வருஷப் போராட்டம்

மார்ச்சு 4, 1933.

நாம் மீண்டும் அட்லாண்டிக் சமுத்திரத்தைக் கடந்து புதிய உலகத்திலிருந்து பழைய உலகத்துக்குப் போவோம். புதிய உலகத்திலிருந்து பழைய உலகத்துக்குக் கடல் மார்க்கமாகவோ, ஆகாய மார்க்கமாகவோ செல்லும் ஒருவன் முதன்முதலில் அயர்லாந்தைத்தான் பார்ப்பான். ஆகவே, நாம் முதலில் அயர்லாந்தில் தங்கி அதைப் பார்ப்போம். பச்சைப் பசேல் என்று பார்வைக்கு அழகாக விளங்கும் அத்தீவு ஐரோப்பாவின் மேற்குக் கோடியில் அட்லாண்டிக் மகாசமுத்திரத்தில் இருக்கிறது. அது மிகவும் சிறியது; உலக சரித்திரத்தின் முக்கியப் போக்குகளுக்குப் புறம்பாயுள்ளது. அது அளவில் சிறிதாயினும் முடிவில்லாத ஆச்சரியம் வாய்ந்தது. அது பல நூற்றாண்டுகளாக நடத்திவரும் தேசிய சுதந்திரப் போராட்டம் வெலற்கரிய வீரமும் சொலற்கரிய தியாகமும் நிறைந்ததாகும். அதற்கு எதிரி வேறு யாரும் இல்லை; பக்கத்திலுள்ள இங்கிலாந்தே அதற்கு எதிரி. இங்கிலாந்தைப்போன்ற பலம் மிக்க பகைவனை எதிர்த்து அது 750 ஆண்டுகள் இடைவிடாமல் விடாமுயற்சியுடன் போராடி வந்திருக்கிறது. அந்தப் போராட்டமே ஒரு அற்புதம். இன்னும் அது முடிவாகத் தீர்ந்தபாடில்லை! இந்தியாவிலும் சீனாவிலும் பிற இடங்களிலும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் வேலை செய்த விதத்தை நாம் பார்த்தோம். ஆனால், ஆரம்பத்திலிருந்தே அதன் முழுவேகத்தையும் அயர்லாந்து தாங்க

வேண்டியிருந்தது. ஆயினும், அது மனமொப்பி இங்கிலாந்துக்குத் தலை குனியவில்லை. இங்கிலாந்துக்கு விரோதமான எழுச்சி தோன்றாத தலைமுறையே அயர்லாந்தில் கிடையாது. அயர்லாந்தின் வீரப் புதல்வர்கள் ஒன்று சுதந்திரப்போரில் உயிரை விட்டார்கள், அல்லது பிரிட்டிஷ் அதிகாரிகளால் சிரச்சேதம் செய்யப்பட்டார்கள். அநேக ஐரிஷ்காரர் தங்கள் உயிருக்குயிரான தாய்நாட்டைத் துறந்து வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டார்கள். இன்னும் பலர் இங்கிலாந்துடன் போராடும் வெளிநாட்டுச் சைனியங்களில் சேர்ந்து போரிட்டார்கள். அம்முறையில் அவர்கள் தங்கள் தாய்நாட்டை நசுக்கி மிதிக்கும் பகைவன்மீது தங்களுக்குள்ள வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ள முயன்றார்கள். அயர்லாந்திலிருந்து வெளிப் போந்தவர்கள் பல தூர தேசங்களில் சென்று குடியேறினார்கள். அவர்கள் எங்குச் சென்றாலும் தங்களுடைய இருதய அந்தரங்கத்தில் அயர்லாந்தின் ஒரு பகுதியையும் கூடவே எடுத்துச் சென்றார்கள்.

துக்கத்தில் உழல்பவர்களும், அந்நிய ஆட்சியின் கீழ் அகப்பட்டுக்கொண்டு தவிக்கும் நாடுகளும், இன்னும் நிகழ்காலத்தில் தங்களுடைய மனோரதம் நிறைவேறாத காரணத்தால் சந்தோஷம் என்பதையே அறியாத எல்லோரும் இறந்த காலத்தையே எண்ணி ஏங்குபவர்களாய் அதிலிருந்து ஆறுதல் பெற முயர்சிக்கிறார்கள். சென்றுபோன காலத்தை அவர்கள் பெரிதும் மிகைப்படுத்திக்கொண்டு, பழம்பெருமையைப் பற்றி எண்ணுவதில் ஒரு தனி ஆனந்தம் கொள்ளுகிறார்கள். நிகழ்காலத்தைத் துன்ப இருள் கவிந்து நிற்கும்போது பழைமையே ஊக்கமும் ஆறுதலும் தந்து உதவுகிறது. ஆகவே, அவர்கள் பழைமையிடம் சரண்புகுகிறார்கள்.

அவர்களால் தங்களுடைய பழைய மனக்குறைகளையும் மறக்க முடிவதில்லை. அவை உள்ளுக்குள்ளேயே கொதித்துக்கொண்டிருக்கின்றன. இவ்வாறு எப்போதும் சென்ற காலத்தையே நோக்குவது ஒரு தேசத்தின் நோயுற்ற மனப்பான்மையையே காட்டுகிறது. நல்ல நிலையிலுள்ள ஜனங்களும் தேசங்களும் நிகழ்காலத்தில் தாங்கள் செய்யவேண்டிய கடனை ஆற்றி அவை பலன் தரும் எதிர்காலத்தை நோக்கி நிற்பார்கள். ஆனால், சுதந்திரத்தை இழந்து அடிமைப்பட்டுக் கிடக்கும் தனி மனிதனோ, அன்றி ஒரு தேசமோ நல்ல நிலையில் இருப்பதாகச் சொல்லமுடியாது. ஆகவே, அம்மனிதனோ அன்றி அத்தேசமோ இறந்த காலத்தையே நோக்கிக்கொண்டு ஓரளவு இறந்த காலத்திலேயே வாழ்வது இயற்கையே.

ஆக, அயர்லாந்து இன்னும் இறந்த காலத்தில் வாழ்ந்து வருகிறது. அந்நாட்டவர் தங்கள் நாடு சுதந்திரமாக வாழ்ந்த காலத்தின் நினைவைப் பொன்னேபோல் போற்றி வருகிறார்கள். அதற்குப்பின் அவர்கள் நடத்திய பற்பல சுதந்திரப் போராட்டங்களும் அவர்களுடைய பழைய மனக்குறைகளும் அவர்கள் நெஞ்சை விட்டு அகலாதிருக்கின்றன. 1400 ஆண்டுகளுக்குமுன் தங்கள் நாடு பெருமை பெற்றுத் துலங்கிய காலத்தை அவர்கள் நோக்குகிறார்கள். அப்போது, அதாவது, கி. பி. ஆறாம் நூற்றாண்டில், மேல் ஐரோப்பாவிலேயே அயர்லாந்து தான் கலைமகளின் கொலுக்கூடமாயிருந்தது. [illegible] தேசங்களிலிருந்து மாணவர்கள் கல்வி பயிலுவதற்கு அயர்லாந்தை நாடி வந்தார்கள். வாண்டலரும் ஹ[illegible]ரும் ரோம சாம்ராஜ்யத்தையும் ரோம நாகரிகத்தையும் அழித்த பின்பு, மீண்டும் ஐரோப்பாவில் கலை மறுமலர்ச்சி தோன்றும்வரையில் கலை விளக்கை அணையாது

காத்த இடங்களுள் அயர்லாந்தும் ஒன்றாகும். ஆதியிலேயே கிறிஸ்தவமதம் அயர்லாந்துக்கு வந்துவிட்டது. அயர்லாந்தின் ரட்சக முனிவரான அர்ச். பாட்ரிக் அதைக் கொண்டு வந்ததாகக் கருதப்படுகிறது. அயர்லாந்திலிருந்துதான் கிறிஸ்தவ மதம் வட இங்கிலாந்துக்குச் சென்றது. அயர்லாந்தில் பல கிறிஸ்தவ மடங்கள் தோன்றின. அவை புராதன இந்தியாவின் ஆசிரமங்களைப் போன்றும், பௌத்த மடங்களைப் போன்றும் வித்தியா பீடங்களாக விளங்கின. அம்மடங்களில் பெரும்பாலும் திறந்த வெளியில் கல்வி போதிக்கப்பட்டது. அம்மடங்களிலிருந்து சென்ற கிறிஸ்தவப் பாதிரிகள் வட ஐரோப்பாவிலும் மேல் ஐரோப்பாவிலும் வாழ்ந்து வந்த புறச் சமயிகளுக்குப் புது மதமாகிய கிறிஸ்தவமதத்தைப் போதித்தார்கள். அம்மடங்களில் வாழ்ந்த துறவிகள் சிலர் அரிய நூல்கள் எழுதி அவற்றிற்கு விளக்கமும் செய்தார்கள். அவர்கள் கைப்பட எழுதிய பிரதி ஒன்று டப்ளினில் இருக்கிறது. அதற்குக் 'கெல் நூல்' என்று பெயர். அது 1200 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டதாக இருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது.

கி. பி. ஆறாவது நூற்றாண்டு தொடக்கமான 200 அல்லது 300 ஆண்டுகளை அயர்லாந்தின் பொற்காலம் என்று ஐரிஷ்காரர் கருதுகிறார்கள். அப்போது 'கேல்' (Gaelic) நாகரிகமும் கலைப்பண்பும் உச்சநிலையில் இருந்தனவாம். காலத்தின் சேய்மையே பண்டை நாட்களுக்கு நம் கண்களில் ஒருவித சோபையையும் வசீகரத்தையும் அளிக்கிறதென்று நினைக்கிறேன். அதனால்தான் அவற்றை நாம் உண்மையில் இருந்ததைவிடச் சிலாக்கியமாகக் கருதுகிறோம். அக்காலத்தில் அயர்லாந்தின் நிலை அப்படி ஒன்றும் பெருமைப்படக் கூடியதாக இல்லை.

அயர்லாந்தில் பல ஜாதியார்கள் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் எப்போதும் ஒருவரோ டொருவர் சண்டை போட்டுக்கொண் டிருந்தார்கள். இந்தியாவைப்போல், அயர்லாந்தின் பலவீனத்துக்கும் பரஸ்பரச் சண்டைகளே காரணம். அப்புறம், டேனியரும் நார்ஸ்மக்களும், இங்கிலாந்திலும் பிரான்சிலும் செய்ததைப்போல், அயர்லாந்தையும் கைப்பற்றிக்கொண்டு ஜனங்களைத் துன்புறுத்தினார்கள். பதினோராவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் பிரையான் பொருமா என்னும் ஐரிஷ் அரசன் டேனியரைத் தோற்கடித்து அயர்லாந்தைச் சில காலம் ஒன்றுபடுத்திப் புகழுடன் அரசாண்டான். அவனுடைய மரணத்துக்குப்பின் அயர்லாந்து மீண்டும் பிளவுபட்டு விட்டது.

பதினொராவது நூற்றாண்டில் வெற்றி மன்னன் வில்லியம் தலைமையின் கீழ் நார்மானியர் இங்கிலாந்தை ஜெயித்தது உனக்கு நினைவிருக்கும். அதற்கு நூறு வருஷங்களுக்குப் பின் அவ் ஆங்கிலோ-நார்மானியர் அயர்லாந்தின் மீது படையெடுத்துச் சென்று அதில் ஒரு பகுதியை ஜெயித்தார்கள். அவர்கள் ஜெயித்த பகுதி 'பேல்' (Pale) என்று அழைக்கப்பட்டது. 1169-ல் நிகழ்ந்த அவ் ஆங்கிலோ-நார்மன் படையெடுப்பு பழைய கேல் நாகரிகத்தை அடித்து வீழ்த்திவிட்டது. அதிலிருந்து ஆங்கிலோ-நார்மானியருக்கும் ஐரிஷ் ஜாதியார்களுக்கும் இடையே ஓயாத போராட்டம் ஆரம்பமாயிற்று. இருதிறத்தாருக்கும் நூற்றுக்கணக்கான வருஷங்களாக நடந்த அந்த யுத்தங்களின் குரூரம் இவ்வளவு அவ்வளவு என்று சொல்லும் தரமன்று. ஆங்கிலேயர் (ஆங்கிலோ-நார்மானியரை இப்போது நாம் ஆங்கிலேயர் என்று அழைக்கலாம்) ஐரிஷ்காரரை அரைக் காட்டுமிராண்டிகளாகவே எப்போதும் கருதி வந்துள்ளார்கள். அவர்

களுக்குள் வகுப்பு வேற்றுமையும் இருந்தது. ஆங்கிலேயர் ஆங்கிலோ-சாக்சன் வகுப்பைச் சேர்ந்தவர்கள். ஐரிஷ்காரர் கெல்டு வகுப்பைச் சேர்ந்தவர்கள். பிற்பாடு மத விஷயத்திலும் அவர்களுக்குள் வேற்றுமை ஏற்பட்டது. ஆங்கிலேயரும் ஸ்காட்டுகளும் பிராடெஸ்டண்டுகள் ஆனார்கள். ஐரிஷ்காரரோ ரோமன் கத்தோலிக்க மதத்தையே விசுவாசத்துடன் அனுஷ்டித்து வந்தார்கள். ஆக, இந்த ஆங்கிலோ-ஐரிஷ் யுத்தங்களில் வகுப்பு யுத்தங்களிலும் மத யுத்தங்களிலும் காணப்படும் கொடுமைகள் அனைத்தும் நிறைந்திருந்தன. ஆங்கிலேயர் வேண்டுமென்றே இரு வகுப்பினரும் கலக்கவொட்டாதபடி செய்தார்கள். ஆங்கிலேயருக்கும் ஐரிஷ்காரருக்கும் கலப்பு மணங்கள் நிகழ்வதைத் தடுத்து 'கில் கென்னி சட்டம்' என்றொரு சட்டம் செய்யப்பட்டது.

அயர்லாந்தில் அந்நிய ஆட்சியை எதிர்த்துக் கலகத்துக்குப்பின் கலகம் விளைந்து கொண்டிருந்தது. ஒவ்வொரு கலகமும் மிகுந்த குரூரத்துடன் அடக்கப்பட்டது. ஐரிஷ்காரர் தங்களை நசுக்கி மிதிக்கும் அந்நியரை விஷமென வெறுத்தனர். சமயம் வாய்க்கும் போதெல்லாம்-சமயம் வாய்க்காத போதுங்கூட-அவர்கள் அந்நியருக்கு விரோதமாகக் கிளர்ந் தெழுந்தார்கள். "இங்கிலாந்துக்கு இக்கட்டான சமயமே அயர்லாந்துக்கு ஏற்ற சமயம்" என்று ஒரு பழமொழிகூட வழங்கலாயிற்று. அரசியல் காரணங்களுக்காகவும் மத சம்பந்தமான காரணங்களுக்காகவும் அயர்லாந்தானது பிரான்சு, ஸ்பெயின் போன்ற இங்கிலாந்தின் எதிரிகளுடன் அடிக்கடி சேர்ந்து கொள்வது வழக்கம். இதனால் ஆங்கிலேயரின் கோபம், நெய் சொரியப்பெற்ற நெருப்புப்போல், இன்னும் கொழுந்து விட்டெரிந்தது. அயர்லாந்தின் அச்

செய்கையை ஆங்கிலேயர் பெருத்த துரோகமாகக் கருதினார்கள். ஆகவே, அவர்கள் முன்னையினும் பன்மடங்கு குரூரத்துடன் அயர்லாந்தைப் பழிவாங்கினார்கள்.

அயர்லாந்தில் ஆங்கிலேய நிலச்சுவான்தார்களைக் குடியேற்றி அதன் எதிர்ப்பை அடக்குவதென்று இங்கிலாந்து எலிசபெத் ராணியின் காலத்தில் (16-வது நூற்றாண்டு) முடிவு செய்தது. உடனே அயர்லாந்தின் நிலம் பறிமுதல் செய்யப்பட்டது. பழைய ஐரிஷ் நிலச்சுவான்தார்களின் ஸ்தானத்தில் ஆங்கிலேய நிலச்சுவான்தார்கள் வந்து அமர்ந்தார்கள். இவ்வாறு, அந்நிய நிலச்சுவான்தார்களுக்குக் கீழ்பட்ட ஒரு விவசாய நாடாக அயர்லாந்து செய்யப்பட்டது. நூற்றுக் கணக்கான ஆண்டுகளுக்குப் பின்பும் அந்நிலச்சுவான்தார்கள் ஐரிஷ் மக்களுக்கு அந்நியமானவர்களாகவே இருந்தார்கள்.

எலிசபெத் ராணிக்குப்பின் பட்டத்துக்கு வந்த முதலாவது ஜேம்ஸ் ஐரிஷ்காரரின் எதிர்ப்பை ஒடுக்கும் முயற்சியில் இன்னும் ஒருபடி அதிகமாகவே போனான். அயர்லாந்தில் ஒழுங்கான அந்நியர் குடியேற்றம் ஒன்றை ஏற்படுத்தி விடுவதென்று அவன் தீர்மானித்தான். அதற்காக அவன் வட அயர்லாந்தில் அல்ஸ்டர் மாகாணத்திலுள்ள ஆறு ஜில்லாக்களிலும் ஐரிஷ்காரருக்குச் சொந்தமான நிலம் பூராவையும் பறிமுதல் செய்தான். அந்த நிலத்தை அவன் இங்கிலாந்திலும் ஸ்காட்லாந்திலும் உள்ளவர்களுக்கு இனாமாக அளித்து அவர்களை அங்குக் குடியேற்றினான். ஒரு தம்பிடி செலவில்லாமல் நிலம் கிடைத்தால் யார்தான் போகமாட்டார்கள்? ஆகவே அயர்லாந்தில் பலர் சென்று குடியேறி விவசாயத் தொழிலை மேற்கொண்டார்கள். இக் குடியேற்றத்துக்கு உதவி புரியும்படி லண்டன் நகரம் கேட்டுக் கொள்ளப்பட்டது. லண்டனில் இதற்கென்றே ஒரு தனிச் சங்கம்

அமைக்கப்பட்டது. அது பற்றியே வட அயர்லாந்திலுள்ள 'டெரி' என்னும் நகரம் 'லண்டன்டெரி' என்று பேர் பெற்றது.

ஆக, அயர்லாந்தில் பிரிட்டனை ஒட்டுப் போட்டது போன்று அல்ஸ்டர் விளங்கிற்று. இதை ஐரிஷ்காரர் மனமார வெறுத்ததில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. புதிதாக அல்ஸ்டரில் வந்து குடியேறியவர்கள் அவர்கள் பங்குக்கு ஐரிஷ்காரரை வெறுத்தும் அவர்களை இழிவாக மதித்தும் வந்தார்கள். அயர்லாந்தை இரு பகை வீடுகளாகப் பிரித்த பிரிட்டிஷ் சாம்ராஜ்ய வாதத்தின் சாமர்த்தியமே சாமர்த்தியம்! அதற்கப்புறம் 300 ஆண்டுகள் கடந்துவிட்டன. இன்னும் அல்ஸ்டர் பிரச்சினை தீர்ந்தபாடில்லை.

இந்த அல்ஸ்டர் குடியேற்றத்தை அடுத்து இங்கிலாந்தில் முதலாவது சார்லசுக்கும் பார்லிமெண்டுக்கும் உள்நாட்டுப் போர் விளைந்தது. பார்லிமெண்டின் சார்பில் தீவிர சுத்த வாதிகளும் (Puritans) பிராடெஸ்டண்டுகளும் இருந்தார்கள். ஆகவே, யாரும் சொல்ல வேண்டாமலே கத்தோலிக் அயர்லாந்து அரசனை ஆதரித்தது. அல்ஸ்டர் அதற்குப் போட்டியாகப் பார்லிமெண்டை ஆதரித்தது. தீவிரசுத்தவாதிகள் கத்தோலிக்க மதத்தையே அழித்து விடுவார்கள் என்கிற பயம் நியாயமாகவே ஐரிஷ்காரருக்கு இருந்தது. ஆகவே, அவர்கள் 1641-ல் ஒரு பெரிய கலகம் செய்தார்கள். அக் கலகமும் அதை அடக்கிய விதமும் முன் சந்தர்ப்பங்களைவிடப் பன்மடங்கு அதிகக் குரூரமாகவும் காட்டுமிராண்டித்தனமாகவும் இருந்தன. ஐரிஷ் கத்தோலிக்கர் பிராடெஸ்டண்டுகளைக் கொடூரமாகப் படுகொலை புரிந்தார்கள். ஆனால், அவர்கள் மீது கிராம்வெல் தீர்த்துக் கொண்ட பழி அதை விடக் கொடூரமாக

இருந்தது. ஐரிஷ் கத்தோலிக்கர், முக்கியமாகக் கத்தோலிக்கப் பாதிரிகள் பல இடங்களில் பயங்கரமான படுகொலைக்கு ஆளானார்கள். கிராம்வெல் என்று பேர் சொன்னாலே போதும்; இன்று கூட ஐரிஷ்காரருக்கு உச்சி முதல் உள்ளங்கால் வரையில் பற்றிக் கொள்ளும்.

இவ்வாறு ரத்தம் ஆறாய்ப் பெருகியும் அடுத்த தலைமுறையில் உள்நாட்டுப் போரும் கலகமும் நிகழாமலில்லை. அவ்வுள்நாட்டுப் போரில் லண்டன் டெரி முற்றுகையும் லிமெரிக் முற்றுகையும் மிகவும் பிரசித்தி பெற்ற இரு சம்பவங்களாகும். 1688-ல் அல்ஸ்டரிலுள்ள பிராடெஸ்டண்டு லண்டன் டெரியைக் கத்தோலிக்க ஐரிஷ்காரர் முற்றுகையிட்டார்கள். அன்னாகாரம் இன்றிப் பட்டினி கிடந்த நிலையிலும் லண்டன் டெரி வாசிகள் தங்கள் நகரை வீரத்துடன் காத்து நின்றார்கள். நான்கு மாதங்கள் முற்றுகையினால் கஷ்டம் அனுபவித்த பிறகு பிரிட்டிஷ் கப்பல்கள் அவர்களுக்கு ஆகாரம் கொண்டு வந்து உதவின. 1690-ல் நிகழ்ந்த லிமெரிக் முற்றுகை "ஓடம் வண்டியில் ஏறுவதும், வண்டி ஓடத்தில் ஏறுவதும் சகஜம்" என்னும் வசனத்தை மெய்ப்படுத்தியது. லிமெரிக்கில் கத்தோலிக்க ஐரிஷ்காரரை ஆங்கிலேயர் வளைத்துக் கொண்டார்கள். அம்முற்றுகையின் மகா வீரன் பாட்ரிக் சார்ஸ்பீல்டு என்பவன். அவன் எண்ணிக்கையில் மிகுந்த பகைவரை எதிர்த்து வெகு தீரமாக லிமெரிக் நகரைக் காத்தான். அம் முற்றுகையின்போது தங்கள் நகரைக் காக்க ஐரிஷ் மாதர்கள் கூடப் போரிட்டார்களாம். சார்ஸ்பீல்டின் வீரத்தையும் அவனுடைய படையினரின் சாகசச் செயல்களையும் புகழும் கேல் மொழிப் பாடல்கள் இன்றும் அயர்லாந்தின் கிராமாந்தரங்களில் பாடப்படுகின்றன. ஆனால், சார்ஸ்பீல்டு இறுதியில் நகரைப்

பிரிட்டிஷாரிடம் ஒப்புவிக்க வேண்டியதாயிற்று. ஆனால், அவர்களுடன் கவுரமான ஒரு உடன்படிக்கை செய்து கொண்ட பின்னரே அவன் அவ்வாறு செய்தான். அவ்வுடன்படிக்கையின் ஒரு ஷரத்து ஐரிஷ் கத்தோலிக்கருக்குப் பூரண சிவில், மத உரிமைகளை அளித்தது.

லிமெரிக் உடன்படிக்கையை மீறி ஆங்கிலேயர் நடந்து கொண்டார்கள், அல்லது, அயர்லாந்திலுள்ள ஆங்கிலேய நிலச்சுவான்தார்கள் அதை மீறினார்கள் என்று சொல்லலாம். அந்நிலச்சுவான்தார்கள் பிராடெஸ்டண்டுகள். பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்குக் கீழ்ப்பட்ட டப்ளின் பார்லிமெண்டு அவர்கள் கையில் இருந்தது. அவர்கள் லிமெரிக் உடன்படிக்கையில் கொடுக்கப்பட்ட வாக்குறுதியை அழித்துக் கத்தோலிக்கருக்குச் சிவில் உரிமையோ மத உரிமையோ கொடுக்க மறுத்து விட்டார்கள். அதற்குப் பதிலாக அவர்கள் கத்தோலிக்கரைத் தண்டிக்கும்படியாக விசேஷச் சட்டங்கள் இயற்றினார்கள். ஐரிஷ்காரரின் கம்பெனி வியாபாரத்தையும் அவர்கள் வேண்டுமென்றே அழித்தார்கள். அவர்கள் தங்களுடைய நிலத்தைப் பயிரிட்ட ஐரிஷ் விவசாயிகளை இரக்கமின்றி நசுக்கியும், நிலத்திலிருந்து விரட்டியும் வந்தார்கள். இக்கொடுமைகளை யெல்லாம் இழைத்தவர்கள் ஒரு சில அந்நிய பிராடெஸ்டண்டு நிலச்சுவான்தார்கள் என்பதையும், இக்கொடுமைகளுக்கு உள்ளானவர்கள் ஜனத்தொகையில் மிகப் பெரும்பான்மையோரான கத்தோலிக் விவசாயிகள் என்பதையும் நீ மறந்துவிடக் கூடாது. ஆனால், அவ்வந்நிய பிரிட்டிஷ் நிலச்சுவான்தார்கள் கையில்தான் எல்லா அதிகாரமும் இருந்தது. அவர்கள் தங்களுடைய எஸ்டேட்டுகளில் குடியிராமல் நிர்வாகத்தைத் தங்களுடைய ஏஜெண்டுகளிடமும் வரி வசூலிப்போரிடமும் விட்டுவிட்டார்கள்.

அவர்கள் ஈவிரக்கமின்றி விவசாயிகளைக் கசக்கிப் பிழிந்து வந்தார்கள்.

லிமெரிக் விருத்தாந்தம் மிகவும் பழைமையானது தான். ஆனால், ஆங்கிலேயர் தாங்கள் கொடுத்த சத்திய வாக்கை மீறியதால் ஐரிஷ்காரர் மனதில் விளைந்த வெறுப்பும் கோபமும் இன்னும் தணியவில்லை. இன்று கூட ஒரு ஐரிஷ் தேசியவாதியின் மனத்தில் ஆங்கிலேயர் அயர்லாந்தில் செய்துள்ள எத்தனையோ நம்பிக்கைத் துரோகங்களில் லிமெரிக்தான் பிரதானமாக இருக்கிறது. அக்காலத்தில், பிரிட்டிஷார் உடன்படிக்கை ஷரத்தை மீறியதும், அவர்கள் மதவெறி கொண்டு கத்தோலிக்க ஐரிஷ்காரரைக் கொடுமையாக அடக்கியதும், பிரிட்டிஷ் நிலச்சுவான்தார்கள் ஐரிஷ் விவசாயிகளுக்கு இழைத்த கொடிய அநீதியும் எல்லாம் ஒன்று சேரவே எண்ணற்ற ஐரிஷ்காரர் தங்கள் நாட்டைவிட்டு வெளிநாடுகளுக்கு ஓடிவிட்டார்கள். ஐரிஷ் குலக்கொழுந்துகளான ஐரிஷ் வாலிபர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று இங்கிலாந்துடன் போரிடும் எந்நாட்டுக்கும் தங்கள் சேவையை அளித்தார்கள். இங்கிலாந்துக்கு விரோதமாகப் போரிடும் எந்நாட்டுப் படையிலும் ஐரிஷ்காரரைத் தவறாமல் பார்க்கலாம்.

'கலிவர் யாத்திரை' என்னும் நூலை எழுதிய ஆசிரியன் ஜானதன் ஸ்விப்டு அக்காலத்தில்தான் உயிர் வாழ்ந்தான் (1667—1745). அவன் ஒரு ஐரிஷ்காரன். "பிரிட்டிஷ் நிலக்கரி ஒன்றைத் தவிர மற்றெல்லாப் பிரிட்டிஷ் சாமான்களையும் எரியுங்கள்" என்று அவன் தன் நாட்டவருக்குப் புத்திமதி கூறினான் என்றால் அவனுக்குப் பிரிட்டிஷார் மீதுள்ள கோபம் எத்தகையது என்று புலனாகிறதல்லவா? டப்ளினில் அர்ச். பாட்ரிக் தேவாலயத்திலுள்ள அவனுடைய சமாதியின் மீது

எழுதப்பட்டிருக்கும் வாசகம் இன்னும் அதிகமாக வெறுப்புக் காணுகிறது. ஒருவேளை அவை அவனுடைய வார்த்தைகளாகவே இருக்கலாம். அவ்வாசகம் வருமாறு:—

"முப்பதுவருஷம் இத்தேவாலயத்தின் குருவாக இருந்த ஜானதன் ஸ்விப்டின் தேகம் இங்கே அடக்கம் செய்யப்பட்டிருக்கிறது. எந்த இடத்தில் காட்டுமிராண்டிகளின் கோபம் அவனுடைய இருதயத்தை அரிக்காதோ, அந்த இடத்துக்கு அவன் போய் விட்டான்.

"ஓ, யாத்திரிகனே! சுதந்திரத்தைக் காப்பதில் ஓர் ஆண்மகனுக்குரிய கடமையை நிறைவேற்றிய ஒருவனுடைய அடிச்சுவட்டை, முடியுமானால் நீயும் பின்பற்றுவாயாக!"

1774-ல் அமெரிக்க சுதந்திர யுத்தம் ஆரம்பித்தது. அதற்காக அட்லாண்டிக் சமுத்திரத்தைத் தாண்டி அமெரிக்காவுக்குப் பிரிட்டிஷ் துருப்புகளை அனுப்ப வேண்டியிருந்தது. அப்போது அயர்லாந்தில் பிரிட்டிஷ் துருப்புக்களே இல்லை. அந்தச் சமயத்தில் பிரான்சும் பிரிட்டன் மீது யுத்தம் தொடுக்கவே, அயர்லாந்தின் மீதும் பிரெஞ்சுப் படையெடுப்பு நேரலாம் என்று ஒரு வதந்தி உலாவியது. ஆகவே, ஐரிஷ் கத்தோலிக்கரும் பிராடெஸ்டண்டுகளும் தங்கள் நாட்டைக் காப்பதற்குத் தொண்டர்படை ஒன்று திரட்டினார்கள். சில காலம் வரையில், அவர்கள் தங்களுடைய பழைய விரோதங்களை மறந்து ஒருவரோடொருவர் ஒத்துழைத்தார்கள். அவர்களுடைய கூட்டுபலம் இத்தகையதென்று அவர்களுக்குத் தெரியவந்தது. அங்கிலையில் ஏதாவது செய்யாவிட்டால், அயர்லாந்தில் இன்னொரு கலகம் ஏற்பட்டு அதுவும் அமெரிக்காவைப்போல் பிய்த்துக்கொள்ளும் என்று பயந்த பிரிட்டிஷார் அதற்கு ஒரு சுதந்திரப் பார்லிமெண்டு வழங்கினர். இவ்வாறு பெயரளவில் அயர்

லாந்து சுதந்திரம் பெற்றது. இங்கிலாந்தின் அரசனே அயர்லாந்துக்கும் அரசனாயிருந்தான். ஆனால், புதிய ஐரிஷ் பார்லிமெண்டும் பழைய பார்லிமெண்டைப் போலவே இருந்தது. புதிய பார்லிமெண்டிலும் முன்பு கத்தோலிக்கரை வருத்திய பழைய பிராடஸ்டெண்டு நிலச்சுவான்தார்களே வீற்றிருந்தார்கள். அவர்கள் இப்போதும் பல வழிகளில் கத்தோலிக்கரைத் துன்புறுத்தினார்கள். ஒரு வித்தியாசம் என்னவென்றால் பிரொடஸ்டண்டுகளுக்கும் கத்தோலிக்கருக்கும் இடையே முன்னைவிட இப்போது ஓரளவு நல்லுணர்ச்சி காணப்பட்டது. அப்பார்லிமெண்டுக்குத் தலைவனாயிருந்த ஹென்ரி கிராட்டன் என்பவன், தான் ஒரு பிராடெஸ்டண்டாயிருந்தும், கத்தோலிக்கருடைய குறைகளைப் போக்க முயன்றான். ஆனால், அவனால் அதிகமாக ஒன்றும் செய்ய முடியவில்லை.

இதற்கிடையில் பிரெஞ்சுப் புரட்சி தோன்றியது. அது ஐரிஷ்காரர் மனத்தில் பெரிய நம்பிக்கையைத் தோற்றுவித்தது. பிரெஞ்சுப் புரட்சியைக் கத்தோலிக்கர், பிராடெஸ்டண்டுகள் ஆகிய இருதிறத்தாரும் வரவேற்றதுதான் ஆச்சரியம். அவர்கள் சிறிது சிறிதாக ஒருவரையொருவர் நெருங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்களை ஒன்று கூட்டவும், கத்தோலிக்கருக்கு விமோசனம் தேடவும் "ஐக்கிய ஐரிஷ்காரர் சங்கம்" என ஒரு ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டது. அந்த ஸ்தாபனம் ஏற்படுவது அரசாங்கத்துக்கு இஷ்டமில்லாமற் போகவே, அது அந்த ஸ்தாபனத்தை ஒழித்துவிட்டது. ஆகவே, அயர்லாந்தில் உரிய காலத்தில் கிரமப்படி தோன்றவேண்டிய கலகம் 1798-ல் தோன்றியது. அல்ஸ்டருக்கும் அயர்லாந்தின் எஞ்சிய பகுதிக்கும் இடையே நிகழ்ந்த பழைய மதக்கலகங்களைப் போன்று

இது இல்லை. இதை ஒரு தேசிய எழுச்சி என்று சொல்லலாம். இதில் ஓரளவு அல்ஸ்டரும் கலந்துகொண்டது. இங்கிலாந்து கலகத்தை அடக்கிவிட்டது. அக்கலகத்தை நடத்திய ஐரிஷ் வீரனான உல்ப்டோன் என்பவனைத் தேசத்துரோகி என்று சொல்லி இங்கிலாந்து சிரச்சேதம் செய்தது.

ஆக, அயர்லாந்துக்கு வழங்கப்பட்ட சுதந்திரப் பார்லிமெண்டினால் அதன் நிலைமை சிறிதும் சீர்திருந்தவில்லை என்பது தெளிவாகத் தெரிந்தது. அந்தக் காலத்தில் பிரிட்டிஷ் பார்லிமெண்டே கெட்டுப்போன ஒரு குறுகிய சபையாக இருந்தது. சட்டைப்பைத் தொகுதிகள் போன்ற உள்ளங்கைத் தொகுதிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருசில நிலச்சுவான்தார்களும் பணக்கார வியாபாரிகளுமே அதை நடத்தி வந்தார்கள். இத்தீய அம்சங்கள் யாவும் ஐரிஷ் பார்லிமெண்டிலும் இருந்தன. மேலும், ஒரு கத்தோலிக்க நாட்டில் ஒரு சில பிராடெஸ்டண்டுகளால் நடத்தப்படும் ஒரு சபையாகவும் அது இருந்தது. ஆயினும், அதைக்கூட ஒழித்துவிட்டு அயர்லாந்தைப் பிரிட்டனுடன் இணைத்துக்கொள்ள வேண்டுமென்று பிரிட்டிஷ் அரசாங்கம் முடிவு செய்தது. இம்முடிவை அயர்லாந்து தீவிரமாக எதிர்த்தது. ஆனால், ஐரிஷ் பார்லிமெண்டு அங்கத்தினர்கள் ஏராளமான லஞ்சம் வாங்கிக்கொண்டு தங்களுடைய பார்லிமெண்டைக் குழிதோண்டிப் புதைக்கத் தாங்களே வோட்டளித்து விட்டார்கள். 1800-ல் ‘ஐக்கியச் சட்டம்’ (Act of Union) நிறைவேற்றப்பட்டது. இவ்வாறு, கிராட்டனின் அற்பாயுள் ஐரிஷ் பார்லிமெண்டு முடிவுற்றது. அதற்குப் பதிலாகச் சில ஐரிஷ் அங்கத்தினர்கள் லண்டனிலுள்ள பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்குச் சென்றார்கள்.

இந்தக் கெட்டுப்போன ஐரிஷ் பார்லிமெண்டு ஒழிந்துபோனது ஒன்றும் பெரிய நஷ்டமில்லை. நாளாவட்டத்தில் அது சீர்திருத்தம் அடைந்திருக்கலாம் என்று வேண்டுமானால் சொல்லலாம். ஆனால், ஐக்கியச் சட்டம் ஒரு தீய பலனை விளைத்தது. அச்சட்டத்தின் நோக்கமே அதுவாக இருந்தாலும் இருக்கலாம். பிராடெஸ்டண்டு வட அயர்லாந்தும் கத்தோலிக்கத் தென் அயர்லாந்தும் ஒற்றுமை அடையவேண்டும் என்கிற இயக்கத்தை அது சமாப்தி செய்துவிட்டது. பிராடெஸ்டண்டு அல்ஸ்டர் தென் அயர்லாந்திலிருந்து மீண்டும் வக்கிரிக்க ஆரம்பித்தது. இரு பாகங்களுக்கிடையிலும் பிளவு அதிகரித்தது. இதில் இன்னொரு வேற்றுமையும் வந்து புகுந்தது. அல்ஸ்டர், இங்கிலாந்தைப்போல், நவீன தொழில் முறையை மேற்கொண்டது. அயர்லாந்தின் மிச்சப் பாகமோ விவசாயத்தையே கட்டிக்கொண்டு அழுதது. அந்த விவசாயமும் உருப்படுவதாயில்லை. நில உரிமை ஏற்பாடும் ஜனங்களின் வெளியேற்றமும் விவசாய வளர்ச்சிக்குக் குந்தகம் விளைத்தன. இவ்வாறு, அயர்லாந்தின் வடபாகம் தொழில் துறையில் அபிவிருத்தி அடைந்த காலையில், அதன் தென், கீழ், சிறப்பாக மேல் பகுதிகள் தொழிலில் பிற்போக்குடையனவாகவும் இடைக்கால ரீதியில் வாழ்க்கை நடத்துவனவாகவும் இருந்தன.

ஐக்கியச் சட்டத்தை எதிர்த்து அயர்லாந்தில் கலகம் உண்டாகாமல் இல்லை. ஆனால், அது முளையிலேயே கிள்ளி எறியப்பட்டது. அக்கலகத்தில் தலைவனாக விளங்கியவன் ராபர்ட் எம்மெட் என்னும் வாலிபத் திலகம். அவனுடைய வாழ்வும், அவனுக்கு முன் சென்ற பல தேசபக்தர்களுடையதைப் போன்று தூக்குமேடையில் வந்து முடிந்தது.

ஐரிஷ் அங்கத்தினர்கள் பிரிட்டிஷ் காமன்ஸ்

சபைக்குச் சென்றார்கள். ஆனால், அவர்கள் கத்தோலிக்கர் அல்ல. இங்கிலாந்திலோ, அயர்லாந்திலோ கத்தோலிக்கர் பார்லிமெண்டு அங்கத்தினர் ஆவதற்கு அனுமதிக்கப்படவில்லை. 1829-ல் கத்தோலிக்கருக்கு இருந்த தடைகள் விலக்கப்பட்டு அவர்களும் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் அங்கம் வகிக்கலாம் என்று ஏற்பட்டது. அத்தடை நீக்கத்துக்கு முக்கியக் காரணமாயிருந்தவன் டானியேல் ஓ'கானல் என்னும் ஐரிஷ் தலைவன். ஆகவே, அவன் அயர்லாந்தின் 'ரட்சகன்' என்று அழைக்கப்பட்டான். சிறிது சிறிதாக இன்னொரு மாறுதலும் நிகழ்ந்து வந்தது. அதுதான் வோட்டுரிமை விஸ்தரிப்பு. அதனால் மேலும் மேலும் அதிகமான பேர் வோட்டுரிமை பெற்றார்கள். இப்போது அயர்லாந்து இங்கிலாந்துடன் இணைக்கப்பட்டிருந்தபடியால் இரண்டுக்கும் சட்டங்கள் பொதுவாயிருந்தன. 1832-ம் வருஷத்துச் சீர்திருத்த மசோதா இங்கிலாந்தைப் போலவே அயர்லாந்துக்கும் பொருந்திற்று. அதற்குப் பின் நிறைவேற்றப்பட்ட வோட்டுரிமை மசோதாவும் (Franchise Bill) அயர்லாந்துக்குப் பொருந்திற்று. இம் மாறுதல்களை அனுசரித்துப் பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் வீற்றிருந்த ஐரிஷ் அங்கத்தினரின் தன்மையிலும் மாறுதல் ஏற்பட்டு வந்தது. முதலில் நிலச்சுவான்தார்களின் பிரதிநிதிகள் உட்கார்ந்திருந்த இடத்தில் இப்போது கத்தோலிக்க விவசாயிகளின் பிரதிநிதிகளான ஐரிஷ் தேசிய வாதிகள் உட்காரத் தலைப்பட்டார்கள்.

நிலச்சுவான்தார்களுக்குத் தாங்க முடியாத வரி செலுத்தித் தலை மொட்டையாய்ப் போன ஐரிஷ் விவசாயிகள் தங்களுடைய வறுமை காரணமாக உருளைக் கிழங்கையே முக்கிய உணவாகக்கொண்டிருந்தார்கள். பெரும்பாலும் உருளைக்கிழங்கைச் சாப்பிட்டே அவர்கள்

உயிர் வாழ்ந்து வந்தார்கள். இன்றைய இந்திய விவசாயிகளைப் போல் அவர்களும் இல்லாத காலத்திற்கென்று ஒன்றும் சேமித்து வைக்கவில்லை. அவர்கள் அன்றாடக் கஞ்சிக்கு அன்றாடம் சம்பாதிக்க வேண்டியிருந்தது. அவர்களுக்குத் திராணி என்பதே இல்லை. 1846-ல் உருளைக்கிழங்கு மாசூல் கெட்டுவிட்டது. அதனால் பெரிய பஞ்சம் உண்டாயிற்று. விவசாயிகள் பஞ்சத்தால் பரதவித்தால் நிலச்சுவான்தார்களுக்கு என்ன? அவர்களுக்குச் சேரவேண்டிய வரியை எப்படியும் விவசாயிகள் கொடுத்துத்தானே தீர வேண்டும்? அவ்வாறு வரி கொடுக்கத் தவறியதற்காக விவசாயிகள் அவர்களுடைய நிலங்களிலிருந்து ஓட்டப்பட்டார்கள். அநேக ஐரிஷ்காரர் தங்கள் வீடு வாசலையும் நில புலன்களையும் நீத்து அமெரிக்காவுக்கும் பிற நாடுகளுக்கும் சென்றார்கள். அயர்லாந்து பெரும்பாலும் குடியோடிப் பாழாகி விட்டது. அதன் விளைநிலங்கள் உழுவாரின்றி வெறும் புல்வெளிகள் ஆயின.

இவ்வாறு உழுது பயிரிடக்கூடிய செய்கால் நிலத்தை ஆடுகள் மேய்வதற்கான புல்வெளிகளாக்கும் காரியம் அயர்லாந்தில் 100 வருஷங்களுக்கு மேலாகவே தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதற்கு முக்கியக் காரணம் இங்கிலாந்தில் கம்பளங்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் அதிகரித்தமைதான். கம்பள உற்பத்தி பெருகப் பெருக ஆட்டு மயிரும் அதிகமாக வேண்டியிருந்தது. ஆட்களை வைத்துக்கொண்டு நிலங்களை உழுது சாகுபடி செய்வதைவிட அவற்றை ஆடுகளின் மேய்ச்சலுக்குரிய புல்வெளிகளாக்குவது நிலச்சுவான்தார்களுக்கு அதிக லாபகரமாயிருந்தது. ஆகவே அவர்கள் விவசாயத் தொழிலாளரை வேலையிலிருந்து நீக்கிவிட்டார்கள். இவ்வாறு, உண்மையில் ஜனத்

தொகை குறைவான இங்கிலாந்தில் எப்போதும் 'தேவைக்கு அதிகமான' தொழிலாளர் இருந்து வந்தார்கள். நாடும் குடியற்றுப் போய்க் கொண்டே இருந்தது. தொழிலாக்கம் மிகுந்த இங்கிலாந்துக்கு மூலப்பொருள் சப்ளை செய்யும் ஒரு இடமாக அயர்லாந்து மாறிவிட்டது. இப்போது சில காலமாகத்தான் செய்கால் நிலத்தை மேய்ச்சல் நிலமாக்கும் பழைய முறை மாற்றப்பட்டு வருகிறது. மீண்டும் உழவுத் தொழில் தனக்குரிய ஸ்தானத்தை அடைய ஆரம்பித்திருக்கிறது. 1932-ல் இங்கிலாந்துக்கும் அயர்லாந்துக்கும் நிகழ்ந்த வியாபாரப் போட்டியினால் இப்பயன் விளைந்ததுதான் விந்தையாகும்.

19-வது நூற்றாண்டில் பெரும் பகுதியும், ஆஜரில்லாத நிலச்சுவான்தார் முறையின் (Absentee landlordism) கீழ் விவசாயிகள் பட்ட அல்லலும் நில விஷயமும்தான் அயர்லாந்தின் முக்கியமான பிரச்சினைகளாயிருந்தன. அந் நிலச்சுவான்தார்களிடமிருந்து அவர்களுடைய நிலங்களைக் கட்டாயமாக விலைகொடுத்து வாங்கிப் பின்பு அவற்றை விவசாயிகளுக்குக் கொடுப்பதென்று பிரிட்டிஷ் அரசாங்கம் முடிவாகத் தீர்மானித்தது. இதனால் நிலச்சுவான்தார்களுக்கு ஒரு நஷ்டமுமில்லை. அவர்கள் தங்கள் நிலத்திற்குரிய முழு விலையையும் அரசாங்கத்தினிடமிருந்து பெற்றுக் கொண்டார்கள். விவசாயிகளுக்கு நிலம் கிடைத்தது. ஆனால், அதன் விலை அவர்களுடைய தலைமீது சுமந்தது. அவ்விலையை அவர்கள் ஒரே தடவையில் கொடுக்கவில்லை என்பது வாஸ்தவமே. சிறு சிறு வருஷத் தவணைகளாக அவர்கள் அதைச் செலுத்தினார்கள்.

1798-ம் வருஷத்துத் தேசிய எழுச்சிக்குப்பின் 100 ஆண்டுகளுக்கு மேலாகவே அயர்லாந்தில் பெரிய கலகம் ஒன்றும் நேரவில்லை. அயர்லாந்தில் முற்பட்ட நூற்

ருண்டுகளில் காலா காலத்தில் நிகழ்ந்து வந்த கலகங்கள் 19-வது நூற்றாண்டில் மட்டும் நிகழவில்லை. இதற்குக் காரணம் அயர்லாந்தின் திருப்தி அல்ல. 1798-ம் வருஷத்துக் கலகம், அதற்கப்புறம் வந்த கொடிய பஞ்சம், ஜனங்களின் வெளியேற்றம் இவை காரணமாக அயர்லாந்து களைத்துச் சோர்ந்து விட்டது. 19-வது நூற்றாண்டின் பிற்பாதியில் மக்களின் மனம் ஓரளவு பிரிட்டிஷ் பார்லிமெண்டின்பால் திரும்பியிருந்தது. அங்குள்ள ஐரிஷ் அங்கத்தினர்கள் ஏதாவது சாதிப்பார்கள் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள். ஆயினும், சில ஐரிஷ்காரர் அயர்லாந்தின் கலக பரம்பரையை அறுபடாது காக்க விரும்பினர். அதன் மூலமாகத்தான் அயர்லாந்தின் ஆவியும் வீரமும் மாசடையாது ஒளிவிடும் என்று அவர்கள் நினைத்தார்கள். அமெரிக்காவில் குடியேறிய ஐரிஷ்காரர் அயர்லாந்தின் சுதந்திரத்துக்காக அங்கே ஒரு சங்கம் ஆரம்பித்தனர். அதற்குப் "பேனியன் சங்கம்" என்று பெயர். அந்தச் சங்கத்தார் அயர்லாந்தில் சிறு சிறு கலகங்களைக் கிளப்பினார்கள். ஆனால், அக் கலகங்கள் பொது ஜனங்களை எட்டவில்லை. 'பேனியன் சங்க'த்தார் விரைவில் அடக்கப்பட்டார்கள்.

இக்கடிதம் நீண்டுவிட்டது. இதை இந்த இடத்தில் முடித்து விடுகிறேன். ஆனால், அயர்லாந்தின் கதை இன்னும் முடியவில்லை.

140

அயர்லாந்தில் சுயாட்சி இயக்கமும் ஷின்பேன் இயக்கமும்

மார்ச்சு 9, 1933.

அயர்லாந்து தன்னுடைய சுதந்திரத்தைப் பெறுவதற்காகப் பல தடவை ஆயுதமெடுத்துக் கலகம் செய்தது. பஞ்சம் வேறு அதை வாட்டியது. இன்னும் எத்தனையோ துன்பங்கள் அதை வருத்தின. இவ்வித அனர்த்த பரம்பரையால் அயர்லாந்து மிகவும் அயர்ந்து போயிற்று. 19-வது நூற்றாண்டின் பிற்பாதியில், பிரிட்டிஷ் பார்லிமெண்டு வோட்டுரிமை விரிவடையவே பல ஐரிஷ் தேசிய வாதிகள் பிரிட்டிஷ் காமன்ஸ் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அயர்லாந்தின் விடுதலைக்கு அவர்கள் ஏதாவது வழி செய்யக்கூடும் என்று ஜனங்கள் நம்பிக்கை கொள்ளலானார்கள். ஜனங்களின் கவனம் ஆயுதமெடுத்துக் கலகம் செய்யும் பழைய முறையிலிருந்து புதிய முறையாகிய பார்லிமெண்டு வேலைத் திட்டத்துக்குத் திரும்பியது.

வடக்கேயுள்ள அல்ஸ்டருக்கும் அயர்லாந்தின் எஞ்சிய பகுதிக்கும் இடையே உள்ள பிளவு மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டே சென்றது. பழைய வகுப்பு வேற்றுமைகளும் மதவேற்றுமைகளும் அப்படியே இருந்தன. புதிதாகப் பொருளியல் வேற்றுமையும் வந்து சேர்ந்தது. அவ்வேற்றுமை அதிகமாகத் தெரியவும் ஆரம்பித்தது. இங்கிலாந்தையும் ஸ்காட்லாந்தையும் போன்று அல்ஸ்டரில் தொழிற்சாலைகளும் தொழிற்சாலை உற்பத்தியும் பெருகின. தேசத்தின் மீதிப் பாகம் விவசாயத்தையும் இடைக்கால வாழ்வையும்

பற்றிக் கொண்டும், குடிவளம் குறைந்து நாடு நகரட பாழ்பட்டும், ஏழ்மையில் உழன்றும் வந்தது. அயர்லாந்தை இரண்டாகத் துண்டாடும் இங்கிலாந்தின் பழைய கொள்கை மிக நன்றாக வெற்றி பெற்றுவிட்டது. பிற்காலத்தில் இங்கிலாந்து தானே சிருஷ்டித்த அவ்விடையூற்றைத் தானே விலக்க முயன்றும் முடியவில்லை என்றால் அக்கொள்கை எவ்வளவு நன்றாக வெற்றி பெற்றதென்று எளிதில் தெரிந்து கொள்ளலாம். அயர்லாந்தின் சுதந்திரத்துக்கு அல்ஸ்டரே மிகப் பெரிய தடைகல்லாக முடிந்தது. அயர்லாந்து சுதந்திரம் பெற்றால், ஏழைக் கத்தோலிக் அயர்லாந்தில் பணக்காரப் பிராடெஸ்டண்டு அல்ஸ்டர் அமிழ்ந்து போய் விடுமல்லவா ?

பிரிட்டிஷ் பார்லிமெண்டிலும் அயர்லாந்திலும் இரு புதிய வார்த்தைகள் வழங்கலாயின, அவை 'சுய ஆட்சி' (Home Rule) என்பனவாகும். அயர்லாந்தின் கோரிக்கை இப்போது சுய ஆட்சிக் கோரிக்கை என்று அழைக்கப்பட்டது. 700 ஆண்டுகளாக அயர்லாந்து கோரி வந்த சுதந்திரத்துக்கும் இதற்கும் அதிக வித்தியாசம் உண்டு. சுதந்திரக் கோரிக்கையைவிடச் சுய ஆட்சிக் கோரிக்கை மிகவும் குறைந்ததாகும். சில முக்கிய விவகாரங்களையெல்லாம் பழையபடியே பிரிட்டிஷ் பார்லிமெண்டு பார்த்துக் கொள்வது, அதற்குக் கீழ்ப்பட்ட ஐரிஷ் பார்லிமெண்டு உள்நாட்டு விவகாரங்களைப் பார்த்துக் கொள்வது என்பதுதான் சுய ஆட்சிக் கோரிக்கையாகும். அயர்லாந்தின் பழைய சுதந்திரக் கோரிக்கையை இவ்வாறு குறைப்பது பலருக்கு இஷ்டமில்லை. ஆனால், தேசமானது கலகம் செய்தும் போரிட்டும் களைத்துப் போயிருந்தது. அது பலன்தராத கலக முயற்சிகளில் பங்கு கொள்ள மறுத்து விட்டது.

பிரிட்டிஷ் காமன்ஸ் சபையைச் சேர்ந்த ஐரிஷ் அங்கத்தினர்களில் சார்லஸ் ஸ்டுவர்ட் பார்னல் என்று ஒருவன் இருந்தான். அவன், கன்சர்வேடிவ் கட்சி, லிபரல் கட்சி இரண்டும் அயர்லாந்தை அணுவளவேனும் கவனிக்கவில்லை என்பதை உணர்ந்து, அவர்களுடைய நாகரிகப் பார்லிமெண்டு வேலைக்கு முட்டுக்கட்டை போடுவதென்று தீர்மானித்தான். அவனும் இன்னும் சில ஐரிஷ் அங்கத்தினர்களும் சேர்ந்து கொண்டு நீண்ட சொற்பொழிவுகள் ஆற்றியும், தாமதிக்கச் செய்யும் இதர உபாயங்களைக் கையாண்டும் பார்லிமெண்டு வேலையைத் தடை செய்ய ஆரம்பித்தார்கள். ஐரிஷ் அங்கத்தினர்களின் இத்தந்திரம் பிரிட்டிஷாருக்குப் பெருந்தொல்லையை விளைவித்தது. அவர்கள் அம்முறையை பார்லிமெண்டுப் பாங்கற்றது என்றும் அகவுரவமானது என்றும் குறைகூறினார்கள். ஆனால், பார்னல் அவர்களுடைய வார்த்தைகளை லட்சியம் செய்யவில்லை. பிரிட்டிஷார் செய்துள்ள விதிமுறைகளுக் கிணங்க, பிரிட்டிஷ் பார்லிமெண்டு விளையாட்டில் பங்கெடுத்துக் கொள்ள அவன் பார்லிமெண்டுக்கு வரவில்லை. அவன் பார்லிமெண்டுக்கு வந்தது அயர்லாந்துக்குச் சேவை புரியவே. அதை நேரான வழியில் செய்ய முடியவில்லை என்றால் குறுக்கு வழிகளைக் கடைப் பிடிப்பதில் தப்பென்ன ? எப்படியும் அவன் அயர்லாந்து விஷயமாகப் பிரிட்டனின் கவனத்தைக் கவர்வதில் வெற்றி பெற்றான்.

பார்னல் பிரிட்டிஷ் காமன்ஸ் சபையிலுள்ள ஐரிஷ் சுய ஆட்சிக் கட்சிக்குத் தலைவன் ஆனான். அக்கட்சி பிரிட்டிஷ் கட்சிகள் இரண்டுக்கும் தீராத தலைவேதனையாக இருந்தது. அவ்விருகட்சிகளும் ஏறக்குறையச் சமபலமாயிருக்கும் போது ஐரிஷ் சுய ஆட்சிக் கட்சி எந்தக்

கட்சியுடன் சேருகிறதோ அதற்குத்தானே ஜெயம்? இம்முறையில் ஐரிஷ் பிரச்சினை சதா பார்லிமெண்டு முன்னர் வற்புறுத்தப்பட்டு வந்தது. கடைசியில் லிபரல் கட்சித் தலைவனான கிளாட்ஸ்டன் அயர்லாந்துக்குச் சுய ஆட்சி வழங்க இசைந்தான். அவன் 1886-ல் காமன்ஸ் சபையில் ஒரு சுய ஆட்சி மசோதாவைக் கொணர்ந்தான். அம்மசோதாவில் கண்ட சுய ஆட்சி மிகவும் மிதமானது தான். ஆயினும், அதற்குச் சண்டமாருதம் போல் எதிர்ப்பு உண்டாயிற்று. கன்சர்வேடிவ் கட்சி பூராவும் அதை ஒருமுகமாக எதிர்த்தது. கிளாட்ஸ்டனின் கட்சியைச் சேர்ந்த லிபரல்களுக்கும் அது பிடிக்கவில்லை. லிபரல் கட்சி இரண்டாகப் பிளவுபட்டது. ஒரு பிரிவினர் கன்சர்வேடிவ் கட்சியிலேயே போய்ச் சேர்ந்து கொண்டார்கள். அவர்கள், அயர்லாந்து பிரிட்டனுடன் ஐக்கியமுற்றிருக்கவேண்டுமென்று விரும்பியதால், "ஐக்கிய வாதிகள்" என்று அழைக்கப்பட்டார்கள். சுயஆட்சி மசோதா வீழ்ச்சியுற்றது. அத்துடன் கிளாட்ஸ்டனும் வீழ்ச்சியுற்றான்.

ஏழாண்டுகளுக்குப்பின், 1893-ல், கிளாட்ஸ்டன் தன்னுடைய எண்பத்துநான்காவது வயதில் மீண்டும் பிரதம மந்திரி ஆனான். அவன் மீண்டும் தன்னுடைய இரண்டாவது சுயஆட்சி மசோதாவைக் கொண்டு வந்தான். ஒரு சின்ன மெஜாரிட்டியின் துணைகொண்டு, அது காமன்ஸ் சபையில் நிறைவேற்றப்பட்டது. ஆனால், எல்லா மசோதாக்களும் சட்டமாவதற்குமுன் லார்டு சபையிலும் நிறைவேற்றப்படவேண்டும். லார்டு சபையில் கன்சர்வேடிவ்களும் பிற்போக்காளரும் நிறைந்திருந்தார்கள். அது தேர்ந்தெடுக்கப்பட்ட சபையல்ல. பெரிய நிலச்சுவான்தார்களும் சில மதகுருக் (பிஷப்பு) களும் அதில் பரம்பரையாக அங்கம் வகித்து வந்தார்கள்.

காமன்ஸ் சபை நிறைவேற்றிய ஐரிஷ் சுயஆட்சி மசோ
தாவை லார்டு சபை நிராகரித்துவிட்டது.
ஆக, அயர்லாந்தின் கோரிக்கையைப் பெற பார்லி
மெண்டு மூலம் செய்யப்பட்ட முயற்சிகளும் தவறி
விட்டன. ஆயினும் ஐரிஷ் தேசியக் கட்சி (அல்லது, சுய
ஆட்சிக்கட்சி) இன்னும் வெற்றிபெறலாம் என்னும்
நம்பிக்கையுடன் பார்லிமெண்டில் வேலை செய்துவந்தது.
மொத்தத்தில், அயர்லாந்து மக்கள் அதனிடம் நம்பிக்கை
வைத்திருந்தார்கள். ஆனால், அவர்களில் பலர் சுயஆட்சிக்
கட்சியின் முட்டுக்கட்டை முறைகளிலும் பிரிட்டிஷ்
பார்லிமெண்டினிடத்தும் நம்பிக்கை இழந்துவிட்டார்கள்.
பல ஐரிஷ்காரர் அரசியலை, அதன் குறுகிய பொருளில்
வெறுக்கத் தொடங்கினார்கள். அவர்கள் கலைத்தொண்
டிலும் பொருளியல் முயற்சிகளிலும் ஈடுபட்டார்கள்.
இருபதாவது நூற்றாண்டின் தொடக்கத்தில் அயர்லாந்
தில் கலைமறுமலர்ச்சி உதயம் செய்தது. முக்கியமாக,
தேசத்தின் பூர்வீக பாஷையாகிய கேல்பாஷைக்குப் புத்
துயிரளிக்க முயற்சி செய்யப்பட்டது. அப்பாஷை
அயர்லாந்தின் மேற்கு ஜில்லாக்களில் மட்டும் மறை
யாமல் வழங்கிவந்தது. கேல்பாஷை, கெல்டு பாஷை
யாகும். அது இலக்கிய வளம் செறிந்தது. ஆனால், பல
நூற்றாண்டுகளாக இங்கிலீஷ் பாஷையின் கை
மேலோங்கியிருந்த காரணத்தால் அது நகரங்களிலிருந்து
துரத்தப்பட்டு நாட்டில் தஞ்சம்புகுந்து நாட்டிலிருந்தும்
சிறிது சிறிதாக மறைந்து வந்தது. அயர்லாந்தின் ஆத்
மாவையும், பழைய கலைமாண்பையும் அதன் சொந்த
மொழியின் மூலம்தான் அழியாது காக்கமுடியும் என்
பதை ஐரிஷ் தேசியவாதிகள் உணர்ந்தார்கள். ஆகவே,
அவர்கள் மேற்கு அயர்லாந்துக் கிராமங்களில் புதைந்து
கிடந்த கேல்பாஷையைத் தூசி துடைத்து மாசுபோக்கி

உயிருள்ள ஒரு பாஷையாக்க முயன்றார்கள். இத் தொண்டை நிறைவேற்றுவதற்காகக் "கேல் பாஷாபி விருத்தி சங்கம்" என ஒரு சங்கம் நிறுவப்பட்டது. எல்லா இடங்களிலும், முக்கியமாக அடிமை நாடுகளில், தேசிய இயக்கம் என்பது அவ்வத்தேச பாஷையையே ஆதாரமாகக் கொண்டு நிற்கிறது. அந்நிய பாஷையை ஆதாரமாகக் கொண்ட எந்த இயக்கமும் அந்நாட்டு மக்களைத் தொடவோ அல்லது அந்நாட்டில் நிலைத்து வேரூன்றவோ முடியாது. அயர்லாந்தைப் பொறுத்த வரையில் இங்கிலீஷ் ஒரு அந்நிய பாஷை என்று சொல்வதற்கில்லை. அயர்லாந்தில் அநேகமாக எல்லோருக்கும் தெரிந்த பாஷை இங்கிலீஷ். அது எல்லோராலும் பேசப்பட்டும் வந்தது. அயர்லாந்து மக்களுக்குக் கேல் பாஷையைவிட நன்றாகத் தெரிந்த பாஷை இங்கிலீஷ் தான். அப்படியிருந்தும், தங்களுடைய பழைய பண்பாட்டுடன் தொடர்பு விட்டுப்போகாதிருக்க வேண்டுமாயின், கேல்பாஷைக்குப் புத்துயிர் அளிக்கவேண்டியது இன்றியமையாததென்று ஐரிஷ் தேசியவாதிகள் கருதினார்கள்.

பலம் என்பது உள்ளிருந்து பிறப்பதே ஒழிய வெளியிலிருந்து வருவதல்ல என்னும் ஞானம் அயர்லாந்தில் உதயமாயிற்று. வெறும் அரசியலைச் சார்ந்த பார்லிமெண்டு வேலைத்திட்டத்தில் ஜனங்களுக்கு நம்பிக்கை போய்விட்டது. ஆகவே, தேசத்தை இன்னும் உறுதியான அடிப்படையின் மீது உருவாக்குவதற்கு வேண்டிய முயற்சிகள் செய்யப்பட்டன. 20-வது நூற்றாண்டின் ஆரம்பத்தில் தோன்றிய புது அயர்லாந்துக்கும் பழைய அயர்லாந்துக்கும் பெரிய வேற்றுமை காணப்பட்டது. கலை மறுமலர்ச்சியானது பல துறைகளிலும் தன்னுடைய பிரபாவத்தைச் செலுத்தியது. இலக்கியத் துறையிலும்

பண்பாட்டு ஆக்கத்திலும் விளைந்த மாறுதல்களை முன்பே கூறினேன். பொருளியல் துறையிலும் விவசாயிகளைக் கூட்டுறவு முறையில் ஒன்றுபடுத்துவதற்கு வேண்டிய முயற்சிகள் செய்யப்பட்டன. அவை வெற்றியும் பெற்றன.

ஆனால், இவையெல்லாவற்றிற்கும் மூலகாரணம் அயர்லாந்தின் சுதந்திரதாகம் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. பிரிட்டிஷ் பார்லிமெண்டில் வேலை செய்து வந்த ஐரிஷ் தேசியக் கட்சி ஜனங்களின் நம்பிக்கையைப் பெற்றிருந்தது போல் தோன்றினாலும், அந்த நம்பிக்கை ஆட்டம் கொடுத்துக்கொண்டிருந்தது. அவர்கள் நீண்ட சொல்மாரிகள் பொழிவதில் விருப்புடைய வெறும் அரசியல் வாதிகள் என்றும் வேறொன்றும் செய்யக் கையால் ஆகாதவர்கள் என்றும், ஜனங்கள் நினைக்க ஆரம்பித்தார்கள். பழைய பேனியன் சங்கத்தாரும் இன்னும் சுதந்திர லட்சியத்தில் நம்பிக்கை உடைய வேறு பிறரும் எந்தக் காலத்தும் இப்பார்லிமெண்டு வாதிகளிடமும் அவர்களுடைய சுய ஆட்சிக் கிளர்ச்சியிடமும் நம்பிக்கை கொண்டவர்களல்ல என்பதைச் சொல்லவேண்டியதில்லை. மேலும், இப்போது நவ யௌவன அயர்லாந்தின் திருஷ்டி பார்லிமெண்டுக்கு எதிர்ப்புறத்தில் சென்றது. 'நாமே நமக்குதவி' என்கிற கொள்கை மக்களிடையே பரவ ஆரம்பித்தது. ஏன் அக் கொள்கையை அரசியலில் புகுத்தக் கூடாது? மீண்டும் ஆயுதந் தாங்கிய எழுச்சியைப் பற்றிய எண்ணங்கள் மக்களின் மன உலகில் சஞ்சரிக்கலாயின. ஆனால், இவ்வாறு வினையாற்ற வேண்டுமென்று மக்களுக்கிருந்த ஆர்வம் ஒரு புதிய வழியில் திருப்பப்பட்டது. ஆர்தர் கிரிப்பித் என்னும் ஐரிஷ் வாலிபன் புதிய கொள்கை ஒன்றைப் பிரசாரம் செய்யலானான். அக்

கொள்கையே 'ஷின்பேன்' (Sinn Fein) என்று வழங்கலாயிற்று. 'ஷின்பேன்' என்றால் "நாம் நாமே" (We ourselves) என்று அர்த்தம்.

அந்த வார்த்தையிலிருந்தே அது குறிக்கும் கொள்கையை நாம் ஓரளவு தெரிந்து கொள்ளலாம். அயர்லாந்து தன்னிலேதான் நம்பிக்கை கொண்டு வாழ வேண்டுமென்றும், இங்கிலாந்து போடும் பிச்சைக்கோ அளிக்கும் உதவிக்கோ அண்ணாந்து நிற்கக் கூடாதென்றும் ஷின்பேன்காரர் விரும்பினார்கள். அவர்கள் உள்வலியைக் கொண்டே தேசத்தை ஆக்க முயன்றார்கள். கேல் இயக்கத்தையும் கலை மறுமலர்ச்சியையும் அவர்கள் ஆதரித்தார்கள். அரசியலில் பார்லிமெண்டு வேலைத் திட்டம் அவர்களுக்கு உடன்பாடல்ல. அது வீண் முயற்சி என்றும் அதனால் யாதொரு பயனும் விளையாதென்றும் அவர்கள் எண்ணினார்கள். இன்னொரு பக்கம், ஆயுதம் தாங்கிய புரட்சி சாத்தியம் என்றும் அவர்கள் கருதவில்லை. பார்லிமெண்டு வேலைத் திட்டத்துக்கு மாறாக 'நேரடியான போராட்டம்' (Direct action) வேண்டுமென்று அவர்கள் கூறினார்கள். பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் ஒருவிதமான ஒத்துழையாமையை மேற்கொள்வதே நேரடியான போராட்டத்துக்கு வழி என்று ஆர்தர் கிரிப்பித் கூறினான். அதற்கு ஆதாரமாக அவன் ஹங்கேரியின் உதாரணத்தை எடுத்துக் காட்டினான். அங்கே ஒரு தலைமுறைக்கு முன்னால் சாத்வீக எதிர்ப்பு வெற்றி பெற்ற விதத்தை எடுத்துக் கூறி இங்கிலாந்தின் கையிலிருந்து அதிகாரத்தைப் பிடுங்குவதற்கு அத்தகைய ஒரு கொள்கையை அயர்லாந்தும் அனுஷ்டிக்க வேண்டுமென்று அவன் வற்புறுத்தினான்.

கடந்த பதின்மூன்று வருஷகாலமாக இந்தியா பல

விதமான ஒத்துழையாமை முறைகளை அனுஷ்டித்து வருகிறது. ஆகவே, நம்முடைய ஒத்துழையாமையை ஐரிஷ் ஒத்துழையாமையுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது நல்லது. நமது இயக்கம் அஹிம்சையை அடிப்படையாகக் கொண்டது என்னும் உண்மையை அகில உலகமும் அறியும். அயர்லாந்தில் இத்தகைய அஹிம்சை அடிப்படையோ மனோபாவமோ இல்லை. ஆயினும், அவர்களுடைய ஒத்துழையாமையின் பலம் கூடப் பலாத்காரம் அற்ற சாத்வீக எதிர்ப்பில்தான் அடங்கியிருந்தது. அவர்களுடைய போராட்டமும் சாராம்சத்தில் சாத்வீகத் தன்மை வாய்ந்ததே.

ஷின்பேன் கொள்கைகள் ஐரிஷ் வாலிபரிடையே பையப் பரவி வந்தன. அக்கொள்கைகளால் அயர்லாந்து திடீரென்று தீப்பற்றிக்கொள்ள வில்லை. பார்லிமெண்டினிடம் நம்பிக்கை கொண்டவர்கள் இன்னும் பலர் இருந்தார்கள். 1906-ல் லிபரல்கள் மீண்டும் மிகப் பெரும்பான்மையோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது, அவர்களுடைய நம்பிக்கையை மேலும் ஊர்ஜிதம் செய்தது. காமன்ஸ் சபையில் லிபரல்கள் பெரும்பான்மையோராயிருந்தும் லார்டு சபையில் கன்சர்வேடிவ்களும் ஐக்கியவாதிகளும் பெரும்பான்மையோராயிருந்தபடியால் விரைவிலேயே இரு சபைகளுக்கும் மாறுபாடு உண்டாயிற்று. அம் மாறுபாட்டின் பயனாக லார்டு சபையின் அதிகாரம் கட்டுப்படுத்தப்பட்டது. நிதி சம்பந்தமான விவகாரங்களில் லார்டு சபையால் நிராகரிக்கப்பட்ட ஒரு மசோதாவைக் காமன்ஸ் சபை தொடர்ச்சியாக மூன்று செஷன்களில் நிறைவேற்றி விட்டால் அது சட்டமாகி விடும் என்று லிபரல்கள் 1911-ல் ஒரு 'பார்லிமெண்டுச் சட்டம்' நிறைவேற்றி லார்டு சபையின் பல்லைப் பிடுங்கி விட்டார்கள். ஆயினும், சட்டமியற்றுவதைத்

தடை செய்யவும், அதில் தலையிடவும் லார்டு சபைக்கு இன்னும் ஏராளமான அதிகாரம் இருந்தது.

லார்டு சபையின் எதிர்ப்பை முன்னதாகவே எதிர்பார்த்து அதற்கு அணைகோலிக்கொண்ட லிபரல்கள் தங்களுடைய மூன்றாவது சுயஆட்சி மசோதாவைக் கொண்டு வந்தார்கள். அதை 1913-ல் காமன்ஸ் சபை நிறைவேற்றியது. எதிர்பார்த்தபடியே லார்டு சபை அதை நிராகரித்துவிட்டது. பின்பு, காமன்ஸ் சபை மெனக்கெட்டு அதை மூன்று தொடர்ச்சியான செஷன்களில் நிறைவேற்றியது. இவ்வாறு சுயஆட்சி மசோதா 1914-ல் சட்டமாயிற்று. அது அல்ஸ்டர் உட்பட பூரா அயர்லாந்துக்கும் பொருந்திற்று

கடைசியில், அயர்லாந்து தன்னுடைய இஷ்டசித்தி—சுயஆட்சி— கைவரப் பெற்றதுபோல் தோன்றியது. ஆனால், அதற்கு இன்னும் எத்தனையோ ‘ஆனால்’ போட வேண்டியிருந்தது. 1912–13-ல் சுயஆட்சி மசோதாவைப் பார்லிமெண்டு வாதித்துக்கொண்டிருந்த காலையில் அல்ஸ்டரில் வினோத சம்பவங்கள் நிகழ்ந்துகொண்டிருந்தன. அல்ஸ்டரின் தலைவர்கள் அதை ஒத்துக்கொள்ள முடியாதென்றும், அது சட்டமாகிவிட்டாலும் அதை எதிர்க்கப் போவதாகவும் அறிவித்தார்கள். அவர்கள் அதை எதிர்த்துக் கலகம் செய்வோம் என்று கூறியதோடு, கலகத்துக்கு வேண்டிய ஆயத்தமும் செய்தார்கள். ‘சுயஆட்சியை எதிர்ப்பதற்கு நாங்கள் ஒரு அந்நிய நாட்டின் உதவியை நாடவும் தயங்கமாட்டோம்’ என்று அவர்கள் பகிரங்கமாகச் சொன்னார்கள்! அவர்கள் மனதில் வைத்துக் கொண்டிருந்த அந்நிய நாடு ஜெர்மனி. இதைவிடப் பகிரங்கமான பெரிய ராஜத்துரோகம் வேறு இருக்க முடியாது. இதைவிடப் பெரிய ஆச்சரியம் என்னவென்றால் இங்கிலாந்திலுள்ள கன்சர்வேடிவ் கட்சியின் தலை

வர்கள் அக்கலகத்தை ஆசீர்வதித்ததுதான். அவர்களில் பலர் அதற்கு உதவியும் புரிந்தார்கள். பணக்காரக் கன்சர்வேடிவ் வகுப்பார் அல்ஸ்டருக்கு அளவிடற்கரிய பொருளுதவி செய்தார்கள். உயர் வகுப்பினர் என்னப்பட்ட ஆளும் வகுப்பாரும் அவ்வகுப்பையே சேர்ந்தவர்களான ராணுவ உத்தியோகஸ்தர்கள் பலரும் பொதுவாக அல்ஸ்டரையே ஆதரித்தார்கள் என்பது தெளிவாகத் தெரிந்தது. திருட்டுத்தனமாக ஆயுதங்கள் அயர்லாந்துக்கு அனுப்பப்பட்டன. அல்ஸ்டர் கட்சியில் சேர்ந்து போரிடும் தொண்டர்களுக்குப் பகிரங்கமாகப் பயிற்சி அளிக்கப்பட்டது. சமயம் வாய்த்தவுடன் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்வதற்கு அல்ஸ்டரில் ஒரு தற்காலிக அரசாங்கம்கூட அமைக்கப்பட்டது. அல்ஸ்டர் கலக முக்கியஸ்தர்களுள் பிரபல கன்சர்வேடிவ் பார்லிமெண்டு அங்கத்தினரான எப். இ. ஸ்மித் என்பவரும் ஒருவர் என்று அறிய நமக்கு ஆச்சரியம் உண்டாகிறது. அவரே பின்பு லார்டு பர்க்கன்ஹெட் என்னும் பெயருடன் இந்தியா மந்திரி பதவி முதலிய உயர் பதவிகளை வகித்தார்.

சரித்திரத்தில் கலகங்கள் என்பன மிகவும் சாதாரணச் சம்பவங்களாகும். சிறப்பாக அயர்லாந்தில் கலகங்களுக்குப் பஞ்சமே இல்லை. ஆயினும், அல்ஸ்டர் கலகத்துக்குச் செய்யப்பட்ட ஆயத்தங்கள் நமக்கு விசேஷ முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். ஏனெனில் எந்தக் கட்சி தன்னுடைய சட்டரீதியான கன்சர்வேடிவ் தன்மையைப்பற்றித் தன்னைப் பெருமை பாராட்டிக்கொள்வது வழக்கமோ அந்தக் கட்சியே அக்கலகத்தை ஆதரித்து நின்றது. அக்கட்சி ‘சட்டத்தையும் ஒழுங்கையும்’ பற்றிப் பேசாத நேரம் கிடையாது. சட்டத்தையும், ஒழுங்கையும் மீறி நடப்பவர்களுக்குக் கடுந்தண்டனை

கொடுக்க வேண்டுமென்று அது எப்போதுமே சொல்லி வந்திருக்கிறது. ஆயினும், அக்கட்சிப் பிரமுகர்கள் பகிரங்கமாக ராஜத் துரோகப் பிரசாரம் செய்தும் ஆயுதந்தாங்கிய கலகத்துக்கு ஆயத்தம் செய்தும் வந்தார்கள்! அக்கட்சியின் சாதாரண அங்கத்தினர்களோ அதற்குப் பொருள் கொடுத்துதவினார்கள்! இதில் கவனிக்க வேண்டிய இன்னொரு முக்கிய அம்சம் என்னவென்றால், அவர்கள் நடத்தவிருந்த கலகம் பார்லிமெண்டின் அதிகாரத்தை எதிர்ப்பதாக இருந்ததுதான். பார்லிமெண்டு அப்போது சுயஆட்சி மசோதாவை விவாதித்துக்கொண் டிருந்தது; பின்னர் அதை நிறைவேற்றியது. இவ்வாறு, அல்ஸ்டர் கலகம் ஜனநாயகத்தின் அஸ்திவாரத்தையே தகர்ப்பதாயிருந்தது. ஆகவே, தாங்கள் எப்பொழுதும் சட்டத்துக்குட்பட்ட ஆட்சியிலும் செய்கையிலுமே நம்பிக்கை உடையவர்கள் என்று இதுவரையில் ஆங்கிலேயர் அடித்து வந்த ஜம்பம் வெற்றுரையாக முடிந்தது.

1912-14-ம் வருஷத்து அல்ஸ்டர் கலக ஆயத்தங்கள் அரசாங்கம், ஜனநாயகம் என்பனவற்றின் உண்மையான தன்மையை வெளிப்படுத்தின. ‘சட்டம்—ஒழுங்கு’ என்னும் பகட்டான ஆரவாரச் சொற்களின் குட்டையும் அவை உடைத்து விட்டன. ‘சட்டம்-ஒழுங்கு’ என்பன ஆளும் வகுப்பாரின் உரிமைகளையும் நலன்களையும் பாதுகாக்கிறவரையில் விரும்பத்தக்கவைதான். அவ்வுரிமைகளிலும் நலன்களிலும் தலையிடாதவரையில் ஜனநாயகமும் நல்லதுதான். ஆனால் அவ்வுரிமைகளுக்கும் நலன்களுக்கும் ஆபத்து வந்து விட்டாலோ, உடனே ஆளும்வகுப்பார் போர்தொடுக்க ஆரம்பித்துவிடுவார்கள். அவர்களுக்குச் ‘சட்டம்—ஒழுங்கு’ என்பன அவர்களுடைய நலன்களைக் குறிக்கும் சொல்லலங்காரமே

ஒழிய வேறொன்றுமில்லை. இதனால், பிரிட்டிஷ் அரசாங்கம் உண்மையில் ஒரு வர்க்க அரசாங்கம் என்பதும், பார்லிமெண்டு மெஜாரிட்டி கூட அதை அசைப்பது கடினம் என்பதும் வெட்ட வெளிச்சமாகத் தெரிந்தது. அத்தகைய ஒரு பார்லிமெண்டு மெஜாரிட்டி ஆளும் வர்க்கத்தாருடைய உரிமைகளைக் குறைக்கும் ஒரு சமூகச் சட்டத்தை இயற்ற முயலுமாயின், உடனே அவர்கள் ஜனநாயகத் தத்துவங்களையெல்லாம் காற்றில் பறக்க விட்டு விட்டுக் கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு போருக்குக் கிளம்பிவிடுவார்கள். இவ்வுண்மை எல்லா நாடுகளுக்கும் பொருந்தும். அறவுரைகளும் ஆரவாரச் சொற்களும் பனிப்படலம் போன்று அதை நம் கண்ணுக்குத் தெரியவொட்டாது மறைக்கின்றன. ஆகவே, அதை நாம் மறவாது மனத்தில் இருத்திக்கொள்வது நல்லது. இவ்விஷயத்தில், அடிக்கடி புரட்சிகள் நிகழும் ஒரு தென் அமெரிக்கக் குடியரசுக்கும் நிலையான அரசாங்கத்தை உடைய இங்கிலாந்துக்கும் சாராம்சத்தில் வேற்றுமை ஒன்றும் கிடையாது. இங்கிலாந்தில் அரசாங்கம் மாறுதலின்றி நிலைத்திருப்பதற்குக் காரணம் அங்கு ஆளும் வர்க்கத்தார் நன்கு வேரூன்றியிருப்பதும், இதுவரையில் வேறெந்த வர்க்கமும் அதை அதிகாரத்திலிருந்து நீக்கமுடியாமையும் தான். 1911-ல் அவர்களுடைய பாதுகாப்பு அரண்களுள் ஒன்றான லார்டு சபைக்கு ஊனம் நேர்ந்தவுடனே அவர்கள் அச்சத்தால் அறிவிழந்து அல்ஸ்டர் பிரச்சினையைக் கலகத்துக்கு வியாஜமாகக் கொண்டார்கள்.

இந்தியாவில், பொழுது விடிந்தால் பொழுதுபோனால், இந்தச் ‘சட்டம் - ஒழுங்கு’ என்னும் வார்த்தைகளையே கேட்டுக் கேட்டு நம் காதுகளும் புளித்து விட்டன. ஆகவே, அவ்வார்த்தைகளின் உண்மையான பொருளை

நாம் நினைவில் வைக்கவேண்டியது அவசியம். நமக்குப் புத்தி புகட்டும் திருத்தொண்டைப் புரிந்து வருபவர்களுள் ஒருவரும், இந்தியா மந்திரி பதவி வகித்தவரும் ஆகிய லார்டு பர்க்கன்ஹெட் ஒரு அல்ஸ்டர் கலகத் தலைவர் என்பதையும் நாம் நினைவில் வைக்கவேண்டியது அவசியம்.

ஆக, அல்ஸ்டர் ஆயுதங்களைச் சேகரித்தும் தொண்டர்களைத் திரட்டியும் கலகத்துக்கு ஆயத்தம் செய்து வந்தது. அரசாங்கம் ஒன்றும் செய்யாமல் அதை அமைதியாகப் பார்த்துக்கொண்டிருந்தது. அவ்வாயத்தங்களுக்கு விரோதமாக அவசரச் சட்டங்கள் பிறப்பிக்கப் படவில்லை! சிறிது காலத்திற்குப்பின் அயர்லாந்தின் மிச்சப் பாகமும் அல்ஸ்டரைப் பின்பற்றித் "தேசியத் தொண்டர் படை" ஒன்றைத் திரட்ட ஆரம்பித்தது. சுயஆட்சிக்காகப் போரிடவும், அவசியம் நேர்ந்தால் அல்ஸ்டரை எதிர்த்துப் போரிடவுமே தேசியத் தொண்டர் படை திரட்டப்பட்டது. இவ்வாறு அயர்லாந்தில் போட்டிச் சேனைகள் ஏற்பட்டன. பார்லிமெண்டின் சுய ஆட்சி மசோதாவை எதிர்த்துக் கலகம் செய்வதற்காக அல்ஸ்டர் தொண்டர்களைத் திரட்டியதையும் அவர்களுக்கு ஆயுதம் ஈந்ததையும் கண்டும் காணாததுபோல் இருந்த பிரிட்டிஷ் அதிகாரிகள் சுய ஆட்சி மசோதாவுக்குச் சாதகமான தேசியத் தொண்டர்களை அடக்கும் விஷயத்தில் மட்டும் அதிக விழிப்புடன் இருந்ததுதான் விந்தையாகும்.

அயர்லாந்தின் இவ்விரு தொண்டர் படைகளுக்கும் மாறுபாடு நிகழ்வது நிச்சயம் என்று தோன்றியது. அதாவது, அயர்லாந்தில் உள்நாட்டு யுத்தம் ஏற்படும் போலிருந்தது. அத்தருணத்தில் அதைவிடப் பெரிய யுத்தம் ஒன்று மூண்டது. 1914 ஆகஸ்டில் உலக

யுத்தம் தொடங்கவே அதற்கு முன் மற்றப் பிரச்னைகளெல்லாம் அற்பமாகி விட்டன. சுய ஆட்சி மசோதா சட்டமாகி விட்டாலும், யுத்த முடிவுக்கு முன் அது அமுலுக்கு வரக் கூடாதென்று அதிலேயே கண்டிருந்தது. ஆகவே, அயர்லாந்துக்குச் சுய ஆட்சி என்பது இன்னும் முன்போலவே கானல் நீராகத்தான் இருந்தது. யுத்த முடிவுக்குள் அயர்லாந்தில் நிகழ்ந்த பல நிகழ்ச்சிகளைக் காண்போம்.

நான் எல்லா நாடுகளின் வரலாற்றையும் உலக யுத்தத் தொடக்கம் வரையில் கொணர்ந்து நிறுத்தி வருகிறேன். அயர்லாந்திலும் அந்தக் கட்டத்துக்கு நாம் வந்து விட்டோம். ஆகவே, இங்கு நாம் அயர்லாந்தின் கதையை நிறுத்திக் கொள்ளவேண்டும். இக் கடிதத்தை முடிக்கு முன் இன்னும் ஒரு விஷயம்மட்டும் உனக்குச் சொல்ல விரும்புகிறேன். பிரிட்டிஷ் அரசாங்கம் அல்ஸ்டர் கலகத் தலைவர்களை அவர்களுடைய செய்கைகளுக்காகத் தண்டிப்பதற்கு மாறாக அவர்களை மந்திரிகளாக்கியும் உயர் பதவிகளில் அமர்த்தியும் சன்மானித்தது.

141

பிரிட்டன், எகிப்தைப் பற்றிக்கொண்டு விடமாட்டேன் என்கிறது

மார்ச்சு 11, 1933.

அமெரிக்காவிலிருந்து அட்லாண்டிக் சமுத்திரத்தை ஒரே தாண்டாகத் தாண்டி அயர்லாந்துக்கு வந்து சேர்ந்தோம். இப்போது, ஐரோப்பாக் கண்டத்திலுள்ள அயர்லாந்தை விட்டு இன்னொரு கண்டமாகிய ஆப்பிரிக்காவுக்கு ஒரே தாவாகத் தாவிப் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய வாதம் என்னும் பாம்பின் வாயில் அகப்பட்டுக் கொண்டு விழிக்கும் இன்னொரு தேரையாகிய எகிப்தைப் பார்ப்போம். என்னுடைய கடிதங்கள் சிலவற்றில் எகிப்தின் பூர்வீக வரலாற்றைக் குறிப்பிட்டிருக்கிறேன். அதைப் பற்றி எனக்கு அதிகமாக ஒன்றும் தெரியாத காரணத்தால், அதைக் கோவையாகவும் விரிவாகவும் கூற முடியவில்லை. அதைப் பற்றி எனக்குத் தெரிந்ததைவிட அதிகமாகத் தெரியுமாயினும், இந்த இடத்தில் நான் மீண்டும் பழைய வரலாற்றைப் பன்னிப் பன்னிப் பேசிக்கொண்டிருப்பது உசிதமல்ல. கடைசியாக, நாம் 19-வது நூற்றாண்டு வரலாற்றை முடித்துவிட்டு 20-வது நூற்றாண்டின் தலை வாயிலில் வந்து நிற்கின்றோம். இனி, அதை விடுத்துப் பின் செல்லக்கூடாது. நாம் எப்பொழுதுமே முன்னுக்குப் போவதும் பின்னுக்கு வருவதுமாயிருந்தால் நமது கதை என்னுவது? மேலும், நான் ஒவ்வொரு நாட்டின் பண்டை வரலாற்றையும் கூறத் தொடங்கி விட்டால் இக் கடிதங்கள் முடிவின்றி அநுமார் வால் மாதிரி நீண்டுகொண்டே தான் போகும்.

ஆயினும், எகிப்தின் பழங்கதை வெறுங்கதை
என்று நீ நினைத்து விடக் கூடாது. நாடுகளுக்குள்ளே
நரைத்து முதிர்ந்த பெருங் கிழம் எகிப்து. அது வேறெந்த
நாட்டைக் காட்டிலும் அதிகமாக நம்மைப் பண்டைக்
காலத்துக்குள் கொண்டு செல்கிறது. அதன் ஆயுளை
அற்ப சொற்பமான நூற்றாண்டுகளில் எண்ணி விட
முடியாது. சரித்திராசிரியர்கள் எகிப்தின் ஆயுளை
ஆயிரக் கணக்கான ஆண்டுகளில் கணிக்கிறார்கள்.
வியப்பும் திகைப்பும் உண்டு பண்ணும் எகிப்தின்
கடந்த காலச் சின்னங்கள் அதன் கடந்த காலம்
நமக்கு எத்துணை தொலைவிலுள்ள தென்பதை ஞாபக
மூட்டுகின்றன. அகழ்வாராய்ச்சியாளர்கள் ஆதியில்
வேலை செய்யத் தொடங்கிய இடம் எகிப்து தான்.
அவர்களுடைய ஆராய்ச்சிக்கு அரிய பெரிய விருந்தளித்
ததும் எகிப்து தான். அவர்கள் மணலுக் கடியிலிருந்து
தோண்டி எடுத்த ஞாபகச் சின்னங்கள் நீண்ட காலத்
துக்கு முற்பட்ட தங்களுடைய பால லீலைகளை அற்புதம்
பொங்க எடுத்துரைக்கின்றன. இந்த அகழ்வாராய்ச்சி
இன்றும் நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. அதன்
பயனாக எகிப்தின் புராதன சரித்திரத்தில் தினேதினே
புதிய ஏடுகள் சேர்க்கப்பட்டு வருகின்றன. எகிப்தின்
பழமை எப்போது ஆரம்பிக்கிறது, எவ்வாறு ஆரம்பிக்
கிறது என்று இன்னும் நம்மால் சொல்ல முடியவில்லை.
இது வரையில் கண்ட உண்மைகள் வருமாறு: 7000
ஆண்டுகளுக்கு முன்பே எகிப்திலுள்ள நைல் நதிப்
பள்ளத்தாக்கில் நாகரிக மக்கள் வாழ்ந்து வந்தனர். அக்
காலத்திலேயே அவர்களுடைய கலை மாட்சியும் பண்
பாடும் மிகவும் தொன்மை வாய்ந்திருந்தன என்று அறி
யக் கிடக்கிறது. அவர்கள் சித்திர வடிவான
எழுத்துகளில் தங்களுடைய மொழியை எழுதியுள்

ளார்கள். அவர்கள் உபயோகித்த மட்பாண்டங்களும் பூம் பாத்திரங்களும் மிக்க அழகு வாய்ந்து விளங்குகின்றன. அவர்கள் பொன்னாலும் செம்பாலும் தந்தத்தாலும் பாத்திரங்கள் செய்து புழங்கி வந்தார்கள். அவர்கள் வெண் சலவைக் கல்லையும் (Alabaster) செதுக்கி வேலை செய்ததாகத் தெரிகிறது.

கி. மு. நாலாவது நூற்றாண்டில் மாசிடோனியாவைச் சேர்ந்த அலெக்சாந்தர் எகிப்தை ஜெயிக்குமுன்பே முப்பத்தொரு எகிப்திய அரச வமிசங்கள் அதை ஆண்டதாகச் சொல்லப்படுகிறது. அந்த 4000 அல்லது 5000 வருஷத்து எகிப்தியச் சரித்திரத்தில் பிரதானமாக விளங்கும் சில ஸ்திரீ புருஷர்கள் இன்னும் உயிருடன் இருப்பது போலவே தோன்றுகிறது. அவர்கள் ஆச்சரியமானவர்கள். அவர்களில் சிறந்த கர்மவீரர்களும், பெரிய கட்டிடங்களை நிருமாணித்தவர்களும், உயர்ந்த அறிவாளிகளும், மனோராஜ்ய சீலர்களும், போர்வீரர்களும், யதேச்சாதிகாரம் செலுத்தியவர்களும், கொடுங் கோலர்களும், ஆணவமும் செருக்கும் மிகுந்த அரசர்களும், அழகிற் சிறந்த மாதர்களும் இருக்கிறார்கள். இவ்வாறு, ஆயிரமாயிரம் ஆண்டுகளாக எகிப்தை ஆண்டு வந்த பாரோ மன்னர்களின் பரம்பரை நம் கண்முன் ஒரு பெரிய ஊர்வலம் போல் செல்லுகிறது. புராதன எகிப்தில் பெண்கள் பரிபூரண சுதந்திரம் உடையவர்களாக இருந்தார்கள். அவர்கள் அரசிகளாக அந்நாட்டை ஆண்டும் இருக்கிறார்கள். எகிப்து புரோகிதர்களின் ஆதிக்கம் மிகுந்த ஒரு நாடாயிருந்தது. அந்நாளில் எகிப்தில் வாழ்ந்த ஜனங்கள் அடுத்த உலக நினைவில் ஆழ்ந்து கிடந்தார்கள். தொழிலாளரைக் கட்டாய வேலை வாங்கியும், அதிகமாகத் துன்புறுத்தியும் கட்டப்பட்ட புகழ்பெற்ற சமாதிக் கோபுரங்கள் (பிரமிட்கள்)

பாரோ மன்னர்களின் அடுத்த உலக வாழ்வுக்குரிய ஒருவித முன்னேற்பாடாகும். அவர்கள் தங்களுடைய சவங்களைத் தைலப்பதமிட்டு நெடுநாள் கெடாமலிருக்கும்படி வைத்ததும் எதிர்காலத்தை உத்தேசித்துத்தான். இவையெல்லாம் நமக்குப் பெரிய கண்ணராவியாகத் தோன்றுகின்றன. இவற்றைக் கேட்கும்போது மனசில் மகிழ்ச்சி மறைந்து துன்ப இருள் சூழ்கிறது. இன்னும், எகிப்திய ஆடவர் தலையை மழுங்கச் சிரைத்துக்கொண்ட காரணத்தால் தலையில் டோப்பா மயிர் அணிந்து கொண்டிருந்ததாகத் தெரிகிறது. கடைசியில் குழந்தைகளின் விளையாட்டுச் சாமான்களும் காணப்படுகின்றன! நல்ல நல்ல பொம்மைகள், பந்துகள், அங்க அசைவுள்ள சிறு மிருகங்கள் ஆகிய விளையாட்டுப் பொருள்கள் பண்டை எகிப்தியரின் மனுஷ இயற்கையைத் திடீரென்று நமக்கு ஞாபக மூட்டுகின்றன. அதனால், அவர்களுக்கும் நமக்கும் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகள் குறுக்கே நிற்பினும் அவர்கள் நம்மை மிகவும் நெருங்கி வருவதுபோல் தோன்றுகிறது.

கி. மு. ஆறாவது நூற்றாண்டில், அதாவது, புத்தர் வாழ்ந்த காலத்தில், பாரசீகர் எகிப்தை ஜெயித்து அதைச் சிந்து நதியிலிருந்து நைல்நதி வரையில் பரந்திருந்த தங்களுடைய சாம்ராஜ்யத்தில் ஒரு பகுதி ஆக்கிக்கொண்டார்கள். அகீமெனிது வமிசத்தைச் சேர்ந்த அவ்வரசர்கள் பர்சிபோலிசைத் தலைநகராகக் கொண்டு தங்களுடைய சாம்ராஜ்யத்தை ஆண்டுவந்தார்கள். அவர்கள் கிரீசையும் ஜெயிக்க முயற்சித்தார்கள்; ஆனால், முடியவில்லை. கடைசியில், மகா அலெக்சாந்தர் வந்து அவர்களை முடிவாகத் தோற்கடித்தான். பாரசீகருடைய கொடுங் கோலினின்று தங்களை விடுவிக்க வந்தவனாகக் கருதி, அலெக்சாந்தரை எகிப்தியர் வரவேற்றார்கள். எகிப்தி

இலுள்ள அலெக்சாந்திரியா நகரம் இன்னும் அவனுடைய ஞாபகச் சின்னமாக விளங்குகிறது. அது கிரேக்கக் கல்விக்கும் கலைப் பயிற்சிக்கும் ஒரு முக்கிய இடமாயிற்று.

அலெக்சாந்தருடைய மரணத்துக்குப்பின் அவனுடைய சாம்ராஜ்யத்தை அவனுடைய சேனாதிபதிகள் பங்கிட்டுக்கொண்டது உனக்கு நினைவிருக்கலாம். எகிப்து டாலமியின் பங்குக்கு வந்தது. டாலமி வமிசத்தார், பாரசீகரைப் போலின்றி, விரைவில் எகிப்தியரின் நடை உடை பாவனைகளையும் பழக்க வழக்கங்களையும் மேற்கொண்டு அவர்களைச் சேர்ந்தவர்கள் போலவே ஆய்விட்டார்கள். எகிப்தியரும் அவர்களைப் பழைய பாரோ மன்னர்களின் பரம்பரையில் வந்தவர்கள் என்றே பாவித்து ஏற்றுக்கொண்டார்கள். டாலமி வமிசத்தில் கடைசியாக வந்தவள் கிளியோபாத்திரை. அவளுடைய மரணத்துக்குப்பின் எகிப்து ரோம சாம்ராஜ்யத்தில் ஒரு மாகாணம் ஆகிவிட்டது. கிறிஸ்து சகாப்தம் தொடங்குவதற்குச் சில வருஷங்களுக்கு முன் இது நிகழ்ந்ததாகக் கருதப்படுகிறது.

ரோமாபுரி கிறிஸ்தவ மதத்தை அங்கீகரிப்பதற்கு நெடுநாள் முன்னரே எகிப்து அதை ஏற்றுக்கொண்டது. ரோமானியரால் துன்புறுத்தப்பட்ட எகிப்திய கிறிஸ்தவர்கள் காடுகளிலும் மலைகளிலும் ஒளிந்துகொண்டார்கள். காடுகளில் இரகசியக் கிறிஸ்தவ மடங்கள் தோன்றின. அம் மடங்களில் வாழ்ந்த துறவிகளும் தவசிகளும் நிகழ்த்திய அற்புதங்களைப் பற்றிய கதைகளால் அக்காலக் கிறிஸ்தவ உலகம் நிறைந்திருந்தது. கான்ஸ்டண்டைன் சக்கரவர்த்தி கிறிஸ்தவ மதத்தைத் தழுவியபிறகு அது ரோம சாம்ராஜ்யத்தின் மதமாகிவிட்டது. இப்போது எகிப்தியக் கிறிஸ்தவர்கள் எகிப்தில் வாழ்ந்த கிறிஸ்தவர் அல்லாதவர்களைத் துன்புறுத்திக் கொடூரமாகப் பழிவாங்க முயன்றார்கள். எகிப்தின் பழைய மதத்தை அனுஷ்டித்தவர்களைக் கிறிஸ்தவர்கள் அஞ்ஞானிகள் என்று அழைத்தார்கள். அலெக்சாந்திரியா இப்போது கிறிஸ்தவக் கல்விக்கு முக்கிய இடமாக விளங்கியது. ஆனால், கிறிஸ்தவ மதம் எகிப்தில் அரசாள்வோர் மதமான பின்பு பல கட்சிகளாகப் பிரிந்து விட்டது. வெவ்வேறு கிறிஸ்தவப் பிரிவினர் அதிகாரத்தை அடைவதற்கு ஒருவரோடொருவர் இடைவிடாது சண்டையிட்டுக்கொண்டிருந்தார்கள். அந்தச் சண்டைகளால் எகிப்து ரத்தக் களரி ஆயிற்று. அதனால், எல்லாக் கிறிஸ்தவப் பிரிவினரிடமும் பொது ஜனங்களுக்கு வெறுப்பு ஏற்பட்டது. ஆகவே, கி. பி. ஏழாவது நூற்றாண்டில் அரேபியர் தங்களுடைய புதிய மதத்துடன் எகிப்தின்மீது படையெடுத்து வந்த காலையில் ஜனங்கள் அவர்களை வரவேற்றார்கள். அரேபியர் எகிப்தையும் வட ஆப்பிரிக்காவையும் எளிதில் ஜெயித்ததற்கு இது ஒரு காரணம். மீண்டும் கிறிஸ்தவர்கள் அடக்கப்பட்டுக் கொடுந்துன்பத்துக்கு ஆளானார்கள்.

கலீபாவின் சாம்ராஜ்யத்தில் எகிப்து ஒரு மாகாணம் ஆயிற்று. அரேபிய மொழியும் கலைப்பண்பும் விரைவில் பரவிப் பழைய எகிப்திய மொழியை வாயில் போட்டுக்கொண்டன. இருநூறு ஆண்டுகளுக்குப்பின், 9-வது நூற்றாண்டில், பாக்தாது கலீபா பீடம் பலவீனமுற்ற காலையில் துருக்கிய கவர்னர்களின் கீழ் எகிப்து அரைவாசிச் சுதந்திரநாடாக விளங்கிற்று. அதற்கும் முந்நூறு ஆண்டுகளுக்குப்பின் சிலுவைப் போர்களின் புகழ்பெற்ற முஸ்லிம் வீரனான சலாதீன் எகிப்தின் சுல்தான் ஆனான். சலாதீனுக்குப்பின் வந்த அவனுடைய சந்ததியாரில் ஒருவன் காகசஸ் பிரதேசத்திலிருந்து

ஏராளமான துருக்கிய அடிமைகளைக் கொண்டுவந்து அவர்களைத் தன்னுடைய படைவீரர்கள் ஆக்கினான். அவ்வெள்ளை அடிமைகள் மாமலூகியர் என்று அழைக்கப்பட்டார்கள். 'மாமலூகியர்' என்னும் சொல்லுக்கு அடிமைகள் என்று அர்த்தம். அவர்கள் நன்கு பொறுக்கி எடுக்கப்பட்டுச் சிறந்த படைவீரர்களாக விளங்கினார்கள். சில வருஷங்களுக்குள் அம்மாமலூகியர் எகிப்து சுல்தானுக்கு எதிராகக் கலகம் செய்து தங்களில் ஒருவனையே சுல்தான் ஆக்கினார்கள். இவ்வாறு ஆரம்பித்த மாமலூகிய ஆட்சி 250 ஆண்டுகள் நீடித்தது. அரைவாசிச் சுதந்திரத்துடன் இன்னும் ஒரு 300 ஆண்டுகள் அது நடந்து வந்தது. ஆக, அந்நிய அடிமைகள் 500 ஆண்டுகள் எகிப்தின்மீது ஆதிக்கம் செலுத்தினார்கள். இந்த ஆச்சரிய சம்பவம் சரித்திரத்திலேயே அபூர்வமானதாகும்.

ஆதியில் எகிப்துக்கு வந்த மாமலூகிய வகுப்பு வமிச பாரம்பரியமாகத் தொடர்ந்து வரவில்லை. அவர்கள் காகசஸ் பிரதேசத்தில் வாழ்ந்து வந்த வெள்ளை அடிமைகளில் சிறந்தவர்களைப் பொறுக்கி எடுத்துத் தங்களுடன் இடைவிடாது சேர்த்துவந்தார்கள். காகேசிய ஜாதியார் ஆரிய வகுப்பைச் சேர்ந்தவர்கள். ஆகவே, மாமலூகியர் என்போர் ஆரியர் ஆவர். அவ் வம்சிய வகுப்பு எகிப்தில் வேர்விழுந்து தழைக்கவில்லை. சில தலைமுறைகளில் அவர்களுடைய குடும்பங்கள் பூண்டற்றுப் போய்விட்டன. ஆனால், மேலும் மேலும் புதிய மாமலூகியர் எகிப்துக்குக் கொண்டுவரப்பட்டபடியால் அவர்களுடைய எண்ணிக்கையும், பலமும், வீரியமும் குறையாமல் இருந்து வந்தது. ஆகவே, மாமலூகியர் எகிப்தில் நிரந்தரமான வமிச பரம்பரையாக இல்லாவிட்டாலும் உயர் குலத்தோராகவும் ஆளும் வகுப்போராகவும் நெடுங்காலம் இருந்து வந்தார்கள்.

16-வது நூற்றாண்டின் ஆரம்பத்தில், துருக்கியை ஆண்ட உதுமானிய சுல்தான் எகிப்தை ஜெயித்து மாமலூகிய சுல்தானைத் தூக்கிவிட்டான். இப்போது எகிப்து உதுமானிய சாம்ராஜ்யத்தில் ஒரு மாகாணம் ஆயிற்று. ஆயினும், மாமலூகியரே உயர்குலத்தோராகவும் ஆளும் வகுப்பாராகவும் இன்னும் இருந்து வந்தார்கள். பிற்பாடு துருக்கியர் ஐரோப்பாவில் பலவீனமுற்ற காலையில், மாமலூகியர் எகிப்தில் தங்களிஷ்டம்போல் ராஜ்யபாரம் செய்யத் தலைப்பட்டார்கள். பெயரளவில் மட்டும் எகிப்து உதுமானிய சாம்ராஜ்யத்தில் ஒரு பாகமாக இருந்து வந்தது. 18-வது நூற்றாண்டின் இறுதியில் நெப்போலியன் எகிப்துக்கு வந்தபோது மாமலூகியரை போரில் எதிர்த்து வென்றான். பிரெஞ்சுச் சேனைக்குமுன் 'கூந்தல் மா இவர்ந்து' சென்று அச்சேனைத் தலைவனைத் தன்னுடன் இடைக்காலத் தரும யுத்தரீதியில் துவந்துவ யுத்தம் செய்யும்படி அறைகூவிய மாமலூகியப் போர் வீரனை நீ மறந்திருக்க மாட்டாய் என்று நினைக்கிறேன்.

இப்போது நாம் 19-வது நூற்றாண்டுக்கு வந்துவிட்டோம். அதன் முற்பாதியில், முகம்மதுஅலி என்னும் அல்பேனியத் துருக்கியனின் ஆதிக்கத்தின் கீழ் எகிப்து இருந்தது. அவன் துருக்கியின் சார்பில் கவர்னராக இருந்து எகிப்தை ஆண்டான். துருக்கிய கவர்னர்கள் "கெடிவ்"கள் என்று அழைக்கப்பட்டார்கள். முகம்மது அலி நவீன எகிப்தின் தந்தை என்று சொல்லப்படுகிறான். அவன் செய்த முதல் காரியம் மாமலூகியரை வஞ்சனையாகப் படுகொலை புரிந்து அவர்களுடைய பலத்தை ஒடுக்கியதுதான். அவன் எகிப்தில் ஒரு பிரிட்டிஷ் சேனையையும் தோற்கடித்துத் தன்னை நாட்டிற்குத் தலைவனாக்கிக் கொண்டான். அவன் துருக்கி சுல்தானின் ஆதிபத்தியத்தைக் கூட ஒரு முறைக்காக ஒப்புக்கொண்

டிருந்தான். எகிப்தியக் குடியானவர்களைக் கொண்ட—மாமலூகியரை அல்ல—ஒரு புதிய சேனையை அவன் உண்டாக்கினான். அவன் புதிய கால்வாய்களை வெட்டிப் பருத்தி பயிரிடுவதற்கு ஊக்கம் அளித்தான். அதுவே பின்னர் எகிப்தில் முக்கியத் தொழில் ஆயிற்று. அவன் கான்ஸ்டாண்டிநோபிளில் இருந்த பொம்மை அரசனைத் துரத்தி விட்டு அதைக் கைப்பற்றிக் கொள்வதாகப் பயமுறுத்தினான். ஆனால், அவ்வாறு செய்யாமல் சிரியாவை மட்டும் எகிப்தில் சேர்த்துக் கொண்டான்.

முகம்மது அலி 1849-ம் ஆண்டில் தன்னுடைய எண்பதாவது வயதில் மாண்டான். அவனுக்குப் பின் வந்த கெடிவ்கள் பலமும் திறமையும் அற்றவர்களாகவும் ஊதாரிகளாகவும் இருந்தார்கள். அவர்கள் திறமையுள்ளவர்களாக இருந்திருப்பினும், பேராசைபிடித்த அந்நிய முதலாளிகளையும், ஐரோப்பிய சாம்ராஜ்யங்களையும் அதிக நாள் எதிர்த்துச் சமாளித்திருக்க முடியாது. முக்கியமாக, பிரிட்டிஷ், பிரெஞ்சு முதலாளிகள் கெடிவ்களின் சொந்த உபயோகத்திற்கென்று அநியாய வட்டிக்கு நிறையப் பணம் கடனாகக் கொடுத்தார்கள். கெடிவ்கள் காலாகாலத்தில் வட்டி செலுத்தத் தவறினால் அதை வசூலிப்பதற்கு யுத்தக் கப்பல்கள் அனுப்பப்பட்டன! அரசாங்கங்களும் முதலாளிகளும் ஒருவர்க்கொருவர் உள் உளவாக இருந்துகொண்டு வேற்று நாட்டைக் கொள்ளையடிக்கவும் அடக்கியாளவும் புரியும் சூழ்ச்சிகள் இருக்கின்றனவே, அவை அலாதியானவை. கெடிவ்கள் திறமையற்றவர்களாக இருந்தும் எகிப்து நல்ல முன்னேற்றம் அடைந்து வந்தது. 1876 ஜனவரியில், முக்கியப் பிரிட்டிஷ் பத்திரிகையான 'டைம்ஸ்' (Times), "முன்னேற்றத்துக்கு அற்புதமான ஒரு உதாரணம் சொல்லவேண்டு

மானால் எகிப்தைச் சொல்லலாம். ஐந்நூறு ஆண்டுகளில் பிற நாடுகள் அடைந்த முன்னேற்றத்தை அது எழுபதே ஆண்டுகளில் அடைந்துவிட்டது" என்று எழுதிற்று. ஆயினும், அந்நிய முதலாளிகள் தாங்கள் கொடுத்த கடனை எகிப்து அணு பைசா தீர்த்துப் பைசல் செய்ய வேண்டும் என்று ஒட்டாரம் செய்தார்கள். அவர்கள், எகிப்து விரைவில் திவால் ஆகிவிடும் என்று கதைகட்டி விட்டார்கள். ஆகவே தங்களுடைய அரசாங்கங்கள் எகிப்து விவகாரத்தில் உடனே தலையிடவேண்டுமென்று அவர்கள் கோரினார்கள். அந்நிய அரசாங்கங்கள், முக்கியமாகப் பிரிட்டிஷ், பிரெஞ்சு அரசாங்கங்கள், எகிப்தில் தலையிடுவதற்கு இம்மாதிரி ஏதாவது தந்திரம் கிடைக்குமா என்றுதான் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தன. எகிப்து என்றாலே அவர்களுக்கு நாக்கில் ஜலம் ஊறிக்கொண்டிருந்தது. மேலும், எகிப்து இந்தியாவுக்குப் போகும் வழியில் இருந்ததல்லவா?

இதற்கிடையில், தொழிலாளரைக் கட்டாயப்படுத்தியும் கொடுமைக்குள்ளாக்கியும் வெட்டப்பட்ட சூயஸ் கால்வாய் 1869-ல் போக்குவரத்துக்குத் திறந்துவிடப்பட்டது. (செங்கடலையும் மத்தியதரைக் கடலையும் சேர்க்கும் இத்தகைய கால்வாய் ஒன்று, எகிப்தில் பழைய அரசவமிசங்கள் ஆட்சி புரிந்து வந்த காலத்திலேயே, அதாவது, கி. மு. 1400-ம் ஆண்டிலேயே இருந்ததாகத் தெரிகிறது. யாருக்கும் இதை அரிய ஆச்சரியமாயிருக்கும்.) சூயஸ் கால்வாய் திறக்கப்பட்ட உடனே ஐரோப்பாக் கண்டத்துக்கும் ஆசியா, ஆஸ்திரேலியாக் கண்டங்களுக்கும் இடையே நடந்து வந்த போக்குவரத்து அத்தனையும் சூயஸ் கால்வாயை வந்து நெருக்கின. அதனால் எகிப்தின் முக்கியத்துவம் இன்னும் அதிக

மாயிற்று. இந்தியாவிலும் இதரக் கீழ்நாடுகளிலும் பிராணாதாரமான பாத்தியதைகளை உடைய இங்கிலாந்துக்கு எகிப்தையும் சூயஸ் கால்வாயையும் தன் வசத்தில் வைத்துக்கொள்ள வேண்டியது இன்றியமையாததாயிற்று. பிரிட்டிஷ் பிரதம மந்திரியான டிஸ்ராலி 1875-ல், சூயஸ் கால்வாய் பங்குகளைச் சூதுமார்க்கமாகத் திவால் ஆகிவிட்ட கெடிவ் இடமிருந்து குறைந்த விலைக்கு வாங்கிவிட்டான். இது நல்ல முதலீடு என்பது மட்டுமல்ல; இதனால் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்குச் சூயஸ் கால்வாய் மீது அதிகமாக ஆதிக்கம் செலுத்த இடமேற்பட்டது. பிரிட்டிஷாருக்கு விற்றது போக எகிப்தின் கைவசம் எஞ்சியிருந்த பங்குகளைப் பிரெஞ்சு முதலாளிகள் வாங்கிக் கொண்டார்கள். இவ்வாறு சூயஸ் கால்வாயின் நிதி நிருவாகத்தில் எகிப்துக்கு யாதொரு ஆதிக்கமும் இல்லாமற் போய்விட்டது. அப்பங்குகளிலிருந்து பிரிட்டிஷாருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் வருஷா வருஷம் கொழுத்த லாபப் பங்கீடுகள் கிடைத்துக் கொண்டிருந்தன. அதே சமயத்தில், சூயஸ் கால்வாய் ஆதிக்கமும், எகிப்தின் உயர்நிலையும் அவர்கள் கையில் இருந்தன. 1932-ல் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு மட்டும் 35 லட்சம் பவுன் லாபப் பங்கீடு கிடைத்தது. ஆரம்பத்தில் அது போட்ட முதல் 40 லட்சம் பவுன் தான்.

எகிப்தில் தனக்குள்ள ஆதிக்கத்தைப் பெருக்கிக் கொள்வது பிரிட்டிஷ் அரசாங்கத்துக்குத் தவிர்க்க முடியாததாகி விட்டது. ஆகவே, அது 1879-ல் எகிப்தின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட ஆரம்பித்துத் தன்னுடைய நிதி நிருவாகிகளை அதிகாரத்தில் வைத்தது. இதை இயற்கையாகவே பல எகிப்தியர் வெறுத்தார்கள். எகிப்திலிருந்து அந்நியர் தலையீட்டை ஒழிப்பதற்கு அங்கே ஒரு தேசியக் கட்சி தோன்றியது. அரபி பாஷா

என்னும் வாலிபப் போர்வீரன் அதற்குத் தலைவனாயிருந்தான். அவன் ஏழைத் தொழிலாளர் குடும்பத்தில் பிறந்து எகிப்திய சேனையில் சாதாரணச் சிப்பாயாகச் சேர்ந்தவன். அவனுடைய செல்வாக்கு வளர்ந்தது. அவன் எகிப்தின் யுத்தமந்திரி ஆனான். அந்த ஹோதாவில் அவன் பிரிட்டிஷ், பிரெஞ்சு நிருவாகிகளின் கட்டளைகளை நிறைவேற்ற மறுத்தான். எகிப்து அந்நியரின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய மறுத்ததற்காகப் பிரிட்டன் அதன்மீது போர் தொடுத்தது. 1882-ல் பிரிட்டிஷ் கடற்படை அலெக்சாந்திரியா நகரைக் குண்டுகளால் தாக்கி அதைத் தீக்கிரையாக்கியது. பிரிட்டிஷ் படைகள் எகிப்தியப் படைகளைத் தரைப்போரிலும் தோற்கடித்தன. இவ்வாறு, பிரிட்டிஷார் மேனாட்டு நாகரிகத்தின் உயர்வைப் பிரகடனம் செய்துவிட்டு எகிப்தின் முழு ஆட்சியையும் தாங்களே கைக்கொண்டார்கள்.

இவ்விதமாக எகிப்தில் பிரிட்டிஷ் ஆட்சிக்குப் பிள்ளையார்குட்டு குட்டிக் கொள்ளப்பட்டது. பிரிட்டிஷார் எகிப்தைக் கைப்பற்றிக்கொண்டது சர்வதேசச் சட்டத்தில் இது ஒரு அசாதாரண நிலையை ஏற்படுத்தியது. எகிப்து துருக்கிய ராஜ்யத்தின் ஒரு பகுதியாக இருந்தது. பிரிட்டன் துருக்கியுடன் நேசப்பான்மை பூண்டிருந்தது என்றுதான் கருதவேண்டும். அந்த நிலையில் அது துருக்கிய ராஜ்யத்தின் ஒரு பகுதியைத் தன் வசப்படுத்திக் கொண்டது அசாதாரணமான ஒரு விஷயமாகும். எகிப்தின் ஆட்சியைப் பிரிட்டன் தன்னுடைய ஏஜெண்டு ஒருவன் வசம் ஒப்புவித்தது. அந்த ஏஜெண்டு மொகலாயச் சக்கரவர்த்தி தர்பார் நடத்தினான். இந்தியாவின் வைசிராயைப்போல் அவன் எகிப்தில் எல்லாருக்கும் பெரியவனாக விளங்கினான். கெடிவும் அவனுடைய மந்திரிகளும் கூட அவனை மீறி ஒன்றும் செய்யமுடியாது.

முதல் பிரிட்டிஷ் ஏஜெண்டாயிருந்தவன் மேஜர் பாரிங் என்பவன். அவன் எகிப்தை 25 ஆண்டுகள் ஆண்டான். அவன் பின்னர் லார்டு குரோமர் ஆனான். குரோமர் எகிப்தில் யதேச்சாதிகாரம் செலுத்தினான். அந்நிய முதலாளிகளுக்கும் எகிப்துக்குக் கடன் கொடுத்தவர்களுக்கும் லாபப் பங்கீடுகள் சரிவரச் சென்று சேர்கின்றனவா என்று பார்த்துக்கொள்ள வேண்டியதுதான் அவனுடைய முதல் வேலையாயிருந்தது. அந்த வேலை ஒழுங்காக நடந்து வந்தது. ஆகவே, எகிப்தின் நிர்வாகம் மிகவும் திருப்திகரமாயிருக்கிறதென்று அந்நியர் வானளாவப் புகழ்ந்து வந்தார்கள். இந்தியாவைப்போல், எகிப்தின் பரிபாலன முறையும் ஓரளவு சீர்திருத்தம் பெற்றது. ஆனால், இருபத்தைந்து வருஷப் பிரிட்டிஷ் ஆட்சியின் முடிவில் எகிப்தின் கடன் சுமை ஆரம்பத்தில் இருந்ததுபோலவே இருந்தது. ஜனங்களுக்குக் கல்வி போதிக்க யாதொரு நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. ஒரு தேசிய சர்வகலாசாலை ஆரம்பிப்பதற்குக் கூடப் புண்ணியவான் குரோமர் குறுக்கே நின்றான். அவன் 1892-ல் அப்போது பிரிட்டிஷ் பிரதம மந்திரியாயிருந்த லார்டு சால்ஸ்பரிக்கு ஒரு கடிதம் எழுதினான்: அதில் 'கெடிவ் ஒரு எகிப்தியனைப்போலவே நடந்து கொள்ள விரும்புகிறான்' என்று அவன் குறிப்பிட்டிருந்தான்! இதிலிருந்து அவனுடைய மனோபாவத்தை நாம் நன்கு அறிந்து கொள்ளலாம். லார்டு குரோமரின் கண்ணுக்கு ஒரு எகிப்தியன் எகிப்தியனைப் போல நடந்துகொள்வது குற்றமாகப்பட்டது! இன்றைய தினம் இந்தியர் நடந்துகொள்ள வேண்டிய முறைப்படி நடந்துகொள்ளும் இந்தியரைப் பிரிட்டிஷ் அரசாங்கம் சுளித்துநோக்கித் தண்டனைக்கு ஆளாக்குகிறதல்லவா?

பிரிட்டிஷார் எகிப்தை அடக்கி ஆளுவதைப் பிரெஞ்

சுக்காரர் விரும்பவில்லை. காரணம், கொள்ளையில் அவர்களுக்குப் பங்கு கிடைக்கவில்லை. மற்ற ஐரோப்பிய நாடுகளும் அதை விரும்பவில்லை. எகிப்தியருக்கு அது கட்டோடு பிடிக்கவில்லை என்பதைச் சொல்லத் தேவையில்லை. பிரிட்டிஷ் அரசாங்கம் அனைவரையும் கவலைப்படவேண்டாம் என்று கையமர்த்திவிட்டுச் 'சொற்பக் காலந்தான் நாங்கள் எகிப்தில் இருக்கப்போகிறோம். விரைவில் இதை விட்டுப் போய்விடுவோம்' என்று ஆறுதல் கூறியது. மீண்டும் மீண்டும் பிரிட்டிஷ் அரசாங்கம், தாங்கள் எகிப்தைக் காலி செய்யப்போகும் விஷயத்தை உத்தியோக முறையில் எடுத்து இயம்பிக்கொண்டே இருந்தது. இவ்வாறு, பிரிட்டிஷ் அரசாங்கம் 'கடவுள் சாட்சியாகச் சத்தியமாகச் சொன்னது' ஐம்பது தடவைக்குமேல் இருக்கும்! அதைக் கணக்கு வைப்பது கூடக் கஷ்டமாயிருக்கிறது. ஆயினும், பிரிட்டிஷார் எகிப்தில் அட்டைபோல் ஒட்டிக்கொண்டுதான் இருந்தார்கள்; இன்னமும் இருக்கிறார்கள்!

1904-ல், பிரிட்டிஷார் பிரெஞ்சுக்காரருடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். மொராக்கோவில் பிரெஞ்சுக்காரர் தங்களிஷ்டம் போல் நடந்து கொள்ளலாம் என்றும், அதற்குப் பதிலாக அவர்கள் பிரிட்டிஷாரின் எகிப்திய ஆதிக்கத்தை ஒப்புக்கொள்வதென்றும் இருதிறத்தாரும் தங்களுக்குள் ஒரு ஏற்பாடு செய்து கொண்டார்கள். பரஸ்பரம் இது நல்ல ஏற்பாடுதான். ஆனால், எகிப்தின்மீது உண்மையில் ஆதிபத்தியம் உடையதென்று கருதப்பட்ட துருக்கியின் யோசனையை இதில் யாரும் கேட்டுக்கொள்ளவில்லை. எகிப்து ஜனங்களைக் கேட்பது என்கிற பேச்சுக்குத்தான் இடமே இல்லையே!

அக்காலத்தில் எகிப்தில் காணப்பட்ட இன்னொரு விசேஷம் என்னவென்றால், எகிப்தியக் கோர்ட்டுகளுக்கு

அந்நியரை விசாரிக்க அதிகாரம் இல்லாமைதான். எகிப்தியக் கோர்ட்டுகள் அந்நியரை விசாரிக்கத் தகுதி உடையனவாகக் கருதப்படவில்லை. அந்நியரை அவர்களுடைய சொந்தக் கோர்ட்டுகள்தான் விசாரிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. ஆகவே, எகிப்தில் அந்நிய நீதிபதிகளைக் கொண்ட 'பரதேசத்தில் சுதேசச் சட்ட அமுல்' நடத்தும் (Extra-territorial) கோர்ட்டுகள் தோன்றின. அவை அந்நியருடைய நலன்களையே உளத்தில் கொண்டிருந்தன. அவ்வந்நிய நீதிபதிகளில் ஒருவரே பின்வருமாறு கூறியுள்ளார்:

எகிப்தில் வாழ்ந்த அந்நியர் வரி செலுத்தும் உபத்திரவத்தினின்றுகூடத் தப்பித்துக் கொண்டார்கள் என்று நம்புகிறேன். இது எவ்வளவு சுகமான ஒரு நிலை, பார்! ஒரு நாட்டுக்கு அந்நியன் அதில் வந்து வசிக்கிறான். அவன் அந்த நாட்டுக்கு வரி செலுத்த வேண்டியதில்லை, அந்த நாட்டுச் சட்டங்களுக்கும் கோர்ட்டுகளுக்கும் உட்பட வேண்டியதில்லை; ஆனால், அதே சமயத்தில் அந்த நாட்டைச் சுரண்ட அவனுக்குப் பரிபூரண சுதந்திரமும் வசதியும் உண்டு! இதைவிட வேறென்ன வேண்டும்?

பிரிட்டன் இவ்வாறு எகிப்தை ஆண்டும் சுரண்டியும் வந்தது. பிரிட்டிஷ் ஏஜெண்டுகளும் பிரதிநிதிகளும் யதேச்சாதிகார மன்னருக்குரிய ஸ்ரீமத் கம்பீரத்துடனும் விருதுகளுடனும் தங்களுடைய ராஜபவனங்களில் (Residencies) வாழ்ந்து வந்தார்கள். இந்த நிலைமையில் எகிப்தில் இயற்கையாகவே தேசிய உணர்ச்சி வளர்ந்து வந்தது. சீர்திருத்த இயக்கங்களும் உருப்பெற்றன. 19-வது நூற்றாண்டில் வாழ்ந்த பெரிய எகிப்திய சீர்திருத்தவாதி ஜமாலுதீன் ஆப்கனி என்பவர். அவர் ஒரு மதத் தலைவர். அவர் இஸ்லாமுக்குப் புது மெருகேற்றி அதை நவீன நிலைமைகளுடன் இணக்க முயன்றார். இஸ்லாமைப் புதுப்பிக்க அவர் செய்த

முயற்சியும், இந்தியாவில் ஹிந்து மதத்தைப் புதுப்பிக்கச் செய்யப்பட்ட முயற்சிகளும் சாராம்சத்தில் ஒத்திருக்கின்றன. பழைய மதங்களிலுள்ள சில மூலத் தத்துவங்களை அப்படியே வைத்துக் கொள்வதும், பழைய கோட்பாடுகளுக்கும் சம்பிரதாயங்களுக்கும் புது அர்த்தங்களும் வியாக்கியானங்களும் கற்பிப்பதுமே அம்முயற்சிகள். அப்படிப் பார்த்தால் புதிய கலை ஞானங்கள் என்பன பழைய சமய ஞானத்திற்கோர் அநுபந்தமாகவும் பாஷ்யமாகவும் ஆய்விடுகின்றன. இம்முறை விஞ்ஞான முறையினின்று முற்றிலும் வேறானது என்று சொல்லத் தேவையில்லை. விஞ்ஞான முறையானது பழமைத் தளையில் சிக்கிக் கொள்ளாமல் தைரியமாக முன்னேறிச் செல்லுகிறது. ஆயினும், ஜமாலுதீனுக்கு எகிப்தில் மட்டுமின்றி மற்ற அரேபிய நாடுகளிலும் அதிகமான செல்வாக்கு இருந்தது.

எகிப்தில் அந்நிய வியாபாரத்துடன் ஒரு புதிய மத்திய வகுப்பும் வளர்ந்து வந்தது. அந்த வகுப்பே புதிய தேசிய வாதத்தின் முதுகெலும்பாக விளங்கியது. அந்த வகுப்பிலிருந்துதான் புதிய எகிப்தின் ஒப்புயர்வற்ற தலைவராகிய ஜக்லுல்பாஷா தோன்றினார். எகிப்தில் வாழ்பவர்களில் பெரும்பான்மையோர் முஸ்லிம்களே. ஆனால், 'காப்டு' (Copt) ஜாதியைச் சேர்ந்தவர்களும் அங்கு இருக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்தவர்கள். காப்டுகள் என்போர் பழைய எகிப்தியரின் கலப்பற்ற தூய கால்வழியில் வந்தவர்கள். புதிய மத்திய வகுப்பு முஸ்லிம்கள், காப்டுகள் ஆகிய இரு திறத்தாரையும் கொண்டதாயிருந்தது. அதிருஷ்டவசமாக அவர்களுக்குள் விரோதபாவம் என்பது இல்லை. பிரிட்டிஷார் என்னவோ அவர்களைப் போதிக்கப் பார்த்தார்கள். ஆனால், பிரிட்டிஷாரின் பாச்சா பலிக்கவில்லை. அவர்கள் தேசியக் கட்சியிலும் பிளவு உண்டு

பண்ண முயன்றார்கள். அதிலும் அவர்கள் அதிகமாக வெற்றி பெறவில்லை. இந்தியாவைப்போல், எகிப்திலும் அவர்களுடன் ஒத்துழைப்பதற்குச் சில மிதவாதிகள் அவர்களுக்கு எப்போதாவது கிடைப்பதுண்டு. இதைப் பற்றிப் பின்பு கூறுகிறேன்.

1914 ஆகஸ்டில் உலகயுத்தம் ஆரம்பித்த காலையில் எகிப்தின் நிலை இவ்வாறிருந்தது. மூன்று மாதங்களுக்குப் பின், இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் அவற்றின் நேச நாடுகளுக்கும் விரோதமாகத் துருக்கி ஜெர்மனியின் பட்சம் சேர்ந்தது. அதன்பேரில் எகிப்தை இணைத்துக் கொள்வதென்றே இங்கிலாந்து தீர்மானித்தது. ஆனால், அதற்குச் சில இடையூறுகள் தோன்றின. ஆகவே, எகிப்து ஒரு பிரிட்டிஷ் பாதுகாப்பு நாடாக்கப்பட்டது.

எகிப்து விஷயம் நிற்க, ஆப்பிரிக்காவின் எஞ்சிய பகுதியையும், 19-வது நூற்றாண்டின் பிற்பாதியில், ஐரோப்பிய சாம்ராஜ்யங்கள் விழுங்கிவிட்டன. அவை கழுகுகள் போல் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அப்பெரிய கண்டத்தைத் தங்களுக்குள் பங்கிட்டுக்கொண்டன. சில சமயம், அவை தங்களுக்குள்ளும் சண்டை போட்டுக் கொண்டன. அவற்றைத் தடுத்து நிறுத்துவார் ஒருவரு மில்லை. ஆனால், அபிசீனியா மட்டும் 1896-ல் இதாலியைப் புறங்கண்டது. ஆப்பிரிக்காவில் பெரும்பகுதியும் பிரிட்டிஷ் அல்லது பிரெஞ்சு ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. சில பகுதிகள் பெல்ஜிய, இதாலிய, போர்த்துகீசிய ஆதிக்கத்தின் கீழ் இருந்தன. யுத்தத்தில் தோற்கும் வரையில் ஜெர்மனியும் அங்கு ஆதிக்கம் செலுத்தியது. கீழ்க்கரையில் அபிசீனியாவும் மேல் கரையில் குட்டி லைபீரியாவும்தான் சுதந்திர நாடுகளாயிருந்தன. மொராக்கோ பிரெஞ்சு ஆதிக்கம் ஸ்பானிய ஆதிக்கம் இரண்டுக்கும் உட்பட்டிருந்தது.

ஆப்பிரிக்காவின் பெரும்பெரும் பிரதேசங்களை யெல்லாம் ஐரோப்பிய நாடுகள் கைப்பற்றிய கதை மிகவும் நீளமானது, மிகவும் கோரமானது. அக்கதை இன்னும் முடிவடையவில்லை. ஆப்பிரிக்காவைச் சுரண்டுவதற்குக் கையாளப்பட்ட முறைகள் இன்னும் கோரமானவை. முக்கியமாக, அங்கே ரப்பர் எடுப்பதைச் சொல்லவேண்டும். பல வருஷங்களுக்கு முன், பெல்ஜியத்துக்கு உட்பட்ட காங்கோ நாட்டில் ரப்பர் தோட்டங்களில் செய்யப்பட்டு வந்த கொடுமைகளைக் கேட்டு நாகரிக உலகம் என்று அழைக்கப்படும் உலகம் பயத்தால் மெய்நடுங்கியது. கறுப்பு மனிதன் பொறுத்து வரும் சுமை மகா பயங்கரமானதாகும்.

ஆப்பிரிக்கா இருண்ட கண்டம் என்று அழைக்கப்படுகிறது. 19-வது நூற்றாண்டின் பிற்பாதி வரையில் அதன் உட்பாகம் வெளி உலகத்துக்குத் தெரியாமலேயே இருந்தது. ஆச்சரியம் நிறைந்த அக்கண்டத்தில் குறுக்கும் நெடுக்குமாகத் துணிச்சலும் கிளர்ச்சியும் மிகுந்த பல பிரயாணங்கள் மேற்கொண்ட பின்னரே அதைச் சரியாகப் படத்தில் அமைக்க முடிந்தது. அக்கண்டத்தை ஆராய்ந்து கண்டவர்களில் டேவிட் லிவிங்ஸ்டன் என்னும் ஸ்காட்லாந்தைச் சேர்ந்த பாதிரி தலைசிறந்தவர். பல வருஷங்கள் வரையில் ஆப்பிரிக்காவின் உதரத்தில் புகுந்த அவரைப் பற்றிய செய்தி ஒன்றும் வெளி உலகத்துக்கு எட்டவில்லை. லிவிங்ஸ்டன் பெயரை நினைக்கும் போது ஹென்ரி ஸ்டான்லி என்னும் பத்திரிகைக்காரர் ஒருவருடைய பெயரும் நினைவுக்கு வருகிறது. அவரும் அதே தொண்டில் ஈடுபட்டார். அவர் லிவிங்ஸ்டனைத் தேடிக்கொண்டு போய்க் கடைசியில் ஆப்பிரிக்காவின் குட்சியில் அவரைக் கண்டுபிடித்தார்.

142

துருக்கி 'ஐரோப்பாவின் நோயாளி' யாக மாறுகிறது

மார்ச்சு 14, 1933.

எகிப்திலிருந்து துருக்கிக்குப் போவோம். மத்திய தரைக் கடலைக் கடந்து நாம் ஒரு தாண்டில் அங்கே சென்றுவிடலாம். எகிப்துக்குப் பின் துருக்கியைக் கவனிப்பது முறையாகவும் இருக்கும். 19-வது நூற்றாண்டில் ஐரோப்பாவில் உதுமானியத் துருக்கியரின் சாம்ராஜ்யம் சிறிது சிறிதாகக் கரைந்து வருவதை நாம் காண்கிறோம். இந்த வீழ்ச்சி 18-வது நூற்றாண்டிலேயே ஆரம்பமாகிவிட்டது. துருக்கியர் வியன்னா நகரை முற்றுகையிட்ட வரலாறும், சில காலம் வரையில் ஐரோப்பாவே அவர்களைக் கண்டு அஞ்சி நடுங்கிய விதமும் உனக்கு நினைவிருக்கலாம். கிறிஸ்தவ நாடுகள் புரிந்துள்ள பாவங்களுக்காக அவற்றைத் தண்டிப்பதற்குக் கடவுளால் அனுப்பப்பட்ட 'தண்டனைக்கருவி' என்றே துருக்கியரைத் தெய்வ பக்தியுள்ள மேற்கு ஐரோப்பியக் கிறிஸ்தவர்கள் மதித்தார்கள். ஆனால், வியன்னாவிலிருந்து துருக்கியர் இறுதியாக விரட்டியடிக்கப்பட்டபின் அவர்களுடைய பாக்கியச் சக்கரம் கீழே போக ஆரம்பித்தது. அதிலிருந்து அவர்கள் ஐரோப்பாவில் பிறரிடமிருந்து தங்களைக் காத்துக்கொள்ள வேண்டியவர்களாகி விட்டார்கள். துருக்கியர் தென் கீழ் ஐரோப்பாவில் பல தேசத்தவர்களை அடக்கி ஆண்டு வந்தார்கள். அவர்கள் அத்தனை பேரும் இப்போது சங்கடம் விளைக்க ஆரம்பித்தார்கள். அவர்களைத் துருக்கியர் தங்களுடன் இயைத்துக் கொள்ள யாதொரு முயற்சியும் செய்யவில்லை. அவ்வாறு முயற்சித்திருந்தாலும்

அது வெற்றி பெற்றிருக்கும் என்று சொல்வதற்கில்லை. ஏனெனில் தேசிய உணர்ச்சியானது துருக்கியரின் கொடுங்கோலாட்சிக்கு மாறுபட்டு நின்றது. வட கிழக்கில் ஜார் ஆட்சியின் கீழ் ருஷியா பிரம்மாண்டமாக வளர்ந்து வந்தது. அது எப்போதும் துருக்கிய சாம்ராஜ்யத்தை நெருக்கியபடி இருந்தது. அது துருக்கியின்பால் வாழையடி வாழையாக வைரத்தை வளர்த்து வந்தது. ருஷிய ஜார் துருக்கி சுல்தானுடன் 200 ஆண்டுகள் ஓயாமல் போராடினார். கடைசியில் ஜார் சுல்தான் இரண்டுபேரும் ஏறக்குறைய ஒன்றாகவே இவ்வுலகினின்றும் மறைந்தொழிந்தார்கள். அவர்களுடன் அவர்களுடைய சாம்ராஜ்யங்களும் ஒழிந்தன.

சாம்ராஜ்யங்களின் காலக்கணக்கை நோக்குமிடத்து உதுமானிய சாம்ராஜ்யத்துக்கு ஆயுள்பாவம் மிகவும் நன்றாயிருந்ததென்றே சொல்ல வேண்டும். சின்ன ஆசியாவில் நெடுங்காலம் இருந்தபிறகு 1361-ல் அது ஐரோப்பாவில் ஸ்தாபிதம் ஆயிற்று. 1453-வரையில் கான்ஸ்டாண்டிநோபிளைத் துருக்கியர் ஜெயிக்கவில்லையாயினும் அதைச் சூழ்ந்திருந்த பிரதேசமெல்லாம் அதற்கு நெடுங்காலத்துக்கு முன்பே அவர்களுடைய வசமாகிவிட்டது. மேற்கு ஆசியாவில் திடீரென்று முளைத்த தைமூரிடம் துருக்கி சுல்தான் 1402-ல் அங்கோராவில் படுதோல்வி அடைந்த காரணத்தால் கான்ஸ்டாண்டிநோபிள் துருக்கியரிடம் சிக்குவது சிறிது காலம் தடைப்பட்டிருந்தது. ஆனால், துருக்கியர் அத்தோல்வியிலிருந்து விரைவில் சமாளித்துக் கொண்டார்கள். 1361-ல் தோன்றிய உதுமானிய சாம்ராஜ்யம் நம் காலத்தில்தான் முடிவடைந்தது. அதாவது, ஐந்தரை நூற்றாண்டுகளுக்குமேல் அது ஜீவித்திருந்தது. இதைத் தீர்க்காயுசு என்றுதான் சொல்லவேண்டும்.

ஆயினும், இடைக்காலக் கழிவுக்குப்பின் ஐரோப்பாவில் தோன்றி வளர்ந்த புதுநிலைமைகளுடன் துருக்கியர் ஒட்டவே இல்லை. வியாபாரமும் வர்த்தகமும் வளர்ந்தன. ஐரோப்பிய நகரங்களில் பெரிய அளவில் பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டு வந்தன. இவையெல்லாம் துருக்கியருக்குக் கவர்ச்சி அளிக்கவில்லை. அவர்கள் போர்புரிவதில் அசகாய சூரர்கள்; மகா கண்டிப்புக்காரர்களுங்கூட. போர்களுக்கிடையில் ஒழிவு கிடைக்கும்போது சற்று விலாசமாகவும் இருப்பார்கள். ஆனால், அவர்களை யாராவது சீண்டிவிட்டால்போதும், அப்புறம் அவர்களுடைய வெம்மைக்கும் கடுமைக்கும் எல்லை சொல்லமுடியாது. அவர்கள் நகரங்களில் குடியேறி, அவற்றை அழகிய மாடமாளிகைகளால் அணி பெறச்செய்தாலும், அவர்களுடைய பழைய நாடோடி சுபாவம் அவர்களைவிட்டு அறவே நீங்கிவிடவில்லை. அதை அனுசரித்தே அவர்கள் தங்களுடைய வாழ்க்கையை நடத்திவந்தார்கள். ஒருவேளை அத்தகைய வாழ்க்கை முறை அவர்களுடைய ஆதித் தாயகத்துக்கு மிகவும் ஏற்றதாக இருந்திருக்கலாம். ஆனால், அது ஐரோப்பாவிலோ சின்னஆசியாவிலோ உள்ள புது நிலைமைகளோடு சற்றும் பொருந்தவில்லை. புதிய நிலைமைகளுக்கு ஏற்பத் தங்களை மாற்றி அமைத்துக்கொள்ளத் துருக்கியர் மறுத்துவிட்டார்கள். ஆகவே, துருக்கியரின் பழைய முறையும் ஐரோப்பாவின் புதுமுறையும் ஒன்றையொன்று இடைவிடாது மோதிவந்தன.

உதுமானிய சாம்ராஜ்யம் ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா ஆகிய மூன்று கண்டங்களையும் இணைத்து நின்றது. கிழக்குக்கும் மேற்குக்கும் இடையே சென்ற பழைய வியாபார மார்க்கங்களெல்லாம் அதனூடுதான் சென்றன. துருக்கியருக்கு வியாபாரத்தில் விருப்பமும் அதற்குரிய திறமையும் இருந்திருக்குமாயின், அவர்கள் இந்தச் சாதகமான நிலையைப் பயன்படுத்திக் கொண்டு ஒரு பெரிய வியாபார நாட்டினர் ஆகியிருப்பார்கள். ஆனால், அவர்களுக்கு அத்தகைய விருப்பமோ திறமையோ இல்லை. அதற்கு மாறாக அவர்கள் அவ்வியாபாரத்தை வளர ஒட்டாமல் தடுக்க ஆரம்பித்தார்கள். அதனால் பிறர் லாபம் அடைவது அவர்களுக்குப் பொறுக்கவில்லைப் போலும். அவர்கள் பழைய வியாபார மார்க்கங்களை அடைத்து விட்டார்கள். கடலோடிகளும் வியாபாரிகளுமான ஐரோப்பிய நாட்டினர் கிழக்கே செல்வதற்கு வேறு மார்க்கங்களைத் தேடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதற்குத் துருக்கியருடைய அச் செய்கை ஒரு காரணமாகும். அதன் பயனாக மேற்கே கொலம்பசும், கிழக்கே டயசும் வாஸ்கோடகாமாவும் புதிய மார்க்கங்கள் கண்டு பிடித்தார்கள். ஆனால், இஃதொன்றையும் துருக்கியர் லட்சியம் செய்யவில்லை. அவர்கள் வெறும் ராணுவத் திறமையினாலும் கட்டுப்பாட்டினாலுமே தங்கள் சாம்ராஜ்யத்தை ஆண்டு வந்தார்கள். அதன் முடிவு என்னவென்றால் அவர்களுடைய சாம்ராஜ்யத்தில் அடங்கிய ஐரோப்பிய நாடுகளின் வியாபார முயற்சிகளும் செல்வ உற்பத்தி முயற்சிகளும் சிறிது சிறிதாக மங்கித் தேய்ந்து விட்டன.

வகுப்பு, மத வேற்றுமையும் இதற்கொரு காரணமாயிருந்தது. துருக்கியரும் பால்கன் நாடுகளில் வாழ்ந்த கிறிஸ்தவர்களும் சிலுவைப் போர்கள் காலத்திருந்தும் அதற்கு முன்பிருந்தும் தீராத மதப்பகையைப் பிரார்ஜிதமாகப் பெற்றிருந்தார்கள். பழைய மதப்பகை என்னும் நெருப்புடன் புதிய தேசியம் என்னும் காற்றும் சேர்ந்து கொண்டது. அதன் பலனாக இருதிறத்தாரும் இடைவிடாது தம்முள் இகலி நின்றார்கள். உதுமானிய

சாம்ராஜ்யத்தில் அடங்கிய ஐரோப்பிய நாடுகளின் சீரழிவிற்கு ஒரு உதாரணம்: கிரீசின் கீர்த்தி வாய்ந்த புராதன நகரம் ஏதென்சு. கிரீஸ் 1829-ல் துருக்கிய சாம்ராஜ்யத்திலிருந்து விடுதலை பெற்ற காலையில் ஏதென்சானது 2000 பேர் மட்டும் கொண்ட ஒரு கிராமமாக இருந்தது. (இன்றைய தினம், நூறு ஆண்டுகளுக்குப் பிறகு, அதன் ஜனத்தொகை ஐந்து லட்சமாக இருக்கிறது.)

சாம்ராஜ்யத்தின் வியாபார, செல்வ உற்பத்தி முயற்சி குன்றியதானது கடைசியில், துருக்கி சுல்தான்களுக்கே கெடுதலாக முடிந்தது. சாம்ராஜ்யத்தின் அங்கங்கள் இளைத்து வாடவே அதன் இருதயமும் பலவீனமடையத் தலைப்பட்டது. இத்தனை போராட்டங்களுக்கும் ஈதி பாதைகளுக்கும் இடையில் அது அத்தனை காலம் உயிர் வாழ்ந்ததுதான் நமக்கு ஆச்சரியத்தைத் தருகிறது.

பல நூறு வருஷங்களாகவே உதுமானிய சுல்தான்களுக்கு 'ஜானிசாரி'ப் படை என்னும் கிருஸ்தவ அடிமைகளைக் கொண்ட துருக்கிப் படையே முக்கியப் பலமாக இருந்து வந்தது. சிறு பிராயத்திலிருந்தே அதி ஜாக்கிரதையாகப் பயிற்றுவிக்கப்பட்டவர்களே அப்படையில் இருந்தார்கள். இவர்களை எண்ணும்போது நமக்கு எகிப்திய மாமலூகியரின் ஞாபகம் வருகிறது. ஆனால், இவ்விருதிறத்தாருக்கும் வேற்றுமை உண்டு. 'ஜானிசாரி'கள் துருக்கிய சேனையின் மிகச் சிறந்த அங்கமாக விளங்கினாலும் எகிப்திய மாமலூகியரைப் போல அரசுரிமை வகிக்கவில்லை. அவர்கள் மாமலூகியரைப் போலத் தலைமுறை தத்துவமாக வரும் ஒரு ஜாதியாகவும் மாறவில்லை. அடிமைகள் என்ற முறையில் அவர்கள் அரசாங்கத்தின் செல்லப் பிள்ளைகளாக

விளங்கினார்கள். உயர்ந்த பதவிகளும் உத்தியோகங்களும் அவர்களுக்கென்று ஒதுக்கி வைக்கப்பட்டன. அவர்களுடைய பிள்ளைகளோ சுதந்திரம் பெற்ற முஸ்லிம்கள் ஆனார்கள். ஆகவே, அவர்கள் அடிமைகளுக்கென்று ஒதுக்கப்பட்ட படையில் அதிக நாள் இருக்க முடியாதல்லவா? எப்போதும் புதிய வெள்ளைக்காரக் கிறிஸ்தவ அடிமைகளிலிருந்தே 'ஜானிசாரி'ப் படைக்கு ஆள்சேர்க்கப்பட்டு வந்தது. இவையெல்லாம் உனக்கு மிகவும் அசாதாரணமாகப் படுகிறதல்லவா? ஆனால், 'அடிமை' என்னும் பதம் இப்போது நாம் கொள்ளும் பொருளில் அக்காலத்தில் இஸ்லாமிய நாடுகளில் வழங்கவில்லை என்பதை நீ நினைவில் வைக்கவேண்டும். அடிமைகள் என்போர் அநேகமாகப் பெயரளவிலும் சட்டரீதியாகவுமே அடிமைகளாயிருந்தார்கள். அவர்கள் மிகவும் உயர்ந்த பதவிகளையெல்லாம் கூட வகித்தார்கள். இந்தியாவில் டில்லி சிம்மாசனத்தில் வீற்றிருந்த அடிமை அரசர்களை நீ மறந்திருக்க மாட்டாய். எகிப்தை ஆண்ட சலாதீனும் ஆதியில் ஒரு அடிமையே. அரசாளும் வகுப்பு தன் கடமையைத் திறம்பட நிறைவேற்ற வேண்டுமாயின் அதற்குப் பூரணமான பயிற்சி அவசியம் என்று துருக்கியர் கருதியதாகத் தெரிகிறது. குழந்தைப் பருவத்திலிருந்து அளிக்கப்படும் பயிற்சியே பயனுள்ளதாகுமென்று எந்த ஆசிரியனும் சொல்லுவான். இவ்வுண்மையைத் துருக்கியர் நன்கு உணர்ந்திருந்தார்கள். அவர்கள் தங்களுடைய முஸ்லிம் பிரஜைகளிடமிருந்து அவர்களுடைய குழந்தைகளை அடியோடு பிரிப்பதோ அன்றி அக் குழந்தைகளை அடிமைகள் ஆக்குவதோ அவ்வளவு எளிதில்லை என்று கண்டார்கள். ஆகவே, அவர்கள் சிறு சிறு கிறிஸ்தவப் பையன்களைக் கொண்டு வந்து அவர்களைச் சுல்தானுடைய அடிமை விடுதியில் சேர்த்து அவர்களுக்குக் கடுமையான பயிற்சி

அளித்தார்கள். அக்கிறிஸ்தவப் பையன்கள் வளர்ந்ததும் முஸ்லிம்கள் ஆகிவந்தார்கள்.

சுல்தான்கள் விஷயத்திலும் இதேமுறை அனுஷ்டிக்கப்பட்டது. எல்லாரையும் போல் சுல்தான்கள் மணம்புரிந்து கொள்ளவில்லை. அடிமைப் பெண்களில் சிறந்தவர்களைத் தேர்ந்தெடுத்துச் சுல்தான் அரண்மனைக்கு அனுப்புவார்கள். அவர்களே சுல்தானின் மனைவியர் ஆவர். அவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகளே பட்டத்துக்கு வருவார்கள். இவ்வாறு, 18-வது நூற்றாண்டின் ஆரம்பம் வரையில் அடிமைத் தாய்மார்களுக்குப் பிறந்தவர்களே உதுமானிய சுல்தான்களாக விளங்கினார்கள். அடிமை விடுதியைச்சேர்ந்த மற்றவர்களைப் போலவே அவர்களும் கடுமையான பயிற்சிக்கும் சட்டதிட்டங்களுக்கும் உட்பட்டே வளர்ந்து வந்தார்கள்.

அடிமைகளை அதி ஜாக்கிரதையாகத் தேர்ந்தெடுப்பதிலும், சுல்தான் பதவியிலிருந்து தொடங்கி எல்லா ஸ்தானங்களுக்கும் உரிய கட்டுப்பாட்டோடு கூடிய பயிற்சியை அவரவர்க்கு அளிப்பதிலும் ஓரளவு விஞ்ஞான விசேஷம் இல்லாமலில்லை. அதனால் சில குறிப்பிட்ட துறைகளில் ஓரளவு திறமை காணப்பட்டது. மேலும் மேலும் புதிய அடிமைகள் வந்துசேர்ந்து கொண்டிருந்தபடியால் புதிய ரத்தக்கலப்பு இடைவிடாது ஏற்பட்டுவந்தது. அதனால் பரம்பரையான ஆளும் வகுப்பு ஒன்று ஏற்பட வழியில்லாது போய்விட்டது. உதுமானிய சாம்ராஜ்யத்தின் ஆதி பலத்துக்கு ஒருவேளை இம்முறை காரணமாக இருந்திருக்கலாம். ஆனால், ஆசிய, ஐரோப்பிய நிலைமைகளோடு அது ஒரு சிறிதும் பொருந்தவில்லை. அது ஐரோப்பிய நிலமானிய முறையினின்று முற்றிலும் வேறுபட்டிருந்தது. நிலமானிய முறையின் இடத்தில் ஐரோப்பாவில் தோன்றிவந்த புது

முறையினின்று அது இன்னும் அதிகமாகவே வேறுபட்டிருந்தது. அத்தகைய ஒரு முறையின் கீழ், வியாபார விருத்திக்கும் இடமில்லாத நிலையில், மத்திய வகுப்பு என ஒன்று வளர்ச்சி அடைவதற்கு வழி இல்லை. 16-வது நூற்றாண்டின் பிற்பாதிக்குப் பின்னர் அம்முறை தன்னுடைய ஆதித்தூய்மையை இழந்துவிட்டது. அப்போது அடிமை விடுதியில் பாரம்பரிய முறை ஆரம்பமாயிற்று. அதைச்சேர்ந்த அடிமைகளின் பிள்ளைகள் அதில் இருந்து கொண்டே தங்கள் தகப்பன்மார்களின் தொழில்களில் ஈடுபட்டார்கள். இன்னும் வேறு பல வழிகளிலும் அம்முறையின் கடுமை சிறிது சிறிதாகத் தளர்ந்து வந்தது. ஆயினும் பழைய அடிப்படை மாறவில்லை. அதன் பயனாகத் துருக்கி பல நூற்றாண்டுகளாக ஐரோப்பாவிலேயே இருந்து அதனுடன் நெருங்கிய தொடர்பு பூண்டிருந்தும் ஐரோப்பாவினின்று முற்றிலும் மாறுபட்டதாகவும் அதற்கு அந்நியமானதாகவும் இருந்து வந்தது. துருக்கியிலேயே அந்நிய சமூகத்தினர் தங்களுடைய சொந்தச் சட்டங்களின் கீழ்த் தனியாக வாழ்ந்துவந்தனர்.

இந்த விசித்திரமான பழைய துருக்கிய முறை உலகில் வேறெங்கும் காணப்படாத ஒன்றாகும். உதுமானிய சாம்ராஜ்யத்தை உருவாக்க உதவியது அதுவே. அதனால்தான் அதைப்பற்றிச் சற்று விரிவாகக் கூறினேன். அது இப்போது வழக்கில் இல்லை என்பது வாஸ்தவமே. இப்போது வெறும் சரித்திரச் செய்தியாகிவிட்டது.

துருக்கியின் கடந்த 200 ஆண்டுச் சரித்திரத்தைப் பார்த்தால் அது ருஷியாவின் இடைவிடாத முன்னேற்றத்தையும், தனக்கு அடங்கிய நாடுகளின் கலகத்தையும் எதிர்த்துப் போராடி வந்திருப்பது தெரியவரும். கிரீஸ், ருமேனியா, செர்பியா, பல்கேரியா, மாண்டிநிக்ரோ,

பாஸ்னியா ஆகிய இவ்வனைத்தும் உதுமானிய சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த பால்கன் நாடுகளாகும். 1829-ல் இங்கிலாந்து, பிரான்சு, ருஷியா இவற்றின் உதவியுடன் கிரீஸ் மட்டும் அந்தச் சாம்ராஜ்யத்திலிருந்து பிரிந்து விட்டதை நாம் கண்டோம். ருஷியா ஒரு ஸ்லாவ் நாடாகும். பால்கன் நாடுகளான பல்கேரியாவும் செர்பியாவும் ஸ்லாவ் நாடுகளே. ஜாரின் ஆட்சிக்குட்பட்ட ருஷியாவானது பால்கன் நாடுகளிலுள்ள ஸ்லாவியரைக் காக்கப் பாடுபடுவது போல் காட்டிக்கொண்டது. உண்மை என்னவென்றால் ருஷியாவுக்குக் கான்ஸ்டாண்டிநோபிள் மீது கண். பைஜாண்டியச் சக்கரவர்த்திகளின் வாரிசாகத் தன்னைக் கருதிய ஜார் அந்தப் புராதன சாம்ராஜ்யத் தலைநகராகிய கான்ஸ்டாண்டிநோபிளை எப்படியாவது கவர்ந்து கொள்ளவேண்டும் என்று விரும்பினார். ருஷியாவின் ராஜதந்திர முழுவதும் அதையே குறியாகக் கொண்டிருந்தது. 1730-ல் தொடங்கிய ருஷியா-துருக்கிப் போர்கள் 1768, 1792, 1807, 1828, 1853, 1877, கடைசியாக 1914 ஆகிய ஆண்டுகளில் தொடர்ந்து நடைபெற்றன. அப்போர்களுக்கு இடைப்பட்ட காலங்களில் சமாதானம் நிலவியது. 1774-ல் ருஷியா துருக்கியிடமிருந்து கிரைமியாவைப் பறித்துக் கொண்டது. அதனால் அது கருங்கடலை உபயோகிப்பது சாத்தியமாயிற்று. ஆனால், அதன் மூலம் ருஷியாவுக்கு அதிக நன்மை ஒன்றும் இல்லை. ஏனெனில், கருங்கடலின் வாய் மிகவும் குறுகியது; அந்த வாயில் கான்ஸ்டாண்டிநோபிள் உட்கார்ந்து கொண்டிருந்தது. 1792-லும் 1807-லும் ருஷிய எல்லை கான்ஸ்டாண்டிநோபிளை நோக்கி விரிந்தும், துருக்கிய எல்லை சுருங்கியும் வந்தன. கிரேக்க சுதந்திர யுத்தத்தைச் சமாளிப்பதில் துருக்கி ஈடுபட்டிருந்த சமயமாகப் பார்த்து ருஷிய ஜார் அதைத்

தாக்கினார். அவர் கான்ஸ்டாண்டிநோபிளைக் கைப்பற்றியும் இருப்பார். ஆனால், இங்கிலாந்தும் ஆஸ்திரியாவும் தலையிட்டு அவருடைய எண்ணத்தின் வாயில் மண்ணைப் போட்டன.

துருக்கியை ருஷியாவிடமிருந்து இங்கிலாந்தும் ஆஸ்திரியாவும் ஏன் காப்பாற்றின? அதற்குத் துருக்கியின் மீது கொண்ட காதல் காரணமா? இல்லை, ருஷியாவிடம் அவை கொண்டிருந்த அச்சமும் பகையுமே அதற்குக் காரணம். ஆசியாவிலும் பிற இடங்களிலும் இங்கிலாந்துக்கும் ருஷியாவுக்கும் இடையில் வழி வழியாக வந்து கொண்டிருக்கும் பழம் பகைமையைப்பற்றி முன்னமே கூறியிருக்கிறேன். முக்கியமாக இந்தியாவை அடைந்திருப்பதன் காரணமாகப் பிரிட்டிஷார் ருஷிய எல்லைக்கு வெகு அருகில் வந்திருந்தார்கள். ருஷியா இந்தியாவை என்ன செய்யுமோ ஏது செய்யுமோ என்று அவர்களுக்கு எப்போதுமே உள்ளூற ஒரு உதைப்பு இருந்துவந்தது. ஆகவே, சமயம் வாய்க்கும் போதெல்லாம் ருஷியாவுக்கு இடையூறு விளைத்து அதன் பலம் பெருக ஒட்டாமல் பார்த்துக் கொள்வதென்பது பிரிட்டிஷ் கொள்கையாயிற்று. மத்தியதரைக் கடலில் கான்ஸ்டாண்டிநோபிள் ஒரு நல்ல துறைமுகம். அது ருஷியாவுக்குக் கிடைத்துவிட்டால் இந்தியாவுக்குப் போகும் மார்க்கத்துக் கருகில் நல்ல கடற்படை ஒன்றை வைத்துக்கொள்வது அதற்குச் சாத்தியமாகிவிடும். இது அபாயத்துக் கிடமான ஒரு நிலைமை. இதை உத்தேசித்துத்தான் ருஷியா துருக்கி மீது பாயும்போதெல்லாம் இங்கிலாந்து அதைத் தடுத்து வந்தது. ருஷியாவை மட்டந் தட்டுவதில் ஆஸ்திரியாவும் அக்கறை கொண்டிருந்தது. இப்போது ஆஸ்திரியா ஒரு சிறு நாடாக இருக்கிறது. சில வருஷங்களுக்கு முன்னால் அது ஒரு பெரிய சாம்ராஜ்யமாக இருந்தது. துருக்கிய

சாம்ராஜ்யம் சீர்குலைந்தால் தனக்குப் பக்கத்திலுள்ள பால்கன் பிரதேசத்தில் பெரும் பகுதியைத் தான் கபளீகரம் செய்துவிடலாம் என்று அது ஆசை கொண்டிருந்தது. ஆகவே, ருஷியாவை ஒரு அடி எட்டவே வைத்திருப்பதில் அதுவும் அக்கறை கொண்டிருந்தது.

ஏழைத் துருக்கியின் நிலை மிகவும் பரிதபிக்கத்தக்கதாயிருந்தது. அதற்கு ஏதாவது நேர்ந்தவுடன் அதன் மீது விழுந்து பிடுங்குவதற்குப் பக்கத்திலேயே பலம் பொருந்திய நாடுகள் காத்துக் கொண்டிருந்தன. 1853-ம் ஆண்டில் ருஷிய ஜார் துருக்கியைப்பற்றிப் பிரிட்டிஷ் தூதரிடம் பின் வருமாறு கூறினாராம்: "நாம் ஒரு நோயாளியை மடியில் வைத்துக்கொண்டிருக்கிறோம். அவனுக்கு நோய் முற்றிவிட்டது. இனி அவன் தேறுவது கஷ்டம். திடீரென்று அவன் நம் மடியிலேயே இறந்தாலும் இறந்துவிடலாம்." அவர் துருக்கியைப் பற்றிச் சொன்ன சொல் பிரபலமடைந்தது. அதிலிருந்து துருக்கி "ஐரோப்பாவின் நோயாளி" ஆயிற்று. ஆனால், எதிர்பார்த்தபடி அந்நோயாளி விரைவில் மரணமடையவில்லை. நெடுங்காலம் இழுத்துப் பறித்துக்கொண்டிருந்த பின்பே அவன் பிராணனை விட்டான்!

1853-ம் ஆண்டிலேயே அவனைக் கொல்வதற்கு ருஷிய ஜார் இன்னொரு முயற்சி செய்தார். அதன் பலன் தான் கிரைமிய யுத்தம். அந்த யுத்தத்தில் இங்கிலாந்தும் பிரான்சும் ருஷியாவுக்குக் குறுக்கே நின்றன. 1877-ல் மீண்டும் ருஷியா துருக்கியைத் தாக்கித் தோற்கடித்தது. ஆனால், அந்நிய நாடுகள் மீண்டும் குறுக்கிட்டுத் துருக்கியை ஓரளவு காப்பாற்றின. எப்படியும் கான்ஸ்டாண்டிநோபிள் ருஷியாவுக்குக் கிடைக்கவில்லை. 1878-ல் துருக்கியின் தலைவிதியை நிர்ணயிப்பதற்காகப் பர்லினில் ஒரு பெரிய சர்வ தேசிய மகாநாடு நடை-

பெற்றது. பிஸ்மார்க், டிஸ்ரேலி போன்ற தலை சிறந்த ஐரோப்பிய அரசியல் தந்திரிகள் பலர் அதில் கலந்து கொண்டார்கள். அவர்கள் ஒருவரையொருவர் அச்சுறுத்தியும் ஒருவர் மற்றவருக்கு எதிராகச் சூழ்ச்சி புரிந்தும் வந்தார்கள். இங்கிலாந்துக்கும் ருஷியாவுக்கும் சண்டை மாட்டிக்கொள்ளும் போலிருந்தது. ஆனால், ருஷியா விட்டுக் கொடுத்ததால் அது தவிர்க்கப்பட்டது. பர்லின் உடன்படிக்கையின் பயனாக பால்கன் நாடுகளான பல்கேரியா, செர்பியா, ருமேனியா, மாண்டிநிக்ரோ ஆகியவை சுதந்திரம் பெற்றன. ஆஸ்திரியா பாஸ்னியாவையும் ஹர்ஜகோவினாவையும் கைப்பற்றிக்கொண்டது. (ஆனால், அவை பெயரளவில் துருக்கியின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தன.) ஓரளவு துருக்கியின் பட்சத்தில் இருந்ததற்காகப் பிரிட்டனுக்கு ஏதாவது 'கமிஷன்' வேண்டாமா? அதற்காக அது துருக்கியிடமிருந்து சைப்ரஸ் தீவை எடுத்துக்கொண்டது.

அடுத்த ருஷிய-துருக்கி யுத்தம் முப்பத்தாறு ஆண்டுகளுக்குப் பின் 1914-ல் மகாயுத்தத்தின் ஓர் அங்கமாக நிகழ்ந்தது.

இதற்கிடையில் துருக்கியில் பெரு மாறுதல்கள் நிகழ்ந்து வந்தன. 1774-ல் ருஷியாவிடம் அடைந்த படு தோல்விதான் முதன் முதலாகத் துருக்கியருக்குப் பேரதிர்ச்சியை அளித்தது. ஐரோப்பாவின் இதரப் பாகங்கள் விரைவில் முன்னேறுவதையும், தாங்கள் பின்னால் விடப்படுவதையும் அவர்கள் அப்பொழுது நன்கு உணர்ந்தார்கள். அவர்கள் போர்க்குணம் படைத்தவர்களாதலால் தங்கள் சேனையை நவீன முறையில் அமைக்க வேண்டும் என்கிற விஷயந்தான் அவர்களுடைய புத்தியில் முதன் முதலாகப்பட்டது. அவ்வாறே துருக்கிய சேனை ஓரளவுக்குத் திருத்தி அமைக்கப்

பட்டது. புதிய ராணுவ உத்தியோகஸ்தர்கள் மூலமாகத் தான் மேனாட்டுக் கருத்துகள் துருக்கியில் நுழையத் தொடங்கின. மத்திய வகுப்பு என ஒன்று அங்கில்லை என்கிற விஷயம் முன்பே கூறியிருக்கிறேன். வேறு கட்டுப்பாடான வகுப்பும் அங்கு இல்லை. 1853–6-ல் நடந்த கிரைமிய யுத்தத்துக்குப் பின் துருக்கி மேனாட்டு மயமாவதற்கு உண்மையாக முயற்சி செய்தது. துருக்கிக்குச் சட்டரீதியான அரசாங்கம் வேண்டும் என்று ஒரு இயக்கம் தோன்றி விருத்தி அடைந்தது. அவ்வியக்கம் சுல்தானின் யதேச்சாதிகார ஆட்சிக்குப் பதில் ஜனநாயக சட்டசபையின் ஆட்சியை ஏற்படுத்த விரும்பியது. மிதத்பாஷா என்பவர் அவ்வியக்கத்தைத் தலைமை வகித்து நடத்தினார். ஒரு அரசியல் அமைப்பைக் கோரி 1876-ல் கான்ஸ்டாண்டிநோபிளில் கலகங்கள் நிகழ்ந்தன. சுல்தான் அவ்வாறே ஒரு அரசியல் அமைப்பை அளித்தார். ஆனால், உடனே பல்கேரியாவில் ஒரு கலகமும், ருஷியாவுடன் ஒரு யுத்தமும் நேர்ந்தபடியால், அவர் அதை அமுலுக்குக் கொண்டுவர வில்லை. யுத்தத்திற்காகவும், அடிப்படையான பொருளியல் மாறுதல் ஒன்றும் செய்யாமல் மேல் நிலையில் மட்டும் செய்யப்பட்ட சில சீர்திருத்தங்களுக்காகவும் துருக்கி ஏராளமாகச் செலவு செய்ய வேண்டியதாயிற்று. அவ்வளவு செலவுக்கும் அதனிடம் பணம் இல்லை. ஆகவே, அது மேனாட்டுப் பண முதலாளிகளிடம் கடன் வாங்கத் தலைப்பட்டது. கடன் கொடுத்தவர்கள் துருக்கியின் வருமானத்தில் ஒரு பகுதியைத் தங்கள் வசப்படுத்திக் கொண்டார்கள். ஆக, துருக்கி மேனாட்டு மயமாவதற்கும், சீர்திருத்தம் அடைவதற்கும் செய்த முயற்சி வெற்றி பெறவில்லை. அம் முயற்சிக்கும் பழைய சாம்ராஜ்யக் கட்டுக்கோப்புக்கும் பொருந்தவில்லை.

20-வது நூற்றாண்டின் தொடக்கத்தில் அரசியல் அமைப்புக்கான கோரிக்கை வலுப்பெற்றது. முன்போலவே ராணுவ உத்தியோகஸ்தர்கள்தான் கட்டுப்பாடு வாய்ந்தவர்களாக இருந்தார்கள். புதிய கட்சியான ‘துருக்கிய இளைஞர் கட்சி’ அவர்களிடையில் தான் விரைவில் பரவியது. “ஐக்கிய முன்னேற்றக் கமிட்டிகள்” தோன்றி இரகசியத்தில் வேலை செய்ய ஆரம்பித்தன. 1908-ல் அவை சேனையின் பெரும் பகுதியைத் தம் வசப்படுத்திக் கொண்டு சுல்தானை நிர்ப்பந்தப் படுத்தி மீண்டும் 1876-ம் ஆண்டு அரசியல் அமைப்பை அமுலுக்குக் கொண்டு வரச் செய்தன. நாடு முழுவதும் களிப்புக் கடலில் ஆழ்ந்தது. அது வரையில் ஒருவரை யொருவர் கழுத்தை வெட்டிக்கொண் டிருந்த துருக்கியரும் அர்மீனியரும் இப்போது ஒருவர் கழுத்தை மற்றவர் கட்டிக் கொண்டு ஆனந்தக் கண்ணீர் உகுத்தனர். புதுயுகம் பூத்து விட்டது. இனி எல்லோரும் சரிநிகர் சமானமாக வாழலாம், அடிமைப்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கும் பூரண உரிமை உண்டு என்று அவர்கள் மகிழ்ச்சி கொண்டாடினார்கள். ரத்தம் சிந்தாமல் நடைபெற்ற இப்புரட்சிக்குத் தலைவன் அன்வர் பேக் என்பவன். அன்வர் பேக் அழகன்; அத்துடன் வீணன்; ஆனால், அஞ்சாநெஞ்சம் படைத்தவன். பிற்காலத்தில் துருக்கியின் ரட்சகன் என்று பேர்பெற்ற முஸ்தபா கமாலும் துருக்கிய இளைஞர் கட்சியின் முக்கியத் தலைவர்களுள் ஒருவனாயிருந்தான். ஆனால், அன்வரைப் போல் கமால் முன்னணியில் இல்லை. இருவரும் ஒருவரை யொருவர் மனமார வெறுத்தார்கள்.

துருக்கிய இளைஞர் கட்சிக்குப் பல கஷ்டங்கள் நேர்ந்தன. சுல்தான் அதற்குத் தொந்திரவு கொடுத்தான். சில கொலைகளும் நிகழ்ந்தன. அந்தச் சுல்தானைத்

தள்ளிவிட்டு இன்னொருவனைச் சுல்தானாக நியமித்தார்கள். பொருளியல் துறையில் கஷ்டங்கள்; அந்நிய நாடுகளைப் பொறுத்த விவகாரங்களில் கஷ்டங்கள். இப்படியாகத் துருக்கியின் நிலைமை ஒரே குழப்பமாயிருந்தது. அதைப் பயன்படுத்திக் கொண்டு ஆஸ்திரியாவானது பாஸ்னியாவையும் ஹர்ஜகோவினாவையும் தன்னுடன் இணைத்துக் கொண்டது. (1878-ல் பர்லின் உடன்படிக்கைக்குப் பின்னர் அது அவ்விடங்களைக் கைப்பற்றிக் கொண்ட விஷயம் முன்பே கூறப்பட்டது.) வட ஆப்பிரிக்காவில் துருக்கிக்குச் சொந்தமான திரிபோலியை இதாலி கைப்பற்றிக் கொண்டு துருக்கிமீது போர்ப் பிரகடனமும் செய்தது. துருக்கிக்குச் சரியான கடற்படை கிடையாது. ஆகவே, ஒன்றும் செய்ய முடியாத நிலையில், அது இதாலியின் கோரிக்கைகளுக்கு இணங்க வேண்டியதாயிற்று. அதை அடுத்து இன்னொரு புதிய அபாயம் அதற்குச் சமீபத்திலேயே காத்துக் கொண்டிருந்தது. பல்கேரியா, செர்பியா, கிரீஸ், மாண்டிநிக்ரோ ஆகிய நாடுகள் துருக்கியை ஐரோப்பாவிலிருந்து துரத்திவிட்டு அகப்பட்டதைப் பங்கு போட்டுக் கொள்ள எண்ணங்கொண்டிருந்தன. அதற்கு இதுதான் தக்க சமயம் என்று கண்ட அவை 'பால்கன் கூட்டுறவு' ஒன்றை அமைத்துக்கொண்டு 1912 அக்டோபரில் துருக்கி மீது பாய்ந்தன. துருக்கியோ அச்சமயம் சீர்குலைவுற்றுச் சோர்ந்து கிடந்தது. உள்நாட்டில் பிற்போக்காளர்களும் ஜனநாயகவாதிகளும் அதிகாரத்துக்காகப் போட்டியிட்டுக்கொண்டிருந்தார்கள். இந்த நிலையில் அது பால்கன் கூட்டுறவுக்கு முன்னர் எதிர் நிற்க மாட்டாது விழ்ச்சி அடைந்ததில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. இவ்வாறாக முதல் பால்கன் யுத்தம் ஆரம்பித்த சில மாதங்களுக்குள்ளேயே

முடிந்து விட்டது. பெருத்த நஷ்டத்துடன் துருக்கி ஐரோப்பாவிலிருந்து அநேகமாக விரட்டி அடிக்கப்பட்டது. கான்ஸ்டாண்டிநோபிள் மட்டும்தான் அதற்கு எஞ்சி நின்றது. அதற்குச் சொந்தமான மிகப் பழைய ஐரோப்பிய நகரமாகிய அட்ரியநோபிள் கூட அதன் விருப்பத்துக்கு முற்றிலும் மாறாக அதனிடமிருந்து பறித்துக் கொள்ளப்பட்டது.

ஆனால், விரைவிலேயே வெற்றிபெற்ற நாடுகள் பங்கு விஷயமாகத் தங்களுக்குள் சண்டை போட்டுக் கொள்ளத் தொடங்கின. திடீரென்று பல்கேரியா தன்னுடன் நேற்று வரையில் கூட்டாயிருந்த நாடுகளைத் துரோகமாகத் தாக்கிற்று. மீண்டும் ஒரே ரத்தக் களரி. இதுவரையில் எதிலும் சேராதிருந்த ருமேனியா இப்போது தானும் ஏதாவது சுருட்டலாம் என்று இந்தச் சண்டையில் சேர்ந்து கொண்டது. முடிவு என்னவென்றால், பல்கேரியா தனக்குக் கிடைத்தவற்றையெல்லாம் இழந்தது; ருமேனியா, கிரீஸ், செர்பியா ஆகிய நாடுகள் தங்களுடைய எல்லையை வெகுவாக விஸ்தரித்துக் கொண்டன. துருக்கிக்கும் அட்ரியநோபிள் திரும்பக் கிடைத்தது. பால்கன் நாடுகளின் பரஸ்பர வைரம் மிகவும் ஆச்சரியமானது. அவை மிகவும் சிறிய நாடுகள்தான். ஆயினும், அவை பல தடவைகள் ஐரோப்பாவின் ரணகளமாகத் திகழ்ந்திருக்கின்றன.

1909-ல் துருக்கிய இளைஞர் கட்சியால் சிம்மாசனத்தினின்றும் நீக்கப்பட்ட சுல்தான் ஒரு சுவாரஸ்யமான புருஷன். அவனுக்கு இரண்டாவது அப்துல் ஹமீத் என்று பெயர். அவன் 1876-ல் சிம்மாசனம் ஏறினான். அவனுக்கு நவீன மாறுதல்கள், சீர்திருத்தங்கள் என்றால்

ஆகாது. ஆயினும், அவன் தனக்குரிய முறையில் திறமை வாய்ந்தவனாகவே இருந்தான். ஐரோப்பிய வல்லரசுகளை ஒன்றோடொன்று முட்டவிடுவதில் அவன் பெரிய வில்லனாயிருந்தாலும். உதுமானிய சுல்தான்கள் அனைவரும் கலீபாக்களாகவும் அதாவது இஸ்லாமிய மதத் தலைவர்களாகவும் இருந்தார்கள் என்பது உனக்கு ஞாபகமிருக்கலாம். அப்துல் ஹமீத் தனக்குரிய அந்தஸ்தானத்தைப் பயன்படுத்திக்கொண்டு ஒரு அகில இஸ்லாமிய இயக்கத்தைத் தோற்றுவிக்க முயன்றான். அத்தகைய ஒரு இயக்கத்தில் மற்ற நாடுகளிலுள்ள முஸ்லிம்களும் சேரமுடியும். அதன் மூலமாக அவர்களுடைய ஆதரவும் அவனுக்குக் கிடைக்குமல்லவா? சில வருஷங்கள் வரையில் ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் அகில இஸ்லாமியத்தைப் பற்றிய பேச்சுக் கொஞ்சம் இருந்து வந்தது. ஆனால், அவ்வியக்கத்துக்கு உறுதியான அடிப்படை ஒன்றும் இல்லை. மகாயுத்தம் வந்து அதை அடியோடு ஒழித்துவிட்டது. துருக்கியில் அகில இஸ்லாமியத்தைத் தேசியம் எதிர்த்து நின்றது. இறுதியில் தேசியமே வெற்றிபெற்றது.

சுல்தான் அப்துல் ஹமீத் என்றாலே ஐரோப்பாவில் எல்லோருக்கும் ஒரு வெறுப்பு ஏற்பட்டது. பல்கேரியாவிலும் அர்மீனியாவிலும் பிற இடங்களிலும் நடந்த கொடுஞ் செயல்களுக்கும் படுகொலைகளுக்கும் அவனே பொறுப்பாளியாகக் கருதப்பட்டான். கிளாட்ஸ்டன் அவனை "மகாக் கொலைபாதகன்" என்று அழைத்தான். அவனுடைய கொடுஞ் செயல்களைக் கண்டித்து அவனுக்கு விரோதமாக ஒரு இயக்கத்தையும் கிளாட்ஸ்டன் இங்கிலாந்தில் நடத்தினான். துருக்கியர் கூட அப்துல் ஹமீதின் ஆட்சியைத் தங்களுடைய சரித்திரத்தையே கறைப்

படுத்தும் ஒரு பகுதியாகக் கருதுகிறார்கள். அவனுடைய ஆட்சியில் பால்கன் நாடுகளிலும் அர்மீனியாவிலும் படுகொலைகள் முதலிய பயங்கரச் செயல்கள் கிரமமாக நடைபெற்றுவந்தன. துருக்கியர் பால்கன் மக்களையும் அர்மீனியரையும் கொன்றால் அவர்களும் துருக்கியரைக் கொன்று வந்தார்கள். அவ்விஷயத்தில் இரு திறத்தாரும் குற்றவாளிகளே. பல நூற்றாண்டுகளாக வந்து கொண்டிருக்கும் வகுப்பு, மத விரோதங்கள் அம் மக்களின் ரத்தத்தில் ஊறிப்போய் மிகவும் கோரமான ரூபத்தில் வெளிப்பட்டன. மற்ற நாடுகளைக் காட்டிலும் அதிகமாக இன்னலுற்றது அர்மீனியாதான். இப்போது அது காகசசுக்கு அருகிலுள்ள சோவியத் குடியரசுகளில் ஒன்றாக விளங்குகிறது.

ஆக, பால்கன் யுத்தங்களுக்குப் பின்பு துருக்கி மிகவும் சோர்ந்து போய்விட்டது. ஐரோப்பாவில் வெறுமே காலடிவைப்பதற்கு மட்டும்தான் அதற்கு இடம் எஞ்சியிருந்தது. துருக்கிய சாம்ராஜ்யத்தின் மற்றப் பகுதிகளும் பிட்டுக்கொள்ளத் தொடங்கின. எகிப்து அதற்குப் பெயரளவில் மட்டுமே சொந்தமாயிருந்தது என்கிற விஷயம் நன்கு தெரிந்ததே. உண்மையில் பிரிட்டன் எகிப்தைக் கைப்பற்றிக் கொண்டு அதைச் சுரண்டி வந்தது. மற்ற அரேபிய நாடுகளில்கூடத் தேசிய இயக்கம் தலைகாட்டத் தொடங்கியது. இந்நிலையில் துருக்கி மனமுடைந்து மாழ்கி நின்றதில் ஆச்சரியம் இல்லை. 1908-ல் அது கட்டிய மனக்கோட்டைகளெல்லாம் இடிந்து தூளாகி விட்டன. இத்தகைய நிராதரவான ஒரு நிலையில் ஜெர்மனி அதன்பால் அநுதாபம் காட்ட ஆரம்பித்தது. அப்போது ஜெர்மனி கிழக்கே நோக்கிக் கொண்டிருந்தது. மத்திய கிழக்குப்

பிரதேசம் பூராவும் தன் செல்வாக்குப் பரவி நிற்பதாக அது கனக் கண்டுகொண்டிருந்தது. துருக்கியும் ஜெர் மனியை நோக்கியது. இரண்டுக்குமிடையே தொடர்பு அதிகரித்தது. 1914-ல் உலக யுத்தம் தொடங்கியபோது, அதாவது இரண்டாவது பால்கன் யுத்தம் முடிந்து சரியாக ஒரு வருஷத்துக்குப்பின், துருக்கியின் நிலைமை இதுவாகும். பாவம், அது இன்னும் அமைதியை அனுபவிப்பதற்கில்லை.

143

ஜார்களின் கீழ் ருஷியா

மார்ச்சு 16, 1933.

இன்றைய தினம் ருஷியா ஒரு சோவியத் நாடாக விளங்குகிறது. தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக் கும் பிரதிநிதிகளாக உள்ளவர்கள் அதன் அரசாங்கத்தை நடத்திவருகிறார்கள். சில அம்சங்களில் ருஷியா இன்று உலகிலேயே மிகுந்த முன்னேற்றம் வாய்ந்த நாடாக இருக்கிறது. அங்குள்ள நிலைமைகள் எவ்வாறு இருப் பினும் ருஷியாவின் அரசாங்க, சமூகக் கட்டுக்கோப்பு முழுதும் சமூகசமத்துவம் என்னும் கொள்கை மீது அமைக்கப்பட்டிருக்கிறது. இது தற்போதைய நிலைமை. ஆனால், சில வருஷங்களுக்கு முன்பும், 19-வது நூற் றுண்டு முழுவதும், அதற்கு முன்பும் ஐரோப்பாவில் தாழ்வுக்கும் பிற்போக்குக்கும் முதல் தாம்பூலம் பெறக் கூடிய தேசம் ருஷியாதான். அப்பட்டமான யதேச்சாதி காரத்துக்கும் வடிகட்டின அதிகார அமுலுக்கும் அது விளைநிலமாயிருந்தது. மேற்கு ஐரோப்பாவில் எத்தனை புரட்சிகள் தோன்றினால் என்ன, எத்தனை மாறுதல்கள் விளைந்தால் என்ன? ருஷியாவை ஆண்ட ஜார் மன்னர் களுக்கு மன்னரின் "தெய்விக உரிமைக் கொள்கை"யே இன்னும் பிரமாணமாக இருந்து வந்தது. ருஷியாவின் மதஸ்தாபனமும் ஜார்களைத் தாங்கும் தூணாகவும் அவர்க ளுடைய கைக்கருவியாகவுமே இருந்தது. அது பழைய வைதிக கிரேக்க மதஸ்தாபனம் என்பது உனக்கு நினை

விருக்கலாம். அது கத்தோலிக்கும் அல்ல, பிராடெஸ்டண்டும் அல்ல. மற்ற இடங்களைவிட ருஷியாவில் மதஸ்தாபனத்தின் அதிகார அமுல் சற்று அதிகமாகவே இருந்தது. ருஷியதேசம் 'பரிசுத்த ருஷியா' என்று அழைக்கப்பட்டது. ருஷிய ஜார் 'சிறு வெண் பிதா' (Little White Father) என்று அழைக்கப்பட்டார். அவர் எல்லோருக்கும் பிதா. மதஸ்தாபனமும் அரசாங்கமும் இத்தகைய கதைகளைக் கொண்டு ஜனங்களின் அறிவை மயக்கி அவர்களுடைய கவனத்தை அரசியல் பொருளியல் நிலைமைகளிலிருந்து வேறு விஷயங்களுக்குத் திருப்பின. சத்தியத்தையும் தருமத்தையும் நிலைநிறுத்த வேண்டிய மதம் சரித்திரப் போக்கில் அசத்தியத்துக்கும் அதருமத்துக்கும் துணையாக இருந்து வருவது ஒரு விந்தையே!

'பரிசுத்த ருஷியா' வின் சின்னமாக விளங்கியது 'கசை'; அதாவது நீண்ட சாட்டை. அடிமைகள் முதலானோருடைய முதுகுத் தோலை உரிப்பதற்கு அது பயன்பட்டது. இன்னும் அந்நாடு அடிக்கடி பயின்று வந்த செய்கை 'படுகொலை' யாகும். அதாவது, யூதர் முதலானோர் ஜார் அரசாங்கத்தால் கூட்டம் கூட்டமாகக் கொன்று குவிக்கப்பட்டார்கள். அவர்கள் சொல்லொணாத கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாக்கப்பட்டார்கள். ஜாரின் ருஷியாவுக்குப் பின்னால் சைபீரியப் பாழ்வெளி 'ஆ' வென்று வாயை அங்காந்து கொண்டிருந்தது. அது ருஷிய அரசியல் கைதிகளை விழுங்கி ஏப்பம் விட்டு வந்தது. சைபீரியா என்றாலே நாடு கடத்தலும், சிறைவாசமும், மீளாத் துயரமுமே நம் நினைவுக்கு வருகின்றன. ஏராளமான அரசியல் கைதிகள் அங்கு அனுப்பப்பட்டார்கள். நாடு கடத்தப்பட்டோர் முகாம்களும் குடியேற்றங்களும் அங்குத் தோன்றி வளர்ந்தன.

அவற்றிற்கருகில் துன்பம் தாங்கமாட்டாமல் தற்கொலை செய்து கொண்டவர்களின் கல்லறைகளைக் காணலாம். நாடு கடத்தப்பட்டோ சிறையிலடைக்கப்பட்டோ நீண்ட காலம் தனித்து வாழ்வதென்பது பொறுத்தற்கரிய ஒன்றாகும். அதைப் பொறுக்க முடியாமல் பல தீர புருஷர்கள் உடலும் உள்ளமும் உடைந்து போயிருக்கிறார்கள். வெளி உலகத்தின் தொடர்பு அற்றும், உற்றுழி உதவும் நண்பர்களையும் இணைபிரியாத தோழர்களையும் விட்டு நீங்கியும், நமது சுகங்களில் பங்கு கொண்டு அவற்றை நிறைத்தும் நமது துக்கங்களில் பங்கு கொண்டு அவற்றைக் குறைத்தும் நமது உயிருக்குயிராக விளங்குபவர்களைப் பிரிந்தும் உயிர் வாழ்வதென்பது சொல்வது போல் அவ்வளவு எளிதல்ல; அதற்கு ஒப்பற்ற உளத் திட்பமும், எதுவரினும் கலங்காத ஆழமுடைமையும், எதையும் பொறுத்துக் கொள்ளும் நெஞ்சுரனும் அவசியம். ஆகவே, ஜாரின் ருஷியா சுதந்திரம் என்று பேசிய ஒவ்வொருவனையும் அதைப் பெறுவதற்குச் செய்யப்பட்ட ஒவ்வொரு முயற்சியையும் முளையிலேயே கிள்ளி எறிந்தது. சுதந்திரக் கருத்துக்கள் வெளிநாடுகளிலிருந்து வந்து பரவாமலிருப்பதற்காக ருஷியாவில் பிரயாணம் செய்வதற்குக் கூடப் பல தடைகள் ஏற்படுத்தப்பட்டன. ஆனால், அடக்கப்பட்ட சுதந்திர உணர்ச்சியானது ஒன்று பத்து நூறாகக் கிளைத்தெழும் தன்மை பெற்றிருக்கிறது. அத்தகைய சுதந்திர உணர்ச்சி தடைகளையெல்லாம் உடைத்தெறிந்து கொண்டு முன்னேறத் தொடங்கும் போது பழைய ஏற்பாடுகள் எல்லாவற்றையும் தலைகீழாக்கிக் கொண்டு ஒரேயடியாகத் தாவத் தொடங்குகிறது.

முன் கடிதங்களில், ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் கீழ்க்கோடி, மத்திய ஆசியா, பாரசீகம், துருக்கி ஆகிய

இடங்களில்—ஜார்களின் ஆட்சிக்குக் கீழ்ப்பட்ட ருஷியா அனுஷ்டித்த கொள்கைகளையும் செய்த காரியங்களையும் இங்கொன்றும் அங்கொன்றுமாகப் பார்த்தோம். அப்போது விடப்பட்ட பாகங்களை இப்போது நிரப்பி அவற்றை ஒரு கோவையாகப் பார்ப்போம். ருஷியாவுக்கு எப்போதுமே இரண்டு முகங்கள் உண்டு. ஒன்று மேற்கே பார்த்துக் கொண்டிருக்கும்; மற்றொன்று கிழக்கே பார்த்துக் கொண்டிருக்கும். இந்த இருமுகத் தோற்றத்துக்கு அதனுடைய பூகோள இயற்கை நிலைமையே காரணம். ஆகவே, அதை ஒரு யூரேஷிய (ஆசியா&ஐரோப்பா) வல்லரசு என்றே சொல்ல வேண்டும். அதன் பிற்காலச் சரித்திரமும் அது எவ்வாறு மாறி மாறிக் கிழக்கிலும் மேற்கிலும் அக்கறை காட்டி வந்திருக்கிற தென்பதைக் காட்டுகிறது. அது மேற்கே தடைப்படின் கிழக்கிலும், கிழக்கே தடைப்படின் மேற்கிலும் நாட்டம் செலுத்தி வந்திருக்கிறது.

செங்கிஸ்கானுல் நிறுவப்பட்ட பழைய மங்கோலிய சாம்ராஜ்யம் பிளவுபட்ட விதமும், ருஷியாவை ஆண்டு வந்த மங்கோலியரை-அவர்கள் பொன்னிறக் கூட்டத்தார் என்று அழைக்கப்பட்டனர்—மாஸ்கோ இளவரசன் தலைமையில் ருஷிய சிற்றரசர்கள் முறியடித்து முடிவாக நாட்டைவிட்டு ஓட்டிய விதமும் உனக்கு நினைவிருக்கலாம். இது 14-வது நூற்றுண்டின் இறுதியில் நிகழ்ந்தது. அந்த மாஸ்கோ இளவரசனின் சந்ததியார் சிறிது சிறிதாக ருஷியா முழுவதும் யதேச்சாதிகாரம் செலுத்தத் தலைப்பட்டார்கள். அவர்கள் தங்களை 'ஜார்கள்'-அல்லது சீசர்கள்-என்று அழைத்துக் கொண்டார்கள். அவர்களுடைய மனோபாவமும் பழக்க வழக்கங்களும் பெரும்பாலும் மங்கோலிய சம்பந்தம் உடையனவாகவே

இருந்தன. அவர்களுக்கும் மேல் ஐரோப்பிய நாட்டார்களுக்கும் எவ்விதமான ஒற்றுமையும் இல்லை. மேல் ஐரோப்பா ருஷியாவை ஒரு காட்டுமிராண்டி நாடாகவே கருதியது. 1689-ல் மகாபீட்டர் என்பவன் ருஷிய சிம்மாசனம் ஏறினுன். ருஷிய நாட்டத்தை மேற்கே திருப்ப வேண்டும் என்று அவன் முடிவு செய்தான். ஆகவே, மேல் ஐரோப்பிய நாடுகளின் நிலைமையை அறிந்து வர அவன் ஒரு நீண்ட சுற்றுப் பிரயாணம் தொடங்கினுன். அவன் ருஷியாவுக்குத் திரும்பி வந்து அதை மேனுட்டுமயமாக்குவதில் மும்முரமாக ஈடுபட்டான். அவன் தான் கண்ட புது நாகரிகத்தை அறியாமைக்குப் பேர்போன ருஷியப் பிரபு வர்க்கத்தின்மீது அவர்களுடைய விருப்பத்துக்கு மாருகவே திணித்தான். ருஷியப் பொதுமக்கள் அடக்கி ஒடுக்கப்பட்டு மிகவும் கீழான நிலையில் இருந்தார்கள் என்று சொல்ல வேண்டியதில்லை. அவர்கள் தன்னுடைய சீர்திருத்தங்களைப்பற்றி என்ன நினைத்தார்கள் என்று பீட்டர் கிஞ்சித்தும் கவலை கொள்ளவில்லை. மற்ற வல்லரசுகள் கடலில் பலம் வாய்ந்திருப்பதைப் பீட்டர் கண்டான். அதன் முக்கியத்தையும் அவன் உணர்ந்தான். ருஷியா பெரிய நாடாயினும் அப்போது அதற்கு ஆர்க்டிக் சமுத்திரத்தைத் தவிர்த்து வேறு சமுத்திரத்துக்குப் போக வழி இல்லை. ஆர்க்டிக் சமுத்திரம் பெரும்பாலும் பனியால் உறைந்து கிடப்பதால் கப்பல் போக்குவரத்துக்கு அவ்வளவாகப் பிரயோசனமில்லை. ஆகவே, அவன் வடமேற்கே பால்டிக் கடலை நோக்கியும் தெற்கே கிரைமியாவை நோக்கியும் தன் நாட்டை விஸ்தரிக்கத் தொடங்கினுன். அவனுல் கிரைமியாவை அடைய முடியவில்லை. (அவனுக்குப் பின் வந்தோர் அதை அடைந்தனர்.) ஆனுல், அவன் ஸ்வீடனை ஜெயித்துப் பால்டிக் பிரதேசத்தைப் பெற்றுன். அங்கே அவன் நீவா நதிக்

கரையில் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் என்றொரு புதிய நகரை மேனாட்டு முறையில் நிர்மாணம் செய்தான். அந் நகர் பின்லாந்து வளைகுடாவுக்கருகில் இருந்தது. பின்லாந்து வளைகுடாவிலிருந்து பால்டிக் கடலில் பிரவேசிக்கலாம். பழைய சம்பிரதாயங்கள் பின்னிக்கிடந்த மாஸ்கோவை விடுத்துப் புதிய நகரை ராஜதானியாகக் கொண்டான் பீட்டர். அவன் 1725-ல் மாண்டான்.

அதற்குப்பின், 1782-ல், ருஷியாவை ஆண்ட இரண்டாவது காதரின் என்பாள் அதை ‘மேனாட்டுமயமாக்க’ இன்னொரு முயற்சி செய்தாள். அவளும் மகா காதரின் என்று அழைக்கப்பட்டாள். அவள் ஒரு அசாதாரணப் பிரகிருதி; திறமையும் உறுதியும் வாய்ந்தவள்; ஆனால், மகா குரூர சுபாவம் படைத்தவள். அவளுடைய சொந்த வாழ்க்கை களங்கம் நிறைந்ததாயிருந்தது. அவள் ஜாராயிருந்த தன் கணவனைக் கொன்றுவிட்டு சிம்மாசனம் ஏறினாள். அவள் ருஷிய சாம்ராஜ்யத்தைப் பதினான்கு ஆண்டுகள் யதேச்சையாக ஆண்டாள். அவள் கலைகளையும் பண்பாட்டையும் பெரிதும் போற்றி வளர்ப்பவள்போல் நடித்துவந்தாள். அவள் வால்டேருடன் நட்புபூண்டு அவனுடன் கடிதப் போக்குவரத்து நடத்தினாள். அவள் வார்சேல்சிலுள்ள பிரெஞ்சு ராஜதர்பாரைப்போலத் தன்னுடைய தர்பாரையும் ஓரளவு நடத்த முயன்றாள். அவள் கல்வி முறையில் சில சீர்திருத்தங்களும் செய்தாள். இவற்றால் நன்மை அடைந்தவர்கள் உயர் நிலையில் இருந்த ஒரு சிலரே. காதரின் செய்த காரியங்கள் அனைத்தும் வெறும் பகட்டே ஒழிய வேறில்லை. பண்பாடு என்னும் விருட்சத்தை ஒரு நாட்டிலிருந்து அப்படியே பெயர்த்துக் கொண்டுவந்து இன்னொரு நாட்டில் நட்டுவிட முடியாது. அது ஒவ்வொரு நாட்டு மண்ணிலும் தானாக வேரூன்றி

வளரவேண்டும். தாழ் நிலையிலுள்ள ஒரு நாடு உயர் நிலையிலுள்ள மற்ற நாடுகளை அப்படியே ‘காப்பி’ அடிக்க முயலுவது ‘கான மயிலாடக் கண்டிருந்த வான் கோழி தானும் அதுவாகப் பாவித்துத் தானுந்தன் பொல்லாச் சிறகை விரித்தாடின’ கதையாகத்தான் முடியும். அதனால் உண்மையான பண்பாட்டுக்குப் பதிலாகப் போலிப் பண்பாடுதான் பெருகும். மேல் ஐரோப்பாவின் பண்பாடு சில சமூக நிலைமைகளை அடிப்படையாகக்கொண்டிருந்தது. ருஷியாவில் பீட்டரும் காதரினும் அந்த அடிப்படையை நிறுவ முயற்சிக்காமல் மேல் கட்டிடத்தை மட்டும் எழுப்ப முயன்றார்கள். ஆகவே, அவர்கள் செய்த மாறுதல்கள் பொது ஜனங்களின் கஷ்டங்களைத்தான் அதிகரித்தன. அவற்றால் அவர்களுடைய அடிமைத்தனமும் ஜாரின் யதேச்சாதிகாரமும் உறுதி பெற்றன.

ஆக, ருஷியா திணையளவு முன்னேறுவதும், பனையளவு பின் செல்வதுமாக இருந்து வந்தது. ருஷிய விவசாயிகள் நடைமுறையில் அடிமைகளாகவே இருந்தார்கள். அவர்கள் அனுமதியின்றித் தங்கள் நிலத்தை விட்டு இப்படி அப்படி நகர முடியாது. நிலச்சுவான்தார் வகுப்பைச் சேர்ந்த சில உத்தியோகஸ்தர்களும் அறிவாளிகளுமே கல்வியறிவு உடையவர்களாக இருந்தார்கள். மத்திய வகுப்பு என்பது இல்லவே இல்லை என்று சொல்லிவிடலாம். பொதுமக்களுக்கு எழுத்து வாசனை என்பது அறவே இல்லை. அவர்கள் இழி நிலையில் உழன்று கொண்டிருந்தார்கள். முன் காலங்களில், கண் தெரியாத விவசாயிகள் கொடுமை தாளாமல் அடிக்கடி கலகம் செய்வதும் ரத்தம் சிந்துவதும் உண்டு. அவற்றையெல்லாம் அரசாங்கம் நிர்த்தாட்சணியமாக அடக்கி வந்தது. இப்போது, உயர்நிலையில் உள்ளவர்கள் சிறிது

கல்வியறிவு பெற்றதன் பயனாக மேல் ஐரோப்பாவில் பரவியிருந்த கருத்துக்கள் ருஷியாவுக்குள்ளும் கசிய ஆரம்பித்தன. அது பிரெஞ்சுப் புரட்சியின் காலம். பிறகு நெப்போலியன் தோன்றினான். நெப்போலியன் வீழ்ச்சியுற்றதும் ஐரோப்பாவெங்கும் பிற்போக்குச் சக்திகள் வலுப்பெற்றதை நாம் பார்த்தோம். ருஷிய ஜாராகிய முதலாவது அலெக்சாந்தர் அவற்றிற்குத் தலைமை வகித்தான். அவன் மற்றச் சக்கரவர்த்திகளையும் சேர்த்துக்கொண்டு 'பரிசுத்தக் கூட்டுறவு' என்று ஒன்றை ஆரம்பித்ததை முன்பே கண்டோம். அவனுக்குப் பின் ருஷிய சிம்மாசனம் ஏறினவன் அவனை நல்லவனாக்கிவிட்டான். ஜார் அரசாங்கத்தின் அக்கிரமம் பொறுக்கமாட்டாமல் சில வாலிப உத்தியோகஸ்தர்களும் படித்தவர்களும் 1825-ல் கலகம் செய்தார்கள். அவர்கள் அனைவரும் நிலச்சுவான்தார் வகுப்பைச் சேர்ந்தவர்களே. அவர்களுக்குப் பொதுமக்களின் ஆதரவோ, ராணுவத்தின் ஆதரவோ இல்லை. ஆகவே, அவர்கள் எளிதில் அடக்கப்பட்டார்கள். அவர்கள் டிசம்பர் மாதத்தில் கலகம் செய்தபடியால் 'டிசம்பர்காரர்கள்' என்று அழைக்கப்படுகிறார்கள். ருஷியாவின் அரசியல் விழிப்பு முதன் முதலாக வெளிப்பட்டது இக் கலகத்தில்தான். இதற்கு முன்பே அரசியல் சங்கங்கள் தோன்றி இரகசியத்தில் வேலை செய்து வந்தன. ஜார் அரசாங்கம் பகிரங்கமான அரசியல் வேலைகள் அனைத்தையும் தடுத்து விட்டபடியால் அவை இரகசியத்தில் நடக்க வேண்டியதாயிற்று. 1825-ம் வருஷத்துக் கலகம் அடக்கப்பட்ட பின்பும் மேற்கூறிய இரகசியச் சங்கங்கள் வேலை செய்து வந்தன. புரட்சிகரமான கருத்துக்கள் நாட்டில் பரவின. முக்கியமாக அவை படித்த வகுப்பாரிடையிலும் கலாசாலை மாணாக்கரிடையிலும் பரவின.

கிரைமிய யுத்தத்தில் ருஷியா தோல்வி அடைந்த பிறகு சில சீர்திருத்தங்கள் அளிக்கப்பட்டன. 1861-ல் விவசாயிகளின் அடிமைத்தனம் ஒழிக்கப்பட்டது. விவசாயிகளுக்கு இது பெரிய நன்மை என்பதில் ஐயமில்லை. ஆனால், விடுதலை பெற்ற அடிமைகளுக்கு ஜீவனத்துக்குப் போதுமான நிலம் கொடுக்கப்படவில்லை. ஆகவே, வெறும் விடுதலையினால் மட்டும் அவர்கள் அதிக ஆறுதல் அடையக் கூடவில்லை. இதற்கிடையில், படித்த வகுப்பாரிடையே புரட்சிகரமான கருத்துக்கள் பரவி வந்தன. அவர்களை அரசாங்கம் அடக்கியும் வந்தது. ஆனால், தீவிரப்போக்குடைய அவர்களுக்கும் கிராமங்களில் வாழ்ந்து வந்த விவசாயிகளுக்கும் யாதொரு தொடர்பும் இல்லை. ஆகவே, 1870-க்குப்பின் அபேதவாதச் சார்புடைய மாணவர்கள் (அவர்களுடைய அபேதவாதம் அவ்வளவாகத் தெளிவு பெற்றதல்ல) விவசாயிகளிடையே பிரசாரம் செய்யும் நிமித்தம் ஆயிரக்கணக்கில் கிராமங்களுக்குச் சென்றார்கள். அம் மாணவர்களை முன் பின் அறியாதவர்களான விவசாயிகள் அம் மாணவர்கள்பால் சந்தேகம் கொண்டார்கள். மீண்டும் தங்கள் மீது அடிமைத்தனத்தைச் சுமத்த ஏதோ சூழ்ச்சி நடப்பதாக அவர்களுக்குத் தோன்றியது. ஆகவே, அவர்கள் தங்கள் உயிரையும் பொருட்படுத்தாது தங்களுக்குச் சேவை புரிய வந்த அம் மாணவர்களில் பலரைத் தாங்களே கைது செய்து போலீசார் வசம் ஒப்புவித்து விட்டார்கள்! பொது ஜனங்களுடன் உண்மையான தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளாமல் ஆகாசத்தில் அரசியல் வேலை செய்யத் தொடங்குவதனால் விளையும் விபரீத பலனுக்கு இது ஒரு உதாரணம்.

விவசாயிகளிடம் தாங்கள் பட்ட பரிபவம் அம்

மாணவர்களுக்குப் பெரிய அதிர்ச்சியை உண்டு பண்ணியது. வேறு ஒன்றும் தோன்றாமல் அவர்கள் ‘பயங்கர’ச் செயல்களில் ஈடுபட்டார்கள். அதாவது, வெடி குண்டு எறிந்தும் வேறு வழிகளிலும் அதிகாரத்தில் உள்ளவர்களைக் கொல்ல ஆரம்பித்தார்கள். ருஷியாவில் ‘வெடி குண்டுத் தத்துவம்’ தோன்றிய விதம் இதுதான். அதிலிருந்து ருஷியாவில் புரட்சி வேலைகளில் ஒரு புதிய சகாப்தம் ஆரம்பமாயிற்று. வெடி குண்டெறிவோர் தங்களை ‘வெடிகுண்டு லிபரல்கள்’ (Liberals with a bomb) என்று அழைத்துக் கொண்டார்கள். அவர்களுடைய சங்கம் ‘ஜனசித்தம்’ (Will of the People) என்று அழைக்கப்பட்டது. ஆனால், அந்தப் பெயர் அதற்குப் பொருந்தாது. ஏனெனில், அதில் சம்பந்தப்பட்டவர்கள் வெகு சிலரே.

இவ்வாறு, ஜார் அரசாங்கத்துக்கும் அதை உறுதியுடன் எதிர்த்து நின்ற ருஷிய யுவர், யுவதிகளுக்கும் ஒரு புதிய போர் ஆரம்பமாயிற்று. ருஷியாவில் அடிமைப்படுத்தப்பட்ட பல வகுப்பினரும் தேசியச் சிறுபான்மையினரும் இருந்தார்கள். அரசாங்கம் அவர்களெல்லோரையும் துன்புறுத்தி வந்தது. ஆகவே, அவர்களில் பலர் புரட்சிக்காரருடன் சேர்ந்து கொண்டார்கள். அவர்கள் தங்களுடைய பாஷைகளைப் பகிரங்கமாக உபயோகிப்பதற்குக்கூட அரசாங்கத்தால் அனுமதிக்கப்படவில்லை. இன்னும், பல வழிகளில் அவர்கள் துன்பத்துக்கும் அவமானத்துக்கும் ஆளாக்கப்பட்டார்கள். தொழில் துறையில் ருஷியாவைவிட அதிக முன்னேற்றம் அடைந்திருந்த போலந்து ருஷியாவின் ஒரு மாகாணமாகச் செய்யப்பட்டது. போலந்து என்கிற பெயரே மறைந்து விட்டது. போலிஷ் பாஷையின் உபயோகத்துக்குத் தடை விதிக்கப்பட்டது. போலந்துக்கே இந்தக் கதி

என்றால் மற்றச் சிறுபான்மையினரையும் வகுப்பினரையும் பற்றிக் கேட்கவேண்டியதில்லை. 1860-க்குப் பின் போலந்தில் ஒரு கலகம் நிகழ்ந்தது. அது மிகவும் குரூரமாக அடக்கப்பட்டது. 50,000 போலிஷ்காரர் சைபீரியாவுக்கு அனுப்பப்பட்டார்கள். யூதர்கள் அடிக்கடி கோரமான ‘படுகொலை’களுக்கு ஆளாக்கப்பட்டார்கள். அவர்களில் பலர் வெளி நாடுகளுக்குச் சென்று குடியேறினார்கள்.

ஜார் அரசாங்கத்தால் துன்புறுத்தப்பட்ட யூதரும் பிறரும் ருஷிய பயங்கரவாதிகள் கூட்டத்தில் சென்று சேர்ந்தது இயற்கையே. அவர்கள் அரசாங்கத்தினிடம் அவ்வளவு கோபம் கொண்டிருந்தார்கள். பயங்கரவாதம்—அது ‘சூனியவாதம்’ (Nihilism) என்று அழைக்கப்பட்டது—விருத்தி அடைந்தது. அதை எதிர்த்துக் கொலைபாதக அடக்குமுறை தாண்டவமாடியது. அரசியல் குற்றவாளிகள் வண்டி வண்டியாகச் சைபீரியப் பாழ்வெளிகளுக்கு அனுப்பப்பட்டார்கள். அவர்களில் பலர் தூக்கிலிடப்பட்டார்கள். பயங்கரவாதத்தைச் சமாளிப்பதற்கு ஜார் அரசாங்கம் கையாண்ட ஒரு முறை நினைக்க முடியாத அளவுக்குச் சென்றது. அதாவது, பயங்கரவாதிகள், புரட்சிக்காரர்கள் ஆகியோரிடையில் அரசாங்கம் ‘உறவாடிக் கெடுக்கும் ஒற்றர்’களை (Agents-Provocateurs) அனுப்பியது. அவர்கள் பயங்கரவாதியரை வெடி குண்டெறிதல் முதலான செயல்களைச் செய்யுமாறு தூண்டியும் தாங்களே அவற்றைச் செய்தும் வந்தார்கள். தாங்கள் செய்தாலும் மற்றவர்களையும் அக்குற்றத்தில் அகப்படுத்தலாமல்லவா? அவ்வொற்றர் கூட்டத்தில் அசப் என்பவன் மிகவும் பிரசித்தி பெற்றவன். அவன் வெடிகுண்டு வீரர்களில் ஒரு முக்கியஸ்தனாக இருந்ததோடு ருஷிய இரகசியப் போலீஸ்

தலைவர்களில் ஒருவனாகவும் இருந்தான். ருஷிய இரகசியப் போலீசைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் மற்றவர்களை அகப்படுத்துவதற்காகப் போலீஸ் ஏஜெண்டுகளாக இருந்து வெடிகுண்டெறிந்த சம்பவங்கள் இன்னும் எத்தனையோ ருஜுவாகி யிருக்கின்றன!

ருஷியாவில் இவையெல்லாம் நிகழ்ந்துகொண்டிருந்த காலையில் அதன் எல்லை இடைவிடாது கிழக்கே விரிந்து கொண்டு சென்று கடைசியில் பசிபிக் கரையை அடைந்தது. மத்திய ஆசியாவில் அது ஆப்கானிஸ்தானம் வரையில் வியாபித்தது. தெற்கில் அது துருக்கிய எல்லையை ஆக்கிரமித்துக்கொண்டு சென்றது. 1860-க்குப் பின் ருஷியாவில் மேனாட்டு முறையில் யந்திரத் தொழில் வளர்ச்சி அடைய ஆரம்பித்தது இன்னொரு முக்கிய நிகழ்ச்சியாகும். இத்தொழில் வளர்ச்சி பீட்டர்ஸ்பர்க் சுற்றுப் பக்கம், மாஸ்கோ போன்ற சில பிரதேசங்களில் மட்டுமே காணப்பட்டது. பொதுவாக தேசம் முழுதும் விவசாயத்தைத்தான் நம்பி வாழ்ந்து வந்தது. ஆனால், ருஷியாவில் ஏற்படுத்தப்பட்ட தொழிற் சாலைகள் மிகவும் நவீன முறையில் அமைந்திருந்தன. அவை பெரும்பாலும் ஆங்கிலேயரால் நிர்வகிக்கப்பட்டு வந்தன. தொழிற் வளர்ச்சியினால் இரண்டு பலன்கள் ஏற்பட்டன. தொழிற்சாலைப் பிரதேசங்களில் ருஷிய முதலாளித்துவம் வெகு விரைவில் வளர்ச்சி அடைந்தது. அத்துடன் அதே வேகத்தில் தொழிலாளி வகுப்பும் வளர்ச்சி அடைந்து வந்தது. பிரிட்டனில் தொழிற்சாலை முறையின் ஆரம்ப காலத்தில் நிகழ்ந்ததுபோல, ருஷியத் தொழிலாளிகள் கடுமையான சுரண்டலுக்கு ஆளாக்கப்பட்டார்கள். அவர்கள் இராப்பகல் வேலை செய்யவேண்டியதாயிற்று. ஆனால், பிரிட்டனுக்கும் ருஷியாவுக்கும் இந்த வித்தியாசம் இருந்தது: [illegible]

வாதம், பொது உடைமை முதலிய புதுக் கருத்துக்கள் இப்போது தோன்றி யிருந்தன. புத்தம் புதிய மனம் படைத்த ருஷியத் தொழிலாளி அப் புதுக் கருத்துக்களை ஆவலுடன் பருகினான். சம்பிரதாயச் சேற்றில் சிக்குண்ட பிரிட்டிஷ் தொழிலாளியோ பழமைப் பற்று விடாதவனாய், பழங் கருத்துக்களையே கட்டி மாரடித்துக் கொண்டிருந்தான்.

புதுக்கருத்துக்கள் உருவாகத் தொடங்கின. 'அபேதவாத ஜனநாயகக்கட்சி' என்றொரு கட்சி தோன்றியது. அது மார்க்சின் தத்துவத்தை அடிப்படையாகக்கொண் டிருந்தது. அக்கட்சியைச் சேர்ந்தவர்கள் தாங்கள் பயங்கரச் செயல்களை ஆதரிக்கவில்லை என்று அறிவித்தார்கள். ஏனெனில், கார்ல் மார்க்சின் சித்தாந்தத்தில் பயங்கர வாதத்துக்கு இடமில்லை. அது தொழிலாளி வர்க்கத்தைத் தட்டி எழுப்பிச் செய்கையில் ஊக்கவேண்டும் என்று கூறியது. அவர்கள் சேர்ந்து செயலாற்றுவதன் மூலமாகத்தான் தங்களுடைய லட்சிய சித்தியை அடைய முடியும். பயங்கரச் செயல் புரிந்து தனி மனிதர்களைக் கொல்வதால் தொழிலாளி வர்க்கத்தைத் தட்டி எழுப்ப முடியாது. ஏனெனில், ஜார் தத்துவத்தை ஒழிப்பதுதான் லட்சியமே ஒழிய ஜாரையோ அவருடைய மந்திரிகளையோ கொல்வது அல்ல.

ருஷிய அரங்கத்தில் இப்போது ஓர் இளைஞன் தோன்றுகிறான். பிற்பாடு உலகெங்கும் 'லெனின்' என்று பிரசித்தி பெற்றவன் அவனே. அவன் பள்ளிச் சிறுவனாயிருக்கும் போதே புரட்சி நடவடிக்கைகளில் கலந்து கொண்டான். 1887-ல் அவனுக்கு வயது பதினேழு. அந்த வயதில் அவன் ஒரு பேரிடியைத் தாங்க வேண்டியதாயிற்று. அவனுக்கு ஒரு அண்ணன்; பெயர்

அலெக்சாந்தர். அண்ணனிடம் தம்பிக்கு அளவுகடந்த வாத்சல்யம். ஜாரைக் கொல்லுவதற்காகச் செய்யப் பட்ட சதியில் பங்கு கொண்டதற்காக அலெக்சாந்தர் தூக்கிலிடப்பட்டான். அண்ணனிடத்தில் உயிரை வைத்திருந்த லெனினுக்கு இதைவிடப் பெரிய அதிர்ச்சி வேறு என்ன வேண்டும்? ஆனால், அத்தகைய ஒரு நிலையிலும் லெனின் தன்னுடைய அறிவுத் தெளிவை இழக்கவில்லை. 'பயங்கர முறைகள் மூலம் சுதந்திரத்தைப் பெறமுடியாது. பொதுஜன இயக்கத்தினால் தான் அதைப் பெறமுடியும்' என்று அவன் கூறினான். பிறகு அவன் சிறிதேனும் மனங்கலங்குதலின்றித் தன்னுடைய பள்ளிப் பாடங்களைப் படிக்கலானான். அது மட்டுமா? 'ஸ்கூல்பைனல்' பரீட்சைக்குப் போய் அதில் முதல் 'மார்க்'கும் வாங்கினான். முப்பது ஆண்டுகளுக்குப் பின் ஒரு பெரும் புரட்சியைத் தோற்றுவித்து நடத்திய அவன் ஆக்கப்பட்டிருந்த விதம் இதுவாகும்!

தொழிலாளி வர்க்கப் புரட்சி தோன்றுவது நிச்சயம் என்று மார்க்ஸ் தீர்க்கதரிசனம் உரைத்திருந்தான். அந்தப் புரட்சி தொழிலபிவிருத்தியில் தலைசிறந்த, பலமும் கட்டுப்பாடும் வாய்ந்த பெரிய தொழிலாளி வர்க்கத்தை உடைய ஜெர்மனி போன்ற ஒரு நாட்டில்தான் ஆரம்பிக்கும் என்று அவன் எண்ணியிருந்தான். பிற்போக்குக்கும், இடைக்கால வாழ்வுக்கும் உறைவிடமான ருஷியாவில் அத்தகைய புரட்சி தோன்றுவது அசாத்தியம் என்பதுதான் மார்க்சின் எண்ணம். ஆனால், ருஷிய இளைஞர்களிடையில் அவனுக்கு அத்தியந்தமான சீடர்கள் ஏற்பட்டார்கள். தங்களுடைய நாட்டின் பொறுக்கமுடியாத நிலைமையைப் போக்க வழிகாண விரும்பிய அவர்கள் மார்க்சின் சித்தாந்தங்களை ஒரு தனி ஆர்வத்துடன் கற்றார்கள். ஜார் ஆட்சிக்குட்பட்ட ருஷியாவில் பகிரங்கமாகவும் சட்ட நீதியான முறைகளிலும் காரியம் செய்வதற்கு இடமில்லாத காரணத்தாலேயே அவர்கள் மார்க்சியத்தைக் கற்கவும் அதைத் தங்களுக்குள் விவாதிக்கவும் ஆரம்பித்தார்கள். அவர்களில் எண்ணிறந்த பேர் சிறைக்கும் சைபீரியாவுக்கும் அனுப்பப்பட்டார்கள்; பலர் நாடுகடத்தப்பட்டு வேற்று நாடுகளில் வாழ்ந்தார்கள். அவர்கள் எங்குச் சென்றாலும் மார்க்சியத்தை விடாது கற்று வந்தார்கள்; அத்துடன் செயலாற்ற வேண்டிய நாளைக்கு வேண்டிய ஆயத்தங்களையும் இடைவிடாது செய்துவந்தார்கள்.

144

தோல்வியுற்ற 1905-ம் வருஷத்து ருஷியப் புரட்சி

மார்ச்சு 17, 1933.

1903-ல், ருஷிய மார்க்சியர்களுக்கு, அதாவது அபேதவாத ஜனநாயகக் கட்சிக்காரருக்கு, ஒரு பெரிய நெருக்கடி நேர்ந்தது. அப்போது அவர்கள் ஒரு கஷ்டமான கேள்விக்கு விடைகாண வேண்டியவர்களாக இருந்தார்கள். குறிப்பிட்ட கொள்கைகளையும் லட்சியங்களையும் உடைய எந்தக் கட்சியும் எப்பொழுதாவது ஒரு சமயம் அந்தக் கேள்விக்கு விடை சொல்லித்தான் தீர வேண்டும். ஏன், அத்தகைய கொள்கைகளையும் நம்பிக்கைகளையும் கொண்டுள்ள எல்லா ஸ்திரீ புருஷர்களுடைய வாழ்க்கையிலும்கூட இவ்வாறன சோதனைக் காலங்கள் பன்முறை ஏற்படுவதுண்டு. ருஷிய மார்க்சியர்களுக்கு முன்னின்ற அக்கேள்வி யாது? அவர்கள் தங்களுடைய கொள்கைகளை அப்படியே பிடித்துக் கொண்டு தொழிலாளி வர்க்கப் புரட்சிக்கு வேலை செய்வதா, அன்றி உள்ள நிலைமைகளை அனுசரித்துச் சிறிது விட்டுக்கொடுத்து முடிவில் புரட்சி தோன்றுவதற்கான பக்குவத்தை ஏற்படுத்துவதா என்பதுதான் அக்கேள்வி. இதே கேள்வி எல்லா மேல் ஐரோப்பிய நாடுகளிலும் எழுந்தது. அதன் பயனாக, அநேகமாக எல்லா இடங்களிலும், அபேதவாத ஜனநாயகக் கட்சி அல்லது அது போன்ற கட்சிகள் பலவீனமடைந்ததோடு உட்சண்டைகளும் தோன்றின. ஜெர்மனியில் மார்க்சியர் தங்களுடைய புரட்சிக் கொள்கையை இம்மியும் தளர்த்த மாட்டோம் என்று வீரம் பேசினர். ஆனால், நடைமுறையில் அவர்கள் வேகம் தணிந்து மிதமான ஒரு போக்கை

அனுஷ்டிக்க ஆரம்பித்தார்கள். பிரான்சில் பிரமுகர்களான பல அபேதவாதிகள் தங்கள் கட்சிகளைத் துறந்து மந்திரிப்பதவி ஏற்றுக்கொண்டார்கள். இதாலி, பெல்ஜியம் முதலான நாடுகளிலும் இதே நிகழ்ச்சியைக் காண்கிறோம். பிரிட்டனில் மார்க்சியம் பலவீனமாயிருந்த காரணத்தால் அந்தக் கேள்வி எழவில்லை. ஆனால், அங்கும் ஒரு தொழிற்கட்சி அங்கத்தினர் மந்திரி சபையை அலங்கரித்தார்.

ருஷியாவிலோ நிலைமை வேறு விதமாயிருந்தது. அங்கே பார்லிமெண்டு இல்லாததால், பார்லிமெண்டு செயல் முறைக்கும் இடமில்லை. ஆயினும், அங்குக்கூட ஜார் தத்துவத்துக்கு எதிரான போராட்டத்தில் "சட்ட விரோதமான" முறைகள் என்று சொல்லப்பட்டவற்றைக் கைவிட்டுச் சிறிதுகாலம் அமைதியான பிரசாரத்தைக் கைக்கொள்ள இடமிருந்தது. ஆனால், இது விஷயமாக லெனின் திட்டமாகவும் தெளிவாகவும் அபிப்பிராயம் கொண்டிருந்தார். கொள்கையைத் தளர்த்துவதோ விட்டுக் கொடுப்பதோ கூடாது என்று அவர் உறுதியாய்க் கூறிவிட்டார். அப்படிச் செய்தால் கட்சிக்குள் சமயோசிதவாதிகள் ஏராளமாக வந்து நுழைந்து கொள்வார்கள் என்று அவர் பயந்தார். மேல்நாட்டு அபேதவாதக் கட்சிகள் கையாண்ட முறைகள் அவருக்குத் திருப்தி அளிக்கவில்லை. இன்னொரு சந்தர்ப்பத்தில் அவர் மேல்நாட்டு அபேதவாதிகளைப் பற்றிப் பின் வருமாறு எழுதினார்: "அவர்கள் கையாண்ட பார்லிமெண்டுத் தந்திரமுறைகள் இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாத கட்சிச் சீர்கேட்டிற்குக் காரணமாயிருந்தன. அவை ஒவ்வொரு அபேதவாதக் கட்சியையும் ஒரு 'டாமனிஹால்' ஆக்கிவிட்டது. (டாமனிஹால், நியூயார்க்கில் உள்ளது. அதை அரசியல் ஊழ

லுக்குப் பரியாயமாக வழங்குவது வழக்கம்.) அதாவது, ஒவ்வொரு கட்சியிலும் சுயநலக் கும்பலும் உத்தியோக வேட்டைக் கும்பலும் பெருத்துவிட்டன." இவ்வளவு கடுமையான சட்டதிட்டங்களுக்கு உட்பட்டுத் தன்னுடன் எத்தனை பேர் இருப்பார்கள் என்பது பற்றி லெனின் கவலைப்படவில்லை. ஒரு சமயம் அவன் தான் மட்டும் தனியாக நின்று விடுவதற்கும் தயார் என்று கூறினான். ஆனால், "சம்பூரணவாதிகள்" தான் கட்சியில் சேரலாம் என்று அவன் பிடிவாதமாக வற்புறுத்தி வந்தான். 'அவர்கள் லட்சியத்துக்காக சர்வஸ்வத்தையும் கொடுப்பவர்களாக இருக்கவேண்டும்; ஜனங்கள் தங்களைப் புகழாவிட்டாலும், ஊக்கம் குன்றாமல் வேலை செய்பவர்களாக இருக்கவேண்டும்' என்று அவன் கூறினான். இயக்கத்தைத் திறம்பட விருத்தி செய்யவல்ல புரட்சியில் தேர்ந்த நிபுணர்களைக் கொண்ட ஒரு ஸ்தாபனத்தை வளர்க்க விரும்பினான் லெனின். அவனுடைய திட்டத்தில் அநுதாபிகளுக்கும் 'அற்ற குளத்தில் அறு நீர்ப்பறவை' போல்பவர்களுக்கும் இடமில்லை.

இத்தகைய ஒரு கொள்கையை மேற்கொள்வது எளிதல்ல. லெனின் இவ்வாறு செய்வது அறிவுடைமையாகாது என்றும் பலர் கருதினார்கள். ஆனால், வெற்றி லெனின் பட்சத்தில் இருந்தது. அபேதவாதக் கட்சி இரண்டாகப் பிளவுபட்டது. ஒன்று 'போல்ஷிவிக்' கட்சி என்றும், மற்றொன்று 'மென்ஷிவிக்' கட்சி என்றும் அழைக்கப்பட்டன. அவ்விரண்டு பெயர்களும் அதிலிருந்து மிகுந்த பிரபலம் அடைந்தன. இப்போது சிலருக்குப் 'போல்ஷிவிக்' என்கிற வார்த்தையைக் கேட்பதே நாராசம் காய்ச்சிவிட்டது போலிருக்கிறது. ஆனால், அதன் பொருள் 'பெரும்பான்மை' என்பதைத் தவிர வேறொன்றுமில்லை. 'மென்ஷிவிக்' என்றால் 'சிறு

பான்மை' என்று பொருள். 1903-ல் கட்சிப் பிளவு ஏற்பட்ட பின்னர் லெனினைப் பின்பற்றுவோர் பெரும்பான்மையோரா யிருந்தபடியால் அவர்கள் 'போல்ஷிவிக்கர்கள்' என்று அழைக்கப்பட்டார்கள். 1917-ம் ஆண்டுப் புரட்சியில் லெனினுக்குப் பெரிய சகாவாக விளங்கிய டிராட்ஸ்கி என்பார் அப்போது 24வயதுடைய ஓர் இளைஞர். அவர் அச்சமயம் 'மென்ஷிவிக்கர்கள்' பக்கல் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்கூறிய வாதப் பிரதி வாதங்களும் கட்சிப் பிரதி கட்சிச் சண்டைகளும் ருஷியாவுக்கு வெகு தொலைவிலுள்ள லண்டன் மாநகரில் நடந்துவந்தன என்பதைக் கேட்க நீ ஆச்சரியப் படுவாய். ஒரு ருஷியக் கட்சிக் கூட்டம் நடைபெறுவதற்கு ஜார் பரிபாலன ருஷியாவில் இடமில்லை. அதன் அங்கத்தினர்களில் பெரும்பாலோர் நாடு கடத்தப்பட்டவர்களோ அல்லது சைபீரியாவிலிருந்து தப்பி ஓடிவந்தவர்களோ ஆவர். ஆகவே, அவர்கள் லண்டனில் கூடவேண்டியதாயிற்று.

இதற்கிடையில் ருஷியாவில் புயல் குமுறிக் கொண்டிருந்தது. அரசியல் வேலை நிறுத்தங்கள் அதற்குச் சின்னமாக விளங்கின. அரசியல் வேலை நிறுத்தம் என்பது தொழிலாளர்கள் சம்பள உயர்வு போன்ற தங்கள் பொருளியல் அபிவிருத்தியைக் குறித்துச் செய்யாமல் அரசாங்கத்தின் அரசியல் காரியம் ஏதாவதொன்றை எதிர்த்துச் செய்யும் வேலை நிறுத்தமாகும். அது தொழிலாளரிடையே அரசியல் விழிப்பு ஏற்படுவதைக் காட்டுகிறது. காந்திஜி கைது செய்யப்பட்டதற்காகவோ அன்றி அரசாங்கத்தின் அடக்குமுறை எதையாவது எதிர்த்தோ இந்தியத் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்தால் அது அரசியல் வேலை நிறுத்தமாகும். மேல் ஐரோப்பாவில் பலம் பொருந்திய தொழிற் சங்கங்

களும் தொழிலாளர் ஸ்தாபனங்களும் இருந்தும் அங்கு இத்தகைய அரசியல் வேலை நிறுத்தங்கள் அபூர்வமாக இருந்தது ஒரு விந்தையே. அல்லது, தொழிலாளர் தலைவர்கள் தங்களுடைய சுய நலத்தை முன்னிட்டுத் தங்கள் தீவிரத்தைக் குறைத்துக் கொண்டது அதற்குக் காரணமாயிருக்கலாம். ருஷியாவில் ஜார் அரசாங்கம் இடைவிடாது புரிந்து வந்த கொடுமை காரணமாக அரசியல் பிரச்சினை அங்கு எப்போதும் முன்னணியில் இருந்து வந்தது. 1903-ம் ஆண்டிலேயே தென் ருஷியாவில் பல அரசியல் வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன. பிறருடைய தூண்டுதலின்றித் தொழிலாளர் தாமாகவே அவற்றை நடத்தினார்கள். மிகப் பெரிய அளவில் நடைபெற்ற அப்பொதுஜன இயக்கம் தலைவர்கள் இன்மையால் குலைந்து போயிற்று.

அடுத்த வருஷம் கீழ்க் கோடியில் தகராறு ஏற்பட்டது. இதற்கு முன் கடிதம் ஒன்றில் நான் கூறிய கீழ்க்கண்ட விஷயங்கள் உனக்கு ஞாபகமிருக்கலாம்: "ஆசியப் பாழ்வெளிகளின் வழியாகப் பசிபிக் சமுத்திரம் வரையில் போடப்பட்ட மிக நீளமான சைபீரிய ரெயில்வே — 1894-ம் ஆண்டிலிருந்து ருஷியாவுக்கும் ஜப்பானுக்கும் விளைந்து வந்த பூசல்கள்—1904-5-ல் நடந்த ருஷிய - ஜப்பானிய யுத்தம்—1905 ஜனவரி 22 ஞாயிற்றுக் கிழமை 'குருதி ஞாயிறு' ஆன வரலாறு; அதாவது, ஜாரிடம் பசிக் கொடுமையைச் சொல்லி முறையிடுவதற்காக ஒரு மத போதகரால் நடத்திச் செல்லப்பட்ட அமைதியான கூட்டத்தின் மீது ஜாரின் துருப்புகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது." மேற்கூறிய கோரச் செய்கையைக் கண்டு தேசம் கொதித்தெழுந்தது. பல இடங்களில் அரசியல் வேலை நிறுத்தங்கள் ஆரம்பமாயின. கடைசியில் ருஷியா

வெங்கும் பொதுவேலை நிறுத்தம் நடைபெற்றது. மார்க்ஸ் கூறிய புது வகையான புரட்சி ஆரம்பமாய் விட்டது.

வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்கள் எல்லா இடங்களிலும் 'சோவியத்' என்றொரு புது ஸ்தாபனத்தைச் சிருஷ்டித்தார்கள். முக்கியமாக, மாஸ்கோ பீட்டர்ஸ்பர்க் போன்ற பெரிய நகரங்களில் வேலை நிறுத்தம் செய்தவர்கள் இதில் முன்னணியில் இருந்தார்கள். 'சோவியத்' என்பது முதலில் பொதுவேலை நிறுத்தத்தை நடத்துவதற்கான ஒரு கமிட்டியாக மட்டும் இருந்தது. பீட்டர்ஸ்பர்க் சோவியத்துக்கு டிராட்ஸ்கி தலைவர் ஆனார். ஜார் அரசாங்கத்துக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. அது ஓரளவு இறங்கி வந்து அரசியல் நிர்ணய சபை ஏற்படுத்துவதாகவும், ஜனநாயக வோட்டுரிமை வழங்குவதாகவும் வாக்குறுதி அளித்தது. யதேச்சாதிகாரத்தின் கோட்டை இடிந்து விட்டது போல் காணப்பட்டது. விவசாயிகளின் கலகங்களும், பயங்கரவாதிகளின் வெடிகுண்டுகளும், மிதவாதிகளின் கெஞ்சல்களும் சாதிக்க முடியாத ஒன்றைத் தொழிலாளர்களின் பொதுவேலை நிறுத்தம் சாதித்துவிட்டது. வணங்கா முடி படைத்த ஜார் ஆட்சியானது தன்னுடைய சரித்திரத்திலேயே முதல் தடவையாகப் பொது ஜனங்களுக்கு முடி சாய்த்துத் தலை வணங்க வேண்டியதாயிற்று. ஆனால், பொது ஜனங்களின் இவ்வெற்றியானது வெறும் ஓட்டை வெற்றியாக முடிந்தது. ஆயினும், அதன் ஞாபகம் தொழிலாளருக்குக் குன்றின் மேலிட்ட விளக்கென விளங்கி வந்தது.

ஒரு அரசியல் நிர்ணய சபை ஏற்படுத்துவதாக ஜார் வாக்களித்தானல்லவா? அந்தச் சபை 'தூமா' (Duma)

என்று அழைக்கப்பட்டது. 'தூமா' என்னும் பதத்துக்கும் 'பார்லிமெண்டு' என்னும் பதத்துக்கும் ஒரு வித்தியாசம். 'தூமா' என்றால் 'ஆலோசனை சபை' என்று பொருள். 'பார்லிமெண்டு' என்னும் சொல்லோ, 'பேசுதல்' என்னும் பொருளுள்ள 'பார்லே' (Parler) என்னும் பிரெஞ்சு மொழியடியாகப் பிறந்து 'வாக்கு வாத சபை' என்று பொருள் கொண்டது. ஜார் அவ்வாறு வாக்களித்ததும் மிதவாத லிபரல்களின் உச்சி குளிர்ந்துவிட்டது. அவர்கள் எப்பொழுதுமே எளிதில் திருப்தி அடைந்து விடுவார்கள். புரட்சியினால் அரட்சி அடைந்திருந்த நிலச்சுவான்தார்கள் பெரிய விவசாயிகளுக்கு அனுகூலமான சில சீர்திருத்தங்களுக்கு உடனே இணங்கினார்கள். அதற்கப்புறம் ஜார் அரசாங்கம் உண்மையான புரட்சிக்காரர்கள் பக்கம் திரும்பியது. அவர்களுடைய பலவீனத்தை நன்குணர்ந்த அரசாங்கம் அவர்களை வீழ்த்துவதற்கான வழிகளில் வேலை செய்ய ஆரம்பித்தது. ஒரு பக்கம் ஏழைத் தொழிலாளரும் விவசாயிகளும் இருந்தார்கள். அவர்களுக்கு அன்ன விசாரம்தான் பெரிதாயிருந்தது. அரசியல் சீர்திருத்தங்களைப்பற்றி அவர்கள் அதிகமாகக் கவலை கொள்ளவில்லை. தொழிலாளர் அதிகக் கூலி வேண்டுமென்று கேட்டார்கள். விவசாயிகளோ "எங்களுக்கு நிலத்தைக் கொடுங்கள்" என்று கூக்குரலிட்டார்கள். நிற்க. இன்னொரு பக்கம் புரட்சிக்காரர்கள் இருந்தார்கள். அவர்களுடைய நாட்டம் அரசியல் பிரச்சினையில் அதிகமாகச் சென்றது. மேல் ஐரோப்பிய ரீதியில் ஒரு பார்லிமெண்டைப் பெற அவர்கள் ஆவல் கொண்டிருந்தார்கள். பொதுமக்களின் உணர்ச்சிகளையோ உண்மையான கோரிக்கைகளையோ அவர்கள் அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை. தொழிற்சங்கங்கள் ஸ்தாபித்து நடத்தி

வந்த நல்ல நிலைமையிலுள்ள தேர்ந்த தொழிலாளரில் பலர் புரட்சியில் சேர்ந்ததற்குக் காரணம் அதன் அரசியல் அம்சத்தை அவர்கள் போற்றியதுதான். ஆனால், நகரங்களிலும் கிராமங்களிலும் வாழ்ந்துவந்த பொதுமக்கள் அரசியல் விஷயத்தில் சிரத்தையற்றவர்களாக இருந்தார்கள். நிலைமை இவ்வாறிருப்பதை உணர்ந்த ஜார் அரசாங்கமும் போலீசும் எல்லா யதேச்சாதிகார சர்க்கார்களும் தொன்றுதொட்டுக் கையாண்டு வரும் பிரித்தாளும் தந்திரத்தைக் கையாள ஆரம்பித்தார்கள். அவர்கள் பசியினால் வாடும் பொதுமக்களைப் புரட்சிக்காரருக்கு விரோதமாகக் கிளப்பிவிட்டார்கள். அதன்பயனாக ருஷியர் யூதரையும், தார்த்தாரியர் அர்மீனியரையும் படுகொலை புரிந்தார்கள். புரட்சிக்காரர்களான மாணவர்களுக்கும் ஏழைத் தொழிலாளருக்கும் கூடப் போராட்டங்கள் நிகழ்ந்தன. அரசாங்கம் இவ்வாறு தேசத்தின் பல பாகங்களிலும் புரட்சியை இடுப்பொடித்த பின்னர் புரட்சியின் கோட்டைகளான பீட்டர்ஸ்பர்க்கையும் மாஸ்கோவையும் தாக்க ஆரம்பித்தது. பீட்டர்ஸ்பர்க் சோவியத் எளிதில் அடக்கப்பட்டு விட்டது. மாஸ்கோவில் ராணுவம் புரட்சிக்காரருக்கு உதவி புரிந்தது. அதனால் ஐந்து நாள் சண்டைக்குப் பின்பே மாஸ்கோ சோவியத்தை நசுக்க முடிந்தது. அதற்குப் பின் அரசாங்கம் கோரமாகப் பழி தீர்த்துக்கொள்ளத் தொடங்கியது. மாஸ்கோவில் மட்டும் விசாரணையின்றித் தூக்கிலிடப்பட்டவர்கள் 1000 பேர். சிறையிடப்பட்டவர்கள் 70,000 பேர். இப்புரட்சியில் தேசம் முழுதிலும் மடிந்தவர்கள் தொகை பதினாலாயிரம்.

இவ்வாறு, 1905-ம் வருஷத்து ருஷியப் புரட்சி அலங்கோலத்திலும் படுதோல்வியிலும் முடிவுற்றது. தோல்வி

யுற்ற இப்புரட்சி, வெற்றிபெற்ற 1917-ம் வருஷப் புரட்சிக்கு ஓர் முகவுரையாகும் என்று சொல்லுகிறார்கள். பொதுமக்கள் விழிப்புற்றுப் பெரிய அளவில் செயலாற்ற வேண்டுமாயின் அவர்கள் "பெரிய நிகழ்ச்சிகள் என்னும் பள்ளிக்கூடத்தில் படித்துத் தேறவேண்டியது அவசியம்." 1905-ம் வருஷத்து நிகழ்ச்சிகள் அத்தகைய படிப்பை ருஷியப் பொதுமக்களுக்கு அளித்தன. ஆனால், அந்தப் படிப்புக்கு அவர்கள் அளித்த குருதட்சிணை மிகவும் அதிகமாகும்.

தூமாவுக்குத் தேர்தல் நடந்தது. அதன் கூட்டம் 1906 மே மாதத்தில் நடந்தது. அதை ஒரு புரட்சிகர மானசபை என்றே சொல்ல முடியாது. ஆயினும், ஜாரின் பார்வையில் அது மிகவும் தீவிரம் வாய்ந்ததாகப்பட்டது. ஆகவே, அவர் அதை இரண்டரை மாதங்களுக்குப்பின் வீட்டுக்கு அனுப்பி விட்டார். புரட்சியை ஒடுக்கிய பின்னர் தூமாவின் கோபத்துக்கு அவர் துளியும் அஞ்சவில்லை. ஜாரினால் சீட்டுக் கொடுக்கப்பட்ட மத்தியவகுப்பைச்சேர்ந்த மித வாதிகளான தூமா அங்கத்தினர்கள் பின்லாந்துக்குப் போய்ச் சேர்ந்தார்கள் (பின்லாந்து பீட்டர்ஸ்பர்குக்கு மிகவும் அருகில் இருந்ததோடு அக்காலத்தில் ஜாரின் ஆதிக்கத்துக் குட்பட்ட அரைவாசிச் சுதந்திர நாடாகவும் இருந்தது). பின்லாந்திலிருந்து அவர்கள், ஜாரின் செய்கையை எதிர்ப்பதற்கு அடையாளமாக ருஷியமக்கள் வரி கொடுக்க மறுக்கவேண்டுமென்றும், தரைப்படைக்கும் கடற்படைக்கும் ஆள் சேர்ப்பதை எதிர்க்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்கள். ஆனால், அவர்களுக்கும் பொதுமக்களுக்கும் தொடர்பு இன்மையால் அவர்களுடைய வேண்டுகோளை மதித்து நடப்பார் ஒருவரும் இல்லை.

அடுத்த வருஷம் (1907) இரண்டாவது தூமா தேர்ந்தெடுக்கப்பட்டது. தீவிரவாதிகள் தேர்ந்தெடுக்கப்படாமல் இருப்பதற்காகப் போலீஸ் அவர்களைக் கைது செய்தும் இன்னும் பல இன்னல்கள் விளைத்தும் அவர்களுக்கு இடையூறு விளைத்தது. இத்தனை சங்கடங்களுக்கிடையில் தேர்தெடுக்கப்பட்ட தூமாவும் ஜாரின் பிரியத்துக்குப் பாத்திரமாகவில்லை. அதை அவர் மூன்று மாதங்களுக்குப்பின் 'டிஸ்மிஸ்' செய்து விட்டார். அதற்குப்பின் ஜார் அரசாங்கம் தனக்கு ஆகாதவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதைத் தடுப்பதற்காகத் தேர்தல் சட்டத்தை மாற்றத் தொடங்கியது. அதில் அது வெற்றி பெற்றது. மூன்றாவது தடவையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தூமா 'கண்ணியம்' வாய்ந்ததாகவும் பழைமைப் பற்று மிகுந்ததாகவும் இருந்தது. ஆகவே, அது நீண்ட காலம் உயிரோடிருந்தது.

1905-ம் ஆண்டுப் புரட்சியை ஒடுக்கிய பிறகு, ஜார் தன்னுடைய இஷ்டம் போல் ஆட்சியை நடத்துவதை விடுத்து இந்த அதிகாரமற்ற தூமாக்களை கட்டிக் கொண்டு ஏன் அழ வேண்டும் என்று நீ ஆச்சரிப்படலாம். யதேச்சாதிகார ஆட்சி நடத்துவதற்கு வேண்டிய பலம் அவருக்கு இருந்தது வாஸ்தவமே. ஆனால், அவர் ருஷியாவில் சில சில்லறைக் கோஷ்டிகளைத் திருப்திப்படுத்த விரும்பினார். அவர்களில் பணக்கார நிலச்சுவான்தார்களையும் வியாபாரிகளையும் முக்கியமாகக் குறிக்கவேண்டும். நாட்டின் நிலை சீர்கேடடைந்திருந்தது. ஜனங்கள் அடக்கி ஒடுக்கப்பட்டது வாஸ்தவமாயினும் அவர்கள் கடுகடுப்பும் சினமும் கொண்டிருந்தார்கள். ஆகவே, குறைந்தபட்சம் உயர் நிலையிலுள்ள பணக்காரரையாவது தன் கைக்குள் வைத்திருப்பது நலம் என்று ஜார் எண்ணினான். ஜாரின் செய்கைக்கு இதைவிட முக்கியமான இன்னொரு காரணமும்

இருந்தது. அவன் தன்னை ஒரு தாராளப் போக்குள்ள அரசனாக ஐரோப்பிய நாடுகளுக்குக் காட்டிக்கொள்ள விரும்பினான். ஜார் ஆட்சி என்றாலே கொடுங்கோன்மையும் வெருவந்த செய்கையும்தான் என்று மேல் ஐரோப்பிய நாட்டினர் எண்ணத் தலைப்பட்டார்கள். முதல் தூமாவை ஜார் கலைத்தபொழுது பிரிட்டிஷ் லிபரல் கட்சித் தலைவர் ஒருவர் காமன்ஸ் சபையில், 'தூமா மாண்டு விட்டது! தூமா நீடூழி வாழ்க!' என்று கூவியதாக எனக்கு ஞாபகம். இதிலிருந்து தூமாவின் பால் வேற்று நாடுகள் காட்டிய அநுதாபம் நன்கு விளங்குகிறதல்லவா? மேலும், ஜாருக்குப் பணம் தேவையாயிருந்தது. பணம் என்றால் அற்ப சொற்பமல்ல; பெருந்தொகை. ஜாருக்கு வேண்டிய பணத்தைப் பிரான்சு கடனாகக் கொடுத்து வந்தது. பிரான்சினிடமிருந்து பெற்ற கடனைக் கொண்டுதான் ஜார் 1905-ம் ஆண்டுப் புரட்சியை அடக்கினான். குடியரசுப் பிரான்சு யதேச்சாதிகார ருஷியாவுக்கு அதன் தீவிரவாதிகளையும் புரட்சிக்காரரையும் நசுக்கப் பணம் கொடுத்து உதவுவதென்பது ஒரு விசித்திர நிகழ்ச்சி அல்லவா? ஆனால், குடியரசுப் பிரான்சு என்பது பிரெஞ்சுப் பாங்கு முதலாளிகளையே குறித்தது. மேற்கூறிய காரணங்கள் ஒருபுறமிருக்க, ஜாருக்குத் தானும் நியாயமாக அரசு புரிவதாகக் காட்டிக் கொள்ள வேண்டியது அவசியமாயிருந்தது. அதற்குத் தூமா என்கிற அங்கம் பெரிதும் உதவியாயிருந்தது.

இதற்கிடையில் ஐரோப்பிய நிலைமையும் உலக நிலைமையும் மாறிவந்தன. ருஷ்யா ஜப்பானிடம் தோல்வி அடைந்த பிறகு அதன்பால் இங்கிலாந்துக்கிருந்த பயம் நீங்கி விட்டது. ஆனால், அதற்கு ஒரு புது பயம் தோன்றியிருந்தது. அந்தப் பயம் ஜெர்மனியால் ஏற்பட்டதாகும்.

நீண்டகாலமாக இங்கிலாந்து ஏகபோகமாக அனுபவித்து வரும் தொழில் துறையிலும் கடலிலும் ஜெர்மனி அதற்குப் போட்டியாக வந்து சேர்ந்தது. பிரான்சு ருஷியாவுக்குத் தாராளமாகக் கடன்கள் வழங்கியதற்கும் ஜெர்மனியிடம் அதற்கிருந்த பயமே காரணம். இந்த ஜெர்மன் அபாயம் காரணமாகப் பழம் பகைவர்களான இங்கிலாந்தும் ருஷியாவும் நெருங்கிய தோழமை பூண்டார்கள். 1907-ல் கையெழுத்திடப்பட்ட ஆங்கிலோ-ருஷிய உடன்படிக்கை இருதிறத்தாருக்கும் இடையே ஆப்கானிஸ்தானம், பாரசீகம் முதலிய எல்லா இடங்களிலும் இருந்த முக்கியமான தகராறுகளையெல்லாம் தீர்த்து வைத்தது. பிறகு, இங்கிலாந்து, பிரான்சு, ருஷியா ஆகிய மூன்று நாடுகளுக்கிடையில் ஒரு முக்கூட்டுறவு ஏற்பட்டது. பால்கன் பிரதேசத்தில் ஆஸ்திரியா ருஷியாவுக்குப் போட்டியாக விளங்கியது. அது ஜெர்மனியுடன் நேசமாகவும் இருந்தது. அவ்வாறே, இதாலியும் எழுத்தளவில் ஜெர்மனியுடன் சேர்ந்திருந்தது. ஆக, இங்கிலாந்து-பிரான்சு-ருஷியா முக்கூட்டும், ஜெர்மனி-ஆஸ்திரியா-இதாலி முக்கூட்டும் ஒன்றையொன்று எதிர்த்து நின்றன. இவ்விரு தரப்புச் சேனைகளும் யுத்தத்துக்குச் சன்னத்தம் செய்து வந்தன. நிலைமை இவ்வாறிருக்கும்போது அப்பாவிகளான பொது ஜனங்கள் தங்களுக்கு நேரவிருக்கும் பயங்கரங்களை ஒரு சிறிதும் அறியாதவர்களாய் அமைதியாகத் தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

1905-க்குப் பிற்பட்ட மேற்கூறிய வருஷங்களில் ருஷியாவில் பிற்போக்கு தாண்டவமாடியது. போல்ஷிவிக்கரும் மற்றப் புரட்சிக்காரரும் அடியோடு நசுக்கப்பட்டார்கள். லெனின் போன்ற நாடு கடத்தப்பட்ட போல்ஷிவிக்கர் சிலர் வெளி நாடுகளில் பொறுமையை இழக்

காமல் வேலை செய்து வந்தார்கள். அவர்கள் புஸ்தகங்கள் எழுதியும், சிறு பிரசுரங்கள் வெளியிட்டும், மாறி வரும் நிலைமைகளுக்குப் பொருந்த மார்க்சிய சித்தாந்தத்தை அமைக்க முயன்றும் வந்தார்கள். போல்ஷிவிக் கட்சிக்கும் மென்ஷிவிக் கட்சிக்கும் இடையே இருந்த பிளவு அதிகரித்தது. பிற்போக்குத் தாண்டவமாடிய அக்காலத்தில் மென்ஷிவிக் கட்சி அதிகப் பிரபலம் அடைந்தது. அது சிறுபான்மைக் கட்சி என்று பெயர் பூண்டிருந்தாலும், பெரும்பான்மைக் கட்சி என்று அழைக்கப்பட்ட போல்ஷிவிக் கட்சியை விட அதிக ஆதரவை அப்போதைக்குப் பெற்றிருந்தது. 1912-லிருந்து ருஷியாவில் மீண்டும் ஒரு மாறுதல் தோன்றத் தொடங்கியது. புரட்சிகரமான நடவடிக்கைகள் அதிகரித்தன. அவற்றுடன் போல்ஷிவியமும் பிரபலமடைந்தது. 1914-ம் வருஷ மத்தியில் பெட்ரோ கிராடில் (பீட்டர்ஸ் பர்க்) புரட்சியைப் பற்றிய பேச்சுப் பலமாயிருந்தது. 1905-ல் நடந்ததைப் போல ஏராளமான அரசியல் வேலை நிறுத்தங்கள் நிகழ்ந்தன. ஆயினும், எழுவரைக் கொண்ட பீட்டர்ஸ்பர்க் போல்ஷிவியக் கமிட்டியில் மூவர் ஜாரின் இரகசியப் போலீசைச் சேர்ந்தவர்கள் என்பது பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது! புரட்சிகள் ஆக்கப்படும் விதம் இதுதான்! டூமாவில் ஒரு சிறு போல்ஷிவிக் கோஷ்டி இருந்தது. மலினோங்கி என்பவன் அதற்குத் தலைவனாயிருந்தான். அவனும் போலீசின் கையாள் என்பது பிறகு தெரிய வந்தது! லெனின் அவனிடத்தில் நம்பிக்கை கொண்டிருந்தான்.

1914 ஆகஸ்டில் உலகயுத்தம் ஆரம்பமாயிற்று. திடீரென்று எல்லோருடைய கவனமும் போர் முனைகளுக்குத் திரும்பியது. கட்டாய ராணுவசேவை முக்கியமான ஊழியர்களை அபகரித்துச் சென்றது.

புரட்சி இயக்கம் படுத்துவிட்டது. சில போல்ஷிவிக்கர்கள் யுத்தத்துக்கு விரோதமாகப் பேசினார்கள். அவர்களெல்லாம் ஜனங்களுடைய ஆதரவை அடியோடு இழந்தார்கள்.

நாம் போக வேண்டிய இடத்துக்கு இப்போது வந்து விட்டோம். அதாவது, நம்முடைய கதையை உலக யுத்தம் வரையில் கொண்டு வந்து விட்டோம். இங்கே, அதை நாம் நிறுத்திக் கொள்ள வேண்டும். ஆனால், இக்கடிதத்தை முடிக்கு முன் ருஷியக் கலையைப் பற்றியும் இலக்கியத்தைப் பற்றியும் சிறிது கூற விரும்புகிறேன். ஜார் பரிபாலன ருஷியா எத்தனையோ குற்றங் குறைகளுக்கு நிலைக்களனாயிருந்தது உண்மை. ஆனால், அது தன்னுடைய அற்புதமான நாட்டியக் கலையை அழியாமல் போற்றி வந்தது ஜகத் பிரசித்தம். 19-வது நூற்றாண்டில் அங்கே தலை சிறந்த ஆசிரியர் பலர் தோன்றி ஒரு பெரிய இலக்கியப் பரம்பரையைச் சிருஷ்டித்தார்கள். நீண்ட நவீனங்கள் (நாவல்கள்) எழுதுவதிலும் சிறு கதைகள் எழுதுவதிலும் அவர்கள் இணையற்ற திறமை காட்டினார்கள். அந் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் ருஷிய மகாகவியாகிய புஷ்கின் உயிரோடிருந்தார். அவர் ஆங்கிலக் கவித்திரயமாகிய பைரன், கீட்ஸ், ஷெல்லி ஆகியோர் காலத்தைச் சேர்ந்தவர். ருஷிய நாவலாசிரியர்களுக்குள்ளே கோகல், டர்ஜினீவ், செகோ, தோஸ்தோயெளஸ்கி ஆகியோர் பிரசித்தி பெற்றவர்கள். ஆனால், அவர்களுக்கெல்லாம் முடிமணியாக விளங்கியவர் லியோ டால்ஸ்டாய். அவர் நாவல்கள் எழுதுவதில் மகா மேதையாக விளங்கியதோடு சமய ஆத்மீகத் துறைகளிலும் ஒப்புயர்வற்ற தலைவராக விளங்குகிறார். அவருடைய பிரபாவம் உலகெங்கும் பரந்தது. அப்போது தென் ஆப்பிரிக்காவில் இருந்த காந்திஜியை

யும் அது எட்டிற்று. இருவரும் ஒருவரை யொருவர் போற்றியதோடு ஒருவருக் கொருவர் கடிதங்களும் பறி மாறிக் கொண்டார்கள். இருவருக்கும் அஹிம்சையி லுள்ள உறுதியான நம்பிக்கையே அவர்களைப் பிணைத்து நின்றது. கிறிஸ்துவின் மூலதத்துவம் அஹிம்சையே என்பது டால்ஸ்டாயின் அபிப்பிராயம். காந்திஜியும் புராதன ஹிந்து கிரந்தங்களின் சாரம் அஹிம்சைதான் என்னும் முடிவுக்கு வந்தார். டால்ஸ்டாய் ஒரு தீர்க்க தரிசியாக மட்டும் இருந்தார். அவர் தாம் கண்ட உண்மை களைத் தம் வாழ்க்கையில் அனுஷ்டித்தது வாஸ்தவம். ஆனால், அவருக்கும் வெளி உலகத்துக்கும் அவ்வளவாகத் தொடர்பு இல்லை. காந்திஜியோ எனில் அஹிம்சை என்கிற இந்த எதிர்மறைத் தத்துவத்தை மிகச்சிறந்த கர்மயோக முறையாக்கி அதைத் தென் ஆப்பிரிக்கா விலும் இந்தியாவிலும் பொதுஜனப் பிரச்சினைகளுக்குப் பிரயோகித்தார்.

19-வது நூற்றுண்டைச் சேர்ந்த மிகப்பெரிய ருஷிய ஆசிரியர்களில் ஒருவரான மாக்சிம் கார்க்கி * இன்னும் ஜீவதசையோடிருக்கிறார்.

* கார்க்கி 1936-ல் புகழுடம்பு எய்தினர்.

145

ஒரு சகாப்தத்தின் முடிவு

மார்ச்சு 22, 1933.

பத்தொன்பதாவது நூற்றுண்டு! இந்த நூறு வருஷ காலம் நம்மை வெகுகாலம் தாமதிக்கச் செய்து விட்டதல்லவா? ஆகக்கூடி, இப்பொழுது நாலு மாத காலமாக நான் அதைப் பற்றி எழுதிவருகிறேன். எனக்கும் சிறிது சலிப்புத் தட்டிவிட்டது. இக் கடிதங் களைப் படிக்கும்போது உனக்கும் அப்படித்தான் இருக்கு மென்று நினைக்கிறேன். அதைப் பற்றி எழுத ஆரம் பித்தபோது அது மிகவும் வசீகரமான ஒரு காலப் பகுதி என்று சொன்னேன். ஆனால், அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் கைத்துவிடுகிறது. உண்மையில் நாம் 19-வது நூற்றுண்டைக் கடந்து 20-வது நூற்றுண்டில் பிரவே சித்து விட்டோம். நம்முடைய எல்லைக் கல் 1914-ம் ஆண்டு. அந்த ஆண்டில்தான் ஐரோப்பாவில் யுத்த அரக்கன் தன்னுடைய கோர தாண்டவத்தை ஆரம்பித் தான். அந்த ஆண்டிலிருந்து சரித்திரத்தின் கதியே மாறி விட்டது. அந்த ஆண்டில் ஒரு சகாப்தம் மறைந்து இன்னொரு சகாப்தம் தோன்றியது.

1914! இன்றைய தினம் இன்னும் பத்தொன்பது வருஷம் பூர்த்தியாகவில்லை. மனித வாழ்க்கையில் பத் தொன்பது வருஷம் ஒரு நீண்ட காலம் அல்ல. சரித் திரத்தில் அதைக் கண் மூடிக் கண் திறக்கும் நேரம் என்றே சொல்லலாம். ஆனால், இந்தப் பத்தொன்பது வருஷ காலத்தில் உலகத்தில் பெரும் பெரும் மாறுதல்கள் நிகழ்ந்துவிட்டன; இன்னும் நிகழ்ந்து வருகின்றன. அவற்றை நோக்கும்போது ஒரு யுகமே கழிந்துவிட்டது

போல் தோன்றுகிறது. 1914-ம் ஆண்டும் அதற்கு முற்பட்ட ஆண்டுகளும் ஏதோ புராண காலத்தைச் சேர்ந்தவை மாதிரி நமக்குத் தோன்றுகின்றன. அவற்றைப் பற்றிப் புஸ்தகங்களில்தான் படித்துத் தெரிந்து கொள்ளலாம். நம்முடைய காலம் அவ்வளவு தூரம் மாறி விட்டது. நமக்கு இவ்விதப் பிரமையை உண்டாக்கும் அப் பெருமாறுதல்களைப் பற்றிப் பின்னர் கூறுவேன். இப்பொழுது ஒரு எச்சரிக்கை மட்டும் செய்ய விரும்புகிறேன். நீ பள்ளிக்கூடத்தில் பூகோளம் படிக்கிறாய். இப்போது நீ படிக்கும் பூகோளத்துக்கும் 1914-க்கு முன் நான் சிறுவனாயிருந்தபோது படித்த பூகோளத்துக்கும் ரொம்ப வித்தியாசம் உண்டு. நான் படித்த பூகோளத்தைப் பெரும்பான்மையும் பிறகு திருப்பிப் படிக்க நேர்ந்தது போல் சீக்கிரத்திலேயே உனக்கும் நேரலாம். யுத்த வெள்ளம் வந்து பழைய எல்லைக் கோடுகளையும் பழைய தேசங்களையும் அடித்துக்கொண்டு போய்விட்டது. அதற்குப் பின் புதிய தேசங்களும் புதிய எல்லைக் கோடுகளும் தோன்றின. அவற்றின் பெயர்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்வதுகூடக் கஷ்டமாயிருக்கிறது. நூற்றுக் கணக்கான நகரங்களுக்கு நேற்று இருந்த பெயர்கள் இன்று பார்த்தால் காணோம். செயின்ட் பீட்டர்ஸ்பர்க்காயிருந்தது பெட்ரோகிராட் ஆகிப் பின்னர் லெனின்கிராட் ஆகியது. கான்ஸ்டாண்டிநோபிளை இப்போது இஸ்தம்பூல் என்று அழைக்க வேண்டும். பீகிங் நகர் பீபிங் நகர் ஆய்விட்டது. பொஹிமியாவிலுள்ள பிரேக் செகோஸ்லொவாகியாவிலுள்ள பிரஹா என்று பேர்பெற்றது.

19-வது நூற்றாண்டைப் பற்றிய என்னுடைய கடிதங்களில் நான் கண்டங்களையும் தேசங்களையும் தனித்தனியே ஆராய்ந்தேன்; வெவ்வேறு இயக்கங்

களையும் ஒரே இயக்கத்தின் வெவ்வேறு தோற்றங்களையும் கூட நாம் தனித்தனியாகவே பார்த்தோம். ஆனால், இவையெல்லாம் ஏறக்குறைய ஒரே காலத்தில் நிகழ்ந்தவை என்பதை நீ மறந்திருக்க மாட்டாய். சரித்திரமானது விராட் புருஷனைப் போல் தன்னுடைய ஆயிரம் கால்களையும் ஏக காலத்தில் எடுத்தடியிட்டு உலக முழுவதும் முன்னேறிக்கொண்டிருந்தது. விஞ்ஞானம் தொழில், அரசியல் பொருளியல், முதலாளித்துவம் சாம்ராஜ்ய வாதம், ஜனநாயக வாதம் அபேதவாதம், டார்வினியம் மார்க்சியம், விடுதலை அடிமைத்தனம், செல்வம் நல்குரவு, யுத்தம் சமாதானம், நாகரிகம் அநாகரிகம், பஞ்சம் நோய்—ஆகிய எல்லாம் ஒன்றோடொன்று பின்னிக்கொண்டும், ஒன்றையொன்று பாதித்தும், ஒன்றால் மற்றொன்று பாதிக்கப்பட்டும் விசித்திரமான ஒரு காட்சியை அளித்தன. 19-வது நூற்றாண்டை நாம் ஒரு பூதக் கண்ணாடிக் காட்சிக்கு ஒப்பிடலாம். அக் காட்சி தெளிவில்லாமல் சதா ஓடிக்கொண்டும் சதா மாறிக்கொண்டும் இருந்தது. அதில் பல பகுதிகள் அருவருக்கத் தக்கவையாகவும் இருந்தன. இவ்வுண்மை ஏறக்குறைய மற்றக் காலப் பகுதிகளுக்கும் பொருந்துவதாகும்.

19-வது நூற்றாண்டின் முக்கிய விசேஷம் முதலாளித்துவத் தொழிலபிவிருத்தி என்பதை முன்பே கண்டோம். அதாவது நீர், நீராவி, மின்சாரம் போன்ற யந்திரசக்திகளின் துணைகொண்டு உற்பத்தியானது பெரிய அளவில் செய்யப்பட்டு வந்தது. இதனால் உலகின் வெவ்வேறு பாகங்களில் வெவ்வேறுவிதமான பலன்கள் ஏற்பட்டன. அவை நேர்முகமாகவும் மறை முகமாகவும் இருந்தன. எவ்வாறெனில், லங்காஷயர் மில்களில் (யந்திரத்தறியில்) நெய்யப்பட்ட துணியானது ஆறாயிரம் மைலுக்கு அப்பா

லுள்ள இந்தியக் கிராமங்களின் நிலைமையைத் தலைகீழாக்கியது. பிரிட்டிஷ் யந்திரத்தொழில் இந்தியக் கிராமக் கைத்தொழில்களில் பலவற்றை அழித்து விட்டது. முதலாளித்துவத் தொழில் இயங்குமாற்றல் வாய்ந்ததாக இருந்தது. அது தனக்குரிய இயற்கையைப் பற்றி நின்று மேலும் மேலும் விசுவரூபம் எடுத்துக்கொண்டே சென்றது. குண்டோதரனுடைய பசியைப்போல் அதன் பசி அடங்குவதாக இல்லை. சம்பாத்தியமே அதன் முக்கிய லட்சணமாக இருந்தது. அதன் ஆசைக்கு அளவே இல்லை. அது மேலும் மேலும் சம்பாதிப்பதும், சம்பாதித்ததைக் காப்பாற்றுவதும், மீண்டும் சம்பாதிப்பதுமாக இருந்து வந்தது. தனிமனிதர்கள் இம்முறையை மேற்கொண்டார்கள். தேசங்களும் இம்முறையையே கடைப்பிடித்தன. ஆகவே, இம்முறையின் கீழ் வளர்ந்த சமூகம் சம்பாத்திய சமூகம் என்று அழைக்கப்பட்டது. யந்திர உற்பத்தியை மேலும் மேலும் பெருக்க வேண்டியது; அதனால் கிடைக்கும் உபரி செல்வத்தை மேலும் மேலும் புதிய தொழிற்சாலைகள் கட்டுவதிலும் ரயில் பாதைகள் போடுவதிலும் உபயோகிக்க வேண்டியது. இதுதான் அம்முறையின் நோக்கம். அதில் முதலாளிகளைக் கோடீசுவரர்கள் ஆக்குவதும் அடங்கியிருந்த தென்பதைச் சொல்லவேண்டியதில்லை. இந்த நோக்கத்தை அடைவதற்காக மற்ற எல்லா நலன்களும் பலி கொடுக்கப்பட்டன. தொழில்களிலிருந்து பெருகிய செல்வத்துக்குக் காரணமான தொழிலாளர்கள் அதனால் அடைந்த நன்மை மிகவும் குறைவாகும். அவர்கள், பெண்கள் குழந்தைகள் உட்பட, நரகவேதனை அனுபவித்தார்கள். கடைசியில் அவர்களுடைய நிலை ஓரளவு சீர்திருந்தியது. இந்த முதலாளித்துவத் தொழில் எ[illegible]ளவும் குண்டோதரனின் வயிற்றை நிரப்பவும் அதை உ[illegible]

தேசங்களின் வயிற்றை நிரப்பவும் காலனிகளும் சார்பு நாடுகளும்கூட ஈவிரக்கமின்றிப் பலியிடப்பட்டன.

முதலாளித்துவமானது சாலை உருளையைப் போன்று கண்ணை மூடிக்கொண்டு, எல்லாவற்றையும் தன் காலின் கீழ் நசுக்கிக்கொண்டு முன்னேறிச் சென்றது. ஆயினும், அதை ஒரு வெற்றிகரமான முன்னேற்றம் என்றே சொல்ல வேண்டும். முதலாளித்துவமானது விஞ்ஞானத்தின் துணைகொண்டு பலதுறைகளில் வெற்றி அடைந்தது. அந்த வெற்றியின் பிரகாசம் உலகத்தின் கண்ணைப் பறித்தது. முதலாளித்துவத்தால் விளைந்த தீமைகளுக்கும் துன்பங்களுக்கும் அதன் வெற்றி ஒரு பரிகாரம் போல் தென்பட்டது. அதனால் மனித வாழ்க்கையில் பல சுக சவுகரியங்களும் ஏற்பட்டன. அவற்றை ஏற்படுத்த வேண்டுமென்று முதலாளித்துவம் நினைக்கவும் இல்லை, திட்டம்போடவுமில்லை. இடையில், தற்செயலாக, அவை உண்டாயின. ஆனால், இந்த மேல்[illegible]னுக்குக் கீழே தீமை நிறைந்திருந்தது. முதலாளித்துவத்தைப்பற்றிய விசித்திரமே என்னவென்றால் அது உண்டு பண்ணிய எதிர்மறைகள்தான். முதலாளித்துவம் பெருகப் பெருக இந்த எதிர்மறைகளும் இன்னும் அதிகமாக விளங்கித் தோன்றின. அதன் கீழ் அஷ்டைசுவரியமும் அஷ்ட தரித்திரமும், வானளாவிய மாளிகையும் ஈனமான மண்குடிசையும், சுவாதீன சாம்ராஜ்ய வாழ்வும் பராதீன அடிமை வாழ்வும் கைகோத்துக்கொண்டு சென்றன. ஆள வேண்டியது ஐரோப்பா; ஆளப்பட வேண்டியவை ஆசியாவும் ஆப்பிரிக்காவும். அந்நூற்றுண்டில் வெகுகாலம் வரையில் அமெரிக்கா மேற்கூறிய உலக நிகழ்ச்சிகளில் சிக்கிக் கொள்ளவில்லை. ஆனால், அது அதிதீவிரமாக முன்னேறிக் கொண்டும் மிகப்பெரிய சாதனைகளைப் படைத்துக்கொண்டும் இருந்தது. ஐரோப்பாவில்,

இங்கிலாந்து முதலாளித்துவத்துக்கு, முக்கியமாக, அதன் சாம்ராஜ்யப் பகுதிக்குத் தலைமை தாங்கி ஆத்ம திருப்தியிலும் ஐசுவரிய மமதையிலும் வாழ்ந்து வந்தது.

முதலாளித்துவத் தொழிலின் வேகமும் ஆசையுமே அதற்கு ஒரு நெருக்கடியை உண்டுபண்ணி எதிர்ப்பையும் கிளர்ச்சியையும் தோற்றுவித்தன. கடைசியில், தொழிலாளரைக் காப்பதற்காக, அதற்குச் சில தடைகளும் ஏற்படுத்தப் பட்டன. தொழிற்சாலைகள் தோன்றிய புதிதில் தொழிலாளர்கள், முக்கியமாகப் பெண்களும் குழந்தைகளும், மிகக் கடுமையான சுரண்டலுக்கு ஆளாக்கப்பட்டார்கள். ஆண்களைவிடப் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் கொடுக்க வேண்டிய கூலி குறைவா யிருந்தபடியால், முதலாளிகள் அவர்களை வேலைக்கு வைத்துக் கொண்டு அவர்களிடம் சில சமயங்களில் தினம் பதினெட்டு மணி நேர வேலைகூட வாங்கி வந்தார்கள். அவர்கள் அருவருப்பும் அநாரோக்கியமும் நிறைந்த இடங்களில் வேலை செய்யவேண்டி யிருந்தது. கடைசியில் அரசாங்கம் தலையிட்டுத் தொழிற்சாலை சட்டங்களை இயற்றியது. தொழிலாளரிடம் தினம் ஒன்றுக்கு இத்தனை மணி நேரத்துக்குமேல் வேலை வாங்கக் கூடாதென்றும், இன்னும் அவர்களுடைய நிலைமையைப் பல வழிகளில் சீர்திருத்த வேண்டுமென்றும் அச் சட்டங்கள் விதித்தன. முக்கியமாகப் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் அவை பெரிதும் பாதுகாப்பளித்தன. தொழிற்சாலை முதலாளிகளின் கடுமையான எதிர்ப்பை நீந்தி அச்சட்டங்களை நிறைவேற்றுவதற்குள் பிராணனுக்கு வந்து விட்டது.

இன்னும், அபேதவாத, பொது உடைமைக் கருத்துக்கள் தோன்றுவதற்கும் முதலாளித்துவத் தொழில்தான் காரணமா யிருந்தது. அந்தச் சித்தாந்